பெற்றார்-பிள்ளை உறவுகள்

பிள்ளை வளர்ப்புக்கான ஒரு வழிகாட்டி

ஹிஷாம் அல்தாலிப் • அப்துல்ஹமீத் அபூஸுலைமான் • உமர் அல்தாலிப்

பெற்றார்-பிள்ளை உறவுகள்

பெற்றார்-பிள்ளை உறவுகள்

பிள்ளை வளர்ப்புக்கான ஒரு வழிகாட்டி

ஹிஷாம் அல்தாலிப்
அப்துல்ஹமீத் அபூஸுலைமான்
உமர் அல்தாலிப்

தமிழ் மொழிபெயர்ப்பும் வடிவமைப்பும்
ஹாபிஸ் இஸ்ஸதீன்

PETRAAR PILLAI URAVUGAL

Tamil Edition of

Parent-Child Relations - A Guide To Raising Children

by

Hisham Yahya Altalib
AbdulHamid Ahmad AbuSulayman
Omar Hisham Altalib

First Published in 2013 by
The International Institute of Islamic Thought
P.O. Box 669, Herndon, VA 20172, USA
www.iiit.org

London office
P.O. Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 978-955-8398-32-6

Tamil Edition
Translation & Designing by Hafiz Issadeen

Published by *Fuzin Texts*
23/3 Market Road, Dharga Town 12090, Sri Lanka
Printed By AJ Printers, Station Road, Dehiwala
© Abd-al-Jabbar Muhammad Zaneer - 2014

நூலாசிரியர்கள்

ஹிஷாம் யஹ்யா அல்-தாலிப்

டாக்டர் ஹிஷாம் யஹ்யா அல்-தாலிப் 1940 இல் ஈராக்கில் உள்ள மோஸூல் நகரில் பிறந்தார். அவர் லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் (1962) மின் பொறியியல் துறையில் B.Sc பட்டம் பெற்றார். பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்திலுள்ள Purdue பல்கலைக் கழகத்தில் அதே துறையில் Ph.D. பட்டத்தையும் பெற்றார் (1974).

அவர் மின் பொறியியலாளராகத் தொழில் புரிந்த காலத்தில் வட அமெரிக்காவில் இஸ்லாமியப் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். அது இன்று வரை நீடிக்கின்றது. பல்வேறு இஸ்லாமிய அமைப்புக்களில் பலவிதமான பணிகளை அவர் வகித்துள்ளார். ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் முஸ்லிம் மாணவர் சங்கத்தின் (MAS) தலைமைத்துவப் பயிற்சிப் பிரிவின் முதலாவது முழுநேரப் பணிப்பாளராகவும் (1975- 1977) சர்வதேச இஸ்லாமிய மாணவர் அமைப்புக்கள் சம்மேளனத்தின் (IIFSO) செயலாளர் நாயகமாகவும் (1976) அவர் பணியாற்றினார். அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் பல பயிற்சி முகாம்களையும் கருத்தரங்குகளையும் அவர் நடத்தியிருக்கிறார்.

SAAR பவுண்டேஷனின் ஸ்தாபக உறுப்பினராகவும் பணிப்பாளராகவும் (1983- 1995) விளங்கிய டாக்டர் ஹிஷாம் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) ஸ்தாபக உறுப்பினர் (1981) ஆவார். இவர் மிதாக் அல்-ஷரப் அல்-தஃ்ஆவி என்ற அறபு நூலையும் புகழ் பெற்ற A Training Guide for Islamic Workers என்ற நூலையும் எழுதினார். பின்னையது 20 க்கு மேற்பட்ட மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் இது 'தலைமைத்துவப் பயிற்சி வழிகாட்டி' என்ற பெயரில் 1999 இல் வெளியிடப்பட்டது. தற்போது இவர் IIIT நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளராக இருக்கிறார்.

இவர் ஒரு தந்தையும் பாட்டனும் ஆவார்.

அப்துல் ஹமீத் அஹ்மத் அபூஸுலைமான்



டாக்டர் அப்துல் ஹமீத் அஹ்மத் அபூஸுலைமான் 1936 இல் மக்காவில் பிறந்தார். அங்கு தனது உயர் பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்ட அவர் கெய்ரோ பல்கலைக் கழகத்தில் வர்த்தகத்தில் B.A. பட்டத்தைப் (1959) பெற்றுக் கொண்டார். பின்னர் 1963 இல் அதே பல்கலைக் கழகத்தில் அரசியலில் M.A. பட்டத்தையும் 1973 இல் பென்ஸில்வேனியா பல்கலைக் கழகத்தில் சர்வதேச உறவுகள் பற்றிய Ph.D. பட்டமொன்றையும் பெற்றுக் கொண்டார்.

சவூதி அரேபியாவின் அரச திட்டமிடல் கமிட்டியின் செயலாளராகவும் (1963- 1964), முஸ்லிம் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் (AMSS) ஸ்தாபக உறுப்பினராகவும் (1972), WAMY அமைப்பின் செயலாளர் நாயகமாகவும் (1973- 1980), சவூதி அரேபியாவின் ரியாத் நகரிலுள்ள மன்னர் மஸ்ஊத் பல்கலைக் கழக அரசியல் துறையின் தலைவராகவும் (1982- 1984), மலேஷியாவில் நிறுவப்பட்ட சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தின் முதல்வராகவும் (1988- 1998) இவர் பணி புரிந்துள்ளார்.

பல்வேறு சர்வதேச மாநாடுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் காரண கர்த்தாவாக இருந்த டாக்டர் அபூஸுலைமான் தற்போது இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) தலைவராகப் பணியாற்றுகிறார். முஸ்லிம் சமூகங்களைச் சீர்திருத்துவது தொடர்பாக இவர் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். இவரது

நூல்களுள் The Islamic Theory of International Relations: New Directions for Islamic Methodology and Thought, Crisis in the Muslim Mind, Marital Discord: Recapturing the Full Islamic Spirit of Human Dignity, Revitalizing Higher Education in the Muslim World, The Qur'anic World View: A springboard for cultural Reform என்பன குறிப்பிடத்தக்கன.

இவர் ஒரு தந்தையும் பாட்டனும் ஆவார்.

உமர் ஹிஷாம் அல்தாலிப்

டாக்டர் உமர் ஹிஷாம் அல்தாலிப் அவர்கள் ஈராக்கின் கிர்குக் பகுதியில் 1967 இல் பிறந்தார். அவர் 1968 இல் தன் பெற்றோருடன் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றார். இவர் 1989 இல் George Mason பல்கலைக் கழகத்தில் பொருளியலில் B.A. பட்டமும் சமூகவியலில் B.A. பட்டமும் பெற்றுக் கொண்டார். பின்னர் 1993 இல் சமூகவியல் துறையில் M.A. பட்டத்தையும் 2004 இல் Ph.D. பட்டத்தையும் சிகாகோ பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றார். அவருக்கு 1989- 1992 காலப்பகுதியில் National Science Foundation என்ற அமைப்பு Graduate Student Fellowship ஒன்றை வழங்கியது. பின்னர் சிகாகோவின் Daley College இலும் (1998), இந்தியானா பல்கலைக் கழகத்திலும் (1999) சமூகவியல் துறையில் துணைப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

டாக்டர் அல்தாலிப் 2000- 2003 காலப்பகுதியில் ஒஹையோ மாநிலத்திலுள்ள Ashland பல்கலைக் கழகத்தில் சமூகவியல் மற்றும் குற்றவியல் துறை உதவிப் பேராசிரியராகச் சேவை செய்ததோடு 2005- 2006 காலப்பகுதியில் வேர்ஜீனியா மாநிலத்திலுள்ள Science Applications International Corporation என்ற நிறுவனத்தில் Senior Knowledge Engineer பதவியை வகித்தார். இவர் 2009 முதல் 2011 வரை மலேஷியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தில் சமூகவியற்துறை உதவிப் பேராசிரியராகக் கடமையாற்றினார். குடும்பம், கல்வி, அறக்கட்டளைகள், தர்ம ஸ்தாபனங்கள், சமூகப்பணி முதலிய விடயங்கள் பற்றி இவர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அறிவு சார்ந்த மாநாடுகளில் அடிக்கடி கலந்து கொள்ளும் இவர் உலகின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து வருகிறார்.

நன்றி நவிலல்

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) நம்பிக்கையாளர் சபை இவ்வாக்கத்தை எழுதும் பொறுப்பினை எமக்கு ஒப்படைத்தமையை பேறொன்றாகவே கருதுகின்றோம்.

இந்நூலைப் பூரணப்படுத்தும் பணியில் நாம் ஈடுபட்டிருந்த காலத்தில் IIIT நிறுவனத்தை ஒழுங்காக இயங்கச் செய்த Dr.Ahmad Totonji, Dr.Fathi Malkawi, Dr.Jamal Barzinji, Dr.Yaqub Mirza ஆகியோருக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

இதன் உள்ளடக்கத்தை மீளாய்வு செய்து அதனை மேம்படுத்துவதற்காக பெறுமதிமிக்க ஆலோசனைகளை வழங்கிய Batoul Tu'mah, Zainab Alawi, Michèle Messaoudi, Wanda Krause, Maida Malik, Sara Mirza, Gasser Auda ஆகியோருக்கும் நன்றி. அத்தோடு, பொருளடக்க அட்டவணையை மீள்பார்வையிட்ட Dr.Iqbal Unus அவர்களுக்கும் எழுத்துப் பிரதிக்குப் பெறுமதிமிக்க பங்களிப்பினை வழங்கி, ஆரம்ப கட்ட பக்க வடிவமைப்புக்களைத் தயாரிப்பதில் உதவிய Lina Malkawi, Zeena Altalib ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது நன்றிக்குரியவர்கள்

இந்நூலின் பல்வேறு முன்வரைவுகளைப் பிரதி பண்ணி டைப் செய்வதில் உதவிய Akbar Ali Mir, Ashraf Sabrin, Saif Altalib, Zaid Altalib, Noha Altalib மற்றும் Mahmoud Sherif,

ஐக்கிய அமெரிக்காவில் வேர்ஜீனியா மாநிலத்தின் Herdon நகரில் ADAMS (All Dulles Area Muslim Society) நிறுவனத்தில் இடம்பெற்ற பிள்ளை வளர்ப்பு பற்றிய செயலமர்வுகளில் நிஜ வாழ்க்கை உதாரணங்களை வழங்கிய Dr.Tanveer Mirza மற்றும் Salma Ashmawi,

பிள்ளை வளர்ப்பு தொடர்பான வீடியோ தொகுதியொன்றை மீளாய்வு செய்வதில் உதவிய Junainah Abdullah, நுண்நோக்குடன் தன் கருத்துக்களை முன்வைத்த Layla Sein,

வளம் மிக்க உசாத்துணைகள் பலவற்றை வழங்கியதோடு நூலின் வடிவமைப்பு, உள்ளடக்கம், தோற்றம் என்பன தொடர்பாகப் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்த Hasan Altalib ஆகியோருக்கு எமது நன்றிகள்.

எமது காரியாலயத்தில் Salwa Medani இருப்பது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். கையெழுத்துப் பிரதி தொடர்பான வேலைகளை நுணுக்கமாகச் செய்து நாளுக்கு நாள் அதனை மேம்படுத்தியவர் இவரே. எமது லண்டன் காரியாலயத்திற்கு Shiraz Khan வந்து சேர்ந்தது நாம் பெற்ற பெரிய அருட்கொடையாகும். இவர் நூல்களைத் திருத்திச் செப்பனிடுவதில் விசேட திறமையுடையவர்; ஆக்கத்திறன் மிக்கவர், விமர்சன ரீதியான பின்னூட்டல் வழங்குபவர். இவர் எம்மைத் தொடர்ச்சியாக உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

நூலைச் செப்பனிட்டும் பெறுமதி மிக்க விடயங்களைச் சேர்த்தும் வளம் மிக்க ஆலோசனைகளைத் தந்தும் எமக்குதவிய Minaret of Freedom Foundation இன் தலைவர் Dr.Imad ad Dean Ahmad அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூலின் பிரதியை துல்லியமான முறையில் செப்பனிட்டுத் தந்த Sylvia Hunt, அச்சுப் படிகளைத் திருத்தம் செய்த Salma Mirza, நூலைச் சிறந்த முறையில் வடிவமைத்துத் தந்த Abdallateef Whiteman, அழகிய முறையில் படங்களை வரைந்து தந்த Abdallateef இன் மகள் Hanna ஆகியோருக்கு எமது நன்றிகள். இந்நூலின் இறுதி வடிவத்தை உருவாக்கும் பணியை மேற்பார்வை செய்த IIIT லண்டன் காரியாலயத்தின் பணியாளர் குழுவின் தரம் மிக்க பணியை மெச்சுகிறோம்.

பெறுமதி மிக்க ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கி இந்நூலின் தரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்த கல்வி மற்றும் உளவியல் துறை நிபுணர்களான Dr.Ishaq Farhan, Dr.Abdul Latif Arabiyyat, Dr.Mahmoud Rashdan, Dr.Fathi Malkawi, Dr.Abdul Rahman al Naqeeb ஆகியோருக்கும் எமது நன்றி உரித்தாகிறது.

கையெழுத்துப் பிரதியைத் தயாரிக்கும் பணியில் நாம் ஈடுபட்டிருந்த போது எம்மீது ஏற்பட்ட அழுத்தங்களையும் நெருக்குதல்களையும் தளர்த்தச் செய்து சௌகரியமான, ஆதரவு மிக்க சூழலொன்றை எமக்கு உருவாக்கித் தந்த எமது குடும்பத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். Dr.Hisham அவர்களின் 46 வருடகால வாழ்க்கைத் துணைவியான Dr.Ilham Altalib அவர்களது எல்லையற்ற ஊக்குவிப்பும் அர்ப்பணிப்பும் கிடைக்காமற் போயிருந்தால் இந்நூல் வெளிவந்திருக்கவே முடியாது. பிள்ளை வளர்ப்பு தொடர்பாக அவர் வழங்கிய பெறுமதி மிக்க கருத்துக்களும் ஆலோசனைகளும் இவ்வாக்கத்தை வெளிக்கொணர்வதற்குத் தொடர்ச்சியாக ஊக்கமளித்தன. இந்நூல் ஆக்கத்திற்காகச் செலவிடப்பட்ட காலத்தில் பெரும்பகுதி நம் குடும்பத்தினரோடு -குறிப்பாக எமது பேரப்பிள்ளைகளான Yusif, Ameen ஆகியோருடன்- ஒன்றாய்க் கழிக்கும் நேரத்திலிருந்து இரவலாகப் பெறப்பட்டது.

இப்பணியை நிறைவேற்றுவதற்கு எமக்கு ஆற்றல் தந்த சகல அறிவும் வல்லமையும் கொண்ட இறைவனுக்கே எல்லாப் புகழும்.

சமர்ப்பணம்

எமது வாழ்நாள் முழுவதும் எம்மீது அன்பையும் அர்ப்பணிப்பையும் கருணையையும் பொழிந்து எமது விருத்தியில் ஆர்வம் கொண்டு தத்தமது ஆற்றலுக்கு ஏற்பச் சிறப்பாக எம்மை வளர்த்தெடுத்த எமது தாய்மாருக்கும் தந்தையருக்கும் இதனைச் சமர்ப்பணம் செய்கிறோம். பயிற்சியும் முறைசார் கல்வியும் கிடைக்காத நிலைமையிலும் தம் பெற்றோரின் நடைமுறைகளைப் பின்பற்றி ஞானத்தையும் இயல்பான அறிவையும் கடந்த பரம்பரைகளும் நாகரிகங்களும் சரியெனக்கண்ட அனுபவங்களையும் பயன்படுத்தி அவர்கள் எமக்கு நன்னெறி, விசுவாசம், தன்னம்பிக்கை முதலியவற்றைப் போதித்தார்கள். அவர்களது ஆன்மாக்களின் மீது இறைவன் அருள்மாரி பொழிவானாக!

மேலும், இன்று வெற்றிகரமான பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் இப்புவியின் மீதுள்ள சகல பெற்றோர்களுக்கும் இதனைச் சமர்ப்பணம் செய்கிறோம். இவர்கள் நன்னோக்கோடு செயற்படுகிற போதிலும் தம் பிள்ளைகளோடு புத்தி சாதுரியமான முறையில் தொடர்பாடி அன்பும் மகிழ்ச்சியும் நிரம்பிய குடும்ப உறவுகளையும் நாமனைவரும் விரும்புகின்ற வீட்டுச் சூழலையும் உருவாக்குவதற்கு அவசியமான அறிவும் திறன்களும் தேவையுடையவர்களாக இருக்கின்றனர்.

நன்னெறி, நேர்மை, துணிச்சல், கருணை, ஆக்கத்திறன், விசுவாசம் முதலியவை தொடர்பான விழுமியங்களையும் பண்புகளையும் கொண்ட வலிமையும், பொறுப்பு மிக்க சுதந்திர உணர்வும் உடைய ஆற்றல் மிக்க ஆண்களாகவும் பெண்களாகவும் தம் பிள்ளைகளை வளர்த்தெடுக்க ஆவல் கொண்டுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் இது சமர்ப்பணமாகட்டும்.

இந்நூல் தொடர்பான ஆய்வுப் பணிகளிலும் எழுத்து வேலைகளிலும் நாம் ஈடுபட்டிருந்த போது பல வருடங்களாகப் பல்வேறு கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு எல்லையில்லாப் பொறுமையைக் கடைப்பிடித்து இடையறாது எமக்கு உற்சாகமளித்த எமது மனைவியருக்கும் பிள்ளைகளுக்கும் இவ்வாக்கத்தைச் சமர்ப்பணம் செய்கிறோம்.

மனித சமுதாயத்தில் ஒற்றுமையையும் அமைதியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும் நோக்கோடு மனத்தூய்மையுடன் நாம் மேற்கொண்ட இம்முயற்சிகளை கருணையும் வல்லமையும் மிக்க ஏக நாயன் பொருந்திக் கொள்வானாக!

தமிழ் பதிப்பிற்கான முன்னுரை

'பெற்றார் - பிள்ளை உறவுகள்: பிள்ளை வளர்ப்புக்கான ஒரு வழிகாட்டி' எனும் இந்நூலானது, ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள Parent-Child Relations: A Guide to Raising Children எனும் நூலின் தமிழ் வடிவமாகும். ஆங்கிலப் பதிப்பு வெளியிடப்பட்டுச் சில மாதங்களுக்குள் ளேயே அதன் தமிழ் வடிவத்தை வெளியிடுவதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கே சகல புகழும் உரியது.

உயரியதோர் நோக்குடன் எழுதப்பட்டுள்ள இந்நூலைத் தமிழில் வெளியிட அனுமதியும் அனுசரணையும் வழங்கிய இஸ்லாமிய சிந்தனைக் கான சர்வதேச நிறுவனத்தின் நிர்வாகிகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கின் றோம்.

வட அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் வாழ்கின்ற குடும்பங் களையும் அவற்றின் கலாசாரப் பின்னணிகளையும் அடிப்படையாகக் கொண்டு மூல நூல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, நமது கலாசார சூழ்நிலைகளுக்குப் பொருந்தும் விதத்தில் ஆங்காங்கே சிறிய மாற்றங் களைத் தமிழ் பதிப்பில் செய்ய வேண்டி ஏற்பட்டது. எனினும் அவ்வாறான மாற்றங்களைச் செய்வதனால் மூல நூலின் கட்டமைப்புக் குலையும் என நாம் அஞ்சிய இடங்களில் மாற்றங்கள் எதனையும் செய்யாது விட்டுள் ளோம். சில இடங்களில் மூல நூலில் இடம் பெற்றுள்ள படங்களுக்குப் பதிலாக வேறு படங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சகல தரத்தினரும் வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலான எளிய மொழி நடையில் இத்தமிழ் வடிவத்தை முன்வைக்க இயன்றவரை முயற்சித்துள்ளோம். தேவையான இடங்களில் மேலதிக விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சிக்கலான, பொது வழக்கில் இல்லாத கலைச் சொற்கள் முடிந்தளவு தவிர்க்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஆங்கிலத்தில் நவீன சமூகவியல் மற்றும் உளவியற் கோட்பாடுகளை விளக்கும் இதுபோன்ற நூலொன்றைத் திருத்தமாகத் தமிழ்ப்படுத்துவது எளிதான காரியமல்ல. இம் முயற்சியில் நாம் எந்தளவு வெற்றி பெற்றிருக்கிறோம் என்பது பற்றித் தீர்ப்பு வழங்க வேண்டியவர்கள் வாசகர்களே.

தமிழ்ப் பதிப்பினை டைப்செற்றிங் செய்வதிலும் பக்கங்களை வடிவமைப்பதிலும் அர்ப்பணிப்புடன் உழைத்தவர் செல்வி அஸ்ஹா அஸ்ஹர். அவருக்கு எமது நன்றிகள்.

எமது இம்முயற்சியை அன்பும் கருணையும் மிக்க இறைவன் பொருந்திக் கொள்வானாக!

பொருளடக்கம்

இந்நூலின் வரலாறு xxiv
இலக்குகளும் குறிக்கோள்களும் xxvii
அறிமுகம் xxx

முதலாம் பகுதி (அத்தியாயம் 1–7)

பிள்ளை வளர்ப்பு: அடித்தளத்தை அமைத்தல்

அத்தியாயம் 01 3
சிறந்த பிள்ளை வளர்ப்பும் அதனை ஆரம்பித்தலும்

அறிமுகம் 4
பிள்ளை விருத்தியின் கட்டங்கள் 6
நாம் எமது பிள்ளைகளை வளர்க்கும் முறை: வித்தியாசமான பாணிகள் 7
பிள்ளை வளர்ப்புப் பாணியை எதிர்வு கூறுவது யாது? 11
பிள்ளை வளர்ப்பை ஆரம்பித்தல்: எதிர்கொள்ளவிருக்கும் பணிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம் 13
பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான தகவல் மூலங்களைப் பயன்படுத்தல் 18
உயர் பள்ளிகளில் பிள்ளை வளர்ப்பு பற்றிக் கற்பிக்கப்பட வேண்டுமா? 21
பிரித்தானிய உயர் பள்ளிப் பாடநெறி பற்றிய வழிகாட்டல் 23
முடிவுரை 25
தொழிற்பாடுகள் 1-7 26

அத்தியாயம் 2 31
குடும்பத்தின் முக்கியத்துவமும் செயற்பாடுகளும்

அறிமுகம் 32
பெற்றோராக மாறுதல் 33
திருமண உறவின் உறுதித் தன்மையில் பிள்ளைகளின் செல்வாக்கு 34
ஐக்கிய அமெரிக்காவில் குடும்பத்தின் பருமன் - அன்றும் இன்றும் 39
தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பம் 39
வெற்றிகரமான தனிப் பெற்றாராக இருப்பதற்கு அவசியமான அடிப்படைகள் 42
இஸ்மாயீல் (அலை), மூஸா(அலை), ஈஸா(அலை), முஹம்மத் (ஸல்) ஆகிய நபிமார்களில் தனித் தாய்மையின் செல்வாக்கு 44
ஒரு பெற்றார் மற்றவரைப் பிரதியீடு செய்ய முடியுமா? 45
இஸ்லாமும் விவாகரத்தும் - ஒரு குறிப்பு 46

இஸ்லாத்தில் குடும்பத்தின் முக்கியத்துவம் 49

அல்குர்ஆனின் அடிப்படையில் குடும்பக் குறிக்கோள்கள் 52

முஸ்லிம் குடும்ப அமைப்பு சீர்குலையக் காரணம் என்ன? 55

பிள்ளை விருத்தியும் உறுதியான கல்வி முறையும் 57

ஓர் உறுதியான கல்வி முறையின் தேவை பற்றிய ஒரு கண்ணோட்டம் 59

அமெரிக்காவில் குடும்ப அமைப்பு 62

பிள்ளை வளர்ப்பு பற்றி அமெரிக்காவில் பொதுவாகக் காணப்படும் தவறான கருத்துக்கள் 63

Sandy Hook ஆரம்பப் பள்ளிப் படுகொலை தரும் பாடங்கள் 67

பிள்ளைகளுக்கு விழுமியங்களைக் கற்பித்தல்: பழைமை வாத-தாராண்மை விவாதம் 68

குடும்பங்கள்: முஸ்லிம் நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் 70

முஸ்லிம் பெற்றாரின் பிள்ளை வளர்ப்பில் மேற்கத்திய செல்வாக்கு 73

சுதந்திரமா உண்மையா? 74

பிள்ளைகளை எங்கே வளர்ப்பது? : கிழக்குக்கும் மேற்குக்கும் இடையே இடம் மாறுவதால் ஏற்படும் பண்பாட்டு அதிர்ச்சி பற்றிய ஒரு விடய ஆய்வு 78

மேற்கத்திய சிந்தனையில் காணப்படாத இரு கருத்துப்படிவங்கள் 80

விசுவாச அடிப்படையிலான விழுமியங்களும் செயற்பாட்டு அடிப்படையிலான விழுமியங்களும் 81

குடும்பத்தின் விவசாய மாதிரியுரு: பிள்ளைகள் தாவரங்களைப் போன்றவர்கள்; பெற்றார் தோட்டக்காரர்களைப் போன்றவர்கள் 83

தொழிற்பாடுகள் 8- 15 84

அத்தியாயம் 3 **89**

பிள்ளை வளர்ப்புக்குரிய இலக்குகள்

சரியான இலக்குகளை அமைத்தல்: சிறந்த பிள்ளை வளர்ப்பை அமுல் படுத்துவதன் முதற்படி 90

இலக்குகளை உன்னிப்பாக நோக்குதல் 92

அல்குர்ஆனிய வாக்கியங்களிலிருந்து பெறப்பட்ட இலக்குகள்: விசுவாசிகளின் பிரார்த்தனை 92

நபி (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து பெறப்பட்ட இலக்குகள் 95

குடும்ப முன்னுரிமைகள் 97

முடிவுரை 98

தொழிற்பாடுகள் 16- 20 100

அத்தியாயம் 4 103

பிரதான இலக்கு: அல்லாஹ்வை நேசிக்கும் பிள்ளைகள்

அறிமுகம் 104

எமது பிள்ளைகளில் இறை விசுவாசத்தை வளர்ப்பதற்குக் கையாளப்படும் தற்கால அணுகுமுறை 105

சுய ஈடுபாடு கொண்ட பண்பாடு: பொது விவகாரங்களில் ஈடுபாடு இல்லாமை 106

தனிப்பட்ட பொறுப்புணர்வு இல்லாமை 110

திரிபடைந்த பண்பாடு: பிற்போக்கும் மூட நம்பிக்கையும் 112

சமநிலையான வழி: அறிவுபூர்வமான அணுகுமுறை 114

அல்குர்ஆன் மீதான நேசத்தைப் பிள்ளைகளுக்குப் போதித்தல் 115

பிரார்த்தனைகளைப் பிள்ளைகளுக்குப் போதித்தல்: இறைவனைத் தொடர்ச்சியாக நினைவு கூர்தல் 118

பிள்ளைகளுக்குப் பாவமன்னிப்பை (தவ்பாவை) கற்றுக் கொடுத்தல் 119

முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றியும் ஏனைய நபிமார்கள் பற்றியும் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் 120

பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை (அதப்) கற்பித்தல் 121

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முதலில் எதனைக் கூறப்போகிறீர்கள்?: அவர்கள் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் என்பதையா அல்லது அல்லாஹ் அவர்களை நேசிக்கிறான் என்பதையா? 122

தொழிற்பாடுகள் 21- 25 124

அத்தியாயம் 5 127

பொதுவான சவால்களும் இடர்ப்பாடுகளும்

அறிமுகம் 128

பெற்றார் எதிர்நோக்கும் பிரதான சவால்கள் 128

அனுபவம் இல்லாமை 129

அன்றாட அழுத்தங்கள் 129

அன்றாடக் கடும் உழைப்பு: பிள்ளை வளர்ப்பானது தொடர்ச்சியான முழு நேரப்பணி என்பதை ஏற்றுக்கொள்ளல் 129

பிள்ளை வளர்ப்புப் பணி நெகிழ்வுத்தன்மை அற்றது 130

பிள்ளை வளர்ப்பு என்பது காலம், முயற்சி, பணம் என்பவற்றின் நீண்ட கால முதலீடு 130

பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு காரணிகளுள் ஒரு காரணியாக மாத்திரமே பெற்றார் உள்ளனர் 131

குழந்தைகளுக்குப் பேச முடியாது 132

பிள்ளை வளர்ப்பில் பல துறைகள் ஒன்றிணைகின்றன 132

தந்தையும் தாயும் ஓர் அணியாகச் செயற்பட வேண்டும் 133
பிள்ளை வளர்ப்புத் திறனுக்கு வளங்களின் சரியான முகாமை தேவை 133
தம் பெற்றோரைப் பற்றிப் பிள்ளைகள் கொண்டுள்ள புலக்காட்சி பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு முரணானதாக இருக்கலாம் 134
பிள்ளைகளுக்கு எதனை, எப்போது சொல்ல வேண்டும் என்பதை அறிந்திருத்தல் 134
கவனக்குறைவினால் பிள்ளைகளில் தவறான எண்ணக்கருக்களைப் பதிவு செய்தல் 135
சாதகமான சுய ரூபமொன்றை உருவாக்குவதில் எதிர்கொள்ள நேரிடும் சவால்கள் 136
பிள்ளை வளர்ப்பு பற்றி மூஸா (அலை) கூறும் படிப்பினைகள் 136
முடிவுரை 137
தொழிற்பாடு-26 138

அத்தியாயம் 6 **139**

தவிர்க்கப்பட வேண்டிய மனப்பாங்குகள்

அறிமுகம் 140
பொதுவாகக் காணப்படும் தவறான கருத்துக்களையும் இடறுகுழிகளையும் இனங்கண்டுகொள்ளல் 140
பரம்பரையாக வந்த முறைமைகளைக் குருட்டுத் தனமாகப் பயன்படுத்தல் 140
மற்றவர்களைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றுதல் 140
நிறைவேறாத தமது ஆசைகளைத் தம் பிள்ளைகளைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ள முயலுதல் 141
பிள்ளை வளர்ப்பை இன்னொருவருக்குப் பொறுப்புச் சாட்டுதல் 141
பிள்ளைகளுடன் தர்க்க ரீதியாக நடந்துகொண்டால் போதும் என நினைத்தல் 142
தனது பிள்ளைகளுடனான போராட்டத்தில் தான் வெல்லலாம் எனக் கருதுதல் 142
தாம் பெரியவர்கள், ஆதிக்கமுள்ளவர்கள் என்ற உண்மையில் மாத்திரம் பெற்றார் தங்கியிருத்தல் 142
தமது எல்லாப் பிள்ளைகளையும் ஒரே விதத்தில் கையாளலாம் எனப் பெற்றார் கருதுதல் 143
பிள்ளையை 'உருவத்தில் சிறிய முதிர்ந்தவர்' போல் நடத்துதல் 143
பிள்ளைகள் கேட்கும் அனைத்தையும் வாங்கிக் கொடுத்தல் 144
பிள்ளை வளர்ப்பு பற்றிய சில குருட்டு நம்பிக்கைகளை இனங்கண்டு கொள்ளல் 144
தொழிற்பாடுகள் 27- 28 148

அத்தியாயம் 7 **149**

விடயங்கள் தவறிவிடும் போது . . .

அறிமுகம் 150

கோபம், அடங்காத் தன்மை, கோபாவேசம், கண்ணீர் 151

அடக்கமில்லாத பிள்ளையொன்றைக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்வதற்கான சில வழிமுறைகள் 151

Bullying: நீங்களும் உங்கள் பிள்ளையும் 153

உங்கள் பிள்ளை bullying என்னும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டால் என்ன செய்யலாம்? 153

பதின்மவயதினர்: குமரப் பருவம் என்னும் கருத்துப் பற்றிய ஓர் ஆய்வு 155

எமது பதின்மவயதுப் பிள்ளைகளிலும் எம்மிலும் கோபத்தின் விளைவு 157

எமது பதின்மவயதுப் பிள்ளை கோபமுறும்போது நாமும் கோபமடைதல் 158

எமது பதின்மவயதுப் பிள்ளைக்காகவும் எமக்காகவும் நாம் செய்யக்கூடியவை 159

சிறந்த தொடர்பாடல் பற்றிய சில கோட்பாடுகள் 159

தொழிற்பாடுகள் 29- 30 162

இரண்டாம் பகுதி (அத்தியாயம் 8–13)

பிள்ளை விருத்தி

அத்தியாயம்- 8 **167**

நன்னடத்தை உருவாக்கத்தில் தாமதம் வேண்டாம்

அறிமுகம் 168

விருத்திப் படிநிலைகள் 170

ஜனரஞ்சகமான உளவியலை எந்த அளவுக்கு நம்பலாம்? 171

அல்குர்ஆனின்படி மனித விருத்தியின் படிநிலைகள் 173

கருக்கொள்ளல், பிரசவம், பிள்ளைப்பேறு என்பவற்றின் அற்புதம் 175

மனித வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள்: பிறப்பு முதல் முதுமை வரை 177

பிறப்பு - 4 மாதங்கள் 177

5 - 18 மாதங்கள் 178

18 - 36 மாதங்கள் 180

4 - 7 வருடங்கள் 182

7 - 14 வருடங்கள் 183

11 - 13 வருடங்கள்: பெண் பிள்ளைகளுக்கு மாதவிடாய் ஏற்படல் 184

13 - 15 வருடங்கள்: ஆண் பிள்ளைகள் பருவமடைதல் 185

14 - 21 வருடங்கள் 186

பதின்மவயதினரைப் புரிந்து கொள்ளல் 186

21 - 35 வருடங்கள்: இளம் முதிர் பருவத்தினர் 190
35 - 50 (அல்லது 60) வருடங்கள்: நடுத்தர வயதினர் 190
60 வயதும் அதற்கு மேலும்: முதுமை 191
விருத்தியின் படிநிலைகளைப் பயன்படுத்திக் கொள்ளல் 192
முதல் இரண்டு வருடங்களின் போதும் தாய்ப்பாலூட்டல் 192
அல்லாஹ்வை நேசித்தலும் அவனுக்குப் பயப்படுதலும் 192
மனனம் செய்தல் 193
தஃவாவின் அம்சங்கள் 193
குமரப் பருவத்தின் போது விமர்சனங்கள் பற்றிய உணர்திறன் 193
சுய அடையாளத்தின் உருவாக்கம் துரிதப்படுத்தப்பட வேண்டும் 193
இரண்டாம் மொழியொன்றைக் கற்றுக் கொள்ளல் 193
மனனம் செய்தல்- மேற்குக்கும் கிழக்குக்கும் இடையில் 195
தொழிற்பாடு 31 196

அத்தியாயம்- 9 **197**
பிள்ளையின் ஆரோக்கியத்தைப் பேணுதல்

அறிமுகம்: ஆரோக்கியம் முதன்மையானது 198
கர்ப்ப காலம் 198
பிரசவத்தின் பின்னர்: தடுப்பு மருந்து ஏற்றுவது பற்றிய சர்ச்சை 199
தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு எதிரான கருத்துக்கள் 200
சுத்தமும் உடல் நலமும் 201
சுகாதாரம்: சில இஸ்லாமிய நடைமுறைகள் 202
கழிவறையில் சுத்தம் பேணுதல் 203
மயிரும் நகங்களும் 203
போசணை 205
மிகையாக உண்ணுதல் 206
உண்ணும் பழக்க வழக்கங்கள் பற்றிய இமாம் அல் கஸ்ஸாலியின் கருத்துக்கள் 207
பிள்ளைகளும் போசணையும்: சில உண்மைகள் 207
கர்ப்ப காலம் 207
பிறப்பிலிருந்து பதின்மவயதுக்கு முந்திய நிலை வரை 208
பதின்மவயதுக்கு முந்தியவர்களும் பதின்மவயதினரும் 208
2 முதல் 10 வயதினருக்குரிய உணவில் இருக்கவேண்டிய ஊட்டங்கள் 208
பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் 209
உணவு பற்றிக் குர்ஆனிய அறிவுறுத்தல்கள் 213
பிள்ளைகளும் உடற் பயிற்சியும் 215

பிள்ளைகளும் பாதணிகளும் 216
பிள்ளைகளில் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் 217
சிபாரிசு செய்யப்பட்ட உடற்பயிற்சி நிகழ்ச்சி நிரல் 218
நித்திரை 219
நித்திரை இழப்பின் மருத்துவரீதியான விளைவுகள் 220
மதுபானம் அருந்துதலும் போதைப் பொருள் தடுப்பும் 221
பிள்ளைகளும் உளத் தூண்டுதலும் 222
போதைப் பொருட் பாவனையின் ஆரம்ப கட்டத்தில் அவதானிக்கப்பட வேண்டிய அறிகுறிகள்: பெற்றார் என்ன செய்யலாம்? 223
அடிமையாதலும் ஆரோக்கியமான வீட்டுத் தொடர்புகளும் 226
பின் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்: தவிர்ப்பு வழி என்ற வகையில் சமயம் 228
சட்டத்தை மீறுதல் 229
தொழிற்பாடுகள் 32- 38 230

அத்தியாயம் 10 233
தாய்ப்பாலூட்டல்

அறிமுகம் 234
தாய்ப்பாலூட்டல் பற்றி அல்குர்ஆன் 236
தாய்ப்பாலூட்டலின் மருத்துவ மற்றும் உளவியல்ரீதியான அனுகூலங்கள் 238
வியாபாரமும் தாய்ப்பாலூட்டலும் 240
முஸ்லிம் உலகும் தாய்ப்பாலூட்டலும் 241
தாய்ப்பாலூட்டல் பற்றி அலி இப்ன் அபீ தாலிப் (றழி) மற்றும் இப்ன் ஹஸ்ம் ஆகியோரின் அபிப்பிராயங்கள் 242
தாய்ப்பால் ஊட்டலுக்குரிய காலம் 243
பாலூட்டும் தாய்மாருக்கான சில உதவிக் குறிப்புக்கள் 244
தாயின் அன்றாட உணவுத் தேவைகள் 245
உடல் வலிமை மிக்க சமுதாயம் 246
தொழிற்பாடு- 39 249

அத்தியாயம்- 11 251
பிள்ளையின் மூளை விருத்தி : கவனிக்கப்பட வேண்டியவை

அறிமுகம் 252
வாய்ப்புமிக்க காலம் 252
நரம்புக் கலங்களினதும் மூளை வலையமைப்புக்களினதும் விருத்தி 253

பார்வை 255

ஒலி 255

இசை 256

பிறப்பும் இசைச் சிகிச்சையும் 257

மனவெழுச்சிகள் 257

மன அழுத்தம் மனவெழுச்சிக்குரிய சுற்றுக்களை மாற்றியமைக்கலாம் 258

அசைவு 259

பிள்ளைப் பருவத்தில் சொல்லாட்சியும் மனனஞ்செய்தலும் 260

மூளை மாற்றமடையும் விதம் 260

பெற்றார் தம் குழந்தையோடு சாதகமான முறையில் உரையாட வேண்டும் 261

ஐக்கிய அமெரிக்காவில் விசேட முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் 261

பெற்றார் என்ன செய்யலாம்? 263

தர்க்கத்துக்குரிய மூளை 263

இசைக்குரிய மூளை 263

மொழிக்குரிய மூளை 263

இஸ்லாத்தில் பாடலும் இசையும் 264

இஸ்லாத்தில் சித்திரங்களும் சிற்பங்களும் 266

நடைபயிலும் பருவக் குழந்தைகளின் மூளை விருத்தி 266

சூழலின் முக்கிய கோலங்கள் பற்றிக் கவனம் செலுத்துதல் 266

தொழிற்பாடுகளில் பங்குபற்றுவதற்குப் பிள்ளைகளைத் தூண்டுதல் 267

பிள்ளைகளுடன் உரையாடுவதும் அவர்களுக்குச் சொல்லப்பட்டதை மேலும் விரிவு படுத்துவதும் 267

சாதகமான, எதிர்வு கூறக்கூடிய, வெகுமதி தருகின்ற சூழ்நிலையொன்றைப் பேணுதல் 268

பயிற்சியை ஊக்குவித்தலும் மீட்டலை வரவேற்றலும் 268

மனவெழுச்சிகள் பகுத்தறிவை ஒதுக்கித்தள்ளும் விதம் 268

தாயின் பராமரிப்பு இன்றியமையாதது 270

எங்களை நாங்களாக மாற்றுவது எது? இயற்கையா, வளர்ப்பு முறையா அல்லது விதியா? 271

மூளை வளர்ச்சி: ஆண் பிள்ளைகளிலும் பெண் பிள்ளைகளிலும் மனவெழுச்சி ரீதியான செல்வாக்கு 273

மனித சமுதாயத்தின் வெற்றி ஐந்து வயதுக்கு முன்பே தீர்மானிக்கப்படுகின்றதா?! 274

தொழிற்பாடு- 40 276

அத்தியாயம் 12 277

ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் வளர்த்தல்: அவர்கள் வித்தியாசமானவர்களா?

அறிமுகம் 278

திட்டவட்டமான வேறுபாடுகள் 278

மனவெழுச்சி ரீதியான தொடர்பு 282

புலன்கள் 283

அந்தஸ்து 283

முகபாவனைகள் 284

கவலை 285

பால் ரீதியாக வேறுபடுத்தலின் நியாயம் 285

அமெரிக்க ஆண்களும் பெண்களும் முன்னுரிமை வழங்கும் விடயங்கள்: ஒரு மதிப்பீட்டாய்வு 288

பால் ரீதியான பிரிவு ஆரம்பமாவது எப்போது ? 288

ஆணியல்பு கொண்ட பெண்களும் பெண்ணியல்பு கொண்ட ஆண்களும் 291

பிள்ளை வளர்ப்பில் பால் அடிப்படையிலான பெற்றாரின் நிலை 293

இந்தச் சமநிலையின்மை ஏன்? 293

பராமரிப்பாளர்களாகத் தந்தையர்: தவறான கருத்துக்களும் உண்மை நிலையும் 294

ஒன்றாக வாழாத தந்தையர் பிள்ளைகளில் ஏற்படுத்தும் தாக்கம் 296

ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் வித்தியாசமான தேவைகள் 296

சிறிய பெண் பிள்ளையொன்றுக்குத் தேவையானவை 296

சிறிய ஆண் பிள்ளையொன்றுக்குத் தேவையானவை 298

பால் வித்தியாசம் தொடர்பாகப் பகுத்தறிவுரீதியில் எதிர்வினை காட்டுதல் 299

பாலையும் இயல்பான மனப்போக்குகளையும் ஒன்றாகக் கருதுதல் 300

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் கற்றுக்கொள்ளும் முறை வித்தியாசமானது 301

பள்ளிக் கூடங்களிலும் வகுப்பறைகளிலும் ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் பிரித்து வைத்தல் 304

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பிள்ளை வளர்ப்பும் பால் வேறுபாடும் 306

இறைவனின் வழியே சிறந்த வழி: சீனா, ஜேர்மனி, இந்தியா ஆகியவற்றின் எடுத்துக் காட்டுகள் 309

தொழிற்பாடுகள் 41 - 43 311

அத்தியாயம் 13 313

பாலியல் கல்வி: நாம் எமது பிள்ளைகளுக்குக் கூறப்போவது யாது?

அறிமுகம் 314

பாலியல் கல்வி என்றால் என்ன? 314

அமெரிக்காவில் இன்றுள்ள நிலைமை 315
அமெரிக்காவிலுள்ள தாய்மாரும் புதல்வியரும் கொண்டுள்ள கருத்துக்கள் 319
பெறுமானங்களும் பாலியலும்: இன்றும் நேற்றும் 320
பாலியல் கல்வி ஏன்? நாம் அதனைக் கற்பிக்க வேண்டுமா? 322
பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியது என்ன? 325
பாலியல் துஷ்பிரயோகம் - அதன் பாரதூரத் தன்மை 326
இப்றாஹீமிய வழிமுறைகள் வரம்பற்ற ஆண், பெண் உறவையும் விபசாரத்தையும் தடை செய்கின்றன 329
விபசாரத்துக்கும் தகாத பாலுறவுக்கும் எதிரான சட்டரீதியான தண்டனைகளுக்குரிய நியாயங்கள் 330
பாலுறவு மூலம் பரவும் நோய்கள் (STDs) 331
காதலன் காதலி உறவுகள் 332
பிள்ளைப் பருவத்தில் குழந்தை பெறுதல்: இஸ்லாத்தில் கருக்கலைப்பும் தத்தெடுத்தலும் 336
கருக்கலைப்பு 337
இஸ்லாத்தில் தத்தெடுத்தல் 338
ஓரினப் பாலுறவும் பெற்றாரும் 340
இஸ்லாமிய பாலியல் கல்வி 344
பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றோரின் கடமைகள் 346
பாலியலும் சுகாதாரமும்: மாதடாய், அரைப்பகுதி மயிர், விருத்த சேதனம், ஆண்களில் விந்து சார்ந்த திரவமும் நித்திரையில் விந்து வெளியேறலும் 347
பதின்மவயதினரும் பாலுறவைத் தவிர்த்தலும் 348
பாலியல் தொடர்பான இரண்டக நிலைக்கு இஸ்லாமியத் தீர்ப்பு: தவிர்ப்பு அணுகுமுறைக்கான ஒரு திட்டம் 350
நாணம் (ஹயா) 353
ஆடை அணியும் ஒழுங்கு விதிகள் 358
கட்டுப்பாடற்ற கலப்புக்கும் 'கல்வாஹ்'கும் இடமில்லை 359
சமவயதினர் ஏற்படுத்தும் அழுத்தமும் ஏனைய காரணிகளும் 360
செய்ய வேண்டியவை 361
திருமணத்தை முற்படுத்தல் 362
கல்வி முறையின் இரண்டக நிலையும் திருமணத்தை முற்படுத்தலும் 363
வளர்ந்தவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல் 366
விபசாரம் பற்றிப் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும் 368
ஒருவரது பிள்ளை வல்லுறவுக்கு உள்ளானால் 368
இஸ்லாமியப் பாலியல் கல்விக்கான ஒரு பாடவிதானம் 370
தொழிற்பாடுகள் 44- 45 372

மூன்றாம் பகுதி (அத்தியாயம் 14–23)

நன்னடத்தையைக் கட்டியெழுப்புதலும் ஆளுமையும்

அத்தியாயம்- 14 **377**

நன்னடத்தையும் ஆளுமையும்

அறிமுகம் 378

நடத்தைப்பண்பு (Character) என்றால் என்ன? 379

நடத்தைப் பண்பின் உருவாக்கம் 381

நடத்தைப்பண்பு ஆழமான வேர்களைக் கொண்டது 382

ஆளுமை என்றால் என்ன? 383

தொழிற்பாடு- 46 384

அத்தியாயம் 15 **385**

துணிச்சலை வளர்த்தல்

அறிமுகம் 386

துணிச்சலும் பயமும் பற்றிய அடிப்படைத் தத்துவங்கள் 388

பிள்ளைகளில் பய உணர்வின் விருத்தியைப் புரிந்து கொள்ளல் 390

மனவெழுச்சி ரீதியான துணிச்சலும் உடல் ரீதியான துணிச்சலும் 392

துணிச்சலுக்கும் இணங்கிப் போவதற்கும் இடையில்... 392

ஒத்த வயதினர் ஏற்படுத்தும் அழுத்தம் 393

பெற்றோரும் கலாசார நடைமுறைகளும் 395

தொழிற்பாடுகள் 47- 53 398

அத்தியாயம் 16 **403**

அன்பைப் போதித்தல்

அறிமுகம் 404

மனவெழுச்சி ரீதியான வலுவூட்டலின் அடிப்படை 405

அன்பு: ஆக்கபூர்வமான விவேகம் பற்றிய எண்ணக்கருவும் அல்குர்ஆனும் 406

பெற்றோருக்கான சில உதவிக்குறிப்புகள் 408

'உங்களை வெறுக்கிறேன்' எனப் பிள்ளை கூறினால்... 410

முதற்பிள்ளை 411

பெற்றார் தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துவது ஏன்? 412

அன்பும் பெற்றாரின் தன்னம்பிக்கையும் 414

இரக்க உணர்வை விருத்தி செய்வதற்கான நடைமுறை வழிகள் 414

ஒரு கணிப்பீடு: உங்கள் பிள்ளைகள் தம் மீது அன்பு செலுத்தப்படுவதை உணரச் செய்வதற்கான வழிகள் 417

பெற்றார் வெறுப்பைக் கற்பிக்க வேண்டுமா? ஆம்; சில வேளைகளில்! 418

தொழிற்பாடு- 54 419

அத்தியாயம் 17 421
நேர்மையும் நம்பகத்தன்மையும்

அறிமுகம் 422
பெற்றார் தம் பிள்ளைகளை நம்ப வேண்டும். ஆனால், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் 423
பொதுக் கோட்பாடுகள் 424
நடத்தைப் பண்பினை மொத்த உலகக் கண்ணோட்டத்தோடு ஒன்றிணைத்தல் 427
பிள்ளைகள் பொய் பேசக் காரணம்: பொய் கூறலுக்குப் பரிகாரம் என்ன? 428
பொய் கூறலுக்குப் பரிகாரமாக நபிகளார் காட்டிய வழி 431
தொழிற்பாடுகள் 55- 56 432

அத்தியாயம் 18 433
பொறுப்புணர்வைக் கற்றுக் கொடுத்தல்

அறிமுகம் 434
அத்திவாரமிடுதல்: மனப்பாங்குகளும் உலகக் கண்ணோட்டமும் 436
விருத்திக்குரிய பல்வேறு கட்டங்களில் காணப்படும் வாய்ப்புக்கள் 438
விருத்தி செய்ய வேண்டிய கோட்பாடுகள் 440
நடைமுறை ரீதியான ஆலோசனைகள் 443
சிறப்புச் சலுகைகளைப் பொறுப்புணர்வுடன் தொடர்புபடுத்தல்: சில உதாரணங்கள் 446
தொழிற்பாடுகள் 57- 58 449

அத்தியாயம் 19 451
சுயாதீனத்தைக் கற்றுக்கொடுத்தல்

'தங்கியிருக்கும் நிலையில்' வளர்தல் 452
பாதுகாப்புணர்வும் சுயாதீனமும் 455
வயது குறித்த சாதனைகள் 455
நடைபயிலும் வயதினர் தமது வழியைத் தாமே கண்டுகொள்ள விடுங்கள் 457
பிரிவுக் கவலை: ஒட்டித் திரியும் நடத்தையைக் கையாளுதல் 457
பதின்ம வயதினர்- உண்மை நிலை 458
பிள்ளை வளர்க்கும் முறையின் தாக்கம்: அதிகார அடிப்படையும் வலிமை அடிப்படையும் 461
பிள்ளைகளில் சுயாதீனப் போக்கை வளர்ப்பதற்கான திறன்கள் 463

பெற்றாருக்குச் சில உதவிக் குறிப்புக்கள் 469
அறிவுரையும் சுயாதீனமும்: மகளும் அவளது தாயும் 471
பெற்றார் தம் பிள்ளைகளின் நண்பர்களை விரும்பாவிட்டால்... 473
பிள்ளைகள் தாமே தீர்மானங்களை எடுக்க உதவுதல் சுயாதீனத்தை மேம்படுத்தும் 475
தீர்மானமெடுத்தலின் படிகள் 476
தொழிற்பாடுகள் 59- 61 476

அத்தியாயம் 20 **479**
ஆக்கத்திறனை வளர்த்தல்

அறிமுகம் 480
ஆக்கத்திறன் தொடர்பான பொதுக் கருத்துப் படிவங்கள் 481
வரலாற்று ரீதியான எளிய கண்டுபிடிப்புக்கள் 484
பிள்ளைகளின் ஆக்கத்திறனை நெரித்து விடுதல் 485
ஆக்கத்திறனைத் தடுக்கும் எதிர்மறையான மனப்பாங்குகள் 485
ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கான வழிகள் 487
சில தப்பெண்ணங்கள்: 'விநோதமான' அல்லது 'பயனற்ற' கருத்துக்கள் 491
பெற்றார் செய்யக்கூடியவை 492
விளையாட்டுப் பொருட்கள் பற்றிய குறிப்பு 492
தொழிற்பாடுகள் 62- 65 493

அத்தியாயம் 21 **497**
சுய மதிப்பும் கெட்டுப்போன பிள்ளைகளும்

சுய மதிப்பு 498
பிள்ளை கெட்டுப்போகாமல் தவிர்ப்பது எப்படி? 499
அழுது அடம்பிடித்தல்: அழுகையை ஆயுதமாகப் பயன்படுத்த இடமளிக்காதீர்கள் 500
தொழிற்பாடுகள் 66- 68 501

அத்தியாயம் 22 **503**
உங்கள் பிள்ளைக்குப் பொருத்தமான நண்பர்களைத் தெரிவு செய்தல்

உங்கள் பிள்ளையின் நண்பர்கள் 504
கெட்ட நண்பர்கள் தொடர்பான சில பிரச்சினைகள் 506
பள்ளிக்கூடத்தில் அன்றாடம் இடம்பெறும் ஒத்த வயதினரின் நெருக்குதல்கள் 506
பொருத்தமான நண்பர்களைத் தெரிவு செய்தல் 507

உங்கள் பிள்ளை விரும்பத்தகாத நண்பர்களைத் தெரிவு செய்தால் என்ன செய்வது? 508
பதின்ம வயதினரிடையே வலிமையான கவர்ச்சி காணப்படுவது ஏன்? 509
விரும்பத்தகாத இடங்களில் வாழும் குடும்பங்கள் 511
தொழிற்பாடுகள் 69- 71 512

அத்தியாயம் 23 **515**

தொலைக்காட்சி, வீடியோ, கம்பியூட்டர் விளையாட்டுக்கள் என்பன ஏற்படுத்தும் அழிவுரீதியான தாக்கங்கள்

அறிமுகம் 516
பெற்றாருக்கு ஒரு வினாக்கொத்து 516
TVயின் பாதகமான விளைவுகள் 518
TV இல்லா வீடு! 523
TVயிலிருந்து நீங்கள் விடுதலை பெற உதவும் சில ஆலோசனைகள் 525
TV பற்றிய சில தரவுகள் 525
எமது TV பண்பாடு 526
ஓர் அந்நியர் 528
TV பழக்கத்தை மாற்றுவது எப்படி?- சில குடும்பங்களின் அனுபவங்கள் 529
TV பற்றிய ஓர் எச்சரிக்கை 530
TV பார்ப்பதற்குப் பதிலாக குடும்பத்தினர் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் 531
TV பார்ப்பதற்குப் பதிலான சில மாற்று வழிகள் 532
மேலும் சில சீரியஸான தெரிவுகள் 534
மிதமிஞ்சிய இண்டர்நெட் உபயோகத்தின் தீங்குகள் 537
கம்பியூட்டர் விளையாட்டுக்கள் 538
வீடியோ விளையாட்டுக்களும் சிறுவர்களும் 538
சாராம்சம் 541
தொழிற்பாடுகள் 72- 76 542

முடிவுரை **545**

பின்னிணைப்பு **550**

உசாத்துணைகள் **555**

கலைச் சொற்கள் **568**

இந்நூலின் வரலாறு

இந்நூல் எல்லாப் பெற்றோர்களுக்காகவும் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் யாராக இருந்தாலும் எங்கு இருந்தாலும் சரியே - எனினும் அதன் எண்ணக்கருவானது முஸ்லிம் உலகத்தை அது வீழ்ந்துள்ள அறிவு ரீதியான தேக்க நிலையிலிருந்து எழுச்சி பெறச் செய்து, ஒரு காலத்தில் அதன் மகத்தான நாகரீகத்தினை அடையாளப்படுத்திய அறிவு சார் இயங்கு தன்மையை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்ற இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) நீண்டகால நோக்கின் அம்சமொன்றாகவே விளங்குகிறது. இந்நூல் பிள்ளை வளர்ப்பு பற்றிய தனது நோக்கத்திற்குத் தோள் கொடுத்து முன்னெடுத்துச் செல்வதற்காக கல்வியின் மூலம் முஸ்லிம் மனதையும் ஆத்மாவையும் மீள உயிர்ப்பிப்பதில் கவனம் செலுத்துகிறது. முஸ்லிம் உலகு அறிவு ரீதியாக வீழ்ச்சியுற்ற முறை பற்றிய பரிசீலனை இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை. எனினும், IIIT இன் வெளியீடுகளிலும் மாநாடுகளிலும் முஸ்லிம்களின் அறிவாற்றலை உயிர்ப்பிப்பதற்கு உதவும் வகையில் இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தமே பிரதான தொனிப்பொருளாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

நடைமுறையில் நல்ல பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் முறையினைப் பெற்றோர் அறிந்திருப்பது அவசியமாகிறது. ஏனெனில், பிள்ளைப் பருவத்தின் ஆரம்பத்தில், விழுமியங்கள் மற்றும் ஆளுமை தொடர்பான உளரீதியான அத்திவாரம் வீட்டிலேயே விருத்தியடைகிறது.

எனவே, ஒரு பிள்ளை அறிவு, உளவியல் மற்றும் மனவெழுச்சி ரீதியாக பொருத்தமான விருத்தியைப் பெறுவதற்கு வீட்டில் வழங்கப்படும் கலாசார, கல்வி மற்றும் மனவெழுச்சி தொடர்பான திறன்சார் பயிற்சிகள் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றன என்பது பற்றி நாம் கவனம் செலுத்தப் போகிறோம்.

தவறானதையும் சரியானதையும் தீர்மானிக்கும் பிள்ளையின் சிந்தனைச் செயன்முறையில் செல்வாக்குச் செலுத்தும் அதன் நடத்தைக் கோலங்கள் வீட்டிலேயே உருவாகின்றன. எனினும் சரியானது எது என்பதை அறிந்திருப்பதால் மாத்திரம் பிள்ளை அதனைச் செய்துவிடப் போவதில்லை. உள்ளம் சரியென்று கொள்வதைச் செய்வதற்கான மன இணக்கத்தையும் ஆர்வத்தையும் மனிதனின் உள்ளம் விருப்பத்துடனும் ஆவலுடனும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்த இடத்தில் தான் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமாகின்றது. பள்ளிக்கூடங்களும் கல்வி நிறுவனங்களும் வரலாற்றுத் தரவுகள், உண்மைகள், பௌதிகத் தொழில்நுட்பத் திறன்கள் முதலியவற்றைக் கற்பிப்பதோடு பிள்ளைக்குப் பல்வேறு தகவல்களையும் வழங்குகின்றன. இவை பிள்ளையின் வீட்டினாலும் குடும்பத்தினாலும் குறைநிரப்பப் படுகின்றன. ஏனெனில், வீடும் குடும்பமுமே பிள்ளையின் நடத்தைப் பண்பு, சமூகத் திறன்கள், மனவெழுச்சி வலிமை என்பவற்றை விருத்தி செய்கின்றன.

பிள்ளை விருத்தி, வளர்ப்பு என்பவற்றுடன் மானிடத் தலைமைப் பண்பின் பல்வேறு அம்சங்களை விருத்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்வதே இவ்வாக்கத்தின் நோக்கமாகும். இதே நோக்கத்திற்காக IIIT பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளதோடு பல முக்கியமான ஆக்கங்களையும் வெளியிட்டுள்ளது. இவற்றுள் A Training Guide for Islamic Workers *(இது 20க்கு மேற்பட்ட மொழிகளுக்குப் பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் பதிப்பு: முஸ்லிம் இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வழிகாட்டி)*, Dilal Maktabat al-Muslimah *(முஸ்லிம் குடும்ப நூலகத்துக்கான வழிகாட்டி)*, Amzat al Iradah wa al- wujdan al- Muslim (Crisis in the Muslim Will and Psyche) என்பன குறிப்பிடத்தக்கவை.

1994 ஆகஸ்டில் மலேஷியாவின் தியோமான் தீவில் இடம்பெற்ற IIIT இன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டத்தின் போதே பெற்றார்- பிள்ளை உறவு பற்றி நூலொன்று

எழுதுவது சம்பந்தமான ஆலோசனை முன்வைக்கப்பட்டது. மனித விருத்தி மற்றும் ஆட்களுக்கிடையிலான தொடர்பாடல் என்பன பற்றி IIIT இனால் வெளியிடப்பட இருந்த நூல்களின் தொடரில் மூன்றாவதாக இது அமையவிருந்தது. இந்தவகையில் IIIT இன் வேண்டுகோளின் பேரில் டாக்டர் இஸ்மாயீல் பாரூக்கி அவர்கள் 'Tawhid- It implications for Thought and Life (தௌஹீத்- சிந்தனையிலும் வாழ்க்கையிலும் அதன் தாக்கங்கள்- விசுவாசம்- அகீதா என்பன பற்றிய பயிற்சிக் கைந்நூல்) என்ற ஆக்கத்தை 1982 இல் எழுதினார். பின்பு 1991 இல் IIITயும் IIFSO என்னும் மாணவர் அமைப்புக்களின் சர்வதேச இஸ்லாமிய ஒன்றியமும் இணைந்து A Training Guide for Islamic Workers என்ற வெற்றிகரமான நூலை வெளியிட்டன. இத்தொடரில் இரண்டாவது நூலான அது, தனியாள் மற்றும் குழு ரீதியான திறன்கள் பற்றியும் தலைமைத்துவத் திறன்கள் பற்றியும் முஸ்லிம்களுக்கு அறிவூட்ட முனைந்தது. இத்தொடரில் மூன்றாவது நூலாக இது கருதப்படுகிறது.

குடும்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட மலேஷியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் அப்போதைய (1988-1998) முதல்வர் Dr.அப்துல் ஹமீத் அபூஸுலைமான் அவர்கள் அங்கு குடும்பம், பிள்ளை வளர்ப்பு என்பன பற்றிய கட்டாய டிப்லோமாப் பாடநெறியொன்றைப் புதிதாக ஆரம்பித்து வைத்தார். பிள்ளை வளர்ப்பு தொடர்பான அடிப்படைகளையும் ஒழுக்க விழுமியங்களையும் மாணவர்களுக்கு வழங்குவதும் அந்தப் பாடநெறியைக் கற்பிப்பதற்குப் போதுமான ஆசிரியர்களை உருவாக்குவதும் இதன் நோக்கங்களாக இருந்தன.

இதற்கு மேலதிகமாக IIITஇன் ஆரம்ப கர்த்தாக்கள் தலைமைத்துவப் பயிற்சி தொடர்பான மூன்று கட்டக் கருத்தரங்குத் தொடரொன்றை ஆரம்பித்து வைத்திருந்தார் கள். இதன் மூன்றாம் கட்டத்தின் போது பிள்ளை வளர்ப்பு பற்றிய நூலொன்றைத் தயாரிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது.

கட்டம் 1 *(1975- 1990)* இது, வரையறை செய்தல், தயார் படுத்தல், பிரசாரம் செய்தல், ஆளணியைத் திரட்டுதல் என்பவற்றைக் கொண்டிருந்தது. ஒரு பணியின் வினைத்திறனையும் செயற்பாட்டையும் மேம்படுத்துவதற்குத் தேவையான திறன்களையும் கருவிகளையும் பற்றி இது கருத்துலெடுத்தது. இதன் விளைவாகவே, இத்தொடரின் இரண்டாவது நூலான A Training Guide for Islamic Workers என்ற ஆக்கம் வெளியிடப்பட்டது.

கட்டம் 2 *(1991- 2000)* நிறுவன ரீதியான பயிற்சி முயற்சிகள் மேற்கொள்ளப்படல். தகைமை மிக்க பின்வரும் பயிற்சியாளர்கள் உலகளாவிய ரீதியில் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தினார்கள்: Dr.உமர் கஸூலே (குவாலா லம்பூரில்), Dr.இக்பால் யூனுஸ் (வொஷிங்டனில்), Dr.அனஸ் அல் ஷெய்க் அலி (லண்டனில்), Dr.மன்ஸூர் ஆலம் (புது டில்லியில்)

கட்டம் 3 இது 21ம் நூற்றாண்டின் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமாகக் கவனம் செலுத்தியது. கட்டம் 1,2 வாலிப உழைப்பாளிகளை இலக்காகக் கொண்டிருந்தன. எனினும், பிறப்பிலிருந்தே ஆரம்பிக்கின்ற மிக முக்கிய அம்சமான நடத்தைப் பண்புகளின் விருத்தியும் மிகத் தேவை என்பது உணரப்பட்டது. எனவே, சிறந்த பிள்ளை வளர்ப்புத் திறன்களைப் பயன்படுத்தி பெற்றார் ஆற்றக்கூடிய அதிமுக்கிய பங்கினை வலியுறுத்திக் காட்ட IIIT தீர்மானித்தது. பிள்ளைகள் ஆரோக்கியமாக வளர்வதற்கு உகந்த வீட்டுச் சூழல் ஒன்றினூடாக நேர்மையான பிரஜைகளையும் கொள்கை தவறா தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட எதிர்காலத் தலைவர்களையும் உருவாக்கப் பெற்றோர்களால் முடியும் என்பதும் உணரப்பட்டது. இதன் விளைவே இந்த நூலாகும்.

பிள்ளை வளர்ப்பு என்பது குறை மதிப்பீடு செய்யப்படக்கூடிய அல்லது இலகுவானதெனக் கருதப்படக்கூடிய பணியொன்றல்ல. அது, நாம் வளர்க்கும் பிள்ளைகளதும் நாம் வாழும் சமூகத்தினதும், இறுதியில் நாம் அடுத்த பரம்பரைக்குக் கையளிக்கப் போகும் நாகரீகத்தினதும் தன்மையைப் பெருமளவில் தீர்மானிக்கிறது. எனவே, அது பற்றி மிக முக்கிய கவனம் செலுத்தப்படுவதோடு அதற்கு உயர்தர முன்னுரிமையும் வழங்கப்பட வேண்டும். இது எம்மால் போற்றிப் பேணப்படும் ஓர் ஆழமான நம்பிக்கையாகும். எனவே, இந்த நூலின் ஒவ்வொரு தலைப்பின் கீழும் அடங்கியுள்ள விடயங்கள் பற்றி மேலதிக ஆய்வுகளை நிகழ்த்தி அறிவூட்டும் ஆக்கங்களை உருவாக்கி இத்துறையை மேலும் மேம்படுத்துமாறு ஏனைய எழுத்தாளர்களையும் நாம் உற்சாகப்படுத்துகிறோம். இந்த விடயங்கள் தொடர்பாக மேலும் ஆக்கங்களை விருத்தி செய்வதற்கென IIIT ஏற்கனவே பல அறிஞர் குழுக்களை உருவாக்கியுள்ளது. அத்தோடு, இவ்வாக்கங்கள் பிரதான உலக மொழிகளுக்குப் பெயர்க்கப்பட்டும் உள்ளன. இந்நூல் நடைமுறை மட்டத்தில் சிறந்த பிள்ளை வளர்ப்பு முறைகளை ஊக்குவிப்பதற்கு எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை மாத்திரமே.

'உலகில் மிகப் பெரிய வியாபாரம், மிக முக்கியமான பணி, மகத்துவமான பணி மற்றும் மனித சமுதாயத்தின் மிகச் சிறந்த முதலீடு பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதாகும்' எனப் பல நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இலக்குகளும் குறிக்கோள்களும்

வாசிப்பதற்கு எளிதான இந்நூல் இன்றைய எமது உலகில் வாழும் ஒரு பில்லியன் பெற்றோர்களை- இவர்கள் முஸ்லிம்களாகவோ ஏனைய சமூகத்தவர்களாகவோ இருக்கலாம்- விழித்துப் பேசுகிறது. அத்தோடு, பெற்றார் அல்லாதோருக்கும் பேற்றாரின் பெற்றாருக்கும், இதன் அறிவுரைகளிலிருந்து பயன் பெற விரும்பும் உறவினர்களுக்கும் இதன் அழைப்பு உண்டு. இது, அறிஞர்களையோ குறித்த சில நிபுணர்களையோ இலக்காகக் கொண்டு எழுதப்படவில்லை. பிள்ளை வளர்ப்பின் இலக்குகள் பற்றியே இது குறிப்பாகக் கவனத்திலெடுத்துள்ளது. அத்தோடு, அது தொடர்பான பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டி அவற்றுக்கான தீர்வுகளையும் வழங்குகிறது. மேலும், நேர்மையான, ஒழுக்கத்திற் சிறந்த, தலைமைத்துவப் பண்புகளைக் காட்டக்கூடிய மக்களை விருத்தி செய்து வளர்த்தெடுப்பதற்குரிய முறைகளையும் இது காட்டித்தருகிறது.

இவ்வாக்கத்தின் பிரதான குறிக்கோள்கள்:

- வெறும் கொள்கை ரீதியில் அல்லாது நடைமுறை ரீதியில் பிள்ளை வளர்க்கும் பொறுப்பினை ஒரு கடமையாகவும் உயர் முன்னுரிமைக்குரியதாகவும் ஆக்குவதன் மூலம் பிள்ளைகளையும் குடும்பங்களையும் வளர்த்து உருவாக்குவதில் சிறந்த பிள்ளை வளர்ப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்.

- சமூகத்தினதும் எதிர்கால மனித நாகரிகத்தினதும் ஆக்கக்கூறுகளாக அமைவதற்குத் தேவைப்படும் பண்புகளைக் கொண்ட நேர்மையான, நன்னடத்தையில் உறுதியான, ஒழுக்கப் பண்புகளைக் கொண்ட பிரஜைகளை வளர்த்தெடுப்பதற்கு உதவும் சரியான பிள்ளை வளர்ப்பு நுட்பங்களை அமுல் படுத்துவதற்கு அவசியமான கல்வியையும் திறன்களையும் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதைப் பெற்றோருக்குக் காட்டுதல்.

- இறுதியாக, குடும்ப அங்கத்தவர்களிடையே பரஸ்பரம் ஒத்தாசை வழங்கும் உறவுகளைக் கொண்ட மகிழ்ச்சியும் ஒற்றுமையும் மிக்க செயல் முறையான குடும்ப- வீட்டுச் சூழலொன்றை உருவாக்குவதில் பெற்றோருக்கு உதவுதல்.

முதலாம் பகுதியில், பிள்ளை வளர்ப்பு என்றால் என்ன? அதன் பின்னணியிலுள்ள கோட்பாடு யாது? என்பதை விளக்கியுள்ளோம். மேலும், முஸ்லிம் உலகத்தையும் முழுமையான சமூகத்தையும் புத்துயிர் பெறச் செய்வதற்கான சரியான தீர்வொன்றைப் பெறும் வகையில் அதனை எவ்வாறு அமுல் படுத்தலாம் என்பதையும் ஆராய்ந்துள்ளோம். அத்தோடு, இன்று பிள்ளை வளர்ப்பின் நடைமுறை நிலைமை பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளதோடு, பிள்ளை வளர்ப்பு தொடர்பாக முஸ்லிம் உலகிலும் உலகின் கைத்தொழில் மய நாடுகளிலும் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் மூலங்களை நாம் மீளாய்வு செய்திருக்கிறோம்.

உயிர்ப்பான சமூக மாற்றத்துக்குரிய பண்புகளைக் கொண்ட உயர் ஒழுக்கமும் நன்னடத்தையும் உள்ள பிள்ளைகளை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி நாம் ஆராய முனைந்திருக்கிறோம். இந்நூலின் இரண்டாம் பகுதியில் உடல், மனவெழுச்சிகள் சார்ந்த உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்குத் தேவைப்படுகின்ற முறைமைகளும் கருவிகளும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பகுதி மூன்று, நன்னடத்தையைக் கட்டியெழுப்புவது பற்றிக் கவனம் செலுத்தியுள்ளது. தொலைக்காட்சி, கம்பியூட்டர், வீடியோ விளையாட்டுக்கள் என்பவற்றின் அளவுக்கு மீறிய உபயோகம் பிள்ளைகளிலும் குடும்ப வாழ்க்கையிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றிக் கலந்துரையாடும் அதே வேளையில் அவற்றுக்குரிய நடைமுறைச் சாத்தியமான மாற்று வழிகளையும் வழங்குகிறது.

ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் பெற்றோரினாலும் பிள்ளைகளினாலும் செய்யப்பட வேண்டிய எளிதான சில பயிற்சிகளையும் நாம் சேர்த்துள்ளோம். குடும்ப அங்கத்தவர்களிடையே தொடர்ச்சியான கலந்துரையாடலையும் தொடர்பாடலையும் ஊக்குவிப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இதன் மூலம் அவர்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்வதோடு நேரத்தை மகிழ்வோடு ஒன்றாகக் கழித்தல், தீர்மானம் மேற்கொள்வதில் பங்கு பற்றல், திறன்களைப் பகிர்ந்து கொள்ளல் முதலிய செயற்பாடுகளிலும் ஈடுபடுவர். இது உயிர்ப்பான குடும்ப உறவுகளையும் மகிழ்ச்சியான வீட்டுச் சூழலையும் கட்டியெழுப்ப உதவும். இங்கு தரப்பட்ட சில தொழிற்பாடுகளுக்கு மாத்திரமே நூலகத்தைப் பயன்படுத்தல், ஏனைய பெற்றோர்களுடன் கலந்தாலோசித்தல், நிபுணர்களின் அறிவுரையைப் பெறுதல் போன்ற புறத்தகவல் மூலங்கள் தேவைப் படுகின்றன. இத்தொழிற்பாடுகளைக் குடும்பத்தினர் வீட்டிலோ அல்லது வீட்டுக்கு வெளியே உணவுண்ணும் போதிலோ மேற்கொள்ள வேண்டுமென நாம் சிபாரிசு செய்கிறோம். ஒவ்வொருவரும் பங்குபற்றக் கூடிய, ஆட்களுக்கிடையிலான இக் கலந்துரையாடல்களும் தொழிற்பாடுகளும் அன்றாட பிள்ளை வளர்ப்புச் செயன்முறையில் இன்று காணப்படுகின்ற ஒரு முக்கியமான இடைவெளியை நிறைவு செய்ய உதவும் என நம்புகிறோம். அதாவது, மிக அரிதாக எதிர்கொள்ளப்படுகிற அல்லது வழமையாக ஓரம்கட்டப்படுகிற உள்வாரியான குடும்பப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு இங்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இது போன்ற கலந்துரையாடல்களும், குடும்பம் பற்றிய சிந்தனைகளும் கூட பெறுமதி வாய்ந்த இலக்குகளாக அமைந்து விடுகின்றன.

இறுதியாக, இந்நூலையும் அது கையாள முயற்சிக்கும் பிரச்சினைகளையும் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பாக மேலதிக ஆக்கங்கள் வெளியிடப்படும். அவை, பின்வரும் இரு பிரதான தொனிப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்படும்.

(1.)(a) கல்வி, இறை நம்பிக்கை, திறன், பயிற்சி என்பவற்றில் பெற்றாரின் பங்கை விளங்கிக் கொள்ளுதல்.

(b) ஆற்றல் மிக்க எதிர்காலத் தலைவர்களை விருத்தி செய்வதற்கு மகிழ்ச்சிகரமான குடும்பங்களே தேவை.

1:(a)ஐப் பொருத்தமட்டில் பிள்ளைகளின் இறை நம்பிக்கை பற்றிய எண்ணக் கருவையும் தலைமைத்துவத் திறன்களையும் விருத்தி செய்வதில் தமது பங்களிப்பைப் பெற்றார் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்வதற்கு உதவுவதே நோக்கமாக இருக்கிறது.

1:(b)ஐப் பொருத்தமட்டில் குடியுரிமைப் பொறுப்புணர்வு கொண்ட தலைவர்களாக வரக்கூடிய இறையச்சமுள்ள மக்களைப் போஷித்து உருவாக்கும், அடைகாக்கும் தளமாகச் செயற்படக் கூடியவாறு குடும்ப - வீட்டுச் சூழலை களிப்பு மிக்கதாகவும் சௌகரியமானதாகவும் உருவாக்குவது பற்றிக் கவனம் செலுத்துகிறது. தொடர்பாடல் பற்றிய பிரச்சினைகள், புகழ்தல், கண்டித்தல், கோபித்தல், குடும்ப நேரத்தை ஒன்றாகக் கழித்தல் என்பன சரியான சூழலை உருவாக்கி வழங்குவதற்குத் தேவையான செயன்முறைப் படிகளாக அமைகின்றன. அத்தோடு, பிள்ளைகள் அவதானிப்பதில் சிறந்தவர்கள். ஆனால், பகுப்பாய்வு செய்வதில் குறைபாடுடையவர்கள் என்ற கருத்தும் விளக்கிக் காண்பிக்கப்படும். நிஜ வாழ்க்கையில் பிள்ளைகள் பிற பிள்ளைகளோடும் பெற்றார், ஏனைய உறவினர், விருந்தினர்கள், அயலவர்கள், வறியவர்கள், சமுதாயம், மிருகங்கள், தாவரங்கள், சுற்றாடல் மற்றும் பொதுவான உலகத்துடனும் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பெற்றோர் கண்டு கொள்வதற்கு உதவும் செயன்முறைச் சோதனைகளும் வழங்கப்படும்.

2:சிறந்த பிள்ளை வளர்ப்புக்கு சிறந்த முன்மாதிரிகள் கட்டாயம் தேவை: பெற்றார்-நபிமார்கள்.

பிள்ளைகளின் விருத்தி தொடர்பாகத் தம் சொந்த நடத்தையின் முக்கியத்துவத்தைப் பெற்றார் உணர்ந்து கொள்வதற்கு வழி செய்யப்படும். பிள்ளைகள் மற்றவர்களைப் பார்த்துப் பிரதி பண்ணுபவர்களாக இருப்பதனால் பெற்றார் தம்மால் முடிந்த அளவுக்கு அவர்களுக்குரிய சிறந்த முன்மாதிரிகளாக விளங்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் பிள்ளைகளும் தம்மால் முடிந்தளவுக்குச் சிறந்தவர்களாக இருப்பார்கள்.

ஒரு தந்தையாக, பாட்டனாக, பிள்ளைகளுக்குச் சிறந்த நண்பராக பெரும் தலைவராக நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் காட்டிய சிறந்த முன்மாதிரியை அவர்களது வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது. உண்மையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களது நடத்தை பற்றிக் கற்பதன் மூலமும் அவர்களது நடத்தையை முன்மாதிரியாகக் கொள்வதன் மூலமும் இவ்வாக்கம் முழுவதிலும் வழங்கப்படும் அறிவூட்டல்களுக்கு நாம் நியமமொன்றைப் பிரயோகிக்க முடியும். இறுதியாக, பெற்றார் தம்மால் முடிந்தளவு முயற்சி செய்து எமது ஆலோசனைகளை அமுல் படுத்துவதில் வெற்றி கண்டால், சாதகமான நிகழ்ச்சி வட்டமொன்றை முடுக்கி விட முடியுமென நாம் நம்புகிறோம். அதாவது, சமூகத்தில் உயிர்ப்போடு பங்கு கொள்ளக்கூடிய ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் மிக்க பிள்ளைகளை நாம் வளர்த்தெடுத்தால் பிற்காலத்தில் அவர்களே சிறந்த முன்னுதாரணமான பெற்றோராக மாறி விடுவார்கள்.

வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் வைத்துத் தாய் தந்தையரிடம் உங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க நீங்கள் என்ன செய்தீர்கள்? எனக் கேட்கப்பட்டால் 'நான் சிறந்த பெற்றோராக இருந்தேன்' என அவர்கள் தன்னம்பிக்கையோடு பதிலளிக்க முடியும். மகிழ்ச்சியுடைய பாட்டன் அல்லது பாட்டியாக இருந்தேன் என்று கூடக் கூறலாம்.

அறிமுகம்

மனிதர்கள் மிகச் சிறந்த வடிவத்தில் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு, மிக உயர்ந்த சமூகத் தரத்தை அடையக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கு குழந்தைகளினதும் பிள்ளைகளினதும் விருத்தி பற்றிய கோட்பாடு ரீதியான அறிவும் செய்முறை அறிவும் தேவைப்படுகின்றன. புதிய பெற்றார்களுக்கு குழந்தை வளர்ப்பு பற்றிய அனுபவம் மிகக் குறைவாக இருப்பதனால் பிள்ளைகளுடன் நடந்து கொள்வது எப்படி என்பதை குழந்தை கருவில் உருவாவதற்கு முன்பே அவர்கள் அறிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

நல்ல வீடுகளையும் வாகனங்களையும் தளபாடங்களையும் பெற்றுக் கொள்வதற்காக செல்வத்தைக் குவிப்பதில் பெருமுயற்சி காட்டும் நாம் பிள்ளை வளர்ப்பு விடயத்தில் அதே அளவு முயற்சியைக் காட்டாமலிருப்பது துரதிர்ஷ்டமே. நாம் போதிய ஆயத்தங்கள் செய்யாமலேயே எல்லாம் சிறப்பாக நடந்து விடும் என எடுத்துக் கொள்வது அல்லது நம்புவது இதற்குக் காரணமாக இருக்கலாம். பிள்ளை வளர்ப்பு என்பது வெறுமனே அதிர்ஷ்டத்தின் மீது பொறுப்புச் சாட்டும் விடயமல்ல. ஏனெனில், இங்கு பந்தயமும் பணயப் பொருளும் பாரதூரமானவையாக இருக்கின்றன.

பொதுவாகப் பெற்றார் முயன்று தவறிக் கற்பதன் மூலமே அறிவைத் திரட்டிக் கொள்கிறார்கள். எனவே, தம் முதற் குழந்தைகளை விடப் பிந்திய குழந்தைகளை வளர்ப்பதில் அவர்கள் வினைத்திறன் காட்டுகிறார்கள். இதற்குத் தமது ஆரம்பகால அனுபவங்களிலிருந்து பெற்ற அறிவு துணை புரிகிறது. எனினும் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் இப்பெறுமதி மிக்க பாடங்களைக் கற்று முடிக்கும் போது காலம் கடந்து போயிருக்கலாம். அவர்களுடைய முதற் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி இருப்பார்கள். இதனால் அவர்கள் கற்றுக் கொண்டவற்றை செயற்படுத்துவது சாத்தியமில்லாது போய்விடும்.

நல்ல முறையில் பிள்ளைகளை வளர்ப்பது முக்கியமானது. எனவே, அது தானே நடக்கும் என விட்டுவிட முடியாது. தொடர்ச்சியான கவனம் தேவைப்படுகின்ற, சவால் மிக்க பணியாக அது விளங்குகிறது. இதனால்தான் நாம் எதிர்கொள்ளவிருக்கும் பணி பற்றி விளங்கிக் கொள்வதோடு எமக்காகவும் எமது வாழ்க்கைத் துணைவர்களுக்காகவும் எமது குடும்பங்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவது அவசியமாகின்றது.

பிள்ளை வளர்ப்பு தொடர்பாக இந்நூல் முழுவதிலும் நாம் வலியுறுத்துகின்ற மிக முக்கியமான அம்சம் தொடர்பாடலாகும். பிள்ளைகளுடன் பயனுறுதி மிக்க முறையில் தொடர்பாடலை மேற்கொண்டால் அவர்கள் மகிழ்ச்சிகரமான, பொறுப்புணர்வு மிக்க பெரியவர்களாக மாறுவதற்குத் துணை செய்யும். பிள்ளைகளோடு எவ்வாறு, எப்போது உரையாட வேண்டும் என்பதை அறிந்திருப்பது மிக முக்கியமானது. அவர்கள் கூறுபவற்றைப் பொறுமையோடும் புரிந்துணர்வோடும் செவிமடுப்பது எப்படி என்பதை அறிந்திருப்பது அதைவிட முக்கியமானது. பெற்றார் தம் பிள்ளைகள் மீது நிபந்தனைகளற்ற அன்பைக் காட்டுவதோடு அவர்களோடு தொடர்பாடல் செய்யவும் அவர்களுக்குச் செவிமடுக்கவும் தேவைப்படுகின்ற திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். தொடர்பாடல் என்பது இரு வழிச் செயன்முறையாகும். அது ஒரு போதும் தடைப்பட்டு நின்றுவிடக் கூடாது. எந்தவித வற்புறுத்தலுமின்றி பிள்ளைகள் தம் முழுமையான ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்குப் பெற்றார் உதவி செய்ய வேண்டும். ஏனைய தாய் தந்தையர் முகம் கொடுக்கும் உண்மையான வாழ்க்கை நிலைமைகளுடன் தம்மைப் பரிச்சயப் படுத்திக் கொள்வதானது, சிரமமான நிலைமைகளைச் சமாளிப்பதற்குத் தேவையான திறன்களையும் நுட்பங்களையும் பெற்றார் பிரயோகிப்பதில் உதவியாக அமையக்கூடும்.

பெற்றார் சில பழைய நடைமுறைகளை மீள் பரிசீலனை செய்வதும் அவசியமாகும். ஏனெனில், பழையன எப்போதும் சிறந்தனவாக அமையாது போகலாம். காலம் மாறும் போது ஆக்கபூர்வமான முறையில் கையாளப்பட வேண்டிய புதிய சூழல்கள் உருவாகிக் கொண்டிருக்கும். தமது பிள்ளைகள் மிகச் சிறந்தவர்களாக ஆகிவிடுவார்கள் என இயல்பாகவே எல்லாப் பெற்றோரும் நம்புகின்றனர். பெற்றோர்கள் அப்பாவித்தனமாக செய்துவிடும் பொதுவான தவறுகள் சிலவற்றையும் பொதுவாக எதிர்கொள்ள நேரிடும் பல பிரச்சினைகளையும் நாம் இங்கு சுட்டிக்காட்டுவோம்.

பிள்ளைகளில் காணப்படும் தலைமைத்துவப் பண்புகளை மேலும் விருத்தி செய்வது பற்றியும் இவ்வாக்கம் ஆராய்கிறது. நாம் கவனம் செலுத்தப் பொருத்தமற்ற ஓர் அம்சமாக இது தோன்றக் கூடும். இங்கு நாம் தலைமைத்துவம் எனக் குறிப்பிடும் போது அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள நாடும் போக்கைக் கருதவில்லை. மாறாக, குடியுரிமைப் பொறுப்புணர்வுள்ள உயிர்ப்பான சமூக அங்கத்தவர்களாக மாறுவதற்குத் தேவையான வலிமையையும் ஒழுக்க சீலத்தையும் ஆற்றலையும் நன்னடத்தையையும் அது போன்ற ஏனைய பண்புகளையும் கொண்ட மனிதர்களை உருவாக்குவதையே கருதுகிறோம்.

இன்றைய இளைஞர்கள் சிலரைப் பொருத்தமட்டில் வீடு என்பது வெறுமனே ஒரு தங்கும் விடுதி போலவும் உணவகம் போலவும் தரம் குறைந்துள்ளது. பெற்றார், பிள்ளைகள் ஆகிய இரு சாராருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் அமைதி நிரம்பியதாகவும் வீட்டுச் சூழலை உருவாக்கிக் கொள்வது மிக அவசியமாகும். வீடு என்பது வெறும் இடம் ஒன்றல்ல. அது ஓர் அடைகாக்கும் தளமாகவும் நாடக மேடையாகவும் விளங்குகிறது. இம்மேடையில் குடும்ப உறுப்பினர்களே நடிகர்களாவர். அவர்களது தொடர்பாடலே கதை வசனங்களாகும். ஒவ்வொருவரும் தமக்குரிய பாத்திரத்தை ஏற்று நடிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று பல பெற்றார்களும் பிள்ளைகளும் ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போகாத நிலைமையைக் காணும் போது கவலையாக இருக்கிறது. இதனால் வீடு செயற்பாடு இழந்திருக்கிறது. சில பெற்றார்களும் பிள்ளைகளும் ஒருவரோடு ஒருவர் பயத்துடனும் சந்தேகத்துடனும் வாழ்கின்றனர். தம் உறவினைச் சீர் செய்து கொள்வது எப்படி என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் முயற்சியைக் கைவிட்டு, விரக்தியும் கோபமும் அடைந்து, மனவெழுச்சி ரீதியாக பரஸ்பரம் ஒதுங்கிக் கொள்ளவும் கூடும். இறுதியில் தம் உறவினை முற்றாகக் கைகழுவி விட வேண்டியும் ஏற்படும்.

பிள்ளை வளர்ப்பு பாரிய பொறுப்பொன்றாக இருப்பினும் யாரும் மனம் தளர்ந்து அதனைக் கைவிட்டு விடத் தேவையில்லை. சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை. எமது கடந்த காலத் தவறுகளுக்காக எம்மையே நாம் குற்றஞ்சாட்டிக் கொள்வதைத் தவிர்க்க முடியுமானால் எமது உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு இன்னும் வாய்ப்பிருக்கும். 'நாம் அப்படிச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே' அல்லது 'அப்படிச் செய்யாதிருந்தால் நன்றாக இருந்திருக்குமே' என்றெல்லாம் கூறுவதில் பயனில்லை. இவ்வாறெல்லாம் நடக்காதவற்றைப் பற்றி நினைத்துக் கவலைப்படுவது எம்மை மேலும் நோவிப்பதைத் தவிர வேறு ஆக்கபூர்வமான பயன் எதனையும் தரப்போவதில்லை. எமது குடும்பங்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய தெரிவுகளை நாம் செய்திருந்த போதிலும் நல்லது நடக்கும் என எதிர்பார்த்தே அவ்வாறு செய்தோம் என்பதை நாம் மறந்துவிடல் ஆகாது. கடந்து சென்றவற்றைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் எதிர்காலத்தைப் பற்றியே கூடுதலாகச் சிந்திக்க வேண்டும். அப்படிச் செய்திருக்கலாம் இப்படிச் செய்திருக்க வேண்டுமே போன்ற சிந்தனைகளால் எமது உள்ளத்தை நிரப்பாமல் பிரகாசமான எதிர்காலமொன்றுக்காக இப்போது என்ன செய்ய முடியும் என்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலத்தை வாழ்க்கைக்குரிய பாடமாகவும் எதிர்காலத்தை மாற்றம் காண்பதற்குரிய வாய்ப்பாகவும் கொண்டு எம்மைச்

சிறந்த பெற்றார்களாக மேம்படுத்திக் கொள்வோம் என எம் பிள்ளைகளுக்கு நாம் வாக்குறுதியளிக்க முடியும். கடந்த காலத்தை செதுக்கப்பட்ட சலவைக் கல்லாகவோ இறுகிப்போன கொங்க்ரீட்டாகவோ கருதும் அதே வேளையில் எதிர்காலத்தை இன்னும் உருவமைக்கப்படாத மசியும் தன்மையுடைய களியாக நாம் கருதலாம்.

பிள்ளைகளைப் பெறுவதற்கு முன்பே சிறந்த பிள்ளை வளர்ப்புக் கலையையும் விஞ்ஞானத்தையும் கற்றுக்கொண்டிருக்க வேண்டுமே எனப் பல பெற்றோர் நினைக்கின்றனர் (நாமும் அவ்வாறே). அவர்கள் அவ்வாறு செய்திருப்பின் அவர்களது பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பாரிய முன்னேற்றம் இடம் பெற்றிருக்கும். உறவுகளைப் போஷித்து வளர்ப்பதற்கு அதிக காலத்தைச் செலவிட்டிருக்க வேண்டும் எனப் பெரும்பாலான பெற்றோர் உணர்ந்து கொள்வர். எமது சொந்த வாழ்க்கைகளைத் திரும்பிப் பார்க்கும் போது எவ்வளவோ அனுபவங்களை நாம் தவற விட்டிருக்கின்றோம். எம்மை வளப்படுத்தக்கூடிய விலை மதிக்க முடியாத நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளத் தவறியிருக்கின்றோம் என்பது புலனாகும். எமது பிள்ளைகள் நாம் விட்ட தவறுகளை மன்னித்து விடுவார்கள் என்றும் இதே தவறுகளைப் புதிய பெற்றோர் தவிர்த்துக் கொள்வார்கள் என்றும் நம்புகிறோம். அத்தோடு, ஒவ்வொரு பெற்றாரும் இது பற்றிய பாடத்தைத் தமது சொந்த அனுபவத்தின் மூலமே கற்றுக்கொள்ள வேண்டி நேரிடும் நிலைமையிலிருந்து எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறோம்.

பரிகாரம் வழங்குவதற்குப் பதிலாகத் தவறுகளைத் தவிர்த்துக் கொள்வது பற்றிக் கவனம் செலுத்துவதன் மூலம் வழிகாட்டலை வழங்குவதே இந்நூலைப் பொருத்த மட்டில் எமது அணுகுமுறையாக இருக்கிறது. போதைப்பொருட்களுக்கு அடிமையாதல், மதுப் பழக்கம், மனச்சோர்வு, குற்றச்செயல்கள், பாலியல் ரீதியாகக் கடத்தப்படும் நோய்கள் போன்ற பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடியும் என நாம் கூற வரவில்லை. இருந்த போதிலும் இவற்றுக்கான தவிர்ப்பு நடவடிக்கையொன்றை எம்மால் வழங்க முடியும். விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இவ்வாறான இடர்களுக்கு ஆளாகும் வாய்ப்பை முடிந்தளவு குறைப்பதற்கான குடும்ப வழிகாட்டியொன்றை வழங்குவதே அந்நடவடிக்கை ஆகும்.

சரியான முறையில் பிள்ளை வளர்ப்பதற்குத் திறன்களும் ஆயத்தமும் தேவைப்படுகிறது. அப்போது தான் பிள்ளைகள் வெற்றிகரமாக வாழ்ந்து தம் பெற்றோருக்குப் பெருமை தேடிக் கொடுப்பர். அதிர்ஷ்டவசமாக முன்னெப்போதும் இருந்ததை விட இப்போது பிள்ளை வளர்ப்பு சம்மந்தமான தகவல்களும் நுட்பங்களும் பெருமளவில் காணப்படுகின்றன. அர்த்தமுள்ள எந்தச் செயற்பாட்டுக்கும் குறுக்கு வழி இல்லாதது போல் பிள்ளை வளர்ப்புக்கும் குறுக்கு வழிகள் இல்லை. எனினும், சிறந்த பெற்றாராக செயற்படத் தொடங்குவதற்கு இன்னும் காலம் கடந்து விடவில்லை. ஏனெனில் உங்கள் பிள்ளைகள் நான்கு வயதினராக இருந்தாலும் நாற்பது வயதினராக இருந்தாலும் இன்றும் என்றும் நீங்கள் பெற்றாராகவே இருக்கப் போகிறீர்கள்.

ஒரு பிள்ளையை மகிழ்ச்சிகரமான, நல்ல சமநிலையுடைய மனிதனாக வளர்த்தெடுப்பதே எல்லாப் பெற்றோர்களினதும் எதிர்பார்ப்பாகும். அதனைச் சாதிப்பதற்குரிய உங்கள் வாய்ப்பினை இந்நூல் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும். அத்தோடு உங்கள் பிள்ளைகளுடன் வெற்றிகரமான முழுமையான உறவொன்றினை ஏற்படுத்திக்கொள்ளும் உங்கள் கனவை நனவாக்கி வைக்கும். உங்கள் கனவுகள் உங்களை எங்கே கொண்டு செல்லப் போகின்றன என்பதை விட, நீங்கள் உங்கள் கனவுகளை எத்திசையில் செலுத்துகிறீர்கள் என்பதே முக்கியம் என ஓர் அறிஞர் கூறினார். உண்மையில் இதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னரே உங்கள் பதின்ம வயதுப் (teen age) பிள்ளையைச் சிறப்பாக வளர்க்க நீங்கள் முயற்சித்திருக்க வேண்டும். எனினும், அதற்கான

இரண்டாவது சிறந்த காலம் இன்றே எனக் கருதி அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எல்லாம் வல்ல இறைவன் உங்கள் நல்ல எண்ணங்களுக்கும் முயற்சிக்கும் அருள் பாளிப்பான்.

வாசகருக்கு யதார்த்த நிலையை விளக்குவதற்காகவும் நம்பிக்கையை வழங்குவதற்காகவும் பல தகவல் மூலங்களிலிருந்து பெறப்பட்ட புள்ளி விபரத் தரவுகளையும் நாம் இங்கு சேர்த்துள்ளோம். புள்ளி விபரங்கள் அடிக்கடி மாறக்கூடியவை. எனவே, அவற்றை நிலையான உண்மைகளாகக் கொள்ளாது ஒரு வழிகாட்டலாக மாத்திரமே எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த ஆக்கத் தொடரின் வடிவமைப்பு, தயாரிப்பு என்பன பற்றிப் பல நிபுணர்கள் தம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இந்த ஆக்கம் பல சிறு நூல்களாக வெளியிடப்பட வேண்டும் எனச் சிலர் சிபாரிசு செய்தனர். இன்னும் சிலர் கொள்கை ரீதியானவற்றை செயன்முறைப் பிரயோகத்திலிருந்து வேறு பிரிக்க வேண்டும் என்றனர். மேலும் சிலரோ, கொள்கையும் பிரயோகமும் ஒன்றிணைந்த - தாமே செய்துகொள்ள உதவும் (Do It Yourself)- வழிகாட்டி நூலாக இது தயாரிக்கப்பட வேண்டும் எனக் கருதினர். மேற்சொன்ன ஒவ்வொரு முறையினதும் அனுகூலங்களை நாம் அறிவோம். எனினும், இப்போதைக்கு இந்த முதற் பதிப்பை இப்போதுள்ள வடிவத்தில் வழங்கியிருக்கிறோம். எமது வாசகர்களிடமிருந்து பெறுமதியான பின்னூட்டல்களையும் கருத்துக்களையும் நாம் எதிர்பார்க்கின்றோம். வித்தியாசமான பருமன்களிலும் வடிவமைப்புக்களிலும் வெளியிடப்படவுள்ள எதிர்காலப் பதிப்புக்களில் இவற்றை உள்ளடக்க எண்ணியிருக்கிறோம்.

ஒரே நூலில் பல்வேறு மக்கள் கூட்டத்தினரின் கலாசார அம்சங்களைப் பற்றிக் கவனத்திலெடுப்பது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயலாகும். எனினும், இந்நூல் மொழிகள் பலவற்றுக்கு மொழி பெயர்க்கப்படும் போது அப்பிரதேச ஆசிரியர்களும் தலைவர்களும் அந்தந்த வாசகர் கூட்டத்திற்குப் பொருத்தமானவாறு இதனை மாற்றியமைப்பார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்.

அல்குர்ஆன் வாக்கியங்களின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் யூஸுப் அலி, முஹம்மத் அஸத் ஆகியோரின் மொழி பெயர்ப்புக்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் நூலாசிரியர்கள் சிறு மாற்றங்களைச் செய்துள்ளனர்.

நூலாசிரியர்கள் முஸ்லிம் உலகிலும் மேற்கத்திய நாடுகளிலும் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் விளைவே இது. இறை அறிவிப்புக்களிலிருந்தும் நபிகளாரின் வழிகாட்டலில் இருந்தும் கிடைக்கும் அறிவைத் தொகுத்து முன்வைக்க இது முயல்கிறது. அத்தோடு, முஸ்லிம் வரலாற்றிலும் மேற்கத்திய கலாசாரத்திலும் அடையப் பெற்றுள்ள மனித சாதனைகளையும் பயன்படுத்தியுள்ளது. உரிய முறையில் பகுப்பாய்வு செய்து மதிப்பீடு செய்யப்படும் போது மேற்சொன்ன அறிவுத் தொகுதிகள் ஒன்றை ஒன்று எவ்வாறு குறை நிரப்புகின்றன என்பதை எடுத்துக்காட்டும் முயற்சியாகவும் இது அமைகிறது. இந்த வகையில் பெற்றார் பிள்ளை தொடர்பு சம்பந்தமாக இது தனிச் சிறப்புடைய பணிவான பங்களிப்பொன்றை வழங்கி நிற்கின்றது.

நூலாசிரியர்கள்
ஜனவரி 2013
வொஷிங்டன் DC- USA

அழுது கொண்டே வந்த பெண் (1969 இல் நிகழ்ந்தது)

அந்தத் தாய் அழுது கொண்டே என்னிடம் வந்து "சகோதரர் அல் தாலிப் அவர்களே, எனக்கு உதவி செய்யுங்கள். என்னுடைய மகளை வளர்த்து அவள் கேட்ட அனைத்தையும் அவளுக்கு நான் கொடுத்தேன். இப்போது அவளுக்கு வயது 19. ஆனால், நேற்றிரவு தனது காதலனுடன் வீட்டை விட்டு ஓடி விட்டாள். இப்போது அவள் எங்கிருக்கிறாள் என்பது கூட எனக்குத் தெரியாது" என்று சொன்னாள்.

"சகோதரியே, அவளுக்கு எல்லாவற்றையும் கொடுத்தேன் எனக் கூறுவதன் அர்த்தமென்ன?" என நான் கேட்டேன். அதற்கு அவர், உணவு, உடை, விளையாட்டுப் பொருட்கள், என அவளுக்குத் தேவையான அனைத்தையும் எனப் பதிலளித்தார்.

"நீங்கள் அவளுக்கு இஸ்லாத்தையும் குர்ஆனையும் நபிமார்களின் வாழ்க்கையையும் இஸ்லாமிய வரலாற்றையும் பற்றிச் சொல்லிக் கொடுத்தீர்களா?" என நான் திருப்பிக் கேட்டேன்.

"அப்படிச் செய்யவில்லை தான். ஆனால், அவளுக்கு சகலவற்றையும் கொடுத்தேன்" என்றார் அப்பெண்.

'ஐயோ! இறைவனை அறியாதவர்களாகவும் உறுதியான ஒழுக்கப் பயிற்சி இல்லாதவர்களாகவும் நாம் எமது பிள்ளைகளை வளர்த்து விட்டு அவர்கள் அபூபக்கர், உமர், அலீ போன்ற உத்தமர்களாக மாற வேண்டுமென எதிர்பார்க்கிறோம். ஓக் (Oak) மரத்தில் ஆரஞ்சும் அப்பிளும் விளையுமோ? . . . நாங்கள் 19 வருடங்கள் தாமதித்து விட்டோம். நாம் ரொட்டியால் மட்டும் உயிர் வாழ்வதில்லை' என நான் உள்ளூரக் கூறிக்கொண்டேன்.

அந்த மகளையும் அவளது கணவனையும் (முன்னால் காதலனை) அல்லாஹ்வின் அருளை நோக்கித் திசை திருப்பி சத்திய வாழ்க்கையை அனுபவிக்கச் செய்வதற்கு ஒரு வருட காலப் பொறுமையும் பாசமும் அறிவு நுட்பமும் தேவைப்பட்டது. திருமணத்தை அடுத்து வந்த வருடங்களில் நான்கு பிள்ளைகளோடு அவர்கள் இருந்தனர். உங்கள் பிள்ளைகளின் தேவைகளுக்குப் பதில் கொடுக்க நீங்கள் உண்மையாக விரும்பினால் அவர்களுடன் தனிப்பட்ட உறவொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் நம்பத் தகுந்தவர் என்பதையும் அவர்களுக்கு உங்களைத் தேவைப்படும் போதெல்லாம் நீங்கள் அவர்களுக்காக இருப்பீர்கள் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வது அவசியம். உங்கள் நேரத்தையும் பணத்தையும் முயற்சியையும் உங்கள் பிள்ளைகளில் முதலீடு செய்வதே நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த முதலீடாகும். உங்கள் பிள்ளை பின்வருமாறு உரத்த தொனியில் உங்களிடம் மன்றாடிக் கொண்டிருக்கிறது:

என் தாயே, தந்தையே, தயவு செய்து எனக்கு முன்னால் நடக்காதீர்கள்.

ஏனெனில், நான் உங்களைப் பின் தொடராதிருக்கலாம்.

எனக்குப் பின்னாலும் நடக்காதீர்கள். ஏனெனில், நான் உங்களை வழி நடத்தாது போகலாம்.

என்னோடு சேர்ந்து என் பக்கத்தில் நடவுங்கள். எனக்குத் தோழராக இருங்கள். (அல்பே காமூ)

அவர்களது குரல் உங்களுக்குக் கேட்கிறதா?

முதலாம் பகுதி

பிள்ளை வளர்ப்பு: அடித்தளத்தை அமைத்தல்

அத்தியாயம் 01
சிறந்த பிள்ளை வளர்ப்பும் அதனை ஆரம்பித்தலும் 3

அத்தியாயம் 02
குடும்பத்தின் முக்கியத்துவமும் செயற்பாடுகளும் 31

அத்தியாயம் 03
பிள்ளை வளர்ப்புக்குரிய இலக்குகள் 89

அத்தியாயம் 04
பிரதான இலக்கு: அல்லாஹ்வை நேசிக்கும் பிள்ளைகள் 103

அத்தியாயம் 05
பொதுவான சவால்களும் இடர்ப்பாடுகளும் 127

அத்தியாயம் 06
தவிர்க்கப்பட வேண்டிய மனப்பாங்குகள் 139

அத்தியாயம் 07
விடயங்கள் தவறிவிடும் போது... 149

அத்தியாயம் 1

சிறந்த பிள்ளை வளர்ப்பும் அதனை ஆரம்பித்தலும்

- அறிமுகம் 4
- பிள்ளை விருத்தியின் கட்டங்கள் 6
- நாம் எமது பிள்ளைகளை வளர்க்கும் முறை: வித்தியாசமான பாணிகள் 7
- பிள்ளை வளர்ப்புப் பாணியை எதிர்வு கூறுவது யாது? 11
- பிள்ளை வளர்ப்பை ஆரம்பித்தல்: எதிர்கொள்ளவிருக்கும் பணிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம் 13
- பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான தகவல் மூலங்களைப் பயன்படுத்தல் 18
- உயர் பள்ளிகளில் பிள்ளை வளர்ப்பு பற்றிக் கற்பிக்கப்பட வேண்டுமா? 21

  பிரித்தானிய உயர் பள்ளிப் பாடநெறி பற்றிய வழிகாட்டல் 23
- முடிவுரை 25
- தொழிற்பாடுகள் 1-7 26

அறிமுகம்

அமைதியான மன ஆறுதல் மிக்க வீட்டுச் சூழலொன் றில் நல்ல இசைவாக்கமடைந்த, இறையச்சம் கொண்ட பிள்ளை களோடு மகிழ்ச்சிகரமான குடும்பமொன்று ஒற்றுமையாக வாழ்வதை ஒருவர் காண நேரிட்டால் அது சந்தர்ப்பவசமான விளைவே என்று அவர் நினைக்க முடியாது. சிறந்த பெற்றார்-பிள்ளை உறவுகளை விருத்தி செய்துகொள்ள மேற்கொள்ளப் பட்ட கடும் உழைப்பினதும் முயற்சியினதும் விளைவே அதுவாகும். சிறந்த பிள்ளை வளர்ப்பு ஒரு நீண்டகால முதலீடாகும். மனவெழுச்சிரீதியாகவும் உடல் மற்றும் உளவியல்ரீதியாகவும் பிள்ளைகளை வெற்றிகரமாக விருத்தி யடையச் செய்யக் கூடியதிறவுகோலாக அது இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்வதாயின் பிள்ளைகள் தழைத்தோங்குவதற்குத் தேவையான இரக்கமும் பாசமும் மிக்க சூழலொன்றை வழங்குவதே சிறந்த பிள்ளை வளர்ப்பாகும். தொடர்பாடலை மேம்படுத்தி பிள்ளைகளையும் பெற்றோரையும் நெருங்கி வரச் செய்கின்ற உறவொன்றை உருவாக்குவதற்கு அவ்வாறான சூழலொன்று தேவைப்படுகிறது. வெற்றிகரமான தொடர்பாடல் ஒன்றைப் பொறுத்த வரையில், சிறப்பு நிலையை எய்தக் கூடியவாறு பிள்ளைகளை ஊக்குவிக்கக்கூடிய சாதகமான மனப்பாங்குகள் தேவைப் படுகின்றன. மாறாக, கடுமையான, கண்டனம் செய்கின்ற மனப்பாங்கு இங்கு உதவாது.

முஸ்லிம்களின் பிள்ளை வளர்ப்பு இன்று பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. பெரும்பாலான பெற்றோர் பிள்ளை வளர்ப்பு பற்றிய பாடநெறி எதனையும் பின்பற்று வதில்லை. இதனால் அவர்களிடம் அறிவும், அனுபவமும், பிள்ளை வளர்ப்புத் திறன்களும் குறைவாக உள்ளன. அவர்கள் தமது இயல்பூக்கங்களிலும் உணர்வுபூர்வமான அறிவிலுமே முற்றாகத் தங்கியிருப்பார்கள். அவர்களுடைய அறிவு காலம் கடந்ததாக இருக்கலாம். இல்லையேல் தகவல் அறியாத அல்லது கலாசார ரீதியில் வித்தியாசமான பிள்ளை வளர்ப்பு முறைகளைக் கையாண்ட முன்னோரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கலாம். இன்னொரு சாரார் கல்வி கற்றவர்களாக இருந்தும் மேற்கத்திய பண்பாடுகளைக் குருட்டுத்தனமாகப் பிரதி பண்ணுபவர்களாக இருக்கின்றனர். சிலவேளைகளில், பெற்றோர் தகவல் அறியாத ஏனைய பெற்றோர்களையோ அயலவர்களையோ பின்பற்றக் கூடும். சில பெற்றோர் தம்மால் நிறைவேற்றிக்கொள்ள முடியாது போன ஆசைகளைத் தம் பிள்ளைகளினூடாக நிறைவேற்றிக்கொள்ள முயல்கின்றனர். இன்னும் சிலர் பிள்ளை வளர்ப்புக்குரிய தமது கடமைகளைப் புறக்கணிக்கின்றனர் அல்லது தள்ளிப் போடுகின் றனர். விளக்கம் இன்மையால் அல்லது நேரம் இன்மையால் அவர்கள் பிள்ளை வளர்ப் பைக் குழந்தை பராமரிக்க வரும் பணியாட்களுக்கும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் உறவினர்களுக்கும் தொலைக்காட்சிக்கும் கம்பியூட்டர் விளையாட்டுகளுக்கும் பொறுப்புக் கொடுக்கின்றனர். இது குறிப்பாக எண்ணெய் வளம் மிக்க நாடுகளில் காணப் படும் இயல்பொன்றாகும். இந்நாடுகளில் காணப்படுகின்ற பிள்ளை பராமரிப்புக்காகப் பணிப்பெண்களை இறக்குமதி செய்யும் மோசமான பழக்கம் காரணமாக பிள்ளைகளின் குணவியல்புகளில் பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

மேற்சொன்ன அனைத்தையும் திருத்திக் கொள்வதற்கும் அவர்கள் அறியாது செய்யும் தவறுகளைக் குறைத்துக் கொள்வதற்கும் பெற்றோருக்கு உதவுவதே எமது நோக்கமாகும். ஒரு வகையில் பெற்றோர் எதிர்கொள்ளக் கூடிய பொதுவான இடர்களுக்கு எதிரான நல்ல காப்புறுதித் திட்டமொன்றை நாம் வழங்குகிறோம் என்று கூடக் கூறலாம்.

துரதிர்ஷ்டவசமாக இன்று பிள்ளை வளர்ப்பைப் பெரும்பாலானோர் பொருட்படுத்துவதில்லை. இப்பொறுப்பின் பாரதூரத்தன்மை பற்றிச் சற்றுச் சிந்திப்பதுமில்லை. உண்மையில் பெற்றோரான எம்மில் எத்தனை பேர் எமக்குப் பொறுப்புத் தரப்பட்டுள்ள இந்தப் பணி பற்றி அக்கறையுடன் சிந்தித்திருக்கிறோம்? அப்படிச் சிந்தித்தோமானால் அது பெரும் துணையாக அமையும். ஏனெனில், பிள்ளை வளர்ப்புக்கென்றே உரிய திறன்களும் உத்திகளும் திட்டமிடுதலும் உண்டு என்பதை அப்போது தான் நாம் உணர்ந்து கொள்வோம்.

பின்வரும் வினாக்களைக் கவனியுங்கள்:

வினா 1: எந்தப் பணிக்கு முகாமை, உளவியல், சமூகவியல், மனிதவியல், பராமரிப்பு, சமையற்கலை, தொடர்பாடல் என்பன பற்றிய அறிவு தேவைப்படுகிறது?

வினா 2: எந்தப் பணியைச் செய்வதற்கு ஒரு பட்டமோ சான்றிதழோ லைசென்ஸோ தேவைப் படுவதில்லை?

வினா 3: மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதும் பெரிதும் புறக்கணிக்கப்படுவதுமான பணி எது?

வினா 4: எந்தப் பணி பெருமளவு துஷ்பிரயோகத்தையும் வன்முறையையும் தாங்கிக் கொண்டிருக்கிறது?

வினா 5: எந்தப் பணி வளர்ந்தவர்களாக மாறிய பின்னரும் மக்களின் வாழ்க்கையைப் பாதிப்பதனால் முக்கியத்துவம் பெறுகிறது?

வினா 6: ஒரு பிள்ளைக்கு மிக முக்கிய ஆசானாக அமைந்துள்ள பணி எது?

விடை: **பிள்ளை வளர்ப்பு**

சிறிது சிந்தித்துப் பாருங்கள்: மெக்கானிக், குழாய் திருத்துபவர், இலக்ட்ரீஷியன், வைத்தியர் முதலியோரை நாடுவதற்கு முன் அவர்கள் உரிய தகைமை பெற்றிருக்கிறார்களா என்று பார்க்க நாம் தவறுவதில்லை. ஆனால், எவ்விதப் பயிற்சியும் இல்லாமலேயே நாம் பெற்றோராகி விடுகிறோம். நாம் பட்டமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக சுமார் 16 வருடங்கள் படிக்கிறோம். எனினும், எதிர்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்புக்களை நிறைவேற்ற ஆயத்தமாகாமலேயே இளம் வயதிலே பெற்றோராகி விடுகிறோம். கார் ஓட்டுவதற்கும், விமானம் செலுத்துவதற்கும், காட்டில் வேட்டையாடுவதற்கும் லைசென்ஸ் தேவை என அறிந்திருக்கும் நாம் பெற்றோராக இருப்பதற்குப் பயிற்சி தேவை என்பதை உணர்ந்து கொள்ளத் தவறிவிடுகிறோம்.

சரி, எங்களில் பெரும்பாலானோர் பிள்ளை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு (நல்லெண்ணத்துடன்) என்ன செய்துகொண்டிருக்கிறோம்? பெற்றாருக்கு உதவக்கூடிய பிள்ளை வளர்ப்பு பற்றிய கோட்பாடுகளும் அறிவுறுத்தல்களும் நிறைய இருந்த போதிலும், பெற்றார் அவற்றைப் புறக்கணித்துவிட்டு எல்லாம் நன்றாகவே அமைந்து விடும் என்ற எண்ணத்துடன் மகிழ்ச்சியோடு தமது போக்கில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சில முயற்சிகளை மேற்கொள்ளாமல் இல்லை. பள்ளிக்கூடங்களில் பெற்றார்- ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள். பிள்ளைகளின் விவகாரங்களைப் பொதுவாகக் கவனித்துக் கொள்கிறார்கள். பாடங்களில் பெற்ற புள்ளிகளைப் பற்றிக் கவலை கொள்வார்கள். குடும்ப சுற்றுலாக்களில் பங்கு பற்றுவார்கள். இது போன்ற மேல்வாரியான பல முயற்சிகளைச் செய்வார்கள். இவை தவிர வேறு பெரிதாக ஒன்றும் செய்வதில்லை.

கோட்பாடுகளும் பிள்ளைகளும்

நான் திருமணம் செய்ய முன்னர் பிள்ளைகளை வளர்ப்பது பற்றிய ஆறு கோட்பாடுகள் என்னிடம் இருந்தன. இப்போது எனக்கு ஆறு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால், கோட்பாடுகள் எதுவுமில்லை.

John Wilmount, Earl of Rochester

எமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய விரிவான முறையொன்று இல்லாத போதிலும் எமக்கு உதவும் வகையில் அமுல்படுத்தப்படக்கூடிய சில செயல்முறைகள் இருக்கத்தான் செய்கின்றன. சிறந்த பிள்ளை வளர்ப்புக்கான பாதை, நிர்மாணிக்கப்படும் நிலையிலேயே இன்னும் இருக்கிறது என்பதைப் போகப் போக உணர்ந்து கொள்வோம். நாம் செய்யக்கூடிய மேம்படுத்தல்கள் இருக்கின்ற போதிலும் இச்செயன்முறையை விரைவுபடுத்த முடியாது. எனவே, பிள்ளை வளர்ப்புக்குக் குறுக்கு வழிகளைத் தேடாதீர்கள்; ஏனெனில், அப்படி எதுவுமே இல்லை.

பிள்ளை விருத்தியின் கட்டங்கள்

பிள்ளைகள் வெவ்வேறு கட்டங்களினூடாக விருத்தியடைகின்றார்கள் என்பதை நாம் முதலில் விளங்கிக் கொள்வோம். இக்கட்டங்கள் பற்றிப் பெற்றார் தம்மைப் பரிச்சயப்படுத்திக் கொள்ளுதல் பயன் தருவதாக இருக்கும். ஏனெனில், ஒவ்வொரு கட்டத்திலும் பிள்ளை வளர்ப்பின் தேவைகளும் பெற்றாரிடம் எதிர்பார்க்கப்படுபவையும் வேறுபடுகின்றன. பிள்ளை விருத்தியின் கட்டங்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்: குழந்தைகளும் முன்பள்ளிப் பருவத்தினரும் (வயது 0- 7); பதின்ம வயதுக்கு முந்தியவர்கள் (வயது 8- 11); இளம் பதின்ம வயதினர் (வயது 12- 14); குமரப் பருவத்தினர் (வயது 15- 22). இந்த ஒவ்வொரு கட்டத்திலும் பிள்ளைகளுக்கு உடல், மனவெழுச்சி, சமூக மற்றும் உளவியல்ரீதியான வேறுபட்ட தேவைகள் பெற்றோர்களால் நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டும்.

முழுமையாகப் பெற்றோரில் தங்கியிருந்த பிள்ளை வளர்ந்து பெரும்பாலும் முழுச் சுதந்திரம் உள்ள ஒருவராக இறுதியில் மாறிவிடுகிறது. பெற்றாரும் பிள்ளைகளும் இணைந்து இந்த மாற்றங்களைப் பிசகின்றித் தாண்டிச்செல்வது மிக முக்கியமாகும். பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் ஆதிக்கத்துக்காகவும் வளங்களுக்காகவும் எவ்வாறு போட்டி ஏற்படுகிறது என்பதை உளவியலாளர்கள் விளக்கியிருக்கிறார்கள். பெற்றாரும் பிள்ளையும் ஒருவர் மீது மற்றொருவர் ஆதிக்கம் செலுத்த முனைவதோடு பணம், இடம், காலம் போன்ற வளங்கள் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது பற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகள் வாலிபர்களாகவும் பெரியவர்களாகவும் மாறிய பின்பு பெற்றார் தமது சக்தியைத் தொடர்ந்தும் அவர்கள் பால் செலுத்தாமல் தம் சொந்த வாழ்க்கையை நோக்கித் திசை திருப்ப வேண்டும். பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையில் பரஸ்பரம் அறிவுரை வழங்கல், ஆலோசனை செய்தல் என்பனவும் பகிர்ந்து கொள்ளலும் பராமரிப்பும் தொடர்ந்து இடம் பெறுமாயின் சுயாதீனம் என்பது ஒருவரில் ஒருவர் பரஸ்பரம் தங்கியிருக்கும் நிலைமையாகப் பரிணமிக்கும்.

நாம் எமது பிள்ளைகளை வளர்க்கும் முறை: வித்தியாசமான பாணிகள்

பெற்றோர் பலர் கையாளும் பிள்ளை வளர்ப்புப் பாணிகளில் பின்வரும் நான்கு வகைகளை இனங்காணலாம். (அனைத்துப் பிள்ளை வளர்ப்புப் பாணிகளும் இவற்றில் அடங்காது போகலாம்)

1.) சர்வாதிகார முறை:
பிள்ளை தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனப் பெற்றார் வலியுறுத்துவார்கள். அவ்வாறு கீழ்ப்படியத் தவறினால் கடுமையாகத் தண்டிப்பார்கள்.

2.) அதிகார முறை:
தமது கோரிக்கைகளுக்குப் பிள்ளைகள் செவிசாய்க்க வேண்டுமெனப் பெற்றோர் எதிர்பார்ப்பார்கள். அதேவேளை, தம் பிள்ளைகளின் கோரிக்கைகளுக்கு அவர்களும் செவிமடுப் பார்கள். இவ்வாறான பெற்றோர், தாம் கூறும் விதிகளைத் தெளிவாக விளக்குவதோடு தமது விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் வித்தியாசமான, நியாயமான காரணங்களையும் வழங்குவார்கள். எனவே, தமது பெற்றாரின் கோரிக்கைகள் அவர்களுடைய மனப் போக்குக்கு உரியவை என்றோ தான்தோன்றித் தனமானவை என்றோ அர்த்தமற்றவை என்றோ பிள்ளைகள் நினைக்க மாட்டார்கள்.

3.) வற்புறுத்தலற்ற முறை:
தம் பிள்ளைகள் விரும்பிய முறையில் செயற்படுவதற்குப் பெற்றார் அனுமதிப்பார்கள். இவ்வாறான பெற்றோர் தம் பிள்ளைகளின் விருப்பத்துக்கு முதலிடம் கொடுப்பதனால் பெரிய மோதல்கள் ஏற்படுவதில்லை.

4.) ஜனநாயக முறை:
பெற்றோர் பிள்ளைளோடு கலந்தாலோசனை செய்வதோடு தீர்மானங்கள் மேற்கொள்வதில் அவர்களையும் சேர்த்துக் கொள்வார்கள்.

பொதுவாக, சமூகவியலாளர்கள் அதிகாரமுறைப் பிள்ளை வளர்ப்பினைச் சிறந்ததாகக் கருதுகின்றார்கள். உங்களுடைய பிள்ளை வளர்ப்பு முறையைப் பரிசீலனை செய்து அதனை மேற்சொன்ன எந்த வகைக்குள் அடக்கலாம் என்பதைப் பாருங்கள். ஒரு குறித்த பாணியை நீங்கள் ஏன் தெரிவு செய்தீர்கள் அல்லது ஒரு குறித்த பாணிக்குள் நீங்கள் ஏன் சிக்கிக் கொண்டீர்கள் என உங்களிடமே கேட்டுப்பாருங்கள். இவ்வாறான சுய பகுப்பாய்வு, நீங்கள் கைக்கொண்ட முறைகள் பற்றி மீளச்சிந்திக்கவும் அதன் சாதகமான அம்சங்கள் பற்றிக் கவனம் செலுத்தவும் குறைபாடுகளைத் திருத்திக்கொள்ளவும் வழி செய்யும்.

சர்வாதிகார முறைப் பிள்ளை வளர்ப்பு பற்றிய ஒரு குறிப்பு: பயமுறுத்தலும் பீதியும் நிறைந்த ஒரு பண்பாடு

தம் பிள்ளைகள் நடத்தை தவறுவதைத் தடுப்பதற்குச் சர்வாதிகாரப் பாணியிலான பிள்ளை வளர்ப்பு முறையே சிறந்தது என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. குறிப்பாக முஸ்லிம் பெற்றோரிடையே இதைக் காணலாம். தீய நடத்தையைத் தடுப்பதையே இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாறாக, நல்ல நடத்தையையும் சாதகமான மனப்பாங்குகளையும் ஊக்குவிக்க முயற்சிப்பதில்லை. ஒற்றுமையான குடும்ப உறவுக்குப் பதிலாக கட்டுப்பாடும் அச்சமும் முன்னுரிமை பெறுகின்றன. இதன்

விளைவாக பிள்ளைகள் தவறான முறையில் இசைவாக்கம் அடைகிறார்கள். இது முழுச் சமுதாயத்தையுமே பாதிக்கிறது. மேற்சொன்ன காரணத்துக்காகவும் இந்தப் பாணி மக்களிடையே பரவலாகக் காணப்படுவதனாலும் இது பற்றிச் சற்று ஆழமாகக் கவனம் செலுத்தத் தீர்மானித்துள்ளோம்.

கண்டிப்பான முறையில் விதிகளை அமுல் படுத்தல், ஆதிக்கம் செலுத்துதல், கருத்துப் பரிமாற்றமும் பங்கேற்றலும் கலந்தாலோசனையும் இல்லாமை என்பன முஸ்லிம் பெற்றாரிடையே பரவலாகக் காணப்படுகின்றன. இந்தச் சர்வாதிகார நடைமுறையின் வித்துக்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே குடும்பத்தினுள் விதைக்கப்பட்டுவிடுகின்றன. பின்னர் இவை வீட்டுக்கு வெளியே ஊடுறுவிச் சென்று பாடசாலை, சமூக நிறுவனங்கள் முதலியவற்றையும் இறுதியில் அரசாங்கம், அரசியல் என்பவற்றையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

குடும்பத்தினுள்ளே பிள்ளைகளின் மீது தந்தையும், இளையவர்கள் மீது மூத்தவர்களும், பெண்பிள்ளைகள் மீது ஆண்பிள்ளைகளும் கடுமையான ஆதிக்கத்தைக் கொண்டிருக் கின்றனர். பொதுவாக ஆண்களே மேலாதிக்கம் உடையவர்களாக விளங்குகின்றனர். கூட்டாகப் பங்கேற்றல், பொறுப்புணர்வு போன்ற எண்ணக்கருக்கள் எதுவும் இச்சூழலில் காணப்படுவதில்லை. எனினும், நபிகளார் (ஸல்) அவர்களோ மேய்ப்பாளர் என்ற எண்ணக்கருவையே ஊக்குவித்தார்கள்:

> நீங்கள் அனைவரும் மேய்ப்பாளர்கள். உங்களுக்குத் தரப்பட்ட மேய்ப்புக்களுக்கு நீங்கள் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும். (அல் புகாரி)

பெற்றார் எவ்வித விளக்கமும் கொடுக்காமல் கட்டளைகளையும் அறிவுறுத்தல் களையும் வழங்குவதே பொது நடைமுறையாக இருக்கின்றது. பிள்ளைகள் செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை என்பன பற்றிய தன்னிச்சையான பட்டியல் ஒன்றும் அதில் இருக்கும். இவற்றைப் பற்றிப் பிள்ளைகள் விளக்கம் கேட்டால், 'சொன்னபடி செய்!' 'அப்படித் தான் செய்ய வேண்டும்' 'நான் செய்கின்றது போல் செய்யாமல் நான் சொல்கிற படி செய்!' 'அதிகம் வாதாடாதே!' முதலிய பதில்களே வழமையாகக் கிடைக்கும். சில வேளைகளில் துருவி ஆராய முயலும் பிள்ளைகள் மரியாதை அற்றவர்கள், பணிவு இல்லாதவர்கள், கீழ்ப்படியாதவர்கள் என்றெல்லாம் கண்டிக்கப்பட்டுக் குற்றம் சுமத்தப்படுவர். துருவி ஆராயும் இயல்புள்ள பிள்ளையின் வாயை அடக்குவதற்காக அவர்களது கேள்விகளுக்குப் பெற்றார்- தமக்கு விடை தெரியாது எனக் கூறுவதற்குப் பதிலாக -அரைகுறையான பதில்களை வழங்குகின்றனர்.

இதற்காக இந்தப் பெற்றார்களுக்குத் தம் பிள்ளைகள் மீது கரிசனையேதும் இல்லை எனக் கூறிவிட முடியாது. மாறாக, அவர்கள் தம் குடும்பத்தினர் மீது அதிக பாசமும் அக்கறையும் காட்டுபவர்களாகவே இருக்கின்றனர். எனினும், தமது கண்டிப்பினதும் கட்டுப் பாட்டினதும் வாயிலாக அவர்கள் அடக்குமுறை ஆதிக்கம் கொண்டவர்களாக மாறிவிடுகிறார்கள். அடக்கி ஆதிக்கம் செலுத்துவதை பயிற்சியளிப்பதாக நினைத்துக் கொள்ளக்கூடாது. சிலர் இந்த இரண்டையும் குழப்பிக் கொண்டுள்ளனர். இவ்வாறு அடக்கி ஆதிக்கம் செலுத்தும் முறையானது மனவெழுச்சிரீதியிலும் உளவியல்ரீதியிலும் சிறப்புற்ற பிள்ளைகளை ஒருபோதும் உருவாக்கப்போவதில்லை. உறுதிமிக்க பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டுமாயின் பெற்றோர் பிள்ளைகளைக் கலந்தாலோசனையில் ஈடுபடுத்த வேண்டும். அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

> இவர்களின் செயலோ தங்களுக்குள் கலந்தாலோசித்தலாக இருக்கும்.
> (அல்குர்ஆன் 42:38)

(நபியே!) அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கிறீர். மேலும், சொல்லில் கடுகடுப்பானவராக இரக்கமற்ற இதய முள்ளவராக நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப் பார்கள். ஆகவே, அவர்களை நீர் மன்னித்து அவர்கள் மன்னிக்கப்பட வேண்டுமெனக் கோருவீராக! மேலும், (பொதுக்) காரியத்தில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக! (யாதொரு காரியத்தை) நீர் முடிவு செய்தால் அல்லாஹ்வின் மீதே நீர் நம்பிக்கை வைப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் தன் மீது நம்பிக்கை வைப்போரை நேசிக்கின்றான். (அல்குர்ஆன் 3: 159)

பயமுறுத்தி அடக்குகின்ற முறையின் காரணமாகப் பிள்ளைகள் தம் பெற்றோருக்கு மரியாதை கொடுப்பது போல் வெளிப்படையாகத் தோன்றினாலும், அது அச்சத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற சாரமற்ற மரியாதையே தவிர உள்ளத்தால் உணரப்பட்டு பாசத்தோடு வெளிவரும் ஒன்றல்ல. கற்றுக்கொள்ளப் பட்ட அச்சம், இயல்பான அச்சம் என்பன பற்றி நாம் அத்தியாயம் 15 இல் விரிவாக ஆராய்வோம். இவ்வாறான அடக்கி ஆதிக்கம் செலுத்தும் அணுகுமுறை கல்வித்துறைக்கும் வியாபித்திருக்கிறது. அங்கே ஆசிரியர்களுக்கு மாணவர்கள் வழங்கும் மரியாதை பாசத்தையும் கற்றலையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதில்லை. மாறாக, ஆசிரியரின் அதிருப்தி, அவர் வழங்கும் தண்டனைகள் என்பன பற்றிய அச்சத்தின் காரணமாகவே அம்மரியாதை உருவாகின்றது. இதன் விளைவாகக் கல்வியில் மாணவர்கள் திறமை காட்டாமல் போகலாம்.

இந்த அடக்கியாளும் அணுகுமுறை உறுதிப்படுவதற்கு சில நாடுகளில் காணப்படும் கல்வி முறையும் காரணமாகிறது. இத்தகைய கல்வி முறையில் மனனம் செய்து கற்றலை நோக்காகக் கொண்டு கற்பித்தல் நடைபெறுகிறதே தவிர மாணவர்களின் கிரகித்தலும் பங்குபற்றலும் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. இவ்வாறான கல்வி முறையில் பெற்றோர்களோ பள்ளிக்கூடங்களோ சந்தோசப்படுவதற்கு எதுவுமில்லை. சர்வாதிகார அமைப்பும் ஆதிக்கப் போக்கும் கொண்ட நிறுவனங்களுக்குச் சார்பான சமூக நடத் தையுடைய ஆட்களை உருவாக்குவதற்குத் துணை போவதைத் தவிர வேறெதனையும் இவர்கள் சாதிக்கவில்லை. அரச நிறுவனங்களிலும் அரசியல் கட்சிகளிலும் சமூக இயக்கங் களிலும் பொலிஸ் துறையிலும் தேசிய இராணுவங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தொழிற்சாலைகளிலும் இன்று காணப்படுகின்ற அடிமை மனப்பாங்குக்கு இதுவே காரணமாகும். இவ்வாறான கல்வி முறையிலிருந்து தப்பித்துக்கொண்டு சமூகத்தின் அடக்கு முறைக்கு அடிபணியாத ஒருசிலர் போக்கிடமின்றி இருக்கின்றனர். இவர்கள் நயவஞ்சகமாக நடந்து கும்பலைப் பின்பற்றுவோர்களாக அல்லது சமூகப் போக்குடன் பொருந்திப் போகாதவர்களாக மாறி அதன் விளைவாக வேதனையும் விரக்தியும் அடைகின்றனர்.

முஸ்லிம்களின் சிந்தனையிலும், உளவியல் மற்றும் மனவெழுச்சிரீதியாக அவர்கள் பிள்ளை வளர்க்கும் முறையிலும் ஒரு நெருக்கடி நிலை காணப்படுகிறது. ஒத்திசைவானதும் முறைமை சார்ந்ததுமான அணுகுமுறையொன்று இன்மையும் அறிவு பல்வேறு பிரிவுகளாகத் துண்டாடப்பட்டிருப்பதும் முஸ்லிம்களின் பண்பாடு, சிந்தனை என்பன உருக்குலைந்து போவதற்குக் காரணமாக அமைந்துள்ளன. பெரும்பாலான இன்றைய முஸ்லிம்களின் பிள்ளை வளர்ப்பு முறையானது, குர்ஆனியத் தத்துவங்களான *'இம்றான்'* (நாகரீகமொன்றை உருவாக்கி விருத்தி செய்தல்), *'இத்கான்'* (பரிபூரணத் தன்மை) மற்றும் *'தபக்குர்'* (தேடி ஆராய்தல்) என்பவற்றை உள்ளடக்குவதில்லை. மாறாக, அது ஒழுங்குமுறை அற்றதாகவும் அடிமைத்தனமானதாகவும் பிரதிபண்ணலுக்கு உரியதாகவும் விளங்குகிறது. அறிவியல் சார்ந்தும் புறவயமாகவும் முறை சார்ந்தும்

இருப்பதற்குப் பதிலாக முஸ்லிம்கள் வெறும் குருட்டு நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். ஜின், மந்திர மாயங்கள் போன்ற கருத்துக்களில் அவர்கள் மூழ்கிப் போயிருப்பதால் விஞ்ஞான மனப்பாங்கின் நன்மைகளை அனுபவிக்கத் தவறி விடுகிறார்கள்.

முஸ்லிம் சமூகத்தை முற்றாகச் செயலிழக்கச் செய்துள்ள அறிவியல் ரீதியான தேக்க நிலை, சிந்தனை ரீதியான நெருக்கடி நிலை என்பவற்றைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு சிந்தனையாளர்களுக்கும் கல்வியியலாளர்களுக்குமே உரியது எனப் பரவலாகக் கருதப்படுகிறது. எனினும், இவ்வாறானவர்கள் ஆற்ற வேண்டிய முக்கிய பங்களிப்பொன்று இருக்கின்ற போதிலும் இறுதியில் தீர்வொன்றைப் பெறுவதற்காகப் பெற்றோர்களையே நாம் நாட வேண்டி உள்ளது. பெற்றோர் சரியான முறையில் உணர்வு பெற்றால் அவர்கள் ஆரோக்கியமும் சுயாதீனமும் சிறந்த இசைவாக்கமும் கொண்ட பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கு நிச்சயமாகத் தம்மால் முடிந்ததைச் செய்வார்கள். இப்பிள்ளைகள் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தகைமை உடையவர்களாகவும் சமூகத்தில் சாதகமான மாற்றங்களைத் தோற்றுவிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவர்களினூடாகவே முஸ்லிம் சமூகத்தின் செயலிழந்த நிலைமையை மாற்றியமைக்க முடியும்.

இன்றைய பிள்ளை வளர்ப்பு முறையின் கவலைக்குரிய இயல்புகள் பின்வருமாறு:

- பெற்றோரிடையே பாரிய அளவில் எழுத்தறிவின்மை காணப்படுதல். இது அறிவைத் தேடுவதற்கும் திறன்களைக் கற்பதற்கும் தடையாக அமைந்துள்ளது.
- ஆக்கத்திறனோ முயற்சிகளைத் தொடக்கிவைக்கும் ஆற்றலோ இல்லாத அடிமை மனப்பான்மையை வளரச் செய்கின்ற அச்சம் மிகுந்த பண்பாடு காணப்படுதல்.
- எவ்வித விமர்சன ரீதியான பகுப்பாய்வுமின்றி மற்றவர்களைக் குருட்டுத்தனமாகப் பிரதி பண்ணி அவர்களுக்குக் கீழ்ப்படியும் இயல்பு (மந்தை மனப்பான்மை) காணப்படுதல்.
- வீட்டிலும் பொது நிறுவனங்களிலும் ஆதிக்கத்துடன் கூடிய வற்புறுத்திக் கீழ்ப்படியச் செய்யும் அணுகுமுறை காணப்படுதல்.

பிள்ளை வளர்ப்பு முறையினால் ஒரு குடும்பத்தை, ஒரு சமூகத்தை அல்லது ஒரு நாகரீகத்தைக் கூட உருவாக்கவோ இல்லாமற் செய்யவோ முடியும். நாகரீகத்தைக் கட்டியெழுப்புவதென்பது முடிவு காண இயலாத, ஒரே தடவையில் நிறைவேற்ற முடியாத செயன்முறையாகும். அதேவேளை, அது வாழ்க்கை முறையொன்றாகவும் இயக்கமுள்ள தொடர்ச் செயன்முறையாகவும் விளங்குகிறது. அதற்குத் தொடக்கம் இருப்பினும் முடிவு இருக்காது. நாகரீகம் தொடர்ந்து வளர்ச்சியுற்று மேம்பட்டு விருத்தியடையக்கூடியது. அத்தோடு அது தொடர்ச்சியான ஆராய்ச்சியையும் கண்டறிதலையும் மேம்படுத்தலையும் உள்ளடக்கியது. எனவே நிலைமை பற்றி முழுமையாகச் சிந்தித்துப் பார்க்குமாறு நாம் பெற்றோர்களை ஊக்குவிக்கின்றோம். எமது பிள்ளை வளர்ப்பானது சமூகத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பற்றியும் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அச்சமும் அடக்கு முறையும் கொண்ட ஒரு நிலைமையில் பிள்ளைகள் வளர்க்கப்பட்டால் இடர்களுக்குத் துணிந்து முகங்கொடுக்கவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் அவர்கள் பயப்படுவார்கள். இறுதியில் பொறுப்புணர்வு குறைந்தவர்களாகவும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவர்களாகவும் அவர்கள் மாறி விடுவார்கள். இது பொது விவகாரங்களில் பங்கு கொள்ளாமை, தலைவர்களின் ஆதிக்கம் பற்றிக் கேள்வி கேட்பதில் தயக்கம் முதலியவற்றுக்கு வழி வகுக்கும். இதன் விளைவாகவே, ஆதிக்கப் போக்குள்ள சர்வாதிகார ஆட்சிகள் உருவாகின்றன. இவ்வாறு வளர்க்கப்படும்

பிள்ளைகள் ஊழல்களைச் சகித்துக் கொள்வதோடு சமூகத்துக்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்தும் ஒதுங்கிப் போவார்கள். இப் போக்கினால் குழுவாக இயங்கும் ஆர்வம் இல்லாமற் போகும். இதன் விளைவாக சமூகத்தைக் கட்டியெழுப்பத் தேவையான நிறுவனங்கள் உருவாவது தடைப்படும். குருட்டு நம்பிக்கையும் பகுத்தறிவின்மையும் கொண்ட, எப்போதும் பின் நோக்கிப் பார்க்கின்ற, நெகிழ்வுத்தன்மையற்ற ஒரு கலாசாரம் பிள்ளைகளின் மாசற்ற இளம் உள்ளங்களில் ஆழப் பதிவதனால் விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் விருத்தி ஏற்படாமல் போகிறது.

இஸ்லாமிய நாகரீகத்தின் பொற்காலம் செழித்தோங்கியதற்குக் காரணம், பிள்ளைகளை வளர்க்கும் போது மேற்சொன்ன காரணிகளைக் கருத்திற் கொண்டதே ஆகும். உதாரணமாக, தாய்ப்பாலூட்டல் பிள்ளை வளர்ப்பின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகக் கருதப்பட்டது. இதனால் பிள்ளையின் மனவெழுச்சி மற்றும் உளவியல் விருத்திக்குத் தேவையான கவனம் வழங்கப்பட்டது. ''உண்மையில் அப்படியான மகத்துவம் மிக்க ஒரு நாகரீகம் இவ்வளவு கீழ்த்தரமான நிலைமைக்கு வீழ்ச்சியடைந்தது ஏன்?'' என்ற கேள்விக்குரிய விடை, பிறப்பிலிருந்து தொடங்கி நாம் பிள்ளைகளை எப்படி வளர்க்கிறோம் என்ற முக்கிய விடயத்திலேயே தங்கியிருக்கிறது. இஸ்லாமிய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மகத்தான பல சீர்திருத்த முயற்சிகளில் காணப்படத் தவறிய ஒரு முக்கிய பரிமாணம் பிள்ளை வளர்ப்பு பற்றிக் கவனம் செலுத்தப்படாமையே.

பிள்ளை வளர்ப்புப் பாணியை எதிர்வு கூறுவது யாது?

நாம் எமது பெற்றோருடன் நடந்து கொண்ட முறைக்கும், எமது பிள்ளைகளை நாம் நடத்தும் முறைக்கும் இடையில் ஏதேனும் இணைப்புக் காணப்படுகிறதா? தங்கள் பிள்ளைகளைத் தவறாக நடத்தும் பெற்றோர்கள்- தமது பெற்றோர் தம்மைத் தவறாக நடத்தினார்கள் எனக் கூறுவதை அடிக்கடி கேட்க முடிகிறது. ஒருவருக்குத் தமது பிள்ளைப் பருவத்தில் தம் பெற்றோரிடமிருந்து கிடைத்த ஆக்கமுறையான அனுபவங்கள் காரணமாக பிற்காலத்தில் அவரது பிள்ளை வளர்ப்பு முறை மகிழ்ச்சிகரமானதாகவும் உணர்வு பூர்வமானதாகவும் மனக் கிளர்ச்சியூட்டுவதாகவும் அமையும் என எதிர்வு கூற முடியுமா? பிள்ளை வளர்க்கும் பாணி பரம்பரைகளுக்கிடையில் ஊடுகடத்தப்படுகிறதா?

ஒரு பெற்றார் எப்படி வளர்க்கப்பட்டார் என்ற வரலாறு பிற்காலத்தில் அவரது பிள்ளை வளர்ப்பு முறைக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்கிறது. பொதுவாக, ஆதரவான முறையில் வளர்க்கப்பட்ட பெற்றோர் தமது பிள்ளைகளை இரக்கத்துடனும்

புரிந்துணர்வுடனும் மனக்கிளர்ச்சி தரும் வகையிலும் வளர்ப்பார்கள். ஆதார ரீதியான பிள்ளை வளர்ப்பானது பிள்ளை மூன்று வயதாகும் போது அதன் அறிவுசார் விருத்தியை மேம்படுத்தும். (Baumrind 2008)

கைக்குழந்தைகளுடனும் நடைபழகும் குழந்தைகளுடனும் தந்தையர் உறவாடும் முறை, தாய்மாரின் முறையிலிருந்து வித்தியாசப்படுகிறது. பிள்ளைகளுக்குத் துலங்கல் காட்டுதல், கிளர்ச்சியூட்டுதல், பாசம் காட்டுதல், கற்பித்தல் போன்ற விடயங்களில் பெரும்பாலான தந்தையரும் தாய்மாரும் ஒரே விதமாகவே நடந்து கொள்கிறார்கள். எனினும், தாய்மாரை விடத் தந்தையரே கூடுதலான அளவில் உடல் ரீதியான விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். பெற்றார் இருவரும் தம் பெண் மக்களை விடக் கூடுதலாக ஆண் மக்களுடனேயே உடல்ரீதியாக விளையாடுகிறார்கள். தந்தையரினதும் தாய்மாரினதும் கல்வி மட்டமானது பிற்காலத்தில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலும் ஏனைய துறைகளிலும் வெளிப்படுத்தும் வினையாற்றலோடு தொடர்புடையனவாக இருக்கின்றன. இனனொரு சுவாரஷ்யமான விடயம் என்னவெனில், ஒரு தந்தை கல்வி பெறச் செலவு செய்த காலம் அதிகமாக இருக்கின்ற அளவுக்கு தாய் தனது பிள்ளைகளுக்கு ஒத்தாசை வழங்கும் அளவும் அதிகரிக்கின்றது. (Ricks 1985)

எமது பெற்றாரின் பிள்ளை வளர்ப்பு முறை எமது பிள்ளைகளை நாம் வளர்க்கும் முறையில் பிரதிபலிப்பது மாத்திரமன்றி சில வேளைகளில் நாம் எமது பெற்றாரின் பிள்ளை வளர்ப்பு முறைக்கு எதிர்மாறாகவும் நடந்து கொள்ளக்கூடும். பரம்பரைக்குப் பரம்பரை பிள்ளை வளர்ப்பு முறையில் சில வேறுபாடுகள் காணப்படலாம். தமது பேரப் பிள்ளைகள் வளர்க்கப்படும் முறை தாம் தமது சொந்தப் பிள்ளையை வளர்த்த முறையை விட வித்தியாசமாக இருக்கிறது என பாட்டன், பாட்டிமாரில் பாதித் தொகையினர் அபிப்பிராயப்படுகின்றனர். அதே போன்று தாம் தமது பிள்ளைகளுக்குக் காட்டியதை விடக் குறைந்த கண்டிப்பையே தமது புத்திர புத்திரிகள் தம் பிள்ளைகளுக்குக் காட்டுகின்றனர் என இவர்களுள் ஏறக்குறைய பாதித் தொகையினர் குறிப்பிடுகிறார்கள். மேலும், தம் பிள்ளைகளை விடத் தம் பேரப் பிள்ளைகளுக்குக் குறைந்த அளவிலேயே வீட்டுப் பொறுப்புக்கள் வழங்கப்படுவதாகவும் தம் பிள்ளைகளுக்கு வழங்கப் பட்டதை விடக்கூடிய வாய்ப்புக்கள் தம் பேரப் பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதாகவும் இவர்கள் கருதுகின்றனர். (Zogby International 2006)

தம் பிள்ளைப் பருவம், குடும்ப வம்சாவளி, கல்வி, வருமானம் என்பன எப்படி இருந்த போதிலும் தாம் வளர்க்கப்பட்ட முறைகளைப் பற்றி மீளச் சிந்தித்துப் பார்ப்பதற்குத் தம் பிள்ளைகள் தமக்கு வாய்ப்பளிப்பதாக ஆரோக்கியமான பெற்றார் கருதுகின்றனர். தம் பெற்றோர் கடைப்பிடித்த முறையை அவ்வாறோ அல்லது மேம்படுத்தியோ தம் பிள்ளைகள் மீது அவர்கள் பிரயோகிக்கக் கூடும்.



பெற்றார் எவ்வளவு தான் செய்தாலும் அவர்களது பிள்ளைகள் சுயாதீனமான தனியாட்களே! தமது செய்கைகளுக்கு அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர்கள்; பொறுப்புக்கூற வேண்டியவர்கள். பெற்றார் வழங்கக் கூடியன ஆதரவும் வழிகாட்டலும் மாத்திரமே. ஒரு காலத்தில் அவர்கள் "நாம் நல்ல பெற்றோராக இருந்தோம்" எனக் களிப்போடும் பெருமையோடும் பிரகடனம் செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும்..

பிள்ளை வளர்ப்பை ஆரம்பித்தல்: எதிர்கொள்ளவிருக்கும் பணிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

ஒரு பிள்ளை கருவில் உருவாக முன்னரே சிறந்த பிள்ளை வளர்ப்பு தொடங்கி விடுகிறது. திருமணம் செய்ய முன்னர் ஒருவர் நல்ல வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். திருமணத்தின் பின் கர்ப்பிணித் தாய் தனது உடல் நலத்தையும் போசணையையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அத்தோடு தீங்கான பதார்த்தங்கள் தனது உடலினுட் செல்வதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். தந்தை தனது ஆற்றலுக்கு ஏற்றபடி மிகச் சிறந்த முறையில் அவளைக் கவனித்துக் கொள்வது அவசியம். அவளுடைய கடமைகளையும் வேலைப் பளுவையும் முடிந்தளவு குறைக்க முயல வேண்டும். அத்தோடு அவளுக்குப் போதிய ஓய்வு, நித்திரை, உளச் சௌகரியம் முதலியவற்றைக் கொடுப்பது அவசியம்.

எதிர்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் பிள்ளை வளர்ப்புக்குத் தேவையான அறிவு, திறன்கள் பற்றியும் சாராம்சம் ஒன்றினை நாம் இங்கு பெற்றோர்களுக்கு வழங்குகின்றோம். பெற்றோரை எதிர்நோக்கியுள்ள சவால்களின் சரியான பரப்பெல்லையை அவர்கள் அறிந்து வைத்திருப்பது அவசியம். அப்போதுதான் தம்மை எதிர்நோக்கியிருக்கும் சிரமங்களை அவர்கள் குறைமதிப்பீடோ மிகை மதிப்பீடோ செய்ய மாட்டார்கள். பிள்ளை வளர்ப்பு மிக இலகுவானது என அவர்கள் நினைத்தால் அதற்காகத் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் உணர மாட்டார்கள். அது மிகக் கடினமானது என நினைத்தால் அவர்கள் மனச் சோர்வடைந்து முயற்சியைக் கைவிட்டுவிடவும் கூடும்.

ஒருவர் தனது வாழ்வில் அனுபவிக்கக் கிடைக்கும் மிக நன்மை பயக்கின்ற, உளக் கிளர்ச்சி தருகின்ற, மகிழ்ச்சியூட்டுகின்ற அனுபவமாகப் பிள்ளை வளர்ப்பு இருந்த போதிலும் அது சவால் மிக்கதாக அமையலாம். ஒருவருடைய முழு வாழ்க்கையும் தொடரான சோதனைகளைக் கொண்டதே. இவற்றுள் பிள்ளைகளை வளர்த்தெடுப்பது அறைகூவல் மிக்கதாக இருக்கின்றது. எனவே, இது பற்றிய கட்டற்ற இன்பக் கற்பனைகளைத் தவிர்த்துக்கொண்டு சில யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். சிறந்த பிள்ளை வளர்ப்பு எளிதானதல்ல; அதில் தவறுகள் நிகழத்தான் செய்யும். பிள்ளைகள் தம் பெற்றோரின் பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் சோதிப்பார்கள். தாம் அருகில் இல்லாத வேளைகளில்கூடப் பெற்றோரின் உள்ளங்களில் எண்ணத்தையும் கவலையையும் ஏற்படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள். உண்மையில், பிள்ளைகளின் வரவோடு ஒருவரின் வாழ்க்கை வியக்கத்தக்க முறையில் மாறிவிடும்.

எல்லாப் பெற்றாரிடமும் காணப்படுவது போன்றே பிள்ளைகளிடமும் திறன்களும் ஆற்றல்களும் இருக்கும். பிள்ளை வளர்ப்பு என்பது நாம் தனியாக முகங்கொடுக்க வேண்டிய ஒன்றல்ல. பிள்ளைகளைப் பராமரிப்பதற்குப் பலரின் உதவி கிடைக்கக் கூடும்; பிள்ளை பராமரிப்போர், ஆசிரியர்கள், உறவினர்கள், சமயத் தலைவர்கள், நண்பர்கள் முதலியோர் இவர்களுள் அடங்குவர்.

குழந்தையொன்று கருவில் உருவாகத் தொடங்கிவிட்டால் பின்வரும் வழிகாட்டல் களைப் பிரயோகிப்பதன் மூலம் நாம் எமது பணியை ஆரம்பிக்கலாம். பரந்த கண்ணோட்டம் ஒன்றை மனதிற் பதிக்க இது உதவுவதோடு செய்யக்கூடியவை, செய்யத்தகாதவை என்பன பற்றிய மனக் குழப்பத்தை இல்லாமற் செய்யும். உங்கள் குடும்ப வாழ்க்கையையும் வீட்டையும் பற்றிச் சமநிலையான கண்ணோட்டமொன்றைப்

பெறுவதற்காகப் பின்வரும் எட்டுக் கோட்பாடுகளையும் விளங்கிக்கொள்ள முயற்சி செய்யுங்கள்:

1. பிள்ளை விருத்தி என்பது நீண்ட, சிக்கல் மிகுந்த செயன்முறை என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்

நன்னடத்தையுள்ள பிள்ளைகளை உயிர்ப்புள்ள பிரஜைகளாக, ஆற்றல் மிக்க தலைவர்களாக வளர்த்தெடுப்பது மாதக்கணக்கிலன்றி வருடக்கணக்கில் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய ஓர் அன்றாடப் பணியாகும். காதல் தொடர்புகள் தோல்வியுறலாம்; நட்புகள் முறிந்து போகலாம். ஆனால் பெற்றார்- பிள்ளை உறவு சக்தி மிக்கது; அழிவுறாதது. மிக மோசமான வாழ்க்கைப் புயல்களைக்கூடத் தாக்கிப் பிடிக்கக் கூடிய அது பூமியில் காணப்படும் உறவுகளுள் மிக வலிமையானதும் உறுதியானதுமாக விளங்குகிறது.

2. சரியான இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு தொடர்ந்து மேம்பட முயலுங்கள்.

மனக்குழப்பத்தைத் தவிர்க்கவும் செய்ய வேண்டியவற்றை வரையறுக்கவும் இலக்குகள் உதவுகின்றன. நாம் எங்கே செல்ல வேண்டும், எவ்வாறு செல்ல வேண்டும் என்பதை அவை தெளிவாக்குகின்றன. (பிள்ளை வளர்ப்பு பற்றிய இலக்குகளின் பட்டியலொன்றை நாம் தயாரித்துள்ளோம். அடுத்துவரும் அத்தியாயங்களில் இது பற்றிக் கலந்துரையாடப்படும்). இலக்குகளோ அவற்றை அடைவதற்குரிய வழிகளோ தெரியாவிட்டால் பெற்றார் தாம் அறியாமலே தவறு செய்ய நேரிடலாம். ஏனெனில், தமது செய்கைகள் சரியானவையா என உரைத்துப் பார்ப்பதற்கு வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள் எதுவும் அவர்களிடம் இல்லை. தவறுகள் நிகழாது என நாம் கூற வரவில்லை. நிச்சயமாக அவை நிகழத்தான் செய்யும். பொறுப்புணர்வு பெற்று தாம் விட்ட தவறுகளை இனங்கண்டு அவற்றிலிருந்து பாடம் படிப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. பிள்ளைகள் விடயத்திலும் இது பொருந்தும். நாம் எமது பிள்ளைகளுக்குத் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கின்றோமா? எம்மோடு ஒத்திசைவாக வாழ்வதற்கு அவர்களுக்கு நாம் வழிகாட்டியிருக்கிறோமா? நாம் எதிர்பார்க்கின்றபடி வாழ்வதற்குத் தேவையான திறன்களை அவர்களுக்கு வழங்கியிருக்கிறோமா?

3. கற்றுக்கொண்ட கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துங்கள். உங்கள் செயல்ரீதியான அனுபவங்களை ஏனைய பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நாம் பிள்ளை வளர்ப்பு பற்றிய எழுத்தாக்கங்களைப் பரிசீலனை செய்தால் அல்லது அது பற்றிய ஆலோசகர்களை அணுகினால் எமக்கு உதவக்கூடிய வழிகாட்டல்களை நிறையப் பெற்றுக் கொள்ள முடியும். பொதுவான கோட்பாடுகளைப் பெற்றார் ஏற்றுக் கொண்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்தத் தவறி விடுகிறார்கள். (திறன்களும் அனுபவமும் இல்லாமை அல்லது அன்றாடக் கடமைகளின் சுமை இதற்குக் காரணமாக

இருக்கலாம்). எனினும், தமது செயல்முறை அனுபவங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது இரு சாராரும் மேலும் சிறந்த பிள்ளை வளர்ப்புத் திறன்களைப் பெற்றுக் கொள்ள வழியேற்படுகிறது. நாம் தனிப் பெற்றாராக இருந்தாலும் சோடியாக இருந்தாலும், வீட்டிலிருந்தாலும் வெளியே தொழில் புரிந்தாலும் பிள்ளை வளர்ப்பு தனித்துச் செய்ய முடியாத அளவுக்கு முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

4. பின்பற்றத்தகுந்த சிறந்த முன்மாதிரிகளாக இருங்கள். பிள்ளைகளைச் சுய திறமையில் நம்பிக்கை வைக்கப் பழக்குங்கள்.

பெற்றோரின் துணை இன்றியே நிலமைகளைச் சமாளிக்கப் பழகுவது தான் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். மரியாதை, துணிவு, சுய கட்டுப்பாடு, பாசம், கருணை, பரஸ்பரம் தங்கியிருத்தல், பொறுப்புணர்வு போன்ற பண்புகளைப் பிள்ளைகள் வீட்டிலேயே கற்றுக் கொள்கிறார்கள். அவர்களுக்குப் போதனை செய்வதன் மூலம் மாத்திரம் அவர்கள் மெச்சத்தக்க நற்பண்புகள் கொண்ட ஆண்களாகவும் பெண்களாகவும் வளர்வதற்குத் தேவைப்படும் சாதனங்களை வழங்கிவிட முடியாது. பல போதனைகளை விடப் பெற்றாரின் ஒரு முன்மாதிரி நடத்தை மேலானதாக இருக்கும்.

5. பிள்ளைகளுக்குத் தவறானதிலிருந்து சரியானதைப் பிரித்தறியக் கற்றுக் கொடுங்கள்.

அடுத்த பிள்ளைகளின் மோசமான நடத்தை பற்றிக் கேள்விப்படும் போது 'என்னுடைய பிள்ளை அப்படிச் செய்யாது; எனது பிள்ளை வித்தியாசமானது' எனப் பெற்றோர் கூறுவது வழக்கம். 'எமது பிள்ளை தவறாக நடக்காது; அது இயல்பாகவே நன்றாக வளர்கிறது' எனக் கருதிக் கொண்டிருப்பது தவறான செயலாகும். எமது விருப்பங்களுக்கு மாறாக ஒரு பிள்ளை நடந்து கொள்ளக்கூடும் என்பதே உண்மை நிலையாகும். இது ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஏனெனில், எமது பிள்ளை எம்மைச் சூழ வாழ்ந்து சமூகமயமாகும் ஆயிரக்கணக்கான ஏனைய பிள்ளைகளை விட அடிப்படையில் வித்தியாசமானது அல்ல. நாம் அனைவரும் ஆதம், ஹவ்வா (Adam and Eve) ஆகியோரின் வழித்தோன்றல்களாக (அவர்களது பரம்பரை அலகுகளை/ மரபணுக்களைத் தாங்கியபடி) இருப்பதனால் எம்மிடம் பிழையானதையும் சரியானதையும் பிரித்தறிவதற்கும் அந்த அக அறிவின்படி நடந்து கொள்வதற்கும் தேவையான ஆற்றல் இருக்கிறது. ஒரே விதமான சவால்களுக்கு முகம் கொடுத்தபடி மூடிய சுற்றாடலொன்றில் வாழ்வதனால் ஒவ்வொருவரும் தவறிழைக்க நேரிடுகிறது. எனினும், ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால் எங்களுள் சிலர் ஏனையோரை விடக் கூடுதலான தவறுகளைச் செய்கின்றனர். அத்தோடு சிலர் தம் தவறை உணர்ந்து மனம் வருந்தித் தம்மைத் திருத்திக் கொள்கிறார்கள்; ஏனையவர்கள் அப்படிச் செய்வதில்லை. நாம் ஒவ்வொருவரும் தனிச் சிறப்புடையவர்களாக இருந்தாலும் ஒரே விதமான அனுபவங்கள் பலவற்றை எதிர்கொள்கிறோம். எமது வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வும் இன்னொருவரால் ஏதோவொரு வடிவில் அனுபவிக்கப்பட்டுத்தான் இருக்கும்.

6. முக்கியமான பண்புகளை விருத்தி செய்து மனதில் பதியச் செய்வதற்குக் கடினமாக உழையுங்கள்.

குறைபாடற்ற பரிபூரணமான நிறுவனங்களை அமைப்பதன் மூலமாக மட்டுமே உண்மையில் நற்பண்புகள் மிக்க நாகரீகமொன்றை மீண்டும் உருவாக்க முடியும் என்பது நாம் பரந்த கண்ணோட்டத்தில் நோக்கும் போது தெளிவாகும். இந்நிறுவனங்களில் இருப்பவர்கள் உறுதியான, கறை படாத பண்புகளைக் கொண்டவர்களாகவும் சுயநலம்,

பேராசை, ஊழல் போன்ற தீப்பண்புகள் அற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு இவர்களிடம் நேர்மை, பணிவு, மற்றவர்கள் மீது இரக்கம் காட்டுதல் போன்ற பண்புகளும் இருப்பது அவசியம். நல்ல பண்புகள் வெறும் சந்தர்ப்பவசமாக உருவாவது அரிது. மாறாக, மகிழ்ச்சிகரமான இல்லங்கள், உறுதிப்பாடான சூழல், அர்ப்பணிப்புள்ள பெற்றோர்கள் என்பவற்றின் விளைவாகவே அவை உருவாகின்றன.

7. உரையாடற் கலையை விருத்தி செய்து கொள்ளுங்கள்.

உரையாடுங்கள்! பல்வேறு விவகாரங்கள் பற்றி நீங்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்கள், அன்றைய தினம் நீங்கள் செய்தவைகள், பல்வேறு நிகழ்வுகள் மற்றும் ஆட்கள் பற்றிய உங்கள் பிள்ளையின் கருத்துக்கள் போன்ற சகல விதமான விடயங்கள் பற்றியும் உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள். உங்கள் சிந்தனைகளை நீங்கள் எப்படி வெளியிடுகிறீர்கள் என்பதை உங்கள் பிள்ளைகள் அறிந்திருப்பது அவசியம். கருத்துப் பரிமாற்றத்திற்கு முன்னுரிமை கொடுத்து உங்கள் பிள்ளையை அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முயலுங்கள். உரையாடுவது உங்களிடையே உறவுகளை விருத்தி செய்வதோடு, மொழி விருத்திக்கும் தெளிவாகப் பேசுவதற்கும் உதவுகிறது. உங்களை விட்டும் உங்கள் பிள்ளைகளைத் தள்ளி வைப்பதற்குத் தொலைக்காட்சி, இன்டர்நெட், கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள் முதலியவற்றின் உதவியை நாடாதீர்கள். போதியளவு உரையாடல் நிகழாவிட்டால் விவேகம் சிதைந்து மந்த நிலை ஏற்படும். நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பதன் தீய செல்வாக்குகள் பற்றி நாம் தனியொரு அத்தியாயத்தை ஒதுக்கியிருக்கிறோம்.

தொடர்பாடுதல் என்னும்போது கருத்துள்ள விடயப் பரிமாற்றங்களுடன் நகைச்சுவையும் அடங்கும். பெற்றார் தம் பிள்ளைகளுடன் சிரிப்பூட்டும் செயல்களிலும் விளையாட்டுக் களிலும் ஈடுபட வேண்டும். ஏனெனில் நகைச்சுவையானது உறவுகளுக்கு வலுவூட்டி சலிப்புத்தன்மையைத் தூர விலக்கும். பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றோர் அதிக நேரத்தைச் செலவு செய்த போதிலும் தம் பிள்ளைகளுடன் கூடி மகிழ மறந்து விடுகிறார் கள். இது ஒரு பேரிழப்பாகும். பிள்ளைகள் தமக்கேயுரிய ஒரு தனியுலகில் வாழ்கிறார்கள். களிப்புறுவதற்கும் விளையாடுவதற்கும் தேவையான ஆற்றல் அவர்களிடம் நிறைய இருக்கின்றது. பிள்ளைகளுடன் வெளியே சென்று கூடிக்குழாவி கேளிக்கைகளில் ஈடுபட்டுச் சிரித்து மகிழ்வதற்குப் பதிலாக, டீவீ. நிகழ்ச்சிகளே தஞ்சமென வாழும் சிடுசிடுப்பான, சலிப்புத் தட்டிய பெற்றோர்களைக் காணும் போது கவலை தான் ஏற்படுகிறது.

மனித வாழ்க்கை நெருக்கடிகளும் கவலைகளும் நிறைந்தது. எனவே, சற்று நேரத்துக்காவது பிள்ளைகளின் கவலையற்ற உலகிற்குள் பிரவேசித்து மகிழ்வது மன அழுத்தத்தை ஒழிப்பதற்குரிய சிறந்த நிவாரணியாக அமையும். பிள்ளைகளோடு விளையாடுவது பலவீனத்தைக் காட்டும் செயலென்றோ அல்லது வாழ்க்கையின் பொறுப்புக்களை மறந்த செயலென்றோ சில பெற்றோர்கள் நினைக்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், நீங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து சிரிக்கும் போது அவர்களில் உங்களைப் பற்றிய நம்பிக்கை ஏற்படுவதோடு உங்களைப் பற்றிய அச்சமும் நீங்குகிறது. அத்தோடு உளத் தகைப்பு நிலை தணிந்து கண்ணுக்குப் புலனாகாத பாசப்பிணைப்பொன்று பகிர்ந்து கொள்ளப்படுவதோடு பிள்ளைகள் தம் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தவும் வழியேற்படுகிறது. சிரிப்பூட்டுவதும் விளையாடுவதும் தொடர்பாடலின் அத்தியாவசியமான அம்சங்களாகும்.

8. சிறந்த பிள்ளை வளர்ப்பை நுகர்ந்து மகிழுங்கள்.

இதற்கு முன் சொல்லப்பட்ட கருத்தின் தொடர்ச்சியே இது. மேற்சொல்லப்பட்ட கோட்பாடுகள் யாவும் இரக்கத்துடனும் வேடிக்கையுடனும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

சில சமயங்களில் வெற்றி பெறுவதையே குறிக்கோளாகக் கொண்ட பெற்றோர்கள் இலக்குகளில் மட்டும் அதீத கவனம் செலுத்துவதனால் குடும்ப வாழ்வின் சிறிய சிறிய சந்தோஷங்களையெல்லாம் தவற விட்டு விடுகின்றனர். இதைப் பற்றி ஜாக்கிரதையாக இருங்கள். பிள்ளை வளர்ப்பு என்பது முழுமை சார்ந்த ஒரு கருத்துப் படிவமாகவும் காருண்யம் மிக்க பணியாகவும் இருக்கிறது. ஏனெனில், குறிக்கோள்களை அடைந்து கொள்வது எவ்வளவு முக்கியமோ அது போன்றே பிள்ளை வளர்ப்பு அனுபவமும் முக்கியமானது.

தரம் மிகுந்த காலத்தை பிள்ளைகளுடனான உயிர்ப்பான செயற்பாடுகளில் செலவிடுதல்



தமது பிள்ளைகளுடன் தாம் பெரு மளவு நேரத்தைக் கழிப்பதாகப் பல பெற்றோர்கள் பெருமையோடு கூறக்கூடும். ஆனால், உண்மையில் அவர்கள் தம் பிள்ளைகளுக்கு அருகாமையில் நேரத்தைச் செல விடுகிறார்களே தவிர பிள்ளை களுடன் சேர்ந்தல்ல. அதாவது, அவர்கள் பிள்ளைகள் இருக்கின்ற அதே அறையில் இருப்பார்கள்; அதே நேரத்தில் டீவீ. பார்ப்பதில், போனில் உரையாடு வதில், தமது ஈமெயில்களை வாசிப்பதில் அல்லது தமது விருந்தினர்களுடன் உரையாடுவதில் ஈடுபட்டிருப்பார்கள். எனினும், பிள்ளை களுடன் உயிர்ப்பான செயற்பாடுகளில் ஈடுபடுதலே உண்மையில் தேவைப்படுகிறது. ஒன்றாக வாசித்தல், ஒன்றாக விளையாடுதல், ஒன்றிணைந்து புதிர்களை விடுவித்தல், ஒன்றாகச் சமையல் செய்து சாப்பிடுதல், ஒன்று சேர்ந்து விடயங்களைக் கலந்துரை யாடுதல், ஒருவருக் கொருவர் சிரிப்பூட்டுதல், ஒன்றாகக் கடைத்தெருவுக்குச் சென்று பொருட்களை வாங்குதல், ஒன்று சேர்ந்து உணவுண்ட பாத்திரங்களைக் கழுவுதல் போன்றன இச்செயற்பாடுகளில் அடங்கலாம். இன்னொரு வகையில் சொல் வதாயின் இங்கு எதிர்பார்க்கப்படுவது, பிள்ளைக்குத் துணையாக இருக்கும் அதேவேளையில் அதனைத் தனிமையில் விட்டுவிடுவது அல்ல. மாறாக, பிள்ளையோடு ஒரு பங்காளியாகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதே இங்கு தேவைப்படுகிறது.

இப்படிச் செய்வதனால் போதிய அளவில், தரமான காலத்தைப் பலவிதமான உயிர்ப்பான செயற்பாடுகளில் கழிக்க முடியுமாகிறது. பிள்ளையைப் பராமரிப் பதற்கு வேறு ஆட்களை அமர்த்துவதோ, தமது பொறுப்புக்களை இன் னொருவரைக் கொண்டு நிறைவேற்றுவதோ பெற்றார் -தாயும் சரி, தந்தையும் சரி- நேரடியாகப் பிள்ளையுடன் கலந்து செயற்படுவதற்கு ஒருபோதும் ஈடாக மாட்டாது.

-ஹஸன் அல் தாலிப்-

பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான தகவல் மூலங்களைப் பயன்படுத்தல்

சிறந்த பிள்ளை வளர்ப்பினை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வழிகளுள் ஒன்றுஅது தொடர்பான தகவல் மூலங்களையும் நிபுணர்களின் ஆலோசனைகளையும் உதவிக் குறிப்புக்களையும் உசாவுவதாகும்

முஸ்லிம் தகவல் மூலங்களும் மேற்கத்திய தகவல் மூலங்களும்

பிள்ளை வளர்ப்பு பற்றிய எழுத்தாக்கங்கள் வட அமெரிக்காவில் பரவலாகக் காணப்படுகின்றன. (அட்டவணை 1.1) சிறந்த பிள்ளை வளர்ப்பு பற்றிப் பெருமளவு தகவல்கள் மேற்கத்தியப் பெற்றாருக்குக் கிடைக்கின்றன. பிள்ளை வளர்ப்பை மகிழ்ச்சிகரமானதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் ஆக்குவதற்கு உதவக்கூடிய வளங்களையும் தகவல்களையும் தருகின்ற நூல்களும் நூலகங்களும் வெப் தளங்களும் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

அட்டவணை 1.1 பிள்ளை வளர்ப்பு பற்றிய எழுத்தாக்கங்கள்

நூலகம்	நூல் தலைப்புக்கள்
காங்கிரஸ் நூலகம்	2464
6 பல்கலைக் கழகங்களின் கூட்டு- USA-	3275
Fairfax County பொது நூலகம், வர்ஜினியா	432
தேசிய நூலகம்- கனடா	362

(ஆதாரம்: www. loc.gov, www. fairfaxcounty.gov/library, www. collectionscanada.gc.ca)

அதேவேளையில், பெற்றாராகப் போகும் முஸ்லிம்கள் பிள்ளை வளர்ப்புப் பற்றி அறிவுறுத்தல்களைத் தேடினால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியவை யாவை? பிள்ளை வளர்ப்பு பற்றிய உயர்தர இஸ்லாமிய எழுத்தாக்கங்களின் தட்டுப்பாடு பற்றி அல்- தால், அல்- கைஸி ஆகியோர் அழுத்திக் கூறியுள்ளனர். பொருத்தமான விழுமியங்களையும் நடத்தைகளையும் பிள்ளைகளுக்குப் புகட்டுவது எப்படி என்பதை செயல் முறை ரீதியில் விளக்குகின்ற நூல்கள் மிகச் சிலவே உள்ளன.

பிள்ளை வளர்ப்பு பற்றிய பழைய நூல்களைப் பயன்படுத்துவதில் பெற்றார் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். வித்தியாசமான காலத்தில் காணப்பட்ட வித்தியாசமான சவால்கள் பற்றியே பழையவை குறிப்பிடுகின்றன. அவை தெளிவான பாகுபாட்டையோ சொல் சுட்டிகளையோ உசாத்துணை விபரங்களையோ கொண்டிருப்பதில்லை. முஸ்லிம்களுக்குத் தேவையான பிள்ளை வளர்ப்பு பற்றிய தகவல்கள் பல்வேறு வகை எழுத்தாக்கங்களில் சிதறிக் கிடக்கின்றன. இவற்றுள் சட்டக்கலை பற்றிய நூல்கள், அல்குர்ஆன் விளக்கவுரைகள் (*தப்ஸீர்கள்*), வரலாற்று நூல்கள், ஸூபிக் கவிதைகள், நல்ல புத்தி கூறும் நூல்கள் முதலியன அடங்குகின்றன.

பிள்ளை வளர்ப்பு பற்றிய இஸ்லாமிய எழுத்தாக்கங்கள் மிகக் குறைவு என்றும், குமரப் பருவத்தினர் பற்றிக் குறிப்பாக எழுதப்பட்டவை இன்னும் குறைவாகவே உள்ளன என்றும் பதின்ம வயதினரை வளர்த்தல் பற்றிய தமது அறபு நூலில் டாக்டர் அல்- ஸபலாவி கூறியுள்ளார். ஐக்கிய அமெரிக்கா, கனடா நாடுகளுக்கான முஸ்லிம் மாணவர் சங்கம் (MSA) முஸ்லிம் பிள்ளைகளுக்கான முதலாவது நிறந்தீட்டும் நூலை 1973இல்

வெளியிட்டது. அக்காலத்தில் அப்படியான நூல்கள் காணப்படவில்லை. மேற்கு நாடுகளில் குடியேறியுள்ள முஸ்லிம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குரிய நூல்கள் மிகக் குறைவாக இருப்பதை உணரலாயினர்.

மேற்கு நாடுகளில் உள்ள முஸ்லிம் சமுதாயங்கள், மஸ்ஜித்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற நிறுவனங்களைக் கணிசமான தொகையில் நிறுவிக் கொண்டுள்ள போதிலும் தமது இளம் பரம்பரையினருக்கு வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் கற்பிப்பதற்கு உதவக்கூடிய நூல்களைப் போதியளவில் உருவாக்கத் தவறியுள்ளனர் என இங்கிலாந்தின் லெஸ்டர் பகுதியிலுள்ள இஸ்லாமிய பவுண்டேஷனின் பணிப்பாளர் டாக்டர் மனாஸிர் அஹ்ஸன் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை உருவாக்கப்பட்டுள்ள நூல்களின் தொகை மிகக் குறைவே. எனவே இன்னும் நிறையத் தேவைப்படுகின்றன. இன்றைய முஸ்லிம் நூலகங்களில் பிள்ளை வளர்ப்பு பற்றிய நூல்கள் குறைவாகவே உள்ளன. பெரும்பாலான நூல்கள் வளர்ந்தோர் கல்வி பற்றியே பேசுகின்றன. பிள்ளை விருத்தி, குமரப் பருவத்திற்குரிய உளவியல் என்பன பற்றிச் சிறிதளவே எழுதப்பட்டுள்ளன. திருமண ஒப்பந்தம் பற்றிய முறைசார் அம்சங்கள், கணவன், மனைவி, பிள்ளைகளின் உரிமைகளும் கடமைகளும், விவாகரத்து பற்றிய நுட்ப விபரங்கள், சொத்துரிமையைக் கணித்தல் முதலிய விடயங்கள் பற்றிப் பெருந்தொகை யான நூல்கள் சட்டவியல் அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. எனினும் குடும்பம், உடன் பிறப்புக்களுக்கு இடையிலான உறவுகள், குறிப்பாக அவற்றின் சமூக, உளவியல், விருத்தி சார்ந்த அம்சங்கள் என்பன பற்றி மேலும் பல இஸ்லாமிய நூல்கள் எழுதப்பட வேண்டிய தேவை உள்ளது. குடும்ப விடயங்கள் தொடர்பாக அறிவுரைகளைப் பெற்றார் தேடும்போது முறை சார்ந்ததும் சட்டவியல் சார்ந்ததுமான (ஃபிக்ஹ்) விடயங்களில் கவனம் செலுத்தும் நூல்களே அவர்களுக்குக் கிடைக்கின்றன.

மேலும், அறபுலகில் உயர் பள்ளிகளில் கற்பிக்கப்படும் முஸ்லிம் வரலாற்று நூல்களை எடுத்துக்கொண்டால் அவை மனிதருக்கிடையிலான உறவாடல்களையும் தனியாள் விருத்தியையும் புறக்கணித்து விட்டு வெறுமனே அரசியல் விவகாரங்களிலும் நாடுகளுக்கிடையில் போரும் சமாதானமும் ஏற்படுத்தப்பட்ட முறைகளிலுமே தம் கவனத்தைச் செலுத்துவதைக் காண முடிகிறது. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிள்ளைகள் மீது காட்டிய அன்பு, பாசம், மரியாதை என்பன பற்றியும் அன்னார் பிள்ளைகளோடு பழகும் போது காட்டிய இரக்கம், அவர்களது விளையாட்டுக்களில் கலந்து கொள்வதற்குக் காட்டிய விருப்பம் முதலியவற்றுக்கு மிகச் சொற்ப இடமே வழங்கப்பட்டுள்ளது. நபியவர்களின் ஆண் மக்கள் குழந்தைப் பருவத்திலேயே மரணித்து விட்டதால் அன்னாருக்குத் தம் சொந்தப் புத்திரர்களை வளர்த்தெடுக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும், நபியவர்கள் தமது பெண் மக்களை (பாத்திமா, ஸைனப், ருக்கையாஹ், உம்மு குல்தூம் ஆகியோரை) வளர்த்தனர். அதேவேளை தமது பேரப் பிள்ளைகளையும் தம் உறவினர்களினதும் சமுதாயத்தினரதும் பிள்ளைகளையும் வளர்ப்பதில் பங்களிப்புச் செய்தனர். அத்தோடு தமது சிறிய தந்தையின் இளம் மகன் அலீ இப்ன் அபீ தாலிபையும் தமது வளர்ப்பு மகன் ஸைத் இப்ன் ஹாரிதாஹ்வையும் அவர்களே வளர்த்தார்கள். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலும் எதிரிகளின் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஒரு புதிய அரசை உருவாக்குவதிலும் தம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டியிருந்த நிலையில்கூட நபிகளார் பிள்ளைகள் மீது அதிக அக்கறை கொண்டு அவர்களுக்கு அன்பும் ஆதரவும் மரியாதையும் காட்டியதை நினைக்கும் போது பேராச்சரியம்தான் ஏற்படுகிறது.

பிள்ளை வளர்ப்பதில் பெண்களே பெரிதும் ஈடுபட்டதனால் அவ்விடயம் பற்றி ஆண்கள் சிறிதளவே கவனம் செலுத்தியுள்ளனர். விசுவாசிகளின் அன்னையர்கள் என அழைக்கப்பட்ட முஸ்லிம் பெண்களின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து விவரிப்பதற்குப்

போதியளவு முயற்சி எடுக்கப்படவில்லை. உண்மையில் அவர்களைப் பற்றிய விடயங்களுள் பல மறைந்து போயுள்ளன அல்லது குறைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நபிகளாரின் மனைவிமாரும் ஸஹாபிப் பெண்மணிகளும் எவ்வாறு பிள்ளைகளை வளர்த்தார்கள் என்பதை நுணுகி ஆராய்ந்து ஆக்கங்களை உருவாக்கும்படி அறிஞர்களை நாம் தூண்ட வேண்டும். இது சமூக விருத்தியில் பெண்களின் பங்கு பற்றிப் புதிய பரிமாணமொன்றை அறிமுகஞ் செய்வதோடு பெண்கள் பற்றிய கற்கைக்குரிய இஸ்லாமிய நூல்களின் தொகையையும் அதிகரிக்கச் செய்யும். அண்மைக் காலங்களில் ஆண், பெண் இருபாலாரிலும் ஆற்றல் மிக்க தலைவர்களை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ள பெண்களின் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட வேண்டும். நாம் இவ்வாறு செய்யாத பட்சத்தில் ''தாயின் காலடியில் சுவனம் இருக்கிறது'' என்ற வழிகாட்டல் வெறுமனே பக்திமயமான வெற்றுப்பேச்சாகிப் போய்விடும்.

இதுவரை காலமும், பிள்ளைகளில் நன்னடத்தையையும் நல்ல விழுமியங்களையும் விருத்தி செய்வதற்குரிய செயல் ரீதியான வழிமுறைகளை வலியுறுத்தாமல் வெறுமனே கருத்து ரீதியான விழுமியங்கள், குறிக்கோள்கள் என்பன பற்றியே அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. பிள்ளைகளின் விருத்தியும் வளர்ச்சியும் பற்றிய விளக்கத்திற்கும் பகுப்பாய்விற்கும் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் பிள்ளை வளர்ப்பு தொடர்பான கோட்பாடுகளைத் தம் அன்றாட வாழ்வில் பிரயோகிப்பது பெற்றோருக்குச் சிரமமாகி விடுகிறது. செயல்முறை நுட்பங்கள், பொருத்தமான திறன்கள், நிதர்சன வாழ்க்கை உதாரணங்கள் முதலியன அவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

இவ்விடயங்களிலிருந்து முஸ்லிம்களின் கவனத்தைக் கலைப்பதற்குப் பல நூற்றாண்டுகளாக நீடித்த காலனித்துவ ஆட்சியும் காரணமாக அமைந்தது. இக்காலப் பகுதியில் தாய்நாட்டின் விடுதலை முயற்சிகளுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டதே ஒழிய தர்பிய்யாஹ் என்னும் கல்வியூட்டலிலும் பயிற்சியிலும் கவனம் செலுத்தப்பட வில்லை. எமது நிகழ்ச்சித் திட்டங்களில் சமூக மாற்றம், நல்ல முகாமை, விருத்தி முதலியவற்றுக்கு மிகக் குறைந்த முக்கியத்துவமே வழங்கப்பட்டது. பிள்ளை வளர்ப்பு பற்றி எழுதுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. இத்துறை தொடர்பில் நீண்ட காலமாக ஆழமான ஆய்வுகள் எதுவும் செய்யப்படவில்லை.

இப்ன் ஸஹ்லூன், இப்ன் அல் ஜஸ்ஸார், அலி அல் கப்ஸி போன்ற முஸ்லிம் சீர்திருத்தவாதிகள் தாய்ப்பாலூட்டல் பற்றியும் வகுப்பறையில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி ஒழுகச் செய்வது, அவர்களைத் தண்டிப்பது, ஆசிரியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவது முதலியன பற்றியுமே கூடிய அழுத்தம் கொடுத்தனர். சிறுவர் உளவியல், பிள்ளை விருத்தி, கல்வி, பெற்றார் பொறுப்புக்கள் ஆகியன தொடர்பாகப் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. மாபெரும் சீர்திருத்த இயக்கத்தினால்- அதன் தலைவர்கள் திறமைசாலிகளாக இருந்தும், மனப் பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டும் கூட- முஸ்லிம் நாகரீகத்திற்குப் புத்துயிரளிக்க முடியாமல் போனதற்கு இதனையும் ஒரு காரணமாகக் கூறலாம். செழித்தோங்கக் கூடிய சமூகமொன்றை நிறுவ வேண்டுமாயின் நாம் பிள்ளை வளர்ப்பு பற்றியும் நன்னடத்தையைக் கட்டியெழுப்புவது பற்றியும் சிறந்ததோர் அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு, அர்த்தமுள்ள கல்வியும் உறுதியான இறை விசுவாசமும் பொருத்தமான திறன்களும் எமக்குத் தேவை. இறை தூதர்களைப் பின்பற்றத்தகுந்த சிறந்த முன்மாதிரிகளாக அல் குர்ஆன் விவரிப்பதை நாம் காணலாம். பிள்ளை வளர்ப்பு தொடர்பான கலையையும் அறிவியலையும் பற்றி நாம் ஆழமான விளக்கமொன்றைப் பெற்றிருப்பின் இள வயதிலேயே தலைமைப் பண்புகளை விருத்தி செய்ய முடியும்.

முஸ்லிம்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான எழுத்தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்வதற்காக 2002இல் குவைத் பல்கலைக் கழகப் பேராசிரியர் மும்தாஸ் அன்வர் அவர்களை IIIT சேவைக்கு அமர்த்தியது. முஸ்லிம்களுக்கான பிள்ளை வளர்ப்பு பற்றிய நல்ல நூல்கள் போதியளவில் இல்லை என்பதையும் முஸ்லிம் உலகின் பல பகுதிகளிலும் -அதிலும் குறிப்பாகப் பெண்கள் மத்தியில்- எழுத்தறிவு வீதம் மிகக் குறைவாக இருப்பதையும் அவர் கண்டார். பெரும்பாலான முஸ்லிம் பெற்றோர் பிள்ளை வளர்ப்பு விடயத்தில் தனிப்பட்ட அவதானிப்புக்களிலும் அனுபவங்களிலுமே தங்கியிருக்கின்றனர். வெற்றிகரமான பிள்ளை வளர்ப்புக்கு இவை போதியனவன்று. கல்வி கற்ற முஸ்லிம் பெற்றாருக்குக் கூட சிறந்த பிள்ளை வளர்ப்பு பற்றிய உயர்தர எழுத்தாக்கங்களோ முறை சார்ந்த பயிற்சியோ சரிவரக் கிடைப்பதில்லை. பிள்ளை வளர்ப்பு பற்றி, முஸ்லிம் உலகில் பேசப்படும் சகல மொழிகளிலும் எத்தனை எழுத்தாக்கங்கள் இருக்கின்றன என்பதை அளவிடுவது சிரமமானதாக இருப்பினும் அவை போதியனவல்ல என்பதை உறுதியாகக் கூறலாம். பிள்ளை வளர்ப்பு தொடர்பாக உயர் தரமுடைய ஆக்கங்கள் உருவாக்கப்பட வேண்டிய அவசரத் தேவையொன்று இருப்பது தெளிவாகிறது. இவ்வாக்கங்கள் நன்னடத்தையைக் கட்டியெழுப்புதல், விழுமியங்கள், நேர்வழி நடத்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு இன்றைய சமுதாயங்களில் காணப்படும் பிரச்சினைகளைக் கருத்திலெடுப்பனவாகவும் இருப்பது அவசியம்.

நபிமார்களின் பண்புகள் (அல்குர்ஆனில் கூறப்பட்டபடி)

குர்ஆனியப் பதங்கள்.	تعابير قرآنية
நேர்மையானவர்.	صدّيقاً
இரக்கமும் கருணையும் உள்ளவர்.	رؤوف رحيم
அறிவும் ஞானமும் உடையவர்.	حُكماً وعلماً
உடல் வலிமையும் அறிவும் அதிகமானவர்.	زاده بسطة في العلم والجسم
வலிமையானவர், நம்பத்தகுந்தவர்.	القوي الأمين
செயல்திறனுள்ளவர், நம்பத்தகுந்தவர்.	حفيظ عليم

உயர் பள்ளிகளில் பிள்ளை வளர்ப்பு பற்றிக் கற்பிக்கப்பட வேண்டுமா?

பிள்ளை வளர்ப்பு பொறுப்பு மிக்க பணியெனக் கருதப்பட்டால் அதனை நாம் ஏன் பள்ளிக்கூடங்களில் ஒரு முறைசார் பாடநெறியாகப் போதிப்பதில்லை? பிள்ளை வளர்ப்பு கற்கப்பட வேண்டிய அல்லது கற்பிக்கப்பட வேண்டிய ஒரு விடயமென 70% மக்கள் கருதுகின்றனர். Longfield and Fitzpatrick 1999

இரண்டாவது உலகப்போர் முடிவுற்றது முதல் உலகம் மாறிப் போயிருக்கிறது. ஒரே குடும்பத்தின் பல பரம்பரைகள் ஒரே கிராமத்தில் அல்லது ஒரே நகரத்தில் வாழ்வது முன்பு வழக்கமாக இருந்தது. பெற்றோரின் பெற்றோரும் சகோதர சகோதரிகளும் பிள்ளையின் மூத்த உடன் பிறப்புக்களும் பிள்ளைப் பராமரிப்பில் அறிவுரை கூறவும் உதவி செய்யவும் அருகில் இருந்தனர். இப்போது குடும்ப வாழ்க்கை சவால் மிக்கதாக மாறி வருகிறது. இப்போது பலர் தனிப் பெற்றாராகக் குடும்பம் நடத்துகின்றனர். அத்தோடு முன்பை விடக் கூடுதலான அளவு விவாக முறிவுகள் இடம்பெறுவதோடு தொழில் புரியும் தாய்மாரும் நிறைய உள்ளனர். சிறந்த பிள்ளை வளர்ப்பு முறையினை மரபு வழியாக வழங்கும் கலை சிதறுண்டு போயிருப்பதனால் பிள்ளை வளர்ப்பு ஆசிரியர் என்ற பங்கினை நாம் நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. வியாபித்திருந்த குடும்ப வலைப்பின்னல் சுருங்கி வருவதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்கள் இப்பணியைச் செய்ய வேண்டுமென நாம் எதிர்பார்க்க வேண்டுமா? மேலும், முதலாவது பிள்ளையை வளர்ப்பதை விட இரண்டாவது பிள்ளையை வளர்ப்பது இலகுவாகி விடுகிறது. ஏனெனில், முதற் பிள்ளையை வளர்க்கும் போது நாம் கூடுதலாகக் கற்றுக் கொள்கிறோம். இந்த அனுபவத்தினை முறை சார்ந்த விதத்திலோ முறை சாரா விதத்திலோ ஏன் மற்றவர்களுக்கு வழங்கக் கூடாது?

பிள்ளை வளர்ப்பு பற்றிப் பாடநெறிகளை வழங்குவது தர்க்க ரீதியானதாகவும் மனதைக் கவர்வது போன்றும் தோன்றினாலும் உண்மை நிலை அதை விட வித்தியாசமானது. அவ்வாறான பாடநெறிகளைக் கற்பிப்பதற்குரிய தேவை என்ன என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். 'பிள்ளை வளர்ப்பு ஆசிரியர்' என்பவரின் பங்களிப்பும் பிரச்சினைக்குரியதே. ஏனெனில், குடும்ப வாழ்க்கை என்பது ஒரு தூய விஞ்ஞானமல்ல. அது உணர்வுகள், உறவுகள், நெருங்கிய தொடர்புகள் பற்றியது. உயர் பள்ளிகளில் பிள்ளை வளர்ப்பு பற்றிக் கற்பிப்பதற்கு எதிராக வாதிடுபவர்கள் அரச நிறுவனங்களால் நடத்தப்படும் வகுப்புக்களில் பிள்ளை வளர்ப்பு நெகிழ்வுத் தன்மையற்ற சூத்திரங்களாகக் கருதப்பட இடமளிக்கக்கூடாது என்கின்றனர். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் தலையிட நாடும் கல்வி நிறுவனங்களும் அரசியல்வாதிகளும் குடும்ப உறவின் சிக்கல் தன்மையில் கைவைத்திட அனுமதிக்கக் கூடாது. பிள்ளை வளர்ப்பில் அத்துறை சார்ந்த நிபுணர்களின் உதவி பயனுள்ளதே. எனினும், பெற்றார் தமது கடமைக் கூறினை ஆசிரியர்களுக்கும் நிபுணர்களுக்கும் தாரை வார்த்துவிடக் கூடாது. ஒவ்வொரு குடும்பமும் தனித்துவமானதாக இருப்பதனால் பெற்றோர் தமது சொந்த விவேகம், உள்ளுணர்வுகள், தீர்மானங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதே நல்லது. ஒருவர் தம்முடைய சொந்தத் தவறுகளிலிருந்து பாடம் படித்துக்கொள்வது மிகப் பயனுள்ளது. அத்தோடு குடும்ப சுயாதீனமும் பேணப்பட வேண்டும். பிள்ளை வளர்ப்பு என்பது, கணிதத்தைப் போன்ற கோட்பாடு ரீதியான பாடமொன்றல்ல. கோட்பாடுகளைக் கற்பிக்கும் ஆற்றலுடைய ஆசிரியர் ஒருவரால் பிள்ளை வளர்ப்பு பற்றிய செயல்முறைப் பாடநெறியொன்றைக் கற்பிக்க முடியாமற் போகலாம்.

உளவியல் மருத்துவரான Donald Winnicott பின்வருமாறு கூறியுள்ளார்:

''எனது தொழிற்துறை வாழ்வில் அறிவுரை கூறுவதை நான் தவிர்த்துக் கொண்டுள்ளேன். நல்ல நோக்குடனேயாயினும், தாய்க்கும் குழந்தைக்கும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையில் தலையிடுகின்ற போக்குடையவர் களாக வைத்தியர்களே இருக்கின்றார்கள்.''

Winnicott 1992

பெற்றாருக்கு வழிகாட்டும் போது குடும்ப வாழ்க்கையில் பொருத்தமற்ற வெளியார் தலையீடு ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும். அத்தோடு நாம் ஆதிக்கப் போக்கையும் தவிர்க்க வேண்டும். இல்லையேல் இது பெற்றாரின் நம்பிக்கையையும் பொறுப்புக் கூறும் கடமையையும் குலைத்து விடக்கூடும். குடும்பங்களில் ஏற்படும் மோதல்களின் போது சமரசம் செய்து வைப்பவர்களாகப் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் செயற்படவே கூடாது.

எப்படியிருப்பினும், நன்கு கட்டமைக்கப்பட்ட பாடநெறியொன்றில் பயனுள்ள அம்சங்களும் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே, முழுமையாக அதனைப் புறக்கணித்து விடாமல், குடும்ப வாழ்க்கையொன்றை ஆரம்பிப்பதன் விளைவாக ஏற்படும் பொறுப்புக்களின் பெறுமதி பற்றியும் அதற்கென அர்ப்பணிக்கப்பட வேண்டிய நேரம், முயற்சி என்பன பற்றியும் நாம் போதிக்க வேண்டும். அடுத்து நாங்கள் கலந்துரையாடப் போகும் பிள்ளை வளர்ப்புப் பாடநெறிகளின் உதாரணங்கள் ஐக்கிய இராச்சியத்திலிருந்தே (UK) எடுக்கப்பட்டுள்ளன. எனினும், முஸ்லிம் உலகிலும் பிள்ளை வளர்ப்பு பற்றிய போதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலேஷியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகம் 'திருமணமும் பிள்ளை வளர்ப்பும்' என்ற பாடநெறியொன்றை 1998 இல் அறிமுகப்படுத்தியது. அத்தோடு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக பிள்ளை வளர்ப்புக் கல்வியில் டிப்லோமாப் பாடநெறி ஒன்றையும் தொடங்கியது.

பிரித்தானிய உயர் பள்ளிப் பாடநெறி பற்றிய வழிகாட்டல்

நாம் ஏற்கனவே கூறியது போல, பெற்றோருக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் இடையில் மிக நுட்பமான சமநிலையொன்று பேணப்பட வேண்டும். கட்டாய வகுப்புக்களை அறிமுகப் படுத்துவதன் மூலம் இது குலைக்கப்படக் கூடாது. சுகாதார முகவர் நிறுவனங்களும் தொண்டர் அமைப்புக்களும் கர்ப்பநிலை, பிள்ளைப்பேறு, குழந்தைப் பராமரிப்பு என்பன பற்றிப் புதிய பெற்றார்களுக்கு உதவி வழங்குகின்ற போதிலும் சமூக அம்சங்கள், பெறுமானங்கள் என்பவற்றைக் கற்பிப்பது கருத்து முரண்பாட்டுக்கு வழி வகுக்கலாம். பிரிட்டிஷ் அரசாங்கம் 2000 இல் பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பிள்ளை வளர்ப்பு பற்றி முறைசார் ரீதியில் போதிக்கத் தொடங்கியது. குடும்ப முறிவுகளும் தனிப் பெற்றாராய் வாழும் நிலையும் தற்போது பிரிட்டனில் பாரிய பிரச்சினைகளாக இருக்கின்றன. ஐரோப்பாவிலும் இந்நிலைமை அதிர்ச்சியூட்டக் கூடிய அளவுக்கு அதிகரித்து வருகிறது. கல்வியியலாளர்கள், சிவில் உத்தியோகத்தர்கள், உளவியலாளர்கள் ஆகியோரின் அறிவுரையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசாங்கம் மாணவர்களுக்குப் போதிப்பதற்குரிய வழிகாட்டல்களைப் பின்வரும் தலைப்புக்களில் அறிமுகம் செய்தது.

- திருமண உறவில் ஏற்படும் மோதல்களைக் கையாளுதல்.
- பிள்ளைகளைப் பொருத்தமான முறையில் தண்டித்தல்.
- சுப்பர் மார்க்கட் போன்ற இடங்களில் பிள்ளைகள் போடும் அழுகை அட்டகாசங்களை சமாளிப்பதற்கு ஏற்ற செயல்முறை ரீதியான உதவிக் குறிப்புகள்.
- தாய்மாரிடமும் தந்தையரிடமும் எதிர்பார்க்கப்படும் கடமைக் கூறுகள்.
- பிள்ளை வளர்ப்பின் செலவினங்களும் செயல்முறையான பொறுப்புக்களும்.
- பாராட்டின் மூலம் பிள்ளைகளிலும் பெற்றாரிலும் சுய மதிப்பைப் போஷித்து வளர்த்தல்.

- அன்பு, பாதுகாப்பு என்பவற்றுடன் ஒப்பிடுகையில் உலகப் பொருட்களின் சார்புப் பெறுமானம்.
- பொறுப்புக்களோடு உரிமைகளும் சுயாதீனமும்.
- திருமணத்தின் பெறுமதி.
- நேர முகாமைத் திறன்.
- குடும்ப வாழ்க்கையில் உள அழுத்த நிலைகளைக் கையாளுதல்.

இந்தக் கலைத்திட்டம் பதின்ம வயதில் கர்ப்பமடைவோரின் தொகையையும் பிள்ளைகளின் குற்ற ரீதியான நடத்தைகளையும் குறைக்க உதவும் என பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்து கொண்டது. குடும்ப விதிமுறைகளை அனுசரித்து நடக்கக் கற்பதானது, சமூகச் சட்டங்களுக்கு உட்பட்டு வாழக் கற்பதற்குரிய முதற்படியாக அமைகிறது. அத்தோடு, சிறைவாசம் அனுபவிப்பதையும் அது தவிர்க்கிறது.

> பிள்ளை வளர்ப்பானது சவால் மிக்கதாக இருப்பினும், அதனைப் போன்று மகிழ்ச்சி தரக்கூடிய, வெகுமதியளிக்கக்கூடிய, மனக்கிளர்ச்சியூட்டக்கூடிய இன்பமான அனுபவம் வேறெதுவும் இருக்க முடியாது.
>
> (பதூல் அல் தோமா, எழுத்தாளர், தாய்)

ஒரு விஞ்ஞானத்துக்கு முறைமைகளும் கட்டமைப்புக்களும் உத்தி முறைகளும் எடுகோள்களும் தேவை.

ஒரு கலைக்கு விவேகம், சாமர்த்தியம், உள்ளுணர்வு, பற்றார்வம், அறிவுணர்வு என்பன தேவை.

பிள்ளை வளர்ப்பு ஒரு விஞ்ஞானமாகவும் கலையாகவும் இருப்பதோடு, ஒரு ஆன்மீக முயற்சியாகவும் விளங்குகிறது.

எமது பிள்ளைகள் இயல்புக்கு மாறானவையா?

பிள்ளை வளர்ப்பின் சிக்கல் தன்மை காரணமாக சில பெற்றார்கள், தம் பிள்ளைகள் இயல்புக்கு மாறானவை என நினைக்கின்றனர். தாய் ஒருவர் பின்வருமாறு கூறினார்:

''எமக்குப் பிள்ளைகள் பிறப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் நானும் எனது கணவரும் எமது அடுத்த வீட்டாரை ஆச்சரியப்படச் செய்வதற்காக அவர்கள் வீட்டில் இல்லாத வேளையில் அவர்களது வீட்டை ஒழுங்கு படுத்திச் சுத்தமாக்க முயன்றோம். அவர்களுக்கிருந்த சிறு பிள்ளைகள் மூவரதும் விளையாட்டுப் பொருட்கள் வீடு முழுவதும் சிதறிக் கிடந்தன. வேலை செய்ய ஆரம்பித்து ஆறு மணித்தியாலங்களில் நாம் முற்றாகக் களைத்துப் போய் அவர்களது ஸோபாவிலே சாய்ந்து கொண்டோம். என்ன நடந்திருக்கிறது என்று நம்ப முடியாமல் நாம் திகைத்தோம். இந்தப் பிள்ளைகள் இயல்பானவர்களாக இருக்க முடியாது. இதுதான் பிள்ளைகளின் இயல்பு எனின், எமக்குப் பிள்ளைகளே வேண்டாம் என நினைத்தோம். இரண்டு வருடங்களில் இரு பிள்ளைகள் கிடைத்த பின்னர் எங்கள் அயலவரின் வீடு எவ்வளவு இயல்பானது என்பது எனக்குத் தெரிகிறது. இப்போது எங்கள் வீடும் 'சிறு பிள்ளைகள் இங்கே வசிக்கிறார்கள்' என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறது.'' Faber and Mazlish 1982

பிள்ளைகளே மனித சமுதாயத்தின் எதிர்காலம்-
பிள்ளைகளினூடாக நாம் உலகினை மாற்றியமைக்கலாம்.

- பிள்ளைகள், நாம் அவர்கள் மீது வைக்கும் நம்பிக்கைக்கு ஏற்ப வாழ்ந்து காட்டக் கூடியவர்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை நோக்கி ''உங்களால் இதைச் செய்ய முடியும்'' எனக் கூறினால் அவர்கள் அதனைச் செய்வார்கள்; ''இதனை உங்களால் செய்ய முடியாது'' எனக் கூறின் அவர்கள் அதனைச் செய்ய மாட்டார்கள்.
- ஒரு தேசம் என்பது அதிலுள்ள குடும்பங்களின் கூட்டுத்தொகையாகும். அவ்வாறே, அதிலுள்ள ஆண்களினதும் பெண்களினதும் கூட்டுத்தொகையாகும்.
- நாம் ஒரு தேசத்தை மாற்றியமைக்க வேண்டுமானால் முதலில் வீடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.
- ஒரு பிள்ளை ஆபத்துக்குள்ளானால் ஒரு குடும்பமே ஆபத்துக்குள்ளாகிறது.
- நீங்கள் இயல்பாகவே புத்திசாலியாய் இருப்பதில்லை. ஆனால், நீங்கள் புத்திசாலியாக மாறலாம்.
- குடும்பத்தை மாற்றியமைக்க வேண்டுமாயின் முதலில் நாம் எம்மை மாற்றியமைக்க வேண்டும்.
- உங்கள் பிள்ளைகள் வளர்ச்சியடையும் போது பெற்றார் என்ற வகையில் உங்கள் கடமைக்கூறு - முகாமையாளர் என்ற நிலையிலிருந்து ஆலோசகர் என்ற நிலைக்கும், நேரடி மேற்பார்வையாளர் என்ற நிலையிலிருந்து அனுபவம் மிக்க அறிவுரையாளர் என்ற நிலைக்கும் உயர வேண்டும்.

> ''நிச்சயமாக! அல்லாஹ் எந்த ஒரு சமுதாயத்துக்குரியதையும் அவர்கள் தங்களுக்குரிய (அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல், அவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் போன்ற நிலைகளான)தை மாற்றிக்கொள்ளாத வரையில் நிச்சயமாக அல்லாஹ்வும் (அவர்களுக்குப் புரிந்த அருளை) மாற்றி விடுவதில்லை; மேலும், அல்லாஹ் ஒரு சமுதாயத்தினருக்குத் தீங்கிழைக்க நாடினால் அவனைத் தடுப்போர் ஒருவருமில்லை.அவர்களுக்கு அவனையன்றி உதவி செய்பவர்களுமில்லை.''
>
> (அல் குர்ஆன் 13:11)

முடிவுரை

முறை சார்ந்த பாடநெறிகள் போதிக்கப்பட்டாலும் படாவிட்டாலும் ஒன்று மட்டும் நிச்சயம்: சிறந்த பிள்ளை வளர்ப்பும் சமூகத்தின் மீதான அதன் தாக்கங்களும் பரவலாக அடையாளங் காணப்பட்டுள்ளன. திருமணம், பெற்றோர் பொறுப்பு, பிள்ளை விருத்தி முதலியன இடம் பெறுவதற்கு முன்பாகவே அவற்றின் யதார்த்த நிலைகளுக்கு முகம் கொடுக்கப் பழகுவது எதிர்காலப் பெற்றோர் எதிர்கொள்ள நேரிடும் தர்மசங்கடமான நிலைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான சிறந்த வழியாகும். பாலியல் கல்விக்கு அப்பாற் சென்று பாலியல் உறவுகளின் விளைவாக உருவாகும் குழந்தைகளை வளர்த்தெடுப்பது பற்றிக் கற்பது தர்க்க ரீதியானதாக இருப்பினும் அது பெற்றாரின் கடமைக் கூறுகளைக் கற்பிப்பதற்கு ஒப்பாகாது. பெற்றார் தமது கடமைக்கூறின் உள்ளார்ந்த ஆற்றலையும் அது தமக்கும் சமூகத்துக்கும் வழங்கக் கூடிய வெற்றியையும் உணர்ந்து கொள்வார்களாயின் அவர்கள் பிள்ளை வளர்ப்பு பற்றிய கலையையும் விஞ்ஞானத்தையும் நன்கு கிரகித்துக்கொள்ள விரும்புவார்கள்; தமது பிள்ளைகளின் நலனுக்காகத் தம்மை

மகிழ்ச்சியோடு அர்ப்பணிப்பதற்கு முன்வருவார்கள். முன்மாதிரியான பிரஜைகளை உருவாக்குவதற்கு அரசாங்கத்திலும் பாடசாலைகளிலும் ஊடகங்களிலும் தங்கியிருப்பதானது ஒரு வகையில் சூதாட்டம் போன்றது; இன்னொரு வகையில் பெற்றாரின் கடமைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலும் சோம்பேறித்தனமாகும். பிள்ளைகளின் நலனுக்காகப் பெற்றோரைத் தவிர வேறு யாரால் முழு மனதோடு முயற்சிக்க முடியும்? வேறெந்த அமைப்பும் அவர்களோடு இதில் போட்டியிட முடியாது.

தொழிற்பாடுகள்.

தொழிற்பாடு 1: நீங்கள் இவை பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக் கிறீர்களா?

பின்வருவன பற்றி உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரை யாடுங்கள்.

உங்கள் உறவினர்களினதும் நண்பர்களினதும் சொந்த அனுபவங்களை மேற்கோள் காட்டுங்கள்.

பின்வருவனவற்றுக்குக் காரணங்கள் யாவை?

ஒருவர் சிறந்த அறிவாளியாக இருக்கலாம். ஆனால், சமூக ரீதியில் தோல்வி காணலாம்.

ஒரு பெற்றார் பாசமும் இரக்கமும் மிகுந்தவராக இருப்பார். ஆனால், குடும்பத்தோடு நேரத்தைச் செலவளிக்க மாட்டார்.

ஒருவர் சமயப் பற்று மிக்கவராக இருப்பார். ஆனால், பகுத்தறிவு இல்லாதவராகக் காணப்படுவார்.

ஒருவர் தன்னம்பிக்கை மிக்கவராக இருப்பார். ஆனால், மற்றவர்களை நம்ப மாட்டார்.

ஒருவர் பெரிய சிந்தனையாளராக இருப்பார். ஆனால், எதிலும் ஒழுங்கைக் கடைப்பிடிக்க மாட்டார்.

ஒருவர் தனக்கெனத் தாராளமாகச் செலவு செய்வார். ஆனால், மற்றவர்கள் விடயத்தில் கஞ்சத்தனமாக இருப்பார்.

ஒருவர் செல்வந்தராக இருப்பார். ஆனால், அவரிடம் உலோபித்தனம் காணப்படும்.

சரியான பிள்ளை வளர்ப்பு மேற்குறித்த குறைபாடுகளைத் திருத்துவதற்கு முக்கிய பங்களிப்புச் செய்ய முடியும்.

தொழிற்பாடு 2: நீங்கள் பிள்ளை வளர்க்கும் பாணி

பிள்ளை வளர்ப்பு தொடர்பான எந்த அணுகுமுறை உங்கள் மனதுக்கு மிகப் பிடித்தமானதாக உள்ளது?

உங்களது பிள்ளை வளர்ப்புப் பாணியிலுள்ள ஒரு குறைபாட்டை இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுங்கள். இதனைப் பற்றி உங்கள் குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.

தொழிற்பாடு 3: பிள்ளைகளின் பொதுவான நடத்தைக் குறைபாடுகளின் பட்டியல்.

எனது பிள்ளை தனித்தன்மையானதா?

தமது பிள்ளைகள் ஒரு விசேஷமான வகையினர் எனச் சில பெற்றோர்கள் கருதுகின்றனர்.

தமது பிள்ளைகள் ஏனையவர்களை விடச் சிறந்தவர்கள் என்றோ மோசமானவர்கள் என்றோ அவர்கள் நினைக்கின்றனர். எனினும், உண்மையில் சம வயதுச் சிறுவர்கள் பெரும்பாலும் ஒரே விதமான நடத்தைப் பாங்குகளையே காட்டுகின்றனர். எனவே, பெற்றோர் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது பயன் தரும். உங்கள் பிள்ளைகளில் காணப்படும் பிரச்சினைக்குரிய நடத்தைகளைப் பட்டியல் படுத்துங்கள். அவை ஒவ்வொன்றையும் எவ்வாறு திருத்தி மேம்படுத்தலாம் எனக் கலந்துரையாடுங்கள். பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக முதலில் எளிதாகத் திருத்தப்படக் கூடிய விடயங்களி லிருந்து தொடங்குங்கள்.

***"எனது பிள்ளையின் குறைபாடுகள் யாவை?"** - பட்டியலொன்று தயாரியுங்கள்.*

சில பிள்ளைகளிடம் காணப்படும் பிரச்சினைக்குரிய நடத்தைகள் சில வருமாறு:

பள்ளிப்பாடங்களில் தவறுதல்.

குறைவாக அல்லது மிகையாக உண்ணல்.

சோம்பல்.

நீங்கள் அனுமதிக்காத முடியலங்காரம்.

திருப்பிப் பதில் கூறல்.

நீங்கள் விரும்பாத நண்பர்களுடன் உறவாடுதல்.

தொழ மறுத்தல்.

வீட்டு வேலைகளில் உதவி செய்ய மறுத்தல்.

நீண்ட நேரம் மௌனமாய் சிணுங்கியிருத்தல்.

அயலவர்களுடனும் மூத்த பெற்றார்களுடனும் முரட்டுத்தனமாய் நடத்தல்.

அதிகளவில் டீ. வீ. பார்த்தல்.

மற்றவர்களை அடித்தல்.

திருப்பி வாதிடுதல்.

திகிலூட்டும் வீடியோக்களைப் பார்த்தல்.

junk உணவுகளைச் சாப்பிடுதல்.

நோன்பு பிடிக்க மறுத்தல்.

தேவையற்ற ஆபத்தான செயல்களைச் செய்தல்.

மூத்தவர்களுக்கு மரியாதையின்மை

இரவில் காலம் தாழ்த்தி வீட்டுக்கு வருதல்.

வீட்டிலிருக்க விரும்பாமை.

வெளியே செல்ல விரும்பாமை.

திருடுதல்.

பொய் கூறுதல்.

புகைத்தல் பழக்கம்.

இசை/ டீ. வீ./ ரேடியோ முதலியவற்றை உரத்த சத்தத்துடன் ஒலிக்கச் செய்தல்.

நீங்கள் அனுமதிக்காத ஆடைகளை அணிதல்.

சூளுரைத்தலும் திட்டுதலும்.

சுத்தமின்மை.

பாத்ரூமில் நீண்ட நேரத்தைக் கழித்தல்.

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பொருட்களைப் போடுதல்.

பெற்றோர்களுக்கு ஒரு குறிப்பு: *இதே பயிற்சியை மறுதலையாக்கி "எமது பெற்றோரின் குறைபாடுகள் யாவை?" என்ற பட்டியலொன்றை உங்கள் பிள்ளைகளைக் கொண்டே தயாரிக்கச் செய்வதற்குரிய சந்தர்ப்பமும் சூழலும் உங்களுக்கு இருக்கிறதா? அவர்களை இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான துணிவும் மதிநுட்பமும் உங்களிடம் இருக்கின்றனவா?*

தொழிற்பாடு 4: இன்றைய பெற்றோர்களும் நேற்றைய பெற்றோர்களும் - ஒப்பீடு

பின்வரும் வினாக்களைக் கவனத்திலெடுத்து அவற்றை உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.

உங்கள் பிள்ளைகளுடன் உங்களது உறவு அதே வயதில் நீங்கள் உங்கள் பெற்றோருடன் கொண்டிருந்த உறவை விட நெருக்கமானதா? (76% ஆன அமெரிக்கப் பெற்றோர் இதற்கு 'ஆம்' எனப் பதிலளித்தனர்.)

நீங்கள் உயர் வகுப்புக்களில் படிக்கும் போது உங்கள் பெற்றோருடன் உரையாடியதை விடக் கூடுதலாக உங்கள் பிள்ளைகளுடன் பேசுகிறீர்களா? (72% ஆன அமெரிக்கப் பெற்றோர் 'ஆம்' எனக் கூறினர்.)

தங்களுக்கிடையிலான உறவாடல்களையும் தொடர்புகளையும் அதிகரிக்கச் செய்வதற்குரிய வழிவகைகள் பற்றிச் சிந்திக்குமாறு குடும்பத்தினர் அனைவருக்கும் கூறுங்கள். பெற்றோரின் பெற்றோர், உறவினர்கள் ஆகியோர் சம்பந்தமான கதைகளை முடிந்தளவு இதற்கு மேற்கோள் காட்டுங்கள். இக்கதைகள் பிள்ளைகளின் குடும்ப அடையாளத்தையும் வம்சாவளியையும் வலியுறுத்த உதவும். கைத்தொழில்மய நாடுகளிலிருந்து வரும் வரலாற்று நூல்களில் காணப்படுகின்ற காலனித்துவக் கண்ணோட்டத்திலிருந்து விலகி தேசிய வரலாற்றைக் கற்பிக்கவும் இது உதவும்.

தொழிற்பாடு 5: பெற்றார் என்ற வகையில் நிச்சயமாக நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

பின்வருபவற்றை உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.

நண்பரொருவர் என்னிடம் இப்படிச் சொன்னார்: ''நான் என்னுடைய பிள்ளைகளுடன் எப்படி நடந்து கொள்கிறேன் என்பது முக்கியமல்ல; நான் ஒரு தனி மனிதன் தானே''

இப்படி ஒவ்வொரு தனி மனிதனும் ''நான் ஒரு தனி மனிதன் தானே'' என நினைத்து மாற்றங்கள் எதனையும் செய்ய முயற்சிக்காது விட்டால் இவ்வுலகில் மாற்றத்தை ஏற்படுத்தப்போவது யார்? இது ஒரு தவறான எண்ணம். இறைவனது தூதர்களும் அவர்களது தோழர்களும் வரலாற்றில் தோன்றிய அறிவிற் சிறந்த ஆண்களும் பெண்களும் தனி மனிதர்களாகவே இருந்தனர் என்பது எமக்குத் தெரியும். அவர்கள் இந்த உலகை மாற்றியமைத்தார்கள். ஸ்டீவ் ஜொப்ஸ், பில்கேட்ஸ் ஆகியோரைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

''உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது யார்?'' என உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். அவர் ஒரு உறவினரா, நண்பரா ஆசிரியரா, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரா அல்லது சமையற்காரரா? உங்கள் கதையைப் பிள்ளைகளிடம் கூறி, அவர்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் யார் என்பது பற்றிக் கலந்துரையாடச் செய்யுங்கள்.

தொழிற்பாடு 6: பிள்ளைகளே, நீங்கள் உங்கள் பெற்றோரிடம் எதிர்பார்ப்பது என்ன?

''கொடுக்கும் மரம்'' என்ற கதையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைச் சற்று விரிவாகப் பிள்ளைகளுக்குச் சுவை படக் கூறுங்கள். அதன் பின்னர் பிள்ளைகள் உங்களிடமிருந்து எதனை, எப்போது, எப்படி எதிர்பார்க்கிறார்கள் எனக் கேளுங்கள். இறுதியில் நீங்கள் உங்கள் பிள்ளைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைக் குறிப்பிடுங்கள்.

கொடுக்கும் மரம் - கதைச் சுருக்கம்.

இக்கதை ஒரு சிறுவனுக்கும் காட்டிலிருந்த ஒரு மரத்துக்கும் இடையில் உருவாகியிருந்த உறவு பற்றியதாகும். அந்த மரம் சிறுவனின் தேவைகளையெல்லாம் தன்னால் இயன்றளவு வழங்கி வந்தது. அவன் இளம் வயதினனாய் இருந்த போது அவனுக்கு ஊஞ்சலாடுவதற்குத் தன் கிளைகளை ஆதாரமாகக் கொடுத்தது. பின்னர் அவன் உட்கார்ந்திருப்பதற்கு நிழலையும் சாப்பிடுவதற்குப் பழங்களையும் வீடு கட்டுவதற்கு இலைகளையும் அம்மரம் வழங்கியது. அவன் பெரியவனாக வளர வளர மரத்திலிருந்து மேலும் மேலும் பெற்றுக்கொண்டானே தவிர எதனையும் திருப்பிக் கொடுக்கவில்லை. சோகமுற்ற அந்த மரமோ, அவனது உறவையும் நெருக்கத்தையும் ஆவலோடு நாடியது. அவன் முழு மனிதனாய் வளர்ந்த பின்னர் அவனுக்கு ஓடமொன்று செய்வதற்காக அம்மரம் தன் உடலையே அர்ப்பணித்தது. வெறும் அடிக்கட்டையாக எஞ்சியிருந்த மரத்தைத் தனியே விட்டு விட்டு அவன் தொலைவில் சென்று விட்டான். வருடங்கள் பல கடந்து செல்ல ஒரு முதியவனாக அவன் மாறிவிட்டான். அவன் உட்கார்வதற்கும் ஓய்வெடுப்பதற்கும் ஓர் அமைதியான இடத்தைத் தேடி அம்மரத்தினிடமே திரும்பி வருகின்றான். மரமோ, அவனது உறவை மீண்டும் பெறுவதற்காகத் தன் அடிக்கட்டையை அவனுக்கு மகிழ்ச்சியோடு வழங்குகிறது.

தொழிற்பாடு 7: சிந்தனைக்கு ஒரு கவிதை

எளிய ஆங்கிலக் கவிதை ஒன்றின் கருத்து தொகுக்கப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளது. உங்கள் குடும்பத்தினரை உங்களோடு உட்காரச் செய்து இதனை வாசியுங்கள். உங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் பரஸ்பரம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்குமாறு கூறுங்கள். நிலைமையை மேம்படுத்துவதற்கான சில உறுதியான ஆலோசனைகளையும் முன்வையுங்கள்.

வீதியில் நடந்து செல்கையில் ஒருவர் மீது மோதிவிட்டேன்;
''தயவாய் என்னை மன்னிப்பீர்'' என்றுடனே கூறிவிட்டேன்.

''என்னையும்தான் மன்னிப்பீர்;
நான் உம்மைக் கவனிக்காது விட்டேனே'' என்றார் அவர்.

அவரும் நானும் பணிவாய் நடந்திட்டோம்;
வந்தனம் கூறியே விடை பெற்றோம்.

ஆனால், வீட்டில் நடப்பதைக் கூற வேண்டுமா இனி?
அன்புக்குரிய எம் செல்வங்களை நாம் நடத்தும் விதமோ தனி.

அந்தி நேரம் சமையல் வேலையில் திளைத்திட்டேன்;
எனக்குப் பின்னால் - என் புதல்வன் நின்றிருந்தான்.

சற்றுத் திரும்பியதுமே அவன் மீது மோதி விட்டேன்;
''அப்பாலே போய்விடு'' என ஆத்திரமாய்க் கத்திவிட்டேன்.
இளமனம் முறிந்தே அவன் போய்விட்டான்.
எத்துணை கொடுமையாய்ப் பேசிவிட்டேன் - உணராமலே

இரவில் உறக்கமின்றிப் படுக்கையில் உருண்ட போது
ஒரு சிறு குரல் என்னை நோக்கி ஒலித்தது.

''அறியாதவர்களோடு எத்துணை பணிவாய் நடக்கின்றாய் - ஆனால்
பாசமிகு உம் குடும்பத்தைத் தான் இப்படித் தூஷிக்கின்றாய்.

நீ போய் சமையலறைத் தரையைப் பார் - அங்கே
கதவடியில் மலர்கள் சில காண்பாய்.

அவை உன் புதல்வன் உனக்காகக் கொண்டு வந்தவை.
மென் சிவப்பு, மஞ்சள், நீலம் என அவனே பறித்தெடுத்தான்.

உன்னில் வியப்பை ஏற்படுத்தவே அவன் அமைதியாய் நின்றான்.
அவனது கண்களில் நிறைந்த கண்ணீரை நீ ஒருபோதும் காணவில்லை''

வெட்கத்தால் கூனிக் குறுகிப் போய்விட்டேன் - இப்போது
நானே கண்ணீர் வடிக்கத் தொடங்கிவிட்டேன்.

அமைதியாய் மகனின் படுக்கையருகே சென்று,
''எழுந்திருடா மகனே, எழுந்திரு'' என்றேன்.

''இம்மலர்கள் நீ எனக்காய்ப் பறித்தவையோ?''
''ஆம், அவற்றை மரத்தடியில் பறித்தேன்'' என்றான் புன்னகையோடு

''அவை உங்களைப்போல் அழகாய் இருந்ததால் பறித்தேன். மேலும்,
அந்த நீலப் பூக்களை விரும்புவீர்கள் என்பதை நன்கறிவேன்''

''மகனே, இன்று நான் செய்ததற்கு வருந்துகிறேன்;
அப்படி நான் கத்தியிருக்கவே கூடாது'' என்றேன்.

''என் அருமைத் தாயே! அதனைப் பெரிதாகக் கொள்ளாதீர்;
நீங்கள் என் அன்புத் தாயல்லவா!'' என்றான் அவன்.

''மகனே, நீயும் என் அன்புச் செல்வம் தான் - அம் மலர்களை
அதிலும் அந்த நீலப் பூக்களை நிச்சயம் விரும்புகிறேன்'' என்றுரைத்தேன்.

அத்தியாயம் 2

குடும்பத்தின் முக்கியத்துவமும் செயற்பாடுகளும்

- அறிமுகம் 32
- பெற்றோராக மாறுதல் 33
  - திருமண உறவின் உறுதித் தன்மையில் பிள்ளைகளின் செல்வாக்கு 34
- ஐக்கிய அமெரிக்காவில் குடும்பத்தின் பருமன் - அன்றும் இன்றும் 39
- தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பம் 39
  - வெற்றிகரமான தனிப் பெற்றாராக இருப்பதற்கு அவசியமான அடிப்படைகள் 42
  - இஸ்மாயீல் (அலை), மூஸா(அலை), ஈஸா(அலை), முஹம்மத் (ஸல்) ஆகிய நபிமார்களில் தனித் தாய்மையின் செல்வாக்கு 44
- ஒரு பெற்றார் மற்றவரைப் பிரதியீடு செய்ய முடியுமா? 45
  - இஸ்லாமும் விவாகரத்தும் - ஒரு குறிப்பு 46
- இஸ்லாத்தில் குடும்பத்தின் முக்கியத்துவம் 49
  - அல்குர்ஆனின் அடிப்படையில் குடும்பக் குறிக்கோள்கள் 52
  - முஸ்லிம் குடும்ப அமைப்பு சீர்குலையக் காரணம் என்ன? 55
  - பிள்ளை விருத்தியும் உறுதியான கல்வி முறையும் 57
  - ஓர் உறுதியான கல்வி முறையின் தேவை பற்றிய ஒரு கண்ணோட்டம் 59
- அமெரிக்காவில் குடும்ப அமைப்பு 62
  - பிள்ளை வளர்ப்பு பற்றி அமெரிக்காவில் பொதுவாகக் காணப்படும் தவறான கருத்துக்கள் 63
  - Sandy Hook ஆரம்பப் பள்ளிப் படுகொலை தரும் பாடங்கள் 67
    - பிள்ளைகளுக்கு விழுமியங்களைக் கற்பித்தல்: பழைமை வாத-தாராண்மை விவாதம் 68
- குடும்பங்கள்: முஸ்லிம் நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் 70
  - முஸ்லிம் பெற்றாரின் பிள்ளை வளர்ப்பில் மேற்கத்திய செல்வாக்கு 73
- சுதந்திரமா உண்மையா? 74
- பிள்ளைகளை எங்கே வளர்ப்பது? : கிழக்குக்கும் மேற்குக்கும் இடையே இடம் மாறுவதால் ஏற்படும் பண்பாட்டு அதிர்ச்சி பற்றிய ஒரு விடய ஆய்வு 78
- மேற்கத்திய சிந்தனையில் காணப்படாத இரு கருத்துப்படிவங்கள் 80
- விசுவாச அடிப்படையிலான விழுமியங்களும் செயற்பாட்டு அடிப்படையிலான விழுமியங்களும் 81
- குடும்பத்தின் விவசாய மாதிரியுரு: பிள்ளைகள் தாவரங்களைப் போன்றவர்கள்; பெற்றார் தோட்டக்காரர்களைப் போன்றவர்கள் 83
- தொழிற்பாடுகள் 8- 15 84

அறிமுகம்

குடும்பம் என்றால் என்ன? அதனால் நிறைவேற்றப்படும் நோக்கங்கள் யாவை? அது எவ்வாறு செயற்படுகிறது? அதன் இலக்குகள் யாவை? அதற்கு வலுவூட்டுவது எது? அதனை நிலை குலைப்பது எது? அதன் வெற்றிக்கு ஒவ்வொரு அங்கத்தவரும் செய்ய வேண்டிய பங்களிப்பு என்ன? அதன் வெற்றியை அளவிடுவது எப்படி? மேற்சொன்ன கேள்விகளுக்கான விடைகள் சிறந்த பிள்ளை வளர்ப்பில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. இந்த அத்தியாயத்தில் இவற்றையும் வேறு விடயங்களையும் ஆராய முயற்சிக்கிறோம். அத்தோடு சமூகத்தில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குரிய குடும்பத்தின் ஆற்றல் பற்றிப் பெற்றார்களும் வாசகர்களும் புரிந்து கொள்ளச் செய்வோம். குடும்பமானது தனது அங்கத்தவர்களை மாத்திரமன்றி முழுச் சமூகத்தையும் மாற்றியமைக்கக்கூடியது. மேலும், முஸ்லிம் நாடுகளிலும் மேற்கத்திய உலகிலும் பிள்ளை வளர்ப்பு எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பது பற்றியும் இங்கு ஆராய்வோம்.

முதலாம் அத்தியாயத்தில் சிறந்த பிள்ளை வளர்ப்பின் முக்கியத்துவம் என்ன? அது எவ்வாறு கற்றுக்கொள்ளப் படுகிறது? நாம் தெரிவு செய்யும் பிள்ளை வளர்ப்புப் பாணி எமது பிள்ளைகளை எப்படியானவர்களாக உருவாகச் செய்கிறது? போன்ற வினாக்களைப் பெற்றோருக்கு நாம் அறிமுகம் செய்தோம். பிரதான கோட்பாடுகளைப் பிரயோகிப்பதால் மாத்திரம் நாம் சிறந்த பெற்றோராகி விட முடியாது. பிள்ளை வளர்ப்புக்கு குடும்பம் பற்றியும் அதன் இடைத்தொடர்புகள் பற்றியும் தெளிவான விளக்கம் தேவைப்படுகிறது. இதுவே இவ்வத்தியாயத்தின் கருப்பொருளாக அமைகிறது. பாசம், பராமரிப்பு, பாதுகாப்பு என்பன பற்றியும் இவ்வத்தியாயம் அடிக்கடி எடுத்துரைக்கும். பாசம் மிகுந்த குடும்பச் சூழல் பிள்ளைகளின் தேவைகளுக்கும் பெற்றாரின் தேவைகளுக்கும் உகந்ததாக விளங்கும். சிறந்த பிள்ளை வளர்ப்பானது பிள்ளைகளைக் குடியுரிமைப் பொறுப்பு மிக்கவர்களாக உருவாக்கும்.

அத்தோடு, தனிப் பெற்றார் குடும்பங்கள், விவாகரத்து, குடும்பத்தின் பருமனில் ஏற்படும் மாற்றங்கள், முஸ்லிம் உலகில் குடும்பங்களின் தற்கால நிலைமைகள் முதலிய விடயங்கள் பற்றியும் நாம் இங்கு தொட்டுச் செல்கிறோம். பல முஸ்லிம் குடும்பங்கள் எதிர்நோக்கும் உறுதிப்பாடின்மை, பிள்ளை வளர்ப்பில் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தாதது போல் தோன்றலாம். எனினும், இயங்கு தன்மையும் உறுதிப்பாடும் மிக்க சமூகங்களை உருவாக்குவதற்கு உறுதி வாய்ந்த குடும்பங்கள் மிக அவசியம். ஆரோக்கியமான குடும்பங்கள் இன்றி முன்னேற்றகரமான சமூகங்கள் பிழைத்திருக்க முடியாது. தனது வீழ்ச்சி நிலையிலிருந்து மீட்சி பெற வேண்டியுள்ள முஸ்லிம் உலகைப் பொறுத்த மட்டில் இது மறுக்க முடியாத உண்மையாகும். ஒருவருக்கொருவர் உறவினராக உள்ள ஆட்களைக் கொண்ட ஒரு குழுவே குடும்பம் எனச் சிலர் வரையறை செய்கின்றனர். சிலர் அதனை ஒரு சமூக அலகு என்றும் இன்னும் சிலர் அதனை ஒரே வீட்டில் ஒன்றாக வசிக்கின்ற பெற்றாரையும் பிள்ளைகளையும் கொண்ட குழு என்றும் வரையறுக்கின்றனர். குடும்பம் பற்றிய பலவிதமான கண்ணோட்டங்கள் இருந்த போதிலும் பாரம்பரியமான குடும்பம் பற்றிய வரைவிலக்கணங்கள் எப்போதும் திருமணத்துடனும் குழந்தைகளுடனும் நெருங்கிய தொடர்புடை யனவாக இருக்கின்றன. அத்தோடு திருமணத்தினூடாகத்தான் ஒரு குடும்பம் உருவாகிறது. ஏனெனில், திருமணம் என்பது வெறுமனே இருவர் ஒன்றிணைவதல்ல. மாறாக, அது விரிந்த இரண்டு குடும்பங்களின் கூட்டாகும். நவீன காலக் குடும்பம் (குறிப்பாக மேற்குலகில்) கடந்த காலத்தில் பாரிய மாற்றத்துக்குள்ளாகியிருக்கிறது. அது விரிந்த கட்டமைப்பிலிருந்து கருக் கட்டமைப்புக்கு மாறியுள்ளது. அத்தோடு குடும்பத்தின் பருமனும் மாற்றம் பெற்றுள்ளது (தற்போது குறைந்த எண்ணிக்கையில் பிள்ளைகளைப் பெறுகின்றனர்).

எவ்வாறாயினும், ஒரு குடும்பம் அதன் பகுதிகளின் கூட்டுத்தொகையை விடக் கூடுதலான ஒன்றாக அமைய வேண்டும். பரந்த கலாசாரத்தின் ஒரு கூறாகக் குடும்பம் இருக்கிறது. அத்தோடு அதுவே ஒரு முழுக் கலாசாரமாக வும் இருக்கிறது. குடும்பத்தினுள் நாம் ஆற்றும் கடமைக் கூறுகளின் மகத்துவம் பற்றி நாம் அறிந்திருப்பது அவசி யம். குடும்பம் என்பது ஒரு சிறிய வழிபாட்டுத் தலமாகவும் சிறிய அரசாங்கமாகவும் சிறு பள்ளிக்கூட மாகவும் விளங்குகிறது.



பெற்றோராக மாறுதல்

குடும்பம் என்னும் போது பொதுவாகப் பெற்றோரையும் பிள்ளைகளையும் பற்றியே சிந்திக்கிறோம். முதற் குழந்தை பிறந்ததும் நாமிருவர் என்ற நிலையிலிருந்து நாம் மூவர் என்ற நிலைமைக்குப் பெற்றோர் மாறுகின்றனர். பிள்ளைகளின் வருகையோடு பெற்றோர் தம் வாழ்வில் புதியதோர் கட்டத்தை அடைகின்றனர். பிள்ளைகள் காரணமாக வாழ்க் கையில் சிரமங்கள், இழுபறி நிலைகள், களிப்பு, மகிழ்ச்சி என்பவற்றுக்கு முகங்கொடுக்க நேரிடும். இவ்வாறு தம் வாழ்க்கைப் பாணியில் ஏற்படும் மாற்றம் காரணமாகப் பெற்றார் தொடர்ந்து இசைவாக்கமடைய வேண்டிய நிலைமை உருவாகும். முஸ்லிம் குடும்ப மொன்றில் குழந்தையொன்று பிறந்து விட்டால் அதனை வரவேற்பதற்காக சம்பிரதாய பூர்வமான சடங்குகள் சில இடம்பெறுகின்றன.

- குழந்தை பிறந்ததும் அதன் காதுகளில் தொழுகைக்கான அழைப்பை *(அதான்)* கூறுங்கள். அலீ (றழி) அவர்களின் புதல்வர் அல் ஹஸனை அவரது தாயார் பெற் றெடுத்த போது நபி (ஸல்) அவர்கள் குழந்தையின் ஒரு காதில் அதான் கூறுவதைத் தான் கண்டதாக அபூ ராபியை ஆதாரம் காட்டி அல்- ஹகீம் அறிவிக்கின்றார். குழந்தை பிறந்ததும் அதன் வலது காதில் அதானையும் இடது காதில் இகாமா வையும் கூற வேண்டும். இது, இறைவனின் ஏகத்துவத்தைப் பிரகடனப் படுத்தி நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதினை உறுதிப்படுத்துவதோடு எதிர்காலத்தில் இக்குழந்தைக்காகப் பிரார்த்தனைகள் செய்யுமாறு விசுவாசிகளுக்கு நினைவூட் டவும் செய்கின்றது.

- குழந்தை பிறந்ததும் தாமதமின்றி அதற்குப் பெயரிடுங்கள். குழந்தைக்கு நல்ல அர்த்தமுள்ள பெயரொன்றைச் சூட்டுவது மிக முக்கியமானது. (ஏனெனில், இதன் மூலம் பிள்ளை அடைவதற்கு ஏற்ற நல்ல முன்மாதிரியொன்று வழங்கப்படுகிறது). அப்பெயர் அறபு மொழியில் இருக்க வேண்டுமென்றோ, வரலாற்று ரீதியான பெயராக இருக்க வேண்டுமென்றோ அவசியமில்லை. பிள்ளை முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய ஒருவரின் பெயரை எந்த மொழியிலும் சரி சூட்டலாம். ஆனால் பெயர் நல்ல கருத்துள்ளதாக அமைய வேண்டும். அத்தோடு பிள்ளை வாழும் பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் எல்லா மொழிகளிலும் உச்சரிப்புப் பிழை இன்றி எழுதக்கூடியதாகவும் இருப்பது சிறந்தது.

- குழந்தைக்கான அகீகாவை ஏற்பாடு செய்யுங்கள். புதிதாகப் பிறந்த குழந்தைக்குரிய அர்ப்பணிப்பாக அறுக்கப்படும் மிருகத்தையே அறபியில் 'அகீகா' என்கிறார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது பேரப் பிள்ளைகளான அல்- ஹஸன், அல்- ஹுஸைன் ஆகியோருக்காக ஒரு செம்மறி ஆட்டை அறுத்தார்கள். இது குழந்தை பிறந்து ஏழாவது நாளில் அல்லது அதற்குப் பிறகு இடம்பெற வேண்டும். அறுக்கப்பட்ட

மிருகத்தின் இறைச்சியைச் சமைத்து மக்களுக்கு விருந்தளிக்க முடியும். அந்த இறைச்சி குடும்பத்தினருக்கும், செல்வந்தர்-வறியவர் என்ற வேறுபாடின்றி சமுதாய மக்களுக்கும் உணவாகப் பயன்பட வேண்டும். அறுக்கப்படும் மிருகம் குறைபாடு களின்றி ஆரோக்கியமானதாகவும் முழுமையானதாகவும் இருப்பது அவசியம். மிருகத்தை அறுத்த பின்னர் பின்வருமாறு பிரார்த்தனை செய்ய வேண்டும்: அல்லாஹ்வின் திருப்பெயரால், இது உனக்காகவேயாகும். உன்னிடமிருந்தே யாகும். எல்லாம் வல்ல இறைவனே, இது குழந்தை (பெயர்) இன் அகீகாவாகும்.

- நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியதாக அஹ்மதும் அல்-திர்மிதீயும் அறிவித் துள்ளனர்: ஒவ்வொரு குழந்தையும் அதன் அகீகா மூலம் அடைமானம் வைக்கப் படுகிறது. இந்த அகீகா குழந்தை பிறந்து ஏழு நாட்களுக்குப் பின்பு அறுக்கப்பட வேண்டும். அத்தோடு குழந்தையின் தலைமுடி மழிக்கப்பட்டு குழந்தைக்குப் பெயரும் சூட்டப்பட வேண்டும். இவை சிபாரிசு செய்யப்பட்டனவேயன்றி கட்டாயமாக்கப்படவில்லை. மேலும், குழந்தையின் மழிக்கப்பட்ட முடியின் நிறைக்குச் சமனான வெள்ளியை ஏழைகளுக்கு தானம் செய்யுமாறு நபி (ஸல்) அவர்கள் பாத்திமா (ரழி)அவர்களுக்குக் கூறினார்கள்.

திருமண உறவின் உறுதித்தன்மையில் பிள்ளைகளின் செல்வாக்கு

குழந்தைகளின் வருகையோடு குடும்பம் நெருக்கடி நிலைக்கு உள்ளாகிறது. பெற்றோ ராக மாறுவது பெரிய பாக்கியமொன்றாக இருப்பினும் பொதுவாக எதிர்பார்க்கப்படுவது போல அது பரவசமூட்டுவதாக எப்போதும் அமைவதில்லை. பெற்றாராக மாறியதும் தம் வாழ்க்கை முன்பிருந்த நிலைமைக்குத் திரும்பப் போவதில்லை என்பதைக் கணவனும் மனைவியும் உணர்ந்துகொள்ள வேண்டும். அத்தோடு தாம் எதிர்கொள்ளப்போகும் சவால்களுக்கு அவர்கள் தம்மைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும். பெற்றார் குழந்தையின் நலனுக்காகத் தமது நலன்கள் சிலவற்றை அர்ப்பணிப்பது அவசியம். தாயாகவோ தந்தையாகவோ இருப்பதற்குரிய அவர்களுடைய தகுதி எப்போதும் பரீட்சிக்கப்படும். தாய்மாரைப் பொறுத்தமட்டில் இது இலகுவானதாக இருக்காது. பிள்ளையின் தேவையைக் கவனிப்பதற்கு எந்நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டியதால் அவர்கள் பெரிதும் களைப்படைவர். வீட்டுக்குத் திரும்பி வரும் தந்தைமாருக்கு ஓர் உற்சாகமான மனைவியையோ மகிழ்ச்சியான குழந்தையையோ குப்பைகளற்ற வீட்டையோ கண்டு கொள்ள முடியாமற்போகும். தமது மனைவியர் மிகை உழைப்பின் காரணமாக மகிழ்ச்சியிழந்து தம்மை முன்போல் கவனிக்கக்கூடிய நிலையில் இல்லாதிருப்பதைத் தந்தையர் பலர் காண்பார்கள்.

தாய்மார்களே, நீங்கள் ஒரே நேரத்தில் எல்லாமாக இருக்க முடியாது. செய்வதற்கு வேலை இல்லாத தாய் என்று எவருமேயில்லை.

ஒரே நேரத்தில் பரிபூரண மனைவியாகவும் தாயாகவும் வீட்டைக் கவனிப்பவராகவும் முழுநேரத் தொழில் புரிபவராகவும் நீங்கள் இருக்க முடியாது. வித்தியாச மான நேரங்களில் நீங்கள் வித்தியாசமானவற்றைச் செய்யலாம். பிள்ளைகள் உங்கள் வாழ்க்கையைக் கணிச மான அளவு மாற்றி விடுவார்கள். எனவே, அம்மாற்றங் களை ஏற்றுக்கொள்ளுங்கள்; குடும்பப் பிரியர்களாக இருங்கள்; நெகிழ்ந்து கொடுங்கள்.

தாய்மைப் பொறுப்பு உள, உடல், மனவெழுச்சிரீதியாக கடுங்களைப்பை ஏற்படுத்துகிறது. குறைந்தளவு நித்திரையும் தொடர்ச்சியான குழந்தைப் பராமரிப்பும் எவ்வளவு வலிமையான ஓர் உறவிலும் சிக்கல்களை ஏற்படுத்தத்தான் செய்யும். இதனால் இறுதியில் திருமண உறவே பாதிப்படைகிறது.

பிள்ளையைப் பராமரிக்கும் அதே வேளையில் வீட்டு மற்றும் தொழில் பொறுப்புக்களை நிறைவேற்றப் போராட வேண்டியிருப்பதனால் தம்பதிகள் பாரிய நிதிப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க நேரிடும். இதுவும் திருமண வாழ்க்கையில் பாதகமான விளைவை ஏற்படுத்தலாம். குறிப்பாக முழுநேரத் தொழில்களைச் செய்யும் தம்பதியினரின் வாழ்க்கை நெருக்கடி நிலைக்கு உள்ளாகும். பிள்ளை பராமரிக்கும் முகவர்களிடம் தம் பிள்ளையை ஒப்படைக்க விரும்பாத பெற்றோர்கள், ஒருவர் எபோதும் வீட்டில் இருக்கக் கூடிய வகையில் தமது வேலை நேரத்தை மாற்றியமைத்துக் கொள்வர். பிள்ளையைப் பொறுத்த மட்டில் இது பயனுள்ளதாக இருப்பினும் கணவனையும் மனைவியையும் பொறுத்த வரையில் இது உகந்ததாக அமைவதில்லை. இவ்வாறான நிலைமைகளில் அவர்களுக்கிடையிலான உறவு விரைவில் சீர்குலையலாம். வீட்டைச் சுத்திகரிப்பது, உணவுண்ட பாத்திரங்களைக் கழுவுவது போன்ற வேலைகளை யார், எப்போது செய்வது என்பது போன்ற அற்பப் பிணக்குகளும் மோசமான போராட்டங்களும் பெற்றோரிடையே ஏற்படலாம். தாம் பிள்ளைகளுடன் கழிக்கும் நேரம் போதாது என்ற குற்ற உணர்வு கொண்ட சில பெற்றார் பிள்ளையின் நன்மைக்காகத் தம் வாழ்க்கைத் துணை வரோடு கழிக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்கின்றனர். இன்னும் சிலரோ பிள்ளைகளோடு நேரத்தைக் கழிப்பதற்குப் பகரமாக அவர்களுக்கு அன்பளிப்புக்களையும் பணத்தையும் கண்ட கண்ட உணவுப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்து அவர்களைக் கெடுக்கின்றனர். இதனால் அப்பெற்றோர் மேன்மேலும் நிதி மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர்.

இப்படியான அழுத்த நிலைமைகள் திருமண உறவை நெருக்கடி நிலைக்கு உள்ளாக்குகின்றன. தம்பதியர் ஒன்றாகக் கழிக்கக் கிடைக்கும் சொற்ப நேரத்திலும் பரஸ்பரம் நெருக்கமாக உரையாடிக் கொள்வதற்குப் பதிலாக ஆளுக்கு ஆள் குறை கூறுவதிலும் புகார் செய்வதிலும் காலத்தைக் கழிப்பார்களாயின் நிலைமை இன்னும் மோசமாகும். பெற்றாரின் திருமண உறவில் ஏற்படும் மோதல்கள் பிள்ளைகள் மீது பாதகமான விளைவை ஏற்படுத்தும். பெற்றாரிடையே தொடர்பாடல் குறைவடையும் போது தப்பபிப்பிராயங்களுக்கும் தீர்வற்ற மோதல்களுக்கும் வழியேற்படுகிறது.

பிள்ளைகளை, உருவில் சிறிய- வளர்ந்தவர்களாகக் கருதுவதோ அவர்கள் எப்போதும் வளர்ந்தவர்களைப் போல் நடந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதோ கூடாது. பிள்ளைகளை எரிச்சலூட்டுபவர்களாக நினைப்பதும் தவறு. ஏனெனில், ஒரு விடயத்தில் விடாப்பிடியாக இருப்பதும் தொடர்ந்து கேள்விகள் கேட்பதும் அவர்களது இயல்பாகும். அவர்களுடைய உடல், மனவெழுச்சி, விருத்தி சார்ந்த தேவைகள் நிறைவு செய்யப்படுவது அவசியம்.

பெற்றார் தம் பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றுவதற்கு உதவும் சில ஆலோசனைகளைக் கீழே தந்துள்ளோம். கணவன், மனைவி என்ற நிலையிலிருந்து தாய், தந்தை என்ற நிலைக்கு மாறும் செயன்முறை சிக்கலற்றதாக அமைய இது உதவும் என எதிர் பார்க்கிறோம்.

> குடும்பங்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொண்டால் சமூகம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்.
>
> கன்பூஷியஸ்

1.) தினந்தோறும் அல்லது வாரந்தோறும் நீங்கள் சோடியாகத் தனியே நேரத்தைக் கழிப்பதற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சி நிரலொன்றை ஒழுங்கு படுத்திக் கொள்ளுங்கள். நடக்கச் செல்லுதல், உடற் பயிற்சிகளில் ஈடுபடல், ஒன்றாக உணவருந்த வெளியே செல்லுதல் போன்றவை இதிலடங்கலாம். பகல் வேளையில் போனில் உரையாடுதல், காலையில் சில நிமிடங்கள் முந்தி விழித்தெழுந்து பரஸ்பரம் ஒருவர் மற்றவர் விடயத்தில் கவனஞ் செலுத்துதல் முதலியனவும் உதவியாக அமையலாம். பிள்ளை பராமரிக்கும் பொறுப்பை நம்பிக்கையான இன்னொருவருடன் பகிர்ந்து கொள்வதும் நல்ல நடைமுறையாகும்.

2.) உங்கள் எதிர்பார்ப்புக்களை வாழ்க்கைத் துணைவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பெற்றார் என்ற வகையில் நீங்கள் ஏற்றுள்ள கடமைக் கூறு காரணமாக உங்கள் மனதில் தோன்றும் ஏக்கங்கள், கவலைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். பெற்றோராக இருப்பதனால் உங்கள் ஆரோக்கியம், உங்கள் உறவுகள், உங்கள் தொழில்கள் முதலியன எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்பது பற்றிப் பேசுங்கள்.

3.) உணவு வேளைகளில் ஒன்றாகச் சாப்பிடுதல், ஒன்றாக இறை வணக்கத்தில் ஈடுபடல், பாலின்பத்தை நுகர்தல், உடற்பயிற்சி செய்தல் முதலியவற்றில் நேரத்தைச் செலவு செய்யுங்கள். பிள்ளையின் தேவைகள் உங்கள் முழு நேரத்தையும் கவர்ந்து கொள்வதனால் உங்களிடையே தொடர்பாடலுக்கு நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். அழுக்கு ஆடைகளும் கழுவப்படாத உணவுப் பாத்திரங்களும் உங்களுக்காகக் கொஞ்சம் காத்திருக்கட்டுமே!

4.) உங்கள் கருத்து முரண்பாடுகளை வெளிப்படுத்துங்கள். மோதல் ஏற்படும் என அச்சப்படாதீர்கள். உங்களிடையே சண்டை ஏற்பட்டால் உங்கள் உறவில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்றே பொருள். எனவே, இருவருமாகச் சேர்ந்து உளவியல் ஆலோசனை பெறுங்கள்.

5.) கணவன்/ மனைவி நிலையிலிருந்து பெற்றாராக மாறுவதில் அனுபவம் பெற்ற, நம்பிக்கையான நண்பர் ஒருவருடன் அல்லது சக பணியாளர் ஒருவருடன் மனந்திறந்து பேசுங்கள். நாம் தனித்துப் போயிருக்கிறோம் என்ற உணர்வை நீக்க இது உதவும். நீங்கள் உங்கள் சம பாலுக்குரிய நபர் ஒருவருடனேயே உரையாட வேண்டும். உங்களது துணைவர்/ துணைவியின் அந்தரங்கமான விடயங்கள் எதனையும் வெளிப்படுத்தாதீர்கள்.

பிள்ளை வளர்ப்பானது தாய்க்கும் தந்தைக்கும் இடையிலான பிரிக்க முடியாத கூட்டுப் பங்காண்மையிலேயே தங்கியிருக்கின்றது. இங்கு தாயும் தந்தையும் வித்தியாசமான பங்களிப்புக்களைச் செய்கின்ற போதிலும் அவர்கள் ஒருவரது குறையை மற்றவர் நிரப்பு பவராக இருப்பது அவசியம். தமது பிள்ளையுடன் விளையாடும் போது பெற்றார் வித்தியாசமான தேவைகளையே ஈடு செய்கின்றனர். பிள்ளையை அரவணைப்பதும் அதன்

மார்பில் முகம் வைத்துக் கொஞ்சுவதும் அதன் மீது அன்பையும் பாசத்தையும் பொழிவதும் தாய் செய்யும் செயல்களாகும். தந்தையோ பிள்ளையைத் தன் மார்புக்கு நேராக உயர்த்திப் பிடிப்பார். அதனை மேலே தூக்கிப் போட்டுப் பொத்திப் பிடிப்பார் (இரண்டு வயது கடந்த பின்னரே இவ்வாறு செய்யலாம்); பிள்ளையைத் தன் முதுகில் ஏற்றிச் சவாரி கொண்டுசெல்வார்; அதனோடு போலி மல்யுத்தம் புரிவார். இவ்வகையான செயற்பாடுகள் பிள்ளைக்குச் சுய நம்பிக்கையைப் பயிற்றுவிப்பதோடு கடினத்தன்மை, ஆக்கிரமிப்பு இயல்பு, ஆபத்தை எதிர்கொள்ளத் துணிதல் போன்ற இயல்புகளையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஏற்படுத்த உதவும். பிள்ளையின் ஆளுமையை விருத்தி செய்ய வேண்டுமாயின் இரு பெற்றாரும் தம் கடமைக்கூறுகளைச் சரிவர நிறைவேற்றுவது அவசியம். தந்தை என்ற வகையில் நீங்கள் உங்கள் மனைவியுடன் இணைந்தே பிள்ளை வளர்ப்பைச் செய்வீர்கள். பாதுகாப்பளிப்பவர் என்ற வகையில் உங்கள் கடமை பிரதியீடு செய்யப்பட முடியாதது. எப்போது பெற்றோராக இருக்க வேண்டும், எப்போது நண்பர் போல் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து வைத்திருப்பது அவசியம். அதாவது, எந்த வேளையில் முன்சென்று பாதுகாப்பு வழங்க வேண்டும், எந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளை 'தானே ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளட்டும்' என விட்டுவிட வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

பெற்றாரின் மண வாழ்க்கை பற்றிய உணர்வுகளைப் பிள்ளைகள் எந்த வகையில் பாதித்த போதிலும், பெற்றார் தம் திருமண உறவில் கூடுதலான ஈடுபாடு கொள்வதற்கும் பிள்ளைகள் காரணமாக அமைகின்றனர். பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது ஒரு தம்பதியின் திருமண உறவு கூடுதலாக உறுதிப்பாடு அடைகிறது என்பதை உரு 2.1 எடுத்துக்காட்டுகிறது. தங்கி வாழும் வயதுடைய பிள்ளைகளைக் கொண்ட பெற்றார்கள் தம் பிள்ளைகளுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரமொன்றைத் தொடர்ந்து வழங்கும் நோக்கில் தமது திருமண உறவு முறிந்து விடாமல் பேணிக் கொள்கின்றனர். வயதில் குறைந்த பிள்ளைகளைக் கொண்ட பெற்றார் - குறிப்பாகத் தாய்மார்கள் - தாம் மகிழ்ச்சியாக இல்லாத போதிலும், தமது திருமணத்தைப் பேணிக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு அதிகம் ஆளாகின்றனர். பிள்ளைகள் பெற்றாரின் மகிழ்ச்சியைக் கூட்டவோ குலைக்கவோ கூடும். எனினும், அவர்கள் நிச்சயமாக மண வாழ்க்கையின் உறுதிப்பாட்டை அதிகரிக்கச் செய்கின்றனர். மண முறிவைத் தவிர்ப்பதற்கான நிர்ப்பந்தம் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம்.

திருமண உறவின் உறுதி நிலையில் பிள்ளைகளின் தாக்கம்

உரு 2.1 (Knox and Schacht, 1997)



தம்பதியர் விவாகரத்துப் பெறும் வீதம்-பிள்ளைகளின் தொகைப்படி

ஐக்கிய அமெரிக்காவில் பெற்றார் அல்லாதாரை விடப் பெற்றோராக இருப்பவர்கள் கூடுதலான மகிழ்ச்சியுடன் காணப்படுவதாக Arthur Brooks என்பவர் Gross National Happiness என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார். பிள்ளைகள் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தை வழங்குவதே இதற்குரிய ஒரு காரணமாகும். சமயப் பற்றுள்ளவர்களில் (ஒவ்வொரு வாரமும் தவறாது ஆலயத்துக்குச் செல்பவர்களில்) திருமணம் செய்தவர்கள்- பிரம்மச்சாரிகளை விடச் சந்தோஷமாக இருக்கின்றனர். இதற்கு அவர்கள் கூடிய செல்வ முடையவர்களாக இருப்பது காரணமல்ல; மாறாக, அவர்களுடைய வாழ்க்கை, செழிப்பும் வளமும் மிக்கதாக இருப்பதே காரணமாகும். (Brooks- 2008)



யார் எதனைச் செய்ய வேண்டும்:

பெற்றோர்: மகிழ்ச்சிகரமான இல்லத்தை உருவாக்க வேண்டும்.

பிள்ளைகள்: உங்கள் பெற்றாரிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

பெற்றாரின் பெற்றார்: பரம்பரைகளை இணைத்து குடும்பத்தை ஒன்றுபடுத்துங்கள்.

நண்பர்கள்: பெற்றோருக்கு உதவுங்கள்.

ஆசிரியர்கள்: பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டுங்கள்.

சீர்திருத்தவாதிகள்: சிறந்த பிள்ளை வளர்ப்பினை நடைமுறைப்படுத்துவது எப்படி என்பதைப் பெற்றோருக்குக் காண்பியுங்கள்.

பிள்ளைகளுடன் வாழும் காலகட்டம் கடந்து சென்று விடக்கூடியது.

ஆகவே, நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது. நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது ! (அல் குர்ஆன்94: 5-6)

நித்திரையின்றி அவதியுறும் இரவுகளுக்கு முடிவே இல்லையா எனச் சிறு குழந்தைகளின் பெற்றோர் சில வேளைகளில் நினைப்பதுண்டு. எனினும், அவர்களை அறியாமலேயே அவர்களது குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகிப் பிரிந்து சென்று விடுவார்கள். திருமண உறவினைப் போலன்றி பெற்றார்- பிள்ளை உறவு எப்போதும் பிரிவை நோக்கியே செல்கின்றது. பிள்ளைகள் பிறக்க முன்னர் எப்படிக் கணவனும் மனை வியும் தனித்திருந்தார்களோ, அதே போன்று தம் பிள்ளைகள் பிரிந்து சென்ற பின்னரும் அவர்கள் தனித்து விடுவார்கள். பெற்றோராய் இருக்கும் நிலை மண வாழ்க்கையிலும் முழு வாழ்விலும் ஒரு முக்கியமான கட்டம் மாத்திரமே. பெற்றாரைப் பொறுத்த மட்டில் பிள்ளைகளுடன் அவர்கள் கழிக்கும் காலம் அவர் களுடைய ஆயுளில் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதியாகவும் மண வாழ்க்கையில் பாதிக்கு மேலாகவும் இருக்கும். எனினும், ஒருவர் பெற்றாராகி விட்டால் அவர் தொடர்ந்தும் பெற்றாராகவே இருப்பார். பிள்ளைகள் மணமுடித்து வீட்டை விட்டு வெளியேறிய பின்பும் இவ்வுறவு முடிவின்றி நீடிக்கும். அதே போல் பிள்ளைகள் அருகிலிருந்தாலும் ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தாலும் இவ்வுறவு தொடர வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவில் குடும்பத்தின் பருமன்- அன்றும் இன்றும்

சுருங்கி வரும் குடும்பப் பருமன் குடும்பத்தினுள் காணப்படும் உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. உடன் பிறந்தோரின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் போது பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து கூடுதலான கவனத்தைப் பெறுவர். இதனால் குடும்பப் பிணைப்புக்கள் வலிமையும் இறுக்கமும் அடையும். எனினும், தமது இளைய சகோதர சகோதரிகளைப் பராமரித்துக் கவனிப்பதன் மூலம் கிடைக்கும் திறன்களைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளத் தவறிவிடுவார்கள்.

1946 முதல் 1964 வரையிலான காலப்பகுதியில் அமெரிக்காவில் கூடுதலாகக் குழந்தைகள் (77 மில்லியன்) பிறந்தன. அந்தப் பரம்பரையினர் வளர்ந்து பெற்றோர்களான பின்னர் தமக்கிடையே 80 மில்லியன் குழந்தைகளை மாத்திரமே பெற்று வளர்த்தனர். அவர்களுடைய வருமானம், கல்வி என்பன உயர்வாக இருந்த போதிலும் குடும்பத்தின் பருமன் சிறியதாகவே இருந்தது. கருத்தடைச் சாதனங்களும் கருச்சிதைப்பு வசதிகளும் எளிதாகக் கிடைப்பதனால் குறைந்த அளவில் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வது இலகு வாகியிருக்கிறது. முந்திய காலத்துப் பெற்றோர்கள் குழந்தை பெறுவதை இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பதற்கு ஒப்பாக நினைத்தனர். முதலில் சில சரியாக அமையாவிடினும், இன்னும் தயாரிக்கலாமே! இப்போது பல குடும்பங்களில் ஓரிரண்டு பிள்ளைகளே இருக்கின்றனர். எனவே, அவர்கள் மீது கூடுதலான கவனம் செலுத்துவதற்கு முடியு மாகின்றது. தம்பதியினர் இரட்டைத் தொழில் புரிதல், குடும்பங்கள் இடம்பெயரும் வீதத்தில் அதிகரிப்பு, பெற்றாருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் இடையில் நீண்ட தூரம் காணப்படுதல் என்பனவும் குடும்பப் பருமன் சிறிதாவதற்குக் காரணமாக அமைகின்றன.

1960இல் 77% அமெரிக்கப் பெண்கள் 30 வயதாகும் போது வீட்டை விட்டு வெளி யேறி, மணமுடித்து பிள்ளைகளையும் பெற்றிருந்தனர். ஆனால், 2000இல் இது 46% ஆகக் குறைந்து விட்டது. 2000ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் விவாகம் செய்யும் சராசரி வயது ஆண்களில் 27 ஆகவும் பெண்களில் 25 ஆகவும் இருந்தது. எனினும், 1950 இல் இவை முறையே 22 ஆகவும் 20 ஆகவும் இருந்தன.

தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பம்

ஐக்கிய அமெரிக்காவில் நான்கு பிள்ளைகளில் ஒன்று (12 மில்லியன் பிள்ளைகள்) தனிப் பெற்றாருடன் வாழ்கின்றனர். அமெரிக்கப் பெற்றார்களில் 2 மில்லியன் தனித் தாய்மாரும் 1 மில்லியன் தனித் தந்தையரும் உள்ளனர். தனித் தந்தையரின் எண்ணிக்கை 10 வருடங்களில் இரு மடங்காகியிருக்கிறது. தனிப்பெற்றார் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கு இரு பிரதான காரணங்கள் உண்டு; 1. விவாகரத்து, 2. திருமணத்திற்குப் புறம்பாகப் பிறக்கும் குழந்தைகள்.

திருமணம் செய்யாமலே கூடி வாழும் சில சோடிகள், திருமணத்திலும் அதன் காரணமாக ஏற்படும் பொறுப்புக்களிலும் விருப்பமற்றவர்களாக இருக்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் சுமார் 3 மில்லியன் பிள்ளைகள் விவாகம் செய்யாத பெற்றோர்களுடன் வாழுகின்றனர். இது சிறுவர் சனத்தொகையில் சுமார் 4% ஆகும். இவர்களுள் 1.8 மில்லியன் பிள்ளைகள் தாயுடனும் அவளது ஆண் துணையுடனும் வசிக்கின்றனர். அதே வேளை, 1.1 மில்லியன் பிள்ளைகள் தம் தந்தையுடனும் அவரது பெண் பங்காளியுடனும் வசிக்கின்றனர்.

விவாகமின்றிக் கூடி வாழ்வோர் நிலை: 2000 ஆவது ஆண்டில் சனத்தொகைக் கணிப்பீட்டின் படி 4.9 மில்லியன் வீடுகளில் பிரதான குடியிருப்பாளர்கள் திருமணமாகாத எதிர் பால் பங்காளியைக் கொண்டிருந்தனர். 1990 இல் இத்தொகை 3 மில்லியனாகவே இருந்தது.

2000 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் இருந்த 105.5 மில்லியன் வீடுகளில்:

- விவாகம் செய்த சோடிகள் **54.5** மில்லியனும்
- விவாகம் செய்யாது எதிர் பால் துணையோடு வாழும் சோடிகள் **4.9** மில்லியனும்
- விவாகம் செய்யாது சமபால் துணையுடன் வாழும் சோடிகள் **0.6** மில்லியனும் காணப் பட்டன.

குற்றமில்லா விவாகரத்து (No- fault divorce)

ஐக்கிய அமெரிக்காவில் No- fault divorce என்ற ஒரு வகை விவாகரத்து உண்டு. இதில் தமது திருமணப் பிணைப்பை முறித்துக்கொள்ள இருவரும் இணங்குவதோடு அதற்கான காரணம் எதனையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தேவையில்லை. இவ்வகையான விவாகரத்து ஒழிக்கப்பட வேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். இவ்வகை விவாகரத்துக்கு வழிவகுக்கும் முதலாவது சட்டமூலம் 1969இல் கலிபோர்னியாவில் அப்போதைய கவர்னர் ரொனால்ட் ரீகன் அவர்களால் கைச்சாத்திடப்பட்டது. விவாகரத்துப் பெற்றவரான ரீகன், அதிகரித்து வரும் விவாகரத்து வீதம் காரணமாக இதனைச் செய்தார். அதற்கு முன்னர் விவாகரத்துப் பெற வேண்டுமாயின் அதனைக் கோருவோர் தமக்குத் தவறிழைக்கப்பட்டதை நிரூபித்துக் காட்ட வேண்டியிருந்தது. விவாகரத்துக்கான பொதுக் காரணங்களாக திருமணத்திற்குப் புறம்பான பால் உறவு, துன்புறுத்துல், கைவிட்டுச் செல்லல் முதலியன முன்வைக்கப்பட்டன. எனவே, எப்படியாவது பிரிந்து விட வேண்டுமெனத் துடித்த தம்பதியர் நீதிமன்றத்தில் பொய்யுரைத்தனர் அல்லது ஒருவர் மற்றவர் மீது உளவு பார்ப்பதற்காக தனியார் உளவு நிறுவனங்களை நாடினர். விவாகரத்துப் பெற விரும்பிய தம்பதியினருக்கிடையே மனக் கசப்புக்களையும் குழறுபடிகளையும் குறைப்பதற்காகவே இச் சட்டமூலம் கொண்டுவரப் பட்டது. விவாக விலக்குப் பெறுவதற்கு விரும்பினால் அதனை நட்புறவோடு செய்வதற்கு இது வழிவகுத்தது. ஒருவரது கோரிக்கையை மற்றவர் மறுத்துரைத்தாலும் குற்றச்சாட்டுக்கள் எதனையும் சுமத்தாமலேயே விவாகரத்துப் பெறும் உரிமை இதன் மூலம் வழங்கப்பட்டது. கலிபோர்னியா மாநிலத்தை அடுத்து நிவ்யோர்க் மாநிலம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாநிலங்களும் இவ்வகை விவாகரத்துக்கு அனுமதி வழங்கின. இச்சட்டம் அமுல் படுத்தப்பட்டு மூன்று வருடங்களுக்குள் விவாகரத்துக்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்தது. (Leland - 1996)

தனிப் பெற்றாராக இருப்பவர் உண்மையும் விசுவாசமும் மிக்க ஆலோசகர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பாரிய ஆறுதலையும் அனுகூலத்தையும் இழந்து விடுகின்றார். அடுத்த பெற்றாரே அந்த ஆலோசகர்.

ஒரு பிள்ளை திருமணத்துக்குப் புறம்பாகப் பிறந்து விட்டாலும் அதனுடைய பெற்றார் எவரதும் பொறுப்புக் குறைந்து விடுவதில்லை. தனிப் பெற்றாராக இருந்து பிள்ளை வளர்ப் பதற்கு அதிக தாங்குதிறனும் சுய நம்பிக்கையும் உறுதியான மனப்பாங்குகளும் தேவைப் படுகின்றன. தொழில்சார் கடமைகளுக்கும் வீட்டுப் பொறுப்புக்களுக்கும் மத்தியில் வாழ்க் கையைச் சமாளித்துச் செல்வது இலகுவான காரியமல்ல. தனிப் பெற்றாராய் இருப்பது மானசீகமாகவும் மனவெழுச்சிரீதியிலும் சிரமமானதாகவும் களைப்பூட்டுவதாகவும் இருக்கிறது. தனிப்பெற்றாராக இருப்பவர்கள், தாயும் தந்தையும் கூட்டாக இருக்கும் நிலையை விடக் கூடுதலான பொறுப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். தாய், தந்தை ஆகிய இருவரது கடமைக் கூறுகளையும் அவர்கள் நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. தனிப்பெற்றார் நிதி சார்ந்த எல்லாத் தீர்மானங்களையும் தனியாக மேற்கொள்வதோடு வீட்டு விதிகளை அமுல் படுத்தல், பிள்ளைகளின் மோதல்களையும் தவறான நடத்தை களையும் கையாளுதல் போன்றவற்றையும் தனித்தே செய்ய வேண்டி இருக்கிறது. இவற்றை எப்படியோ சாதித்துக்கொண்டாலும், அவர்கள் தனிமையின் வேதனைகளையும் சமாளித் துக்கொள்ள வேண்டியுள்ளது. இரு பெற்றாரைக் கொண்ட குடும்பங்களில் நிலைமை எப்போதும் சுமுகமாகவே இருக்கும் என்பது இதன் கருத்தல்ல. தனிப் பெற்றாரின் பணி கஷ்டமானது என்பதையும் அவர்களுடைய மனவெழுச்சிக்குரிய தேவைகள் இலகுவில் நிறைவேற்றப்பட முடியாதவை என்பதையுமே இது குறிக்கின்றது. எல்லாப் பெற்றார் களிடமும் - குறிப்பாகத் தனிப் பெற்றாரிடம் - சாதகமான மனப்பாங்குகள் இருப்பது அவசியம்.

தனிப் பெற்றாரிடம் வளரும் பிள்ளைகளுக்கு, அடுத்த பெற்றாரின் பராமரிப்பும் பாதுகாப்பும் கிடைப்பதில்லை. விவாக விலக்குப் பெற்ற பெற்றோர்களைப் பொறுத்த மட்டில், பிள்ளைகள் விடயத்தில் அவர்கள் இருவருமே உயிர்ப்பாகப் பங்கேற்கலாம். தனிப் பெற்றார், தம் பிள்ளைகளுக்கு அன்பையும் பராமரிப்பையும்வழங்குவதோடு கல்வியிலும் திறன்களிலும் விழிப்புணர்விலும் அவர்களை மேம்படச் செய்து அவர்கள் அனுபவிக்கும் மன வேதனையை ஓரளவுக்கேனும் குறைக்க முடியும்.

- தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களில் பிள்ளைகள் மீது ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களால் பெண் பிள்ளைகளினதும் குமரப்பருவத்தினரதும் நலன்களைக் குறைந்த அளவே பாதுகாக்க முடியும்.
- இரு உயிரியற் பெற்றார்களும் இல்லாத நிலையில் வளரும் பெண் பிள்ளைகள் தம் பதின்ம வயதில் பாலியல் தொழிற்பாடு கூடியவர்களாக இருப்பர்.
- தமது உயிரியல் ரீதியான தந்தை இல்லாது வளரும் பிள்ளைகளும் பதின்ம வயதினரும் உடல் ரீதியாக, மனவெழுச்சி ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் ஆபத்து கூடுதலாக இருக்கும்.
- பிளவுற்ற குடும்பங்களிலிருந்து வருகின்ற மாணவர்களே உயர் பள்ளிக் கூடங்களில் கூடுதலான பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர்.
- சில சமூகங்களில் தனிப் பெற்றாரின் பிள்ளைகள் அதிக குற்றச்செயல்களைப் புரிகின்றனர்.

தனிப் பெற்றாரின் பிள்ளைகள் துஷ்பிரயோகத்திற்கு அல்லது புறக்கணிப்புக்கு உள்ளாவதற் கான வாய்ப்புக் கூடுதலாகக் காணப்படுவதோடு சிறைக்குச் செல்லும் சாத்தியமும் கூடுதலாக இருக்கிறது.

இந்நூலில் தரப்பட்டுள்ள பிள்ளை வளர்ப்பு பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் சாதாரண பெற்றார்களைப் போன்றே தனிப் பெற்றாருக்கும் பொருந்தும். எல்லாப் பெற்றோரும் ஒரே விதமான பிரச்சினைகளுக்கே முகம் கொடுக்கின்றனர். எனினும், தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்கள் பின்வரும் விடயங்கள் குறித்து மேலதிக கவனம் செலுத்துவது அவசியம்:

1. சுய வலிமையை வெளிக்காட்டுதல். பெற்றோர் தளர்ந்துவிட்டால் பிள்ளையின் உலகம் உறுதி குலைந்துவிடும். ஏனெனில், பிள்ளை அடைக்கலம் பெற அடுத்த பெற்றார் இருக்க மாட்டார். எனவே, தனிப்பெற்றார் எப்போதும் நிலைமையைச் சரியாக மதிப்பீடு செய்து பதற்றமின்றி நம்பிக்கையோடு செயற்பட வேண்டும். அவர்களுடைய உள நிலையும் மனவெழுச்சி நிலையும் வலிமையாக இருப்பது அவசியம்.

2. இரு கடமைக் கூறுகளை நிறைவேற்றல். வீட்டில் இல்லாத பெற்றாரின் கடமைக்கூறு நிறைவேற்றப்பட வேண்டியது அவசியம். உதாரணமாக, தனித் தந்தையர்கள் தம் பிள்ளைகளோடு மனவெழுச்சி ரீதியாகவும் ஆத்மீக ரீதியாகவும் நெருங்கியிருக்க வேண்டும். இந்த விடயத்தில் பெற்றாருக்கு உதவக்கூடிய நூல்கள் பல இருக்கின்றன.

3. சுய மதிப்பை உயர்த்துதல். தமக்கு ஒரு பெற்றார் மாத்திரமே இருக்கிறார் எனப் பிள்ளைகள் வெட்கப்படக் கூடாது. இரு பெற்றாரையும் கொண்ட குடும்பத்துப் பிள்ளைகளைப் போன்றே தாமும் இருப்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். தனிப் பெற்றார் தமது பிள்ளைகளுக்குச் சிறந்ததொரு இல்லத்தையும் சந்தோஷமான குடும்ப வாழ்வையும் வழங்குவது அவசியம். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது இளவயதிலேயே பெற்றார் இருவரையும் இழந்து விட்டார்கள் என்பதைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். அடுத்த பெற்றார் இல்லாத குறையை ஈடு செய்வதற்காகப் பிள்ளைக்கு அளவுக்கு மீறிய செல்லம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அத்தோடு உங்கள் மனதில் குற்ற உணர்வுக்கு இடமளிப்பதன் மூலம் அவர்கள் உங்களை ஆட்டி வைப்பதற்கு இடம் கொடுக்காதீர்கள்.

4. சிறந்த தொடர்பாடல். பெற்றாருக்கும் பிள்ளைக்கும் இடையில் தொடர்ச்சியான தொடர்பாடல் அவசியம். தம்மிடையே அன்பும் பாசமும் மிக்க உறவொன்றையும் ஒத்தாசை தருகின்ற வீட்டுச் சூழலையும் உருவாக்கு வதன் மூலம் பெற்றார், பிள்ளை ஆகிய இருவரது வாழ்க்கையும் இலகுவாக்கப்படுகிறது.

தனிப் பெற்றோராகி விட்டோம் என்பதற்காக நாம் யாருடைய துணையுமின்றிப் பிள்ளை வளர்க்க வேண்டி ஏற்படும் என நினைக்கத் தேவையில்லை. இரு பெற்றாரும் இருக்கின்ற குடும்பங்களில் போன்றே அது களிப்பூட்டக்கூடிய, வெற்றிகரமான ஓர் அனுபவமாக அமையலாம். (சில வேளை இரு பெற்றாரும் உள்ள குடும்பத்தை விட நன்றாகவும் அமையலாம். ஏனெனில், இரு பெற்றாரும் உள்ள குடும்பங்களில் விவாக உறவில் மோதல்களும் நெருக்கடிகளும் பெருமளவில் காணப்படுகின்றன.)

வெற்றிகரமான தனிப் பெற்றாராக இருப்பதற்கு அவசியமான அடிப்படைகள்

பிள்ளைகளை வெற்றிகரமாக வளர்ப்பதற்கும் பெற்றார்- பிள்ளை மோதல்களைக் குறைப்பதற்கும் தனிப்பெற்றார் செய்ய வேண்டிய செயல் தொடரொன்று கீழே தரப்பட்டுள்ளது.

- நண்பர்களுடனும் உறவினர்களுடனும் சிறந்த நட்புறவை வளர்த்துக் கொள்ளுங்கள். நல்ல நண்பர்களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் சமூக ஒன்றுகூடல் கள், விருந்துகள் முதலியவற்றுக்கு அழைத்து உங்கள் பிள்ளைகளுடன் உறவாடச் செய்யுங்கள். மற்ற தனிப் பெற்றார் குடும்பங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். (நீங்கள் தனிப் பெற்றாராக இருப்பினும் தனித்துவிட வில்லை என்பதை மறக்காதீர்கள்) நெருங்கிய நண்பர்கள் உங்களுக்குத் துணை யாகவும் மனவெழுச்சிரீதியான ஆதரவாகவும் அமைவதோடு அவசர நிலைமைகளிலும் பிள்ளைப் பராமரிப்பிலும் உதவி செய்பவர்களாக அமையலாம். அத்தோடு உங்கள் மனக்குறைகளுக்கு அனுதாபத்தோடு அவர்கள் செவிமடுப்பார்கள். இவ்வாறான நண்பர்களைத் தெரிவு செய்வதில் கவனமாக இருங்கள். உங்கள் தேவையின் போது உதவக்கூடிய, கரிசனையும் நம்பத்தகவும் மிக்க ஆட்களையே இதற்காக நாடுங்கள். நெருங்கிய உறவினர்கள் இருப்பின் அவர்களை அடிக்கடி சந்திக்கச் சென்று நல்லுறவைப் பேணுங்கள். குடும்ப அங்கத்தவர்களோடு உங்கள் பெற்றார் பொறுப்பின் சுமை களைப் பகிர்ந்து கொள்வதற்கும், தேவை ஏற்படும் போது அவர்களது உதவியை நாடுவதற்கும் நீங்கள் தயங்க வேண்டியதில்லை.
- உங்கள் பிள்ளைகளுடன் சிறுஉலாக்கள் செல்வதற்கும் சந்தோஷமாக நாட்களைக் கழிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யுங்கள். அவ்வாறு மகிழ்ச்சியாகக் கழித்த நாட்களையும் நிகழ்வுகளையும் நீங்களும் பிள்ளைகளும் நினைவுகூர உதவும் வகையில் நினைவுச் சின்னங்களை வைத்திருங்கள்.
- தீர்மானமெடுத்தல், பிரச்சினை தீர்த்தல் முதலியவற்றில் உங்கள் பிள்ளைகளைப் பங்கெடுக்கச் செய்யுங்கள். இது அவர்களது சுய மதிப்பை அதிகரிக்கச் செய்வதோடு தாமும் குடும்பத்தில் பெறுமதி மிக்க உறுப்பினர்களே என்று உணர வழி வகுக்கும். தனிப் பெற்றார் குடும்பங்களில் ஒவ்வொரு பிள்ளையின் உதவியும் ஒத்துழைப்பும் தினந்தோறும் தேவைப்படும். குழுவாக வேலை செய்து வேலைப்பளுவைப் பகிர்ந்து கொள்வது உங்கள் மீதுள்ள அழுத்தத்தைத் தணிக்கும்.
- உங்கள் கோபமோ தனிப்பட்ட கவலைகளோ உங்கள் பிள்ளைகளைப் பாதிக்க இடமளிக் காதீர்கள். அவர்களது கண்ணோட்டத்தில் உலகை நோக்க உங்களால் முடியுமானால், பிள்ளைகள் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதை உணர்ந்து கொள்வீர்கள். தம் பெற்றாருக்கு ஏதும் நடந்து விட்டால் தாம் உலகில் தனித்து விடுவோம் எனப் பிள்ளைகள் அஞ்சுகின்றனர். உங்கள் தேவைகள் அனைத்துக்கும் இறைவனை நாட மறக்காதீர்கள். உங்களால் முடிந்ததைச் செய்து முடித்த பின்னர் உங்கள் பிரச்சினைகளையும் பீதிகளையும் அவனது கவனிப்புக்கு விட்டு விடுங்கள்.
- நீங்கள் விவாகரத்துப் பெற்றால் பக்கச் சார்பாக நடக்குமாறு பிள்ளைகளை வற்புறுத் தாதீர்கள். 'நல்ல பெற்றாருக்கும் கெட்ட பெற்றாருக்கும்' இடையில் ஒருவரைத் தெரிவு செய்யுமாறு பிள்ளைகளைக் கேட்காதீர்கள். பிள்ளைகள் இரு பெற்றார் மீதும் மிகுந்த பற்று வைத்திருப்பர். எனவே, ஒருவருக்கு எதிராக இன்னொருவரைத் தெரிவு செய்யும்போது அவர்களில் குற்ற உணர்வு ஏற்படும்.
- எல்லாவற்றுக்கும் மேலாக, சாதக மனப்பான்மையும் பூரண இறை நம்பிக்கையும் உடையவராக இருங்கள். தனிப் பெற்றார்கூட நல்ல பிள்ளை வளர்ப்பு முறைகளினூடாகப் பிள்ளைகளை வெற்றிகரமாக வளர்த்தெடுக்கலாம் என்பதை மறந்து விடாதீர்கள். இதனைச் சாதிப்பதற்கு ஆதார அமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள். நல்ல பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றாரின் எண்ணிக்கை முக்கியமல்ல. மாறாக, பிள்ளை வளர்ப்பின் தரமும் பெற்றாரது உலகக் கண்ணோட்டத்தின் தரமுமே முக்கியமாக அமைகிறது.

இஸ்மாயீல் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மத் (ஸல்) ஆகிய நபிமார்களில் தனித் தாய்மையின் செல்வாக்கு

மனித சமுதாயத்துக்கு அனுப்பப்பட்ட மகத்துவமிக்க நபிமார்களில் சிலர் தனிப் பெற்றாரினாலேயே வளர்க்கப்பட்டனர். இந்நான்கு நபிமார்களதும் வரலாறுகளைச் சுருக்கமாகக் கீழே தந்திருக்கிறோம். அந்த மகத்தான பெண்மணிகளின் வலிமையும் விவேகமும் எல்லாப் பெற்றோர்களுக்கும் புத்துணர்வளிக்கக் கூடியவை.

நபி இஸ்மாயீல் (அலை)

இஸ்மாயீல் (அலை) அவர்களின் வரலாற்றை அல் குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

எனவே, (இஸ்மாயீல்) அவருடன் சேர்ந்து உழைக்கக்கூடிய பருவத்தை அவர் அடைந்த பொழுது அவர் (தன் மகனிடம்) "என் அருமை மகனே! நிச்சயமாக நான் உன்னை அறு(த்து)ப் ப(லியிடுவ)தாக நிச்சயமாக நான் கனவில் கண்டேன்; (இதைப் பற்றி) நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய்?" என்று கேட்டார். அ(தற்க)வர், "என் தந்தையே நீங்கள் ஏவப்பட்டபடியே செய்யுங்கள்; அல்லாஹ் நாடினால் என்னை நீங்கள் பொறுமையாளர்களில் உள்ளவனாகக் காண்பீர்கள்" என்று கூறினார். (அல் குர்ஆன் 37: 102)

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தம் மூத்த மகன் இஸ்மாயீலுடன் நீண்ட காலம் தங்கியிருக்கவில்லை என்பது எமக்குத் தெரியும். ஏனெனில், அவர் ஈராக், பலஸ்தீன், எகிப்து ஆகிய பிரதேச மக்களுக்கு இறைத்தூதை எத்திவைத்துக் கொண்டிருந்தார்கள். இஸ்மாயீல் (அலை) அவர்களின் தாயாரான ஹாஜரா அம்மையார் தான் அவரை மக்கா வின் வறண்ட பள்ளத்தாக்குகளில் வளர்த்தார்கள். ஹாஜரா, தன் மகன் விவேகியாகவும் நம்பத்தகுந்தவராகவும் தன்னம்பிக்கை உடையவராகவும் வருவதற்குரிய பயிற்சியை வழங்கினார்.

நபி மூஸா (அலை)

மேலும், மூஸாவின் தாய்க்கு நாம் வஹி (மூலம்) அறிவித்தோம்: அவருக்குப் பாலூட்டுவாயாக! பின்னர், (உன்னிடம் இருப்பதில்) அவரைப் பற்றி நீ பயந்தால், அவரை(ப் பேழையில் வைத்து) ஆற்றில் போட்டு விடுவாயாக; நீ அவரைப் பற்றிப் பயப்படவும் வேண்டாம்; கவலைப்படவும் வேண்டாம்; நிச்சயமாக நாம் அவரை உன்னிடமே திருப்பிக் கொண்டு வந்து சேர்ப்போராகவும் அவரை (நம்) தூதர்களில் (ஒருவராக) ஆக்குவோராகவும் உள்ளோம்! (அல் குர்ஆன் 28: 7)

மூஸா (அலை) அவர்களின் தாயார்தான் தமது குழந்தையின் பாதுகாப்பை இறை வனிடம் பொறுப்புச் சாட்டிவிட்டு, மூஸாவை ஆற்றில் மிதக்க விட்டார். பிர்அவ்னின் மாளிகையில் செவிலித் தாய்களிடம் பால் குடிக்க மூஸா மறுத்ததனால் தாயாரே அவருக் குப் பாலூட்டி வளர்க்க நேர்ந்தது. அந்தத் தாய் செய்த தியாகம் மகத்தானது. அவர் தனது பிள்ளையின் உயிரை இறைவனிடம் ஒப்படைத்ததோடு அந்த மகத்தான இறைத்தூதரிடம் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் உருவாக்கினார்.

நபி ஈஸா (அலை)

இன்னும் மலக்குகள் (மர்யமிடம்,) மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்; உன்னைப் பரிசுத்தமாகவும் ஆக்கியிருக்கிறான். அகிலத்தாரி லுள்ள பெண்களை விட உன்னைத் தேர்ந்தெடுத்தும் இருக்கிறான். (அல் குர்ஆன் 3: 42)

தந்தை இன்றிப் பிறந்த ஈஸா (அலை) அவர்களை அவர்களது தாயார் மர்யம் (அலை) அவர்களே வளர்த்தெடுத்தார்கள். மர்யம் (அலை) அவர்கள் உயர்தரமான அன்பும் தியாக மும் குண ஒருமைப்பாடும் மிக்க தனிப் பெற்றாராக விளங்கினார். அல்லாஹ் அல் குர்ஆனில் ஒரு தனி அத்தியாயத்தில் அவரைப்பற்றி விவரிக்கிறான். அவர் தூய்மையிலும் விசுவாசத்திலும் உச்ச மட்டத்தில் இருந்த ஒரு பெண்மணியாவார்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்

முஹம்மத் (ஸல்) அவர்கள் தந்தையற்ற அநாதையாகவே பிறந்தார்கள். அவர்களது தாயார் ஆமினா பின்த் வஹ்ப் ஒரு தனிப் பெற்றாராக விளங்கினார். நபியவர்களை அவர் ஆறு வருடங்கள் வளர்த்துப் பராமரித்தார். அக்காலத்தில்தான் நபிகளாரின் முன்மாதிரியான நடத்தையும் ஆளுமையும் உருப்பெற்றன. துணிவு, பாசம், நேர்மை, ஆக்கத்திறன், தன்னம்பிக்கை முதலிய இயல்புகளை நபியவர்களுக்கு ஊட்டியவரும் அவரே.

தாய்மையின் தாக்கம் அளவிடற்கரியது!

பிள்ளை வளர்ப்பில் தாய்மாரின் விலை மதிப்பற்ற பங்களிப்புக்கு நாம் எவ்வளவு மதிப்பெண் வழங்கலாம்?

- *பிள்ளை தம் தாய் யாரென அறிந்த வண்ணமே இவ்வுலகுக்கு வருகின்றது; அவர்களது தந்தை யார் என்பதைத் தாயே சொல்லிக் கொடுக்கின்றார்.*
- *இமாம் அஹ்மத் அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்: நபிகளார் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து "நான் ஹிஜ்ரா செல்வதற்காக உங்களிடம் வாக்குறுதியளிக்க வந்துள்ளேன். என்னுடைய பெற்றார் இருவரும் அழுது கொண்டிருக்கும் நிலையில் அவர்களை விட்டு வந்தேன்" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "நீர் அவர்களை அழ வைத்தது போலவே இப்போது வீட்டுக்குத் திரும்பிச் சென்று அவர்களைச் சிரிக்கச் செய்யும்" என்றார்கள்.*
- *ஒரு முஸ்லிம் தனது தாயாரின் நல்லடக்கத்தின்போது "சுவர்க்கம் நுழைவதற்கான வாயிலொன்று மூடிக்கொண்டுவிட்ட நிலையில் நான் ஏன் அழக் கூடாது?" எனக் கூறியவாறே விம்மி அழுதாராம்.*

ஒரு பெற்றார் மற்றவரைப் பிரதியீடு செய்ய முடியுமா?

தாய் ஒருவர் தந்தையை முழுமையாகப் பிரதியீடு செய்ய முடியாது. அதே போன்று தந்தை ஒருவரும் தாயை முழுமையாகப் பிரதியீடு செய்ய முடியாது. இரு பெற்றாரினதும் அரவணைப்பில் வளரும் குழந்தைகள் சிறப்பாக வளர்ச்சியடைகின்றன. எல்லையற்ற அன்பு, பாசம், சகிப்புத்தன்மை, பொறுமை என்பவற்றோடு தாய்ப்பாலையும் தாய்மார் வழங்குகின்றனர். வலிமை, பொறுப்புணர்வு, உரத்த குரல்கள், வித்தியாசமான மணங்கள், சொரசொரப்பான கன்னங்கள் முதலிய பயனுள்ள தூண்டல்கள் தந்தையரிடமிருந்து குழந்தைக்குக் கிடைக்கின்றன. பொதுவாக, பிள்ளைக்குத் தாயின் இழப்பு தந்தையின் இழப்பை விடப் பாரதூரமானதாக இருக்கும். ஒரு தாய் பாதுகாப்பையும் பாசத்தையும் வழங்க முடியும். அவளுடைய எதிர்பார்ப்புக்கள் பிள்ளைகளையே மையமாகக் கொண்டிருக்கின்றன. முழு நேரமும் வீட்டோடு இருக்கும் தாய்மார் பிள்ளைகளைப் பற்றி அதிக கரிசனை காட்டுவதோடு பிள்ளைகளும் பல வழிகளில் அவர்களுடன் பிணைந்திருப்பர். தாயின் நாளாந்த நிகழ்ச்சி நிரலைப் பிள்ளைகளே நிரப்புவர். பிள்ளைகளை வாழ்க்கையில் வெற்றி பெறச் செய்வதற்காகப் பாசத்தையும் நிம்மதியையும் அள்ளி வழங்கக் கூடிய ஆற்றலும் அர்ப்பணிப்பும் தாய்க்கே உண்டு.

ஆண் மக்களுக்குத் தாயை விடத் தந்தையே தேவை என்றும் பெண் மக்களுக்குத் தந்தையை விடத் தாயே தேவை என்றும் தவறான கருத்தொன்று நிலவுகிறது. ஒரு மகனுக்குப் போன்று ஒரு மகளுக்கும்- வித்தியாசமான விதத்தில்- தந்தை முக்கியமான வராகவே இருக்கின்றார்; அதே போன்று ஆண் மக்களை வளர்ப் பதில் தாயின் பங்கும் முக்கியமானதாக இருக்கிறது. தந்தைமார் தம்

பெண் மக்களுக்கு வலிமையையும் ஆதாரத்தையும் பாதுகாப்பையும் அளிக்கின்றனர். ஆண்களைச் சரிவரப் புரிந்து கொள்வதற்குப் பெண்களுக்குத் தந்தையின் சகவாசம் தேவைப்படுகிறது. இல்லாவிடில், ஆண்கள் புரியாப் புதிர்களாகவோ அச்சம் தருபவர் களாகவோ மயக்கும் கவர்ச்சியுள்ளவர்களாகவோ அவர்களுக்குத் தோன்றக்கூடும்.

தந்தையற்ற ஆண் மக்களைப் பொறுத்தமட்டில் தந்தையின் பங்கை ஒரு தாயினால் நிறைவேற்ற முடியுமா? இதற்கான விடை, அவர்களால் முடியாது; அப்படிச் செய்ய வேண்டிய அவசியமுமில்லை என்பதே. ஒரு பிள்ளை தனது தாயையோ தந்தையையோ கண்ட நினைவே இல்லாதிருப்பினும், அதனால் தன் பெற்றோரை மிகத் தெளிவாக மனதில் கற்பனை செய்யவும் விவரிக்கவும் முடியும். இந்த ஆற்றல் அவர்களுடைய ஆளுமையின் ஓர் அம்சமாக இருக்கிறது. அதே போன்று ஏனைய ஆட்களின் ஆளுமை களிலிருந்து சிற்சில அம்சங்களை ஒன்றிணைத்து ஓர் இலட்சியப் பெற்றார் எப்படி இருப்பார் என்பதைப் பிள்ளைகளால் ஊகித்தறியவும் முடியும். எனவே, தந்தையற்ற மகனொருவனைப் பொறுத்தமட்டில் தாய் செய்யக்கூடியது அவனது நெருங்கிய ஆண் உறவினர்களோடு பழகுவதற்கான வாய்ப்புக்களை வழங்கி அவன் தனது தந்தை பற்றிய மானசீக வடிவமொன்றை உருவாக்கிக் கொள்ள உதவ வேண்டும். அத்தோடு அவள் தன் மகனை நட்புறவான நம்பத்தகுந்த ஆண் ஆசிரியர் ஒருவருடன் அல்லது சமயப் போதகர் அல்லது இமாம் ஒருவருடன் பாதுகாப்பான, கண்காணிப்புக்குரிய சூழலில் பழக விட வேண்டும். தாயின் வழிகாட்டலின் கீழ் அவளது மகனுக்கு மேற்சொன்னவர்கள் சிறந்த ஆண் முன்மாதிரிகளாக அமையக்கூடும்.

எது முக்கியம்?

இன்னும் 40 வருடங்களின் பின்னர், உங்கள் வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதோ நீங்கள் எப்படியான வீட்டில் வாழ்கிறீர்கள் என்பதோ எந்த மாதிரியான வாகனத்தில் நீங்கள் போகிறீர்கள் என்பதோ முக்கியமானதாக இருக்காது. பதிலாக, உங்கள் பிள்ளையின் அல்லது பேரப்பிள்ளையின் வாழ்க்கையில் நீங்கள் எவ்வளவு முக்கியத்துவம் உடையவர்களாக இருப்பீர்கள் என்பதே முக்கியமானதாக இருக்கும்.

இஸ்லாமும் விவாகரத்தும் - ஒரு குறிப்பு

தனிப் பெற்றார் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு விவாகரத்து வீதம் அதிகரிப்பது முக்கிய காரணமொன்றாக இருக்கிறது. சில பண்பாடுகளிலும் சமயங்களிலும் விவாகரத்து தடை செய்யப்பட்டுள்ளது. (1977 இல் பிரேஸிலில் விவாகரத்து சட்ட விரோதமானதாக இருந்தது. இந்து சமயச் சட்டங்களும் விவாகரத்தைத் தடை செய்து வந்தன. பிலிப்பைன்ஸில் கத்தோலிக்கர்கள் விவாகரத்துச் செய்வது தடை

செய்யப்பட்டுள்ளது) இஸ்லாம் விவாகரத்துக்கு ஊக்கமளிப்பதில்லை; எனினும், அதனைக் கண்டிப்பான செயன்முறைகளின் அடிப்படையில் அனுமதிக்கிறது. முஸ்லிம் கள் விவாகரத்துப் பெறுவதற்கு முன்னர் தம்பதியர் குடும்ப சமரச முயற்சி களுக்கும் நடுவர் தீர்ப்புகளுக்கும் உட்பட வேண்டும். விவேகமுள்ள/ நம்பத்தகுந்த உறவினர்கள் திருமணம் முறியாமல் காப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென இஸ்லாம் கோருகிறது. அதிலும் குறிப்பாகப் பிள்ளைகள் பாதிக்கப்படுமாயின் இவ்வாறு செய்வது அவசியமாகிறது. 'இறைவனின் பார்வையில் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட, ஆனால் மிக வெறுக்கத்தக்க செயல் விவாகரத்தாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்ன் மாஜாஹ்) திருமணங்கள் தோல்வியுறலாம் என இஸ்லாமும் ஏனைய சமயங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. அது வருந்தத்தக்க ஒரு செயலாக இருப்பினும் நடக்கத்தான் செய்கிறது.

தமது திருமண உறவைப் பேணிக்கொள்வதற்குத் தம்மால் முடிந்த அனைத்தையும் பெற்றோர் செய்தல் வேண்டும். விவாகரத்து இடம்பெற்று பிள்ளைகள் பாதிக்கப் படுவார் களாயின் பெற்றோர் பிள்ளைகளுடன் நேர்மை தவறாது நடந்து கொள்ள வேண்டும்.

- விவாகரத்துப் பெற்று மறுமணம் செய்தால், உண்மையாக என்ன நிகழ்கிறது என்பது பற்றிப் பிள்ளைகளுக்குக் கவனமாக விளக்க வேண்டும். மூடி மறைப்பதோ பொய் களைப் புனைந்து கூறுவதோ கூடாது. தாம் ஏன் பிரிகின்றோம் என்பதை அவர்களுக் குத் தெளிவாகக் கூற வேண்டும். அத்தோடு, அது பிள்ளைகளின் தவறு அல்ல என்பதும் பிள்ளைகளின் மீது தொடர்ந்து அன்பு காட்டப்படும் என்பதும் வலியுறுத் தப்பட வேண்டும். ஒரு பெற்றார் எவ்வித விளக்கமும் கொடுக்காமல் தலைமறை வாகிப் போய்விடக்கூடாது. அது பிள்ளைகளில் கசப்புணர்வை ஏற்படுத்தலாம். தாம் அப்படிச் செல்வதன் மூலம் பிள்ளைகள் வேதனைப் படுவதைத் தவிர்க்க உதவலாம் என அந்தப் பெற்றார் நினைக்கக்கூடும். எனினும், தம்மீது இரக்கமில்லாத காரணத் தினாலேயே நடந்தது பற்றி விளக்கம் தராமல், பிரியாவிடை கூறாமல் அவ்வாறு செல் கிறார்கள் என்றே பிள்ளைகள் கருதுவர்.
- எவரேனும் ஒரு பெற்றாரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றோ பக்கச்சார்பாக நடந்து கொள்ள வேண்டுமென்றோ பிள்ளைகளை ஒருபோதும் வற்புறுத்தக் கூடாது.

மாற்றாந் தாய் அல்லது மாற்றாந் தந்தையும் அவர்களது குடும்பங்களும் சம்பந்தப்படும் போது அவர்களையும் தமது இரத்த உறவினர் போலக் கருதுமாறு பிள்ளைகளை வற்புறுத் துவது அர்த்தமற்ற செயலாகும். இவ்வாறான உறவு முறைகள் விருத்தியாகும் போது உள நெருக்கடியும் போட்டியும் பொறாமையும் அதிகளவில் உருவாக இடமுண்டு. எனவே, மாற்றாந் தந்தையை 'எனது தாயின் புதிய கணவர்' என்றும் மாற்றாந் தாயை 'எனது தந்தையின் புதிய மனைவி' என்றும் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளச் செய்வது அவர்களைப் 'புதிய பெற்றார்' எனக் கருதிப் பாசாங்கு செய்வதை விட மிக மேலானது.

பிள்ளைகள் மீது விவாகரத்தின் தாக்கம்.

விவாகரத்தை அடுத்து, பிள்ளைகளைக் கொண்ட குடும்பமொன்றின் வருமானம் 21% ஆல் வீழ்ச்சியடைகிறது. விவாகரத்துப்பெற்று அல்லது கணவனிடமிருந்து பிரிந்து பிள்ளைகளுடன் வாழும் பெண்களில் 38% வறுமையில் வாழ்கின்றனர். இவ்வாறான ஆண்களில் 17 சதவீதத்தினர் வறுமையில் இருக்கின்றனர். விவாக ரத்துப் பெற்றவர்களின் பிள்ளைகள் கூடுதலாகப் பள்ளிக்கூடங்களிலிருந்து இடையில் விலகுபவர்களாகவும் திருமண உறவின்றிப் பிள்ளைகள் பெறுகின்றவர்களாகவும் உள ஆரோக்கியக் குறைபாடு கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். (Seltzer - 1989)

பெற்றோரும் முன்னைய வாழ்க்கைத் துணைவர்களும் குடும்பத்தின் சகல அங்கத் தினர்களோடும் அன்பாகவும் மரியாதையாகவும் சகிப்புத்தன்மையோடும் நடந்து கொள்ள வேண்டும். விவாகரத்து விடயத்தில் ஒழுங்கு முறையாக நடக்குமாறு அல் குர்ஆன் எமக்கு அறிவுரை வழங்குகிறது:

(மீட்டுக்கொள்ள உரிமை பெற்ற) தலாக் (விவாகரத்து) இரு தடவைகளாகும். பின்னர் முறைப்படி தடுத்து வைத்துக் கொள்ளலாம். அல்லது (மூன்றாவது முறையாக தலாக் கூறி) நன்முறையில் விட்டு விடலாம். இன்னும் நீங்கள் அவர்களுக்குக் கொடுத்த (மஹர், உடை மற்றும் ஏனைய பொருட்கள் முதலிய)வற்றிலிருந்து யாதொன்றையும் எடுத்துக் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல. அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளை நிலை நிறுத்த முடியாதென்று அவர்கள் இருவருமே பயந்தாலே தவிர; ஆகவே, அவர்கள் இருவரும் அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளை நிலைநிறுத்த மாட்டார்கள் என (தீர்ப்பு வழங்குவோராகிய) நீங்கள் பயந்தால் , அவள் எதை (தன்னைத் திருமண பந்தத்திலிருந்து நீக்கிவிடுவதற்கு) ஈடாகக் கொடுக்கின்றாளோ அதில் அவ்விருவர் மீதும் குற்றமில்லை. இவை அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளாகும். ஆதலால் நீங்கள் இவற்றை மீறாதீர்கள். மேலும் எவர் அல்லாஹ்வுடைய வரம்புகளை மீறுகின்றார்களோ அவர்கள்தாம் அநியாயக்காரர்கள்.

(அல் குர்ஆன் 2:229)

விவாகரத்து விடயத்தில் போதியளவு சகிப்புத்தன்மை தேவைப்படுகிறது. சில பிள்ளை கள் தமது மாற்றுப் பெற்றாரை அங்கீகரிக்க மறுத்து விடுவார்கள். இவ்வாறான நிலையில் அன்பாகவும் மென்மையாகவும் நடந்து, காலத்தால் மாற்றம் ஏற்படும் வரை காத்திருக்க வேண்டும். பிற்காலத்தில் பிள்ளைகள் வீட்டிலிருந்து பிரிந்து சென்று தமது சொந்த இல்லங்களை அமைத்துக் கொள்ளப் போகிறார்கள். நீண்டகால சச்சரவுகளின் பின்னர் ஒரு திருமண உறவு முடிவுக்கு வருமாயின் அது பிள்ளைகளுக்கு மன நிம்மதியை அளிக்கும். எனினும் யாருக்கு விசுவாசமாக நடப்பது என்பதில் பிள்ளைகளுக்கு குழப்ப நிலை ஏற்பட லாம். தந்தை விலகிச் சென்றது நல்லதாக இருந்தாலும் அவர் மீதுள்ள பாசம் காரணமாக அதனை ஜீரணித்துக் கொள்ள அவர்களால் முடியாது போகலாம். அவர் தம்மோடு இருந் தால் நல்லதே என அவர்களுக்குத் தோன்றலாம். விடயங்கள் வேறு விதமாக நடந் திருந்தால் நல்லது என அவர்கள் நினைப்பார்கள். கரிசனை கொண்ட மாற்றுப் பெற்றார் ஒருவர், வாழ்நாள் முழுதும் நீடிக்கக்கூடிய அழகான நட்புறவொன் றைப் பிள்ளைகளுடன் கட்டியெழுப்பலாம். 'நான் உங்கள் பெற்றார் அல்ல. நான் உங்கள் தாயாரின் (அல்லது தந்தையின்) கணவன் (அல்லது மனைவி). நான் உங்கள் மீது பரிவு கொண்டுள்ளேன்' என்றுதான் விவேகமுள்ள மாற்றுப் பெற்றார் கூற வேண்டும்.

பதின்மவயதுப் பிள்ளைகளைக் கொண்ட தனிப் பெற்றார் வித்தியாசமான பிரச்சினை களுக்கு முகங்கொடுக்க வேண்டும். பதின்மவயதுப் பிள்ளை பெற்றாரில் மிகையாகத் தங்கியிருக்காமல் தனிப் பெற்றார் கவனித்துக் கொள்ள வேண்டும். அதேவேளை, பிரிந்து

சென்ற வாழ்க்கைத் துணைவரின் அல்லது துணைவியின் நடிபங்கை அப்பிள்ளைக்கு ஒப்படைத்து விடவும் கூடாது. பதின்ம வயது ஆண் பிள்ளைகள் கணவனின் இடத்தைப் பெற முடியாது. அதே போன்று பதின்மவயதுப் பெண் பிள்ளை மனைவியின் இடத்தை நிரப்பவும் முடியாது. பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் துஷ்பிர யோகம் இடம்பெறக்கூடிய பேராபத்தும் இதில் உண்டு. இந்தப் பதின்மவயதுப் பிள்ளை கள் தமது பள்ளிப் படிப்புச் சுமைகளோடு மேலும் பல பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். எனவே, வீட்டுக்கு வெளியே அவர்கள் ஆர்வம் காட்டும் துறைகளில் ஈடுபடுவதற்குத் தனிப் பெற்றார் அனுமதியளிக்க வேண்டும். பெற்றார் எவ்வளவுதான் தனிமையில் வாடினாலும் அவர்கள் சுய நலமிகளாக இருக்கக் கூடாது.

திருமண உறவுக்குப் புறம்பாகப் பிறந்த பிள்ளைகள், வாழ்க்கைத் துணையை இழந்த அல்லது விவாகரத்துப் பெற்ற தனிப் பெற்றாருடன் வாழும் பிள்ளைகளை விட வித்தியாச மானவர்கள். இதிலுள்ள வேறுபாடு தந்தையொருவருக்கு உரிமை கோருவது பற்றிய தாகும். ஒரு தந்தை இறந்து விட்டாலும் அவர் தொடர்ந்தும் தனது பிள்ளைகளுக்கு ஓர் ஆறுதல் உணர்வை வழங்கிக்கொண்டுதான் இருப்பார். அவரோடு தம்மை இனங்காட்ட வும் தொடர்பு படுத்தவும் அவரது பிள்ளைகளால் முடியுமாயிருக்கும். இதன் மூலம் பிள்ளைகளின் உள்ளத்தில் பாதுகாப்பு மற்றும் பாச உணர்வை விருத்தி செய்வதற்குத் தாய்க்கு வாய்ப்புக் கிடைக்கிறது. பிள்ளைகளுக்கு வழிகாட்டி, பிரியமான சூழலொன்றை வழங்குவதன் மூலம் இரு பெற்றாருடனும் சிறப்பாக வாழுகின்ற சமவயதுப் பிள்ளைகளை விடத் தன் பிள்ளைகள் மேலோங்கிச் செல்வதற்கு அவள் வழி வகுக்கலாம். கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு உதவும் வகையில் பிள்ளைகளுக்குச் சவால்களை வழங்குவதுடன் தொடர்ச்சியாகத் தனது ஆதரவையும் கொடுப்பதன் மூலம் சிறந்த சாதனையாளர்களை ஒரு தாய் உருவாக்கலாம். இத்தகைய தாய்மார் தம் பிள்ளைகள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு தமது ஆற்றல்களை நிரூபிப்பதற்கு வாய்ப்புக்களை வழங்குவர்.

விவாகரத்துப் பெற்ற பெற்றோர்களுக்குச் சில ஆலோசனைகள்

- அடுத்த பெற்றாரைப் பற்றிய பிள்ளையின் உள்ளுணர்வுகளை மாசுபடுத்த வேண்டாம்.
- பிள்ளைகளுக்கும் அவர்களது அடுத்த பெற்றார் மற்றும் அவரது உறவினருக்கு மிடையில் ஆரோக்கியமான தொடர்பாடலைப் பேண முயற்சியுங்கள்.
- இரு பெற்றாரும் தம் மீது பாசம் வைத்திருக்கிறார்கள் எனப் பிள்ளைகள் உணரச் செய்யுங்கள்.
- பெற்றார் பிரிந்து செல்வது, அவர்களுடனான பிள்ளைகளின் உறவுக்குத் தீங்கு செய்யாது என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள்.

இஸ்லாத்தில் குடும்பத்தின் முக்கியத்துவம்

குடும்ப அமைப்பைப் பேணுவது தொடர்பாக இஸ்லாம் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் படைப்புக்களுள் மனிதனே உயரிய கண்ணியத்துக்கும் மதிப்புக்கும் உரியவன் என அல் குர்ஆன் பறை சாற்றுகின்றது. பூமியில் இறைவனுடைய நம்பிக்கைப் பொறுப்பாளனாக இறைவனால் அவன் நியமிக்கப் பட்டுள்ளான். எனவேதான் அந்த நம்பிக்கைப் பொறுப்புப் பணிக்காக மனிதனைப் பயிற்று வித்து தயார்படுத்துவது அவசியமாகிறது. ஏனைய விலங்குகளோடு ஒப்பிடும் போது மனிதனின் குழந்தைப் பருவம் நீண்டதாக இருப்பது தற்செயலான ஒன்றல்ல. இந்தக் குடும்பம் சார்ந்த கல்வியூட்டலின் ஆரம்பக் கட்டமாக கணவன்- மனைவிக்கிடையிலான ஆரோக்கியமான உறவு விளங்குகிறது. இந்த உறவானது வியாபார ஒப்பந்தங்களின்

அடிப்படையிலோ அல்லது சட்டரீதியான உரிமைகள், கடமைகள் என்பவற்றின் அடிப் படையிலோ அமையக்கூடாது (குறைந்தபட்சப் பாதுகாப்புக்கு குடும்பச் சட்டங்கள் உதவுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை). கணவன்- மனைவி உறவானது, இரக்கத்தின் மீதும் கருணையின் மீதும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்த அடித்தளம் இல்லா விடின், அல் குர்ஆனின் 25:74ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது போன்று மகிழ்ச்சிகரமான இல்லத்தையும் வெற்றிகரமான, இறைபக்தியுள்ள பிள்ளைகளையும் அடைய வேண்டு மென்ற பெற்றாரின் இருபெரும் ஆசைகளும் நிறைவேறாமற் போகும். தனிப் பெற்றார் குடும்பங்களும் தமது பிள்ளைகளுடன் இரக்கத்தோடும் கருணையோடும் நடந்து கொள்வது அவசியம்.

> மேலும், அவர்கள் எத்தகையோரென்றால், "எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியர் களிடம் இருந்தும் எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியைத் தந்தருள்வாயாக! அன்றியும் பயபக்தி உடையவர்களுக்கு எங்களை (நல்வழியில் நின்று அதன்பால் அழைக்கும்) வழிகாட்டியாகவும் நீ ஆக்கு வாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறுவார்கள். (அல் குர்ஆன் 25:74)

மனிதர்கள் பூரண உளவிருத்தி அடைவதற்குக் குடும்பம் அவசியமாகிறது. எம்மைப் படைத்தவன் உடல் ரீதியிலும் ஏனைய எல்லா வகைகளிலும் எம்மைச் சிறப்பாகப் படைத் துள்ளான். எமது வடிவம், உயரம், நிறம், அசைவுகள், புறத்தோற்றம் மற்றும் எமது ஆத்மீக, மானசீக மற்றும் உளவியல் அம்சங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைப்புள்ள முறையில் படைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, இறைவன் எமக்குக் கோத்திரங்களையும் சமுதாயங்களையும் தேசிய இனங்களையும் அருளியுள்ளான்.

> நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான அமைப்பில் படைத்திருக்கின்றோம்.
> (அல் குர்ஆன் 95: 4)



எமது வாழ்க்கைப் பயணத்தின்போது நாம் மிக மகத்தான முறையில் ஒரு கட்டத்திலிருந்து இன் னொரு கட்டத்துக்கு விருத்தியடைகிறோம். எளிதில் நொறுங்கத்தக்க நலிவான குழந்தைப் பருவத்தில் ஆரம்பித்து, பல கட்டங்களினூடாக வளர்ச்சியை யும் அறிவையும் பெற்று வலிமையின் உச்சக் கட்டத் தை அடைகிறோம். இறுதியில் நலிவுற்று வலிமை, அறிவு, நினைவு முதலியவற்றை இழந்து வயோதி பத்தை அடைகிறோம். இச்செயன்முறையின் போது பெற்றார் தொடர்ந்தும் உளவியல்ரீதியாக விருத்தி யடைந்து தம் பிள்ளைகளுக்கும் பேரப் பிள்ளை களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் நிறையப் பங்களிப்புச் செய்கின்றனர். ஒருவர் திருமணம் முடிக்காதவரையில் ஆரோக்கியமான, நெருங்கிய உறவுக்கான தேவை பூர்த்தியாவதில்லை. திருமணம் என்னும் புனித உறவின் மூலமே ஆண்களும் பெண் களும் ஆகக்கூடிய உளவியல் நெருக்கத்தை அடைய முடிகிறது. அதனைப் பற்றி அல் குர்ஆன் பின்வரு மாறு கூறுகிறது:

> உங்கள் மனைவியர் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள். (அல் குர்ஆன் 2:187)

திருமணத்தைத் தொடர்ந்து, வளர்ச்சிக்குரிய இன்னொரு காரணி செயற்படத் தொடங்குகிறது. குழந்தைகளைப் பெற்றுக் குடும்பமொன்றை உருவாக்க வேண்டுமென்ற அவாவே அது. இக்கட்டத்தில் நான்கு விதமான நிலைமைகள் உருவாக வாய்ப்புண்டு. இந்த ஒவ்வொரு நிலைமைக்குமுரிய உளவியல்ரீதியான விளைவுகளும் இருக்கும். தம்பதியர் குழந்தைப் பாக்கியமே இல்லாதவர்களாக இருக்கலாம்; அல்லது அவர்களுக்குப் பெண் மக்கள் மாத்திரம் பிறக்கலாம்; அல்லது ஆண் மக்கள் மட்டும் பிறக்கலாம்; அல்லது ஆண் மக்களும் பெண் மக்களும் பிறக்கலாம். இந்த ஒவ்வொரு வகையான விளைவும் பெற்றாரிலும் பிள்ளைகளிலும் தாக்கங்கள் ஏற்படச் செய்யும்.

> அவன் நாடியவர்களுக்குப் பெண் மக்களை அன்பளிப்புச் செய்கிறான்; அவன் நாடியவர்களுக்கு ஆண் மக்களை அன்பளிப்புச் செய்கிறான்; அல்லது ஆண் மக்களையும் பெண் மக்களையும் கலந்தே கொடுக்கின்றான்; அன்றியும் அவன் நாடியவர்களை மலடாகவும் ஆக்கி விடுகிறான். நிச்சயமாக அவன் (யாவற்றையும்) நன்கறிந்தவன்; (தான் விரும்பியதைச் செய்ய மிக்க ஆற்றலுடையவன். (அல் குர்ஆன் 42: 49-50)

தங்கள் பிள்ளைகள் திருமணம் செய்வதையும் பின்னர் அவர்கள் தமது குழந்தைகளைப் பெற்றெடுப்பதையும் காணும் போது பெற்றோர்களுக்குக் கிடைக்கும் உளவியல் ரீதியான நன்மைகள் தொடருகின்றன. தம் இருப்பு வருங்காலம் நோக்கி நீடிக்கப் போவதையும் அவர்கள் உணர்வார்கள்.

குடும்பத்தில் ஒரேயொரு பிள்ளை இருக்கும் நிலை எவ்வளவு வித்தியாசமானது என்பதை நாம் உணர்வோம். அப்பிள்ளைக்கு சகோதர சகோதரிகள் இருக்கும் போது ஏற்படும் உணர்வு போன்றதை அது வழங்காது. அதேபோன்று பிள்ளையின் பெற்றோரின் சகோதரர்களும், பெற்றோரின் பெற்றோர்களும் இருக்கும் போதும் நிலைமை மேலும் வித்தியாசமாக இருக்கும். கூட்டுக் குடும்பமாக இருப்பின் பிள்ளைகள் அதிக வளம் பெற வாய்ப்புண்டு. அதிலும், கூட்டுக் குடும்பம் (தாய், தந்தை ஆகிய இரு பக்கத்திலிருந்தும்) மிகப் பெரியதாக இருப்பின் இன்னும் சிறப்பாக இருக்கும். பிள்ளைகள் ஆரோக்கியமான உறவை வளர்த்துக்கொள்ளும் போது அவர்கள் உளவியல்ரீதியாக வளம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. பல்வேறு பாத்திரங்களை ஏற்பதினூடாக இது நிறைவேறுகிறது. உதாரணமாக, ஒரு பெண்ணைப் பொறுத்த மட்டில் மகள், சகோதரி, மனைவி, தாய், மாமி, சிற்றன்னை, பெரியன்னை, பாட்டி ஆகிய பாத்திரங்களையும் ஒரு ஆணைப் பொறுத்த மட்டில் மகன், சகோதரன், தந்தை, கணவன், மாமா, சிறிய தந்தை, பெரிய தந்தை, பாட்டன் ஆகிய பாத்திரங்களையும் வகிப்பதற்கு இது துணைசெய்கிறது.

குடும்பம் நிலையானதே!

நாளை நாம் இறந்து விட்டால் நாம் தொழில் செய்யும் கம்பனி அல்லது நிறுவனம் எமக்குப் பதிலாக இன்னொருவரைச் சில நாட்களுக்குள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும். ஆனால், நாம் விட்டுச்செல்லும் குடும்பத்தினரோ எமது இழப்பை அவர்களுடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதிலும் உணர்ந்து கொண்டே இருப்பார்கள். நாமோ எமது காலத்தில் பெரும் பகுதியை எமது குடும்பத்தாருடன் கழிப்பதற்குப் பதிலாக எமது தொழிலுக்காக முடக்கிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் இது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்!

அல்குர்ஆனின் அடிப்படையில் குடும்பக் குறிக்கோள்கள்

பிள்ளை பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளத் தவறுகின்ற விழுமியங்களை நல்ல குடும்பப் பாரம்பரியங்கள் போற்றி ஊக்குவிக்கின்றன.

குடும்ப வாழ்க்கையானது சரியான குடும்பக் குறிக்கோள்களை அமைத்துக் கொள் வதிலேயே தங்கியுள்ளது. இக்குறிக்கோள்கள் வெறுமனே பிள்ளைகளைப் பெறும் நோக் கத்தை விட உன்னதமானவை. மனித இனம் அழியாமல் பேணுவதற்காக ஒரு குடும்பம் செய்ய வேண்டியது குழந்தைகளைப் பெறுவது மாத்திரமல்ல . வெறுமனே குடும்பத்திற் காகக் குடும்பம் நடாத்துவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. எனவே, குடும்பக் குறிக்கோள் கள் தம் பரம்பரையைப் பேணுபவையாக மாத்திரம் அமையக் கூடாது. அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

> மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் எத்தகையவன் என்றால், உங்கள் (யாவரையும்) ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்; அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான்; இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான். இன்னும் அல்லாஹ்வை- அவனை-க் கொண்டு (தமக்குரிய உரிமைகளை) நீங்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்கிறீர்களே. அத்தகையவனையும், மேலும், இரத்தக்கலப்பு சொந்தங்களைத் துண்டித்து விடுவதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (அல் குர்ஆன் 4: 1)

ஒரு தனி ஆத்மாவில் (நப்ஸ்) இருந்தே மனிதர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். ஆரம்பத் தில் அவ்வாத்மாவிலிருந்து அதற்கொரு வாழ்க்கைத்துணை படைக்கப்பட்டது. அந்த ஆத்மாவிலிருந்தும் அதன் வாழ்க்கைத் துணையிலிருந்தும் எண்ணிலடங்கா ஆண்களும் பெண்களும் உருவாக்கப்பட்டனர். அந்த அல் குர்ஆன் வாக்கியம் ஒருமை வடிவில் காணப் பட்டபோதிலும் அதே செயன்முறை பன்மை வடிவிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

> உங்களிலிருந்தே உங்களுக்காக மனைவியரை அல்லாஹ் ஆக்கியுள்ளான். உங்கள் மனைவியரிலிருந்தே ஆண் மக்களையும் பேரக்குழந்தைகளையும் உங்களுக்கு அவன் ஆக்கியுள்ளான். இன்னும் நல்லவற்றிலிருந்து உங்களுக்கு உணவளித் துள்ளான். அவர்கள் பொய்யானதை விசுவாசித்து அல்லாஹ்வின் அருட்கொடை யையும் நிராகரிக்கின்றனரா?
> (அல் குர்ஆன் 16: 72)

சில கடமைக் கூறுகளை நிறைவேற்றுவதற்காகப் பூமியில் மனிதனை வாழவைப்பது பற்றிப் பின்வரும் வாக்கியம் விளக்குகிறது:

> (நபியே!) இன்னும், உமதிரட்சகன் மலக்குகளிடம் "நான் பூமியில் என்னுடைய பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஆக்கப்போகிறேன்" எனக்கூறிய சமயத்தில் அ(தற்க)வர்கள், "(இரட்சகா!) அதில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக்கூடியவரையா நீ ஆக்கப்போகின்றாய்? நாங்களோ உன்னுடைய புகழைக்கொண்டு உன்னைத் துதிக்கிறோம்; உன்னுடைய பரிசுத்த தன்மையைப் போற்றுகிறோம்" என்று கூறினர். (அதற்கு) "நீங்கள் அறியாதவற்றை நிச்சயம் நான் நன்கறிந்திருக்கிறேன்" என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான் (என்பதை நினைவு கூர்வீராக) (அல் குர்ஆன் 2: 30)

பூமியில் மனிதனின் கடமைக்கூறுகளை இவ்வாக்கியம் வரையறுக்கின்றது. நம்பிக் கைப் பொறுப்பாளனாகவும் இறைவனின் பிரதிநிதியாகவும் இருப்பதே அவையாகும். பிரதிநிதி என்ற வகையில் மனிதனின் கடமைக்கூறு இப்புவியை விருத்தி செய்து அதில் நீதியை நிலை நாட்டுவதாகும். வாழ்க்கை என்பது ஒரு சோதனை என்றும் இறைவனை வழிபடுவதற்கும் அவனுக்குச் சேவகம் புரிவதற்கும் மாத்திரமே நாம் படைக்கப்பட்டுள் ளோம் எனவும் அல் குர்ஆன் கூறுகிறது.

—

மேலும், ஜின்களையும் மனிதர்களையும்- என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை. (அல் குர்ஆன் 51:56)

எனவே, குடும்பத்தின் குறிக்கோள்கள்- இறைவனுக்குச் சேவகம் புரிதல், அவனது பிரதிநிதியாக இருத்தல், அவனது போஷிப்பையும் அருட்கொடைகளையும் மதித்தல், உறவினர்களுடன் உறவுகளைப் பேணுதல், ஒருவர் மற்றவருடைய உரிமைகளைப் பேணுதல் என்பவற்றை உள்ளடக்க வேண்டும்.

பின்வரும் வாக்கியத்தில் தம்பதியரிடையே உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதை இறைவன் குறிப்பிடுகிறான். இங்கு அவன், குடும்பத்தினரிடையே மனநிம்மதி, அன்பு, கருணை என்பவற்றின் அவசியம் பற்றிக் கூறுகிறான்.

(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் கிருபையையும் அவன் ஆக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் இருப்பதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்தார்க்கு இதில் நிச்சயமாக(ப் பல) அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல் குர்ஆன் 30:21)

குடும்பத்தினரிடையே அன்பு காட்டுவதற்கு மிக உயரிய இடம் வழங்கப்பட்டுள்ள போதிலும் வாழ்க்கையில் மிக உன்னதமான அன்பு அதுவல்ல. அல்லாஹ்வின் பண்பு களுள் இரக்கம், நீதி, சாந்தி என்பன முக்கியமானவை. அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் அன்பு செலுத்துவதே அதி உன்னதமானதாகக் கருதப்படுகிறது.

(நபியே! விசுவாசிகளிடம்) நீர் கூறுவீராக: "உங்களுடைய தந்தைகளும் உங்களுடைய ஆண் மக்களும் உங்களுடைய சகோதரரும் உங்களுடைய மனைவியரும் உங்களுடைய குடும்பத்தினரும் நீங்கள் எதனைச் சம்பாதித்து வைத்திருக்கிறீர்களோ அந்தச் செல்வங்களும் நீங்கள் எதனுடைய நஷ்டத்தைப் பயப்படுகிறீர்களோ அத்தகைய வியாபாரமும் நீங்கள் எதனைத் திருப்திப்படுகிறீர்களோ அத்தகைய (உங்கள்) குடியிருப்பிடங்களும் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவனுடைய பாதையில் போர் செய்வதையும் விட உங்களுக்கு மிக்க விருப்பமானவைகளாக இருந்தால், அப்போது நீங்கள் (தண்டனையைப் பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் எதிர்பார்த்திருங்கள்; மேலும், பாவிகளான கூட்டத்தினரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தவும் மாட்டான்."

(அல் குர்ஆன் 9:24)

எம்மைப் படைத்தவன் மீது நாம் செலுத்தும் அன்பே அன்புக்கெல்லாம் அடிப்படையாகும். எம்மைப் படைத்தவனை நேசிப்பது உயர்மட்ட அன்பாக விளங்குகிறது. உங்கள் பெற்றோர்கள், பிள்ளைகள், உறவினர்கள் முதலியோர் உங்களுக்குத் தவறிழைத்த போதிலும் நீங்கள் அவர்கள் மீது அன்பு செலுத்துகிறீர்கள். ஏனெனில், அவர்கள் மீதான உங்கள் அன்பு எல்லாம் வல்ல இறைவன் மீது நீங்கள் காட்டும் அன்பிலிருந்து தோன்றுவதோடு, அதிலேயே தங்கியும் இருக்கிறது. நீங்கள் தவறிழைத்தாலும் அவனது அருள் உங்களுக்குத் தொடர்ந்தும் வருகிறது. குடும்பத்தினரிடையே காணப்படும் அன்பு பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

இன்னும், அல்லாஹ்வை- அவனை-க் கொண்டு (தமக்குரிய உரிமைகளை) நீங்கள் (ஒருவருக் கொருவர்) கேட்டுக் கொள்கிறீர்களே, அத்தகையவனையும் மேலும், இரத்தக்கலப்பு சொந்தங்களை(த் துண்டித்து விடுவதை)யும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (அல் குர்ஆன் 4:1)

(நபியே!) உமதிரட்சகன்- அவனைத் தவிர (மற்றெவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்றும் பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறான்; அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவ்விருவருமோ உம்மிடத்தில் திண்ணமாக முதுமையை அடைந்து விட்டால், அவ்விருவருக்கும் (இழித்துக் கூறப்படும் வார்த்தைகளிலுள்ள) 'சீ' என்று (கூட) நீர் சொல்ல வேண்டாம்; உம்மிடமிருந்து அவ்விருவரையும் விரட்டி விடவும் வேண்டாம்; அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக!

(அல் குர்ஆன் 17:23)

அன்பும் பணிவும் கொண்ட இந்த வலையமைப்பில் தந்தையை விடத் தாய்க்கே முதலிடம் உண்டு; தாயே முதலில் கவனிக்கப்பட வேண்டியவர். நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து ''முதலாவதாக எனது கவனிப்புக்கும் பராமரிப்புக்கும் உரியவர் யார்?'' எனக் கேட்டு போது அன்னார், ''உமது தாய், உமது தாய், உமது தாய், அதன் பின்னரே உமது தந்தை'' எனப் பதிலளித்தார்கள். (அல் புகாரி)

அருளாளனின் அடியார்கள் இரண்டு விடயங்கள் தமக்குக் கிடைக்க வேண்டுமென ஆசைப்படுகிறார்கள். மகிழ்ச்சிகரமான குடும்பச்சூழல், பயபக்தியுடைய தலைவர்களின் உருவாக்கம் என்பனவே அவை.

மேலும், அவர்கள் எத்தகையோரென்றால் ''எங்கள் இரட்சகனே எங்கள் மனைவியர்களிடம் இருந்தும் எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களின் கண்களின் குளிர்ச்சியைத் தந்தருள்வாயாக! அன்றியும், பயபக்தியுடையவர்களுக்கு எங்களை (நல்வழியில் நின்று அதன்பால் அழைக்கும்) வழிகாட்டியாகவும் நீ ஆக்குவாயாக!'' என்று பிரார்த்தித்துக் கூறுவார்கள்.

(அல் குர்ஆன் 25:74)

பெற்றார்கள், மூத்த பெற்றார்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உட்பட குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரதும் முதல் நோக்கம் மகிழ்ச்சியும் ஆறுதலுமே. இரண்டாவது நோக்கம் நேர்மையான பயபக்தியுள்ள தலைவர்களை உருவாக்குவது. ஒருவர் தம் பிள்ளைகளுக்கு நம்பிக்கைப் பொறுப்பு, சிருஷ்டித்தவனை வழிபடுதல், பூமியை விருத்தி செய்தல், இறைவனையும் அவனது தூதர்களையும் நேசித்தல் என்பன பற்றிப் போதிப்பதன் மூலம் இதனைச் சாதிக்கலாம். இந்த முக்கியமான அடிப்படைகளைப் புறக்கணித்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி இல்லாமற் போகும். பூமியில் தமது வாழ்க்கையின் நோக்கத்திற்கு ஏற்பப் பிள்ளைகள் பிழையின்றி நடந்து கொள்ளும் போதுதான் பிள்ளை வளர்ப்பின் உண்மையான சந்தோஷம் கிடைக்கும்.

இந்த எண்ணக்கருக்களை உள்வாங்கிக்கொண்டு அவற்றின்படி நடப்பதோடு, உங்கள் பிள்ளைகள் முதிர்ச்சியடையும் போது அவர்களுக்கும் அவற்றை விளக்குங்கள். பிள்ளையின் இதயத்திலும் மனதிலும் நற்பண்புகளின் வித்துக்களை நடுவதற்கு ஏற்ற சிறந்த வழி

இதுவே. பிள்ளை வளரும் போது இறைவனை மறந்து விட்டிருந்தாலும் பின்னொரு காலத்தில் இந்த நம்பிக்கையின் வித்து வளர்ந்து கனி தரத்தான் செய்யும். தூய்மையான தாய்ப் பாலுடன் சேர்த்து தூய்மையான விசுவாசமும் ஊட்டப்பட வேண்டும். நன்னடத்தைக் கான அத்திவாரத்தைப் போட்டு ஆரம்பத்திலிருந்தே பிள்ளைகளின் முன்னுரிமைகளை ஒழுங்காக அமைத்துக் கொடுங்கள்.

இவ்வாறான இறை பக்தியுடன்கூடிய அத்திவாரம் இடப்பட்டால் அது எம்மைச் சூழ்ந்துள்ள தீங்கான கவர்ச்சிகளிலிருந்து பிள்ளையைப் பாதுகாக்கும். வெளியிலிருந்து காவல் செய்வதன் மூலம் மாத்திரம் நாம் சமூகத்தைப் பாதுகாக்க முடியாது. பிள்ளையின் அக விழுமியத் தொகுதி, சுய மரியாதை பற்றிய உணர்வு, சுய கட்டுப்பாட்டு ஆற்றல் என்பனவே சமூகத்தைக் காப்பதற்கான சிறந்த வழிமுறைகள். இறைவனால் இறக்கியருளப்பட்ட பேரறிவிலிருந்து பிள்ளைகள் பயன் பெறுவதற்குப் பெற்றார் உதவி செய்தல் வேண்டும். இறை விசுவாசம், நேர்மை, இரக்கம் என்பன பற்றி இள வயதிலேயே அவர்களுக்கு வலியுறுத்துவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம்.

முஸ்லிம் குடும்ப அமைப்பு சீர்குலையக் காரணம் என்ன?

கடந்த சில தசாப்தங்களாகக் குடும்ப விழுமியங்கள் வீழ்ச்சியடைந்து வந்துள்ளன. விவாகரத்து வீதம், தனிப்பெற்றார் குடும்பங்கள், திருமணம் செய்யாது கூடிவாழும் சோடிகள், சட்டத்துக்குப் புறம்பான குழந்தைகள், வறுமை, பாதுகாப்பின்மை என்பவற்றின் அதிகரிப்பு என்பன பிள்ளைகள், பெற்றார் ஆகிய இரு சாராரையும் பாதித்துள்ளன. துரதிர்ஷ்டவசமாக இந்த மாற்றங்களால் முஸ்லிம் குடும்ப அமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதோடு அதற்கேயுரிய சில பிரச்சினைகளாலும் பலவீனங்களாலும் அது அவதியும் படுகிறது. உண்மையில், வெற்றிக்கும் உறுதிப்பாட்டுக்கும் உரிய சின்னமாக முஸ்லிம் குடும்பமே மிளிர வேண்டும். அது இந்த அவல நிலைக்கு வீழ்ச்சியடைந்திருப்பது ஏன் என்ற கேள்விக்கான விடை சிக்கலானதாக இருப்பினும் அது முஸ்லிம் சமூகத்தின் வீழ்ச்சியில் ஓரளவு தங்கியிருக்கிறது. மோசமடையும் பொருளாதார நிலைமைகள், குறைபாடான கல்வித்திட்டம் என்பவற்றோடு உண்மையான இறை விசுவாசம் ஓரங்கட்டப்படுதல் முதலிய காரணிகள் முஸ்லிம் குடும்ப அமைப்பை மோசமாகப் பாதித்துள்ளன.

முஸ்லிம் சமூகத்தின் வரலாறு வளம் பொருந்தியதாக இருப்பினும் கலப்படமும் தவறான நடைமுறைகளும் ஏற்படுவதை அதனால் தவிர்க்க முடியாமற் போய்விட்டது. இத்தகைய கலப்படங்களும் தவறான நடைமுறைகளும் சரியாக இனங்காணப்பட்டுக் கவனமாக நீக்கப்பட்டால் மாத்திரமே அச்சமூகத்துக்கு ஒரு காலத்தில் வெற்றியைக் கொடுத்த தூய பண்புகளை மீட்டெடுக்க முடியும். எமது பிள்ளைகள் மீது ஆட்சி செலுத்தும் பொருத்தமற்ற செல்வாக்குகளை நாம் பிரித்தெடுத்துக் களைந்துவிட வேண்டும்.

அவ்வாறு செய்யாதுவிடின், சமநிலையற்ற, நடத்தைக் கோளாறுள்ள ஆட்களாகவே அவர்கள் உருவாகுவர்.

அல் குர்ஆன் முஸ்லிம்களை விசுவாசிக்குமாறும் (இக்ரஃ), சீர்தூக்கிப் பார்க்குமாறும் (யஃகிலூன்), யோசிக்குமாறும் (யதபக்கரூன்), ஆழ்ந்து சிந்திக்குமாறும் (யததப்பரூன்), கிரகித்துக் கொள்ளுமாறும் (யப்கஹூன்) வேண்டுகிறது. இப்படியிருக்க, முஸ்லிம் களிடையே எழுத்தறிவின்மை உச்ச மட்டத்தில் காணப்படுவதற்கும் அவர்கள் மூட நம்பிக்கையில் மூழ்கியிருப்பதற்கும் காரணம் என்ன? கடந்த சில நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்; படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்; அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; அவர்களது நிலங்களும் செல்வங்களும் நம்பிக் கைகளும் சூரையாடப்பட்டதனால் அவர்களிடையே திரிபடைந்த உலகக் கண்ணோட்ட மொன்றும் மாசடைந்த கலாசாரமொன்றும் நலிவடைந்த சுய நம்பிக்கையும் விருத்தி யடைந்துள்ளன. அவர்கள் தமது நற்பண்புகளின் பெரும்பகுதியை இழந்துள்ளதோடு ஒழுக்கத்துக்கும் பொது நன்மைக்கும் பதிலாகப் பணத்தையும் அதிகாரத்தையும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அத்தோடு, சோம்பல், பேராசை என்பன- பொதுப் பாதுகாப்பு, சமூக நலன் என்பவற்றுக்கும் மேலாக முன்னுரிமை பெற்றுள்ளன. ஊழல், நோய், வறுமை, பஞ்சம் முதலியவற்றுக்கு முஸ்லிம் சமுதாயம் முகம் கொடுத்துள்ளது.

முஸ்லிம்கள் இன்று 56 நாடுகளாகப் பிரிந்துள்ளனர். அவற்றுள் பல தம்மிடையே சச்சரவு செய்துகொண்டு போரிட்டுக் கொள்கின்றன. அவர்கள் சிறிதளவே உற்பத்தி செய்து பெருமளவில் நுகருகின்றனர்; வெறுமனே பிழைப்பதற்கும் சாப்பிடுவதற்கும் வாழ்கின்றார்களேயன்றி நிர்மாணிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் முனையவில்லை. பல நூற்றாண்டுகளாக ஏற்பட்டு வந்த சிதைவு காரணமாக அவர்களுடைய பண்புகள் உருக்குலைந்து, உலகக் கண்ணோட்டம் திரிபடைந்து, பண்பாடு மாசடைந்து போயுள்ள தால் குருட்டு நம்பிக்கை மனப்பாங்கொன்று அவர்களிடையே பரவியுள்ளது. அத்தோடு, இறக்குமதி செய்யப்பட்ட ஐரோப்பியக் கல்விமுறை முஸ்லிம் சமூகங்களில் வேரூன்றி யுள்ளது. இதனால் புதிய பரம்பரையினர் தம்மிலும் தமது பண்பாட்டிலும் தமது ஈமானிலும் தம் முன்னோரிலும் நம்பிக்கை இழந்துள்ளனர். பிள்ளைகள் தமது அடை யாளம் பற்றிச் சந்தேகப்படத் தொடங்கினர். இது அவர்களது சுய மதிப்பு, கௌரவம், சுய உணர்வு என்பவற்றை மேலும் நலிவடையச் செய்தது. அவர்கள் அடிமை மனப்பான்மை கொண்டவர்களாக இருந்ததோடு பொறுப்புமிக்க ஆக்கபூர்வமான நடத்தைக்கு அவசிய மான ஒழுக்க மற்றும் ஆன்மீகரீதியான வலிமையை இழந்தனர். வீட்டிலும் அயலிலும் பரந்த சமூகத்திலும் ஐக்கியமும் ஒருமைப்பாடும் சிதறுண்டு போயின.

முஸ்லிம் பெண்களும் ஆண்களும் ஏனைய பண்பாடுகளில் காணப்படும் பொருத்த மற்ற நடைமுறைகளைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றலாயினர். இவற்றுள் ஆடையின்றி இருத்தல், அளவுக்கு மீறி அலங்கரித்துக் கொள்ளல், தகாத பாலியல் முனைவுகள், சன்மார்க்கக் கடமைகளைப் புறக்கணித்தல் என்பன அடங்கும். இதன் விளைவாக முரண் பட்ட நடத்தைகளும் பண்பாட்டுச் சீரழிவுகளும் உருவானதோடு குடும்ப அமைப்பானது இஸ்லாமும் இல்லாத, நவீனத்துவமும் இல்லாத இரண்டும் கெட்ட நிலைக்கு உள்ளாகியது.

பொருள் தேடுவதிலும் உடலின்பம் காண்பதிலும் காட்டப்படும் சிந்தனையற்ற ஈடுபாடு, பெற்றாரிலும் பிள்ளைகளிலும் ஆன்மீகத்தையும் ஒழுக்கத்தையும் சீர்குலைத்து விட்டது. இதனால் சமூகத்தின் ஆக்கக்கூறான குடும்பம் செயலிழக்கத் தொடங்கியது. துணிவும் ஆக்கத்திறனும் தன்னம்பிக்கையும் பொறுப்புணர்வும் மிக்க பெறுமதியான பிரஜைகளை வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக முஸ்லிம் குடும்பங்கள் கெட்டுப்போன தன்முனைப்புள்ள பிள்ளைகளை உருவாக்கத் தொடங்கின. இந்தப் பிள்ளைகள் கொடுப்பவர்களாகவும், கரிசனை மிக்க சமுதாய உறுப்பினர்களாகவும், சேவகர்களாகவும்,

உதவி புரிபவர்களாகவும் இருப்பதற்குப் பதிலாக பெறுபவர்களாகவும், சுயநோக்குக் கொண்டவர்களாகவும், வீணாக்குபவர்களாகவும் தீங்கிழைப்பவர்களாகவும் மாறினர்.

முஸ்லிம் பெற்றார் பலர் எழுத்தறிவின்மை, அறியாமை, விழிப்புணர்வின்மை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் பிள்ளைகள் அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் நசுக்கப்படுகின்றன. சில முஸ்லிம் சமூகங்கள் அடக்குமுறையான கொடுங்கோல் அரசாங்கங்களின் கீழ் அவதியுறுகின்றன. முஸ்லிம்கள் பலர் பின்வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்:

- அடக்குமுறை, போதனைத் திணிப்பு என்பவற்றின் காரணமாக மட்டுப்படுத் தப்பட்ட சிந்தனைச் சுதந்திரம்.
- கேள்வி கேட்பதற்கும் விசாரணை செய்வதற்கும் பேசுவதற்குமான சுதந்திரம் மட்டுப்படுத்தப்படல்.
- ஊழல், தவறான முகாமை என்பவற்றின் காரணமாக வாணிபம் செய்து சுபீட்சம் அடைவதற்கான சுதந்திரம் மட்டுப்படுத்தப்படல்.
- அறியாமை, ஆண்களின் அடக்குமுறை என்பவற்றின் காரணமாகப் பெண்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படல்.
- நசுக்குதல், கொடுங்கோன்மை என்பன காரணமாகப் பிரஜைகள் தம் தலைவர்களைத் தெரிவு செய்வதற்குரிய சுதந்திரம் மட்டுப்படுத்தப்படல்.

இந்த நிலைமைகளை முஸ்லிம்களால் ஓரிரவுக்குள் மாற்றியமைத்துவிட முடியாது. இருந்தாலும் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிள்ளை வளர்ப்பு என்னும் பணியின் மூலம் அவர்கள் தம் முயற்சியை ஆரம்பிக்கலாம். இறைபக்தியுள்ள வெற்றிகரமான பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டுமாயின் முஸ்லிம்கள் தமது நாடுகளில் தற்போது நடைமுறையிலுள்ள ஆதிக்கரீதியான அடக்கு முறையில் பிள்ளை வளர்க்கும் பாணியை மாற்றியமைப்பதோடு பிள்ளை வளர்ப்பு நடைமுறைகளில் முக்கியமான சீர்திருத்தங்களையும் ஏற்படுத்த வேண்டும்.

பிள்ளை விருத்தியும் உறுதியான கல்வி முறையும்

முஸ்லிம் உலகின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் வகையில் பல சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதற்காகப் பல செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. எனினும், மிக முக்கிய காரணியான பிள்ளைகளின் கல்வி, அந்தச் சீர்திருத்தவாதிகளின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடங்கவில்லை. முஸ்லிம் சமுதாயத்தின் வீழ்ச்சியைத் தடுத்து அதன் நிலைமைகளை மேம்படுத்துவதற்காகக் கணிசமான பங்களிப்புச் செய்யும் வகையில் பெரிய மேதைகள் பலர் இறையியல், மெய்யியல், அரசியல், சமூகவியல், பொருளியல் போன்ற பல துறைகளிலும் பணியாற்றியுள்ளனர். எனினும், இறையச்சமுள்ள சமுதாயமொன்று உருவாவதைத் தடை செய்யும் நோய்கள் குணமாக்கப் படவில்லை. முஸ்லிம் தனியாட்களிடமும் சமூகங்களிடமும் காணப்படுகின்ற பிரமாண்டமான ஆற்றல் பயன்தரு முறையில் பயன்படுத்தப்படவில்லை. விஞ்ஞானம், தொழிநுட்பம் போன்ற துறைகளில், ஆக்கத்திறனிலும் செயற்திறனிலும் சாதனைத் திறனிலும் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்கும் இடையிலுள்ள இடைவெளி பல தசாப்தங்களாக விரிவடைந்தே வந்துள்ளது. எனவே, எமது சீர்திருத்தவாதிகள் பிள்ளை வளர்ப்பு, பிள்ளை விருத்தி, பிள்ளைகளின் கல்வி ஆகிய

முஸ்லிம் கல்வியில் உள்ள குறைபாடு

விடயங்கள் குறித்துப் பரிசீலனை செய்வது பயனுடையதாக இருக்கும். வீட்டில் நிகழும் பிள்ளை வளர்ப்புடன் அவர்கள் இதனை ஆரம்பிக்க வேண்டும். பிள்ளையின் உள அமைப்பு, உளப் பாங்குகள் என்பன பெற்றோர் களதும் சீர்திருத்தவாதிகளதும் பிரதான கவனத்தை ஈர்க்காவிட்டால் முஸ்லிம் உலகு தொடர்ந்தும் சீரழிந்து தேக்கத்தினாலும் பிற்போக்கினாலும் அவலப்படுவது திண்ணம்.

வரலாற்றுரீதியாக நோக்கும் போது, சம்பிரதாயபூர்வமான சீர்திருத்தவாதிகள் பலர் முக்கியமாக மார்க்கக் கடமைகள், அவற்றின் சட்டம் மற்றும் அரசியல் சார்ந்த அம்சங்கள் முதலியன பற்றியே தம் கவனத்தைச் செலுத்தியுள்ளதைக் காணலாம். சமயச் சார்பற்ற நவீன சீர்திருத்தவாதிகள் பலர் எதிர்த்திசையில் சென்று தமது முன்னைய மேற்கத்திய ஆக்கிரமிப்பாளர்களைப் பிரதி பண்ணுவதிலேயே கவனம் செலுத்தினர். எனவே, நிறை வேறாத வெற்று வாக்குறுதிகளும் நம்பிக்கைகளுமே பொது மக்களுக்கு எஞ்சியிருந்தன. சமயச் சீர்திருத்தவாதிகளுள் பலர் மனவெழுச்சி வசப்பட்டவர்களாக ஆர்வம் மிகக் கொண்டு இஸ்லாத்தின் பொற்காலத்தை அடிப்படையாகக் கொண்ட, புரிந்துகொள்ள முடியாத தீர்வுகளை முன்வைத்தனர். பிள்ளை வளர்ப்பில் பெண்களின் (மனைவி, தாய் ஆகியோரின்) பங்கு, பொறுப்பு என்பன பற்றி எவரும் கருத்திற் கொண்டதாகத் தெரிய வில்லை. பிள்ளை விருத்தி, பிள்ளையின் கல்வி, பிள்ளை வளர்ப்பு என்பன தொடர்பாக விரிவான ஆய்வுகளோ எழுத்தாக்கங்களோ அரிதாகவே காணப்பட்டன. சீர்திருத்தவாதி களின்- அவர்கள் சம்பிரதாயவாதிகளாக இருந்தாலும் சமயம் சார்ந்தவர்களாக இருந் தாலும் அல்லது நவீன மதச்சார்பற்றவர்களாக இருந்தாலும் சரியே- அழைப்புக்குப் பொதுமக்கள் ஓசைப்படாத, மந்தமான பிரதிவிளைவையே காட்டினர். பெரும்பாலான முஸ்லிம்கள் இவ்விடயத்தில் முன்னின்று செயற்படவில்லை. பிரச்சினையைச் சரியாகப் பகுத்தாய்ந்து புரிந்துகொள்வதன் மூலம் உருவாக்கப்பட்ட முறைமைகளின் அடிப் படையில் எவ்வித செயற்பாடுகளும் திட்டமிடப்படவில்லை. இந்த சீர்திருத்தவாதிகள் எவரும் இறை சட்டங்கள் பற்றியோ இயற்கை, சமூக மற்றும் மனித விஞ்ஞானம் போன்ற அறிவியல் துறைகள் பற்றியோ உரிய முறையில் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டனர்.

நல்ல பிள்ளைகளை வளர்த்தெடுப்பதன் முக்கியத்துவம் பற்றியும் அதன் நீண்டகால விளைவுகள் பற்றியும் முஸ்லிம்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர் களின் போதனைகளைச் செவிமடுக்கும் போது அன்னாரின் சிரேஷ்ட தோழர்கள் பலரும் முதிர் பருவத்தினராகவே இருந்தனர். அவர்களுடைய அடிப்படைப் பண்புகள் குழந்தைப் பருவம் முதலே உருவாக்கப்பட்டிருந்தன. அவர்கள் சுதந்திரமான துணிவு மிக்க மக்களாக

உருவாக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒருபோதும் கொடுங்கோலர்களால் ஒடுக்கப்பட்டு இருக்கவில்லை. பிள்ளையின் நன்னடத்தையைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்கள்: இஸ்லாத்துக்கு முன்பு சிறந்தவர்களாக இருந்தவர்களே- அவர்கள் இஸ்லாத்தைப் புரிந்து கொண்டிருப்பின்- இஸ்லாத்தின் பின்னரும் சிறந்தவர்களாக இருக்கின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் போதிக்கத் தொடங்கிய போது அவர்களுக்கு வயது 40. அப்போது அபூ பக்ரின் வயது 37; உஸ்மானின் வயது 36; உமரின் வயது 19; அலீயின் வயது 12. நபிகளாரின் மனைவி ஹதீஜா 55 வயதினராக இருந்தார். ஒருவருடைய அடிப்படைப் பண்புகள் பிள்ளைப் பருவத்திலேயே அமைக்கப்பட்டு விடுகின்றன. இறை விசுவாசமும் திறன்களும் பிந்தியும் கற்பிக்கப்படலாம். ஆனால், நற்பண்புகளைப் பொறுத்தமட்டில் அவ்வாறு செய்ய முடியாது. அடிப்படை இலக்குகளும் விழுமியங் களும் அல்குர்ஆனினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடைவதற்கான முதற் படிகளை நிறைவேற்றுவது பெற்றாரின் பொறுப்பாகும். உளவியல், சமூகவியல், தொடர்பாடற் கலை, கல்வி ஆகியவற்றைப் பயன்படுத்தி இள வயதிலேயே நற்பண்புகளை வளர்க்கும் பணியைப் பெற்றார் தொடங்கி வைக்க வேண்டும். அடிப்படையான மனித விழுமியங்களும் தேவைகளும் மாற்றமடையாத போதிலும் பிள்ளை வளர்ப்பு நுட்ப முறைகள் காலத்துக்கு ஏற்ப ஆராயப்பட்டு விருத்தி செய்யப்பட வேண்டும்.

பிள்ளை வளர்க்கும் முறையின் அடிப்படையிலேயே நாடுகளின் தரம் நிர்ணயிக்கப் படுகிறது. எனவே, சிறந்த பிள்ளை வளர்ப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டதனால் பிள்ளை வளர்ப்புத் திறன்களை அமுல் படுத்துவதற்காகவும் இவ்விடயம் தொடர்பாகப் பரந்த அளவில் பொது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் உலகளாவிய மட்டத்தில் பல பாடநெறிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வாய்ப்பினைத் தவற விடுவது பெரும் இழப்பாகும். எந்தவொரு சமுதாயமும் இவ்வாறான இழப்புக்கு இடம் கொடுக்க முடியாது. பெற்றோர்களுக்கும் பெற்றோராகப் போவோருக்கும் பிள்ளை வளர்ப்பு பற்றிக் கற்கை நெறிகளை வழங்குவதன் மூலம் பெரும் பயனை ஈட்டிக்கொள்ள முடியும். பிள்ளை வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காகச் சமுதாயச் செயற்பாடுகளை ஏற்படுத்துவது பயன் தரும். பல்வேறு நாடுகளில் ஆக்கரீதியான பிள்ளை வளர்ப்பு முறை களை நடைமுறைப் படுத்துவதற்காக விசேட அமைச்சுக்கள் அல்லது நிறுவனங்களை நிறுவுவது மானிட சமுதாயத்துக்குப் பெரும் சேவையாக அமையும்.

ஓர் உறுதியான கல்வி முறையின் தேவை பற்றிய ஒரு கண்ணோட்டம்

எமது பிள்ளைகளின் கல்வியை நாம் சீர்திருத்த வேண்டுமாயின் முஸ்லிம் உலகில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்வி முறைகள் பற்றி விமர்சன ரீதியாக நோக்க வேண்டும். சில முஸ்லிம் பள்ளிக்கூடங்கள் பிள்ளைகளின் இயல்பைப் புரிந்து கொள்ளத் தவறியுள் ளன. உதாரணமாக, அவை சிறுவர் விளையாட்டுக்களைக் குற்றச் செயல்கள் போல் கருது கின்றன. அவற்றின் பாடவிதானம் பிள்ளைகளின் விருத்திப் படிகளின் அடிப்படையில் அமையவில்லை. அது வறண்டதாகவும் நெகிழ்வுத்தன்மை அற்றதாகவும் வற்புறுத்தல் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. பிள்ளைகளின் ஆராய்வுக்கத்தையும் விளையாடுவதில் உள்ள ஆர்வத்தையும் அது புறக்கணிக்கிறது. பதிலாக பொருள் உணராமல் கற்பதிலும் மனனம் செய்வதிலுமே அது பெரிதும் தங்கியிருக்கிறது.

வரலாற்றுரீதியாக, முஸ்லிம் உலகில் இரு வகையான பள்ளிக்கூடக் கல்வி முறைகள் இனங்காணப்பட்டன. ஆட்சியாளர்கள், செல்வந்தர்கள் போன்ற உயர் வகுப்பினரின் பிள்ளைகளுக்காகச் செயற்பட்ட தனியாருக்குரிய உறுதியான, நன்கு வடிவமைக்கப்பட்ட கல்வி முறை இவற்றுள் முதலாவதாகும். இப்பிள்ளைகளுக்கு உயர் தகைமையும் கருணை

யுள்ளமும் கொண்ட 'முஅத்திப்' எனும் ஆசிரியர்கள் தனியார் மாளிகைகளில் பாடங்களைக் கற்பித்தனர். பிள்ளைகளைத் தலைமைத்துவத்துக்கும் முதன்மை நிலைக்கும் தயார் படுத்துமாறு இவ்வாசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டனர். முஆவியாஹ் இப்ன் அபூ ஸுப்யான், அப்த் அல்- மலிக் இப்ன் மர்வான், அல் ஹஜ்ஜாஜ் அல் தகாபி, ஹாரூன் அல் ரஷீத் போன்ற ஆட்சியாளர்கள் மகத்தான ஆசிரியர்களைப் பெற்றிருந்தனர். சமயம், பண்பாடு, இலக்கியம் போன்ற துறைகளையும் சில திறன்களையும் நடைமுறைகளையும் பிள்ளைகளுக்குப் போதிப்பதற்குத் தேவையானவசதிகள் இவ்வாசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு தனித்தனியாக மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது, குழுவாக இருந்து கற்பதனூடாகக் கிடைக்கும் அனுகூலங்கள் அம்மாணவருக்குக் கிடைப்பதில்லை. இதுவே இம்முறையின் பிரதான குறைபாடாகும்.

வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை, ஹாவார்ட் பல்கலைக் கழகம் என்பன இணைந்து நடத்திய ஆய்வொன்றில் பல ஆண்களும் பெண்களும் முன்னுரிமை கொடுக்கும் விடயங்களாகப் பின்வருவன இனங்காணப்பட்டன: உளவியல் மற்றும் பொருளாதார அழுத்தங்களுக்கு முகங்கொடுத்தல், பிள்ளைகளுடன் நல்ல முறையில் தொடர்பாடுதல், தாய்மார் தம் பிள்ளைகளுடன் வீட்டில் அதிக காலத்தைக் கழித்தல்.

இங்கு, வெளிப்படையாகச் சிறந்த பிள்ளை வளர்ப்புக்கே உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். (அல் உஸ்றா சஞ்சிகை - 2005)

இரண்டாவது வகையான 'குத்தாப்' என்னும் பொது மக்களுக்கான பள்ளிக்கூடங்கள் முதல் வகையிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவாக இருந்தன. இங்கு அல்குர்ஆனின் ஒரு சில பகுதிகளும் அடிப்படையான எண் கணிதமும் கற்பிக்கப்பட்டன. ஆசிரியர்களோ வசதிகளோ போதியளவில் இருக்க வில்லை. அங்கிருந்த ஆசிரியர்கள், மாணவர்களின் ஒழுங்கைப் பேணுவதற்காக உடல் ரீதியான தண்டனைகளைப் பயன்படுத்தினர்; பிள்ளைகளை விளையாட விடாமல் தடுத்தனர். மனனம் செய்வதையே கற்றலுக்குரிய அடிப்படை முறையாகப் பயன்படுத்தினர். வரலாற்றுரீதியான இந்த இரு வகைக் கல்வி முறை சில முஸ்லிம் நாடுகளில் இன்றும் பரவலாகக் காணப்படுகிறது. பணம் படைத்த பெற்றோர் தம் பிள்ளைகளை உள்ளூரில் அல்லது வெளிநாட்டில் இருக்கின்ற தனியார் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகின்றனர். ஏழைகள் தம் பிள்ளைகளை வசதி குறைந்த பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகின்றனர். தகுதி வாய்ந்த ஆசிரியர்களை வேலைக்கமர்த்தவும் வெளிநாட்டு மற்றும் விசேட பாடவிதானங்களைப் பின்பற்றவும் தேவையான நிதிவளம் தனியார் பள்ளிக் கூடங்களுக்கு உண்டு. அத்தோடு பொதுப் பள்ளிக்கூடங்களில் காணப்படாத ஆய்வு கூடங்கள், கட்புல சாதனங்கள், நூலகங்கள், கம்பியூட்டர்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் முதலிய வசதிகளைத் தனியார் பள்ளிக்கூடங்கள் கொண்டிருக்கின்றன. துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் நாடுகளிலுள்ள செலவு மிகுந்த இத்தனியார் பள்ளிக்கூடங்களினால் உருவாக்கப்படும் மாணவர்கள் தமது சொந்தக் கலாசாரம், மரபுரிமை, பண்புகள், சமயம் என்பன பற்றி எதிர்மறையான கருத்துக்களையே கொண்டிருக்கின்றனர்.

குறைபாடுள்ள கல்வி முறையினால் பிள்ளையே பாதிக்கப்படுகிறது. ஒரு சமுதாயத்தினரின் பெரும்பான்மையினரைச் சரியாக வளர்த்துக் கல்வியூட்டும் வாய்ப்பினைத் தவற விட்டால் அவர்களது உள்ளங்களும் சிந்தனைகளும் வடிவமைக்கப்பட்ட பின்னர் அவற்றை மீளச் சீராக்குவது சிரமமாகி விடுகிறது. நாம் முஸ்லிம் சமூகத்தை உயிர்ப்பிக்க வேண்டுமாயின் எமது பிள்ளை வளர்ப்பு முறையையும் கல்வி முறையையும் மாற்றியமைத்தல் வேண்டும். எனவேதான் பிள்ளைப்பருவத்தின் ஆரம்பக் கட்டத்தைப் பற்றி எமது கவனத்தைக் குவிப்பது அத்தியாவசியமாகிறது. இதில் நாம் வெற்றி பெற வேண்டுமாயின் பிள்ளையின் முதற்கட்ட ஆசிரியர்களான பெற்றார் பற்றி நாம் கருத்திற் கொள்ள

வேண்டும். அவர்களே பிள்ளையின் ஆத்மாவுக்குரிய ஆசிரியர்களாகவும் அதன் நடத்தைப் பண்பை விருத்தி செய்பவர்களாகவும் இருக்கின்றனர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பிள்ளை வளர்ப்புக்குரிய நல்ல, சமநிலையான மாதிரியுருவொன்று இன்று முஸ்லிம் உலகிலோ மேற்கிலோ இல்லை. ஒழுக்கரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் லௌகீக ரீதியாகவும் மகிழ்ச்சியைப் பெற உதவும் பிரதான காரணி பிள்ளை வளர்ப்பே என்பதை, சமூக மாற்றத்தை ஏற்படுத்த நாடும் எந்தவொரு சமூகமும் அறிந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் பிள்ளை வளர்ப்பு பற்றிய எமது எண்ணக்கருக்களையும் நடைமுறைகளையும் நாம் சீர்திருத்திக்கொள்ள வேண்டும். பிள்ளை வளர்ப்புக்கான அணுகுமுறையானது உள்ளத்தையும் இதயத்தையும் உள்ளடக்க வேண்டும். பகுத்தறிவு, தர்க்கம், நுட்ப முறைகள் என்பன உள்ளத்துக்குத் தேவைப்படுகின்றன. உணர்வுகள், அன்பு, சாமர்த்தியம், உள்ளுணர்வு என்பன இதயத்துக்கு அவசியமாகின்றன. ஆக்கபூர்வமான பிள்ளை வளர்ப்பானது விஞ்ஞான அறிவையும் கலை நுணுக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

நாகரீகமொன்றைக் கட்டியெழுப்புவதற்குப் பல நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. கலந்தாலோசனை செய்யக்கூடிய சூழலில் பணி புரிகின்ற, நேர்மையும் ஆக்கத்திறனும் செயற்திறனும் நம்பத்தகவும் உள்ள ஆட்களினால் முகாமை செய்யப்பட்டால் மாத்திரமே இந்நிறுவனங்கள் வெற்றிபெற முடியும். உள்ளத்திலும் உடலிலும் ஆன்மாவிலும் நடத்தையிலும் வலிமை கொண்ட ஆட்களை உருவாக்கும் பொறுப்பு குடும்பம் எனும் நிறுவனத்திடம்- அதாவது பெற்றாரிடம்- ஒப்படைக்கப்பட வேண்டும். இப்பணியை பள்ளிக்கூடங்களிடமோ ஊடகங்களிடமோ அரசாங்கத்திடமோ ஒப்படைக்க முடியாது. எனினும், இந்நிறுவனங்கள் பெருமளவுக்கு உதவி ஒத்தாசை வழங்கலாம். பெற்றாரைத் தவிர வேறு எந்த அமைப்பும் பிள்ளைகளின் நலனில் அந்த அளவுக்கு அக்கறை காட்ட முடியாது. தாமே உலகில் மிகச் சிறந்தவராக இருக்க வேண்டும் என ஒவ்வொருவரும் விரும்புகின்றனர். ஆனால், தமது பிள்ளைகள் தம்மையும் விட உலகில் சிறந்தவர்களாக வர வேண்டுமென்றுதான் பெற்றார் விரும்புகின்றனர். அந்த அளவுக்கு அவர்கள் தன்னலம் பாராத கருணையுள்ளம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

உண்மையை உணர்ந்து கொண்டுவிட்டால், தம்மால் இயன்ற மட்டும் சிறப்பாகப் பிள்ளைகளை வளர்ப்பதற்குப் பெற்றார் அர்ப் பணிப்புடன் செயற்படுவார்கள். பிள்ளைகளின் நலன் பற்றி யாராவது பேசினால் அதற்குச் செவிமடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். தம் நோக்கத்தை அடைவது எப்படி என்பதை அவர்கள் புரிந்து கொள்வது மாத்திரமே தேவையாக இருக் கிறது. தம் பொறுப்புக்களைப் பற்றிப் பெற்றார் உணர்ந்துகொள்ளச் செய்வதே முதற்படியாக அமைய வேண்டும். பிள்ளையின் முதல் ஐந்து வருடங்களும் முக்கியமான காலமாக இருந்த போதிலும் பிள்ளை வளர்ப்பானது அவ்வைந்து வருடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல; அது வாழ்நாள் முழுதும் தொடர வேண்டிய பணியாகும். ஆரம்ப கட்டத்தில் பெற்றோர்களே முக்கிய பங்கை ஆற்றுகின்றனர். பிள்ளைகளுக்குச் சரியாக வழிகாட்டுவது எப்படி என்பதை அவர்கள் அறிந்திருந்தால் பிந்திய பருவங்களிலும் பிள்ளையின் நடத்தையையும் வாழ்க்கை முறையையும் வடிவமைக்கும் பணியை அவர்கள் தொடர்ந்தும் மேற்கொள்ள முடியும்.

அமெரிக்காவில் குடும்ப அமைப்பு

ஐக்கிய அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளராக இருந்த ஹிலரி கிளிண்டன் 'It Takes A Village to Raise a Child' என்ற தனது நூலில் பின்வரும் விடயங்களை முன்வைக்கிறார். ஐக்கிய அமெரிக்காவில் பெண் பிள்ளைகளுள் 40% ஆனோர் பதின்ம வயதிலேயே கர்ப்பம் அடைகின்றனர். அங்கு வருடந்தோறும் ஐந்து இலட்சம் கருச்சிதைவுகள் இடம் பெறுகின்றன. அமெரிக்கர்கள் பலர் தமது குடும்ப விவகாரங்களை விடச் சிறப்பாகத் தமது வார இறுதிக் களியாட்டங்களைத் திட்டமிடுகின்றனர். 1960இல் 5% ஆக இருந்த திருமணத்துக்குப் புறம்பான பிறப்புக்கள் 1996 இல் 25% ஆக அதிகரித்தன. 20% ஆன பிள்ளைகள் வறுமையில் வாழ்கின்றனர். ஒவ்வொரு வருடமும் சுமார் 7,000 பிள்ளைகள் கொலை செய்யப்படுகின்றனர் அல்லது தற்கொலை செய்து கொள்கின்றனர். ஒவ்வொரு நாளும் சுமார் 135,000 பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குத் துப்பாக்கியுடன் வருகின்றனர். வசதி உள்ளோர், இல்லாதோர் என்ற வேறுபாடின்றி பிள்ளைகள் துஷ்பிரயோகத்துக்கும் புறக்கணிப்புக்கும் தவிர்க்கப்படக்கூடிய மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர். வளர்ந்த அமெரிக்கர்களில் மூன்றிலொரு பகுதியினர் மிகை நிறையுடையவர்களாக உள்ளனர். 1970 களில் இவ்விகிதம் நான்கில் ஒன்றாக இருந்தது.

திருமதி கிளிண்டன் தொடர்ந்தும் பின்வருமாறு எழுதுகிறார்: சராசரியாக 17 வயதை அடைந்த பிள்ளையொன்று ஏற்கனவே தொலைக்காட்சியில் 18,000 படுகொலைகளைப் பார்த்து விடுகிறது. சராசரி அமெரிக்க மாணவன் ஒருவன் பள்ளிக்கூடத்தில் 11,000 மணித் தியாலங்களைக் கழிக்கும் அதே வேளையில் தொலைக்காட்சிக்கு முன்னால் 15,000 முதல் 20,000 மணித்தியாலங்கள் வரை கழிக்கின்றான். சராசரி அமெரிக்கப் பிள்ளையொன்று வருடந்தோறும் ஓராயிரத்துக்கு மேற்பட்ட கற்பழிப்புக்களையும் படுகொலைகளையும் ஆயுதமேந்திய கொள்ளைகளையும் தாக்குதல்களையும் தொலைக்காட்சியில் விவரமாகப் பார்க்கின்றது.



ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் அப்பாவி ஆப்கான் இளைஞர்களை விளையாட்டுக் காகச் சுட்டுக்கொன்றதைத் தொலைக்காட்சியில் காணும் ஓர் அமெரிக்கப் பிள்ளை அதனைப் பாரிய குற்றச் செயலாகக் கருதாமல் வீரச்செயலாகவே நினைக்கும். ஏனெனில், அவ்வாறான கொலைகளை அது ஒவ்வொரு இரவிலும் தொலைக்காட்சியில் பார்க்கின்றது. இவ்வாறு தினமும் குற்றச் செயல்களைப் பார்க்கும் போது பிள்ளைகளின் உணர்வுகள் மரத்துப்போய் விடுவதோடு அந்நிகழ்வுகள் அவர்களது வாழ்க்கையின் ஓர் அம்சமாக மாறிவிடுகின்றன. தமது பிள்ளைகளுக்குக் கிடைக்கும் தவறான செய்திகள் பற்றிப் பெற்றார் விழிப்புணர்வுடன் இருப்பதோடு தம் பிள்ளைகளை அவற்றிலிருந்து பாதுகாக்கவும் வேண்டும். அத்தோடு, அவற்றின் எதிர்மறையான போக்கைக் குறைப்பதற்குச் சமூக ரீதியில் முயற்சிக்கவும் வேண்டும். பிள்ளை வளர்ப்பு பற்றி வெளிவந்துள்ள பெருந்தொகையான அமெரிக்க ஆக்கங்கள் எதிர்பார்த்த விளைவை ஏற்படுத்தத் தவறியுள்ளன. எனவே, இவ்வளவு அறிவுறுத்தல்களுக்கும் ஆய்வுகளுக்கும் மத்தியிலும் பிள்ளை வளர்ப்பு மோசமாகி வருவதற்கான காரணத்தை நாம் ஆராய்தல் வேண்டும்.

ஹொலிவூட் பண்பாட்டில், அறிவு ரீதியான சாதனைக்கும் ஒழுக்க விழுமியங்களின் அழகுக்கும் பதிலாக உடல் தோற்றத்திற்கும் அதன் அலங்காரத்திற்குமே முக்கியத்துவம்

கொடுக்கப்படுகிறது. ஆண்களதும் பெண்களதும் நிர்வாணச் சிலைகள் பொதுச் சதுக்கங் களில் வைக்கப்பட்டுள்ளன. பெண்களின் உடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற, ஒழுக் கமும் ஆன்மீகமும் கெட்ட அழகுப் போட்டிகள் மலிந்து விட்டன. நாய்களுக்கும் பூனை களுக்கும்கூட அழகுப் போட்டி நடத்தும் அளவுக்கு இது வர்த்தகமயப்படுத்தப்பட்டுள் ளது. 'இறைவன் அழகானவன்; அவன் அனைத்திலுமுள்ள அழகை நேசிக்கிறான்' என் பதே இஸ்லாமியக் கோட்பாடாகும். எனினும் அதில் நடத்தை, விழுமியங்கள், ஒழுக்கம் என்பவற்றின் தரத்துக்கே கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

போதைப் பொருட்கள், பாலியல் விவகாரங்கள் போன்ற குடும்பப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டால் அவற்றுக்கான தீர்வு நாம் அவற்றை வரையறுக்கும் விதத்திலேயே தங்கியுள்ளது. ஒரு பிரச்சினை பொருளாதார ரீதியானது என வரையறுக்கப்பட்டால் அதற்குரிய தீர்வும் பொருளாதாரம் சார்ந்ததாகவே இருக்கும். அது சமூகப் பிரச்சினை என இனங்காட்டப்பட்டால் அதற்குரிய தீர்வு சமூக அடிப்படையிலேயே அமையும். அது உடல் ரீதியானதாகக் கருதப்பட்டால் அதற்கான தீர்வும் அவ்வாறே இருக்கும். எடுத்துக் காட்டாக, போதைப்பொருட் பிரச்சினை அதன் வழங்கல் பற்றியதேயன்றி, கேள்வி பற்றியதல்ல எனப் பலரும் கூறுகின்றனர். இதன் விளைவாகப் போதைப் பொருட்களின் வழங்கலைத் தடுப்பதற்காக அரசாங்கம் படகுகள், விமானங்கள் போன்ற சாதனங்களில் பெருமளவு முதலீடு செய்துள்ளது. இங்கு இப்பிரச்சினையின் பொருளாதார அம்சத் திலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், இப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாக இல்லை. போதைப் பொருள் வர்த்தகர்கள் தமது வாணிபத்தினால் தொடர்ந்தும் பெரும் லாபமீட்டி வருகின்றனர். எனவே, இப்பிரச்சினையை ஒழுக்க, ஆன்மீக மற்றும் சமூக ரீதியாகக் கருதி அதன்படி தீர்வு காண்பதற்குச் சமூகம் முன்வர வேண்டும்.

கிறிஸ்தவத்தில் ஏழு பெரும் பாவங்கள்
மிகையுணவு, பேராசை, செயற்பாடின்மை, அழுக்காறு, பெருங்கோபம், பெருமை, சிற்றின்ப வேட்கை

பிள்ளை வளர்ப்பு பற்றி அமெரிக்காவில் பொதுவாகக் காணப்படும் தவறான கருத்துக்கள்

அமெரிக்கச் சமூகத்தில் இலக்குகளுக்கும் அவற்றை அடைவதற்கான வழிமுறை களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் பிள்ளைகளின் உள்ளங்களில் பெருமளவு குழப் பத்தை ஏற்படுத்தியுள்ளன. தமது பிள்ளைகள் நேர்மையானவர்களாகவும் நம்பத்தகுந்தவர் களாகவும் நியாயமானவர்களாகவும் சுய கட்டுப்பாடுள்ளவர்களாகவும் மரியாதை தருபவர்களாகவும் இருக்க வேண்டும் எனப் பெற்றார் விரும்புவதாக வில்லியம் கில்பற்றிக் என்பவர் தமது *'Why Johnny Can't Tell Right from Wrong'* என்ற நூலில் விளக்கு கிறார். இவ்வியல்புகளைத் தம் பிள்ளைகளில் விருத்தி செய்வதற்குப் பெற்றாரினால் முடியாமல் போவது ஏன்? இதற்கான விடையின் ஒரு பகுதி பிள்ளை வளர்ப்பு பற்றிக் காணப்படும் வலுமிக்க தவறான கருத்துக்களில் தங்கியிருக்கிறது. இத்தவறான கருத்துக்கள் பற்றிப் பின்னால் வரும் அத்தியாயம் ஒன்றில் விரிவாகப் பார்க்கப் போகிறோம். எனினும், அமெரிக்காவில் குடும்ப அமைப்புடன் தொடர்புடைய தவறான கருத்துக்கள் சிலவற்றை இங்கு பட்டியல் படுத்தியுள்ளோம். வில்லியம் கில்பற்றிக் பின்வருவன பற்றிக் கண்டனம் செய்கிறார்:

a.) **ஐக்கிய அமெரிக்கா நிறுவப்பட்ட போது அது வளைந்து கொடுக்காத தனி மனித உரிமைகளின் மீது உருவாக்கப்பட்டது. எனவே, அதிகாரம் செலுத்தப்படாமலே பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும்.** அமெரிக்கக் கண்டத்தில் குடியேறிய ஐரோப்பிய மனிதன் காட்டை வெட்டித் தனக்கு வீடு அமைத்துத் தேவையான உணவைப் பயிர் செய்

தான். மேலும், தனது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்ததோடு, காட்டு மிருகங்கள், கள்வர்கள், அந்நிய அரசாங்கங்கள் ஆகியவற்றிலிருந்தும் தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொண்டான். அவன் பிறரின் அதிகாரத்தை விட்டும் விலகிச் சென்றான். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் சர்வாதிகார அரசாங்கங்களினால் தம் மனித உரிமைகள் நசுக்கப்பட்டு, சுதந்திரம் பறிக்கப்பட்ட போது பல்வேறு பிரிவு களையும் சேர்ந்த ஆரம்ப கால கிறிஸ்தவ யாத்திரிகர்கள் அமெரிக்காவின் பதின்மூன்று கொலனிகளிலும் போய்க் குடியேறினர். அந்தப் பரந்த நிலப்பரப்பில் எவ்வித அரசாட் சியும் இருக்கவில்லை. இவ்வாறுதான் ஐக்கிய அமெரிக்கா உருவாகியது. இவ்வாறான மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்க அதிகாரத்தை விரும்பும் அமெரிக்கர்கள் பலர் பிள்ளை களை வளர்க்கும் போது அதிகாரம் செலுத்தப்படக் கூடாது எனக் கருதுகின்றனர். என்றாலும், நேசிக்கப்படக்கூடிய மக்களாக அவர்களை வளர்ப்பதற்குப் பெற்றாரின் திறமை மிக்க பராமரிப்பும் அதிகாரமும் தேவைப்படுகின்றன.

b.) ***'கெட்ட பையன் நல்லவன்' என்ற தவறான எண்ணம்.*** அமெரிக்கப் பண்பாட்டில் கெட்ட பையன்கள் நேசிக்கப்படக்கூடியவர்களாகவும் மகிழ்ச்சியானவர்களாகவும் சித்தரிக்கப்படுகின் றனர். அமெரிக்கக் கதைப் புத்தகங்களில் வந்த Tom Sawyer, Buster Brown ஆகிய இரு பிரபலமான கதாபாத்திரங்கள் இதற்கான கடந்த கால உதார ணங்களாகும். அதே போல் Dennis the Menace, Bart Simpson, The Little Rascals போன்ற, திரைப் படங்களிலும் தொலைக்காட்சியிலும் வரும் பிரியத்துக்குரிய போக்கிரிப் பையன்கள் தற்காலத் துக்குரிய உதாரணங்கள். இந்தச் சம்பிரதாயம் பிள்ளைகளின் கற்பனையில் ஆழமாகப் பதிந்திருப் பதனால் 'கீழ்ப்படிதல்' என்பதை அவர்கள் ஓர் அசிங்கமான வார்த்தையாகவே கருதுகின்றனர்.



c.) ***பிள்ளையின் 'இயல்பான நல்ல தன்மை' யைப் பேணுவதற்கு அன்பு மட்டும் போதும் என்ற தவறான கருத்து.*** இது ரூஸோவினால் முன்வைக்கப்பட்ட கருத்தாகும். பிள்ளைகளை அவர்களது போக்கிலேயே வளர விட்டால் நல்ல தன்மை தானாகவே வந்துவிடும் என அவர் கருதினார். இதன்படி பெற்றார் செய்ய வேண்டி யது அன்பு காட்டுவது மாத்திரமே. ரூஸோவின் கருத்தின்படி அன்பு என்பது பிள்ளைக்கு எவ்விதத் தலையீடுமற்ற முழுமையான சுதந்திரத்தை வழங்குவதையே குறிக்கிறது.

d.) ***'நிபுணர்களின் அறிவு' எப்போதும் சரியானது; அது ஒருபோதும் பிழைக்காது' என்ற தவறான எண்ணம்.*** பிள்ளை வளர்ப்பில் தமக்குள்ள பொறுப்பைப் பெற்றார் துறந்து விட்டு அதனை நிபுணர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். பிள்ளை வளர்ப்பு பற்றிய இந்த நிபுணர்களில் பெரும்பான்மையானோர், நாம் முன்சொன்ன இயல்பான நல்ல தன்மை என்ற தவறான கருத்தை ஆதரிக்கின்றார்கள். ஆகவே, ஒரு தவறான கருத்து இன்னொரு தவறான கருத்தை ஆதரிப்பதை இங்கு காண்கிறோம். இந்த நிபுணர்கள் பிள்ளைகளின் தனிச்சிறப்பான ஆக்கத்திறன் மிக்க தன்னிச்சையான இயல்பு பற்றி அதிக அழுத்தம் கொடுக்கின்றனர். விதிகளைப் பின்பற்றி அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் எனப் பிள்ளைகளுக்குப் பெற்றார் போதிக்க வேண்டும் என்று கூறுவதற்குப் பதிலாக பெற்றார் பிள்ளைகளுக்கு ஏற்ற விதத்தில் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றுதான் சில நிபுணர்கள் அறிவுரை வழங்குகின்றனர்.

e.) **'ஒழுக்கப் பிரச்சினைகள் உளவியல் பிரச்சினைகளே' என்ற தவறான எண்ணம்.** நடத்தை சார்ந்த பிரச்சினைகள், சுய மதிப்பு சம்பந்தமான பிரச்சினைகளாக அல்லது உளவியல் தேவைகள் நிறைவேறாமல் போவதன் விளைவுகளாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலான நடத்தைசார் பிரச்சினைகள் பிள்ளைகளின் ஆசைகள், வேண்டுமென்றே செய்யும் இயல்பு என்பவற்றின் காரணமாகவே ஏற்படுகின்றன என்ற கருத்தைச் சிறுவர் சம்பந்தமான நிபுணர் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. பெரும்பாலான நூல்கள் பிள்ளை யின் சுயமதிப்பு பற்றிப் பேசுகின்றனவே அன்றி நன்னடத்தை பற்றி எங்கும் குறிப்பிடு வதில்லை. 1900, 1910, 1980 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த *The Ladies' Home Journal*, *Women's Home Companion*, *Good House Keeping* என்ற சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரைகளில் மூன்றிலொரு பங்கு நன்னடத்தை விருத்தி பற்றியதாகவே இருந்தது என ஆய்வொன்று தெரிவிப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

f.) **'தமது விழுமியங்களைத் தம் பிள்ளைகளுக்குத் திணிக்கும் உரிமை பெற்றோர் களுக்குக் கிடையாது' என்ற தவறான கருத்து.** பிள்ளைகள் தமது விழுமியங்களைத் தாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனச் சிலர் வாதிடுகின்றனர். உண்மையில் இவ்வாறு செய்வதற்கான வாய்ப்பு பிள்ளைகளுக்கு அரிதாகவே கிடைக்கிறது. சமூகத் திலுள்ள இன்னும் பலர் தம் சொந்த விழுமியங்களைப் பிள்ளைகளுக்குத் திணிக்க முற்படுவதே இதற்குக் காரணமாகும். கதை வசனம் எழுதுவோர், நடிக நடிகையர்கள், பாடகர்கள், விளம்பரம் செய்வோர், பாலியல் கல்வி வழங்குவோர் போன்ற பலரும் தமது சொந்த விழுமியங்களையெல்லாம் பிள்ளைகளின் மனதில் திணிக்க முயற்சிக்கும் போது பெற்றோர் மாத்திரம் நடுநிலையாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது நியாயமானதா?

g.) **'இரண்டு பெற்றாரைக் கொண்ட குடும்பத்தைப் போன்றே தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பமும் சிறந்தது' என்ற தவறான கருத்து.** நன்னடத்தையை உருவாக் குவது எப்படி என நாம் அறிந்திருந்தாலும் அது செய்வதற்குக் கஷ்டமான ஒரு பணியாகும். அமெரிக்கக் குடும்பங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை பாதிக்கப்படுமளவுக்கு விவாக ரத்து வீதம் மிக உயர்வாக இருக்கிறது. தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், போதைப் பொருட் துஷ்பிரயோகம், பால்ய குற்றச் செயல்கள், மனவெழுச்சிக் கோளாறுகள், வேண்டாத கர்ப்பங்கள் போன்றவற்றுக்குப் பலியாகும் ஆபத்து அதிகமாக இருக்கிறது. எல்லா வகையான குடும்பங்களையும் சேர்ந்த பிள்ளை களுக்கும் ஆரோக்கியமான முறையில் உளவியல் ரீதியாக இசைவாக்கமடையும் ஆற்றல் உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை.

கரிசனை மிக்க தனிப்பெற்றார் ஒருவர் அவ்வாறான கரிசனையற்ற இரு பெற்றார் குடும்பங்களை விட மேம்பட்ட முறையில் பிள்ளை வளர்ப்பைச் செய்ய முடியும். அத்துடன் ஒரு தனிப்பெற்றாருக்கு அவரது விரிந்த குடும்பத்தின் உறுப்பினர்களிடமிருந்து உதவியும் கிடைத்து அவருடைய வேலைத்தளமும் குடும்ப நேசமுடையதாக இருப்பின் அந்தத் தனிப் பெற்றார், அறிவுக் குறைபாடுடைய தாய் தந்தையர் இருவரையும் விடச் சிறந்த முறையில் பிள்ளை வளர்ப்பைச் செய்ய முடியும்.

h.) **'தூய சமயச் சார்பற்ற குடும்பமே சிறந்த உதாரணம்' என்ற தவறான கருத்து.** பண்டைய யூத, ரோம, கிரேக்க நாகரிகங்களிலும் 18ம், 19ம் நூற்றாண்டுகளின் அமெரிக்கா விலும் வீடு புனிதம் பொருந்தியதாகவே கருதப்பட்டது. பல சடங்குகளும் வேதநூல் வாசிப்புக்களும் வீட்டில் இடம்பெற்றன. வீட்டு வாழ்க்கையானது விசாலமான நோக் குடனும் குறிக்கோளுடனும் இணைந்திருந்தது. குடும்பத்தின் புனிதத்துவமும் வீட்டின் புனிதத் தன்மையும் இணைந்த நிலையில் பெற்றோருக்கு மேலதிக அதிகாரம் வழங்கப் பட்டதோடு அதனால் குடும்பப் பிணைப்புக்களும் வலிமை பெற்றன.

தமது பிள்ளைகளின் விசுவாசத்தையும் பற்றையும் பெற்றுள்ள குடும்பங்கள், தாம் முக்கியமான பணியொன்றில் ஈடுபட்டிருக்கின்றோம் என்ற உணர்வைக் கொண்டிருக்கும். அப்பணியானது ஒரு சமய விசுவாசத்தை அல்லது ஒரு நோக்கினைத் தொடர்ந்து நிலைபெறச் செய்வதாக இருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக இன்றைய குடும்பங்களுள் பெரும்பாலானவை இவ்வாறான எதனையும் செய்வனவாக இல்லை. அவை சிறு கோயில் களாகவோ சிறு அரசாங்கங்களாகவோ இல்லாது வெறுமனே சிறு ஹோட்டல்களாகவும் உண்டிச்சாலைகளாகவும் காணப்படுகின்றன. அங்குள்ளவர்கள் எவ்வித ஈடுபாட்டு உணர் வும் இல்லாமல் வெறும் தற்காலிகத் தரிப்பிடங்களாகவே வீடுகளைக் கருதுகின்றனர். உண்மையில், விழுமியங்களும் ஒழுக்கமுறைகளும் செல்லாக் காசுகளாக ஓரங்கட்டப் பட்டுள்ளன. எவ்விதக் கரிசனையும் இன்றித் தன்பாட்டில் ஒவ்வொன்றும் நடக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஒரு சமுதாயமாக இருந்த குடும்பத்தைத் தனது சொந்த விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் தனியாட்களின் தொகுப்பொன்றாக மாற்றியமைப்பது எது? நவீன அமெரிக்க உளவியலாளர்கள் பலர் மீதே இதற்கான பொறுப்பைச் சுமத்த வேண்டி யுள்ளது. அவர்கள் குடும்பத்தின் மீதோ திருமண உறவின் மீதோ அழுத்தத்தைக் கொடுக் காமல் அவற்றுக்குப் பதிலாக, பிரிந்து செல்வதையும் தனியாள் கோட்பாட்டையுமே வலியுறுத்தியுள்ளனர். நவீன அமெரிக்க உளவியலின் தந்தை எனக் கருதப்படும் Alfred Adler என்பவர் தனது உளவியல் கோட்பாட்டை 'தனியாள் உளவியல்' என்றே குறிப் பிட்டார். இங்கு மனிதரின் உளத்துண்டுதல்கள், உணர்வுகள், மனவெழுச்சிகள், நினைவு என்பன தனியாளின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே ஆராயப்படுகின்றன. இன்றைய அமெரிக்க வகுப்பறைகளில் 'நான்' என்ற கருத்துப்படிவமே வலியுறுத்திக் கூறப் படுவதாக சின்சினாற்றி பல்கலைக்கழகக் கல்வியியல் துறைப் பேராசிரியர் Dr. Sardar Tanveer கூறுகிறார். அங்கு மாணவர்களைப் பார்த்து "தீர்மானிக்க வேண்டியது நீங்களே- உங்கள் பெற்றார் அல்லர்"; "நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்" என்றெல்லாம் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஓர் ஆன்மீகச் சூழலில், உண்மையில் பிள்ளைகள் பெற்றாரின் கட்டளைகளுக்கு அடிபணிகிறார்கள் என்று சொல்வதை விட, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் புனித வேதநூலில் கூறப்பட்டுள்ளபடி இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். நடத்தையில் நல்லதையும் கெட்டதையும் பிரித்துக்காட்டும் தெளிவான சமய விதிகள் இருக்கும் நிலையில் பிள்ளை வளர்ப்பானது சமயச் சார்பற்ற பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு முறையை விட அதிகாரபூர்வமானதாக இருக்கின்றது.

குடும்பம், குடும்பச் சடங்குகள் என்பன பற்றி வலிமையான உணர்வுகள் காணப்படுகின்ற கீழைத்தேயப் பண்பாடுகளில் சமயச் சார்புடைய போக்கு மிகப் பரவலாகக் காணப்படுகிறது. இன்றைய அமெரிக்கக் குடும்பங்களில் அவ்வாறான சம்பிரதாயங்கள் எதுவும் எஞ்சியிருப்பதாகத் தெரியவில்லை. அவற்றில் தினமும் ஒழுங்காக மேற்கொள்ளப்படும் சடங்கு தொலைக்காட்சி பார்ப்பது மாத்திரமே. எவ்வாறாயினும் மேற்கத்தியப் பண்பாடுகளை விட இன்றைய கீழைத்தேயப் பண்பாடுகள் சிறப்பானவையாக இருக்கின்றன எனப் பொதுமைப்படுத்துவதும் தவறாக வே இருக்கும்.

குடும்பத்தின் 'சமூக உடன்படிக்கை' மாதிரியொன்று தலைதூக்கி வருவதனால் ஐக்கிய அமெரிக்காவில் குடும்பப் பிணைப்புக்கள் பலவீனமடைந்துள்ளன. இவ்வமைப்பில்

கலப்பற்ற கடமைப்பொறுப்புக்குப் பதிலாக பகுத்தறிவு ரீதியான சுயகரிசணையே முன்னுரிமை பெற்றுள்ளது. இக்குடும்பங்கள் பாசம், கடமை என்பவற்றின் பிணைப்பின் மீது அமைந்தனவாக இல்லாது வெறுமனே உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுப்பங்குடமைக் கம்பனிகள் போல் செயற்படுகின்றன. பிள்ளைகளை வளர்ப்பதற்கும் ஒரு திருமணஉறவு வாழ்நாள் முழுதும் நிலைத்து நிற்பதற்கும் தனிப்பட்ட அர்ப்பணிப்புக்கள் தேவை. கிரய-பயன்பாட்டு அடிப்படையில் நோக்கும் போது இது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது போல் தோன்றலாம்.

உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) அவர்களிடம் வந்த ஒரு மனிதர் தனக்குத் தன் மனைவி மீது அன்பில்லாத காரணத்தால் தான் அவளை விவாகரத்துச் செய்ய விரும்புவதாகக் கூறினார். அதனைக் கேட்ட உமர் (றழி), "உமக்குக் கேடு உண்டாகட்டும்! குடும்பங்கள் அன்பின் மீது மாத்திரம் தான் அமைக்கப்பட்டுள்ளன என நீர் நினைக்கின்றீரா? உமது கண்காணிப்புப் பொறுப்பும் பராமரிப்புக் கடமையும் எங்கே போய் விட்டன?" எனக் கேட்டார். (அல் ஹஷ்மி 1999)

சமயத்தில் உறுதியான ஈடுபாடுடைய அமெரிக்கக் கிறிஸ்தவக் குடும்பங்கள் தினமும் உணவுட்கொள்ள முன்னர் வந்தனை வழிபாடுகளைச் செய்வதோடு, இரவிலும் வந்தனை வழிபாடுகளில் ஒழுங்காக ஈடுபடுகின்றன. இவ்வாறான செயல்கள் அவர்களது வாழ்க்கையில் ஒரு நோக்கத்தையும் நல்லுணர்வையும் ஏற்படுத்துகின்றன. சமய வாழ்க்கையின் மத்தியஸ்தானமாக வீடு இருப்பதோடு அதனால் அது புனிதத்துவமும் பெறுகின்றது. அங்கு பிள்ளைகளின் ஒழுக்க மற்றும் ஆன்மீக விருத்திக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. பெற்றோருக்கும் ஏனைய மூத்த உறவினர்களுக்கும் மரியாதை கொடுப்பது எப்போதும் வலியுறுத்தப்படுகிறது. உறவினர்களுடன் நெருங்கிய தொடர்பு பேணப்படுவதோடு சமய விடுமுறைகளின் போது குடும்ப ஒன்றுகூடல்கள் இடம்பெறுகின்றன. இதே காரணத்தினால்தான் நடைமுறை சார்ந்த, பழைமை பேணும் யூத மக்கள் பெரிய நகரங்களின் சனத்தொகை அடர்த்திமிக்க பகுதிகளில் வாழ்ந்தாலும் கூட அவர்களது பிள்ளைகள் மத்தியில் போதைப்பொருள் உபயோகம், வன்முறைகள், பொறுப்பற்ற பாலியல் நடத்தைகள் போன்ற தீய பண்புகள் ஏனைய நகர்ப்புறப் பிள்ளைகளிடம் காணப்படுவதை விட மிகக்குறைவாகக் காணப்படுகின்றன. அமெரிக்க முஸ்லிம் குடும்பங்களைப் பொறுத்தமட்டிலும்கூட இந்நிலையே காணப்படுகின்றது.

Sandy Hook ஆரம்பப் பள்ளிப் படுகொலை தரும் பாடங்கள்

கடந்த 2012 டிசம்பர் 14ம் திகதி Connecticut மாநிலத்தின் New Town என்ற இடத்தில் உள்ள Sandy Hook ஆரம்பப் பள்ளியில் 20 மாணவர்களும் 6 பெண் பணியாளர்களும் ஒரு கொலை வெறியனால் சுட்டுக் கொள்ளப் பட்டனர். முன்னர் Colorado, Georgia, Kentucky, Arkansas, Virginia ஆகிய மாநிலங் களிலும் இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்றிருந்தன. இவ்வாறான நிகழ்வுகளுக்குத் தவறான நடத்தையே காரணம் எனக் காலஞ் சென்ற பேராசிரியர் தில் நவாஸ் ஸித்தீகி குறிப்பிட் டார். சில பகுப்பாய்வாளர்கள் இதற் குச் சிதறுண்ட குடும்ப அமைப்பே காரணம் என்றனர். இன்னும் சிலர் பொது ஊடகங்களில் வன்முறைக்குக் கூடுதலான இடம் வழங்கப்படுவதே காரணம் என்றனர். துப்பாக்கிகளையும் அது போன்ற ஆட்கொல்லி ஆயுதங்களையும் எளிதாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதையே இதற்குக் காரணமாகக் கூறினர் சிலர். எனினும்,

மேற்சொன்ன அனைவரது கருத்திலும் முக்கியமான விடயமொன்று தவற விடப்பட்டுள்ளது. ஒருவர் தன்னுடைய செயல்களுக்குத் தனிப்பட்ட பொறுப்புடையவராகவும் பொறுப்புக்கூற வேண்டியவராகவும் இருக்கிறார் என்ற உண்மையை இவர்கள் அனைவரும் மறந்துள்ளனர். எம்முடைய நம்பிக்கைகளும் நோக்கங்களும் மனப்பாங்குகளும் மாத்திரமன்றி எமது வார்த்தைகளும்கூட விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. பெற்றாருக்கு பேராசிரியர் ஸித்தீகி கூறும் அறிவுரைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- மனிதருடைய தொடர்பாடலும் கல்வியும் இடைத் தாக்கங்களும் பொருத்தமான விழுமியங்களை ஊக்குவிப்பனவாக அமைய வேண்டும்.

- நல்லவை, தீயவை என்பன பற்றிய நம்பிக்கைகளையும் நியமங்களையும் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

- உண்மை என்றால் என்ன என்பது பற்றிச் சார்பு ரீதியாக வியாக்கியானம் செய்வது சமூகத்தில் குழப்ப நிலையை உருவாக்கும். ஏதேனும் ஒன்று சரியானதா தவறானதா என்பது அதன் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்பட வேண்டும் (நிலையான கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு அல்ல) என்றே சார்பு நிலைக்கோட்பாட்டாளர்கள் கருதுகின்றனர்.

- ஓர் ஆரோக்கியமான பிள்ளை சகலருக்கும் உரிய கரு விழுமியங்களான உண்மை, நேர்மை, நியாயம், சமாதானம் போன்றவற்றைக் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும்.

- நல்லவை செழித்தோங்குவது போன்று செழித்தோங்கும் வாய்ப்பு தீயனவற்றுக்கு வழங்கப்படக் கூடாது. நாம் பிள்ளைகளுக்குச் சதாதகமான நம்பிக்கைகளைப் போதிப்பதோடு எதிர்மறையானவற்றை ஒழிப்பதற்கு இயன்றளவு உதவி செய்ய வேண்டும்.

குற்றவாளிகள் சமூகத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எனக்கூறி அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்குப் பதிலாக ஒவ்வொருவரையும் அவரவர் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுமாறு செய்தல் வேண்டும். நாம் எமது செயல்களை எமது அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்வது அவசியமாகும். எமது நிலைமையில் வேறொருவர் இருந்தால் இப்படித்தான் செய்திருப்பார் அல்லது இதைவிட மோசமாகச் செய்திருப்பார் என்றெல்லாம் உறுதிப்படுத்திக் கொள்ள முனையக்கூடாது. ஒழுங்கான பிள்ளைவளர்ப்பு இடம்பெறாத பட்சத்தில் இத்தகைய வன்முறையான குற்றச்செயல்கள் தொடர்ந்து இடம்பெறும் அல்லது இதைவிட அதிகரிக்கும் என்று தான் எதிர்பார்க்க முடியும்.

பிள்ளைகளுக்கு விழுமியங்களைக் கற்பித்தல்: பழைமைவாத - தாராண்மை விவாதம்

Chicago Tribune பத்திரிகையிš '*Only Way to Teach Values: Help Kids Discover Them*' என்ற தனது கட்டுரையில் Eric Zorn என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "விழுமியங்களைக் கற்பிப்பதற்கான ஒரே வழி பிள்ளைகள் தாமே அவற்றைக் கண்டுபிடிக்கச் செய்வதாகும். நற்பண்புகள், ஒழுக்க ரீதியான சிந்தனை, ஒழுக்கமான நடத்தை என்பவற்றின் விருத்தியை சமூகப் பழைமைவாதிகள் வலியுறுத்துகின்றனர். பிள்ளைகளால் எப்படிக் கணிதத்தைப் பிறர் உதவியின்றிக் கற்றுக்கொள்ள முடியாதோ, அதே போன்று இப்பண்புகளையும் அவர்களால் சுயமாய்ப் பெற்றுக்கொள்ள முடியாது. தற்போதைய சிதறிப்போன வேலைப்பளு மிக்க குடும்பங்களும், விழுமியங்களுக்கு அதிகம் மதிப்புக் கொடுக்காத ஜனரஞ்ஜசகக் கலாசாரமும் கொண்ட யுகத்தில், பள்ளிக்கூடத்துக்கு வெளியே நன்னடத்தை பற்றிய கல்வியை வழங்கலாம் என்று எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானதாகும்".

நன்னடத்தை பற்றிய கல்வி பள்ளிக்கூடங்களில் வழங்கப்பட வேண்டும் என்பதை Eric Zorn ஆதரிக்கின்றார். நன்னடத்தைக் கல்வியைப் பள்ளிக்கூடங்களில் மீள அறிமுகப் படுத்துவதை இடதுசாரிகள் எதிர்த்ததாக அவர் குறிப்பிடுகின்றார். அவ்வாறு அறிமுகப் படுத்துவது சிந்திக்காமல் ஒத்துப்போதல், குறுகிய மனப்பான்மை, சகிப்புத்தன்மை இல்லாமை என்பவற்றைக் குறிப்பதாக அவர்கள் கருதினர்.

பிள்ளைகளும் நுண்கணிதமும் ஒழுக்கவியலும்

நுண்கணிதத்தின் கோட்பாடுகளைப் பிள்ளைகள் தாமே கண்டு பிடித்துக் கொள்ள வேண்டுமென நாம் எதிர்பார்ப்பதில்லை. அதே போன்று ஒழுக்கவியல், அறிவியல் முதலியவற்றைப் பெற்றார் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்.

Larry Lucci என்பவரை Zorn பின்வருமாறு மேற்கோள் காட்டுகின்றார். "பிள்ளை களுக்கு உண்மையைக் கரண்டியால் ஊட்டுவது போன்று ஊட்ட முடியாது என்பது தற்போது அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. ஆழமாகச் சிந்தித்து உண்மையைக் கண்டு கொள்ளும் வண்ணம் அவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அதே வேளையில் அவர்கள் வளர்ந்தவர்கள் அல்லர் என்பதையும் அவர்களுக்கு வழிகாட்டு வதில் கல்வியியலாளர்களுக்கு நிச்சயமான பங்கு உண்டு என்பதையும் நாம் மறக்க முடியாது. இதற்கான ஆரம்பப் படியாக அனைவரும் ஏற்றுக்கொள்கின்ற விழுமியங்கள் சமூகத்திடம் காணப்பட வேண்டும்".

"எனினும் தமக்குச் சொல்லப்பட்டவற்றைச் செய்யுமாறு பிள்ளைகளை வற்புறுத்தி ஏவுவதாகவும் வெளிப்படையாகத் தூண்டுவதாகவும் இது அமையக்கூடாது. இந்நிலை ஏற்படாமல் நன்னடத்தை பற்றிய கல்வியை வழங்குவது இன்னும் ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது" என்கிறார் Alfie Kohn என்பவர். தற்போது நன்னெறிக் கல்வி தொடர்பாக, கரட் கிழங்கும் தடியும் போன்ற அணுகுமுறையே கடைப்பிடிக்கப்படுவதாகவும் இதன் விளைவாக, நற்பண்பு என்பது ஏற்கனவே யாரோ தயாரித்துத் தந்த உண்மைகளை எவ்விதக் கேள்வியுமின்றி ஏற்றுக்கொள்வதே எனப் பிள்ளைகள் கருதும் நிலை ஏற்படு வதாகவும் Kohn வாதிடுகிறார். ஒருவர் நற்பண்புகள் பற்றி இவ்வாறு விளங்கிக் கொள்வதனால் மாத்திரம் அவை அவரது நடத்தையில் வேரூன்றிப் போவதில்லை. அத்தோடு அவரில் நல்ல ஒழுக்கப் பண்புகளை ஏற்படுத்தப் போவதுமில்லை.

வறுமை , நோய், வீடின்மை, துஷ்பிரயோகம் முதலியவற்றால் வாடும் பிள்ளைகளைப் போன்றே நல்ல ஒழுக்கக்கல்வி பெறாமல் வளரும் பிள்ளைகளும் பல பிரதிகூலங்களுக்கு ஆளாகின்றனர்.

நன்னடத்தை பற்றிய கல்வியைப் பள்ளிக் கூடங்களில் அறிமுகப்படுத்த வேண்டும் என்பது அவசியமான, வரவேற்கத்தக்க கருத்தாகும். நன்னடத்தைக் கல்வி அறவே இல்லா மற் போவதை விட இது எவ்வளவோ மேலானது! எனவே, இவ்விடயம் தொடர்பான நடுநிலையான போக்கு பின்வருமாறு அமையலாம்:

- பிள்ளைகளுக்கு விழுமியங்களைத் திணிக்க வேண்டாம்; அதேவேளை அவர்களைத் தனியே விட்டுவிடவும் வேண்டாம். ஏனெனில் அவர்கள் இள வயதினர்களாக இருப்ப தனால் அவர்களுக்கு வழிகாட்டல் தேவைப்படுகிறது.

- முடியுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் விழுமியங்களைப் பிள்ளைகள் தாமே கண்டறிந்து கொள்வதற்கு வழிகாட்டி உதவும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு.

குடும்பங்கள்: முஸ்லிம் நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும்

எமது மனித அறிவு மட்டுப்படுத்தப்பட்டது; பரிபூரணமற்றது. குடும்பங்கள் எங்கு வாழ்ந்த போதிலும் அவை எதிர்நோக்குகின்ற சவால்கள் நிறைய இருக்கின்றன. எனினும், சில குடும்பங்கள் ஏனையவற்றை விடப் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றன. நகர்ப்புறக் குடும்பங்களில் நகரவாக்கம், கைத்தொழில் மயமாதல், மதச்சார்பற்ற நிலைமை என்பன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் பெரிய நகரங் களில் காணப்படும் சில பிரச்சினைகள் கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

- திருமணத்துக்குப் புறம்பான பாலுறவு கவர்ச்சியானதாகவும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் இருப்பதன் விளைவாக கட்டுப்பாடற்ற ஆண்- பெண் உறவுகளுக்கு வழி ஏற்பட்டுள்ளது.
- கலப்பு நடனங்கள், கலப்பு நீச்சல், உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய பாலியல் சார்ந்த இசை என்பன பரவலாகக் காணப்படுகின்றன.
- ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக நாள், நேரம் குறித்துச் சந்தித்துக் கொள்ளும் dating என்ற நடைமுறை சமூக அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமொன்றாகப் பெற்றோராலும் போதிக்கப்படுகிறது. இவ்வாறான சந்திப்பில் முத்தமிடல் உட்பட பல்வேறு உடல் சார்ந்த சல்லாபங்கள் இடம்பெறுகின்றன.
- பொதுக் குளியலறைகளிலும் உடை மாற்றும் அறைகளிலும் நிர்வாணமாயிருப்பது வழக்கமாகி விட்டது. சில பள்ளிக்கூடங்களில் கழிவறைகளுக்குக் கதவுகள் இல்லை. இவ்வாறான இடங்களில் அந்தரங்கம் பேணப்படுவதில்லை.
- திருமணத்துக்கு முன்பு பாலுறவைத் தவிர்ப்பது பற்றிப் போதியளவு வலியுறுத்தப் படவில்லை. சில பள்ளிக்கூடங்கள் மாணவர்களுக்கு condoms எனும் ஆணுறைகளை விநியோகிக்கின்றன. சில ஆலயங்கள் கூடத் திருமணமாகாத இளஞ்சோடிகளுக்கு இவற்றை வழங்குகின்றன. "நீங்கள் விரும்பியவாறு உணர்வுகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளுங்கள்" எனச் சில ஆசிரியர்கள் தம் மாணவர்களுக்கு எவ்விதமான நன்னெறி பற்றிய கட்டுப்பாடுகளுமின்றிக் கூறுகின்றனர். காம வேட்கையையும் ஆசைகளையும் அடக்கி வைக்காது வெளிப்படுத்துவதே நல்லது எனப் போதிக்கின்றனர். இந்நிலையில் இறுதியான அதிகாரம் தனியாளுக்கே இருக்கின்றது- இறைவனுக்கல்ல எனப் பிள்ளைகள் கற்றுக்கொள்கின்றனர்.
- மதுபானம் அருந்துவது பொதுப் பழக்கமாகிச் சகித்துக்கொள்ளப் படுவதோடு ஊக்குவிக்கவும் படுகிறது.

- போதைப்பொருள் துஷ்பிரயோகம் எங்கும் பரவியுள்ளது. துப்பாக்கிகளும் வன்முறையும் பள்ளிக்கூடங்களிலும் பொது இடங்களிலும் பிள்ளைகளிடையே பொதுவானவையாக இருக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வன்முறையைத் தூண்டுகின்றன.
- கருச்சிதைவு பரவலாகக் கையாளப்படுகிறது. குடும்பத்தின் பருமன் சிறிதாகிக்கொண்டே வருகிறது. இதனால் விரிந்த குடும்பத்துக்குப் பதிலாகக் கருக்குடும்பம் உருவாகிறது.
- பாலியல் கவர்ச்சியை நாடிப் பல ஆண்கள் இறுக்கமான உடைகளை அணிவதோடு பெண்கள் செயற்கை அலங்கரிப்பையும் நறுமணப்பொருட்களையும் நாடுகின்றனர். எதிர் பாலரைக் கவருவதற்காகப் பலர் அரைகுறை ஆடைகளை அணிகின்றனர். பிந்தித் திருமணம் செய்தல் ஊக்குவிக்கப் படுவதனால் பொறுப்பற்ற பாலியல் நடைமுறைகளுக்கு வழி ஏற்படுகிறது.
- விவாகரத்து வீதம் உயர்வாக இருப்பதோடு தனிப்பெற்றார் குடும்பங்கள் விரைவாக அதிகரித்து வருகின்றன.
- சிறு பராயத்திலேயே பெற்றோராக மாறுவது பொதுவானதாகக் காணப்படுகின்றது. பதின்ம வயதுத் திருமணங்கள் ஊக்குவிக்கப்படாததனால் மணமாகாத தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
- தன்னினச்சேர்க்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் சாதாரணமானதாகவும் சட்டப்பூர்வமான தாகவும் கருதப்படுவதோடு பல மாநிலங்கள் ஒரே பால் திருமணங்களைச் சட்டபூர்வமாக்கி யுள்ளன.
- முதியவர்கள் தமது பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் வாழ்ந்ததற்குப் பதிலாகப் பராமரிப்பு நிலையங்களில் சேர்க்கப்படுகின்றனர்.
- திருமணத்துக்கு முந்திய கன்னித்தன்மை அரிதாகி வருகிறது. வயது இருபதுகளில் கன்னியாக இருப்பவள் கவர்ச்சியற்றவளாகவோ விரும்பப்படாதவளாகவோ கருதப்படுகிறாள். பெரும்பாலானோர் திருமணத்துக்கு முன்பே பாலுறவில் ஈடுபடுகின்றனர். பிரமச்சாரியர் சிறுபான்மையினராகவே இருக்கின்றனர்.
- குடும்ப அமைப்பு படிப்படியாகச் சிதைந்து வருவதோடு குடும்பப் பிணைப்புக்களும் விழுமியங்களும் நலிவடைந்து வருகின்றன.
- இணங்கி வருகின்ற வளர்ந்த எவருடனும் பாலியல் திருப்தி பெறுவது முற்றிலும் ஒருவருடைய தனிப்பட்ட விவகாரமாகக் கருதப்படுகிறது.
- AIDS உட்பட பாலுறவின் மூலம் பரவும் நோய்கள் (STDs) பொதுவானவையாக உள்ளன.
- குடும்பங்கள் தம் தொழில்களையும் வாழிடங்களையும் அடிக்கடி மாற்றிக்கொள்கின்றன. இதனால் அவற்றின் நகரும் தன்மை அதிகரித்துள்ளது.
- பெண்கள் பலர் தம்மிலேயே தங்கியிருக்க வேண்டியவர்களாக உள்ளனர். உறவினர்களில் எவரும் அவர்களுடைய பாதுகாவலராக இருந்து உள்ளத்தாலும் பணத்தாலும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் பொறுப்பை ஏற்க முன்வருவதில்லை.
- பெண்களும் ஆண்களும் அதிக சுதந்திரமுடையவர்களகவும் ஆபத்தை எதிர்கொள்ளத் தயாரானவர்களாகவும் இருக்கின்றனர். அதிகமான குடும்பங்களில் கணவன், மனைவி இருவரும் தொழில் புரிபவர்களாக இருக்கின்றார்கள்.

மறுபுறமாக நோக்கும் போது ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நகர்ப்புறக் குடும்பங்கள் பின்வரும் அனுகூலங்களைக் கொண்டிருக்கின்றன

- சமூக விவகாரங்களில் மக்களின் பங்களிப்பு அதிகம் உண்டு. அத்தோடு, ஏனையவர்களின் உரிமைகளும் மதிக்கப்படுகின்றன.
- மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கின்றனர்.
- எழுத்தறிவு வீதம் மிக உயர்வாக இருக்கின்றது.

- சமூக சேவைகளிலும் பொது வேலைகளிலும் கூடுதலான பங்கேற்பு இடம் பெறுகின்றது. குடும்பப் பிணைப்புக்கள் நலிவடைந்திருப்பினும் சமூக நிறுவனங்களில் தங்கியிருக்கும் தன்மை பொதுவாகக் காணப்படுகின்றது.
- கூடுதலான சுதந்திரம் இருப்பதோடு தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்குப் பலவிதமான மாற்று வழிகளும் காணப்படுகின்றன.

ஒப்பீட்டளவில் முஸ்லிம் உலகைச்சேர்ந்த குடும்பங்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கின்றன.

- உறவினரிடையே திருமணம் மிகப் பொதுவாக இடம்பெறுகிறது.
- பொதுவாகக் குடும்பங்கள் ஆதிக்கம் உடையனவாகவும் பாதுகாப்பனவாகவும் இருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது இக்குடும்பங்களின் குழந்தைகள் சுய நம்பிக்கை, துணிவு, புத்தாக்கத்திறன் என்பவற்றில் குறைபாடுடையவர்களாக உள்ளனர். தம் தலைவர் களுடனும் மூத்தவர்களுடனும் முரண்பட நேரிடுமோ என அவர்கள் அஞ்சுகின்றனர்.
- சமூக வேலைகளும் குழு மனப்பான்மையும் நலிவாக உள்ள அந்த சமூகத்தில் உறுதியான குடும்பப் பிணைப்புக்கள் மாத்திரமே பாதுகாப்புக்கு இறுதி உத்தரவாதமாக இருக்கின்றன.

  குடும்பத்தில் தனியாள் முகாமை முறை காணப்படுவதோடு கலந்தாலோசனை சிறிய அளவிலேயே இடம்பெறுகின்றது.
- சமயப்பற்றுள்ள முஸ்லிம் குடும்பங்கள் பல ஏனையோரைக் கவராதனவாகவும் செயலிழந்தும் காணப்படுகின்றன. சமய நிகழ்ச்சிகள் வெறும் சடங்குகளாக இருக்கின்றனவே அன்றி மகிழ் வூட்டும் ஆன்மீக வைபவங்களாக அமைவதில்லை.

கூடுதலான முஸ்லிம் குடும்பங்கள் இப்போது நகர்ப்புறங்களில் வசிப்பதனால் நகர்வாழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சிரமங்களை இனங்கண்டு கொள்வது முக்கியமாகும். நகர்ப்புறங்களில் பிள்ளை வளர்ப்பு சிரமம் நிறைந்ததாக இருக்கிறது.

பிரிட்டனில் வாழும் முஸ்லிம்களின் கதைகள்

ஈராக்கிலுள்ள மோசுல் நகரைச் சேர்ந்த பக்ரி என்பவர் இங்கிலாந்திலுள்ள புகழ் பெற்ற இராணுவக் கல்லூரியொன்றில் பயின்று வந்தார். கல்லூரிக் குளியலறையில் அவரைத் தவிர அனைவரும் நிர்வாணமாகவே குளித்தனர். அவர் தனது உள்ளாடையை அணிந்திருந்தார். இதனைக் கண்டு ஆச்சரியப்பட்ட அவரது மேலதிகாரி ''நீர் ஏன் உமது உள்ளாடையைக் களையாமல் இருக்கின்றீர்? உமக்கு ஆணுறுப்பு இல்லையோ?'' எனக் கேட்டார். அதற்கு ''முஸ்லிம்கள் தமது அந்தரங்கப் பகுதிகளை வெளிக்காட்டுவதில்லை. ஏனெனில், அந்தரங்கத்தைப் பேணுவது மிக முக்கியமானது'' என பக்ரி விளக்கமளித்தார்.

முஹம்மத் என்பவர் இங்கிலாந்திலுள்ள பர்மிங்ஹம் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். அவர் தங்கியிருந்த வீட்டுச்சொந்தக்காரி ''ஏன் உமக்குக் காதலி ஒருத்தி இல்லை? நீர் சமபால் கவர்ச்சியுடையவரா?'' எனக் கேட்க, ''இஸ்லாத்தில் சட்ட ரீதியான துணைகளுக்கிடையே மாத்திரமே பாலுறவு இருக்க முடியும்''என அவர் விளக்கமளித்தார்.

எந்தக் குடும்ப அமைப்பு சிறந்தது என்பதைக் காட்டுவதற்காக மேற்சொன்ன பொதுமைப்பாடுகள் தரப்படவில்லை. இருவகை முறைகளிலும் பிள்ளைவளர்ப்பைத் திருத்தியமைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் பற்றிச் சிந்திப்பதற்கும் ஆய்வு செய்வதற் கும் இவை வழியமைக்கின்றன. உண்மையில் முஸ்லிம் உலகில் குடும்பங்களின் மீதும் பிள்ளை வளர்ப்பு முறையின் மீதும் மேற்கத்திய பண்பாட்டின் செல்வாக்கு வலிமையாகக் காணப்படுகின்றது. இச்செல்வாக்கு சாதகமானதும் பாதகமானதுமான விளைவுகளை உருவாக்கியுள்ளது.

மதச்சார்பற்ற கல்வி முறைகளில் இறைவனுக்குப் பதிலாக மனிதனே இறுதி அதிகாரம் உள்ளவனாகக் கருதப்படுகின்றான். அத்தோடு லௌகீகமே முதன்மையான கோட்பாடாக ஆக்கப்பட்டுள்ளது. அகிலம் பற்றிய விஞ்ஞான ரீதியான விளக்கம் காரண- காரியத் தொடர்பை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அகிலத்தின் சடத்துவ இயல்பு பற்றி அற்புதமான விபரங்களையெல்லாம் இந்த விஞ்ஞானக் கல்வி எமக்குத் தருகின்றது. எனினும், எமக்குப் புலனாகும் விடயங்கள் பற்றியும் அவற்றுக்குப் பின்னால் மறைந்திருப்பவை பற்றியும் சமநிலையானதும் பரிபூரணமானதுமான கண்ணோட்ட மொன்றைத் தர அது தவறிவிட்டது. முஸ்லிம்களின் உலகக் கண்ணோட்டமானது இறை வனின் ஏகத்துவம் (தௌஹீத்) பற்றியும் மனிதனின் நம்பிக்கைப் பொறுப்பு (அமானாஹ்) பற்றியும் பூமியை விருத்தி செய்வதன் பொறுப்பு பற்றியும் ஏற்றுக் கொள்வதோடு மறுமையில் முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டியதையும் அங்கீகரிக்கின்றது.

முஸ்லிம் பெற்றாரின் பிள்ளை வளர்ப்பில் மேற்கத்திய செல்வாக்கு

மேற்கத்திய ஊடகங்களின் ஊடுருவல் காரணமாகவும் கல்வித்துறையில் அவர்களது ஆதிக்கம் காரணமாகவும் சமயச் சார்பற்ற நடைமுறைகள் முஸ்லிம் குடும்பங்களின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அறிஞர் அபூ அல் ஹஸன் அல் நத்வி அவர்கள் 'முஸ்லிம் அரசாங்கங்களிலும் நாடுகளிலும் இலவச இஸ்லாமியக் கல்வியை நோக்கி' என்ற தனது அறபு நூலில் எமது கல்வி முறை முற்றாகச் சீர்திருத்தப்பட வேண்டும் என்கிறார். ஒருவரின் ஆளுமையை நிலைகுலையச் செய்து இறைபக்தியை நலிவுறச் செய்யக்கூடிய மேற்கத்தியப் பாடவிதானங்களின் பாதகமான விளைவுகள் பற்றி அவர் எடுத்துக் காட்டுகிறார். இவ்வகைக் கல்வியின் காரணமாக விழுமியங்களற்ற பட்டதாரிகள் பரம்பரையொன்று உருவாக்கப் பட்டுள்ளது. இவ்வகைப் பள்ளிக்கூடங்களால் உருவாக் கப்பட்ட ஆட்சியாளர்களும் நிர்வாகிகளும் சமயத்துக்கு எதிராகப் போராடுபவர்களாக வும் விசுவாசிகளை அடக்கி ஒடுக்குபவர்களாகவும் தமது நாடுகளை ஒரு பொருளாதார அழிவை நோக்கிச் செலுத்துபவர்களாகவும் உள்ளனர். முஸ்லிம் சமூகங்களின் மீது திணிக்கப்பட்ட கல்வி முறையினால் தோற்றுவிக்கப்படும் இளம் பரம்பரையினர் சிந்தனைத் தெளிவு அற்றவர்களாகவும் நன்னெறி நோக்கங்களுக்காகப் போராட முடியாதவர்களாகவும் லௌகீகத்தையும் ஆன்மீகத்தையும் உள்ளடக்கிய சமநிலையான உலகக் கண்ணோட்டமொன்றை விருத்தி செய்துகொள்ள இயலாதவர்களாகவும் இருக்கின்றனர்.

ஏனைய பண்பாடுகளுக்கு நல்லனவாக இருப்பவை முஸ்லிம் சிறார்களுக்குப் பொருத்த மற்றவையாக இருக்கலாம். ''ஜப்பானியப் பள்ளிக்கூடங்களின் மகத்தான முன்னேற் றத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் அமெரிக்க அறிஞர்கள் ஜப்பானுக்கு நல்லதாக இருப்பவை எல்லாம் ஐக்கிய அமெரிக்காவுக்குப் பொருத்தமாக இருக்க முடியாது; ஏனெனில், அவை இரண்டும் வித்தியாசமான பண்பாட்டுத் தொகுதிகள்'' எனக்கூறினர். பண்பாடுகளுக்கு இடையே குருட்டுத்தனமாகப் பிரதி பண்ணுவது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். எனவே, இந்த விடயத்தில் பெற்றோர் மிக நுணுக்கமாகவும் அறிவு பூர்வமாகவும் விவேகத்துடனும் நடந்து கொள்வது அவசியம்.

மேற்கத்தியச் செல்வாக்கின் பரவுதலுக்கும் நவீனத்துவத்துக்கும் வெவ்வேறு நாடுகள் வித்தியாசமான முறைகளில் விளைவு காட்டுகின்றன. பேராசிரியர் அலீ மஸ்ரூவி இதனைப் பின்வருமாறு விளக்குகிறார். ''பண்பாட்டு ரீதியில் அவற்றைப் பின்பற்றாமல் பொருளா தார ரீதியில் நாம் நவீனத்துவம் அடைய முடியுமா?'' என்ற கேள்வி ஜப்பான், துருக்கி, ஆபிரிக்கா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடம் வினவப்பட்ட போது மூன்று வித்தி யாசமான பதில்கள் கிடைத்தன. ''ஆம்; நாம் ஜப்பானிய சாராம்சத்தைப் பேணிக் கொண்டே மேற்கத்தியத் தொழிநுட்பங்களைப் பின்பற்ற முடியும்'' என்றனர்

ஜப்பானியர்கள். முஸ்தபா கமால் அதா துர்க்கின் போதனைகளைச் சுமந்து நின்ற துருக்கியர் ''இல்லை; மேற்கத்தியப் பண்பாட்டைப் பின்பற்றுவதே நவீனத்துவத்துக்கான ஒரேயொரு வழி'' என்றனர். கமாலின் கோட்பாட்டைப் பின்பற்றிய துருக்கி 20ம் நூற்றாண்டு முழுவதிலும் தன் மக்கள் மீது மேற்கத்தியப் பண்பாட்டைத் திணிப்பதற்குத் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்தது. துருக்கி மொழியின் அறாபிய அரிச்சுவடியை நீக்கிவிட்டு லத்தீன் எழுத்துக்களை அறிமுகப்படுத்தியது; ஆண்கள் தொப்பி அணிவதைத் தடை செய்தது; பெண்கள் மேற்கத்திய ஆடைகளை அணிய வேண்டுமென வற்புறுத்தியது. இவ்வாறு தீவிரமான சமயச் சார்பற்ற அரசொன்று அங்கு நிலை நாட்டப்பட்டது. காலனித்துவகால மற்றும் காலனித்துவத்துக்குப் பிந்திய காலத்து ஆபிரிக்கர்கள் ''மேற்கத்தியப் பண்பாடுகளை மட்டும் அமுல் படுத்தினால் போதும்; பொருளாதாரத்தை நவீனமயமாக்குவது அவசியமில்லை'' என்றனர்.

சுதந்திரமா? உண்மையா?

பிள்ளை வளர்ப்பில் ஒரு முக்கிய பிரச்சினை தனிப்பட்ட சுதந்திரம் பற்றியதாகும். நவீன கைத்தொழில்மய நாடுகளில் சுதந்திரம் என்பது ஒரு குறிக்கோளாக மாறியிருக்கின்றது. பல பெற்றார்கள் தம் பிள்ளைகளுக்குக் கட்டுப்பாடில்லாத சுதந்திரத்தை வழங்குகின்றார்கள். இது பிள்ளையின் சுயநலமான ஆசைகளை ஊக்குவிப்பதனால் இறுதியில் பெற்றாருக்கே வினையாக முடிகிறது. கட்டுப்படுத்தப்படாத ஆசைகள் அபாயமானவை.. ஏனெனில், அவை இறைவனின் நெறிமுறை சார்ந்ததும் கருணை மிக்கதுமான வழிகாட்டலை மீறக்கூடும். அத்தோடு மக்களை லௌகீக வாழ்க்கையின் இன்பங்களுக்கு அடிமையாக்கிவிடும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் கேளிக்கைகளும் விட்டகல முடியாதவையாகி பிள்ளையினது வாழ்க்கையின் இறுதி நோக்கமாக மாறிவிடும். இஸ்லாத்தில் தனிப்பட்ட பொறுப்புணர்வும் பொறுப்புக்கூறலும் வலியுறுத்தப் பட்டுள்ளன. ''நாளை நாம் இறக்கப்போகின்றோம். எனவே, இந்தக் கணத்துக்காக வாழ்ந்து கொள்வோம்'' என்ற பொறுப்பற்ற மனப்பான்மையினால் மேற்சொன்ன பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்க முடியாது. மனிதர்களின் இந்தப்போக்கை அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகிறது.

> தன்னுடைய (மனோ) இச்சையை(த் தான் வணங்கும்) தெய்வமாக எடுத்துக்கொண்டானே, அவனை நீர் பார்த்தீரா? (அவன் வழி கெடுவதற்கு உரியவன் என்ற தன்) அறிவினால் அல்லாஹ் அவனைத் தவறான வழியில் விட்டு விட்டான்; அவனுடைய செவியின் மீதும் அவனுடைய இதயத்தின் மீதும் முத்திரையிட்டு விட்டான்; அன்றியும் அவனுடைய பார்வையின் மீதும் ஒரு திரையை ஆக்கிவிட்டான். அல்லாஹ்வுக்குப் பிறகு அவனுக்கு நேர்வழி காட்டுபவர் யார்? நீங்கள் நினைவு கூர்ந்து உணர மாட்டீர்களா?
>
> ''இது நமது இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு (வாழ்க்கை) இல்லை; இதில் தான் நாம் இறந்து விடுகின்றோம்; இன்னும் ஜீவிக்கின்றோம்; காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை'' என்றும் அவர்கள் கூறுகின்றனர்; அது பற்றி எவ்வித அறிவும் அவர்களுக்கில்லை. அவர்கள் (வீண் கற்பனையாக) எண்ணுகிறார்களே தவிர வேறு இல்லை.
>
> (அல் குர்ஆன் 45: 23- 24)

ஆசைகளிலிருந்து விடுதலை பெறுவது உள்ளார்ந்த அமைதிக்கு வழி வகுக்கும்.
- தாவோ மத ஸ்தாபகர் லாவுட்ஸு கி.மு. 6ம் நூற்றாண்டு-

தன்னைக் வெற்றிகொண்டு ஆள்வதே வெற்றிகளுள் முதன்மையானதும் சிறப்பானதும் ஆகும். - கிறேக்க தத்துவஞானி பிளேட்டோ-

சுதந்திரம் என்பது விலைமதிக்க முடியாத ஓர் அருட்கொடையாகும். அதனைப் பொறுப்பற்ற முறையில் சரி பிழை பார்க்காமல் இன்ப நோக்கங் களுக்காக மாத்திரம் பயன்படுத்தக் கூடாது. சுதந்திரம் என்பது உன்னத மான ஓர் இலட்சியமாகும். ஏனெனில், அதன் மூலம் நாம் உண்மையைத் தேடவும் அதனைக் கண்டுகொள்ளவும் பின்னர் தன்வயப்படுத்திக் கொள்ள வும் முடிகிறது. உண்மையைக் கண்டு பிடிப்பதே மனிதனின் அடிப்படை யான தேடுதலாக அமைந்திருக்கின்றது. இது மிக உயர்வான, பெறுமதி மிக்க ஓர் இலக்காகும். சுதந்திரம் பயன் தரும் நோக்கங்களுக்காக விவேகத்தோடு பயன்படுத்தப்படும் போது அது எமது சிருஷ்டியாளனிடமிருந்து வந்த பெறுமதி மிக்க அருட்கொடையாக அமைந்து விடுகிறது. சரியானதும் திருத்தமானதுமான செயல்களைத் தேர்ந்தெடுக்கவும் தீங்கானவற்றையும், அழிவுக்குரியவற்றையும் தானே விரும்பித் தவிர்ந்து கொள்ளவும் உரிய ஆற்றலை மனிதனுக்கு அது வழங்குகிறது.

நல்ல பழக்க வழக்கங்களை விருத்தி செய்து கொள்வதற்கும் பொருத்தமான தெரிவு களை மேற்கொள்வதற்கும் மிக உயர்ந்த விழுமியமாக உண்மையை மதிப்பதற்கும் பிள்ளைக்கு நாம் வழிகாட்ட வேண்டும். சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு முன்னர் இவை மனச்சாட்சியில் பதிக்கப்பட வேண்டும். இறைவனின் படைப்புக்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எல்லை உண்டு. எனவே, மனித சுதந்திரம் சீர்படுத்தப்பட்டதாகவும் ஆக்கபூர்வ மானதாகவும் அமைதல் அவசியம். நன்னெறிசார்ந்த வழிகாட்டல்களுக்கு ஏற்பவே அது வரையறுக்கப்படும். இறை வேதத்துக்கும் இறைத்தூதரின் வழிமுறைகளுக்கும் ஏற்ப உருவாக்கப்பட்ட விழுமியத் தொகுதி ஒன்றின் அடிப்படையில் பொருத்தமான மனப்பாங்குகளையும் நம்பிக்கைகளையும் பிள்ளைகளில் விருத்தி செய்ய உதவுவது பெற்றோரின் பொறுப்பாகும்.

இறைவனை மகிழ்விக்கும் வகையில் எமது சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண்டு மாயின் உண்மையான தெய்வீக அறிவை நாம் பெற்றுக்கொண்டால் மட்டும் போதாது; மனித இயல்புகள் பற்றிய அறிவையும் நாம் பெற்றாக வேண்டும். இவ்விரு வகை அறிவை யும் நாம் ஒன்றிணைப்பதன் மூலம் குருட்டுத்தனமாக நடந்து எமது சூழலையும் எம்மையும் அழித்துக்கொள்வதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். எல்லாவற்றையும் நன்கு அறிந்தவன் எம்மைப் படைத்தவனே. எம்மைச் சரியான பாதையில் வழிநடத்தும் ஆற்றல் அவனுக்கு மாத்திரமே உண்டு. ஆய்வு, விஞ்ஞானரீதியான பரிசோதனைகள், அறிவு என்ப வற்றின் மூலம் உண்மையான தெய்வீக வழிகாட்டலை நாம் நெருங்க முடியும். இதன் மூலமே எமது கேள்விகளுக்கான சரியான விடைகளைக் காலப்போக்கில் நாம் கண்டறிந்து கொள்ள வழியேற்படும்.

குடும்பத்தை நாம் ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். குடும்ப அலகு அவசிய மானது என்றும் அது இல்லாமற் போனால் சமூகமே சரிந்து விழும் என்றும் நவீன உளவியலாளர்கள் பலரும் சமூகவியலாளர்கள் பலரும் கூறுகின்றனர். குடும்ப அமைப்பின் அவசியத்தை ஆரம்ப காலம் தொட்டே மனித சமுதாயம் புரிந்து கொண்டிரா விட்டால் இன்று உயிரோட்டமுள்ள சமூகமொன்று இருந்திருக்க முடியாது. நேர்மை, நம்பிக்கைப் பொறுப்பு, உயிருக்கும் உடைமைகளுக்கும் மதிப்பளித்தல், பாலியல் ரீதியான சுய கட்டுப்பாடு, சமத்துவம், அடக்குமுறையிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு

அடிப் படை விழுமியங்கள் மனிதன் பிழைத்து வாழ்வதற்கு அவசியமான மூலாதாரத் தேவைகளாக இருக்கின்றன. இந்த விழுமியங்கள் இன்றிச் சமூகம் செழித்தோங்க முடியாது. குடும்பம்தான் இவ்விழுமியங்களைப் போஷித்து வளர்க்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த விழுமியங்கள் மனித சமுதாயத்துக்கு மிக முக்கியமானவையாக இருப்பதனால் மனிதர்களே அவற்றைக் கண்டறிந்து கொள்ளும் வரையில் காத்திராமல் இறைவன் அவற்றை அவர்களது உள்ளார்ந்த இயல்புகளாக வைத்திருக்கிறான். அத்தோடு, மனித சமுதாயத்தின் ஆரம்பம் முதல் இவை இறை அறிவிப்பு மூலம் மனிதர்களுக்குத் தெளிவாக்கப்பட்டுள்ளன. பூமியில் மனித வாழ்க்கையும் சமூக அமைப்பும் செழித்தோங்கச் செய் வதே இதன் நோக்கமாகும்.

மனித குலத்தின் தந்தை நபி ஆதம் (அலை) அவர்களுக்கும் முதற் தாயான ஹவ்வா (அலை) அவர்களுக்கும் இந்த நிலையான விழுமியங்கள் போதிக்கப்பட்டதால் அவர்கள் அவற்றைத் தம் பிள்ளைகளுக்குக் கற்பித்தனர். அவ்வாறு செய்ததன் மூலம் மனித இனம் முழுவதற்கும் இப்போதனைகள் கிடைத்தன. வாழ்வின் புதிய இயல்பு பற்றி காபீல், ஹாபீல் ஆகியோரின் கதையினூடாக இறைவன் எமக்கு விளக்குகின்றான்.

இறை வெளிப்பாடு என்பது ஒரு பாலைவனத்துக்குக் குறுக்காக ஆட்களை வழி நடத்திச் செல்லும் அறிவுமிக்க வழிகாட்டி ஒருவருக்கு ஒப்பானது. அது இல்லாதிருந்தால் மனித இனம் வழிதவறி அழிந்து போயிருக்கும். சரியான முறையில் வழி நடத்தப்பட்ட சுதந்திரமானது நாகரிகமான பிள்ளைகளையும் குடிமக்கள் சமூகத்தையும் உருவாக்க வல்லது. அவர்களிடம் சுயகட்டுப்பாடு, நல்ல பழக்க வழக்கங்கள், பொருத்தமான சூழல் சார்ந்த நடைமுறைகள் என்பன இருப்பதால் அவர்கள் பிழைத்துக்கொள்வார்கள்.

முழு அகிலமும் ஒரு பரிபூரணமான தொகுதியாகும். கலங்கள், அணுக்கள், வெள்ளுடுத் தொகுதிகள் என்பன மிக உயர்வகை ஒழுங்கமைப்பொன்றை எடுத்துக் காட்டுகின்றன. இத்தொகுதிகள் யாவும் வரையறுக்கப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஏற்பவே இயங்குகின்றன. இக்கட்டுப்பாடுகளைப் புறக்கணிக்கும் போது இத்தொகுதிகள் சிதறுண்டு போகின்றன. இறைவன் இவ்வகிலத்தை நுணுக்கமான சமநிலையோடு படைத்துள்ளான். அதன் கூறுகள் ஒன்றுக்கொன்று குறைநிரப்புவனவாகவும் ஒன்றிணைந்து செயற்படுவனவாகவும் இருக்கின்றன. சமநிலை பற்றிய இந்தக் கருத்துப்படிவம் பின்வரும் வாக்கியங்களில் மும்முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

> சூரியனும் சந்திரனும் கணக்கின்படி (செல்கின்றன) செடி (கொடி)யும் மரமும்- அவ்விரண்டும் (அல்லாஹ்வுக்கு வழிப்பட்டுச்) சிரம் பணிகின்றன. இன்னும் வானத்தை - அதனை அவன் உயர்த்தி தராசை (நீதியை)யும் வைத்தான். நீங்கள் தராசில் (நிறுப்பதில்) வரம்பு மீறாதிருப் பதற்காக; அன்றியும் நீங்கள் எடையை நீதியுடன் நிறுங்கள்; தராசில் (அளவையில்) குறைத்தும் விடாதீர்கள். (அல் குர்ஆன் 55: 5- 9)

எனவே, முக்கியமான விழுமியங்கள் எல்லா நிலைகளிலும் பேணப்பட வேண்டும். வாழ்க்கையில் எல்லாமே தவறிப்போன நிலையில் தற்கொலையே ஒரேவழி என்ற எண்ணம் வந்தாலும் மனிதர்கள் தம் வாழ்வைத் துஷ்பிரயோகம் செய்யவோ தற்கொலை செய்யவோ கூடாது. தம் விருப்பம் அப்படி இருந்தாலும் முறைதவறிய பாலுறவுகளில் மனிதர் ஈடுபடக் கூடாது. அதேபோன்று அவர்கள் மதுபானத்திற்கும் போதைப் பொருட் களுக்கும் அடிமையாகித் தம்மையும் தம் குடும்பங்களையும் தாம் வாழும் சமூகத்தையும் அழிவுக்கு உட்படுத்தலாகாது. பண்டைய காலம் முதலே இறையறிவிப்புக்கள் மூலம் மனிதர்களுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. மனிதர்களுடைய அறிவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, குடும்பத்தின் பெறுமதியை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கும் இனவாதம், தற்கொலை, மதுபானம் அருந்துதல், போதைப்பொருட்

வகுப்பறையிலிருந்து சமயத்தை அகற்றிவிடும் ஆர்வத்தில் அவர்கள் ஒழுக்க நன்னெறிகளையே முற்றாக வெளியே எறிந்து விட்டனர்.

துஷ்பிரயோகம், விபசாரம் போன்றவற்றினால் தோற்றுவிக்கப்படும் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு நீண்ட காலம் பிடிக்கும்.

பூமியில் மனிதன் வாழ ஆரம்பித்தது முதலே தெய்வீக வழிகாட்டல் தீய செயல்களுக்கு எதிராக அவனுக்கு எச்சரிக்கை வழங்கி உன்னதமான பண்புகளைப் பற்றி மனித இனம் உணர்ந்து கொள்ளச் செய்தது. அமெரிக்காவின் ஐக்கிய மெதடிஸ்ட் திருச்சபையில் மதகுருவாகவும் எழுத்தாளராகவும் இருந்த Dr. Jerald F. Dirks என்பவர் 1993 இல் இஸ்லாத்தைத் தழுவினார். IIIT கருத்தரங்கொன்றில் அவர் கலந்துகொண்ட போது திருச்சபையின் சமயக்கல்விப் பாடவிதானத்தில் அவர் அறிமுகப்படுத்த விரும்பும் மிக முக்கிய சீர்திருத்தம் எதுவென அவரிடம் வினவப்பட்டது. ''விழுமியங்களையும், ஒழுக்க சீலத்தையும் சார்புரீதியாக நோக்குகின்ற கோட்பாடு ஆபத்தான முறையில் எல்லையின்றித் தொடர்ந்து மாற்றமடைந்து வருகின்றது. இந்த நோய் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்'' என அவர் பதிலளித்தார்.

தெய்வீக அறிவிப்பின் அடிப்படைச் செய்திகள் மாறாமல் தொடர்ந்து பேணப்படுகின்றன. ஒரு இளம் பரம்பரையின் ஆசைகளுக்கு ஏற்ப அவற்றை மாற்றிக்கொள்ள முடியாது. ஏனெனில், மனிதர்களின் அத்தியாவசியத் தேவைகளோ எப்போதும் ஒரே விதமானவையாகவே இருக்கின்றன.

நகராக்கத்திற்கும் நவீன கைத்தொழில்மயமாக்கலுக்கும் உள்ளாகி இருக்கின்ற குடும்பங்கள் சிதறுண்டு போகாமல் தடுப்பதற்குக் குடும்ப அமைப்பு பேணப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். அதே வேளையில் மேற்கத்திய சுதந்திரத்தின் சாதகமான அம்சங்களிலிருந்து முஸ்லிம்கள் கற்றுக்கொள்ள வேண்டியவையும் நிறைய இருக்கின்றன. அப்படிச் செய்தால்தான் அவர்களை அடிமைப்படுத்தி அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் மேற்கை விடப் பின்தங்கச்செய்துள்ள அடக்கு முறையானதும் ஆதிக்க ரீதியானதுமான சிந்தனைகளிலிருந்தும் ஆட்சி முறையிலிருந்தும் அவர்கள் விடுதலை பெறமுடியும். நாகரிகத்தைக் கட்டி எழுப்புபவர்களாக இருந்த முஸ்லிம்கள் தமது உலக நோக்கினை இழந்துள்ளனர். முஸ்லிம்களின் அரசியல், பொருளாதாரம், குடும்பம், பிள்ளை, சமூக ஒருமைப்பாடு போன்றன பற்றிய அனைத்து விவகாரங்களும், நியாயமும் கலந்தாலோசனையும் கொண்ட முறையினால் நிர்வகிக்கப்பட வேண்டும். ஆனால், இன்று அம்முறை கொடுங்கோன்மைப் போக்குகளால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது.

தனது வழிகாட்டலற்ற சுதந்திர முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான தூர நோக்கொன்று மேற்கத்திய உலகுக்குத் தேவைப்படுகிறது. அதே வேளையில் முஸ்லிம் சமூகங்கள் கண்டிப்பு மிக்க, அடக்குமுறையான கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். இன்னொரு வகையில் சொல்வதானால் மேற்கத்திய சுதந்திரம் சரியான முறையில் வழி நடத்தப்படுவதோடு முஸ்லிம்கள் தமது 'வழி தவறிய நடைமுறைகள்' என்னும் விலங்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இரு சமூகங்களும் ஒன்றிலிருந்து மற்றது கற்றுக்கொள்வதோடு உண்மையான தெய்வீக அறிவிப்புகளுக்கு ஏற்பத் தம் கருத்துப் படிவங்களையும் செயற்பாடுகளையும் சமநிலைப்படுத்திக்கொள்வது அவசியம்.

Ronald Keller இன் கதை

நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உறுதியான நியமங்களைக் கொண்ட நிலையான ஆன்மீக மற்றும் விழுமியத் தொகுதியொன்று தேவைப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவின் வட மேற்கிலுள்ள பண்ணைப் பிரதேசத்தில் 1954ம் ஆண்டு நான் பிறந்தேன். இறைபக்தி மிக்க ஒரு குடும்பத்தில் ஒரு ரோமன் கத்தோலிக்கனாக நான் வளர்க்கப்பட்டேன். எனது பிள்ளைப் பருவத்தில் திருச்சபை எனக்குக் கேள்விக்கே இடமில்லாத உறுதியான ஓர் ஆன்மீக உலகத்தை வழங்கியது. என்னைச் சூழ இருந்த பௌதீக உலகைப்போன்றே உண்மையானதாக அதுவும் தோன்றியது. ஆனால், நான் பெரியவனாக வளர்ந்த போது- குறிப்பாக ஒரு கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் நான் சேர்ந்த போது- அதிகம் வாசிக்கலானேன். அப்போது விசுவாசம், நடைமுறை என்பன தொடர்பாக சமயத்துடனான எனது தொடர்புகள் கேள்விக்குள்ளாயின.

1963இல் இடம்பெற்ற இரண்டாவது வத்திக்கான் கவுன்ஸிலின் பின்னர் கத்தோலிக்கப் பொது வழிபாட்டு முறைகளின் சடங்குகளில் அடிக்கடி ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இதற்கொரு காரணமாக அமைந்தன. திருச்சபைக்கு உறுதியான நியமங்கள் எதுவுமில்லை என்பதை இது பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டியது. நெகிழ்வுத்தன்மை, வழிபாட்டு முறைகளின் பொருத்தப்பாடு என்பன பற்றி மதகுருமார் தமக்குள் பேசிக்கொண்டனர். ஆனால் சாதாரண கத்தோலிக்கர்களுக்கோ தாம் இருளில் தடுமாறுவது போன்றே தோன்றியது. இறைவன் மாறுவதுமில்லை; மனித ஆத்மாவின் தேவைகள் மாறுவதுமில்லை. அத்தோடு, புதிய தெய்வீக அறிவிப்பு ஏதும் வரவும் இல்லை. எனினும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம் நாம் மாற்றங்களைச் செய்துகொண்டே இருந்தோம். சேர்த்தோம்; கழித்தோம்; மொழியை இலத்தீனிலிருந்து ஆங்கிலமாக மாற்றினோம்; இறுதியில் கிட்டார் போன்ற இசைக் கருவிகளையும் நாட்டார் இசையையும் அனுமதித்தோம். போதகர்கள் தொடர்ந்து விளக்கிக் கொண்டிருந்தார்கள்; மக்களோ புரியாமல் தலையைச் சொரிந்தார்கள். எல்லாவற்றிலும் பொருத்தப்பாடு தேடப் போனதனால் ஆரம்பமே வெறுமையாகிவிட்டது எனப் பலரும் நினைக்கலாயினர்.

(நூஹ் ஹாமீம் கெல்லர்- 2001)

பிள்ளைகளை எங்கே வளர்ப்பது?

கிழக்குக்கும் மேற்குக்கும் இடையே இடம் மாறுவதால் ஏற்படும் பண்பாட்டு அதிர்ச்சி பற்றிய ஒரு விடய ஆய்வு

குடும்பங்கள் கிழக்கிலிருந்து மேற்கிற்கோ அல்லது மறுதலையாகவோ இடம்பெயரும் போது அவர்கள் பண்பாட்டு அதிர்ச்சிக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. எடுத்துக் காட்டாக, ஐக்கிய அமெரிக்காவில் பட்டப்படிப்பை மேற்கொண்ட பின் இரு சிறு பிள்ளைகளோடு தமது சொந்த முஸ்லிம் நாட்டுக்குத் திரும்பிய துரதிஷ்டம் மிக்க ஒரு குடும்பத்தின் உண்மைக் கதையை இங்கு தருகின்றோம்.

அவர்களுக்கு ஐக்கிய அமெரிக்காவில் தொழில் புரியும் வாய்ப்பு இருந்த போதிலும், தமது பிள்ளைகள் அறபு மொழியையும் அல் குர்ஆனையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் மத்திய கிழக்கிற்குத் திரும்பிச் செல்லத் தீர்மானித்தனர். அங்கு வந்து காலடி வைத்த அடுத்த கணமே பிள்ளைகள் புதிய நாடு தொடர்பாக நாகரிகம் சார்ந்த அதிர்ச்சியை அனுபவிக்கத் தொடங்கினர். "சே! இது ஓர் அழுக்குப் பிடித்த இடம்" என்றனர் அவர்கள். தாம் வாழப்போகும் வீட்டுக்குள் நுழைந்தபின் அவர்கள் தொட்ட பொருட்கள் யாவும் அவர்களை அழுக்குறச் செய்தன. அவ்வீடு ஏற்கனவே சுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும் தரை விரிப்புக்கள், சுவர்கள், படிக்கட்டுக்கள், பல்கனி முதலியன சரியாகச் சுத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்தத்

தூசு படிந்த சூழலில் தம் பொதிகளை எப்படித் திறப்பது என்பது பிரச்சினையாக இருந்தது. ஆகவே, தாமே வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இரண்டாவது அதிர்ச்சியொன்றும் காத்திருந்தது. வீட்டை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்த கட்டடப் பொருட்கள் விலை கூடியனவாக இருந்தாலும் நிர்மாண வேலை தரம் குறைந்ததாக இருந்தது. குளியலறைக் கதவுகள் சரியாக மூடப்பட முடியவில்லை. தரைக்குப் பதிக்கப்பட்டிருந்த டைல்கள் அழகானவையாக இருந்தாலும் ஒழுங்கற்றும் வழுக்கக்கூடியனவாகவும் காணப்பட்டன. நீர்க்குழாய்களில் நீர் கசிந்து கொண்டிருந்தது. நீர் வழங்கல் அடிக்கடி தடைப்பட்டு நீருக்குத் தட்டுப்பாடு காணப் பட்டது. மூன்றாவது மாடியில் அமுக்கக் குறைவினால் நீர் ஒழுங்காக வரவில்லை. இரவு நேரத்தில் வாளிகளில் நீரை நிறைத்து வைக்க வேண்டியிருந்தது.

அடுத்த அதிர்ச்சி பள்ளிக்கூடம் பற்றியது. தனியார் பள்ளிக்கூடங்கள் செலவு கூடியனவாக இருந்ததோடு அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் கல்விச் சீரழிவு காணப் பட்டது. ஆசிரியர்களுக்குப் போதியளவு பயிற்சி இருக்கவில்லை. மாணவர்களிடம் ஒழுக்கமோ நடத்தைப் பண்புகளோ காணப்படவில்லை. தம் பிள்ளைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புவதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் எடை போட வேண்டிய நிலைக்கு அப்பெற்றார் தள்ளப்பட்டனர்.

பாதைகள் சரிவரப் பேணப்படாமையினாலும் இட நெரிசல் காரணமாகவும் போக்குவரத்து மிக மெதுவானதாக இருந்தது. நெரிசல் மிக்க பள்ளிக்கூட பஸ்களில் பள்ளி சென்று வர பல மணித்தியாலங்களைப் பிள்ளைகள் செலவு செய்ய நேரிட்டது. சில வேளைகளில் வாகனத்தில் போவதை விட நடந்து செல்வது விரைவானதாக இருந்தது. நண்பர்களையும் உறவினர்களையும் சந்திக்கச் செல்வது நீண்ட சுற்றுப்பிரயாணம் செல்வது போல் சிரமமானதாக இருந்தது. வீதிகளில் வாகனம் செலுத்துவதற்கு அபார திறமையும் துணிச்சலும் தேவைப்பட்டன. யுத்த வலயமொன்றில் எதிரிகளுக்கு மத்தியில் பிரயாணம் செய்வதற்கு ஒப்பானதாக அது காணப்பட்டது.

வளி மாசடைந்திருந்ததோடு ஒலி மாசுபடுதலும் காணப்பட்டது. பிள்ளைகள் தம் அந்தரங்கத்தையும் மன அமைதியையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. பள்ளிக்கூடத்திலும் வீதிகளிலும் ஒரே இரைச்சலாக இருந்ததோடு அயலவர்கள் எழுப்பும் ஓசைகள் அவர் களது படுக்கையறைகளின் உள்ளேயும் ஊடுறுவின. அண்மையிலிருந்த கிராமப்பகுதிக்குச் செல்வதே அமைதி பெறக்கூடிய வழியாகக் காணப்பட்டது.

மேற்கிலிருந்து கிழக்கிற்கோ மறுதலையாகவோ குடும்பங்கள் இடம்பெயர முயலும் போது எதிர்கொள்ள வேண்டி நேரிடுகின்ற சில பண்பாட்டு ரீதியான அதிர்ச்சிகளை இது

எடுத்துக்காட்டுகின்றது. எல்லோருக்கும் இப்படியான நிலைமைகள் ஏற்படும் என்று நாம் பொதுமைப் படுத்திக் கூற முடியாது. அத்தோடு, குடும்பங்கள் அவ்வாறு இடம்பெயரக் கூடாது என்று நாம் கூற வரவுமில்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் அதற்கேயுரிய கவர்ச்சியான அம்சங்களும் பிரச்சினைகளும் இருக்கின்றன. அதேபோன்று ஒவ்வொரு குடும்பத்தின் சூழ்நிலையும் தனித்துவமுடையதாக இருக்கும். எனவே, பிள்ளைகள் வளர்வதற்குச் சிறந்த இடம் எதுவென்று எவரும் அறிவுறுத்த முடியாது. ஆகையால் அவ்வாறு இடம்பெயரத் தீர்மானிக்கும் குடும்பங்கள் தாம் எதிர்கொள்ளப்போகும் சாதக பாதகங்களைப் பற்றி முன்கூட்டியே உணர்ந்து கொள்வது அவசியம். இவ்விடயம் தொடர்பாக விவேகத்துடன் முடிவு செய்தல் வேண்டும். உண்மையில் வாழ்க்கை என்பது ஒரு சோதனையே!

மேற்கத்திய சிந்தனையில் காணப்படாத இரு கருத்துப்படிவங்கள்

மேற்கில் காணப்படாத அத்தியாவசிய கருத்துப்படிவங்கள் இரண்டு பற்றி IIIT இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுள் ஒருவரான டாக்டர் தாஹா ஜாபிர் அல்- அல்வானி அவர்கள் பல தடவை எடுத்துக்காட்டியுள்ளார். அவையாவன: 1. இறைவன் மிகப் பெரியவன் (அல்லாஹு அக்பர்) 2. இறைவனே நன்கு அறிந்தவன் (அல்லாஹு அஃலம்). முதலாவது கருத்துப் படிவத்தைப் பொறுத்தமட்டில் மனிதர்கள் தங்கள் விவகாரங்களில் எல்லாம் வல்ல இறைவனின் ஞானத்தையும் அதிகாரத்தையும் புறக்கணிக்கும் போது உண்மையில் தனித்தவனான அந்த சிருஷ்டிகர்த்தாவுக்குப் பதிலாக அவர்கள் தம்மைக் கடவுள்களாகப் பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள்.

மனிதர்கள் தலைக்கனம் பிடித்து வழி தவறிய நிலையில் தாமே எல்லா அறிவுக்கும் உரியவர்கள்; தாம் ஒருபோதும் தவறு செய்ய மாட்டோம் என்று கருதிக் கொள்கிறார்கள். இதனால் அவர்கள் தம் குடும்பங்கள், சமூகம், உலகம், சுற்றாடல் என்பன தொடர்பாகத் தாம் தம் மனம் விரும்பிய போக்கில் செய்கின்ற அத்தனை காரியங்களையும் அவர்களால் நியாயப்படுத்த முடியுமாக இருக்கின்றது. அறிந்தோ அறியாமலோ விலங்குகளையும் தாவரங்களையும் அழிப்பதோடு அவர்கள் நிலத்தையும் நீரையும் காற்றையும் மாசு படுத்துகின்றார்கள். இந்த அகங்காரப்போக்கு பரந்த அளவில் இயற்கையின் ஒழுங்கையும் சமநிலையையும் குலைத்து விடுகிறது. தூய காற்றையும் நீரையும் இரசாயனப் பொருட்கள் கலக்காத இறைச்சியையும் மரக்கறி வகைகளையும் பெற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மனிதர்கள் சூழற்தொகுதியிலும் இயற்கையிலும் தலையீடு செய்து இறைவனின் படைப்புக்களைத் தரம் குறைத்திருக்கின்றார்கள். இன்று புவி வெப்பமடைதல் மனித வாழ்வுக்கே அச்சுறுத்தலாக மாறியிருக்கின்றது. விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் நாம் எவ்வளவுதான் முன்னேறி இருந்தாலும் இறைவனின் படைப்பான முடிவில்லா அண்டத்தில் நாம் இன்னும் புறக்கணிக்கத்தக்க அற்பப் பகுதியாவே இருக்கின்றோம்.

அல்லாஹ்வே நன்கு அறிந்தவன் (அல்லாஹு அஃலம்) என்று கூறுவது பணிவின் அடையாளமாகும். இன்றுவரை மனிதர்களால் செய்யப்பட்டுள்ள வியப்பூட்டுகின்ற விஞ்ஞான, தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் மனிதர்களைத் தங்கள் அறிவு பற்றிச் செருக்குடன் பெருமையடிக்கச் செய்துள்ளன. ஆனால், உண்மை என்னவெனில் எந்தளவுக்குப் புதிதாக நாம் கண்டுபிடிப்புக்களைச் செய்கிறோமோ அந்தளவுக்கு நாம் அறியாதவையும் உள்ளன என்பதை உணர்ந்து கொள்கிறோம். மற்றவர்களுக்குப் பணிவு காட்டுவதும் இறைவன் முன்னிலையில் பணிவடக்கமாக இருப்பதும் மரியாதைக்குரிய அறிவுடைமையின் அம்சங்களாகும்.

உண்மையில் உன்னதமான சிந்தனையாளர்கள் இதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். புதிய அறிவுத் துறைகளையெல்லாம் மனிதர்கள் தொடர்ந்து ஆராய்ந்து அறிந்து கொள்வது அவசியமே. இவ்வாறு அறிந்து கொள்வதற்கான எமது ஆர்வம் எம்மைப்

ஓர் உன்னதமான மனிதனால்தான் உண்மையில் தாழ்மையாக இருக்க முடியும்; அதே போல், ஒரு தாழ்மையான மனிதனால் தான் உண்மையில் உன்னதமான வனாக இருக்க முடியும்.

படைத்தவன் எமக்களித்த அருட்பேறாகும். அவனே எமக்கு நுண்ணறிவைத் தந்து இந்தப் பூமியையும் அண்ட சராசரங்களையும் எமக்காகத் தந்துள்ளான்.

அறிவு பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு விளக்கம் தருகின்றது:

(நபியே!)..... "(அதைப்பற்றிய) அறிவிலிருந்து வெகு சொற்பமே தவிர நீங்கள் கொடுக்கப் படவில்லை" (அல் குர்ஆன் 17: 85)

..... அவனுடைய நாட்டமின்றி அவனுக்குத் தெரிந்தவற்றிலிருந்து யாதொன்றையும் முற்றிலும் (மற்றெவரும்) அறிந்து கொள்ள மாட்டார்கள். (அல் குர்ஆன் 2:255)

என் இரட்சகனின் வாக்கியங்களுக்கு (-அதை எழுதுவதற்கு) கடல் (நீர்) யாவும் மையாக இருந்தாலும் என் இரட்சகனின் வாக்கியங்கள் (எழுதி) முடிவதற்கு முன்னதாகவே கடல் (நீர்)முடிந்து (செலவாகி) விடும்- அதே போன்றதை (இன்னொரு கடலையும்) நாம் உதவிக்குக் கொண்டு வந்த போதிலும் சரியே. (அல் குர்ஆன் 18: 109)

விசுவாச அடிப்படையிலான விழுமியங்களும் செயற்பாட்டு அடிப்படையிலான விழுமியங்களும்

உண்மை, நீதி, பாசம், துணிவு, நேர்மை, பொறுப்புணர்வு போன்ற நன்னெறிகளையும் விழுமியங்களையும் போஷித்து வளர்ப்பது குடும்பமே. இவை யாவும் அகீதா என்னும் விசுவாச அடிப்படையிலான கருத்துப்படிவத்தில் தங்கியுள்ளன. இங்கு செயற்பாட்டு ரீதியான விழுமியங்களை விட இத்தகைய அடிப்படை விழுமியங்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இவ்விரு வகை விழுமியங்களும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒன்றோடொன்று பொருந்திப்போகும் எனக் கூற முடியாது. சில சமூகங்களில் இவ்வுலக வாழ்க்கையின் இன்பமே இறுதி நோக்கமாக இருக்கின்றது. எனினும், முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் இவ்வுலகில் நல்ல முறையில் வாழ்ந்து மறுமையில் முடிவில்லா வாழ்க்கையை அடைந்து கொள்வதே சமநிலையான இறுதி நோக்கமாக விளங்குகின்றது. மறுமையில் வெற்றி பெறுவதானது இவ்வுலகில் நல்ல வாழ்க்கை நடத்துவதோடு முரண் படுவதில்லை என்பதையே இது குறிக்கின்றது. இவ்வுலக வாழ்க்கையைப் புறக்கணிக் காமலே மறுமையின் வெற்றியை அடைய வேண்டும். இவ்வுலக வாழ்க்கையானது மறுமை வாழ்க்கைக்குரிய வழியாகவே அமைகிறது.

நபி (ஸல்) அவர்கள் நாடோடி மனிதன் ஒருவனுக்கு அறிவுரை வழங்கும் போது இறைவனில் நம்பிக்கை வைக்கும் அதே வேளையில் இயற்கை விஞ்ஞானம் மற்றும் சமூக வியல் விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினார்கள். "உனது ஒட்டகத்தை (அது வழிதவறிச் சென்று விடாது) கட்டி வைத்து விட்டு இறைவன் மீது நம்பிக்கை வை" என அவர்கள் கூறினார்கள். இவ்வுலக வாழ்க்கைக்கும் மறுவுலக வாழ்க்கைக்கும் இடையில் பின்வருவது போன்ற ஒரு சமநிலை பேணப்பட வேண்டும்.

"நீங்கள் என்றும் உயிர் வாழப்போவதாக நினைத்துக்கொண்டு இவ்வுலக வாழ்க்கைக்காக உழையுங்கள். அதேபோல் நாளையே மரணிக்கப்போவதாக நினைத்துக் கொண்டு மறுமைக்காக உழையுங்கள்" (அபூ தாலிப் - 1996)

யூத வேத அறிஞர்கள் பின்வருமாறு சொல்வார்கள்: ஒவ்வொரு நாளும்- அது தான் வாழ்வின் இறுதி நாளென எண்ணிக்கொண்டு வாழ். ஏனெனில், அதுதான் உண்மையோ யாருக்குத் தெரியும்.

முன்னைய நாள் கம்யூனிஸ்ட் நாடுகளில் வாழ்ந்த மக்களின் நிலைமையை ஒப்பிட்டு நோக்குவது இங்கு பொருத்தமாக இருக்கும். முதலாளித்துவத்தை விட கம்யூனிஸத்தில் தான் தொழிலாளர்களுக்குக் கூடிய கவனிப்புக் கிடைப்பதாகக் கருதப்படுகிறது. எனினும், உண்மையில் கம்யூனிஸ நாடுகளில்தான் தொழிலாளர்கள் மிக மோசமான நிலைமைகளை அனுபவித்தார்கள். கம்யூனிஸ நாடுகளின் செயற்பாட்டு ரீதியான விழுமியங்கள் மக்களின் பராமரிப்பை உறுதிப்படுத்திய போதிலும் அங்கு முரண்பாடு, அடக்குமுறை, சமூகத்தின் ஏனைய வகுப்பினர்களை ஒழிப்பது என்பனவே ஆழமாய் வேரூன்றி இருந்தன.

இலாபமே நோக்காகக் கொண்ட மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் கம்யூனிஸ்ட் அரசுகளை விடச் சிறப்பாகச் செயற்பட்டன. இதற்குக் காரணம் அன்பு, தர்மம், கருணை போன்ற கிறிஸ்தவ விழுமியங்கள் இங்கு பரவலாகக் காணப்பட்டமையாகும். இதனால் தான் அந்த நாடுகள் ஏழைகளையும் தேவையுள்ளோர்களையும் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை விருத்தி செய்துள்ளன. அதேவேளை, கம்யூனிஸ நாடுகளில் பொது மக்கள் மேன்மேலும் அவதிப்பட்டனர்.

கம்யூனிஸத்தின் கொடுங்கோன்மையான விழுமியங்களும் உலக நோக்குமே அதன் இறுதியான வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக அமைந்தன. முரண்பாடு, மோதல், சொத்துரிமைகளை ஒழித்தல் முதலியவற்றிலேயே அக்கோட்பாடு தங்கியிருந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாக இவ்வரசாங்கங்கள் கூறிக் கொண்ட போதிலும் உண்மையில் உழைப்பாளர்கள் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டவர் களாகவே இருந்தனர். இது மார்க்ஸீயக் கோட்பாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட இலக்குகளுக்கு முரணானதாகும்.

கம்யூனிஸத் தத்துவம் ஆழமற்றதாகவும் செயற்படுத்த முடியாததாகவும் நடைமுறைக்கு அப்பாற்பட்ட இலட்சியங்களைக் கொண்டதாகவும் இருந்தது. அதேவேளை மேற்கின் நிலைமை மேம்பட்டதாகவே விளங்கியது.

முதலாளித்துவமும் நடைமுறைச் சாத்தியமற்ற கனவுகளைக் கொண்டிருக்கவில்லை. அது தனியார் உடைமை தொடர்பாக வழிகாட்டலின்றிய சுதந்திரத்தையும் சுயநலம் கொண்ட, இலாப நோக்குள்ள தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனால் தொழிலாளர்கள் மத்தியில் நியாயமற்ற சமூக- பொருளாதார நிலைமைகளை அது உருவாக்கியது. எனினும், மேற்கில் காணப்படுகின்ற ஆழமாய்ப்பதிந்த சமூக விழுமியங்களும் கிறிஸ்தவ தர்ம சிந்தனையும் ஏழைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட மோசமான பாதிப்புக்களை நிவர்த்தி செய்ய உதவின. இது கைத்தொழில் மயமாக்கம் காரணமாக ஏற்பட்ட சில தீங்குகளையும் குறைத்தது. இதற்கு முற்றிலும் மாற்றமாக கம்யூனிஸ நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் வகுப்பினர்கள் தாமே உருவாக்கிய பிரமாண்டமான ஆட்சி இயந்திரத்தினூடாகத் தம் சொந்த நலன்களுக்காகவே உழைத் தனர். எனவே, தொழிலாளர் வர்க்கத்தினரே கம்யூனிஸ ஆட்சிகளின் கீழ் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். ஆழமாய் வேரூன்றிய சமய விழுமியங்களும் தர்ம சிந்தனையும் சமூகங்களினதும் தனியாட்களினதும் நன்மைக்கு அத்தியாவசியமாகின்றன.

பிள்ளை வளர்ப்பு பற்றிய ஆக்கங்கள் பெருந்தொகையாக மேற்கு நாடுகளில் இருந்த போதிலும் எமது மனித அறிவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது. மனிதர்கள் சந்தையில் விற்கப்படும் பொருட்களைப் போன்றவர்கள் அல்லர். அப்பொருட் கள் எங்கே, எதனால், எதற்காக, எப்போது செய்யப்பட்டன என்பது பற்றிய நல்ல அறிவு எம்மிடம் இருக்கலாம். ஆனால் நாமோ, அண்ட சராசரங்கள் முழுவதையும் படைத்த சிருஷ்டிகர்த்தாவின் படைப்புக்கள். எங்களை வடிவமைத்த அவனுக்கு மாத்திரம்தான் எங்களைப் பற்றி முழுமையாகத் தெரியும்.

பிள்ளை வளர்ப்பு பற்றிய நிபுணர்களின் போதனைகளுக்கும் கடந்த 30 வருடங்களாகச் செய்யப்பட்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டும் உண்மைகளுக்கும் இடையில் பெரிய இடைவெளி காணப்படுவதாக 'Parenting Experts: Their Advice the Research and Getting It Right' என்ற தனது நூலில் உளவியலாளர் Jane Rankin என்பவர் குறிப்பிட்டுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் பிள்ளை வளர்ப்பு பற்றிய புகழ் பெற்ற நிபுணர்களான Benjamin Spock, T. Berry Brazelton, James Dobson, Penelope Leach, John Rosemond போன்றவர்களும் ஏனையோரும் பிள்ளை வளர்ப்பு பற்றிய முக்கியமான பல விடயங்களில் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். இவ்வாறு கருத்து முரண்பாடு காணப்பட்ட விடயங்களுள் பிரம்பினால் அடித்தல், கட்டுப்பாடுகளை விதித்தல், தொழில் புரியும் தாய்மார், பிள்ளை பராமரிப்பு நிலையங்கள், மலசலம் கழிப்பதற்கான பயிற்சி, தொலைக்காட்சி உபயோகம் என்பன அடங்குகின்றன.

சமூகவியல், இயற்கை விஞ்ஞானம் மற்றும் ஆன்மீகவியல் ஆகிய துறைகளில் கிடைக்கக்கூடிய சகல கருவிகளையும் பயன்படுத்தி நாம் பிள்ளை வளர்ப்புத் தொடர் பாகத் தொடர்ந்தும் ஆய்வுகளைச் செய்யத்தான் வேண்டும். எனினும், மனிதர்களால் செய்யப்படும் ஆய்வுகளின் பெறுபேறுகள் பற்றி நாம் அளவுக்கு மீறிப் பெருமிதம் அடையக்கூடாது. எப்போதும் தெய்வீக அறிவிலிருந்து வழிகாட்டலையும் ஞானத்தையும் தேடிக்கொள்ள முயல வேண்டும்.



குடும்பத்தின் விவசாய மாதிரியுரு

பிள்ளைகள் தாவரங்களைப் போன்றவர்கள்; பெற்றார் தோட்டக்காரர்களைப் போன்றவர்கள்

வளர்ந்தவர்களும் பிள்ளைகளும் பல விதங்களில் தாவரங்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றனர். இரு வகைகளுக்கும் பராமரிப்பும் கவனிப்பும் தேவைப்படுகின்றன. அதற்கெனத் தயாரிக்கப்பட்ட நல்ல சூழலில் சிறப்பாக வளர்கின்றன. மாசடைதல் கூடுதலாக உள்ள பிரதேசங்களில் இளம் தாவரங்களுக்கு உகந்த சூழலைப் பச்சை வீடுகளே வழங்குகின்றன. வெளியே நாற்று நடுகை செய்யப்பட முன்னர் அவற்றைப் பக்குவப்படுத்த இவை உதவுகின்றன. இதன் காரணமாக ஏனைய தாவரங்களை விடப் பெரிதாகவும் வலிமையாகவும் நோய்களுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியவையாகவும் அவை வளர்கின்றன.

பிள்ளைகளிலும் ஆரோக்கியமான ஒழுக்க விருத்தி ஏற்பட வேண்டுமாயின் அவர்களுக்குப் பாதுகாப்பும் போஷிப்பும் தேவை. ''அப்போது எமது புத்திரர்கள் தமது வாலிபத்தில் நன்கு போஷித்து வளர்க்கப்பட்ட தாவரங்களைப் போல் இருப்பார்கள்'' என பைபிள் கூறுகின்றது. நல்லதொரு வீட்டுச் சூழலில் வளர்க்கப்பட்ட பிள்ளையானது ஏனையவர்களை விட வலிமையானவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் பரந்த பண்பாட்டில் சுழன்று கொண்டிருக்கும் ஒழுக்கக் கோளாறுகளை எதிர்த்து

நிற்கக்கூடியவர்களாகவும் விளங்குவர். நாம் கூறும் இந்த ஒப்பீட்டை விவசாய சமூகத்தினர் எளிதில் புரிந்து கொள்வார்கள். எனினும், தாவர வளர்ப்பு பற்றிய அனுபவம் இல்லாத பெரும்பாலான கைத் தொழிற் சமூகங்களினால் இதனைப் புரிந்து கொள்ள முடிவதில்லை.

எவ்வாறாயினும், பிள்ளைகள் வெறுமனே தாவரங்களைப் போன்றவர்கள் அல்லர். தாவரங்கள் உயிர்ப்பற்றவை; ஆனால், பிள்ளைகளோ உயிர்ப்பும் துடிப்பும் மிக்க சக்திக் குவியல்கள்; நுண்ணறிவும் செயலூக்கமும் மிக்கவர்கள். பிள்ளைகள் தம் சொந்த விருத்தியில் முக்கியமான பங்களிப்புச் செய்ய வேண்டியவர்கள். அத்தோடு, தம் நடத்தைக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க அவர்கள் அறிந்திருக்க வேண்டும். அவர்களுக்குத் தொடர்ந்தும் உதவி தேவைப்படுகிறது. இவ்வுதவியைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமாயின் நல்ல பழக்கங்களை விருத்திசெய்து கொள்வதற்குப் பெற்றோர்கள் ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும். அப்படிச் செய்யும்போது பிற்காலத்தில் அவர்கள் நல்ல நடத்தையும் உயர் குணங்களும் உள்ளவர் களாக உருவாகுவார்கள்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 8

21ம் நூற்றாண்டின் மூன்று பிரதான மனக்கவலைகள்

இம்மூன்று பிரதான மனக்கவலைகளுக்குமான காரணங்கள் யாவை? அவற்றை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம்?- இது பற்றி உங்கள் குடும்பத்தாருடன் கலந்துரையாடுங்கள்.

இவற்றுள் முதலாவது, முஸ்லிம் குடும்ப அமைப்பு சிதறுண்டு செயலிழந்து போவதாகும். இதன் விளைவாகத் தனிப் பெற்றாரின் விகிதாசாரம் அதிகரித்துள்ளது.

இரண்டாவது, சுற்றாடலில் ஏற்பட்டு வரும் அழிவு. நிலம், காற்று, சமுத்திரங்கள், நீர் நிலைகள், காடுகள் போன்ற அனைத்திலும் பெருமளவு மாசுக்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவது, மதுப்பழக்கமாகும். இது மக்களின் ஆரோக்கியத்தையும் குடும்பங்களையும் சீர்குலைத்து வருகின்றது.

தொழிற்பாடு- 9

பிள்ளைகளின் இயல்புகள் பற்றிய செயற்பாடு

பின்வரும் ஒவ்வொரு இயல்பைப் பற்றியும் பெற்றார் தம் பிள்ளைகளுடன் கலந்துரையாடி இவை ஒவ்வொன்றையும் விருத்தி செய்வதற்கு உதவக்கூடிய செயன்முறையொன்றை முன்வைத்தல்.

பிள்ளைகள்...

வியக்கத்தக்கவர்கள்	-	அவர்களை அங்கீகரியுங்கள்
நம்பத்தகுந்தவர்கள்	-	அவர்களை நம்புங்கள்
ஆற்றல் மிக்கவர்கள்	-	அவர்களை நெறிப்படுத்துங்கள்
குற்றமற்றவர்கள்	-	அவர்களோடு சேர்ந்து களிப்புறுங்கள்
மகிழ்ச்சியானவர்கள்	-	அவர்களை ரசித்துப் பாராட்டுங்கள்
இரக்க உள்ளம் கொண்டவர்கள்	-	அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்
நேசிக்கப்படக்கூடியவர்கள்	-	அவர்களைப் போற்றிப் பேணுங்கள்
உயர் குணமுடையவர்கள்	-	அவர்களை மதியுங்கள்
திறந்த மனம் கொண்டவர்கள்	-	அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்
பெறுமதி மிக்கவர்கள்	-	அவர்களுக்கு மதிப்பளியுங்கள்
கேள்வி கேட்பவர்கள்	-	அவர்களை ஊக்குவியுங்கள்
வளம் மிக்கவர்கள்	-	அவர்களுக்கு ஒத்தாசை கொடுங்கள்
திடீரெனச் செயற்படுபவர்கள்	-	அவர்களைப் பார்த்துக் களிப்படையுங்கள்
திறமை மிக்கவர்கள்	-	அவர்களை விருத்தி செய்யுங்கள்
தனித்துவமானவர்கள்	-	அவர்களை உறுதிப்படுத்துங்கள்
ஆர்வம் கொண்டவர்கள்	-	அவர்களோடு சிரித்து மகிழுங்கள்

தொழிற்பாடு: 10

பிள்ளைகளில் வன்முறைக்கான உண்மையான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடல்

உங்கள் பிள்ளைகள் நேரடியாகக் கண்ட அல்லது கேள்விப்பட்ட பயங்கரமான சில நிகழ்வுகள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள். ஐக்கிய அமெரிக்காவில் Columbine High School இல் இடம்பெற்ற படுகொலைகள் அதிர்ச்சி தரக்கூடியவை. 17 வயதும் 18 வயதும் உடைய இரு பையன்கள் துப்பாக்கிகளாலும் குண்டுகளாலும் தாக்கிப் பதினைந்து பேரைக் கொன்றதோடு 26 பேரைக் காயப்படுத்தினர். தொலைக்காட்சியிலும் திரைப்படங்களிலும் வீடியோ விளையாட்டுக்களிலும் காண்பிக்கப்படுவது போன்று சுட்டுக்கொண்டும் பலமாகச் சிரித்துக்கொண்டும் திரிந்த அவர்கள் இறுதியில் தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டனர். அவர்கள் தமது வீடுகளிலேயே 19 குண்டுகளைத் தயாரித்திருந்தனர். இவ்வாறான நிகழ்வுகள் அரிதானவை அல்ல. தொடர்ந்து வந்த மாதங்களில் அது போன்ற 25க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளன. அவர்கள் இப்படிச்செய்யக் காரணம் என்ன? இதற்குப் பொறுப்புதாரிகள் யார்? அதனை எவ்வாறு தவிர்த்திருக்கலாம்? எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாமல் தவிர்த்துக்கொள்வது எப்படி?

தொழிற்பாடு 11

சமூகப் பிரச்சினைகளைக் கையாளுதல்

புகைத்தல், போதைப்பொருள் உபயோகம், சட்டத்துக்குப் புறம்பான கர்ப்பங்கள், மதுப்பழக்கம், தற்கொலை, விவாகரத்து போன்றவற்றுக்கான காரணங்களையும் அவற்றினால் ஏற்படும் விளைவுகளையும் உங்கள் குடும்பத்தாருடன் கலந்துரையாடுங்கள்.

உங்கள் குடும்பத்தினருடன் இணைந்து சமூகத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிகளை ஆலோசனை செய்யுங்கள்.

தொழிற்பாடு: 12

அமெரிக்காவில் Dr. Spock இன் பிள்ளை வளர்ப்பு முன்மாதிரி

குடும்பத்தினருடன் ஒன்றாக அமர்ந்து பிள்ளை வளர்ப்பு பற்றிய உங்கள் அனுபவங்களை Dr. Spock இன் வாழ்க்கைக் கதையின்அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.
அவரது வாழ்க்கைக் கதை கீழே தரப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் பிள்ளை வளர்ப்பு நிலைமை பற்றிப் புரிந்து கொள்ள முனையும் போது நவீன பிள்ளை வளர்ப்பு முறையில் Dr. Banjamin Spock இன் செல்வாக்கை யாரும் புறக்கணிக்க முடியாது. அவர் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிறுவர் உளவியல் நிபுணராக விளங்கியவர்.

அவரது தாயார் தன் அன்பினாலும் விதிமுறைகளாலும் உயர் எதிர்பார்ப்புக்களாலும் அவரைத் திணறடிக்கச் செய்தார். அவரோ 51 வருடகாலத் திருமண உறவின் பின்னர் மதுப்பழக்கத்துக்கு அடிமையான தனது மனைவியை விவாகரத்துச் செய்தார். சிறுவர் நோய்கள் பற்றிய வைத்தியராகச் செயற்பட்ட அவர் பெரும்பாலான சிறுவர் பிரச்சினைகள்- நடத்தை சார் பிரச்சினைகளே அன்றி- மருத்துவப் பிரச்சினைகளல்ல என்ற முடிவுக்கு வந்தார். திடீரெனக் கோபமுற்று அழுது ஒப்பாரி வைத்தல், விரல் சூப்புதல், உணவுண்ண மறுத்தல், நித்திரை கொள்ள விரும்பாமை, நேரத்திற்கு மலசலம் கழிக்கப் பழகாமை போன்ற பிரச்சினைகளும் இவற்றுள் அடங்கியிருந்தன. ஸிக்மண்ட் புரொயிட்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டில் ஆர்வம் கொண்ட அவர் இரு தடவைகள் உளப்பகுப்புக்கு உள்ளானார்.

பிள்ளைகளை அவசரப்படுத்தி நெருக்காமல் அவர்களைப் போற்றிப் பேணுமாறு அவர் பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்கினார். ''உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். உங்களுக்குத் தெரியும் என நீங்கள் நினைத்திருப்பதை விடக் கூடுதலாக உங்களுக்குத் தெரியும்'' என்றார் அவர். குழந்தைகளுக்கு அவர்களது தாய் தந்தையர்களிடமிருந்து அன்பே தேவைப்படுகிறது என அவர்போதித்தார். அவர் தன்னிடம் வரும் நோயாளிகள் சொல்வதை மிகக் கவனமாகச் செவிமடுத்தார். ஆனால், தன் சொந்தப் பிள்ளைகள் சொல்வதைச் செவிமடுக்கத் தவறினார்.

அவரது குடும்பம் செயலிழந்து காணப்பட்டது. ''ஒன்றைச் சரியாகச் செய்வது எப்படி என எழுதிவிடுவது எளிதானது. ஆனால், அதனையே உங்கள் பிள்ளைகளுடன் செய்ய முயல்வது மிகக் கடினமானது'' என்றார் அவர். அவரது மனைவி மதுப்பழக் கத்துக்கு அடிமையாகி, மனநோயொன்றுக்கு ஆளாகிப் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். தந்தை என்ற வகையில் அவர் உணர்வுகள் மறத்துப் போனவர் போன்றே இருந்தார். அவரால் மனவெழுச்சி ரீதியாகத் தாம் கைவிடப்பட்டுள்ளதாக அவரது இரு மகன்களும் உணரலாயினர்.

தான் தனது தொழிலால் உந்தப்பட்டிருந்ததாக அவர் பின்னர் ஒப்புக்கொண்டார். ''எனது மகன்கள் இள வயதினராக இருக்கும் போது நான் அவர்களை ஒரு போதும் அரவணைத்து முத்தமிட்டதில்லை'' என்றும் அவர் ஏற்றுக்கொண்டார்.

தனது மகன்கள் தமது பெற்றோரை அவர்களது முதற் பெயரைக்கூறி அழைக்க வேண்டும் என அவர் நினைத்தார். எனினும், பெற்றோரும் பிள்ளைகளும் சமத்துவமானவர்கள் எனப் பாசாங்கு செய்வது உண்மை நிலைக்குப் புறம்பானதாகும். இது எனது மகன்; இவன் என்னை என் முதற்பெயராலேயே அழைக்கிறான் என்று வெளியுலகுக்குக் காட்டிக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட ஒரு செயலே அது. Spock தனது மகன்களுடன் உரையாடும் போது அது வாய்மொழிப் பரீட்சை போன்று

தோன்றும். அவருடைய நூல்களிலே பிரதிபலித்த அவரது மிருதுவான, அமைதியான குரலானது அவர் வீட்டில் உபயோகித்த மொட்டையான கண்டனத் தொனியைச் சிறிதேனும் ஒத்திருக்கவில்லை. தந்தை என்ற வகையில் அவரது எரிவூட்டும் போக்கின் விளைவுகள் பற்றி அவர் சிறிதும் சிந்திக்கவில்லை.

தனது பிள்ளைகள் பொது இடங்களில் தம்மைச் சங்கடமான நிலைமைகளுக்கு உள்ளாக்கிக் கொள்ளவோ குடும்பப் பெயருக்கு அவப்பெயர் ஏற்படுத்தவோ கூடாது என்று அவர் வற்புறுத்தினார். பெற்றார் என்ற வகையில் வெளியாரின் அங்கீகாரத்துக்கு அல்லது அதிருப்திக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்தார். அறிமுகமற்றவர்களதும் பத்திரிகைகளதும் அபிப்பிராயங்கள் அவருக்கு முக்கியமானவையாக இருந்தன. அவரது மகன்கள் நேர்த்தியாக உடை அணிந்திருந்தனர். பணிவோடும் அயலவர்களுக்கு நல்லவர்களாகவும் நடக்குமாறு அவர்கள் ஏவப்பட்டனர். அவரது மகன் ஜோனின் முகத்தில் புன்னகை மறைந்து விட்டால் அல்லது அவன் மன வாட்டமுற்றால் உடனே அவர், ''இப்படி அழு மூஞ்சியாக இருக்காதே; பொது இடத்தில் இன்முகத்தோடு இருக்க முயற்சி செய்!'' என மகனைத் தூண்டுவார்.

தனக்கு வீட்டில் அப்படியான பிரச்சினைகள் இல்லையென மறுப்பவர் போல் Spock காணப்பட்டார். அவரது பிள்ளைகளான மைக்கலும் ஜோனும் ஒருவரிலிருந்து ஒருவர் மரியாதைக்குரிய தூரத்தில் இருக்கப் பழகிக்கொண்டனர். அவர்கள் இருவரும் தமது தந்தையோடு தமக்கு ஏற்பட்ட முரண்பாடுகளை அந்தரங்கமாகவே வைத்துக்கொண்டனர். செய்திச் சஞ்சிகைகள், தொலைக்காட்சி நிறுவனங்கள்போன்றவற்றின் நிருபர்களும் புகைப்படக் கலைஞர்களும் அவர்களைத் தம் தந்தையாரோடு போஸ் கொடுக்குமாறு கேட்ட போதெல்லாம் அவர்கள் இணங்கினர். தம் தந்தையார் வீட்டில் நடந்து கொள்ளும் முறைகள் பற்றி நிருபர்கள் கேட்ட போது தெளிவற்ற குறுகிய பதில்களையே அவர்கள் கொடுத்தனர்.

தனது அன்பையோ உண்மையான மனவெழுச்சிகளையோ அவர் தம் பிள்ளைகளிடம் வெளிக்காட்டவில்லை. ''நாம் ஒருபோதும் எமது தந்தையை முத்தமிட்டதில்லை'' எனப் பகிரங்கமாகவே அவரது பிள்ளைகள் ஒப்புக் கொண்டனர். அவர் ஒரு மனிதனாக இருப்பதை விட ஓர் அடையாளச் சின்னமாகவே விளங்கினார். ஒரு மானுடத் தந்தையாக இருப்பதை விட ஆதிக்கமுடையவராகவே இருந்தார். அவர் தனது பிள்ளைகளின் மனவெழுச்சித் தேவைகளைப் புறக்கணித்து வாழ்ந்த உணர்வுகளற்ற கண்டிப்பு மிக்க தந்தையாகவே விளங்கினார்.

தான் வளர்க்கப்பட்ட முறை பற்றி அவர் குறை கூறினார். ''எனக்கு என் தந்தையிடமிருந்து உடல் ரீதியாகப் பாசம் கிடைக்கவில்லை. என் தந்தை என் மீது அன்பு காட்டினார்; இரக்கத்துடன் சிலவற்றைச் செய்தார்; ஆனால், உடல் ரீதியான பாசத்தைப் பொறுத்த மட்டில் என் தந்தையார் எந்தச் சந்தர்ப்பத்திலாவது என்னையோ அடுத்த பிள்ளைகளையோ முத்தமிட்டிருப்பாரா? என்று நினைத்துப்பார்க்க நான் முயற்சிக்கிறேன். என்னையோ என் உடன் பிறந்தவர்களையோ அவர் முத்தமிட்டது பற்றி எனக்கு நினைவேதும் இல்லை''

படிப்பினை:

நிபுணர்களின் கோட்பாடுகளைக் குருட்டுத்தனமாகப் பின்பற்ற வேண்டாம். அத்தகைய அறிவு தொடர்ந்து வளர்ந்து கொண்டும் மாற்றமடைந்து கொண்டும் இருக்கிறது. மனிதரின் கண்டுபிடிப்புக்களை இறையறிவிப்பின் வழிகாட்டலைக் கொண்டு குறை நிரப்பாதவரை நாம் வழிதவறிப் போய்விடுவோம். அத்தோடு, நன்மைக்குப் பதிலாகக் கூடிய தீங்கையே செய்வோம்.

தொழிற்பாடு 13: பண்பாட்டு அதிர்ச்சி பற்றிக் கலந்துரையாடல்

பெற்றார் பண்பாட்டு அதிர்ச்சி தொடர்பான தமது சொந்த அனுபவங்களைப் பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும். பின்னர் வேறு நகரங்களுக்குப் பிரயாணம் செய்து அல்லது வேறு இன, மத பள்ளித் தோழர்களுடன் பழகி ஒவ்வொரு பிள்ளையும் பெற்றுக்கொண்ட அனுபவங்களை விளக்குமாறு கூற வேண்டும்.

வெளிநாட்டிலோ அல்லது நாட்டின் வேறு பிரதேசங்களிலோ வாழும் உறவினர்களை அல்லது நண்பர்களைப் பிள்ளைகள் சென்று சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் பண்பாட்டு வேறுபாடுகளை அவர்கள் புரிந்து கொள்வதற்கு வழி செய்யலாம்.

தொழிற்பாடு 14: உண்மையான தலைவர்களின் மனப்பாங்கு

பின்வரும் கூற்றுக்களைப் பற்றி உங்கள் குடும்பத்தினருடன் கலந்துரையாடுங்கள்:

''சிறந்த பயன் விளைவுள்ள தலைவர்கள் பொதுப் பதவிகளை வகிக்கும் வீர நாயகர்களாக இருப்பது மிக அரிது என்பதை நான் அவதானித்திருக்கின்றேன். இந்த ஆண்களும் பெண்களும் சில இலட்சியங்களுக்காகப் போராடும் உயர்மட்ட ஆட்களாக இருப்பதில்லை. அவர்கள் பொறுமையோடும் கவனமாகவும் படிப்படியாகவும் இயங்குவார்கள்; அவர்கள் சரியானதைச் செய்வார்கள்'' (Badaracco- 2002)

''தலைவர்கள் தம்மைப் பின்பற்றுவோரிடையே மந்தை மனப்பான்மையொன்றை விருத்தி செய்ய விரும்புவார்கள். ஆனால், அவர்களே அத்தகைய சிந்தனைக்கு ஆளாகி விடக்கூடாது'' (Steven B. Sample- The Contrarian's Guide to Leadership என்ற நூலில்)

படிப்பினை:

சரியானதைச் செய்வதே முக்கியமானது. ஆனால், அது மக்களால் விரும்பப்படுவதாகவோ காலத்துக்குரிய போக்காகவோ தோன்றாதிருக்கலாம். எது சரி என்பதை வரையறுப்பது யார்? நீங்களா, நானா, அவனா, அவளா அல்லது மாட்சிமை மிக்க சிருஷ்டி கர்த்தாவா?

தொழிற்பாடு 15: குடும்ப வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளல்

பிள்ளைகளுடன் ஒன்றாக அமர்ந்து அவர்களுடைய முன்னோர்கள் பற்றி நீங்கள் அறிந்தவற்றை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இன்று பெரும்பாலான குடும்பங்கள் தம் குடும்ப வரலாற்றைத் தம் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்வதில்லை. பிள்ளைகள் தங்களுடைய முப்பாட்டன், முப்பாட்டிமாரின் வாழ்க்கை, சாதனைகள், தோல்விகள், தொழில்கள், அனுபவங்கள், செயற்பாடுகள், வலிமைகள் போன்றவை பற்றி அறிந்திருப்பது அவசியம். பிள்ளை வளர்ப்புத்துறை நிபுணரான நினா .அப்துல்லாஹ் என்பவர் தனது வாடிக்கையாளர்களுக்குக் குடும்ப மரபுக்கிளைவழி விளக்கப்படங்களையும் (family tree) Genograms என்னும் குடும்ப விபரப்படங்களையும் வரைவதற்குக் கற்பிக்கிறார். Genograms என்பது குடும்பத்தின் தாய் மற்றும் தந்தை வழி உறவினர்களுக் கிடையே இடம்பெற்றுள்ள திருமணங்கள், விவாகரத்துக்கள், நோய்கள், ஏனைய உறவுகள் முதலியவற்றைக் காட்டும் ஒரு வரிப்படமாகும். அறாபிய கோத்திரங்களின் வழக்கமாக இருந்த தம்முடைய முன்னோர்கள் பற்றிய கதைகளைக் கூறுவதையும் ஒருவர் தம்முடைய குடும்பத்தின் முந்திய பரம்பரைகளின் விபரங்களை முடிந்தளவு மனனஞ் செய்து வைத்திருப்பதையும் நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்தார்கள்.

சில சோமாலியர்கள் தமது முன்னோர்களின் 20 பரம்பரைகள் வரை தெரிந்து வைத்திருக்கின்றார்கள். அவர்கள் பெரிய கோத்திர ரீதியான ஒன்றுகூடல்களில் சந்தித்துத் தம் முன்னோர் பற்றித் தமக்குத் தெரிந்தவற்றைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

அத்தியாயம் 3

பிள்ளை வளர்ப்புக்குரிய இலக்குகள்

- *சரியான இலக்குகளை அமைத்தல்: சிறந்த பிள்ளை வளர்ப்பை அமுல் படுத்துவதன் முதற்படி* 90
- *இலக்குகளை உன்னிப்பாக நோக்குதல்* 92
  - *அல்குர்ஆனிய வாக்கியங்களிலிருந்து பெறப்பட்ட இலக்குகள்: விசுவாசிகளின் பிரார்த்தனை* 92
  - *நபி (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து பெறப்பட்ட இலக்குகள்* 95
- *குடும்ப முன்னுரிமைகள்* 97
- *முடிவுரை* 98
- *தொழிற்பாடுகள் 16- 20* 100

எமது இலக்கு வலிமை மிக்க நல்ல பிள்ளைகளை வளர்த்தெடுப்பதாகும்.
அவர்கள் வலிமை மிக்க நல்ல குடும்பங்களை உருவாக்குவர்.
அக்குடும்பங்கள் வலிமை மிக்க நல்ல சமுதாயங்களை உருவாக்கும்.
அச்சமுதாயங்கள் வலிமை மிகு நல்ல தேசங்களை உருவாக்கும்.
அத்தேசங்கள் அமைதி மிக்க உலகினை உருவாக்கும்.

சரியான இலக்குகளை அமைத்தல்: சிறந்த பிள்ளை வளர்ப்பை அமுல் படுத்துவதன் முதற்படி

பெற்றோர் விவேகமான முறையில் பிள்ளை வளர்ப்பைச் செய்தல் வேண்டும். பல பெற்றார்கள் தமது தொழில் பற்றியும் வருடாந்த விடுமுறைகள் பற்றியும் மிக நுணுக்கமாகத் திட்ட மிடுகின்றனர். ஆனால், ஒரு குடும்பம் என்ற வகையில் தம்மைப் பற்றிய ஒரு திட்டத்தைக் கூட்டாக இருந்து விருத்தி செய்வதற்குத் தவறி விடுகின்றார்கள். உண்மையில் தமது குடும்பம் தொடர்பான ஓர் எண்ணத்தை, நோக்கத்தை, அபிலாசையை அல்லது செயல் நுட்ப முறையைப் பற்றி ஓர் இணக்கத்திற்கு வருவதற்குக்கூடப் பலர் தவறிவிடுகின்றனர். இவ்வாறு இலக்குகள் இல்லாத நிலை யில் மிகக் குறைந்த அளவே சாதிக்கப்படமுடியும். தொழிலிலும், வீட்டிலும், பொருட்கள் கொள்வனவு செய்வதிலும், பள்ளிக்கூட விவகாரங்களிலும், விடுமுறைப் பிரயாணங்களிலும், தொடர்ந்துவரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்ப திலும் காலத்தையெல்லாம் கழித்துக்கொண்டு எல்லாம் நல்லபடி நடக்கும் என எதிர்பார்ப்பது எமது பிள்ளைகளின் எதிர்காலத்தோடு விளையாடுவதற்கு ஒப்பாகும். இவ்வாறு செய்வதனால் பெறுமதி மிக்க காலம் எம்மை அறியாமலே நழுவிச் சென்று விடும். எனவே எமக்கு நீண்டகால இலக்குகளும் அவற்றை அடைவதற்கான உபாயங் களும் தேவைப்படுகின்றன.

பிள்ளை வளர்ப்புக்குரிய சரியான அணுகுமுறையானது, தனியாளையும் சமூகத்தையும் ஒன்றிணைந்த ஒரே தொகுதியாகக் கருதுகின்றது. வலிமையும் நன்னடத்தையும் உள்ள தனியாட்கள் இல்லாமல் வலிமையான சமூகமொன்றை நாம் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறான தனியாட்கள் ஒரு வெற்றிடத்தில் உருவாவதில்லை. இதற்காகத் திடமானதும் ஒத்துழைப்பு மிக்கதுமான சமூக சூழலொன்று தேவைப்படுகிறது. இறைவனின் பிரதிநிதி களாக விளங்கக்கூடிய, வலிமையும் நம்பத்தகவும் மிகுந்த, பண்பாடுடைய பிரஜைகளை உருவாக்குவதே பெற்றோரின் குறிக்கோளாகும். இப்பிரஜைகளின் வாழ்க்கைப் பணி புவித்தரை எங்கும் அபிவிருத்தியையும் சீர்திருத்தத்தையும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். இப்பணி இல்லையேல் மனித வாழ்க்கை நோக்கமற்றதாகவும் அர்த்தமற் றதாகவும் அமைந்துவிடும். தனி மனிதர்களின் ஆர்வங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் மறுவுலக வாழ்க்கையையும், லௌகீகத்தையும் ஆன்மீகத்தையும், தனியாள் சார்ந்தவற் றையும் சமூகம் சார்ந்தவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இதுவே பிள்ளைகளை வளர்க்கும் விடயத்தில் பெற்றோருடைய மிக முக்கியமான தொனிப்பொருளாகவும் உலகக் கண்ணோட்டமாகவும் அமைவது அவசியம்.



சிறந்த பிள்ளை வளர்ப்புக்குரிய இலக்கு அட்டவணை: இலக்குகள், விழுமியங்கள், வழிமுறைகள்

முதல் விருப்பம்: மகிழ்ச்சியான குடும்பம்	**இரண்டாம் விருப்பம்:** இறையச்சம் கொண்டோரின் தலைவர்களை உருவாக்குதல்			
தொடர்பாடல் புகழ்ச்சி/கண்டனம் மனப்பாங்குகள் உணர்வுகள் சாந்தம்/ கோபம் தொடுகை, முத்தம், அரவணைப்பு மகிழ்ச்சி, நகைச்சுவை பரஸ்பர புரிந்துணர்வு ஒன்றாகக் கழிக்கும் குடும்ப நேரம் TV க்கு ஒரு மாற்றீடு குடும்ப ஒன்று கூடல்கள் குடும்ப விருந்துகள் மன அழுத்தத்தை முகாமைசெய்தல் விளையாட்டுக்கள் பிள்ளைகளுடன் தொழிற்பாடுகளில் ஈடுபடல்	உடல் வலிமை– ஆரோக்கியமும் திடகாத்திரமும் வாழ்க்கைத் துணையைத் தெரிதல் சிறுவர் விருத்தி தாய்ப்பாலூட்டல் மூளை என்னும் அற்புதம் ஆரோக்கியம் போசணை உடற்பயிற்சி நித்திரை ஆரோக்கியமான பாலுறவு போதைப்பொருட்களைத் தவிர்த்துக் கொள்ளல்	ஆளுமைச் சிறப்பியல்புகள் துணிவு அன்பு நேர்மை சுதந்திரம் பொறுப்புணர்வு சுயாதீனம் ஆக்கத்திறன் சுய மதிப்பீடு நம்பிக்கைப் பொறுப்பு மரியாதை பணிவும் தாழ்மையும்	அறிவு, விவேகம், இறை நம்பிக்கை கல்வி/ பள்ளிக்கல்வி வீட்டு வேலை பிள்ளைகளை மேம்படுத்தலும் ஊக்கப்படுத்தலும் வலுப்படுத்தலும் ஒழுக்காற்று VS. தண்டனை இறை நம்பிக்கை அடையாளம் விரிந்த குடும்பம்	திறன்கள் தொழில்வாண்மை வாசிப்பு எழுத்து கணணித் திறன்கள் வாகனம் செலுத்தும் திறன் அன்றாடக் கடமைகள் நிதி மற்றும் நேர முகாமை ஈகை பிரார்த்தனை (துஆ) தீர்மானம் மேற்கொள்ளல்

முதலில் நாங்கள் மேலே தரப்பட்ட அட்டவணையில் கவனம் செலுத்துவோம். இதனை நாம் 'சிறந்த பிள்ளை வளர்ப்பு இலக்கு அட்டவணை' என அழைப்போம். இது நாம் அமைத்துக் கொள்ள வேண்டிய இலக்குகளைச் சுருக்கமாகத் தருகிறது. அத்தோடு பிள்ளைப் பருவம் முதல் முதிர் பருவம் வரை அடிப்படைக் கோட்பாடுகளையும் விழுமியங்களையும் மனதில் பதிப்பதனூடாக இவ்விலக்குகளை அடைவதற்குரிய வழிமுறைகளுக்கான புறவரியையும் அமைத்துத் தருகிறது.

இவ்விலக்குகள் பின்வருவனவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன:

அல்குர்ஆனில், வாக்கியம் 25: 74 இல் குறிப்பிடப்படுகின்ற பெற்றோரின் ஆழமான அபிலாஷைகள்.

> அவர்கள் எத்தகையோரென்றால் ''எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியர்களிட மிருந்தும் எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியைத் தந்தருள் வாயாக! அன்றியும் பயபக்தியுடைய வர்களுக்கு எங்களை வழிகாட்டியாகவும் நீ ஆக்கு வாயாக'' என்று கூறுவார்கள்

நபி (ஸல்) அவர்களது தெளிவு தருகின்ற பின்வரும் ஹதீஸ்.

> மனிதர்கள் (தமக்கேயுரிய பண்புகளைக்கொண்ட) கனியங்களை (அல்லது உலோகங்களை)ப் போன்றவர்கள். (இஸ்லாத்துக்கு முந்திய) அறியாமை (ஜாஹிலிய்யா)க் காலத்தில் சிறந்தவர்களாக இருந்தோரே, சரியாகப் புரிந்து (கிரகித்துக்) கொண்ட நிலையில் இஸ்லாத்திலும் சிறந்தோராக இருக்கின்றனர்.
>
> (அல்புகாரி, முஸ்லிம்)

இவ்வட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளது போல் இலக்குகள் இரு பரந்த வகை களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் வகை மேலும் நான்கு உப வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளளன. இவ்விலக்குகளோடும் விழுமியங்களோடும் தம்மைப் பரிச்சயப் படுத்திக் கொள்வதற்காகவும் அவற்றைப் பற்றிக் கற்றுக் கொள்வதற்காகவும், மானசீகமாக அவற்றைப் பின்தொடர்வதற்காகவும், தமது நடவடிக்கைகளையும் முன்னேற்றங்களையும் அவற்றில் உரைத்துப்பார்த்துக் கொள்வதற்காகவும் பெற்றோர் இவ்வட்டவணையின் உதவியைத் தொடர்ந்து நாட வேண்டும். இவ்வாறு செய்வதானது அவர்கள் மனநிறை வற்றுச் சோம்பிவிடுவதைத் தவிர்ப்பதற்கும் தம் அன்றாடக் கடமைகளில் மூழ்கித் தம் பிள்ளை வளர்ப்புப் பொறுப்பினை மறந்து விடாமல் தடுப்பதற்கும் உதவும்.

இலக்குகளை உன்னிப்பாக நோக்குதல்

1) அல்குர்ஆனிய வாக்கியங்களிலிருந்து பெறப்பட்ட இலக்குகள்: விசுவாசிகளின் பிரார்த்தனை

எல்லாம் வல்ல இறைவனிடம் விசுவாசிகள் தம் மனைவியர்களிலிருந்தும் தம் சந்ததிகளிலிருந்தும் தமக்குக் கண் குளிர்ச்சியைத் தருமாறே பிரார்த்தித்துக் கேட்டனர். ('குர்ரத அஃயுன்' என்னும் இச்சொற்றொடர் அல் குர் ஆனில் ஆறு தடவைகள் மீட்கப்பட்டுள்ளது) ''எமது கண்களுக்கு சௌகரியம், எமது கண்களுக்கு மகிழ்ச்சி, பேருவகையினால் மகிழ்ச்சியுற்ற கண்கள்'' என்ற கருத்துக் கள் இச்சொற்றொடருக்கு உண்டு. எனவே, முதலாவது விருப்பம் வீடும், குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சிகரமாக அமைவது பற்றியதாகும்.

இது கருக்குடும்பத்தை மாத்திரம் குறித்து நிற்கவில்லை; மாறாக, கணவன்/ மனைவி, பிள்ளைகள், மூத்த பெற்றோர் கள், பெற்றோரின் சகோதர சகோதரிகள், அவர்களது பிள்ளைகள் ஆகியோர் அடங்கிய விரிந்த குடும்பத்தையும் குறிக்கும். ஓர் இல்லம் மகிழ்ச்சிகரமானதாக அமைவதற்குத் தேவையான நிபந்தனைகளுள் பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் தொடர் பாடல் நிகழுதல், அன்பையும் பாசத்தையும் காட்டுதல், பாராட்டையும் அளவான விமர்சனத்தையும் ஆக்கபூர்வமான முறையில் சரியாகப் பயன்படுத்தல் என்பன அடங்கும். மகிழ்ச்சிகரமான குடும்பத்திற்குரிய மேலதிக நிபந்தனைகளில் சாதகமான மனப்பாங் குகளை வளர்த்தல், உணர்வுகளைக் கரிசனையோடும் விவேகத்தோடும் அணுகுதல்,

பிள்ளைகளுடன் புன்னகைத்தல், அவர்களை முத்த மிடல், அவர்களை அரவணைத்தல், அவர்களைத் தொடுதல், அவர்களோடு கைகுலுக்கு தல், ஒன்றாக உணவருந்தல், அன்றாட வேலைகளைச் சேர்ந்து செய்தல், நகைச்சுவையைப் பகிர்ந்துகொள்ளல், ஒருவரை ஒருவர் உவப்போடு வரவேற்றல் முதலியன அடங்கும்.

விசுவாசிகள் தம் இரட்சகனிடம் கேட்கும் இரண்டாவது வேண்டுகோள் தமது வாழ்க்கைத் துணைவர்களும் சந்ததியினரும் பயபக்தியுள்ளோரின் இமாம்களாக ஆக வேண்டும் என்பதாகும். இமாம் என்ற சொல்லும் அதன் பன்மையான 'அஇம்மா' என்பதும் அல் குர்ஆனில் பத்துத் தடவைகள் மீட்கப்பட்டுள்ளன. 'எம்மைப் பயபக்தியுள்ளோரின் இமாமாக ஆக்குவாயாக' என்பதை அல் குர்ஆனின் பல்வேறு வியாக்கியானங்கள் பின்வருமாறு விளக்குகின்றன: எம்மை மற்றவர்களுக்கு முன்னுதாரணங்களாக, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக, நேர்வழிக்கு அழைப்பவர்களாக, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக, மனிதர்களுக்குத் தலைவர்களாக, இறையச்சம் உள்ளவர்களில் முதன்மையானவர்களாக, ஏனையோருக்கு முதற்படிவமாக, மற்றவர்களுக்கு முன்னோடிகளாக, எம்மைப் பின்பற்றுவோர் பிரதி பண்ணக்கூடியவராக ஆக்குதல். எனவே, குடும்பத்தின் இரண்டாவது குறிக்கோள் பயபக்தியுள்ள பயனுறுதி மிக்க தலைவர்களையும் மனித சமுதாயத்துக்கு வழிகாட்டிகளையும் வளர்த்தெடுப்பதே.

இங்கு நாம் தலைமைத்துவம் எனக் குறிப்பிடும் போது அதிகாரத்துக்கான பேராசையைக் குறிப்பிடவில்லை; மாறாக, நல்ல தலைமைத்துவத்திற்குத் தேவைப்படும் வலிமை, ஒழுக்கப் பண்பாடு, உயர் திறமை போன்ற பண்புகளை விருத்தி செய்வதையே குறிக்கின்றோம். மேலும், 'தலைவர்' என்ற சொல் மறையான எண்ணப்படிவமொன்றை ஏற்படுத்தலாம். ஏனெனில், இத்தனிப் பதவியை அடைவதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் போட்டியிடுவது ஆரோக்கியமற்றதாகத் தோன்றும். ஏதேனும் ஒரு குழுவுக்கு முறைப்படியான ஒரு தலைவரே இருக்கலாம் என்ற நிலைமை தேவையற்ற போட்டிகளையும் இலட்சியம் தடுக்கப்படும் உணர்வுகளையும் உருவாக்கலாம். எல்லோரும் தலைவர் பதவியை நாடினால் பணியாளர்களாகவும் பின்பற்றுவோராகவும் இருக்கப்போவது யார்? கோட்பாடுகளுக்கமைய நடக்கும் தலைவர்களிடம் காணப்படுகின்ற சிறப்பியல்புகளைப் பெற்றுக்கொள்ள எம் பிள்ளைகளைத் தூண்டுவதே எமது இலக்காகும். ஏற்கனவே இருந்துவந்த நிலையை மேம்படுத்துவற்குப் பங்களிப்புச் செய்கின்ற சமூகத்தின் எந்தவோர் உறுப்பினரும் ஓர் உண்மையான தலைவராக இருப்பார். உண்மையான முன்னேற்றம் இவ்வாறுதான் அடையப்படுகின்றது.

தலைவர்கள் எங்கே? நீங்கள் தான் தலைவர்கள்!

- நாம் எதிர்பார்த்திருக்கும் தலைவர்கள் நாங்களே!
- தலைமைத்துவம் என்பது முக்கியமானவராக இருப்பது பற்றியதல்ல; அது முக்கியமான பணியொன்றில் ஈடுபடுவதாகும்.
- நீங்கள் அந்தப் பதவியை வகிக்கிறீர்களா இல்லையா என்பதை விட நீங்கள் சிறப்பாக வழி காட்டுகிறீர்களா என்பதே கவனிக்கப்பட வேண்டும்.
- இறைவன் மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் சரியானதைச் செய்வதே தலைமைத் துவமாகும்.
- ஒவ்வொருவரும் யாரோ ஒருவருக்குத் தலைவராக இருக்கின்றார். அவர் உங்களிடம் தொழில் புரிபவராகவோ உங்கள் வாழ்க்கைத் துணையாகவோ ஒரு பிள்ளையாகவோ அல்லது நீங்களாகவோ இருக்கலாம். எனவே, நீங்களும் ஒரு தலைவரே!

மீண்டும் வலியுறுத்திச் சொல்வதாயின், தலைமைத்துவப் பண்புகள் என்பவை அதிகாரம், கௌரவம், அந்தஸ்து, பணம் என்பவற்றுக்கான வேட்டையைக் குறிக்க வில்லை. அதேவேளை, ஆதிக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதிப்பதும் அவற்றின் நோக்கமல்ல. தாராளத்தன்மை, பணிவு, பரந்த நோக்கு என்பவற்றைக் கொண்டவர் களாகப் பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும் என்பதே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு அவர்கள் தங்களை சமூகத்தின் உயிர்ப்புள்ள பெறுமதிமிக்க உறுப்பினர் களாகக் கருதிக்கொள்ள வேண்டும். பல்வகை அபிப்பிராயங்களைக் கொண்ட இவ்வுலகில் சிரமமின்றி வாழக்கூடியவர்களாகவும் தமக்கென உயர் இலக்குகளைத் தன்னம்பிக்கை யோடு அமைத்துக் கொள்ளும் அனுகூலம் மிக்கவர்களாகவும் அவர்கள் இருப்பது அவசியம். தாழ்மட்ட சுய எதிர்பார்ப்புகள் அவர்களைச் செயலிழக்கச் செய்ய மாட்டா. தமது மத நம்பிக்கையையும் இனத்தையும் சமூகம் அங்கீகரிக்க மாட்டாதோ எனப் பயப்படும் பிள்ளைகள் ஒருபோதும் சமூகத்துக்குச் சேவை செய்ய முடியாது. நாம் வாழும் சமூகத்தின் இயல்புகளைக் கருத்திற் கொள்ளும் போது இப்பண்புகளுக்குக் கட்டாயமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. தன்னம்பிக்கை யோடு நேரான வழியில் தம்மை வழிநடத்திச் செல்வதற்கு நாம் எம் பிள்ளைகளைத் தயார்படுத்தாவிட்டால் அவர்கள் இலகுவாக வழி கெடுத்தப்பட முடியும்.

முஸ்லிம் மரபுகளில் 'தலைவர்' (காயித்) என்ற சொல் நேரடியாகப் பயன்படுத் தப்படாமல் பின்வரும் சொற்களால் வரையறுக்கப்பட்டு இருந்தது.

ராயி - மேய்ப்பாளர், ஆன்மீக வழிகாட்டி, பாதுகாவலர்

முரப் - கல்வியூட்டுபவர், பயிற்றுவிப்பவர்

இமாம் - முதன்மையானவர், முன்மாதிரியானவர்

முஅத்திப் - ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர், நன்னெறி வளர்ப்பவர்

முஅல்லிம் - ஆசிரியர்

முர்ஷித் - நம்பிக்கையான அறிவுரையாளர், வழிகாட்டி

முதர்ரிப் - பயிற்சி ஊக்குவிப்பாளர்

தலைவர் என்பவர் குறித்த சில இலக்குகளை அடைவதற்காக ஏனையவர்களையும் அவர்களது முயற்சிகளையும் வழிகாட்டி நெறிப்படுத்துபவராவார். அதேவேளை, *முரப்பி* (கல்வியூட்டுபவர், பயிற்றுவிப்பவர்) என்பவர் அவ்விலக்குகளை அடைவதற்காக ஆட் களைத் தயார்படுத்தித் தகைமை பெறச் செய்கிறார். உதாரணமாக, நபி (ஸல்) அவர்கள் இராணுவப் படைகளுக்குத் தலைமை தாங்குவதற்காக அம்ரு இப்ன் அல்- ஆஸ் (றழி) அவர்களையும் உபைதாஹ் இப்ன் அல்- ஜர்ராஹ் (றழி) அவர்களையும் தெரிவு செய்த அதே நேரத்தில் நேர்வழியும் தெளிவும் பெற்ற ஆட்களை வளர்த்துப் போஷிக்கும் மேய்ப் பாளர்களாகவும் (பயிற்றுவிப்பாளரர்களகவும்), கல்வியூட்டுபவர்களாகவும், நம்பிக்கை யான அறிவுரை வழங்குபவர்களாகவும் முஸ்அப் இப்ன் உமைர் (றழி) அவர்களை மதீனா வுக்கும் முஆத் இப்ன் ஜபல் (றழி) அவர்களை யெமனுக்கும் அனுப்பி வைத்தார்கள்.

சுஐப் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மத் (ஸல்) முதலிய பல நபிமார்கள் ஆடு மேய்ப்பவர்களாக இருந்தது தற்செயலானதல்ல. மேய்ப்புத் தொழில் தம்மைப் பின்பற்றி வருபவர்கள் மீது அன்பையும் பராமரிப்பையும் கருணையையும் காட்டு

வதையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அத்தோடு அது பணிவையும் குறிக்கின்றது. பிள்ளை வளர்ப்புக்குத் தேவையான அத்தியவசிய அடிப்படைப் பண்புகள் இவையே. தமது மந்தையைப் பராமரிக்கும் மேய்ப்பாளர்களாகப் பெற்றோரை உருவகிப்பது மிக அழகான ஒப்பீடாகவே இருக்கிறது. எனவே, ஒரு தலைவர் என்பவர் மேய்ப்பாளராகவும் அறிவுரை பகர்பவராகவும் பயிற்றுவித்து ஊக்குவிப்பவராகவும் ஆசிரியராகவும் இருக்கின்றார்.

தலைவரா மேய்ப்பாளரா?!

தலைவர் (காயித்) என்ற சொல் பல்வேறு கலாசாரங்களில் பயன்படுத்தப்பட்ட போதிலும் அது அல் குர்ஆனிலோ ஹதீஸிலோ உபயோகிக்கப்படவில்லை. பதிலாகப் பின்வரும் ஹதீஸில் மேய்ப்பாளர் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது:

நீங்கள் அனைவரும் மேய்ப்பாளர்களே. உங்கள் பராமரிப்பில் உள்ளவர்களுக்கு நீங்கள் பொறுப்புடையவர்கள். ஆட்சியாளர் தமது குடிமக்களுக்கு மேய்ப்பாளர்; அவர்களுக்குப் பொறுப்பானவர். ஒவ்வொரு மனிதரும் தமது குடும்பத்தினருக்கு மேய்ப்பாளர்; அவர்களுக்குப் பொறுப்பானவர். ஒவ்வொரு பெண்ணும் தனது கணவனின் வீட்டுக்கு மேய்ப்பாளர்; அதற்குப் பொறுப்பானவர். ஒரு வேலையாள் தனது எஜமானின் உடைமைகளுக்கு மேய்ப்பாளர்; அவற்றுக்குப் பொறுப்பான வர். ஒவ்வொரு மனிதனும் தனது தந்தையின் சொத்துக்களுக்கு மேய்ப்பாளர்; அதற்குப் பொறுப்பானவர். நீங்கள் அனைவரும் மேய்ப்பாளர்கள். உங்கள் பராமரிப்பில் உள்ளவர்களுக்கு நீங்கள் பொறுப்புடையவர்கள். (அல் புகாரி)

2.) நபி (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து பெறப்பட்ட இலக்குகள்

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

மனிதர்கள் (தமக்கேயுரிய பண்புகளைக்கொண்ட) கனியங்களை (அல்லது உலோகங்களை)ப் போன்றவர்கள். (இஸ்லாத்துக்கு முந்திய) அறியாமை (ஜாஹிலிய்யா)க் காலத்தில் சிறந்தவர்களாக இருந்தோரே, சரியாகப் புரிந்து (கிரகித்துக்) கொண்ட நிலையில் இஸ்லாத்திலும் சிறந்தோராக இருக்கின்றனர்.

(அல்புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸிலிருந்து பல விடயங்களை அறிந்து கொள்ளலாம். பிள்ளைப் பருவத்தின் ஆரம்பத்திலேயே நன்னடத்தை விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதே இவற்றில் முதலாவதாகும். இது முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் என்ற வேறுபாடின்றி எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதாகும். இஸ்லாத்தின் வருகைக்கு முன்பே பல மனிதர் களிடம் துணிச்சல், ஆக்கத்திறன், நேர்மை, அன்பு, நம்பத்தகவு என்பன காணப்பட்டன. இப்பண்புகளைக் கொண்டவர்களே சிறந்த மனிதர்கள். இவற்றுக்கு இறை விசுவாசம், மெய்யறிவு, தெய்வீக வழிகாட்டல் என்பவற்றை இஸ்லாம் சேர்த்து விடுகிறது. உயர் பண்புள்ள நிராகரிப்போரே இஸ்லாத்தைப் புரிந்து கொண்ட பின்னர் உயர் நடத்தை யுள்ள முஸ்லிம்களாக மாற முடியும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பல்தெய்வக் கோட்பாட்டாளரில் சிறந்தவர் → இஸ்லாத்தைப் புரிந்து கிரகித்துக் கொள்ளல் → முஸ்லிம்களுள் சிறந்தவர்

உமர் இப்ன் அல்-கத்தாப், காலித் இப்ன் அல்- வலீத் முதலிய சிறந்த முஸ்லிம்களிடம் காணப்பட்ட துணிச்சல், நேர்மை, நம்பத்தகவு போன்ற இயல்புகள் அவர்கள் இஸ்லாத் தைத் தழுவிய பின்னரே ஏற்பட்டதாகச் சில முஸ்லிம்கள் நினைக்கின்றனர். ஆனால், உண்மையில் இஸ்லாத்தில் நுழைய முன்பே இவர்ள் துணிச்சலுடையவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் நம்பத்தகுந்தவர்களாகவும் இருந்தனர். அவர்களிடம் ஏற்கனவே இருந்த நல்ல பண்புகள், இஸ்லாத்தின் காரணமாக இறை விசுவாசம், மெய்யறிவு, தெய்வீக வழிகாட்டல் என்பவற்றைக் கொண்டு குறை நிரப்பப்பட்டன.

இந்த ஹதீஸ் நடத்தைப் பண்புகள் பற்றியும் கவனம் செலுத்துகின்றது. திடகாத்திர மான உடல், நல்ல ஆரோக்கியம் என்பன விசுவாசிகளிடம் இருக்க வேண்டிய அவசி யமான சில நிபந்தனைகளாகும். குறிப்பாகக் கர்ப்பத்தின் போதும் தாய்ப்பாலூட்டலின் போதும் இது மிக முக்கியம். மதுபானம், போதைப் பொருட்கள், புகைத்தல், திருமணத் திற்குப் புறம்பான பாலுறவு என்பன கர்ப்பிணித் தாய்க்கும் பிறக்கப்போகும் பிள்ளைக்கும் ஊறு செய்யக் கூடிய தீமைகளாகும். கர்ப்பிணித் தாய்மார் மருத்துவரின் ஆலோசனை யின்றி மருந்துகள் உட்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு, அவர்களுக்கு நல்ல போசணையும் போதியளவு நித்திரையும் தேவை. பக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதும் முக்கியமானது.

துணிச்சல், நேர்மை, ஆக்கத்திறன், நம்பத்தகவு, அன்பு, பொறுப்புணர்வு ஆகிய நடத்தைப் பண்புகளையே நாம் விருத்தி செய்ய நாடுகிறோம். இவை விருத்தியடை வதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. எனவே, பிள்ளையின் முதல் ஐந்து வருடங்களும் மிக முக்கியமானவை. அத்தோடு, வாசித்தல், எழுதுதல், பேசுதல், நீந்துதல், வாகனம் ஓட்டுதல், கம்பியூட்டரைப் பயன்படுத்தல் போன்ற திறன்களையும் தம் பிள்ளை பெற்றுக் கொள்வதற்குப் பெற்றோர்கள் வாய்ப்பளிக்க வேண்டும். அத்தோடு பொறுமை, மரியாதை, தீர்மானமெடுக்கும் திறன் போன்றவற்றையும் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும். இத்திறன்களைப் பெற்றுக்கொள்வதில் எந்தளவு முந்திக் கொள்கிறார்களோ அந்தளவுக்குக் கூடுதலான நன்மைகளும் வாய்ப்புக்களும் நம் பிள்ளைகளுக்குக் கிடைக்கும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களை நேர்மையானவர் என்றும் நம்பிக்கைக்குரியவர் என்றும் அன்னாரது நண்பர்களும் பகைவர்களும் விவரித்தார்கள். இறைத்தூதினைப் பெறுவதற்கு முன்பாக அன்னாரிடம் இருந்திருக்க வேண்டிய அத்தியவசியப் பண்பு இதுவாகும். நூஹ் (அலை), யூனுஸ் (அலை), இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை), மூஸா (அலை), தாலூத் (அலை), ஐயூப் (அலை), யஃகூப் (அலை), யூஸுஃப் (அலை), ஈஸா (அலை) ஆகிய நபிமார்களைப் பற்றி அல் குர்ஆன் விவரிக்கும் போதும் அவர்களுடைய நற்பண்புகள் பற்றி அழுத்திக் கூறுகின்றது. மூஸா (அலை) வலிமையானவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் விவரிக்கப்படுகின்றார். நபி யூஸுப் (அலை) அவர்கள் 'தகைமையும் தொழில்வாண்மையும் நம்பகத் தன்மையும்' உள்ளவராகத் தம்மைத் தாமே விவரிக்கின்றார். தலைமைத்துவத்துக்குத் தேவையான பின்வரும் முக்கிய தகைமைகளை இவ்விவரணங்கள் கொண்டிருக்கின்றன: வலிமை (உடல் மற்றும் பண்பு சார்ந்த வலிமை), தொழில்வாண்மை (அறிவு, திறன்கள்), நம்பகத்தன்மை. மொத்தத்தில் அல் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள 25 நபிமார்களும் நேர்மையானவர்கள், புத்திசாலிகள், அறிவுள்ளவர் கள், அன்பும் கருணையும் கொண்டவர்கள், வலிமையானவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள், பொறுமையானவர்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்கள் என வர்ணிக்கப்பட்டுள்ள னர். இவையே எமது பிள்ளைகளில் நாம் விருத்தி செய்வதற்கு முயலவேண்டிய முக்கிய பண்புகளாக இருக்கின்றன. அல் குர்ஆனின் பின்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்.

மேலும், இவ்வேதத்தில் இஸ்மாயீலைப் பற்றி (நபியே!) நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் வாக்குறுதியில் உண்மையானவராக இருந்தார்; இன்னும் அவர், நம்முடைய தூதராக, நபியாக இருந்தார். (அல் குர்ஆன் 19: 54)

அதற்கு யூஸுஃப் "இந்தப் பூமியின் களஞ்சியங்களின் மீது (நிர்வாகியாக) என்னை ஆக்கிவிடும்; நிச்சயமாக நான் (அவற்றைப்) பாதுகாக்கக் கூடியவன்; நன்கறிந்தவன்" என்று சொன்னார். (அரசரும் அவ்வாறே செய்தார்) (அல் குர்ஆன் 12: 55)

மூஸா வாலிபத்தையடைந்து (வாழ்க்கையில்) அவர் நிறைவு நிலையைப் பெற்ற போது அவருக்கு ஞானத்தையும் கல்வியையும் நாம் வழங்கினோம்; இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் (நற்) கூலி வழங்குவோம். (அல் குர்ஆன் 28: 14)

(அப்போது) அவ்விருவரில் ஒருத்தி "என் தந்தையே! நீங்கள் மூஸாவைக் கூலிக்கு வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கூலிக்கு வைத்துக் கொண்டவர்களில் நிச்சயமாக இவர் மிகச் சிறந்த பலம் மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர் ஆவார்" என்று கூறினாள். (அல் குர்ஆன் 28: 26)

மேலும், அவர்களுடைய நபி தாலூத், அவர்களிடம் "நிச்சயமாக அல்லாஹ் 'தாலூத்'தை உங்களுக்கு அரசனாக அனுப்பியிருக்கிறான்" என்று கூறினார். அ(தற்க)வர்கள் "நாங்களே அவர்களை விட அரசாட்சி புரிய மிகத் தகுதியுடையவர்களாக இருக்க, எங்கள் மீது அவருக்கு எவ்வாறு அரசுரிமை ஏற்படும்? (அரசு புரியத் தேவையான) செல்வ வளத்தையும் அவர் கொடுக்கப்படவுமில்லை" என்று கூறினார்கள். (அதற்கு) "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது (அரசாட்சி புரிய) அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்; (யுத்தக்) கல்வியிலும் தேகத்திலும் உங்களை விட அவருக்கு விசாலத்தை அதிகப்படுத்தியும் இருக்கிறான். மேலும், அல்லாஹ் தான் நாடியவருக்குத் தன்னுடைய ஆட்சியை அளிப்பான். மேலும், அல்லாஹ் அதிக விசாலமானவன்; நன்கறிந்தவன்" என்று (அவர்களுடைய நபியாகிய) அவர் கூறினார். (அல் குர்ஆன் 2: 247)

(விசுவாசிகளே!) உங்களிலிருந்தே திட்டமாக (முஹம்மத் எனும்) ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கிறார்; (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும். உங்கள் மீது மிக்க பேராசை கொண்டவர்; விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர்; மிகக் கிருபையுடையவர். (அல் குர்ஆன் 9: 128)

குடும்ப முன்னுரிமைகள்

ஒரு பெற்றார் காலியான பெரிய கண்ணாடிச் சாடியொன்றை எடுத்து அதனைப் பெரிய கூழாங்கற்களால் நிரப்பினார். பின்னர் சாடி நிரம்பி விட்டதா எனத் தனது பிள்ளைகளிடம் கேட்டார். "ஆம்; நிரம்பி விட்டது" என அவர்கள் பதிலளித்தனர். பின்னர் அவர் சிறிய கூழாங்கற்களைச் சாடியினுள் இட்டு அதனைச் சிறிது குழுக்கினார். அந்தக் கூழாங்கற்கள் உருண்டு சென்று பெரிய கற்களுக்கு இடையிலிருந்த இடைவெளிகளுக்குள் நுழைந்து கொண்டன. "இப்போது சாடி நிரம்பிவிட்டதா?" என அவர் மீண்டும் கேட்டார். 'ஆம்' எனப் பிள்ளைகள் ஏகோபித்துக் கூறினர். பின்னர் அந்தப் பெற்றார் ஒரு பிடி மணலை எடுத்துச் அச்சாடிக்குள் போட்டார்.

சாடியில் மீதியாக இருந்த இடங்களை மணல் நிரப்பியது. ''சரி, இப்போது சாடி நிரம்பி விட்டதா?'' என அவர் புன் சிரிப்புடன் கேட்டார். பிள்ளைகள் 'ஆம்' என்றனர். பின்னர் மேசையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கோப்பைத் தேநீரையும் அவர் சாடியினுள் ஊற்றினார். அத்தேநீர் மணலுக்குள் இருந்த இடைவெளிகளுக்குள் சென்று மறைந்தது. பிள்ளைகள் சிரித்தனர்.

''இந்தச் சாடி உங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக எடுத்துக்கொள்ளுங்கள். பெரிய கூழாங்கற்கள் தான் இறைவழிபாடு, உங்கள் உடல் நலம், உங்கள் கல்வி, பிரதான ஆர்வங்கள் முதலிய வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களைக் குறிக்கின்றன. சிறிய கூழாங்கற்கள் உங்கள் தொழில், உங்கள் வீடு, பொழுதுபோக்குகள் முதலிய ஏனைய அம்சங்களைக் குறிக்கின்றன. கேளிக்கைகள் மற்றும் வாழ்க்கையின் அற்பசொற்ப அம்சங்களை மணல் குறிக்கின்றது.

நீங்கள் முதலில் மணலை இட்டுச் சாடியை நிரப்பினால் சிறிய கூழாங்கற்களுக்கோ பெரிய கற்களுக்கோ அதில் இடம் கிடைக்காமல் போய்விடும். வாழ்க்கையிலும் இதே மாதிரி தான். உங்கள் முழுக் காலத்தையும் சக்தியையும் அற்ப விடயங்களில் செலவு செய்தால் வாழ்க்கையின் முக்கிய அம்சங்களுக்கு இடமே இல்லாமல் போய்விடும். மறுமையில் உங்கள் வெற்றிக்கும் இவ்வுலகில் உங்கள் மகிழ்ச்சிக்கும் மிக அவசியமான அம்சங்களின் மீது கவனத்தைச் செலுத்துங்கள். இறை வணக்கத்தில் அதிகம் ஈடுபடுங்கள்; அதிகமாக தருமம் செய்யுங்கள்; உங்கள் பிள்ளைகளுடன் விளையாடுங்கள், ஒன்றாகக் காலம் கழியுங்கள்; உங்கள் உடல் நலத்தில் அக்கறை செலுத்துங்கள்; உங்கள் வாழ்க்கைத் துணைவர் மீது கரிசனை காட்டுங்கள்; படிப்புக்கு நேரம் ஒதுக்குங்கள். இவ்வாறு செய்தால் வீட்டைச் சுத்தம் செய்யவும் ஒழுகும் நீர்க்குழாயைத் திருத்தவும் உங்களுக்கு நேரம் கிடைக்கும்.

பெரிய கூழாங்கற்களின் மீது முதலில் கவனம் செலுத்துங்கள். அவை குறிக்கும் விடயங்கள் மிக முக்கியமானவை. அவற்றின்படி உங்கள் முன்னுரிமைப் பட்டியலை அமைத்துக் கொள்ளுங்கள். ஏனையவை அனைத்தும் வெறும் மணல் மாத்திரமே''

''அந்தத் தேநீர் எதைக் குறிக்கிறது?'' என ஒரு பிள்ளை கேட்டது. அதைக் கேட்ட பெற்றார் புன்னகையுடன் ''இவ்வாறு கேட்டது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் வாழ்க்கை எவ்வளவு தான் நிரம்பி விட்டது போல் தோன்றினாலும் ஒரு நண்பருடன் சேர்ந்து ஆளுக்கொரு கோப்பை தேநீர் அருந்துவதற்கு அவகாசம் இருந்தே தீரும் என்பதையே அது குறிக்கின்றது'' என்றார்.

முடிவுரை:

வெகுமதியைப் பெறுவதிலேயே கண்ணாய் இருங்கள்.

இந்த அத்தியாயத்தில் இலக்குகள், குறிக்கோள்கள் என்பன பற்றி ஓரளவு விரிவாகக் கலந்துரையாடப் பட்டது. எனினும், இலக்குகளை அமைத்தல் என்பது ஒரு முடிவிடத்தை அடைவதற்கான வழி மாத்திரமே. எனவே, எமது இறுதி இலக்கான நல்ல பிள்ளைகளை வளர்த்தெடுத்தல் பற்றி எப்போதும் நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். ஒருவர் பிள்ளைகளோடு எப்படி நடந்து கொள்கிறார் என்பதிலும், பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின் பெற்றார்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப பங்களிப்புக்களைச் செய்வதற்குத் தேவையான பண்புகளை அவர்களில் விருத்தி செய்வதிலும் இது நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ளது.

எமது பிள்ளைகளுக்காக நாம் அமைத்துக் கொடுக்கும் இலக்குகள் அடையப்பட வேண்டுமாயின் நாம் எமது சொந்தப் பண்புகள், நடத்தைகள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். நாம் செய்ய வேண்டியவை:

1) ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கும் ஊக்கமளித்து வலுவூட்டுவதற்கும் இடையில் பொருத்தமான சமநிலையொன்றைப் பேணவேண்டும்.

2) நாம் போதிப்பதை முடிந்த அளவுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும். உங்கள் தவறுகளை ஒப்புக் கொள்வதோடு சாக்குப் போக்குகள் கூறாமல் அவற்றுக்காக மன்னிப்புக் கோர வேண்டும்.

3) மேற்கூறியவற்றை இறை விசுவாசம், இறை வணக்கம் என்பவற்றால் நிறைவு செய்யுங்கள். எல்லாம் வல்ல இறைவன் நல்ல மனிதர்களின் வேண்டுதல்களுக்குச் செவிமடுத்து அவன் நாடிய விதத்தில் அவன் நாடிய நேரத்தில் உதவி செய்கிறான்.

பைபிள் பின்வருமாறு கூறுகிறது:

ஒரு பிள்ளை செல்ல வேண்டிய பாதையில் செல்வதற்கு அதற்குப் பயிற்சி வழங்குங்கள். அது வளர்ந்த பின்னர் அப்பாதையை விட்டு விலகிச் செல்லாது.
(Proverbs 22:6)

இவ்வுலகின் எதிர்காலமும் அதன் பாதுகாப்பும் அதன் எதிர்காலச் சந்ததிகளிலேயே பெரிதும் தங்கியுள்ளன. சமூகத்தைச் சீர்திருத்துவதிலும் மீள உயிர்ப்பிப்பதிலும் பிள்ளை வளர்ப்பு முக்கிய பங்கை வகிக்கின்றது. எனவே, அதன் தாக்கங்கள் பற்றி நாம் குறை மதிப்பீடு செய்யக்கூடாது. மனித சமுதாயம் பாரிய ஆபத்துக்களையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ளது. எனவே, பிள்ளை வளர்ப்புத் திறன்களைப் பெற்றுக்கொள்வதோடு அவற்றை நடைமுறைப்படுத்தும் எமது பொறுப்பு பற்றியும் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். எமது பிள்ளைகளே வருங்காலப் பெற்றோர் ஆவர். இதே விழுமியங்களை அவர்கள் தம் பிள்ளைகளுக்குப் போதிப்பார்கள். உலகில் அமைதியையும் நீதியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தக்கூடிய சுழற்சிச் செயன்முறையொன்றை இது உருவாக்கும்.

தொழிற்பாடுகள்



தொழிற்பாடு 16: வீட்டுச் சூழல் பற்றிய கலந்துரையாடல்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருமாறு குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்த வரையும் வேண்டுங்கள்.

வீட்டினுள் நுழையும் போது உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறதா?
வீட்டை விட்டு வெளியேறும் போது உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறதா?
வீட்டுச்சூழலை மேலும் சந்தோசமானதாக ஆக்க நீங்கள் என்ன செய்ய முடியும்?

வீட்டில் மகிழ்ச்சியை மேம்படுத்த ஒவ்வொரு அங்கத்தவரும் செய்ய வேண்டிய குறிப்பிட்ட விடயம் ஒவ்வொன்றை இனங்காணுங்கள்.

தொழிற்பாடு 17: பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல்

பின்வரும் விடயங்களை மீளாய்வு செய்து அவற்றை உங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்றுக்கொடுக்கலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள். உங்கள் பிள்ளைகள் பெற்றுள்ள பயிற்சியில் காணப்படும் குறைபாடுகள் பற்றிக் கவனம் செலுத்துங்கள்.

- அவர்கள் விரும்பும் மலர்ச் செடியொன்றை நடும் முறை (உங்கள் பிள்ளைகள் மண் விளையாடவும் குழி தோண்டவும் நீர் ஊற்றவும் விரும்புவர்)
- குப்பை கூழங்களைத் தவிர்த்தல்
- நீங்கள் கடமையிலிருக்கும் போது உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்வது எப்படி?
- தேசிய அவசர அழைப்பு எண்ணை (இலங்கையில் 119) எவ்வாறு, எப்போது, எதற்காக அழைத்தல் வேண்டும்
- இரவல் பெற்ற பொருட்களைத் திருப்பிக் கொடுத்தல்
- பிறரைப் பாராட்டுதல்
- பிறரை நோவினை செய்யாதிருத்தல்
- மிருகங்களுக்கு அஞ்சாதிருக்கும் அதேவேளை அவற்றை மதித்தல், ரசித்தல்
- பிள்ளைகளின் வார்த்தைகளை அவர்களது பிணை முறிகளாக ஆக்குதல்
- தாம் அங்குமிங்குமாக சிதறவிட்ட பொருட்களைத் தாமே ஒழுங்கு படுத்திக் கொள்ளல்
- பராமரித்தலும் பகிர்ந்து கொள்ளலும். பகிர்ந்து கொள்ளும் போது மகிழ்ச்சி இரட்டிப்பாகும்; கவலை பாதியாகும்

- அதிகாரத்துக்கு மதிப்பளித்தல்; ஆனால், அதைக் கண்டு திகிலடையாமல் இருத்தல்
- சகல இன, மத பிள்ளைகளுடனும் நட்புக் கொள்ளுதல் (அவர்கள் உங்களுக்குப் புரியாத மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும் சரியே)
- பாதுகாப்பு வரையறைகளுக்குள் புதிய விடயங்களை முயற்சித்துப் பார்க்க அஞ்சாதிருத்தல்
- தோல்வியின் போது எவ்வாறு நடந்து கொள்வது?
- வெற்றி பெறுவது எவ்வாறு?
- ஏதேனும் ஒரு விடயத்தில் அவர்கள் தேர்ச்சி மிக்கவர்களாக இல்லாதிருப்பின் அதனை அனுபவித்து மகிழ்ச்சியுறப் பழகுதல்
- அவர்கள் பாரதூரமான பிரச்சினையொன்றால் பாதிக்கப்படும் போது தம்மால் முடிந்தவரை சிறப்பாகச் செயற்படுவதும் இறைவனின் உதவியை நாடுவதும்
- தமது ஆடைகளைச் சலவை செய்தல்; சலவை செய்தவற்றை மடித்து வைத்தல்
- புத்தகங்களுக்கு மதிப்பளித்தல்
- எப்போதும் நேரம் தவறாதிருத்தல்; தாமதமாகும் பட்சத்தில் அது பற்றி முன்கூட்டியே அறிவித்தல்
- பொருட்களை மற்றவர்களுக்குக் கொடுத்துவிடல்
- தோற்றத்தில் நேர்த்தியாகவும் அழகாகவும் இருத்தல்

பெற்றோருக்கு

- உங்கள் பிள்ளை அழும் போது ''அழாதே'' என்று சொல்லாதீர்கள். பதிலாக, அது ஏன் அழுகிறது எனக் கேளுங்கள்.
- பிள்ளை கேட்கும் சகலதையும் வாங்கிக் கொடுக்காதீர்கள் (அப்படிச் செய்ய உங்களுக்கு வசதி இருப்பினும் சரியே)
- உங்கள் பிள்ளையின் தவறுகளை விமர்சிக்காதீர்கள். ஆனால், அதன் முயற்சியின்மை பற்றிக் கலந்துரையாடுங்கள்
- உங்கள் பிள்ளை மீது நம்பிக்கை வையுங்கள்
- உங்கள் பிள்ளைகளின் முன்னிலையில் உங்கள் வாழ்க்கைத் துணைவரை விமர்சிக்காதீர்கள்
- உங்கள் பிள்ளையின் அறையில் டீ. வீ அல்லது கம்பியூட்டரை வைக்காதீர்கள்
- பிள்ளை பராமரிக்கும் தாதியாக டீ. வீயைப் பயன்படுத்தாதீர்கள்

தொழிற்பாடு 18: எமது கலாசாரத்தில் காணப்படும் பாதகமான பழமொழிகள்

எம்மிடையே பரவலாகக் காணப்படும் சில பாதகமான பழமொழிகளைப் பற்றிப் பெற்றார் விளக்கம் கொடுத்து மறுத்துரைக்க வேண்டும். இவை சுயநலம், இரக்கமின்னை, நயவஞ்சகம் போன்றவற்றை வலியுறுத்துகின்றன.

வெட்ட முடியாத கையை முத்தமிடு.

ஆறு கடக்கும் வரை அண்ணன், தம்பி; கடந்த பின் நீ யாரோ, நான் யாரோ

உன் பகைவனுக்குப் பகைவன் உனக்கு நண்பன்.

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே.

(மேற்கூறப்பட்டவை நயவஞ்சகத்தையும் தவறான மனப்பாங்குகளையும் எடுத்துக் காட்டுகிறது)

தொழிற்பாடு 19: உண்மையான நட்பு அடிப்படையிலான உலகக் கண்ணோட்டம்

பின்வரும் ஹதீஸை விளக்குவதோடு நீங்கள் கொ ண்டிருந்த தவறான, நேர்மையற்ற, எல்லாம் வல்ல இறைவனுக்காக மாத்திரம் செய்யப்படாத நட்புறவுகள் பற்றிய கதைகளைப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''இறைவனின் அடியார்களில் ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்களைப் பற்றி நபிமார்களும் உயிர்த்தியாகிகளும் கூட பொறாமைப் படுவார்கள்'' ''அல்லாஹ்வின் தூதரே, அவர்கள் யார்?'' எனத் தோழர்கள் கேட்டனர். ''அவர்கள் செல்வத்துக்காகவோ குடும்பத் தொடர்புகளுக் காகவோ அன்றி அல்லாஹ்வின் ஒளிக்காகவே ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துகின்றனர். அவர்களது வதனங்கள் ஒளியினால் நிரம்பியிருப்பதோடு அவர்கள் ஒளியினால் ஆன மிம்பர்களின் மீது இருப்பர். மற்ற மக்கள் அச்சமுறும் போது அவர்கள் அச்சப்பட மாட்டார்கள். மற்றவர்கள் கவலையுறும் போது அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்'' என விளக்கமளித்த நபி (ஸல்) அவர்கள் பின்வரும் வாக்கியத்தை ஓதிக்காட்டினார்கள்.

''நிச்சயமாக அவர்கள் இறைவனுக்கு மிக நெருக்கமாக இருக்கின்றனர். அவர்கள் அச்சப்பட வேண்டிய அவசியமும் இல்லை; அவர்கள் கவலைப்படவும் மாட் டார்கள்'' (அபூதாவூத்)

தொழிற்பாடு 20: குடும்ப அங்கத்தவர்களிடையே அமைதியான கருத்துப் பரிமாற்றம்

- குடும்பத்தில் ஒவ்வொருவரதும் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக மாதந்தோறும் குடும்ப ஒன்றுகூடலை ஏற்பாடு செய்யுங்கள்.
- இது தொடர்பாக ஏற்படக்கூடிய சூடான வாக்குவாதங்களின் போது தேவை யற்ற மன அழுத்தங்களும் மனக் கொதிப்புகளும் ஏற்படாமல் கவனித்துக் கொள் ளுங்கள்.

அத்தியாயம் 4

பிரதான இலக்கு: அல்லாஹ்வை நேசிக்கும் பிள்ளைகள்

- அறிமுகம் 104
- எமது பிள்ளைகளில் இறை விசுவாசத்தை வளர்ப்பதற்குக் கையாளப்படும் தற்கால அணுகுமுறை 105
- சுய ஈடுபாடு கொண்ட பண்பாடு: பொது விவகாரங்களில் ஈடுபாடு இல்லாமை 106
- தனிப்பட்ட பொறுப்புணர்வு இல்லாமை 110
- திரிபடைந்த பண்பாடு: பிற்போக்கும் மூட நம்பிக்கையும் 112
- சமநிலையான வழி: அறிவுபூர்வமான அணுகுமுறை 114
- அல்குர்ஆன் மீதான நேசத்தைப் பிள்ளைகளுக்குப் போதித்தல் 115
- பிரார்த்தனைகளைப் பிள்ளைகளுக்குப் போதித்தல்: இறைவனைத் தொடர்ச்சியாக நினைவு கூர்தல் 118
- பிள்ளைகளுக்குப் பாவமன்னிப்பை (தவ்பாவை) கற்றுக் கொடுத்தல் 119
- முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றியும் ஏனைய நபிமார்கள் பற்றியும் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் 120
- பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை (அதப்) கற்பித்தல் 121
- நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முதலில் எதனைக கூறப்போகிறீர்கள்?: அவர்கள் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் என்பதையா அல்லது அல்லாஹ் அவர்களை நேசிக்கிறான் என்பதையா? 122
- தொழிற்பாடுகள் 21- 25 124

அறிமுகம்

பிள்ளை வளர்ப்பு தொடர்பாகப் பெற்றார் கொண்டிருக்க வேண்டிய சில பிரதான இலக்குகள், விழுமியங்கள் என்பன பற்றி முந்திய அத்தியாயத்தில் ஆராய்ந்தோம். எனினும், விசேட அழுத்தம் கொடுக்கப்பட வேண்டிய, எல்லாவற்றையும் உள்ளடக்கிய குறிக்கோளொன்று இருக்கிறது. இறைவன் மீது விசுவாசம் வைப்பதே அது. இறைவனைப் பற்றி அறிந்த பிள்ளைகளை வளர்ப்பதானது, இறைவன் மீது நேசம் வைத்து அவனைப் பற்றிய உணர்வுடன் வாழும் பிள்ளைகளை வளர்ப்பதிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. இறைவன் பற்றிய உணர்வை அடிப்படையாகக் கொண்டே மற்ற எல்லா விழுமியங்களும் உருவாகின்றன. அத்தோடு, அதுவே உண்மையான வெற்றிக்கு வழி கோலுகின்றது.

நாம் பிள்ளைகளுடன் கழிக்கக் கூடிய கால அவகாசம் மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, நாம் எமது செயற்பாடுகளை ஒழுங்கு படுத்திக்கொண்டு நேர அட்டவணை யொன்றின்படி செயற்பட வேண்டும். ஆன்மீக உணர்வும் ஒழுக்க விழுமியங்களும் எப்படி யாவது எம் பிள்ளைகளை வந்தடையும் என்ற நம்பிக்கையில் நாம் செய்யவேண்டிய வற்றை எதிர்காலத்துக்கு ஒத்திவைப்பதோ, எம் சார்பில் வேறு ஒருவரைக் கொண்டு அவற்றை நிறைவேற்ற முயற்சிப்பதோ நல்லதல்ல.

இன்று நாம் வாழும் சமூகமானது சமநிலையற்ற பகுத்தறிவுவாதத்தையே தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. இவ்வகையான சிந்தனை எமது வாழ்விலிருந்து இறைவனை அப்புறப்படுத்த முயல்கின்றது. எனவே, இறைவனைப் பின்னணிக்குத் தள்ள முயற்சிக்கும் பள்ளிக்கூடங்கள் பற்றி நாம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

எமது பிள்ளைகளில் இறை விசுவாசத்தை வளர்ப்பதற்குக் கையாளப்படும் தற்கால அணுகுமுறை

நாம் செய்யவேண்டியவற்றைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் எமது குடும்ப வட்டாரங்களில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

இன்றைய முஸ்லிம்கள் வாழ்க்கையில் பிரயோகிக்கும் வழிபிறழ்ந்த சமய அணுகுமுறை, சம்பிரதாய ரீதியானதாகவும் விதிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் இருக்கின்றது. இவ்வணுகுமுறையே பிள்ளை வளர்ப்பிலும் பிரதிபலிக்கின்றது. இன்று நடைமுறையிலுள்ள பரவலான சமயப் பண்பாட்டின்படி வாழ்க்கைத் தொழிற்பாடுகள் சமய வழிபாடுகள் (இபாதத்), வியாபார இடைத்தாக்கங்கள் (முஆமலாத்) என்ற இரு பிரதான வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றன. சமய வழிபாடுகள் பற்றிய அணுகுமுறைகள் காரணமாகப் பிள்ளை வளர்ப்பின் போது வழங்கப்படும் சமயக் கல்வியானது வுழூ செய்தல், ஐவேளை தொழுதல், ரமழானில் நோன்பிருத்தல், ஏழை வரி (ஸகாத்) வழங்குதல் போன்றவை பற்றி மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. அத்தோடு, திருமண உடன்படிக்கை (ஸவாஜ்), வியாபார உடன்படிக்கை (உகூத்), முறை சார்ந்த தனிப்பட்ட ஒழுக்க விழுமியங்கள் (அதப்) முதலிய சமூகம் சார்ந்த அம்சங்களையும், கலிமா போன்ற அடிப்படை விசுவாசங்களை மனனஞ் செய்வதையும் அவ்வாறான சமயக்கல்வி உள்ளடக்குகிறது.

மேலும், முஸ்லிம் பெற்றோரும் குடும்பங்களும் தனிப்பட்ட முன்னேற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்களேயன்றி சமூக நலக் கடமைகளின் முக்கியத்துவத்தையும் அது பற்றிய தம் பொறுப்புக்களையும் கவனத்தில் எடுப்பதில்லை. சமூகத்தின் அடுத்த அங்கத்தவர்கள் பற்றிய தமது தார்மீகப் பொறுப்பைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. இதன் விளைவாகப் பொதுமக்கள் தொடர்பான விவகாரங்களில் பங்கேற்பதற்குப் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுவதில்லை. தொழுகை பற்றிய அடிப்படைகளையும், அல்குர்ஆனைச் சரிவர ஓதுவதற்கும் தம் பிள்ளைகள் கற்றுக்கொண்டு விட்டால் பெற்றோர் அத்தோடு தம் கடமை நிறைவேறி விட்டது எனத் திருப்தியடைந்து விடுகிறார்கள். எனவே, தார்மீக வாழ்க்கையின் பிரதான அடிப்படை தனிப்பட்ட முறையில் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதே என்ற எண்ணத்தோடு பிள்ளைகள் வளர்ந்து விடுகிறார்கள். தாம் செய்ய வேண்டிய மேற்சொன்ன வணக்க வழிபாடுகளை நிறைவேற்றிவிட்டால் தமக்குரிய சமய, தார்மீகக் கடமைகளும் பொறுப்புக்களும் நிறைவேறிவிட்டதாக அவர்கள் கருதுகின்றனர். இதன் விளைவாக தன்னலமும் தன்முனைவும் கொண்ட வாழ்க்கைப் பாணியொன்று உருவாகிறது. தான் பிழைத்து வாழ்வதையே நோக்காகக் கொண்ட இவ்வாறான வாழ்க்கை பொதுமக்கள் தொடர்பாக எதிர் மறையான மனப்பாங்குகளைக் கொண்டது. சமூக உணர்ச்சியற்ற இத்தகைய வாழ்க்கை இறுதியில் சமூகத்தின் பொது

வாழ்க்கைக்குரிய இயல்பை அழித்து விடுகிறது. இதனால் அனைவருமே இழப்புக்கு உள்ளாகின்றனர்.

உண்மையில், வணக்கம் (இபாதத்) என்பது வெறுமனே சமயச் சடங்குகளை நிறை வேற்றுவதை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, இஸ்லாமியச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு முஸ்லிம் தன் வாழ்க்கையில் செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும் செயல் களையும் அது உள்ளடக்குகிறது. அத்தோடு, நல்லதை ஊக்குவித்துத் தீயதைத் தவிர்த்தல், பொது நலத்துக்கான முயற்சிகளில் ஈடுபடல், மற்றவர்கள் மீது கரிசனை காட்டுதல் முதலிய விழுமியங்களும் அதில் அடங்குகின்றன. முஸ்லிம் பிள்ளைகளின் உள்ளத்தில் இப்பண்புகள் ஆழமாகப் பதிக்கப்படாவிடின் அவர்கள் வளர்ந்த பின்னர் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் இதே உணர்வற்ற நிலை கடத்தப்படும். எனவே, சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதை மாத்திரம் இலக்காகக் கொண்டு, உள்ளார்ந்த விருத்தியையும் பொது விவகாரங்களில் அக்கறையையும் புறக்கணித்து நிற்கும் சமயக் கல்வி, சமநிலையற்றதாகவும் குறைபாடுள்ளதாகவும் விளங்குகிறது. இபாதத் எனும் சொல் 'திக்ர்' என்னும் இறை தியானத்தையே குறிக்கிறது. எல்லாம் வல்ல அல்லாஹ்வை நினைவுகூர்ந்து அவனுடன் தொடர்பாடல் செய்வதன் மூலம் நன்னெறியையும் ஒழுக்க சீலத்தையும் நன்னடத்தை யையும் நிலைநாட்டுவதையே இது குறித்து நிற்கின்றது.

சுய ஈடுபாடு கொண்ட பண்பாடு: பொது விவகாரங்களில் ஈடுபாடு இல்லாமை

துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் அறிஞர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோருக்கும் அடக்குமுறையான ஊழல் மிக்க அரசியல் தலைவர்களுக்கும் இடையில் வரலாற்று ரீதியான முரண்பாடும் முனைவாக்கமும் பிரிவினையும் இருந்து வந்துள்ளன. இஸ்லாமிய சட்ட மேதைகள் பொது வாழ்விலிருந்து ஒதுங்கி நின்று மக்களது வாழ்க்கையின் அந்தரங்க மற்றும் தனிப்பட்ட அம்சங்கள் பற்றித் தம் கவனத்தைச் செலுத்தியுள்ளனர். பொதுஜன, சமூக விவகாரங்கள் புறக்கணிக்கப்பட்டன. இதன் விளைவாகப் பொது விவகார நடைமுறைகள், நல்லாட்சி, அரசியல் பங்கேற்பு, கலந்தாலோசனை (ஷூரா), குடியியல் கடமைகள், சமூக நீதியையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுதல் போன்ற விடயங்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இது உலகளாவிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தைத் திரிபுபடுத்தியுள்ளது.

பொது விடயங்கள் தொடர்பான மந்த மனப்பான்மையின் காரணமாக முஸ்லிம் சமூகத்தின் குழு உணர்வு பாதிக்கப்பட்டுப் பொது விடயங்களில் அக்கறையை உருவாக் குவதற்குத் தேவையான குழுப் பிணைப்புக்கள் நலிவடைந்துள்ளன. தனியாளின் விமோசனத்துக்கு மாத்திரம் அழுத்தம் கொடுக்கின்ற குறுகிய மனப்பான்மையினால் ஒரு நாகரீகத்தை நிலைத்திடச் செய்ய முடியாது. சமூக மற்றும் பொது அக்கறைகள் தொடர் பாகவும் வலிமையான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். இன்னொரு வகையில் சொல்வதானால், மனித சமுதாயத்தின் நம்பிக்கைப் பொறுப்பு (இஸ்திக்லாப்) பற்றிய எண்ணக்கருவை அமுல் படுத்துவதற்குப் பொது நலத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரீகமொன்றை உருவாக்கும் அரும் பணி (இம்றான்), பரம்பரை பரம்பரையாக நிறை வேற்றப்பட்டு விருத்தி செய்யப்படுவது அவசியமாகிறது. இஸ்லாமிய சட்டவியலில் (பிக்ஹ்) தனியாள் மற்றும் குடும்ப சட்டங்கள் பற்றிய அக்கறை நிச்சயமாகத் தேவைப் படுகின்றது. எனினும், அதனைக் கொண்டு மாத்திரம் நாகரீகத்தைக் கட்டியெழுப்பும் பணியாளர்களை உருவாக்கிவிட முடியாது.

மேற்சொன்ன சமயக்கல்வி முறை நல்லவர்களைத் தோற்றுவித்த போதிலும் இறுதியில் உயிர்ப்பற்ற, பணிந்து போகின்ற ஆட்களும் சமுதாயங்களுமே உருவாக்கப்படுகின்றன.

சம்பிரதாய பூர்வமான, முறைசார்ந்த, விதிமுறைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக் கின்ற பண்பாடொன்றில் வளர்க்கப்பட்டவர்கள் வுழூ செய்தல், தொழுதல், நோன்பிருத் தல், புனித யாத்திரை செல்லல் போன்றவற்றைத் திருத்தமாகச் செய்யக்கூடும். எனினும், துரதிர்ஷ்டவசமாக அவர்கள் நல்ல குடிமக்களாகவோ பொது விடயங்களில் ஈடுபாடு உள்ளவர்களாகவோ சமூக சேவையில் நாட்டமுள்ளவர்களாகவோ இருக்கத் தவறிவிடு கிறார்கள். தமது சொந்த மற்றும் பொதுப் பொறுப்புக்களைச் சுமப்பதற்குப் பதிலாகத் தம் தேவைகளுக்காக அவர்கள் அரசாங்கத் தை நம்பியிருப்பார்கள். சுயமாகச் சிந்திக்க வோ, தம் எதிர்காலம் பற்றி முடிவுகள் செய்ய வோ, தம் அறிவை வளர்த்துக் கொள்ளவோ, தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ளவோ முடியாதவர்களாக அவர்கள் இருப்பார்கள். இவ்வாறு வளர்க்கப்பட்ட பிள்ளைகளிடம் சுதந்திர மனப்பான்மை, ஒழுக்க சீலம், புத்தாக் கச் சிந்தனை, குழு மனப்பான்மை, சமூக முன்னேற்ற முனைப்பு என்பன காணப்பட மாட்டா. பதிலாக, அவர்கள் பயந்தாங் கொள்ளிகளாகவும் சுயநலமும் தன்முனைப் பும் மிக்கவர்களாகவுமே வளர்வார்கள்.

அடக்குமுறையான அரசியல் மற்றும் சமய ஆதிக்கங்களின் கீழ் வாழ்பவர்கள் மோசமான நிலைமையொன்றில் அவதிப் படுகின்றார்கள். சமூக மாற்றம் தேவைப் படும் வேளையில், அவர்கள் நோயுற்ற சமூகங்களையும் அழிவுரீதியான நடத்தை களையுமே உருவாக்குகிறார்கள். அவர்க ளுடைய சுற்றாடல், பொருளாதாரம் என்பவற்றின் அவல நிலை இதற்குச் சான்று பகர்கின்றது. வட்டி தரும் வங்கிக் கணக்கு களைத் தவிர்த்துக்கொள்ளும் அதேவேளை, பொய்யுரைப்பதும் ஏமாற்றுவதும் ஷரீஆ வுக்கு முரணானவையாக இருந்தும் கூட, அவர்கள் வருமான வரி செலுத்துவதிலும் ஸகாத் கணக்கிடுவதிலும் பொய்யும் புரட்டும் செய்கின்றனர். கள்ளக் கடத்தல் செய்து மாட்டிக் கொள்ளாது தப்பும் போதும், சுங்க அதிகாரிகளை ஏமாற்றிவிடும் போதும் அவர்கள் வெற்றிக் களிப்பில் மிதக்கின்றனர்.

சில பெற்றார் தம் பிள்ளை பிறந்தது முதல் அது முதிர் பருவத்தை அடையும் வரை, அதனிடம் சுய மையமான நடத்தையை வலியுறுத்துகின்றனர். பிள்ளை அணியும் ஆடை பற்றி அதிக முயற்சி செய்யும் பெற்றார், அடுத்தவர்கள் மீது இரக்கம் பாராட்டுதல், மக்கள் தொடர்பாக - குறிப்பாக ஏழைகள், தேவையுள்ளோர் விடயத்திலும் பொதுவாக சுற்றாடல் விடயத்திலும் - பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது பற்றிப் போதிப்பதற்கு அதே யளவு முயற்சி எடுப்பதில்லை. எம்மில் பெரும்பாலானோர் எமது பிள்ளைகளுக்கு எளிதில் உடையக்கூடிய, ஆனால் விலை உயர்ந்த, விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுக்கிறோம். எனினும், பாதையோரத்தில் உணவுக்காகவும் உடைக்காகவும் பிச்சையெடுக்கின்ற வறிய பிள்ளைகளின் அவல நிலையைக் கண்டும் காணாதவர்கள் போன்று போய்விடுகிறோம்.

இந்த முறையில் வாழ்க்கையை நோக்குவதானது எமது சமூகங்களையும் பொது வாழ்க்கையையும் பாதித்துள்ளது. உதாரணமாக, பாக்கிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்துசென்ற தினமே பங்களாதேஷின் தேசிய தினமாக இருக்கிறது. இதனை நாம் எவ்வாறு விளக்கலாம்? முன்பு ஒன்றுக்கொன்று எதிரிகளாக இருந்த ஐரோப்பிய நாடுகள்

தம் பொது நலனை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்து ஒத்துழைக்கும் போது பிரிவினையொன்றை நாம் ஏன் போற்றிக் கொண்டாட வேண்டும்? பிரேஸில் நாட்டில் தமக்கேயுரிய வித்தியாசமான பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைக் கொண்ட பல இன, மத, மொழிக் கூட்டத்தினர் வசிக்கின்றனர். எனினும், அங்கு ஒற்றுமை காணப்படு கிறது. அதேவேளை, பொதுவான மொழி, பண்பாடு, கரிசனைகள் என்பவற்றைக் கொண்ட முஸ்லிம் நாடுகளும் அறபு நாடுகளும் தொடர்ந்தும் பிரிந்து சிதறிக் கொண்டிருக்கின்றன.போரிட்டுக் கொள்ளும் அறபு நாடுகளும் வறிய முஸ்லிம் நாடுகளும் தம் பிரஜைகளுக்கெனச் செய்யும் உதவிகள் மிகச் சொற்பமே. எண்ணிக்கையில் முஸ்லிம்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், உலக மட்டத்தில் அவர்களது தரமும் அந்தஸ்தும் உயரவில்லை.

முஸ்லிம் உலகின் துண்டாக்கம், ஐக்கியமின்மை, அற்பத்தன்மை, தனிமைப்படுதல் முதலியவற்றுக்குச் சமயம் காரணமாக இருக்க முடியுமா? இத்தகைய கீழ்த்தர இயல்புகள் சமயத்தின் நலன்களை நிறைவேற்ற உதவுமா? அல்லது முஸ்லிம்கள் தமது சமயத்தைப் பிழையாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா? முஸ்லிம் சமுதாயத்தின் மனப்போக்கில் பிளவு காணப்படுகிறது. ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி மாத்திரமே சிந்திக்கக் கற்றுள்ளதோடு தனது குறுகிய, சொந்த மற்றும் குடும்ப நலன்களைப் பேணவே முயற்சிக் கின்றனர். அதேவேளை சமுதாயத்தின் பரந்த நலன்களை யும் தம் உறவினர்கள், அயலவர்கள் உட்படச் சமூகத்தின் நலன்களையும் புறக்கணித்து விடுகின்றனர். முஸ்லிம் களின் பண்பாடு குறுகிய மனப்பாங்குள்ளதாகவும் விகாரமுற்றதாகவும் மாறி வருகின்றது. அதன் அடை யாளச் சின்னங்களாக இருக்க வேண்டிய அயலவர் பற்றிய உணர்வும் குழு உணர்வும் அற்றுப்போயுள்ளன. முஸ்லிம்கள் மணலில் புதைத்துக் கொண்டிருக்கும் தம் தலைகளை வெளியே எடுக்க வேண்டியிருக்கிறது.

தமது செல்வங்களையெல்லாம் சமுதாயத்துக்காகத் தானம் செய்ய விரும்பிய அபூபக்ர் (ரழி) அவர்களின் மனப்பாங்கோடு இன்றைய நிலைமையை ஒப்பிட்டுப் பாருங்கள். "நீர் உமது குடும்பத்துக்காக எதனை விட்டு வைத்தீர்?" என நபி (ஸல்) அவர்கள் அவரிடம் கேட்ட போது, "அவர்களுக்கு நான் அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் தூதரையும் விட்டு வைத்திருக்கிறேன்" என அபூபக்ர் (ரழி) பதிலளித்தார்கள். அபூபக்ர் (ரழி) அவர்களின் செய்கை அவரது விசுவாசத்தின் வலிமையை மட்டும் காட்டவில்லை. தமக்கோ தமது குடும்பத்தினருக்கோ தேவையேதும் ஏற்பட்டால் நபி (ஸல்) அவர்களும் சமூகத்தினரும் தம்மைப் பராமரிப்பார்கள் என்ற அவரது நம்பிக்கையையும் இது காட்டுகின்றது. தமது குடும்பத்தினர் பாதிக்கப்பட்டு வீதியில் பிச்சையெடுக்க நேரிடும் என அவர் கருதியிருந் தால் தமது செல்வத்தில் பெரும்பகுதியைத் தமக்கு வைத்துக்கொண்டு ஒரு சிறு பகுதி யையே அன்பளிப்புச் செய்திருப்பார்.

இன்றைய முஸ்லிம் உலகு, பல்வேறு மொழிகளைப் பேசும் பல்லின மக்கள் கூட்டங் களைக் கொண்ட பரந்த நிலப்பரப்புக்களை உள்ளடக்கி இருப்பதனால்தான் இன்றைய அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது எனக் கூறிவிட முடியாது. அதே போன்று, அடக்கு முறையான ஆட்சியாளர்களால் ஆளப்படுவதையும், வரலாற்று ரீதியாக காலனித்துவ ஆட்சியின் கீழ் அவதிப்பட்டதையும்கூட இதற்குக் காரணமாகக் கூற முடியாது. இஸ்லாம் அமைதியான முறையில் கூடிவாழ்வதையும் சமூக இணக்கத்தையும் ஊக்குவிக்கின்றது. இன்றைய உலகின் சனத்தொகையில் காற்பங்கினர் முஸ்லிம்களாக இருக்கின்றனர்.

அவர்களின் ஒற்றுமையின்மைக்கு இஸ்லாத்தைக் குறை கூற முடியாது. ஏனெனில், இஸ்லாம் எப்போதும் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் கூட்டுப்பொறுப் புணர்வையும் கருணையையும் போதிக்கின்றது. அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளின்மீது கூட இதற்கான குற்றச்சாட்டைப் போட முடியாது. ஏனெனில், பொருளாதார மற்றும் அரசியல் வீழ்ச்சியானது ஓர் அறிகுறியேயன்றி காரணமல்ல. ஆகவே, இந்நிலைக்குக் காரணம் என்ன?

இதற்கான விடை பின்வரும் அல் குர்ஆன் வாக்கியத்தில் பொதிந்திருப்பதாக நாம் நம்பு கிறோம்.

> நிச்சயமாக அல்லாஹ், எந்தவொரு சமுதாயத்திற்குரியதையும் அவர்கள் தங்களுக்குரிய (அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல், அவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் போன்ற நிலைகளான)தை மாற்றிக்கொள்ளாத வரையில் நிச்சயமாக அல்லாஹ்வும் (அவர்களுக்குப் புரிந்த அருளை) மாற்றிவிடுவதில்லை. (அல் குர்ஆன் 13: 11)

இந்த விடயத்தை நாம் இதைவிட மேலான முறையில் அழுத்திச் சொல்ல முடியாது. ஏதேனுமொரு மக்கள் கூட்டத்தின் இழிநிலைக்கான காரணம் அவர்களுக்குள்ளேயே அமைந்திருக்கிறது. எனவே, அல் குர்ஆனின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொண்டு எமது உள்ளார்ந்த பண்புகளை நாம் மாற்றிக் கொள்ளாத வரை, எமது சொந்த வாழ்க்கை நிலைமைகளை மாற்றியமைக்க முடியாது. சிறந்த பிள்ளை வளர்ப்பினூடாக மாத்திரமே இதனைச் சாதிக்க முடியும்.

கல்வி என்பது தொட்டில் முதல் மண்ணறை வரை இடம்பெறக்கூடிய, வாழ்க்கை முழுதும் நீடிக்கும் செயன்முறையாகும். எனினும் பொறுப்புணர்வு, சுய அர்ப்பணிப்பு, மற்றவர்கள் மீது கரிசனை காட்டுதல் போன்ற பொதுநல உணர்வுகளைப் பிள்ளையில் நிலைக்கச் செய்வதற்குப் பிள்ளை வளர்ப்பு முறை அவசியமாகிறது. இவ்விழுமியங்கள் பிள்ளைப் பருவத்தின் ஆரம்பத்திலேயே பெற்றோரினால் ஊட்டப்பட வேண்டும். பிள்ளையினது ஆளுமையின் மனவெழுச்சிரீதியான, சமூகரீதியான மற்றும் ஆன்மீகரீதி யான அம்சங்களைப் போஷிக்கும் போதே இது இடம்பெற வேண்டும். சிறுவயதிலேயே இப்பண்புகளைப் பற்றிக்கொள்வதானது, வளர்ந்த பின் அவ்வாறு செய்ய முயல்வதை விட மிக எளிதாக இருக்கும். இஸ்லாமிய ஆளுமை விருத்தி சம்பந்தமான சமய, கலாசார ரீதியான உசாத்துணைகளாக இஸ்லாமிய சட்டவியல் (பிக்ஹ்) நூல்கள் விளங்குகின்றன. ஆளுமையைக் கட்டியெழுப்புவதில் இவை அதிக செல்வாக்குடையன.

எனவே, சமூகத்தையும் முழு மனித சமுதாயத்தையும் பற்றிய பொது அக்கறைகள் என்னும் பரிமாணத்தைப் பிக்ஹ் நூல்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்பரிமாணம் பற்றி அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது:

> இன்னும் (முஹாஜிரீன்களாகிய) அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீட்டையும் (அல்லாஹ்வின் மீது) விசுவாசத்தையும் கொண்டிருந்தார்களே அத்தகையவர்கள் தம்பால் ஹிஜ்ரத்துச் செய்து வந்தோரை நேசிப்பார்கள். மேலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட் டதைப் பற்றி தமது நெஞ்சங்களில் காழ்ப்புணர்ச்சியைப் பெற மாட்டார்கள். மேலும், தங்களுக்குத் தேவையிருந்த போதிலும் தங்களை விட (அவர்களைத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்னும் எவர் தன் உலோபத்தனத்திலிருந்து காக்கப்பட்டாரோ அத்தகையோர்தாம் வெற்றி பெற்றவர்கள். (அல் குர்ஆன் 59: 9)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> "முஸ்லிம்களின் விவகாரங்களில் அக்கறை கொள்ளாத எவரும் அவர்களில் ஒருவராக இருக்க மாட்டார்" (இப்ன் மஸ்ஊத்)

சமூகத்திலுள்ள வறியவர்கள், அனாதைகள், அயலவர்கள், தேவையுடையோர் முதலியவர்கள் பற்றிக் கரிசனை காட்டாத வரை நாம் சிறந்தவர்களாக மாற முடியாது. இதனை அல்குர்ஆனில் ஸூரா அல் மாஊனில் காண்கிறோம்:

> "(நபியே!) நியாயத் தீர்ப்பினைப் பொய்யாக்குவோனை நீர் பார்த்தீரா? ஆகவே, அத்தகையோனே அனாதைகளை விரட்டுகின்றான். அவன் ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டுவதுமில்லை. எனவே, தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோரென்றால் தங்கள் தொழுகையை விட்டும் பராமுகமாக இருப்போர். அத்தகையோர்தான் (மற்றவர்களுக்குக்) காண்பிக்கவே தொழுகிறார்கள். மேலும், அற்பமான பொருட்களை (மற்றவர்களுக்குக் கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள்" (அல்குர்ஆன் 107: 1- 7)

தனிப்பட்ட வணக்க வழிபாடுகளுக்கும் சமூக நலனுக்கும் இடையில் நேரடியான வலிமை மிக்க இணைப்பொன்று காணப்படுகிறது. அனாதைகளைப் பராமரித்தல், ஏழைகளுக்கு உணவளித்தல், அயலவர்களுக்கு உதவுதல் போன்றவற்றோடு சமயச் சடங்குகள் தொடர்பு பட்டிருத்தல் வேண்டும். வணக்கத்தின் உண்மையான குறிக்கோள் வணங்குபவரைத் தன் சக மனிதர்களுக்குச் சேவை செய்வதற்குத் தயார் படுத்துவதாகும். முஸ்லிம் நாடுகளின் வீதிகளில் பிச்சைக்காரர்கள் கையேந்தி வாழ்வது எம்மிடம் சரியான பொறுப்புணர்வு இன்மையையே காட்டுகிறது. இத்தன்மை இன்று எம்மிடையே வேரூன்றிப் போயுள்ளது.

தனிப்பட்ட பொறுப்புணர்வு இல்லாமை

பலரிடம் தம்மைப் பற்றியோ பிறரைப் பற்றியோ தம் எதிர்காலத்தைப் பற்றியோ எவ்விதப் பொறுப்புணர்வும் காணப்படுவதில்லை. கடுமையான உழைப்பும் நேர்மையும் சமூகத்தில் ஒருவனுக்கு எவ்வித பயனையும் தராது போனால், அவன் அவ்விரண்டையும் தவிர்த்துக் கொள்வதோடு மற்றவர்களின் உதவியை நாடுவான். தன் விடயத்தில் மற்றவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என அவன் கோருவான். அதேவேளை, தனக்கும் தன் குடும்பத்துக்கும் தான் எதுவுமே செய்ய வேண்டியதில்லை என நினைப்பான். தற்கால முஸ்லிம் சமூகங்களில் சுய பொறுப்பு பற்றிய கருத்துப்படிவம் காணப்படுவதில்லை. முஸ்லிம் உலகில் பரவலாகக் காணப்படும் கூட்டாண்மைப் போக்கின் ஒரு விளைவே இதுவாகும். மற்றவர்கள் மீது கரிசனை காட்டுவதும் கூட்டாண்மையும் ஒன்றென யாரும் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. கூட்டாண்மை என்பது தனியாளை விட ஒரு கூட்டத்துக்கு அல்லது குழுவுக்கு முன்னுரிமை வழங்குவதாகும்.

கோத்திரவாதமும் குலவாதமும் ஆரம்பகாலத்து முஸ்லிம்களிடம் காணப்பட்ட கூட்டாண்மை வடிவங்களாகும். இன்று அரசாங்கத்தின் அடிமைகளாக இருக்கும் நிலை அவற்றைப் பிரதியீடு செய்துள்ளது. அறிவு ரீதியாகக் கூறுவதாயின், கூட்டாண்மையானது குழுச் சிந்தனைக்கு அல்லது மந்தை மனப்பான்மைக்கு வழி கோலுகிறது. இது மனித முன்னேற்றத்தின் ஊற்றுக் கண்ணாகவுள்ள அசலான தனியாட் சிந்தனையின் எதிரியாக இருக்கின்றது. பொருளாதார ரீதியில் கூறுவதாயின், அது தனியாட்களின் உற்பத்தித் திறனுக்குத் தேவையான ஊக்குவிப்பை இல்லாமற் செய்து அவர்களை உற்பத்தித் திறனற்ற நுகர்வோராக மாற்றிவிடுகிறது. உளவியல் ரீதியில், தான் இறைவனின் பிரதிநிதி என்ற உணர்வை அது தனியாட்களிடமிருந்து அகற்றிவிடுகிறது. கூட்டாண்மை காரணமாக எவருக்குமே சுயமரியாதை இல்லாத, தங்கி வாழும் கலாசாரமொன்று ஊக்குவிக்கப் படுகிறது. ஒழுக்க ரீதியில் நோக்கும் போது, அது தார்மீகக் கோழைத்தனத்துக்கு வழியமைக்கின்றது. அரசியல் ரீதியில், எதிரணிகள் தமது விருப்பங்களை ஒன்று மற்றதன் மீது திணிக்க முயற்சிக்கும் நிலைக்கு அல்லது பலசாலி தன் விருப்பங்களைச் சமூகத்தின் மீது திணிக்கும் நிலைக்கு வழிவகுக்கும்.

மேற்சொன்னதற்கு முற்றிலும் மாற்றமாக, இறைவனின் பிரதிநிதி என்ற நடிபங்கை ஏற்று அல்லாஹ்வின் விருப்பத்துக்கு அடிபணியுமாறு அல்குர்ஆன் தனியாட்களிடம் நேரடியாக வேண்டுகோள் விடுக்கின்றது. அத்தோடு, தாமும் தம் சமூகமும் நன்மையைப் பெறுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுமாறும் அவர்களை உற்சாகப்படுத்துகிறது. நாம் எமக்காக விரும்புபவை மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென உண்மை யாகவே நாம் விரும்புவோமானால், நிச்சயமாக மற்றவர்களும் பகுத்தறிவுள்ளவர்களாகவும் பொறுப்புள் ளவர்களாகவும் சுதந்திரமானவர்களாகவும் இருக்க வேண்டுமென நாம் விரும்ப வேண்டும்.

பல முஸ்லிம் நாடுகளில் பிள்ளைகள் உயிர்ப்பற்றவர்களாகவும் யாரையும் விமர்சிக்கத் துணிவில்லாதவர்களாகவும் வளர்க்கப்படுகின்றனர். காலங்கடந்த சட்டத்தீர்ப்புக்களை அவர்கள் கற்றுக் கொள்கின்றனர். ஸகாத் என்பது உங்களிடமுள்ள ஒட்டகங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்படும் ஒரு வரியாகக் கற்பிக்கப்படுகிறது. ஏழைகளுக்கு எத்தனை புசல் பேரீச்சம் பழமும் பார்லியும் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கணக்கிட அவர்கள் கற்கின்றனர். அடிமைகளை எப்படிக் கையாள்வது, அவர்களை வாங்குவதும் விற்பதும் எப்படி என்ற விடயங்கள் சட்டவியல் நூல்களில் இன்னும் காணப்படுகின்றன. இத்தகைய காலங்கடந்த, அவசியமற்ற தகவல்கள் முஸ்லிம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படு கின்றன. மற்றவர்கள் மீதான கருணையையும் அவர்களது தேவைகள் பற்றிய கரிசனை யையும் விருத்தி செய்வதற்குரிய வாய்ப்பொன்று இதனால் இழக்கப்படுகிறது. அடுத்தவர் மீது கருணை காட்டாத் தன்மை முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலச் சந்ததிகளின் பண்பில் காணப்படக்கூடிய பிரதான குறைபாடாக இருக்கப்போகிறது.

பிள்ளைகளுக்கு ஸகாத்தைப் பற்றிக் கற்பிப்பதன் அடிப்படை நோக்கம் ஒட்டகங்கள், பேரீச்சை, பார்லி போன்றவற்றின் சதவீதத்தைக் கணிப்பீடு செய்யப் பழகுவதல்ல. மாறாக, சமூக ஒருமைப்பாடு, இரக்கம், அர்ப்பணிப்பு, தாராளத்தன்மை போன்ற உன்னத கருத்துப் படிவங்களைப் புரிந்து கொள்வதும் நம்பிக்கையிழந்தோர், தேவையுள்ளோர் முதலியவர் களுடன் பகிர்ந்து கொள்வதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வதுமே அதன் நோக்கங்களாக இருக்க வேண்டும். ஸகாத் தொடர்பான பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட காருண்யம், பிறர் நிலை உணர்தல் போன்ற ஆழமான உணர்வுகளை ஊட்டி வளர்ப்பதற்கும் சமூகத்தில் வாழும் ஆதரவற்றோர், வறியோர் முதலியவர்களின் அவலங்களைப் புரிந்து கொள்ளச் செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இள வயதில் வலியுறுத்தப்பட வேண்டியவை ஸகாத் மற்றும் ஏனைய கொடைகள் மூலம் கிடைக்கின்ற சகோதரத்துவ உணர்வும் உள மகிழ்வுமேயன்றிக் கணித ரீதியான கணக்கீடுகளல்ல.

திரிபடைந்த பண்பாடு: பிற்போக்கும் மூட நம்பிக்கையும்

முஸ்லிம்களுள் பலர் இன்று பின்னோக்கிப் பார்ப்பவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் முன்னோக்கிப் பார்ப்பதில்லை. அவர்கள் எதிர்வினையாளர்களாக (reactive) இருக்கின்றார்களேயன்றி உடன்வினையாளர்களாக (proactive) இல்லை. அதாவது, அவர்கள் ஒரு பிரச்சினை ஏற்படும் வரை காத்திருந்து அது ஏற்பட்ட பின் அதற்கு ஏதாவது செய்ய விரைகின்றனர் (ஆனால், அதில் அரிதாகவே வெற்றியடைகின்றனர்). மாறாக, பிரச்சினை ஏற்பட முன்பே அது பற்றித் திட்டமிட்டு முன் நோக்கிச் சிந்திக்கத் தவறி விடுகின்றனர். பின்புறத்தைக் காட்டும் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு முன்னாலுள்ள பாதையைப் பார்க்காமல் வண்டியோட்டும் சாரதி போன்றே அவர்கள் இருக்கின்றனர்.

முஸ்லிம்களின் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருக்கும் இன்னொரு பிரச்சினை மூட நம்பிக்கைகளிலும் மாந்தரீகங்களிலும் ஜின்களின் உலகம் பற்றியும் அவர்கள் காட்டும் ஈடுபாடாகும். இஸ்லாமிய நாகரீகமானது அறிவு, விஞ்ஞானம், புலன்சார் அறிவு, பகுத்தறிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டது. நபிமார்கள் செய்து காட்டிய அற்புதச் செயல்கள் பற்றி இஸ்லாமிய அறிஞர்கள் விசுவாசித்த போதிலும், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மனித சமுதாயத்துக்கு விட்டுச் சென்ற அற்புதம் அல் குர்ஆனே என்ற நம்பிக்கையை முற்படுத்துவது ஆறுதல் தருவதாக இருக்கின்றது. எப்போதும் மனிதனின் அறிவுக்கும் சிந்தனைக்கும் அழைப்பு விடுக்கும் அல் குர்ஆன், பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆய்வு செய்யுமாறும் ஆழ்ந்து சிந்திக்குமாறும் தேடி ஆராயுமாறும் அது அறிவுரை கூறுகிறது. இவை அல் குர்ஆனில் அடிக்கடி மீட்டப்படுகின்ற பிரதான தொனிப்பொருட்களாக உள்ளன. இவ்வகையான மனப்பாங்குகளையே பெற்றார் தம் பிள்ளைகளின் உள்ளங்களில் போஷித்து வளர்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் இறைவன் மீதும் மறுமையின் மீதும் உறுதியான விசுவாசத்தைப் பேணிக்கொண்டு பகுத்தறிவுச் சமுதாயமொன்றில் நம்பிக்கை வைத்து வளர்வார்கள். நாகரீகமானது மூட நம்பிக்கைகளின் மீதும் மாந்திரீகத்தின் மீதும் எழுப்பப்படுவதில்லை.

மக்கள் தங்கள் குடும்பப் பிரச்சினைகளின் போது உரிய முறையில் மருத்துவ அல்லது உளவியல் சிகிச்சைகளைப் பெறுவதற்குப் பதிலாக ஆவிகள், ஜின்கள், நட்சத்திரங்கள் மற்றும் மாயாஜாலங்களின் குணமாக்கும் சக்தியை நாடிச்செல்கின்ற அவலக் கதைகள் பலவற்றை அடிக்கடி செவியுறுகின்றோம். இந்தச் செய்கைகள் இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கும் நோக்கங்களுக்கும் முரணானவையாக இருப்பதோடு பிள்ளைகளின் அறிவுத் திறனையும் பாதிக்கின்றன. பெற்றார் என்ற வகையில் எமது கடமை அல் குர்ஆன் வலியுறுத்துகின்ற அறிவுபூர்வமான விஞ்ஞான மனப்பான்மையைப் பிள்ளைகளில் வளர்ப்பதாகும். மனித வாழ்வையும் பௌதிக உலகையும் கட்டுப்படுத்தி ஆளுகின்ற இயற்கை விதிகளை (அல்- ஸுனன் அல் இலாஹிய்யா) அல் குர்ஆன் உறுதிப்படுத்துகிறது. தெய்வீக உந்துதலைக் கொண்ட இவ்வியற்கை விதிகள் நபி (ஸல்) அவர்கள் மீது முழுமையாகப் பிரயோகிக்கப்பட்டன என்பதை அல் குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது:

> (நபியே!) நீர் கூறுவீராக; "அல்லாஹ் நாடியதைத் தவிர எனக்கே எவ்வித நன்மை(யைச் செய்துகொள்வதற்)கும் தீமை(யைத் தடுத்துக் கொள்வதற்)கும் நான் சக்தி பெற மாட்டேன். மறைவானவற்றை நான் அறிந்தவனாக இருந்திருந்தால் நன்மைகளையே அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; தீமை என்னைத் தொட்டிருக்காது. நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும் விசுவாசங்கொண்ட சமுதாயத்தினருக்கு நன்மாராயங் கூறுபவனுமேயன்றி வேறில்லை" (அல் குர்ஆன் 7:188)

(நபியே!) நீர் கூறுவீராக; நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான்; நிச்சயமாக உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன் தான் என்று எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்படுகிறது. ஆகவே, எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கிறாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும். தன் இரட்சகனின் வணக்கத்தில் அவர் எவரையும் இணையாக்க வேண்டாம். (அல் குர்ஆன் 18: 110)

இந்தப் புறவயமான விஞ்ஞான மனப்பாங்கானது, உலகம் ஒருபோதும் கண்டறிந்திராத மகத்தான நாகரீகமொன்றை உருவாக்கியது. அதன் பொற்காலத்தின் போது முஸ்லிம்கள்தான், பல நூற்றாண்டுகளாக ஐரோப்பா அமிழ்ந்து கொண்டிருந்த இருண்ட யுகத்திலிருந்து அதனை மீட்டெடுக்க உதவினார்கள். அதனால் தான் ஐரோப்பா அறிவொளி பெற்றது. (Al- Hassani, 2011)

தெய்வீக மற்றும் இயற்கை விதிகளையும் அண்ட சராசரத்தையும் மானுட மற்றும் சமூக விஞ்ஞானங்களையும் நன்கு புரிந்து அவற்றை ஆழமாகப் பதித்துக்கொண்ட, உயர் விவேகமும் ஆற்றலும் பண்பும் கொண்ட பிள்ளைகளை நாம் உருவாக்க வேண்டும். இது முதலில் பெற்றோர்களினதும் இரண்டாவதாக பள்ளிக்கூட ஆசிரியர்களினதும் தலையாய கடமையாகும்.

மேற்கத்திய நாகரிகத்தின் பரிமாணங்களைப் பிரெஞ்சுத் தத்துவ ஞானியான ரோஜர் கரோடி (Roger Garaudy) பின்வருமாறு விவரித்தார்:

நவீன மேற்கத்திய நாகரிகம் தனது அழகியல் மற்றும் சட்ட முறைகளை ரோம, கிரேக்க நாகரிகங்களிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளது. அதன் தார்மீகக் கோட்பாடுகள் கிறிஸ்தவத்திலிருந்து வந்துள்ளன; அதன் விஞ்ஞான ரீதியான சிந்தனை முஸ்லிம் ஸ்பெய்னிலிருந்து பெறப்பட்டுள்ளது.

(Al- Hewar Magazine 2002)

தவறான உலகக் கண்ணோட்டம்: பலவீனமும் பயமும்

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"ஒரு காலம் வரும். அப்போது ஏனைய மக்கள் கூட்டத்தினர் பசிவெறி கொண்டவர்கள் உணவுத் தட்டொன்றை வெறியோடு விழுங்குவது போல உங்களைத் தாக்குவார்கள்." இதைக் கேட்ட தோழர் ஒருவர், "அல்லாஹ்வின் தூதரே நாங்கள் குறைந்த தொகையினராக இருப்பதா அதற்குக் காரணம்?" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், "இல்லை; நீங்கள் பெருந்தொகையினராக இருப்பீர்கள், ஆனால், நீங்கள் கடல் அலைகளின் மீதுள்ள நுரைகள் போன்று இருப்பீர்கள். உங்கள் எதிரிகளின் உள்ளத்தில் உங்களைப் பற்றியுள்ள மரியாதையையும் அச்சத்தையும் அல்லாஹ் அகற்றி விடுவான். அத்தோடு, அவன் உங்கள் இதயங்களில் பலவீனத்தை (வஹ்ன்) ஏற்படுத்தி விடுவான்" என்றார்கள். "அல்லாஹ்வின் தூதரே, வஹ்ன் என்றால் என்ன?" என ஒருவர் கேட்ட போது, "அது உலக வாழ்க்கையின் மீதான விருப்பும் மரணத்தின் மீதான வெறுப்பும் ஆகும்" என்றனர் அன்னார். (அபூதாவூத்)

சமநிலையான வழி: அறிவுபூர்வமான அணுகுமுறை

பெற்றார் தம் சமய நம்பிக்கைகள் பற்றி நேர்மையாக அலசிப் பார்க்க வேண்டும் என அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் சமயத்தின் நடைமுறைகள், அதன் உள்ளார்ந்த எதிர்பார்ப்புக்கள் என்பன பற்றி அறிவுபூர்வமாகப் புரிந்து கொள்வது உங்கள் பிள்ளை வளர்ப்பு முறையில் பயன்மிகு தாக்கத்தை ஏற்படுத்தும். அச்சம், சுய நோக்கம், பிற்போக்கு, வற்புறுத்தல் முதலியவற்றைக் கொண்ட பண்பாடொன்றுக்கு வழி வகுக்காத வகையில் நம் பிள்ளைகள் வளர்க்கப்படுவது முக்கியமாகும்.

ஆரம்பகால அறிஞர்கள் (ஆலிம்கள், புகஹாக்கள் மற்றும் முல்லாக்கள்) சமயச் சடங்குகளையும் வழிபாடுகளையுமே (இபாதத்) வலியுறுத்தினார்கள். எல்லாம் வல்ல இறைவனை நினைவுகூரும் 'திக்ர்' பற்றி அல் குர்ஆன் குறிப்பிடுகிறது. இவ்விரண்டு அம்சங்களும் பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட வேண்டியவையே. இஸ்லாமிய உலகக் கண்ணோட்டம் பற்றிப் பெற்றார் விளங்கிக் கொண்டு அவற்றைப் பிள்ளைகள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்குக் கற்பிப்பதும் அவசியமாகும். அல்லாஹ் மனித சமுதாயத்துக்கு அனுப்பி வைத்துள்ள திருத்தமான விழுமியங்கள், விதிகள் என்பவற்றுக்கு ஏற்ப இப்பூமியை விருத்தி செய்வதே எமது கடமை என்பது பிள்ளைகளுக்குச் சொல்லப்பட வேண்டும். அத்தோடு வழிபாடானது இவ்விலக்கினை அடைவதற்கான ஒரு வழியே என்பதும் கூறப்பட வேண்டும். சரியானதைச் செய்வதற்கு முயற்சிப்பதே வாழ்க்கையின் முழுமையான நோக்கம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள இது வழி செய்யும்.

பெற்றார் என்ற வகையில் எமது நடத்தையைப் பிள்ளைகள் பின்பற்ற முயல்வார்கள். எனவே, எமது கடமையை நினைவூட்டி எம் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கும் இறைவனைத் திருப்திப்படுத்துவதற்கும் நாம் தொடர்ந்து 'திக்ர்' என்னும் இறை தியானத்தில் ஈடுபட வேண்டும். குறிப்பாக, இப்பூமியில் எமது வாழ்க்கையை நல்ல முறையில் பேணிக்கொள்வதற்கு எம்மால் முடிந்ததைச் செய்வது அவசியம். இதற்காக எமது சுற்றாடலைப் பராமரிப்பதிலும் அறிவைத் தேடுவதிலும் அடக்குமுறைக்கு உள்ளானவர்கள் விடுதலை பெற உதவுவதிலும் நாம் ஈடுபட வேண்டும். பெற்றோர் இதனைச் சரிவர நடைமுறைப் படுத்தினால் பிள்ளைகளும் இபாதத் என்னும் வழிபாட்டின் உண்மையான கருத்தையும் நோக்கத்தையும் நல்ல முறையில் புரிந்து கொள்வார்கள். அத்தோடு, வாழ்க்கை என்பது மக்களின் பண்புகளையும், தனிப்பட்ட மற்றும் பொது விவகாரங்களில் தம்மால் முடிந்தளவு நல்லதைச் செய்வதற்கு அவர்கள் மேற்கொள்ளும்

முயற்சிகளையும் பரீட்சிக்கும் களமாக இருக்கிறது என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்.

உலகக் கண்ணோட்டம் பற்றிப் பிள்ளையின் மனதில் இடப்பட வேண்டிய அடிப்படை பற்றிப் பின்வரும் அல் குர்ஆன் வாக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

"நிச்சயமாக என்னுடைய தொழுகையையும் அறுப்பு (குர்பானியு)ம் என் வாழ்வும் என் மரணமும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானவையாகும்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

"அவனுக்கு யாதோர் இணையுமில்லை; (துணையுமில்லை,) இதைக்கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன்; இன்னும் (அவனுக்குக் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் (இந்த உம்மத்தில்) நான் முதன்மையானவன்" (என்றும் கூறுவீராக)

(அல் குர்ஆன் 6: 162- 163)

நிச்சயமாக தொழுகை, (அதை நிறைவேற்றுபவரை) மானக்கேடான செயலிலிருந்தும் (மார்க்கத்தில்) மறுக்கப்பட்டதிலிருந்தும் தடுக்கும். (அல் குர்ஆன் 29: 45)

மேலும், அ(ல்லாஹ்வாகிய அ)வன் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைக்கும் அநாதைக்கும் சிறைப்பட்டவருக்கும் அவர்கள் உணவளிப்பார்கள். (உணவை உண்போரிடம்,) "உங்களுக்கு நாம் உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் முகத்தை நாடியேதான்; உங்களிடமிருந்து நாம் யாதொரு பிரதிபலனையோ அல்லது (நீங்கள் நமக்கு) நன்றி செலுத்துவதையோ நாங்கள் நாடவில்லை" (என்றும் கூறிக்கொண்டிருந்தனர்)

(அல் குர்ஆன் 76: 8-9)

(மனிதர்களே!) உங்களில் விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையவர்களுக்கு- அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை அதிபதிகளாக்கிய பிரகாரமே, இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும் அவன் அவர்களுக்குப் பொருந்திக்கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக உறுதிப்படுத்தி வைப்பதாகவும் அவர்களுடைய பயத்திற்குப் பிறகு அமைதியைக் கொண்டு நிச்சயமாக மாற்றி விடுவதாகவும்- அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான். அவர்கள் எனக்கு யாதொன்றையும் இணையாக்காது என்னையே வணங்குவார்கள்; இதன் பின்னர் (உங்களில்) எவர் நிராகரிப்பவராகி விட்டாரோ, நிச்சயமாக அவர்கள்தாம் (அல்லாஹ்வின் கட்டளையை ஏற்காத பாவிகள். (அல் குர்ஆன் 24: 55)

அல்குர்ஆன் மீதான நேசத்தைப் பிள்ளைகளுக்குப் போதித்தல்

அல்லாஹ்வை நேசிக்கும் பிள்ளைகளை வளர்க்க வேண்டுமாயின் பெற்றார் அவர்களுக்கு அல் குர்ஆனை அறிமுகப்படுத்த வேண்டும். சில சமய வைபவங்களின் போது ஓதப்பட்டு ஏனைய காலங்களில் பத்திரப்படுத்தி வைக்கப்படுகின்ற வெறும் புனித நூலாக அது அமைந்து விடக்கூடாது. இந்த விடயத்தில் தகவல்களை வழங்குவது முக்கியமா? அல்லது பிள்ளையின் இதயத்தினதும் ஆன்மாவினதும் மனவெழுச்சி மற்றும் உளவியல்ரீதியான விருத்தி முக்கியமா? அறிவையும் தகவல்களையும் பெறுவது ஒருவரது வாழ்நாள் முழுதும் இடம்பெறக்கூடியது. எனினும், ஆரோக்கியமான மனவெழுச்சி மற்றும் உளவியல்ரீதியான விருத்தியானது பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப கட்டத்தில்- பதின்ம வயதை எய்த முன்னரே- இடம்பெற வேண்டும்.

இன்றைய முஸ்லிம்கள் பிள்ளைகளின் ஆரம்பப் பருவத்திலிருந்தே நரக நெருப்பு (ஜஹன்னம்) பற்றிய விபரங்களை மீட்டி மீட்டிக் கூறி அவர்களைப் பயமுறுத்துகின்றனர்.

அல்லாஹ்வின் அன்பு, இரக்கம், காருண்யம் என்பன பற்றியும் சுவர்க்கத்தின் அழகு பற்றியும் மிக அரிதாகவே குறிப்பிடுகிறார்கள். பிள்ளைகள் இறைவனுக்கோ அல்லது தம் பெற்றோருக்கோ கீழ்ப்படியாத வேளையிலும், தவறுகள் செய்யும் போதும் அவர்கள் எவ்வாறு நரகத்தில் எரிக்கப்படுவார்கள் என்பதை நாம் அழுத்திக் கூறுகிறோம். அதே வேளை அவர்கள் நன்னெறியில் நடந்து அல்லாஹ்வுக்கு அடிபணிந்து தம் பெற்றோர் சொற்கேட்டு மற்றவர்களுக்கு உதவி புரிவதோடு நல்லவற்றையும் செய்து வந்தால் அவர்களுக்கு சுவர்க்கம் வழங்கப்பட்டு அவர்கள் அதில் எவ்வாறு உபசரிக்கப் படுவார்கள் என்பது பற்றிக் கூறத் தவறி விடுகிறோம். நாம் பிள்ளைகளைத் தீய குற்றவாளிகள் போல் கருதித் தொடர்ச்சியாக அவர்களைப் பயமுறுத்திக் கொண்டும் அவர்களுக்குரிய தண்டனைகளை நினைவூட்டிக்கொண்டும் இருக்கிறோமே ஒழிய அவர்களை உற்சாகப்படுத்தவோ, இறைவனின் அன்பு பற்றியும் நன்னடத்தைக்கு அவன் தரப்போகும் வெகுமதிகள் பற்றியும் எடுத்துக்கூறவோ தவறி விடுகிறோம். இவ்வாறான சூழ்நிலையில் பிள்ளைகள் அச்சம் கொண்ட கோழைகளாக வளருகின்றனர். அவர்களினுள் எதிர்மறையான மனப்பாங்குகள் வளர்ந்து தன்னம்பிக்கை நலிவடைந்து போகும். அதுமட்டுமன்றி அவர்கள் தங்கள் சமய விசுவாசம் தொடர்பாக உற்சாகத்தையும் இழந்து விடுவார்கள்.

ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு அல் குர்ஆனைக் கற்பிக்கும்போது, வழமையாக அதன் கடைசிப் பகுதியிலிருந்தே (ஜுஸ்உ அம்ம) ஆரம்பிக்கிறார்கள். வஹீ இறங்கத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் மக்காவில் இறக்கப்பட்ட குறுகிய அத்தியாயங்களை இப்பகுதி கொண்டுள்ளது. குறைஷிக் குலத்தைச் சேர்ந்த வழி தவறிய, கர்வம் கொண்ட அடக்கு முறையாளர்களையும் அவர்களுடைய (அபூ ஜஹ்ல், அபூ லஹப் போன்ற) கொடூரமான தலைவர்களையும் கருத்திற்கொண்டே இக்குறுகிய அத்தியாயங்கள் இறக்கப்பட்டன. அத்தோடு, முஸ்லிம்களைச் சித்திரவதை செய்தவர்கள், கொலை செய்தவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் கொல்லத் திட்டம் தீட்டியவர்கள், விசுவாசிகளை முற்றாக அழிக்கவெனப் போர் தொடுத்தவர்கள் முதலியோர் பற்றி இந்த ஆரம்பகால அத்தியாயங்கள் குறிப்பிடுகின்றன. அந்தக் கொடுங்கோலர்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்புவதே இவ்வத்தியாயங்களின் நோக்கமாக இருந்தது. கடுமையான எச்சரிக்கைகளைக் கொண்ட அவற்றின் வாக்கியங்கள் அவர்களின் காதுகளில் இடிமுழக்கம் போல் ஒலித்தன. பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்:

> அபூலஹபின் இரு கைகள் நாசமடைக அவனும் நாசமாவானாக! *(அல் குர்ஆன் 111:1)*
>
> (பிறரைக்) குறை கூறிப் புறம் பேசித் திரியும் ஒவ்வொருவருக்கும் கேடுதான்.
>
> *(அல் குர்ஆன் 114:1)*
>
> (நபியே!) சூழ்ந்து கொள்ளக்கூடியதின் (மறுமை நாளின்) செய்தி உமக்கு வந்ததா? அந்நாளில் (பல முகங்கள் இழிவினால் வாடி) பணிவுடையனவாயிருக்கும். அவை (தவறானவற்றை நல்லவை என நினைத்து) செயல்பட்டவையும், (அதற்காக) உறுதியாக நின்றவையுமாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்பில் அவை பிரவேசிக்கும். கொதிக்கும் ஊற்றிலிருந்து

(அவர்களுக்கு நீர்) புகட்டப்படும். (அதில்) அவர்களுக்கு (கசப்பான) முட்செடியிலிருந்தே தவிர (வேறொன்றும்) உணவுமில்லை. (அல் குர்ஆன் 88:1-6)

(அளவையிலும் எடையிலும் மோசம் செய்து) குறைக்கக்கூடியவர்களுக்குக் கேடு உண்டாவதாக! (அல் குர்ஆன் 83:1)

பூமியானது அதன் அடிப்பாகத்திலிருந்து கடுமையான அசைவாக அது அசைக்கப்பட்டு விடும் போது (அல் குர்ஆன் 99: 1)

இந்தக் கடுமையான வாக்கியங்கள் அப்பாவிச் சிறுவர்களை நோக்கிக் கூறப்பட வில்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த வாக்கியங்கள்தான் அவர்களுக்கு முதன் முதலாகக் கற்பிக்கப்படுகின்றன. இவ்வத்தியாயங்கள் அவ்வாறு கற்பிக்கப்படுவதற்கான காரணம், அவை குறுகியனவாக இருப்பதோடு மனனஞ் செய்வதற்கு எளிதானவை எனக் கருதப்படுவதுமாகும். இந்த இளம் வயதில் நரகம் பற்றியும் தண்டனைகள் பற்றியும் அழுத்தம் கொடுத்துப் பிள்ளைகளைப் பயமுறுத்துவதற்குப் பதிலாக, அல்லாஹ்வின் அன்பு பற்றியும் பெற்றோரின் இரக்கம் பற்றியும் சுவர்க்கத்தின் அழகு பற்றியும் நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் பாதுகாப்பு, அன்பு, நட்பு, தாராளத் தன்மை, மென்மை போன்ற உணர்வுகள் இள வயதிலேயே அவர்களது உள்ளங்களில் பதிந்துவிடும். இறைவனின் அன்பு, கருணை, இரக்கம், மன்னிக்கும் தன்மை, தாராளத் தன்மை மற்றும் அவனது ஏனைய அழகான பண்புகளிலிருந்து தொடங்குவதே நல்லது. தாம் நல்லவர்கள் என்ற எண்ணத்தைப் பிள்ளைகள் மனதில் ஏற்படுத்த வேண்டும். **அத்தோடு அவர்கள் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் எனப் போதிப்பதற்கு முன்பு, அல்லாஹ் அவர்களை நேசிக்கிறான் என்பது அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.** முதலில் அல்லாஹ்வின் பேரன்பைப் பற்றிக் கூறிவிட்டு அதன் பின்னரே அல்லாஹ்வை நேசிக்கும் கடமை பற்றி அவர்களுக்குக் கூற வேண்டும்.

பிள்ளைகள் புரிந்து கொள்ள ஆரம்பித்த பின்னர், தீய செயல்களுக்குத் தண்டனையாக வழங்கப்படும் நரகம் பற்றிய விடயத்தை மென்மையான முறையில் முன்வைக்க வேண்டும். பெரும் பாவங்கள் பற்றிய எச்சரிக்கைகளையும் அச்சுறுத்தல்களையும் கொண்ட அல்குர் ஆன் அத்தியாயங்களை அவை பற்றி வீணாகப் பீதியுறாமல் அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளக்கூடிய நிலையைப் பிள்ளைகள் அடைந்த பின்னரே அறிமுகப்படுத்த வேண்டும். கருத்தூன்றியான எண்ணக்கருக்களையும் தமது செயல்களுக்கான விளைவு களையும் சரிவரப் புரிந்து கொள்ளக்கூடிய, பிள்ளைப் பருவத்தின் இறுதிக் கட்டத்தில் அல்லது பதின்ம வயதில் இதனைச் செய்வது பொருத்தமாக இருக்கும்.

அல்குர்ஆனைக் கற்பிக்கும் போது நாம் எமது பிள்ளைகளின் உள அமைப்பையும் மனப்போக்கையும் எவ்வாறு விருத்தி செய்கிறோம் என்பது பற்றிக் கவனம் செலுத்துவது அவசியம். தம் பிள்ளைகளின் வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்களுக்குப் பொருத்தமான வகையில் ஸூராக்களைத் தெரிவு செய்து போதிக்க வேண்டும். நபி (ஸல்) அவர்களின் தோழர்களுள் பெரும்பாலானோர் வளர்ந்தவர்களாக இருக்கும் போதே அல்குர்ஆன் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வயதில் அல் குர்ஆன் அவர்களின் உள்ளங் களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே அவர்களிடமிருந்த துணிவும் வலுவான சிறப்பியல்புகளும் வலுவூட்டப்பட்டதோடு அல்குர்ஆன் அவர்களை உயர் ஒழுக்க நியமங்களை நோக்கி நெறிப்படுத்தியது. குர்ஆனிய அறிவில் தேர்ந்தவர்கள், கல்வி நிபுணர்களுடனும் சமூக விஞ்ஞானிகளுடனும் ஒன்றிணைந்து, பிள்ளைகளுக்கு அல்குர்ஆனைக் கற்பிப்பது எவ்வாறு என்பது பற்றியும் அவர்களது வயதுக்கேற்ப குர்ஆன் ஸூராக்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய வரிசைக் கிரமம் பற்றியும் பெற்றோருக்கு ஆலோசனை வழங்குவது நல்லது.

நிச்சயமாக அல்குர்ஆனின் அனைத்து வாக்கியங்களும் ஒருவனின் வாழ்நாட்களுக்குள் கற்பிக்கப்பட வேண்டும். எனினும், எந்த ஒழுங்கில் அவை கற்பிக்கப்பட வேண்டும்? எந்தப் பருவத்தில் எந்தெந்த வாக்கியங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்? என்பன பற்றிச் சிந்திப்பது அவசியம். அல்குர்ஆனின் 30ம் பகுதி 37 குறுகிய ஸூராக்களைக் கொண்டிருப்பதற்காக மாத்திரம் அதிலிருந்து ஆரம்பிப்பது பொருத்தமானதாக இல்லை. நினைவில் வைப்பதற்கு எளிதாக இருப்பதை மாத்திரம் ஒரு காரணமாகக் கொள்ள முடியாது.

அறபு மொழி பேசாத பெற்றார் தம் பிள்ளைகளுக்கு அல்குர்ஆன் வாக்கியங்களின் கருத்துக்களைத் தம் சொந்த மொழியில் விளக்க வேண்டும். அறபியில் உள்ளதை வெறுமனே ஓதுவதற்கும் கருத்தைப் புரிந்து கொள்ளாமல் அவற்றை மனனம் செய்வதற்குமே இப்போது அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. பெற்றார் கட்டாயமாக அல்குர்ஆனின் நல்ல மொழி பெயர்ப்பொன்றைத் தம்வசம் வைத்திருக்க வேண்டும். அத்தோடு, குர்ஆனை ஓதப் பயிற்றுவிக்கும் போதே அதன் விளக்கவுரை (தப்ஸீர்) வகுப்புக்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் பிள்ளைகள் அல்குர்ஆனின் தூது, அதன் உலகக் கண்ணோட்டம் என்பவற்றுடன் தொடர்பொன்றை விருத்தி செய்து கொள்வார்கள். பெற்றோருக்கு இதனைச் செய்ய முடியாத நிலை இருந்தால், அவர்கள் இதற்காக நல்ல ஆசிரியர் ஒருவரை அமர்த்துவதோடு தம் பிள்ளைகளுக்கு எது, எவ்வாறு கற்பிக்கப்படுகிறது என்பதை மேற்பார்வை செய்வதும் இன்றியமையாதது. அல்குர்ஆனின் ஒலிப்பதிவுகளை வீடுகளில் கிரமமாகச் செவிமடுக்க ஏற்பாடு செய்தால் பிள்ளைகளுக்குக் குர்ஆனின் ஒலியோடு நல்ல பரிச்சயம் ஏற்படும்.

பிள்ளைகள் அல்குர்ஆனைத் தினமும் ஓதி வருவதற்கு ஏற்ற ஒழுங்கு முறையொன்றை அமைத்துக் கொடுப்பதும் நல்லது. அறபு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றுக் கொள்வதானது பிள்ளைகள் அல்குர்ஆனைக் கற்கவும் அதனோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் உதவும். அல்குர்ஆனிலிருந்து பெறப்பட்ட நபிமார்களின் வரலாறுகளையும் அவற்றிலிருந்து பெறக்கூடிய படிப்பினைகளையும் கூறும் சிறந்த நூல்களும் வெளியிடப் பட்டுள்ளன. பெற்றார் இவற்றைக் கொள்வனவு செய்து அல்லது இரவல் வாங்கி உபயோகிக்கலாம். குர்ஆனைக் கற்கும் போது இவற்றையும் துணையாகப் பயன்படுத்தினால் பிள்ளைகளுக்குக் குர்ஆனோடு பரிச்சயமும் நெருக்கமும் ஏற்பட வாய்ப்புண்டு.

பிரார்த்தனைகளைப் பிள்ளைகளுக்குப் போதித்தல்: இறைவனைத் தொடர்ச்சியாக நினைவு கூர்தல்

எப்போதும் எம்மைச் சூழ்ந்திருந்து எம்மைக் கவனித்துக் கொண்டிருக்கும் இறைவன் பற்றிய எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய குறுகிய பிரார்த்தனைகள் பல இருக்கின்றன. இவற்றை இலகுவாக அறிமுகப்படுத்தி இறைவனுக்கு நன்றி கூறும் பழக்கத்தையும், அவனது வழிகாட்டலையும் பாதுகாப்பையும் தேடும் பழக்கத்தையும் பிள்ளைகளில் ஏற்படுத்தலாம். இறை சிந்தனையைப் பின்னணிக்குத் தள்ளிவிடும் முயற்சிகளையும் அது தடுக்கலாம். உணவு உண்ண முன்னரும் உண்ட பின்னரும் பிள்ளைகளுக்குக் கேட்கக்கூடிய விதத்தில் பெற்றார் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். தாம் கூறுவது போல் அந்தப் பிரார்த்தனையை (துஆ) மீட்டிக் கூறுமாறு பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டும். இதே போன்று வீட்டில் நுழையும் போதும் வீட்டை விட்டுப் புறப்படும் போதும் நித்திரை கொள்ள முன்னரும் விழித்தெழும் போதும் உரிய துஆக்களைத் தவறாது ஓதுவது அவசியம். இது நன்றி கூறும் மனப்பாங்கை ஏற்படுத்தும். பெற்றார் ஏதேனும் வேலையை ஆரம்பிக்கும் போது 'பிஸ்மில்லாஹ்' (அல்லாஹ்வின் பெயரால்) என்று கூறி வந்தால் பிள்ளைகளும் அதனை அவதானித்துப் பிரதி பண்ணுவார்கள். பிள்ளைகளுக்கு இது

அற்பமானது போலவும் சலிப்புத் தருவது போலவும் முதலில் தோன்றினாலும் அதைத் தொடர்ந்து செய்து வருவது பயன்தரும். இது பிள்ளைகளில் 'திக்ர்' என்னும் இறைதியானப் பழக்கத்தை ஊக்குவிப்பதோடு, இவ்வாறு தொடர்பாடல் செய்வதை அவர்களது வாழ்க்கையின் ஓர் அம்சமாக மாற்றிவிடும். அத்தோடு, எல்லாவற்றிலும் அல்லாஹ்வுடைய கருணையின் பிரதிபலிப்பை அவர்கள் உணரத் தொடங்குவார்கள்.

ஐவேளைத் தொழுகையைப் பொறுத்த மட்டில், அது பெற்றாரின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான, இயல்பான ஓர் அம்சமாக அமைய வேண்டும். பெற்றாரே பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரிகளாக இருக்க வேண்டும். தொழுகை விடயத்தில் கரிசனையும் சிரத்தையும் காட்டுவதோடு உரிய நேரத்தில் அதனை நிறைவேற்றுவது அவசியம். தந்தை, வளர்ந்த ஆண் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு மஸ்ஜிதுக்குச் செல்ல வேண்டும். அண்மையில் மஸ்ஜித் இல்லாத பட்சத்தில், வீட்டிலேயே பிள்ளைகளின் முன்னிலையில் 'அதான்' கூறுவதோடு, குடும்பத்தினரைத் தன் பின்னால் நின்று தொழச் செய்வது நல்லது. தந்தை இல்லாத நேரத்தில் தாய் இந்தப் பொறுப்பைச் செய்யலாம். தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டால் டெலிவிஷன் போன்றவை நிறுத்தப்படுவது அவசியம்.

பிள்ளைகளின் முன்னிலையில் அமைதியோடும் உள்ளுணர்வோடும் தொழுதால்தான் அவர்களும் அவ்வாறே செய்யப் பழகுவார்கள். அவசர அவசரமாகத் தொழுது முடித்தால் பிள்ளைகளும் அவ்வாறே செய்வார்கள். தொழுகைக்கு முன்னரும் பின்னரும் எளிய பிரார்த்தனையொன்றைச் செய்வதும் உகந்தது. உங்கள் தேவைகளில் எதைப் பற்றியும் நீங்கள் அல்லாஹ்விடம் கேட்கலாம்.

பிள்ளைகளுக்குப் பாவமன்னிப்பை (தவ்பாவை) கற்றுக்கொடுத்தல்

ஒவ்வொரு செயலுக்கும் விளைவுகள் உண்டு என்பதையும் துர்நடத்தைகள் மானக்கேடானவை, அவற்றை அல்லாஹ் நன்கு அறிவான் என்பதையும் பிள்ளைகள் புரிந்து கொள்வது அவசியம். அத்தோடு, அவர்கள் தீய செயல்களில் ஈடுபட்டால் அதற்காக அவர்கள் பாவமன்னிப்புக் கோர வேண்டும் என்பதும் உணர்த்தப்பட வேண்டும். வெறுமனே 'sorry' என்று சொல்லிவிட்டு அப்பால் சென்றுவிடுவது போதுமானதல்ல. தவறு செய்தால் அது பற்றி இறைவனிடமே மன்னிப்புக்கோர வேண்டும் என்பதைப் பிள்ளைகள் புரிந்து கொள்வது அவசியம். இறைவன் பற்றிய உள்ளுணர்வு வளர்வதற்கு இதனால் வழியேற்படுகிறது. அத்தோடு இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பற்றி அவர்களுக்குக் கற்பிப்பதற்குரிய வாய்ப்பு பெற்றோருக்குக் கிடைக்கின்றது. பின்னர் பிள்ளைகள் தம் இரட்சகனுடன் ஆழமான உறவொன்றை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது.

தம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்குப் பெற்றார் மேற்கொள்ளும் முயற்சிகளுக்காகப் பிள்ளைகள் நன்றி கூறப் போவதில்லை. மாறாக, அவர்கள் எதிர்ப்புக்களையும்

முரண்பாடான நடத்தைகளையும் காட்டக்கூடும். எனினும், தளராமல் முயற்சி செய்து உறுதியான குரலில் விளக்கம் கொடுப்பதோடு பாவமன்னிப்புக் கேட்டபின் அவர்கள் மீது நிறையப் பாசத்தைக் காட்டினால், பிள்ளைகள் தவறான செயல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் பாவமன்னிப்புக் கேட்பதற்கும் இயல்பாகவே பழகி விடுவார்கள். பிற்காலத்தில், பிள்ளைகள் வளர்ந்த பின்னர், அவர்கள் பிறரை நோவித்தால் அல்லது பிறருக்கு ஏதேனும் தவறு செய்தால் இறைவனிடம் அதற்காகப் பாவமன்னிப்புப் பெற வேண்டிய அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றியும் ஏனைய நபிமார்கள் பற்றியும் பிள்ளைகளுக்குக் கற்பித்தல்

வீட்டில் சிறிய நூலகமொன்றை அமைத்துக் கொள்வதும் பிள்ளைகளோடு இணைந்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதும் நல்லது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, அவர்களது பிள்ளைப்பருவம், அவர்களது குண நலன்கள், அவர்கள் கொண்டுவந்த தூது முதலியன பற்றி வாசிக்கவும் அவை பற்றிய கதைகளைக் கூறவும் முடியும். அத்தோடு, அன்னாரது பேரர்கள், தோழர்கள் முதலியோரைப் பற்றிய கதைகளையும் வாசித்துக் காட்டலாம். நபிமார்களின் வரலாறுகள், பிள்ளைகள் நபிமார்களின் உலகத்தினுள் நுழைவதற்கும் அவர்களோடு ஒரு வலிமையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவர்களை வாழ்க்கையின் சிறந்த முன்மாதிரிகளாகக் கொள்வதற்கும் உதவுகின்றன. இவ்வரலாறுகளைப் பிள்ளைகளின் வயதுக்கு ஏற்ற வகையில் தொகுத்துக் கூறுவதும் பிள்ளைகள் தம்மோடு தொடர்பு படுத்திக்கொள்ளக்கூடிய அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் நல்லது. மனித வரலாற்றில் உருவான வலிமையும் தார்மீக இயல்பும் மிக்க ஏனைய ஆண், பெண் தலைவர்கள் பற்றிய கதைகளையும் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்ட முடியும்.

இஸ்லாமிய நாகரிகத்தின் சாதனைகள் பற்றிப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். வசதியாக இருப்பின் பிள்ளைகளை மியூஸியங்களுக்கு அழைத்துச் சென்று இஸ்லாமிய சித்திரக்கலை, வரலாறு, கட்டிட நிர்மாணக் கலை ஆகியவை பற்றி நேரடி அனுபவத்தை அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பளியுங்கள். பிள்ளைகள் வரலாற்றினால் உளக்கிளர்ச்சி பெறுவதற்கு மிக ஏற்ற இடமாக மியூஸியம் விளங்குகிறது. சில மியூஸியங்களில் பிள்ளைகள் செய்யக்கூடிய தொழிற்பாடுகள் காணப்படும். அவற்றிலிருந்து பிள்ளைகள் பயன் பெறப் பெற்றார் உதவ முடியும்.

இவ்விடயம் தொடர்பாகத் தகவல் தரக்கூடிய இண்டர்நெட் தளங்களும் பெருமளவில் உள்ளன. உதாரணமாக, www.1001inventions.com என்ற தளத்தில் கடந்த 1000 வருடங்களில் முஸ்லிம்கள் செய்த சாதனைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பான பல நூல்களைத் தேடிப் பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டுவதன் மூலம் பல நூறு வருடங்களாக முஸ்லிம் அறிஞர்கள் விஞ்ஞானத்துக்கும் தொழிநுட்பத்துக்கும் செய்த மகத்தான பங்களிப்புக்கள் பற்றியும் அவ்வறிஞர்களது வாழ்க்கை பற்றியும் அறிந்து கொள்வதற்கு உதவலாம். இறைவனின் அற்புதமான படைப்புக்கள் பற்றியும் இயற்கையின் உன்னதமான அழகு பற்றியும் தெரிந்து கொள்ள உதவும் கட்புல, செவிப்புல ஆக்கங்களைக் கொண்ட வெப்தளங்கள், நூல்கள், DVDகள் போன்றனவும் இந்த வகையில் உதவலாம்.

பிள்ளைகள் வளர்ச்சியடையும் போது சமயச் சார்பற்ற உலகக் கண்ணோட்டத்தின் தாக்கங்கள் அவர்களுடைய உள்ளங்களை ஆழமாக ஆக்கிரமிக்கத் தொடங்கும். எனவே, கூர்ப்புக் கொள்கை போன்ற தலைப்புக்களில் அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையளிக்கப் பெற்றோர் தயாராக இருக்க வேண்டும். பரந்த உலகில் காலடி வைத்த அடுத்த கணமே பிள்ளைகள் தீய வலைகளில் எளிதில் சிக்கக் கூடியவர்களாக

இருப்பார்கள். இந்நிலையில் இறைவிசுவாசம் தானாகவே பிள்ளைகளின் மனதில் நுழைந்து கொள்ளுமெனப் பெற்றார் எதிர்பார்க்கக் கூடாது. இறைவனையும் அவனது படைப்புக்களையும் பற்றிய அறிவும் உணர்வும் பிள்ளைகளிடம் ஆழமாகப் பதிந்திருந்தால் சமயச் சார்பற்ற போதனைகளைச் சமாளிப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கும். தாம் கொண்டுள்ள உலகக் கண்ணோட்டத்தைத் திரிபு படுத்த முயற்சிக்கும் விடயங்களைப் புறக்கணிக்கவும் அல்லது அவற்றிலிருந்து விலகி நிற்கவும் பிள்ளைகளுக்கு நம்பிக்கை மிகுந்த உறுதியான அத்திவாரமொன்று தேவைப்படுகிறது.

பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை (அதப்) கற்பித்தல்

நன்னடத்தை பற்றிய இஸ்லாமியக் கருத்துப்படிவம் 'அதப்' என்னும் ஒழுக்க விழுமியங்களையும் உள்ளடக்கியுள்ளது. மற்றவர்களுக்கு 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தி உண்டாவதாக) என ஸலாம் கூறவும் 'ஜஸாகல்லாஹ்' என்று நன்றி கூறவும் உரிய சந்தர்ப்பங்களில் 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே), 'இன்ஷா அல்லாஹ்' (அல்லாஹ் நாடினால்) முதலியவற்றைக் கூறவும் பிள்ளைகளைப் பழக்க வேண்டும். இன்று அழகான ஸலாத்திற்குப் பதிலாக Hi, Hello, Bye முதலியன பயன்படுத்தப்படுகின்றன. இதனைத் தவிர்க்க வேண்டும். உண்ணல், குடித்தல், உடையணிதல் முதலியன தொடர்பான ஒழுக்க முறைகளையும் பொதுச் சபைகளில் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகளையும் பிள்ளைகளுக்குப் போதித்தல் வேண்டும்.

பிள்ளைகளையும் வீட்டுச் சூழலையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பது முக்கியமானது. அவ்வாறு செய்தால்தான் அவர்களும் இப்பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வர். பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்து அவர்களைக் கெடுத்திவிட வேண்டாம். சில வேளைகளில் ஆடம்பரமான உணவுகளுக்குப் பதிலாக மிக எளிய உணவுகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வது நல்ல உணவின் மதிப்பை அவர்கள் உணர்ந்து கொள்ள வழி வகுக்கும்.

அடிக்கடி அளவு மீறிப் புகழ்வதும் பாராட்டுவதும் பிள்ளைகளில் வீண் பெருமையையும் அகங்காரத்தையும் ஏற்படுத்தலாம். அவர்கள் கேட்கின்ற ஒவ்வொரு விளையாட்டுப் பொருளையும் வாங்கிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு ஏதேனு மொன்று நிச்சயமாகத் தேவைப்படுமாயின் அதற்காக வீட்டில் சிறுசிறு வேலைகளைச் செய்து உழைக்குமாறு அவர்களை வேண்டலாம். அதைவிடச் சிறப்பானதை எல்லாம் வல்ல இறைவன் தரக்கூடும் என்பதை அவர்களுக்கு அடிக்கடி நினைவூட்ட வேண்டும். பிள்ளைகள் விரும்பியவை அவர்களுக்குக் கிடைக்காமல் போகும் போது உலகின் யதார்த்த நிலைக்கு முகங்கொடுக்க அவர்கள் தயாராக்கப்படுகிறார்கள். அத்தோடு, இதனூடாக அவர்கள் கற்றுக்கொள்ளும் ஒழுக்க விழுமியங்களும் சுய கட்டுப்பாடும் வாழ்நாள் முழுதும் உதவப்போகின்றன.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முதலில் எதனைக் கூறப்போகிறீர்கள்?:

அவர்கள் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் என்பதையா அல்லது அல்லாஹ் அவர்களை நேசிக்கிறான் என்பதையா?

''நான் இறைவனை நேசிக்கிறேன்; அவனே என்னையும் இந்தப் பூமி, சூரியன், சந்திரன் முதலியவற்றையும் படைத்தான்'' எனக் கூறுமாறு நாம் எம் பிள்ளைகளுக்குக் கற்பித்தால் இதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் செய்தி யாது? எல்லாவற்றுக்கும் முதலில் பிள்ளைகளிடம் இறைவன் பற்றிய கருத்துப் படிவமொன்றே இருக்காது. ஏனெனில், அது அவர்களால் அப்பருவத்தில் புரிந்து கொள்ள முடியாத பருப்பொருள் சாராக் கருத்தொன் றாகும். எனவே, அவர்களுக்குத் தெரியாத ஒன்றை நேசிப்பதும் நேசிக்காமலிருப்பதும் ஒன்றுதான். பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் அவர்களும் அவர்களைச் சுற்றியுள்ள உலகமும் யதார்த்தமானவையாகத் தென்படுகின்றன.

இவ்விடயத்தை மறுதலையாக மாற்றி ''இறைவன் உங்களை நேசிக்கின்றான்; அவனே உங்களைப் படைத்து, நீங்கள் அனுபவிப்பதற்காக இவ்வுலகினையும் படைத்தான்'' என நம் பிள்ளைகளுக்குக் கற்பித்தால் தங்களை நேசித்துத் தங்கள் நன்மை பற்றிக் கரிசனை காட்டுகின்ற இந்த இறைவன் யார் என அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள். இவ்வாறு அன்பு காட்டிப் பராமரிக்கும் அந்த இறைவனோடு தொடர்பு கொள்ளவும் அவனைப் பற்றி மேலும் மேலும் அறிந்து கொள்ளவும் அவர்கள் விரும்புவார்கள்.

வணக்க வழிபாடுகள், வாழ்க்கை, தம்மைப் படைத்தவனின் நாட்டத்திற்கு சுய விருப்பத் தோடு அடிபணிதல் என்பவற்றுக்கிடையில் வலிமையான தொடர்பொன்று காணப்படு கிறது. எமது நன்னடத்தையானது அவனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஆசையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஏனெனில், அவனே நல்ல தன்மைக்கும் உண்மைக்கும் மூலகாரணமானவனாக இருக்கிறான். எங்களதும் எங்களைச் சூழ உள்ளோரதும் வாழ்க்கைப் பண்பினை மேம்படுத்துவதற்காக இறைவனது அறிவுறுத்தல் களையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுவதே அவனைத் திருப்திப்படுத்துவதற்குரிய ஒரே வழியாகும்.

நல்லவர்களாகவும் கடும் உழைப்பாளிகளாகவும் பயனுள்ளவர்களாகவும் ஏனையவர்களுக்கு ஒத்தாசை புரிபவர்களாகவும் இருப்பதன் மூலம் நாம் எமது ஆன்மீகப் பண்புகளைப் பலப்படுத்திக் கொள்கிறோம். மேலும், இதன்மூலம் நாம் எமது இரட்சகனை நோக்கி நெருங்குகிறோம். மற்றவர்களது வாழும் உரிமை, சொத்துரிமை, கௌரவம் என்பவற்றை மதிப்பதன் மூலமும் நீதி, கருணை, சுதந்திரம் என்பவற்றை ஊக்குவிப்பதன் மூலமும் கொடுங்கோன்மையைத் தவிர்த்து அடக்குமுறையை எதிர்ப்பதன் மூலமும் நாம் பிறருக்குச் செய்யும் உதவி எமக்கு நன்மையாகவே அமையும்.

மேற்சொன்ன முயற்சிகளில் வெற்றிபெற வேண்டுமாயின் அல்லாஹ்வைப் பற்றியும் அவனது அழகான பண்புகளைப் பற்றியும் தொடர்ச்சியாக உணர்ந்து நினைவு கூர்வதும் அவசியமாகிறது. சமயக் கடமைகளை நிறைவேற்றுவது இவ்வுணர்வையும் அல்லாஹ்வின் மீதான எமது அன்பையும் வலுப்படுத்தும். இவ்வழியில் எமக்கு அல்லாஹ்வின் அருள் கிட்டுகிறது; உளச்சுத்தியோடு அவனை வணங்குபவர்களுக்கு நல்லதையும் சரியானதையும் செய்யும் அவர்களது முயற்சியில் வெற்றி பெறுவதற்கான பலமும் கிடைக்கிறது.

உன்னை நீ அறிவாய்: அறாபியக் கல்வி முறையில் காணப்படும் பிரச்சினை

அறபு உலகில் கல்வி, சுதந்திரம், ஆய்வு (இஜ்திஹாத்) என்பவற்றுக்குப் பலமான கோரிக்கை காணப்படுகிறது. எனினும், விஞ்ஞான முன்னேற்றம், ஆய்வு என்பன தொடர்பாக நவீன அறபு உலகு முழுவதிலும் கவலைக்குரிய போக்கொன்று காணப்படுவதாக அறாபிய மானுட விருத்தி அறிக்கை (2009) எடுத்துக்காட்டுகிறது. தமது சொந்த, வளம் மிக்க கலாசார பாரம்பரியங்களைப் பேணிக்கொள்வதில்கூட அறபு நாடுகள் உலகின் ஏனைய நாடுகளை விடப் பின்தங்கியிருக்கின்றன. நூல் வெளியீட்டில் உலகிலே ஆகக்குறைந்த மட்டத்தில் அறபு நாடுகள் இருப்பதாக ஐ.நா ஆய்வொன்று எடுத்துக்காட்டுகிறது. இத்துறையில் ஐரோப்பாவே முன்னணியில் நிற்கிறது. அறபு நாடுகளுடன் ஒப்பிடும் போது ஐந்து மடங்கு கூடிய வெளியீடுகள் அங்கே உருவாக்கப்படுகின்றன.

அறபு நாடுகளுக்கும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் ஏற்றத் தாழ்வொன்று காணப்படுவதை மேற்சொன்ன அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது. ஆட்சியாதிக்கம் கொண்ட அறபு நாடுகள் மக்களைக் கட்டுப்படுத்துவதில் காட்டும் வெறி காரணமாக ஆக்கத்திறனையும் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்தையும் நெரித்து அடக்கி வைத்துள்ளன. "பாதுகாப்புப் பற்றிய போலியான எண்ணங்களுக்கும், தணிக்கைக்கும், பொது மக்களின் ஒழுக்கத்தைக் கண்காணிக்கச் செயற்படும் தான்றோன்றிக் கண்காணிப்பாளர்களுக்கும் பணயம் வைக்கப்பட்டுள்ள சுதந்திரம், மறுக்கப்பட்ட சுதந்திரமே! இந்த மறுப்புக்கு ஆக்கத்திறன், செயலூக்கம், புத்தாக்கம், அறிவு என்பனவே முதலில் பலியாகின்றன" (The Economist - 2003)

பிள்ளைகள் மீதான தம் பொறுப்புக்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டுப் பெற்றார் தப்பித்துக் கொள்ள முயலக்கூடாது. தம் பிள்ளைகளுக்கான முன்மாதிரிகள் என்ற வகையிலும் அவர்களது ஆரம்பப் பருவ ஆசிரியர்கள் என்ற வகையிலும் பெற்றார் இச்சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும்; சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியின் பிரதான உந்து காரணிகளாக மாற வேண்டும். பயன்தரும் சீர்திருத்தச் செயன்முறையைத் தொடக்கி வைக்கும் விசைகளாகப் பெற்றோர் இருக்க வேண்டும். எதனை, எவ்வாறு செய்ய வேண்டும் என்பதனைப் பெற்றாருக்கு அறிவுறுத்துகின்ற அறிவுரீதியான சீர்திருத்தவாதிகளும் கல்வியாளர்களும் இச்செயன்முறையைத் தொடர்ந்து வழிநடத்திச் செல்வார்கள். சரியான விளக்கமும் ஈடுபாடும் ஏற்பட்டால் தேவையானவற்றை பெற்றோர் ஆர்வத்தோடு செய்வார்கள். அவர்கள் தம் பிள்ளைகளின் மீது ஆழமான தார்மீகச் செல்வாக்கினைக் கொண்டிருப்பதோடு எதிர்காலச் சந்ததியினரின் நடத்தையை மறுசீரமைக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 21: ஜப்பான், ஜெர்மனி ஆகியவற்றின் முன்னேற்றமும் முஸ்லிம் நாடுகளின் பிற்போக்கும்- ஓர் ஒப்பீடு

பின்வரும் வினாக்களைப் பற்றி பெற்றார் குழுவொன்றின் மத்தியில் கலந்துரையாடுங்கள்:.

இரண்டாம் உலகப்போரின் போது முற்றாக அழிக்கப்பட்ட ஜப்பானும் ஜெர்மனியும் உலகில் இன்று முன்னணியில் இருக்கின்ற அதேவேளையில், முஸ்லிம் நாடுகள் முன்னேற்றமடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

சில முஸ்லிம் நாடுகளில் ஏன் இன்னும் குப்பை கூளங்களை ஆற்றில் எறிகின்றனர்?

அவை ஏன் தரம் குறைந்த கல்வித் திட்டங்களைக் கொண்டிருக்கின்றன?

அவை ஏன் மூலப்பொருட்களை மலிவான விலைக்கு ஏற்றுமதி செய்துவிட்டு அவற்றினால் செய்யப்பட்ட முடிவுப் பொருட்களை உயர் விலை கொடுத்து இறக்குமதி செய்கின்றன?

ஓதுவீராக/ வாசிப்பீராக எனக் குர்ஆனின் கட்டளை இருந்தும் முஸ்லிம் உலகில் எழுத்தறிவு வீதம் மிகக்குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

தொழிற்பாடு 22: பிள்ளைகளுக்கும் அவர்களைச் சிருஷ்டித்தவனுக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்தல்

அன்றாட ஐவேளைத் தொழுகைகள் எமக்கு ஒழுங்கான முறையில் இறைவனை நினைவூட்டினாலும் எம்மைப் படைத்தவனோடு தொடர்பு கொள்வதற்கு உதவுகின்ற மேலும் பல்வேறு செயற்பாடுகள் இருக்கின்றன.

தம் இரட்சகனைத் தொடர்ந்து நினைவுகூர்வதற்கு (திக்ர் செய்வதற்கு) பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் காலையில் விழித்தெழுந்தது முதல் இரவில் நித்திரைக்குச் செல்லும் வரை பயன்படுத்தி வந்த பின்வரும் பிரார்த்தனைகளை (துஆக்களை) மனனம் செய்யக் கற்பிப்பது இதற்கான சிறந்த வழியொன்றாகும். இப்பிரார்த்தனைகளுக்கு அதிக நேரம் தேவைப்படுவதில்லை. எனினும், அவை எம் மன நிலையை மேம்படுத்தி எமது செயல்களைச் சரியான திசையில் திசைப்படுத்த உதவு கின்றன. இவற்றுள் உணவுண்ணத் தொடங்கும் போதும் உணவுண்ட பின்னரும் ஓதும் துஆக்கள் குறிப்பிடத் தக்கவை.பெற்றார் வாரத்திற்கு ஓரிரு துஆக்களைத் தெரிவு செய்து அவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும். பிள்ளைகள் அவற்றைப் பிரயோகிக்கப் பழகிய பின்னரே அடுத்ததற்குச் செல்ல வேண்டும். பிள்ளைகளுக்கு இப்பிரார்த்தனைகளின் கருத்தையும் சொல்லிக் கொடுங்கள். (அறபு மொழியில் ஓதுவது சிரமமாக இருப்பின் ஆரம்ப நிலையில் அதன் தமிழ் வடிவத்தைக் கூற வைக்கலாம்)

—

நித்திரை விட்டெழும்பும் போது: எங்களை நித்திரையிலிருந்து விழிக்கச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். மேலும், நம் மீட்சியும் அவன் பக்கமே.

إذا أفاق من نومه قال: الحمد لله الذي أحيانا بعد أن أماتنا وإليه النشور

சூரிய உதயத்தைக் காணும் போது: நாம் அதிகாலையில் விழித்தெழுந்து விட்டோம். சர்வ உலகின் ராச்சியங்களும் அல்லாஹ்வுக்கே உரியன.

إذا رأي نور الفجر قال: أصبحنا وأصبح الملك لله والحمد لله

முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நிற்கும் போது: என்னைப் பரிபூரணமாகப் படைத்தவனுக்கே எல்லாப் புகழும். எனது வெளித் தோற்றத்தை அழகு படுத்தியது போன்று எனது குணங்களையும் அழகு படுத்துவாயாக.

إذا نظر إلى المرآة قال: الحمد لله الذي خلقني فسواني، اللهم حسن خُلقي كما أحسنت خَلقي

உடை அணியும் போது: எனக்கு ஆடை அணிவித்து என் அவ்றத்தை மறைத்து என்னை அழகு படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

إذا لبس ثوباً قال: الحمد لله الذي كساني ما أواري به عوراتي وأتجمل به في حياتي

மஸ்ஜிதினுள் நுழையும் போது: அல்லாஹ்வே, உனது கருணையின் வாயில்களை எனக்குத் திறந்து விடுவாயாக. உனது அறிவின் பொக்கிஷங்களை எனக்கு அளிப்பாயாக.

إذا دخل المسجد قال: اللهم افتح لي أبواب رحمتك وانشر علي خزائن علمك

உணவுட்கொண்ட பின்: எமக்கு உணவளித்து எமது தாகத்தைத் தீர்த்து எம்மை முஸ்லிம்களில் நின்றும் ஆக்கி வைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

إذا أكل طعاماً قال: الحمد لله الذي أطعمنا فأشبعنا وسقانا فأروانا وجعلنا مسلمين

தண்ணீர் குடிக்கும் போது: தனது கருணையால் இந்த நீரை இனியதாக்கி வைத்து எமது பாவங்கள் காரணமாக அதனைக் கசப்பாகவோ உவர்ப்பாகவோ ஆக்காதிருந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

إذا شرب الماء قال: الحمد لله الذي جعل الماء فراتاً برحمته ولم يجعله ملحاً أجاجاً بذنوبنا

கழிவறையினுள் நுழையும் போது: அல்லாஹ்வே, எடுத்தெறியப்பட்ட செய்த்தானை விட்டு உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். அசுத்தமானவற்றையும் அருவருப்பானவற்றையும் விட்டும் உன்னடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

إذا دخل الخلاء قال: أعوذ بالله من الشيطان الرجيم اللهم إني أعوذ بك من الخبث والخبائث

கழிவறையை விட்டு வெளியேறும் போது: உன்னிடம் பாவமன்னிப்பைக் கேட்கிறேன். தீங்குகளிலிருந்து என்னைப் பாதுகாத்து எனக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

إذا خرج من الخلاء قال: غُفرانك الحمد لله الذي أذهب عني الأذى وعافاني

வீட்டை விட்டு வெளியேறும் போது: அல்லாஹ்வின் பெயரால். நான் அவனிலேயே தங்கியிருக்கிறேன்; அவனிடமே அடைக்கலம் தேடுகிறேன். யாரையும் வழி கெடுத்தாமலும் நாம் வழி தவறாமலும் இருக்க உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

إذا خرج من البيت قال: بسم الله توكلت على الله اللهم إني أعوذ بك أن أضل أو أضل

வீட்டினுள் நுழையும் போது: அல்லாஹ்வின் பெயரால் நாம் நுழைகிறோம். அவன் பெயராலேயே நாம் வெளியேறுகிறோம். அவனிலேயே நாம் தங்கியிருக்கிறோம்.

إذا دخل البيت قال: بسم الله دخلنا وبسم الله خرجنا وعلى الله توكلنا

தொழிற்பாடு 23: அல்லாஹ் வழங்கியுள்ள அருள்களையும் ஆசீர்வாதங்களையும் மதித்துப் போற்றுதல்

மேலே தரப்பட்ட துஆக்களைப் போன்றே பிள்ளைகளும் தங்களது சொந்தத் தேவைகளைக் குறித்துப் பிரார்த்தனைகளைத் தம் தாய்மொழியில் அமைக்கச் செய்து அவற்றைப் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாடச் செய்தல்.

தொழிற்பாடு 24: பிரச்சினைகளைச் சரியான முறையில் நோக்குதல்.

பின்வரும் உண்மைக் கதையை ஒரு பிள்ளையைக் கொண்டு வாசிக்கச் செய்து அது பற்றிக் கலந்துரையாடுங்கள். உங்கள் சொந்த அனுபவங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பில்லியன் கணக்கில் டொலர்களை முதலீடு செய்து வியாபாரம் செய்யும் ஓர் இளம் வியாபாரியை எனக்குத் தெரியும். அவர் கடுமையான நிதிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தார். அவரால் திருப்பிச் செலுத்தப்பட முடியாத பெரிய கடன் தொகைகள் அவரை வாட்டிக் கொண்டிருந்தன. "எப்படி இருக்கிறீர்கள்?" என நான் அவரிடம் கேட்ட போது "காலையில் நித்திரையை விட்டு எழுந்திருக்கவும் என் கால்களால் நடக்கவும் முடியுமாக இருப்பின் நான் எல்லா வகையிலும் நன்றாகத்தான் இருக்கிறேன்" என அவர் பதிலளித்தார். கோடிக்கணக்கான டொலர்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையிலும் தான் நன்றாக இருப்பதாக இவர் சொல்கிறாரே, இவருக்கென்ன பைத்தியமா? என்று நான் உள்ளூர யோசித்தேன். அப்போது பின்வரும் ஹதீஸ் என் மனதில் பளிச்சிட்டது.

எவரொருவர் தம் மக்களிடையே பாதுகாப்போடும் உடலாரோக்கியத்தோடும் கண் விழித்தெழுந்து அவருக்கு அன்றைய நாளுக்குப் போதுமான உணவும் இருந்தால் முழு உலகும் அவருக்காகவே ஒன்று திரட்டப்பட்டது போல் இருக்கும்.

(அல் திர்மிதி, இப்ன் மாஜாஹ்)

தொழிற்பாடு 25: பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய ஏழு எண்ணக்கருக்கள்.

பின்வரும் ஹதீஸினை ஒரு பிள்ளையைக் கொண்டு வாசிக்கச் செய்து அதன் ஒவ்வொரு தத்துவம் பற்றியும் சிந்திக்கச் செய்து அவற்றை உண்மையான அனுபவங்களுடன் தொடர்பு படுத்துங்கள்.

அவனுடைய நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் கிடைக்காத அந்த நாளில் ஏழு வகையினருக்கு அல்லாஹ் தன் நிழலை வழங்குவான்: நியாயமான ஆட்சியாளர், அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவாறே வளர்ச்சியடையும் ஒரு வாலிபன், தான் மஸ்ஜிதை விட்டு வெளியேறியது முதல் மீண்டும் அதற்குத் திரும்பும் வரை மஸ்ஜிதோடு தன் இதயத்தைப் பிணைத்து வைத்திருக்கும் ஒருவர், அல்லாஹ்வுக்காகவே ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டி அவனுக்காகவே சந்தித்து அவனுக்காகவே பிரியும் இருவர், தனிமையில் இருந்து கொண்டு தம் கண்கள் கண்ணீரால் நிரம்பி வழியும் நிலையில் அல்லாஹ்வை நினைவு கூர்கின்ற மனிதர், உயர் அந்தஸ்தும் அழகும் மிக்க பெண்ணொருத்தி தன்னை அணுகும் போது 'நான் அல்லாஹ்வை அஞ்சுகிறேன்' எனக்கூறி அதனை நிராகரிக்கும் ஒருவர், தனது வலது கை கொடுப்பதை இடது கை அறியாத வகையில் மறைவாக தருமம் கொடுக்கும் ஒருவர்.

(அல் புகாரி, முஸ்லிம்)

அத்தியாயம் 5

பொதுவான சவால்களும் இடர்ப்பாடுகளும்

- அறிமுகம் 128
- பெற்றார் எதிர்நோக்கும் பிரதான சவால்கள் 128
  - அனுபவம் இல்லாமை 129
  - அன்றாட அழுத்தங்கள் 129
  - அன்றாடக் கடும் உழைப்பு: பிள்ளை வளர்ப்பானது தொடர்ச்சியான முழு நேரப்பணி என்பதை ஏற்றுக்கொள்ளல் 129
  - பிள்ளை வளர்ப்புப் பணி நெகிழ்வுத்தன்மை அற்றது 130
  - பிள்ளை வளர்ப்பு என்பது காலம், முயற்சி, பணம் என்பவற்றின் நீண்ட கால முதலீடு 130
  - பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு காரணிகளுள் ஒரு காரணியாக மாத்திரமே பெற்றார் உள்ளனர் 131
  - குழந்தைகளுக்குப் பேச முடியாது 132
  - பிள்ளை வளர்ப்பில் பல துறைகள் ஒன்றிணைகின்றன 132
  - தந்தையும் தாயும் ஓர் அணியாகச் செயற்பட வேண்டும் 133
  - பிள்ளை வளர்ப்புத் திறனுக்கு வளங்களின் சரியான முகாமை தேவை 133
  - தம் பெற்றோரைப் பற்றிப் பிள்ளைகள் கொண்டுள்ள புலக்காட்சி பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு முரணானதாக இருக்கலாம் 134
  - பிள்ளைகளுக்கு எதனை, எப்போது சொல்ல வேண்டும் என்பதை அறிந்திருத்தல் 134
  - கவனக்குறைவினால் பிள்ளைகளில் தவறான எண்ணக்கருக்களைப் பதிவு செய்தல் 135
  - சாதகமான சுய ரூபமொன்றை உருவாக்குவதில் எதிர்கொள்ள நேரிடும் சவால்கள் 136
- பிள்ளை வளர்ப்பு பற்றி மூஸா (அலை) கூறும் படிப்பினைகள் 136
- முடிவுரை 137
- தொழிற்பாடு-26 138

அறிமுகம்

கடந்த சில அத்தியாயங்களில் நாம் சிறந்த, சகலதையும் உள்ளடக்கிய பிள்ளை வளர்ப்புத் திட்டமொன்றின் பொதுப் பண்புகளைத் தந்து, அதனைச் செயற்படுத்துவ தற்குத் தேவையான சில முக்கியமான நடவடிக்கைகளையும் குறிப்பிட்டோம். அத்தோடு சிறந்த பிள்ளை வளர்ப்புக்கு வழிகாட்டியாகத் தரப்பட்ட திட்டத்துடன் சேர்த்துத் தமது சொந்த இயல்புணர்வுகளையும் (instincts) பயன்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை யும் நாம் வலியுறுத்தினோம். நாம் பயன்படுத்தியுள்ள அணுகுமுறை நெகிழ்வுக்குரியது. பெற்றார் தமக்கேயுரிய முறையில் அடிப்படையை அமைத்துத் தம் சொந்தத் தேர்வுகளுக்கு ஏற்பத் தம் பிள்ளைகளை வளர்த்தெடுக்க அது இடமளிக்கிறது. இங்கு அடிப்படையான நோக்கம் இறையச்சமுள்ள, பொறுப்புணர்வு மிக்க, சமூகத் திறன்களைக் கொண்ட பிள்ளைகளை வளர்த்தெடுப்பதே.

ஒரு பிள்ளையை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதனால் எமது மனதில் அமைதியும் வீட்டில் சந்தோஷமும் ஏற்படுவது உண்மையே. எனினும், இதனை விடப் பரந்த அளவிலான தாக்கங்களை அது ஏற்படுத்தும் என்பதை நாம் அழுத்திச் சொன்னோம். அதுவே சமூகத்தையும் நாகரீகத்தையும் கட்டியெழுப்புவதற்குரிய ஆக்கக்கூறாக இருக்கிறது. சிறந்த திட்டமொன்று இருப்பின் கஷ்டமான பிள்ளை வளர்ப்புப் பணியை இலகுவானதாக மாற்றியமைக்க முடியும். எனினும், பிள்ளை வளர்ப்பின் போது எதிர்கொள்ள நேரிடும் சில சவால்களையும் இடர்ப்பாடுகளையும் சமாளிப்பதற்குரிய வழிகாட்டலை வழங்காவிடில் அத்திட்டம் பூரணமானதாக அமைய முடியாது.

இந்த அத்தியாயத்தில் நாம் பிள்ளை வளர்ப்பின் சிரமங்கள் சிலவற்றைப் பற்றிக் கவனம் செலுத்துவதோடு அவற்றுக்கான அறிவு பூர்வமான தீர்வுகளையும் முன்வைத்துள் ளோம். முதலில் நாம் பிரதான சவால்களுள் சிலவற்றைக் கவனிப்போம். பின்னர் அடுத்த அத்தியாயத்தில் பிரதான இடர்ப்பாடுகள் பற்றி அவதானிப்போம். இந்த அம்சங்களை நாம் முந்திய அத்தியாயங்களிலும் தொட்டிருக்கின்றோம். எனினும், அவை ஒன்றிணைக் கப்பட்டு முழுமையாகத் தரப்படும்போது தாமும் தம் பிள்ளைகளும் வாழும் உலகைப் பற்றியும் தாம் எதிர்கொள்ளப்போகும் சிக்கலான பிரச்சினைகள் பற்றியும் விரிவாகப் புரிந்து கொள்ளப் பெற்றார்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

பெற்றார் எதிர்நோக்கும் பிரதான சவால்கள்

எமது வாழ்க்கையானது கஷ்டமான சோதனைகளின் தொடரொன்றாக இருக்கிறது. அவற்றுள் பிள்ளை வளர்ப்பு சவால் மிகுந்தது. எனினும், பிள்ளை வளர்ப்புச் சோதனை யில் சித்தியடைபவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதியோ விலைமதிப்பற்றது. தம்மை எதிர்நோக்கியுள்ள சவாலைப் பெற்றார் சரிவர மதிப்பிட்டுக் கொள்வது அவசியம். தாம் எதிர்கொள்ளப் போகும் சவாலைக் குறைமதிப்பீடு செய்வதை அல்லது மிகை மதிப்பீடு செய்வதை இது தடுக்கும். பிள்ளை வளர்ப்பது மிக இலகுவானது என அவர்கள் நினைத் தால் தம்மை அதற்குத் தயாராக்க வேண்டும் என உணர மாட்டார்கள். அதேவேளை, அது மிகக் கஷ்டமானது என நினைத்தால் மனந்தளர்ந்து முயற்சியைக் கைவிடுவார்கள்.

இவ்விடயம் தொடர்பான சிரமங்களை முதலில் இனங்காண முயற்சிப்போம். இந்த விடயத்தில் தாம் தனித்து விடவில்லை என்பதைக் கண்டு கொள்ளும் போது பெற்றாருக்கு ஓரளவு நிம்மதியும் திருப்தியும் ஏற்படும் என நம்புகிறோம். இச்சிரமங்கள் பற்றி ஏனைய பெற்றோர்களுடன் கலந்துரையாடுவது உங்கள் அனுபவத்தை வளப்படுத்தும். அத்தோடு, தமக்கிடையே எவ்வளவு விடயங்கள் பொதுவானவையாக இருக்கின்றன என்பதைக் கண்டு பெற்றோர் ஆச்சரியமடைவார்கள். பெற்றோரை எதிர்நோக்கும் பல்வேறு சவால் களுக்கான சில உதாரணங்களைக் கீழே தருகின்றோம்.

பிள்ளை வளர்ப்பது எப்படி என்று நீங்கள் அறியாதிருக்கும் போது அதனைச் செய்வது எளிதாக இருக்கும்; ஆனால், நீங்கள் அதைப் பற்றி அறிந்துகொண்ட பின் அது சிரமமாகிவிடும்:

"எங்கள் பெற்றார் எம்மைப் பைத்தியமாக்குகின்றனர்" எனப் பிள்ளைகள் கூறுகின்றனர்.

"எங்கள் பிள்ளைகள் எம்மைப் பைத்தியமாக்கு கின்றனர்" எனப் பெற்றார் கூறுகின்றனர்.

ஒருவருக்கு ஒருவர் ஏசுவதை நிறுத்துங்கள்!

பிரச்சினையை விளங்கிக் கொள்ளுங்கள்!

பிரச்சினைக்குரிய விடயத்தைப் பகுப்பாய்வு செய்து கூட்டாக அதற்குத் தீர்வு காணுங்கள்:

பொறுமையைக் கைக்கொள்ளுங்கள்

அனுபவம் இல்லாமை

முதலாவது குழந்தை பிறக்கும் போது அனுபவம் இல்லாமை பிரதான சவாலொன்றாக இருக்கும். பல்வேறு சந்தர்ப்பங்களில் என்ன செய்வது என்பது பற்றி இரு பெற்றாருக்கும் தெரியாதிருக்கும். சில கோட்பாடுகளை அவர்கள் கற்றிருந்தாலும் அவர்களுக்கு அனுப வம் இருக்காது. இந்நிலையில் மற்றப் பெற்றோர்களிடம் கேட்டு நிறைய அறிந்து கொள்ள லாம். இது கண்காணிப்பாளர் எவருமின்றிச் சேவையின் போது கிடைக்கும் பயிற்சியாக அமையும்.

அன்றாட அழுத்தங்கள்

பால் அடிப்படையில் உழைப்பைப் பகிர்ந்து கொள்ள நேரிடுவதால் பெற்றோர் அடிக் கடி அழுத்தங்களுக்கு உள்ளாவார்கள். பகல் வேளையில் பல தாய்மார்கள் வீட்டில் இருப்பார்கள்; தந்தையரோ வீட்டுக்கு வெளியே இருப்பார்கள். மாலையில் தாய்மார் வெளியே போக விரும்பலாம்; தந்தையார் வீட்டிலிருக்க நாடுவார் கள். பெற்றார் ஒருவரின் நிலையை மற்றவர் புரிந்துகொள்ளத் தவறினால், அவர்களிடையே பூசல்களும் சச்சரவுகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

தந்தையின் பொறுப்பு வெறுமனே தேவையான பண்டங்களை வழங்குவது மாத்திரமல்ல...

உன்னதமான தந்தையானவர் பிள்ளைகளுக்குத் தேவையான உணவையும் உறைவிடத்தையும் வழங்குபவர் மாத்திரம் அல்லர் என்பதை வயது செல்லச் செல்ல நாம் உணர்ந்து கொள்வோம்.

அன்றாடக் கடும் உழைப்பு: பிள்ளை வளர்ப்பானது தொடர்ச்சியான முழு நேரப்பணி என்பதை ஏற்றுக்கொள்ளல்

பிள்ளை வளர்ப்புப் பணிக்கு அலுவலக நேரங்கள் என்று எதுவுமில்லை. அது வருடத்துக்கு 52 வாரங்கள், வாரத்துக்கு 7 நாட்கள், தினமும் 24 மணித்தியாலங்கள் என எவ்வித விடுமுறையுமின்றித் தொடர்ச்சியாக செய்யப்பட வேண்டும். வாழ்க்கைத் துணைவரை விவாகரத்துச் செய்து விலக்கி விடுவது போன்று பிள்ளைகளை விலக்கி விடவும் முடியாது. பெற்றோராகி விட்டால் அது வாழ்நாள் முழுவதுமான பொறுப்பாகி விடுகிறது. வேறெதுவும் இப்பொறுப்புக்குக் குறுக்கே வரக்கூடாது.

காதைப் பிடித்து வழிகாட்டல்

முந்திய காலத்தில் பிள்ளைகளுக்கு வழிகாட்டுவது மிக எளிதான காரியமாக இருந்தது. அவ்வப்போது தாய் தன் பிள்ளையின் காதைத் திருகி இழுத்துக் கொண்டு போய் வழிகாட்டுவாள்.

எது சிரமமானது?: தந்தையாக இருப்பதா? அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருப்பதா?

''என்னால் இரண்டில் ஒன்றைத்தான் செய்ய முடியும். ஒன்றோ நான் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருக்க வேண்டும்; அல்லது எனது மகள் அலிஸைக் கட்டுப்படுத்த வேண்டும். என்னால் இரண்டையும் செய்ய முடியாது''

தியோடர் ரூஸவெல்ட்- முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி

''நான் கட்டளையாக இடும் சிறு வார்த்தைக்கும் பல்லாயிரக் கணக்கானோர் அடிபணிகின்றனர். ஆனால், எனது மூன்று மகள்களையும் நேரத்துக்குக் காலையுணவு சாப்பிடச் செய்ய என்னால் முடியாமலிருக்கிறது''

பிரிட்டிஷ் படைத்தளபதி Wawell

பிள்ளை வளர்ப்புப் பணி நெகிழ்வுத் தன்மை அற்றது

பிள்ளை பிறந்து விட்டால் பிள்ளை வளர்ப்பினை ஒத்திப் போடவோ, அதற்குரிய நேரத்தை மாற்றியமைக்கவோ, புறக்கணிக்கவோ முடியாது போய்விடும். பிள்ளைகள் தமக்கேயுரிய உயிரியல் கடிகாரங்களைக் கொண்டுள்ளனர். எனவே, பெற்றார் அவர்களது விருத்திப் போக்கினைப் புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளையின் விருத்தியைப் பெற்றோரினால் தாமதிக்கச் செய்யவும் முடியாது; துரிதப் படுத்தவும் முடியாது. அப்படியான முயற்சியில் அவர்கள் இறங்கினால் தீய விளைவுகளைத்தான் அனுபவிப் பார்கள். உலகம் அவசரமாக ஓடிக்கொண் டிருப்பினும் பிள்ளைகளுக்கு அப்படியான அவசரம் எதுவுமில்லை. எனவே, இயற்கை யின் வேகத்துக்கு எம்மை இசைவாக்கிக் கொள்வதே நல்லது. அதற்குப் பொறுமை தேவை.

பிள்ளை வளர்ப்பு என்பது காலம், முயற்சி, பணம் என்பவற்றின் நீண்டகால முதலீடு

பிள்ளை வளர்ப்பு என்பது மந்தகதியுடைய, அதேவேளை முழுமையான ஈடுபாட்டுக் குரிய செயன்முறையாகும். தங்கள் பிள்ளை நன்னெறிகளைக் கொண்டவனா அல்லது தீயவனா என்பதைப் பெற்றார் அறிந்து கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு காரணிகளுள் ஒரு காரணியாக மாத்திரமே பெற்றார் உள்ளனர்

தம் பிள்ளைகள் வளருகின்ற, தொடர்ந்து மாறி வரும் இவ்வுலகைப் பற்றிப் பெற்றார் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம். தொழிநுட்பத்தில் ஏற்பட்டுவருகின்ற விருத்திகள் டெலிவிஷன், இன்டர்நெட், செல்போன்கள், DVDக்கள், கம்பியூட்டர் விளையாட்டுக்கள், இண்டர்நெட் சம்பாஷனை வசதிகள் (online chat rooms) முதலியவற்றின் வடிவில் பாரிய சவால்களைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றன. அத்தோடு, சினிமா நட்சத்திரங்களையும் பொப் பாடகர்களையும் போற்றி வழிபடும் நிலைமை பல்கிப் பெருகியுள்ளது. பிள்ளைகளின் கவனத்தைக் கவர்ந்திழுக்கும் சாதனங்களும் கருவிகளும் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றன. தம் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றாருக்கு முழுச்சுதந்திரம் இல்லாமற் போனது மட்டுமன்றி இந்த விடயத்தில் அவர்கள் டெலிவிஷன் நடிகர்கள், இன்டர்நெட், பிள்ளைகளின் சகபாடிகள் போன்றோருடன் போட்டி போட வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

பிள்ளைகளின் மீது செயற்படும் சாதகமான மற்றும் பாதகமான செல்வாக்குகள் பல இருக்கின்றன. பிள்ளைகள் வளர்ந்து ஆளாகும் விதம் பற்றிய பாராட்டுக்களும் குற்றச்சாட்டுக்களும் பெற்றோருக்கே கிடைக்கின்ற போதிலும் பிள்ளை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துத் காரணிகளுள் ஒரு காரணியக மாத்திரமே அவர்கள் இருக்கின்றனர். நல்லெண்ணம் கொண்ட அர்ப்பணிப்பு மிக்க பெற்றோர்களால் கூட, இன்டர்நெட்டின் அசிங்கத் தன்மையைக் குறைக்கவோ வீதிக் காடையர்களின் வன்முறைகளைக் குறைக்கவோ பொதுத் தொடர்பு சாதனங்களின் ஆபாசத் தன்மையைக் குறைக்கவோ முடியாது.

பிள்ளைகளின் மீது செயல்படுகின்ற முதலாவது முக்கிய செல்வாக்காகப் பெற்றார் இருந்த போதிலும் பிள்ளைகள் வளர்ந்து கல்லூரி மட்டத்தை அடையும் வரை சகபாடிகளின் அல்லது ஒத்தவயதினரின் செல்வாக்கு அதிக முக்கியத்துவத்தைப் பெற்று விடுகிறது. இக்காலகட்டத்தில் பிள்ளைகள் தம் நண்பர்களின் விழுமியங்களையும் நடத்தைகளையும் பிரதிபலிப்பார்கள். பதின்ம வயதினர் பெரும்பாலும் தம் ஒத்தவயதுக் குழுக்களோடு பிணைப்புள்ளவர்களாக மாறித் தம் பெற்றோரிலிருந்து தூரமாகி விடக்கூடும். உடன் பிறந்தவர்கள் கூட சிலவேளைகளில் ஒருவர் மற்றவரின் விருத்தியின் மீது நிலையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் ஒருவருக்கொருவர் தம் வயதுக்கு ஏற்ற வகையில், சமூகக் கண்ணாடிகளாகவும் முன்மாதிரிகளாகவும் இருப்பார்கள். போட்டி மனப்பான்மை, பொறாமை போன்றவற்றுக்கும் அவர்கள் காரணமாக அமையலாம். புவியியல் ரீதியான அமைவிடம், குடும்பத்தின் பருமன், குடும்பத்தின் சமூக

அந்தஸ்து, சமயம், இனத்தொடர்புகள் போன்ற மாறக்கூடிய சூழற்காரணிகளும் பிள்ளைகளின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன.

குழந்தைகளுக்குப் பேச முடியாது

விலங்குகளுடன் தொடர்பாடுவது எவ்வளவு சிரமமானது என்பதைச் சற்றுக் கற்பனை பண்ணிப் பாருங்கள். குழந்தைகளுடனும் அப்படியே. அவர்களிடம் முழுமையான பேச்சாற்றல் இல்லை. எனவே, அவர்களது தேவைகளையும் உணர்வுகளையும் எண்ணங்களையும் அறிந்து கொள்வது சிரமம். நாம் அவற்றைச் சரியாக ஊகித்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு பிள்ளை என்பது உருவத்தில் சிறிய முழு மனிதனல்ல; அதே போன்று முதிர்ந்த மனிதனொருவன் உருவத்தில் பெரிய பிள்ளையுமல்ல. குழந்தைகளுக்கு நாம் நூல்களை வாசித்துக் காட்ட வேண்டும்; அத்தோடு நாம் அல் குர்ஆனையும் ஓதிக் காண்பிக்க வேண்டும். ஏனெனில், குழந்தைகள் பேசத் தொடங்கு முன்னரே சொற்களை நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாது

நான் 14 வயதுச் சிறுவனாக இருந்த போது எனது தந்தையார் கொஞ்சமும் அறிவில்லாத வராக இருந்தார். அந்த மனுஷன் என் அருகில் இருப்பதையே என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், எனக்கு 21 வயதான போது- அந்த 7 வருடங்களுக்குள் அவர் பெற்றிருந்த அறிவின் அளவைக் கண்டு நான் அதிர்ந்தே போனேன். Mark Twain

ஓஹோ! இப்போது எனக்குத் தெரியும்...!

பிள்ளைகள் தாம் 40ஆவது வயதை அடையும் வரைதான் தம் பெற்றோரை வெறுக்கின்றனர். ஏனெனில், அந்த வயதில் அவர்களும் அதேநிலைக்கு ஆளாகி விடுகின்றனர். இதனால் இந்த ஒழுங்கு முறை தொடர்ந்தும் பேணப்படுகிறது. அமெரிக்க எழுத்தாளர், Quentin Crewe

பிள்ளைகளின் கண்ணோட்டம் மாற்றமடைகிறது.

எனது பிள்ளை சிறு வயதினனாக இருக்கும் போது நான் எவ்வளவு அற்புதமானவள் என நினைத்தானோ அதில் பாதியளவு அற்புதமானவளாகவும், தற்போது பதின்ம வயதை அடைந்துள்ள அவன் என்னை எவ்வளவு முட்டாள் என நினைக்கிறானோ அதில் பாதியளவு முட்டாளாகவும் என்னால் இருக்க முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்.
Rebecca Richards

பிள்ளை வளர்ப்பு காலம் குறித்த கடமையாகும்

நாம் பல தவறுகளையும் குற்றங்களையும் செய்து கொண்டிருக்கிறோம். எனினும், எமது குற்றச் செயல்களுள் மிக மோசமானது பிள்ளைகளைக் கைவிடுவதாகும். அது வாழ்வின் ஊற்றுக் கண்ணையே புறக்கணிப்பது போன்றது. எமக்குத் தேவையான பல விடயங்கள் காத்திருக்க முடியும். எனினும், பிள்ளை அவ்வாறு காத்திருக்க முடியாது. அவனுடைய எலும்புகள் வளர்கின்ற, குருதி உருவாகின்ற, உள்ளம் விருத்தியடைகின்ற நேரம் இதுதான். அவனிடம் நாம் நாளை என்று கூற முடியாது. ஏனெனில், அவனே இன்றாக இருக்கின்றான்.
G. Mistral, நொபெல் பரிசு பெற்ற சிலி நாட்டவர்

பிள்ளை வளர்ப்பில் பல துறைகள் ஒன்றிணைகின்றன

பிள்ளை வளர்ப்புக்கு சிக்கலான திறன்களின் தொகுதியொன்று தேவைப்படுகிறது. அவற்றைப்பற்றிப் பெரும்பாலானவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. உளவியல், சமூக வியல், பொருளியல், மருத்துவம், கலை போன்ற பல்வேறு துறைகள் பிள்ளை வளர்ப்புடன் சம்பந்தப் பட்டிருக்கின்றன. பிள்ளை வளர்ப்பானது ஒரு கலை மாத்திரமல்ல; அது ஒரு விஞ்ஞானமும் கூட. எம்மைச் சூழவுள்ள உலகம் மாற்றமடைந்து மேலும் சிக்கலான சவால்களை எமக்கெதிரே வைக்கும் போது, சிறந்த பிள்ளை வளர்ப்புத்

திறன்கள் அவசிய மாகின்றன. ஒருவர் கலைத் துறையிலோ விஞ்ஞானத் துறையிலோ மிக உயர்ந்த பட்டங் களைப் பெற்றிருக்கின்றார் என்பதற்காக மகிழ்ச்சியும் திருப்தியும் நிரம்பிய குடும்ப மொன்று உருவாகிவிடும் எனக் கூறிவிட முடியாது. அத்தோடு, சிறந்த பிள்ளை வளர்ப்பின் அத்தியாவசிய அம்சமாக நல்ல தொடர்பாடல் விளங்குகிறது.

தந்தையும் தாயும் ஓர் அணியாகச் செயற்பட வேண்டும்

அணியாகச் செயற்படுவது இலகுவானதல்ல; இது பெற்றாரை எதிர்நோக்கும் பிரதான சவாலொன்றாகும். வாழ்க்கைத் துணைவர்கள் இருவரும் ஒன்றாகச் செயற்படுவதில் ஒத்திசையக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். நீங்கள் தெரிவு செய்யும் வாழ்க்கைத் துணை கணவனாக அல்லது மனைவியாக மட்டும் இருக்கப் போவதில்லை- எதிர்காலத் தந்தையாக அல்லது தாயாகவும் இருக்கப் போகின்றார். எம்மில் எத்தனை பேர் திருமணம் செய்ய முன்னர் இதைப்பற்றி எண்ணிப் பார்க்கின்றோம்? ஓர் அணியாகச் செயற்படுவ தற்கு அன்பும் பாதுகாப்பும் கிடைத்தால் மட்டும் போதாது. அதற்கு அறிவோடு திறன்களும் நல்ல மனப்பாங்குகளும் தேவைப்படுகின்றன. ஏதேனுமொன்று பிழைத்து விட்டால் அது தொடர்பாகப் பெற்றார் ஒருவரை மற்றவர் 'உன்னால் தான் அப்படி நடந்தது' என்றோ 'நீ சரியாகச் செய்யவில்லை' என்றோ குற்றஞ்சாட்டிக் கொள்வதில் அர்த்தமில்லை. பிள்ளை தொடர்ந்து மாற்றத்திற்கு ஆளாகக்கூடியது. எனவே, அதனைப் பிள்ளைப் பருவத்திலிருந்து முதிர்பருவம் வரை வெற்றிகரமாகத் தாண்டச் செய்வதற்குப் பெற்றாரிடையே பெருமளவு ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது.

பிள்ளை வளர்ப்புத் திறனுக்கு வளங்களின் சரியான முகாமை தேவை

ஒரு குடும்பத்தின் நிதி விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஒரு கணக்காளரை நியமிக்கலாம்; கல்வியைக் கவனிப்பதற்கு ஆசிரியர் ஒருவரைப் பணியில் அமர்த் தலாம். அதே போன்று சுகாதார விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஒரு தாதியை நியமிக்கலாம். எனினும், குடும்ப முகாமைப் பணியை இன்னொருவரிடம் ஒப்படைக்க முடியாது. குடும்பத்தை முகாமை செய்ய பெற்றோருக்கு முடியாமற் போனால் அதனை வேறெவராலும் செய்ய முடியாது. குடும்ப முகாமைக்காகப் பெற்றோர் அன்பு, பாசம், நேரம், கவனம் என்பவற்றை ஒதுக்கிக்கொடுக்க வேண்டும். பிள்ளை வளர்ப்பில் பெற்றோரினாலேயே செய்யப்பட வேண்டிய, பிரித்துக் கையாளப்பட முடியாத அம்ச மாக இது விளங்குகிறது.

சோவியத் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட மார்க்ஸீயப் பரிசோதனை பற்றி நாம் தேடிப் பார்த்தாலே போதும். அங்கு இயற்கைப் பெற்றோர் அல்லாத வேறு ஆட்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் பிள்ளை வளர்ப்புப் பணியை ஏற்றுக்கொண்டனர். முற்காலத்தில் கிரேக்கத்தில் வாழ்ந்த ஸ்பார்ட்டா வாசிகளும் இதே முயற்சியை மேற் கொண்டனர். ஆனால் பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் விளைவு படுதோல்வியாகவே அமைந்தது.

தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களில் நேரத்தையும் வளங்களையும் சிறப்பாக முகாமை செய்வது மேலும் முக்கியமானதாகி விடுகிறது. ஏனெனில், இரு பெற்றார் குடும்பத்தை விடத் தனிப் பெற்றார் நேரத்தையும் வளங்களையும் மிக நுணுக்கமாகக் கையாள வேண்டியுள்ளது.

தம் பெற்றோரைப் பற்றிப் பிள்ளைகள் கொண்டுள்ள புலக்காட்சி பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு முரணானதாக இருக்கலாம்

பெற்றோர் செய்யும் உதவியைப் பிள்ளைகள் தேவையற்ற தலையீடாகக் கருதலாம்; பெற்றார் காட்டும் கரிசனையையும் அன்பையும் கண்டு 'இவர்கள் எம்மைச் சிறு பிள்ளைகள் போல் கருதுகிறார்களே' என மனம் குமுறலாம். பெற்றார் அறிவுரை கூறும் போது தம்மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பதாக நினைக்கலாம். உண்மை நிலையைப் புரிந்து கொள்வது அவசியம்தான். எனினும், பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் தம் மனதில் ஏற்படும் புலக்காட்சிகளையே உண்மையெனக் கொள்கின்றனர். எனவேதான் பிள்ளைகளிடம் அவர்களது எண்ணங்கள், உணர்வுகள், உள்ளத்தின் எதிர்வினைகள் முதலியன பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வது முக்கியமாகின்றது. ''நான் உங்களுக்காகச் செய்ததை நீங்கள் விரும்பினீர்களா?'' என்று உங்கள் பிள்ளைகளிடம் கேளுங்கள்.

பிள்ளைகளுக்கு எதனை, எப்போது சொல்வது?

பின்வரும் கதை எந்த வயதினருக்குப் பொருத்தமானதாக இருக்கும்?

ஒரு சிங்கமும் ஓநாயும் நரியும் சேர்ந்து ஒரு பசுவையும் ஓர் ஆட்டையும் ஒரு முயலையும் வேட்டையாடின. ''இந்த இரைகளைப் பங்கு போடு'' எனச் சிங்கம் ஓநாய்க்கு ஆணையிட்டது. ''இந்தப் பசு உமக்கு; ஆடு எனக்கு; முயல் நரிக்கு'' என ஓநாய் கூறியது. உடனே சிங்கம் ஓநாயின் மீது பாய்ந்து அதனைக் கொன்றது. பின்னர் சிங்கம் நரியைப் பார்த்து ''இந்த இரைகளை நீ எப்படிப் பங்கு போடுவாய்?'' எனக் கேட்டது. உடனே நரி, ''முயல் உங்கள் காலை உணவுக்கு; ஆடு உங்கள் பகல் போசனத்திற்கு; பசு உங்கள் இராப் போசனத்திற்கு'' என்றது.

அதைக் கேட்ட சிங்கம், ''நீ இந்த அறிவை எங்கிருந்து பெற்றுக்கொண்டாய்?'' என நரியிடம் கேட்டது. அதற்கு ''அந்த ஓநாயின் சிதறிப் போன தலையிலிருந்து பெற்றுக்கொண்டேன்'' என நரி பதில் கொடுத்தது.

இவ்வாறான கதையொன்றைச் செவிமடுக்கும் பிள்ளைகள் அச்சம், கோழைத் தனம், நயவஞ்சகம் போன்ற இயல்புகளைத்தான் கற்றுக் கொள்வார்கள். எனினும், இதே கதையை வளர்ந்தவர்களுக்குக் கூறினால் எப்படி எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வார்கள். எனவே, பிள்ளைகளுக்குக் கதை சொல்லும் போதும் படிப்பினைகளைப் போதிக்கும் போதும் எப்போது அதனைச் செய்கிறோம் என்பது மிக முக்கியம்.

பிள்ளைகளுக்கு எதனை, எப்போது சொல்ல வேண்டும் என்பதை அறிந்திருத்தல்

கதைகளிலிருந்து பிள்ளைகள் பெறும் படிப்பினைகள், அதே கதைகளிலிருந்து வளர்ந்தவர்கள் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன. சிலவேளைகளில் தமக்கு வேண்டிய விளைவுகளை உருவாக்கித் தம் வாழ்க்கையை இலகுவானதாக்கும் நோக்கத்தோடு, பெற்றார் தம் பிள்ளைகளின் இயல்பான அப்பாவித் தனத்தையும் அறியாமையையும் தமக்கு அனுகூலமாக்கிக் கொள்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, பிள்ளைகள் உணவுண்ணும் போது மிச்சம் வைக்காமல் முழுவதையும் உண்ணச்செய்யும் நோக்கோடு தட்டிலுள்ள கடைசிக் கவளத்தில் தான் முழுச் சக்தியும் தங்கியிருக்கிறது எனப் பெற்றோர் கூறுவார்கள். தாம் கூறும் விடயம் உண்மையானதா என்பதைப் பற்றி அக்கறை கொள்ளாமல், பிள்ளைகள் உணவுண்பதில் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கச் செய்வதற்காக இவ்வாறு ஒப்பனை செய்து கூறுவது

பெற்றாரின் வழக்கமாக இருக்கிறது. இவ்வாறான எத்தனையோ எடுத்துக் காட்டுக்களை ஒவ்வொரு சமூகத்திலும் காண முடிகிறது.

பெற்றார் தம் பணியை இலகுவாக்கிக் கொள்ளவும் தம் பிள்ளைகளுக்கு ஒழுங்கு, சுத்தம், பொறுப்புணர்வு முதலியவற்றைக் கற்பிக்கவும் இப்படியான வழிமுறைகள் உதவுகின்றன. எனினும், பிள்ளைகள் புரிந்து கொள்ளக்கூடிய வயதை அடைந்ததும் தாம் முன்பு கூறிய இத்தகைய விடயங்கள் கற்பிதமானவையே என்பதை விளக்கிவிடுவது பெற்றோரின் கடமையாகும். இது அவர்களது உள்ளத்தில் மூட நம்பிக்கைகள் வளராமல் தடுப்பதற்கு உதவும்.

கவனக் குறைவினால் பிள்ளைகளில் தவறான எண்ணக்கருக்களைப் பதிவு செய்தல்

நல்லெண்ணம் கொண்ட பெற்றார் சிலர் விவரித்த பின்வரும் நிகழ்வுகளைக் கவனியுங்கள்.

நிகழ்வு 1: பாலர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ஸலீம் கழிவறைக்குச் செல்ல மறுத்த போது அதற்கான காரணத்தை ஆசிரியர் விசாரித்தார். அதற்கு ஸலீம், ''கழிவறைகளில் ஜின்களும் செய்த்தான்களும் இருப்பதாக எனது பெற்றார் கூறியுள்ளனர். அவற்றோடு தனியாக இருக்க எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றான்.

நிகழ்வு2: இளம் சிறுவனான ஹாமித் மனம் குழம்பிப் போயிருந்தான். வானவர்கள் கழிவறைகளுக்குள் நுழைய மாட்டார்கள் என அவனுக்குக் கூறப்பட்டிருந்தது. அதேவேளை, இரு வானவர்கள் எப்போதும் அவனது தோள்களுக்கு மேலால் அவனைப் பார்த்துக் கொண்டு அவனது செயல்களைப் பதிவு செய்வதற்குக் காத்திருப்பதாகவும் அவனிடம் கூறப்பட்டிருந்தது. அப்படியானால், அந்த இரு வானவர்களும் அவனோடு கழிவறைக்குள் வருவார்களா? என்பது அவனுக்கு விளங்காப் புதிராக இருந்தது.

சில விலங்குகளைப் பற்றித் தவறான விளக்கங்களை பெற்றார் சிலர் தம் பிள்ளைகளுக்கு வழங்குகின்றனர். இதனால் அவ்விலங்குகளை வெறுக்கவும் அவற்றை நோவிக்கவும் பிள்ளைகள் முற்படுகின்றனர். எல்லா விலங்குகளும் அல்லாஹ்வின் அழகான படைப்புக்களே என்பதையும் அவை ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு நோக்கத்துக்காகவே படைக்கப்பட்டுள்ளன என்பதையும் விலங்குகள் மற்றும் தாவரங்கள் மீது நாம் இரக்கம் காட்ட வேண்டும் என்பதையும் விளங்கப்படுத்தப் பெற்றார் தவறிவிடுகின்றனர்.

இன்னும் சில மிகை ஆர்வம் கொண்ட, நல்லெண்ணமுடைய பெற்றார்கள் தவறு செய்பவர்களை வெறுக்க வேண்டும் என்ற தவறான செய்தியைத் தம் பிள்ளைகளுக்கு வழங்குகின்றார்கள். இதனால் தவறுகளை வெறுப்பதோடு, தவறு செய்பவர்களையும் வெறுக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. உதாரணமாக, புகைத்தலை வெறுப்பதோடு புகை பிடிப்பவர்களையும் வெறுக்கத் தொடங்குகின்றார்கள். இதன் விளைவாக அத்தகையோர் மீது அன்பு செலுத்தி அவர்களைத் திருத்த முயற்சிப்பதற்குப் பதிலாக அவர்களையே

வெறுக்கும் நிலை ஏற்படுகிறது. அத்தோடு, பிள்ளைகளின் மனதில் தாமே சிறந்தவர்கள் என்ற எண்ணமும் அகம்பாவமும் உருவாகிறது.

சாதகமான சுயரூபமொன்றை உருவாக்குவதில் எதிர்கொள்ள நேரிடும் சவால்கள்

நவீன பாணிகளை எடுத்துக்காட்டும் சஞ்சிகைகளாலும் நடிக நடிகையர்கள், பொப் பாடகர்கள் முதலியோராலும் ஊக்குவிக்கப்படுகின்ற, உடலைக் கவர்ச்சியாகப் பேணுதல் பற்றிய மாயையினால் பிள்ளைகள் (குறிப்பாக பதின்ம வயது யுவதிகள்) கவரப்படுகின்றனர். இதன் விளைவாக, இவர்கள் உணவுட்கொள்ளல் தொடர்பான கோளாறுகளுக்கு ஆளாவதோடு உடல், உடை மற்றும் சிகை அலங்காரங்களில் மிதமிஞ்சிய ஆர்வத்தைக் காட்டுகின்றனர். உடற் தோற்றத்தைப் பற்றிய தேவைக்கதிகமான இந்தக் கரிசனை வர்த்தகப் போக்குள்ள ஊடகங்களால் ஊக்குவிக்கப்படுகின்றன. ஒல்லியாக இருப்பதே அழகு என்ற செய்தியை இவை வழங்குகின்றன.

குற்றமறியாப் பிள்ளைப் பருவத்திலிருந்து, வளர்ந்தவர்களைப் போல் பாவனை செய்ய விரும்பும் நிலைமைக்கு மாற்றமடைதல் இள வயதிலேயே இடம்பெறுகிறது. இம்மாற்றத்தோடு சேர்ந்து பாதுகாப்பற்ற மனநிலை ஏற்படுவதோடு, எதிர்பார்த்த பூரணத் தன்மையை அடைய முடியாமலும் போகிறது. தமது பிள்ளைகள் தம் பிள்ளைப் பருவத்தை அனுபவித்து மகிழ வேண்டும் என நினைக்கும் பெற்றோரின் மனதில் இதனால் பல ஆதங்கங்கள் உருவாகின்றன. எனவேதான், உறுதியான ஒழுக்க விழுமியங்களையும் தன்னம்பிக்கையையும் நன்னடத்தைகளையும் பிள்ளைகளில் பதியச் செய்வது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. நுகர்வுக்கு முதலிடம் கொடுக்கும் தற்காலப் போக்கு காரணமாக, பிள்ளைகளில் ஏற்படக்கூடிய ஒழுக்கக் கேடுகளையும் வயதுக்கு முந்திய பாலுணர்வுப் போக்குகளையும் பற்றிப் பெற்றார் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும்.

சமூகத் தொடர்புகள், தொடர்பாடல், குடும்பப் பிணைப்புகள் என்பவற்றினூடாகவே பிள்ளைகள் உண்மையான மன நிறைவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாறாக, ஊடகங்களினால் முன்வைக்கப்படுகின்ற பணம், அதிகாரம், புகழ் போன்ற போலியான அம்சங்களினூடாக மன நிறைவு பெற அவர்கள் எதிர்பார்க்கக்கூடாது.

பிள்ளை வளர்ப்பு பற்றி மூஸா (அலை) கூறும் படிப்பினைகள்

இஸ்ரவேலர்களே கேளுங்கள். எங்கள் நாயனான இறைவன் ஒருவனே (Deuteronomy 6:4)

படிப்பினை 1: எந்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு தீர்மானிப்பதற்குப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு எப்படிக் கற்றுக் கொடுக்கலாம்? நீங்கள் அறிந்திருப்பவை முக்கியமல்ல; அறியாதிருப்பவையே முக்கியம். எல்லாவற்றுக்கும் இறுதியானவனான இறைவனை நாம் மறந்து விட்டால் இப்போது கைவசமுள்ளவற்றுக்கு நாம் அடிமைகளாகி விடுவோம்.

உங்கள் நாயனான இறைவனை உங்கள் முழு இதயத்தையும் உங்கள் முழு ஆத்மாவையும் உங்கள் முழுப் பலத்தையும் கொண்டு அன்பு செலுத்துவீர்களாக! (Deuteronomy 6:5)

படிப்பினை 2: விதிகளை விட உறவும் தொடர்புமே முக்கியம். விதிகளில் முக்கியமானவையும் பொருத்தமானவையும் எளியவையும் நடத்தையில் மாற்றம்

ஏற்படுத்தக் கூடியவையும் கோடிட்டுக் காட்டப்பட வேண்டும். விதிகள் மோசமானவை யல்ல. எனினும், அவை நடத்தையை வெளியிலிருந்து உள்நோக்கி மாற்ற முயல்கின்றன. ஆனால், நடத்தை மாற்றம் உள்ளிருந்து வெளிநோக்கி ஏற்பட வேண்டும். அன்பு என்பது ஒருவனின் இதயத்தையும் உளம்சார்ந்த நோக்கங்களையும் மாற்றியமைத்துவிடும்.

நான் இன்று உங்களுக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உங்கள் இதயங்களில் இருக்கட்டும்.
(Deuteronomy 6:6)

படிப்பினை 3: இறை வேதத்தைத் தன்வயமாக்கி கொள்ளுங்கள். இறை வசனங்களை முதலில் பெற்றோர் தன்வயமாக்கிக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னரே தம் பிள்ளைகளுக்கு அவற்றை ஊட்ட வேண்டும். அவ்வார்த்தைகள் பெற்றோரின் ஓர் அங்கமாக மாற வேண்டும். அதன் பிறகுதான் அவை பிள்ளைகளின் அங்கமாக மாறும். தம்மிடம் இல்லாத ஒன்றைப் பெற்றோர் வழங்க முடியாது. எனவே, அவர்கள் போதிப்பதைத் தாமும் நடைமுறைப்படுத்த வேண்டும். அது வீட்டில் செல்லுபடியாகா விட்டால் அவர்கள் அதனைப் பிறருக்குக் கூற முயற்சிக்கக் கூடாது.

நீங்கள் அவற்றை உங்கள் பிள்ளைகளுக்கு ஊக்கத்துடன் கற்றுக் கொடுப்பீர்களாக!
(Deuteronomy 6:7)

படிப்பினை 4: நேரத்தின் அளவு முக்கியமல்ல; மாறாக, தரமிக்க நேரத்தின் அளவுதான் முக்கியம். கற்பிப்பதற்குப் பொருத்தமான வாய்ப்புக்களைப் பெற்றார் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும். இயல்பாக அவை கிடைக்காவிட்டால் அவற்றைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டும். பிள்ளைகளுக்குப் பெற்றோர் வழங்கக்கூடியவற்றுள் மிக முக்கியமானது நேரமே. எனினும், அதைத் தவிர மற்றெல்லாவற்றையும் அவர்கள் வழங்குகின்றனர். எமது சமூகம் தொழில் முகப்பட்டதாகவே இருக்கின்றது. குடும்பம் பற்றிய அக்கறை குறைவாகவே காணப்படுகிறது.

நீங்கள் வீட்டிலிருக்கும் போதும் நடக்கும் போதும் சாய்ந்திருக்கும் போதும் விழித்தெழும் போதும் அவற்றைப் பற்றியே பேசுவீர்களாக! (Deuteronomy 6:7)

படிப்பினை 5: நினைவிலிருத்தி வைக்கத் தகுந்தவை அனைத்தும் மீட்டுவதற்கும் தகுந்தனவே. பெறுமானங்கள் பற்றிப் பெற்றார் பேசுவதும் அழுத்தம் கொடுப்பதும் மீட்டுவதும் தெளிவாகக் கூறுவதும் அவசியம். இந்த விடயத்தில் சாராம்சத்தைச் சுருக்கி எளிமையாகக் கூறுவதே நல்லது. பெற்றார் போதிக்க முயலும் பெறுமானங்களைத் தம்முள்ளே கொண்டுள்ள உறவினர்கள், தலைவர்கள், ஆசிரியர்கள், மதபோதகர்கள், இமாம்கள், விருந்தினர்கள் முதலியோரைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து வைப்பது நல்லது.

முடிவுரை

எவ்வளவுதான் சவால்கள் ஏற்பட்டாலும் பிள்ளை வளர்ப்பானது மகிழ்ச்சி தரக்கூடியது; செய்யப்படக்கூடியது; அத்தோடு, இரு பெற்றாருக்கும் வெகுமதிகளைத் தரக்கூடியது. கெட்ட சகாக்களின் செல்வாக்கு, ஊடகங்களில் காணப்படும் பாலுறவு பற்றிய விடயங்கள், தவறான தொடர்பாடல்கள், தவறான முகாமை எனச் சவால்கள் பலதரப் பட்டவை. தவறான கருத்துப் படிவங்களும் இடர்ப்பாடுகளும் தவறான நம்பிக்கை களும்கூட, நிறைய உள்ளன. இவை பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

தொழிற்பாடு

தொழிற்பாடு 26: முக்கியமான கருத்துப் படிவங்களை எடுத்துக் கூறுதல்

பின்வருவனவற்றை உங்கள் பிள்ளைகளுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுக் களுடன் விளக்குங்கள்:

எது முக்கியமானது என்பதை நீங்கள் அறியாதிருப்பின், நீங்கள் அறிந்து வைத்திருக்கும் எதுவும் முக்கியமானதாக இருக்காது.

பிள்ளைகளுடன் பெற்றார் செலவு செய்யும் நேரத்தின் அளவு முக்கியமல்ல; அந்த நேரத்தின் தரமே முக்கியம்.

உங்கள் இறைவன் மீதுள்ள அன்பினால் உங்கள் இதயத்தை நிரப்பிக் கொண்டால், உங்களால் மற்றவர்கள் மீதும் அன்பு செலுத்த முடியும். உங்களிடம் இல்லாத ஒன்றை மற்றவர்களுக்கு வழங்க முடியாது.

பெற்றோருக்கு: நீங்கள் போதிப்பதை நீங்களே நடைமுறைப்படுத்துங்கள். ஒரு சித்திரம் 1000 சொற்களை விடப் பெறுமதியானது; ஒரு நடைமுறை உதாரணம் ஒரு சித்திரத்தை விட 1000 மடங்கு சிறந்தது.

அத்தியாயம் 6

தவிர்க்கப்பட வேண்டிய மனப்பாங்குகள்

- அறிமுகம் 140
- பொதுவாகக் காணப்படும் தவறான கருத்துக்களையும் இடறுகுழிகளையும் இனங்கண்டுகொள்ளல் 140
  - பரம்பரையாக வந்த முறைமைகளைக் குருட்டுத் தனமாகப் பயன்படுத்தல் 140
  - மற்றவர்களைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றுதல் 140
  - நிறைவேறாத தமது ஆசைகளைத் தம் பிள்ளைகளைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ள முயலுதல் 141
  - பிள்ளை வளர்ப்பை இன்னொருவருக்குப் பொறுப்புச் சாட்டுதல் 141
  - பிள்ளைகளுடன் தர்க்க ரீதியாக நடந்துகொண்டால் போதும் என நினைத்தல் 142
  - தனது பிள்ளைகளுடனான போராட்டத்தில் தான் வெல்லலாம் எனக் கருதுதல் 142
  - தாம் பெரியவர்கள், ஆதிக்கமுள்ளவர்கள் என்ற உண்மையில் மாத்திரம் பெற்றார் தங்கியிருத்தல் 142
  - தமது எல்லாப் பிள்ளைகளையும் ஒரே விதத்தில் கையாளலாம் எனப் பெற்றார் கருதுதல் 143
  - பிள்ளையை 'உருவத்தில் சிறிய முதிர்ந்தவர்' போல் நடத்துதல் 143
  - பிள்ளைகள் கேட்கும் அனைத்தையும் வாங்கிக் கொடுத்தல் 144
- பிள்ளை வளர்ப்பு பற்றிய சில குருட்டு நம்பிக்கைகளை இனங்கண்டு கொள்ளல் 144
- தொழிற்பாடுகள் *27- 28* 148

அறிமுகம்

பிள்ளையொன்றை நல்ல முறையில் வளர்த்தெடுப்பது பெற்றோரின் உள்ளத்தில் அமைதியையும் வீட்டு வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் தருவதோடு மாத்திரம் நின்று விடாமல் இன்னும் பல நல்ல விளைவுகளையும் ஏற்படுத்துகிறது எனச் சென்ற அத்தியாயத் தில் நாம் வலியுறுத்தினோம். சமூகத்தினதும் நாகரீகத்தினதும் பிரதான ஆக்கக்கூறாக அது விளங்குகிறது என்பதையும் எடுத்துக் காட்டினோம். அத்தோடு, இலக்குகளின் முக்கியத் துவம் பற்றியும் பிள்ளை வளர்ப்பின் போது பெற்றார் விழிப்புடன் நோக்க வேண்டிய பிரதான சவால்கள் பற்றியும் நாம் கோடிட்டுக் காட்டினோம். இந்த அத்தியாயத்தில், சிறந்த பிள்ளை வளர்ப்புக்குரிய நல்லாலோசனைகள் என்ற வேடத்தில் பொதுவாக நிலவுகின்ற தவறான கருத்துக்களை எடுத்துக் காட்டுவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அத்தோடு, பெற்றார் தவறி விழக்கூடிய இடறுகுழிகள் பற்றியும் அவற்றைத் தவிர்த்துக் கொள்வது எப்படி என்பது பற்றியும் சுட்டிக் காட்டியுள்ளோம். மேலும், இவ்விடயம் பற்றிப் பரவலாக நிலவும் தவறான நம்பிக்கைகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக் கிறோம். இந்த இடறுகுழிகள், குருட்டு நம்பிக்கைகள் என்பன பற்றி நாம் ஆராய்வதற்கு இன்னொரு நோக்கம், பிள்ளை வளர்ப்பின் போது ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள் தொடர்பாகப் பெற்றோருக்கு வழிகாட்டுவதே. அப்படிச் செய்யாவிடில் பிள்ளை வளர்ப்புக்கான ஒரு செயற்திட்டம் அச்செயன்முறையை இலகுபடுத்திய போதிலும் பூரண மானதாக அமையாது.

பொதுவாகக் காணப்படும் தவறான கருத்துக்களையும் இடறுகுழிகளையும் இனங்கண்டுகொள்ளல்

பரம்பரையாக வந்த முறைமைகளைக் குருட்டுத்தனமாகப் பயன்படுத்தல்

எம்மில் பெரும்பாலானோர் சில பழக்க வழக்கங்களை எமது பெற்றோரிடமிருந்தே கற்றுக் கொள்கிறோம். இப்பழக்க வழக்கங்கள் எப்போதும் பயனுடையவையாக இருப் பதில்லை. சில வேளைகளில் அவை காலம் கடந்தவையாகவோ தீங்கானவையாகவோ இருக்கக்கூடும். சில பெற்றார் தமது பணிவு, நன்றியுணர்வு என்பவற்றின் காரணமாகத் தமது பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு முறையே மிகச் சிறந்தது என அடித்துக் கூறுகின் றனர். எமது நலனை நாடும் எமது பெற்றோர்களிடமிருந்து அளவிலா அன்பையும் பராமரிப்பையும் அனைவரும் அனுபவித்திருக்கிறோம். எனினும், ஆக்கபூர்வமான பிள்ளை வளர்ப்புக்குத் தேவையான வழிமுறைகள், அறிவு, திறன்கள் முதலியவற்றை அவர்கள் அனைவரும் பெற்றிருந்தார்கள் எனக் கூறிவிட முடியாது.

மற்றவர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுதல்

கண்மூடித்தனமாகப் பிரதிபண்ணுவது பிழையான பிள்ளை வளர்ப்பு முறையாகும். ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு பிள்ளையும் விசேடமானது. ஒரு பிள்ளைக்கு நல்லதாக இருப்பது இன்னொரு பிள்ளைக்கு நல்லதாக அமையும் எனக்கூற முடியாது. தமது பிள்ளைகளைக் கையாள்வதற்குச் சிறந்த வழி எது என்பது பற்றிப் பெற்றோர்கள் அறிந்து கொள்ள முயல வேண்டும். அடுத்த பெற்றோர்களிடம் ஆலோசனை கேட்கும்போது நடைமுறையிலுள்ள வித்தியாசமான பிள்ளை வளர்ப்பு முறைகளைப் பற்றி விழிப்புணர் வோடு இருக்க வேண்டும். இன்னொருவர் கூறும் ஆலோசனையின் பொருத்தப்பாடு உங்கள் பிள்ளைகளின் தனிப்பட்ட இயல்புகளுக்கேற்ப வேறுபடக்கூடும். சில பெற்றோர் தாராளத்தன்மையும் ஜனநாயகப் போக்கும் கொண்டவர்களாக இருக்கலாம். இன்னுஞ் சிலர் கண்டிப்பும் சர்வாதிகாரப் போக்கும் உடையவர்களாக இருக்கலாம்.

ஒவ்வொரு படியிலும் ஓர் ஆச்சரியம்

பிள்ளைவளர்ப்பு என்பது நம்பிக்கையிழந்த நிலையில் தருணத்திற்கேற்றவாறு செயற்படுவதே என்பதைப் புதிய தந்தையர் விரைவில் அறிந்து கொள்வர்.(நடிகர் Bill Cosby)

பிள்ளை வளர்ப்பு என்பது எவ்வாறு செய்வதென நீங்கள் கற்றுக்கொண்ட விடயமொன்றல்ல. பிள்ளைகள் பிறந்த பின்னர் நீங்கள் தானாகச் செய்தவற்றின் தொகுப்பே அது.
(Elkind, 1995)

நிறைவேறாத தமது ஆசைகளைத் தம் பிள்ளைகளைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ள முயலுதல்

பெற்றோரின் பிழையான நடத்தைக்குரிய பொதுக்காரணியொன்றாக இது விளங்குகிறது. சில பெற்றார் தம்மால் அடைய முடியாமல் போன இலக்குகளைத் தம் பிள்ளைகளைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ள முயல்கின்றனர். இதனால் அவர்கள் தம் பிள்ளைகளைப் பலவந்தப்படுத்தி நெருக்குகின்றனர். உதாரணமாக, தான் ஒரு வைத்தியராகவோ இன்ஜினியராகவோ வரவேண்டுமெனக் கனவு கண்டு, அதில் தோல்வியுற்ற பெற்றார் தம் பிள்ளை மருத்துவத் துறையில் அல்லது இன்ஜினியரிங் துறையில் கற்க வேண்டுமென வற்புறுத்துகின்றனர். ஆனால், அப்பிள்ளைக்கு அத்துறைகளில் ஆர்வமே இல்லாமல் இருக்கலாம். பிள்ளைகள் என்போர் வெறுமனே பெற்றோரின் நீட்சிகளல்லர். அவர்களிடம் அவர்களுக்கேயுரிய சுயாதீனமான விருப்பங்களும் இலட்சியங்களும் இருக்கின்றன.

தம் பிள்ளைகளைத் தம்முடைய நீட்சிகளாகக் காணும் போக்கு பெற்றோரிடம் காணப்படுகிறது. தம்மிடமுள்ள குறைபாடுகளைத் தமது பிள்ளைகளினூடாகத் திருத்திக் கொள்வதற்கு அவர்கள் முயல் கின்றனர். அத்தோடு, தமது பெற்றாருக்குத் தாம் செய்த தவறுகளைத் தம் பிள்ளைகளைக் கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளவும் முனைகின்றனர். ஓட்டப் போட்டிகளில் திறமை காட்ட முடியாமற் போன பெற்றார், தம் பிள்ளைகள் ஓட்டச் சம்பியன்களாக வரவேண்டுமென ஆசைப்படுகின்றனர். அதேபோன்று, கணிதத்துறையில் திறமை காட்டாத பெற்றார் தம் பிள்ளைகள் ஐன்ஸ்டீனைப் போல் வரவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அரசியல் வாதியாக வரவேண்டும் என்ற தம் ஆசை நிறைவேறாதவர்கள், தம் பிள்ளைகள் ஒவ்வோர் அரசியல் போட்டியிலும் வெற்றிபெற வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். பெற்றார் என்ற நிலைமை இரண்டாவது பிள்ளைப் பருவமல்ல. அதேபோன்று, பிள்ளைகள் தம் பெற்றாரின் நுண் வடிவங்களுமல்லர். ஆரம்பத்திலிருந்தே பிள்ளைகள் அவர்களுக்காகவே மதிக்கப்பட வேண்டியவர்கள்; அவர்கள் என்னவாக ஆகப்போகிறார்கள் என்பது இங்கு முக்கியமல்ல.

பிள்ளை வளர்ப்பை இன்னொருவருக்குப் பொறுப்புச் சாட்டுதல்

தாயோ அல்லது தந்தையோ தனியாகப் பிள்ளை வளர்ப்பைச் செய்யலாம் எனச் சிலர் நினைக்கின்றனர். உண்மையில் வலது கையை இடது கையோ அல்லது இடது கையை வலது கையோ பிரதியீடு செய்ய முடியாதது போல தாயைத் தந்தை பிரதியீடு செய்யவும் முடியாது; தந்தையைத் தாய் பிரதியீடு செய்யவும் முடியாது . ஒவ்வொரு பெற்றாரும் செய்ய வேண்டிய தனித்தன்மை வாய்ந்த முக்கிய பங்களிப்பு உண்டு. பெற்றாரின் பொறுப்புக்களை மூத்த பெற்றார்களோ ஏனைய உறவினர்களோ குழந்தை பராமரிக்கும்

பணியாளர்களோ நிறைவேற்ற முடியாது. இவர்கள் அனைவரும் பெற்றோருக்கான தகுந்த பிரதியீடுகளாக அமைய மாட்டார்கள்.

பிள்ளைகளுடன் தர்க்கரீதியாக நடந்துகொண்டால் போதும் என நினைத்தல்

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவுகள் பகுத்தறிவு ரீதியான சிந்தனைகளின் அடிப்படையில் மாத்திரம் அமைவதில்லை. ஏனெனில், பழக்க வழக்கங்களும் மனவெழுச்சிகளும் இங்கே தலையீடு செய்கின்றன. 'இதைச் சாப்பிடுங்கள்; இது உங்களுக்கு நல்லது; நீங்கள் ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் இருப்பதற்குத் தேவையான விட்டமின்களையும் கனிப்பொருட்களையும் இது வழங்குகிறது' எனக்கூறுவதன் மூலம் பழங்களைப் பிள்ளைகள் உண்ணச்செய்ய முடியாது. இவ்வாறு தர்க்கரீதியாகக் காரணம் கூறுவது அவசியமாயினும் அது போதுமானதல்ல.

தனது பிள்ளைகளுடனான போராட்டத்தில் தான் வெல்லலாம் எனக் கருதுதல்

அங்குமிங்கமாகச் சில போராட்டங்களில் பெற்றார் வெற்றி பெற்றாலும் இறுதியில் பிள்ளைகள் பழிவாங்கும் நோக்கத்தோடும் வெறுப்போடும் பெற்றார் மீது பதில் தாக்குதல் நடத்துவார்கள். தம் மகள் பத்து வயதுச் சிறுமியாக இருக்கும் போது அவளது கட்டுக்கடங்காத ஆசைகளைப் பெற்றார் பலவந்தமாக அடக்கிவிட முடியும். எனினும், அவள் பதினாறு வயதைத் தாண்டிய பின்னர் திருட்டுத்தனமாக வீட்டைவிட்டு ஓடித் தன் பெற்றார் தனக்கெதிராக ஆரம்பித்த போராட்டத்தில் வெற்றி பெற நினைப்பாள். அவர்களுடைய மகன் பிறருடைய மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று பெரிய விபத்தொன்றை ஏற்படுத்தலாம். இவ்வாறான நிலைமைகளில் ஒரேயொரு மாற்று வழியே பெற்றாருக்கு உண்டு. தம் பிள்ளைகளைத் தம் பக்கத்திற்கு வென்றெடுப் பதே அது. இதனைச் சாதிப்பது எப்படி? செவிமடுத்தல், கலந்துரையாடல், அன்பு செலுத் துதல், காரணம் கூறி விளக்குதல், புரிந்துகொள்ள முயற்சித்தல் என்பவற்றினூடாகவே இதனைச் சாதிக்கலாம். பொறுமையும் செயற்திறன் மிக்க தொடர்பாடலும் தேவைப்படு கின்ற இப்பணியானது மிக நுணுக்கமானது.

தாம் பெரியவர்கள், ஆதிக்கமுள்ளவர்கள் என்ற உண்மையில் மாத்திரம் பெற்றார் தங்கியிருத்தல்

தாமும் இறுதியில் வலிமையானவர்களாக வருவோம் என்பது பிள்ளைகளுக்குத் தெரியும். பிள்ளைகளைப் பயமுறுத்தி அடக்கவும் தம்மைப் பற்றிய பயத்தை அவர்களின் மனதில் ஏற்படுத்தவும் பெற்றார் தம் வலிமையைப் பயன்படுத்தினால் பிள்ளைகள் வளர்ந்த பின்னர் அவர்களும் அதே யுக்தியைப் பயன்படுத்துவார்கள். தாமும் பிள்ளைகளும் ஒரே தரப்பினரே என்பதைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு உணர்த்தினால் அவர்களும் ஏனையவர்களோடு ஆரோக்கியமான உறவுகளைப் பேணிக் கொள்வார்கள். பெற்றாரின் வலிமை தமது வலிமைக்கு மேலும் வலுவூட்டுகிறது என்பதையும் பிள்ளைகள் உணர்ந்து கொள்வர். வற்புறுத்தி இணங்க வைப்பதற்குப் பதிலாக அன்பாகக் கூறி இணங்க வைப்பது அதைவிடச் சிறந்த பெறுபேறுகளைத் தரும் என்பதை வற்புறுத்தலைக் கையாளும் பெற்றோர் உணர்ந்து கொள்வதில்லை. அன்பும் வற்புறுத்தலும் ஒரே மாதிரியான விளைவைத் தருமாயின் வற்புறுத்தலை ஏன் நாட வேண்டும்?

உங்கள் பிள்ளைகளை வெறுமனே மகன்களாகவும் மகள்களாகவும் நடத்துங்கள்

"நீங்கள் ஹீரோக்களை வளர்ப்பதில்லை; மகன்களைத் தான் வளர்க்கின்றீர்கள். நீங்கள் அவர்களை மகன்களாக நடத்தினால் - குறைந்தது உங்கள் பார்வைக்கேனும் - அவர்கள் ஹீரோக்களாக மாறிவிடக்கூடும்" (Schirra 2001)

தமது எல்லாப் பிள்ளைகளையும் ஒரே விதத்தில் கையாளலாம் எனப் பெற்றார் கருதுதல்

தமது எல்லாப் பிள்ளைகளும் ஒரே விதமானவர்கள் எனப் பெற்றார் நினைக்கக்கூடும். ஆனால், உண்மை அதுவல்ல. ஒரு குடும்பத்திலுள்ள பிள்ளைகள் ஒரு பூக்கொத்திலுள்ள மலர்களைப் போன்றவர்கள். அப்பூக்கொத்தை ஒழுங்கு செய்பவன் விரும்பும் திசைக்கு முரணாகத் தன்னைத் திருப்பிக் கொள்ளும் மலரொன்று அதில் இருக்கத்தான் செய்யும். சகிப்புத் திறன், கற்றுக் கொள்வதற்குரிய ஆற்றல், சமூகம் சார்ந்த நிலைமைகளில் காட்டப் படும் தன்னம்பிக்கையின் அளவு, பொழுது போக்குகள் முதலியவற்றில் பிள்ளைகளுக் கிடையே வேறுபாடு காணப்படுகிறது. தமது ஒவ்வொரு பிள்ளையினதும் தனித்தன்மை பற்றி - அவர்கள் எவ்வாறு ஏனையவர்களிலிருந்து வேறுபடுகிறார்கள் என்பது பற்றி - பெற் றோர் விரைவில் அறிந்து கொள்வர். உடன் பிறந்தவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பது வியப்புக்குரியதாகும். இவற்றுள் சில வேறுபாடுகளுக்கு பால் வித்தியாசம் காரணமாக இருக்கலாம்.

பிள்ளையை 'உருவத்தில் சிறிய முதிர்ந்தவர்' போல் நடத்துதல்

ஒரு பிள்ளை சிறிய முதிர்ந்தவர் போன்று நடத்தப்பட வேண்டும் எனப் பெற்றோர் தவறாக நினைக்கின்றனர். பழங்காலத்தில் கிரேக்கர்களும் ரோமர்களும் நம்பியது போன்று ஒரு பிள்ளை சிறிய மனிதன் அல்ல என்று அல் ஜரஜ்ரா என்பவர் விளக்கம் தரு கின்றார். பிள்ளைப் பருவமானது எமது வாழ்க்கையின் ஒரு முக்கிய கட்டம் என அவர் வலியுறுத்துகின்றார். 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிள்ளைகளின் அறிவுசார் விருத்தி பற்றி பியாஜே (Jean Piaget) விளக்கம் தரும்வரை மனித சமுதாயம் பிள்ளை உலகின் புதிர்களைத் தவறாகவே புரிந்து கொண்டிருந்தது. அதற்கு முந்திய காலத்தில் பிள்ளை என்பது முதிர்ந்த ஒருவரின் சிறிய வடிவமே என்ற கிரேக்க - ரோமர்களின் நம்பிக்கையே பின்பற்றப்பட்டது. இதனால் வளர்ந்தவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட கோட்பாடுகளே பிள்ளைகள் மீதும் பிரயோகிக்கப்பட்டன. ஆனால், வளர்ந்தவர்களும் பிள்ளைகளும் ஒருபோதும் சமனாக மாட்டார்கள்.

உண்மையில் பிள்ளையின் உளவியல் பற்றிப் பெற்றார் அறிந்திருப்பது அவசியம். எனினும், இது இலகுவானதல்ல. குழந்தைகளின் உயிரியல் தேவைகளை ஒருவர் இலகுவாக அறிந்து கொள்ளலாம். (உதாரணமாக, குழந்தைக்குப் பசியாக இருப்பின் நீங்கள் உணவூட் டலாம்; அதற்குக் களைப்பாக இருப்பின் ஓய்வு கொடுக்கலாம்; அதன் உடை அழுக்காகி விட்டால் அதனை மாற்றலாம்) ஆனால் பிள்ளையின் உளவியல் தேவைகளைப் புரிந்து கொள்வது சிரமமானது. வளர்ந்தவர்களால் தம்மைப் பற்றிய வளர்ந்தோர் உளவியலையே புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும் போது, அவர்கள் எப்படிப் பிள்ளைகள் பற்றிய உளவியலைப் புரிந்து கொள்ளப் போகிறார்கள்!

பிள்ளைகள் தம் பெற்றோரைப் பயிற்றுவிக்கின்றனர்

திருமணத்தின் பெறுமதி வளர்ந்தவர்கள் பிள்ளைகளை உருவாக்குவதல்ல; மாறாக, பிள்ளைகள் வளர்ந்தவர்களை உருவாக்குவதே (Peter De Vries in Coloroso, 2002)

பிள்ளைகள் கேட்கும் அனைத்தையும் வாங்கிக்கொடுத்தல்

தமது பிள்ளைகள் வேண்டுகின்ற பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுப்பதற்குப் பெற்றார் முயற்சிக்கக் கூடாது. பிள்ளையின் எல்லா ஆசைகளையும் நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. பெற்றார் செய்ய வேண்டியவை, தம் பிள்ளைகளின் சேவகர்கள் போல் நின்று அவர்களது ஏவல்களை நிறைவேற்றுவதல்ல; மாறாக, அவர்களுக்குத் தேவையான விடயங்களைக் கற்றுக் கொடுப்பதும் வேலைப் பொறுப்புக்களை ஒப்படைப்பதும் வாழ்க்கையென்பது கொடுப்பதும் எடுப்பதும் பற்றியது என்பதைப் பிள்ளைகள் புரிந்து கொள்ள உதவுவதுமே. குழந்தைப் பருவத்திலிருந்தே கேட்கின்ற அனைத்தையும் வாங்கிக் கொடுத்துப் பழக்கினால் பிள்ளை வளர்ந்த பின் ஆடையணிகள், CDகள், DVDகள், விளையாட்டுப் பொருட்கள் எனத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். பெற்றோர் அறியாத வண்ணமே இந்த இடறுகுழி உருவாகின்றது.

பிள்ளை வளர்ப்பு பற்றிய சில குருட்டு நம்பிக்கைகளை இனங்கண்டு கொள்ளல்

பிள்ளை வளர்ப்பினைக் கவர்ச்சிகரமானதாகக் காட்டினால்தான் கூடுதலான தம்பதியர் முழு நேரப் பெற்றார்களாகச் செயற்பட முயல்வார்கள். சமூகத்தின் தொடர்ச்சிக்காக அதற்குப் புதிய அங்கத்தினர்கள் தேவைப்படுகின்றார்கள். பிள்ளை வளர்ப்பு முற்றிலும் மகிழ்ச்சி தரக்கூடியது என்றும், நல்ல பெற்றார் நல்ல பிள்ளைகளை உருவாக்குவார்கள் என்றும், வெற்றிகர மாகப் பிள்ளை வளர்ப்பதற்கு அன்பும் உள்ளுணர்வும் இருந்தால் போதுமென்றும், பெற்றார் தமக்காகச் செய்யும் அர்ப்பணிப்புக்களைப் பிள்ளைகள் விளங்கிப் போற்றுவார்கள் என்றும், பிள்ளை வளர்ப்புத் திறன் இயல்பாகவே கைவரக்கூடியது என்றும், குடும்பப் பெறுமானங்களை இலகுவாகப் புகட்டிவிடலாம் என்றும் சில பெற்றார் நம்பிக் கொண்டிருக்கலாம். இந்த நம்பிக்கைகள் பிள்ளை வளர்ப்பின் உண்மை நிலை யைப் பிரதிபலிக்கவில்லை.

பிள்ளை வளர்ப்பு பற்றி சமூகத்தில் பரவலாகக் காணப்படும் ஆதாரமற்ற தவறான நம்பிக்கைகள் சிலவற்றைக் கீழே நாம் சுருக்கமாகத் தந்துள்ளோம்.

குருட்டு நம்பிக்கை 1: பிள்ளை வளர்ப்பு முற்றிலும் மகிழ்ச்சி தரக்கூடியது. தொலைக்காட்சி வர்த்தக விளம்பரங்களில் இளம் பெற்றார்கள் தம் பிள்ளைகளுடன் விளையாடுவதைக் காணும் எதிர்காலப் பொற்றோர்கள், பிள்ளை வளர்ப்பு என்பது அவ்வாறான எல்லையற்ற கேளிக்கையாகவே இருக்குமென நினைப்பார்கள். ஆனால், உண்மை அதற்கு முற்றிலும் மாற்றமானது.

கேளிக்கை எனும் போது, ஒருவர் விரும்பினால் அதைச் செய்யலாம் அல்லது விட்டு விடலாம் என்ற எண்ணம் ஏற்படும். ஆனால், பெற்றோர் தொடர்ந்து தம் பிள்ளைகளுக்குப் பின்னால் இருந்து அவர்களைக் கவனித்துக் கொள்வது அவசியமாகிறது. அந்த அனுபவம் அவர்களுக்குக் களிப்பைத் தந்தாலும் தராவிட்டாலும் சரியே. பெற்றார் தம் பொறுப்பைத் தொடங்கி விட்டால் அவர்கள் விரும்பினாலும் அதை விட்டு அவர்களால் விலக முடியாது.

குருட்டு நம்பிக்கை 2: நல்ல பெற்றோர் நல்ல பிள்ளைகளை உருவாக்குவார்கள். தவறான வழியில் செல்லும் பிள்ளைகளின் பெற்றோர் தம் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றே பலர் நினைக்கின்றனர். பிள்ளைகள் வாழ்க்கையில் தோல்வியுறும் போது முழுக் குற்றத்தையும் நாம் பெற்றோர் மீதே சுமத்துகின்றோம். எனினும், தம் கடமையை மிகச் சிறப்பாகச் செய்த பெற்றோரின் பிள்ளைகள் கூடத் தவறான வழியில் செல்லலாம். (உதாரணத்திற்கு நூஹ் (அலை) அவர்களின் மகனை எடுத்துக் கொள்ளலாம்) மறுதலையாக, பெற்றோர்கள் மோசமாக இருக்கும் நிலையில் பிள்ளைகள் நன்றாக வளர்வதுமுண்டு. (உதாரணமாக, கொடியவனான பிர்அவ்னின் வீட்டில் வளர்ந்த மூஸா (அலை); இறை மறுப்பாளரான தந்தையினால் வளர்க்கப்பட்ட இப்றாஹீம் (அலை) ஆகியோரைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்)

சில வேளைகளில் பிள்ளை வளர்ப்பானது விரக்தியூட்டக் கூடியது
சில வேளைகளில் பிள்ளை வளர்ப்பு என்பது உங்களைக் கடிக்கின்ற வாய்க்கு உணவூட்டுவதே அன்றி வேறில்லை என்பது போல் தோன்றலாம்.

குருட்டு நம்பிக்கை 3: பெற்றோர் தமக்காகச் செய்யும் அர்ப்பணிப்புக்களைப் பிள்ளைகள் விளங்கிப் போற்றுவார்கள். தம் பிள்ளைகளுக்குத் தேவையானவை அனைத்தையும் தாம் கொடுத்தால், தமது தியாகத்தைத் தம் பிள்ளைகள் அங்கீகரித்துப் போற்றுவார்கள் எனப் பெரும் பாலான பெற்றோர் நினைக்கின்றனர். இது எப்போதும் உண்மையாக இருப்பதில்லை. தம் பிள்ளைகளுக்கு அன்பு காட்டி அவர்களைப் பராமரித்து வளர்க்கும் பெற்றோரின் செய்கை அவர்களின் பிள்ளைகளினால் போற்றி அங்கீகரிக்கப் படாமல் போகலாம். ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள், கம்பியூட்டர்கள் போன்ற பொருட்களைப் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்தால் பிள்ளைகள் தம்மை நன்றியுணர்வுடன் போற்றுவார்கள் எனச் சில பெற்றோர் நினைக்கின்றனர். இந்த எண்ணம் பெரும்பாலும் தவறானதாகவே இருக்கும். தம் பெற்றார் தமக்கு வழங்குவன எல்லாம் தமக்கு வழங்கப்பட வேண்டியவையே எனவும், அவ்வாறு தருவது தம் பெற்றோரின் கடமையே எனவும் சில பிள்ளைகள் நினைக்கின்றனர். எனவே, தம் பெற்றோர் தமக்காகச் செய்துள்ளவற்றுக்கு நன்றி பாராட்டுவதோ கடமைப்படுவதோ தம் பொறுப்பல்ல எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

குருட்டு நம்பிக்கை 4: பிள்ளை வளர்ப்புத் திறன் இயல்பாகவே கைவரக் கூடியது. பிள்ளை வளர்ப்புக்கென முறையான பயிற்சி எதுவும் தேவையில்லை எனப் பலர் நம்புகின்றனர். எமது நாடுகளில் பிள்ளை வளர்ப்பு பற்றிய பயிற்சி நெறிகள் மிக அரிதாகவே இடம்பெறுகின்றன. அனுபவம் மிக்க தாய்மாருக்கும் அனுபவமற்ற தாய் மாருக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் இருக்கின்றன. அனுபவமற்ற தாய் மாரிடம் தம் பிள்ளைகளின் இலக்குகளையும் தேவைகளையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் குறைவு. அத்தோடு, தம் பிள்ளைகள் வளர்ந்த பின் அவர்களுடைய நடத்தை எவ்வாறு இருக்கும் என்பதை எதிர்பார்க்கவும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், அனுபவமிக்க தாய்மார்களோ தம் பிள்ளைகள் சிந்திக்கும் முறையையும் நடந்து கொள்ளும் முறையையும் நன்கு புரிந்து கொள்வார்கள். பயிற்சி கிடைக்காத நிலையில், பெற்றோர் தம் சொந்தப் பெற்றார்கள் செய்த தவறுகளை அப்படியே பிரதி பண்ணுவார்கள்.

குருட்டு நம்பிக்கை 5: குடும்பப் பெறுமானங்களை இலகுவாகப் பிள்ளைகளுக்குப் புகட்டலாம். பலரைப் பொறுத்தமட்டில் குடும்பப் பெறுமானங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- மூத்தவர்களுக்கும் ஏனையோருக்கும் மரியாதை செய்தல்.
- ஆட்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளைப் புரிந்து ஏற்றுக் கொள்ளுதல்.
- கருத்து வேறுபாடுகள் பற்றி அமைதியாகக் கலந்துரை யாடவும் கூட்டுறவான முறையில் அவற்றைத் தீர்த் துக் கொள்ளவும் ஆற்றல் பெறுதல்.
- செய்வதற்கு கஷ்டமாக இருந்த போதிலும் நல்ல விடயங்களைத் தொடர்ந்து செய்தல்.
- பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளலும் அவற்றைச் செய்து முடித்தலும்.
- எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுய ஒருமைப்பாட்டைப் பேணுதல்.
- ஏனையவர்களுக்கு உதவுதலும் சமூகத்துக்குச் சேவை செய்தலும்.

நினைப்பது ஒன்று; நடப்பது இன்னொன்று

நீங்கள் உங்கள் முதற் குழந்தைக்காக மிக நல்ல முறையில் திட்டமிடக்கூடும். ஆனால், அது பிறந்ததும் திட்டமிடாத அனைத்துமே நிகழும்.

மேற்சொன்னவற்றையும் அது போன்ற மேலும் பெறுமானங்களையும் கற்றுக் கொடுப்பது எளிதான வேலையல்ல.

குருட்டு நம்பிக்கை 6: வெற்றிகரமாகப் பிள்ளை வளர்ப்பதற்கு அன்பும் உள்ளுணர்வும் நல்லறிவும் இருந்தால் போதுமானது. பெற்றாருக்குக் கல்வியும் திறன்களும்கூட அவசியமாகின்றன. பிள்ளை வளர்ப்பு என்பது தொடரான சிறுசிறு நிகழ்வுகள், காலத்துக்குக் காலம் ஏற்படும் முரண்பாடுகள், திடீரென ஏற்படும் நெருக் கடிகள் முதலியவற்றைக் கொண்டது. இவற்றின் போது பெற்றார் தருணத்திற்கேற்றவாறு எதிர்வினை காட்ட வேண்டும். இவ்வாறு பெற்றார் காட்டும் எதிர் வினைகள் ஒவ்வொன்றும் பிள்ளையின் ஆளுமை யைச் சாதகமாகவோ பாதக மாகவோ பாதிக்கும். ஒரு பிள்ளையின் தேவைகளுக் குத் திருத்தமான முறையில் எதிர்வினை காட்டுவது கற்றுக் கொள்ளப்பட வேண்டிய திறனொன்றாகும்.

பிள்ளையொன்றின் ஒழுக்கப் பண்புகள் வித்தியாசமான ஆட்களுடன் வித்தியாசமான நிலை மைகளில் அது பெற்றுக்கொள்ளும் அனுபவங் களால் வடிவமைக்கப்படுகின்றன. ஒழுக்கப் பண்பு களை நினைத்தவாறெல்லாம் கற்பிக்க முடியாது. பற்றையும் விசுவாசத்தையும் விரிவுரைகள் மூலம் எவராலும் கற்பிக்க முடியாது. அதேபோன்று துணிச்சலைத் தபால் மூலமோ, தலைமைப் பண்பைத் துண்டுப் பிரசுரங்கள் மூலமோ யாரும் கற்பிக்க முடிவதில்லை. ஒழுக்கப் பண்பைக் கட்டியெழுப்புவதற்கு நாம் சிறுவர் உளவியல் பற்றியும் சிறுவர் விருத்தியின் கட்டங்கள் பற்றியும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். தமது பதின்ம வயதுப் பிள்ளைகள் கருணையும் பொறுப்புணர்வும் துணிவும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனப் பெற்றார் விரும்புகின்றனர். இதனைச் சாதிக்க வேண்டுமாயின் தாம் விரும்பும் இலட் சியங்களை வெற்றிகரமான விளைவுகளாக மாற்றுவதற்குத் தேவையான சரியான முறைமைகளைப் பெற்றார் அறிந்திருப்பது அவசியம்.

பைத்தியத்திற்குப் பரம்பரை காரணமா?

''பைத்தியத்திற்குப் பரம்பரை காரண மாக அமையும்.ஏனெனில் உங்கள் பிள்ளை களால் தான் உங்களுக்குப் பைத்தியம் பிடிக்கின்றது''

Sam Levenson

''எதனைக் கண்டும் காணாதது போல் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருப்பதுதான் புத்திசாலியாக இருப் பதற்குரிய வழியாகும்''

William James

நேரடி அனுபவம்

நேரடி அனுபவத்தின் மூலமே பிள்ளை வளர்ப்புப் பற்றிக் கற்றுக் கொள்ள முடியும். எனினும், அனுபவம் என்பது ஒரு கண்டிப்பான ஆசிரியர் போன்றது. அது பரீட்சையை முதலில் வைத்துவிட்டுப் பின்னர் தான் பாடத் தைக் கற்பிக்கின்றது.

பின்வருமாறு பிரார்த்தனை செய்ய முயற்சியுங்கள்.

''இறைவா! வாழ்க்கையின் ஒவ் வொரு பாடத்தையும் நான் நேரடி அனு பவத்தினூடாகவே கற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையை எனக்கு ஏற் படுத்தி விடாதே''

குருட்டு நம்பிக்கை 7: சுய பலியீடு பற்றிய தவறான கருத்துப் படிவம். தம் பிள்ளையின் நலனுக்காகத் தம்மை முற்றாகக் கரைத்துக் கொள்வது அவசியம் எனச் சில பெற்றார் நம்புகின்றனர். அத்தோடு, சமயமும் அதையே தம்மிடம் எதிர்பார்க்கின்றது என அவர்கள் நினைக்கின்றனர். ஆனால், உண்மையில் செல்வமும் பிள்ளைகளும் பெற்றோருக்குக் கண் குளிர்ச்சியாகவும் அணிகலன்களாகவும் இருக்க வேண்டுமேயன்றி, சித்திரவதையாகவும் வேதனையாகவும் அமையக் கூடாது.

> செல்வமும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரமாகும். மேலும், என்றுமே நற்கருமங்கள் தாம் உம் இரட்சகனிடத்தில் நற்கூலியால் மிகச் சிறந்ததாகும். (மறுமையை) ஆதரவு கொள்வதற்கும் மிகச் சிறந்ததாகும். (அல் குர்ஆன் 18: 46)

பெற்றார் - குறிப்பாகத் தாய்மார் - தம் பிள்ளைகளின் தேவைகளுக்காகச் சேவகர்கள் போன்று செயற்பட்டு அவர்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தாய்மாருக்கும் உதவியும் ஒத்தாசையும் தேவைப்படுகின்றன. அவர்கள் முதலில் தம்மைப் பராமரித்துக் கொண்டு அதன் பின்னரே பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும்.

குருட்டு நம்பிக்கை 8: பெற்றாரின் பொறுப்புக்களுள் தலையாயது அவர்கள் தம் பிள்ளைகளுடன் கொண்டுள்ள உறவாகும். உண்மை இதற்கு மறுதலையானது. ஒருவர் தனக்கே முதலில் பொறுப்புடையவராக இருக்க வேண்டும். மற்றவர்களோடுள்ள உறவுகள் அதற்குப் பின்னால் வர வேண்டியவையே.

> அந்நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும் விரண்டோடுவான். தன் தாயையும் தன் தந்தையையும் (விட்டு); தன் மனைவியையும் தன் மக்களையும் (விட்டு விரண்டோடுவான்); அந்நாளில், அவர்களில் ஒவ்வொரு மனிதருக்கும் (தன் சுற்றத்தாரை விட்டும்) அவரைத் திருப்பி விடும் ஒரு காரியம் உண்டு. (அல் குர்ஆன் 80: 34- 37)

உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உங்களைப் படைத்தவனுக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேணுங்கள். நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு உங்கள் மீது ஓர் உரிமை இருக்கிறது. உங்கள் உடம் புக்கும் உங்கள் மீது ஓர் உரிமை இருக்கிறது. அதே போன்று உங்களைப் படைத்தவனுக்கும் உங்கள் மீது ஓர் உரிமை இருக்கிறது. எனவே, ஒவ்வொருவருக்கும் அவரவர் உரிமையைக் கொடுத்து விடுங்கள்'' (அல் புகாரி)

பெற்றார் தம் ஆரோக்கியத்தைப் பேணுதல், மகிழ்ச்சி பெறுதல், அனுமதிக்கப்பட்ட ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளல், நண்பர்களோடு உறவாடுதல், விடுமுறைகளை அனுபவித்தல் என்பனவும் இவற்றுள் அடங்கும்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 27: சிரமமான சொந்த அனுபவங்கள்

பெற்றார் என்ற வகையில் நீங்கள் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் பெற்றாராக இருப்பது ஏன் கஷ்டமானது என்பது பற்றி விளக்க முடியும். உங்கள் பிள்ளைகளுடனான குடும்ப ஒன்றுகூடலில் இது பற்றிக் கூறுங்கள். வாழ்க்கையின் கஷ்டமான யதார்த்த நிலை பற்றிப் பிள்ளைகள் புரிந்து கொள்ள இது உதவக்கூடும்.

தொழிற்பாடு 28: பிள்ளை வளர்ப்பு தொடர்பான சிந்தனைகள் பற்றிக் கலந்துரையாடுதல்

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்று கூடியிருக்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் அல்குர்ஆன் வாக்கியங்களை விளக்குங்கள். பிள்ளை வளர்ப்பிலுள்ள வேதனைகள், மகிழ்ச்சிகள் என்பவற்றை விளக்கும் வகையில் அது பற்றிய உங்கள் சிந்தனைகளைக் கலந்துரையாடுங்கள். உங்களுக்குத் தெரிந்த சிலர் தொடர்பான உண்மை நிகழ்ச்சிகளையும் எடுத்துக்கூறுங்கள்.

செல்வமும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரமாகும். மேலும், என்றுமே நற்கருமங்கள் தாம் உம் இரட்சகனிடத்தில் நற்கூலியால் மிகச் சிறந்ததாகும். (மறுமையை) ஆதரவு கொள்வதற்கும் மிகச் சிறந்ததாகும். (அல்குர்ஆன் 18: 46)

விசுவாசங் கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும் உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர். ஆகவே, அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். மேலும், (அவர்களில் ஏற்பட்டவற்றை) நீங்கள் மன்னித்து, (அதைப்) பொருட்படுத்தாதும் விட்டு விட்டு இன்னும் (அவர்களின் குற்றங்களை) பொறுத்தருள்வீர் களாயின், நிச்சயமாக அல்லாஹ்(வும்) உங்களுடைய பாவங்களை மன்னிக்கின்றவன்; மிகக் கிருபையுடையவன். (அல்குர்ஆன் 64:14)

நிச்சயமாக உங்களுடைய செல்வங்களும் உங்களுடைய பிள்ளைகளும் (உங்களுக்கு) ஒரு சோதனையேயாகும். அல்லாஹ் - அவனிடமே மகத்தான கூலி இருக்கின்றது.
(அல்குர்ஆன் 64:15)

அத்தியாயம் 7

விடயங்கள் தவறிவிடும் போது . . .

- *அறிமுகம்* 150
- *கோபம், அடங்காத் தன்மை, கோபாவேசம், கண்ணீர்* 151

  அடக்கமில்லாத பிள்ளையொன்றைக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்வதற்கான சில வழிமுறைகள் 151
- Bullying: *நீங்களும் உங்கள் பிள்ளையும்* 153
- *உங்கள் பிள்ளை* bullying *என்னும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டால் என்ன செய்யலாம்?* 153
- *பதின்மவயதினர்: குமரப் பருவம் என்னும் கருத்துப் பற்றிய ஓர் ஆய்வு* 155
- *எமது பதின்மவயதுப் பிள்ளைகளிலும் எம்மிலும் கோபத்தின் விளைவு* 157
- *எமது பதின்மவயதுப் பிள்ளை கோபமுறும்போது நாமும் கோபமடைதல்* 158
- *எமது பதின்மவயதுப் பிள்ளைக்காகவும் எமக்காகவும் நாம் செய்யக்கூடியவை* 159
- *சிறந்த தொடர்பாடல் பற்றிய சில கோட்பாடுகள்* 159
- *தொழிற்பாடுகள் 29- 30* 162

அறிமுகம்

எந்தவொரு வகை உறவும் வெற்றி பெறுவதற்குரிய உறுதியான உத்தரவாதம் எதுவுமில்லை. பெற்றார்- பிள்ளை உறவுக்கும் இது பொருந்தும். விடயங்கள் எதிர்பார்த்த விளைவைத் தராமல் போகக்கூடும். உங்கள் குழந்தை பிறந்த போது நீங்கள் பெருமிதத் தோடு அதனைப் பார்த்திருப்பீர்கள். உங்கள் உள்ளம் நம்பிக்கையாலும் எதிர்பார்ப்புக்களாலும் நிரம்பி வழிந்திருக்கும். உங்கள் பிள்ளையோடு கழிக்கப்போகும் அற்புதமான காலத்திற்காகப் பிரார்த்தனை செய்திருப்பீர்கள். உங்கள் பிள்ளையிடமிருந்து அன்பையும் கீழ்ப்படிவையும் எதிர்பார்த்திருப்பீர்கள். ''எவ்வளவு அற்புதமான உறவாக இது அமையப்போகிறதே'' என நீங்கள் உள்ளூர நினைத்திருப்பீர்கள்.

ஆனால், 15 வருடங்களின் பின்னர், ''நாம் என்ன தவறு செய்தோம்?'' என உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ள நேரிடும். நீங்கள் செய்ய வேண்டியவை அனைத்தையும் சிறப்பாகச் செய்திருப்பீர்கள்; உங்கள் பிள்ளையை அன்பும் கட்டுப்பாடும் இறை விசுவாசமும் கொண்டதாக வளர்ப்பதற்கு முழு முயற்சி எடுத்திருப்பீர்கள். அப்படியிருந்தம் உங்கள் பிள்ளை பதின்மவயதுப் பிசாசொன்றாக மாறியது எப்படி?

பள்ளிப் பாடங்களில் தொடர்ந்தும் 'A' தரம் பெறுகின்ற, சிறந்த உடலாரோக்கியம் கொண்ட, புத்தி சாதுரியம் மிக்க தனது மகன் மனவெழுச்சிக் குறைபாடொன்றினால் பாதிக்கப் பட்டிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டதும் பெற்றாரொருவர் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானார். அந்தப்பிள்ளை உளவியல் ரீதியில் முதிர்ச்சியற்றதாகக் காணப்பட்டது. இவ்வாறு தமது பிள்ளைக்கு மனவெழுச்சி சார்ந்த பிரச்சினையொன்று இருக்கின்றது என்பதைச் சில பெற்றோர் கண்டு கொள்வதில்லை. குறிப்பாகப் பள்ளிப் படிப்பிலும் உடல் ஆரோக்கியத்திலும் உளச் செயற்பாடுகளிலும் அது சிறந்து விளங்கும் போது மேற்சொன்ன குறைபாடுகள் அவதானிக்கப்படாமற் போகின்றன. அப்பிள்ளை வகுப்பில் முதன்மையானவனாக இருந்தாலும் மனவெழுச்சி உறுதிப்பாடு இல்லாதவனாக விளங்கலாம். இவ்வாறான குறைபாட்டினை அவதானிக்கும் ஆசிரியர்களும் நண்பர்களும் உறவினர்களும் அது பற்றிப் பெற்றாரிடம் மெதுவாக எடுத்துக்கூற வேண்டும். பெற்றார் இது சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தி அதற்குரிய சரியான பரிகாரத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

ஒரு தாய் பின்வருமாறு கூறுகிறார்: நாங்கள் நல்ல புறநகர்ப் பகுதியொன்றில் வாழ்கின்றோம். எங்கள் பிள்ளைகள் சிறந்த பள்ளிக் கூடங்களுக்குச் சென்றார்கள். நாம் விளையாட்டுக்களிலும் நீந்துவதிலும் சுற்றுலாக்களிலும் நிறையக் காலத்தை அவர்களோடு கழித்திருக்கின்றோம். இப்போது எங்கள் மகன் சிறையில் இருக்கின்றான். ஒரு நாள் இரவு அயலில் உள்ள கடையொன்றை உடைத்துத் திருடப் போய் அவனது ஒரு காலில் துப்பாக்கிச்சூடு பட்டது. நாம் என்ன தவறு செய்தோம் என்று எம்மையே நாம் கேட்டுக் கொள்வதை இப்போது நிறுத்திவிட்டோம். அவனுக்கு 23 வயது. அவன் தானாகவே இளைஞர் குழுவொன்றுடன் நட்புக் கொண்டான். அவர்கள்தான் அன்றிரவு அக்கடையைத் திருடுவதற்கான திட்டத்தைத் தீட்டியுள்ளனர்.

இவ்வாறு விடயங்கள் பிழைத்து விடும் சந்தர்ப்பங்களில் என்ன செய்யலாம் என்பது பற்றி இந்த அத்தியாயம் ஆராய்கிறது. நடந்து முடிந்த விடயங்களைப் பற்றி நினைத்து உளம் நொந்து கொண்டிருப்பதிலோ பெற்றோர் என்ற வகையில் நாம் எங்கே தவறு விட்டோம் என்று யோசித்துத் தலையை உடைத்துக்கொள்வதிலோ அர்த்தமில்லை. பதிலாக, இத்தகைய இக்கட்டான நிலைமைகளை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிக் கவனம் செலுத்துவதே சிறந்தது. கோபம், கோபவெறி, bullying என்னும் துன்புறுத்தல், பதின்ம வயதினரின் துர்நடத்தைகள் என்பன பற்றிய விடயங்களையும் இந்த அத்தியாயம் ஆராய்கிறது. எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு உதவும் சாதனம் என்ற வகையில் திறந்த தொடர்பாடல் பற்றியும் இது ஆராய்கிறது. எந்தவொரு பிரச்சினையும், அது எவ்வளவு சிக்கலானதாக இருந்த போதிலும், தீர்வு காணப்படக் கூடியதே!

இவ்வாறாக விடயங்கள் பிழைத்து விடும்போது, பெற்றார் தம் முயற்சியில் தோற்றுப் போனதற்கு அடையாளமாக அதனை எடுத்துக்கொள்ளக்கூடாது. அதனை உங்கள் தவறாக அல்லது நீங்கள் வேண்டுமென்றே செய்த பிழையாகக் கருத வேண்டிய அவசியமில்லை. உங்கள் மகனோ மகளோ தொடர்ச்சியாக மாற்றத்துக்குள்ளாகும் போது - பிள்ளைப் பருவத்திலிருந்து முதிர் பருவத்துக்குத் தாண்டும் போது - பல்வேறு உரசல்கள் ஏற்படத்தான் செய்கின்றன. இதற்காக நீங்கள் உங்களையோ உங்கள் துணைவரையோ குறை கூறிக்கொள்ளத் தேவையில்லை. பிள்ளை வளர்ப்பின் போது முகம் கொடுக்க நேரிடும் தொல்லைகளைக் கண்டு பெற்றார் மனம் தளர வேண்டிய அவசியமில்லை. சிறந்த பிள்ளை வளர்ப்பு முறைகளைப் பயன்படுத்தி இத்தடைகளை வெற்றி கொள்ளலாம். அவ்வாறு செய்வது மனத்திருப்தி தருகின்ற அனுபவமாக இருக்கும். நம்பிக்கைகள், பிரார்த்தனைகள் என்பவற்றோடு அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொள்வதும் ஏனைய பெற்றோர்களிடமிருந்து வழிகாட்டலைப் பெறுவதும் வெற்றிக்கான உத்தரவாதத்தைத் தருகின்றன.

கோபம், அடங்காத்தன்மை, கோபாவேசம், கண்ணீர்

பிள்ளைகள் தொடர்ந்து கற்றுக் கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றார்கள். பெற்றோரின் கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் அவர்கள் சோதித்துப் பார்க்க முனைவார்கள். மன விருப்பங்களுக்கிடையிலான போராட்டமாக அது உருவெடுக்கலாம். தாம் நினைத்தபடி நடக்க வேண்டும் என்பதற்காகக் கூச்சலிட்டு முழு வீட்டையும் குழப்பி விடுகின்ற அடங்காப் பிடாரிப் பிள்ளைகளுக்குப் பெற்றார் எவ்வளவு போதனை செய்தாலும் பயனளிக்காது. சில வேளைகளில், தம்மைப் பற்றிக் கவனம் செலுத்தும் வரை அவர்கள் முடிவின்றி அழுதுகொண்டே இருப்பார்கள். இதனால் பெற்றோர் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு, பிள்ளைகளுக்கு விட்டுக் கொடுப்பதே இலகுவான வழி என நினைப்பார்கள். ஆனால், இது செய்யத் தகாத ஒன்றாகும். ஏனெனில், அவ்வாறு செய்வது, பெற்றோரின் கவனத்தை ஈர்ப்பதற்கு இதுவே வழி என்ற எண்ணத்தைப் பிள்ளையில் உறுதியாக்கிவிடும். அதேவேளையில், கத்துவதும் அடிப்பதும் பிள்ளைகளை வற்புறுத்துவதும்கூட பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. பிள்ளைகள் நீங்கள் விதிக்கும் விதிகளை மதிக்கவும், கட்டுப்பாட்டை உங்கள் கையில் ஒப்படைக்கவும் கற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் விவேகமான ஒழுகலாற்று முறையொன்றைக் கடைப்பிடிப்பதே இதற்குரிய சிறந்த தீர்வாகும்.

அடக்கமில்லாத பிள்ளையொன்றைக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்வதற்கான சில வழிமுறைகள்

ஒழுக்கக் கட்டுப்பாடானது நடத்தையை மேம்படுத்துகிறது; தண்டனையோ நடத்தையை அடக்கி ஒடுக்குகிறது.

- வழமையான தொனியில் பேசிப் பிழையான நடத்தையின் விளைவுகள் பற்றி அழுத்திக் கூறுங்கள். கீழ்ப்படிவின்மையின் விளைவுகள் பற்றியே பிள்ளையின் கவனம் குவிக்கப்பட வேண்டும். இந்த முறை பயனளிக்காவிடின் உங்கள் குரல், விழித் தொடர்பு என்பவற்றில் கவனம் செலுத்துங்கள். எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன்பு இதுவே முதற்படியாக இருக்க வேண்டும். இந்நிலையில் உறுதியான ஆனால் அமைதியான குரலில் பேசுங்கள். உரத்த குரலில் சத்தமிடாதீர்கள்.

- நீங்கள் சீரியஸாகத் தான் சொல்கிறீர்கள் என்பதைப் பிள்ளை அறியச் செய்யுங்கள். பேசும்போது பிள்ளையின் கண்களை நேராக உற்று நோக்குங்கள். தெளிவாகவும் மெதுவாகவும் பல தடவைகள் அவனுக்கு நினைவூட்டுங்கள். அவன் செவிமடுக்க மறுத்தால் குரலையும் விழித் தொடர்பையும் அதேவிதமாகப் பேணிக்கொண்டு அவனை நெருக்கமாக அணுகிச் சொன்னதை மீண்டும் அமைதியாக மீட்டிச் சொல்லுங்கள்.

- இதுவும் பயனளிக்காவிட்டால் விளைவுகள் பற்றிய விதியைப் பிரயோகியுங்கள். அதாவது, கூறுவதற்கு அவர்கள் செவிமடுக்கத் தவறினால் ஏற்படப் போகும் விளைவுகளின் பட்டியலொன்றைப் பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும். அதில் கூறப்பட்டுள்ளவை அவ்வாறே நிறைவேற்றப்படவும் வேண்டும். அப்படிச் செய்யாதிருப்பின் உங்கள் எச்சரிக்கைகளை அதன் பிறகு அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் கூச்சலிட்டால் அல்லது முணுமுணுத்தால் அல்லது கோபத்தை வெளிப்படுத்தினால் நீங்களும் அவ்வாறே செய்யாதீர்கள். விளைவுகள் பற்றிப் பிள்ளைக்கு அமைதியாக எடுத்துக்கூறி எவ்வளவு காலத்துக்கு அவன் அதைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும் புரிந்து கொள்ளச் செய்யுங்கள். அவன் இணங்கி நடப்பதற்கு அவகாசம் கொடுங்கள். உடனடிப் பெறுபேறுகளை எதிர்பார்க்காதீர்கள். இவ்வளவையும் செய்த பின்னர் அப்பாற் சென்று விடுங்கள்.

- இவ்வாறு பெற்றார் பிரயோகிக்கக்கூடிய 'விளைவுகள்' பல இருக்கின்றன. உங்கள் பிள்ளைகளை அவதானித்து பெறுமதி மிக்கவை என அவர்கள் கருதுபவற்றை இனங்காணுங்கள். குறித்த ஒரு காலத்துக்கு அவற்றைத் தடுத்து வையுங்கள். அவர்கள் விரும்பும் விளையாட்டுப் பொருளாகவோ அல்லது போக நாடும் சுற்றுலாவாகவோ அது இருக்கலாம். பிள்ளை அமைதியடைந்து தனது நடத்தை பற்றி மனம் வருந்தினால் அதற்கு வெகுமதியாக அதிக பாசத்தைக் காட்டுங்கள். பிள்ளை தொடர்ந்தும் கீழ்ப்படியாதிருந்தால் ஒரு விளைவை இன்னொரு விளைவினால் மீள வலியுறுத்துங்கள்.

- கீழ்ப்படியாத பிள்ளை தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் வரை அவனை நிறுத்தி வைப்பதற்காகத் 'தண்டனைப் பிரதேசம்' ஒன்றை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தெரிவு செய்யும் இடம் அமைதியானதாக, சலிப்புத் தரக்கூடியதாக இருக்க வேண்டும். அவனுடைய படுக்கையறையை இதற்காகத் தெரிவு செய்ய வேண்டாம். கீழ்ப்படியாத பிள்ளையை அந்த இடத்தில் தனிமைப்படுத்தி வைத்துவிட்டு உங்கள் வேலையைத் தொடர்ந்து செய்யுங்கள். இந்த நேரத்தில் உரையாடலுக்கு இடம் கொடுக்க வேண்டாம். அவன் தன் சார்பாகவோ கோபத்துடனோ பேசினாலும் அதைப் புறக்கணித்து விடுங்கள். இவ்வாறு அவனை அந்த இடத்துக்கு அனுப்பும் போது அவன் அங்கே கழிக்க வேண்டிய நேரத்தையும் குறித்துச் சொல்லுங்கள். அவனை இவ்வாறு ஏனையோரின் சகவாசமின்றித் தனியாக வைக்கும் போது அவன் தன் தவறு பற்றி உணர்ந்து கொள்வதற்கும் மனம் வருந்துவதற்கும் அவகாசம் கிடைக்கும். அவ்வாறு அவன் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டால் உடனடியாக மன்னிப்பு வழங்கி நடந்து விட்ட நிகழ்ச்சியை முற்றாக மறந்து விடுங்கள்.

- பிள்ளைகள் நன்றாக நடந்து கொள்ளும் போது அவர்களுக்கு வெகுமதி வழங்குங்கள். ஆனால், அவர்களை நல்ல முறையில் நடந்து கொள்ளச் செய்வதற்காகவோ அல்லது

அவர்கள் கோபவெறி கொள்வதைத் தவிர்ப்பதற்காகவோ அவர்களுக்கு லஞ்சம் வழங்க முனைய வேண்டாம். இது எந்த விதத்திலும் பயனளிக்காத பொருத்தமற்ற செயலாகும்.

Bullying: நீங்களும் உங்கள் பிள்ளையும்

Bullying என்பது ஒரு பிள்ளையை வலிமை கூடிய ஒரு சகாவோ, சகாக்களோ அச்சுறுத்தித் துன்புறுத்துவதைக் குறிக்கும். அதற்குரிய அறிகுறிகளை நேர காலத்தோடு இனங்கண்டு கொள்வது பிள்ளைக்கு ஏற்படக்கூடிய மன வேதனைகளையும் உள அழுத்தங்களையும் தவிர்க்க உதவலாம். இந்நிலையில் பழித்துரைக்கப்படுதல், தொல்லை கொடுத்தல், உடைமைகளைப் பறித்தல், உடல் ரீதியாகத் தாக்குதல் என்பன இடம்பெறலாம். பெற்றோர் இது பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், தமக்குச் செய்யப்படும் அநியாயங்கள் பற்றி முறையிடுவதற்கு பிள்ளைகள் பயப்படுவார்கள். உங்கள் பிள்ளைகளில் வழமைக்கு மாறான நடத்தை காணப்பட்டால் அது பற்றி அவதானித்து அமைதியான முறையில் செயற்படுங்கள். இப்பிரச்சினை தொடர்பான www.bullying.co.uk என்ற இணைய வெப்தளமொன்று பயனுள்ள தகவல்களை வழங்குகிறது. ''ஐக்கிய இராச்சியத்தில் வருடந்தோறும் சுமார் 16 பிள்ளைகள் இப் பிரச்சினை காரணமாக ஏற்படும் உள அழுத்தங்களால் தற்கொலை செய்துகொள்கின்றனர். உண்மையில் நடந்து கொண்டிருந்தது என்ன என்பது பற்றித் தமக்குத் தெரியாது என அவர்களது பள்ளிக்கூடங்கள் கூறுகின்றன. எனினும், அதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கும் அவர்களது நண்பர்களுக்கும் தாம் என்ன செய்தோம் என்பது பற்றி நன்கு தெரியும். ஒருவர் இறந்த பின்னரோ அல்லது மருத்துவ சிகிச்சை தேவைப்படும் அளவுக்கு நோயுற்ற பின்னரோ அது பற்றிக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை'' என அவ்வெப்தளம் கூறுகிறது.

உங்கள் பிள்ளை இவ்வாறு துன்புறுத்தப்படுகிறார் என்பதற்கான அறிகுறிகளின் பட்டியலொன்றை அது தருகிறது.

- முன்பு நண்பர்களாக இருந்தவர்களுடன் பகைமை கொள்ளல்
- கிழிந்த ஆடைகள்
- பணம் காணாமல் போதல்
- எரிச்சலும் கோபமும்
- மௌனமாகவும் ஒதுங்கியும் இருத்தல்
- எப்போதும் வீட்டிலேயே தங்கியிருக்க விரும்புதல்
- உடன் பிறந்தவர்களிடம் ஆக்கிரமிப்பு இயல்பைக் காட்டுதல்
- பள்ளிப் படிப்பில் ஆர்வம் குறைதல்
- நித்திரை கொள்வதில் பிரச்சினை
- கவலையுடன் காணப்படுதல்
- பல்வேறு வகைக் காயங்களுடன் வீட்டுக்கு வருதல்
- திருட்டுப் போன பொருட்களுக்கு மாற்றீடு தருமாறு கோருதல்

உங்கள் பிள்ளை bullying என்னும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டால் என்ன செய்யலாம்?

பெரும்பாலான பிள்ளைகள் தாம் இவ்வாறு துன்புறுத்தப்படுவது பற்றிப் பேச விரும்ப மாட்டார்கள். இப்பிரச்சினையைப் பெற்றார் கையாளும் முறை முக்கியமானது. அளவு கடந்து அதற்கு எதிர்வினை காட்டாமல் இருப்பதும் உங்கள் பிள்ளையிடம் விடைகளை வற்புறுத்திக் கேட்காமலிருப்பதும் அவசியம். ''இன்று பள்ளிக்கூடம் எப்படி இருந்தது?'' போன்ற கேள்விகளைக் கேட்பது அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள



உதவியாக அமையலாம். எனினும், சில பிள்ளைகள் அன்றைய பள்ளிக்கூட நிகழ்வுகள் பற்றிப் பேச விரும்பாததோடு அது பற்றிக் கேட்கப்படும் கேள்விகளைத் தேவையற்ற தலையீடாகக் கருதவும் கூடும். வழமைக்கு மாறான நடத்தையை அவ தானிப்பதே இங்கு முக்கியமானது.

தமது வாழ்க்கையில் நிகழும் bullying போன்ற வற்றையும் ஏனைய பொதுவான பிரச்சினைகளை யும் பற்றித் தம் பெற்றோருடன் மனந்திறந்து சௌகரியமாகப் பேசக்கூடிய நிலைமை பிள்ளை களுக்கு இருக்க வேண்டும். இவ்வாறான திறந்த தொடர்பாடல் சிறுவயதிலேயே உருவாக்கப் படுவது அவசியம். இந்த வகையான திறந்த உறவொன்று பேணப்பட்டால் உங்கள் பிள்ளை கள் தங்கள் அச்சங்கள் பற்றி உங்களிடம் திறந்து கூற முன்வருவதோடு, அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக உங்களை எளிதில் அணுகலாம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு ஏற்படும். இதனால் உங்கள் நேரமும் முயற்சியும் வீணாவது தவிர்க்கப்படும். இவ்வாறான விடயங்களை உங்களோடு கலந்துரையாடுவது அசௌகரியமானது என உங்கள் பிள்ளை நினைக்குமாயின் ''உனக்கு என்ன நடந்தது, சொல்லு?'' எனக் கூறுவதால் எவ்விதப் பயனும் ஏற்படாது.

bullying சம்பந்தமாக அமுல் படுத்தக்கூடிய சில படிமுறைகள்

பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் bullying நடத்தைக்கு எதிரான கொள்கைகள் உண்டு. எனவே, உங்கள் பிள்ளையின் பள்ளிக்கூடத்தை அணுகுவதே முதல் படியாக இருக்க வேண்டும். பிள்ளையின் ஆசிரியரைச் சந்தித்து பிரச்சினை பற்றிக் கலந்துரையாட ஏற்பாடு செய்வது அடுத்த படியாகும்.

பதிலடி கொடுக்குமாறு பிள்ளைக்குப் போதிக்க வேண்டாம். ஏனெனில், அது ஒரு தீர்வாக அமையாமல் மேலும் பிரச்சினைகளை உருவாக்கும். இன்னொரு பிள்ளைக்கு அடிப்பதனால் பிரச்சினை முடிவடையாது. அதன் காரணமாக உங்கள் பிள்ளை பள்ளிக்கூடத்திலிருந்து இடை நிறுத்தப்படவோ வெளியேற்றப்படவோ கூடும்.

பெற்றார் என்ற வகையில் பதற்றமின்றி அமைதியாகச் செயற்படுங்கள். உங்கள் பிள்ளையைத் துன்புறுத்திய பிள்ளையின் பெற்றாருடன் தொடர்பு கொள்ள அவசரப்படாதீர்கள். பொதுவாகப் பெற்றோர் எடுக்கும் முதல் நடவடிக்கை இதுவாக இருப்பினும், இது சில வேளைகளில் நிலைமையை மோசமாக்கலாம். பள்ளிக்கூட அதிகாரிகள் அப்பெற்றாருடன் தொடர்பு கொள்ளச் செய்வதே மிகச் சிறந்தது.

உங்கள் பிள்ளையுடனும் பள்ளிக்கூடத்துடனும் தொடர்ந்து உரையாடி bullying நிறுத்தப்பட்டு விட்டதா எனக் கவனியுங்கள். அது தொடர்கிறதாயின் மீண்டும் பள்ளிக்கூட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையின் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலம் bullying போன்ற நிகழ்வுக்கு அவன் இசைவாக்கமடைய உதவுங்கள். தற்பாதுகாப்புச் சண்டைக் கலைகளைக் கற்பது இதனை வசதிப்படுத்தும்.

பாதுகாப்பு உத்திகளை உங்கள் பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள். இவ்வாறு அச்சுறுத்தப்படும் போது வளர்ந்தவர் ஒருவரின் உதவியை நாடுவது எப்படி என்பது பற்றிப் பிள்ளைக்குக் கற்றுக்

கொடுங்கள், எப்படியானவர்களிடம் உதவி கேட்கலாம், அதை எப்படிக் கேட்கலாம் என்பதையும் பாத்திரமேற்று நடிக்கச் செய்வதன் மூலம் பயிற்சி கொடுங்கள். Bullying பற்றி முறைப்பாடு செய்வது தவறான செயலல்ல என்பதையும் பிள்ளைக்கு உணர்த்துங்கள்.

இடைவேளையின் போது பிள்ளைகள் அலைந்து திரியாமல் ஒரு பாதுகாப்பான இடத்திலிருந்து பயனுள்ள ஏதேனும் வேலையைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஆசிரியர்களைக் கேளுங்கள்.

ஏனைய பெற்றோர்கள் இவ்வாறான நிலைமைகளை எப்படிச் சமாளித்திருக்கிறார்கள், அவர்கள் பயன்படுத்திய உத்திகள் என்ன என்பன பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு www.stopbullyingnow.hrsa.gov போன்ற வெப் தளங்களை அணுகுங்கள்.

பதின்மவயதினர்: குமரப் பருவம் என்னும் கருத்துப் பற்றிய ஓர் ஆய்வு

பிள்ளை வளர்ப்பில் குமரப் பருவ வருடங்களே சவால் மிகுந்த கட்டமாக விளங்குகிறது. சுதந்திரமான சூழலொன்றில் குமரப் பருவத்தினர் தலைவர்களாகச் செயற்பட முடியுமென டாக்டர் இமாத் அல்- தீன் அஹ்மத் வாதிடுகிறார். பருவமடைந்தது முதல் முதிர் பருவம் வரையிலான காலமே குமரப் பருவம் என வரையறுக்கப்படுகிறது. எனினும், ஆரம்ப காலச் சமுதாயங்களில் பருவ வயதை அடைவதே முதிர் பருவத்தின் ஆரம்பம் எனக் கருதப்பட்டது. இறைவனால் அருளப்பட்ட சமயங்கள் தம் சட்டங்களிலும் சடங்குகளிலும் இவ்வுண்மையை உள்ளடக்கியுள்ளன. உதாரணமாக, யூத சமயத்தில் பருவமடைதலைக் குறிக்கும் சடங்கில் பங்கேற்கும் இளைஞன் ''இன்று முதல் நான் ஒரு மனிதன்'' எனக் கூறுவான். இஸ்லாத்திலும் மாதவிடாயின் ஆரம்பத்தோடு ஒரு சிறுமி வளர்ந்த பெண்ணாக மாறுகிறாள் எனக் கருதப்பட்டு அவள் மீது ஐவேளைத் தொழுகையும் கடமையாகிறது. குமரப் பருவத்தின் போது இளம் ஆண், பெண்களுக்கு வயது வந்தவர்களுக்குரிய பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டும். இது, அவர்கள் முதிர்ச்சி பெறத் துணை செய்யும். நவீன காலத்தில் சகலருக்குமான முறைசார் பள்ளிக்கூட அமைப்பு பண்டைய சமூகங்களில் காணப்பட்ட வேலை செய்துகொண்டே கற்கும் முறையை மாற்றீடு செய்துள்ளது. பொதுமக்களை முறை சார் கல்வி அமைப்புக்குள் வலிந்து நுழைப்பதற்காக வளர்ந்தவர்கள் போல் செயற்படுவதற்குரிய வாய்ப்பு குமரப் பருவத்தினருக்கு மறுக்கப்பட்டுள்ளது. பொதுவாக முறைசார் பள்ளிக்கூடக் கல்வி முடியும் வரை (18- 20 வயது வரை) வேலைப் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் கிடைப்பதுமில்லை.

பெற்றோர்களுக்கான பிரதியீடு போல் செயற்படுகின்ற பள்ளிக்கூடத் தொகுதியினுள் பிள்ளைகளை வலிந்து சேர்ப்பதனால், குமரப் பருவத்தினரும் பிள்ளைகளே என்று பாசாங்கு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அத்தோடு பிள்ளைகள் 18 அல்லது 21 வயதை அடைந்த பின்னரே வயது வந்தவர்களாகக் கருதப்படுவர் என நாடுகளின் சட்டங்களும் கூறுகின்றன. உண்மையில் பிள்ளைகளின் உடல் ரீதியான முதிர்ச்சி 19 வயதளவில் ஏற்படுகிறது. எனினும், அதற்கு முன்பே அவர்கள் உள முதிர்ச்சி அடைந்து விடுகின்றனர். எனினும், மனவெழுச்சி முதிர்ச்சி ஏற்படும் வயது ஆளுக்கு ஆள் வேறுபடும். (சிலர் மனவெழுச்சி முதிர்ச்சி அடைவதே இல்லை)

முந்திய காலத்தில் குமரப் பருவத்தினர் வயது வந்தவர்களைப் போல் நடத்தப்பட்டதனால் அவர்களுடைய உள மற்றும் தலைமைத்துவ ஆற்றல்கள் ஊக்குவிக்கப் பட்டதோடு அவர்களது மனவெழுச்சி முதிர்ச்சியும் மேம்படுத்தப்பட்டது. இன்றைய நவீன அமைப்பில் குமரப்பருவத்தினர் பிள்ளைகளைப் போல்

நடத்தப்படுவதனால் தங்கியிருக்கும் இயல்பு அவர்களில் வளர்க்கப்படுவதோடு, சுயமதிப்பு பற்றிய அவர்களது உணர்வும் அவமதிக்கப்படுகிறது. சம்பிரதாயபூர்வ சமூகங்களில் பதினைந்து வயதை அடைந்தவர்கள் கற்பித்தல், வியாபாரம், சிவில் சமூகச் செயற்பாடுகள், யுத்தம் முதலியவற்றில் பங்கு பற்றியதோடு திருமணமும் முடித்தார்கள். நவீன சமூகத்தில் அவர்கள் சிறு பிள்ளைகளாகக் கருதப்பட்டு அவ்வாறே நடத்தப்படுகிறார்கள். ஏதேனும் ஒரு துறையில் கற்றுத் தேர்ச்சி பெறுவதற்கும் கல்லூரிப் படிப்பு முடியும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

குமரப் பருவத்தினருக்கு, வயது வந்தோருக்குரிய பொறுப்புக்களை வழங்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாகப் பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன. இளைஞர்கள் தொடர்பாகச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மூல காரணமும் இதுவே. குமரப் பருவத்தினர் அனைவருமே கற்பதற்குத் தகுதியானவர்களாக இருப்பதில்லை. அவர்களைப் பிணைத்து வைக்கும் பள்ளிக்கூட முறை பற்றிக் குமரப் பருவத்தினரிடையே கடுமையான வெறுப்புணர்வு காணப்படுகிறது. கற்பதில் புலமையுடையவர்கள், தாம் சிறு பிள்ளைகள் போல் நடத்தப்படுவதை வெறுக்கின்றனர். பதினெட்டு வயதை அடையாமல் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குச் சட்டம் அனுமதிக்காத காரணத்தால் அவர்கள் போதைப் பொருள் வர்த்தகம் போன்ற சட்ட விரோத முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். சிவில் சமூகத்தில் தமக்கு அந்தஸ்து தரப்படாததால் காடையர் குழுக்களில் அந்தஸ்தைப் பெற முயற்சிக்கின்றனர். முறை சாராக் கல்வி விடயங்களில் திறமை காட்டக்கூடியவர்கள் தமது பள்ளிக்கூட வகுப்பறைகளில் விரக்தியோடு முடங்கிக் கிடக்கின்றனர். இவர்களுட் பலர் ADHD எனும் கவனக் குறைபாட்டு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகின்றனர். உண்மையில் பாடங்கள் அலுப்புத் தட்டுவதனாலேயே அவர்களுடைய மனங்கள் அவற்றில் கவனஞ் செலுத்தாது அலைகின்றன. தம் உடலின் ஓமோன்கள் தீவிரமாய்ச் செயற்படும் போது, முந்திய காலத்து இளம் ஆண்களும் பெண்களும் புனிதமான திருமண உறவினூடாகத் தம் உணர்வுகளைத் திருப்திப் படுத்திக் கொண்டனர். ஆனால் இன்றோ, திருமணம் தாமதமாவதால் உடலின்பத்திலிருந்து விலகியிருப்பதற்குப் பதிலாக திருமணத்துக்குப் புறம்பான முறையில் குழந்தை பெறுகின்றனர் அல்லது குழந்தைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் கருச்சிதைவு நிலையங்களை நாடுகின்றனர்.

இப்பிரச்சினைகளுக்கான சட்டரீதியான பரிகாரங்கள் இந்நூலின் பரப்பிற்கு அப்பாற் பட்டனவாகும். எனினும், இன்றைய நவீன சமுதாயம் செய்திருக்கும் தவறுகளைப்

பெற்றார் செய்யாதிருப்பது முக்கியம். இளைஞர்களையும் யுவதிகளையும் சிறு பிள்ளைகள் போல் நடத்தாதீர்கள். உங்கள் வேலைத் தளத்தில் உங்களோடு பணி புரியும் இள வயதுச் சகாக்களை நடத்துவது போல் அவர்களையும் நடத்துங்கள். அவர்களுக்கு வழிகாட்டலும் அனுபவமும் தேவை என்பதை மறக்காதீர்கள். அதேவேளை அவர்களுக்கு மரியாதையும் கடமைப் பொறுப்பும் வழங்கப்பட வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் முடிந்தளவு பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்ற வாய்ப்பளியுங்கள். சில நிதிப் பொறுப்புக்களைக்கூட அவர்களுக்கு வழங்குங்கள். தொழில் உலகைப் பற்றிப் பரிச்சயம் பெறுவதற்கும் வருமானம் பெறுவதற்கும் ஏற்ற வகையில் வார இறுதித் தொழில் ஒன்றைச் செய்ய இடங்கொடுங்கள்.

எமது பதின்மவயதுப் பிள்ளைகளிலும் எம்மிலும் கோபத்தின் விளைவு

கோபம் கொஞ்ச நேரப் பைத்தியம்

பதின்மவயதினரில் ஏற்படும் கோபமே பெற்றார் சமாளிப்பதற்குச் சிரமப்படுகின்ற பிரதான மனவெழுச்சிப் பிரச்சினையாக இருக்கிறது. இரண்டு எடுத்துக் காட்டுக்களைப் பயன்படுத்தி இது பற்றிக் கீழே விளக்கப்பட்டுள்ளது.

உதாரணம் 1: பரீதா 9ம் வகுப்பில் படிக்கிறாள். எல்லாமே அர்த்தமற்றது என அவள் நினைக்கிறாள். எவ்வளவுதான் முயற்சித்தாலும் எதுவும் தனக்கு ஒத்துப் போகாதது போல் விளங்கியது. இரண்டு நாட்களுக்கு முன் பள்ளிக்கூட நாடகமொன்றில் நடிக்க முன்சென்றாள். ஒத்திகையின் போது மேடையில் பேச வேண்டிய வசனங்களை மறந்து மரம் போல் நின்று விட்டாள். இப்போது பள்ளிக்கூடத்தில் அனைவருக்கும் அச்செய்தி எட்டி யிருக்கும். நிச்சயமாக அவர்கள் அவளைப் பற்றி ஏளனமாகச் சிரித்துக் கொண்டிருப்பார்கள். நடந்தது பற்றித் தனக்குள்ள அவமான உணர்வினை மற்றவர்கள் அறிந்து கொள்ள இடம் கொடுக்கக்கூடாது என அவள் நினைத்தாள். 'அவள் ஒன்றுக்கும் லாயக்கில்லாதவள்; எதற்கும் பொருத்தமற்றவள்' என அவளைப் பற்றி மற்றவர்கள் நினைப்பது சரியென்று அவளுக்குத் தெரியும் . ஆனால் அவர்கள் எல்லோரையும் பரீதா வெறுக்கிறாள்.

உதாரணம் 2: நிஹால் தன் படுக்கையறைச் சுவருக்குக் கைகளை ஓங்கிக் குத்தினான். ஆனால், அது போதாது. மேசையிலிருந்த தேனீர்க் கோப்பையைத் தூக்கி எறிந்தான். அது உடைந்து அதிலிருந்த தேனீர் சுவரிலும் தரை விரிப்பிலும் சிதறியது. ''நீங்க சொல்கிற மாதிரி எல்லாம் நான் ஆட முடியாது'' என அவன் கூச்சலிட்டான். ''உங்களோடு எங்கும் போக நான் வர மாட்டேன்; எனக்கு வேண்டியதைத்தான் நான் செய்வேன்'' என்று கூறியவாறு வீட்டுக்கு வெளியே ஓடினான். ''இங்கே வா'' என்று அவனை அழைத்தவாறு அவனது தந்தை பின்னால் ஓடினார். அதற்குள் அவன் தனது சைக்கிளில் ஏறி எங்கோ பறந்து விட்டான். நிஹாலுக்கு அவன் தந்தை மீது கடுமையான கோபம். அவரோடு உறவினர்களைப் பார்க்கச் செல்வதைவிட முக்கியமான சோலிகள் அவனுக்கு இருந்தன. அதற்கான திட்டங்களை அவனும் அவனது நண்பர்களும் வைத்திருந்தனர். அவனது வாழ்க்கையைக் கட்டுப்படுத்தத் தந்தைக்கு இடம் கொடுக்க முடியாது. ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்தால் கிடைக்கும் சுகத்தை அவன் அறிந்திருந்தான்.

இந்த இருவரிடமும் காணப்படும் பொது இயல்பு யாது?

அவர்கள் கோபத்துடன் போராடுகிறார்கள். அவர்களுக்குத் தேவையானவை கிடைப்பதில்லை. அவர்கள் நினைக்கின்றவாறு விவகாரங்கள் அமைவதுமில்லை. அவை தம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை உணரும் போது அவர்களுக்குச் சிலர் மீது கடும் வெறுப்பும் எதிர்ப்புணர்வும் ஏற்படுகின்றன.

கோபம் என்பது ஓர் உணர்வே அன்றி நடத்தையல்ல.

கோபம் பல வடிவங்களை எடுக்கிறது. சாதாரண எரிச்சல், வெறுப்புணர்வு என்பன முதல் கடுமையான கோபாவேசம் வரையும் அது வேறுபடலாம். இக்கோப வடிவங்களின் வெளிப்பாடே நடத்தையாக எமக்குத் தெரிகிறது. பரீதா தனது கோபத்தை அமுக்கிக் கொண்டு ஒதுங்கிப் போகிறாள். நிஹால் எதிர்த்து நின்று பொருட்களைச் சேதப்படுத்துகிறான். அவர்கள் தமது கோபத்தின் மூல காரணத்தை அறிந்து கொள்ளத் தீர்மானிக்கும் வரை இந்நடத்தை நீடிக்கலாம்; அல்லது மேலும் மோசமடையலாம்.

கோபம் தீங்கானதாக அல்லது ஆரோக்கியமானதாக அமையலாம்.

கோபம் என்பது அச்சம் ஏற்படுத்தக் கூடிய மனவெழுச்சியாகும். அதன் எதிர்மறை வெளிப்பாடுகளாக உடல் மற்றும் வார்த்தை சார்ந்த வன்முறை, தப்பெண்ணம், தீங்கான வம்புப் பேச்சு, சமூக விரோத நடத்தை, இடித்துரைத்தல், போதைப் பொருட்களுக்கு அடிமைப்படுதல், ஒதுங்கிப் போதல், உள- உடல் கோளாறுகள் போன்றவை இருக்கலாம். இவை வாழ்க்கையை நாசப்படுத்தி, உறவுகளை அழித்து, மற்றோருக்குத் தீங்கிழைத்து, வேலையைச் சீர்குலைத்து, சிந்தனையை மயக்கி, உடலாரோக்கியத்தைப் பாதித்து, முழு எதிர்காலத்தையும் சிதைத்து விடக் கூடும்.

ஆனால், இதில் சாதகமான அம்சமொன்றும் உண்டு. பிரச்சினையொன்று இருக்கிறது என்பதை அக்கோபம் எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக, கோபம் என்பது பயத்தின் காரணமாக உருவாகின்ற துணை மனவெழுச்சியொன்றாகும். கோபத்திற்கு அடிப்படையான காரணங்களை இனங்கண்டு தீர்வு காண முயல்வதற்கு அது தூண்டுகோலாக அமைகிறது.

எமது பதின்மவயதுப் பிள்ளை கோபமுறும் போது நாமும் கோபமடைதல்

பதின்ம வயதினர் பல்வேறு மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். சுய அடையாளம், உறவுகள், பிரிவுகள், நோக்கங்கள் முதலியன தொடர்பான கேள்விகள் அவர்களை அரித்துக் கொண்டே இருக்கும். பதின்ம வயதினரின் சுயாதீனம் அதிகரிக்கும் போது அவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் இடையிலான உறவும் மாற்றமடைகின்றது.

இவற்றின் விளைவாகப் பதின்மவயதினரின் உள்ளத்தில் விரக்தியும் குழப்பமும் உருவாகும். இது கோபத்திற்கு வழி வகுக்கும். அக்கோபத்திற்கு அவர்களும் பெற்றார்களும் நடத்தையால் எதிர்வினை காட்டுவார்கள். எனவே, நாம் எமது நடத்தையை மாற்றிக் கொள்ள முயற்சிக்காவிடில் பதின்மவயதினரின் நடத்தையை மாற்றுவதற்கு நாம் உதவ முடியாது. நாம் ஒருவருக்கொருவர் எதிர்த்தாக்கம் காட்டாமல் புரிந்துணர்வோடு செயற்படுவதே முக்கியம். இந்நிலையில் கோப உணர்வை அடக்கியாண்டு அதனை ஆக்கபூர்வமான முறையில் வெளிப்படுத்துவதே சிறந்தது.

கோபத்திற்கான காரணங்கள்

துஷ்பிரயோகம் மனக்கவலை போதைப்பொருட் பாவனை
சோகம் மனச்சோர்வு குடிப்பழக்கம் உளக்காயங்கள்

எமது பதின்மவயதுப் பிள்ளைக்காகவும் எமக்காகவும் நாம் செய்யக்கூடியவை

உங்கள் பதின்மவயதுப் பிள்ளைக்குச் செவிமடுங்கள். பிள்ளையின் உணர்வுகள் பற்றிக் கவனம் செலுத்துங்கள். பிள்ளையின் நிலைமைகளை அதன் கண்ணோட்டத்தில் விளங்கிக்கொள்ள முயற்சியுங்கள். ஏசுவதனாலும் குறை கூறுவதனாலும் உங்கள் இரு தரப்பினர்க்கும் இடையில் பல சுவர்கள் எழும்பித் தொடர்பாடல் முற்றாக இல்லாமற் போகலாம். நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை அவர்களுக்குக் கூறுங்கள். யதார்த்தமான விடயங்களை மாத்திரமே பேசுங்கள்; தற்போதைய நிலைமைக்கே முக்கியத்துவம் கொடுங்கள். உங்கள் அன்பைக் காட்டுங்கள்; அவர்கள் மீது அக்கறையும் கரிசனையும் கொண்டிருக்கிறீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள். எல்லோரும் வெற்றி பெறும் வகையில் தீர்வொன்றைக் காணுங்கள். ஏற்படும் கோப உணர்வு காரணமாக வன்முறையான நடத்தை விளையாமல் காத்துக் கொள்ளுங்கள்.

வன்முறை, நீடித்த பகைமை, மனத்தளர்ச்சி, தற்கொலைக்குரிய ஆபத்து முதலியன காணப்படின் உங்கள் பதின்மவயதுப் பிள்ளைக்கும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நிபுணர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

"மற்றவர்கள் அளவுக்கதிகமாகப் பேசுகிறார்கள்" என நாம் குற்றம் சுமத்துகிறோம். எனினும் அவர்கள், "அளவுக்கதிகமாகச் செவிமடுக்கிறார்கள்" என எப்போதாவது நாம் குற்றம் சுமத்துகிறோமா?

செவிமடுத்தல் என்பது கரிசனை காட்டுதலாகும். நாம் எவ்வளவு சத்தமாகப் பேசுகிறோமோ அவ்வளவு விரைவாக எமது பிள்ளைகள் செவிமடுத்தலை நிறுத்திக்கொள்கின்றனர்.

சிறந்த தொடர்பாடல் பற்றிய சில கோட்பாடுகள்

ஓர் இலட்சிய உலகில் சகல விடயங்களும் திட்டமிட்டபடி பிசகின்றி நிறைவேறும். ஆனால், யதார்த்த உலகில் அவை பிசகிப் போகலாம். சரியான தொடர்பாடல் இல்லாவிடில் பெற்றார் அமைத்துக் கொண்ட இலக்குகளும் அவர்கள் பிரயோகிக்க முயற்சிக்கும் கோட்பாடுகளும் தம் குடும்பத்திற்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் தவறிப் போகும். இவ்வாறு விடயங்கள் தவறிப் போகும் போது கோபம், விரக்தி, ஏமாற்றம் முதலியன தலை தூக்காமல் காத்துக் கொள்ளுங்கள். பிரச்சினைக்குரிய விடயங்கள் பற்றி அமைதியாக அலசி ஆராய்வதோடு நல்ல தொடர்பாடலையும் அமுல் படுத்துங்கள்.

சிறந்த தொடர்பாடலுக்காகப் பிரயோகிக்கப்படக் கூடிய சில கோட்பாடுகள் உள்ளன. முன்பள்ளிப் பருவம் முதல் பதின்மவயது வரை பிள்ளைகள் வளர்ச்சியடையும் போது தலை தூக்கக்கூடிய கோபாவேசங்கள், அதிகாரப் போராட்டங்கள் போன்றவற்றிற்குத் தீர்வு காண இவை உதவும்.

உங்கள் பிள்ளைகளைப் பேசவிட்டுச் செவிமடுங்கள். உடனடியாக அடிபணிந்து போகவோ பொறுமை இழக்கவோ வேண்டாம். அன்றைய தினம் பற்றிக் கூறுமாறு அல்லது ஒரு கதை சொல்லுமாறு அல்லது ஒரு பிரச்சினை பற்றிக் கலந்துரையாடுமாறு அவர்களை ஊக்குவியுங்கள். இடைமறித்துப் பேச முயற்சிக்க வேண்டாம். முன்னைய காலத்தில் கதை சொல்லுதல், கலந்துரையாடுதல் போன்ற வாய்மொழி சார்ந்த சம்பிரதாயங்கள் சமுதாய வாழ்க்கையின் ஒன்றிணைந்த அம்சங்களாக விளங்கின. இன்று

அவை தொலைக்காட்சி, திரைப்படங்கள், வீடியோ விளையாட்டுக்கள் முதலியவற்றால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளன. பேசுவதில் பல அனுகூலங்கள் உண்டு; அது, பிள்ளைகள் தன்னம்பிக்கையோடு தம் கருத்தை வெளிப்படுத்தவும் திருத்தமாகப் பேசவும் உதவுவதோடு, எந்தவொரு வகை விடயத்தையும் பற்றிப் பெற்றோருடன் கலந்துரை யாடுவதற்குரிய இயல்பான ஆற்றலையும் வளர்க்கிறது. பெற்றோர் என்ற வகையில் வேலைக் களைப்பின் காரணமாக உங்களுக்குப் பேசுவது கஷ்டமானதாக இருப்பினும், அது பயன் மிக்கதே. நீங்கள் உரையாடும் பிள்ளைகள் வளர்ந்த பின்னர் உங்களை வெறுமனே தமக்கு உணவும் உடையும் வழங்கியவராகக் கருதாமல் ஒரு மனித ஆத்மாவாக மதிப்பர். அதன் காரணமாகப் பிள்ளைகள் தாம் பெற்றோரோடும் வீட்டோடும் தொடர்புற்றவர்கள் என்பதை உணர்ந்து கொள்வார்கள்.. மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் போது எப்படி மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும் - குறிப்பாக, எவ்வாறு பெற்றோருக்கு மரியாதை செலுத்த வேண்டும் - என்பதை நல்ல தொடர்பாடல் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும்.

பிள்ளைகளை மட்டந்தட்டவோ, அவர்கள் முட்டாள்கள் என உணரச் செய்யவோ முயல வேண்டாம். எப்போதும் உங்கள் நடத்தை பற்றி விழிப்பாக இருங்கள். அது பணிவானதாகவும் கவனிப்பை வழங்குவதாகவும் கட்டுப்பாடுடைய தாகவும் இருக்க வேண்டும். பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையையும் பாதுகாப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கு இது அவசியம். இவ்வியல் புகள் அவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பின்னரும் அவர்களோடு பிணைந்திருக்கும்.

உங்கள் பிள்ளைகள் மத்தியில் அறிவுபூர்வ மான உரையாடல்களை ஆரம்பித்து வையுங்கள். அன்றாடப் பிரச்சினைகள் பற்றி விவாதித்து அபிப்பிராயங்களை ஒப்பீடு செய்யுங்கள். இது பிள்ளைகளில் விமர்சன ரீதியான சிந்தனையை வளர்ப்பதோடு அவர்களது அறிவாற்றலின் வலிமையையும் அதிகரிக்கச் செய்யும். பிள்ளைகளின் விவேகத்தைக் குறை மதிப்பீடு செய்ய வேண்டாம். அதே போன்று பல்வேறு விடயங்கள் தொடர்பான அவர்களது கருத்துக்களை மறுத்தரைக்கவும் வேண்டாம்.

இராப்போசனம் உட்கொள்ளும் நேரம் கலந்துரையாடலுக்கு ஏற்றது. பெற்றார் TVஐ நிறுத்திவிட்டு மேசையிலோ அல்லது தரையில் அமர்ந்தோ கூட்டாக உண்ணும் பழக்கத்தை அறிமுகப்படுத்தி வைத்தால் பிள்ளைகள் வளர்ந்த பின்பு வாழ்க்கை மிக இலகுவானதாக அமைந்து விடும். TVயினால் கவனம் ஈர்க்கப்படும் போது ஆழமான உறவுகள் வளர்வது தடைப்படுகின்றது. குடும்பப் பிணைப்பை அனுபவித்து மேலும் விருத்தியாக்க வாய்ப்பளிக்கும் சாப்பிடும் நேரங்கள் குறிப்பாக முக்கியமானவை.

கோபப் படுவதன் மூலம் அல்லது பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயமுறுத் தும் உத்திகளைக் கையாள்வதன் மூலம் ஒரு நிலைமையின் மீதுள்ள உங்கள் ஆதிக்கத்தை இழந்து விடாதீர்கள். நீங்கள் அமைதியடையும் வரை பேசாமலிருப்பதே ஏற்றது.

இந்த 21ம் நூற்றாண்டிலும் கூட சில தாய்மார் தமது பிள்ளைகளை அச்சுறுத் துவதற்காகக் கற்பனையான பிசாசுகளையும் அரக்கர்களையும் பயன்படுத்துகின்றனர். இரவில் வீட்டை விட்டு வெளியேறுவது போன்ற சில செயல்களைத் தடுப்பதற்காகவே இவ்வாறு செய்கின்றனர். தம் பிள்ளைகளைப் பயமுறுத்திக் கட்டுப்படுத்துவதற்காகத் தாய்மார் பல்வேறு பெயர்களில் பூச்சாண்டிகளையும் பேய்களையும் உருவாக்கிக்

கொள்கின்றனர். இப்படியான அச்சுறுத்தல் முறைகள் பிள்ளைகளை வீட்டில் அடக்கி வைக்கவும் அவர்கள் தேவையற்ற ஆபத்துக்களில் சிக்கிக் கொள்ளாமல் தடுக்கவும் உதவிய போதிலும், இவை பிள்ளைகளின் உள்ளங்களில் அர்த்தமற்ற பயங்களைத் தோற்றுவிக்கலாம். இருள், தனிமை, சிறிய அறைகள், மிருகங்கள், இடிமுழக்கம், மின்னல், அந்நியர்கள், பாம்புகள் முதலியன பற்றிய அச்ச உணர்வோடு அவர்கள் வளர்வார்கள். கற்பனைப் பூச்சாண்டிகளும் பேய்களும் பொய்யானவை என வளர்ந்த பின் அவர்கள் உணர்ந்து கொண்டாலும் அவை தொடர்பாக அவர்களது உள்ளத்தில் மனவெழுச்சி மற்றும் உளவியல் சார்ந்த சேதங்கள் நடந்து முடிந்திருக்கும். பெற்றாரிடம் ஆழமாகப் பகுத்தாய்ந்து பார்க்கும் ஆற்றல் இல்லாமையும் பொருத்தமான மாற்று முறைகளை விருத்தி செய்வதற்குப் பொறுமை இல்லாமையும் மேற்சொன்ன அச்சுறுத்தல் முறைகளை அவர்கள் கைக்கொள்வதற்குரியகாரணங்களாக இருக்கின்றன.

பிள்ளைகளுடன் உரையாடும் போது அவர்களது மட்டத்துக்கு இறங்கிப் பேசுங்கள். ஒரு பூதம் போல் அவர்களுக்கு மேலாக ஓங்கி நிற்காதீர்கள். அவர்கள் மீது பாசத்தைக் காட்டுங்கள். நீங்கள் பேசும் போது உங்கள் கையை அவர்களது கையின் மீது மெதுவாக வையுங்கள் அல்லது பாசத்தோடு அவர்களைத் தொடுங்கள். இப்படிச் செய்தால் அவர்களுக்கும் உங்களுக்கும் இடையில் பிணைப்பொன்றிருப்பதை அவர்கள் தொடர்ந்து உணர்வார்கள். அத்தோடு, தமது உணர்வுகளை உங்களுக்கு வெளிப்படுத்தப் பழகுவார்கள்.

.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 29: பெற்றாருக்கும் பதின்மவயதுப் பிள்ளைகளுக்குமான கேள்விகளும் பதில்களும்.

கோபத்தை இனங்கண்டு முகாமை செய்வதற்குரிய முதற்படி, நாம் எமது உள்ளங்களை ஆராய்வதாகும். பெற்றார்களும் பதின்ம வயதுப் பிள்ளைகளும் ஒன்றாக அமர்ந்து பின்வரும் வினாக்களைத் தம்மிடமே வினவி விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு நோக்கம் கலந்துரையாடலொன்றை ஆரம்பித்து வைப்பதே தவிர சரியான விடைகளைப் பெறுவதல்ல.

கோபம் எங்கிருந்து வருகிறது?

எவ்வாறான நிலைமைகள் கோப உணர்வை உருவாக்குகின்றன?

என்னுடைய சிந்தனைகள் 'கட்டாயமாக', 'எப்போதும்', 'ஒரு போதும் கூடாது' போன்ற அம்சங்களைக் கொண்டு ஆரம்பிக்கின்றனவா?

என்னுடைய எதிர்பார்ப்புக்கள் 'நியாயமற்றவையா'?

நான் எதிர் நோக்கும் தீர்வு காணப்படாத பிரச்சினை/ மோதல் யாது?

நோவினை, இழப்பு, பயம் போன்ற ஒன்றுக்கு நான் எதிர்த்தாக்கம் காட்டுகிறேனா?

கோபத்தின் உடல் ரீதியான சமிக்ஞைகளை நான் அறிந்திருக்கிறேனா? (உதாரணமாக, முஷ்டியை நெருக்குதல், மூச்சுத் திணறுதல், வியர்த்தல் போன்றன)

எனது கோபத்தை எவ்வாறு வெளிப்படுத்தினேன்?

எனது கோபம் யாரை/ எதனை இலக்காகக் கொண்டுள்ளது?

கோபத்தை என்னைத் தனிமைப் படுத்திக்கொள்ளும் வழியாக நான் பயன் படுத்துகிறேனா அல்லது மற்றவர்களை அச்சுறுத்தப் பயன்படுத்துகிறேனா?

நான் பயன் தரும் விதத்தில் தொடர்பாடல் செய்கிறேனா?

நான் கவனம் செலுத்துவது எனக்கு யாராவது செய்தவை பற்றியா? அல்லது நான் செய்யக்கூடியவை பற்றியா?

எனது உணர்வுகளுக்கு நான் பொறுப்புக் கூற வேண்டியவனாவது எப்படி?

எனது கோபம் எப்படி வெளியாகிறது என்பதற்கு நான் எவ்வாறு பொறுப்பாளி ஆகிறேன்?

எனது மனவெழுச்சிகள் என்னை ஆளுகின்றனவா? அல்லது நான் எனது மனவெழுச்சிகளை ஆளுகின்றேனா?

தொழிற்பாடு 30: பிரச்சினை தீர்க்கும் தொழிற்பாடு.

கீழே தரப்பட்ட சம்பவத்தில் வரும் இளைஞன் தொடர்பான பிரச்சினைகளை நீங்கள் எப்படிக் கையாள்வீர்கள் என்பதை இரண்டு அல்லது மூன்று சோடித் தம்பதியர்களை ஒன்று கூட்டிக் கலந்துரையாடச் செய்யுங்கள். பின்னர் உங்கள் சிந்தனைகளை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அணுகுமுறையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஓர் இளைஞன் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து தகாத பாலுறவில் ஈடுபடத் தனக்கு அனுமதி தருமாறு கேட்டான். கூட இருந்த நபித் தோழர்கள் அதிர்ச்சியடைந்து அவனை ஏசத் தொடங்கினர். ''அவரை என்னருகே அழைத்து வாருங்கள்'' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அருகே வந்தமர்ந்த பின்னர் அவ்விளைஞனிடம், ''நீர் அப்படியான ஒன்றை உமது தாய்க்கு/ உமது மகளுக்கு/ உமது சகோதரிக்கு/ உமது தந்தையின் சகோதரிக்கு/ உமது தாயின் சகோதரிக்கு விரும்புவீரா?'' என ஐந்து தொடர்க் கேள்விகளை நபியவர்கள் கேட்டார்கள். அந்த ஒவ்வொரு கேள்விக்கும் அவ்விளைஞன் ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக இல்லை; அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் என்னை உங்களுக்கு ஒரு கேடயமாக ஆக்கட்டும்'' என்று பதிலளித்தான். அந்த ஒவ்வொரு பதிலுக்கும் நபியவர்கள் ''அதுபோன்றே எவரும் அதனைத் தன் தாய்க்கோ/ மகள்களுக்கோ/ சகோதரிகளுக்கோ/ பெற்றாரின் சகோதரிகளுக்கோ விரும்ப மாட்டார்கள்'' என்று கூறினார்கள். பின்னர் அன்னார் தமது கையை அவன் மீது வைத்துப் பின்வருமாறு பிரார்த்தித்தனர்: ''யா அல்லாஹ்! இவருடைய பாவங்களை மன்னித்து விடுவாயாக! இவருடைய இதயத்தைப் பரிசுத்தப்படுத்துவாயாக! இவரது பாலுறுப்பினைப் பாதுகாப்பாயாக!'' (அஹ்மத்) அதன் பின்னர் அந்த இளைஞன் தகாத பாலுறவு பற்றி நினைத்துப் பார்க்கவே இல்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்த இளைஞனோடு கருத்துப் பரிமாறினார்கள். அவனுடைய கௌரவம், சுய மரியாதை முதலியவற்றைத் தட்டியெழுப்பி அவனிடம் சுய கட்டுப்பாடு உருவாக உதவினார்கள். அவனுக்கு ஏசுவதும் சத்தமிடுவதும் நரக நெருப்பினால் தண்டனை கிடைக்கும் என அவனை அச்சுறுத்துவதும் அந்த நிலைமையில் பலனளித்திருக்காது.

கோட்பாடுரீதியான அறிவுக்கும் மனித உணர்வுகள் பற்றிய உளவியல் ரீதியான ஆழமான புரிந்துணர்வுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டினை இப்பரிகார முறைமை எடுத்துக் காட்டுகின்றது. தனது பாலுணர்வுகள் பற்றி ஆராயும் போது தனக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு அவ்விளைஞன் தீர்வு தேடினான். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தண்டனைக்கும் நரக வாழ்வுக்கும் வழி கோலும் பாவங்களைப் பற்றி அவனுக்குப் போதிக்கவில்லை. பதிலாக அவனது உள்ளார்ந்த கௌரவ உணர்வையும் மனசாட்சியையும் தட்டி எழுப்பினார்கள். சமய மற்றும் ஒழுக்கம் சார்ந்த குறிக்கோள்களை அடைவதற்காக அன்னார் உளவியல் ரீதியான அணுகுமுறையொன்றைப் பிரயோகித்தார்கள்.

இது வெறுமனே தனியான சம்பவ ஆய்வொன்றல்ல. பிள்ளை விருத்தி தொடர்பான பிரச்சினை தீர்க்கும் அணுகுமுறையின் மீது கவனஞ்செலுத்தும் உறுதி மிக்க முறைமையொன்றின் அடிப்படைச் சிந்தனை இங்கு பிரதிபலிக்கிறது

இரண்டாம் பகுதி

பிள்ளை விருத்தி

அத்தியாயம் 8:
நன்னடத்தை உருவாக்கத்தில் தாமதம் வேண்டாம் **167**

அத்தியாயம் 9:
பிள்ளையின் ஆரோக்கியத்தைப் பேணுதல் **197**

அத்தியாயம் 10:
தாய்ப்பாலூட்டல் **233**

அத்தியாயம் 11:
பிள்ளையின் மூளை விருத்தி: கவனிக்கப்பட வேண்டியவை **251**

அத்தியாயம் 12:
ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் வளர்த்தல்: அவர்கள் வித்தியாசமானவர்களா? **277**

அத்தியாயம் 13:
பாலியல் கல்வி: நாம் எமது பிள்ளைகளுக்குக் கூறப்போவது யாது? **313**

அத்தியாயம்- 8

நன்னடத்தை உருவாக்கத்தில் தாமதம் வேண்டாம்

- அறிமுகம் 168
- விருத்திப் படிநிலைகள் 170
- ஜனரஞ்சகமான உளவியலை எந்த அளவுக்கு நம்பலாம்? 171
- அல்குர்ஆனின்படி மனித விருத்தியின் படிநிலைகள் 173
- கருக்கொள்ளல், பிரசவம், பிள்ளைப்பேறு என்பவற்றின் அற்புதம் 175
- மனித வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள்: பிறப்பு முதல் முதுமை வரை 177
    - பிறப்பு - 4 மாதங்கள் 177
    - 5 - 18 மாதங்கள் 178
    - 18 - 36 மாதங்கள் 180
    - 4 - 7 வருடங்கள் 182
    - 7 - 14 வருடங்கள் 183
    - 11 - 13 வருடங்கள்: பெண் பிள்ளைகளுக்கு மாதவிடாய் ஏற்படல் 184
    - 13 - 15 வருடங்கள்: ஆண் பிள்ளைகள் பருவமடைதல் 185
    - 14 - 21 வருடங்கள் 186
    - பதின்மவயதினரைப் புரிந்து கொள்ளல் 186
    - 21 - 35 வருடங்கள்: இளம் முதிர் பருவத்தினர் 190
    - 35 - 50 (அல்லது 60) வருடங்கள்: நடுத்தர வயதினர் 190
    - 60 வயதும் அதற்கு மேலும்: முதுமை 191
- விருத்தியின் படிநிலைகளைப் பயன்படுத்திக் கொள்ளல் 192
    - முதல் இரண்டு வருடங்களின் போதும் தாய்ப்பாலூட்டல் 192
    - அல்லாஹ்வை நேசித்தலும் அவனுக்குப் பயப்படுதலும் 192
    - மனனம் செய்தல் 193
    - தஃவாவின் அம்சங்கள் 193
    - குமரப் பருவத்தின் போது விமர்சனங்கள் பற்றிய உணர்திறன் 193
    - சுய அடையாளத்தின் உருவாக்கம் துரிதப்படுத்தப்பட வேண்டும் 193
    - இரண்டாம் மொழியொன்றைக் கற்றுக் கொள்ளல் 193
- மனனம் செய்தல்- மேற்குக்கும் கிழக்குக்கும் இடையில் 195
- தொழிற்பாடு 31 196

அறிமுகம்

சிறந்த முறையில் பிள்ளைகளை வளர்ப்பதற்குப் பெற்றார் தீர்மானித்துவிட்டால், அவர்கள் உடனடியாக நன்னடத்தை பற்றிய கல்வியை ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில், ஏனைய அனைத்தும் நிர்மாணிக்கப்படப் போகின்ற அத்திவாரம் அதுவே. இதற்குரிய வெகுமதி விலை மதிக்க முடியாததாக இருக்கும்.

நன்னடத்தையின் உருவாக்கம் குழந்தைப் பருவத்தில், பிள்ளை விருத்தியின் உருவாக் கலுக்குரிய காலத்தில் ஆரம்பிக்கிறது. ஒருவரின் ஆளுமைக்குரிய இயல்புகளின் பல அடிப்படை அம்சங்கள், பிள்ளைப் பருவத்தின் பல்வேறு கட்டங்களிலேயே உருவாக் கப்படுகின்றன. துரதிர்ஷ்டவசமாக இன்றுள்ள தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை, பிள்ளைகளையன்றி வளர்ந்தவர்களையே இலக்காகக் கொண்டுள்ளன. அதே போன்று, முஸ்லிம் நாடுகளில் காணப்படும் மனித விருத்தி தொடர் பான எழுத்தாக்கங்கள் உயர் பள்ளியில் அல்லது கல்லூரி மட்டத் திலும் அதற்கப்பாலும் உள்ள வளர்ந்தவர்களையே கருத்திற் கொண்டுள்ளன.

நன்னடத்தையை உருவாக்குவது என்பதனால் கருதப்படுவது யாது? மனித ஆளுமையின் அத்தியாவசியக் கூறுகளாகவுள்ள துணிவு, அன்பு, சுதந்திரம், நேர்மை, பொறுப்புணர்வு, ஆக்கத் திறன் போன்ற அடிப்படை இயல்புகள் குழந்தைப் பருவத்தின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே விருத்தியடையத் தொடங்குகின்றன. இவை பதிக்கப்பட்டுவிட்ட பின்னர் இவற்றை இல்லாமற் செய்வதோ மாற்றீடு செய்வதோ சிரமமாகி விடும். அதே போன்று வாழ்க்கையின் பிற் பகுதியில் அவற்றைப் பதியச் செய்வதும் சிரமமே.

ஒருவரின் எதிர்கால ஆளுமையின் அடிப்படையாக இச் சிறப்பியல்புகள் அமைவதனால் பெற்றார் தம்மால் முடிந்த அளவுக்கு இவற்றைப் போஷித்து விருத்தி செய்வதற்காகத் தமது காலத்தையும் முயற்சியையும் அர்ப்பணிக்க வேண்டும். வாழ்க்கை யில் வெற்றியடையத் தேவையான முக்கிய பண்புகளாக அறிவு, அனுபவம், திறன்கள் முதலியன விளங்கிய போதிலும் பிள்ளை வளர்ந்த பின்பும் அவை விருத்தி செய்யப்படலாம். இவை, மேற்சொன்ன அடிப்படை இயல்புகளை மேலும் தூய்தாக்கி பிள்ளைகள் சிறந்த, விவேகம் மிக்க மனிதப் பிறவிகளாக உருவாவதற்கு ஏற்ற வகையில் வழிகாட்டி வளப்படுத்துகின்றன.

இயல்பிலேயே கோழையாக உள்ள ஒருவர், வளர்ந்த பின் துணிச்சல் பற்றிய பாட நெறியொன்றைப் படித்து விட்டுத் திடீரெனத் தைரியசாலியாக மாறிவிட முடியாது. அதே போன்று இயல்பாகவே வெறுப்பும் குரூரத் தன்மையும் கொண்ட ஒருவர், அன்பையும் கருணையையும் போதிக்கும் நூல்களை வாசித்துவிட்டுத் திடீரென அன்பும் கரிசனையும் உள்ளவராக மாறவும் முடியாது. நேர்மை பற்றி அறிவுரை கேட்டவுடன் ஒரு பொய்யன் சுயமாகவே நேர்மை உள்ளவனாகவும் நம்பத்தகுந்தவனாகவும் மாறிவிடுவதில்லை. பெரும் பாலானவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய ஆளுமையின் அடிப்படை இயல்புகள் உருவாக்கப்பட்ட பின்னர் அவற்றை மாற்றியமைப்பது கஷ்டமாகிவிடும். எனவே, மிகச் சிறந்த பண்புகளை மனதில் பதியச் செய்வதற்கு மிக இலகுவான, உகந்த வழி பிள்ளைப் பருவத்தின் உருவாக்கலுக்குரிய காலத்தில் அதனைச் செய்வதாகும்.

அபூ பக்ர் அல் ஸித்தீக் (றழி), உமர் இப்ன் அல் கத்தாப் (றழி), காலித் இப்ன் அல் வலீத் (றழி), மற்றும் ஏனைய நபித் தோழர்களின் எடுத்துக் காட்டுகள் இங்கு கவனிக்கத் தக்கவை.

துணிவு, நம்பத்தகவு, நேர்மை, தலைமைத்துவம் முதலிய பண்புகள் இவர்களிடம் ஏற்கனவே இருந்தன. அவர்களுடைய பிள்ளைப் பருவத்தில் அவை போஷித்து வளர்க்கப்பட்டிருந்தன. இறை நம்பிக்கை, விவேகம், அறிவு என்பவற்றை வழங்கிய இஸ்லாம், அவர்களுடைய ஆளுமையின் இப்பண்புகளை மேலும் மேம்படுத்திவிட்டது. சிறந்த செயல்நோக்கம் பற்றிய உணர்வுகளினால் அவர்களது உள்ளங்களைத் தூண்டி, அவர்களது வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தத்தையும் உலகக் கண்ணோட்டத்தையும் குறிக்கோளையும் இஸ்லாம் வழங்கியது. அவர்களுடைய பண்புகளின் உறுதிப்பாடு அவர்கள் புதிய சமயத்தைத் தழுவிய பின்னர் நலிவடையவில்லை. மாறாகத் தொடர்ந்தும் வலிமை பெற்றது. நபிமார்களுக்கும் ஏனைய மனிதப் பிறவிகளுக்கும் பொருந்தக்கூடிய இத்தோற்றப்பாட்டினை அல் குர்ஆன் விளக்குகிறது. மனிதன் வளர்ந்து நடுத்தர வயதை அடைந்ததும் இறைவன் அவனுக்கு அறிவையும் ஞானத்தையும் வழங்குவதாக அது கூறுகிறது.

> அவர் (மூஸா) வாலிபத்தையடைந்து, (வாழ்க்கையில்) அவர் நிறைவு நிலையைப் பெற்ற போது அவருக்கு ஞானத்தையும் அறிவையும் நாம் வழங்கினோம். இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் (நற்)கூலி வழங்குவோம். (அல் குர்ஆன் 28: 14)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> மனிதர்கள் உலோகங்களைப் போன்றவர்கள். இஸ்லாத்துக்கு முந்திய காலத்தில் சிறப்புற்று இருந்தவர்களே இஸ்லாத்தைச் சரிவரப் புரிந்து கொண்ட பின்னர் இஸ்லாத்திலும் சிறப்புடையவர்களாக மாறினர். (அல் புகாரி)

ஒரு பொலிஸ் அதிகாரியும் சரி, மோசமான குற்றவாளியும் சரி, தான் சார்ந்த துள்ள குழுவிற்குப் பயனுள்ளவனாகவும் தன் செயலில் திறமை காட்டுபவனாகவும் இருக்க வேண்டுமாயின் அவன் துணிச்சலையும் குழுப்பற்றையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால், பொலிஸ் அதிகாரியோ இச்சிறப்பியல்புகளைச் சமூகத்தின் நலனுக்காகப் பயன்படுத்தும் அதேவேளையில் குற்றவாளியோ அவற்றைத் தீங்கு செய்யப் பயன்படுத்துகிறான். துணிச்சலும் பற்றும் அவசியமானவையாக இருப் பினும், அவை பெறுமானம் சார்ந்தனவாக இருந்தால்தான் பயன் தரும். இல்லா விடில் அவை தீங்கையும் அழிவையுமே ஏற்படுத்தும்.

பலவிதமான விடயங்கள் குறித்தும் இஸ்லாம் பொதுவான வழிகாட்டலை வழங்கியுள்ளது. எனினும், குடும்ப விவகாரங்களைப் பொறுத்தமட்டில் அது விவரமான



வழிகாட்டலைத் தந்துள்ளது. பூரணமான குடும்ப அமைப்பொன்றை இஸ்லாம் எடுத்துக் காட்டியுள்ளதோடு, வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தல், திருமண உறவில் இணைதல், திருமண ஒப்பந்தத்தை எழுதுதல் (அதில் பாதுகாவலர்களினதும் சாட்சி களினதும் பங்களிப்பு) என்பன பற்றித் தெளிவான வழி காட்டலைத் தந்துள்ளது. அத்தோடு நின்று விடாமல் பாலியல் சார்ந்த நடத்தை, கர்ப்பம், கருக்கலைப்பு, மகப்பேறு, குழந்தைக்குப் பெயரிடுதல், வம்சாவளி, தாய்ப்பாலூட்டல், குழந்தைப் பராமரிப்பு, விருப்ப ஆவணங்கள், பாதுகாவலராய் இருத்தல், கல்வியும் பயிற்சியும், பால் வேறுபாடுகளும் ஒற்றுமைகளும், பரம்பரை உரிமை, சிறுவர் உரிமைகளும் கடமைகளும், பால்ய குற்றச் செயல்கள், அனாதைகளைப் பராமரித்தல், தத்தெடுத்தல், விதவை நிலை, பெற்றாரின் பங்களிப்பும் பிள்ளை வளர்ப்பும், விவாகரத்து, மண விலக்குக் கட்டணம், விவாகரத்தின் பின்னர் அல்லது கணவனை இழந்த பின்னர் காத்திருக்க வேண்டிய காலம், மாத விடாய், உடன் பிறப்புக்களுக்கிடையிலான உறவுகள், விரிந்த குடும்பம், குடும்பப் பிணைப்புக்கள், மூத்த பெற்றார்கள், பேரப்பிள்ளைகள், அயலவர்கள், ஆடை அணிதலின் ஒழுக்கம் முதலிய இன்னோரன்ன விடயங்கள் பற்றி அது வழிகாட்டலை வழங்கியுள்ளது.

பிள்ளை வளர்ப்பானது எதிர்காலம் சார்ந்த முயற்சியொன்றாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில், ஆக்கரீதியான சிந்தனையாளர்கள், அறிவு மிக்க மேதைகள், கடின உழைப் பாளிகள், துணிவு மிக்க போர் வீரர்கள், வலிமை மிக்க விளையாட்டு வீரர்கள், மனித நாகரிகத்துக்குத் துணை செய்யும் மகத்தான உலகத் தலைவர்கள் போன்ற உன்னதமான சமூகப் பணியாளர்களைத் தயாரிப்பதற்கு அதுவே பொறுப்பாக இருக்கின்றது.

பின்வரும் பகுதிகள் நன்னடத்தையைக் கட்டியெழுப்புவதிலும், கல்வி விருத்திச் செயற்திட்டங்களிலும் பெற்றார் தம் கவனத்தைக் குவிக்க உதவுகின்றன.

பிள்ளை என்பது ஒரு வித்தியாசமான புதிர்

பிள்ளையின் உலகமானது வளர்ந்தவர்களால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வியப்புக்குரியதாக இருக்கிறது. பெற்றாரோ சிந்தனையாளர்களோ தத்துவஞானிகளோ உளவியலாளர்களோ பயிற்றுவிப்பவர்களோ மேதைகளோ கற்றுத்தேர்ந்திட முடியாத அளவுக்கு அது சிக்கற் தன்மையானது.

-அபூ அல்ஹுப்

விருத்திப் படிநிலைகள்

தமது பிள்ளைகள் ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத்துக்குப் படிப்படியாக விருத்தியடையும் முறையை விளங்கிக் கொள்ளப் பெற்றோருக்கு உதவும் வகையில் மனித விருத்தியின் படிநிலைகள் பற்றி இந்தப் பகுதி ஆராய்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய பிள்ளையின் விசேட தேவைகள் பற்றி அவர்கள் நன்கு புரிந்து கொள்ள முடியும். வளர்ச்சிப் பருவத்தின் போது மனித உடலும் உள்ளமும் கடந்து செல்லும் விருத்தி நிலைகளை எடுத்துக் காட்டும் அதே வேளையில், குறிப்பிட்ட ஒவ்வொரு கட்டத்துடனும் தொடர்புடைய இயல்பு களைப் பிள்ளை வளர்ப்பின் போது எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள லாம் என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

உதாரணமாக, அதிகமதிகம் உண்ணுமாறு பிள்ளைகளைப் பெற்றார் வற்புறுத் துவதையும் அதனைப் பிள்ளைகள் வம்பாக எதிர்த்து நிற்பதையும் காண்கிறோம். எனினும், பிற்காலத்தில் திடீரென உணவில் விருப்பம் அதிகரித்து அவர்கள் தாமாகவே அதிகமாக

உண்ணத் தொடங்குகின்றனர். இது பெற்றோரின் வற்புறுத் தல் காரணமாக நிகழ்வதல்ல; இயல்பான வளர்ச்சியே இதற்குக் காரணமாக அமைகிறது. அதே போன்று பதின்ம வயதினர்கள் தம் பெற்றோருக்கும் சமூக சூழலுக்கும் எதிராகத் திடீரெனக் கிளர்ந்தெழக் கூடும். எனினும், அவர்கள் வளர்ச்சியடையும் போது, இயற்கையான விருத்திப் படிநிலை களின் காரணமாக அவர்களது இம்மனப்பாங்கு அடங்கிப் போகின்றது. பிள்ளைகள் தம் விருத்தியின் மைல்கற்களை அடைவது தொடர்பாகப் பெற்றார் மிக விழிப்புடன் இருக்க வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர். குறித்த காலத்தில் இம் மைல்கற்களை அடையாமல் போவது, பாரதூரமான ஆரோக்கியப் பிரச்சினையொன்று இருப்பதைச் சுட்டிக்காட்டுவதாக அமையலாம்.

இவ்விடயம் தொடர்பாகப் போதிய அறிவைப் பெற்றிருப்பதே பெற்றோருக்குரிய சிறந்த பாதுகாப்பு முறையாகும். குடும்ப வைத்தியரிடம் விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு அவர்கள் தயங்கக் கூடாது. அத்தோடு, தமது பிள்ளை ஒவ்வொரு வளர்ச்சிப் படியையும் குறித்த காலத்தில் அடையாமற் போனாலும் அது பற்றிக் கவலைப் படத் தேவையில்லை. குழந்தைகள் தமக்கே உரிய வேகத்தில்தான் விருத்தியடைகின்றன. ஒரு பிள்ளையின் விருத்தி பொதுவான மனித மரபணுக் கோலத்திற்கேற்ப நிகழ்ந்தாலும், ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானதே. வெற்றிபெற வேண்டுமாயின், பெற்றார் தம் பிள்ளைகள் பற்றிய தமது கனவுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களுடைய கனவுகளை நிறைவேற்ற உதவ வேண்டும். பிள்ளைகள் தம் பெற்றோரைப் போன்றவர்களல்லர். ஏனெனில், அவர்களுக்கென்று சுயாதீனமான ஆளுமையொன்று இருக்கிறது. பெற்றார் யதார்த் தத்தை யதார்த்தமாக ஏற்றுக்கொண்டு இயற்கையின் பொறுமை மிகு போக்கை அனு சரித்து நடப்பதே ஏற்றது.

ஜனரஞ்சகமான உளவியலை எந்த அளவுக்கு நம்பலாம்?

இன்று சமூகத்தில் காணப்படும் உளவியல் கோட்பாடுகளை முஸ்லிம்கள் வரவேற்று அங்கீகரித்தாலும், மனித விருத்தி மற்றும் நடத்தை தொடர்பான கோட் பாடுகள் விடயத்தில் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு காரணம், இவை தொடர்ந்து மாற்றமடைந்து கொண்டிருப்பதும், பல்வேறு விடயங்கள் தொடர்பாக உளவியலாளர்களுக்கு மத்தியில் இணக்கம் காணப்படாததும் ஆகும். இவ்விடயத்தில் முஸ்லிம்கள் வழி தெரியாது தத்தளிக்க வேண்டியதில்லை. ஏனெனில், அவர்களுக்கு இறை வெளிப்பாடுகளிலிருந்து தொடர்ந் தும் வழிகாட்டல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இது அவர்களைச் சரியான பாதையில் செலுத்துவதோடு, அவர்கள் முரண்பாடான அபிப்பிராயங்களுக்கிடையே ஊசலாடு வதையும் தவிர்க்கின்றது.

இதற்கு உதாரணமாக உளவியலாளர்கள் சிக்கிக் கொண்டுள்ள 'பரம்பரையா? சூழலா?' என்பது பற்றிய முடிவில்லா விவாதத்தைக் குறிப்பிடலாம்.

Wright *(1998)* என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்:

> "நல்ல பிள்ளையொன்றை வளர்த்தெடுப்பதற்குரிய முக்கிய காரணி பற்றிய தமது நூற்றாண்டு கால ஆய்வினை உளவியலாளர்கள் இனிக் கைவிட்டுவிடலாம். இதற்குக் காரணம், அக்காரணி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது என்பதல்ல; மாறாக, அப்படியெதுவும் இல்லை என்பதே. தமது பிள்ளையின் ஆளுமை விருத்தியில் எந்தவித முக்கியமான நீண்டகாலத் தாக்கத்தையும் பெற்றார் ஏற்படுத்துவதில்லை"

பிள்ளைகளிடையே ஆளுமையில் காணப்படும் வேறுபாடுகளில் பாதிக்கு மேற் பட்டவை மரபுரிமையினால் தீர்மானிக்கப் படுவதில்லை என Judith Harris (1998) என்பவர் வலியுறுத்துகின்றார். சுற்றாடற் செல்வாக்கின் முக்கியமான பகுதி வீட்டுக்கு வெளியிலேயே நிகழ்கிறது. அங்குதான் பிள்ளைகள் தம் சம வயதினரிடமிருந்து

பெறுமானங்களை உறிஞ்சிக் கொண்டு தன் சுற்றுச் சூழலில் தமக்கென ஓர் இடத்தை அமைத்துக் கொள்கின்றனர். இந்நியையில், முரட்டுத் தனமானவர் கள் என்றோ நல்லவர்கள் என்றோ கொடூரமானவர் கள் என்றோ அவர்களை அழைக்கத் தொடங்குவார் கள். இந்நிலையில் அவர்களுடைய ஆளுமைப் பண்புகள் இறுக்கமடையத் தொடங்கும். வீட்டுக்குள் பிள்ளைகளின் நடத்தையை வடிவமைப் பதற்குப் பெற்றோரால் முடியுமாயிருக்கலாம். எனினும், பரந்த உலகில் பிள்ளை வித்தியாசமான ஆளாகவே இருப்பான். அங்குதான் முளை விடப்போகும் வளர்ந்தவனின் வேர்கள் பதிந்திருக்கின்றன.

சிறந்த பிள்ளையொன்றை வளர்த்தெடுப்பதற்கு ஜனரஞ்சகமான உளவியல் வழங்குகின்ற வழிமுறை கள் எப்போதும் உண்மையானவையாக இருக்கும் எனக் கூற முடியாது. உண்மையில், ஒன்றாக வளர்க்கப்பட்ட இரு கரு இரட்டையர்கள், வெவ்வேறாக வளர்க்கப்பட்ட ஒரு கரு இரட்டையர் களை விட வித்தியாசமானவர்களாகவே காணப்படுகின்றனர். ஒருவர் குடும்பத்தில் எத்தனையாவது பிள்ளை என்பதும் முக்கியமான காரணியாக அமையலாம். இளைய பிள்ளைகள் பெற்றோரினால் வித்தியாசமான முறையில் நடத்தப்படுவது, மூத்த சகோதரர்களால் அடக்கி ஆளப்படுவது போன்ற 'நுண்- சுற்றாடல்' காரணிகளும் இதற்கு ஏதுவாக அமையலாம்.

அமெரிக்காவில் ஒரு பள்ளி மாணவன் தன் சகாக்களைச் சுட்டுக் கொன்றான். ஆனால், அவனுடனே வளர்ந்த அவனது சகோதரன் அவ்வாறு செய்யவில்லை. காரணம் என்ன? வீட்டில் அவனுக்கு அவனது சகோதரனை விடக் குறைந்த அன்பு காட்டப் பட்டதனாலும் சக மாணவர்களால் ஒதுக்கப் பட்டதனாலும் அவன் இவ்வாறு நடந்து கொண்டானா? பள்ளியில் சகாக்களினால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக, அவனது சகோதரனுக்குப் பயனளித்த அவனது பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு முறை, அவன் விடயத்தில் பயனற்றுப் போனதா? பிள்ளை வளர்ப்பு முறையானது பிள்ளையின் தேவைகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட வேண்டுமா? யாருக்கும் விடை தெரியாது போல் தோன்றுகிறது.

பிள்ளை வளர்ப்பு அதிக கவலை தருவதாக உள்ள இக்காலத்தில், பிள்ளைகள் மீது தமக்குள்ள செல்வாக்கைப் பெற்றார் அளவுக்கு மீறி மிகை மதிப்பீடு செய்து கொண்டு உள அமைதி பெற நாடுகிறார்கள். ஆனால், அது இருக்கிற மன அமைதியையும் சிதைத்து விடக்கூடும்.

பெற்றார் சற்று ஓய்ந்திருக்கலாம். ஏனெனில், இவ்வினாக்களுள் பலவற்றுக்கு விஞ்ஞானம் இன்னும் விடை தரவில்லை. தமது பிள்ளைகளுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை விஞ்ஞானம் சொல்லித் தரும் வரை எவ்வளவு காலத்திற்குப் பெற்றார் காத்திருக்கப் போகிறார்கள்? இதனால்தான் மனிதர்கள் இறைவனதும் அவனது தூதர்களதும் உறுதியான தெய்வீக வழிகாட்டலின் மீது நம்பிக்கை வைப்பது அவசிய மாகியுள்ளது. இதன் கருத்து உளவியல் கோட்பாடுகள் அனைத்தும் தூக்கி எறியப்பட வேண்டும் என்பதல்ல; மாறாக, பிள்ளை வளர்ப்பு விடயத்தில் குடும்பங்களுக்கு உதவு வதற்காக தெய்வீக வழிகாட்டல்களைக் கருத்திற் கொள்வது தொடர்பாகச் சிறந்த ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இறைவனைப் புறக்கணிக்கும் கோட்பாடுகள் மனித சமூகத்திற்கு நன்மையை விட அதிக தீமையையே விளைவிக்கின்றன. தெய்வீக வெளிப்

பாடுகளையும் மனித அறிவுத் தொகுதியையும் ஒன்றிணைப்பதன் மூலமே பிள்ளை வளர்ப்பு பற்றிய வினாக்களுக்கு விடை காண முடியும். இது தொடர்ச்சியானவொரு செயன்முறையாகவே இருக்கும்.

அல்குர்ஆனின் படி மனித விருத்தியின் படிநிலைகள்

மனித விருத்தியின் பல்வேறு படிநிலைகள் பற்றிக் கூறும் அல் குர்ஆன் வாக்கியங்களைக் கீழே தந்துள்ளோம்.

> ஆகவே, மனிதன் (தான்) எதிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அவன் கவனித்துப் பார்க்கவும். குதித்து வெளியாகும் (ஒரு துளி) நீரிலிருந்து அவன் படைக்கப் பட்டான். அது (ஆணின்) முதுகந்தண்டிற்கும் (பெண்ணின் மார்பகங்களுக்கு மேல்) நெஞ்செலும்புகளுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகிறது. (அல் குர்ஆன் 86: 5-7)

மனிதர்களே (இறந்த பின் உங்களுக்கு உயிர் கொடுத்து) எழுப்புவதைப் பற்றி நீங்கள் சந்தேகத்தில் இருந்தால், (அது பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.) நிச்சயமாக உங்களை (ஆரம்பமாக) மண்ணிலிருந்தும் பின்னர் (உங்களை) ஒரு துளி இந்திரியத்திலிருந்தும், பின்னர் இரத்தக் கட்டியிலிருந்தும், பின்னர் (நிறைவாக உருவம் கொடுக்கப்பட்டு) படைக்கப்பட்ட (அல்லது நிறைவாக உருவம் கொடுக்கப்பட்டு) படைக்கப்படாத தசைக் கட்டியிலிருந்தும் நாம் படைத்தோம் (என்ற நம் ஆற்றலை) உங்களுக்குத் தெளிவு செய்வதற்காகவே (இவ்வாறு விளக்குகிறோம்.) மேலும், நாம் நாடிய வைகளைக் கர்ப்பப் பைகளில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் (நிலைப்படுத்தி) தங்கி விடும்படி செய்கிறோம். பின்னர் உங்களைக் குழந்தையாக நாம் வெளிப்படுத்துகிறோம்; பின்னர் உங்கள் வாலிபத்தை நீங்கள் அடைவதற்காக (தக்க வளர்ச் சியைத் தருகின்றோம்.) இன்னும் உங்களில் (சிலர் பருவ வயதை அடையுமுன்பே) இறந்து விடுகிறவரும் இருக்கின்றனர் (அல்லது ஜீவித்திருந்து) யாவையும் அறிந்த பின்னர் ஒன்றும் அறியாதவர்களைப் போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயது வரையில் (உயிர் வாழ) விட்டு வைக்கப்படுபவரும் உங்களில் இருக்கின்றனர். மேலும், பூமியை வறண்டதாகப் பார்க்கிறீர்; அப்போது அதன் மீது நாம் மழையை இறக்கி வைப்போமானால், அது பசுமையாகி இன்னும் வளர்ந்து அழகான ஒவ்வொரு வகையிலிருந்தும் (உயர்ந்த புற் பூண்டுகளை) முளைப்பிக்கின்றது. (அல் குர்ஆன் 22: 5)

> அல்லாஹ், தான் ஒன்றையுமே நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலையில், உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளிலிருந்து உங்களை வெளிப்படுத்தினான்; அன்றியும் உங்களுக்கு செவிப்புலனையும் பார்வைகளையும் இதயங்களையும்- நீங்கள் (அவனுக்கு) நன்றி செய்வதற்காக ஆக்கியுள்ளான். (அல் குர்ஆன் 16: 78)

> அல்லாஹ்- எத்தகையவனென்றால், உங்களை (ஆரம்பத்தில்) பலவீனத்திலிருந்து அவன் படைத்தான்; பின்னர் பலவீனத்திற்குப் பிறகு (உங்களுக்கு) பலத்தையும் உண்டாக்கினான். அப்பால் (அப்)பலத்துக்குப் பின்னர் (முதுமையின்) பலவீனத்தையும் முதுமைப் பருவத்தையும் ஆக்கினான். தான் நாடியதைப் படைக்கிறான்; மேலும், அவனே யாவையும் நன்கறிந்தோன்; மிக்க ஆற்றலுடையோன். (அல் குர்ஆன் 30: 54)

நிச்சயமாக முதல் மனிதனைக் களிமண்ணின் மூலச் சத்திலிருந்து படைத்தோம். பின்னர், (அதற்கென உள்ள) ஒரு பாதுகாப்பான இடத்தில் (கர்ப்பப்பையில்) நாம் அவனை இந்திரியத் துளியாக்கினோம். பின்னர், அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாகப் படைத் தோம். பின்னர், அவ்விரத்தக் கட்டியை மாமிசத் துண்டாகப் படைத்தோம். பின்னர், அம்மாமிசத் துண்டை எலும்புகளாகப் படைத்தோம். பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர், நாம் அதனை வேறு படைப்பாக (முழு மனிதனாக) உருவாக்கினோம். ஆகவே, படைக்கிறவர்களில் மிக அழகானவனான (பெரும் பாக்கியங்களுக்குரிய) அல்லாஹ் உயர்வானவன். (மனிதர்களே!) பின்னர் நிச்சயமாக இறப்பெய்தக் கூடியவர்கள். பின்னர், மறுமை நாளின் போது நிச்சயமாக நீங்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவீர்கள். (அல் குர்ஆன் 23: 12-16)

மேலே கூறப்பட்ட படி படைப்பிலும் வளர்ச்சியிலும் பல்வேறு படிநிலைகள் காணப் படுகின்றன. அவற்றை நாம் பின்வருமாறு இனங்காணலாம்.

- தூசு - களி மண்ணின் அடிப்படைப் பொருள். இதிலிருந்தே மனிதர்கள் படைக்கப் பட்டனர். இது விஞ்ஞான சான்றுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. மண்ணாலேயே அவர்கள் படைக்கப் பட்டனர்; அவர்கள் மண்ணுக்கே திரும்புவர். மேலும், அதிலிருந்தே அவர்கள் மீள உயிர்ப்பிக்கப்படுவர்.

- *நஃப்ஸ் வாஹிதா*- முதல் சோடியான ஆதமும் ஹவ்வாவும் இந்தத் தனி ஆத்மாவிலிருந்தே உருவாக்கப் பட்டனர். அல் குர்ஆனில் '*ஸவ்ஜ்*' என்ற சொல், வாழ்க்கைத் துணை, சோடி, தம்பதி என்ற கருத்துக்களில் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பாக அவதானிக்கத் தக்கது.

- இனப்பெருக்கம்- முதற்சோடியில் ஆரம்பித்து இனப்பெருக்க முறை பின்வருமாறு அமைந்துள்ளது: *நுத்ஃபா*: கருக்கட்டிய முட்டை (விந்து + சூல்) → *அலகாஹ்*: அட்டை போன்ற (கொளுவி) → *முத்கா*: முளையம் (மென்று போடப் பட்ட பொருள்) → *இதாமத்*: (எலும்புகள்) → *லஹ்ம்* (தசை) எலும்புகளைப் போர்த்தியிருக்கும்.

- இன்னோர் உயிர் (*நுகம்*)- கர்ப்பத்தின் 4ம் மாதத்தின் பின்னர் முளையமாக விருத்தியடைந்து வாழ்வின் புதிய படிநிலையொன்றை- மனித வடிவத்தை- அடைகிறது. அந்த நுகம் இப்போது வெறும் சடப் பொருளாக இல்லாமல், ஆத்மாவைக் கொண்ட ஒரு பங்காளியாக மாறுகிறது. அதற்குத் தன் பெற்றோரின் பரம்பரை இயல்புகள் உரிமையாகின்றன. அது ஒரு விசேட பங்காளி. ஏனெனில், இந்நிலையில் அதற்கு உரிமைகள் உண்டு; ஆனால், கடமைப் பொறுப்புக்கள் இல்லை.

- குழந்தை (*திஃப்லன்*)- ஒரு மனிதப் பிறவியாகக் குழந்தை வடிவில் பிறக்கிறது. அது, அறிவில் சூனியமாகவும் தானாக எதையும் செய்ய முடியாத நிலையிலும் இருக்கும்.

- தாய்ப்பால் குடித்தல்- குழந்தை இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்குத் தாய்ப்பால் குடிக்கும். தாய்ப்பாலூட்டுதல் அல் குர்ஆனின் ஐந்து வாக்கியங்களில் உறுதியாக ஊக்குவிக்கப் பட்டுள்ளது.

- பூப்புப் பருவம்- நித்திரையில் விந்து வெளியேறுகின்ற அல்லது மாதவிடாய் ஏற்படுகின்ற வயதை அடைதல். வளர்ச்சியும் இலிங்க ஹோர்மோன்களின் விருத்தியும் ஏற்படுதல். இந்நிலையில் அவர்கள் இனம் பெருக்கிப் பெற்றோராக மாறக்கூடிய நிலையில் இருக்கின்றனர்.

- வாலிபம்- முதிர்ச்சியடைந்த ஆணாக அல்லது பெண்ணாக மாறுதல். முழு வலிமைக்குரிய வயது 18 முதல் 32 வரை என யூஸுஃப் அலி கூறுகின்றார். எனினும்,

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் 15 வயதை அடைந்த ஆண்களையும் யுத்தத்தில் ஈடுபட அனுமதித்தார்கள். ஒரு சிலர் மற்றவர்களை விடப் பிந்தி முதிர்ச்சி நிலையை அடையலாம். முதிர்ச்சியடைந்தவர்களைப் பொருத்த மட்டில் ஞானத்திற்குரிய வயது 40 முதல் நடுத்தர வயது முழுவதுமாகும்.

- முதுமை- பலவீனம் மிக்க முதுமை: இதன் போது ஞாபகமும் அறிவும் மங்கிப் போய் பலவீனம் அதிகரிக்கும். நிறைய அறிந்திருந்தவர் இறுதியில் ஒன்றுமே அறியாதவர் போல் மாறும் வகையில் அறிவு குறையும். இந்நிலையில் மனிதன் பலவீனமான நிலையில் இருந்து ஆரம்பித்து வலிமை நிலையையும் அடுத்து முழு வலிமையையும் அடுத்து பலவீனத்தையும் கடந்து இறுதியில் பலவீனம் மிக்க முதுமையை அடைகிறான்.
- மரணம்- இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட தவணை முடிந்ததும் மண்ணிலிருந்து ஆரம்பித்த மனித உடலானது மண்ணை அடைந்து மீள உயிர்ப்பிக்கப்படும் நாளுக்காகக் காத்திருக்கிறது.
- மீள உயிர்ப்பித்தல்- இதனோடு படைப்பின் வட்டம் பூர்த்தியாகிறது.

"(பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம்; பின்னர், அதிலேயே நாம் உங்களை மீள வைப்போம். மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்" (என்று அவனுக்குக் கூறும்படி செய்தோம்) (அல் குர்ஆன் 20: 55)

- முடிவிலா வாழ்க்கை- நாம் செய்த செயல்களுக்கும் இறைவன் காட்டும் கருணைக்கும் ஏற்ப சுவர்க்கத்திலோ அல்லது நரகத்திலோ முடிவின்றிக் கழித்தல். முடிவுள்ள வாழ்க்கையிலிருந்து முடிவில்லா வாழ்க்கை வரையான மனிதப் பிறவியின் வாழ்க்கை வட்டம் இத்தோடு பூரணமடைகின்றது.

அல்குர்ஆன் மேற்சொன்ன வித்தியாசமான படிநிலைகளைச் சரியாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. ஆரம்பத்தில் மனிதப் பிறவியே இருக்கவில்லை. பின்னர் இறைவன் தனி ஒரு மனிதனை (ஆத்மாவை) படைத்தான். அந்த மனிதனிலிருந்து அவனுக்கு ஒரு வாழ்க்கைத் துணையைப் படைத்தான். (இது எப்படி நிறைவேற்றப் பட்டது என்பதை அல் குர்ஆன் விளக்கவில்லை) பின்னர், அவ்விரு துணைகளும் திருமணம் செய்தனர். அடுத்து, புணர்தல் மூலம் உற்பத்தி செய்யும் புது முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதனையடுத்து கண்ணியத்திற்குரிய முறைசார் திருமண முறை ஏற்பட்டது. சமூகத்தின் மிக முக்கிய அம்சமான தந்தை, தாய், பிள்ளைகள் என்ற குடும்ப அமைப்பைப் பேணிக் காப்பதற்கு வழியமைக்கப் பட்டது.

கருக்கொள்ளல், பிரசவம், பிள்ளைப்பேறு என்பவற்றின் அற்புதம்

தந்தையின் விந்து தாயின் முட்டையைக் கருக் கட்டச் செய்யும் போது உருவாகும் புதிய கருக் கட்டிய முட்டையானது 'i' எழுத்தில் மேல் அமைந்துள்ள புள்ளியை விடப் பெரிதாக அமைந்திருக்காது எனவும் சில வாரங்களுக்கு அது மெல்லப்பட்ட சிறு பதார்த்தத் துண்டு போல் காணப்படும் எனவும் D'Oyen என்பவர் விளக்குகின்றார். நான்கு வாரங்கள் கடந்த பின்னர் அது கூடுதலான மனித இயல்புகளைக் காட்டும். அத்தோடு, மரணம் வரை துடிக்கப் போகின்ற நுண்ணிய இதயமொன்றும் அதில் துடிக்கத் தொடங்கியிருக்கும். அவ்வேளையில் அது நீளத்தில் ஓரங்குலம் கூட இருக்காது. கர்ப்பத்தின் நான்காம் மாதத்தில் அது சுமார் ஆறு அங்குலம் நீளமுடையதாகக் காணப்படும். கை, கால் விரல்களோடு கண் புருவங்களும் உள்ள புதுமையான மனித உருவத்தை அது

கொண்டிருக்கும். அது தானாகச் சுவாசிக்காத போதிலும், அதன் கண்கள் மூடியிருந்தாலும், அதற்குத் தன் தாயின் இதயத் துடிப்பையும் அவளது குரலையும் ஏனைய உரத்த ஒலிகளையும் கேட்கக் கூடியதாக இருக்கும். ஒருவருடைய தலை நீரினுள் இருக்கும் போது ஓசைகள் எப்படிக் கேட்குமோ அதே போன்றுதான் இவ்வொலிகளும் கேட்கும். கருவிலுள்ள குழந்தை தன் பெருவிரலைச் சூப்பியவாறு கால்களை உதைத்துக் கொண்டும் கைகளை நீட்டிக் கொண்டும் எல்லாத் திசைகளிலும் திரும்பும். சில வேளைகளில் கருப்பையில் தன்னைச் சூழ இருக்கும் திரவத்தில் சிறிதளவை விழுங்கிவிட்டு விக்கத் தொடங்கும். இந்த அசைவுகளையெல்லாம் தாயினால் உணர்ந்து கொள்ள முடியும். குழந்தை சிறிது வளர்ந்த பின் தாயின் வயிற்றின் மீது கையை வைத்து அதன் உதைகளையும் விக்கல்களையும் உணர்ந்தறியத் தந்தையினால் முடியுமாக இருக்கும்.

சில வேளைகளில் குழந்தையின் அசைவுகள் காரணமாகத் தாய்க்கு இரவில் நித்திரை கொள்ள முடியாமற் போகலாம். குழந்தையின் வளர்ச்சியை மனதில் கொண்டு நல்ல போசாக்குள்ள உணவை அவள் அதிகளவில் உண்ண நேரிடும். எனினும், குழந்தை பெரிதாக வளரும் போது வயிற்றறையில் ஏற்படும் இட நெருக்கடி காரணமாக அவளால் ஒரே நேரத்தில் அதிகம் உண்ண முடியாமல் போகும். கர்ப்பத்தின் 7ம் மாதத்தில் சுமந்து செல்வது சிரமமாகின்ற அளவுக்குக் குழந்தையின் பாரம் அதிகரித்து விடும். கர்ப்பிணித் தாய்மாருக்கு வீட்டில் விசேட கவனிப்பும் பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும். 9ம் மாதத்தில் குழந்தையின் நிறை 2.5- 4.5 kg வரை இருக்கலாம். அதன் நீளம் 45- 53 cm வரை இருக்கலாம். இந்நிலையில் அதனால் கருப்பைக்குள் அசைய முடியாத நிலை ஏற்படும். எனவே, வெளியுலகில் வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

குழந்தை பிறக்கத் தயாரானதும் தாயின் கருப்பை சுருங்கி அதனை வெளியே தள்ளத் தொடங்கும். மனித உடலில் மிகவும் வலிமை கூடியதாக கருப்பைத் தசைகளை இறைவன் படைத்துள்ளான். ஏனைய விலங்குகளைப் போலவே மனிதப் பெண்ணின் உடலும் வைத்தியரின் உதவியின்றிப் பிள்ளை பெறுவதற்கு ஏற்றதாகவே படைக்கப்பட்டுள்ளது. சில வேளைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெரிதுபடுத்திக் காட்டப்படுவது போலன்றி பிள்ளைப் பேறானது பாதுகாப்பான, மகிழ்ச்சிகரமான நிகழ்வொன்றாகும். கடுமையான தசைச் சுருக்கங்கள் காரணமாகப் பிரசவ வேதனை தீவிரமானதாக இருந்தாலும் பெரும்பாலான தாய்மார் தம் பிள்ளைக்காக மனவலிமையோடும் துணிச்சலோடும் அதனைத் தாங்கிக் கொள்கின்றனர். தமது அழகான குழந்தையைக் கைகளில் எடுத்ததும் அவர்கள் தம் வேதனையை முற்றாக மறந்து விடுகின்றனர்.

கர்ப்பத்தின் உளவியல் நிலையை இறைவன் வேதனைக்கு மேல் வேதனை அல்லது பலவீனத் துக்கு மேல் பலவீனம் (வஹ்னன் அலா வஹ்ன்) என விவரிக்கின்றான். சில வேளைகளில் கர்ப்பிணித் தாயில் நமைச்சல் உணர்வும் பதற்றத் தன்மையும் எளிதில் எரிச்சலடையும் இயல்பும் காணப்படும். அத்தோடு, மனத் தொய்வும் மகிழ்ச்சியும் மாறி மாறி ஏற்படும். ரமழான் மாதத்தில் நோன்பிருக்காமல் தவிர்த்துக் கொள்ள இறைவன் அவளுக்கு அனுமதி வழங்கியுள்ளான். இதனை அவள் பின்னர் தனக்கு வசதியான நேரத்தில் நிறைவேற்றிக் கொள்ளலாம். அத்தோடு, மகப்பேற்றின் போதும் அதற்குப் பின் சுமார் நாட்பது நாட்களுக்கும் அன்றாட ஐவேளைத் தொழுகையிலிருந்து அவளுக்கு விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. வீட்டு வேலைகளிலும், உளவியல் ரீதியிலும் அவளது கணவனும் உறவினர்களும் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை இது குறிப்பால் உணர்த்துகின்றது.

மனித வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள்: பிறப்பு முதல் முதுமை வரை

வளர்ச்சியின் கட்டங்கள் உடல் மட்டத்திலும் உளவியல் மட்டத்திலும் இடம் பெறுகின்றன. இவ்விரு துறைகளும் பற்றி உரிய முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்துக்கும் இங்கு தரப்பட்டுள்ள வயதுகள் அண்ணளவானவையே.

உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) அவர்களின் கூற்றுப்படி வளர்ச்சியின் கட்டங்கள்

அவர் பின்வரும் கட்டங்களை இனங்காட்டினார்.

பிள்ளை 7 வருடங்களுக்குப் போஷித்து வளர்க்கப்படுகிறது. அடுத்த 7 வருடங்களும் அது உதவி ஒத்தாசை புரியும் நிலையில் இருக்கிறது. அதன் உடல் வளர்ச்சி (உயரம்) 23ஆவது வயதில் நின்று விடுகிறது. அதன் மூளை வளர்ச்சி 35ஆவது வயதோடு நின்று விடுகிறது. அதற்கு அப்பால் இருப்பவை அனுபவங்கள் மாத்திரமே. (துஃப்பாஹா- 1979)

இரண்டு முக்கியமான வினாக்கள் இருக்கின்றன: நடத்தைப் பண்புகள் எப்போது உருவாகின்றன? அது தொடர்பாகப் பின்னர் ஏதாவது செய்ய முடியுமா? இவற்றுக்கான திருத்தமான விடைகளை எவரும் அறியாதிருப்பினும் இவை தொடர்பான நல்ல பொதுமைப்பாடுகள் பயனுள்ளவையாக இருக்கும்.

வளர்ச்சியின் பொதுக் கட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

பிறப்பு- 4 மாதங்கள்

மனிதப் பிறவிகள் பிறக்கும் போது அறிவெதுவும் இன்றியே பிறக்கின்றன என அல்குர்ஆன் வாக்கியம் 16: 78 உறுதிப்படுத்துகிறது. எனினும், அல்லாஹ் அவர்களுக்கு அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான கருவிகளாக கேட்டல், பார்த்தல் முதலிய புலன்களையும் அறிவாற்றலையும் வழங்கியுள்ளான். இதற்காக அவர்கள் தமது படைப்பாளனுக்கு நன்றி கூற வேண்டியவர்களாக உள்ளனர்.

பிறந்தது முதல் 4 மாதங்கள் வரை குழந்தையின் பார்வை நோக்கமின்றி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கும். அதன் பின்னர் ஆட்களைத் துருவி நோக்குவதில் குழந்தைகள் கவனஞ் செலுத்தும். ஏனையவர்களை விடத் தன் தாயையே குழந்தை கூடுதலாக உற்று நோக்கும். திடீர் ஓசைகளுக்கு அது திடுக்கிடுவதோடு பிரகாசமான ஒளிகளுக்குக் கண்களைச் சிமிட்டும். தன் கைகளை நீட்டி மடிப்பதோடு தலையையும் பக்கவாட்டில் அசைக்கும். விரைவில் தன் பெற்றோரின் முகங்களையும் குரல்களையும் இனங்கண்டு கொள்ளும். அத்தோடு, புன்னகைக்கவும் பல்வேறு ஒலிகளை எழுப்பவும் தொடங்கும். சாதாரண குழந்தையொன்று நான்காம் மாதம் ஆகும் போது உருளத் தொடங்கும். ஆண் குழந்தையின் தலை பெண் குழந்தையின் தலையை விட ஓரளவு பெரிதாக இருக்கும். (Spock 1974)

தடுப்பூசி வழங்கும் செயன்முறையை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். குழந்தையை ஒரு போதும் பலமாகக் குலுக்கக் கூடாது. ஏனெனில், அதன் மூளை முற்றாகப் படிந்து உறுதியடையாதிருக்கலாம். குழந்தை நிறுத்தாது தொடர்ந்து அழுது கொண்டிருக்கு

மாயின்- அதன் உடல் வெப்பநிலை சாதாரணமாக இருக்கும் நிலையில் - உணவூட்டும் நேரமாகிவிட்டதா? நித்திரை வருகிறதா? மலசலம் கழித்து விட்டதா? அல்லது தன்னைத் தூக்கி எடுக்கச் சொல்கிறதா? என்பதைக் கவனிக்க வேண்டும். உண்மையான தேவைகளுக்காகவே குழந்தை அழுகிறது. அழுகையானது பெற்றோருக்குத் தொந்தரவாக இருப்பினும் சாதாரணமானதே. குழந்தையின் அழுகை அளவுக்கு மீறியதாகவும் அதனைத் தேற்றுவது முடியாத காரியமாகவும் இருப்பின் பெற்றோர் வைத்தியரின் அல்லது ஓர் உளவியல் நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5- 18 மாதங்கள்

வளர்ச்சியின் இந்தக் கட்டம் வாழ்க்கை பற்றிய அடிப்படை மனப்பாங்குகளை அமைக்கும் விடயத்தில் மிக முக்கியமானது. தாம் தனியாட்கள் என்பதைக் குழந்தைகள் உணரத் தொடங்குகின்றன. தமது பால் புட்டிகளைத் தாமே பிடித்துக் கொள்ளுதல், அளவுக்கு மிஞ்சிய அரவணைப்புக்கு இடங்கொடாமை போன்ற வகையில் தம் சுதந்திரத்தை நிலைநாட்டவும் முயற்சிக்கின்றன. இப்பருவத்தில்தான் குழந்தைகள் தம் பெற்றாருடன் உண்மையான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. பெற்றார் உற்சாகமும் ஆர்வமும் உடையவராக இருப்பின் மற்றவர்களும் அதே போன்று இருக்க வேண்டுமெனக் குழந்தைகள் விரும்புவர். பெற்றார் காட்டும் அன்பும் பாசமும் குழந்தையிலும் அன்பை வளர்க்கும். மறுதலையாக, பெற்றார் எவ்வித ஆர்வமும் இல்லாமல், எதிலும் சந்தேகப்படுபவராக இருப்பின் குழந்தையும் அதே திசையிலேயே விருத்தியடையும். இந்நிலையில் சுற்றியுள்ள உலகு அர்த்தமற்றது போல் அதற்குத் தோன்றுவதோடு மற்றவர்களின் பாதகமான அம்சங்களையே அது தேடிப்பார்க்கும்.

இப்பருவத்தில்தான் தாம் கவர்ச்சியானவர்கள், நல்லவர்கள் அல்லது கவர்ச்சியற்றவர்கள், பயனற்றவர்கள் என்ற கருத்துப்படிவத்தைக் குழந்தைகள் உருவாக்கிக் கொள்ளும். இந்நிலையில்தான் அவர்கள் வெற்றி மனப்பாங்கு கொண்டவர்களாகவோ தோல்வி மனப்பாங்கு கொண்டவர்களாகவோ உருவாகுகின்றனர். தம் பெற்றோருடன் சரியான பிணைப்பொன்று கிடைக்காத குழந்தைகள் ஏனைய பொருட்கள், கருத்துக்கள் என்பன தொடர்பாகவும் பிணைப்புக்களை உருவாக்கிக் கொள்ளமாட்டா. மேலும், பிள்ளையின் உடல் மற்றும் மனவெழுச்சி விருத்தியில் தாய்ப்பாலூட்டல் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தமது குழந்தைகள் தவழ்வதற்குத் தவறினால் அல்லது பிடித்துக் கொண்டு எழுந்திருக்க முடியாது தடுமாறினால் அல்லது ஓசை எதனையும் எழுப்பாது விட்டால் அல்லது பொருட்களைச் சுட்டிக் காட்டத் தவறினால் பெற்றார் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆறு மாதங்களாகும் போது பிள்ளையினால் பிறர் துணையின்றி உட்காரவும் ஒரு கையினால் பொருளொன்றை எட்டிப் பிடித்து அதனை மறு கைக்கு மாற்றவும் மழலைச் சொல் பேசவும் தனது சொந்தப் பெயரை இனங்கண்டு கொள்ளவும் முடியுமாக இருத்தல் வேண்டும். பெரும்பாலான குழந்தைகள் இரவு முழுதும் நித்திரை கொள்ளும். முதற் பல் ஆறு மாதம் அளவில் வெளியாகும். குழந்தையினால் தன் தலையை நேராக வைத்துக் கொள்ளவும் இரு விழிகளையும் ஒருங்கிணைத்து நோக்கவும் சாதாரண முறையில் கேட்கவும் பார்க்கவும் முடியுமாக இருத்தல் வேண்டும். பசிக்குரிய அழுகையையும் துணை தேடும் அழுகையையும் பெற்றாரினால் பிரித்தறிய முடியுமாக

இருப்பதும் அவசியம். பொதுவாக ஆண் குழந்தைகளை விடப் பெண் குழந்தைகள் விருத்திக்குரிய மைல் கற்களை விரைவாக அடைந்துகொள்வர். எனினும், ஆண் குழந்தை களில் உடல் வளர்ச்சி துரிதமாக இருக்கும்.

ஒன்பது மாதங்களாகும் போது குழந்தைகள் தவழ்ந்து திரிந்து, குறும்புகள் செய்யத் தொடங்குவர். வித்தியாசமான ஓசைகளை இனங்கண்டு அவற்றைப் பிரதி செய்ய முயற்சிப்பர். இரு விரல்களைச் சேர்த்துச் சிறிய பொருட்களைப் பற்றிப் பிடிக்கவும், இரு பொருட்களை ஒன்று சேர்க்கவும் அவற்றுக்கு முடியுமாக இருக்கும். தவழத் தொடங்கிய பின் குழந்தைகளின் உலகம் விரிவடைந்து விடும். சில குழந்தைகள் தளபாடங்களைப் பற்றிப் பிடித்து எழுந்து நிற்க முயற்சிப்பதோடு அவற்றைப் பிடித்துக் கொண்டே நடை பயிலப் பார்க்கும். மேலும் தமது கைகளுக்கு அகப்படுவன அனைத்தையும் வாய்க்குள் செலுத்த முற்படுவர். ஏனெனில், குழந்தைகள் முதலில் வாயினாலேயே பொருட்களை உணர்ந்தறியப் பழகிக்கொள்கின்றன. பெற்றார் கனவிலும் நினைத்துப் பார்க்காத இடங்களையெல்லாம் குழந்தையின் கைகள் துழாவிப் பார்க்கும்.

வயது ஒரு வருடமாகும் போது குழந்தைகளால் நடக்கவும் சில வார்த்தைகளைப் பேசவும் தாமாக உணவுட்கொள்ளவும் முடியுமாக இருக்கும். தாயையும் தந்தையையும் வழக்கமான முறையில் அழைக்கப்பழகுவர். தண்டனை பற்றிய சரியான புரிந்துணர் வொன்று இன்னும் உருவாகாத போதிலும் 'இல்லை', 'வேண்டாம்' ஆகிய வார்த்தை களின் கருத்தைக் குழந்தையினால் புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும். இந்நிலையில் விரும்பத்தகாத செயற்பாடுகளிலிருந்து அதன் கவனத்தைத் திசை திருப்புவதே முக்கியம். இந்த விடயத்தில் மன உறுதி தேவை. தாம் தவறாக நடந்து கொள்கிறோம் என்பதை ஒரு வருடமாகும் வரை குழந்தைகளால் உணர்ந்து கொள்ள முடியாது. அனுபவிக்கப்பட வேண்டிய பெரிய, பரந்த உலகொன்று தம்மைச் சூழ இருக்கின்றது என்பதை மாத்திரமே அவர்கள் அறிவர்.

ஒரு வருடத்திற்கும் 2 வருடத்திற்கும் இடையில் பிள்ளை தங்கு தடையின்றி நடை பயில ஆற்றல் பெற்று விடும். இந்நிலையில் அது மேலும் சுயாதீனம் பெற்று சூழலை ஆராய்வதில் இன்பம் காணும். இப்பருவத்தில் பந்தொன்றை உதைக்கவும், ஓடவும், படிக்கட்டுக்களில் ஏறவும் பென்சில், கிரேயொன் போன்றவற்றால் கிறுக்கவும் முடியுமாக இருக்கும். இவ்வயதில் பிள்ளை தன் மனத் தூண்டுதல்களுக்கு ஏற்பவே செயற்படும். பணிவான நடத்தைக்கும் முரட்டுத் தனத்துக்கும் இடையில் அதற்கு வித்தியாசம் தெரியாது. அதேபோல் நல்லதையும் கெட்டதையும் பிரித்தறியவும் அதனால் முடியாது.

அவர்களை நெறிப்படுத்துவதற்குரிய நடவடிக்கையாகக் குறித்த நிலைமையொன்றி லிருந்து அப்புறப்படுத்தி அல்லது தனிமைப்படுத்தி வைக்கும் நடைமுறையைக் கைக்கொள்வது விரும்பத்தக்கது. பிள்ளையின் வயதுக்கு ஏற்ப இதற்குரிய கால அவகாசம் தீர்மானிக்கப்பட வேண்டும். இவ்வயதினர் நியாயப் படுத்தலையோ சமரசத்தையோ புரிந்து கொள்ள மாட்டார்கள். தண்டனைகளுக்குப் பதிலாக மாற்றுத் தேர்வுகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். அத்தோடு, அவர்களின் சுதந்திர இயல்புக்கும் இடம் கொடுக்க வேண்டும். சட்டங்களும் விதிகளும் மிகக்குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும். இவ்விடயத்தில் மாறாத் தன்மை பேணப்படுவதும் அவசியம்.

மிருதுவான அல்குர்ஆன் ஓதல்கள், மென்மையான இயற்கை ஓசைகளின் ஒலிப்பதிவுகள், பொருத்தமான பாடல்கள், கஸீதாக்கள் போன்றவற்றைக் குழந்தைகள் செவிமடுக்கச் செய்வது மொழி விருத்தி, தர்க்க ரீதியான சிந்தனை விருத்தி முதலியவற்றுக்குப் பொறுப்பான மூளையின் பகுதிகளுக்கு நன்மை பயக்கும். குழந்தையினது மூளையின் பல்வேறு மையங்களின் விருத்திக்கும் இது உதவும்.

பிள்ளைகளால் நீண்ட நேரத்துக்கு ஒரு விடயத்தில் கவனம் செலுத்த முடியுமா என்பதைப் பெற்றார் அவதானிக்க வேண்டும். இதற்காக வரைதல், நிர்மாணத் துண்டுகளைக் (building blocks) கொண்டு அமைப்புக்களை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். பிள்ளையினால் தொடர்ந்து ஒரு விடயத்தில் கவனம் செலுத்த முடியாத நிலை காணப்பட்டால் பெற்றார் அது பற்றி வைத்திய உதவியை நாட வேண்டும். பிள்ளைகள் கோபாவேசம் கொள்வது விரக்தியைத் தந்தாலும் அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. பார்வைப் புலனை விடத் துரிதமாகக் கேள்விப் புலன் விருத்தியடையும். பலத்த ஒலிகளுக்குக் குழந்தை எதிர்வினை காட்டும். கேள்வி, பார்வை என்பவற்றின் விருத்தியைத் தொடர்ந்து அறிவாற்றல் வளர்ச்சியடையும்.

18 - 36 மாதங்கள் வரை

தாம் தனிப்பட்ட விருப்பங்களைக் கொண்ட தனியாட்கள் என்பதை இந்தப் பருவத்தில்தான் பிள்ளைகள் உணர்ந்து கொள்கின்றனர். எனினும், தாம் பெற்றோரில் தங்கியுள்ளமை பற்றி அவர்கள் அதிகமாக உணரத் தலைப்படுவர். இந்நிலையில் சுதந்திரமாக இருப்பதா தங்கியிருப்பதா?, சுத்தமாக இருப்பதா அசுத்தத்தை ஏற்றுக்கொள்வதா?, ஒத்துழைப்பதா பிடிவாதம் காட்டுவதா?, பாசம் காட்டுவதா எதிர்த்து நிற்பதா? போன்ற முரண்பாடுகளுக்கிடையில் பிள்ளைகள் இழுபறிக்குள்ளாவர். மூன்றாம் வருடத்தின் இறுதியில் பிள்ளையின் ஆளுமையானது அதன் இணங்கிப்போகும் தன்மையிலும் (அல்லது பிடிவாதத் தன்மையிலும்) அதன் உள்ளார்ந்த மனப் போக்கிலும் பெற்றோருடன் வளர்த்துக் கொண்டுள்ள உறவின் நெருக்கத்திலுமே தங்கியிருக்கும்.

மலசலம் கழித்தல் தொடர்பான பயிற்சி பற்றி நிபுணர்களின் முரண்படும் அபிப்பிராயங்கள்

பிள்ளைகள் ஒழுங்கான முறையில் மலசலம் கழித்தால் அதனைப் பெற்றார் பாராட்ட வேண்டும் என்றும் ஆனால், பாராட்டுவதில் மிகைத்து விடக் கூடாது என்றும் Brazelton என்பவர் கூறுகின்றார். அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் மற்றவர்களைப் பிரதி பண்ணவும் தேவையான ஆற்றலைப் பிள்ளைகள் பெற்றுக் கொண்டதும் (ஏறக்குறைய 2வது வருடத்தில்) அவர்களுக்கு மலசலம் கழித்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்கிறார் அவர்.

பிள்ளை 15 மாதங்களை அடையும் வரை மலசலம் கழித்தல் பயிற்சி பற்றி அலட்டிக் கொள்ள வேண்டாம் என்கிறார் Leach என்பவர். மூன்றாவது வயது வரை பிள்ளைகள் பகல் வேளையில் கூட ஒழுங்கான முறையில் மலசலம் கழிப்பார்கள் என எதிர்பார்க்க வேண்டாம் எனக் கூறும் அவர் இந்த விடயத்தில் அடிக்கடி பிள்ளைகளை நச்சரித்தால் இச்செயன்முறை தாமதமாகலாம் என்கிறார்.

தாய் ஒரு பராமரிப்பாளர் என்ற நிலையிலிருந்து அதிகாரம் செலுத்துபவராக மாறும் செயன்முறை பிள்ளையின் இரண்டாவது வயதுக்கு அப்பாலும் தாமதமாகினால் பிள்ளைகள் சீராக முதிர்ச்சியடையத் தவறி விடுகிறார்கள் என்கிறார் Rosemond என்பவர். இப்படியான நிலையில் பிள்ளையிடம் நடத்தைக் கோளாறுகள் விருத்தியடையலாம் என்கிறார் அவர்.

வெவ்வேறு பிள்ளைகள் வெவ்வேறு காலங்களில் இவ்விடயங்களைக் கற்றுக் கொள்கின்றனர் என ஆய்வுகள் நிரூபித்துள்ளன. பெண் பிள்ளைகள் பயிற்சி பெற சுமார் 9 மாதங்கள் பிடிக்கும். ஆண் பிள்ளைகளுக்கு இதை விடச் சற்றுக் கூடிய காலம் தேவை. அடிக்கடி தூண்டுதல் வழங்குவது பலனளிக்கும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (Lemonick 1999)

உதாரணமாக, பெற்றார் தீவிர ஆதிக்கம் செலுத்துபவர்களாக இருந்து பிள்ளையும் இயல்பாகவே சொற்கேட்டு நடக்கக் கூடியதாக இருப்பின் அது அளவுக்கு மிஞ்சி அடிபணிவுள்ளதாக ஆகிவிடும். பெற்றார் எதிர்ப்புணர்வு காட்டுபவர்களாகவும் சாமர்த்தியம் அற்றவர்களாகவும் இருந்து, பிள்ளைக்குத் திருப்பிச் சண்டையிட வாய்ப்புக் கொடுத்தால் அப் பிள்ளை தீவிர எதிர்ப்புணர்வு கொண்டதாக மாறக்கூடும். பெற்றார் கண்டிப்பான போக்கு உடையவர்களாக இருந்து சுத்தம் பற்றி அளவுக்கு மீறிய அழுத்தம் கொடுப்பார்களாயின், அவர்களுடைய பிள்ளை இயல்பாகவே சாதுவானதாக இருந்தால் அது அளவுக்கு மீறிச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்க முயற்சிக்கும். பெற்றார், பிள்ளைகள் பற்றிய கவலையில் அவர்களை எந்நேரமும் கண்காணித்துக் கொண்டு சுற்றி வருபவர்களாக இருந்து பிள்ளைகளும் அதற்கு இணங்கிப் போனால், அப்பிள்ளைகள் சுயாதீனமற்றவர்களாகவும் அளவுக்கு மீறிப் பெற்றாரில் தங்கியிருப்பவர்களாகவும் மாறிவிடுவார்கள். பிள்ளைகள் அதிகமதிகம் தம்மிலேயே தங்கியிருப்பதை ஊக்குவிப்பதற்காகத் தாய்ப் பாலூட்டல் இரண்டாவது வயதில் நிறுத்தப்பட வேண்டும். பிள்ளையின் நடத்தைப் பண்புகள் மூன்றாவது வயதிலேயே உருவாவதாகப் பல்வேறு உளவியலாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர். எனினும், சூழலும் பிற அழுத்தங்களும் மாற்றமடையும் போது ஆளுமையின் சில போக்குகள் பிள்ளைப் பருவத்தின் பின் பகுதியிலும் முதிர் பருவத்திலும் பெருமளவு மாற்றியமைக்கப்படக்கூடும்.

மேலும் பல நடத்தைப் பண்புகள் பிள்ளைப் பருவத்தின் பிந்திய கட்டங்கள் வரை உருவாக்கப்படுவதில்லை. இக்காலத்தில் என்ன வகையான நட்புறவுகளை அவர்கள் விரும்புவார்கள் என்பதும், எவ்வகையான திருமண உறவுகளில் இணைவார்கள் என்பதும் பிள்ளைப் பருவத்தில் தமது சம பாலார் மற்றும் எதிர் பாலார் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள மனப்பாங்குகளினால் தீர்மானிக்கப்படுகின்றன.

முதல் இரண்டு வருடங்களிலும் குழந்தை துரிதமாக வளர்ச்சியடைந்து பெரிதளவு மாற்றத்துக்குள்ளாகிறது. ஒவ்வொரு மாதமும் புதிதாக ஏதேனுமொன்றை அது கற்றுக் கொள்கிறது. இரண்டு வருடங்களின் பின்னர் பிள்ளைகளின் வளர்ச்சி ஓரளவு மந்தமடைகிறது.

இப்பருவத்தில் பிள்ளைகள் ஓடுவார்கள், பாய்வார்கள், உயரத்தில் ஏறுவார்கள், பொருட்களைத் தூக்கி அடிப்பார்கள். அத்தோடு, அவர்களால் மூன்று சக்கர சைக்கிளொன்றைச் செலுத்தவும் முடியுமாக இருக்கும். மலசலம் கழித்தல் தொடர்பான பயிற்சியில் ஆர்வம் காட்டுவார்கள். இக்கட்டத்தில் பிள்ளைகள் குறுகிய வசனங்களைப் பேச முனைவார்கள். ஐம்பது சொற்களுக்கு மேல் அறிந்து வைத்திருப்பார்கள்.

பிள்ளைகள் இடைவிடாது கேட்கும் 'ஏன்' எனும் கேள்விகள் தொடர்பாகப் பெற்றார் பொறுமையாக இருத்தல் வேண்டும். பொறுமையிழக்காது அவர்களின் புதியன பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வத்தை ஊக்குவிப்பது மிக முக்கியமானது. ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணும் நுட்ப முறைகளாக நேரான மீளவலியுறுத்தலையும் குறித்த காலத்துக்குத் தனிமைப்படுத்தி வைப்பதையும் பயன் படுத்தலாம். மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல், தவணை முறையில் வாய்ப்புக்களை அனுபவித்தல் போன்ற சமூகத் திறன்களை வளர்ப்பதற்கு ஏற்ற சிறந்த பருவமும் இதுவே.

கருத்துத் தெளிவின்றிப் பேசுதல், ஏனைய சிறுவர்களில் அக்கறை காட்டாதிருத்தல், அடிக்கடி கீழே விழுதல் போன்ற இயல்புகள் காணப்பட்டால் பெற்றார் அவை பற்றித் தம் குடும்ப வைத்தியரோடும் உள நோய் நிபுணரோடும் கலந்தாலோசிக்க வேண்டும்.

இப்பருவத்தில் வித்தியாசங்கள் ஓரளவுக்குச் சமநிலையடையத் தொடங்கும். பெண் பிள்ளைகளில் வளர்ச்சி துரிதமடைவதோடு ஆண் பிள்ளைகள் விருத்திக்குரிய மைல் கற்களை அடைவது விரைவாகும். இப்பருவத்தின் இறுதியில் இரு சாராரும் ஆகக்குறைந்தது 250 சொற்களையாவது தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

4 - 7 வருடங்கள்

நான்கு வயதை அடைந்த பிள்ளைகள் இரண்டு வயதில் உட்கொண்ட அளவை விடக் குறைவாகவே உணவு உட்கொள்வார்கள். இதற்குக் காரணம் அவர்களுடைய வளர்ச்சி வேகம் மந்தமடைந்திருப்பதும் அவர்களுடைய தொழிற்பாடுகள் குறைந்திருப்பதுமாகும். எனினும், பதின்மவயதை அடையும் வரை ஒவ்வொரு வருடமும் பிள்ளைகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதோடு ஒவ்வொரு நாளும் புதிய புதிய விடயங்களைக் கற்றுக் கொள்கின்றனர். நான்கு வயதுக்கும் ஐந்து வயதுக்கும் இடையில் பிள்ளையின் சக்தி மட்டம் உச்ச நிலையை அடைந்திருக்கும். அவர்கள் நடக்கவும் ஓடவும் துள்ளவும் பாயவும் விரும்புவர். இவர்கள் தவழும் நிலையிலேயே இருந்திருந்தால் நல்லதே எனப் பெற்றோர் நினைப்பர்.

இந்தக் கட்டத்தின் போது, குறித்தவொரு நடத்தை ஏன் தவறானது என்பதைப் பெற்றார் விளக்கி, அதன் விளைவுகள் பற்றியும் கலந்துரையாட முடியும். ஆனால், இவ்விளக்கங்கள் சுருக்கமாக இருக்க வேண்டும். நல்ல நடத்தையை ஊக்குவித்து அதற்கு வெகுமதியளியுங்கள். கெட்ட நடத்தைக்குத் தண்டனை அனுபவிக்கச் செய்யுங்கள். பெற்றாரை விட்டு விலகிச் செல்வதற்குத் தீவிர விருப்பமின்மையைப் பிள்ளை காட்டுகிறதா என்பதைக் கவனியுங்கள். ஐந்து வயதாவதற்கு முன்பே மலசலம் கழித்தல் தொடர்பான பயிற்சியைப் பிள்ளை பெற்றுவிட வேண்டும். அத்தோடு, தனியாகவோ கூட்டாகவோ சுறுசுறுப்பாக இயங்கக் கூடியவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும்.

இந்த வயதிலேயே பிள்ளை ஆரம்பக் கல்வியைத் தொடங்குகிறது. இப்பருவத்தில் ஆண், பெண் பிள்ளைகளுக்கிடையிலான வித்தியாசங்களை அவதானிக்கும் பிள்ளைகள் உடற்பகுதிகளின் பெயர்களை அறிந்து கொள்ள விரும்புவர். இந்தக் கேள்வி கேட்கும் பருவத்தில் அவர்கள் பலவிதமான கேள்விகளை (பால் வேறுபாடு உட்பட) கேட்பார்கள். இவற்றுக்குப் பெற்றார் கட்டாயமாகப் பொருத்தமான விடைகளை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் பிள்ளைகள் அவ்வினாக்களுக்கு விடை பெறத் தம் நண்பர்களை நாடுவார்கள். இந்நிலையில் நண்பர்கள் தவறான தகவல்களையே வழங்கக்கூடும்.

பிள்ளைகள் படிப்படியாக மனநிலை மாற்றங்களுக்கும் மனவெழுச்சிகளுக்கும் அதிகளவில் உள்ளாவார்கள். இவர்கள் ஓரந்தத்திலிருந்து இன்னோர் அந்தத்துக்குத் துரிதமாக மாறுவர். உதாரணமாக, மிகையான அன்பிலிருந்து வெறுப்புக்கும் கோபத்துக்கும், மகிழ்ச்சியிலிருந்து சோகத்துக்கும் விரைவில் மாற்றமடைவர். பிள்ளைகள் அச்சப்படத் தொடங்குவதோடு இருள், விலங்குகள், மரணம், இறைவன் போன்றவை பற்றி அச்சம் கொள்வர். அத்தோடு, தாம் பெற்றாரிலிருந்து பிரிக்கப்படுவது பற்றியும், அவர்களை இழப்பது பற்றியும் பயப்படுவர். இவ்வாறான பயங்களை அவர்கள் தம் பெற்றாரிடமிருந்தும் சூழ உள்ளவர்களிடமிருந்துமே பெற்றுப் கொள்கின்றனர். சிலந்திகள், பூச்சிகள், பழக்கமற்ற இடங்கள், பலத்த ஒலிகள் முதலியவற்றுக்குப் பெற்றார் காட்டும் பயங்களை அவர்களும் பிரதி பண்ணுவர்.

பிள்ளைகள் மற்றவர்களைப் பற்றிப் பொறாமைப் படவும் அதன் விளைவாக ஆக்கிரமிப்புத் தன்மையைக் காட்டவும் தொடங்குவர். எனவே, பெற்றார் தம் பிள்ளைகள் அனைவரையும் சமமாகவும் நியாயமாகவும் நடத்துவது மிக முக்கியமாகும். நபி யூஸுஃப்

(அலை) அவர்களின் சகோதரர்கள் அவர் மீது பொறாமை கொண்டு அவருக்கு எதிராகக் கொடுமை புரிந்தது பற்றிய கதை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

பிள்ளைகள் வளரும் போது தமது சம பால் பெற்றாருடன் (உதாரணமாக ஆண்பிள்ளை தன் தந்தையுடன்) தம்மை இனங்காட்டிக் கொள்வர். இதனால் அப்பெற்றாரின் செல்வாக்கு அதிக முக்கியத்துவம் பெறும். தமது தந்தை தோட்ட வேலைகள் செய்வதை ஆண் பிள்ளைகள் நெருக்கமாக நின்று அவதானிப்பது போலவே, தமது தாய்- வீட்டுப் பணிகளைச் செய்வதைப் பெண் பிள்ளைகள் அவதானிப்பர். பெற்றார் பரஸ்பரம் தமக்கிடையேயும் தமது பிள்ளைகள் மீதும் அன்பும் மரியாதையும் காட்டுவதன் மூலம் பிள்ளைகளின் மனதில் அன்புணர்வையும் மரியாதை உணர்வையும் வளர்க்க முடியும். விளையாடுதல், வாசித்தல், தாவரங்களுக்கு நீரூற்றுதல், விலங்குகளுக்கு உணவூட்டுதல் முதலிய வேலைகளைக் கூட்டாகச் செய்வதன் மூலம் நம்பகத் தன்மை, சுய நம்பிக்கை, திறந்த தொடர்பாடல் முதலியவற்றுக்கான அடிப்படைகளை உருவாக்க முடியும். பெற்றாரை அவதானிப்பதன் மூலமும் அவர்களுடன் கூட்டாகச் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமும் பிள்ளைகள் சமயம் பற்றி அறிந்து கொள்கின்றனர். பிள்ளைகள் வெளியுலகுக்கு அறிமுகமாக முன்னரே அவர்களிடம் நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்து விட்டால் வளர்ந்த பின் அவர்கள் சரியானதையே செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

7 - 14 வருடங்கள்

பருவமடைதல் அல்லது பூப்படைதல் இக்கட்டத்திலேயே நிகழும். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் வளர வளர, வளர்ந்த ஆண்களையும் பெண்களையும் போல் தோற்றமளிக்கவும் நடந்து கொள்ளவும் ஆரம்பிப்பார்கள். இம்மாற்றங்கள் பொதுவாகப் பெண்களில் 9 முதல் 13 வயது வரையிலும், ஆண்களில் 11 முதல் 15 வயது வரையிலும் இடம்பெறலாம். இக்காலம் குமரப் பருவம் என அழைக்கப் படுகிறது. இவ்வயதில் தான் பிள்ளைகள் முதிர்ச்சியுற்று வளர்ந்தவர்களாக மாறுகின்றனர்.

குமரப் பருவத்தின் போது பல்வேறு உடல், உள, மனவெழுச்சி மற்றும் ஆன்மீக ரீதியான மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒரு வருடத்துக்கு முன்பு இருந்ததை விட இப்போது தோற்றத்திலும் உணர்விலும் சிந்தனைகளிலும் தாம் வித்தியாசமாக இருப்பதைப் பிள்ளைகள் கண்டு கொள்வர்.

குமரப் பருவத்தை அடைந்துள்ள சிறுமி ஒருத்தியின் உடல் நிறை திடீரென அதிகரிப்பதோடு, சில மாதங்களில் உயரமும் பல சென்றிமீட்டர்களால் அதிகரிக்கும்.

அவளது இடைகள் அகலமாவதுடன் மார்பகங்களும் பெரிதாகத் தொடங்கும். கக்கங்களிலும் அந்தரங்கப் பகுதிகளிலும் உரோமங்கள் வளரத் தொடங்கும்.

ஆண் பிள்ளையொன்றும் இதே போன்ற திடீர் வளர்ச்சியொன்றைக் காட்டுவதோடு, அவன் அதிகளவில் உணவை உட்கொள்வான். அவனுடைய தோள்கள் அகலமாகும். அவனது கைகளுக்குக் கீழும் பாலுறுப்பைச் சூழவும் முகத்திலும் மார்பிலும் உரோமங்கள் வளர்ச்சியடையும். அவனுடைய குரல் ஆழமாகி கரகரப்புத் தன்மையைக் காட்டும். இப்பருவ ஆண்களும் பெண்களும் சில மாதங்களுக்குள் தமது பாதங்கள் பாதணி களைவிடப் பெரிதாகி விடுவதைக் காண்பர். பெற்றார் பிள்ளைகளுக்குத் தொழுகையை வலியுறுத்த வேண்டிய முக்கிய காலகட்டம் இதுவாகும்.

பின்வரும் விருத்திகள் அவதானிக்கப்படுகின்றன. (7-14 வயது)

- பிள்ளைகள் விமர்சனத்துக்கு உணர்திறன் மிக்கவர்களாக மாறுவர்: எளிதில் கோபமடைவதோடு மனநிலையும் மனவெழுச்சிகளும் திடீரென மாற்றமடையும்.
- பிள்ளைகள் நண்பர்களுடன் கூடுதலாக உறவாடுவர். தமது பெறுமானங் களையும் ஒழுக்க நியமங்களையும் அவர்களிடமிருந்தே பெற்றுக் கொள்வர். எனவே, சமூக ரீதியான பிரயாணங்களிலும் ஒன்று கூடல்களிலும் பெற்றார் தம் பிள்ளைகளுடன் கூட இருப்பதும் அவர்களைக் கண்காணிப்பதும் பயனுடையது.
- பிள்ளைகள் தம் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு வெட்கப்படுவத னால் அவர்களுக்கு ஊக்குவிப்புத் தேவைப்படும். அத்தோடு, அவ்வபிப்பிரா யங்கள் மதிக்கப்படுவதும் அவசியம்.
- உடற் தசைகள் விரைவாக வளர்ச்சியடைவதனால் ஓடுதல், ஏறுதல், நீந்துதல் போன்றவற்றிலும் உதைபந்தாட்டம், கிரிக்கட், கூடைப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் அதிக நாட்டம் காட்டுவர்.
- உணவுட்கொள்ளல், உடையணிதல், உடற்சுத்தம் என்பன தொடர்பாக அவர்கள் தம்மிலேயே பெரிதும் தங்கியிருப்பர். எனவே, சாப்பிடுதல், பருகுதல், ஏனையவர்களோடு பழகுதல் முதலியன தொடர்பான ஒழுங்கு முறைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு இது ஏற்ற தருணமாகும். மேற்சொன்ன ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்குமுரிய பிரார்த்தனைகளை (துஆக்களை) அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்.

இது பிள்ளைகளில் பாலியல் தொழிற்பாடற்ற காலமாகும். அவர்கள் எப்போதும் சொந்தப் பாலாருடனேயே சேர்ந்திருக்க விரும்புவர். இந்நிலையில் சஞ்சிகைகள், புத்தகங்கள் முதலியவற்றில் வெளியாகின்ற பாலுணர்வைத் தூண்டி விடும் படங்களை அல்லது காட்சிகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கக் கூடாது. பத்து வயதான பின்னர் பிள்ளைகள் தம் உடன் பிறந்தாருடன்கூட ஒரே படுக்கையில் நித்திரை கொள்ள இடமளிக்க வேண்டாம்.



11 - 13 வருடங்கள்: பெண் பிள்ளைகளுக்கு மாதவிடாய் ஏற்படல்

பெரும்பாலான பெண் பிள்ளைகளில் 11 முதல் 13 வரையான வயதில் மாதவிடாய் ஆரம்பிக்கிறது. அவர்கள் உடல் ரீதியாகக் குழந்தை பெறுவதற்குரிய தயார் நிலையை அடைந்து விட்டதற்கு இது ஓர் அறிகுறியாகும். குருதி வெளியேற்றம் ஒரு சாதாரண நிகழ்வாகும். அதனால் எவ்விதத் தீங்கும் ஏற்படாது. கருப்பையின் உட்புறமாக உள்ள மெல்லிய படலமே இக்குருதியில் வெளிவருகிறது. இரண்டு சூலகங்களிலும் மாதத்திற்கு ஒரு முட்டை வீதம் முதிர்ச்சியடைகிறது. இந்நிலையில் கருக்கட்டிய முட்டை வளர்வதற்கு ஏற்ற ஓர் இடமாகக் குருதி நிறைந்த படலமொன்று கருப்பையினுள் உருவாகிறது. ஆண் விந்துக் கலம் வந்து சேராத வரையில் முட்டையினால் வளர்ச்சியடைய முடியாது. எனவே,

பயன்படாமல் சிதைவடையும் கருப்பையின் மெல்லிய படலம் மாதப் போக்கின் போது வெளியேற்றப் படுகிறது. இந்த இயற்கை வட்டம் 27- 30 நாட்களுக்கு (ஒரு சந்திர மாதம்) ஒரு தடவை தொடர்ந்து ஏற்படும்.

முதலாவது மாதப்போக்கு ஒரு பெண்ணின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வாகும். அவள் பருவமடைந்து விட்டாள் என்பதையும் ஒரு யுவதியாக மாறிவிட்டாள் என்பதையும் அது குறிக்கிறது. அதுமுதல் ஏனைய வயது வந்த பெண்களைப் போன்று அவள் தன்னுடைய சமயக் கடமைகள் அனைத்திற்கும் பொறுப்புள்ளவளாக மாறுகிறாள். தொழுகை, நோன்பு, அந்நிய ஆண்களுக்கு முன்பாகத் தன்னை உரிய முறையில் மறைத்துக் கொள்ளல் என்பன இதில் அடங்கும். பெண்களில் பாதிக்கு மேலானோர் மாதவிடாயின் போது சில அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். தசைப்பிடிப்பு, களைப்பு, எளிதில் எரிச்சலடையும் தன்மை போன்ற பிரச்சினைகள் பொதுவானவை. மாதவிடாய் நாட்களில் ரமழான் மாத நோன்பு பிடிப்பதிலிருந்து அல்லாஹ் விதிவிலக்கு வழங்கியுள்ளான். எனினும், தவறிப்போன நாட்களை ரமழானின் பின்பு அவர்கள் ஈடு செய்தல் வேண்டும். மாதப்போக்குக் காலத்தில் பெண்கள் தொழுவதும் மஸ்ஜிதில் அமர்ந்திருப்பதும் குர்ஆனைத் தொடுவதும் தடை செய்யப் பட்டுள்ளன. தவறிப்போன தொழுகை பின்னர் ஈடு செய்யப்பட வேண்டியதில்லை. மாதப்போக்கு முடிந்த பின்னர் தொழுகைக்காகத் தன்னைச் சுத்தம் செய்து கொள்வதற்காகக் குளிப்பது கட்டாயமாகும்.

மாதவிடாய் வலிகள்

மாதவிடாயின் போது ஏற்படும் அசௌகரியங்கள் பற்றி இலட்சக் கணக்கான பெண்கள் முறையிடுகின்றனர். பல நாட்களுக்கு நீடிக்கக்கூடிய இப்பிரச்சினைகளுட் சில கடுமையற்றனவாகவும் இன்னுஞ்சில மிகக் கடுமையானவையாகவும் இருக்கலாம்.

வயிறு உப்புதல், தசைப் பிடிப்புக்கள், மார்பகங்கள் மிருதுவடைதல், மாதவிடாய் தொடர்பான தலை வலிகள், கடுமையான அல்லது நீடித்த குருதிப் பெருக்கு, மன நிலை மாற்றங்கள், உடற் சோர்வு என்பன இதற்கான அறிகுறிகளுள் அடங்கும்.

13 - 15 வருடங்கள்: ஆண் பிள்ளைகள் பருவமடைதல்

ஆண் பிள்ளைகள் பருவ வயதை அடைந்து வாலிபர்களானதும் விந்து வெளியேற்றம் நிகழக் கூடியவர்களாக இருப்பார்கள். சில வேளைகளில், நித்திரையில் கனவுகள் காணும் போது ஆணுறுப்பு விறைப்படைந்து விந்து வெளியேற்றம் இடம்பெறலாம். பிள்ளை வயது வந்த மனிதனாகி விட்டான் என்பதையும் தந்தையாகும் ஆற்றலைப் பெற்று விட்டான் என்பதையுமே இது குறிக்கிறது. அது தொடக்கம் ஏனைய வயது வந்த ஆண்களைப் போன்று தனது சமயக் கடமைகளுக்கு அவன் பொறுப்பாளியாகிறான். சில ஆண் பிள்ளைகளில் கனவில் விந்து வெளியேறல் இடம்பெறாவிடினும் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் படி 15 வயதாகும் போது, அல்லது குரல் ஆழமடைதல் போன்ற பூப்பின் உடல் ரீதியான அடையாளங்கள் உருவாகும் போது, அவன் வாலிப வயதை அடைந்து விட்டதாகக் கருதப்படுவான். பூப்பின் அடையாளங்கள் விருத்தியடைவது தாமதமான போதிலும் ஆண், பெண் பிள்ளைகள் அனைவரும் 12 வயது முதல் ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றி வர வேண்டும். கனவிலோ வேறு விதத்திலோ விந்து வெளியேறினால் குளிப்பது கடமையாகிறது.

உங்கள் பிள்ளை மிக அற்புதமானது. ஆனால், அது 13 வயதை அடைந்ததும் பிசாசுகள் அதனைத் தூக்கிச் சென்றுவிட்டு அதன் இடத்தில் ஓர் அந்நியனை வைக்கின்றன. அந்த அந்நியனோ ஒரு கனம் கூட உங்களை நிம்மதியாக இருக்க விடுவதில்லை. Jill Eikenberry- 1994

14 - 21 வருடங்கள்

இந்தக் கட்டத்தில் ஆண் பிள்ளைகளின் குரல் உரப்பும் கடுமையும் பெற்று ஆண் தன்மையுடையதாக மாறுவதோடு, பெண் பிள்ளைகளின் குரல் மிருதுவாகவும் பெண் தன்மை கொண்டதாகவும் மாறும். ஆண்களில் தசைகள் வலிமையுடையனவாக விருத்தியடையும். பெண்களில் மார்பகங்கள் பெரிதாக வளர்ந்து உடலில் கொழுப்புப் படியும். ஆண் பிள்ளைகளில் கை, கால்கள் நீளமாகவும் தோல்கள் பரந்தும் பாதங்கள் பெரிதாகவும் வளரும். முகத்திலும் கக்கங்களிலும் அந்தரங்க உறுப்புக்களைச் சுற்றியும் மயிர் வளரும். கால்களினதும் கைகளினதும் வளர்ச்சியில் காணப்படும் தற்காலிக ஒழுங்கின்மை காரணமாக நடையிலும் பொருட்களைக் கையாள்வதிலும் சில சீரற்ற தன்மைகள் காணப்படும். தமது உடலைச் சரியாக இசைவாக்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு அவகாசம் தேவைப்படும்.

பதின்மவயதினரைப் புரிந்து கொள்ளல்

13 முதல் 19 வயது வரையான வயதுடையவர்களையே நாம் பதின்மவயதினர் (Teenagers) என்கிறோம். பதின்மவயதினர் தீர்மானங்களை எடுக்கும் போது பகுத்தறிவை விடக் கூடுதலாகத் தமது மனவெழுச்சிகளையே பின்பற்றுவர். அவர்களுடைய உள்ளமும் உணர்வுகளும் இதயத்தினாலேயே ஆளப்படுகின்றன. அத்தோடு, பகுத்தறிவு, சிந்தனை என்பவற்றின் மீது மனவெழுச்சிகளே ஆதிக்கம் செலுத்தும். பதின்மவயதினர்கள் தம்மைப் பற்றிய உணர்வு மிக்கவர்களாக - தம்மைப் பற்றியும் தம் தோற்றத்தைப் பற்றியும் எப்போதும் கவலைப்படுபவர்களாக - காணப்படுவர். அவர்களுடைய முகத்தில் பருக்கள் காணப்படும். தாம் உயரத்தில் கூடிவிட்டோமா அல்லது அதிகம் குட்டையாக இருக்கிறோமா அல்லது அதிகம் கொழுத்து விட்டோமா அல்லது நன்றாக மெலிந்து விட்டோமா என்று கவலைப்பட்டுக் கொண்டேயிருப்பர். உடலில் ஏற்படும் பல்வேறு மாற்றங்கள் காரணமாக அவர்கள் பதற்றமுள்ளவர்களாகவும் தம்மைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் இருப்பர். தம் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படும் அவர்கள், செய்யப் போகும் தொழில், பின்பற்றப்போகும் கல்வி, படிக்கப்போகும் கல்லூரி, மணம் செய்யப்போகும் வாழ்க்கைத் துணை என்பன பற்றியெல்லாம் மனக் குழப்பமுற்றவர்களாய்க் காணப்படுவர். இவ்வாறான மனக்குழப்பங்கள் காரணமாகப் பதின்மவயதினர் எளிதில் எரிச்சல் அடைபவர்களாகவும் கவலையும் ஏக்கமும் கொண்டவர்களாகவும் விளங்குவர்.

உடலைத் துரிதமாக வளரச் செய்யும் ஓமோன்கள் மன நிலையிலும் மாற்றங் களை ஏற்படுத்தலாம். வாலிபர்கள் நிம்மதியற்றவர்களாகவும் காரணமின்றிச் சினம் கொள்பவர்களாகவும் இருப்பர். பெண் பிள்ளைகளோ, அற்ப விஷயத்திற்கும் எரிச்சல் படுபவர்களாகவும் அழுபவர்களாகவும் மாறுவர். சில வேளைகளில் இப்பருவத்தினர் தாம் வயது வந்தவர்கள் போன்று நடத்தப்பட வேண்டும் என எதிர்பார்ப்பர். ஆனால், சிறு

பிள்ளைகள் போன்றே நடந்து கொள்ள முற்படுவர். அவர்களுடைய உணர்வுகள் மனக் குழப்பத்தை ஏற்படுத்தினாலும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரை சாதாரணமானவர்களாகவே தோற்றமளிப்பர். ஆரோக்கியமானவர்கள் தம் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கற்றுக் கொள்வதோடு, அவற்றின்படி பேசவும் செயற்படவும் முன்னர் இரு தடவைகளாவது யோசிப்பர்.

இப்ன் ஸீனாவின் கருத்துப் படி அல் குர்ஆனை உடலாலும் உள்ளத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாரான நிலைக்குப் பிள்ளைகள் வளர்ந்ததும் அவர்களுக்கு அல் குர்ஆனைக் கற்றுக் கொடுக்கத் தொடங்க வேண்டும். அதற்காக அரிச்சுவடியையும் சமயத்தின் அடிப்படைகளையும் கற்றுக் கொடுங்கள். அதன் பின்னர் ஒழுக்க நெறிகள், அறிவைப் புகழ்தலும் அறியாமையைக் கண்டித்தலும், பெற்றோருக்கு இரக்கம் காட்டுதல், அடுத்தவர்களுக்கு நன்மை செய்தல், நலிவானவர்களையும் வறியவர்களையும் கௌரவித்து அவர்களுக்கு உதவி செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பான தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளைக் கற்றுக் கொடுங்கள். பிள்ளை அல் குர்ஆனையும் மொழியையும் கற்று முடித்த பின் அவனது ஆற்றல்களுக்கும் ஆர்வங்களுக்கும் பொருத்தமான பொழுது போக்குகள், செயற்பாடுகள் முதலியவற்றுக்கு அவன் திசைமுகப்படுத்தப்பட வேண்டும்.

இப்பருவத்திற்குரிய சாதகமான அம்சங்களும் நிறைய உண்டு. 13 அல்லது 14 வயதளவில் தான் உள்ளமும் விவேகமும் சிறப்பாகத் தொழிற்படத் தொடங்கும். முன்பு தம்மால் புரிந்து கொள்ள முடியாதிருந்த சிக்கலான விடயங்களைப் பதின்மவயதினரால் கற்றுக்கொள்ள முடியும். சமையல், பிள்ளைகளைப் பராமரித்தல், வீட்டிலுள்ள பொருட்களையும் தளபாடங்களையும் திருத்துதல் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கு ஏற்ற காலமும் இதுவே. அத்தோடு, மற்றவர்களோடு பேசுவதும் பழகுவதும் எப்படி? பல்வேறு அமைப்புக்களில் பங்கேற்பது எப்படி? போன்ற சமூகத் திறன்களையும் பதின்ம வயதினர் கற்றுக் கொள்வர். தமக்காகவும் மற்றவர் களுக்காகவும் எவ்வாறு மேலும் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது என்பது பற்றியும் அவர்கள் அறிந்து கொள்வர். தம் கல்வியைத் தொடரும் அதே வேளையில் பகுதி நேரத் தொழிலொன்றைச் செய்யவோ அல்லது முழு நேரத் தொழில் அல்லது தொண்டர் வேலை முதலியவற்றில் ஈடுபடவோ அவர்களால் முடியும்.

இந்நிலையில் பதின்மவயதினருக்கான சில தற்காப்பு முறைகளை இஸ்லாம் வழங்குகிறது. அவற்றுள் சில:

- எதிர்ப்பாலாரின் முன்னிலையில் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுதல்.
- உடலின் சக்தியைச் செலவிடுவதற்காக விளையாட்டுக்களில் ஈடுபடல்.
- திங்கட் கிழமைகளிலும் வியாழக் கிழமைகளிலும் நோன்பு நோற்றலும் மற்றவர்களோடு சேர்ந்து நோன்பு துறத்தலும்.
- ஒருவருடைய வீட்டுக்குள் நுழைய முன்பு அதற்காக அனுமதி கேட்டல்.
  மூடிய இடத்தில் எதிர் பாலாரோடு தனித்திருப்பதை முற்றாகத் தவிர்த்தல்.
- பத்து வயதுக்குப் பின்னர் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் தனித்தனியான படுக்கைகளில் நித்திரை கொள்ளல். (ஒரே அறையிலாக இருக்கலாம்)

இது தொடர்பாக மேலும் சில விடயங்கள் கவனிக்கப்படுவது அவசியம்:

- பதின்ம வயதினர் தமக்கெனச் சுய அடையாளமொன்றை விருத்தி செய்து கொள்வர். அவர்களுக்கு ஓரளவு அந்தரங்கமும் தனித்திருப்பதற்கான அவகாசமும் தேவை. வயது செல்லும் போது, நான் யார்? நான் இங்கு ஏன் இருக்கிறேன்? வாழ்க்கையின் அர்த்தம் என்ன? உலகில் ஏன் இத்தனை பிரச்சினைகள்? என்றெல்லாம் இவர்கள் சிந்திக்கத் தொடங்குவர். இப்பருவத்தில்தான், தாம் கற்றுள்ளவை பற்றிப் பல்வேறு வினாக்களை அவர்கள் எழுப்பி, அதற்கான விடைகளையும் புதுக் கருத்துக்களையும் தேடுவார்கள். சில வேளைகளில் பெற்றோருடன் முறுகல் நிலையும் வாக்குவாதங்களும் ஏற்படுவதற்கு இது ஒரு காரணமாகும். ஒரு பிள்ளை வயது வந்தவனாக மாறுவதற்கு எடுக்கும் காலம் (11 முதல் 19 வயது வரை) மிக நீண்டதும் சிரமங்கள் நிறைந்ததுமாகும். எனவே, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பொறுமையோடும் புரிந்துணர்வோடும் நடந்து கொள்வது மிக அவசியம்.

- பதின்மவயதினர் கருத்துரீதியான முறையில் சிந்திப்பதற்குரிய ஆற்றலை விருத்தி செய்து கொள்வார்கள். அவர்கள் கருத்துப்படிவங்களை உருவாக்கவும் கற்பனை செய்யவும் தொடங்குவார்கள். பிரச்சினைகளை எதிர்பார்க்கவும் எதிர்காலத் தீர்வுகளை உருவாக்கவும் அவர்களால் முடியும். அண்மிய நிகழ்காலத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கக் கூடியதாக இருந்த முந்திய பருவத்தைப் போலன்றி இப்போது கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் பற்றிய தெளிவான கருத்துடன் அவர்களால் நோக்க முடியும். அத்தோடு, நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள், நூற்றாண்டுகள் என்பவற்றின் கருத்தையும் அவர்கள் புரிந்து கொள்வர். வரலாறு பற்றிய உணர்வொன்றும் அவர்களில் ஏற்படுவதனால் உயிர்களின் தோற்றம், மறுமை வாழ்க்கையின் இயல்பு, இலக்குகளும் அவற்றை அடையும் வழிமுறைகளும், விழுமியங்களும் ஒழுக்க நெறிகளும், அண்டத்தின் ஆரம்பமும் முடிவும், இம்மை வாழ்க்கையும் மறுமையும் போன்றன தொடர்பாகவும் அவர்கள் வினா எழுப்புவர்.

- பதின்மவயதினரிடையே சமய உணர்வொன்று விருத்தி யடைகிறது. குமரப் பருவம் சமய விழிப்புணர்வுக்குரிய காலம் என அழைக்கப்படுகிறது. இப்பருவத்தில் தான் சுவர்க்கமும் நரகமும், பாவமும் பாவ மன்னிப்பும், மீள உயிர்ப்பித்தலும் முடிவிலா வாழ்க்கையும் களாவும் கத்தும் போன்ற விடயங்கள் பற்றித் தமது வலிமையான கருத்துக் களை முன்வைத்துப் பதின்ம வயதினர் வாதிடுகின்றனர். வயது 20ஐக் கடக்கும் போது வாழ்க்கை பற்றிய அவர்களது கண்ணோட்டம் உறுதியடைந்து புறவயமானதாக மாறுகிறது.

- பதின்மவயதினர் பகற்கனவு காண்பதிலும் தமது நாட்டங் களைக் கற்பனை செய்து மகிழ்வதிலும் ஈடுபடுவர். குமரப் பருவத்தினர் தமது விருப்பங்களைத் தம்முள் வெளிப்படுத்தும் முக்கிய வழியாக பகற்கனவுகள் அமைகின் றன. அது உள வளர்ச்சிக்குரிய சிறப்பியல்புகளில் ஒன்றாகும். அளவுக்கு மீறிச் செய்யப் படாத வரையில், இது ஒரு சாதாரண தோற்றப்பாடே. (அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் இப்போக்கு மிகைத்து விடக் கூடாது)

- பதின்மவயதினர் ஏனையோரை விமர்சிப்பதில் ஈடுபடுவார்கள். இதனைத் தம் பெற்றோரிலேயே ஆரம்பிக்கின்றனர். அவர்கள் தம் பெற்றோரின் ஆடைகள், உணவு முறைகள், சுவைகள் முதலியவற்றையும் தம் உடன் பிறப்புக்களை அவர்கள் வளர்க்கும் முறையையும் விமர்சித்து, அவர்களைத் தம் சகாக்களின் பெற்றாரோடு ஒப்பிடுவர்.

பல்வேறு நாடுகளில் இடம்பெறுகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பெரும்பாலும் பதின்மவயது மாணவர்களே பங்குபற்றுகின்றனர். இதுபற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? பதின்மவயதினர் அதிக உடற்பலம் உள்ளவர்கள்; மனவெழுச்சி மிக்கவர்கள்; உணர்ச்சிவசப்படுபவர்கள். அத்தோடு, சீர்திருத்தம் அல்லது தீவிரவாதம் பற்றிய தமது அபிப்பிராயங்களில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள். இது அவர்களது விருத்திக் கட்டத்தோடு தொடர்புடையது.

அத்தோடு, தமது பாடசாலை, சமூகம், அரசாங்கம் முதலியவற்றையும் விமர்சித்து சீர்திருத்தத்திற்கும் சமூக மாற்றத்திற்குமான அதி தீவிர முறைகளை முன்வைப்பர்.

- பதின்மவயதினர் இலட்சியவாதிகளாக இருப்பர். வாழ்க்கையில் போதிய அனுபவமின்மை காரணமாக இவர்களிடையே இலட்சியவாதப் போக்கு பொதுவாகக் காணப்படும்.

கருத்து ரீதியான சிந்தனை + அனுபவமின்மை → இலட்சியவாதம்

இலட்சியவாதப் போக்குள்ள பதின்மவயதினர் தம் பெற்றோரினதும் சமூகத்தினதும் அதிகாரத்தை நிராகரிப்பர். குறிப்பாகக் குமரப் பருவத்தினரின் கருத்துக்களும் தீர்வுகளும் எவ்விதத் திருப்திகரமான விளக்கமும் வழங்கப்படாமல் நிராகரிக்கப்படும் போது இவ்வாறு நிகழலாம். இப்பருவத்தினர் விரக்தியுற்று, நிம்மதியிழந்து, இறுதியில் தனிமைப்பட்டும் ஏனையவர்களின் உறவுகளை முறித்துக் கொண்டும் வாழக்கூடும். இலட்சியப்போக்குடைய பதின்மவயதினர் ஆதரவற்றவர்களாகவும் நம்பிக்கை இழந்தவர்களாகவும் மாறுவர். அவர்கள் தம் மீது நம்பிக்கை இழப்பதோடு, அடுத்தவர்களை நம்பவும் மறுப்பர்.

- பதின்மவயதினர் தாம் வழி தவறிவிட்டது போல் உணர்வார்கள். இவர்கள் வாழ்க்கையில் பல்வேறு விருப்பத் தேர்வுகளை எதிர்கொள்வார்கள். எனினும், அவர்கள் பெற்றோரையோ அனுபவமுள்ளவர்களையோ கலந்தாலோசிக்காமல் தாமே தீர்மானங்களை மேற்கொள்வதனால் சரியான தீர்மானங்களை எடுக்கத் தவறிவிடுகிறார்கள். இப்பருவத்தில் அவர்கள் சரியான தீர்மானங்களை எடுக்க உதவுவதற்காக, எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் மறைமுகமாக உதவி பெற்றுக் கொள்ளக் கூடிய சூழலொன்று உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும்.

- பதின்மவயதினர் சாதனை பற்றிய உணர்வொன்றை விருத்தி செய்து கொள்வார்கள். தம் சாதனைகளைத் தமக்கே நிரூபித்துக் காட்டுவதற்கு இவ்வுணர்வு தேவைப்படுகிறது. நன்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களை அவர்களுக்கு வழங்குவது அவர்கள் வெற்றி பெறுவதற்கு உதவும். பொறுப்புக்களற்ற நிலைமையானது, தாம் புறக்கணிக்கப் படுபவர்கள், முக்கியமற்றவர்கள் என்ற உணர்வை அவர்களில் ஏற்படுத்தும். அளவுக்கு மிஞ்சிய அல்லது கடினம் மிக்க பொறுப்புக்கள் வழங்கப்பட்டால், தாம் செயல்திறன் அற்றவர்கள், வெற்றி பெற முடியாதவர்கள் என்ற தாழ்வெண்ணம் உருவாகும். எனவே, இந்த விடயத்தில் ஒரு சமநிலை பேணப்பட வேண்டும்.
- பதின்மவயதினரிடம் மனனம் செய்யும் ஆற்றல் காணப்படும். மனனத்தில் இரு வகை உண்டு. அவையாவன: பொருளுணராது மனனஞ் செய்தல்; பொருளுணர்ந்து மனனஞ் செய்தல். முதல் வகையில் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் வாசித்ததை நினைவிலிருத்தித் திருப்பிக் கூறுவதாகும். இது பொறிமுறை மனனம் எனவும் அழைக்கப்படும். இரண்டாவது வகையில் உள்ளடக்கம் புரிந்து கொள்ளப்படுவதோடு, அதன் பொருள் வேறு விடயங்களோடு தொடர்பு படுத்தப்படும். பொறிமுறை மனனத்தின் விருத்தியானது பிள்ளைப் பருவத்தில் ஆரம்பித்து 15 வயதில் உச்ச நிலையை அடையும். அதன் பின்னர் அது வேகத்திலும் பரப்பிலும் கூர்மையிலும் குறைவடையத் தொடங்கும். எனினும், பொருளுணர்ந்த மனனமானது, பிந்தி ஆரம்பித்து பதின்ம வயதுகளின் போது (நடுத்தர வயது வரை) தொடர்ந்து விருத்தியும் வளர்ச்சியும் அடையும். பிள்ளைப் பருவத்தின் ஆரம்பத்தில் கற்றுக் கொண்டவை பாறையின் மேல் குடைந்தது போல் நெடுங்காலம் நிலைத்திருக்கும். ஆனால், முதுமையின் போது கற்றுக் கொண்டவையோ நீர் மேல் எழுத்துப் போல் துரிதமாக மங்கிவிடும்.

சங்கிலி போன்று இடம்பெறக்கூடிய நிகழ்வுகள் பின்வருவது போன்று, ஒன்று இன்னொன்றுக்கு வழி கோலலாம்:

பதின்ம வயதுக்குரிய இலட்சியவாதமும் அனுபவக் குறைபாடும் → பெற்றாராலும் சமூகத்தாலும் நிராகரிக்கப்படுதல் → மோதல் → தனிமைப்படல் → உறவுகள் முறிதல் → மனத்தளர்வு → ஏனையவர்களை நம்ப மறுத்தல் → ஆதரவற்ற தன்மை → நம்பிக்கையிழப்பு → பற்றின்மை → மந்த நிலை → இயக்கமின்மை

21- 35 வருடங்கள்: இளம் முதிர் பருவத்தினர்

பெரும்பாலானவர்களைப் பொறுத்தமட்டில் முதிர்ச்சிக்கும் வலிமைக்கும் இனப் பெருக்கத்துக்கும் உரிய காலம் இதுவாகும். 35 வயதாகும் போது உள்ளம் முழுமையாக விருத்தியடைந்து விடுகிறது என ஏழாம் நூற்றாண்டில் உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) அவர்களும் 20ம் நூற்றாண்டில் அல்லாமா யூஸுஃப் அலி அவர்களும் நம்பினார்கள். அதன் பிறகு ஏற்படும் விருத்தியானது அனுபவத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டது.

35- 50 (அல்லது 60): நடுத்தர வயதினர்

இக்கட்டத்தில் ஏற்படும் விருத்தியானது உடல் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதல்ல. கல்வி, பயிற்சி, அனுபவம் என்பவற்றின் காரணமாகவே இவ்விருத்தி

ஏற்படுகிறது. இக்கட்டத்தின் இறுதியில் படிப்படியாக உடல் பலவீனமடையத் தொடங்கும்.

60 வயதும் அதற்கு மேலும்: முதுமை

முதுமை ஆரம்பித்து, இறுதியில் அறிவும் நினைவாற்றலும் நலிவடையும். பலவீனம் மிக்க முதுமை நிலை ஏற்படும். ஒருவர் அந்த வயது வரை வாழ்வாராயின் அவரது அறிவு குறைவடையும். ஒரு கம்ப்யூட்டரின் நினைவுகள் படிப்படியாக அழிந்து போவதற்கு இதனை ஒப்பிடலாம். முதியவர்கள் அல்ட்ஸ்ஹைமரின் நோயினால் பாதிக்கப்படும் போது நினைவாற்றல் அழிந்து போகும்.

மனிதனின் வாழ்க்கை வட்டம் குழந்தையின் பிறப்போடு ஆரம்பிக்கிறது. இந்நிலையில் கேள்வி, பார்வை, பாசம் என்பன தவிர வேறெதுவும் அந்தக் குழந்தைக்குத் தெரியாது. குழந்தைகள் நலிவு நிலையிலிருந்து வலிமை மிக்க நிலைக்குச் சென்று மீண்டும் முதுமையின் போது நலிவு நிலைக்குத் திரும்புகின்றன. பிறப்புக்கும் முதுமைக்கும் இடையில் மனிதன் அறிவுடையவன் ஆகிறான். கிரகித்தலையும் ஞானத்தையும் பெற்றுக் கொள்ளுமாறு இறைவன் அவனை ஊக்குவிக்கிறான். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் - இப்பயணத்தின் இறுதியில் - மனிதர்கள் நன்னெறி உடையவர்களாகவும் பெரும் பாவங்களைத் தவிர்த்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். 60வது வயதில் தவறுகள் செய்வதற்கு எவ்வித சாக்குப் போக்கும் கூற முடியாது. இதனை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள்:

> மனிதன் அறுபது வயதை அடையும் போது அனைத்தையும் மன்னிப்பவனான அல்லாஹ் அவனுக்கு எல்லா மன்னிப்பையும் வழங்கி விட்டான். (அல் புகாரி)

வயது செல்லச்செல்ல எமது நினைவாற்றல் மங்கிச் செல்கிறது. ஆனால், எமது பகுத்தறிவாற்றலோ தொடர்ந்தும் உறுதியாக இருக்கும். உண்மையான அருளல்லவா இது!

வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்திலிருந்தே இறைவனைத் துதிக்கத் தொடங்கி, அவனது படைப்புக்களினதும் பூமியில் மனித வாழ்க்கையினதும் நோக்கங்களை இனங்கண்டு கிரகித்துக் கொள்ளக் கூடிய ஞானம் மிக்க கட்டத்திற்கு முதிர்ச்சி அடைபவர்களே அதிர்ஷ்ட சாலிகள்; அருள் பெற்றவர்கள்

ஒரு பிள்ளை கடிகாரத்தின் போக்குக்கு ஏற்ப விருத்தி அடைவதில்லை. ஒவ்வொரு பிள்ளையும் தமக்கேயுரிய வேகத்திலும் முறையிலும் விருத்தி அடைகிறது. ஒரு பிள்ளையின் தனித்துவமான அகக் கடிகாரம் பற்றியே பெற்றார் தம் கவனத்தைக் குவிக்க வேண்டும்.

விருத்தியின் படிநிலைகளைப் பயன்படுத்திக் கொள்ளல்

குழந்தை என்பது எமக்குக் கிடைத்துள்ள வாய்ப்புமிகு வரமொன்றாகும்.

குழந்தையின் இதயம் பரிசுத்தமாகவும் காலியாகவும் இருக்கிறது. அனைத்தையும் தேக்கி வைக்கக்கூடிய இயல் பான நாட்டம் அதனிடம் உண்டு. அத்தோடு, அனைத்தினாலும் அது கவரப்படும்.
(இமாம் அல் கஸ்ஸாலி)

குழந்தை எல்லாத் தகவல்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அத்தோடு, அதனை நோக்கி வழங்கப்படும் அனைத்து அறிவுறுத்தல்களையும் அது ஏற்றுக்கொள்கிறது.
(இப்ன் மிஸ்காபியாஹ்)

எனவே, முடிந்த அளவுக்கு உச்சமாகக் குழந்தை யுடன் உறவாடி அதற்குக் கற்றுக் கொடுப்பதற்குப் பெற்றார் பெற்றுள்ள பொன்னான வாய்ப்பு இதுவே.

முதல் இரண்டு வருடங்களின் போதும் தாய்ப்பாலூட்டல் - இந்தக் கட்டத்தின் போதே ஆளுமையின் முக்கியமான கூறுகள் உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக உடல் ரீதியிலும் மனவெழுச்சி ரீதியிலும் ஆரோக்கியமான பிள்ளையொன்று உருவாகும். குழந்தைப் பருவத்தில்தான் பிள்ளையினது மூளையின் மையங்களும், மூளையின் நரம்புப் பிணைப்புக்களும், மில்லியன் கணக்கான நரம்புக் கலங்களைக் கொண்ட நரம்பு வலைப்பின்னல்களும் உருவாக்கப்படுகின்றன. இந்தக்கட்டத்தில்தான் துணிச்சல், ஆக்கத்திறன், அன்பு, நேர்மை, மனப்பாங்குகள், மொழி, தர்க்கத் திறன் முதலியன உருவாகத் தொடங்கும். தாய்ப்பாலினால் கிடைக்கும் எண்ணற்ற மருத்துவ ரீதியான நன்மைகளுக்கு மேலதிகமாக, மனவெழுச்சி ரீதியான நன்மைகளையும் தாய்மார் தம் குழந்தைகளுக்கு வழங்குகின்றனர். முதல் இரண்டு வருடங்களிலும் பாலூட்டும் போது அன்பு, கருணை, சுய மதிப்பு என்பன இவ்வாறு வழங்கப்படுகின்றன. குழந்தையுடனான நெருங்கிய உளவியல் ரீதியான உறவின் காரணமாகப் பாலூட்டும் தாய்மாரும் நன்மை பெறுகின்றனர்.

அல்லாஹ்வை நேசித்தலும் அவனுக்குப் பயப்படுதலும் - அருளாளனும் அன்புடை யோனுமாகிய இறைவனிடமிருந்து கிடைக்கும் அன்பு, நம்பிக்கை, வெகுமதிகள் என்பன பற்றி ஆரம்பத்திலேயே பிள்ளைக்கு அறிமுகஞ் செய்யப்படல் வேண்டும். அச்சம், தண்டனை, நரகம் போன்ற கருத்துப் படிவங்களை அறிமுகஞ் செய்வது பதின்மவயது வரை தள்ளிப் போடப்பட வேண்டும். ஏனெனில், அந்த வயதில்தான் அவர்களால் கருத்தியல் ரீதியான கருத்துப் படிவங்களைக் கிரகித்துக் கொள்ள முடியுமாக இருக்கும். ஆரம்ப வயதுகளில் அவர்களுடைய இளம் உள்ளங்களில் விடயங்கள் ஆழமாகப் பதிந்து விடுவதனால், நரகத்தைப் பற்றித் தொடர்ச்சியாக அவர்கள் பயமுறுத்தப்படும் போது சுதந்திரம், ஆக்கத்திறன் போன்ற விடயங்களில் அவர்களுக்கிருக்கும் ஆற்றல்கள் நசுக் கப்பட்டுவிடுகின்றன. பிள்ளைகளுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதனால் அவர்களது துணிவும், ஆபத்துக்கு முகங்கொடுக்கும் ஆற்றலும், தீர்மானம் மேற்கொள்ளும் திறனும், தன்னம்பிக்கையும் பறிக்கப்பட்டு விடலாம்.

மனனம் செய்தல் - அல்குர்ஆனை எப்போது மனனம் செய்ய வேண்டும்; அதனைக் கிரகித்துக் கொள்வதில் எப்போது கவனம் செலுத்த வேண்டும் என்பன பற்றி ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி 'கைஃப ததஆமுல் மஆ அல்குர்ஆன்' எனும் தனது நூலில் கேள்வி எழுப்புகிறார். இதற்கான சரியான விடைகளை அவர் தேடியுள்ளார். பதின்மவயது வரை கிரகித்தலைவிட மனனம் செய்வதற்கே கூடிய அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது. அதன் பின்னர் பதின்மவயதுகளின் ஆரம்பம் முதல் கிரகித்தலுக்கும் தஃப்ஸீர் எனும் வியாக்கியானத்துக்கும் கூடிய அழுத்தம் வழங்கப்பட வேண்டும். இந்த அணுகுமுறையில் பிள்ளையினது மூளையின் ஆற்றல்கள் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

தஃவாவின் அம்சங்கள் - பதின்மவயதுகளின் போது தஃவா பற்றிய விடயங்கள் தீவிரமாக வழங்கப்பட வேண்டும். சுவர்க்கம், நரகம், மறுமை போன்ற கருத்தியல் சார்ந்த கருத்துப் படிவங்களை இப்பருவத்தில்தான் புரிந்து கொள்ள முடியும். அவர்களுடைய சக்தியும் மனவெழுச்சிகளும் இக்கட்டத்தில் உச்சமாக இருக்கும். எனவே, அவர்களது தீவிர ஆர்வத்தை நன்னெறிகள், ஆன்மீகம், பொது நன்மைக்காகத் தியாகம் செய்தல் போன்றவற்றை நோக்கித் திசை திருப்பி விடலாம். பதின்மவயதினரின் மனவெழுச்சிகள் பகுத்தறிவைக் கொண்டு சமநிலைப் படுத்தப்பட வேண்டும். நெருக்கடி நிலைமைகளில் அவர்கள் தமது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதோடு எல்லாம் வல்ல இறைவனின் மீது தங்கியிருக்கும் இயல்பை (தவக்குல்) உறுதிப் படுத்திக்கொள்ளவும் வேண்டும். இதற்காக அவர்கள் தமது வணக்க வழிபாடுகளை, அறிவைக் கொண்டு வலுப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது.

குமரப் பருவத்தின் போது விமர்சனங்கள் பற்றிய உணர்திறன் - தமது உணர்வுகளை நோவித்துக் கொள்ளாமலும் தமது சுய மரியாதையைப் பாதித்துக் கொள்ளாமலும் இருப்பதற்காகப் பதின்மவயதினருக்கு சாமர்த்தியமான முறையில் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இதன் நோக்கம் அவர்களது விருத்திக்கு வழி காட்டுவதேயன்றி அவர்கள் தம் நம்பிக்கையை இழக்கச் செய்வதல்ல. இந்தப் படிநிலையில் உற்சாகப்படுத்தலும் மேம்படுத்தலுமே அணுகு முறையாக இருத்தல் வேண்டும். பதின்மவயதினர் என்ற வகையில் அவர்களது மனதில் பொறாமையும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் இருக்கத்தான் செய்யும். எனவே தான், உடன் பிறந்தவர் அனைவரையும் நியாயமாகவும் சமமாகவும் நடத்துவது மிக முக்கியமாகிறது.

சுய அடையாளத்தின் உருவாக்கம் துரிதப்படுத்தப்பட வேண்டும் - இது குமரப் பருவத்தில் இடம்பெறுவது அவசியம். ஏனெனில், இந்நிலையில்தான் பதின்மவயதினர் தம்மையும் சமூகத்தையும் அண்ட சராசரத்தையும் அதீத பௌதீக விடயங்களையும் 'அல்கைப்' என்னும் மறைவானவற்றையும் பரீட்சித்து ஆராய முற்படுகின்றனர். இந்தக் காலத்தில் தான் தௌஹீத் எனும் இறைவனின் ஏகத்துவம், இறைவனின் பிரதிநிதியாக மனிதன் இருத்தல், நாகரிகத்தைக் கட்டியெழுப்புதல், உலகக் கண்ணோட்டம், வாழ்க்கையின் குறிக்கோள்கள், மற்றவர்களோடும் சூழலோடும் படைத்தவனோடும் ஒருவனுக்குள்ள உறவு முதலிய உண்மையான கருத்துப் படிவங்கள் பற்றிக் கலந்துரையாடுவது அவசியமாகிறது.

இரண்டாம் மொழியொன்றைக் கற்றுக் கொள்ளல் - இதனைப் பதின்மவயது வரை தள்ளிப் போடக் கூடாது. இது பத்து வயதுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்பருவத்தில்தான் மூளையின் நரம்பிணைப்புக்களினூடாக மொழியின் ஒலிக்குறிகள் பதிக்கப்படுகின்றன. இள வயதிலேயே ஒரு மொழியைக் கற்க ஆரம்பித்தால் அதனைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் போன்றே உச்சரிக்க முடியுமாகும். பிள்ளைப் பருவத்தின்

ஆரம்பத்திலேயே மொழிகள் பலவற்றை அதிக சிரமமின்றிக் கற்கும் அபரிமிதமான ஆற்றல் பிள்ளைகளிடம் உண்டு. ''ஒரு மொழியை அகத்துறிஞ்சிக் கொள்வதற்கான உளச்சார்பு இளம் மூளைகளுக்குத் தான் கூடுதலாக இருக்கிறது. இள வயதிலேயே இரு மொழி ஆற்றல் கொண்ட ஒரு பிள்ளை பிற்காலத்தில் மூன்றாம், நான்காம் மொழிகளை மிக எளிதாகக் கற்றுக் கொள்ளும். வயது வந்தவர்களுடன் அல்லது உயர் பள்ளி மாணவர் களுடன் ஒப்பிடுகையில் சிறு பிள்ளைகள் மிகச் சிறப்பான முறையில் ஜேர்மன் மொழியை சுதேச உச்சரிப்புடன் கற்றுக் கொள்கிறார்கள். அதே போன்று சீன மொழியையும் அவர்களால் கற்க முடிகிறது'' (Gold- 2006). இது அறபு மொழிக்கும் ஏனைய மொழி களுக்கும் பொருந்தும்.

ஆறு வயதுடைய பாரசீக ஹாபிழ்

(அல் குர்ஆன் முழுவதையும் ஞாபகத்திலிருந்து ஓதக்கூடியவரையே 'ஹாபிழ்' என்கிறோம். அவர் அறபு மொழியைப் புரிந்து கொள்ள முடியாதவராகவும் இருக்கலாம்)

பாரசீக மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஸையித் முஹம்மத் ஹுஸைன் தபதபாயி ஆறு வயதில் அல் குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தார். ''அவருக்கு 2 வயதாக இருந்த போதே அவரது ஆற்றலை நான் உணர்ந்து கொண்டேன்'' என்கிறார் அவரது தந்தை. ஒரு ஹாபிழாவான தனது தாயார் ஓதுவதைச் செவிமடுத்தே அவர் கற்றுக் கொண்டார். ஓரிரண்டு முறை செவிமடுப்பதன் மூலம் அவர் குர்ஆன் வாக்கியங்களை மனனஞ் செய்தார். தான் மனனஞ் செய்ததை நிலை நிறுத்திக் கொள்வதற்காக அவர் தினமும் குர்ஆனை ஓதுகிறார். நபிமார்களின் வரலாறுகளே- குறிப்பாக யூஸுஃப் (அலை) அவர்களின் வரலாறே- அவருக்கு மிகப் பிடித்தமான பகுதிகளாகும். (Muslim News - 1998)

அறபு மொழியைப் புரிந்து கொள்ளாத ஒருவர் அல் குர்ஆனை ஆரம்பம் முதல் இறுதி வரை மனனஞ் செய்ய முடியுமாக இருப்பது அந்தப் புனித நூலின் ஓர் அற்புதமே. இன்று பல்வேறு இனங்களைச் சேர்ந்த பத்து வயதுக்குக் குறைந்த பல்லாயிரக் கணக்கான பிள்ளைகள் அல் குர்ஆனை அதன் மூல மொழியான அறபியில் மனனஞ் செய்து வைத்துள்ளனர்.

சிரியாவைச் சேர்ந்த நாலரை வயது ஹாபிழ்

முழுக் குர்ஆனையும் மனனஞ் செய்தவர்களுள் வயதில் மிகக் குறைந்தவர். சிரியாவின் அலப்போ நகரில் 1996இல் பிறந்த அப்துல்லாஹ் அஹ்மத் ஷ்கலா ஆவார். மூன்று வயதில் குர்ஆனை மனனஞ் செய்ய ஆரம்பித்த அவர் நாலரை வயதில் அதனைப் பூர்த்தி செய்தார். ஐந்து வயதாகும் போது அவர் நபிகளாரின் ஓராயிரம் ஹதீஸ்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிதை வரிகளையும் மனனஞ் செய்திருந்தார்.

இவர் தனது தந்தையின் கடையிலிருக்கும் போது அயலவரின் வானொலியில் ஒலித்த ஒரு பாடலைச் செமடுத்த பின் அதனை அப்படியே திருப்பிப் பாடுவதைத் தந்தையார் அவதானித்தார். அப்போது அவருக்கு வயது இரண்டு. அவரது ஆற்றலை அல் குர்ஆனின் திசையில் திருப்புவதற்கு அவரது பெற்றோர் முடிவு செய்தனர். அவர்கள் சில அத்தியாயங்களை அப்துல்லாஹ்வுக்கு வாசித்துக் காட்டினர். இரண்டாவது வாசிப்பிலேயே அவர் அவற்றை மனனஞ் செய்து கொண்டார். சில மாதங்களுக்குள் அப்துல்லாஹ் தஜ்வீத் விதிமுறைகளின் படி தனது உச்சரிப்பையும் திருத்தியமைத்துக் கொண்டார்.

தனது ஐந்தாவது வயதில் சிரியாவின் தேசிய அல் குர்ஆன் போட்டியில் அப்துல்லாஹ் முதற்பரிசு பெற்றார். அதில் கலந்து கொண்ட ஏனையோர் 14 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப் பட்டவர்களாக இருந்தனர். அல் குர்ஆன் போட்டிகளில் முதலிடம் பெற்ற மிக இள வயதினர் அவரே. (அல் உஸ்றாஹ் சஞ்சிகை - 2005)

மனனம் செய்தல்: மேற்குக்கும் கிழக்குக்கும் இடையில்

முஸ்லிம் நாடுகளில் காணப்படுகின்ற முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளை குர்ஆன் மனனம் செய்யும் பள்ளிக் கூடங்களில் சேர்க்கும் வழக்கம் நல்ல பயன்களை விளைவித்துள்ளது. முஸ்லிம்களில் பெரும்பான்மையினரால் (சுமார் ஐந்தில் நான்கு பங்கினரால்) அறபு மொழியைப் புரிந்து கொள்ள முடியாமலிருப்பினும் அல் குர்ஆனைக் கிரகித்துக் கொள்ளாமலே அதனை முழுமையாக மனனம் செய்யும் ஆற்றல் அவர்களிடம் இருக்கிறது. பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப காலத்தில் காணப்படும் மனனஞ் செய்வதற்குரிய மூளை ஆற்றலே இதற்குக் காரணமாகும். விளங்கி வியாக்கியானம் செய்வது பின்பு பதின்மவயதில் இடம்பெறலாம். தற்காலத்தில், மனனம் செய்யும் முறைக்கு மேற்கத்திய உலகில் அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை. பைபிளோ, கவிதைகளோ, நாடகங்களோ அவ்வாறு மனனஞ் செய்யப்படுவதில்லை. எனினும், ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் பைபிளை மனனஞ் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். சில அறாபிய கிறிஸ்தவர்களின் பிள்ளைகள் அல் குர்ஆனை மனனஞ் செய்வதுண்டு. அது அவர்களுக்கு சொல்லாட்சி, மொழி வளம் என்பன தொடர்பில் பாரிய அனுகூலத்தை வழங்குவதோடு பதித்தல், தங்கவைத்தல், மீளப்பெறுதல் போன்ற நினைவாற்றல் தொடர்பான மூளையின் ஆற்றல்களையும் மேம்படுத்துகிறது.

ஆரம்ப காலத்தில் அல் குர்ஆனை மனனம் செய்வது வளர்ந்த பின் உயர் பள்ளிப் படிப்பில் துணை செய்கிறது

சூடான் நாட்டின் முன்னாள் கல்வி அமைச்சரான டாக்டர் யூஸுஃப் கலீபா பின்வருமாறு அறிவித்திருந்தார்:

சூடானிலுள்ள பல்வேறு கிராமிய மத்ரஸாக்களிலிருந்தும் பள்ளிக் கூடங்களிலிருந்தும் வருகின்ற ஹாபிழ்களுடனான எமது அனுபவத்தின்படி, மூளையில் விடயங்களைப் பதித்தல், அவற்றை மீளப்பெறுதல், சிக்கலான கருத்துப் படிவங்களையும் பிரச்சினைகளையும் கிரகித்துக் கொள்ளல் போன்றன தொடர்பில் அல் குர்ஆனை மனனம் செய்தவர்கள் சிறந்த நினைவாற்றலைக் கொண்டுள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுவான மதச் சார்பற்ற பள்ளிக் கூடங்கள் எதற்கும் சென்றிராத இம்மாணவர்களைப் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகைமை பெறச் செய்வதற்காக 2 வருட கால ஆயத்தப் பாடநெறியொன்று விஞ்ஞானப் பாடத்துறையில் வழங்கப்பட்டது. அவர்களில் 90% ஆனோர் நாட்டின் பொது நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்தனர். 12 வருடங்கள் மதச் சார்பற்ற பள்ளிக்கூடங்களில் கற்ற மாணவர்களோடு சரிசமமானவர்களாக அவர்கள் காணப்பட்டனர்.

ஆரம்ப வயதுகளில் மனனம் செய்வதானது வாழ்க்கையின் பிற்பகுதியில் நினைவாற்றலை வலுப்படுத்த உதவும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 31 : பெற்றோருக்கான ஆலோசனை

தாயும் தந்தையும் பின்வரும் ஒவ்வொரு விடயத்தையும் பற்றிக் கலந்துரையாடி அவற்றை உங்கள் பிள்ளைகள் விடயத்தில் பிரயோகிப்பது எப்படி என்பது பற்றித் தீர்மானியுங்கள்.

- உங்கள் பிள்ளைகள் எதிர்பார்ப்பதை விடச் சற்றுக் கூடுதலாக அவர்களுக்குக் கொடுங்கள்; அதையும் மகிழ்ச்சியோடு கொடுங்கள்.
- செவிமடுப்பதையெல்லாம் நம்பாதீர்கள்; உங்களிடம் இருப்பவற்றையெல்லாம் செலவு செய்யாதீர்கள்.
- ''நான் உங்கள் மீது அன்பு வைத்திருக்கிறேன்'' எனக் கூறும் போது அதனை உளச்சுத்தியுடன் சொல்லுங்கள்.
- நான் மனம் வருந்துகிறேன் என ஒருவரிடம் கூறும் போது அவரது கண்களை நோக்கிய வாறு கூறுங்கள்.
- உங்கள் பிள்ளைகளின் கனவுகள் பற்றி ஏளனமாகச் சிரிக்காதீர்கள்; கனவு காணாத வர்கள் பெரிதாக ஒன்றும் சாதிக்க மாட்டார்கள்.
- கருத்து முரண்பாடுகளின் போது நியாயமான முறையில் வாதிடுங்கள்.
- உறவினர்களை அடிப்படையாக வைத்து ஆட்களை எடை போடாதீர்கள்.
- மெதுவாகப் பேசுங்கள்; ஆனால், விரைவாகச் சிந்தியுங்கள்.
- நீங்கள் விடையளிக்க விரும்பாத கேள்வியொன்றை ஒருவர் கேட்டால், புன்சிரிப்போடு 'நீங்கள் இதைத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா?' எனத் திருப்பிக் கேளுங்கள்.
- மகத்தான அன்பும், மகத்தான சாதனைகளும் பெரிய ஆபத்துக்களைக் கொண்டுள்ளன.
- ஒருவர் தும்முவதைக் கேட்டால் 'அல்ஹம்துலில்லாஹ்' எனக் கூறுங்கள்
- நீங்கள் ஏதேனுமொன்றை இழந்தால் அதன் மூலம் கிடைக்கும் படிப்பினையை இழக்கா தீர்கள்.
- உங்களை மதியுங்கள்; மற்றவர்களை மதியுங்கள். உங்கள் செயல்கள் அனைத்துக்குமான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.
- சிறிய சச்சரவுகள் காரணமாக மகத்தான குடும்பப் பிணைப்புக்கள் சிதைந்துவிட இடம் கொடுக்கா தீர்கள்.
- நீங்கள் தவறொன்றைச் செய்து விட்டதாக உணர்ந்தால் அதனைத் திருத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுங்கள்.
- தொலைபேசியைத் தூக்கும் போது புன்னகை சிந்துங்கள்; மறுமுனையில் பேசுபவர் அதனை உங்கள் குரலில் கண்டு கொள்வார்.
- சிறிதளவு நேரத்தைத் தனிமையில் கழியுங்கள்.

பெற்றோரே! உங்கள் பிள்ளைகளின் விருத்திப் படிநிலைகளைப் புரிந்து கொள்ளுங்கள்

சீராக்கும் வயது : 1- 7 வருடங்கள்

பிரதி பண்ணும் வயது : 8- 12 வருடங்கள்

உளத் தூண்டலுக்குரிய வயது : 13க்கு மேல்

அத்தியாயம்- 9

பிள்ளையின் ஆரோக்கியத்தைப் பேணுதல்

- அறிமுகம்: ஆரோக்கியம் முதன்மையானது 198
- கர்ப்ப காலம் 198
- பிரசவத்தின் பின்னர்: தடுப்பு மருந்து ஏற்றுவது பற்றிய சர்ச்சை 199
  - தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு எதிரான கருத்துக்கள் 200
- சுத்தமும் உடல் நலமும் 201
- சுகாதாரம்: சில இஸ்லாமிய நடைமுறைகள் 202
  - கழிவறையில் சுத்தம் பேணுதல் 203
  - மயிரும் நகங்களும் 203
- போசணை 205
  - மிகையாக உண்ணுதல் 206
  - உண்ணும் பழக்க வழக்கங்கள் பற்றிய இமாம் அல் கஸ்ஸாலியின் கருத்துக்கள் 207
- பிள்ளைகளும் போசணையும்: சில உண்மைகள் 207
  - கர்ப்ப காலம் 207
  - பிறப்பிலிருந்து பதின்மவயதுக்கு முந்திய நிலை வரை 208
  - பதின்மவயதுக்கு முந்தியவர்களும் பதின்மவயதினரும் 208
  - 2 முதல் 10 வயதினருக்குரிய உணவில் இருக்கவேண்டிய ஊட்டங்கள் 208
  - பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் 209
- உணவு பற்றிக் குர்ஆனிய அறிவுறுத்தல்கள் 213
- பிள்ளைகளும் உடற் பயிற்சியும் 215
  - பிள்ளைகளும் பாதணிகளும் 216
  - பிள்ளைகளில் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் 217
  - சிபாரிசு செய்யப்பட்ட உடற்பயிற்சி நிகழ்ச்சி நிரல் 218
- நித்திரை 219
  - நித்திரை இழப்பின் மருத்துவரீதியான விளைவுகள் 220
- மதுபானம் அருந்துதலும் போதைப் பொருள் தடுப்பும் 221
  - பிள்ளைகளும் உளத் தூண்டுதலும் 222
  - போதைப் பொருட் பாவனையின் ஆரம்ப கட்டத்தில் அவதானிக்கப்பட வேண்டிய அறிகுறிகள்: பெற்றார் என்ன செய்யலாம்? 223
  - அடிமையாதலும் ஆரோக்கியமான வீட்டுத் தொடர்புகளும் 226
  - பின் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்: தவிர்ப்பு வழி என்ற வகையில் சமயம் 228
- சட்டத்தை மீறுதல் 229
- தொழிற்பாடுகள் 32- 38 230

அறிமுகம்: ஆரோக்கியம் முதன்மையானது

நோயாளியொருவர் தன்னை வாட்டும் இடைவிடாத வலி பற்றி வைத்தியர்களிடம் புகார் செய்து கொண்டிருந்தார். இறுதியில் ஒரு வைத்தியர் அவரிடம் பின்வருமாறு சொன்னார்: "நீர் உம்முடைய வியாபாரச் சொத்துக்களான இயந்திரங்களையும் கட்டடங்களையும் பாதுகாப்பதற்காகப் பெருமளவு காலத்தையும் பணத்தையும் செலவு செய்கின்றீர். ஆனால், மிக முக்கிய சொத்தான உமது உடலைப் புறக்கணிக்கின்றீர்"

'நோய்க்குச் சிகிச்சை செய்வதைவிட, அதனைத் தவிர்த்துக் கொள்வதே சிறந்தது'. இந்த விடயத்தில் பெற்றோர் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும். பிரச்சினை ஏற்படும் வரை காத்திருந்து செயற்படுவதில் அர்த்தமில்லை. பிள்ளையின் ஆரோக்கியம் தொடர்பாகப் பெற்றார் செய்யும் எந்தப் பெரிய தவறும் அதன் எதிர்காலத்தை நாசமாக்கி விடலாம். தமது சொந்த ஆரோக்கியத்தையும் தமது பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் பேணும் இரட்டைப் பொறுப்பு பெற்றாருக்கு உண்டு. துரதிர்ஷ்டவசமாக, பலர் பிரச்சினைத் தவிர்ப்புக்கு சிறிதளவு செலவழிப்பதற்குப் பதிலாகத் தீவிர சிகிச்சைகளுக்குப் பெருமளவில் செலவு செய்கின்றார்கள். உரிய நேரத்தில் சரியானதைச் செய்வது எளிதானது; செலவு குறைந்தது. அத்தோடு, அதிக வெகுமதி தரக் கூடியது. செயற்படாமலிருந்தால் கவலைக்கும் துன்பத்துக்கும் வழியேற்படும். இதில் ஆபத்து என்னவெனில், பிள்ளைகளின் உடல் நலத்துக்கு ஏற்படும் சேதமானது நிரந்தரமானதாகி விடலாம். இலகுவாகத் தவிர்த்திருக்கக்கூடிய நோயொன்றினால் தம் பிள்ளை பாதிக்கப்படும் போது பெற்றாரில் ஏற்படும் குற்ற உணர்வு பாரதூரமானது. சில வேளைகளில் ஒருவர் எவ்வளவுதான் முயற்சித்தாலும் செலவு செய்தாலும் ஒன்றுமே செய்துகொள்ள முடியாத அவல நிலை ஏற்படலாம்.

எனவே, சுகாதாரத்துக்கு உயர் முன்னுரிமை வழங்கப் படல் வேண்டும். நல்ல ஆரோக்கியமின்றி நல்ல குடும்பத் தையோ நல்ல தொழிலையோ நல்ல கல்வியையோ நல்ல வாழ்க்கையையோ ஒருவர் பெற்றுக் கொள்ள முடியாது. மேலும், ஆரோக்கியமான உடலில்தான் ஆரோக்கிய மான உள்ளம் இருக்க முடியும். பிள்ளையின் உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் தேவையான உள மற்றும் அறிவு சார் விருத்திகள் ஏற்பட முடியும்.

சுத்தமான நீர், நல்ல சுகாதார வசதிகள், போசணைமிகு உணவு, உரிய நேரத்தில் தடுப்பு மருந்துகள், சீரான உடற்பயிற்சி, வைத்திய சேவை முதலியவற்றைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். ஆரோக்கியமான குழந்தையொன்றை வளர்க்கும் செயன்முறை பிள்ளை கருவில் உருவாக முன்னரே ஆரம்பித்துவிடும். ஏனெனில், முதலில் ஒருவர் தனக்கு ஆரோக்கியமான வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுப்பது அவசியம்.

கர்ப்ப காலம்

கர்ப்பிணித் தாயொருவர் தம் கருவில் வளரும் குழந்தை தொடர்பாகப் பாரிய பொறுப்புக்களைக் கொண்டிருக்கிறார். போசணையுள்ள உணவு, போதியளவு நித்திரை, ஒழுங்கு முறையாக வைத்தியரைச் சந்தித்தல் என்பன சுகமான பிரசவத்துக்கு அவசியமானவை. பக்டீரியாத் தொற்றுக்களையும் போதைப் பொருட்கள், ஆரோக்கியக் கேடான உணவுகள், மதுபானம் முதலியவற்றையும் அவள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கர்ப்பத்தின் போது செய்யக் கூடாத மிகத் தீங்கான செய்கை புகைத்தலாகும். கருவிலுள்ள

குழந்தை தனது தொப்புள் நாணினூடாகத் தாயிலிருந்து அனைத்தையும் அகத்துறிஞ்சிக் கொள்கிறது. எனவே, புகையிலையின் புகையிலுள்ள நச்சுப் பொருட்கள் குழந்தையை அடைவது மட்டுமன்றி குழந்தைக்குப் போசணை கிடைக்கும் செயன்முறையையும் பாதிக்கின்றது. எனவே தான் ஐக்கிய அமெரிக்காவில் விற்பனையாகும் சிகரெட் பக்கெட்டுகளில் பின்வரும் எச்சரிக்கை அச்சிடப்பட்டுள்ளது:

> புகைத்தலானது நுரையீரற் புற்று நோய், இதய நோய், Emphysema என்னும் நுரையீரல் தொடர்பான நோய் முதலியவற்றை ஏற்படுத்துவதோடு, கர்ப்பத்தையும் சிக்கலாக்கலாம்.

கர்ப்பிணித் தாய்க்கு வைரஸ் தொற்று ஒன்று ஏற்பட்டால் கருவிலுள்ள குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காக அவள் உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும். தாய்ப்பாலூட்டும் காலத்திலும் இது பொருந்தும். இவ்வகையான தொற்றுக்களால் குழந்தையில் குருட்டுத் தன்மை, செவிட்டுத் தன்மை, குன்றிய மன வளர்ச்சி, Schizophrenia, Autism போன்ற நிலைமைகள் உருவாகலாம். குருதிப்பகுப்பு நோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக கர்ப்ப காலத்தின் போது தாய்மார் உரிய குருதிச் சோதனைகளைச் செய்து கொள்வது நல்லது. இவ்வகையான நோய்கள் குழந்தையில் மூளைச் சேதத்தை அல்லது மரணத்தை ஏற்படுத்தலாம்.

பிரசவத்தின் பின்னர்: தடுப்பு மருந்து ஏற்றுவது பற்றிய சர்ச்சை

தடுப்பு மருந்து ஏற்றுவதற்குச் சார்பாகவும் எதிராகவும் கூறப்படும் வாதங்கள் இங்கே முன்வைக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்து பெற்றார் பொருத்தமான தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியும்.

பிள்ளை பிறந்தவுடன் வைத்தியர் குழந்தையின் கண்கள், காதுகள், தெறிவினைகள் முதலியவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டும். தொற்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஆண் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் (சுன்னத்) செய்யப்பட வேண்டும். பெருந்தொகை யான பெற்றோர்கள் தடுப்பு மருந்து ஏற்றுவதன் அவசியத்தை உணர்ந்திருப்பதனால் உரிய அட்டவணைப்படி தடுப்பு மருந்துகளைத் தம் குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுக்கின்றனர்.

தடுப்பு மருந்துகளால் நிறையச் சாதிக்கலாம்

சின்னமுத்து, போலியோ, கசநோய், ஈர்ப்பு வலி, குக்கல், தொண்டைக் கரப்பான் ஆகிய பிள்ளைப்பருவத்துக்குரிய ஆறு பயங்கரமான நோய்களால் வருடந்தோறும் மில்லியன் கணக்கான பிள்ளைகள் இறக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் நோயெதிர்ப்புச் சக்தி குறைந்த, போசணைக் குறைபாடுடைய பிள்ளைகளாவர். இந்நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் பல தசாப்தங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருவதனால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்நோய்களின் ஆபத்து நீக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் பிள்ளைப்பருவ நோய்களுக்கெதிராகத் தடுப்பு மருந்துகளைப் பெற்றுள்ளது. எனினும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வாழும் மில்லியன் கணக்கான பிள்ளைகளுக்குத் தடுப்பு மருந்து பெறும் வாய்ப்பு இல்லாததனால் அவர்கள் இந்நோய்களின் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்நாடுகளில் வாழும் குழந்தைகளில் 20% ஆனோருக்குத் தடுப்பு மருந்து கிடைப்பதில்லை. உலகில் ஒவ்வொரு வருடமும் சுமார் மூன்று மில்லியன் பிள்ளைகள் தடுப்பு மருந்தினால் தவிர்த்துக் கொள்ளக்கூடிய நோய்கள் காரணமாக அனாவசியமாய் இறக்கின்றனர். (UNICEF-2003)

தடுப்பு மருந்து காரணமாகப் பெரியம்மை (வைசூரி) நோய் முற்றாக ஒழிக்கப்பட்டு முழு உலகிலும் பாரிய மாற்றமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, அபிவிருத்தி அடைந்த நாடுகளில் போலியோவும் சின்னமுத்துவும் பெருமளவில் ஒழித்துக் கட்டப்பட்டுள்ளன. கடந்த இரு நூற்றாண்டுகளிலும் மருத்துவத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களுள் தடுப்பு மருந்துகள் மிக முக்கியமானவை. அத்தோடு, அவை செலவுச் சிக்கனமானவை. தடுப்பு மருந்துகள் நோயைக் குணமாக்குவதில்லை; மாறாக, அவற்றைத் தடுக்க உதவுகின்றன. எனவே, அவை சிறந்தவை. நூறு பேருக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டால் அவர்களுக்கு நோய் வராமலிருப்பது மட்டுமன்றி மேலும் ஆயிரக் கணக்கானவர்களுக்கு அவர்களிலிருந்து நோய் தொற்றுவதும் தடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் தடுப்பு மருந்துகள் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றுகின்றன. எனினும், ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகிய பிரதேசங்களில் பெருந்தொகையான சிறுவர்களுக்கு இன்றும் போதியளவு தடுப்பு மருந்துகள் கிடைப்பதில்லை. மேலும், எய்ட்ஸ், மலேரியா போன்ற ஆட்கொல்லி நோய்களுக்கு சரியான தடுப்பு மருந்துகள் இதுவரை உருவாக்கப்படவில்லை.

தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு எதிரான கருத்துக்கள்

சிறு வயதில் வழங்கப்படும் தடுப்பு மருந்துகள் காரணமாக ஏற்படக் கூடிய பக்க விளைவுகள் பற்றிப் பெரும்பாலானவர்கள் அறியாதிருக்கின்றார்கள். தடுப்பு மருந்துகளுக்கு எதிராக வாதிடுவோர் இன்று பொதுச் சுகாதார வசதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாகவே நோய்கள் குறைவடைந்துள்ளன என்றும் தடுப்பு மருந்து ஏற்றுவதனால் அல்ல என்றும் கூறுகின்றனர்.

> "எல்லாத் தடுப்பு மருந்துகளும் நச்சுத் தன்மையான இரசாயனப் பொருட்களையும் விலங்கு இழையங்களிலிருந்து பெறப்பட்ட DNA மூலக்கூறுகளையும் உயிருள்ள அல்லது இறந்த வைரஸ்கள், பக்டீரியாக்கள் ஆகியவற்றின் வடிவில் பிற புரதங்களையும் கொண்டுள்ளன. இன்றைய தடுப்பு மருந்துத் தொழிநுட்பம் 200 வருடங்களுக்கு மேல் பழைய விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதன்படி தடுப்பு மருந்துகள் பாதுகாப்பான முறையில் நோயெதிர்ப்புச் செயன்முறையைத் தூண்டி விடுவதாக நம்பப்பட்டது. தடுப்பு மருந்துகளில் சேர்க்கப்படும் நச்சுத் தன்மையான இரசாயனப் பொருட்கள் உடலிலிருந்து எளிதில் நீக்கப்படுவதில்லை. எனவே, இவை நோயெதிர்ப்பு தொடர்பாகவும் நரம்புத் தொகுதி தொடர்பாகவும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. இந்நச்சுப் பொருட்கள் மூளையிலும் ஏனைய இழையங்களிலும் திரட்சியடைந்து நரம்புகளைச் சேதப்படுத்துகின்றன. பிற புரதங்களும் DNA மூலக்கூறுகளும் உரிய முறையில் நடுநிலையாக்கப்பட்டு நிர்ப்பீடனத் தொகுதியினால் வெளியேற்றப்படாவிட்டால் அவை கல மென்சவ்வுகளினூடாக உள்ளே புக முடியும்"
> (www.know-vaccines.org/ parent.html)

நிர்ப்பீடனத் தொகுதி முற்றாக விருத்தியடைவதற்குப் பல வருடங்கள் செல்லும். சூழலிலிருந்து வரும் பக்டீரியா மற்றும் வைரஸ் தாக்குதல்களுக்கு முகம் கொடுப்பதன் மூலமே இவ்விருத்தி நிகழ்கிறது. இவ்வாறு உள்ளே வரும் பிற பொருட்களைக் காய்ச்சல், சளி, வியர்வை, தோலில் ஏற்படும் வெடிப்பு என்பவற்றின் மூலம் உடல் வெளியேற்றுகின்றது. தடுப்பு மருந்து ஏற்றுவதன் காரணமாக ஒப்பீட்டளவில் தீங்கற்ற நோய்களான சின்னமுத்து, கூகைக்கட்டு, ஜேர்மன் சின்னமுத்து, கொப்புளிப்பான், குக்கல் போன்றவற்றுக்கெதிராக இயல்பான ஆயுள்கால நிர்ப்பீடனத்தைப் பிள்ளைகள் பெற முடியாமற் போகிறது. தடுப்பு மருந்து ஏற்றிய பின்னர், ஒரு போதும் ஏற்படாமற் போகக்கூடிய ஒரு தாக்குதலை எதிர்நோக்கி உடல் விழிப்பு நிலையில் வைக்கப்படுகிறது. இதன் காரணமாக நிர்ப்பீடனத் தொகுதி மிகையான கூருணர்ச்சி கொண்டதாக மாறிப் பல்வேறு ஒவ்வாமைத் தாக்கங்களை (அலர்ஜிகளை) ஏற்படுத்தலாம்.

எமது நல்ல ஆரோக்கியமே நோய்களுக்கெதிராக நிர்ப்பீடனம் வழங்கும் சிறந்த வழி எனத் தடுப்பு மருந்துகளுக்கு எதிரானவர்கள் வாதிடுகின்றனர்.
நோய்க் கிருமிகள் எம்மை ஆக்கிரமிக்கும் நோக்கோடு சூழலில் காணப்படுவதில்லை. எமது உடல் உள்ளூர ஆரோக்கியமாக இருப்பின் தடிமன், ஜலதோஷம், சின்னமுத்து போன்ற எந்தவொரு நோயையும் அதனால் எதிர்த்து நிற்க முடியும். எளிதில் பாதிக்கப்படும் தன்மையே இங்கு முக்கிய காரணியாக இருக்கிறது.
(Sinclair 1995), (Head 1999)

எனவே, தடுப்பு மருந்து கொடுப்பதா இல்லையா என்பதைப் பெற்றார் தம் வைத்தியர்களுடன் ஆலோசித்துத் தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென அப்பொறுப்பை அவர்களிடமே விட்டுவிடுகிறோம்.

6ம், 7ம், 8ம் வயதுகளில் ஒழுங்கு முறையான வைத்தியப் பரிசோதனைகளுக்குப் பிள்ளைகள் உட்படுத்தப்பட வேண்டும் எனச் சிறுவர் நோயியல் நிபுணர்கள் சிபாரிசு செய்கின்றனர். 11 வயதின் பின்னர் இத்தகைய பரிசோதனை வருடந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சோதனைகள் காரணமாகப் பிரச்சினைகள் இள வயதிலேயே கண்டறியப்பட்டு சரியான சிகிச்சை வழங்கப்பட முடியும். ஒரு பிரச்சினை கவனிக்கப்படாமல் விடப்பட்டு குணமாக்க முடியாத நோயாக மாறுவதை இது தவிர்க்கிறது. சில நாடுகளில் ஆரம்பப் பள்ளி மாணவர்கள் இவ்வாறான சோதித்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். கேள்வி, பார்வை, பேச்சு போன்றவற்றில் காணப்படும் கோளாறுகள் இவற்றின் போது இனங்காணப்படுகின்றன. பெற்றார் எப்போதும் நோய்த் தடுப்பிலேயே கவனஞ் செலுத்த வேண்டும். நல்ல ஆரோக்கியத்திற்குத் தடுப்பு மருந்துகளோடு சுத்தம், போசணை, நித்திரை, உடற்பயிற்சி என்பனவும் தேவைப்படுகின்றன.

தடுப்பு மருந்து வழங்குவது மிகப் பயனுள்ள முதலீடே

ஒரு பிள்ளையை நோயிலிருந்து பாதுகாக்க 15 டொலர் செலவாகின்றது. கடந்த இரு தசாப்தங்களிலும் உலகத்துப் பிள்ளைகளில் 80 சதவீதமானோருக்கு தடுப்பு மருந்து வழங்குமளவுக்குப் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அடிப்படையான, செலவு குறைந்த இந்தப் பொதுச் சுகாதாரச் சேவை கிடைக்காமையால் இப்போதும் 2 மில்லியனுக்கு மேற்பட்ட பிள்ளைகள் வருடந்தோறும் இறந்து கொண்டிருக்கின்றனர்.

சுத்தமும் உடல் நலமும்

பக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுக்களுக்கு எதிராக மனிதனிடம் இருக்கின்ற மிகத் திறமையான பாதுகாப்புக் கேடயம் சுத்தமே. பொதுவாக கைகளே தொற்றுக்களை உடலுக்குள் செலுத்தும் கருவிகளாக இருக்கின்றன. எனவே, கைகளைத் தினமும் பல தடவைகள் கழுவிக் கொள்வது நோய்க் கிருமிகளை நீக்க உதவுகிறது.

அமெரிக்க எழுத்தாளரான Rose Wilder Lane (1886- 1968) *தனது* *The Discovery of Freedom* *என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார்: ''முஹம்மத் நபியவர்கள் ஒரு கொள்கை வெறியர் எனச் சிலர் குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனால் நான் அறிந்து கொண்ட மட்டில் அவர் ஒரு விடயத்தில்தான் வெறியராக இருந்தார். அது சுத்தமும் சுகாதாரமும் ஆகும்''*

தினமும் ஐவேளைத் தொழுகைக்கு முன்பாகச் செய்யப்படும் வுழூ எனும் உடல் சுத்திகரிப்பை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு புகழ்ந்தார்கள். ''உங்கள் ஒருவரின் வீட்டு வாயிலுக்கு அருகே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்க அவர் அதில் ஐந்து வேளைகள் குளிப்பதைப் போன்றதுதான் ஐவேளைத் தொழுகைகள்'' (முஸ்லிம்)

ஆண்களும் பெண்களும் சுத்தமும்

கைகளைச் சுத்தமாக வைக்கும் பழக்கத்தைப் பொறுத்தமட்டில் அமெரிக்க ஆண்களை விடப் பெண்கள் முன்னணியில் நிற்கின்றனர். பொதுக் கழிவறையொன்றைப் பயன்படுத்திய பின்னர் தாம் எப்போதும் கைகளைக் கழுவிக் கொள்வதாக ஓர் ஆய்வில் பங்கு பற்றிய 91 சதவீதத்தினர் கூறினர். எனினும், ஐக்கிய அமெரிக்காவின் நான்கு பெரு நகர்களில் ஆறு பொதுக் கழிவறைகளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட அவதானிப்பு ரீதியான ஆய்வொன்றின் படி, ஆண்களில் 75 சதவீதத்தினர் கைகளைச் சுத்தம் செய்து கொண்டனர். பெண்களிலோ 90 சதவீதத்தினர் அவ்வாறு செய்தனர்.

வயது வந்தவர்களில் 42 சதவீதமானவர்கள் தமது நாயை அல்லது பூனையைத் தட்டிக்கொடுத்த பின்னர் தம் கைகளைக் கழுவிக் கொள்வதாகக் கூறினர்.

பணத்தைக் கையாண்ட பின் கைகளைக் கழுவிக் கொள்வதாக 21% இனர் கூறினர்.

தும்மிய பின் அல்லது இருமிய பின் கைகளைக் கழுவிக் கொள்வதாக 32% இனர் கூறினர்.

கைகளுக்குச் சவர்க்காரமிட்டு 15 முதல் 20 செக்கன்கள் வரை கழுவிக் கொள்வதே நோய்கள் பரவாமல் தடுப்பதற்குரிய சிறந்த பாதுகாப்பு முறையாகும்.

கைகளைக் கழுவிக் கொள்ளாததனால் ஏற்படும் நோய்களுக்காக ஐக்கிய அமெரிக்கா ஒவ்வொரு வருடமும் 9 பில்லியன் டொலர்களைச் செலவளிக்கின்றது.

கேள்வி: பலவந்தமாகக் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றப்பட்ட ஸ்பெய்ன் தேச முஸ்லிம்களுள் எவர் கிறிஸ்தவர் போல் வெளி வேஷம் போட்டுக் கொண்டு தொடர்ந்தும் உள்ளத்தால் முஸ்லிமாக இருக்கின்றார் என்பதைக் கண்டறிவதற்கு அக்கால ஸ்பானிய அதிகாரிகள் கைக்கொண்ட முறை யாது?

பதில்: ஒருவர் மிகவும் சுத்தமாக இருக்கின்றார் எனில், அவர் முஸ்லிமாகத் தான் இருக்க வேண்டும் என அவர்கள் கருதினர். (Ahmad - 1997)

சுகாதாரம்: சில இஸ்லாமிய நடைமுறைகள்

சுத்தம் பற்றிய இறை தூதரின் வழிகாட்டலானது கைகளையும் முகத்தையும் புயங்களையும் தினமும் ஐவேளை கழுவுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. ஒவ்வோர் உணவு வேளைக்கு முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவுவதையும் அது கட்டாயப் படுத்துகிறது.

மருத்துவத் துறைக்கு இஸ்லாம் வழங்கிய மிக முக்கியமான பங்களிப்பு சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பேணும் நடைமுறைகளாகும். உண்மையில், அனைத்து நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளும் கூட்டாகச் சேர்ந்து காப்பாற்றியுள்ள உயிர்களை விடக் கூடுதலான உயிர்களை சுத்தமான நீரும் சிறந்த தனியாள் சுத்தமும் காப்பாற்றியுள்ளன. இறை தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறைகளும் வாக்குகளுமே இதற்கான உள்ளூக்கத்தை வழங்கின. உதாரணமாக, 'சுத்தம் விசுவாசத்தில் (ஈமானில்) பாதி' என்றும், ஒரு மனிதனின் உடலுக்கு அவன் மீது உரிமை உண்டு என்றும் அன்னார் கூறினார்கள்.

தாம் நோயுற்ற போது நபி (ஸல்) அவர்கள் பாரம்பரிய மருந்துகளைப் பயன்படுத்தினார்கள். அத்தோடு, ஏனையோருக்கும் சிகிச்சைகளைச் சிபாரிசு செய்தார்கள். அன்னார் ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் மிக்கவராக இருந்ததோடு, மிகக் கடினமான உடல் முயற்சிகள் பலவற்றிலும் (பல யுத்தங்கள், மதீனா நகரைச் சுற்றி அகழி வெட்டுதல் உட்பட) பங்கு பற்றினார்கள். அத்தோடு, வருடந்தோறும் ஹிறாக் குகைக்கு அன்னாரால் ஏற முடியுமாக இருந்தது. அது பாரிய உடல் முயற்சி தேவைப்படும் செயலாக விளங்கியது.

ஆண், பெண் பிள்ளைகள் பருவ வயதை அடைய முன்னரே அவர்களது தனியாள் சுத்தத்திற்குப் பெற்றார் முன்னுரிமை வழங்க வேண்டும். வயது வந்தவர்களைப் போன்றே தொழுகை, நோன்பு உட்படச் சமயக் கடமைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். எனவே, எந்நேரமும் தமது உடலையும் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு அவர்கள் பழக்கப்பட வேண்டும்.

கழிவறையில் சுத்தம் பேணுதல்

முஸ்லிம்கள் தமது உள்ளாடைகளையும் அந்தரங்கப் பகுதிகளையும் முடிந்த அளவுக்குச் சுத்தமாக வைத்திருப்பதற்குக் கடமைப்பட்டுள்ளனர். விரும்பத் தகாத வாடைகள் உருவாவதைத் தவிர்ப்பதற்காக உள்ளாடைகளையும் காலுறைகளையும் தினமும் மாற்றிக் கொள்வது நல்லது. ஆடைகளின் மீது சிறுநீர் பட்டால் அதன் நிறமும் மணமும் முற்றாக நீங்கும் வரை அவ்விடத்தைக் கழுவ வேண்டும். கழிவறையைப் பயன்படுத்திய பின்னர் முழுமையாக எம்மைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். முதலில் நீரைக் கொண்டோ அல்லது சுத்தமான உலர்ந்த பொருளொன்றைக் கொண்டோ சிறுநீரை அல்லது மலத்தை இடது கையைப் பயன்படுத்தி முற்றாக நீக்க வேண்டும். பின்னர் அந்தரங்கப் பகுதிகளை நீரைக் கொண்டு முற்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். இதற்காகக் கழிவறையில் நீரைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி செய்யப்படுவது அவசியம். சுத்தஞ்செய்வதற்கு இடது கையையும் உணவுண்பதற்கு வலது கையையும் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் உணவு மாசடைவதைத் தவிர்க்க முடியும்.

நீரைப் பயன்படுத்திச் சுத்தம் செய்த பின்னர் அந்தரங்கப் பகுதிகளைத் துடைத்து உலர்த்திக் கொள்வது அவசியம். ஈரலிப்பான உள்ளாடைகள் காரணமாகப் பலவிதமான தொற்றுக்கள் ஏற்படலாம். பெண் பிள்ளைகள் இவ்விடயத்தில் கவனமாக இருப்பது அவசியம். அவர்கள் துடைக்கும் போது முன்னிருந்து பின் நோக்கியே துடைத்தல் வேண்டும். நைலோன், பொலியெஸ்டர் போன்ற செயற்கைத் துணிகளால் செய்யப்பட்ட உள்ளாடைகளை விடப் பருத்தியினால் செய்யப்பட்டவையே மிக உகந்தவை. ஏனெனில், அவை காற்றோட்டத்தை வழங்குவதோடு எளிதில் உலர்ந்து விடக்கூடியவை. கழிவறையைப் பயன்படுத்திய பின்னர் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவிக்கொள்ள வேண்டும். கைவிரல் நகங்களுக்குக் கீழோ அவற்றைச் சுற்றியோ துர்நாற்றம் உணரப்படாத வரை சுத்தம் செய்வது அவசியம். கைவிரல் நகங்களைக் கத்தரித்துக் கட்டையாக வைத்திருக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

மயிரும் நகங்களும்

கக்கங்களிலும் அந்தரங்கப் பகுதிகளிலும் வளரும் மயிர்கள் துர்நாற்றம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம். இப்பகுதிகளில் காணப்படும் இருளும் ஈரலிப்பும் பக்டீரியா வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை வழங்கலாம். இம்மயிர்களை நீக்குவதன் மூலம் உடலிலிருந்து வீசும் துர்நாற்றம் குறைக்கப்படுவதோடு, பங்கசுத் தொற்றினால் ஏற்படும் நமைச்சல், பேன்களின் பெருக்கம் என்பனவும் தவிர்க்கப்படும். நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"ஐந்து நடைமுறைகள் நபிமார்களின் பாரம்பரியச் சிறப்பியல்புகளாக உள்ளன. அவையாவன: விருத்த சேதனம் செய்தல், அறைப்பகுதி மயிர்களை நீக்குதல், கக்க மயிர்களை நீக்குதல், நகங்களைக் கத்தரித்தல், மேல் மீசையைக் கத்தரித்தல்" (அல் புகாரி)

கக்க மயிர்களையும் அறை மயிர்களையும் இப்போதுள்ள ஏதேனுமொரு முறையைப் பயன்படுத்தி நீக்கலாம். 40 நாட்களுக்கு ஒரு தடவை அல்லது அவை நீண்டு வளர்ந்த பின்னர் அவற்றை நீக்கி விடுவது ஏற்றது. விளையாடும் போதும் பள்ளிக்கூடத்துக்கும்

மஸ்ஜிதுக்கும் செல்லும் போதும் கக்கங்களிலிருந்து துர்நாற்றம் வராமல் தடுப்பதற்காக வாடை நீக்கிப் பதார்த்தங்களைப் பயன்படுத்தலாம். இயற்கையான வாடை நீக்கிகளே ஏற்றவை. எனினும், வியர்க்காமல் தடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள் ஆபத்தானவை. அவை தவிர்க்கப்பட வேண்டும்.

ஆண்களும் பெண்களும் தமது தலை முடியின் நிறத்தை மாற்றிக் கொள்வதையும் கை நகங்களை நீளமாக வளர்ப்பதையும் கை, கால் நகங்களுக்கு நகப் பூச்சு பூசுவதையும் இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. எனினும், நகங்களுக்கு மருதாணி (henna) இடுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் இயற்கையான நறுமணப் பொருட்களையே பயன் படுத்த வேண்டும். பெண்கள் மஹ்ரம் அல்லாத ஆண்கள் இல்லாத நிலையில் வீட்டினுள்ளே நறுமணங்களைப் பயன்படுத்தலாம்.

வாழ்வதற்காகச் சுத்தம் செய்வதா? சுத்தம் செய்வதற்காக வாழ்வதா?

- சிலர் சுத்தம் பற்றி அளவுக்கு மீறிய கரிசனை காட்டுகிறார்கள். சில பெண்கள் தம் வீடுகளை அப்பழுக் கின்றிச் சுத்தமாக வைத்திருப்பதில் அதீத முயற்சியும் கவனமும் செலுத்துகின்றனர். வீட்டில் பிள்ளைகள் விளையாடுவதையோ பிள்ளைகளது நண்பர்களின் வரவையோ இவர்கள் சிறிதும் விரும்ப மாட்டார்கள்.
- உறவினர்கள், விருந்தினர்கள் வந்து விட்டால் அவர்கள் வீட்டை அசுத்தப் படுத்திவிடக் கூடாதே என நிதமும் கவலை கொள்வார்கள். அவர்களுடைய திருமண வாழ்க்கைகூட இப்போக்கினால் பாதிக்கப் பட்டுவிடும். இப்படியான வீடுகள் பிள்ளைகளின் சந்தோசத்தைக் கெடுத்தி, அவர்களுடைய சமூக விருத் திக்கும் குந்தகம் விளைவிக்கும். இவ்வாறு அளவுக்கு மீறிச் சுத்தத்தில் அக்கறை கொள்பவர்கள் தமது மன அமைதியை இழப்பதோடு, அடுத்தவர்களின் சந்தோசத்தையும் நிம்மதியையும் குலைத்து விடுகின் றனர். எந்தவொரு விடயத்திலும் அளவு மீறிச் செயற்படுவது அசாதாரணமான உளப் போக்கையே காட்டும்.

உடலுக்கும் ஆத்மாவுக்குமுரிய இஸ்லாமிய சுகாதாரப் பழக்க வழக்கங்கள்

- குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டல் (2 வருடங்களுக்கு மேற்படாமல்)
- ஆண் பிள்ளைகளுக்குக் கத்னா செய்தல்
- மனைவி மாதவிடாயிலிருக்கும் போது பாலுறவைத் தற்காலிகமாகத் தவிர்த்தல்
- குளித்தலும் ஐவேளை வுழூ செய்தலும்
- உணவுண்ண முன்னரும் உண்ட பின்னரும் கழிவறையைப் பயன்படுத்திய பின்னரும் கைகளைக் கழுவுதல்
- மிஸ்வாக் அல்லது பற்தூரிகையைப் பயன்படுத்திப் பற்களைச் சுத்தம் செய்து பராமரித்தல்
- இரவில் நித்திரை கொள்வதும் பகலில் வேலை செய்வதும்
- பிரசவத்தின் பின்பு 40 நாட்களுக்குப் பாலுறவைத் தவிர்த்துக் கொள்ளல்

சுத்தம் இறை விசுவாசத்தின் பாதியாகக் கருதப்படுகிறது. பன்றியிறைச்சி, பன்றியிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள், செத்த விலங்குகளின் மாமிசம், இரத்தம் போதைப் பொருள் வகைகள் முதலியவற்றை உட்கொள்வதை அல் குர்ஆன் தடுத்துள்ளது. ரமழான் மாதம் முழுவதும் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை நோன்பிருப்பது உடலுக்கு ஓய்வை வழங்குகிறது. மருத்துவ ரீதியில் பல நன்மைகளையும் தருகிறது. இறை தியானமும் தொழுகையும் உளவியல் ரீதியாக அமைதியைத் தருகின்றன.

ஆண்களில் கத்னா செய்வதனால் HPV என்னும் வைரஸ் தொற்று ஏற்படுவதற்குரிய வாய்ப்பு 50% குறைக்கப்படுகிறது. பெண்களின் கருப்பைக் கழுத்துப் பகுதியிலிருந்து இவ்வைரஸ் தொற்று ஏற்படலாம். கருப்பைக் கழுத்துப் புற்று நோய்க்கு HPV ஒரு காரணமாக இருக்கிறது.

முக்கியமான இஸ்லாமிய அறிவுறுத்தல்கள் பின்வருமாறு

- உயிரைப் பேணிக் காப்பது கட்டாயமானது.
- குருதி மாற்றுதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இக்கட்டான நிலையில் தற்கொலை செய்ய உதவுவதும், கருணைக் கொலையும் அனுமதிக்கப்படவில்லை.
- பிரேத பரிசோதனை அனுமதிக்கப்படவில்லை. (சட்டத்தினால் அல்லது பொது நன்மைக்காக வேண்டப்பட்டாலே அன்றி)
- குணமாக்க முடியாத இறுதி நிலையை அடைந்து விட்ட நோயாளி ஒருவருக்குச் செயற்கையாக உயிர் ஆதாரங்களை வழங்கி அவரை நீண்ட காலத்துக்குப் பேணுவது அனுமதிக்கப்படவில்லை.
- கருச்சிதைப்பு அனுமதிக்கப்படவில்லை. (தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படலாம்)
- உறுப்பு மாற்றுச் சிகிச்சை அனுமதிக்கப்படும். (சில கட்டுப்பாடுகளுடன்)
- கணவனுக்கும் மனைவிக்குமிடையில் (அவர்களது திருமண உறவுக் காலத்துக்குள்) செயற்கையான இனப்பெருக்கத் தொழிநுட்பங்கள் அனுமதிக்கப்படும்.
- சமபாலுறவு தடை செய்யப்பட்டுள்ளது.
- இறுதி விருப்பப் பத்திரம் (உயில்) எழுதுவதும், மருத்துவ விடயத்தில் இன்னொருவருக்கு Attorney அதிகாரம் வழங்குவதும் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.
- நோய்களைக் குணப்படுத்துவதற்காக மரபணுப் (பரம்பரை அலகு) பொறியியல் செயன்முறை ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது. எனினும், cloning எனும் பிரதியாக்கச் செயன்முறை ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா என்பதைத் தீர்மானிப்பதற்கு மேலும் ஆய்வுகள் தேவைப்படுகின்றன.
- உறுப்பு தானம் செய்வது ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

போசணை

ஒருவருடைய வாழ்க்கையில் போசணையின் முக்கியத்துவம் அதிகம் உணரப்படும் காலம் அவருடைய முதல் 1,000 நாட்களாகும். (The Economist- March 26, 2011)

பிள்ளை ஆரோக்கியமானதாக இருப்பதற்குச் சிறந்த போசணை தேவைப்படுகிறது. எல்லா உணவுகளும் போசாக்குடையவை அல்ல. உணவு என்பது நாம் உண்ண விரும்புவது; போசணை என்பது நாம் உண்ணத் தேவையானது. முதல் இரு வருடங்களிலும் குழந்தைகளின் உடல், மனவெழுச்சி, சமூக, உள மற்றும் உளவியல்ரீதியான

நன்மைகளைக் கருதித் தாய்மார் அவர்களுக்குத் தாய்ப்பாலூட்ட வேண்டும். குழந்தைகளுக்குப் பால்குடிப்பதை மறக்கச் செய்வதற்கு முன்னரும் பின்னரும் சமநிலை யான போசணையுள்ள உணவுகள் வழங்கப்படுவது அவசியம்.

பண்ணை உற்பத்திகள், தானியங்கள், பழங்கள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் முதலிய அனைத்து உணவு வகைகளும் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். வளரும் பிள்ளைக்குத் தேவையான அத்தியாவசிய விட்டமின்களையும் கனிப் பொருட்களையும் இவை வழங்குகின்றன. பழங்களிலும் மரக்கறி வகைகளிலும் பக்டீரியா, இரசாயனப் பொருட்கள், அழுக்குகள் என்பன காணப்பட வாய்ப்பிருப்பதனால் அவற்றைக் கழுவியே பயன்படுத்த வேண்டும்.

அக்காலத்தில் காணப்பட்ட அத்தியாவசிய உணவுகளைச் சிறந்த முழுமையான உணவு என அல் குர்ஆன் குறிப்பிடுகிறது. இவற்றுள் மாடு, ஒட்டகம், செம்மறி ஆடு, ஆடு, கோழி போன்ற பறவை வகைகள், கடற் பிராணிகள் முதலியவற்றின் மாமிசமும் கோதுமை போன்ற தானியங்களும் பயறு வகைகளும் வித்துக்களும் திராட்சை, அத்தி, ஒலிவ், மாதுளை, பேரீச்சை முதலிய கனிகளும், வெள்ளைப் பூண்டு, பூசனி வகைகள் போன்ற காய்கறிகளும் பாலும் தேனும் அடங்கும். நோய் நிவாரணியொன்றாகத் தேன் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் வருடத்தின் பின்னர் பிள்ளைகளுக்குத் தினமும் தேன் உட்கொள்ளக் கொடுக்கலாம்.

மிகையாக உண்ணுதல்

அனைத்துப் போசணை வகைகளையும் கொண்ட உணவுகளைப் பிள்ளைகள் உட்கொள்ள வேண்டியிருந்தாலும் மிகையாக உண்ணுவது தவிர்க்கப்பட வேண்டும். அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

> "ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் (ஆடைகளினால்) உங்களுக்கு அலங்காரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மேலும், (அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்தவற்றை) நீங்கள் (தாராள மாக) உண்ணுங்கள்; மேலும், பருகுங்கள். (ஆனால்,) வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென் றால், நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிக்க மாட்டான்"
>
> (அல் குர்ஆன் 7: 31)

உங்களது அற்புதமான உடலுக்குள் எதனைப் போடுகிறீர்கள் என்பது பற்றிக் கொஞ்சம் கவனமாக இருங்கள். நீங்கள் உட்கொள்பவை உங்களைப் பாதிக்கின்றன என்பதை மறவாதீர்கள். 'சாப்பிடுவதற்காக வாழாமல்' 'வாழ்வதற்காகச் சாப்பிடக்' கற்றுக் கொள்ளுங்கள்.

சுத்தமான, இரசாயனப் பொருள் கலக்காத நீரைப் பிள்ளைகளுக்கு வழங்குவது பெற்றோரின் கடமை. கொழுத்த குழந்தை ஆரோக்கியமானது என்ற கருத்தொன்று நிலவுகிறது. இது உண்மையல்ல. எனினும், வயது வந்தவர்களைப் போலன்றி குழந்தை களின் உணவில் தேவையான விகிதத்தில் கொழுப்பு இருப்பது நல்லது.

உள்ளெடுக்கும் உணவு தரமானதாகவும் சமநிலையானதாகவும் இருப்பது அவசியம். ஒரு பிள்ளை நன்றாகக் கொழுத்திருந்தாலும் அது போசணைக் குறைபாட்டினால் பாதிக்கப் பட்டிருக்கலாம். ஆரோக்கியமான உணவுண்ணும் பழக்கங்களை உருவாக்கு வதற்குப் பெற்றார் பிள்ளைகளுக்குப் பயிற்சி வழங்க வேண்டும்.

பெற்றார் தம் பிள்ளைகளின் மிகையான உண்ணல் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

ஆதமுடைய மகனொருவன் நிரப்பக்கூடிய மிக மோசமான கொள்கலம் அவனு டைய வயிறாகும். அவனுடைய உடலைப் பேணி வைப்பதற்குச் சில கவளங்கள்

போதுமானது. ஆனால், அவன் தொடர்ந்து சாப்பிடவே விரும்புகிறான். அவன் தனது வயிற்றில் மூன்றிலொரு பகுதியை உணவுக்கும், மூன்றிலொன்றை நீருக்கும், அடுத்த மூன்றிலொன்றை சுவாசத்துக்கும் ஒதுக்க வேண்டும்.

(அஹ்மத், அல் திர்மிதீ மற்றும் ஏனையோர்)

ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரும்பான்மையான சிறுவர்கள் தயாரித்து விற்கப்படும் உணவுகளையே (fast food) தினமும் உண்கின்றனர். இதனால், அவர்களுள் கூடுதலானோர் மிகை நிறையுடையவர்களாக உள்ளனர். தவறான போசணை முறைகள் காரணமாக உலகெங்கும் மில்லியன் கணக்கான பிள்ளைகள் இறப்பதோடு, அதே போன்ற ஒரு தொகையினர் நோய் வாய்ப்பட்டும் அறிவாற்றல் குன்றியும் காணப்படுகின்றனர். கருவில் உருவாகியது முதல் மூன்று வயது வரை பிள்ளைக்குப் போசணை மிக முக்கியமாக இருக்கிறது என யுனிஸெப் கூறுகிறது. நல்ல உணவுகளை உட்கொள்ளுமாறு பிள்ளை களை வற்புறுத்துவதை விட மோசமான உணவுப் பொருட்கள் அவர்களுக்குக் கிடைக் காமற் செய்வதே சிறந்த செயலாகும். ஆண் பிள்ளைகள் மிகையாக உண்டால் அதன் விளைவை அவர்களுடைய வயிற்றில் காணலாம். பெண் பிள்ளைகள் மிகையாக உண்டால் அது அவர்களது இடுப்பிலும் மார்பகங்களிலும் பிட்டத்திலும் தென்படும்.

மனிதன் தனது புதைகுழியைத் தன் பற்களாலேயே தோண்டிக் கொள்கிறான்

உண்ணும் பழக்க வழக்கங்கள் பற்றிய இமாம் அல் கஸ்ஸாலியின் கருத்துக்கள்

இஸ்லாமிய வரலாற்றில் வாழ்ந்த மிக உன்னத சீர்திருத்தவாதியான இமாம் அல் கஸ்ஸாலி பின்வருமாறு கூறியுள்ளார்.

1) சாப்பிடும் அறைக்குச் செல்வதில் ஒரு முஸ்லிம் முந்திக்கொள்ளக் கூடாது. அங்குள்ள வெவ்வேறு உணவுத் தட்டுகளையோ சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களை யோ உற்று நோக்கவும் கூடாது. அவர் தனது உணவை நன்றாக மென்று உண்ண வேண் டும். தனது கைகளால் அல்லது ஆடையினால் உணவைத் துடைப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

2) மிகையாக உண்பவர்களை இனங்காட்டுவதன் மூலமும் தம் பிள்ளைகளின் முன்னிலையில் மிகையாக உண்ணும் சிறுவர்களைக் கண்டனம் செய்வதன் மூலமும் குறைந்த அளவு உணவைக் கொண்டு திருப்தியடைபவர்களைப் பாராட்டுவதன் மூல மும் மிகை உண்ணலைப் பற்றிய வெறுப்பைப் பிள்ளைகளின் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும்.

3) உணவு விடயத்தில் தன்னை விட மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்திப்படவும் பிள்ளைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். சுவை மிக்க உணவு, பானம் என்பவற்றிலும் ஆடம்பர உடைகளிலும் அளவு மீறிய ஆசை வைக்கும் பிள்ளைகள் கண்டிக்கப்பட வேண்டும்.

4) குழந்தைப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் மிகையாக உணவூட்டுவது வயது வந்த பின் மிகைக் கொழுப்பு நிலைக்கு வழி வகுக்கலாம். இம்மிகைக் கொழுப்பு வசதி படைத்தவர்களுக்குரிய நோய்களை ஏற்படுத்தலாம்.

பிள்ளைகளும் போசணையும்: சில உண்மைகள்

கர்ப்ப காலம்: உங்கள் குழந்தைக்கு நல்லதொரு ஆரம்பத்தைக் கொடுப்பதற்காக, கர்ப்பமடைய முன்பே குழந்தையை மனதில் கொண்டு உணவு உட்கொள்ளுங்கள். கர்ப் பத்தின் முதல் 4- 6 வாரங்களும் குழந்தையின் விருத்தியில் மிக முக்கியமான காலமாகும். அச்சந்தர்ப்பத்தில் கர்ப்பமுற்று இருப்பதை நீங்கள் அறியாமற்கூட இருக்கலாம். மனைவியரும் கர்ப்பிணித் தாய்மாரும் தினமும் 400 மைக்ரோ கிராம் போலிக் அமிலத்தை

(folic acid) உட்கொள்ள வேண்டும். இது குழந்தையின் மூளை மற்றும் முண்ணாண் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதன் மூலம் பொதுவான நரம்புத் தொகுதிக் குறைபாடுகளில் 40%- 70% வரை தவிர்க்கப்பட முடியும். கர்ப்ப காலத்தில் ஆரோக்கிய மான தாயொருவரில் 9 முதல் 13 kg வரை உடல் நிறை அதிகரிப்பு ஏற்படலாம்.

பிறப்பிலிருந்து பதின்ம வயதுக்கு முந்திய நிலை வரை: முதலாம் வருடத்தில் ஏற்பட்ட துரித வளர்ச்சி இரண்டாம் வருடத்தில் மந்தமடையும். அத்தோடு, உணவில் நாட்டமும் குறையும். இரண்டாம் வருடத்தில் பிள்ளையின் உடல் நிறை சாதாரணமாக 2.5 kg முதல் 3.5 kg அளவால் மாத்திரமே அதிகரிக்கும். இவ்வயதில் தமக்கு வழங்கப்படும் உணவில் தமக்குத் தேவையான பகுதிகளை மட்டுமே அவர்கள் உண்பார்கள். இரண்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் உணவில் கொழுப்பைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. கொழுப்புக்கள் உடலுக்குச் சக்தியை வழங்குவதோடு, தோலின் ஆரோக்கியத்துக்குத் தேவையான கொழுப்பமிலங்களையும் வழங்குகின்றன. இத்தோடு, விட்டமின் A, D, E, K என்பவற்றின் அகத்துறிஞ்சலுக்கும் பயன்பாட்டுக்கும் கொழுப்பு தேவை. பசுப்பால் அருந்தக்கூடிய நிலையைப் பிள்ளை அடைந்த பின் அதற்கு முழு ஆடைப்பாலையே கொடுங்கள். ஆடை நீக்கப்பட்ட பாலைக் கொடுக்காதீர்கள்.

எமது நாடுகளில் பெரும்பாலான 2- 5 வயதுப் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான சமநிலையுள்ள உணவு கிடைப்பதில்லை.

பதின்மவயதுக்கு முந்தியவர்களும் பதின்மவயதினரும்: பிள்ளைகளில் பெரும்பாலா னோர் அடிப்படைச் சுகாதார விதிகளை அறிந்திருந்தாலும் அவற்றை ஒழுங்காகப் பின்பற்றுவதில்லை. இந்த வயதினருக்கு ஆரோக்கியமான உணவுகளை உண்ண வைப்பது சிரமமான காரியமாகும். ஓர் எட்டு வயதுப் பிள்ளை தனக்குத் தரப்படும் எந்த உணவையும் உண்ணக்கூடும். ஆனால், 15- 16 வயதுப் பிள்ளைகளோ தாம் முன்னர் உண்ட உணவுகளைக் கூட ஒதுக்கி விடுவார்கள். வீட்டில் உணவு வேளைகளைத் திட்டமிடுவதிலும் தயாரிப்பதிலும் பிள்ளைகளைப் பங்கு பெறச் செய்வதன் மூலம் உணவு தொடர்பான சச்சரவுகள் ஏற்படுவதை ஓரளவு தவிர்க்க முடியும். சாப்பிடும் வேளைகளில் உணவில் கவனம் செலுத்துவதை விட அன்றைய நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்வதிலேயே கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

குமரப் பருவத்தினரின் வளர்ச்சி மிகத் துரிதமானதாக இருக்கும். அன்றாடம் பெண் பிள்ளைகளுக்கு 2000- 2500 கலோரிகளும் ஆண் பிள்ளைகளுக்கு 3000- 4000 கலோரிகளும் தேவைப்படும். தொழிற்பாடு கூடிய பிள்ளைகளுக்குக் கூடுதலான சக்தி தேவைப்படும். பூப்புக் காலத்தின் அதிகரித்த போசணைத் தேவை பெண்களில் 15 வயதிலும் ஆண்களில் 19 வயதிலும் உச்ச நிலை அடையும். பெண்களுக்கு 25 வயது வரை மேலதிக கல்சியம் தேவைப்படும். கல்சியமானது எலும்புகளின் அடர்த்தியை அதிகரிக்கச் செய்வதோடு பிற்காலத்தில் எலும்பு மிருதுவாகும் osteoporosis எனும் நோயிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கும்.

பிள்ளை உணவு வேளையொன்றைத் தவற விடாமல் இருப்பது முக்கியமானது. இவ்வாறு தவறவிடுவதனால் முக்கியமான போசணைப் பொருட்களின் குறைபாடு ஏற்படும். உணவு வேளைகளைத் தவறச் செய்து விட்டு இரவில் பெருமளவு உண்பதை விட நாள் முழுவதும் இடையிடையே சிறிய அளவில் உட்கொள்வது சிறந்தது.

2- 10 வயதினருக்குரிய உணவில் இருக்க வேண்டிய ஊட்டங்கள்

தானியங்கள்
பழங்கள்
மரக்கறி வகைகள்
இறைச்சி, மீன், கருவாடு, உலர்த்தப்பட்ட அவரை வகைகள்

பண்ணை உற்பத்திப் பொருட்கள்

சிறிய அளவில் கொழுப்புக்களும் எண்ணெய்களும் இனிப்புக்களும்

எந்த வயதினராயினும் உணவுத் தட்டில் அளவுக்கதிகமான உணவை வழங்குவது நல்லதல்ல.

பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

பெரும்பாலான பிள்ளைகளின் உணவுப் பழக்கங்கள் தவறானவையாக இருப்பினும் அவர்கள் போதியளவு போசணைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். வளர்ந்த ஒருவருக்குத் தேவையான உணவின் அளவில் காற்பகுதி அல்லது மூன்றிலொரு பகுதி இவர்களுக்குப் போதுமானது. வாய்க்குச் சுவையான உணவுகளை மாத்திரமே பிள்ளைகள் உண்ண விரும்புவார்கள். நல்ல உணவினை உட்கொள்ளச் செய்வதற்குத் துணை செய்யும் சில உதவிக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

1. உணவு விடயத்தில் பிள்ளைகளுக்கு எவ்வகையான தேர்வினைப் பெற்றார் வழங்க வேண்டும்?

உணவு வேளையின் போது சோறு, ரொட்டி அல்லது நூட்ல்ஸ் போன்ற மாப்பொருள் உணவுடன் பால், பழங்கள், மரக்கறிகள் உட்படப் பல்வேறு போசணை தரும் உணவுகளைப் பிள்ளைகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இவற்றிலிருந்து தாம் விரும்பியவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படலாம். அவர்கள் வழமையாக விரும்பி உண்ணும் உணவொன்றையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாகப் பிள்ளைகளில் விட்டமின் குறைபாடுகள் ஏற்படுவதில்லை. எனவே, பெரும்பாலானோருக்கு மேலதிக விட்டமின்கள் கொடுக்கத் தேவையில்லை.

2. மாமிச உணவுகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லதா?

இறைச்சியும் மரக்கறிவகையும் அடங்கிய சமநிலையான உணவை உண்பதே ஏற்றது. இறைவன் இந்த முழுமையான உணவுகளையெல்லாம் ஒரு நல்ல நோக்கத்திற்காகவே மனிதனுக்காகப் படைத்துள்ளான். எனவே, அனுமதிக்கப்பட்ட எல்லா உணவு களிலிருந்தும் நாம் மிதமான அளவில் உட்கொள்வதே ஏற்றது. பல்வேறு வகை உணவுகள் பிள்ளைகளின் உணவு வேளைகளின் போது தவிர்க்கப்படுவதனால் போசணைக் குறைபாடு ஏற்படலாம். இறைச்சி வகைகளையும் மீன்களையும் விலக்கி விடும்போது பிள்ளைகளால் போதியளவு இரும்புச் சத்தைப் பெற முடியாது போகலாம். மனிதர்கள் சுமார் 3 - 8 சதவீமான இரும்புச்சத்தைத்தான் மரக்கறிகளிலிருந்தும் தானியங்களிலிருந்தும்

பெற்றுக் கொள்கின்றனர். அதேவேளை, சுமார் 20% இரும்புச் சத்து மாமிசங்களிலிருந்து பெறப்படுகிறது. நாம் உண்ணும் உணவுகளிலிருந்து கூடியளவு இரும்புச் சத்து அகத்துறிஞ்சப்படுவதற்கு ஆரஞ்சு, தக்காளி போன்ற விட்டமின் C உள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். தனி மரக்கறி உணவுகளிலிருந்து போதியளவு கொழுப்பும் கலோரிகளும் பிள்ளைகளுக்குக் கிடைக்காமற் போகலாம்.

3. குழந்தைகளின் உணவில் கொழுப்பைக் குறைக்கத் தேவையில்லை எனக் கூறப்படுகிறது. அப்படியாயின், எந்த வயதில் கொழுப்பின் அளவு குறைக்கப்பட வேண்டும்?

இரண்டு வயதை அடையும் வரை குழந்தைகளின் உணவில் கொழுப்பைக் குறைக்க வேண்டியதில்லை. இப்பருவக் குழந்தைகள் தீவிரமாக வளர்ச்சியடைவதனால் அவர்களுடைய மூளை விருத்திக்கு கொழுப்பு தேவைப்படுகிறது. கொழுப்புக்கள் சக்தியை வழங்குவதோடு, உடற் தொழிற்பாடுகளைச் சீராகப் பேணவும் உதவுகின்றன. அத்தோடு, விட்டமின்கள் A, D, E, K போன்றவற்றின் அகத்துறிஞ்சலிலும், உணவின் சுவையைப் பேணுவதிலும், விழுங்குவதை எளிதாக்கவும் கொழுப்பு உதவுகிறது. ஹோர்மோன்களின் உருவாக்கத்துக்கும் கொழுப்பு தேவை. இரண்டு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளில் 30% ஆன கலோரிகள் கொழுப்பிலிருந்தே பெறப்படுகின்றன. பிள்ளைகள் பசுப்பால் உட்கொள்ளக்கூடிய நிலைக்கு வந்த பின் குறைந்தது 2 வயது வரையாவது அவர்களுக்கு முழு ஆடைப்பால் வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரும் முழு ஆடைப்பாலை வழங்கலாம் அல்லது 2% கொழுப்புள்ள பாலை அல்லது ஆடை நீக்கப்பட்ட பாலை வழங்க முடியும். இந்நிலையில் வேறு உணவுகளிலிருந்தும் அவர்களுக்குக் கொழுப்பு கிடைக்க வேண்டும். கொழுப்புக் குறைந்த உணவை உண்ணும் போது போதியளவு கலோரிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏனைய உணவுகளைக் கூடுதலாக உண்பது அவசியம். துரித வளர்ச்சி ஏற்படும் பருவங்களில் மேலதிக கலோரிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொழுப்புக்களை உட்கொள்ள வேண்டும்.

4. எனது பிள்ளை பாலை வெறுக்கிறது. போதியளவு கல்சியத்தை அது பெற்றுக் கொள்ள வழி என்ன?

பதின்ம வயதுக்கு முந்தியவரும் பதின்ம வயதினரும் போதியளவு கல்சியத்தைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாகும். ஏனெனில், வளர்ந்த ஒருவரில் காணப்படும் எலும்புகளின் திணிவில் பாதிக்கு மேல் குமரப் பருவத்திலேயே பெற்றுக் கொள்ளப்படுகிறது. கல்சியத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பாலே சிறந்தது. எனவே, பிள்ளை பாலைக் குடிக்க விரும்பாவிடில் சூப், புடிங் போன்ற பல்வேறு உணவுகளைத் தயாரிக்கும் போது அவற்றில் பாலைச் சேர்த்துக் கொள்ளலாம். கூடுதலாகக் கல்சியத்தைக் கொண்ட ஏனைய உணவுகளாகத் தயிர், யோகட், சீஸ், ஐஸ்கிரீம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

5. எனது பிள்ளையைப் பிரதான உணவுகளுக்கு இடையில் சாப்பிட அனுமதிக்கலாமா?

ஆம், நிச்சயமாகப் பிள்ளைகளுக்குச் சிற்றுணவுகள் தேவைப்படுகின்றன. பிள்ளைகளின் இரைப்பை சிறியதாக இருப்பதனால் அவர்கள் தமக்குத் தேவையான அளவை ஒரேயடியாக உட்கொள்ள முடியாமற் போகலாம். எனினும், அவர்களுடைய சக்தித் தேவை கூடுதலாக இருக்கும். எனவே, இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை போசாக்கான எதையாவது அவர்கள் உட்கொள்ள வேண்டும். பிரதான உணவு வேளைகளில் தவறவிடப்பட்ட ஊட்டச்சத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் இச்சிற்றுண்டிகள் உதவுகின்றன. எனினும், சிற்றுணவுகளை உட்கொள்ளும் நேரம் ஒழுங்கு முறைப்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, பிள்ளை 7 மணிக்குக் காலை உணவு உட்கொண்டால் 9 அல்லது 10 மணிக்கு சிற்றுணவு வழங்கப்பட வேண்டும். இப்படியான

ஒரு கட்டுப்பாட்டைப் பேணுவது கஷ்டமானதே. குறிப்பாக, மிகக் குறைந்த அளவில் சாப்பிடும் பிள்ளையொன்றைப் பொறுத்தமட்டில் அதற்குப் பசி எடுக்கும் நேரத்தில் ஏதேனும் சாப்பிடக் கொடுக்கவே பெற்றார் விரும்புவர். நினைத்த நேரமெல்லாம் ஏதேனுமொன்றைக் கொரித்துக் கொண்டிருக்கும் பிள்ளையொன்று, வேளைப்படி சிற்றுணவுகள் வழங்கப்படும் பிள்ளையை விடக் குறைவான அளவே உட்கொள்ளும். சிற்றுணவுகள் வழங்கும் போது அவற்றில் சகல விதமான ஊட்டச் சத்துக்களும் சேர்த்துக் கொள்ளப்படுவது அவசியமாகும்.

6. பழங்களையும் காய்கறிகளையும் உட்கொள்வது முக்கியமாக இருப்பினும் எனது பிள்ளைகள் அவற்றை அறவே உண்பதில்லை. நான் என்ன செய்யலாம்?

பல்வேறு பழங்களினதும் மரக்கறி வகைகளினதும் சுவைகளைப் பிள்ளைகள் விரும்புவதில்லை. எனினும், அவற்றைப் பிள்ளைகளுக்குத் தொடர்ந்து வழங்க முயற்சிப்பது அவசியம். இவ்வுணவுகளைப் பிள்ளைகள் விரும்பச் செய்வதற்காகப் பின்வருவன போன்ற வழிமுறைகளைக் கையாளலாம்.

- பழங்களைப் பாலுடன் கலந்து அல்லது பிழிந்து சாறெடுத்துக் கொடுத்தல்.
- உலர்த்தப்பட்ட பழங்களை - நேரடியாகவும் கேக் போன்றவற்றில் உள்ளடக்கியும்- வழங்குதல்
- மரக்கறிகளை சூப்களில் சேர்த்துக் கொள்ளல்
- லஞ்சம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் விரும்பும் உணவொன்றை வெகுமதியாகத் தருவதாய்க் கூறி அவர்கள் விரும்பாத ஒன்றை உண்ணச் செய்ய முடியும். எனினும், இப்படிச் செய்வதால் காலப் போக்கில் அவ்வுணவின் மீது விருப் பம் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏதேனுமொரு உணவைப் பிள்ளை கள் உண்ணச் செய்வதற்காகப் பெற்றோர் பலவிதத் தந்திரங்களைமேற்கொள்ளும் போது அவ்வுணவின் சுவை மோசமாக இருப்பதனால்தான் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் எனப் பிள்ளைகள் நினைக்கவும் கூடும்.
- தமது உணவுத் தட்டிலுள்ள அனைத்து வகை உணவுகளையும் உண்ண வேண்டு மெனப் பிள்ளைகளை வற்புறுத்துவது அவசியமில்லை. அவர்கள் தவிர்க்கும் உணவுப் பொருளுக்குப் பதிலாக அதே வகைப் போசணையுடைய வேறொரு பொருளை வழங்க முடியும்.

ஒரு தாயின் நடைமுறை

நான் சிறு பிள்ளையாக இருந்த போது எமது உணவுத் தட்டில் வைக்கப்படும் எதனையும் நாம் சாப்பிட வேண்டுமென என் தாயார் எதிர்பார்த்தார். எடுத்துக்காட்டாக, கொழுப்புத் தன்மையான இறைச்சியையோ ஏதேனும் மீன் வகையையோ நான் சாப்பிட மறுத்தால் எனது தாயார்,

- யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பின்பும் இருந்த உணவுத் தட்டுப்பாடு பற்றி ஒரு விரிவுரை வழங்குவார்
- அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் பட்டினியால் வாடும் கோடிக் கணக்கானோரைப் பற்றி எனக்கு நினைவூட்டுவார்
- அல்லது நான் விட்டு வைத்த உணவை அடுத்த உணவு வேளையின் போது திருப்பித் தருவார்
- உணவு வேளைகளுக்கிடையில் எமக்குப் பசி வந்தால் சாதாரண ரொட்டியையும் மாஜரினையும் தருவார்– அவ்வளவு தான்.

கைவீசிச் செலவு செய்ய எல்லோரிடமும் பணம் இல்லையே!

7. அதிக நார் கொண்ட உணவுகளில் எதனைப் பிள்ளைகளுக்குச் சிபாரிசு செய்கிறீர்கள்? காரணம் என்ன?

பெற்றார் தம் பிள்ளைகளுக்குப் பழங்களையும் மரக்கறி வகைகளையும் அரிசி, கோதுமை போன்ற தானியங்களையும் ஊட்ட வேண்டும். அதிக நார் கொண்ட உணவுகளுக்கு உதாரணமாக சிவப்பரிசி, முழுக்கோதுமை, பயறு, பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, அப்பிள், அத்தி, ஆரஞ்சு, ஸ்ட்ரோபரி முதலியவற்றைக் குறிப்பிடலாம். நார் வகைகள் புற்று நோயைத் தவிர்க்க உதவுவதோடு, மிகையாக உண்ணுவதைத் தடுப்பதற்கும் சிறுகுடலில் கொழுப்பு உறிஞ்சப்படுவதைத் தடுப்பதற்கும் உதவுகின்றன. அத்தோடு, நிறைவான உணர்வை வயிற்றில் ஏற்படுத்திப் பசியைத் திருப்திப் படுத்துகின்றன.

8. எமது குடும்பத்தைப் பொறுத்தமட்டில் காலை நேரமே வேலை நெருக்கடி மிகுந்ததாக உள்ளது. நாம் கட்டாயமாகக் காலை உணவு உண்ணத்தான் வேண்டுமா?

ஆம்; குடும்பத்தினர் காலையுணவு உட்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியமானது - அதற்காகக் காலையில் கால் மணி நேரம் முந்தி விழித்தெழ வேண்டி ஏற்படினும் சரியே. காலை உணவைத் தவறவிடும் பிள்ளைகள் பள்ளிப் பாடங்களிலும் விளையாட்டிலும் கவனம் செலுத்தச் சிரமப்படுவார்கள். காலையுணவு உடலுக்கும் மூளைக்கும் புத்துணர்வு வழங்குகின்றது. இரைப்பை காலியாக இருக்கும் போது பிள்ளையின் ஆற்றல் நலிவடைகிறது.

9. எனது மகள் ஒல்லியாக இருக்க வேண்டுமென அடம்பிடிக்கிறாள். உண்ணாமலிருப் பதற்குப் பதிலாக ஆரோக்கியமான முறையில் உண்பதற்கு அவளுக்கு நான் போதிக்க முடியுமா?

குமரப் பருவ அமெரிக்கப் பெண்களுள் 78% இனர் குறைந்த நிறையுடையவர்களாக இருக்க விரும்புவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. இதற்காகச் சிலர் இறைச்சிகளைத் தவிர்க்கின்றனர். அப்படியானவர்கள் அதிக புரதமுள்ள பயறு வகைகள், பருப்பு வகைகள், கடலை, பால், சீஸ், முட்டை, வித்துக்கள் போன்ற மாற்று உணவுகளை உட்கொள்ள வேண்டும். ஒரு பெண் பிள்ளை பூப்படையும் பருவத்தில் இருந்தால் அவளுடைய துரித வளர்ச்சிக்குரிய சக்திச் சேமிப்பாகத் தோலுக்குக் கீழே புதிய கொழுப்புப் படையொன்று உருவாக வேண்டியுள்ளது. இது பற்றி அவளுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும். இதன் பின்னரும் அவள் உணவைத் தவிர்க்க முயற்சித்தால் அது தொடர்பாகக் குடும்ப வைத்தியரின் அல்லது போசணை பற்றிய நிபுணர் ஒருவரின் உதவியை நாட வேண்டும்.

10. எமது பிள்ளை உணவு வகைகளில் பாரபட்சம் காட்டுகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

பொதுவாக 2- 5 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் சில உணவுகளை விரும்பவும் வேறு சிலவற்றை தவிர்க்கவும் முயற்சிப்பார்கள். இந்த விருப்பங்கள் கூட அடிக்கடி மாற்றமடையலாம். புதிய உணவொன்றைப் பிள்ளை சுவைத்துப் பார்க்க முன்னர் அதனைக் குறைந்தது பத்துத் தடவைகளாவது அறிமுகஞ் செய்து வைக்க வேண்டி ஏற்படலாம். பெற்றார் தம் பிள்ளைகளோடு ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது மிக முக்கியமானது. பெற்றார் செய்வதைப் பிள்ளைகளும் பிரதி பண்ண முயற்சிப்பர். எனவே தான், பெற்றார் விரும்பி உண்ணும் உணவுகளைப் பிள்ளைகளும் உண்ணப் பழகிக் கொள்கின்றனர். இன்றைய அவசர உலகில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய நேர அட்டவணைப்படி வேலை செய்வதனால் பெற்றாரும் பிள்ளைகளும் ஒன்றாய் அமர்ந்து உணவுட்கொள்ளும் வாய்ப்பு அருகிக் கொண்டே செல்கிறது. பெரும்பாலான பிள்ளைகள் காலையுணவைத் தவறவிடுவதற்குக் காரணம், குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து அதனை உட்கொள்ள முடியாமலிருப்பதே.

எது முதலில் வர வேண்டும்? வேலையா காலையுணவா?

காலையுணவுக்கு முன்பு வேலை செய்ய வேண்டாம். அப்படி நேர காலத்தோடு வேலை செய்ய வேண்டி ஏற்பட்டால் காலை உணவை அதற்கு முன்னரே எடுத்து விடுங்கள்.

11. வாசனைப் பொருட்கள் உடலாரோக்கியத்திற்கு நல்லவையா? தீங்கானவையா?

கோர்னெல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி உணவைக் கெட்டுப் போகச் செய்யும் வித்தியாசமான 30 வகை பக்டீரியாக்களைக் கொல்லும் ஆற்றல் வாசனைப் பொருட்களுக்கு உண்டு எனக் கண்டறியப்பட்டது. வெங்காயம், வெள்ளைப் பூண்டு, மிளகு, மஞ்சள், சீரகம், இஞ்சி, கராம்பு, கருவா போன்றவை அவற்றுள் அடங்கும்.

12. விஞ்ஞானிகள் அடிக்கடி தமது கருத்துக்களை மாற்றிக் கொள்கிறார்களே. இது பற்றி நாம் என்ன செய்யலாம்?

பல்வேறு உணவுப் பொருட்களின் நன்மை, தீமைகள் பற்றி விஞ்ஞானிகள் மாறுபட்ட கருத்துக்களை அடிக்கடி தெரிவித்து வருகின்றனர். நீண்ட காலமாக நம்பி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த கருத்துக்கள்கூடத் திடீரெனத் தூக்கி எறியப்படுவதைக் காண்கிறோம். ஒரு விஞ்ஞானியால் முன்வைக்கப்பட்ட கருத்து சிறிது காலத்தின் பின்னர் வேறு சிலரால் முற்றாக நிராகரிக்கப்பட்டு விடுகின்றன. ஓர் உணவுப் பொருள் அல்லது விட்டமின் அல்லது ஒரு தொழிற்பாடு இதயத்தினதும் சுற்றோட்டத் தொகுதியினதும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் என்றோ பாதிக்கும் என்றோ கூறும் ஆய்வு அறிக்கைகள் வாரந்தோறும் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

இதற்கான தீர்வு என்ன? உணவும் போசணையும் தொடர்பாக அல் குர்ஆனும் இறைத் தூதர் (ஸல்) அவர்களும் வழங்கியுள்ள அடிப்படை அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள். ஆயுள் முழுவதும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதே சிறந்த போசணைக்குரிய வழியாகும். வயது செல்லச் செல்ல இது சீராக அமைந்து விடும். பல்வேறு வகை உணவுகளையும் மிதமான அளவில் உட்கொள்ளுங்கள்.



உணவு பற்றிக் குர்ஆனிய அறிவுறுத்தல்கள்

விசுவாசங்கொண்டோரே! அல்லாஹ் உங்களுக்கு ஆகுமாக்கி வைத்திருக்கும் நல்லவற்றை நீங்கள் விலக்கப்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்; இன்னும் நீங்கள் வரம்பு மீறியும் செல்லாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிக்க மாட்டான். மேலும்,

அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றில் (நீங்கள் புசிக்க) ஆகுமானதைப் புசியுங்கள். நீங்கள் விசுவாசிக்கும் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். (அல் குர்ஆன் 5: 87- 88)

ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் (ஆடைகளினால்) உங்களுடைய அலங்காரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; மேலும், (அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்தவற்றை) நீங்கள் (தாராளமாக) உண்ணுங்கள்; மேலும், பருகுங்கள். (ஆனால்,) வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிக்க மாட்டான். (அல் குர்ஆன் 7: 31)

(நபியே!) "அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியிருக்கும் (சகல வித) அலங்காரத் தையும் உணவு வகைகளில் நல்லவற்றையும் (ஆகாதவையென்று) தடுத்தவர் யார்?" என்று கேட்பீராக. "அது இவ்வுலக வாழ்வில் விசுவாசம் கொண்டவர்களுக்கு (உரியதாகும். எனி னும்,) மறுமை நாளில் (மற்றவர்களுக்கன்றி) அவர்களுக்கு மட்டும் பிரத்தியேக மானதாகும்" என்று கூறுவீராக! அறியக்கூடிய சமூகத்தார்க்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம். (அல் குர்ஆன் 7: 32)



(தேனீயை நோக்கி:) பின்னர், "நீ எல்லா விதமான கனி(யின் மலர்)களிலிருந்தும் உணவருந்தி பின்னர், உனதிரட்சகனின் வழிகளில் (அவை உனக்கு) எளிதாக்கப் பட்டதாக இருக்கச் செல்" (எனவும் உணர்வை உமதிரட்சகன் உண்டாக்கினான்). இதனால் அதன் வயிறுகளிலிருந்து (தேனாகிய) ஒரு பானம் வெளியாகின்றது. அதன் நிறங்கள் மாறுபட்டவையாகும். அதில் மனிதர்களுக்குக் குணப்படுத்தலுண்டு. நிச்சயமாக, இதிலும் சிந்திக்கக்கூடிய கூட்டத்தினர்க்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது. (அல் குர்ஆன் 16: 69)

..... ஆகவே, உங்களில் ஒருவரை உங்களுடைய இந்த வெள்ளி நாணயத்தைக் கொண்டு பட்டணத்திற்கு அனுப்பி வையுங்கள்; அவர் (அங்கு சென்று) எது மிகச் சுத்தமான உணவு என்பதை(த் தேடிப்) பார்த்து அதிலிருந்து உணவை உங்களுக்காகக் கொண்டு வரட்டும். இன்னும் அவர் (ஊர் மக்களிடம்) இனிதாக நடந்து கொள்ளவும் (உங்களைப் பற்றி (மனிதர்களில்) எவருக்கும் நிச்சயமாக அவர் அறிவித்து விடவும் வேண்டாம்.

(அல் குர்ஆன் 18: 19)

இது தான் சாராம்சம்:

- எல்லா வகையான உணவுகளிலிருந்தும் மிதமான அளவில் உண்ணுங்கள்; ஒவ்வொரு வகையிலும் சிறிய அளவில் உட்கொள்ளுங்கள். ஆனால், ஒரே வகையை அதிகமாக உண்ணாதீர்கள்.
- மிதமான அளவில் மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள். மாமிசங்களை முற்றாகத் தவிர்த்துக் கொள்பவர்கள் அதன் விளைவுகள் பற்றி நல்ல அறிவையும் அனுபவத் தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- பன்றியிறைச்சி, இரத்தம், செத்த மிருகங்கள், மதுசாரம், போதைப் பொருட்கள், சிகரெட், சுருட்டு முதலியவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இவை அசுத்தமானவை; தீங்கானவை. முழு உணவுகளல்ல.
- உணவினால் வயிற்றை நிரப்பிக் கொள்ளாதீர்கள். இன்னும் சாப்பிடலாம் என்றிருக்கும் நிலையில் உண்பதை நிறுத்திக் கொள்ளுங்கள்.
- உங்கள் அன்றாட உணவில் தேனைச் சேர்த்துக் கொள்ளுங்கள். அது சிறந்த நோய் நிவாரணியாகும்.
- ஒலிவ் எண்ணெய்யை மிதமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். (அது HDL எனும் ஆரோக்கியத்துக்குரிய கொலஸ்ட்ரோலை வழங்குவதோடு, LDL எனும் தீங்கான கொலஸ்ட்ரோலைக் குறைக்கிறது)
- இரசாயனப் பொருட்கள், பீடை கொல்லிகள், செயற்கையான சேர்வைகள் உள்ளடங்கிய உணவுகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சிறுவர்நோய் நிபுணர் வழங்கிய அபூர்வ மருந்துச் சிட்டை

சிறுவர்நோய் வைத்தியர் தமது மகனுக்கென வழங்கிய மருந்துச் சிட்டை அடங்கிய உறையைத் திறந்து பார்த்த போது அதனுள் 10 டொலர் தாளொன்றும் குறிப்பொன் றும் இருப்பதை அந்தத் தந்தை கண்டார். அந்தக் குறிப்பில் உங்கள் பிள்ளைக்கு நல்ல முழுமையான உணவைப் பெற்றுக் கொடுங்கள்; அவன் போசாக்கின்றி இருக்கிறான் என எழுதப்பட்டிருந்தது.

தமது பிள்ளை ஆரோக்கியமாக வளர்வதற்குத் தேவையான அடிப்படைக் காரணிகளைப் பெற்றுக்கொடுக்கப் பெரும்பாலான பெற்றார்கள் தவறி விடுகின்றனர். போராட்டங்கள் நிறைந்த சமூக வாழ்க்கையும் பெற்றாரின் அவசரம் மிக்க வாழ்க்கைப் போக்கும் பிள்ளைகளுக்குப் போசாக்குள்ள உணவை வழங்குவது தொடர்பாகக் கரிசனையற்ற நிலைமையை உருவாக்கியுள்ளன. பிள்ளைகளது வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் அவர்களது அடிப்படைத் தேவைகளை வழங்குவது பெற்றாரின் கடமை. உடல் சார்ந்த தேவைகளோடு, மனவெழுச்சி தொடர்பான தேவைகளும் முக்கியமானவை. இவற்றைக் கவனிக்காது காலம் தாழ்த்தினால் கவலைப்பட நேரிடும்.

பிள்ளைகளும் உடற் பயிற்சியும்

"நாளைய தினம் அவரை (யூஸுஃபை) எங்களுடன் அனுப்பி வையுங்கள்; அவர் (காட்டிலுள்ள கனிகளை) நன்கு புசித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டும் இருப்பார். நிச்சயமாக நாம் அவரைப் பாதுகாத்துக் கொள்வோராகவும் இருக்கிறோம்" என்றும் கூறினார்கள்.

(அல் குர்ஆன் 12: 12)

"வீட்டைச் சுற்றி ஓட வேண்டாம்." "இங்கே வந்து உட்கார்ந்திருங்கள்." "வீட்டினுள் பந்து விளையாட வேண்டாம் என எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்."- இவைதாம் பிள்ளைகளை நோக்கிப் பெற்றார் அடிக்கடி கூறும் விடயங்கள். அவர்கள் இவ்வாறு செய்வது தவறானது. பதிலாக, "போய்க் கிரிகெட் விளையாடுங்கள்"; "நண்பர்களோடு சேர்ந்து உதை பந்து விளையாடுங்கள்"; "வெளியே போய் ஓடி விளையாடுங்கள்" என்று சொல்வதே மிகச் சரியானது.

எனது பிள்ளைக்கு உடற் பயிற்சி ஏன் அவசியம்?

கூடுதலான உடற் தொழிற்பாடு ஆயுளை அதிகரிக்கச் செய்து இதய நோய்கள் தொடர்பான ஆபத்தைக் குறைப்பதாக அறியப்பட்டுள்ளது. உடற் தொழிற்பாடுகள் காரணமாக உடல்ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சமூகரீதியாகவும் நன்மைகள் ஏற்படுகின்றன. தொழிற் பாடு குறைந்த பிள்ளைகள் பெரியவர்களாக வளர்ந்த பின்னரும் இயக்கம் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். உடற் தொழிற்பாடுகள் பின்வரும் வகையில் உதவுகின்றன.

- உடல் நிறையைக் கட்டுப்படுத்தல்
- இரத்த அழுத்தத்தைக் குறைத்தல்
- HDL எனும் நல்ல கொலஸ்ட்ரோலை அதிகரிக்கச் செய்தல்
- நீரிழிவு நோய் மற்றும் சில வகையான புற்று நோய்கள் என்பவற்றின் ஆபத்தைக் குறைத்தல்
- உளவியல் ரீதியான நன்னிலையை மேம்படுத்தல் (தன்னம்பிக் கையையும் சுய மதிப்பையும் அதிகரிக்கச் செய்யும்)
- குழு மனப்பான்மையைப் போதிக்கும்

(American Heart Association)

உடற்றொழிற்பாடு குறைந்த பிள்ளைகள் மிகைக் கொழுப்புடையவர்களாக மாறுகின் றனர். சிறு வயதில் மிகை நிறை உடையவர்கள் வயது வந்த பின்னரும் மிகை நிறை உடையவர்களாகவே இருப்பர். வயது சென்ற நிலையில் மிகைக் கொழுப்புடையவர்கள் நீரிழிவு, இதய நோய்கள், மூளைத் தாக்கு (stroke), புற்று நோய் மற்றும் ஏனைய நீண்ட காலத்துக்குரிய கோளாறுகளுக்கு ஆளாகக் கூடும். மிகைக் கொழுப்பையும் அதனோடு தொடர்பான நோய்களையும் இல்லாமற் செய்வதற்குரிய சிறந்த வழி சிறுவயது தொடக் கம் உடற் பயிற்சி செய்வதே. உடலின் வலிமை, நெகிழ்வுத் தன்மை, தாங்குதிறன் என்பவற் றை உடற் பயிற்சி மேம்படுத்துகிறது. இரண்டு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு இது அவசியம். பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் உடற்பயிற்சி என்பது ஓடி விளையாடுவதும் தொடர்ந்து சுறுசுறுப்பாய் இருப்பதுமே. சுறுசுறுப்பான பிள்ளைகள் வலிமையான தசைகளையும் எலும்புகளையும் மெல்லிய உடற் கட்டையும் கொண்டிருப்பர். வாழ்க்கை பற்றிய அவர்களது கண்ணோட்டம் நல்லதாக இருக்கும். சுறுசுறுப்பற்ற பிள்ளைகள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவதையும் மிகைக் கொழுப்பு, HDL கொலஸ்ட்ரோல் குறை பாடு என்பவற்றாலும் பாதிக்கப்படுவர். உடற் பயிற்சியின் காரணமாகப் பிள்ளைகள் ஆழமாக நித்திரை கொள்வதோடு அன்றாடம் முகங்கொடுக்க நேரிடும் உடல் மற்றும் மனவெழுச்சி சார்ந்த சவால்களை நல்ல முறையில் சமாளிப்பர். உதாரணமாக, காலையில் பஸ் வண்டியைப் பிடிப்பதற்காக ஓடுதல், பாதணிகளில் நூல் கட்டுவதற்காகக் குனிதல் அல்லது பரீட்சைக்காகப் படித்தல் போன்றவை இவர்களுக்கு எளிதாக இருக்கும்.

பிள்ளைகளும் பாதணிகளும்

பிள்ளைகள் பாதணியின்றி வெறுங்கால்களுடன் நடப்பதே நல்லது என்றும் அவர்கள் அணியும் பாதணிகள் அவர்களுடைய மூளை விருத்தியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் உடற்தகவு பற்றிய நிபுணரான Sam Murphy என்பவர் குறிப்பிட் டுள்ளார். பாத நோய்கள் பற்றிய நிபுணரான Tracy Byrne என்பவரின் கூற்றுப்படி, வெறுங்கால்களுடன் நடப்பது பாதத்தின் தசைகளையும் இணையங்களையும் விருத்தி செய்ய உதவுவதோடு பாத வில்லுக்கு வலிமையூட்டி நல்ல நிலை கோடலுக்கு வழிவகுக்கிறது.

பாதணிகள் அலங்காரச் சின்னமாக அமையக்கூடாது. சிறுவர்களுக்காகத் தயாரிக்கப் படும் சில பாதணிகள் முழுவதும் விறைப்புத் தன்மையுடையதாகவும் உடற்தொழிற்பாடுகளுக்கு இடம் கொடுக்கத் தேவையான அளவு நெகிழ்வுத் தன்மை இல்லாத அடிப்பகுதிகளைக் கொண்டன வாகவும் இருக்கின்றன. இவை உடல் அசைவுகளைக் கட்டுப்படுத்துகின்றன. சரியாகப் பொருந்தாத அல்லது இறுக்கமான சப்பாத்துக்கள் காரணமாகப் பாதங்களுக்குப் பெரிய சேதம் ஏற்படலாம். பாதணிகளின் வடிவத்துக்கும் இறுக்கத்துக்கும் ஏற்ப பாதங்கள் இசைந்து கொடுக்க வேண்டிய நிலைமை ஆபத்தானது. ஏனெனில், பாதங்கள் இயல்பான முறையில் விருத்தியடைவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கான சப்பாத்துக்களை வாங்கும் போது அவற்றின் அலங்காரத்துக்கும் கவர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் அவற்றின் வடிவமைப்பானது, பாதங்களுக்குப் பொருத்தமானதா என்பதையே பெற்றார் அவதானிக்க வேண்டும். அத்தோடு, முடியுமான சந்தர்ப்பங்களிலெல்லாம் வெறுங்காலுடன் நடப்பதற்குப் பிள்ளைகளை ஊக்குவித்தல் அவசியம்.

பிள்ளைகளில் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள்

உடற் பயிற்சி செய்யும் பழக்கத்தைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்குப் பெற்றார் பல வழிகளிலும் உதவலாம். அது பற்றிய சில ஆலோசனைகளைக் கீழே தந்துள்ளோம்:

- தொலைக்காட்சி பார்ப்பதிலும் வீடியோ விளையாட்டுக்களிலும் பிள்ளைகள் கழிக் கும் நேரத்தின் அளவைக் குறையுங்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பெற்றார் வேலையிலிருந்து வீடு திரும்பும் வரை TV பார்க்குமாறும் படிப்பு தொடர்பான வீட்டு வேலைகளைச் செய்யுமாறும் பிள்ளைகள் பணிக்கப்படுகின்றனர். எனினும், பள்ளிக் கூடம் விட்டு வந்த பின்னர் விளையாட்டு மற்றும் உடல் தொழிற்பாடுகளில் ஈடுபடு வதும் மாலையானதும் கற்றலில் ஈடுபடுவதுமே சிறந்தது.
- தமது வயதுக்குப் பொருத்தமான தொழிற்பாடுகளில் ஈடுபடுமாறு பிள்ளைகளை ஊக்குவியுங்கள். இரண்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை எக்காரணம் கொண்டும் TV பார்க்க அனுமதிக்கக்கூடாது என அமெரிக்க சிறுவர் நோயியல் அகடமி கூறுகிறது.
- உடற் தொழிற்பாடுகள் களிப்பை ஏற்படுத்தக் கூடியன என்பதையும் உடற் பயிற்சிகள் பல வடிவங்களில் காணப்படுகின்றன என்பதையும் பிள்ளைகளுக்குப் போதியுங்கள். உடற் பயிற்சிகள் பிள்ளைகளுக்குக் களிப்பைத் தருமானால் தொடர்ந்தும் உடற் பயிற்சிகளில் ஈடுபட அவர்கள் விரும்புவர்.
- உடற் பயிற்சியை ஒரு தண்டனையாக வழங்க வேண்டாம். ஏதேனும் தவறிழைத் தமைக்காக ஒரு பிள்ளையை மைதானத்தைச் சுற்றி ஓட வைக்கும் ஆசிரியரின் நடை முறை தவறானதாகும்.
- பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகப் பெற்றார் இருக்க வேண்டும். எனவே, அவர்களும் தொடர்ச்சியாக உடற் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். லிப்டைப் பயன்படுத்து வதற்குப் பதிலாகப் படிக்கட்டைப் பயன்படுத்த வேண்டும். சிறிய தூரங்களை பஸ்ஸில் செல்வதற்குப் பதிலாக நடந்து செல்ல வேண்டும்.

- உடற் பயிற்சி செய்வதில் முழுக் குடும்பத்தையும் ஈடுபடுத்துங்கள். பெற்றார் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு பிள்ளைகளை வெளியிற் சென்று விளையாடுமாறு பணிப்பது அர்த்தமற்றது.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு ஒழுங்கு முறையான உடற் பயிற்சியும் ஆரோக்கியமான உணவும் முக்கியமானவை. எனவே, பழங்கள், மரக்கறி வகைகள், முழுத் தானியங்கள் முதலியவற்றைப் பிள்ளைகளுக்குத் தொடர்ச்சியாக உண்ணக் கொடுங்கள்.
- உடல் வலிமையையும் நெகிழ்வுத் தன்மையையும் தாங்கு திறனையும் அதிகரிக்கச் செய்யக்கூடிய களிப்பூட்டும் தொழிற்பாடுகளை ஊக்குவியுங்கள். உடற் பயிற்சியிலும் விளையாட்டுக்களிலும் குடும்பத்தாரிடையே சிறு போட்டிகளை நடத்தலாம்.
- சுவாசம் தொடர்பான பயிற்சிகளைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். இதயத் தையும் நுரையீரல்களையும் வலுப்படுத்த இவை உதவும். கூடைப்பந்தாட்டம், கரப்பந் தாட்டம், சைக்கிளோட்டம், உதைபந்தாட்டம், நீச்சல், டென்னிஸ், நடத்தல், ஓடுதல் என்பன இவ்வகையில் அடங்கலாம்.

சிபாரிசு செய்யப்பட்ட உடற்பயிற்சி நிகழ்ச்சி நிரல்

பிள்ளைகளின் ஒழுங்கான வளர்ச்சிக்குத் திட்டமிடப்பட்ட உடற்பயிற்சி நிகழ்ச்சி நிரலொன்று இருக்க வேண்டும். ஒரு பிள்ளைக்குத் தேவையான ஆகக் குறைந்த உடற் பயிற்சியின் அளவு அதன் வயதுக்கு ஏற்பத் தீர்மானிக்கப்படும். ஐக்கிய அமெரிக்கா விலுள்ள விளையாட்டுக்கள், உடற் கல்வி என்பவற்றுக்கான தேசிய சங்கம் (NASPE) பின்வரும் நிகழ்ச்சி நிரலைச் சிபாரிசு செய்துள்ளது:

வயது	தினசரி ஆகக் குறைந்த தொழிற்பாடு	குறிப்புகள்
குழந்தை	குறிப்பான தேவைகள் இல்லை	உடற்றொழிற்பாடு இயக்க விருத்தியை ஊக்குவிக்கும்
2 முதல் 5 வயது வரை	1 1/2 மணித்தியாலங்கள்	30 நிமிடங்களுக்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளும் 60 நிமிடங்களுக்கு சுயாதீனமான விளையாட்டுக்களும்
முன்பள்ளிப் பருவம்	2 மணித்தியாலங்கள்	60 நிமிடங்களுக்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளும் 60 நிமிடங்களுக்கு சுயாதீனமான விளையாட்டுக்களும்
பள்ளிப் பருவம்	1 மணித்தியாலம் அல்லது அதற்கு மேல்	15 நிமிடம் அல்லது அதற்கு மேல் வேறு வேறான உடற் பயிற்சி அமர்வுகளாகப் பிரித்துச் செய்தல்

அமெரிக்க இதய நல சங்கம் பின்வருமாறு சிபாரிசு செய்கிறது:

- இரண்டு வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் தினசரி 30 நிமிடங்களுக்கேனும் மகிழ்ச்சி தரக்கூடிய விதமான உடற் தொழிற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.
- பிள்ளைகள் தமது இதயத்தினதும் நுரையீரல்களினதும் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக வாரத்திற்கு 3–4 நாட்களாவது 30 நிமிட நேரத்திற்கு தீவிர தொழிற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.
- ஒரு பிள்ளைக்குத் தொடர்ச்சியாக 30 நிமிட நேரத்தை ஒதுக்குவதற்கு வாய்ப்பில்லையாயின் 15 நிமிடங்கள் கொண்ட 2 காலப் பகுதிகளையோ அல்லது 10 நிமிடங்கள் கொண்ட 3 காலப் பகுதிகளையோ துரித உடற் தொழிற்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

நலிவான விசுவாசியை விட வலிமை மிக்க விசுவாசி சிறந்தவராகவும் இறைவனுக்கு விருப்பமானவராகவும் இருக்கின்றார். எல்லாவற்றிலும் நன்மை உண்டு. (முஸ்லிம்) (இங்கு வலிமை என்பது விசுவாசத்தின் வலிமையையும் உடல் வலிமையையும் குறிக்கின்றது)

பயன்படுத்தப்படாதவை இழக்கப்பட்டுவிடும் எனும் விதி இதயத் தசைகள், இணையங் கள், மூளைக் கலங்கள் என்பவற்றுக்கும் பொருந்தும். எனவே, ஒருவருடைய தனிப்பட்ட விருத்திக்கு உடற்பயிற்சி கட்டாயம் தேவை. திடகாத்திரமான உடல் நிலையொன்றை அடைந்து கொள்வது நல்லதாயினும் அதனைத் தொடர்ந்து பேணிக் கொள்வது பெரும் சவாலுக்குரியதாகும். திடகாத்திரமான உடலானது எமது சக்தி மட்டத்திலும் மனப்பான் மைகளிலும் ஆன்மீக அபிலாசைகளிலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

உடற்பயிற்சி செய்யும் போது ஒழுங்கு முறையாகச் செய்வது அவசியம். நீண்ட காலத்துக்குச் செய்யாதுவிட்டு மீண்டும் ஆரம்பிக்கும் போது பயிற்சிகளை மிகையாகச் செய்வது நல்லதல்ல. உடலை வருத்தும் வகையில் அளவுக்கு மீறிக் கடுமையாக உடற்பயிற்சி செய்வதும் தீங்கானது.

கைக்குழந்தைகளுக்குக் கூட உணவூட்டலுக்கும் நித்திரைக்குமிடையில் சிறிது உடற்பயிற்சி தேவைப்படுகிறது. ஒரு வயதை விடக் குறைந்த குழந்தைகளுக்கு மல்லாக்கப் படுத்துக் கால்களை அசைத்தல், குப்புறப் படுத்துத் தலையைத் தூக்குதல், நிலத்தில் உடலை இழுத்து அசைத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்ய வைக்கலாம்.

நித்திரை

நல்ல ஆரோக்கியத்துக்கும் அன்றாடம் சிறந்த முறையில் தொழிற்படுவதற்கும் பிள்ளைகளுக்குப் போதியளவு நித்திரை தேவை. குழந்தைப் பருவத்தில் உருவாகும் நித்திரைப் பழக்கம் வாழ்க்கையின் பிற்பகுதியிலும் தொடரும். போதியளவு நித்திரை கிடைக்காமற் போவது ஒருவருடைய செயற்பாட்டுத் திறனைப் பாதிப்பதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. பொதுவாக, இரவிலேயே நித்திரை கொள்ள வேண்டும். பகலில் விழித்திருக்கவும் இரவில் நித்திரை கொள்ளவும் ஏற்றவாறே எமது உடல் படைக்கப்பட் டுள்ளது. இருட்டியது முதல் சூரிய உதயம் வரை ஓய்வு பெறும் தேவை எமது உடலுக்கு உண்டு. எனினும், இதற்கு விதிவிலக்கான நிலைமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக, வட ஐரோப்பாவில் குளிர் காலத்தில் இரவு மிக நீண்டதாகவும், கோடை காலத்தில் குறுகியதாகவும் காணப்படுவதைக் கூறலாம்.

> இன்னும் உங்களை (ஆண், பெண் கொண்ட) ஜோடிகளாக நாம் படைத்தோம். நாம் உங்களுடைய தூக்கத்தை (உங்களுக்கு) இளைப்பாறுதலாகவும் ஆக்கினோம். நாம் இரவை (உங்களுக்கு) ஆடையாகவும் ஆக்கினோம். நாம் பகலை வாழ்க்கைக்குரிய(வற்றைத் தேடிக் கொள்ளும்) நேரமாக ஆக்கினோம். (அல் குர்ஆன் 78: 8-11)

இழக்கப்பட்ட இரவுநேர நித்திரையைப் பகலில் நித்திரை கொள்வதனால் முற்றாகப் பிரதியீடு செய்ய முடியாது. இரவில் போதியளவு நித்திரை கொள்வது ஒருவர் ஆரோக்கிய மாக இருக்க உதவுவதோடு அவருக்கு நோய் ஆபத்துக்களையும் குறைக்கின்றது.



சில முஸ்லிம்கள் ரமழான் நோன்பு மாதத்தில் இரவில் விழித்திருந்து விட்டுப் பகல் முழுதும் நித்திரை கொள்ளப் பழகி இருக்கிறார்கள். இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் மாற்றியமைப்பது ரமழானின் நோக்கமல்ல. இவ்வாறு செய்வதனால் உடலின் இயற்கையான தாள லயங்கள் குழம்பிப் போகின்றன.

சூரியன் மறைந்தவுடன் எமது மூளையின் அடிப்பகுதியிலுள்ள கூருணர்ச்சிக்குரிய பொறிமுறையொன்று செயற்படத் தொடங்கும். நித்திரைக்குத் தயாராகும் வகையில் உடலின் பகுதிகளை இளைப்பாறச் செய்வதற்கான இரசாயனச் சமிக்ஞைகளை அது வெளிவிடும். இதன் விளைவாக இருள் கவிழும் போது கொட்டாவி வருவதோடு கண் இமைகளும் பாரமாகி எமது இயக்கங்களும் மந்தகதியடையும். நாம் நித்திரையில் ஆழும் போதும் வெளித் தூண்டல்களை ஏற்கும் மூளையின் நுழைவாயில் அடைக்கப்பட்டு வெளியுலகுடனான தொடர்புகள் அறுக்கப்படுகின்றன. நித்திரைச் செயன்முறை Melatonin என்னும் ஹோர்மோனினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இரவு நேர இருளின் துணை யோடு இந்த ஹோர்மோன்தான் நித்திரையின் வினைத்திறனை முகாமை செய்கிறது.

இயற்கைக்கு மாறாக, இரவும் பகலும் மறுதலையாக்கப்படும் போது, காலையிலே புத்துணர்வும் சக்தியும் விழிப்புணர்வும் கொண்டவர்களாக எம்மை விழித்தெழச் செய்கின்ற, எமது உள்ளார்ந்த உயிரியற் கடிகாரம் குழம்பிப் போகும். இயல்பான இக் கடிகாரத்தின் போக்கில் நாம் தலையிடும் போது எமது நித்திரை குழம்பிப் போவதோடு உடலினதும் உள்ளத்தினதும் தேவைகளை நிறைவேற்றப் போதுமான அளவுக்கு அது கிடைக்காமலும் போய்விடும்.

நித்திரைக் குறைபாடு ஏற்படும் போது உள்ளத்தின் ஆற்றல்களும் எதிர்வினைகளும் நலிவடைகின்றன. அதே போன்று உடல்ரீதியான தெறிவினைகளும் விளைவு காட்டல்களும் மந்தமடைகின்றன. எந்நேரமும் விழிப்புணர்வு தேவைப்படுகின்ற வேலைகளைச் செய்வோரையும் வாகனம் ஓட்டுவோரையும் பொறுத்தமட்டில் இந்நிலை மிக ஆபத்தானதாகும். வினைத்திறன் இழப்பு, தவறான கணிப்பீடுகள், தவறுகள், விபத்துக்கள் முதலியவற்றுக்கும் இது வழி வகுக்கும். இழக்கப்பட்ட நித்திரை போதியளவு தரமுள்ள நித்திரையால் ஈடுசெய்யப்பட வேண்டும். உள்ளமும் உடலும் திருப்திகரமாகச் செயற்பட வேண்டுமாயின் இரவில் 7 முதல் 9 மணித்தியாலங்கள் வரை நித்திரை கொள்ள வேண்டுமென விஞ்ஞானிகள் சிபாரிசு செய்கின்றனர். நாம் எவ்வளவு குறைவாக நித்திரை கொள்கிறோமோ அந்த அளவுக்கு எமது உற்பத்தித் திறனும் சக்தியும் நலிவடையும். மேலும், நித்திரையின்மையின் விளைவாக எளிதில் எரிச்சலடைகின்ற தன்மையும் நிலை தடுமாறும் தன்மையும் ஏற்படுவதோடு எமது அறிவு சார் ஆற்றல்களும் பாதிக்கப்படுகிறது.

நித்திரை இழப்பின் மருத்துவரீதியான விளைவுகள்

நித்திரையின் தரம் குறைந்தால் அது எமது உடலின் நோயெதிர்ப்புச் சக்தியை (நிர்ப்பீடனத்தை) நலிவடையச் செய்யும். இதனால் தொற்றுக்களும் நோய்களும் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகரிக்கும். சிறந்த நித்திரைக் கோலங்கள் எமது ஆரோக்கியத்தையும் நினைவாற்றலையும் தயார் நிலையையும் மேம்படுத்தும். உரிய முறையில் நித்திரை கொண்டால் நாம் சிறப்பாகவும் பொறுப்புடனும் பணி புரியலாம். போதியளவு நித்திரையைப் பெறுவதன் மூலம் தவறுகள், பிழையான முடிவுகள், பண விரயம், உயிர்குடிக்கும் விபத்துக்கள் முதலியவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எமது உடலும் உள்ளமும் ஒன்றோடொன்று தொடர்புற்றுள்ளன. பரிவு நரம்புத் தொகுதியினால் சுரக்கப்படும் நரம்புக் கடத்திகள் என்னும் இரசாயனப் பொருட் களினூடாக எமது மூளையும் நரம்புத் தொகுதியின் ஏனைய பகுதிகளும் நிர்ப்பீடனத் தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளன. நல்ல ஓய்வுடன் கூடிய நித்திரையானது எமது

சக்திமட்டம், உளநிலை, நினைவாற்றல், சிந்தனையாற்றல், மன ஒருமைப்பாடு என்பவற்றை மேம்படுத்தும்.

போதியளவு நித்திரையைப் பெற்றுக் கொள்ளாமை அல்லது பொருத்தமற்ற நேரங்களில் நித்திரை கொள்ளல் போன்றவற்றின் விளைவாக கண்கள் ஒளி குன்றிப் பகல் நேரத்தில் தூங்கி வழிய வேண்டிய நிலை ஏற்படும். அத்தோடு, பெருங்குடற் புற்று, மார்பகப் புற்று, நீரிழிவு, இதய நோய்கள், மிகைக் கொழுப்பு முதலிய பிரச்சினைகளுக்கும் இது வழிவகுக்கும். மேற்கு நாடுகளில் மிகைக் கொழுப்பு நிலை அதிகரித்து வருவதற்கு ஒரு காரணம், அங்கு ஒழுங்காக நித்திரை கொள்ளும் பழக்கம் குறைந்து வருவதாகும். பசியைக் கட்டுப்படுத்தும் புரதங்களினது செயற்பாடு குழப்பமடைவதும் இவ்வாறான மிகைக் கொழுப்பு நிலைக்கு வழி வகுத்திருக்கலாம்.

நித்திரைக் குறைபாடு உடலை ஓர் உச்சமான தயார் நிலைக்கு மாற்றுவதாக உடற்றொழிலியற் துறை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இதன் விளைவாக இரத்த அழுத்தம் அதிகரித்து,. மாரடைப்பு, மூளைத் தாக்கு போன்ற ஆபத்தான நிலைமைகளுக்கு வழியேற்படுகிறது. நித்திரை இழப்பின் தீய விளைவுகளைக் குறைப்பதற்குச் சிறு தூக்கங்கள் உதவி செய்யலாம்.

இரவில் நீங்கள் ஒளி மிகுந்த இடத்தில் இருந்தால் உடலில் melatonin என்ற ஹோர்மோன் குறைவாகவே சுரக்கப்படுகிறது. இந்த melatonin புற்று நோய்க் கலங்களின் வளர்ச்சியைத் தடுக்கக் கூடியது. எனவே, அது குறையும் போது புற்று நோய் ஆபத்து அதிகரிக்கின்றது. ஆண்களில் ஏற்படக் கூடிய prostate புற்று நோயும் நித்திரை இழப்புடன் தொடர்புடையது. இரவில் நெடுநேரம் விழித்திருப்பவர்களும் அடிக்கடி நித்திரையிலிருந்து விழித்தெழுபவர்களும் இதே பிரச்சினைக்கு உள்ளாவர். மேலும், நித்திரை சிறிதளவு இழக்கப்பட்டாலும்கூட எமது பசியைச் சீராக்கும் ஹோர்மோன்களின் தொழிற்பாடுகள் குழப்பமடையும்.

நேரகாலத்தோடு நித்திரை கொண்டு
அதிகாலையிலேயே விழித்தெழுதலானது,
ஒருவரை ஆரோக்கியமும் செல்வமும் அறிவாற்றலும் மிக்கவராக்கும்.
Benjamin Franklin

மதுபானம் அருந்துதலும் போதைப் பொருள் தடுப்பும்

உடல் நலத்தைப் பேணுவதற்காகப் பெற்றாரும் பிள்ளைகளும் போதைப் பொருட் பாவனையைக் கட்டாயம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிகரெட்டும் போதையூட்டிகளும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் தந்தையின் விந்துக் கலங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை.

உள்ளே சிறிது புகையிலையையும் ஒரு முனையில் நெருப்பையும் மறு முனையில் ஒரு முட்டாளின் வாயையும் கொண்டிருப்பது தான் சிகரெட்..

மதுபானத்திற்கு அல்லது போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளவர்கள் மருத்துவ மற்றும் உளவியல் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மதுபானத் திற்கும் போதைப் பொருட்களுக்கும் அடிமையாவதைத் தடுப்பதற்குப் பின்வரும் ஆலோச னைகள் உதவும் என நம்புகிறோம். இவ்வாறான பாரிய பிரச்சினையொன்று உருவாவ தற்குப் பெற்றார் விடும் பெரிய தவறொன்று காரணமாக அமையும் என்பதில்லை. பொது வாக, பல சிறிய தவறுகள் கூட்டாக இணையும் போதே இத்தகைய பெரிய பிரச்சினைகள் உருவாகின்றன. பெற்றோரால் அன்பும் சந்தோசமும் மிக்க சூழலொன்றை வீட்டில் உருவாக்க முடியுமாயின், பிள்ளைகள் வீட்டுக்கு வெளியே சந்தோசத்தையும் திருப்தி யையும் தேடிச் செல்ல மாட்டார்கள்.

மதுப்பழக்கமும் போதைப் பொருட் பாவனையும் மூளையின் கலங்களுக்கும் இனப் பெருக்க, சுற்றோட்ட, சுவாசத் தொகுதிகளுக்கும் பாரிய சேதத்தை ஏற்படுத்தலாம். இவற் றினால் ஏற்படும் மூளைச் சேதத்தின் விளைவாக உடல் ரீதியான ஆக்கிரமிப்புத் தன்மை, உண்மை நிலை பற்றிய திரிபடைந்த புலக்காட்சி, ஊக்கமின்மை என்பன உருவாகலாம். தாக்கம் குறைந்த போதைப் பொருட்கள் கூட Schizophrenia எனும் மூளைக் கோளாறுடன் தொடர்புடையனவாய் இருக்கின்றன.

பிள்ளைகளும் உளத் தூண்டுதலும்

போதைப் பொருட்களை உபயோகித்துப் பார்க்குமாறு பிள்ளைகள் அவர்களது நண்பர்களாலும் அறிமுகமானவர்களாலும் தூண்டப்படக்கூடும். மதுவையோ போதைப் பொருட்களையோ தொடுவதில்லை என்ற மன உறுதியோடு பிள்ளைகள் இருக்க வேண்டும். குமரப் பருவமே (14- 20) வாழ்க்கையில் சவால் மிக்க காலம். போதைப் பொருட்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பெற்றார் தேடிப் பெற்றுக்கொள்வது அவசியம். முகங்கொடுக்க வேண்டி நேரக்கூடிய நிலைமைகள் தொடர்பாக வீட்டில் பாத்திரமேற்று நடித்துப் பழகுதல் நல்லது. அவ்வாறு செய்வதன் மூலம் நண்பர்களோ சகபாடிகளோ தீய செயலுக்குத் தூண்டும் போது எப்படி நடந்து கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளப் பிள்ளைக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

மதுபானத்தினதும் போதைப் பொருட்களின தும் ஆபத்துக்கள் பற்றிப் போதிப்பதனால் மாத் திரம் அவற்றின் பாவனையைத் தடுக்கலாம் என நினைக்கக் கூடாது. சில வேளைகளில் அவற்றை உபயோகிப்பதற்கான மறைமுகத் தூண்டுதலாகவும் அப்போதனை அமைந்து விடக்கூடும். நண்பர்களின் தூண்டுதலினால் பிள்ளைகளின் மனதில் ஏற்படும் அழுத்த நிலை பற்றிக் கலந்துரையாடுவதோடு அவ்வாறான தூண்டுதலை எதிர்த்து நிற்பது எப்படி என்பதும் கலந்துரையாடப்பட வேண்டும்.

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவது தொடர்பாக உள்ளத்தில் ஆசையும் தூண்டுதலும் ஏற்படக் காரணம் என்ன என்பதைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். போதைப்

பொருட்களை உட்கொண்ட பின் உள்ளத்தில் ஏற்படுகின்ற உச்சப் போதையுணர்வை நாடியே பெரும்பாலானோர் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் செயற்கையான உச்சநிலை தற்காலிகமானது. அதனையடுத்து உள்ளம் ஒரு தாழ் நிலைக்குச் செல்லும். இது பிள்ளைகளுக்கு நன்கு தெளிவாக்கப்பட வேண்டும். இல்லாவிடில் போதைப் பொருள் பயன்படுத்தும் தம் நண்பர்கள் உச்சமான உற்சாக நிலையொன்றை அடைவதைக் காணும் பிள்ளைகள், தம் பெற்றார் போதைப் பொருட்கள் பற்றிக் கூறுவன அனைத்தும் பொய்யென எண்ணக்கூடும். அத்தோடு, போதைப் பொருட்களால் கிடைக் கும் உற்சாகமும் களிப்பும் அற்பமானவை; குறுகிய காலத்துக்குரியவை என்பதையும் அவற்றினால் ஏற்படும் தீமைகள் பாரதூரமானவை; நீண்ட காலத்துக்குரியவை என்பதையும் பிள்ளைகளுக்குத் தெளிவாக்க வேண்டும்.

மதுவையும் சூதாட்டத்தையும் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது அவற்றின் இரு பக்கங்களையும் விவரிக்கின்றது. அது பின்வருமாறு கூறுகிறது.

> (நபியே!) மதுவையும் சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக: அவ்விரண்டிலும் பெரும் பாவமும் மனிதர்களுக்கு(ச் சில) பலன்களுமிருக் கின்றன. மேலும், அவ்விரண்டின் பாவம், அவ்விரண்டின் பலனை விட மிகப் பெரியதாகும்.
>
> (அல் குர்ஆன் 2: 219)

ஆகவே, மிதமான சமூகக் குடிப் பழக்கத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகள் சில இருந்தாலும்கூட அதனால் ஏற்படும் முழுத் தீமைகள் அந்த அற்ப நன்மைகளை மூழ்கடித்து விடுகின்றன.

போதைப் பொருட் பாவனையின் ஆரம்ப கட்டத்தில் அவதானிக்கப்பட வேண்டிய அறிகுறிகள்: பெற்றார் என்ன செய்யலாம்?

போதைப் பொருட் பாவனையின் அறிகுறிகள் பல. அவற்றுள் மிகப் பொது வானவை பின்வருமாறு: தீயில் கருகிய ஈயத்தாள், பிடி வளைக்கப்பட்ட கரண்டிகள், கருகிப்போன உலோக மூடிகள், சிறு பாத்திரங்கள், சவர அலகுகளும் முகம் பார்க் கும் கண்ணாடிகளும், கடதாசிச் சுருள்கள் அல்லது ஒதுக்கி வீசப்பட்ட கரைப்பான் புட்டிகள் அல்லது பேணிகள், சிகரெட் கடதாசிகள், துளி மருந்து விடும் கருவிகள், மாத்திரைகள் கொண்ட புட்டிகள், குளியலறைகளிலும் ஆடைகளிலும் படிந்த இரத்தத் துளிகள், சேர்ட்டின் நீட்டக் கைகளை மேலே உருட்டிக்கொள்ள மறுத்தல், உணவின் மீதான நாட்டத்தில் ஏற்படும் மாற்றம், திடீரென இனிப்புப் பண்டங்களில் ஆவல் கொள்ளுதல், நித்திரைக்குச் செல்லாமல் இருத்தல், காலையில் நித்திரையைவிட்டு எழுப்பக் கஷ்டமாக இருத்தல், வழமைக்கு மாறான தொலைபேசி அழைப்புக்கள், திருட்டுத் தனமான, இரகசிய நடத்தைகள்.

போதைப் பொருட்களுக்கு அடிமையாகி விட்ட பிள்ளைகள் தமது முகபாவத்தில் வித்தியாசத்தைக் காட்டாமல் மிக இரகசியமாக அதில் ஈடுபடக்கூடும். தம் பிள்ளைகள் மீது சந்தேகம் ஏற்பட்டால் அவர்களுடைய வாய், உதடு, மூக்கு என்பன புண்ணாகி இருக்கின்றனவா என்பதைப் பெற்றார் அவதானிப்பது நல்லது. அத்தோடு, பிள்ளைகள் சில வேளைகளில் போதையுற்றிருப்பது போல் தெரிகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். போதைப் பொருள் பயன்படுத்துபவர்கள் என அறியப்பட்ட எவருடனும் தம் பிள்ளைகள் பழக்கம் வைத்திருந்தால் பெற்றார் விழிப்படைய வேண்டும்.

போதைப் பொருட் பாவனையைத் தடுப்பதற்குப் பெற்றார் செய்யக்கூடியவை

- முடிந்த எல்லா வழிகளிலும் குடும்பத்தினரின் இறை விசுவாசத்தை உறுதிப் படுத்துங்கள். இறை விசுவாசமே சிறந்த பாதுகாப்பு. போதைப் பொருட்கள், மதுபானம், சூதாட்டம் என்பன ஒரு முஸ்லிமுக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. அல் குர்ஆனின் வாக்கியம் 2: 219 இல் பயன் படுத்தப்பட்டுள்ள 'ஹம்ர்' என்ற சொல் உள்ளத்தின் செயற்பாட்டைக் குலைத்து ஒருவர் தன் சுய கட்டுப்பாட்டை இழக்கச் செய்யும் அனைத்துப் பதார்த்தங்களையும் குறிக்கின்றது.
- புகைத்தல், மது அருந்துதல், போதைப் பொருள் உபயோகித்தல் ஆகிய தீச்செயல்கள் பற்றியும் அவற்றின் தீங்கான விளைவுகள் பற்றியும் உங்கள் குடும்பத்தினருக்குக் கல்வியூட்டுங்கள். போதைப் பொருட் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டு அவதியுறும் ஒருவரை நேரடியாகக் காட்ட முடியுமாக இருந்தால் நல்லது. சமூக ரீதியிலும் மருத்துவ ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் போதைப் பொருட்களும் மதுபானமும் ஏற்படுத்தும் ஆபத்துக்களைப் பற்றி எழுதுமாறு பிள்ளைகளைப் பணிக்கலாம். தேவையான வசதிகள் இருப்பின் இந்த விடயம் தொடர்பாக presentation ஒன்றைத் தயாரித்துக் குடும்பத்தினருக்குச் சமர்ப்பிக்குமாறு பிள்ளை களை வேண்டலாம். இது பற்றி ஆய்வு செய்வதற்கு அவர்களுக்குப் பணம் தேவைப்பட்டாலும் அதனை வழங்குவது பயனுள்ளதே.
- வளர்ந்த ஒருவரின் மேற்பார்வை எப்போதும் இருப்பது, தவறு செய்வதைத் தடுக்கும். இவ்வாறு வளர்ந்த ஒருவர் எப்போதும் கண்காணித்துக் கொண்டிருந்தால் பிள்ளைகள் தமக்குத் தீங்கிழைத்துக் கொள்ள முடியாது. இரவான பின்னர் வெளியே சுற்றித் திரிவதற்குப் பிள்ளை களை அனுமதிக்கக்கூடாது. அதேபோல் பெற்றார் உல்லாசமாய் வெளியே செல்லும் போது பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டுச் செல்லவும் கூடாது. பெற்றார் எப்போதும் தம் வீட்டுக்கு உள்ளேயும் அதன் சூழலிலும் கூடிய நேரத்தைக் கழிக்கக் கூடிய வகையில் தமது செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். மேலும், பிள்ளைகளிடம் தேவைக்கதிக மான பணம் புழங்குவதற்கு இடமளிக்கக் கூடாது. கையில் கூடுதலாகப் பணம் இருக்கும் போது தவறான பழக்கங்களில் ஈடுபடுவதற்கு உளத்தூண்டுதல் ஏற்படுகின்றது.
- பெற்றார் தமது பிள்ளைகளின் அறை, புத்தகப்பை மற்றும் அலுமாரிகளையும் காலத்துக்குக் காலம் சோதனையிட வேண்டும். பிள்ளையின் அந்தரங்கம் பேணப்பட வேண்டும் என்பதைத் தாம் அங்கீகரிப்பதாகப் பெற்றார் விளக்கமளிக்க வேண்டும். இவ்வாறு சோதனையிடும் போது 'நான் இதனை உங்கள் நன்மை கருதித்தான் செய்கிறேன்' என்று கூறாமல் 'உங்கள் நலன், பாதுகாப்பு என்பன தொடர்பாக எனக்கு ஒரு கடமைப் பொறுப்பு இருக்கிறது' என்றே கூற வேண்டும். இவ்வாறான சோதனைகள் பிள்ளைகளின் அந்தரங்கத்தில் தலையிடுவதற்காக அல்ல என்பதையும் நல்லதொரு காரணத்திற்காகவே செய்யப்படுகிறது என்பதையும் பிள்ளைகள் புரிந்து கொள்ளச்செய்ய வேண்டும். பிள்ளைகளின் சட்டைப் பைகளும் கைப்பைகளும் பணப்பைகளும் இவ்வாறே சோதிக்கப்பட வேண்டும்.
- பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய அந்தரங்கத்தை வழங்குவது தீய விளைவுகளையே தரும். அவர்களுக்கெனத் தனியான TV, தொலைபேசி என்பவற்றை வழங்குவதும் படுக்கையறையில் இண்டர்னெட் இணைப்புடன் கம்பியூட்டர் பயன்படுத்த அனுமதிப்பதும் கூடாது. இண்டர் நெட் இணைப்புள்ள கம்பியூட்டர் எல்லோரும் காணக்கூடிய இடத்திலேயே எப்போதும் வைக்கப்பட வேண்டும்.
- பிள்ளைகளுக்குப் பொருத்தமான சகபாடிகளைத் தெரிவு செய்து கொடுங்கள். உறவினர்களிலும் அயலவர்களிலுமிருந்து நல்ல நண்பர்களைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்குத் தேடிக் கொடுக்க வேண்டும்.

இத்தனை தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரும் ஒருவருடைய மகனோ மகளோ பிரச்சினையொன்றில் மாட்டிக்கொள்ளக்கூடும். உடனே பதற்றமடைய வேண்டாம். இந்நிலையில் ஏற்படுகின்ற மன வேதனையும் கோபமும் அவதியும் மிகைத்து

நிற்கக்கூடும். எனவே, பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனையும் வழிகாட்டலும் தேவைப்படலாம். பெற்றார் தம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு நிலைமையைச் சரியான கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைக்குப் பகுதியாகவோ முழுமையாகவோ தீர்வு காண்பதற்கு நிபுணர்களது வழிகாட்டல் உதவக்கூடும். பெற்றார் பிரச்சினையை மறைத்துக் கொண்டு, உதவி பெற முயற்சிக்காமல் இருப்பது கூடாது. சமூகக் கணிப்புக்கள், கௌரவப் பிரச்சினை, குடும்ப நற்பெயருக்கு ஏற்படும் களங்கம் என்பவற்றுக்கும் சட்ட ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கும் பயந்து, தன் பிள்ளை போதைப் பொருளுக்கு அடிமையாகியிருப்பதை வெளியில் காட்டிக்கொள்ளப் பெற்றார் அஞ்சுவர்.

தம்மிடம் உதவி நாடி வந்திருப்பது தம் பிள்ளையல்ல; தம் நண்பரின் பிள்ளையே எனக் கற்பனை செய்து கொள்வது, அளவுக்கு மீறிக் கோபம் வராமல் தடுத்துக்கொள்ள உதவும். மனவெழுச்சிக் குமுறல்கள் எதுவுமின்றிப் பிரச்சினையை அமைதியாக ஆராய்ந்து பொருத்தமான தீர்வைக் காண்பதற்கும் இந்நுட்பமுறை உதவும். இப்படியான இக்கட்டான நிலை தனக்கு மட்டும் ஏற்பட்டதல்ல; இன்னும் பல்லாயிரக்கணக்கான பெற்றார் இதே நிலையில் அவதிப்படுகின்றனர் என்பதை எண்ணிப் பார்ப்பதும் மன அமைதியைத் தரும்.

பின்வரும் விடயங்களைத் தமது பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்:

1. எல்லாத் தீமைகளுக்கும் தாய் மதுபானமே

மதுபானத்தின் ஆபத்துக்கள் பற்றி விளக்குவதற்குப் பின்வரும் கதையை உத்மான் இப்ன் அஃப்பான் (றழி) அவர்கள் கூறினார்கள்: அல் குர்ஆனின் பிரதியொன்றைக் கிழித்தெறிதல், குழந்தையொன்றைக் கொல்லுதல், சிலை வணக்கம் செய்தல், மதுபானம் அருந்துதல், ஒரு பெண்ணோடு தகாதமுறையில் உறவு கொள்ளுதல் ஆகிய ஐந்து தீமைகளுள் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு ஒரு மனிதர் வற்புறுத்தப்பட்டார். மது அருந்துவதே இவற்றுள் குறைந்த மட்டத் தீங்கு என அவர் நினைத்தார். எனவே, அவர் மதுவை அருந்தினார். அந்த வெறியில் அந்தப் பெண்ணோடு தகாத உறவு கொண்டார்; அக்குழந்தையைக் கொன்றார்; பின்னர் குர்ஆன் பிரதியைக் கிழித்தெறிந்து விட்டு அச்சிலையின் முன்னால் சிரம் தாழ்த்தி வணங்கினார்.
படிப்பினை: மதுவே எல்லாத் தீமைகளுக்கும் தாய்.

2. கொகேன் (cocaine) போன்ற போதைப் பொருட்கள் கருவிலுள்ள குழந்தையைப் பாதிக்கும்

1980களின் நடுப் பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் கொகேன் பாவனை மிகப் பரவலாக இருந்தது. கொகேன் பயன்படுத்திய கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஏனைய குழந்தைகளை விட வித்தியாசமாக இருப்பதைக் குழந்தை நோய் நிபுணர்கள் அவதானித்தனர். இக்குழந்தைகள் நிறை குறைந்தவர்களாகவும் நடுக்கமுடையவர்களாகவும் தேற்ற முடியாமல் அழுபவர்களாகவும் அரவணைப்பையும் தொடுகையையும் வெறுத்து ஒதுக்குபவர்களாகவும் சிறிய ஒலியையும் கேட்டுத் திடுக்கிடக் கூடியவர்களாகவும் இருந்தனர். இவர்கள் பள்ளிப் பருவத்தை அடைந்த போது ஒரே இடத்தில் அமர்ந்திருக்க முடியாமலும் தமக்கு மகிழ்ச்சி தரும் விடயங்களில்கூடக் கவனஞ்செலுத்த முடியாமலும் இருந்தனர். அப்படியான கொகேன் குழந்தைகள் ஒதுக்கப்பட்ட ஒரு பரம்பரையாக மாறிவிடுவர்.

3. எல்லாப் பிள்ளைகளும் அப்பாவிகள் அல்லர்

வட அமெரிக்க முஸ்லிம் இளைஞர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட போதைப் பொருட் தடுப்பு பற்றிய கருத்தரங்கொன்றில் பேச வந்த பொலிஸ் உயர் அதிகாரியொருவர்

பின்வரும் நிகழ்ச்சியை எடுத்துக் கூறினார்: எனது பிரதேசத்தில் பெறுமதியான பொருட்கள் பல காணாமல் போவது பற்றிப் புகார்கள் வந்த வண்ணமிருந்தன. இது தொடர்பாக 14 வயதுப் பையனொருவனின் மீது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. எனவே, அப்பையனின் அறையைச் சோதிப்பதற்காக உரிய ஆவணங்களுடன் சென்று அவனது பெற்றாரைச் சந்தித்தேன். "எமது பையன் ஒருபோதும் அப்படிச் செய்திருக்க மாட்டான். அவன் மிக நல்லவன்" என அப்பெற்றார் உறுதியாய்க் கூறினர். "நீங்கள் எப்போதாவது அவனது அறையைச் சோதித்துப் பார்த்திருக்கிறீர்களா?" என நான் கேட்டேன். "நாம் ஒருபோதும் அவ்வாறு செய்ததில்லை; அது தனது அந்தரங்க அறை என்று அவன் உரிமை பாராட்டுகிறான். அவ்வறைக்குள் செல்ல எம்மை அனுமதிப்பதில்லை. எப்போதும் அதனைப் பூட்டுப் போட்டே வைத்திருக்கிறான்" எனப் பதில் தந்தனர் அப்பெற்றார். நான் பூட்டை உடைத்துக்கொண்டு உள்ளே சென்றபோது திருட்டுப்போன TVகள், கமராக்கள், கடிகாரங்கள், நகைகள் அனைத்தும் அங்கிருப்பதைக் கண்டேன். திகைத்து நின்ற அப்பெற்றாரைப் பார்த்து "நீங்கள் அவனுக்குத் தனியாக அறையொன்றை ஒதுக்கிக் கொடுத்திருந்தாலும் இந்த வீடு உங்களுக்குச் சொந்தமானது; எனவே, அவ்வறைக்குள் செல்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அத்தோடு, காலத்துக்குக் காலம் அதனைச் சோதித்துப் பார்க்க வேண்டிய பொறுப்பும் உங்களுக்கிருக்கிறது" என நான் அறிவுறுத்தினேன்.

உங்கள் பிள்ளை விடயத்திலும் இப்படி நடக்கக் கூடுமா? அந்தப் பொலிஸ் அதிகாரியின் அறிவுரையைப் பின்பற்றினால் ஒருபோதும் அவ்வாறு நடக்காது.

பதின்ம வயதினருக்கு ஒரு மதுப் பிரியரின் அறிவுரை

சிறிய அளவிலாவது மதுபானத்தைக் குடிக்கத் தொடங்காதீர்கள். குடிக்கத் தொடங்கினால், காலப்போக்கில் ஒரு பீப்பாய் மது அருந்தினாலும் நீங்கள் திருப்தியடைய மாட்டீர்கள். இந்நிலையில் நீங்கள் வலிமையான சரக்குகளை - ஆபத்தான போதைப் பொருட்களை - தேடிச் செல்வீர்கள்.

அடிமையாதலும் ஆரோக்கியமான வீட்டுத் தொடர்புகளும்

பெற்றார் ஓர் அடிப்படையான கேள்வியைத் தம்மிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்: நாம் எமது பிள்ளைகளுடன் ஆரோக்கியமான உறவுகளை வைத்திருக்கிறோமா? அல்லது அவர்களுடன் தொடர்பற்று இருப்பது போல் உணர்கிறோமா? ஓர் ஆரோக்கியமான உறவு என்னும் போது உங்கள் பிள்ளைகளைக் காணும் சந்தர்ப்பங்களில் உங்களுக்கு உற்சாகமும் பரபரப்பும் ஏற்பட வேண்டும். அதேபோன்று உங்களைக் காணும்போது உங்கள் பிள்ளைகளும் பரபரப்பும் உற்சாகமும் அடைய வேண்டும். நல்ல உறவு கொண்டவர்கள் எப்போதும் நெருங்கியிருக்கவே விரும்புவர். சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதிலும் உரையாடுவதிலும் அவர்கள் மகிழ்ச்சி காண்பார்கள்.

பிறருடன் தொடர்பறுந்து தனிப்பட்டது போல் உணரும் போதே ஆட்கள் மதுவுக்கும் போதைப் பொருட்களுக்கும் அடிமையாகின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் ஆறு கோடிப் பேருக்கு மேல் மதுவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவோ உரையாடவோ சிந்திக்கவோ அவர்கள் நாடுவதில்லை. பெற்றாரின் தொடர்பு அற்றுப் போகும் போது பிள்ளைகள் தேடுகின்ற பிரதியீட்டுத் திருப்தியை மதுபானமும் போதைப் பொருட்களும் புகைத்தலும் வழங்குகின்றன. தமக்குக் களிப்பையும் திருப்தியையும் தருவனவற்றோடு தொடர்புகொள்ள அவர்கள் முனைகின்றனர்.

தம் உறவினர்களோடு தொடர்பு கொண்டு நெருக்கமாக இருப்பது எப்படி என்பதை மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் வாழ்க்கைப் போராட்டமொன்றுக்குக் கூட்டாக முகங்கொடுப்பதன் மூலமும் குடும்ப உறுப்பினர்கள் நெருக்கமாகித் தமக்கிடையே வலிமையான பிணைப்புக்களை உருவாக்

கிக்கொள்கின்றனர். தமது பிள்ளைகளைத் தொடர்ந்து அவதானித்து வருவதும் சரியான நேரத்தில் தலையீடு செய்வதும் பெற்றோரின் பொறுப்பாகும். இதில் ஓய்வெடுக்க முடியாது. ஏனெனில், இது வண்டியொன்றை மலைப் பாதையொன்றில் மேல் நோக்கித் தள்ளிச் செல்வதற்கு ஒப்பாகும். தள்ளுவதைச் சற்றேனும் நிறுத்தினால் வண்டி கீழ் நோக்கி இறங்கிவிடும்.

தம் பிள்ளைகள் ஏதேனும் வைபவங்களில் கலந்து கொள்வதாக இருப்பின், அந்த வைபவங்களில் என்ன நடக்கிறது என்பதைப் பெற்றார் அறிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள், பள்ளிக்கூட ஆலோசகர்கள், வைத்தியர்கள், பொலிஸ் அதிகாரிகள் முதலியோர் கலந்து கொள்ளும் வைபவங்களில்கூட இளைஞர்கள் மது அருந்தவும் போதைப் பொருள் நுகரவும் வாய்ப்புக் கிடைப்பதை அறிய நேரிடும் போது பெற்றார் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடையக்கூடும். எனவே, நாம் பிள்ளைகளைப் பாதுகாப்பான கைகளில் ஒப்படைத்திருக்கிறோம் என்ற போலி நம்பிக்கையில் பெற்றார் தம் பொறுப்புக்களைக் கைவிட்டு விடக்கூடாது. வெறும் நம்பிக்கை மட்டும் போதாது; அது திருத்தமாகச் சரி பார்க்கப்பட வேண்டும்.

பெற்றார், தாம் வீட்டில் இல்லாத வேளைகளில் குழந்தைகளைப் பராமரிக்க வருவோர் பற்றி அவதானமாக இருப்பது அவசியம். அவர்கள், குழந்தைகளுக்கு உறக்க மாத்திரைகளைக் கொடுத்துத் தூங்கச் செய்துவிட்டு நிம்மதியாக நேரத்தைக் கழிக்கக்கூடும். பொதுவாக, குழந்தைப் பராமரிப்புக்கு மிகச் சிறந்தவர்கள் மூத்த பெற்றோர்களே. உண்மையான அன்பும் தேவையான அனுபவமும் அவர்களிடம்தான் இருக்கும்.

புகைப் பழக்கம் அல்லது குடிப் பழக்கம் உள்ள பெற்றோரால் தம் பிள்ளையைக் காப்பாற்ற முடியுமா?

எனது பெற்றார் இருவரும் புகைக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர். எனினும், நான் புகைக்கவில்லை. ஏனெனில், எனது தந்தை அடிக்கடி கூறுவார்: "மகனே! நான் இந்தத் தீய பழக்கத்துக்குப் பலியாகி விட்டேன். அதைக் கைவிட்டுவிட்டால் நல்லது என நான் ஆசைப்படுகிறேன். ஆனால், அப்படிச் செய்வதற்கு என்னிடம் மனத்திடம் இல்லை. நான் பெரிய தவறு செய்து விட்டேன். இது எனது உடல் நலத்தை அழித்துக் கொண்டிருக்கிறது."

அவர் புகையிழுக்கும் உபகரணத்தின் குழாயை நான் சுத்தம் செய்து கொடுப்பேன். அதில் தார் போன்ற கருப்புப் பசை நிறையப் படிந்திருக்கும். ''மகனே! இந்த அசிங்கமான பொருளெல்லாம் இப்போது என் நெஞ்சை நிரப்பிக் கொண்டிருக்கிறது'' என்று அவர் சொல்வார்.

இவ்வாறு, பெற்றார் தவறு செய்கிறார்கள் எனின், அதனை ஒப்புக்கொள்வதோடு அத்தவறின் தீய விளைவுகளைத் தம் பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். அப்படிச் செய்தால் பிள்ளைகள் படிப்பினை பெறுவதோடு தாம் அத்தவறைச் செய்யாமல் தவிர்த்துக் கொள்வார்கள். இந்தக் கோட்பாட்டை புகைத்தல், நெடுநேரம் வரை இரவில் கண் விழித்திருத்தல், பகல் வேளை வரை நித்திரை கொள்ளல், அளவு கடந்து உண்ணுதல், நகம் கொரித்தல், உரத்த தொனியில் பேசுதல், அளவு கடந்து பேசுதல், அளவுக்கு மீறி நித்திரை கொள்ளல் போன்ற எந்தத் தீய பழக்கம் தொடர்பாகவும் பயன்படுத்தலாம். எனினும், தம் தவறான பழக்கங்களைப் பற்றி இவ்வாறு விளக்குவதற்குப் பிள்ளையின் வயதும் குறித்த சந்தர்ப்பமும் பொருத்தமா என்பதைப் பெற்றார் கவனித்துக் கொள்ள வேண்டும். பெற்றார் மீதுள்ள பிள்ளையின் நம்பிக்கையும் மரியாதையும் கெட்டுப் போகாமல் தவிர்ப்பதற்கு இது அவசியம்.

நீங்கள் சிறந்த முன்மாதிரிகளாக இருப்பதன் மூலம் உங்கள் பிள்ளைகளுடன் ஆரோக்கியமான தொடர்பொன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள். பெற்றார் புகைப்பவர்களாகவோ மது அருந்துபவர்களாகவோ போதைப்பொருள் பயன்படுத்துபவர்களாகவோ இருப்பின் அவர்கள் தம் பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? தம் பிள்ளைகளுக்குத் தாமே முன்மாதிரியாக இருப்பதை விட வேறு சிறந்த வழியில்லை. எனினும், எவரேனும் பெற்றார் இத்தீய பழக்கங்களுக்கு அடிமையாகி அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத நிலையிலிருந்தால் குறைந்தபட்சம் அவர்கள் தமது தவறை ஒப்புக் கொள்ளவாவது வேண்டும். அத்தோடு, அவற்றின் தீமைகளைப் பிள்ளைகளுக்கு விளக்கி அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். குடிப் பழக்கமும் போதைப் பொருட் பழக்கமும் எவ்வாறு நாசம் விளைவிக்கின்றது என்பதைப் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். மாறாக, பொய் கூறி நயவஞ்சகத்தனமாக நடந்து கொள்வது நிலைமையை மேலும் மோசமாக்கும். பொய் கூறுதலும் நயவஞ்சகத் தனமும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையே என்று பிள்ளைகள் கருதத் தொடங்கலாம்.

பின்பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்: தவிர்ப்பு வழி என்ற வகையில் சமயம்

ஒரு பிள்ளை போதைப் பொருட் பழக்கத்துக்குப் பழியானால் அதற்குரிய சிகிச்சை நிலையமொன்றில் சிகிச்சை பெறுவதே முதற்படியாக அமையும். அடுத்த முக்கிய படி, சிகிச்சை முடிந்த பின் சரியான பராமரிப்பை வழங்குவதே. பின்பராமரிப்பு ஒழுங்காக நடைபெறாவிட்டால் பெற்றாரும் பாதிக்கப்பட்டோரும் சிகிச்சை நிலையத்தினரும் மேற்கொண்ட அயராத முயற்சி பயனற்றுப் போகக்கூடும். இங்கு பின்பராமரிப்பு என்பது சிகிச்சை நிலையத்தில் அடைந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகும்.

பின்பராமரிப்புக் காலம் பெற்றாரைப் பொறுத்தமட்டில் சிரமத்திற்குரியது. சிகிச்சை நிலையத்தில் வழங்கப்பட்ட சிகிச்சைகளினால் தம் பிள்ளை மிக நல்ல நிலைக்குத் திரும்பி இருப்பதைக் கண்டு பெற்றார் வியப்படையக்கூடும். எனினும், அச்சிகிச்சையைத் தொடர்ந்து மேற்கொள்வதே முக்கியமானது. எந்த நேரத்திலும் தம் பிள்ளை தவறாக நடந்து, கெட்ட நண்பர்களின் சகவாசத்தில் மீண்டும் விழுந்து, போதைப் பொருட்களைத் திரும்பவும் பயன்படுத்தத் தொடங்கலாம் என்பதைப் பெற்றார் மறந்து விடக்கூடாது. பெற்றாருடன் ஏற்படும் ஒரு சிறிய பிணக்கு அல்லது ஒரு தீய நண்பனிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்பு நிலைமையைத் தலைகீழாக்கி விடலாம். எனவே, இறுதி வெற்றியானது பின்பராமரிப்பிலேயே தங்கியிருக்கிறது. சிகிச்சை நிலையங்களின் புனருத்தாரன நிகழ்ச்சித் திட்டத்தில் ஆன்மீகப் பயிற்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் சமய நிகழ்ச்சிகள் நல்ல பயன் தருகின்றன என்பதை ஆலோசகர்கள் அறிந்துள்ளனர்.

பிள்ளையைத் தொடர்ந்து சமய வழிபாடுகளிலும் நிகழ்ச்சிகளிலும் ஈடுபடச் செய்து ஆன்மீக உணர்வை விருத்தி செய்வதன் மூலம் நல்ல பயன் காணலாம். பிள்ளையிடம் தற்கொலை நாட்டம் , கட்டுக்கடங்காத நடத்தை, ஏனையோருக்குத் தீங்கு விளைவிக்கும் போக்கு என்பன காணப்பட்டால் பெற்றார் உடனடியாக அவை பற்றிக் கவனம் செலுத்துவது அவசியம்.. இவ்வாறான சந்தர்ப்பங்களில் போதைப் பொருளின் தீய விளைவை உடலிலிருந்து நீக்குவதற்கு இரசாயன மருந்துகள் செலுத்தப்பட வேண்டி ஏற்படலாம். இந்நிலையில் பிள்ளையை புனருத்தாரன நிலையமொன்றுக்கோ சீர்திருத்தப் பள்ளிக் கூடமொன்றுக்கோ அனுப்பிவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகலாம். இவ்வாறு பிள்ளை பெற்றாரிலிருந்து நீக்கப்பட்டு பொது நிறுவனமொன்றில் சேர்க்கப்பட்டால் பெற்றார் வாரந்தோறும் சென்று தம் பிள்ளையைச் சந்திப்பதற்கும் அதற்குத் தேவையான சமயப் போதனைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிள்ளைக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள தொடர்பை வலுப்படுத்துவது மிக முக்கியமானது.

சட்டத்தை மீறுதல்

போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் பிள்ளை இறுதியில் சட்டத்தை மீறி இளங்குற்றவாளியாக மாறுகிறான். சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய நடத்தையைக் காட்டும் இளவயதினரே இளம் குற்றவாளிகள் அல்லது பால்ய குற்றவாளிகள் எனப் படுவர். தம் பிள்ளை எப்போதாவது சிறைக்குச் செல்வான் எனப் பெரும்பாலான பெற்றார் நினைப்பதில்லை. எனினும், இது நடக்கக்கூடும். பிள்ளைகளின் உள்ளத்தில் சட்டத்தை மதிக்கும் இயல்பை வளர்ப்பதன் மூலம் இவ்வாறான நிலைமையைத் தவிர்க்கலாம். பெற்றோரே போக்குவரத்து விதிகளை மீறினால், வரி செலுத்தாமல் ஏமாற்றினால், சுங்க அதிகாரிகளிடம் பொய் கூறினால், தாம் தொழில் புரியும் இடத்திலிருந்து பொருட்களைத் திருடிக்கொண்டு வந்தால், தம் பிள்ளை பள்ளிக்கூடம் செல்லாமைக்கு பொய்க் காரணம் கூறிக் கடிதம் எழுதிக் கொடுத்தால் அவர்களது பிள்ளைகள் எங்கே சட்டத்தைப் பொருட்படுத்தப் போகிறார்கள்? பொலிஸாரைத் தம் எதிரிகளாகப் பெற்றோர் கருதினால் பிள்ளைகளும் காவல் துறையினரை மதிக்க மாட்டார்கள்.

பிற நாடுகளில் குடியேறியவர்களிடமும் தம் நாட்டிலே சிறுபான்மையாக வாழ்பவர்களிடமும் ஒரு தப்பெண்ணம் காணப்படுகிறது. அந்த நாடுகளின் சமயச் சார்பற்றவர்களால் அல்லது பிற மதத்தினரால் கொண்டுவரப்படும் சட்டங்களைத் தாம் மதிக்க வேண்டிய அவசியமில்லை என இவர்கள் நினைக்கின்றனர். இது பற்றி ஷெய்க் தாஹா ஜாபிர் அல் அல்வானி பின்வருமாறு கூறுகின்றார். ஒருவர் பிற நாடொன்றுக்குள் நுழையும் போது அந்நாட்டின் அரசியல் திட்டத்திற்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அவ்வாறு செய்தபின் ஒரு முஸ்லிம் தாம் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் கௌரவிக்க வேண்டும். அல்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்களும் இதனைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளன. ஒரு நாட்டின் சட்டங்களைப் பின்பற்ற ஒருவர் விரும்பவில்லையானால் அவர் அந்நாட்டுக்குள் நுழைவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது அச்சட்டங்களைப் பின்பற்றத் தாம் விரும்பவில்லை என்பதைப் பிரகடனப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் நாட்டினுள் நுழைய அவருக்கு அனுமதி மறுக்கப்படும்; ஏற்கனவே நுழைந்திருந்தால் அவர் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்.

ஒரு நாட்டின் பிரஜைகள் அங்குள்ள சட்டமொன்றை விரும்பாவிடில் அந்நாட்டின் அரசியல் திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஜனநாயக செயன்முறையின்படி சட்டரீதியாக அதனை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும். எவரும் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு தான் விரும்பியபடி அதனைப் பிரயோகிப்பதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இது குழப்ப நிலைகளுக்கும் அராஜகத்துக்கும் அநியாயத்துக்கும் வழி வகுக்கும். அதேவேளை, சிவில் சட்டமொன்று ஆணையிடுவதற்காக, ஒரு முஸ்லிம் அநியாயமொன்றைச் செய்யவும் முடியாது. இஸ்லாத்தில் விலக்கப்பட்டுள்ள (ஹராமான) செயலொன்றைச் செய்யுமாறு ஒரு சட்டம் கோருமாயின் அச்சட்டத்தை முஸ்லிம்கள் பின்பற்றக் கூடாது. ஒரு சட்டம் அநியாயமானதாகத் தென்பட்டால் அதனை மாற்றுவதற்கு அமைதியான கீழ்ப்படியாமையே சிறந்த வழியாகும். இதனை தோரோ, காந்தி, மார்டின் லூதர் கிங் ஆகியோர்

நடைமுறையில் செய்து காட்டினர். அவர்களுக்கெல்லாம் நெடுங்காலத்துக்கு முன்பே நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் சிலை வணங்கிகளான குறைஷி ஆட்சியாளர்களின் ஆணையை மீறித் தமது மக்களை அமைதியாகவும் வன்முறையின்றியும் மக்கா யாத்திரைக்காக அழைத்துச் சென்றார்கள். இதன் விளைவாகவே ஹுதைபியா உடன்படிக்கை ஏற்பட்டது.

உங்கள் உடல் ஒரு நம்பிக்கைச் சொத்தே

அசையும் சொத்துக்களும் அசையாச் சொத்துக்களும் ஈடு செய்யப்பட முடியாத சொத்துக்களும் எம்மிடம் இருக்கின்றன. எமது உடல் ஈடு செய்யப்பட முடியாதது. வாகனங்களையும் வீடுகளையும் தளபாடங்களையும் எத்தனை வேண்டுமானாலும் நாம் கொள்வனவு செய்யலாம். ஆனால், எமக்கு ஒரேயொரு உடல் தான் இருக்கிறது. அது இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட ஒரு நம்பிக்கைச் சொத்து. எனவே, இறைவன் தந்துள்ள அறிவுறுத்தல்களின்படி அதனை நன்கு பராமரிப்பது எமது பொறுப்பாகும். இந்தப் பெறுமதியான சொத்துக்கு அவனிடம் பொறுப்புக்கூற வேண்டிய நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகவே நாம் இருக்கிறோம். இதன்படி, சுத்தம், போசணை, போதிய உடற்பயிற்சி, போதிய நித்திரை என்பவற்றைப் பெற்றுக் கொள்வதோடு போதை தருபவற்றையும் திருமணத்துக்குப் புறம்பான பாலுறவையும் தவிர்த்துக் கொள்வதும் அவசியமாகும்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 32: மருத்துவப் பரிசோதனைக்கான கால அட்டவணை

உங்கள் குடும்பத்தினருடன் ஒன்றாக அமர்ந்து ஒழுங்கு முறையான மருத்துவப் பரிசோதனைகளுக்குரிய கால அட்டவணையொன்றைத் தயாரியுங்கள். இதில் பற்களின் பராமரிப்பும் உள்ளடங்க வேண்டும். இவ்விடயம் தொடர்பாக நூலகர், ஆசிரியர், தாதி, மருத்துவர் போன்றோரின் ஆலோசனைகளைப் பெற்றுகொள்ளுங்கள். இறுதியாகத் தயாரிக்கப்பட்ட கால அட்டவணையின் பிரதிகள் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

தொழிற்பாடு 33: குடும்பத்தினரின் உடற்தகுதியைப் பேணுவதற்குரிய திட்டம்

உங்கள் குடும்பத்தில் இடம்பெறுகின்ற உடற்பயிற்சிகளின் நிலைமைகள் பற்றி உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள். அடுத்து, உடற் தொழிற்பாடுகள் தொடர்பான திட்டமொன்றைக் குடும்பத்தினரின் இணக்கத்தோடு உருவாக்குங்கள். செய்யப்பட வேண்டிய மிதமான உடற்பயிற்சிகளின் அட்டவணையொன்றையும் தயாரித்துக் கொள்ளுங்கள். உடற்பயிற்சியின் அளவைக் காலப்போக்கில் படிப்படியாக அதிகரிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அத்தோடு, சாத்தியமான வேளைகளில் வாகனத்தைப்

பயன்படுத்துவதற்குப் பதிலாக நடந்து செல்லவும், துணிகளைச் சலவைப் பொறியில் துவைப்பதற்குப் பதிலாக கைகளால் துவைக்கவும் முயற்சி செய்யுங்கள். உடற்பயிற்சி உபகரணங்களை வாங்கவும் விளையாட்டுக் கழகங்களில் அங்கத்துவம் பெறவும் ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ளவும் ஏற்ற வகையில் ஒரு வரவு செலவுத் திட்டத்தையும் அமைத்துக் கொள்ளுங்கள்.

தொழிற்பாடு 34: அர்த்தமுள்ள முறையில் பேசித் தொடர்பு கொள்ளுங்கள்

பெற்றார் தமக்குப் பழக்கமுள்ள பிள்ளைகளைச் சந்திக்கும் போது வெறுமனே 'Hello! எப்படி?' என்று கூறுவதற்குப் பதிலாக அன்போடும் கரிசனையோடும் அவர்களை விழித்துப் பேச வேண்டும். இதற்காகப் பின்வருவன போன்றவை பயன்படுத்தப்படலாம்.

- இன்று நீங்கள் போசணையுள்ள உணவு சாப்பிட்டீர்களா?
- இன்று உடற்பயிற்சி செய்தீர்களா?
- நன்றாக நித்திரை கொண்டீர்களா?
- உங்கள் பெற்றோரையும் நண்பர்களையும் பார்த்துப் புன்னகைத்தீர்களா?
- நீங்கள் இன்று ஏதாவது வாசித்தீர்களா?
- உங்களது பெற்றோரைக் கட்டியணைத்தீர்களா? முத்தமிட்டீர்களா? அவர்களுடன் கைகுலுக்கினீர்களா?
- இன்று யாருக்காவது உதவி செய்தீர்களா?
- ஏதேனும் தரும காரியம் செய்தீர்களா?
- தொழுதீர்களா?

இங்கு தரப்பட்டுள்ள அனைத்தையும் கூற வேண்டியதில்லை. தருணத்திற்கேற்றவாறு பொருத்தமானவற்றைப் பயன்படுத்தலாம். பிள்ளையின் தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகளுக்கு ஏற்பப் பொருத்தமான விடயங்களைச் சேர்த்துக்கொள்ளவும் முடியும்.

தொழிற்பாடு 35: நித்திரைப் பழக்க வழக்கங்கள்

நித்திரை கொள்ளுதல், சாப்பிடுதல் என்பன தொடர்பாக ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள். இப்ன் மாஜாஹ் பின்வருமாறு அறிவித்தார்: பள்ளி வாசலில் குப்புறச் சாய்ந்து நித்திரை செய்து கொண்டிருந்த ஒருவரை நபி (ஸல்) அவர்கள் கடந்து செல்ல நேரிட்டது. அப்போது அன்னார் அம்மனிதரைத் தம் பாதத்தால் இடித்து "இப்படித் தூங்காதீர்; ஏனெனில், இப்படித் தூங்குவதை அல்லாஹ்வும் அவனது தூதரும் வெறுக்கின்றனர்" எனக் கூறினர். அதே போன்று குப்புறச் சாய்ந்து கொண்டு உண்ணுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.

குப்புறத் தூங்குவது முதுகு மற்றும் உள்ளுறுப்புக்களின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல. வலது புறமாகச் சாய்ந்து நித்திரை கொள்வதே மிக நன்மையானது. இடது பக்கம் சாய்ந்து நித்திரை கொள்ளும் போது நுரையீரல்கள், இரைப்பை, ஈரல் என்பவற்றால் இதயம் அமுக்கப்பட்டு நெருக்க நிலை உருவாகும். நித்திரை விடயத்தில் சூரிய ஒளியின் போக்கைப் பின்பற்றுவதே நல்லது; இஷாத் தொழுகையை அடுத்து நித்திரைக்குச் சென்று ஃபஜ்ர் தொழுகைக்காக சூரிய உதயத்துக்கு முன் விழித்தெழ வேண்டும்.

ளுஹர் தொழுகையை அடுத்து சிறிது நேரம் தூங்கி எழும்புவது நபி (ஸல்) அவர்களின் பழக்கமாக இருந்தது. குறுகிய மத்தியான நித்திரை உடல், உளத் தொழிற்பாடுகளை ஊக்குவிக்க உதவுவதாக வைத்தியர்கள் கண்டறிந்துள்ளனர். இவ்வாறான குறு நித்திரை ஒருவருடைய உற்பத்தித் திறனையும் விழிப்புணர்வையும் அதிகரிக்கச் செய்து அவரது மன நிலையை மேம்படுத்துவதோடு விபத்துக்களையும் குறைக்கின்றது.

தொழிற்பாடு 36: பொருத்தமான வீட்டுச் சூழலொன்றை உருவாக்குதல்

பெற்றார் தம் பிள்ளைகளுடன் ஒன்றாக அமர்ந்து வீட்டில் இடம்பெறக்கூடிய பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி எளிய திட்டமொன்றை அனைவரது இணக்கத்தோடும் உருவாக்க வேண்டும்.

அன்பு, மகிழ்ச்சி, சிரிப்பு, சுதந்திரமான தொடர்பாடல், பரஸ்பர விசுவாசம், ஊக்குவித்தல், சாதனைகளை அங்கீகரித்தல், பிள்ளைகளின் மீது கரிசனை காட்டுதல், கூட்டாகச் சாப்பிடுதல், தொழுதல், விளையாடுதல், பிள்ளைகளை கௌரவித்தல், முத்தமிடுதல், அரவணைத்தல் மற்றும் அவர்களோடு புன்னகைத்தல்.

இந்த நடைமுறைகளுக்குப் பெற்றோர் பழக்கப்பட்டிருக்கா விட்டாலும் இப்போதாவது அவற்றை மனத்தூய்மையோடு செய்ய ஆரம்பிப்பது நல்லது.

தொழிற்பாடு 37: போதைப் பொருட் பாவனையின் அறிகுறிகள் பற்றிக் கலந்துரையாடல்

பெற்றார் ஒன்றாக அமர்ந்து, தம் பிள்ளைகளில் ஒருவரிடம் போதைப் பொருட் பாவனைக்குரிய அறிகுறிகளைக் கண்டறிந்தவுடன் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள். பெற்றார் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுள் பின்வருவனவும் அடங்க வேண்டும்: துறைசார் நிபுணர்களிடம் ஆலோசனை பெறுதல், பெற்றார் அறிவு பெறுதல், விவேகமான நண்பர்களுடனும் உறவினர்களுடனும் உறவாடுதல்.

பதற்றமடைதலும் மனக் கவலை கொள்ளலும். பிள்ளையை அடிப்பதும் பயமுறுத்தி அடிபணிய வைப்பதும் பயனளிக்கா. இவை மனவெழுச்சி ரீதியாக உங்களைப் பலவீனப்படுத்துவதோடு நிலைமையை மேலும் மோசமாக்கும்.

தொழிற்பாடு 38: ஒரு பொலிஸ் அதிகாரியாகப் பாத்திரமேற்று நடித்தல்

பெற்றார் தம் பதின்மவயதுப் பிள்ளைகளிடம், தம்மைப் பொலிஸ் அதிகாரியாக, மஜிஸ்ட்ரேட் நீதவானாக அல்லது சமூகப் பணியாளராகக் கற்பனை செய்து பார்க்குமாறு ஆலோசனை கூறலாம். இந்த ஒவ்வொருவரது பொறுப்புக்களும் யாவை? அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் எப்படியான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன? அவர்களுடைய வேலை சுவாரஷ்யமானதா அல்லது மகிழ்ச்சியற்றதா? குற்றவாளிகள் மீது கண் வைத்துக் கொண்டும் ஏனைய வழிகளிலும் சமூகத்தைப் பாதுகாக்கும் பராமரிப்பாளர்களாகப் பிள்ளைகளால் தம்மைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

நன்னடத்தை அதிகாரிகளும் ஆசிரியர்களும் தீயணைப்புப் படையினரும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் சாதாரண மனிதப் பிறவிகளே என்பதையும் அவர்களுக்கும் உணர்வுகள், வீடு, குடும்பம், எல்லோருக்கும் பொதுவான அன்றாடப் பிரச்சினைகள் முதலியன உண்டு என்பதையும் உணர்ந்து கொள்வதற்கு இவ்வாறான பாத்திரமேற்று நடித்தல் உதவுகின்றது. இவ்விடயம் தொடர்பாகப் பதின்மவயதினருக்கு மேலும் விபரங்கள் தேவையாயின் உண்மையான பொலிஸ் அதிகாரிகளை அல்லது சமூக சேவகர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுடைய தொழில் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

நீதிமன்றமொன்றுக்கு விஜயம் செய்வது மறக்க முடியாத அனுபவத்தைத் தரும். அவ்விடத்தின் தோற்றம் எத்தகையது? அங்கே எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? போன்றவற்றை அறிந்து கொள்ளக் கிடைப்பது நல்லதொரு கல்வியாகும். பிள்ளைகளின் கண்களைத் திறக்கச் செய்யக்கூடிய இவ்வாறான விஜயமொன்றை ஏற்பாடு செய்வது உகந்ததே.

அத்தியாயம் 10

தாய்ப்பாலூட்டல்

- அறிமுகம் 234
- தாய்ப்பாலூட்டல் பற்றி அல்குர்ஆன் 236
- தாய்ப்பாலூட்டலின் மருத்துவ மற்றும் உளவியல்ரீதியான அனுகூலங்கள் 238
- வியாபாரமும் தாய்ப்பாலூட்டலும் 240
- முஸ்லிம் உலகும் தாய்ப்பாலூட்டலும் 241
- தாய்ப்பாலூட்டல் பற்றி அலி இப்ன் அபீ தாலிப் (றழி) மற்றும் இப்ன் ஹஸ்ம் ஆகியோரின் அபிப்பிராயங்கள் 242
- தாய்ப்பால் ஊட்டலுக்குரிய காலம் 243
- பாலூட்டும் தாய்மாருக்கான சில உதவிக் குறிப்புக்கள் 244
- தாயின் அன்றாட உணவுத் தேவைகள் 245
- உடல் வலிமை மிக்க சமுதாயம் 246
- தொழிற்பாடு- 39 249

அறிமுகம்

உடல் ரீதியாகவும் மனவெழுச்சி ரீதியாகவும் வலிமையும் ஆரோக்கியமும் மிக்க பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் தாய்ப்பாலூட்டல் முக்கிய படியாக விளங்குகிறது. அல்குர்ஆனும் இஸ்லாமும் தாய்ப்பாலூட்டலையும் அதன் காரணமாக ஏற்படும் பால்குடி உறவையும் வலியுறுத்துகின்றது. (ஒரே பெண்ணினால் தாய்ப்பாலூட்டப்பட்ட பிள்ளைகள் அனைவரும் பால்குடி சகோதரர்களாவர்) உதாரணமாக, ஸலாம் என்ற 20 வயது வாலிபனுக்கு இன்னோர் ஊரில் வாழும் பாத்திமா என்ற இளம் பெண்ணைத் திருமணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில், ஸலாம் ஒரு வயதுக் குழந்தையாக இருக்கும் போது ஓர் அவசர நிலைமையில் அவனுக்குப் பாத்திமாவின் தாயார் ஓரிரண்டு நாட்கள் பாலூட்டி இருக்கிறார். இச்செயல் காரணமாக, ஸலாமும் பாத்திமாவும் பால்குடி சகோதரர்களாகின்றனர். எனவே, அவர்களுக்கிடையில் திருமணம் நடக்க முடியாது. மேலும், பாத்திமாவின் சகோதரிகள், மாமிமார், சிற்றன்னைமார், பெரியன்னைமார் முதலியோரும் ஸலாமின் சகோதரிகளாக, மாமிகளாக, சிற்றன்னைகளாக, பெரியன்னைகளாக மாறி விடுகின்றனர். எனவே, அவர்களும் திருமணம் செய்யத் தடுக்கப்பட்டவர்களாக (மஹ்ரம்களாக) இருப்பர். அவர்கள் ஸலாமின் முன்னிலையில் முகத்திரை (ஹிஜாப்) அணிய வேண்டியதுமில்லை. இந்த உறவின் சிறப்பினையும் முக்கியத்துவத்தையும் நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். ஆனால், ஒரு சில அவுன்ஸ் பால் எப்படி ஓர் அந்நியரைச் சகோதரனாகவோ சகோதரியாகவோ ஆக்கி விடுகின்றது என்பதைப் புரிந்து கொள்வது சற்றுச் சிரமமானதே. தாய்ப்பாலின் முக்கியத்துவத்தையே இது காட்டுகின்றது.

குருதி மாற்றுவதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். ஒருவருடைய முழுக் குருதியும் இன்னொருவருடைய குருதியினால் மாற்றீடு செய்தாலும் - அவ்வாறு எத்தனை தடவை செய்தாலும் - அவர்களிருவருக்குமிடையில் இரத்த உறவொன்று ஏற்படுவதில்லை. அவசியத் தேவைக்காகவே குருதி மாற்றீடு செய்யப்படுகிறது. அதே போன்று ஒருவருடைய உடல் நலத்தைப் பேணுவதற்காகவே உறுப்பு மாற்றுச் சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. எவ்வளவு விரிவான அளவில் இவை செய்யப்பட்டாலும் இவற்றின் காரணமாக உறவுப் பிணைப்பொன்று ஏற்படுவதில்லை. இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்களின் கருத்துப்படி தாய்ப்பால் வங்கிமுறை தடை செய்யப்பட்டதாகும். உண்மையில் பால்குடி உறவு முறை உயிரியல் ரீதியான குடும்ப உறவுகளுக்குச் சமமானதாகவே மதிக்கப்படுகிறது. எனினும், பால்குடி சகோதரர்கள் விடயத்தில் சொத்துரிமைச் சட்டம் பிரயோகிக்கப்பட முடியாது.

உங்கள் தாய்மாரும் உங்கள் புதல்வியரும் உங்கள் சகோதரிகளும் உங்கள் தந்தையின் சகோதரிகளும் உங்கள் தாயின் சகோதரிகளும் (உங்கள்) சகோதரனுடைய புதல்விகளும் (உங்கள்) சகோதரியுடைய புதல்விகளும் உங்களுக்குப் பாலூட்டிய உங்கள் (செவிலித்) தாய்மார்களும் உங்கள் பால்குடிச் சகோதரிகளும் உங்கள் மனைவியரின் தாய்மார்களும் உங்கள் மீது (அவர்களைத் திருமணம் செய்வது) விலக்கப்பட்டுள்ளது; இன்னும் நீங்கள் உடலுறவு கொண்டு விட்டீர்களே- அத்தகைய உங்கள் மனைவியரிலிருந்து (முந்திய கணவனிடத்துப் பிறந்து,) உங்கள் மடிகளில் வளர்ந்து வரும் பெண் மக்களையும் (நீங்கள் திருமணம் செய்வது விலக்கப்பட்டிருக்கிறது). ஆனால், (நீங்கள் மணம் செய்து) அவர்களுடன் உடலுறவு கொள்ளவில்லையானால் (அவளை விலக்கி விட்டு அவளுடைய மகளை மணம் செய்து கொள்வதில்) உங்கள் மீது குற்றமில்லை. இன்னும், உங்களுடைய முதுகந்தண்டுகளிலிருந்து உண்டான உங்கள் புதல்வர்களின் மனைவியர்களையும் (நீங்கள் மணம் செய்து கொள்வது விலக்கப்பட்டிருக்கிறது.) இரு சகோதரிகளை (ஒரே காலத்தில் மனைவியராக) ஒன்று சேர்த்துக் கொள்வதும் (விலக்கப்பட்டிருக்கிறது.) இதற்கு முன்னர் நடந்து விட்டவைகளைத் தவிர, (அவற்றை) நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4: 23)

- இதற்குரிய விளக்கமாகப் பின்வருவன முன்வைக்கப்படுகின்றன: குழந்தைப் பருவத்தில் கொடுக்கப்படும் தாய்ப்பாலிலிருந்தே குழந்தையின் எலும்புகளும் தசைகளும் உருவாக்கப்படுகின்றன. எனவே, ஒரே பெண்ணிடம் பால் குடிக்கும் பிள்ளைகளிடம் ஒத்த இயல்புகள் காணப்படுகின்றன. இன்னொரு வகையில் சொல்வதானால் இரண்டு வயதுக்கு முன்னர் தாய்ப்பால் குடிக்கும் போது தாயின் பகுதிகள் குழந்தையின் பகுதிகளாக மாறுகின்றன.



உமர் இப்ன் அல் கத்தாப் (றழி), உமர் இப்ன் அப்துல் அஸீஸ் (றழி) ஆகியோரின் கருத்துப்படி தாய்ப்பாலின் காரணமாகச் சில வழிகளில் குழந்தை தாயை ஒத்திருக்கின்றது. இதனடிப்படையில் பாலூட்டல் பற்றிய பின்வரும் வழிகாட்டல்கள் நிலவுகின்றன.

- பாலூட்டல் குழந்தையின் சிறப்பியல்புகளை மாற்றியமைக்கும். எடுத்துக்காட்டாக, உளச் சமநிலை குன்றிய ஒருவர் ஒரு குழந்தைக்குப் பாலூட்டுவதைச் சில சட்ட அறிஞர்கள் தடுத்துள்ளார்கள். ஏனெனில், அவ்வியல்பைக் குழந்தையும் பெற்றுக்கொள்ளக்கூடும்.
- புகைக்கின்ற, பன்றி மாமிசம் உண்கின்ற, மது அருந்து கின்ற, போதைப் பொருள் பயன்படுத்துகின்ற ஒருவரைக் குழந்தைக்குப் பாலூட்டும் செவிலித் தாயாக அமர்த்தக் கூடாது.
- விபசாரிகள் போன்ற பாவம் புரிபவர்களைக் குழந்தைகளுக்குப் பாலூட்ட அமர்த்தக் கூடாது.

ஒரு பிள்ளையின் ஆளுமையை உருவாக்கும் காரணி தாய்ப்பால் மாத்திரமே என்பது இதன் கருத்தல்ல; பெற்றாரின் பரம்பரை அலகுகள் (மரபணுக்கள்), சுற்றாடல் என்பனவும் ஆளுமையைக் கட்டியெழுப்பும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன.

பதினேழு வயதில் ஒரு பிள்ளையிடம் காணப்படும் விவேகத்தில் 50% ஆனது பிள்ளையின் வாழ்க்கையின் முதல் நான்கு வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும் என்பதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. அவ்விவேகத்தில் 30%, 4 வயதுக்கும் 8 வயதுக்கும் இடையிலும் மீதி 20% உம் 8 வயதுக்கும் 17 வயதுக்கும் இடையிலும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும், இள வயதிலும் நடுத்தர வயதிலும் ஆட்களிடம் காணப்படும்

நடத்தைக் கோலங்கள் பிள்ளைப் பருவத்தின் முதல் 5 வருடங்களிலும் இடம்பெற்ற நிகழ்வுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

குழந்தையின் முதல் இரு வருடங்களிலும் தாய்ப்பாலூட்டல் பற்றியும் தாயின் அன்பான முழு நேரப் பராமரிப்பு பற்றியும் அல் குர்ஆன் கவனஞ்செலுத்துகின்றது. குழந்தைக்கு அன்பும் இரக்கமும் கிடைக்காமல் போனால் அதன் உள வளர்ச்சி குன்றிப் போகலாம். குழந்தை பிறந்தது முதல் அதன் உள்ளம் தொழிற்படுவதாகவும் ஆரம்பகால அனுபவங்களே அதன் உள்ளத்தை வடிவமைக்கின்றது என்றும் நிபுணர்கள் அழுத்திக் கூறியுள்ளனர். தாய்ப்பாலூட்டப்படும் முதலிரண்டு வருடங்களிலும் குழந்தையின் மூளை விருத்தி இடம்பெறுகிறது.

பால்குடி உறவு செல்லுபடியாவதற்கு ஐந்து நிபந்தனைகள் திருப்தி செய்யப்பட வேண்டும் என எகிப்திய நீதிமன்றங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

- ஆகக் குறைந்தது ஐந்து வேளைகளாவது பாலூட்டல் நிகழ்ந்திருக்க வேண்டும்.
- மேற்சொன்ன ஒவ்வொரு வேளையிலும் குழந்தை முற்றாகத் திருப்தியடைந்திருக்க வேண்டும்.
- ஒவ்வொரு பாலூட்டலும் தனித்தனியான உணவு வேளைகளில் இடம்பெற்றிருக்க வேண்டும்; துரிதமாக அடுத்தடுத்து நிகழ்ந்திருக்கக் கூடாது.
- குறித்த ஐந்து தடவைப் பாலூட்டலும் உண்மையாக நிகழ்ந்தன என நம்பத்தகுந்த சாட்சிகளால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- ஐந்து பாலூட்டல்களும் குழந்தைக்கு 2 வயது பூர்த்தியாக முன்னர் நிறைவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.

தாய்ப்பாலூட்டல் பற்றி அல்குர்ஆன்

தாய்ப்பாலூட்டல் பற்றி அல்குர்ஆன் நான்கு வெவ்வேறு அத்தியாயங்களில் குறிப்பிடுகின்றது. தம் குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் பாலூட்டுமாறு அது தாய்மாரை ஊக்குவிக்கின்றது. பாலூட்டும் தாய்மார் தமக்குரிய வாழ்வாதாரத்தை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதனால் தன் குழந்தையை முழு நேரமும் பராமரிப்பதற்கு அவளுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அவள் விவாக விலக்குப் பெற்றிருந்தால் அவளுக்கு வாழ்வாதாரம் வழங்குவது அவளது தந்தையின் பொறுப்பாகிறது. தந்தை இறந்து விட்டால் அவரது வாரிசுகள் அப்பொறுப்பினை ஏற்க வேண்டும்.

தாய்மார் உட்பட எல்லா முஸ்லிம் பெண்களுக்கும் சமய வழிபாட்டுச் செயல்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. தினமும் ஐவேளை கூட்டுத் தொழுகையில் அவர்கள் பங்கு கொள்ள வேண்டியதுமில்லை; வாரந்தோறும் வெள்ளிக் கிழமையில் இடம்பெறும் ஜும்ஆத் தொழுகையிலும் அவர்கள் கலந்து கொள்ள வேண்டியதில்லை. இதனால் குழந்தைகளைப் பராமரிக்கக் கூடிய வகையில் அவர்களுடைய நேரத்தை ஒழுங்கு படுத்திக்கொள்ள முடிகிறது. அத்தோடு, கூலிக்குப் பிள்ளை பராமரிப்போரிடம் ஒப்படைக்காமல் குழந்தையைப் பராமரிக்கும் முக்கிய பொறுப்பைத் தாமே நேரடியாகச் செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. முதலிரண்டு வருடங்களில் குழந்தை தனது உடல் தேவைகளுக்கும் உளவியல் மற்றும் மனவெழுச்சித் தேவைகளுக்கும் தாயிலேயே முற்றாகத் தங்கியிருக்கிறது.

உணவூட்டும் பிளாஸ்டிக் போத்தல்கள் தாயின் மிருதுவான மார்பகங்களுக்கும் அவளது அன்புக்கும் ஈடாக மாட்டா. தாய்ப்பாலூட்டப்படாத குழந்தைக்கு ஏற்படக்கூடிய உடல் ரீதியான அல்லது உள ரீதியான பாதிப்பினைப் பிற்காலத்தில் சரி செய்வது கஷ்டமானதாக இருக்கும். இத்தகைய பாதிப்பு பாரதூரமானதாகவும் நிரந்தரமானதாகவும் அமையக்கூடும். தாய்ப்பாலூட்டல் பற்றி அல்குர்ஆனின் பின்வரும் வாக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.

1.) (தங்களுடைய குழந்தைகளுக்குத் தம் மனைவிகளைக் கொண்டே) பாலூட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்புகிறவருக்காக, தாய்மார் தங்களுடைய குழந்தைகளுக்கு (அவை பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டுவார்கள். இன்னும், (பாலூட்டும் இக்காலங்களில்) அவர்களுக்கு உணவும், அவர்களுக்கு உடையும் முறைப்படி (வழங்குவது) தகப்பன் மீது கடமையாகும். எந்தவொரு ஆத்மாவும் அதன் சக்திக்கு ஏற்றவாறல்லாது (செய்யும்படியாக) சிரமப்படுத்தப்பட மாட்டாது. ஒரு தாய் தன் குழந்தையின் காரணமாக, இன்னும் ஒரு தந்தை தன் குழந்தையின் காரணமாக துன்புறுத்தப்பட மாட்டார்; (குழந்தையின் தகப்பன் இறந்து விட்டால், அதனைப் பரிபாலிப்பது) இவ்வாறே வாரிசின் மீது (கடமை) இருக்கிறது. (குழந்தையின்தாய், தகப்பன்) இருவரும் சம்மதித்து, ஆலோசனை செய்து (குழந்தையின்) பால்குடியை (இரண்டு ஆண்டுகளுக்குள்) மறக்கடிக்க நாடினால் (அவ்வாறு செய்வது) அவ்விருவர் மீதும் குற்றமில்லை. நீங்கள் உங்களுடைய குழந்தைகளுக்கு (செவிலித் தாயைக் கொண்டு) பாலூட்டவும் நாடினால், நீங்கள் கொடுக்க வேண்டியதை முறைப்படி ஒப்படைத்து விட்டால் உங்கள் மீது குற்றமாகாது. நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்தும் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றைப் பார்க்கக்கூடியவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 2: 233)

2.) நாம் மனிதனுக்குத் தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது) பற்றி நல்லுபதேசமும் செய்தோம்; அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தாள். இன்னும், (அவனுக்குப் பால்குடி மறக்கடித்து) அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும். ''(ஆகவே, மனிதனே!) நீ எனக்கும் உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக; முடிவில் என்னிடமே உன் மீளுதல் இருக்கிறது''

(அல்குர்ஆன் 31: 14)

3.) மேலும், தன்னுடைய பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு நாம் உபதேசம் செய்தோம். அவனுடைய தாய் சிரமத்துடன் அவனைச் சுமந்திருந்து, சிரமத்துடன் அவனைப் பிரசவிக்கின்றாள். (அவள்) கர்ப்பத்தில் அவனைச் சுமப்பதும் அவனுக்குப் பால்குடி மறக்கடிக்கச் செய்வதும் முப்பது மாதங்களாகும். முடிவாக, இவன் வாலிபமாகி நாற்பது வயதை அடைந்ததும் ''என் இரட்சகனே! நீ என் மீதும் என் பெற்றோர் மீதும் புரிந்த உன் அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, நீ எதனைப் பொருந்திக் கொள்வாயோ அந்த நற்செயலைச் செய்யவும் (நல்லறிவை) நீ எனக்கு உதிக்கச் செய்வாயாக. எனக்காக என்னுடைய சந்ததியில் (உள்ளோரை) நீ சீர்திருத்தியும் வைப்பாயாக! நிச்சயமாக நான் தவ்பா செய்து உன்பக்கம் திரும்பி விட்டேன். நிச்சயமாக, நானோ உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த முஸ்லிம்களில் (ஒருவனாகவும்) இருக்கிறேன்'' என்று கூறுவான். (அல்குர்ஆன் 46: 15)

4.) உங்களுடைய வசதிக்குத் தக்கவாறு நீங்கள் குடியிருந்து வரும் இடத்தில் (இத்தாவிலிருக்கும் பெண்களாகிய) அவர்களைக் குடியிருக்கச் செய்யுங்கள். (அப்பெண்களிடமிருந்து ஈடாக எதையும் பெறவோ, அல்லது நிர்ப்பந்தமாக அவர்கள் வெளியேறி விடவோ உள்ள சூழ்நிலைகளை உருவாக்கி) அவர்களுக்கு நீங்கள் நெருக்கடியை உண்டாக்குவதற்காக அவர்களுக்கு நீங்கள் தொல்லை கொடுக்காதீர்கள். அவர்கள் கர்ப்பமுடையவர்களாக இருந்தால் அவர்கள் பிரசவிக்கும் வரையில் அவர்களுக்குச் செலவுக்குக் கொடுத்து வாருங்கள். (பிரசவத்தின் பின்னர்) உங்களுக்காக (குழந்தைக்கு) அவர்கள் பாலூட்டினால், அப்போது (அதற்காக) அவர்களுக்குரிய கூலியையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள். (இதைப்பற்றி

முன்னதாகவே) உங்களுக்குள் அறியப்பட்ட முறையைக் கொண்டு பேசி முடிவும் செய்து கொள்ளுங்கள். (இது விஷயத்தில் தகராறுகள் உண்டாகி) நீங்கள் ஒருவருக்கொருவர் சிரமம் அடைந்தால் (அப்பொழுது குழந்தையாகிய) அதற்கு மற்றொருத்தி பால் கொடுப்பாள்.

(அல் குர்ஆன் 65: 6)

5.) (பால்குடிச் செலவு விஷயத்தில்) வசதியுடையவர், தன்னுடைய வசதிக்கேற்ப (தாராளமாகச்) செலவு செய்யவும்; எவருக்கு அவருடைய வாழ்வாதாரங்கள் நெருக்கடியாக்கப் பட்டுள்ளதோ அவர் தமக்கு அல்லாஹ் கொடுத்ததிலிருந்து செலவு செய்யவும். அல்லாஹ் எந்த ஆத்மாவையும் அதற்கு அவன் கொடுத்ததைத் தவிர (அதற்கு மேல்) சிரமப்படுத்த மாட்டான். கஷ்டத்துக்குப் பின்னர் அல்லாஹ் அடுத்து இலகுவை ஆக்குவான். (அல் குர்ஆன் 65: 7)

பால் சுரப்புக் குறைபாட்டின் காரணமாகத் தாயினால் குழந்தைக்குப் பாலூட்ட முடியாதிருந்தால் குழந்தையை ஒரு செவிலித் தாயிடம் ஒப்படைக்கலாம். அந்தச் செவிலித் தாய் வாரிசுரிமை தவிர்ந்த ஏனைய அனைத்து நோக்கிலும் தாய் போலவே கருதப்படுவார். அவளுடைய பிள்ளைகள் குழந்தையின் பால்குடி சகோதரர்களாகவும் அவளது கணவன் பால்குடித் தந்தையாகவும் மாறுகின்றனர். அக்குழந்தைக்கும் அதன் செவிலித்தாயின் பிள்ளைகள், சகோதரர்கள் அல்லது சகோதரிகள், கணவன் ஆகியோருக்குமிடையில் திருமண உறவு தடுக்கப்பட்டுள்ளது. பிள்ளையின் உயிரியல் ரீதியான தந்தையே செவிலித் தாய்க்கான கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும். தந்தை இறந்து விட்டால் அவரது வாரிசுகள் பாலூட்டப்படும் இரு வருட காலத்துக்கும் குழந்தைக்கும் செவிலித் தாய்க்கும் உரிய பராமரிப்புச் செலவைச் செய்ய வேண்டும்.

ஆரம்ப கால இஸ்லாமிய அரசு, தாய்ப்பாலூட்டலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. இரண்டாவது கலீபாவான உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) காலத்தில் (கி. வ 7ம் நூற்றாண்டில்) பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஆரோக்கியமான பாலூட்டலை உறுதிப்படுத்துவதற்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்பட்டது.

தாய்ப்பாலூட்டலின் மருத்துவ மற்றும் உளவியல் ரீதியான அனுகூலங்கள்

அல்- பார், கந்தில் ஆகியோர் பின்வரும் அனுகூலங்களைக் குறிப்பிடுகின்றனர்.

- குழந்தைக்குத் தேவையான போசணைப் பொருட்களைச் சரியான விகிதத்திலும் சமிபாட்டுக்கும் அகத்துறிஞ்சலுக்கும் பொருத்தமான வடிவிலும் தாய்ப்பால் கொண்டுள்ளது. பிள்ளையின் அன்றாடத் தேவைகளுக்கு ஏற்ப அதிலுள்ள போசணைக் கூறுகள் மாற்றமடைகின்றன. குறைமாதக் குழந்தையொன்றைப் பொறுத்தமட்டில் அதன் தேவைகளுக்கு ஏற்பத் தாய்ப்பாலின் அமைப்பு இசைவாக்கமடையும். வளரும் குழந்தையின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப பாலைச் சுரப்பதற்குத் தகுந்த முறையில் பால் சுரப்பிகள் படைக்கப்பட்டுள்ளன.
- தாய்ப்பால் சரியான வெப்பநிலையில் இயற்கையாகவே சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் அது கிருமிகள் எதுவுமில்லாமலும் தேவையான போது கிடைக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

- போத்தல்களைச் சுத்தப்படுத்தவோ உரிய அளவில் நீரைக் கலந்து தயாரிக்கவோ வேண்டியதில்லை.
- பாலூட்டும் தாய்க்கும் அவளது குழந்தைக்குமிடையில் உளவியல் ரீதியான நெருங்கிய பிணைப்பொன்று உருவாகிறது.
- தாய் தனது கர்ப்பத்துக்கு முந்திய பருமனுக்கும் நிறைக்கும் மீளுவதற்கு பாலூட்டல் உதவுகிறது. பாலூட்டலின் காரணமாகக் கருப்பை சிறிதாகித் தன் இயல்பு நிலையை அடைகிறது. குழந்தை உறிஞ்சிக் குடிக்கும் போது ஏற்படும் தெறிவினைகளால் கபச்சுரப்பி தூண்டப்பட்டு Oxytocin எனும் ஹோர்மோன் சுரக்கப்படுவதனாலேயே இது நிகழ்கிறது.
- பாலூட்டலானது குழந்தையை வயிற்றுப்போக்கு, சுவாசத் தொற்றுக்கள், போன்ற பல நோய்களிலிருந்தும் பாதுகாக்கின்றது. தாய்ப்பாலூட்டப்படும் குழந்தைகள் சுவாச நோய்களாலும் சமிபாட்டுத் தொகுதி நோய்களாலும் பாதிக்கப்படும் ஆபத்து மிகக் குறைவாகும். புட்டி மூலம் ஊட்டப்படும் குழந்தைகளோடு ஒப்பிடும் போது தாய்ப்பாலூட்டப்படும் குழந்தைகளில் மரணவீதம் மிகக் குறைவாக இருக்கிறது. தாய்ப்பாலில் IgA எனும் பிறபொருள் எதிரி காணப்படுகிறது. நோய்களை எதிர்ப்பதற்கு இது உதவுகிறது. பிள்ளை பிறந்ததும் பால் சுரக்கப்படுவதற்கு முன்பாகச் சுரக்கப்படும் Colostrum எனும் சுரப்பு பெருமளவு பிறபொருள் எதிரிகளைக் கொண்டுள்ளது. *E coli, Staphilococcus aureus, Coxsakie B5 virus, Herpes Simplex virus, Poliovirus, Pneumococcus* போன்ற பல வகையான நோய்க்கிருமிகளுக்கு எதிரான பிறபொருள் எதிரிகளைத் தாய்ப்பால் கொண்டுள்ளது.
- முதல் நாள் உருவாகும் பாலில் பேதி மருந்தியல்பு காணப்படுகின்றது. இது, உடன் பிறந்த குழந்தை மலம் கழிப்பதற்கு உதவி செய்யும்.
- தாய்ப்பால் அல்லாத ஏனைய பால்கள் குழந்தைகளில் ஒவ்வாமைத் தாக்கங்களை (அலர்ஜிகளை) உருவாக்கும்.
- வேறு பால்களிலுள்ள ஒவ்வாத புரதங்கள் காரணமாகக் குழந்தைகளில் எக்ஸிமா, ஆஸ்த்மா, இரைப்பை-குடல் கோளாறுகள் முதலியன ஏற்படும் ஆபத்துக் கூடுதலாகக் காணப்படுகின்றது.

- தாய்ப்பாலூட்டப்படும் குழந்தைகள் சிறப்பாக வளர்வதோடு தொற்றுக்கள் மற்றும் நிர்ப்பீடனத் தொகுதி நோய்கள் முதலியவற்றால் பாதிக்கப்படுவதும் குறைவாகும். முதற்சில மாதங்களிலும் குழந்தையில் விருத்தியடைந்து வரும் நிர்ப்பீடனத் தொகுதியைத் தாய்ப்பால் உறுதிப்படுத்துகின்றது. பிள்ளையைத் தொற்றியுள்ள கிருமிகளை அதன் சுவாசத்தின் மூலம் தாய் பெற்றுக் கொள்கிறாள். பின்னர் அவளது உடல் அக்கிருமிகளுக்கெதிராக நிர்ப்பீடனத்தை உருவாக்க அது பாலினூடாகப் பிள்ளைக்கு வழங்கப்படுகிறது.
- பாலூட்டல் ஒரு கருத்தடை முறையாகச் செயற்படுகிறது. பாலூட்டும் காலத்தில் தாய் கருவுறுவதற்குரிய வாய்ப்பு

மிருகங்களின் பால் மிருகக் குட்டிகளுக்கே பொருத்தமானது. ஒவ்வொரு வகை மிருகத்திலும் பாலில் உள்ளடங்கியுள்ள பொருட்கள் வேறுபடுகின்றன. மனிதர், பசு, எருமை, ஆடு ஆகியவற்றின் பால்களில் அடங்கியுள்ள அடிப்படை உள்ளடக்கங்களின்சதவீதங்கள் (%) பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அனைத்து வகையிலும் நீர் 88% காணப்படுகின்றது. ஏனையவை பின்வருமாறு:

பால்	% புரதம்	% கொழுப்பு	% வெல்லம்	% கனியங்கள்
மனிதன்	1.5	3.5	6	0.2
பசு	3	4	4	0.8
எருமை	3	6	4	0.8
ஆடு	3	4	4	0.8

ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களம் 2010

மிகக்குறைவு. இந்த வகையில் தாய்க்கு இயற்கையானதும் சௌகரியமானதுமான கருத்தடை முறையொன்று கிடைக்கிறது.

- தாய்ப்பாலில் நாகம் (Zinc) காணப்படுகிறது. ஆனால், பசுப்பாலில் அது அறவே இல்லை. உரிய காலத்துக்கு முன்பே பாலூட்டல் நிறுத்தப்பட்ட அல்லது புட்டிப் பால் ஊட்டப்பட்ட குழந்தைகள் நாகக் குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றன. நாகக் குறைபாடு காரணமாக வயிற்றுப் போக்கு, உடல் இழையங்கள் விரயமாதல், பார்வைக் குறைபாடு போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.
- குழந்தையினது மூளையின் ஆற்றலை விருத்தி செய்வதில் தாய்ப்பால் முக்கிய பங்கு வகிக்கின்றது. எந்தப் புட்டிப் பால் வகையிலும் காணப்படாத, மூளை வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கக் கூறுகள் தாய்ப்பாலில் காணப்படுகின்றன. இங்கிலாந்திலும் நியூஸிலாந்திலும் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி தாய்ப்பாலூட்டப்பட்ட பிள்ளைகள் ஏனையவர்களை விட விவேகம் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.
- தாய்ப்பாலானது, மூளையின் மென்சவ்வு அழற்சி (meningitis), சிறுநீர்த் தொற்றுக்கள், செவித் தொற்றுக்கள் முதலியவற்றுக்குக் காரணமான பக்டீரியாக்களிலிருந்தும் பாதுகாப்பு வழங்குகிறது. புட்டிப்பால் அருந்தும் குழந்தைகள் நீரிழிவு நோய், lymphoma, அலர்ஜி வகைகள், சமிபாட்டுக் கோளாறுகள் முதலியவற்றால் அவதிப்பட நேரிடும்.

ஆகக் குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்காவது பாலூட்டுமாறு தாய்க்குச் சிபாரிசு செய்யப்படுகிறது. தாய்ப்பால் மிகச் சிறந்தது என்பதை நிரூபிப்பதற்கு அபரிமிதமான சான்றுகள் உள்ளன. பாலூட்டுவதன் காரணமாக மார்பகப் புற்றுநோய், சூலகப் புற்றுநோய், எலும்பு மிருதுவாதல் போன்ற பெண்கள் தொடர்பான நோய்களின் ஆபத்து குறைக்கப்படுகிறது. கருப்பை அதன் பழைய நிலைமைக்குத் திரும்புவதற்கு பாலூட்டல் துரண்டுதலாக அமைகிறது. (CNN, December 7, 1997)

வியாபாரமும் தாய்ப்பாலூட்டலும்

தாய்ப்பாலின் அனுகூலங்கள் தெளிவாகத் தெரிந்திருந்த போதிலும் அமெரிக்கப் பெண்களில் 60%குக் குறைந்தவர்களே தம் குழந்தைகளுக்குப் பாலூட்டுகின்றனர். கைத்தொழில் மய நாடுகள் பலவற்றோடு ஒப்பிடும் போது இது மிகக் குறைவானது. மேலும், குழந்தைக்கு ஆறு மாதங்களாகும் வரை தாய்ப்பாலூட்டுவோர் 22% மாத்திரமே.

தாய்ப்பாலூட்டுவதிலுள்ள கஷ்டங்களே இதற்குப் பிரதான காரணமாகும். கைக்குழந்தைகள் ஒரு நாளைக்குப் பன்னிரண்டு தடவைகள் வரை பால் குடிக்கின்றன. ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு மார்பகத்திலிருந்தும் 10- 15 நிமிடங்கள் அது அருந்தக்கூடும். தொழில் செய்யும் பெண்ணொருத்தி இதற்கான அவகாசத்தைப் பெற்றுக் கொள்வது மிகச் சிரமமானது.

எனினும், எதிர்காலத்தில் தொழில் செய்யும் இடங்கள் அமெரிக்கப் பெண்களுக்கு உகந்த இடங்களாக மாற்றமடையலாம். அரசாங்கமும் கம்பனிகளும் பாலூட்டுந் தாய்மாருக்குத் தம் பாலைக் கறந்து சேமித்துக் கொள்வதற்காகத் தினமும் ஒரு மணித்தியால சம்பளத்துடனான லீவை வழங்குகின்றன. இவ்வாறு கறக்கப்படும் பாலைச் சேமித்து வைப்பதற்கு பால் கறப்பதற்கான பம்பிகளும் குளிரூட்டிகளும் வேலைத் தளங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. தாய்ப்பாலூட்டப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதனால் தாய்மார் வேலைக்கு வராமல் லீவு பெறுவது குறைகிறது. குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டாத தாய்மாரைவிடப் பாலூட்டுந் தாய்மார் 27% குறைவாக லீவு எடுப்பது தெரியவந்துள்ளது.

முஸ்லிம் உலகும் தாய்ப்பாலூட்டலும்

வரலாற்று ரீதியாகத் தாய்ப்பாலூட்டலுக்கும் செவிலித் தாய்களுக்கும் முஸ்லிம் சமூகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளன. குழந்தையின் தாய் பாலூட்டும் நிலைமையிலும்கூட ஓர் அயலவரோ, உறவினரோ, நண்பரோ அக்குழந்தைக்குப் பாலூட்டுவதும் பொது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இப்படியான நடைமுறைகளில் சமூக ரீதியான அனுகூலங்கள் சிலவும் காணப்பட்டன. 15 அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய பெண்ணோ 18 அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய வாலிபனோ திருமணம் செய்யும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மூத்த பரம்பரையினரின் வழிகாட்டல் தேவைப்படுகிறது. இவ்வாறான இளந் தாய்மாரைச் சில பொறுப்புக்களிலிருந்து விடுவிப்பதற்கு விரிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உதவுகின்றனர்.

நவீன போக்குள்ளவர்கள் முஸ்லிம் நாடுகளில் காணப்பட்ட சமூக, பண்பாட்டுக் கோலங்களை மாற்றி விடுகின்றனர். இப்போக்கு நகர்ப்புறங்களில் முனைப்பாகத் தெரிகின்றது. கிராமப் புறங்களைவிட நகர்ப்புறங்களில் தாய்ப்பாலூட்டும் வழக்கம் துரிதமாகக் குறைந்து வருகிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தாய்ப்பாலூட்டும் வழக்கம் வீழ்ச்சியடைவதற்குக் குழந்தை உணவுகளைத் தயாரிக்கும் கம்பனிகளும் காரணமாக உள்ளன. தாய்மார் பாலூட்டுவதை நிறுத்தி விட்டு அவர்களது உற்பத்திப் பொருட்களை வாங்கும் போது அவர்களது விற்பனையும் இலாபமும் அதிகரிக்கின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முதல் தர குழந்தை கொல்லிகள் இந்தக் கம்பனிகளே என UNICEF நிறுவனமும் உலக சுகாதார அமையமும் (WHO) கருதுகின்றன. தயாரிக்கப்பட்ட குழந்தையுணவுகளுக்கான விளம்பரங்களைத் தடை செய்யுமாறு அந்நாடுகளின் அரசாங்கங்களுக்கு இந்நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன. புட்டிப்பால் ஊட்டப்படும் குழந்தைகளுக்குப் போசணைப் பெறுமானம் குறைந்த, நுண்ணங்கிகள் நிறைந்த, மாசடைந்த உணவே பெரும்பாலும் கிடைக்கின்றது. தூய்மையற்ற நீர் பயன்படுத்தப்படுவதே இதற்குக் காரணமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வருடந்தோறும் 9.4 மில்லியன் குழந்தைகள் போசணையின்மையால் பாதிக்கப்படுவதாக UNICEF, WHO என்பன மதிப்பீடு செய்துள்ளன. இவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் புட்டிப்பால் ஊட்டப்படும் குழந்தைகளாவர். அதேபோல் இந்நாடுகளில் வருடந்தோறும் சுமார் 10 மில்லியன் குழந்தைகள் சமிபாட்டுத் தொகுதி நோய்களினால் உயிரிழக்கின்றனர். இவர்களிலும் பாதிக்கு மேற்பட்டோர் புட்டிப்பால் அருந்துவதனாலேயே பாதிப்புக்கு உள்ளாகின்றனர். தாய்ப்பால் ஊட்டப்பட்டிருந்தால் இக்குழந்தைகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கக்கூடும். மேலும், புட்டிப்பால் ஊட்டுவதுடன் ஒப்பிடுகையில் தாய்ப்பாலூட்டுதல் செலவு மிகக்குறைந்ததாகும்.

குழந்தைகளுக்கான புட்டிப்பால் உணவுகளை மேலும் போசணை மிக்கனவாக மாற்றுவதற்கு ஆய்வாளர்கள் முயற்சித்து வருகின்றனர். LCPUFA எனப்படும் கொழுப்பமில வகையைப் புட்டிப்பால் உணவுகளில் சேர்ப்பதன் மூலம் குழந்தைகளின் மூளை விருத்திக்குத் துணை புரியலாம் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். சில ஐரோப்பிய நாடுகளில் குழந்தைகளுக்கான பால் மாக்களில் LCPUFA சேர்க்கப்பட்டு வருகிறது.

தாய்ப்பாலூட்டல் பற்றி அலீ இப்ன் அபீ தாலிப் (றழி) மற்றும் இப்ன் ஹஸ்ம் ஆகியோரின் அபிப்பிராயங்கள்

தாய்ப்பாலூட்டலானது தாய்மார் மீது குழந்தைக்குள்ள இயல்பான உரிமையாகும். இப்ன் ஹஸ்ம் பின்வருமாறு கூறினார்:

> **ஒரு பெண், அவள் அரசனின் மகளாக இருந்தாலும் தன் குழந்தைக்குக் கட்டாயம் பாலூட்டத்தான் வேண்டும். பாலூட்டும் ஆற்றல் அவளுக்கு இல்லாதிருந்தாலே யன்றி அக்கடமையிலிருந்து அவள் விடுவிக்கப்பட மாட்டாள்**
>
> (இப்ன் ஹஸ்ம், பத்தாம் தொகுதி)

இஸ்லாமியப் போதனைகள் பின்பற்றப்பட்டால் பிள்ளைகளுக்கும் தாய்மாருக்கும் ஏற்படக் கூடிய பல பிரச்சினைகள் தவிர்க்கப்படலாம். அலீ இப்ன் அபீ தாலிப் (றழி) பின்வருமாறு கூறினார்:

> **குழந்தைகள் அருந்தும் பால் வகைகளில் தாய்ப்பாலைப் போன்று ஆசீர்வதிக்கப் பட்டது வேறொன்றுமில்லை.**

தாய்ப்பால் ஊட்டலுக்குரிய காலம்

சட்ட மேதைகளிடம் கருத்து முரண்பாடு காணப்பட்டாலும் தாய்ப்பாலூட்டல் இரண்டு வருடங்களுக்கு மேற்படக்கூடாது என்பதில் கருத்திணக்கம் காணப்படுகிறது. தாய் ஆரோக்கியமாக இருந்து பாலும் அவளிடம் இருந்தால் இரண்டாவது வயதில் பால் மறக்கச் செய்வதே நல்லது.

யூஸுஃப் அலி தனது தஃப்ஸீரில் 45:16 வாக்கியம் தொடர்பாகப் பின்வருமாறு விளக்க மளிக்கின்றார்:

> தாய்ப்பாலூட்டுவதற்கான உச்ச கால அளவு (2 வருடங்கள்) பிள்ளையின் பாற் பற்களின் வெளிப்பாடு பூர்த்தியாகும் காலத்திற்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கீழ்த்தாடையின் நடுப் பகுதியில் முதலாவது வெட்டும் பற்கள் 6ம் மாதத்திற்கும் 9ம் மாதத்திற்கும் இடையில் வெளியாகின்றன. அதன் பின்னர் ஏனைய வெட்டும் பற்கள் இடையிடையே தோன்றிய பின்பு வேட்டைப் பற்கள் வெளியாகின்றன. இரண்டாவது முன்கடைவாய்ப் பற்கள் 24ம் மாதமளவில் தோன்றுகின்றன. அத்தோடு பிள்ளையின் பாற்பற் தொகுதி பூர்த்தியடையும். இந்நிலையில் அது உணவை மெல்லவும் அரைக்கவும் முயல வேண்டுமென இயற்கை எதிர்பார்க்கின்றது. அத்தோடு, அது தனது தாயின் பாலிலிருந்து முற்றாக விடுதலை பெற வேண்டும். அது மட்டுமன்றி பிள்ளைக்கு பாற்பற்கள் முழுவதும் வெளி வந்த பின்னர் பாலூட்டுவது தாய்க்கு நோவை ஏற்படுத்தவும் கூடும்.

சர்வதேச தாய்ப்பாலூட்டல் சின்னம்

இரண்டு வயது கடந்த பின்னர் தாய்ப்பாலூட்டுவது பிள்ளையை உடல், உள ரீதிகளில் பாதிக்கலாம் எனச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். தாய்மார் தமது குழந்தைகளுக்கு குறைந்தது 6- 12 மாதங்கள் வரையாவது பாலூட்ட வேண்டுமென குழந்தை நோய் நிபுணர்களுக்கான அமெரிக்க அகடெமி 1997இல் சிபாரிசு செய்திருந்தது. உண்மையில் 20% அமெரிக்கத் தாய்மார்களே 6 மாதங்கள் கடந்த பின்னரும் தம் குழந்தைகளுக்குப் பாலூட்டுகின்றனர். பின்னர் அந்த அகடெமி பாலூட்டும் காலத்தை ஒரு வருடம் வரை நீடிக்க வேண்டும் எனச் சிபாரிசு செய்தது. அத்தோடு, பாலூட்டுவதனால் தாய்க்கு ஏற்படும் நன்மைகளையும் அது பட்டியல் படுத்தியிருந்தது. (கருப்பைப் புற்று, மார்பகப் புற்று, எலும்புகள் மென்மையாதல் முதலிய நோய்கள் ஏற்படுவதற்குரிய ஆபத்தை அது பெரிதும் குறைக்கும்)

ஒரு செவிலித் தாயைக் கொண்டு பாலூட்டுவது பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். மருத்துவ ரீதியான காரணமொன்று இருந்தாலேயன்றி பாலூட்டும் பொறுப்பை உயிரியல்ரீதியான தாயே மேற்கொள்ள வேண்டும். அப்படியான காரணமொன்று இருப்பின், குழந்தைக்குப் பாலூட்டுவதற்காகச் செவிலித் தாயொருவர் அமர்த்தப்பட வேண்டும். இது பற்றி அன்னார் பின்வருமாறு விளக்கினார்கள்:

> பால்குடி உறவு காரணமாக யார் உங்கள் சகோதரனாக வரப்போகிறான் என்பது பற்றிக் கவனமாக இருங்கள்! பிள்ளையின் பசி போக்கும் தேவைக்காக மாத்திரமே செவிலித் தாயொருவரைப் பயன்படுத்துங்கள். (அல்-புகாரி)

ஒரு திருமணம் பற்றிப் பகிரங்கப் படுத்துவதில் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று, ஒருவர் தனது பால்குடிச் சகோதரரை அல்லது சகோதரியைத் தவறுதலாகத் திருமணம் செய்வதைத் தடுக்க அது உதவுகின்றமையாகும். அப்படியான உறவொன்று இருந்திருந்தால் பொதுமக்கள் முன்வந்து அது பற்றி சாட்சி பகர இதனால் வாய்ப்புக் கிடைக்கிறது.

பாலூட்டும் தாய்மாருக்கான சில உதவிக் குறிப்புக்கள்

தாய்ப்பாலூட்டல் இயற்கை வழிமுறையாக இருப்பினும் அதற்குரிய ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளலாம். எனவே, தாய்மாருக்கான சில உதவிக் குறிப்புக்களைக் கீழே தருகின்றோம்.

- உங்கள் குழந்தை பிறக்க முன்பே உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். பாலூட்டல் பற்றிய நூல்களை வாசிப்பதோடு வைத்தியர், சுகாதார சேவகர் போன்றோரிடமிருந்து உரிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- பாலூட்டும் போது உடலைச் சரியான நிலையில் வைத்துக் கொள்வது அவசியம். மார்பகக் காம்பு 2 முதல் 3 cm வரை குழந்தையின் வாயினுள் நுழைந்திருக்க வேண்டும். குழந்தையை நோக்கி நீங்கள் வளையாமல் அதனை உங்களுக்கு நெருக்கமாக எடுத்துக் கொள்ளுங்கள். இங்கு தலையணையொன்று உதவியாக அமையலாம்.
- ஒரு மார்பகம் முற்றாக மென்மையடைந்து குழந்தை பால் உறிஞ்சும் வேகம் மந்தமாகும் வரை அந்த மார்பகத்தினால் பால் கொடுங்கள். அதன் பிறகு அடுத்த மார்பகத்தை வழங்கலாம். பாலூட்டும் ஒவ்வொரு தடவையும் ஒரு மார்பகத்தை முற்றாக மென்மையாக்கிக் கொள்வது இரு மார்பகங்களாலும் அரைகுறையாகப் பால் கொடுப்பதை விட நல்லது. முதலில் வருவது ஆடை நீக்கப்பட்ட பால் போன்றும், இடையில் வருவது முழுப்பால் போன்றும், கடைசியாக வருவது பாலாடை போன்றும் இருக்கும். இந்தப் பாலாடை, பாலின் கட்டமைப்பை சமநிலைப் படுத்துவதோடு குழந்தை அளவுக்கு மீறி அழுவதையும் தடுக்கிறது.
- முதற் சில நாட்களின் போது மார்பகங்கள் புடைத்துப் பருத்துப் போயிருக்கலாம். இது இயல்பானது. புடைத்துப் போன காம்புகளிலிருந்து பால் குடிக்க குழந்தை சிரமப்பட்டால், பாலூட்டத் தொடங்க முன் சிறிது பாலை வெளியேற்றி விடுவது நல்லது.
- காம்புகள் வெடித்துப் புண்ணாகினால் அதனைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். காம்புகளைக் காற்றில் உலரவிட்டு ஒலிவ் எண்ணெய் போன்ற இயற்கையான பதார்த்தங்களைப் பூசுவதன் மூலம் வலியிலிருந்து நிவாரணம் பெறலாம்.
- போதியளவு நீர் அருந்துங்கள். வெந்தயம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றை நீரில் அவித்து அந்நீரைப் அருந்துவது பால் சுரக்கப்படுவதை அதிகரிக்கச் செய்யும் எனக் கூறப்படுகிறது.
- குழந்தை பிறந்து 1 அல்லது 2 மணித்தியாலங்களின் பின்னர் பாலூட்டல் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
- ஆரம்ப 2- 3 வாரங்களிலும் பாலூட்டுவதற்காகக் குழந்தையை நித்திரையிலிருந்து எழுப்ப வேண்டியேற்படும். குறைந்தபட்சம் பகல் வேளையில் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையும் இரவில் நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையும் குழந்தை பால் குடிக்கும். அடிக்கடி பால் கொடுப்பது குழந்தைக்கு முக்கியமாக இருப்பதோடு பால் சுரப்பதை ஊக்குவிக்கவும் உதவும். குழந்தை பால் குடிப்பது அதிகரித்தால் பால் சுரப்பதும் அதிகரிக்கும். குழந்தையின் நிறை உரிய அளவுக்கு அதிகரித்து விட்டால், குழந்தையின் தேவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப ஊட்டும் வேளைகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

- குழந்தை பால் குடிக்கும் பழக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வரை- மூன்று முதல் ஐந்து வாரங்கள் வரை - உங்கள் பாலைப் புட்டியில் ஊற்றி அதற்குக் கொடுப்பதற்கு முயல வேண்டாம். முதன் முறையாகப் புட்டியில் ஊற்றிக் கொடுக்கும் போது நீங்கள் அதனைச் செய்யாது வேறொருவரைக் கொண்டு செய்விப்பது நல்லது. சிறிது பழக்கப்பட்டு விட்டால் எவ்விதப் பிரச்சினையுமின்றி மார்பகங்களிலிருந்தும் புட்டியிலிருந்தும் மாறி மாறிப் பால் குடிக்கக் குழந்தை பழகிவிடும்.
- சில குழந்தைகள் ஆரம்பத்திலிருந்தே எவ்விதப் பிரச்சினையுமின்றிப் பால் குடிக்கும். சில குழந்தைகள் அதனை ஒழுங்காகக் கற்றுக் கொள்ளச் சிறிது காலம் எடுக்கலாம். இவ்வாறு ஆரம்பத்தில் ஒழுங்காகப் பால் குடிக்காததைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.
- இவ்வாறான நிலைமைகளில் பாலூட்டுவதைக் கைவிட்டுவிட வேண்டாம். சில வேளைகளில் பாலூட்டல் சீராக நிலை பெறுவதற்கு - தாய்க்கும் குழந்தைக்குமிடையில் சிறந்த பாலூட்டல் தொடர்பு ஏற்படுவதற்கு - ஆறு வாரங்கள் வரை செல்லக் கூடும்.
- முதலாம் வாரத்தில் தாயின் மார்பகக் காம்புகள் பிளந்து புண்ணாகி வேதனை தரலாம். இந்நிலையில் ஊட்டுவதற்கு முன்னரும் பின்னரும் சிறிது பாலை வெளியேற்றி அதனைக் காம்பில் தடவி விடுங்கள். காம்புகளைக் காற்றைக் கொண்டு உலர்த்திக் கொள்ளுங்கள்.

தாய்மார் பாலூட்டலை மகிழ்ச்சியோடு செய்வார்கள். இங்கு உணவைத் தயாரிக்க வேண்டிய தேவை இல்லை; அத்துடன், குழந்தையோடு விசேடமான நெருக்க உணர்வொன்று ஏற்படுகிறது. குழந்தைகள் பல்வேறு நோய்களிலிருந்தும் பாதுகாக்கப் படுகின்றன.

தாயின் அன்றாட உணவுத் தேவைகள்

பாலூட்டும் தாய்மார் பின்வரும் பொருட்களைத் தமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

- புரதங்களைப் பெறுவதற்காக இறைச்சி, மீன், முட்டை போன்றவை
- விட்டமின் C ஐப் பெறுவதற்காக எலுமிச்சை, தோடை, தக்காளி போன்றவை
- கல்சியத்தைப் பெற உதவுவதற்காக பசுப்பால் அல்லது பாற்கட்டி, வெண்ணெய் போன்றவை
- பழங்களும் மரக்கறி வகைகளும்
- சிக்கலான காபோஹைட்ரேட்களைப் பெறுவதற்காக அரிசி, கோதுமை போன்ற தானியங்கள்
- இரும்புச் சத்தைத் தரக்கூடிய மாட்டிறைச்சி, கீரை வகைகள் போன்றவை
- கொழுப்பைத் தரக்கூடிய முழு ஆடைப்பால், பாற்கட்டி முதலியன
- 6- 8 டம்ளர் நீர்
- கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்க்குத் தேவையான விட்டமின்கள்

நல்ல போசணையைப் பெற்றுக் கொள்வது தாயின் பாலுற்பத்தியை அதிகரிக்கச் செய்வதோடு, அவளது உடலுக்குச் சக்தியையும் வழங்குகிறது. அத்தோடு கர்ப்பத்தின் போது ஏற்பட்ட நிறை அதிகரிப்பையும் குறைக்க உதவும். பாலூட்டும் தாய் போதியளவு பசுப்பாலையும் அருந்த வேண்டும். இல்லாவிட்டால் அவளது உடலிலிருந்து கல்சியம் மிகையாக இழக்கப்படக்கூடும்.

உடல் வலிமை மிக்க சமுதாயம்

அல்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் எல்லா வகையான வலிமைகள் பற்றியும் குறிப்பிடுகின்றன:

(விசுவாசங் கொண்டோரே!) மனிதர்களுக்குத் தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தார்களில் எல்லாம்) மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள்; (ஏனெனில்,) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகின்றீர்கள். தீமையை விட்டும் (அவர்களை) நீங்கள் விலக்குகின்றீர்கள்; மேலும் நீங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள். மேலும், இவ்வாறே வேதத்தையுடையவர்களும் விசுவாசித்து நடந்தால் அது அவர்களுக்கு நன்மையாக இருந்திருக்கும். விசுவாசிப்போரும் அவர்களில் (சிலர்) இருக்கின்றனர்; இன்னும் அவர்களில் அதிகமானவர்கள் (அல்லாஹ்வின் கட்டளையை மீறும்) பாவிகளாவர்.

(அல் குர்ஆன் 3: 110)

மேலும், அவர்களுக்காக (அவர்களோடு போர் செய்வதற்காக) உங்களுக்குப் பலத்தால் சாத்தியமானதையும் (திறமையான) போர்க் குதிரைகளைக் கட்டி வைப்பதையும் நீங்கள் (எந்நேரமும்) தயார் செய்து வையுங்கள்; இதனால் அல்லாஹ்வுடைய விரோதியையும் உங்களுடைய விரோதியையும் இவர்களல்லாத மற்றவர்களையும் பயப்படச் செய்வீர்கள்.

(அல் குர்ஆன் 8: 60)

ஒரு தாய் பின்வருமாறு கூறினார்: பாலூட்டுவது அற்புதமானது. நடு இரவில் கூட அந்தச் சின்னஞ்சிறு முகத்தைநோக்கும் போது, என் மகனுக்குத் தேவை நான் மட்டுமே என்பது நினைவுக்கு வரும். இந்நிலையில் நான் அவனுக்குப் பாலூட்டாமல் இருக்க முடியுமா? பாலூட்டுவதன் மனவெழுச்சி ரீதியான நன்மைகள் என் குழந்தைக்குக் கிடைப்பது போன்றே எனக்கும் கிடைக்கின்றன.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: நலிவான விசுவாசியை விட வலிமையான விசுவாசி சிறந்தவராகவும் அல்லாஹ்வால் அதிகம் நேசிக்கப்படுபவராகவும் இருக்கின்றார். இரண்டிலும் நன்மை இருக்கின்றது. (முஸ்லிம்)

இந்த ஹதீஸில் உயயோகிக்கப்பட்டுள்ள 'கவி' என்ற சொல் உடல் வலிமையையும் விசுவாசத்தின் வலிமையையும் குறிக்கின்றது. மேலே கூறப்பட்ட 'மேன்மையான சமுதாயம்', 'உங்களுக்குப் பலத்தால் சாத்தியமானதையும் (திறமையான) போர்க் குதிரைகளைக் கட்டி வைப்பதையும் நீங்கள் (எந்நேரமும்) தயார் செய்து வையுங்கள்', 'வலிமையான விசுவாசி' முதலிய விவரணங்கள் உடல் ரீதியான அம்சங்களையும் விசுவாசம் மற்றும் ஒழுக்க ரீதியான அம்சங்களையும் இணைத்தே குறிப்பிடுகின்றன.

இதற்கு முந்திய அத்தியாயங்களில் குறிப்பிட்ட விடயங்களிலிருந்து நாம் பின்வரும் முடிவுகளுக்கு வரலாம். பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதன் மூலம் ஒரு சமுதாயம் ஏனைய சமுதாயங்களை விட வலிமை மிக்கதாக மாறலாம்.

- ஆரோக்கியமான வாழ்க்கைத் துணைகளைத் தேர்ந்தெடுத்தல்
- திருமணத்துக்குப் புறம்பான பாலியல் தொடர்புகள் அனைத்தையும் தவிர்த்துக் கொள்ளல்
- ஒழுங்கான முறையில் உணவுட்கொள்ளல்: கர்ப்பிணித் தாய்மாரும் ஏனைய பெற்றோரும் பிள்ளைகளும் சிறந்த, சுத்தமான, முழுமையான, போசாக்குள்ள, அனுமதிக்கப்பட்ட உணவுகளை உட்கொள்ள வேண்டும். நீர், பால், தேன், பழங்கள், இறைச்சி, மரக்கறிகள் முதலியவற்றை உட்கொள்வதை அல்குர்ஆன் ஊக்குவிக்கின்றது.
- சுத்தமான, சுகாதாரத்துக்குரிய வாழ்க்கை முறையொன்றைப் பின்பற்றுதல்: உணவுட்கொள்ள முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவிக் கொள்வதன் மூலம் நோய்க் கிருமிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். உணவுண்பதற்காக வலது கையையும் கழிவறைக்குச் சென்ற பின் சுத்தம் செய்வதற்கு இடது கையையும் பயன்படுத்துங்கள். தினமும் ஐந்து வேளைகள் வுழூ செய்யுங்கள்.
- போதை தரும் பொருட்களை (மதுபானம், போதைப் பொருட்கள், சிகரெட் போன்றவற்றை) முற்றாகத் தவிர்த்தல்: இவற்றின் உபயோகம் மனிதனின்- குறிப்பாகப் பிறக்கப் போகும் குழந்தையின்- ஆரோக்கியத்துக்குப் பல வழிகளிலும் தீங்கு செய்கிறது.
- குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டல்: இதன் மூலம் பிள்ளைகள் ஆரோக்கியமாக வளர்வதோடு, வலிமையான பண்புகளையும் பெறுகின்றன. நேர் வழியில் செல்லும் மக்களாகவும் விசுவாசிகளின் தலைவர்களாகவும் அவர்கள் மாறுவதற்கு இது வழியமைக்கின்றது.

பிள்ளைப் பேறுக்காக வழங்கப்படும் விடுமுறை 8 வாரங்களை விடக் கூடுதலாக இருக்க வேண்டும். விடுமுறையை ஒரு வருடத்துக்கு நீட்டிக்கொள்ள முடியுமானால் தாய்மார் தம் குழந்தைகளின் பராமரிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்த வாய்ப்புக் கிடைக்கும்.

பிள்ளையின் முதல் ஐந்து வருடங்களும் வலிமையும் ஆரோக்கியமும் நற்பண்புகளும் மிக்க ஒருவனாக அவனை ஆக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாம் தவற விடக்கூடாத வாய்ப்பாக அவை இருக்கின்றன. மேற்சொல்லப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றினால் இச்சமூகம் முழு மனித சமுதாயத்திலும் மேன்மை மிக்கதாக மாறும்.

வலிமையும் ஆரோக்கியமும் மிக்க பிள்ளைகளை வளர்த்தெடுத்த பின்னர் நாம் அவர்களுக்கு விசுவாசத்தையும் ஞானத்தையும் அறிவையும் திறன்களையும் போதிக்க முடியும். யூஸுஃப் (அலை), மூஸா (அலை) போன்ற நபிமார்களின் விடயத்தில் விளக்கப்பட்டது போன்று இது வாழ்க்கையில் பின்பு இடம்பெற முடியும்.

அவர் வாலிபத்தையடைந்து (வாழ்க்கையில்) அவர் நிறைவு நிலையைப் பெற்ற போது அவருக்கு ஞானத்தையும் கல்வியையும் நாம் வழங்கினோம்; இவ்வாறே நன்மை செய்வோருக்கு நாம் (நற்)கூலி வழங்குவோம். (அல் குர்ஆன் 28: 14)

ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தேவையான உறுதியான அடிப்படையைத் தாய்ப்பாலூட்டல் கொண்டுள்ளது. ஏனெனில்:

1. அது குழந்தைகளுக்கு உடல் வலிமையையும் உளவியல் ரீதியான ஆற்றலையும் மனவெழுச்சி ரீதியான சக்தியையும் வழங்குகிறது.

2. அது புட்டியால் ஊட்டப்படுவதற்குப் பாரியளவில் தயாரிக்கப்படும் பால்மாக்களைப் போலன்றி ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏற்ற வகையில் விசேடமாக உருவாக்கப்படும் போசணையாக விளங்குகிறது.

3. குழந்தைகளுக்கு உணவூட்டுவதற்குரிய மிக இயல்பான முறையாக அது இருக்கிறது.

4. மனித அறிவு தொடர்ந்து விரிவடைந்து கொண்டும் மாறிக்கொண்டும் இருந்த போதிலும், இறைவேதம் மனிதனின் நன்மையைக் கருதிச் சில அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருக்கிறது.

நிச்சயமாக இந்தக் குர்ஆன், (மனிதர்களுக்கு) எது மிக மிக நேர்மையானதோ அதன் பால் வழி காட்டுகிறது; நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகைய விசுவாசிகள்- அவர்களுக்கு நிச்சயமாக மிகப்பெரிய நற்கூலி உண்டென்று நன்மாராயம் கூறுகிறது. (அல் குர்ஆன் 17: 9)

ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வது பற்றி நபி (ஸல்) அவர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படைகளை இன்றைய முஸ்லிம்கள் மீறி வருகின்றனர். உலகிலுள்ள ஆகக்கூடிய ஆயுள் எதிர்பார்ப்பைக் கொண்ட 12 நாடுகளுள் ஒரு முஸ்லிம் நாடுகூட அடங்கவில்லை. மேலும், உலகில் ஆகக் குறைந்த ஆயுள் எதிர்பார்ப்புடைய (ஆண்கள் 43 வருடங்கள், பெண்கள் 44 வருடங்கள்) நாடாக ஆப்கானிஸ்தான் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. (ஆதாரம் United Nations- 2010)

தொழிற்பாடு

தொழிற்பாடு- 39: எனது மனதிற்குத் தொல்லையாய் அமைபவை

பெற்றாரும் பிள்ளைகளும் பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி அவற்றைச் செய்யாது தவிர்ப்பதற்கு ஏற்ற வழிமுறைகள் பற்றி உடன்பாடு காணுங்கள்:

எனக்குத் தொல்லையாய்த் தோன்றும் விடயங்கள்:

- பிள்ளைகள் தாம் எறியும் குப்பைகளைத் தாமே அகற்றாதிருத்தல்; பெற்றோரே அவர்களுக்காக அதனைச் செய்யவேண்டி இருத்தல்.
- குப்பைக் கூடையைச் சுற்றியே குப்பைகள் எறியப்படுதல்- கூடையினுள் அல்ல.
- சிலர், தாம் சொன்ன நேரத்திற்கு வராமல் பிந்தி வருதல்.
- மனைவிக்கு அறிவிக்காமல் கணவன் நேரம் பிந்தி வீட்டுக்கு வருதல்.
- சிலர் தம் கைகளைக் கழுவிக் கொள்ளாமல் கழிவறைகளிலிருந்து வெளியே வருதல்.
- சிலர், தாம் குளியலறையில் இருக்கும் போது கதவை மூடாதிருத்தல்.
- சிலர் தம் தேநீரை அல்லது கோப்பியை அல்லது நீரை முற்றாக அருந்தி முடிக்காமல் அடுத்த நாள் விடியும் வரை மேசை மீது வைத்திருத்தல்.
- சிலர் தங்கள் தலை முடியையும் நீண்ட தாடியையும் வாரிக்கொள்ளாதிருத்தல்.
- நண்பரொருவரின் வீட்டில் தம் பிள்ளை குழப்படி செய்யும் போது சில பெற்றோர் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தல்.
- சிலர் வதந்திகளைப் பரப்புவதிலும் புறம் பேசுவதிலும் மும்முரமாக ஈடுபடல். (புறம் பேசுதல் ஒருவருடைய மாமிசத்தைச் சாப்பிடுவதற்குச் சமன் என அல் குர்ஆன் விவரிக்கிறது)
- சில பெற்றார் தம் பிள்ளைகளிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குத் தாமே பதில் கூறுதல்.
- சிலர், பிள்ளைகள் பேசும் போது அவர்களை இடைமறித்தல்.
- அதிகளவில் உண்ணுமாறு விருந்தாளியை வற்புறுத்தல்.
- இனத்துவேசத்தைக் காட்டும் கூற்றுக்களை அல்லது பகிடிகளைக் கூறுதல்.
- தமது தட்டில் அதிகளவில் உணவை எஞ்ச வைத்து அவற்றை எறிந்துவிடுதல்.
- சிலர் எவ்வித அறிவித்தலுமின்றித் திடீரென வீட்டுக்கு விஜயம் செய்தல்.
- விருந்தாளிகளாக வீட்டுக்கு வந்தவர்கள் வீட்டுக்காரரின் பிள்ளைகளை அனுமதியின்றிக் கண்டித்தலும் தண்டித்தலும்.
- பெற்றார் தமது பிள்ளைகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முறித்து விட்டு அது பற்றி மன்னிப்புக் கோராதிருத்தல்.
- சிலர் தமது பிரச்சினையின் எல்லாப் பக்கங்களையும் பற்றிக் கூறாமல் அது தொடர்பாக ஆலோசனை கேட்டல்.
- பஸ் வண்டிகளில் முதியவர்களுக்கு இடம் கொடுக்காமல் இள வயதினர் முண்டியடித்துக் கொண்டு சென்று இடம் பிடித்துக் கொள்ளுதல்.
- ஒரு செய்தியைக் கொண்டு வருபவர் அதனை முழுமையாகவும் திருத்தமாகவும் சொல்லத் தவறுதல்.

- நோயாளியைப் பார்க்க வருபவர்கள் கூடுதலான நேரம் நோயாளியுடன் தங்கியிருத்தல்.
- சிலர் காரணமெதுவும் சொல்லாமல் கோபித்துக் கொள்ளல்.
- பணம், உணவு, கடதாசி, மருந்து, நேரம், சவர்க்காரம் என்பவற்றைச் சிலர் வீணாக விரயமாக்குதல்.
- வாகனம் ஓட்டும் போது தொலைபேசிகளைப் பயன்படுத்தல்.
- சிலர் தம் வாயையும் மூக்கையும் மூடிக் கொள்ளாமல் முகத்துக்கு நேரே தும்முதலும் இருமுதலும்.
- கூட்டங்களிலும் தொழுகையின் போதும் நூலகத்திலும் சிலர் தம் செல்போன்களை silence நிலையில் வைக்காதிருத்தல்.
- சிலரது ஆடைகளிலிருந்தும் காலுறைகளிலிருந்தும் துர்நாற்றம் வீசுதல்.
- கூட்டங்களிலும் சந்திப்புக்களின் போதும் ஒரே நேரத்தில் பலர் பேசுதல்.
- சாரதிகள் தமது வாகனங்களின் horn களைத் தேவையின்றியும் நோக்கமின்றியும் ஒலித்தல்.
- பேச்சாளர்கள் ஒரே வார்த்தையை அல்லது சொற்றொடரைப் பொருத்தமற்ற முறையில் பல தடவைகள் மீட்டி மீட்டிக் கூறுதல்.
- பேசுபவர்கள் அடுத்தவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் உரத்துப் பேசுதல் அல்லது சிறிதும் கேட்காத வகையில் தாழ்ந்த குரலில் பேசுதல்.
- அடுத்தவர்களின் அனுமதியின்றி கியூ வரிசைகளில் முறை தவறி இடையில் புகுதல்.
- விருந்தாளிகள் வீட்டுக்காரரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறுதல்.
- விருந்து வழங்குபவர், வரத் தாமதமாகும் ஒரு விருந்தாளிக்காக- வந்திருப்போருக்கு உணவளிப்பதைப் பிந்தச் செய்தல்.
- கைகளைக் கழுவும் போது சிலர் குழாய் நீரை விரயமாக்குதல்.
- நீர்க்குழாய்களை முற்றாக மூடத் தவறுதல்.
- தமது பாதையில் காணப்படும் குப்பைகளை அகற்றத் தவறுதல்.
- நடைபாதைகளை மறித்தவாறு உரையாடிக்கொண்டிருத்தல்.
- கூட்டங்களின் போது இருவர் தமக்குள் உரையாடிக் கொள்ளல் அல்லது ரகசியம் பேசுதல்.
- ஒருவர் தவறு செய்துவிட்டு அதனை ஒப்புக் கொள்ளாதிருத்தலும் அதற்கு மன்னிப்புக் கோராதிருத்தலும்.
- ஏதேனுமொரு நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுப்பவர்கள் அங்கு உணவு வழங்கப்படுமா இல்லையா என்பதைத் தெளிவாகக் கூறாதிருத்தல்.
- பேச்சாளர் தமக்கு ஒதுக்கப்பட்டதை விடக் கூடுதலாக அல்லது மிகக் குறைவாக நேரத்தைப் பயன்படுத்தல்.
- சிலர் புன் சிரிப்புக்குப் பதிலாக முகஞ்சுளித்தல்.
- 'ஸலாம்' அல்லது வாழ்த்துக் கூறினால் பதில் கூறாதிருத்தல்.
- சிலர் தம் வீடுகளை இருட்டாக அல்லது கடும் பிரகாசமாக வைத்திருத்தல்.
- மற்றவர்கள் விடயத்தில் மோப்பம் பிடித்துத் திரிதல்.
- எல்லோரிடத்திலும் எந்நேரமும் பஞ்சம் பாடித் திரிதல்.

குடும்பத்தின் ஒவ்வோர் அங்கத்தவரும் தனக்குத் தொல்லை தருகின்ற அல்லது தான் விருப்பமில்லாத விடயங்களை இப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

அத்தியாயம்- 11

பிள்ளையின் மூளை விருத்தி : கவனிக்கப்பட வேண்டியவை

- அறிமுகம் 252
- வாய்ப்புமிக்க காலம் 252
- நரம்புக் கலங்களினதும் மூளை வலையமைப்புக்களினதும் விருத்தி 253
- பார்வை 255
- ஒலி 255
- இசை 256
- பிறப்பும் இசைச் சிகிச்சையும் 257
- மனவெழுச்சிகள் 257
- மன அழுத்தம் மனவெழுச்சிக்குரிய சுற்றுக்களை மாற்றியமைக்கலாம் 258
- அசைவு 259
- பிள்ளைப் பருவத்தில் சொல்லாட்சியும் மனனஞ்செய்தலும் 260
- மூளை மாற்றமடையும் விதம் 260
- பெற்றார் தம் குழந்தையோடு சாதகமான முறையில் உரையாட வேண்டும் 261
- ஐக்கிய அமெரிக்காவில் விசேட முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் 261
- பெற்றார் என்ன செய்யலாம்? 263
    - தர்க்கத்துக்குரிய மூளை 263
    - இசைக்குரிய மூளை 263
    - மொழிக்குரிய மூளை 263
- இஸ்லாத்தில் பாடலும் இசையும் 264
- இஸ்லாத்தில் சித்திரங்களும் சிற்பங்களும் 266
- நடைபயிலும் பருவக் குழந்தைகளின் மூளை விருத்தி 266
    - சூழலின் முக்கிய கோலங்கள் பற்றிக் கவனம் செலுத்துதல் 266
    - தொழிற்பாடுகளில் பங்குபற்றுவதற்குப் பிள்ளைகளைத் தூண்டுதல் 267
    - பிள்ளைகளுடன் உரையாடுவதும் அவர்களுக்குச் சொல்லப்பட்டதை மேலும் விரிவு படுத்துவதும் 267
    - சாதகமான, எதிர்வு கூறக்கூடிய, வெகுமதி தருகின்ற சூழ்நிலையொன்றைப் பேணுதல் 268
    - பயிற்சியை ஊக்குவித்தலும் மீட்டலை வரவேற்றலும் 268
- மனவெழுச்சிகள் பகுத்தறிவை ஒதுக்கித்தள்ளும் விதம் 268
- தாயின் பராமரிப்பு இன்றியமையாதது 270
- எங்களை நாங்களாக மாற்றுவது எது? இயற்கையா, வளர்ப்பு முறையா அல்லது விதியா? 271
- மூளை வளர்ச்சி: ஆண் பிள்ளைகளிலும் பெண் பிள்ளைகளிலும் மனவெழுச்சி ரீதியான செல்வாக்கு 273
- மனித சமுதாயத்தின் வெற்றி ஐந்து வயதுக்கு முன்பே தீர்மானிக்கப் படுகின்றதா?! 274
- தொழிற்பாடு- 40 276

அறிமுகம்

அல்லாஹ் தான், ஒன்றையுமே நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலையில் உங்களுடைய தாய்மாரின் வயிறுகளி லிருந்து உங்களை வெளிப்படுத்தினான். அன்றியும் உங்களுக்கு செவிப்புலனையும் பார்வைகளையும் இதயங்களையும்- நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவதற் காக ஆக்கியுள்ளான்.

(அல்குர்ஆன் 16:78)

எவ்வித அறிவுமின்றியே குழந்தைகள் பிறப்பதாக அல் குர்ஆன் உறுதிப்படுத்து கின்றது. அறிவைப் பெறுவதற்கான கருவிகளை இறைவன் குழந்தைகளுக்கு அருளியுள் ளான். முதலில் கேள்வியினாலும் பின்னர் பார்வையினாலும் இறுதியாக உணர்வுகள், மனவெழுச்சிகள் என்பவற்றின் இருப்பிடமான 'ஃபுஆத்' என்னும் பகுதியாலும் அவை அறிவைப் பெற்றுக் கொள்கின்றன. கேள்விப் புலனுக்குரிய மையம் மூளையின் நடுப் பகுதி யிலும் பார்வைப் புலனுக்குரிய மையம் மூளையின் பின் பகுதியிலும் இருப்பதாக உயிரியல் விளக்குகிறது. இவை இரண்டுக்குமிடையில் மூளையின் ஏனைய மையங்கள் காணப்படு கின்றன. இவையே மனிதனின் அறிவாற்றலை உருவாக்கி அவன் எடுக்கும் தீர்மானங்களின் நியாயத் தன்மைக்கு அவனைப் பொறுப்பாளியாக்குகின்றன. கேள்வி, பார்வை, உணர் வுகள் ஆகிய மூன்றையும் ஒன்றாக இதே ஒழுங்கில் அல் குர்ஆன் மீட்டி மீட்டிக் கூறுவது கவனிக்கத்தக்கது.

ஒரு பிள்ளையின் மூளை எவ்வாறு உருவாகி விருத்தியடைகிறது என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம். இது பிள்ளையின் ஆரம்ப கால அனுபவங்களின் முக்கியத் துவம் பற்றி எம் கவனத்தைக் குவிப்பதோடு, தர்க்கம், கணிதம், இசை, மொழி, மனவெழுச்சிகள் என்பவற்றுக்குரிய மூளையின் சுற்றுக்களை உருவாக்க அவ்வனுபவங் கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளவும் துணைபுரியும். இவ்வாறு புரிந்து கொள்ளும் போது முதலிரண்டு வருடங்களிலும் தாய்ப்பாலூட்டுவது ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதும் எமக்குத் தெளிவாகும்.

வாய்ப்பு மிக்க காலம்

''நாம் குழந்தைகளைச் சரியான முறையில் கையாள வேண்டுமாயின் முதலில் அவர்களின் உயிரியலைப் புரிந்து கொள்ள வேண்டும். மூளையின் வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள நரம்புச் சுற்றுக்கள் குழந்தைப் பருவத்தின் வெவ்வேறு கட்டங்களில் விருத்தியடைகின்றன. இதன் விளைவாக வெவ்வேறு வயதுகளில் வித்தியாசமான நரம்புச் சுற்றுக்கள் வாழ்க்கை அனுபவங்களுக்குக் கூடிய உறுத்துணர்ச்சியைக் காட்டுகின்றன. உங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான தூண்டுதலை, அது தேவைப்படும் நேரத்தில் வழங்குங்கள். இந்நிலையில் எதுவும் நடக்கலாம். நீங்கள் தடுமாறினால் அதன் விளைவு தோல்வியாகவே இருக்கும்'' (Begley, 1996)

மனித மூளை ஏறக்குறைய 1350g நிறையுடையதாக இருப்பினும் அதில் ட்ரில்லியன் கணக்கான நரம்பிணைப்புக்கள் காணப்படுகின்றன. அத்தோடு, தகவல் செயன்முறைப் படுத்தலுக்குரிய பாரிய ஆற்றலையும் அது கொண்டுள்ளது. உலகிலுள்ள ஒவ்வொரு மாநகரத்தையும் கிராமத்தையும் ஒன்றோடொன்று இணைக்கும் வகையில் தனித்தனி

யாகப் பாதைகள் அமைக்கப்பட்டாலும் அப்பாதை வலையமைப்பானது மூளையில் காணப்படும் வலையமைப்புக்களுக்கு நிகராக மாட்டாது. மேலும், இந்நகரங்கள் கிராமங்கள் என்பவற்றுக்கிடையில் இரண்டாவது துணைப்பாதை ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டாலும்கூட மூளையின் வலையமைப்புக்கு நெருங்கி வராது.

மூளை விருத்தியைப் பொறுத்தமட்டிலுள்ள பிரச்சினை என்னவெனில், அதன் நரம்பு வலையமைப்புக்கள் குழந்தைப் பருவத்தின் ஆரம்ப வருடங்களில் உருவாக்கப்படா விட்டால் அதன் பின்பு அவை உருவாவதில்லை. ஆனால், இன்று இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பொன்னான வாய்ப்பு தொடர்ந்தும் தவறவிடப்படுவது பெரும் கவலைக்குரியதே. எனவே, மூளையின் நரம்பிணைப்புக்களை விருத்தி செய்வது எப்படி என்பதை நாம் அறிந்து கொள்வதோடு அவற்றை எமது பிள்ளைகளில் விருத்தி செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதும் அவசியமாகிறது.

தகவல்களை உள்ளெடுப்பதற்கான மூளையின் ஆற்றல்

மூன்று வயதுப் பிள்ளையொன்றின் மூளையினால் எத்தனை உள்ளீடுகளை உள்வாங்கிக் கொள்ள முடியும்? கற்பனைக்கு எட்டக்கூடிய அளவுக்கு அதீத ஆற்றலும் நுணுக்கத் திறனும் மிக்க ஒரு கம்பியூட்டராக மூளையைக் கருதினால் குழந்தையின் சூழலே அதற்குள் அனுபவங்களை உள்ளீடு செய்யும் கீபோட் போன்று தொழிற்படுகின்றது. இந்தக் கம்பியூட்டரின் நினைவகம் பிரமாண்டமான கொள்ளளவு கொண்டது. முதல் மூன்று வருடங்களிலும், பெரிய மனிதச் சேனையொன்றினால் உள்ளீடு செய்யப்படக்கூடிய தகவல்களின் அளவை விடக் கூடுதலாக அதில் களஞ்சியப்படுத்தி வைக்க முடியும். மூன்றாவது அல்லது நான்காவது வருடத்தின் இறுதியாகும் போது இவ்வாறு கற்றுக் கொள்ளும் வீதம் மந்தமடைகிறது. அந்தக் கம்பியூட்டர் தொடர்ந்தும் தகவல்களை உள்வாங்கிக் கொண்ட போதிலும் அதன் செயற்பாட்டு வேகம் குறைந்துவிடும். நாம் முதிர்ச்சி அடையும்போது இச்செயன்முறை தொடர்ந்தும் மந்தமடையும். நாம் முதுமை எய்தும் போது எமது மூளைக் கலங்களும் நரம்பிணைப்புக்களும் சிதைவடையத் தொடங்கும். எனவே, மூன்று வயதின் பின்னர் இந்த வாய்ப்பு தப்பிப் போக முன்பாக அதனை நாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

(Kotulak, 1993)



Rycus and Huges, 1998

நரம்புக் கலங்களினதும் மூளை வலையமைப்புக்களினதும் விருத்தி

"மூளையில் குறுக்கும் நெடுக்குமாக பில்லியன் கணக்கான நரம்புக் கலங்கள் (நியூரோன்கள்) காணப்படுகின்றன. சில நியூரோன்கள் சுவாசத்தைக் கட்டுப்படுத்தல்,

இதயத் துடிப்பை முகாமை செய்தல், உடல் வெப்ப நிலையைச் சீராக்குதல், தெறிவினைகளை உருவாக்குதல் முதலிய பணிகளைச் செய்கின்றன. எனினும், பிறக்கும் போது கோடானு கோடி நியூரோன்கள் பயன்படுத்தப் படாமலேயே இருக்கின்றன. இந்த நியூரோன்கள் பயன்படுத்தப்பட்டால் அவை ஏனைய நியூரோன்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மூளையின் நரம்புச் சுற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு விடுகின்றன. அவை பயன்படுத்தப்படாமல் போனால் சிதைந்து இறந்து போய் விடலாம். குழந்தைப் பருவத்தில் பெறப்படும் அனுபவங்களே எந்த நியூரோன்கள் பயன்படுத்தப்படும் என்பதைத் தீர்மானிக்கும். எனவே, குழந்தையினால் பெறப்படும் அனுபவங்களே அது விவேகமுள்ளதா அல்லது மந்த புத்தியுள்ளதா, பயந்ததா அல்லது தன்னம்பிக்கையுடையதா, பேச்சாற்றலுடையதா அல்லது பேசுவதற்குச் சிரமப்படுமா என்பதைத் தீர்மானிக்கின்றன. ஆரம்பகால அனுபவங்கள் மிக வலுவானவை. அவை, ஒரு மனிதனின் எதிர்காலத்தை முற்றிலும் மாற்றியமைத்து விடக்கூடும்''(Nash, 1997)

முதிர் பருவமாகும் போது மூளையில் 100 பில்லியன்களுக்கு மேற்பட்ட நியூரோன்கள் ஒன்றோடொன்று இணைந்து 100 ட்ரில்லியன்களுக்கும் மேற்பட்ட பிணைப்புக்களை உருவாக்குகின்றன. இந்த இணைப்புக்கள்தான் மூளையின் அபரிமிதமான ஆற்றலுக்குக் காரணமாக இருக்கின்றன. மூளையில் உள்ள நரம்பிணைப்புக்களின் கட்டமைப்பு கருப்பையிலேயே கருக்கட்டிய முட்டையிலுள்ள பரம்பரை அலகுகளால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விடுவதாக நம்பப்பட்டது. எனினும், பரம்பரை அலகுகளில் பாதிக்கு மேற்பட்டவை மைய நரம்புத் தொகுதியின் அமைப்புடனும் செயற்பாட்டுடனும் தொடர்புடையனவாக இருப்பினும், மூளையின் மிகச் சிக்கலான நரம்பிணைப்புக்களைத் தீர்மானிப்பதற்கு அவை போதுமானவையாக இல்லை. எனவே, வேறு ஏதோவொரு காரணி மூளையின் ட்ரில்லியன் கணக்கான நுண் இணைப்புக்களைத் தீர்மானிக்கின்றது. இக்காரணி பிள்ளையின் சூழலே. புற உலகிலிருந்து மூளை பெற்றுக் கொள்ளும் எண்ணிலடங்காச் செய்திகளே இதற்கு அடிப்படையாக உள்ளன.

''மூளையின்நரம்பிணைப்புக்கள் பரவலான இரு கட்டங்களில் உருவாக்கப்படுகின்றன: அனுபவம் தேவைப்படாத ஆரம்ப கட்டம்; அனுபவம் தேவைப்படுகின்ற பிந்திய கட்டம்''
(Carla Shatz, 1996)

எனினும், இணைப்புக்கள் உருவான பின் அவற்றை மூளை தன்வசப்படுத்திக் கொள்வதற்குரிய கால வரையறைகள் இருக்கின்றன. பிறப்புக்கு முன் திறந்து கொண்டு அடுத்தடுத்த வருடங்களில் ஒவ்வொன்றாக மூடிக்கொள்கின்ற வாய்ப்புக்குரிய சாளரங்களைக் கொண்ட இக்காலப்பிரிவு மிக முக்கியமானது..

இதன் விளைவு ஒரு வகையில் நன்மை தருவதாகவும் இன்னொரு வகையில் பிரச்சினைக்குரியதாகவும் இருக்கின்றது. பொருத்தமான நேரத்தில் பொருத்தமான விடயங்களை உள்ளீடு செய்தால் எதனையும் சாதித்துக் கொள்ள முடியும். அந்த வாய்ப்பைத் தவற விட்டால் பிள்ளை குறைபாடுடையதாக மாறக்கூடும். காலம் பிந்திய பின் பள்ளிக்கூடங்களில் வழங்கப்படுகின்ற தீவிரமான அறிவூட்டல்கள் தற்காலிகப் பலன்களையே தரும். இரண்டாம் மொழியொன்றைக் கற்பதைத் தாமதம் செய்வதும் தவறானதே. ''பிற மொழி கற்பிக்கப் படுவது உயர் பள்ளி வரை தாமதிக்கப்பட வேண்டுமென எந்த முட்டாள் தீர்மானித்தான்? அது காலம் கடந்த முயற்சியாகவே இருக்கும்'' என்கிறார் மிச்சிகன் சிறுவர் வைத்தியசாலையைச் சேர்ந்த Dr. Harry Chugani.

பார்வை, கேள்வி, மனவெழுச்சிகள், இயக்கம் என்பவை தொடர்பான மூளையின் மையங்களைப் பின்வருமாறு விவரிக்கலாம்.

பார்வை

பார்வைக்குரிய நரம்புக் கலங்களின் வளர்ச்சி 2 மாதங்களுக்கும் 4 மாதங்களுக்கும் இடைப்பட்ட வயதில் மிகத் துரித மடைகின்றது. இது குழந்தைகள் உலகத்தை நோக்க ஆரம்பிக்கும் காலமாகும். இவ்வளர்ச்சிப் பெருக்கம் 8ம் மாதமளவில் உச்ச நிலையை அடைகிறது. இந்நிலையில் ஒவ்வொரு நரம்புக் கலமும் இன்னும் 1,500 நரம்புக் கலங்களுடன் இணைப்புறுகின்றது. பிறப்பிலேயே தங்களின் விழிவெண்படலம் ஒளி புக விடாததாக இருக்கும் குழந்தையொன்றில் அதன் இரண்டாம் வயதில் சத்திர சிகிச்சை மூலம் அந்நிலை திருத்தப்பட்டாலும் அது தொடர்ந்தும் குருடாகவே இருக்கும். பூனைகளில் செய்யப்பட்ட பார்வை தொடர்பான பரிசோதனைகள் இதனை நிரூபித்துள்ளன.

ஒலி

"பன்னிரண்டு மாதங்களாகும் போது, தமது மொழியில் முக்கியத்துவம் பெறாத ஒலிகளைப் பிள்ளைகள் இழந்து விடுவதோடு, அவர்களது மழலை அவர்களது மொழியின் ஒலிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும்" என்கிறார் வொஷிங்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Patricia Kuhl. ஜப்பானியர்களால் ஏன் 'L' க்குரிய ஒலியையும் 'R' க்குரிய ஒலியையும் வேறு பிரித்தறிய முடியாது என்பதை இது விளக்குகின்றது.

முதல் மொழிக்குப் பின்பு (அதனோடு சேர்த்து அல்ல) இரண்டாம் மொழியொன்றைக் கற்பது மிகக் கஷ்டமாகும். ஏனெனில், மொழிக்குரிய மூளையின் நரம்புச் சுற்றுக்கள் முதலாம் மொழிக்கு ஏற்ப இணைக்கப்பட்ட பின், இணைக்கப்படாது மீதியிருக்கும் நரம்புக் கலங்கள் செயலிழந்து போய் விடுவதனால் இரண்டாம் மொழிக்குத் தேவையான இணைப்புக்களை அமைக்க முடியாது போய் விடுகின்றது. பத்து வயது கடந்த பின் ஒரு பிள்ளைக்கு இரண்டாம் மொழியொன்று கற்பிக்கப்பட்டால் அதனால் அம்மொழியை இயல்பான முறையில் பேச முடியாதிருக்கும். எனவேதான் அறபு மொழி எழுத்துக்களின் ஒலிக்குறிகளைச் சிறப்பாகப் பயிலச் செய்வதற்காகக் குழந்தைப் பருவத்திலேயே அல்குர்ஆன் ஓதுவதைச் செவிமடுக்கச்செய்ய வேண்டியது மிக அவசியமாகிறது.

இந்த அடிப்படை நரம்புச் சுற்றுக்கள் அமைக்கப்பட்ட பின், குழந்தைகள் ஒலிக் குறிகளை வார்த்தைகளாக மாற்றப் பழகுவார்கள். எந்த அளவுக்கு அதிகமான வார்த்தைகளைப் பிள்ளைகள் செவிமடுக்கிறார்களோ அந்த அளவுக்கு வேகமாக அவர்கள் மொழியைக் கற்றுக் கொள்வார்கள். தாய்மார் குழந்தைகளோடு அடிக்கடி பேச வேண்டும். இவ்வாறு பேசப்படும் குழந்தைகள், இந்த விடயத்தில் அக்கறை காட்டாத தாய்மாரின் குழந்தைகளை விடக் கூடுதலான சொற்களை அறிந்து கொள்கின்றன. குழந்தைப் பருவத்திலேயே செவிமடுக்கப்படும் சொற்களின் ஒலிகளுக்கு ஏற்ப புதிய நரம்புச் சுற்றுக்கள் மூளையில் உருவாகின்றன. இவற்றினால் மேலும் கூடுதலான சொற்களை உள்வாங்கிக் கொள்வது சாத்தியமாகின்றது. பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டிய சொற்கள் பெருந்தொகையாக இருப்பதனால் மீண்டும் மீண்டும் சொற்களைக் கேட்பதன் மூலமே அவற்றைக் கிரகித்துக் கொள்ள முடியுமாகிறது. மேலும், குழந்தையோடு அடிக்கடி உரையாடக்கூடிய உடன் பிறந்தவர்கள் கூடுதலாக இருப்பதும் அதன் மொழி வளர்ச்சியைத் துரிதமாக்குகின்றது.

இசை

இளம் வயதிலேயே இசைக்கு அறிமுகப் படுத்துவதானது நரம்புச் சுற்றுக்களை மீள இணைக்கச் செய்கின்றது. நரம்பிசைக் கருவிகளை இசைக்கும் இசைக் கலைஞர்க ளின் மூளைகள் MRI ஸ்கானிங் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, அவர்களுடைய இடது கை விரல்களுக்குரிய மூளையின் பரப்பு ஏனையோரை விடக் குறிப்பிடத்தக்க அளவு பெரிதாக இருப்பது அவதானிக்கப் பட்டது.

கல்வி வழங்குவதற்குரிய ஆற்றல் மிக்க சாதனம் இசையே என பிளேட்டோ குறிப்பிட்டார். இதற்கான காரணத்தை விஞ்ஞானிகள் இப்போது அறிந்து கொண்டுள்ளனர். இசையானது மூளையை உயர் வகையான சிந்தனைக்குப் பயிற்று விக்கிறது என அவர்கள் நம்புகின்றனர். முன்பள்ளி மாணவர்களைக் கொண்ட இரு குழுக்களை அவதானிப்பதன் மூலம் இசையின் ஆற்றல் பற்றி ஆய்வாளர்கள் ஆராய்ந்தனர். அப்பிள்ளைகளில் ஒரு குழுவினர் தினமும் பியானோ இசைப்பதற்குக் கற்றுக் கொண்டதோடு பாடுவதிலும் ஈடுபட்டனர். அடுத்த குழுவினர் அவ்வாறு எதனையும் செய்யவில்லை. எட்டு மாதங்களின் பின்னர் இசை பயின்ற பிள்ளைகள் புதிர்களை விடுவிப்பதில் வல்லமை காட்டியதோடு ஏனைய குழுவினரை விட 80% கூடுதலான புள்ளிகளையும் பெற்றனர். வழங்கப்பட்ட புதிர்கள் இடவெளி தொடர்பான நுண்ணறிவைச் (spatial intelligence) சோதிப்பனவாக இருந்தன.

மேற்சொன்ன திறனானது பிற்காலத்தில் கணிதம் மற்றும் பொறியியல் துறை சார்ந்த சிக்கலான திறன்களாக மாற்றமடைந்தது. ஆரம்ப பருவத்தில் வழங்கப்படும் இசைப்பயிற்சியானது, பிள்ளையின் தர்க்கிக்கும் ஆற்றலை மேம்படுத்தும் என்கிறார் பௌதிகவியல் மேதையான Gordon Show.

மூளையில் இசை, கணிதம், தர்க்கவியல் என்பவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்பொன்று இருப்பது போல் தோன்றுகின்றது. உயர் வகைச் சிந்தனைக்கும் இது போன்ற மூளை அமைப்பே காரணமாக இருக்கின்றது. சிறு பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், தம் பிள்ளைகளுக்கு உயர் கணிதத்தையோ சதுரங்க ஆட்டத்தையோ கற்றுக் கொடுப்பதில்லை. எனினும், சிறுவர்கள் இசையில் ஆர்வம் காட்டுபவர்களாகவும் இசை அமைக்கும் ஆற்றலுடையவர்களாகவும் இருக்கின்றனர். Wisconsin பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Frances Rauscher என்பவர் சில பிள்ளைகளுக்குப் பியானோ பாடத்தையும் இன்னும் சிலருக்குப் பாடலையும் கற்றுக் கொடுத்தார். எட்டு மாதங்களின் பின்னர் பியானோ பாடம் கற்றுக் கொண்டவர்கள் இடம் சார்ந்த நுண்ணறிவில் ஏனையவர்களை விடப் பெருமளவு முன்னேற்றத்தைக் காட்டினர். கேத்திர கணித உருவங்களை வரைதல், புதிரான சிக்கல் வழிகளைக் கண்டு பிடித்தல், இரண்டு நிறத் தொகுதிகளைக் கொண்ட கோலங்களைப் பிரதி பண்ணல் முதலியவற்றுக்குத் தேவையான ஆற்றல்களில் அவர்கள் மேம்பாடு காட்டினர். சாஸ்திரீய சங்கீதத்துக்குச் செவிமடுக்கும் போது பிள்ளையின் மூளைய மேற்பட்டை நரம்புக் கலங்களுக்குப் பயிற்சி கிடைக்கிறது. இதன் விளைவாக கணிதத்திற்குப் பயன்படும் நரம்புச் சுற்றுக்கள் வலிமை அடைகின்றன. மூளையின் இயல்பான கோலங்களை இசை தூண்டி விடுகின்றது. இது சிக்கலான நியாயித்தல் பணிகளை நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலை மேம்படுத்தும்.

ஏதேனும் இசைக் கருவியொன்றை இசைக்கக் கற்றுக் கொள்ளுமாறு பிள்ளைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

பிறப்பும் இசைச் சிகிச்சையும்

ஒரு குழந்தை தன் தாயின் கைகளில் இருக்கும் போது அமைதியடைவது ஏன்? இக்கேள்விக்கு விடை காண்பதற்காக ஆய்வாளர்கள் பின்வரும் பரிசோதனையைச் செய்தார்கள்: பசியில் அழுது கொண்டிருந்த சில குழந்தைகளை ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்ட தாயின் இதயத் துடிப்புக்களும் தாலாட்டுக்களும் ஒலிக்கப்படும் ஓர் அறைக்குள் கொண்டு சென்றனர். அழுது கொண்டிருந்த குழந்தைகள் அமைதியடைந்து விரைவில் உறங்கி விட்டன. (Hicks, 1995)

கர்ப்பத்தின் போது கருப்பையிலுள்ள குழந்தைகள் தாயினது இதயத் துடிப்பின் ஓசைக்குப் பழக்கப்பட்டு விடுகின்றன. குழந்தை பிறந்த பின்னர் பழக்கமாகிவிட்ட இவ்வோசையானது குழந்தைக்கு நிவாரணம் வழங்கும் ஓர் இசை போல் ஆகிவிடுகின்றது. பெரும்பாலான தாய்மார் பாலூட்டும் போது தம்மை அறியாமலேயே குழந்தையைத் தம் இடது கையில் எடுத்து தமது இதயத்துக்கு நேராக அழுத்திப் பிடித்துக் கொள்கின்றனர். இது குழந்தையைத் தேற்ற உதவுகிறது. தாயின் இந்த இயல்பான நடத்தையானது குழந்தைக்கு அவளது இதயத்துடிப்பு வழங்கும் ஆறுதலை மீள வலியுறுத்துகின்றது. (Scars, 1991)

குழந்தையைப் பிரசவிக்கும் வேளையிலும் இசைச் சிகிச்சை பயனளிக்கக் கூடியது. துருக்கியிலுள்ள Bakir Koy மகப்பேற்று வைத்தியசாலையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் போது ஆய்வாளர்கள் பிரசவ வேளை நெருங்கியிருந்த பெண்கள் சிலரைத் தெரிவு செய்திருந்தனர். அப்பெண்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறான இரு அறைகளுக்கு அனுப்பப்பட்டனர். ஓர் அறையில் நீர் சலசலக்கும் ஒலியும் பாரம்பரியமான துருக்கிய புல்லாங்குழல் ஓசையும் ஒலிக்கப்பட்டன. மற்ற அறையில் எவ்வித ஓசையும் இருக்கவில்லை. இசைக்குச் செவிமடுத்த பெண்களில் பிரசவ வலி குறைவாக இருந்ததோடு, அவர்கள் மன அழுத்தங்களின்றி உற்சாகமான மன நிலையிலும் காணப்பட்டனர். (Komurcu, 1999)

நோயாளிகள் ஆரோக்கிய உணர்வைப் பெறவும் அவர்களது தன்னம்பிக்கை உணர்வை அதிகரிக்கச் செய்யவும் இசைச் சிகிச்சை உதவுகின்றது. குருதிச் சுற்றோட்டம், சுவாசம், தசைச் செயற்பாடுகள் முதலியவற்றையும் அது மேம்படுத்துகின்றது. (Davis உம் ஏனையோரும், 2008)

இதே போன்று முஸ்லிம்களும் அல் குர்ஆன் ஓதலையும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் புகழும் கவிதைகளையும் (கவாலி) செவிமடுக்கும் போது பலவித சாதகமான விளைவுகளை அனுபவிக்கின்றனர்.

மனவெழுச்சிகள்

மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தும் நரம்புச் சுற்றுகளுக்குரிய பிரதான நரம்புப் பாதைகள் பிறப்புக்கு முன்பே உருவாக்கப்பட்டு விடுகின்றன. அதன் பின்னர் அவற்றின் விருத்தியைப் பெற்றார் பொறுப்பேற்கின்றனர். பிள்ளையின் பெற்றாரும் அதனைப் பராமரிப்போரும் அதன் உள்ளுணர்வுகளுக்குச் சாதகமான முறையில் எதிர்வினை காட்டுவது இவ்விடயத்தில் வலிமையான செல்வாக்கைக் காட்டும். உதாரணமாக, ஒரு பூனையை அல்லது நாய்க் குட்டியைக் கண்டதும் ஏற்படும் பரபரப்பில் குழந்தை கூச்சலிடும் போது பெற்றார் புன்னகை சிந்தினால் அல்லது அதனை அரவணைத்துக்

கொண்டால் அந்த உணர்ச்சி உறுதிப்பாடடையும். அதேபோன்று, மேலே விமானம் செல்வதைக் கண்டு குழந்தை பரபரப்படையும் போதுகூட, இவரும் அதேபோன்ற பரபரப்பைக் காட்டினால் அந்த மனவெழுச்சிப் போக்கு உறுதியடையும். ஒரு மனவெழுச்சியை உருவாக்குவதற்கும் அதே மனவெழுச்சிக்கு எதிர்வினை காட்டுவதற்கும் மூளையானது ஒரே நரம்புப் பாதையைப் பயன்படுத்துவது போல் தெரிகின்றது. எனவே, ஒரு மனவெழுச்சிக்குப் பிரதி விளைவு காட்டப்படும் போது அதனை உருவாக்கிய மின் இரசாயனத் தூண்டிகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனினும், குழந்தையின் மனவெழுச்சிகள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டாமல் பெற்றோர் மீண்டும் மீண்டும் அசட்டையாக இருந்தால் அல்லது முரண்படும் எதிர்வினைகளைக் காட்டினால் அம்மனவெழுச்சிக்குரிய நரம்புப் பாதைகள் குழப்பமடைந்து உறுதிபெறத் தவறி விடுகின்றன. இங்கு, 'மீண்டும் மீண்டும்' என்பது முக்கியமானது. எதிர்மறையான தனியொரு வார்த்தை பிள்ளைக்கு வாழ்நாள் முழுதும் தீங்கு செய்யாது. அது தொடர்ந்தும் ஒரே கோலத்தில் மீட்டப்படுவதே பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு குழந்தையின் பரபரப்பு மட்டத்திற்கு ஏற்ப அதன் தாய் தொடர்ந்தும் பிரதி விளைவு காட்டத் தவறிய போது அக்குழந்தை மிகவும் மந்த இயல்புள்ளதாகவும் பரபரப்பையோ மகிழ்ச்சியையோ உணர முடியாததாகவும் வளர்ச்சியடைந்தது என்பதையும் ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

மன அழுத்தம் மனவெழுச்சிக்குரிய சுற்றுக்களை மாற்றியமைக்கலாம்

மன அழுத்தமும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களும் மனவெழுச்சிக்குரிய நரம்புச் சுற்றுக்களை மாற்றியமைத்துவிடலாம். இச்சுற்றுக்கள் மூளையின் ஆழத்தில் காணப்படும் வாதுமை வடிவமுள்ள amygdala என்னும் கட்டமைப்பில் காணப்படுகின்றன. உள்ளே வரும் காட்சிகளிலும் ஓசைகளிலும் உள்ள மனவெழுச்சிக்குரிய உள்ளடக்கத்தைத் தேடிப்

பார்ப்பதே இவற்றின் தொழிலாகும். கண்களிலிருந்தும் செவிகளிலிருந்தும் வரும் தூண்டல்கள் பகுத்தறிவுக்கும் சிந்தனைக்குமுரிய மூளையின் பகுதியை அடைய முன்னர் இந்த amygdalaவையே அடைகின்றன. ஒரு காட்சியோ ஓசையோ அனுபவமோ இதற்கு முன்னர் வேதனை தருவதாக அமைந்திருந்தால் - உதாரணமாக, குடி போதையில் வீட்டுக்கு வந்து பிள்ளைகளைத் துன்புறுத்தும் தந்தையின் வரவு - அக்காட்சி அல்லது ஓசை உள்ளே வந்தவுடன் amygdala செயற்படும். என்ன நடக்கிறது என்பதை உயர்மூளை அறிந்து கொள்ள முன்னரே அது நரம்புச் சுற்றுக்களில் சில இரசாயனப் பதார்த்தங்களை அதிகளவில் பாய்ச்சி விடும். இதே நரம்புப் பாதை அடிக்கடி உபயோகிக்கப்படும் போது மனவெழுச்சி தூண்டப்படுவது இலகுவாகிவிடும். உதாரணமாக, தந்தை பற்றிய நினைவே அச்சத்தைத் தூண்டி விடக்கூடும். இச்சுற்றுக்களில் ஏற்படும் பரபரப்பு பல நாட்களுக்கு நீடிக்கக்கூடும். எனவே, மூளை தொடர்ந்தும் உயர் விழிப்பு நிலையில் இருக்கும். இதன் விளைவாக, மூளைய மேற்பட்டையின் விருத்தி பின்னடைவதோடு, மொழி போன்ற சிக்கலான தகவல்களை உள்வாங்கிக் கொள்ளவும் சிரமப்படும்.

அசைவு

கருவிலுள்ள குழந்தையின் அசைவுகள் கர்ப்பத்தின் ஏழாம் வாரத்தில் ஆரம்பித்து 15ம் வாரத்துக்கும் 17ம் வாரத்துக்கும் இடையில் உச்ச நிலையை அடைகின்றன. இக்கால கட்டத்தில்தான் அசைவுகளைக் கட்டுப்படுத்தும் மூளைப் பிரதேசங்களில் நரம்புச் சுற்றுக்கள் உருவாகத் தொடங்குகின்றன. இம்முக்கிய கட்டம் சிறிது காலத்துக்கு நீடிக்கும். உடலின் நிலைகோடலுக்கும் அசைவுக்கும் பொறுப்பான மூளியில் இருக்கும் நரம்புக் கலங்கள் செயற்படக்கூடிய சுற்றுக்களை உருவாக்குவதற்கு இரண்டு வருடங்கள் வரை செல்லலாம். குழந்தை வெளியுலகில் நடமாடும் போது பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இச்சுற்றுக்களின் ஒழுங்கமைப்பு பெருமளவில் இடம்பெறுகின்றது. நீங்கள் பிள்ளையின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்தினால் மூளியில் நரம்பிணைப்புத் தொடர்புகள் உருவாவதைத் தடை செய்கிறீர்கள். பிள்ளை ஆரம்பத்தில் காட்டும் சீரற்ற அசைவுகள், மூளைய மேற்பட்டையிலுள்ள இயக்கத்துக்குரிய பகுதிக்கு சமிக்ஞைகளை அனுப்புகின்றன. கைகள் அதிகமதிகம் அசையும் போது அவ்வசைவுக்குரிய நரம்புச் சுற்றுக்கள் உறுதி பெறுகின்றன. அத்தோடு, அக்கையை விருப்பத்திற்கேற்றவாறு அசைப்பதில் மூளை அதிக தேர்ச்சி பெறுகிறது. இந்த வாய்ப்புக்குரிய காலம் சில வருடங்களே நீடிக்கும். நான்கு வயது வரை அசைய விடாமல் வைக்கப்பட்ட பிள்ளை பிற்காலத்தில் நடக்கப் பழகினாலும் அந்நடை ஒருபோதும் செம்மையானதாக இருக்காது.

உடற் பயிற்சியினால் நன்மை ஏற்படுவது இதயத்துக்கு மட்டுமல்ல; குளுகோஸ் வடிவில் அதிகளவு போசணையை வழங்குதல், நரம்புத் தொடர்புகளை அதிகரிக்கச் செய்தல் என்பவற்றின் மூலம் அது மூளைக்கும் நன்மை பயக்கின்றது. இதன் விளைவாக எல்லா வயதுப் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொள்வது இலகுவாகிறது. உடற்பயிற்சி செய்யும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலும் சிறப்பாகத் தொழிற்படுவார்கள். பிள்ளைகள் வகுப்பறைகளில் வெறுமனே அமர்ந்து கொண்டு கணித வாய்ப்பாடுகளையும் கவிதைகளையும் மனனஞ் செய்துகொண்டிருக்காமல் உடல் சார்ந்த தொழிற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். குறித்த பாட விடயத்தோடு மனவெழுச்சி ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு நீண்ட காலம் நிலைத்திருக்கும்.

பிள்ளைப் பருவத்தில் சொல்லாட்சியும் மனனம் செய்தலும்

அறபு மொழி பேசாத பிள்ளைகள் பலர் அல் குர்ஆனை மனனஞ் செய்து கொள்வது எப்படி என்பதை மேற்சொன்ன உயிரியல் ரீதியான கண்டுபிடிப்புக்கள் விளக்குகின்றன. சில பிள்ளைகள் பத்து வயதுக்கு முன்பே அதனை முற்றாக மனனஞ் செய்கின்றனர். மொழி கற்பதற்குரிய வாய்ப்புக் காலம் பத்து வயதோடு முடிவடைகிறது என்ற அண்மைக்காலக் கண்டு பிடிப்பினை இது உறுதிப்படுத்துகின்றது. நவீன சமுதாயங்களில் இள வயதிலேயே மனனஞ் செய்யும் நடைமுறை கைவிடப்பட்டு வருகிறது. உடல் வளர்வதற்கு உணவு தேவைப்படுவது போல மொழி விருத்திக்கு அத்திவாரமிடுவதற்காக மூளைக்கு மனனம் செய்தல் தேவைப்படுகின்றது. கற்பதற்குரிய வாய்ப்புக்காலம் பன்னிரண்டு வயது வரை நீடிக்கலாம். மூளை எந்த அளவுக்கு குளூகோஸைப் பயன்படுத்துகின்றதோ அந்த அளவுக்கு அது சுறுசுறுப்பாக இயங்கும். நான்கு வயது முதல் பூப்படையும் காலம் வரை சிறுவர்களின் மூளைகள் வளர்ந்தவர்களின் மூளைகளை விட இரு மடங்கு கூடுதலான குளூகோஸைப் பயன்படுத்துகின்றன. எனவேதான் இளம் மூளைகள் புதிய தகவல்களைச் செயன்முறைப்படுத்தும் ஆற்றலை மிகக் கூடுதலாகக் கொண்டிருக்கின்றன. திரிகோண கணிதம் அல்லது பிற மொழிகள் போன்ற சிக்கலான பாடங்கள் மிக இள வயதிலேயே கற்பிக்கப்பட வேண்டும். இரண்டாம் மொழியைக் கற்பதும் அதனை அப்பழுக்கின்றிப் பேசுவதும் ஓர் ஆரம்பப் பள்ளி மாணவனுக்கு மிக இலகுவாக இருக்கும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் 6ம் அல்லது 7ம் வகுப்புக்குப் பின்னரே - கற்பதற்குரிய வாய்ப்புக்காலம் முடிவடைந்த பின்னரே - இரண்டாம் மொழி கற்பிக்கப்படுகிறது.

மூளை மாற்றமடையும் விதம்

உடற்பயிற்சியானது நினைவாற்றலுடன் தொடர்புடைய மூளைப் பிரதேசங்களில் துரித வளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இதனால் அப்பிரதேசங்களின் தொழிற்பாடு மேம்பாடடைகிறது. உடற்பயிற்சி செய்யும் போது நினைவாற்றலுக்குரிய மூளையின் பகுதிகளுக்கு அதிகளவு குருதி பாய்ச்சப்படுவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு குருதி அதிகளவு பாய்வதனால் அப்பகுதியில் புதிய மூளைக் கலங்கள் உற்பத்தியாகின்றன.

பெற்றார் தம் குழந்தைகளோடு சாதகமான முறையில் உரையாட வேண்டும்

ஒரு குடும்பத்தினுள் நிகழும் உரையாடலின் அளவிலேயே அதன் இயல்பு தங்கியிருக்கின்றது. பெற்றாரிடம் அதிகளவில் செல்வமும் கல்வியும் இருக்கும் நிலையில் அவர்கள் தம் பிள்ளைகளுடன் கூடுதலாக உரையாடுகின்றனர். இதனால் அப்பிள்ளைக ளின் சொல்லாட்சி சிறப்பாக விருத்தியடைகிறது. வசதியுள்ள பெற்றாரின் பிள்ளைகள் மூன்று வயதை அடையும் போது 3 கோடிக்கும் கூடுதலான சொற்களைச் செவிமடுத்திருப் பார்கள். இது, வசதி குறைந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் செவிமடுக்கும் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு கூடுதலானது.

மேலும், பெற்றார் பிள்ளைகளோடு உரையாடும் விதத்திலும் குறிப்பிடத்தக்க அளவில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதிகளவு வருமானமும் கல்வியும் உள்ள பெற்றார்கள் நேர் கூற்றாகவே அதிகம் பேசுவதோடு, அப்பேச்சில் வெளிப்படையான அங்கீகாரம் கூடுதலாக இடம் பெற்றிருக்கும். (‘அது நல்லது’; ‘அது சரி’; ‘நான் உங்கள் மீது அன்பு செலுத்துகிறேன்’; ‘நன்றாகச் செய்தீர்கள்’ போன்ற உற்சாகமூட்டும் கருத்துக்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படும்) தொழிலாளர் வர்க்கப் பெற்றார்கள் தம் பிள்ளைகளைப் பொதுவாகப் பாராட்டினாலும் அது அரிதாகவே இடம் பெறுகின்றது. அவர்கள் கூடுதலாக அங்கீகார மறுப்புக் கூற்றுக்களையே பயன்படுத்துகின்றனர். (‘அது கூடாது’; ‘நீ செய்வது தவறு’; ‘அதை நிறுத்து’; ‘அதைக் கைவிடு’; ‘வாயை மூடு’ போன்ற கண்டனக் கூற்றுக்களே அதிகம் உபயோகிக்கப்படுகின்றன) ஏழைப் பெற்றார் தம் பிள்ளைகளை மிக அரிதாகவே பாராட்டுகின்றனர்; அத்தோடு அவர்களை அடிக்கடி விமர்சனமும் கண்டனமும் செய்கின்றனர்.

தாய் தன் குழந்தையோடு உரையாடுமளவுக்குப் பிள்ளையின் சொற்களஞ்சியமும் விரிவடைகின்றது. உயர்தொழில் புரியும் பெற்றோரின் பிள்ளைகள் தொழிலாளர் வர்க்கப் பெற்றோரின் பிள்ளைகளை விட 75% கூடுதலான சொற்களை ஒவ்வொரு மணித்தியால மும் செவிமடுக்கின்றனர். அதேவேளை, வருமானம் குறைந்த பெற்றோரின் பிள்ளைகள் செவிமடுக்கும் சொற்களை விட இது 3 மடங்கு கூடுதலாகும். செல்வந்தர் களுடைய பிள்ளைகளுக்கு வறிய பிள்ளைகளை விட 2- 5 மடங்கு வரை கூடுதலாக சாதகமான பின்னூட்டல் கிடைக்கின்றது. மூன்றாவது வயதில் சோதித்துப் பார்க்கப்பட்ட பொழுது கூடுதலான சொற்களைச் செவிமடுத்த, கூடுதலான நேர் (positive) அனுபவங்க ளைப் பெற்ற பிள்ளைகள், குறைந்தளவு சொற்களைச் செவிமடுத்த குறைந்தளவு நேர் அனுபவங்களைப் பெற்ற பிள்ளைகளை விட நியமச் சோதனைகளில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றனர். குறை வருமானமுடைய பெற்றோரும் தொழிலாளர் வர்க்கப் பெற்றோரும் ஏனைய பெற்றோர்க ளைப் போன்றே தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துகின்றார்கள் என்பது இங்கு கவனிக்கத் தக்கது. (Begley & Wingert, 1997)

ஐக்கிய அமெரிக்காவில் விசேட முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

ஐக்கிய அமெரிக்காவில் Head Start என்ற பெயரில் வறிய பிள்ளைகளுக்கான முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சியொன்று 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், இம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. பிள்ளைகளின் நுண்ணறிவில் ஏற்பட்ட முன்னேற்றம் மூன்று வருடங்களுக்குள் மறைந்து போயிற்று. இரண்டு, மூன்று மற்றும் நான்கு வயதுப் பிள்ளைகள் இதில் சேர்த்துக் கொள்ளப் பட்டமையே இதற்குக் காரணமாகும். இவர்கள் மூளை விருத்திக்குரிய ஆரம்ப வாய்ப்புக் காலத்தைத் தவற விட்ட பின்னரே இதில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

1992 இல் ஆரம்பிக்கப்பட்ட Abecedarian Project என்ற பரீட்சார்த்த நிகழ்ச்சித் திட்டம் 120 வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குத் தீவிரக் கல்விப் பயிற்சி வழங்கியது. இதில் 4 குழுவினர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முதலாம் குழு: 4 மாதங்கள் முதல் 8 வருடங்கள் வரை; இரண்டாம் குழு: 4 மாதங்கள் முதல் 5 வருடங்கள் வரை; மூன்றாம் குழு: 5 மாதங்கள் முதல் 8 வருடங்கள் வரை; நான்காம் குழு: இவர்களுக்கு எவ்விதக் கல்விப் பயிற்சியும் வழங்கப் படவில்லை. (நான்கு மாதக் குழந்தையொன்றுக்கு கல்விப் பயிற்சி வழங்குவது சாத்தியமா என யோசிப்பீர்கள். இங்கு, சிறிய குற்றித் துண்டுகளையும் உருண்டைகளையும் விளையாடக் கொடுத்தல், பிள்ளைகளோடு உரையாடுதல், ஒளித்தலும் தேடுதலும் போன்ற விளையாட்டுக்களில் அவர்களை ஈடுபடுத்தல் முதலியவையே இடம் பெற்றன. பிள்ளைகளின் அறிவு, மொழி, சமூக மற்றும் இயக்க அடிப்படையிலான விருத்தியை மேம்படுத்தக்கூடிய வகையிலேயே இச்செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.)

முன்பள்ளி மாணவர்களாக மேற்சொன்ன நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகள் 15 வயதாகும் போது கணிதத்திலும் வாசிப்பிலும் ஏனைய பிள்ளைகளை விடக் கூடிய புள்ளிகளைப் பெற்றனர். மேலும், இப்பிள்ளைகளின் நுண்ணறிவும் ஏனைய பிள்ளைகளை விடக் கூடுதலாக வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வளவு நேர காலத்தோடு பிள்ளைகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்களோ அந்த அளவுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் நிலைத்திருந்தன. ஐந்து வயதின் பின்னர் இவ்வகையான பயிற்சியை ஆரம்பிப்பதனால் நுண்ணறிவிலோ அறிவுத் திறனிலோ குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இது தொடர்பாக மனதைக் குடையும் கேள்வியொன்று உங்கள் மனதில் எழக்கூடும். ஆரம்பப் பள்ளியிலிருந்து வெளியேற முன்பே உள்ளத்தின் அறிவுசார்ந்த கதவுகள் மூடிக்கொண்டுவிடுமாயின், கல்வி வாய்ப்புக்களைத் தவற விட்ட பிள்ளைகள் விடயத்தில் நாம் முற்றாக நம்பிக்கை இழக்க வேண்டி ஏற்படுமா? வறிய பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய கணிதத் திறமையை ஊக்குவிப்பதற்காக எண்ணிப் பார்ப்பதற்கென மணிகளையோ வேறு பொருட்களையோ அவர்களது பெற்றோர் கொடுத்திருக்க மாட்டார்கள். மேலும், அவர்களது மொழியாற்றலை வளர்ப்பதற்காக அவர்களோடு அதிகம் உரையாடியிருக்கவும் மாட்டார்கள். இவ்வாறான வறிய பிள்ளைகளின் கதி என்ன? ஒரு மட்டத்தில் யோசிக்கும்போது நம்பிக்கை இழக்க வேண்டிய அவசியமில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில், கற்றுக்கொள்வதற்குரிய ஆற்றலை வாழ்நாள் முழுதும் மூளை கொண்டிருக்கும். உதாரணமாக, பிரெஞ்ச் போன்ற பிற மொழியொன்றை உயர் பள்ளிப் பருவத்தில் கற்றுக் கொள்ளாத ஒருவர் வாழ்க்கையின் பிற்பகுதியில் அல்லது ஓய்வு பெற்ற பின் அதனைக் கற்றுத் தேறுவதுண்டு. எனினும், இங்கு பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. முன்பள்ளிக்கு முன்பே மூளை தூண்டிவிடப்படாத பிள்ளைகள் பிற்காலத்தில் ஆற்றல் குறைந்தவர்களாகவே இருப்பார்கள்.

எனவே, இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், நாம் அபரிமிதமான உள்ளார்ந்த ஆற்றல்களுடன் பிறந்த போதிலும் அவற்றை உரிய காலத்தில் விருத்தி செய்து கொள்ளாத வரையில் அவ்வாற்றல்களிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, மூளை எப்படி விருத்தியடைகிறது, அது எவ்வாறு அறிவைத் தேக்கி வைக்கிறது என்பவற்றைப் பெற்றார் தெரிந்து வைத்திருப்பது அவசியம். மேலும், பிள்ளையின் மூளையில் மூன்று அடிப்படைத் திறன்கள் உரிய காலத்தில் மேம்படுத்தப்பட வேண்டும். அவையாவன:

- தர்க்கத்திற்குரிய மூளை (கணிதமும் தர்க்கவியலும்)
- மொழிக்குரிய மூளை
- இசைக்குரிய மூளை

முன்பள்ளிக் கல்வி 4 வயதுக்குப் பதிலாக 3 வயதில் ஆரம்பிக்கப்பட வேண்டும். மூளை விருத்தியில் ஆரம்ப கட்டத்தின் முக்கியத்துவத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாகும். (முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் Tony Blair, 30. 09. 1997)

பெற்றார் என்ன செய்யலாம்?

தர்க்கத்திற்குரிய மூளை

திறன்: *கணிதமும் தர்க்கவியலும்*

கற்பதற்குரிய வாய்ப்புக் காலம்: *பிறப்பு முதல் 4 வருடங்கள் வரை*

நாம் அறிந்துள்ளவை: *கணிதத்துக்குரிய நரம்புச் சுற்றுக்கள் மூளையின் மேற்பட்டையில் இசைக்குரிய சுற்றுக்களுக்கு அண்மையில் அமைந்துள்ளன. மிகச் சிறிய வயதிலேயே ஒன்றும் பலவும் போன்ற எளிய கருத்துப் படிவங்களைக் கற்றுக்கொண்ட பிள்ளைகள் பிற்காலத்தில் கணிதத்தில் நல்ல திறமை காட்டுவார்கள்.*

செயற்பாடு: *சிறு பிள்ளைகளோடு எண்ணுதல் தொடர்பான விளையாட்டுக்களில் ஈடுபடலாம். உதாரணமாக, உணவு வேளைக்குரிய மேசையை ஒழுங்குபடுத்தச் செய்து ஒன்றுக்கு ஒன்று - ஒரு கதிரைக்கு ஒரு தட்டு - என்ற தொடர்பைக் கற்றுக்கொள்ளச் செய்யலாம்.*

இசைக்குரிய மூளை

திறன்: *இசை*

கற்பதற்குரிய வாய்ப்புக் காலம்: *3 முதல் 10 வருடங்கள் வரை*

நாம் அறிந்துள்ளவை: *நரம்புக் கருவிகளை இசைப்பவர்களின் மூளைய மேற்பட்டையில் பெரிய பரப்பொன்று அவர்களுடைய இடது கை விரல்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. புகழ் பெற்ற உயர் தர இசைக் கலைஞர்களுள் மிகச் சிலரே 10 வயது பிந்திய பின் தமது வாத்தியத்தை இசைக்கத் தொடங்கியிருப்பர். வயது வந்த பின் இசைக் கருவியொன்றை இயக்கப் பயில்வது மிகச் சிரமமானது. இசைப் பாடங்கள் இடவெளி சார்ந்த திறன்களின் விருத்திக்கும் உதவுகின்றன.*

செயற்பாடு: *அல் குர்ஆனின் தஜ்வீத் முறையான ஒலிப்பதிவுகள், அதான், இயற்கை ஓசைகள், பறவைகளின் ஒலிகள் முதலியவற்றின் ஒலிப்பதிவுகள் முதலியவற்றைப் பெற்றார் ஒலிக்கச் செய்யலாம். அத்தோடு, அவர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து இசைப் பாடல்களையும் சமயப் பாடல்களையும் பாடலாம். இசைக் கருவிகளைப் பிள்ளைகளுக்கு வழங்கி அவர்கள் அவை தொடர்பாக இயல்பான ஆற்றலையோ ஆர்வத்தையோ காட்டுகிறார்களா என்பதையும் அவதானிக்கலாம்.*

மொழிக்குரிய மூளை

திறன்: *மொழி*

கற்பதற்குரிய வாய்ப்புக்காலம்: *பிறப்பு முதல் 10 வருடங்கள் வரை*

நாம் அறிந்துள்ளவை: *சொற்களை உருவாக்குகின்ற ஒலிக்குறிகளைக் கையாளும் மூளைய மேற்பட்டைப் பிரதேசத்தின் நரம்புச் சுற்றுக்கள் முதலாம் வருடத்திலேயே உருவாக்கப்பட்டுவிடுகின்றன. இரண்டு வயதாகும் வரை பிள்ளைகள் எவ்வளவு கூடுதலான சொற்களைச் செவி மடுக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களது சொற்களஞ்சியமும் பெரிதாகி வளரும். கேள்விப் புலனில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் எழுத்துக்களை அவற்றுக்குரிய ஒலிகளோடு தொடர்பு படுத்துவதைப் பாதிக்கக் கூடும்.*

செயற்பாடு: *பெற்றார் தம் பிள்ளைகளோடு அடிக்கடி உரையாடுவது மிக முக்கியம். தமது பிள்ளை இரண்டாவது மொழியொன்றில் வல்லமை பெற வேண்டுமென அவர்கள் நாடினால் அதனைப் பத்து வயதாகுமுன்பே அறிமுகப்படுத்த வேண்டும். செவியில் ஏற்படும் தொற்றுக்களுக்கு உடனடியாகச் சிகிச்சை வழங்குவதன் மூலம் செவிப்புலனைப் பாதுகாத்துக் கொள்வது அவசியம்.*

இஸ்லாத்தில் பாடலும் இசையும்

இஸ்லாம் பாடலையும் இசையையும் - அவை தீமையையோ காம வெறியையோ தூண்டிவிடாத வரையிலும், ஒருவருடைய விசுவாசத்திற்கும் சமயக் கடமைகளுக்கும் குந்தகம் விளைவிக்காத வரையிலும் - அனுமதிக்கின்றது. நபி (ஸல்) அவர்களின் தோழர்களும் அவர்களின் வழி வந்தவர்களும் பாடல்களுக்கும் இசைக்கும் செவிமடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக, திருமணங்கள், இரு பெருநாட்கள், குடும்ப ஒன்று கூடல்கள், குழந்தை பிறந்ததும் நடத்தப்படும் கொண்டாட்டங்கள் போன்ற மகிழ்ச்சிகரமான வைபவங்களில் பாடல்களும் மேளம், கஞ்சிரா போன்ற இசைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில அபீஸீனியர்கள் நபி (ஸல்) அவர்களுக்காக விளையாடியவாறு நடனமாடிக் கொண்டிருந்ததாகவும் அதனை நபி (ஸல்) அவர்கள் தமது மனைவி ஆயிஷா (றழி) அவர்களை மகிழ்விப்பதற்காக அவர்களோடு சேர்ந்து நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அல் புகாரியும் முஸ்லிமும் அறிவிக்கின்றனர்.

ஆயிஷா (றழி) அவர்கள் பின்வருமாறு அறிவித்தார்கள்:

இரண்டு சிறுமிகள் புஆத் பற்றிய பாடல்களை என்னருகே பாடிக் கொண்டிருந்த போது அல்லாஹ்வின் தூதர் என் வீட்டுக்கு வந்தார்கள். (புஆத் என்பது இஸ்லாத்துக்கு முன்னர் மதீனாவின் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினரிடையே இடம்பெற்ற யுத்தம் பற்றிய கதையாகும்) நபியவர்கள் கட்டிலில் சாய்ந்தவாறு தம் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். அப்போது அங்கு வந்த அபூபக்ர் "அல்லாஹ்வின் தூதரின் முன்னிலையில் செய்த்தானின் கருவியா?" என ஆட்சேபிக்கும் முறையில் என்னை ஏசினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அபூபக்ரை நோக்கியவாறு "அவர்களை அப்படியே விட்டு விடுங்கள்" என்றார்கள். அபூபக்ர் அக்கறை காட்டாதவர் போல் மாறியதும் அவ்விரு சிறுமிகளையும் வெளியே போகுமாறு நான் சைகை செய்தேன். அவர்களும் சென்று விட்டனர். அது ஈத் பெருநாளாகும். அந்நாளில் எதியோப்பியர்கள் தமது ஈட்டிகளோடும் தோல் கேடயங்களோடும் விளையாட்டுக் காட்டுவது வழக்கம். அக்கண்காட்சியைப் பார்க்க வேண்டுமென நான் அல்லாஹ்வின் தூதரிடம் வேண்டிக் கொண்டிருப்பேன் அல்லது அக்கண்காட்சியைப் பார்க்க விருப்பமா என அல்லாஹ்வின் தூதர் என்னிடம் கேட்டிருப்பார். நான் 'சரி' எனப் பதிலளித்தேன். அன்னார் என்னை எனது கன்னம் அன்னாரது கன்னத்தைத் தொடும் வகையில் பின்னால் நிற்கச் செய்து விட்டு "பனூ அர்ஃப்ரிதாவே! (எதியோப்பியர்களே) தொடருங்கள்" எனக் கூறினார்கள். நான் களைப்புற்ற போது "போதுமா?" என அன்னார் கேட்டார்கள். 'ஆம்' என நான் கூறியதும் அன்னார் என்னைப் போகச் சொன்னார்கள். (முஸ்லிம்)

தமது பெண் பிள்ளைகளையும் ஆண் பிள்ளைகளையும் களிப்புற்று வாழ்வதற்குப் பெற்றார் அனுமதிக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு படிப்பினையாக அமைகிறது. அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் பொழுது போக்குகள் கிடைக்காமல் தடுக்கக்கூடாது. இன்று இசையும் ஓவியமும் காமவெறி, போதைப் பொருட் பாவனை, குடிப்பழக்கம் போன்ற தீய செயல்களுக்கு ஊக்கமளிப்பனவாக மாறியுள்ளன. ஏனினும், கல்விக்காகவும் தூய்மையான பொழுது போக்கிற்காகவும் நாம் இசையைப் பயன்படுத்த முடியும்.

இசையையும் பாடலையும் தடை செய்கின்ற ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் எதுவுமில்லை. இசைக்கு எதிராகவும் பாடலுக்கு எதிராகவும் கூறப்படும் ஹதீஸ்கள் கருத்துத் திருத்தம் குறைந்தனவாக அல்லது அறிவிப்பாளர் வரிசையில் திருத்தம் குறைந்தனவாக அல்லது மேற்சொன்ன இருவகைக் குறைபாடுகளையும் கொண்டனவாக இருப்பதனால் அவற்றை அறிஞர் யூஸுஃப் அல் கர்ளாவி நிராகரிக்கின்றார். எக்காலத்திலும் தடைகள் விதிக்கப்பட்டதற்கான குறிப்புக்கள் எதுவும் காணப்பட வில்லை. மேலும், இசையினதும் பாடலினதும் சட்டபூர்வத் தன்மையை நிரூபிப்பதற்கு நபி (ஸல்) அவர்களது காலத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகள் ஆதாரமாக அமைந்துள்ளன. உதாரணமாக:

1. நபி (ஸல்) அவர்களது வீட்டினுள் அபூபக்ர் (றழி) நுழைந்த போது அங்கு இரு பாடகிகள் பாடிக்கொண்டிருப்பதை ஆயிஷா (றழி) அவர்கள் செவிமடுத்துக் கொண்டிருந்தார். "அல்லாஹ்வின் தூதரின் முன்னிலையில் செய்த்தானின் கருவியா?" எனக் கேட்டவாறு அபூபக்ர் (றழி) அவர்கள் அப்பாடகிகளைத் தடுக்க முயன்ற போது "அவர்களை விட்டு விடுங்கள்; இவை பெருநாளுடைய நாட்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
2. ஆயிஷா (றழி) அவர்கள் ஒரு மணப் பெண்ணை அன்ஸாரிகளைச் சேர்ந்த அவளது மணமகனிடம் அழைத்துச் சென்ற போது நபி (ஸல்) அவர்கள் அம்மணப் பெண்ணிடம் "நீர் ஏதும் பொழுது போக்கு நிகழ்ச்சியை ரசித்து மகிழ்ந்தீரா?" எனக் கேட்டார்கள். (அன்ஸாரிகள் கொண்டாட்டங்களில் விருப்பமுடையவராக இருந்தனர்)
3. நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குக் குடி பெயர்ந்த பொழுது அங்கு நினைவில் நிலைக்கக் கூடிய கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இளம் பெண்கள் வெளியே வந்து பாடலிசைத்து அன்னாரை வரவேற்றனர். பனூ அல் நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த பெண்கள் வெளியே வந்து மேளங்களைக் கொட்டியவாறு பாடல் இசைத்தனர். அபூபக்ர் (றழி) அப்பெண்களைத் தடுத்து நிறுத்த முயன்ற போது "அவர்களை விட்டு விடுங்கள்; எங்கள் சன்மார்க்கம் மகிழ்ச்சிகரமானது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
4. உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) மஸ்ஜிதுக்குள் நுழையும் போது அந்த ஈத் பெருநாளன்று நபி (ஸல்) அவர்களினதும் ஆயிஷா (றழி) அவர்களதும் முன்னிலை யில் எதியோப்பியர்கள் தம் ஈட்டிகளுடன் நடனமாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். அதனை அவர் தடுத்து நிறுத்த முயன்ற போது "அவர்களை விட்டு விடுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒவ்வொரு செயலும் அது பற்றிய எண்ணத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படுவதனால் பொய்மைக்கும் தவறான பாதைக்கும் வழிகோலும் எல்லாச் செயல்களும் தவிர்க்கப்பட வேண்டும். காம வெறியைத் தூண்டும் இசையும் ஆபாசப் பாடல்களும் ஏனைய ஆபாசமான அம்சங்களும் நிச்சயமாகத் தடுக்கப்பட்டவையே. தீமைக்கு வழி கோலாத ஏனைய இசைகளும் பாடல்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தாய்ப்பாலூட்டல், இசை என்பன பற்றி இப்ன் ஸீனா

உளவியல் காரணிகளால் உருவாகும் சில காய்ச்சல்கள் இருக்கின்றன என இப்ன் ஸீனா கூறினார்.

தாய்ப்பாலூட்டல்: உளவியலுக்கும் உடல் ஆரோக்கியத்துக்கும் இடையிலுள்ள வலிமையான தொடர்பினை இப்ன் ஸீனா வலியுறுத்தினார். இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் தாய்ப்பாலூட்டலைக் குறிப்பிடலாம். எனவே, சிறந்த செவிலித் தாயொருவரைத் தெரிவு செய்வது பற்றி அவர் அழுத்தம் கொடுத்தார்.

இசை: உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நோயுற்றவர்கள் மீது இசையின் சாதகமான தாக்கம் பற்றி இப்ன் ஸீனா வலியுறுத்தினார்.

இஸ்லாத்தில் சித்திரங்களும் சிற்பங்களும்

உருவப்படங்களும் சிற்பங்களும் - அவை நிர்வாணத்தைக் காட்டுவனவாகவோ தீமைக்கும் ஒழுக்கச் சீர்கேட்டுக்கும் வழிவகுப்பனவாகவோ இல்லாதிருக்கும் வரை - இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் உருவப்படங்களும் சிற்பங்களும் சிலை வழிபாட்டுக்காகவே பயன்படுத்தப்பட்டன. எனவே, நபியவர்கள் அவற்றைத் தடை செய்தார்கள். அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சில வார்த்தைகள் இன்று வித்தியாசமான கருத்துக்களுடன் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, அல் குர்ஆனில் (ஸூறா யூஸுஃபில்) வரும் 'ஸய்யாறாஹ்' என்ற சொல் வணிகத்துக்காகப் பிரயாணம் செய்யும் கூட்டமொன்றைக் குறிக்கின்றது. அதே சொல் இன்று மோட்டார் காரைக் குறிக்கப் பயன்படுகின்றது. இது முற்றிலும் வித்தியாசமான பயன்பாடாகும்.

இதே கோட்பாடுதான் உருவப்படங்களுக்கும் சிற்பங்களுக்கும் பிரயோகிக்கப்படுகின்றது. அவை வரைபுகளாகவோ ஓவியங்களாகவோ புகைப்படங்களாகவோ film ஆகவோ இலக்ட்ரோனிக் திரைகளாகவோ இரு பரிமாண அல்லது முப்பரிமாண சிற்பங்களாகவோ இருக்கலாம். நீண்ட காலமாக உருவப்படங்களையும் சிலைகளையும் பிற சமயத்தினர் வழிபாட்டுக்காகவும் சமயச் சடங்குகளுக்காகவுமே பயன்படுத்தி வந்தனர். எனவே தான், நபி (ஸல்) அவர்கள் சமயத் தொடர்பற்ற இடங்களில் உருவப்படங்களைக் கண்ட போது அவற்றை ஆட்சேபிக்கவில்லை. அதே போன்று சிறுவர்கள் முப்பரிமாணப் பொம்மைகளோடு விளையாடுவதைக் கண்ட போதிலும் அன்னார் அதனைத் தடுக்கவில்லை.

இதே அடிப்படையில்தான் இன்றும் ஓர் உருவப்படமோ சிற்பமோ வழிபாட்டுக்கு உரியதாகப் பயன்படுத்தப்படுமாயின் அது முற்றும் தடை செய்யப்பட்டதாக இருக்கிறது. எனினும் பெரும்பாலான உருவப்படங்களும் சிற்பங்களும் வழிபாட்டுக்குரியனவாக இன்று பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக, அவை விஞ்ஞானம், தொழில் நுட்பம், பொதுத் தொடர்பு ஊடகங்கள், கல்வி, பொழுது போக்கு, பாஸ் போர்ட்கள், அடையாள அட்டைகள், கிரெடிட் கார்ட் முதலியவற்றுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. இப்பயன்பாடுகள் எதுவும் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் தடை செய்யப்படவில்லை. இக்கருவிகள் யாவும் தீமைக்காகவன்றி பயனுள்ள நோக்கங்களுக்காகவே உபயோகிக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு கத்தி பல நன்மையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். அதனை ஒரு போதும் வன்முறைக்காகவோ ஆட்களைக் கொள்வதற்காகவோ உபயோகிக்கக்கூடாது.

நடைபயிலும் பருவக் குழந்தைகளின் மூளை விருத்தி

நடைபயிலும் பருவத்துக் குழந்தைகள் மொழிகளையும் கோலங்களையும் அனைத்து விதமான தொடர்புகளையும் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள். கைக்குழந்தைகளாக இருக்கும் போது செய்தது போல் வெறுமனே வாழ்க்கையை அவதானிப்பதோடு மட்டும் அவர்கள் நின்று விடுவதில்லை; மாறாக, அதன் ஒரு பகுதியாக மாற விரும்புவார்கள். இப்பருவத்துக் குழந்தைகளின் ஆர்வங்களை விருத்தி செய்வதற்காகவும் அவர்களது மூளை விருத்தியில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் பெற்றோருக்கான சில ஆலோசனைகளைக் கீழே தருகின்றோம்.

சூழலின் முக்கிய கோலங்கள் பற்றிக் கவனம் செலுத்துதல்

தொடர் நிகழ்வுகளும் நிலைமைகளும் நடைபயிலும் பருவக் குழந்தைகளுக்கு முக்கியமானவை. அடுத்தடுத்து தொடராக நிகழும் நிகழ்வுகள் இவர்களது மனதில் ஆர்வத்தை ஏற்படுத்தும். இள வயதுப் பிள்ளைகளின் மூளைகள் இயல்பாகவே

இத்தகைய நிகழ்வுகளை காரண- விளைவு தொடர்போடு இணைத்துப் பார்க்கின்றன. பௌதீக நிகழ்வுகளின் சரியான தொடர் ஒழுங்கினைப் பெற்றார் அவர்களுக்கு எடுத்துக் காட்டலாம். (உதாரணமாக, ஒளி, வெப்பம், நீர், புவியீர்ப்பு, காற்று என்பவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகள்) அதே போன்று சமூக வழக்குகளின் தொடர் ஒழுங்குகளையும் (உதாரணமாக, ஒரு வீட்டினுள் நுழைய முன்னர் கதவில் தட்டுதல், சுழற்சி முறையில் செயற்படுதல், 'நன்றி' எனக் கூறுதல்) போன்றவற்றையும் பெற்றார் எடுத்து விளக்கலாம். இப்பருவப் பிள்ளைகள் சுத்தம் செய்தல், சமைத்தல், ஆடை அணிதல் போன்ற பொதுவான பணிகளில் பயன்படுத்தப்படும் ஒழுங்கு முறைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்குவர்.

இரண்டாவது முக்கிய கோலம், நிலைமைகள் பற்றியதாகும். இப்பருவப் பிள்ளைகள் தொடர் நிகழ்வுகளில் காட்டும் ஆர்வத்தை நிலைமைகள் விடயத்தில் காட்ட மாட்டார்கள். எனினும், 13- 19 மாதங்கள் ஆகும் போது இவர்கள் கூட்டமாகத் தொகுக்கக்கூடிய கோலங்களைக் கவனிக்கத் தொடங்குவார்கள். உதாரணமாக, உணவுச் சாலையொன்றுக்கு விஜயம் செய்த அனுபவத்துடன் தொடர்புடைய பொருட்கள், ஆட்கள், நிகழ்வுகள் என்பவை பற்றி அவதானிப்பார்கள். முன்பள்ளிப் பருவத்தை அடையும் போது பிள்ளைகள் இத்தகவல்களைக் கிரகித்துக் கொண்டு பரந்த சூழலுக்குத் தம்மை இசைவாக்கிக் கொள்வார்கள். வித்தியாசமான நிலைமைகளைச் சந்திக்கும் போது அதனோடு தொடர்புடைய 'எவை', 'யார்', 'ஏன்', 'எப்படி' என்பன தொடர்பான தகவல்களைப் பெற்றார் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

தொழிற்பாடுகளில் பங்கு பற்றுவதற்குப் பிள்ளைகளைத் தூண்டுதல்

நேரடியாகப் பங்குபற்றுவதன் மூலம் இடவெளி சார்ந்த கருத்துப் படிவங்களைக் கற்றுக் கொள்வது மிக இலகுவாகிறது. உதாரணமான, 'கீழ்' என்ற சொல்லைப் பயன்படுத்தும் போது பிள்ளையை ஒரு மேசைக்குக் கீழே போகச் செய்தால் அச்சொல்லின் கருத்து நன்றாகப் பதியும். நடைபயிலும் பருவத்துப் பிள்ளைகளை மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பரப்புக்குள் ஒரு சில பொருட்களோடு மாத்திரம் இருக்கச் செய்தால் அவர்களுடைய விருத்தி மந்தமடையும். பெற்றார் முடிந்தளவுக்கு ஒரு வழிகாட்டியாக மாத்திரமே அங்கு செயற்பட வேண்டும். பிள்ளையின் பாதுகாப்பு விடயங்களைக் கவனிப்பதும் அதனோடு முடிந்தளவு இடைத்தாக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதும் அவர்களது பொறுப்பாகும்.

பிள்ளைகளுடன் உரையாடுவதும் அவர்களுக்குச் சொல்லப்பட்டதை மேலும் விரிவு படுத்துவதும்

இப்பருவப் பிள்ளைகளோடு பெற்றார் உரையாடும் போது பிள்ளைகளின் சொற்களஞ்சியம் விருத்தியடைகின்றது. 12- 24 மாதங்கள் வரையான காலத்தில் பொருட்களின் பெயர்களை அறிந்து கொள்வதற்குப் பிள்ளைகள் விரும்புவார்கள். பெற்றார் பொருட்களின் பெயர்களைக் கூறி அவற்றைச் சுட்டிக்காட்டும் போது முடிந்தளவு தெளிவாகவும் திருத்தமாகவும் அதனைச் செய்தல் வேண்டும். உரிய பொருளைத் தொட்டுக் காட்டுவது மொழியைக் கற்பதற்கு உதவும். 'புத்தகம்' என்ற சொல்லை அறிமுகப்படுத்தும் போது பெற்றார் புத்தகமொன்றைத் தூக்கி எடுத்தவாறு ''நான் புத்தகமொன்றை எடுக்கின்றேன்'' எனக் கூறலாம். இதே போன்று பிள்ளைகளிடம் கேள்விகள் கேட்டு அவற்றுக்குப் பிள்ளைகள் தரும் விடையை விரிவாக்கி ஒரு முழு வாக்கியமாகக் கூறும் போது பிள்ளையின் இலக்கண அறிவு விருத்தியடைகின்றது. உதாரணமாக, ''புத்தகம் எங்கே?'' எனத் தாய் கேட்ட கேள்விக்கு ''மேசை'' என்று பிள்ளை ஒரு வார்த்தையில் பதிலளிக்கலாம். உடனே தாய், ''ஆம், புத்தகம் மேசையின் மேல் இருக்கின்றது'' என முழுமையான வாக்கிய அமைப்பொன்றை முன்வைக்க வேண்டும்.

சாதகமான, எதிர்வு கூறக்கூடிய, வெகுமதி தருகின்ற சூழ்நிலையொன்றைப் பேணுதல்

பெற்றார் தம் பிள்ளைகளிடம் காட்டும் உணர்வுகள் அவர்களது மூளையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தளர்ச்சியுற்ற மனநிலையிலிருக்கும் தாய்மாருக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் இடையில் நிகழும் இடைத்தொடர்புகள் அக்குழந்தையின் மூளையில் தாக்கத்தை ஏற்படுத்தி, அத்தாய்மாரின் மனநிலையை ஒத்த செயற்பாடுகளைக் குழந்தைகளில் ஏற்படுத்தின. (Field உம் ஏனையோரும், 1988) மகிழ்ச்சிகரமான, நம்பிக்கைப் போக்குள்ள சூழலானது, மகிழ்ச்சியார்வமும் மனவெழுச்சிரீதியான தாங்கு திறனும் கொண்ட பிள்ளையொன்றை உருவாக்கும். இள வயதுப் பிள்ளைகள் தமது பெற்றாரின் மனவெழுச்சி ஆற்றலுக்கு உட்படுகின்றனர். அத்தோடு அவர்களைப் பராமரிப்பவர்கள் எந்த அளவுக்கு நேர் சிந்தனை உள்ளவர்களாகவும் ஒத்தாசை வழங்குபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது முக்கியமானது. அன்றாடம் செயற்பட வேண்டிய ஒழுங்குமுறை மாறாமலிருந்தால் கற்றல் இலகுவாக்கப்படுவதோடு மனவெழுச்சி ரீதியான பாதுகாப்பும் அதிகரிக்கிறது.

பயிற்சியை ஊக்குவித்தலும் மீட்டலை வரவேற்றலும்

பயிற்சியும் மீட்டலும் மிக முக்கியமானவை. ஒரு குறித்த நிலைமையிலிருந்து பிள்ளை உள்வாங்கிக் கொள்ளும் அறிவின் அளவானது அது தொடர்பாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய மொத்த அறிவின் ஒரு சிறு பகுதியாகவே இருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தாம் கேட்டவற்றில், பார்த்தவற்றில் அல்லது தொட்டுணர்ந்தவற்றில் ஒரு குறித்த கூறினைப் பற்றி மட்டுமே இப்பருவத்தினர் கவனம் செலுத்துகின்றனர். ஏனைய இயல்புகளைப் பற்றி அவர்கள் கவனிக்காது விடுகின்றனர். சூழலின் உண்மையான நிலைமை பற்றி மூளை சிந்தித்துப் புரிந்து கொள்வதற்குக் காலம் எடுக்கும். இச்செயன்முறையைத் துரிதப்படுத்துவதற்குப் பெற்றார் முயற்சிக்க வேண்டியதில்லை. கற்கப்பட வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கத்தான் செய்யும்.

கருவிலுள்ள குழந்தை உங்கள் குரலை அறிந்து கொள்ளுமா?

கர்ப்பத்தின் இறுதி வாரங்களின் போது கருப்பையின் உள்ளேயே சில கற்றல் செயன்முறைகள் இடம்பெறுவதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. சுருட்டப்பட்ட பத்திரிகைத் தாளொன்றினூடாகக் கருவிலுள்ள குழந்தையுடன் தந்தையர்பேச முடியும். இவ்வாறு செய்யின், குழந்தை தன் தந்தையின் குரலுக்குப் பழக்கப்பட்டு விடும். (Henry Biller, 1993)

மனவெழுச்சிகள் பகுத்தறிவை ஒதுக்கித்தள்ளும் விதம்

மெய்யாகவே மனிதன் பதற்றக்காரனாகவே படைக்கப்பட்டுள்ளான். ஏனென்றால், அவனை ஒரு தீங்கு அடைந்தால் (திடுக்கிட்டு) நடுங்குகிறான். *(அல் குர்ஆன் 70: 19- 20)*

எம்மில் பெரும்பாலானோர் வழக்கமாக வன்முறை ரீதியில் எதிர்வினை காட்டாத போதிலும், நாம் அனைவரும் கோபப்படுகிறோம்; அர்த்தமற்ற பயங்களுக்கு இடங் கொடுக்கிறோம் அல்லது காலத்துக்குக் காலம் எமது சொந்த மனவெழுச்சிகளுக்கு அடிபணிந்து விடுகிறோம். சிந்திக்கக்கூடிய மனிதப் பிறவிகள் என்ற வகையில் நாம் ஏன் பகுத்தறிவு ரீதியான சிந்தனையை ஒதுக்கித் தள்ளுவதற்கு எமது மனவெழுச்சிகளுக்கு இடம் கொடுக்கிறோம்?

எமது மூளையிலுள்ள வாதுமை வித்தின் அளவுள்ள amygdala என்ற பகுதியே எமது மனவெழுச்சிகளின் உறைவிடமாக இருக்கின்றது. இது ஒரு வீட்டின் பாதுகாப்பு அமைப்பு போலத் தொழிற்படுகிறது. எமது புலன்களினூடாக அச்சமூட்டக்கூடிய அல்லது நோவினை செய்யக்கூடிய ஏதேனும் வருகிறதா என்பதை அது தேடிப் பார்த்துக் கொண்டே இருக்கிறது.

ஏதேனும் ஆபத்தை உணர்ந்து கொண்டால் amygdala உடனடியாகச் செயற்பட்டு மூளையின் பிரதான பகுதிகள் அனைத்திற்கும் அவசர எச்சரிக்கை அறிவிப்புக்களை அனுப்பி வைக்கிறது. இந்நிலையில் உடலானது போராடுவதற்கு அல்லது தப்பியோடு வதற்குத் தயாராகின்றது. இதயத் துடிப்பு வீதமும் குருதியமுக்கமும் அதிகரிப்பதோடு சுவாசமும் மந்தமடையும். நினைவுத் தொகுதியும் துரிதமாகச் செயற்படத் தொடங்கி ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பான அறிவேதும் ஏற்கனவே களஞ்சியப்படுத்தப் பட்டிருக்கின்றதா எனத் தேடிப் பார்க்கும்.

மனவெழுச்சி சார்ந்த நினைவுகளின் களஞ்சிய சாலையாகவும் amygdala செயற்படுகிறது. அதில் சேகரிக்கப்பட்டுள்ள நினைவுகள் உயிரோட்டமுடையனவாக இருக்கும். மூளையில் இரு வகையான நினைவுத் தொகுதிகள் இருக்கின்றன. ஒன்று சாதாரண விடயங்களுக்குரியது; மற்றது மனவெழுச்சிச் செறிவு கூடிய விடயங்களுக்குரியது.

சில வேளைகளில் amygdala தவறான எச்சரிக்கை அறிவிப்புக்களை அனுப்புவதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அது தூண்டிவிடும் பதற்ற உணர்வு முன்னைய அனுபவ மொன்றின் நினைவுகளோடு தொடர்புற்றிருக்கும். ஆனால், தற்போதைய நிலைக்கு அது பொருந்தாததாக இருக்கலாம். உதாரணமாக, குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட அதிர்ச்சிக் காயங்கள் பற்றிய மனப் பதிவுகள் வயது வந்த பின்னரும் தீவிரமான மனவெழுச்சிக்குரிய எதிர்வினைகளைத் தூண்டிவிடலாம். சிந்தனைக்கும் பகுப்பாய்வுக்குமுரிய மூளையின் மேற்பட்டையானது amygdalaவின் திடீர்ச் செயற்பாடுகளை ஓரளவு மந்தமாக்கும் ஆளியாகத் தொழிற்படுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மூளைய மேற்பட்டையின் இப்பகுதியே நாம் காட்டும் எதிர்வினைகளைக் கட்டுப்படுத்துகின்றது. எனினும், இப்பகுதியினால் தகவல்கள் செயன்முறைப் படுத்தப்படுவதற்குக்கூடிய காலம் எடுக்கின் றது. இதன் விளைவாக, என்ன நடந்துள்ளது என்பதை மூளைய மேற்பட்டை அறிந்து கொள்ள முன்னரே amygdala வினால் தூண்டப்பட்ட மனவெழுச்சிகள் உடனடியாகச் செயற்படுகின்றன. இதன் காரணமாகவே பகுத்தறிவை மனவெழுச்சிகள் வெற்றி கொள்ள வழியேற்படுகின்றது.

பெரும்பாலானவர்கள் குழந்தைகளாக இருக்கும் போதே மிதமிஞ்சிய மனவெழுச்சிக் குரிய எதிர்ச்செயல்களைத் தவிர்த்துக் கொள்வதற்குக் கற்கின்றனர். தம்மைச் சூழ ஒத்தாசை வழங்கக்கூடிய, கரிசனை காட்டும் வளர்ந்தவர்கள் இருக்கும் போது சுய ஒழுங்கையும் அடுத்தவர் நிலையைப் புரிந்து கொள்ளும் இயல்பையும் விருத்தி செய்து கொள்வதற்குத் தேவையான சமூக ரீதியான உதவிக் குறிப்புக்களைக் குழந்தைகள் பெற்றுக் கொள்கின்ற னர்.

வொஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr. Geraldine Dawson என்பவரின் கூற்றுப்படி, மனவெழுச்சி விருத்திக்குரிய பிரதான காலம் 8- 18 மாதங்கள் வரையாகும்.

இக்காலத்தில் தான் குழந்தைகள் தம் முதலாவது வலிமையான பற்றுறவுகளை உருவாக்கிக் கொள்கின்றன. குழந்தைகளின் அறிவுசார் விருத்தியைப் போன்றே மனவெழுச்சிக்குரிய விருத்தியும் குமரப் பருவத்திற்கும் அதற்கு அப்பாலும் நீண்டு செல்கின்றது. அதேவேளை, காலப்போக்கில் அது குறுகியும் விடுகிறது. பல்வேறு வேதனை தரும் அனுபவங்களுக்கு (துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, வன்முறை போன்றவற்றின் மூலம்) முகம் கொடுத்த பிள்ளைகள் பிற்காலத்தில் சமூக விரோத, நாசகார எதிர்வினைகளை வெளிக்காட்டக் கூடும்.

தாயின் பராமரிப்பு இன்றியமையாதது

தாய்மார் தமக்குச் சாத்தியமாயின் இரண்டு வருடங்கள் வரை தம் குழந்தைகளுக்குப் பாலூட்ட வேண்டுமென அல்குர்ஆன் கூறுகின்றது. குழந்தையின் அறிவு மற்றும் மனவெழுச்சிக்குரிய முக்கியமான விருத்திக் கட்டங்களில் தாயின் முதலீடு பாரிய வெகுமதிகளைத் தரும்.

ஒரு குழந்தையின் விருத்தியில் அவசியமான கேந்திர பங்களிப்பைத் தாய் வழங்குகிறாள். தொழில் புரியும் தாய்மார் தம் குழந்தைகளின் முதல் வருடங்களில் 'தாம் தொழில் புரியத்தான் வேண்டுமா?' என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். மகிழ்ச்சிகரமான, நல்ல சமநிலையுள்ள பிள்ளையொன்றுக்காகச் சில லௌகீக நன்மைகளைத் தியாகம் செய்வது பயனுடையதே. வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காகக் கட்டாயம் தொழில் புரிய வேண்டிய தாய்மாருக்கு பகுதி நேரத் தொழில் புரிவதற்குரிய அல்லது வீட்டிலிருந்து தொழில் புரிவதற்குரிய வாய்ப்புக்கள் முடிந்தளவில் வழங்கப்பட வேண்டும். அவர்களது கணவன்மாரும் உறவினர்களும் நண்பர்களும் அயலவர்களும் தம்மால் இயன்ற அளவுக்கு அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டும்.

எது எப்படி இருந்தாலும், எல்லாக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான முறையில், உளவியல்ரீதியாக இசைவாக்கம் அடைவதற்குத் தேவையான ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது. தனியாகப் பிள்ளை வளர்க்கும் பொறுப்புடைய முழு நேரத் தொழில் புரியும் பெற்றாரொருவர்கூட ஆரோக்கியமான முறையில் பிள்ளையொன்றை வளர்த்தெடுக்க முடியும். வெற்றிகரமாகப் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்குரிய செயற்பாடுகளுக்குப் பண்புரீதியான நேரம் தேவை என்பதையே இந்நூல் வலியுறுத்த முனைகின்றது. தொழில் புரியும் தாய்மாரினால் முழு நேரத் தாய்மாரைவிடக் குறைந்தளவு நேரத்தையே தம் பிள்ளைகளுடன் செலவு செய்ய முடிகிறது. முழு நேரத் தாய்மார்கள் சரியான முறையில் பயிற்சியைப் பெற்றிருந்தால் தொழில் புரியும் தாய்மாரோடு ஒப்பிடுகையில் ஆரோக்கியமான, உளவியல்ரீதியில் நன்கு இசைவாக் கமடைந்த பிள்ளைகளை உருவாக்கும் வாய்ப்பினைக் கூடுதலாகப் பெற்றிருக்கின்றனர். எனினும், தொழில் புரியும் தாயொருவருக்கு உதவி வழங்கக்கூடிய விரிந்த

குடும்பம் இருந்து, அவரது வேலைத்தளமும் குடும்ப நேசம் மிக்கதாக இருப்பின் நிலைமை வேறு விதமாக அமையலாம். பிள்ளைகளோடு பண்புரீதியான நேரத்தை எவ்வாறு கழிப்பது என்பதை அறியாத, பயிற்சி ஏதும் பெறாத முழு நேரத் தாயொருவரை விடச் சிறப்பான முறையில் அவர் பிள்ளையொன்றை வளர்க்க முடியும்.

எங்களை நாங்களாக மாற்றுவது எது? இயற்கையா, வளர்ப்பு முறையா அல்லது விதியா?

ஒருவரின் இயல்புகளைத் தீர்மானிப்பது இயற்கையா அல்லது வளர்ப்பு முறையா என இப்போது விஞ்ஞானிகள் யோசிப்பதில்லை. பரம்பரை அலகுகளும் சுற்றாடலும் எவ்வாறு இடைத்தாக்கம் புரிகின்றன என்பது பற்றியே அவர்கள் கவனம் செலுத்துகின்றனர். எனவே, இயற்கைக்கும் வளர்ப்பு முறைக்கும் இடையில் போட்டி நிகழ்கிறது என நினைப்பதற்குப் பதிலாக அவை இரண்டும் ஒன்று சேர்ந்து நாட்டியமாடுவதாகவே நாம் கருத வேண்டும். **வளர்ப்பு முறை, இயற்கையினூடாக தொழிற்படும் அதேவேளையில் இயற்கை, வளர்ப்பு முறையினூடாகத் தொழிற்படுகின்றது.**

ஒருவர் பெற்றுக் கொள்ளும் இயல்புக் கூறுகள் விந்திலிருந்தும் முட்டையிலிருந்துமே ஆரம்பிக்கின்றன. விந்துக் கலங்களிலும் முட்டைக் கலங்களிலும் குரோமஸோம்கள் (நிறமூர்த்தங்கள்) எனப்படும் நுண்ணிய கட்டுப்பாட்டு மையங்கள் காணப்படுகின்றன. இவையே பெற்றோரிலிருந்து தகவல்களைக் குழந்தைக் கலத்துக்குக் கொண்டு செல்கின்றன. ஒவ்வொரு மனித முட்டைக் கலத்திலும் விந்துக் கலத்திலும் 23 தனிக் குரோமஸோம்கள் காணப்படுகின்றன. அவை ஒன்றிணையும் போது 23 சோடி (46) குரோமஸோம்கள் உருவாகின்றன. குரோமஸோம்களிலுள்ள மிக நுண்ணிய தகவல் கூறுகள், மரபணுக்கள் அல்லது பரம்பரையலகுகள் எனப்படுகின்றன. இவை DNA மூலக்கூறுகளால் ஆக்கப்பட்டவை. கண்களின் நிறம் முதல் பாதங்களின் பருமன், வடிவம் என்பன வரையும் எல்லா விதமான உடல் மற்றும் உள ஆற்றல்களையும் தீர்மானிக்கின்ற சுமார் 30,000 பரம்பரை அலகுகள் மனிதனில் காணப்படுகின்றன. இவற்றுள் சில பரம்பரை அலகுகள் இயல்பாகவே வலிமையுள்ளவை. இவை **'ஆட்சியுடைய'** பரம்பரை அலகுகள் எனப்படும். ஏனையவை நலிவானவை. அவை **'பின்னிடைவான'** பரம்பரை அலகுகள் எனப்படும்.

தமது முழுநேர வேலையையும் முழுநேரப் பிள்ளை வளர்ப்பையும் ஒரே வேளையில் சமாளிக்கலாம் எனச் சில தாய்மார் நினைக்கின்றனர். இது சாத்தியமானதல்ல. அவர்கள் தாய்மாராகி விட்டால் அவர்களுக்குரிய தெரிவு முடிவு செய்யப்பட்டு விடுகிறது; அவர்களுடைய தொழிலை விடப் பிள்ளைகளே முக்கியத்துவம் பெற வேண்டும். தொழில் புரியாத குடும்பத் தலைவிகள், தாய்மார் முதலியோரைப் பற்றி இழிவாக நோக்கும் சமூக மனப்பாங்குகள் நிராகரிக்கப்பட வேண்டும். பிள்ளைப் பருவத்தையும் தாய்மைப் பருவத்தையும் மெய்யாகவே போற்றிக் கொண்டாடும் நிலைமை ஏற்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, கபில நிறக் கண்களுக்குரிய பரம்பரை அலகுகள் ஆட்சியுடையன வாகவும் நீல நிறக் கண்களுக்குரிய பரம்பரை அலகுகள் பின்னிடைவானவையாகவும் உள்ளன. கபில நிறக் கண்களைக் கொண்ட ஓர் ஆண் நீல நிறக் கண்களைக் கொண்ட ஒரு பெண்ணை மணமுடித்தால், அவர்களது பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் கபில நிறக் கண்களையே கொண்டிருப்பர். இதற்குக் காரணம், கபில நிறக் கண்களுக்குரிய பரம்பரை அலகுகள் ஆட்சியுடையனவாக இருப்பதாகும். அதே பரம்பரையில் வரும் பிள்ளைகளுள் ஒரு சிலரிடம் நீல நிறக் கண்கள் இருக்கக் கூடும். ஒவ்வொரு பிள்ளையிடமும் பல பரம்பரைகளாகத் தாயின் குடும்பத்திலிருந்தும் தந்தையின் குடும்பத்திலிருந்தும் வழிவந்த

ஆட்சியுடைய பரம்பரை அலகுகளும் பின்னிடைவான பரம்பரை அலகுகளும் கலந்த அமைப்பொன்று காணப்படும்.

ஒரு குழந்தை எப்படியான ஒருவராக மாறும் என்பதைப் பரம்பரை அலகுகள் மாத்திரம் தீர்மானிப்பதில்லை. இவ்விடயத்தில் சுக நலப் பராமரிப்பு, வளர்ப்பு முறை, கல்வி என்பனவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பிள்ளையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்ற பரம்பரையலகு சாராத இக்காரணிகள் அனைத்தையுமே குழந்தையின் சூழல் என்கிறோம். பரம்பரை அலகுகளைப் போன்றே சூழலும் மிக முக்கியமானது. உதாரணமாக, வறிய, கல்வியறிவற்ற குடும்பமொன்றின் பிள்ளைகளுக்குச் சரியான போசணையும் நல்ல கல்வியும் பிறப்பு முதலே வழங்கப்பட்டால் அவர்கள் தம் பெற்றோரை விட விவேகம் மிக்கவர்களாக வளரக்கூடும். பெரும்பாலான எமது பழக்க வழக்கங்களும் நடத்தையும் சூழலிலிருந்தே கற்றுக் கொள்ளப் படுகின்றன. உதாரணமாக, சீனக் குழந்தையொன்று ஐரோப்பிய இல்லமொன்றில் வளர்க்கப்பட்டால், இதனிடம் சீனருக்குரிய பரம்பரை அலகுகள் இருந்த போதிலும் வளர்ந்த பின் அது முற்றிலும் ஐரோப்பியப் பிள்ளையொன்றைப் போன்றே நடந்து கொள்ளும். ஒரு பிள்ளை பிறப்பிலேயே பிடிவாதமும் சுதந்திரப் போக்கும் உடையதாக இருக்கலாம். ஆனால், எப்படி வளர்க்கப்படுகிறது என்பதைப் பொறுத்து அது கெட்டுப்போன, நெகிழ்வுத் தன்மையற்ற ஒருவராகவோ பெரிய சாதனைகளைப் புரியக்கூடிய திட சித்தமும் பண்புகளும் உள்ள ஒருவராகவோ மாறக்கூடும். ஒரு பிள்ளையின் சூழலில் சிறந்த பழக்க வழக்கங்களும் ஒழுக்க சீலமும் அன்பும் கருணையும் காணப்படுவது மிக முக்கியமாகும். அனாதை இல்லங்களில் வளரும் பிள்ளைகளுக்கு நல்ல உணவும் உடல் ரீதியான பராமரிப்பும் கிடைத்த போதிலும் அவர்களுக்குத் தேவையான அன்பும் கவனிப்பும் அங்கே கிடைப்பதில்லை. இவ்வாறு வளரும் பிள்ளைகள் பிற்காலத்தில் சமூக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகி விடுவர்.

நாம் எப்படியானவர்களாக ஆவோம் என்பதைத் தீர்மானிப்பதில் பரம்பரை அலகுகளுக்கும் சூழலுக்கும் அப்பாற்பட்ட வேறு இரு காரணிகள் பங்கு கொள்கின்றன. எமது தனிப்பட்ட விருப்பார்வமும் இறைவன் எமக்கென எழுதி வைத்துள்ள விதியுமே (இறைவனின் நாட்டமே) அவை. எமது வாழ்க்கையின் குறிப்பிட்ட சில விடயங்கள் இறைவனால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டன என்ற நம்பிக்கை நியதிவாதம் எனப்படும். ஒருவனின் சொந்தக் கட்டுப்பாட்டில் அடங்காத விடயங்களையே அவனது விதி என்கிறோம். ஒருவருடைய உடல், உள ஆற்றல்கள், குடும்பம், பால், நிறம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகள் முதலியன இதில் அடங்கும். பரம்பரையும் சூழலும் விதியும் ஒன்றிணைந்து ஒவ்வோர் ஆத்மாவுக்கும் ஒரு சோதனையாக உருவெடுக்கின்றன. எமக்குத் தரப்பட்டுள்ள சுதந்திரமான விருப்பாற்றலைப் பயன்படுத்தி எமது வாழ்க்கையைச் சிறப்புடையதாக ஆக்கிக் கொள்வதே எம் எதிரே உள்ள சவாலாகும். இறுதித் தீர்ப்பு நாளில் நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனிடம் மீளுவோம்; எமக்குத் தரப்பட்ட அனைத்து விடயங்களையும் கொண்டு நாம் என்ன சாதித்தோம் என அவன் வினவுவான்.

தக்காளியின் அமிலத் தன்மை போன்ற எளிய இயல்பொன்று கூட தனியொரு பரம்பரை அலகினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. இவ்வியல்பு சுமார் 30 பரம்பரை அலகுகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் விளைவாக உருவாகிறது. அதே போன்று உடல், உளப் பாங்குகளையும் உளவியல் ரீதியான போக்குகளையும் பல பரம்பரை அலகுகள் ஒன்றிணைந்தே உருவாக்குகின்றன. அதாவது, மொத்த விளைவுக்கு ஒவ்வொரு பரம்பரை அலகும் சிறு அளவில் பங்களிப்புச் செய்கின்றது. DNA மூலக்கூறுகள் adenine, guanine, cytosine, thiamine ஆகிய நான்கு இரசாயனப் பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளன.

எனவே, அவை மில்லியன் கணக்கான விதங்களில் ஒன்றிணைந்து மனிதப் பரம்பரை அலகொன்றை உருவாக்கலாம். மனித மூளையின் இரசாயன அமைப்பைப் பரம்பரை அலகுகள் மாத்திரம் கட்டுப்படுத்துவதில்லை. இப்பரம்பரை அலகுகள் தம்மை வெளிப்படுத்தும் விதத்தைச் சூழல் காரணிகளே தீர்மானிக்கின்றன.

கண்களின் நிறம், உயரம், பாதத்தின் பருமன், மூக்கு, செவிகள் என்பவற்றின் வடிவம், கைவிரல்களின் வடிவமும் நீளமும் போன்ற உடல் சார்ந்த இயல்புகளுக்குப் பரம்பரை அலகுகளே காரணம் என நாம் அறிகிறோம். எனினும், எமது ஆளுமைப் பண்புகளிலும் இயல்புகளிலும் பரம்பரை எந்த அளவுக்குச் செல்வாக்குச் செலுத்துகிறது, சூழல் எந்த அளவுக்குச் செல்வாக்குச் செலுத்துகிறது என்பது பற்றித் தீர்மானிப்பது மிகச் சிரமம். தலைமைத்துவ ஆற்றல்கள், கற்பனை வளம், உள அழுத்த நிலை, துணிவு, பிடிவாதத் தன்மை, கலைத் திறமைகள், ஆக்கிரமிப்புத் தன்மை, சமூகவியல்பு, அன்பு, கவலை, ஆபத்துக்களை எதிர்கொள்வதற்குரிய தயார் நிலை, நேர்மை, உளத் தூண்டுதலின் படி செயற்படும் தன்மை, திறந்த மனப்பான்மை, பழைமை பேணும் போக்கு, முற்போக்கியல்பு, பகைமை, நுண்ணறிவு, மனோ நிலை, உடல், உளப் பாங்குகள், கண்டறியும் ஆவல், நம்பிக்கை, பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், தீர்மானமெடுக்கும் ஆற்றல் முதலிய பண்புகளும் இயல்புகளும் பரம்பரை, சூழல் ஆகிய இரண்டினதும் செல்வாக்குக்கு உட்பட்டுள்ளன.

இறைவனின் எவ்வளவு அற்புதமான படைப்புக்களாக நாம் இருக்கின்றோம்!!

நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகான அமைப்பில் படைத்திருக்கின்றோம். (அவனுடைய தீய நடத்தையின் காரணமாகப்) பின்னர் அவனைத் தாழ்ந்தவர்களிலும் தாழ்ந்தவனாக நாம் ஆக்கி விடுகின்றோம். ஆயினும், எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்து வருகிறார்களோ, அவர்களைத் தவிர (அவர்கள் மேலான தன்மையில் இருப்பதுடன்) அவர்களுக்கு (என்றென்றுமே) தடைப்படாத (நற்)கூலியுண்டு. (அல் குர்ஆன் 95: 4- 6)

மூளை வளர்ச்சி: ஆண் பிள்ளைகளிலும் பெண் பிள்ளைகளிலும் மனவெழுச்சி ரீதியான செல்வாக்கு

மூளை வளர்ச்சி: *மூளையின் பருமன் முதலாவது வருடத்தில் இரு மடங்காகிறது. அதற்குப் பின்னர் மீண்டும் இரு மடங்காகி றது.* பிறக்கும் போது தனித்துச் செயற்பட முடியாதவர்களாக எமது மூளை எம்மை ஆக்கி விடுகிறது. ஆனால், அதனால் கிடைக்கும் நெகிழ்வுத் தன்மையோ வேறெந்த விலங்கினத்திற்கும் கிடைப்பதில்லை. ஏனைய விலங்குகளோடு ஒப்பிடும் போது நாம் மிகக் குறைந்த அறிவுடனேயே பிறக்கிறோம். எனவே, நிறைய அனுபவங்களைப் பெறக் கூடிய வாய்ப்பு எமக்குக் கிடைக்கிறது. நாம் பிறந்தது முதல் எமக்கு நிகழும் அத்தனை விடயங்களும் பாரிய செல்வாக்குடையன வாக மாறுகின்றன.

ஆண் பிள்ளைகளிலும் பெண் பிள்ளைகளி லும் மனவெழுச்சி ரீதியான செல்வாக்கு: ஆரம்ப வயதுகளில் மனவெழுச்சி ரீதியான தொடர்புகள் மிக

மிக முக்கியமானவை. பாசக் குறைபாடு, உடல் சார்ந்த மோசமான விளைவுகளை உருவாக்கும். எப்போதும் மகிழ்ச்சியாகவும் பாசத்தோடும் விளங்கும் தாய்மாரின் குழந்தைகளை விட, உளச் சோர்வுற்ற தாய்மாரின் குழந்தைகளின் மூளையில் அனுசேப மட்டங்கள் வீழ்ச்சியடைவது அறியப்பட்டுள்ளது. உளச்சோர்வினால் பாதிக்கப்பட்ட தாய்மாரின் பிள்ளைகளில் சாதாரண மூளை விருத்தி ஏற்படுவதில்லை. அன்பு கிடைக்கப்பெறாத குழந்தைகள் மூன்று வயதை அடையும் போது கோபம், ஆக்கிரமிப்பு நடத்தை போன்றவற்றின் அறிகுறிகளைக் காட்டத் தொடங்குகின்றன. சந்தோசமற்ற குழந்தைப் பருவத்தின் விளைவாக வயது வந்த பின் சந்தோசக் குறைபாடும் எதிர்மறைச் செயற்பாடுகளுக்கான போக்கும் உருவாகின்றன.

பொதுவாக வழங்கப்படுவதை விடக் கூடுதலான தொடுகையும், பாடல்களும் மனவெழுச்சிசார் ஆதரவும் ஆண் பிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்றன. பெண் பிள்ளைகள் விடயத்தில் போலன்றி ஆண் பிள்ளைகளுடனான தொடர்பைப் பெற்றார் முன்கூட்டியே அறுத்துக் கொள்வது இதற்கொரு காரணமாக இருக்கலாம். இவ்வாறு செய்வதனால் ஆண் பிள்ளைகள் சுயாதீனத்தை நோக்கி விரைவாகத் தள்ளப்படுகின்றனர். அவர்கள் வளர்ந்த பின் இதனை மறந்து விட்டாலும் இதனால் ஏற்படும் மனவெழுச்சி சார்ந்த சேதம் தொடர்ந்தும் அவர்களைப் பாதித்துக் கொண்டிருக்கும்.

மனித சமுதாயத்தின் வெற்றி ஐந்து வயதுக்கு முன்பே தீர்மானிக்கப்படுகின்றதா?!

ஒரு சமுதாயத்தின் வெற்றி மூளையின் விருத்தியில் தங்கியுள்ளதா? மனிதனின் அடிப்படைக் கட்டமைப்பு (எலும்புக்கூடு) பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. இப்பரம்பரை அலகுகள் ஏற்கனவே அமையப் பெற்று விட்டதனால் அது தொடர்பாக நாம் எதுவும் செய்ய முடியாது. மனித சமுதாயத்தின் உண்மையான பயன்பாடும் உற்பத்தித் திறனும் மனித மூளையில்தான் தங்கியுள்ளன. பிள்ளையின் மூளையில் கோடான கோடி நரம்பிணைப்புக்கள் பத்தாம் வயதுக்கு முன்பே உருவாகி விடுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை மூன்றாம் வயதுக்கு முன்பு உருவாகின்றன. எனவே, தமது குழந்தைகளின் பராமரிப்பில் கூடிய கவனம் செலுத்தும் சமுதாயங்களே வெற்றி பெறுவதற்கான பெரும் வாய்ப்பைப் பெறுகின்றன. குழந்தைப் பருவத்தில் செய்யப்பட வேண்டியவற்றைச் செய்வதற்கு அச்சமுதாயங்கள் தவறினால் அதன் பின்னர் அவற்றை ஈடுசெய்ய முடியாமற் போய்விடும். இம்மூன்று வருட காலப் பகுதியில் பிள்ளைகளுக்காகச் செய்யப்படும் முதலீடே எந்தச் சமுதாயத்திற்கும் உச்ச விளைவைப் பெற்றுக் கொடுக்கும். பிறப்பிற்கும் 4ம் வயதிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே மூளையின் நரம்புத் தொடர்புகள் உச்சமான அளவில் உருவாகின்றன. இதன் காரணமாகத் தான், 2 வயது வரை தாய்ப்பாலூட்டுமாறு அல்குர்ஆன் வலிமையாகச் சிபாரிசு செய்கிறது.

குழந்தை பிறந்தவுடன் அதன் வலது காதிலும் இடது காதிலும் தந்தையார் அதானையும் இகாமத்தையும் சப்தமாக ஓதுவதுடன் இச்செயன்முறை தொடக்கி வைக்கப்படுகின்றது. தாய் அதற்குப் பாலூட்டி அன்பையும் பாசத்தையும் உரிமை உணர்வையும் வழங்குவதன் மூலம் இது தொடர்கின்றது. அதன் பின்னர், குழந்தையில் சுயாதீன உணர்வொன்று விருத்தியடையத் தொடங்குகிறது. இந்நூலில் தரப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பிள்ளையின் அறிவு சார் விருத்தியைப் பெற்றார் மேம்படுத்த முடியும்.



இப்ன் ஸீனா தமது பத்தாவது வயதுக்கு முன்பே அல்குர்ஆன் முழுவதையும் மனனஞ் செய்தார். மூளையின் பயன்படுத்தப்படக் கூடிய கொள்ளளவத் திறனை விரிவாக்குவதற்கும் அவரது நினைவாற்றலைக் கட்டியெழுப்புவதற்கும் இது அவருக்கு உதவியது. அத்தோடு தனது மூளையின் ஆற்றல்களை உச்ச நிலைக்குக் கொண்டு வர அவரால் முடியுமாகியது. பொதுவாக நாம் எமது மூளையின் மொத்த ஆற்றலில் 5– 15% ஐயே பயன்படுத்துவதாகச் சிலர் நம்புகின்றனர்.

தொழிற்பாடு

தொழிற்பாடு 40: இந்த மாதத்திற்குரிய நூல் என்ற முறையை அமுல்படுத்தல்

பெற்றாரும் பிள்ளைகளும் இணைந்து புத்தகக் கழகமொன்றை உருவாக்கலாம். நிலையான ஆனால் நெகிழ்வுத் தன்மையுடைய கால அட்டவணையொன்றின் படி தெரிவு செய்யப்பட்ட புத்தகங்களை வாரந்தோறும், மாதந்தோறும் அல்லது சில மாதங்களுக்கொரு தடவை வாசிக்கலாம். ஒவ்வோர் உறுப்பினரும் நூலொன்றை வாசித்து விட்டு அதனை மற்றவர்கள் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும். பின்னர் அது பற்றிய திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். சுவையான உணவு வேளையொன்றின் பின்னர் ஒவ்வோர் உறுப்பினரும் சிரிப்பூட்டும் துணுக்கொன்றைக் கூறிய பின்னர் இந்நிகழ்வு இடம்பெறலாம். இது ஒரு பழக்கமாக அமைய வேண்டுமாயின் ஒழுங்கு தவறாமல் கால அட்டவணைப்படி இதனை நிறைவேற்ற வேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு மாதமும் முதற் சனிக்கிழமையில் இரவு 8 மணிக்கு இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து கொள்ள முடியும். இவ்வாறு செய்தால் மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டிய அவசியம் ஏற்படாது. அத்தோடு, ஒவ்வொருவரும் இதற்கேற்றவாறு தமது ஏனைய வேலைகளுக்கு நேரம் ஒதுக்கிக் கொள்ளலாம்.

அத்தியாயம் 12

ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் வளர்த்தல்: அவர்கள் வித்தியாசமானவர்களா?

- அறிமுகம் 278
- திட்டவட்டமான வேறுபாடுகள் 278
- மனவெழுச்சி ரீதியான தொடர்பு 282
- புலன்கள் 283
- அந்தஸ்து 283
- முகபாவனைகள் 284
- கவலை 285
- பால் ரீதியாக வேறுபடுத்தலின் நியாயம் 285
- அமெரிக்க ஆண்களும் பெண்களும் முன்னுரிமை வழங்கும் விடயங்கள்: ஒரு மதிப்பீட்டாய்வு 288
- பால் ரீதியான பிரிவு ஆரம்பமாவது எப்போது ? 288
  - ஆணியல்பு கொண்ட பெண்களும் பெண்ணியல்பு கொண்ட ஆண்களும் 291
- பிள்ளை வளர்ப்பில் பால் அடிப்படையிலான பெற்றாரின் நிலை 293
- இந்தச் சமநிலையின்மை ஏன்? 293
- பராமரிப்பாளர்களாகத் தந்தையர்: தவறான கருத்துக்களும் உண்மை நிலையும் 294
- ஒன்றாக வாழாத தந்தையர் பிள்ளைகளில் ஏற்படுத்தும் தாக்கம் 296
- ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் வித்தியாசமான தேவைகள் 296
  - சிறிய பெண் பிள்ளையொன்றுக்குத் தேவையானவை 296
  - சிறிய ஆண் பிள்ளையொன்றுக்குத் தேவையானவை 298
- பால் வித்தியாசம் தொடர்பாகப் பகுத்தறிவுரீதியில் எதிர்வினை காட்டுதல் 299
- பாலையும் இயல்பான மனப்போக்குகளையும் ஒன்றாகக் கருதுதல் 300
- ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் கற்றுக் கொள்ளும் முறை வித்தியாசமானது 301
- பள்ளிக் கூடங்களிலும் வகுப்பறைகளிலும் ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் பிரித்து வைத்தல் 304
- இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பிள்ளை வளர்ப்பும் பால் வேறுபாடும் 306
- இறைவனின் வழியே சிறந்த வழி: சீனா, ஜேர்மனி, இந்தியா ஆகியவற்றின் எடுத்துக் காட்டுகள் 309
- தொழிற்பாடுகள் 41 - 43 311

அறிமுகம்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வித்தியாசங்கள் பற்றிக் கலந்துரையாடுவது முக்கியமானது. அவர்களது வித்தியாசமான பங்களிப்புக்களையும் தேவைகளையும் புரிந்து கொள்வதற்கு இது உதவும். இவ்வேறுபாடுகள் கணவன் - மனைவியருக்கு இடையிலான உறவினை நேரடியாகப் பாதிப்பதோடு பெற்றோருக்கும் அவர்களது ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் இடையிலான உறவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இரு பாலாருக்குமிடையிலான ஒத்த தன்மைகளையும் வித்தியாசங்களையும் பற்றி பரஸ்பரம் இருசாராரும் புரிந்து கொள்வதன் மூலமே ஆரோக்கியமான உறவுகள் கட்டியெழுப்பப் படுகின்றன. ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைக்ளுக்கும் இடையிலான வித்தியாசங்கள் பற்றிப் பெற்றார் கொண்டுள்ள கருத்தானது, பிற்காலத்தில் பிள்ளைகளுடனான உறவின் மீது செல்வாக்குச் செலுத்தும்; பொதுவாகக் கருத்துப் படிவங்களும் எண்ணங்களும் வார்த்தைகளாக வடிவம்பெறும்; இவ்வார்த்தைகள் செயல்களாக வெளிப்படும்; செயல்கள் பழக்கங்களாக மாறும்; பழக்கங்கள் ஆளுமை களை உருவாக்கும்.

இது, எந்தப் பாலார் சிறந்தவர்கள் அல்லது முக்கியமானவர்கள் என்பது தொடர்பான கலந்துரையாடல் அல்ல. ஏனெனில், அல்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களும் இது தொடர்பாகத் தெளிவான விளக்கம் தந்துள்ளமையைக் காணலாம்.

> (ஆண்களுக்கு) முறைப்படி பெண்களின் மீதுள்ள உரிமைகள் போன்றதே (ஆண்கள் மீது) பெண்களுக்கும் உண்டு. (அல்குர்ஆன் 2: 228)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பெண்கள் ஆண்களுக்கு சரி நிகரானவர்கள் (அஹ்மத்)

எனவே, அன்னாரின் கருத்துப்படி ஆண்களும் பெண்களும் வித்தியாசமானவர்களாக இருப்பினும், ஒன்றை ஒன்று குறை நிரப்புகின்ற பாத்திரங்களை ஏற்று, ஒருவருக்கொருவர் நிகரானவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒருவருக்கொருவர் எதிரானவர்களாகவோ போட்டி இடுபவர்களாகவோ கருதப்படவில்லை.

திட்டவட்டமான வேறுபாடுகள்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள சில வேறுபாடுகளை Smalley *(1995)* என்பவர் சுட்டிக்காட்டுகிறார்.

- பெண்கள் (xx குரோமஸோம்கள்), ஆண்களை விட (xy குரோமஸோம்கள்) வலுமிக்க நிர்ப்பீடன (நோயெதிர்ப்பு) தொகுதியொன்றைக் கொண்டிருக்கின்றனர்.

- பெண்களை விடக் கூடுதலான செங்குருதிக் கலங்களை (RBC) ஆண்கள் கொண்டுள்ளனர். இது உடலினூடாகக் கூடுதலான சக்தி பாய்வதற்கு உதவுகிறது.
- பெண்களில் உள்ளதை விடக் கூடுதலான அளவு தசைகளையும் தடித்த மண்டையோட்டையும் தடித்த தோலையும் ஆண்கள் கொண்டிருக்கின்றனர்.

ஆண்களிலும் பெண்களிலும் சுமார் 80 சதவீதத்தினரில் பின்வரும் கோலம் காணப்படுகிறது: பெண்கள் தமது மூளையின் இரு பக்கங்களையும் பயன்படுத்தும் அதே வேளையில் ஆண்கள் அதன் இடது பக்கத்தையே பிரதானமாகப் பயன்படுத்துகிறார்கள். இதற்குக் காரணம் ஆண்களை விடக் கூடுதலாகப் பெண்கள் செவிமடுப்பதும் உணர்வதுமே. ஓர் ஆய்வின் போது கம்பியூட்டர் திரையொன்றில் செய்தியொன்று திடீரெனத் தோன்றி மறையச் செய்யப்பட்டது. பெண்கள் தாம் கண்டதை எழுதிக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். ஆண்களோ, ஒருவர் மற்றொருவரைப் பார்த்து 'நீர் அதைக் கண்டீரா? என்னால் அதைப் பிடித்துக் கொள்ள முடியவில்லை' என்றனர்.

பொதுவாக, ஆண்கள் தமது மூளையின் இடது பக்கத்தையே தேர்ந்தெடுக்கின்றனர். தர்க்கவியல், இடவெளி சார்ந்த ஆற்றல், ஆதிக்கம் செலுத்துதல், விரிவுரையாற்றுதல், கணக்கீடு, பொறியியல் முதலியவற்றுக்குரிய இடமாக மூளையின் இடது பகுதி கருதப்படுகிறது. பெண்களோ பெரும்பாலும் மூளையின் வலது புறத்தையே தேர்ந்தெடுக்கின்றனர். இப்பக்கத்தில் தான் உணர்வுகள், மனவெழுச்சிகள், சித்திரக்கலை, கவிதை, காதல், இசை மற்றும் சொல்லாற்றல் என்பவற்றுக்குரிய பகுதிகள் அமைந்திருக்கின்றன. எனினும், பெண்களால் இடது பக்கத்தையும் பயன்படுத்த முடியும். பெண்கள் ஆக்கிரமிப்புத் தன்மை குறைந்தவர்கள். ஆண்களோ அதிகம் வாக்குவாதம் புரிபவர்களாகவும் பெருமையடிப்பவர்களாகவும், பிள்ளைப் பருவத்தில் கற்றுக் கொடுப்பதற்குக் கஷ்டமானவர்களாகவும் இருக்கின்றனர். தேசப் படங்களை வாசித்துப் புரிந்து கொள்வதில் ஆண்கள் சிரமப்பட மாட்டார்கள். ஏனெனில், இடவெளி சார்ந்த ஆற்றலில் அவர்கள் பயிற்சி பெற்றிருப்பர். இரு பாலாரும் முழு மூளையையும் பயன்படுத்திய போதிலும் பெண்களின் மூளையோடு ஒப்பிடும் போது ஆண்களின் மூளையில் உள ஆற்றல்கள் பெரும்பாலும் குறித்த இடங்களுக்கு வரையறுக்கப்பட்டனவாக உள்ளன. மேலும், மூளையின் எந்தப் பக்கம் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பது ஆண்களுக்கிடையிலும் வேறுபடக்கூடும். (கலைத்துறை ஆர்வம் கொண்ட பிள்ளைகள் மூளையின் வலது புறத்தையும் விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் இடப்புறத்தையும் தேர்ந்தெடுக்கின்றனர்) (Baron- Cohen, *2002*; Gilmartin மற்றும் ஏனையோர், *1984*)

உரிய முறையில் கற்றுக் கொண்டு தம்மைப் பயிற்றுவித்துக் கொண்டால் ஆண்களும் பெண்களும் மூளையின் இரு பக்கங்களையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தீர்மானமெடுத்தல், அடிபணியச் செய்தல், தீர்வு வழங்குதல், சாதனைகளில் செழித்தோங்குதல் முதலியவற்றை ஆண்கள் விரும்புவதாக Groy (*2003*) என்பவர் குறிப்பிடுகின்றார். பெண்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும் தம் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடவும் தமக்குச் செவிமடுப்போரை மதித்துப் பாராட்டவும் விரும்புகின்றனர். எனவே, அவர்கள் அன்பு செலுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆண்கள் உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தும் போக்குடையவர்கள்; பெண்களோ தமது உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் வெளிப்படுத்தும் போக்கினைக் கொண்டுள்ளனர். ஆய்வொன்றின் பொது தாம் விரும்பிய எவையேனும் வார்த்தைகளைக் கூறுமாறு அமெரிக்க வாலிபர்களும் யுவதிகளும் வேண்டப்பட்டனர். எல்லா யுவதிகளும் உரையாடலோடு தொடர்புடைய சில வார்த்தைகளைக் கூறிய போதிலும் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட வாலிபர்கள் வார்த்தைகளுக்குப் பதிலாக வெறும் ஓசைகளையே எழுப்பினர். சராசரி அமெரிக்க ஆண் ஒருவர் ஒரு நாளைக்கு 12,000 வார்த்தை களைப் பேசும் அதே வேளையில் அமெரிக்கப் பெண்களோ தினமும் 25,000 இற்கு மேற்பட்ட வார்த்தைகளைப் பேசுகின்றனர். பிறப்பிலேயே ஆண் பிள்ளைகளை விடப் பெண் பிள்ளைகளின் உதட்டுத் தசைகள் கூடுதலான அசைவைக் காட்டுகின்றன.

பிரச்சினையொன்று ஏற்படும் போது ஆண்கள் அதற்குத் தீர்வு வழங்க முற்படுகின்ற னர். ஏதேனுமொன்றைப் பற்றி ஒரு மனைவி தன் கணவனிடம் முறைப்பாடு செய்யும் போது அவன் அதற்குத் தீர்வு வழங்க முயற்சிக்கிறான். மறுதலையாக, பெண்களோ பிரச்சினையொன்றின் போது அனுதாபத்தையும் அன்பையுமே தெரிவிக்க விரும்புவர்.

ஆண்கள் கூடுதலாக புறவயமாகவும் பகுத்தறிவு ரீதியிலும் சிந்திப்பதற்குப் பயிற்றப்படுகின்றனர். அதேவேளை, பெண்கள் பெரும்பாலும் தனிப்பட்ட ரீதியிலேயே சிந்திக்கின்றனர். ஓர் ஆண் கிரிக்கட் ஆட்டமொன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அங்கு விளையாடிக் கொண்டிருப்போரின் தனிப்பட்ட வாழ்க்கைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனினும், பெண்ணொருத்தியைப் பொறுத்தமட்டில் விளையாடுபவர்களின் பெயர்களையும் குடும்பங்களையும் அவள் அறிந்திருந்தால் அவ்விளையாட்டில் கூடுதலான ஆர்வம் காட்டுவாள். ஆண்களை விடப் பெண்கள் உறவுகளைப் பற்றிக் கூடுதலாகக் கவனம் செலுத்துகின்றனர்.

ஆண்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தம்மைத் தம் சூழலிலிருந்து பிரித்துக் கொள்ளக் கற்றுக் கொள்கின்றனர். அதேவேளை பெண்கள் தம் சுய அடையாளத்தைத் தமக்குத் தெரிந்தவர்களிலிருந்தும் தம் சூழலிலிருந்துமே பெற்றுக் கொள்கின்றனர். ஒரு பெண் தன்னைத் தனது வீடு, பிள்ளைகள், தொழில் என்பவற்றிலிருந்து பிரித்துக் கொள்வதில்லை. உணவுட்கொண்ட பாத்திரங்களைக் கழுவ மறந்து அவள் வேலைக்குச் சென்றால் வீட்டுக்குத் திரும்பியதும் அவற்றைக் கழுவ வேண்டுமென நினைத்துக் கொள்வாள். வீடு அவளுடைய முக்கிய பாகமாக விளங்குகிறது. ஓர் ஆணோ தன் வீட்டைப் பற்றி வித்தியாச மாகவே உணர்கின்றான். ஏனெனில், அது அவனுக்கு ஓய்வெடுக்கும் ஓர் இடமே. எனவே, உணவுத் தட்டுக்களைக் கழுவுவது அவனைப் பொறுத்தமட்டில் முன்னுரிமைக்குரியதல்ல.

ஆண்கள் தமது உறவுகள் தொடர்பாகப் பொதுவான விடயங்களையே நினைவில் வைத்திருப்பர். பெண்களோ நுணுக்கமான விபரங்களில் கவனஞ் செலுத்துவர். உதாரண மாக, தமது திருமணத்தின் முதலாம் ஆண்டு நிறைவின் போது தாம் அணிந்திருந்தவை, சாப்பிட்டவை முதலிய அனைத்தையும் பல வருடங்களுக்குப் பின்னரும் நினைவில் வைத்திருப்பர்.

நல்ல உறவுகளில் பெண்கள் வலிமையான விருப்பத்தைக் காட்டுகின்றனர். அத்தோடு, ஆண்களை விட விரைவாக மோசமான உறவொன்றை இனங்கண்டு கொள்ளும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. சில ஆய்வாளர்கள் தம்பதியர்களிடம் பின்வரும் வினாக்களைத் தம்மிடமே கேட்டுக் கொள்ளுமாறு வேண்டினர்: 0- 10 அளவுத் திட்டமொன்றில் எமது உறவின் பெறுமானம் என்ன?, எமது உறவு 10 ஐ நெருங்கச் செய்வதற்கு நாம் செய்ய வேண்டியவை எவை?

முதலாவது கேள்விக்கு ஆண்கள் விடையாகக் கொடுத்த பெறுமானம் பெண்கள் கொடுத்ததை விட இரு புள்ளிகளால் கூடுதலாக இருந்தது. பெண்கள் தமது உறவினது தரத்தைப் பற்றி மிகத் திருத்தமாக மதிப்பீடு செய்தனர்.

தான் போதுமானவன் என்ற உணர்வு கணவனுக்குத் தேவைப்படுகிறது. மனைவி அவனைப் புகழ்ந்து, விமர்சிப்பதைத் தவிர்த்துக் கொள்ளும் போது இது நிறைவேறுகிறது.

பெண்களுக்குக் கூடுதலான அளவு மனவெழுச்சி சார்ந்த சக்தி தேவைப்படுகிறது. குழந்தைகளைச் சரியான முறையில் பராமரிப்பதற்கு இது அவசியம். தம் பிள்ளைகளைப் பொறுத்த அளவில் பெண்களை விட ஆண்கள் சகிப்புத் தன்மை குறைந்தவர்களாக இருக்கிறார்கள். இதனால் நீண்ட நேரத்திற்குப் பிள்ளைகளைப் பராமரிப்பது ஆண்களுக்குச் சிரமமான காரியமாக அமைகிறது.

ஓர் ஆண் மனவெழுச்சி ரீதியாகத் தன் மனைவியோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்குச் சிரமப்படும் அதே வேளை ஒரு பெண்ணோ, அதனை எளிதாகச் செய்து விடுகிறாள். இதற்கு உயிரியல் அமைப்பு ஒரு காரணமாகவும் வளர்ப்பு முறையும் பயிற்சியும் இன்னொரு காரணமாகவும் இருக்கலாம். நெருங்கிய நட்புறவுகளை வளர்த்துக் கொள்வதில் ஆண்களை விடப் பெண்கள் திறமை காட்டுகின்றனர்.

> தன்னிடம் புதிய வாடிக்கையாளர் ஒருவர் வந்தால் தான் அவரிடம் 'உமக்கு மிக நெருக்கமான மூன்று நண்பர்களும் யார்?' எனக் கேட்பதாக Dr. Warren என்பவர் கூறுகின்றார். அவ்வாடிக்கையாளர் ஒரு பெண்ணாக இருப்பின் அதற்கு விரைவில் விடை கிடைக்கும். அப்பெண் மூன்றுக்கு மேற்பட்ட நண்பர்களைப் பற்றி விவரிப்பதோடு அவர்களில் மூவரைத் தெரிவு செய்வதற்குச் சிரமப்படக்கூடும். அவ்வாடிக்கையாளர் ஓர் ஆணாக இருப்பின் கேள்வியைத் தொடர்ந்து சிறிது மௌனம் நிகழும். பின்னர், 'மிக நெருங்கிய நண்பர் என்பதனால் நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' என்ற எதிர்க் கேள்வி தொடரும்.
>
> பெரும்பாலான ஆண்கள் மிக நெருக்கமான நட்புக்களை உருவாக்கிக் கொள்வதில் கைதேர்ந்தவர்களல்லர். அவர்கள் ஒன்றாக இருந்து விளையாட்டுக்களை ரசிப்பதிலும் வேட்டையாடுவதிலும் அல்லது மீன் பிடிப்பதிலும் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால், அவர்கள் நெருங்கிய நண்பர்களாக இருப்பார்களா? (Wolgemuth, *1996*)

பெரும்பாலான ஆண்கள் வளர்க்கப்படும் முறைக்கு ஏற்ப அவர்களது வாழ்வில் அழகுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. எனினும், உறுதியான நிதி நிலைமைக்கு முன்னுரிமை உண்டு. நிதி சார்ந்த வலிமைக்குப் பதிலாக அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலேயே பெரும்பாலான பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள். ஓர் ஆணைக் கைப்பிடித்து, குடும்பத்தைக் காக்கும் பொறுப்பில் அவனை ஈடுபடச் செய்வதற்காக ஒரு பெண் கவர்ச்சியுள்ளவளாக இருக்க வேண்டுமென அவளுக்குப் போதிக்கப்படுகிறது.

பெண்களின் மூளை சற்று உயர்ந்த வெப்ப நிலையில் தொழிற்படுவதாகவும் அதில் கூடுதலான அளவு குருதிச் சுற்றோட்டம் நிகழ்வதாகவும் சற்றுக் கூடுதலான மின்னேற்றம் பேணப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. (Gur மற்றும் ஏனையவர்கள், *1999*) ஆண் பிள்ளைகளை விடப் பெண் பிள்ளைகள் துரிதமாக முதிர்ச்சியடைகிறார்கள். (அவர்கள் சிறு வயதிலேயே நேர்த்தியாகவும் நாகரிகமான முறையிலும் பேசவும் பழகவும் தொடங்குவார்கள்) பெண்களினதும் ஆண்களினதும் மூளைகள் வெவ்வேறு பாதைகளில் விருத்தியடைகின்றன என்பது போல் தெரிகின்றது. எனினும், அதற்கான காரணத்தை யாரும் அறிந்து கொள்ளவில்லை. இந்த வித்தியாசங்கள் மாறாத் தன்மையுடையனவல்ல. வயதுக்கு ஏற்ப அவற்றுக்கிடையிலான இடைவெளி விரியவோ நெருங்கவோ கூடும். ஓர் இளம் பையனை விட ஓர் இளஞ் சிறுமி வார்த்தைகளை இலகுவில் பயன்படுத்தக் கூடும். எனினும், வயது அதிகரிக்கும் போது அவனும் அதே நிலையை அடைந்து விடலாம்.

மூளையின் நரம்புக் கலங்களில் காணப்படும் வித்தியாசங்களைக் கொண்டு ஒரு குறித்த வகை நடத்தையை எதிர்வுகூற முடியும் என்பதை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

ஆண்கள் பெரும்பாலும் உடல் ரீதியாகத் தாக்கும் போக்குள்ளவர்கள்; பெண்களோ வார்த்தைகளால் தாக்குவார்கள். பொதுவாக இவ்வாறே ஆட்கள் நடந்து கொள்கின்றனர். இந்த வகையில் நோக்கும் போது நடத்தையை ஆளுவது பண்பாடல்ல; உயிரியலே எனத் தீர்மானிக்கத் தோன்றும். எனினும், தொழிற்பாட்டு ரீதியான வித்தியாசங்கள் உயிரியலில் மாத்திரமன்றி பண்பாட்டிலும் அதிகம் தங்கியுள்ளன. எமது மூளைகள் அடிப்படையில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. நாம் தாம் அவற்றை வித்தியாசமான முறையில் பயன்படுத்துகிறோம். இரண்டு மூளைகளை அருகருகே வைத்தால் அவை ஒரே விதமாக வே தோன்றும். மிக நுணுக்கமாக ஆராய்ந்தால் தான், சிறிய வேறுபாடுகளைக் கண்டு கொள்ளமுடியும். இவற்றை வைத்து இவை முற்றிலும் வித்தியாசமான உறுப்புக்கள் எனக் கூற முடியாது. ஆட்கள் சில விடயங்களை வித்தியாசமான முறைகளில் செய்தாலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் காணப்படும் அடிப்படையான நடத்தைக் கோலங்கள் ஒரே மாதிரியானவையாகவே இருக்கின்றன.

மனவெழுச்சி ரீதியான தொடர்பு

மனவெழுச்சிரீதியான தொடர்பானது ஆண்களையும் பெண்களையும் அடையாள மிட்டுக் கேலி செய்வதற்குரிய விடயமாக இன்று பயன்படுத்தப்படுகிறது. பின்வருவன போன்ற சித்தரிப்புக்களை நாம் காண்கிறோம்: பெண்கள் அர்ப்பணிப்புடன் கூடிய உறவை நாடும் போது ஆண்கள் தப்பியோடுதல்; பெண்கள் தம் உணர்வுகளைப் பற்றிப் பேசும் போது, விடயத்தைக் கிரிக்கட் புள்ளி விபரங்களுக்கு மாற்ற ஆண்கள் முயலுதல்; பெண்கள் தமது மனவெழுச்சிகளைத் தம் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது ஆண்கள் அதனை முறைகேடான வெளிக்காட்டல் எனக் கருதுதல். மேற்சொல்லப் பட்டவை உண்மையானவையா அல்லது வெறும் புலக்காட்சியா? இவை புலக்காட்சி யாயின் எங்கிருந்து உருவாகின்றன?

பிறந்த முதலாம் நாளில் குழந்தைகள் காட்டும் மனவெழுச்சிசார்ந்த எதிர்வினைகள் பயிற்சியின் காரணமாகவோ சமூகப் பழக்கத்தின் காரணமாகவோ ஏற்படுவன அல்ல. ஒரு பரிசோதனையின் போது குழந்தைகளின் அழுகையொலி, மிருகங்களின் அழைப்பொலிகள், கம்பியூட்டரினால் உருவாக்கப்பட்ட மொழி யொன்றின் புரிந்து கொள்ள முடியாத ஒலிகள் முதலியவற்றைக் குழந்தைகள் செவிமடுக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, இன்னொரு மனிதப் பிறவியின் அவல ஒலிக்கே குழந்தைகள் வலிமையான எதிர்வினைகளைக் காட்டின. அதிலும், பெண் குழந்தைகளே அவ்வாறான அவலக் குரலுக்கு மிகத் தீவிரமான மறுதாக்கத்தைக் காட்டின. இத்தகைய மறுதாக்கம் அவர்களின் வாழ்நாள் முழுதும் தொடரப் போகின்றது. இருபாலாரும் பிறந்த முதல் நாளிலேயே இன்னொருவரின் அவலக் குரலுக்கு எதிர் விளைவு காட்டிய போதிலும் பெண் குழந்தைகளே அதில் கூடுதலான ஈடுபாட்டைக் காட்டின. இன்னொருவரைப் பாதித்துக் கொண்டிருக்கும் தூண்டலொன்று தன்னைப் பாதித்தால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்யக்கூடிய திறமை பெண்களுக்கு இருக்கலாம். மற்றவர்களைப் பராமரிப்பதில் முதலிடம் வகிக்கும் பெண்கள் ஏனையோரது தேவைகளுக்குத் திசைமுகப்படுத்தப் பட்டவர்களாக இருக்கின்றனர். இவர்களது இப்பண்பே குழந்தைகளுக்குக் கிடைக்கும் முதலாவது பாதுகாப்புக் கேடயமாகும்.

புலன்கள்

மேற்சொன்ன வகையில் கூர்மையான புலன்களைப் பெண்கள் கொண்டிருப்பது வியப்புக்குரியதல்ல. பெண்களின் மண நுகர்ச்சிப் புலன் (குறிப்பாக சூலகங்களில் சூல் உருவாகும் காலத்தில்) ஆண்களினதை விடக் கூர்மையானது. அதே போன்று அவர்களுடைய தொடுகையுணர்ச்சியும் மிகக் கூர்மையானதாக இருக்கும். ஒரு குழந்தையை ஆரோக்கியமாகப் பிழைத்து வாழச் செய்வதற்குத் தொடுகையூடாக உறவாடும் ஆற்றல் முக்கியமானது. குறைமாதக் குழந்தைகளை அரவணைத்துக் கொண்டால் அல்லது மிருதுவாகத் தடவினால் அவை துரிதமாக வளர்ந்து முதிர்ச்சி யடைகின்றன. தனித்து விடப்பட்ட குழந்தைகளுடன் ஒப்பிடும் போது - ஒரே அளவில் உணவூட்டப்பட்ட போதிலும் - அரவணைத்து வளர்க்கப்பட்ட குறைமாதக் குழந்தை களின் நிறை 47% விரைவாக அதிகரிக்கும். (Dodd, 2005)

தாய்மார் குரலெழுப்பும் விதம்கூட குழந்தைகளின் தேவைகளுக்கும் புலன் உணர்வுகளுக்கும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. ஒலிப்பதிவு செய்யப்பட்ட குரல்களைக் குழந்தைகளுக்கு ஒலிக்கச் செய்து காட்டிய போது அவை ஒரு பெண்ணின் உயர்சுருதியுள்ள ஒலிக்கு ஆர்வத்துடன் முகங்களைத் திருப்பின. அதே பெண் வளர்ந்தவர்க ளோடு பேசப் பயன்படுத்தும் தொனிக்கு அவ்வாறான விளைவைக் குழந்தைகள் காட்டவில்லை. மேலும், தாயின் குரலிசையைக் கேட்கும் போது, குழந்தையினது இதயத்தின் வேகம் குறைந்து அமைதியடைந்து சீராவதோடு இதயத் துடிப்பும் மிருதுவாகின்றது. குழந்தைக்குத் தாய் வழங்கும் ஆறுதல் அடிப்படையானதாகவும் உயிரியல் சார்ந்ததாகவும் கருப்பையில் நிகழும் விருத்தியிலிருந்து தொடர்வதாகவும் தோன்றுகின்றது. இவ்வாறு தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் பின்னிப் பிணைந்து காணப்படும் தொடர்பிலிருந்தே ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான மனவெழுச்சி சார்ந்த வேறுபாடுகள் ஆரம்பிக்கின்றன.

அந்தஸ்து

அந்தஸ்து பற்றிய கருத்து ஆண் பிள்ளைகளில் மிக முன்கூட்டியே ஏற்பட்டு விடுவதாகத் தெரிகிறது. பெண் பிள்ளைகளில் அவ்வாறு ஏற்படுவதாகத் தெரியவில்லை. மொத்தமாகப் பார்க்கும் போது முதலாம் இடத்தில் இருக்க வேண்டும் என்ற திட எண்ணம் பெண் பிள்ளைகளில் குறைவாகவே காணப்படுகிறது - இதற்கு விதி விலக்காக வும் சிலர் இருக்கத்தான் செய்கின்றனர். பிள்ளைகள் விளையாடும் முறையைப் பற்றி நடத்தப்பட்ட ஆய்வொன்று இதனைத் தெளிவாக விளக்குகிறது. இந்த ஆய்வின் போது சம பால் பிள்ளைகளின் குழுக்கள் 'டாக்டர் விளையாட்டு' விளையாட அனுமதிக்கப் பட்டனர். ஆண் பிள்ளைகளில் அனைவரும் டாக்டராக இருக்கவே விரும்பினர்- அதாவது, மற்றவர்களுக்கு ஆணையிடும் தலைமைப் பொறுப்பை நாடினர். இதற்காக அவர்கள் நீண்ட நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பெண் பிள்ளைகளோ, டாக்டராக இருக்க யாருக்கு விருப்பம்? எனக் கேட்டு அது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தியதோடு, டாக்டர், தாதி, நோயாளிகள் ஆகிய பாத்திரங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பெண் பிள்ளைகளைப் போலன்றி ஆண் பிள்ளைகள் மெய்யாகவே வெற்றியாளரைத் தெரிவு செய்யும் விளையாட்டுக்களையே விரும்பினர். விளையாட்டின் முடிவுகள் பற்றிச் சச்சரவு செய்து கொள்வதும் ஆண் பிள்ளைகளுக்குச் சௌகரியமான செயலாகவே இருந்தது. பெண் பிள்ளைகளின் விளையாட்டுக்குக் குறுகிய காலமே தேவைப்பட்டது. ஆண் பிள்ளைகள் அடிக்கடி முரண்பட்டுக் கொள்வதனால் அவர்களது விளையாட்டுக் காலம் நீடித்தது. யார் என்ன செய்தார்?, யாருக்கு என்ன கிடைத்தது? என்பன பற்றி அவர்கள் சச்சரவு செய்து கொண்டாலும் அதன் காரணமாக விளையாட்டு

நிறுத்தப்படவில்லை. எனினும், சண்டைகள் காரணமாக விளையாட்டுக்கள் அடிக்கடி இடைநிறுத்தப்பட்டதாகப் பெண் பிள்ளைகள் முறைப்பாடு செய்தனர். ஆண் பிள்ளைகள் கருத்து வேறுபாடுகளை எளிதில் மறந்து விடுகின்றனர். எனினும், பெண் பிள்ளைகளோ மோதல்கள் தொடர்பாகக் கடுமையான மனவெழுச்சி எதிர்வினைகளைக் காட்டுகின்றனர். சமூகப் பண்பாடுகளே இந்நிலைமைக்குக் காரணம் எனச் சிலர் வாதிடுகின்றனர். பொதுவாகப் பெண் பிள்ளைகள் கூடியளவு மனவெழுச்சிச் சார்புடையவர்களாக இருக்க வேண்டுமென நாம் ஊக்குவிக்கும் அதே வேளையில் ஆண் பிள்ளைகளில் இப்போக்கைத் தடுத்து விடுகிறோம்.

எப்படியிருப்பினும், நாம் எவ்வளவு முயன்றாலும் உயிரியல், பண்பாடு என்பவற்றைத் தனித்தனியாக வேறு பிரிக்க முடியாது. இயற்கையினதும் வளர்ப்பு முறையினதும் பங்களிப்பு ஒரு வட்ட வடிவத்தில் நிகழ்கிறது. ஒன்றின் செல்வாக்கு அடுத்ததற்கு ஊட்டமளிக்கிறது. இந்த வட்டத்தில், ஆரம்பப் புள்ளி என்ற வகையில் உயிரியல் முக்கியத்துவம் பெறுகின்றது. எனினும், ஒரு வட்டம் எங்கே ஆரம்பிக்கின்றது என்பதை யாரால் தான் தீர்மானிக்க முடியும்?

முகபாவனைகள்

முகபாவனைகளை வியாக்கியானம் செய்வதில் ஆண்களைவிடப் பெண்கள் கெட்டித்தனம் காட்டுகின்றனர். பெண்கள் கூடுதலாகப் புன்னகை புரிகின்றனர். அத்தோடு, புன்னகை புரியுமாறு பெண்களை ஆண்கள் அடிக்கடி ஊக்குவிக்கின்றனர். இருபாலாருக்குமிடையில் இருந்துவந்த ஆட்சி செலுத்துபவர் - அடங்கிப் போகிறவர் வகை உறவே இதற்குக் காரணம் எனச் சிலர் வாதிடுகின்றனர். வார்த்தை சாராத கருத்து வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்வதில் ஆண்களை விடப் பெண்கள் கூடிய திறமை காட்டுகின்றனர்.

பல்வேறு முகத் தோற்றங்களைக் காட்டும் போட்டோக்கள் காண்பிக்கப்பட்ட போது ஒருவர் மகிழ்ச்சியாக இருப்பதைக் கவனிப்பதில் இருபாலாரும் திறமை காட்டினர். ஒருவர் ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும், அவருடைய முகத்தில் கவலையை இனங்கண்டு கொள்வதில் பெண்கள் 90% திருத்தத்தைக் காட்டினர். ஆண்களோ இன்னொரு ஆணின் முகத்தில் மகிழ்ச்சியின்மையை 90% சரியாக இனங்கண்டு கொண்ட போதிலும் பெண்களின் முகத்தில் கவலையை இனங்கண்டு கொள்வதில் 70% திருத்தத்தையே காட்டினர். பெண்களின் முகத்தில் அதிகளவு கவலை தென்பட்டால் மாத்திரமே ஆண்கள் அதனைக் கவனத்திலெடுப்பர். நுட்பமான வெளிப்பாடுகளை அவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

ஆண் பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட முறையிலான கவனம் தேவை என்பதைச் சில ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஏனெனில், நெருங்கிய பாசமானது மூளையிலுள்ள இலிங்க ஹோர்மோன்களின் மட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இது மூளை விருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆண்களையும் பெண்களையும் பற்றி நடத்தப்பட்ட பல ஆய்வுகளின்படி, அவர்களுக்கிடையே அன்பும் ஆதரவும் மிக்கத் திருமண

உறவொன்று இருக்கும் போது அவர்கள் இதய நோய், புற்று நோய் போன்ற கடுமையான நோய் நிலைமைகளில்கூட நன்கு பிழைத்து வாழ்வதாகத் தெரியவந்துள்ளது. திருமண உறவில் ஏற்படும் சிறு விரிசல்கூட தம்பதியினரின் நிர்ப்பீடனத் தொகுதியை நலிவடையச் செய்துவிடுகிறது. இதன் காரணமாக, தம்மிடையே ஒரு சண்டை ஏற்பட்டால் அதனைத் தொடர்ந்து அத்தம்பதியினர் தடுமல், சளிக்காய்ச்சல் போன்றவற்றுக்கு ஆளாகின்றனர். தம்பதியினரில் ஒருவர் இறந்தால் அடுத்தவருடைய நோயெதிர்ப்புச் சக்தி 4-14 மாதங்கள் வரை நலிவடைந்து காணப்படும்.

அல்குர்ஆனின் ஒவ்வொரு அத்தியாயமும் 'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (ஓதுகிறேன்)' என்று கூறி ஆரம்பிக்கப்படுவது ஏன் என எப்போதாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? தம் பிள்ளைகளுடன் பெற்றார் அன்போடும் இரக்கத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்ற செய்தி இதிலிருந்து பெறப்படுகின்றதா?

கவலை



தனிமையும் கவலையும் எந்த வகையான ஒருவரினதும் உடல், உள நலத்தைப் பாதிக்கும். ஆண்களை விட வித்தியாசமான முறையில் பெண்கள் கவலையைக் கையாள்கின்றனர். பிள்ளையொன்றின் இழப்பின் போது கணவனும் மனைவியும் வித்தியாசமான முறையில் நடந்து கொள்வது ஏன் என்பதை இது விளக்குகிறது. இவ்வாறான நிலைமையில் கணவன் பொதுவாக ஒதுங்கிப் போவான்; மனைவியோ உறவினர்களதும் நண்பர்களதும் தோளில் சாய்ந்து விம்மி அழுவாள். ஆனால், எல்லா ஆண்களும், எல்லாப் பெண்களும் எப்படி நடந்து கொள்வார்கள் என எதிர்வுகூற முடியாது. நாம் எப்படிப்பட்டவர்கள் என்பது தொடர்பான சகல அம்சங்களையும் விஞ்ஞானத்தினால் முழுமையாக வரையறுத்துச் சொல்ல முடியாது.

பால் ரீதியாக வேறுபடுத்தலின் நியாயம்

கூறுணர்ச்சியும் மனவெழுச்சிகளும் கொண்டவளாகவே பெண் படைக்கப்பட்டு அவ்வாறே பயிற்றுவிக்கப்பட்டும் உள்ளாள். இதன் காரணமாக அவள் தன் பிள்ளைகளை எந்த ஆபத்திலிருந்தும் பாதுகாப்பதற்கான தயார் நிலையில் இருப்பாள். இந்நிலை விலங்குலகிலும் காணப்படுகிறது. தாய்ப் பூனை தன் குட்டிகளை அவற்றின் தந்தை உட்பட மற்றெல்லா ஆண் பூனைகளிலிருந்தும் பாதுகாப்பதற்காக மறைத்து வைத்திருக்கும். இல்லாவிடில் அவை எலிகளைச் சாப்பிடுவது போல் குட்டிகளைச் சாப்பிட்டு விடும். கர்ப்பத்தின் போது விசேட ஹோர்மோன்கள் சுரக்கப்படுகின்றன. இவை பிரசவித்தல், பாலூட்டல், குழந்தைகளைப் பாதுகாத்தல் முதலியவற்றுக்கு உதவியாக அமைகின்றன.

மாதப்போக்குக் காலத்திலும் கர்ப்பம், பிரசவம், தாய்ப்பாலூட்டல் என்பவற்றுக்குரிய காலங்களிலும் பெண்கள் மற்றவர்களில் அதிகம் தங்கியவர்களாகவே இருப்பர். எனவே, இக்காலங்களின் போது அவர்களுக்குக் கூடுதலான பராமரிப்பு வழங்கப்பட வேண்டும். மாதவிடாயின்போது மில்லியன் கணக்கான பெண்கள் அசௌகரியங்கள் பலவற்றை அனுபவிக்கின்றனர். தீவிரத்தன்மையில் வேறுபடக்கூடிய இப்பிரச்சினைகள் சில நாட்கள் வரை நீடிக்கக் கூடும். வயிறு உப்புதல், தசைப்பிடிப்பு, மார்பகங்கள் மென்மையடைதல்,

தலைவலி, கடுமையான அல்லது நீடித்த குருதிப் போக்கு, உள நிலை மாற்றங்கள், களைப்பு போன்ற அறிகுறிகளை இவை கொண்டிருக்கலாம்.

ஓர் ஆண் பாலியல் ரீதியாக ஒரு பெண்ணை நோக்கிக் கவரப்படுகின்றான். இதன் விளைவாக அவளையும் அவர்கள் இருவரதும் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்கிறான். இந்நிலையில் அவன் தாராளத் தன்மையோடு நடந்து கொண்டு அவளதும் அவர்களுடைய பிள்ளைகளதும் தேவைகளை நிறைவேற்று வான். அதேவேளையில் தாய்மார் தம்மைப் பற்றியும் தம் குழந்தைகளின் வாழ்க்கை பற்றியும் அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். மாதப்போக்கு, கர்ப்பம், பிரசவம், பாலூட்டல் போன்ற பொறுப்புச் சுமைகள் ஆணுக்கு இல்லை. எனவே, தேவையான வருமானத்தை ஈட்டவும் குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றவும் அவனுக்குப் போதிய சுதந்திரம் கிடைக்கின்றது.

ஆண்களிலும் பெண்களிலும் இயல்பாகவே காணப்படுகின்ற, ஒன்றையொன்று குறை நிரப்புகின்ற வேறுபாடுகள் இஸ்லாமியக் குடும்பச் சட்டங்களுக்கும் தடை ஆணைகளுக் கும் விளக்கமளிக்கின்றன. ஆண்களினதும் பெண்களினதும் தனியான பால் சார்ந்த இயல்புகளை 'அவ்றத்' என்னும் அந்தரங்கப் பகுதிகள் பற்றிய கருத்துப் படிவம் பிரதிபலிக் கின்றது. ஆணின் அந்தரங்கப்பகுதி தொப்புள் முதல் முழங்கால் வரை என வரையறுக்கப் பட்டுள்ளது. இதனால் எவ்விதத் தடைகளுமின்றி அவன் கடுமையான உடல் உழைப்பில் ஈடுபட முடிகிறது. அதேவேளை, திறந்து விடப்படும் அவனது உடற்பகுதிகள் பெண்களை மயக்கிக் கவர்ந்திழுக்கவோ, ஆண்கள் தம் கட்டுப்பாட்டையும் பகுத்தறிவையும் இழந்து அவன் மீது நாட்டம் கொள்ளவோ வழிவகுப்பதில்லை. பெண்களைப் பொறுத்தமட்டில் நிலைமை மறுதலையானது. ஒரு பெண்ணின் முழு உடலும் ஆணின் மனதில் கவர்ச்சியை யும் தூண்டுதலையும் ஏற்படுத்தும். பெண்ணின் உடல் தோற்றத்தினால் ஆண்கள் எளிதில் தூண்டப்படுவர். எனவேதான் அவளுடைய முகம், கைகள், பாதங்கள் தவிர்ந்த உடலின் ஏனைய பகுதிகள் அனைத்தும் அந்தரங்கப் பகுதிகளாகக் கருதப்படுகின்றன. பொதுவாக பெண்கள் தமது உடலை ஆண்களுக்கு வெளிக்காட்ட வேண்டிய அவசியமே இல்லை. இந்த வகையில் முகம் முற்றிலும் வேறுபட்டது. அவளது ஆளுமையையும் அடையாளத் தையும் அது வெளிப்படுத்து கின்றது. நல்ல முறையில் விவரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டுள்ள அவ்றத் பற்றிய இக்கருத்துப் படிவம் குடும்ப அமைப்புக்குப் பாதுகாப்பை வழங்குவதோடு குடும்பத்தையும் சமூகத்தையும் சீரழிக்கின்ற வரம்பு மீறிய ஆண்-பெண் உறவுகளுக்கு எதிரான காப்புறுதியாகவும் அமைகின்றது. எனினும், கணவன்-மனைவி உறவைப் பொறுத்த மட்டில் ஒருவருக்கு மற்றவரது உடல் மீது எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லை. அல் குர்ஆன் இதனைப் பின்வருமாறு விளக்குகின்றது:

...அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்...
(அல்குர்ஆன் 2: 187)

சமூகத்தின் சம அந்தஸ்துள்ள உறுப்பினர்கள் என்ற வகையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமைகள் உள்ளன. எனினும், அவர்களது உடல் மற்றும் உளவியல் சார்ந்த தனித்துவ இயல்புகள் காரணமாக அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பங்களிப்புக்கள் வேறுபட்டனவாகவும் ஒன்றை மற்றது குறை நிரப்புவனவாகவும் உள்ளன. குடும்பம் என்பது திறமையாகத் தொழிற்பட்டு ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் நன்மை பயக்க வேண்டிய விசேட மானிட நிறுவனமொன்றாகும்.

இருபது வயதுக்கும் நாற்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே ஒரு குடும்பத்தின் அத்திவாரமாக இருக்கின்றனர். அவர்கள் மென்மையானவர்களாகவும் ஆதரவு வழங்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். எனவே, குடும்பத்திற்கு அமைதியையும் ஆறுதலையும் வழங்க அவர்களால் முடிகின்றது. கணவனுக்கு மன அமைதி தேவைப்படுகின்றது. குறிப்பாக, அவன் சம்பாதிப்பதற்காக நாள் முழுதும் கடுமையாக உழைத்து விட்டு வீடு

திரும்பும் போது இது அவசியப்படுகின்றது. இக்கட்டத்தில் இது அவனுடைய இயல்பான முன்னுரிமையாக இருக்கின்றது. மனைவிமார் வேறு பல பங்களிப்புக்களையும் செய்யலாம். அதேபோல் கணவன் மாரும் வீட்டில் அமைதியையும் நிம்மதியையும் பேண எவ்வளவோ செய்ய முடியும்.

மேற்சொன்ன இயல்புகள் பெண்களின் பலவீனத்தையும் ஆண்களின் கடுந்தன்மையையும் குறிப்பதாக யாரும் கருதக்கூடாது. ஒவ்வொரு உறுப்பினரதும் கடமைக் கூறுகளுக்குப் பொருத்தமான வகையிலேயே அவை அமைந்துள்ளன. மனைவியின் பொருளாதார நிலை எப்படியானதாக இருப்பினும் வருமானத்தைத் தேடும் சட்ட ரீதியான பொறுப்பைக் கணவன் மீதே இஸ்லாமிய சட்டம் சுமத்தியுள்ளது. மனைவி வெளியே சென்று தொழில் செய்வதா இல்லையா என்பதை அவளே தீர்மானிக்க வேண்டும். தொழில் புரிய வேண்டும் என அவள் வற்புறுத்தப்படக் கூடாது. ஏனெனில், அவளையும் அவளது பிள்ளைகளையும் பேணிக் காக்கும் பொறுப்பு முழுமையாக அவளது கணவனுக்கே உரியது. ஒரு பெண் வெளியே சென்று தொழில் புரிய நாடினால் அதில் எவ்விதக் குற்றமுமில்லை. தொழில், தாய்மை ஆகிய இரு பொறுப்புக்களையும் அவளால் நிறைவேற்ற முடியுமாக இருந்தால், சம்பாதிப்பவளாகவும் தாயாகவும் இருக்க அவளுக்கு உரிமை உண்டு.

விருத்திக் கட்டங்களின் போது இரு பாலாரிலும் காணப்படுகின்ற உடல் மற்றும் உளவியல் வேறுபாடுகள் அவர்களுடைய உரிமைகளையும் பொறுப்புக்களையும் குறைத்து விடுவதில்லை. ஏதேனும் குறித்த இயல்பொன்று (உதாரணமாக, மெல்லிய குரல்) பெண்ணுக்குச் சாதகமானதாகவும் ஆணுக்குப் பாதகமானதாகவும் அமைந்து விடலாம். அதே போன்று இன்னொரு இயல்பு மறுதலையாக அமையவும் கூடும்.

ஓர் ஆண் ஒரு பிற பெண்ணைக் காம உணர்வுடன் பார்ப்பது விலக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் ஆணொருவரினால் கவரப்பட்டால் அவளுக்கு ஏற்படக் கூடிய விளைவுகள் விபரீதமானவையாக அமையலாம். அவள் பாவத்தில் ஈடுபட்டால் கர்ப்பம் அடையவும் கூடும். இந்நிலையில் அவளைப் பொறுப்பேற்று அவளுடனேயே இருப்பது அவனது கடமை. அவளையும் அவளது குழந்தையையும் ஆதரித்துக் காப்பதற்கும் அவன் கடமைப்படுகிறான். அவன் தனது கடமையைச் செய்யத் தவறினால் அவர்களுக்கு இறைவன் அளித்துள்ள வாழ்வாதார உரிமையை தடுத்தவனாக மாறுகிறான்.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''அல்லாஹ்வின் பெண் அடியார்கள் அல்லாஹ்வின் மஸ்ஜிதுக்குச் செல்வதைத் தடை செய்யாதீர்கள்'' (முஸ்லிம்)

பெண்களுக்கு மேலதிகமான குடும்பக் கடமைகள் உள்ளன. எனவே, அவர்கள் தங்கள் கடமைக் கூறுகளுக்கும் பொறுப்புக்களுக்கும் ஏற்ப மஸ்ஜிதிலோ வீட்டிலோ தொழுது கொள்ளும் சுதந்திரம் அவர்களுக்குண்டு. உண்மையில் தங்கள் மனைவியர் மீது அதிக பொறுப்புக்களைச் சுமத்துவதற்குப் பதிலாக அவர்கள் மஸ்ஜிதுக்குப் போகக்கூடியவாறு வசதிகளைச் செய்து கொடுப்பது கணவன்மாரின் கடமை.

இன்று மேற்குலகில் மட்டுமன்றி முஸ்லிம் நாடுகளிலும் பெண்களுக்கு அநியாயம் இழைக்கப்படுகின்றது. மேற்கு நாடுகளில் பெண்கள் நிதி சார்ந்த நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படுவதோடு, அவர்கள் வெளியே சென்று தொழில் செய்ய வேண்டும் எனப் பண்பாட்டு ரீதியில் எதிர்பார்க்கப்படுகின்றது. இது தவிர, அவர்கள் காமத்துக்குரிய பண்டங்களாகவும் மலிவான களியாட்டப் பொருட்களாகவும் வர்த்தகப் பண்டங் களாகவும் கருதப்படுகின்றனர். சில முஸ்லிம் நாடுகளில் பெண்கள் கல்வி பெறாதவர் களாகவும் தாய்மை எனும் மகத்தான பணிக்குத் தகுதி இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அவர்கள் முற்றிலும் தம் கணவன்மாரின் தயவில் தஞ்சம் புகுந்துள்ளனர். பல நாடுகளில் அவர்கள் ஓரங்கட்டப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைப் பருவத்தின் போது தம் கிராமத்துப் பெண்கள் மஸ்ஜித் தவிர்ந்த மற்ற எல்லா இடங்களிலும் காணப்பட்டதாக ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி தமது நினைவுக் குறிப்பில் கூறுகின்றார். சில நாடுகளில் மஸ்ஜித்களில் பெண்களுக்கு எவ்வித இடமும் இல்லை என்பதைக் காணும் போது துயரமே மேலிடுகிறது. இன்றைய துருக்கியில் இறையியல் பற்றிக் கற்கும் மாணவர்களில் பெரும்பான்மையினர் பெண்களாக உள்ளனர். எனினும், தொழ வரும் பெண்களுக்கு இடமளிப்பது பற்றி மஸ்ஜித் கட்டட நிர்மாணக் கலைஞர்கள் சற்றேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. எனவே, இஸ்தான்பூல் நகரில் பிரதான தொழுகை மண்டபத்தின் ஒரு பகுதி – ஏன் ஒரு தனியான மஸ்ஜித் கூட– பெண்களின் கூட்டுத் தொழுகைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (Murad, 2009)

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைக் குத்பா உரைகளில் வழங்கப்படும் சன்மார்க்க வழிகாட்டலையும் கல்வியையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஒரு தாய் தன் குழந்தைகளை எப்படி ஒழுங்காக வளர்க்கப் போகிறாள்? மிகக்கூடிய செல்வாக்குடைய நிறுவன ரீதியான கல்வி முறையாக இந்த வாராந்தப் பிரசங்கம்தானே இருக்கிறது. நபிகளாரின் ஹதீஸ் வேறு விதமாக இருந்த போதிலும் இந்தப் போக்கு பல நூற்றாண்டு களாக இருந்து வருகின்றது.

அமெரிக்க ஆண்களும் பெண்களும் முன்னுரிமை வழங்கும் விடயங்கள்: ஒரு மதிப்பீட்டாய்வு

வொஷிங்டன் போஸ்ட் நாளிதழும் ஹாவார்ட் பல்கலைக் கழகமும் இணைந்து நாலாயிரம் ஆண்களிலும் பெண்களிலும் நடத்திய ஒரு மதிப்பீட்டாய்வின்படி அமெரிக்க ஆண்களும் பெண்களும் பின்வரும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக முடிவு செய்யப்பட்டது:

- *நவீன வாழ்க்கை முறையின் உளவியல் மற்றும் பொருளாதார ரீதியான அழுத்தங்களை எதிர்கொள்ளல்.*
- *குடும்பப் பிணைப்புக்களை உறுதிப்படுத்தல்.*
- *பிள்ளைகளுடன் திறமையான முறையில் தொடர்பாடுதல்.*

பெண்கள் வீட்டுக்கு வெளியே தொழில் புரிவதை ஆண்கள் அங்கீகரித்த போதிலும், தாய்மார் தம் முழு நேரத்தையும் வீட்டில் தம் பிள்ளைகளுடன் கழிப்பதையே பல ஆண்களும் பெண்களும் விரும்பினர். வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கூடுதலான வருமானத்தைச் சம்பாதிப்பதற்கே அமெரிக்கப் பெண்கள் தொழில் புரிகிறார்கள் எனப் பெரும்பான்மையினர் நம்புகின்றனர். (அல் உஸ்ரா, இதழ் 61, ஹி. வ 1419)

பால் ரீதியான பிரிவு ஆரம்பமாவது எப்போது ?

ஓராண்டு நிறைவு பெறும் போது பெரும்பாலான பிள்ளைகள் பால் வேறுபாட்டினைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றனர். (Beal, 1993) இரண்டு வயதுக்கும்

மூன்று வயதுக்கும் இடையில் அவர்கள் தாம் எந்தப் பாலைச் சேர்ந்தவர் என்பதைப் புரிந்துகொண்டு விடுவர். எனவே, உடலமைப்பு வேறுபாடுகளைப் பற்றிய தனது அவதானங்களைப் பிறர் கேட்கக் கூடியவாறு கூறும் மூன்று வயதுப் பிள்ளை, இரண்டு வருட காலமாகத் தன் சிந்தனையிலிருந்த விடயத்துக்கே வார்த்தை வடிவம் கொடுக்கின்றது. நடைபயிலும் பருவத்துப் பிள்ளைக்கு உலகம் ஆண்- பெண் என்ற இரு முகாம்களைக் கொண்டது போல் தோன்றும். தமது பால் என்ன என்பதை அறிந்து கொண்டதும் அது தன்னை ஆண் பிள்ளையா பெண் பிள்ளையா என அடையாளப்படுத்திக் கொள்ளும். அத்தோடு, அதற்கேற்றவாறு தன்னை இசைவாக்கிக் கொள்ளக் கற்றுக்கொள்ளும். மூன்று வயதாகும் போது ஒரு பிள்ளையின் நடத்தை அதன் பாலுக்குரிய விதத்தில் தோற்றமளிக்கத் தொடங்கும். பெண் பிள்ளைகளில் ஆதிக்கப் போக்கு குறைவதோடு அவர்கள் 'வீடு' விளையாடுதல் போன்ற பெண் பிள்ளைகளுக்குரிய விளையாட்டுக்களைத் தெரிவு செய்வர். ஆண் பிள்ளைகள் சிறிது முரட்டுத் தனம் காட்டுவதோடு ட்ரக்குகள், துப்பாக்கிகள் போன்ற விளையாட்டுப் பொருட்களில் ஆர்வம் காட்டுவர்.

பதினாறு வருடத் தாமதம்

ஓர் அறபுக் கவிஞர் பின்வருமாறு கூறினார்:

'நீ உன் மகள் லுப்னாவை அடக்கி ஒடுக்கிய பின்
இப்போது அவளுக்காக அழுகிறாயா?
லுப்னா போய் விட்டாள்...
இனி நீ என்ன செய்யப் போகின்றாய்?'

சில பெற்றார் தம் பிள்ளைகளைச் செல்லம் கொடுத்துக் கெடுக்கின்றனர்; மோசமாக நடத்துகின்றனர்; அல்லது துஷ்பிரயோகம் செய்கின்றனர்... காலங்கடந்து தம் செய்கைகளுக்காக மனம் வருந்துகின்றனர்... இந்த மனவருத்தம் 16 வருடங்கள் தாமதமாகியே ஏற்பட்டுள்ளது என்பதை அவர்கள் உணர்வதில்லை...

பால் ரீதியான அடையாளம் உருவாவதற்கு ஹோர்மோன்களின் செல்வாக்கு ஒரு காரணமாக விளங்குகிறது. இது பூப்புப் பருவம் முதல் முனைப்பாக இருக்கும். பிள்ளை தனது ஆரம்ப வயதிலேயே உடலமைப்பு ரீதியான வேறுபாடுகளை இனங்கண்டு கொள்வதும், அது அதற்குக் காட்டும் உளவியல் ரீதியான எதிர்வினைகளும் இதற்கு இன்னொரு காரணமாக அமைகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, தனது சமபால் பெற்றாருடன் தன்னைச் சாதகமான முறையில் அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலமே பால் ரீதியான சுய அடையாளம் உருவாகின்றது. பெண் தன்மை கொண்ட ஆண்களையும் ஆண் தன்மை கொண்ட பெண்களையும் பொறுத்தமட்டில், அவர்களது சுரப்பிகள் சாதாரணமாகத் தொழிற்பட்ட போதிலும் பெற்றோருடனான உறவில் ஏற்பட்ட சிக்கல்களே அவர்களின் பிரச்சினைக்குரிய நிலைமைக்குக் காரணமாக அமைகின்றது.

தான் ஓர் ஆணாக இருப்பதில் பெருமிதம் அடைகின்ற ஒரு தந்தையின் மீது அன்பு செலுத்துவதும் அவரால் அன்பு செலுத்தப்படுவதும் அவரைப் போல் நடந்து கொள்ள முனைவதுமே ஒரு சிறுவன் தனது ஆண் தன்மையில் பாதுகாப்புப் பெறுவதற்குக் காரணமாக அமைகின்றது. ஒரு தந்தையானவன் சமூகத்திலுள்ள ஏனைய ஆண்களுடன் தனது போட்டி ரீதியான மற்றும் ஒத்துழைப்பு ரீதியான உறவுகள் பற்றித் திருப்தி காண்பது

அவசியமாகும். வளர்ச்சியடையும் ஒரு சிறுவனின் பால் ரீதியான அடையாளம், அவனது தந்தையோ அல்லது சமூகத்தின் ஏனைய ஆண்களோ புலிகளை வேட்டையாடுகிறார்கள் என்பதிலோ அல்லது பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள் என்பதிலோ தங்கியிருப்பதில்லை. அதே போன்று, அவர்கள் வீட்டில் சமையல் வேலை செய்கிறார்கள் என்பதிலோ குழந்தைகளைச் சுத்தம் செய்து பராமரிக்கிறார்கள் என்பதிலோ தங்கியிருப்பதுமில்லை. மாறாக, அத்தந்தை தனது ஆண்மை பற்றி திருப்தியும் பெருமித மும் உடையவராக இருந்து தனது மகனுடன் நல்ல முறையில் உறவைப் பேணிக் கொள்வாராயின் அப்பிள்ளையின் பால் ரீதியான அடையாளம் சிறப்பானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

தன்னுடைய ஆண்மை பற்றி எப்போதும் குறைவாக நினைக்கின்ற ஒரு தந்தை தனது பல்வேறு நடத்தைகள் மூலம் தன் மனக் குறையைத் தன் மகனுக்கு வெளிக்காட்டி விடுவார். அச்சிறுவன் ஆணுக்குரிய அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இது இடையூறாக அமையும். வீட்டுக்குரிய வழமையான வேலைகளைச் செய்வது பெண்மைக்குரியது; ஆண்மைக்குத் தகாதது எனக்கூறுவது அவர் தனது மனக்குறையை மகனுக்கு வெளிப்படுத் தும் ஒரு முறையாகும். நினைவிலி நிலையில் (கருத்தூன்றாமல்) இதனை உணர்ந்து கொள்ளும் அம்மகன் தானும் அது போன்ற மன அசௌகரிய நிலையைப் பெற்றுக் கொள்வான்.

தான் வளர்ந்து ஒரு பெண்ணாக வர வேண்டும் என்றே ஒரு சிறுமி விரும்புவாள். தனது பெண்மையின் இயல்புகள் பற்றிப் பெருமிதம் கொண்டு மகிழ்ச்சியுறும் ஒரு தாயினால் அன்பும் அங்கீகாரமும் காட்டி வளர்க்கப்படும்போது அவள் ஒரு சிறந்த பெண்ணாக வரத் தயாராக்கப்படுகிறாள். அத்தாய் அவளது பண்பாட்டின்படி ஒரு விவசாயியாகவோ அல்லது பெரிய அரச அதிகாரியாகவோ இருந்தாலும் சரியே.

பெண் பிள்ளைகளையும் ஆண் பிள்ளைகளையும் ஒரே விதமாக வளர்க்க வேண்டும் என்ற எந்தத் தேவையுமில்லை. வீட்டில் ஒரு பாலாரை விட மற்றப் பாலார் மேலானவர்கள் என்று கருதும் நிலைமை இருக்கக்கூடாது. அவர்களுடைய கடமைக்கூறுகள் வித்தியாசப்பட்டாலும் பிள்ளைப் பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு முதலிய பணிகள் ஓர் அலுவலகத்திலோ அல்லது தொழிற்சாலையிலோ தொழில் செய்வதை ஒத்த அந்தஸ்துக் கொண்டவை என்பதை மறக்கக் கூடாது.

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் நியாயமாக நடத்தப்பட வேண்டும். எனினும், அவர்கள் இரு சாராரும் முற்றிலும் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டும் என்பது இதன் கருத்தல்ல. வாழ்க்கைக்கு முகங்கொடுப்பதற்கு இரு பாலாருக்கும் கற்றுக் கொடுப்பது அவசியம். அதேவேளை, தமக்குரிய தனித்துவமான கடமைக்கூறுகளை வெற்றிகர மாக நிறைவேற்றவும் அவர்களால் இயலுமாக வேண்டும். ஆண் பிள்ளைகளில் ஆக்கிரமிப்புப் போக்கும் உணர்வுகளை மதிக்காத தன்மையும் வளர இடமளிக்கக் கூடாது. அதேபோன்று பெண் பிள்ளைகள் அநாதரவான மனப்பாங்கு டன் ஆண்களில் முழுமையாகத் தங்கியிருப்பதை ஊக்குவிக்கவும் கூடாது. பெண் பிள்ளைகள் தமது சொந்தப் போக்கில் போக முடியாத சந்தர்ப்பங்களில் அதிக மனவெழுச்சி வயப்படுவ தும் அழுது கண்ணீர் வடிப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். அதேபோன்று இவ்வாறான

சந்தர்ப்பங்களில் ஆண் பிள்ளைகள் முரட்டுத் தன்மையைக் காட்டுவதையும் வன்முறையை நாடுவதையும் தடுக்கவேண்டும்.

கல்லூரிப் படிப்பை முடிக்கும் வரை ஆண்களும் பெண்களும் கல்வி பெறுவது மிக அவசியம். சிறு பருவத்தில் இரு பாலாருக்கும் பால் சார்பற்ற பொதுவான விளையாட்டுப் பொருட்களைக் கொடுப்பதே நல்லது. பெண் பிள்ளைகளுக்குப் பெண் பொம்மைகளையும் ஆண் பிள்ளைகளுக்குச் செயல் வீரம் காட்டும் ஆண் பொம்மைகளையும் கொடுப்பதை விட, இரு வகையிலும் பொதுவாகக் கொடுப்பதே ஏற்றது.

பெண் பிள்ளைகளை அலங்கரிப்பதிலும் அவர்களுக்கு ஆடையணிவிப்பதிலும் அளவுக்கு மிஞ்சிய கவனம் செலுத்தப்படக் கூடாது. அதே போல் ஆண் பிள்ளைகள் விடயத்தில் இவற்றை அலட்சியப்படுத்தவும் கூடாது. பெற்றார் தம் பெண் மக்களின் முடியலங்காரத்துக்குக் கொடுக்கும் அதேயளவு முக்கியத்துவத்தை ஆண் மக்கள் விடயத்திலும் வழங்க வேண்டும். சிறு பெண் பிள்ளைகளின் ஆடைகள் அவர்களது விளையாட்டு முயற்சிகளுக்குத் தடையாக அமையக் கூடாது. குட்டையான சட்டைகளை அணிவித்து விட்டு அவர்களுடைய உள்ளங்கி வெளியே தெரியும் போது அவர்களுக்கு ஏசுவது நியாயமான தல்ல. பெற்றார் தம் பெண் மக்களுக்கு இறுக்கமற்ற நீண்ட காற்சட்டை களை அணிவித்து அவர்களைத் தம் சகோதரர் களோடு உற்சாகமாக விளையாட விட வேண்டும். பெண் மக்கள் விளையாடி மகிழப் பழகுவதோடு தம் சகோதரர்களைப் போன்றே தமது உடல்ரீதியான ஆற்றல்களை மதிப்பதற்கும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

ஆண் பிள்ளைகள் விளையாட்டின் போதுகூட பெண் பிள்ளைகளை அடிக்கக் கூடாது எனப் போதிக்க வேண்டும். எந்தவொரு ஆண் பிள்ளையும் தன்னை அடிக்க இடம் கொடுக்கக் கூடாது என்பதையும் அவ்வாறு அடித்தால் அழுது கொண்டு ஓட்டம் பிடிக்காமல் தன்னைக் காத்துக் கொள்ள முயல வேண்டும் என்பதையும் பெண் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆணியல்பு கொண்ட பெண்களும் பெண்ணியல்பு கொண்ட ஆண்களும்

ஆணியல்பு கொண்ட பெண்களையும் பெண்ணியல்பு கொண்ட ஆண்களையும் பற்றி நபி (ஸல்) அவர்கள் தங்களது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்தார்கள்.
(அல் புகாரி)

ஆண் என்பவன் எப்போதும் ஆண் தான்; பெண் என்பவள் எப்போதும் பெண் தான். தாம் அப்படியாக இருப்பது பற்றி இரு சாராரும் நன்றியுணர்வுடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் ஒருவரை மற்றவர் பிரதி பண்ணக் கூடாது. அவர்கள் வாழும் பண்பாட்டுக்குள்ளே ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் வேறுபடுத்தி இனங்காண்பது இலகுவாக இருக்க வேண்டும். எனினும், தற்காலத்தில் இவ்வேறுபாட்டைப் பிரித்தறிவது சுலபமானதல்ல. ஆண் பிள்ளைகளதும் பெண் பிள்ளைகளதும் கடமைக் கூறுகள் வித்தியாசமானவையாக - ஆனால், ஒன்றை ஒன்று குறை நிரப்புவனவாக - இருப்பதனாலேயே இறைவன் அவர்களை வித்தியாசமானவர்களாகப் படைத்துள்ளான். நாம் வித்தியாசமாக இருப்பது ஓர் அருளாகும். இதனால்தான் இரு சாராருக்கும் இடையில் கவர்ச்சி ஏற்பட்டு வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். இவ்வாறான தனித்துவமும் கவர்ச்சியும் மிக்க வேறுபாடுகளை நாம் அற்பமாகக் கருதக் கூடாது.

பால்களுக்கிடையிலான போராட்டத்தில் எந்தப் பாலாரும் வெற்றி பெற முடியாது. இன்று தீவிரவாதப் பெண்ணியலாளர்கள் மேற்கத்திய கலாசாரத்தில் மிகப் பாதகமான செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆண்களைப் போன்றே பெண்களும் கடுந்துணிவுள்ளவர்கள், எளிதில் வசப்படாதவர்கள் என்றும் ஆண்கள் செய்யக்கூடிய எந்த வேலையையும் அவர்களாலும் செய்ய முடியும் என்றும் சில பெண்ணியல்வாதிகள் வாதிடுகின்றனர். இன்னும் சில தீவிரவாதிகள் பெண்களுக்கு ஆண்கள் தேவையில்லை என்றும் சமூகத்தின் தேவைகளை ஆண்களின்றியே பெண்களால் நிறைவேற்ற முடியும் என்றும் கருதுகின்றனர்..

பெரும்பான்மைக் கிறிஸ்தவர்களின் கருத்து மேற்சொன்ன கூற்றுக்களுடன் முரண்படுகின்றது. ஆண்கள் மென்மையும் இரக்கமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என இயேசு நாதர் போதித்தது மட்டுமன்றி அவர்கள் துணிவுள்ளவர்களாகவும் தலைமைப் பொறுப்பை ஏற்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியிருக்கிறார். எந்த முட்டாளினாலும் முரட்டுத் தனமாக நடந்து கொள்ள முடியும். எனினும், பண்பு நிறைந்த ஒரு மனிதனால் தான் பெண்களைக் கௌரவமாகவும் மரியாதையாகவும் நடத்த முடியும். குடும்பம் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஆண்கள் நிறைவேற்ற முடியும். எனினும், பெண்களுடன் நன்கு கலந்தாலோசித்த பின்பே அவ்வாறு செய்தல் வேண்டும். கணவன்மார் தம் மனைவியரை மரியாதையாக நடத்த வேண்டும். அதாவது, தாம் மரியாதையான முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஆண்களை ஆண் தன்மையுடனும் பெண்களைப் பெண் தன்மையுடனும் வாழச் செய்வதற்கே இறைவன் அவர்களை வித்தியாசமாகப் படைத்துள்ளான். எனவே, பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளைப் போல் நடத்தப்படக் கூடாது.

பால் வேறுபாடு தொடர்பாக அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

> உங்களில் சிலரை சிலர் மீது அல்லாஹ் மேன்மையாக்கி (அருள் புரிந்து) இருப்பதைப் பற்றிப் பேராசை கொள்ளாதீர்கள். ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்குரியனவே. (அவ்வாறே) பெண்கள் சம்பாதித்தவையும் பெண்களுக்குரியனவே. ஆகவே, (ஆண், பெண் ஒவ்வொருவரும் உழைப்பின் மூலம்) அல்லாஹ்வுடைய அருளைக் கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4: 32)

ஆண், பெண் இருபாலாரும் தனிச்சிறப்புடையவர்களே

- நூறு ஆண்கள் சேர்ந்து ஒரு பாசறையை அமைக்கலாம். ஆனால், ஒரு இல்லத்தை அமைப்பதற்குப் பெண்ணொருத்தி தேவை. (சீனப் பழமொழி)
- "உலகில் மிகச் சக்தி வாய்ந்த ஆள் யார்?" எனப் பேரரசர் தெரிஸ்டோக்ளிஸ் கேட்டுவிட்டு "ஏதென்ஸ் வாசிகள் கிரேக்கர்களை ஆளுகின்றனர்; நான் ஏதென்ஸ் வாசிகளை ஆளுகின்றேன்; என் மனைவியோ என்னை ஆளுகின்றாள்; எனது குழந்தை எனது மனைவியை ஆளுகிறது" என அவரே பதிலளித்தார்.
- ஒரு ஆணினால் ஒரு பெண்ணை முற்றாகப் புரிந்து கொள்ள முடியுமா? ஒரு பெண்ணால் ஓர் ஆணை முற்றாகப் புரிந்து கொள்ள முடியுமா?
- கர்ப்பத்தினதும் பிரசவத்தினதும் வேதனைகளை ஓர் ஆணினால் விளங்கிக்கொள்ள முடியுமா? அது முடியாத காரியம். ஆனால், சிறுநீரகத்தில் ஏற்படும் கடுமையான வலி அதற்கு ஓரளவு ஒப்பாகும்.
- நீங்கள் ஓர் ஆணுக்குக் கற்பித்தால் ஒரு பிரஜைக்குக் கல்வி வழங்குகிறீர்கள். ஆனால், ஒரு பெண்ணுக்குக் கற்பிக்கும் போது ஒரு சமுதாயத்திற்கே கல்வி வழங்குகிறீர்கள்.

பிள்ளை வளர்ப்பில் பால் அடிப்படையிலான பெற்றோரின் நிலை

இன்று பல குடும்பங்களில் பிள்ளை வளர்ப்பானது தாயின் பொறுப்பாக இருக்கின்றது. தந்தை உதவி செய்பவராகவே இருக்கிறார். பிள்ளை வளர்ப்பு தொடர்பாக அமெரிக்காவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் காணப்படும் சமநிலையின்மையைப் பின்வருவன எடுத்துக் காட்டுகின்றன:

- தந்தையரில் 75 சதவீதமானோர் அன்றாடப் பிள்ளைப் பராமரிப்புப் பணிகளில் பங்கேற்பதில்லை.
- தந்தையருள் 50 சதவீதமானோர் தமக்கு ஓய்வு கிடைக்கும் போது இவ்விடயத்தில் உதவி புரிகின்றனர்.
- தந்தையரை விடத் தாய்மாரே கூடுதலான நேரத்தைப் பிள்ளைப் பராமரிப்பில் செலவிடுகின்றனர். (தாய்மார் வாரத்துக்குச் சராசரி 32 மணித்தியாலங்களும் தந்தையர் 10 மணித்தியாலங்களும் செலவிடுகின்றனர்)

(Taffel, 1994; Taffel, 2001; Davidson, 1992)

இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் பிள்ளை வளர்ப்புக்குரிய பொறுப்புக்களும் பணிகளும் பால் ரீதியாக ஒதுக்கப்படுவதில்லை; மாறாக, வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்ப சமமாகப் பகிரப்படும் ஒரு பொறுப்பாக அது மாறியிருக்கிறது. தாய் வெளியே சென்றிருக்கும் போது பிள்ளைகளைப் பராமரிப்பது தந்தையின் பொறுப்பாகிவிடுகிறது. எனவே, அவர் தமது பிள்ளைகளின் இணைப் பராமரிப்பாளராக இருக்கின்றார். எனினும், பிள்ளைப் பராமரிப்பு விடயத்தில் தந்தையரைச் சம பங்காளிகளாகக் கருத முடியாது. பெண்களும் தொழில் செய்யும் நிலைமையில், ஆண்களும் பெண்களும் தமது மரபு ரீதியான கடமைக் கூறுகளை மீள் மதிப்பீடு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. இருவரும் வேலை விட்டு வீடு திரும்பியதும் உட்கார்ந்து பத்திரிகை வாசிக்கப் போவது யார், இரவுணவு தயாரிப்பது யார், பிள்ளைகளுக்கு உணவூட்டி, குளிப்பாட்டி, அவர்களை நித்திரை கொள்ளச் செய்வது யார் போன்ற பிரச்சினைகள் கடமைப் பகிர்வினூடாக தீர்க்கப்படுகின்றன. ஒரு பெற்றார் சமையலைக் கவனிக்க, மற்றவர் பிள்ளைகளின் கடமையைச் செய்ய முடியும். இப்போது பிள்ளைகளின் ஒழுக்காற்றைப் பேணும் பொறுப்பும் இரு பெற்றாரிடையிலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. முன்பு போல, 'இரு அப்பா வரட்டும்; அவரிடம் சொல்கிறேன்' எனத் தாய்மார் கூறும் நிலை மாறி, யார் முதலில் ஒரு குறையைக் காண்கிறாரோ, அவரே அதனைத் திருத்த வேண்டும் என்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. இதன் மூலம் தந்தைமார்மீது சுமத்தப்பட்டிருந்த பொறுப்புக்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சமநிலையின்மை ஏன்?

பிள்ளைப் பராமரிப்புப் பணிகளில் பெண்கள் கூடுதலாக ஈடுபடுவது ஏன் என்பதற்குப் பெண்கள் சார்பில் கூறப்படும் கருத்துக்கள் பின்வருமாறு:

- முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளப் பெண்கள் விரும்புவதில்லை.
- பெண்கள் தாம், சமூகப் பொருத்தப்பாடு அடைந்துள்ள விதம், அவர்களுடைய உயிரியல் அமைப்புக் காரணமாக அவர்கள் காட்டும் இயல்பான எதிர்வினைகள் என்பன காரணமாக பராமரிப்பு வேலைகளில் அவர்கள் கூடுதலாக நாட்டம் காட்டுகின்றனர்.
- பிள்ளைகள் தொடர்பாகப் பிரச்சினைகள் ஏற்படும் போது சமூகம் பெண்களையே குற்றம் சாட்டுவதனால் பிள்ளை வளர்ப்புப் பொறுப்பை அவர்கள் விட்டுக் கொடுக்க விரும்புவதில்லை.

- இக்கடமைகளைப் பகிர்ந்து கொள்வதற்குப் பெரும்பாலான பெண்கள் தயக்கம் காட்டுகின்றனர். பிள்ளைகள் மீதுள்ள தமது கட்டுப்பாட்டை இழந்து விடுவோம் என அவர்கள் பயப்படுவதும், பிள்ளைகளுடனான நெருக்கத்தையும் பாசத்தையும் கூறு போட்டுக் கொள்ள அவர்கள் தயங்குவதும், அக்கடமைகளைக் கணவர் செய்யும் விதம் பற்றித் திருப்தி அடையாமையும் இதற்குக் காரணமாக அமைகின்றன.

பிள்ளைப் பராமரிப்பு விடயங்களில் ஆண்கள் கூடுதலாக ஈடுபடாமலிருப்பதற்கு அவர்கள் சார்பில் கூறப்படும் காரணங்கள்:

- தாம் பிள்ளைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் போது ஏதும் பாரதூரமான விடயங்கள் நடந்து விடுமோ என்ற பயம்.
- பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் அதனால் எரிச்சலுற்று கோபமடையலாம் என்ற பயம்.
- அவர்களைப் பராமரிப்பதில் தாயார்தான் திறமை உடையவர்; தமக்கு அத்திறமை இல்லை என்ற எண்ணம்.
- பிள்ளைகளைப் பராமரிப்பதில் அதிகம் ஈடுபட்டால் தனது வேலைப்பளு காரணமாகத் தொழில் பதவியுயர்வை இழந்து விடுவோமோ என்ற அச்சம்.
- பிள்ளைப் பராமரிப்பு பற்றிய பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஆண்களுக்குக் குறைவாக இருத்தல்.
- தமது பிள்ளை வளர்ப்புப் பணியில் தமக்கு ஒத்தாசை வழங்கும் அமைப்புக்கள் இல்லாமை.
- பிள்ளைப் பராமரிப்பில் தந்தையர் கூடுதலாக ஈடுபடுவதைச் சில தாய்மார் தடுத்தல்.
- எவ்வாறாயினும் தற்காலத் தந்தையர்கள், அவர்களது தந்தையரை விடக் கூடுதலான அளவுக் காலத்தைத் தம் பிள்ளைகளுடன் செலவழிக்கின்றனர்.

எனவே, தந்தையரின் பொதுவான நடத்தையில் மாற்றமொன்று ஏற்பட்டு வருவது போல் தோன்றுகின்றது.

பராமரிப்பாளர்களாகத் தந்தையர்: தவறான கருத்துக்களும் உண்மை நிலையும்

பராமரிப்பாளர்கள் என்ற வகையில் தந்தையர் பற்றிய சில தவறான கருத்துக்களையும் அது தொடர்பான உண்மை நிலையையும் கீழே தருகின்றோம்.

தவறான கருத்துக்கள்	உண்மை நிலை
• பிள்ளைகளைப் பராமரிப்பதில் பெண்களே எப்போதும் சிறந்தவர்கள்.	• பிள்ளைகள் தமது தாய்மாருடன் போன்றே தமது தந்தையருடனும் நெருங்கிப் பிணையலாம்.
• முதற்சில வருடங்களின் போது பிள்ளைகளுக்குத் தந்தையர் அவ்வளவு முக்கியமல்ல; பிள்ளைகள் வளர்ந்த பின்னரே தந்தையரின் தேவை ஏற்படுகிறது.	• தம் குழந்தைகளைப் பற்றித் தாய்மாரைப் போன்றே தந்தையரும் கூறுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கின்றனர்.
• ஒழுக்காற்றைப் பேணுவதே தந்தையரின் மிக முக்கியமான கடமைக்கூறாகும்.	• அமெரிக்கத் தந்தையர்கள் தாய்மாரை விட வித்தியாசமான முறையில் தம் பிள்ளைகளுடன் விளையாடுகின்றனர். தந்தையர் கூடுதலாக உடல் சார்ந்த விளையாட்டுச் செயற்பாடுகளை உபயோகிக்கின்றனர். இச்செயற் பாடுகளில் தொடுகை அதிகமாக இடம்பெறும். பிள்ளைகளுடன் தாம் ஒன்றாய் இருக்கும் நேரத்தில் கூடிய விகிதத்தை விளையாட்டில் கழிப்பது தந்தையரே.
• குடும்பத்துக்காகச் சம்பாதிக்கும் பொறுப்பு தந்தைக்கு இருப்பதால் அவர் பிள்ளைகளுடன் அதிக நேரத்தைக் கழிக்க வேண்டியதில்லை.	• தந்தையரின் முழு நேரப் பராமரிப்பைப் பெற்ற குழந்தைகள் நியமச்சோதனைகளில் சராசரிக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.
• பிள்ளைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவர்கள் தாயுடன் கூடுதலாக இணைந்திருப்பது அவசியம்.	• ஒரு தந்தையின் பிள்ளைப் பராமரிப்பு முறை அப்பிள்ளையின் சமூகமயமாக்கலில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அன்போடும் நியாயத்தோடும் உறுதியான முறையிலும் தம் பிள்ளைகளின் நடத்தையை நெறிப்படுத்தும் தந்தையர் உயர் திறமை மிக்க பிள்ளைகளை உருவாக்குவர். அதேவேளை, பாசமற்ற, அடிக்கடி தண்டிக்கின்ற, ஆதிக்கப் போக்குள்ள தந்தையரின் பிள்ளைகள் தாங்கி வாழ்பவர்களாகவும் ஒதுங்கிப் போவோராகவும் கவலை மிக்கவர்களாகவும் காணப்படு கின்றனர்.
• ஒரு மகன் என்ற வகையில் எனது தந்தையோடு நெருங்கிய உறவு எனக்குக் கிடைக்கவில்லை. எனினும், நான் நன்றாகத்தான் இருக்கிறேன். எனவே, நான் எனது பிள்ளையோடு நெருங்கிய உறவு வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. • ஒரு தந்தை என்ற வகையில் என்னிடமுள்ள குறைபாடுகளுக்கு நான் காரணமல்ல; எனது தந்தை என்னை இவ்வாறு தான் வளர்த்தார்.	• எமது செய்கைகளுக்கு நாம் எப்போதும் பொறுப்பாளிகளே. எமது பெற்றோர் சிறந்த முன்மாதிரிகளாக இருந்திராவிட்டால் நல்ல முன்மாதிரிகளை நாம் தேடிப்பார்க்க வேண்டும்.
• எனது குடும்பத்திற்காக நான் செய்யக்கூடிய முக்கியமான பணி எனது தொழிலைச் சிறப்பாகச் செய்வதாகும்.	• ஒருவருடைய தொழிலை விட அவரது குடும்ப நலனுக்கு உயர் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

ஒன்றாக வாழாத தந்தையர் பிள்ளைகளில் ஏற்படுத்தும் தாக்கம்

பேணி வளர்க்கக்கூடிய தந்தையொருவர் இல்லாத நிலைக்கும் பிள்ளைகளில் காணப்படும் பின்வரும் தவறான நடத்தைகளுக்கும் இடையில் தொடர்பிருப்பதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

1. போதைப் பொருள் மற்றும் மதுபான உபயோகம்
2. ஆண் வன்முறையின் அதிகரிப்பு
3. ஆண் முன்மாதிரியொன்று இல்லாமல் வளர்க்கப்பட்ட ஆண் பிள்ளைகளில் காணப்படும் மிகையான ஆண் தன்மை
4. பால்ய குற்றச்செயல்கள்
5. தம் பெற்றோரின் விவாகரத்து, மறுமணம் என்பவற்றுக்குத் தம்மை இசைவாக்கிக் கொள்ளச் சிரமப்படுதல்
6. அடுத்தவர்களின் உணர்வுகள், தேவைகள் முதலியவற்றை அலட்சியப்படுத்தல்
7. கல்வி சார்ந்த சாதனைகளில் வீழ்ச்சியும் பாடசாலை இடைவிலகலின் அதிகரிப்பும்

ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் வித்தியாசமான தேவைகள்

ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் தேவைகள் வித்தியாசப்படுவதற்குக் காரணமாக அமைவது பிறப்புரிமையா அல்லது வளர்ப்பு முறையா என்பது பற்றி யாரும் திருத்தமாக அறிய மாட்டார்கள். எவ்வாறாயினும் பிள்ளைகள் தம் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கு உதவுவதில் பெற்றார் முக்கிய பங்கு வகிக்கலாம். சில சமூகங்களில் - குறிப்பாக அவற்றின் வறிய பிரிவினரிடையே - ஒவ்வொரு பாலாருக்குமுரிய கடமைக் கூறுகளும் அவற்றோடு தொடர்பான நடத்தைகளும் கண்டிப்பாக வரையறுக்கப் பட்டுள்ளன. இவ்விதிகளை மீறும் எவரும் கண்டிப்புக்கு உள்ளாகிறார்.

சிறிய ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் தம் கடமைக் கூறுகளை நிறைவேற்றுவ தற்கு உற்சாகமளிக்கும் சில உதவிக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. (தழுவல்; Friedman, 1998)

சிறிய பெண் பிள்ளையொன்றுக்குத் தேவையானவை

தன்னம்பிக்கை: பெற்றார் அவர்களிடம் விருத்தி செய்ய எதிர்பார்க்கும் சிறப்பியல்புகளை விவரிக்கும் வார்த்தைகளைக் கொண்டு பெண் பிள்ளைகள் நிதமும் உற்சாகப் படுத்தப்பட வேண்டும். உதாரணம்: 'நீங்களாகவே படிக் கட்டுகளில் ஏறியது நல்ல துணிச்சலான செயல்'. தம் பெற்றார் தம் திறனில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையும் தாம் கெட்டிக்காரர்கள், தமக்கு செயலாற்றல் உண்டு என்பதையும் பெண் பிள்ளைகள் அறிந்திருப்பது முக்கியம். தலைமை தாங்குவதற்கான வாய்ப்புக்களும் அவர்களுக்கு அதிகமாக வழங்கப்பட வேண்டும். உதாரணமாக, தமக்கு விருப்பமான செயற்பாடொன்றைத் தெரிவு செய்தல், அதற்கான விதிகளைத் தயாரித்தல், சச்சரவுகளைத் தீர்த்தல் போன்ற பொறுப்புக்களை அவர்களுக்கு ஒப்படைக்கலாம். தலைமை தாங்குவதற்குப் பயிற்சி பெற்ற பெண் பிள்ளையானவள் தனது கல்வி, தொழில் முதலியவற்றைப் பொறுப்பேற்க நல்ல தயார் நிலையில் இருப்பாள்.

தன்னிறைவு: சுயமாகவே செய்து கொள்ளக் கூடியவற்றை நிறைவேற்ற அனுமதிப்பதன் மூலம் சிறுமியர்களில் தம் திறமை பற்றிய நம்பிக்கையுணர்வை ஏற்படுத்துவது முக்கியமாகும். தமது தலையை வாரிக் கொள்ளல், தேநீர்க் கோப்பையொன்றை எடுத்துச் செல்லல், கட்டுமானத் துண்டுகளைப் பயன்படுத்தி பிறர் உதவியின்றிக் கோபுரமொன்றை உருவாக்குதல் முதலிய செயல்களை இவ்வாறு செய்ய அனுமதிக்கலாம். தங்கள் வாழ்க்கைச் செலவுக்காகச் சம்பாதிப்பதிலும் பெண்கள் ஈடுபட முடியும் என்பதைப் பெண் பிள்ளைகளுக்கு நினைவூட்ட வேண்டும். அத்தோடு, ஒவ்வொரு பெண் பிள்ளையும் தன்னைத் தானே பேணிக் காத்துக் கொள்வதற்குத் தயார் செய்யப்பட வேண்டும். குடும்ப வாழ்க்கையோடு, சம்பாதித்தலிலும், பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டுள்ள ஊக்கம் மிக்க பெண்களை முன்மாதிரிகளாகப் பெற்றார் எடுத்துக்காட்ட வேண்டும்.

இடம் சார்ந்த தொடர்புகளும் ஒருங்கிசைவும்: பல்வேறு விதமான விளையாட்டுப் பொருட்கள் பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும். இவற்றில் ட்ரக்குகள், கார்கள், நீர் விளையாட்டுக்குரிய உபகரணங்கள், பலவகைப் பந்துகள், கட்டுமானத் துண்டுகள் முதலியன அடங்கலாம். அத்தோடு, ஏறிச் சவாரி செய்யவும் மேல்நோக்கி ஏறவும் ஏற்ற விளையாட்டுப் பொருட்களும் தேவை.

உடல்சார்ந்த தகுதி: தமது குழந்தைகளுடன் சுறுசுறுப்பான விளையாட்டுக்களில் பெற்றார் ஈடுபட வேண்டும். போட்டி விளையாட்டுக்களில் ஈடுபடத் தகுதி பெறாத, வயது குறைந்த பிள்ளைகள்கூட ஓட்டப் போட்டிகளிலும் குட்டிக் கரணம் போடுதல், வழுக்கும் தட்டில் வழுக்கிச் செல்லுதல் முதலியவற்றில் ஈடுபடலாம். சிரமங்கள் ஏற்படும் போது அவர்களைக் காப்பாற்றுவதற்குப் பெற்றார் முன் செல்லக் கூடாது. மாறாக, அழுக்கைத் தோய்த்துக் கொள்ள நேரிடுகின்ற, முடியின் ஒழுங்கைக் குலைக்கின்ற, அதிகளவில் வியர்வையை ஏற்படுத்துகின்ற தொழிற்பாடுகளிலும் ஈடுபட அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் இவை பற்றிய அருவறுப்பு உணர்விலிருந்து அவர்களை விடுபடச் செய்யலாம். அத்தோடு, களி, மண் போன்றவற்றுடன் விளையாடவும் மைதான விளையாட்டுக்களில் ஈடுபடவும் அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

தீர்மானம் மேற்கொள்ளும் திறன்: தெரிவுகளைச் செய்வதற்கும் தமது தீர்மானங்களுக்கான பொறுப்புக்களை ஏற்பதற்கும் பெற்றார் தமது பெண் பிள்ளைகளுக்கு இடமளிக்க வேண்டும். சிறு பெண்ணாக இருக்கும் போது எந்தக் கோப்பையில் அருந்துவது, எந்தத் தட்டில் சாப்பிடுவது, எந்த நண்பரை விளையாட்டுக்கு அழைப்பது முதலியவற்றை அவளே தீர்மானித்துக்கொள்ள விட வேண்டும்.

ஆராய்வுக்கம்: தம் சுற்றாடலைத் துருவி ஆராய்வதற்குத் தேவையான சகல வாய்ப்புக்களும் பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்கள் சிறு குழந்தைகளாக இருக்கும் போது ஆபத்துக்களின்றி நடமாடித் திரியக் கூடிய வகையில் வீடு முழுவதும் பாதுகாப்புக்குரியதாக இருக்கிறதா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். பெற்றார் தம் பெண் பிள்ளையை நூலகம், பூங்கா, விலங்குக் காட்சிச்சாலை, சுபர் மார்கட், வாராந்தச் சந்தை, வழிபாட்டுத் தளங்கள் முதலிய வெளியிடங்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும். அத்தோடு, பள்ளிப் பருவத்தில் அவர்களைப் பண்ணைகள், தொழிற்சாலைகள், கைப்பணி வேலைத்தளங்கள், தோட்டங்கள், நீதி மன்றங்கள்போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

உடல் தோற்றம்: பெற்றார் தம் பிள்ளைகளின் உடல் தோற்றத்தை விட அவர்களது சாதனைகள் பற்றியே அதிக கவனம் செலுத்த வேண்டும். தனது மகள் எவ்வளவு கவர்ச்சியாகத் தோன்றுகிறாள் என்பது பற்றிப் பேசுவதற்குப் பதிலாக அவளால் என்ன சாதிக்கப்பட முடியும் என்பது பற்றியே கூடுதலாகப் பேச வேண்டும். உதாரணமாக, ''மகளே, நீ இன்று கவர்ச்சியாகத் தோன்றுகிறாய்'' என்று சொல்வதற்குப் பதிலாக ''நீ இன்று அருமையான வேலையொன்று செய்திருக்கிறாய்'' என்று கூறலாம்.

விமர்சன ரீதியாகப் பகுத்தாராயும் திறன்: பிள்ளைகள் தொலைக்காட்சி அல்லது திரைப்படங்களைப் பார்ப்பதாக இருந்தால் அவற்றை விமர்சனக் கண்ணோடு பார்ப்பதற்குப் பயிற்றுவிக்கலாம். தாம் கூட்டாகப் பார்த்த விடயமொன்றைப் பற்றி அவர்கள் கலந்துரையாடச் செய்யலாம். எடுத்துக்காட்டாக, உடல் தோற்றம் பற்றிய கலந்துரையாடலொன்றை ஆரம்பிக்கலாம். தொலைக்காட்சியில் பெண்கள் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறார்கள்: கொழுத்த பெண்கள் பொது மக்களால் விரும்பப்படாத பாத்திரங்களாகக் காட்டப் படுகிறார்களா? அவர்கள் நகைச்சுவைக்காக உபயோகிக்கப் படுகிறார்களா? கவர்ச்சியான தோற்றமுடைய பெண்கள் பாலுணர்வுச் சின்னங்களாகக் காட்டப்படுகிறார்களா? அவர்கள் கெட்டித்தனம் உள்ளவர்களாகத் தோன்றுகிறார்களா?

கணித, விஞ்ஞான உளச்சார்பு: விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம் தொடர்பான அனுபவங்களைப் பெறுவதற்குப் பெண் பிள்ளைகளுக்கு முழுமையான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். வெளியுலகைத் துருவி ஆராய்வதற்குத் தேவையான ஆசையும் ஆர்வமும் தயார் நிலையும் பெண் பிள்ளைகளிடம் இருந்த போதிலும் அதற்கான ஊக்குவித்தல், வாய்ப்பு முதலியன அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

முன்மாதிரியாக இருத்தல்: தம்மையும் ஏனைய பெண்களையும் மதிப்பதன் மூலம் தாய்மாரும் ஏனைய பெண் உறவினர்களும் வளரும் பெண் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகளாக இருத்தல் வேண்டும். இதன் மூலம் பாரம்பரியமாகப் பெண் பிள்ளைகள் ஒதுக்கி வைக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

சிறிய ஆண் பிள்ளையொன்றுக்குத் தேவையானவை



ஆண்களுக்குரிய ஒரு முன்மாதிரி: ஆண்கள் தமது சொந்த வாழ்க்கையிலும் தொழில்ரீதியான வாழ்க்கை யிலும் தம் பாலுக்குரிய தன்மைகளை மீள் வரையறை செய்து வருகின்றனர். தந்தையரில் பெரும்பாலானோர் வீட்டில் வசிக்காத இக்காலத்தில் ஆண் பிள்ளைகள் கற்றுக் கொள்வதற்குரிய ஆண் முன்மாதிரி கிடைக்கா மல் போனால் அவர்கள் ஜனரஞ்சக கலாசாரத்தி லிருந்து (விளையாட்டுத் துறை, தொலைக்காட்சி முதலியன) ஆண் தன்மை பற்றித் தெரிந்து கொள்கின் றனர். இதன்படி ஆண்மை என்பது பாலுறவு, வன்முறை, விளையாட்டுக்கள், சடப்பொருள் சார்ந்த உடைமைகள் ஆகிய நான்கு விடயங்களால் வரையறுக்கப்படுகின் றது. பெண்கள், ஆண்கள், ஆண் பிள்ளைகள் என்போருக்கிடையிலான உறவுகள் தொடர்பாக, பராமரிப்பாளர் என்ற வகையில் பெற்றார் மறுபரிசீலனை செய்தல் வேண்டும். வழக்கமாக பெண்களின் பண்பாட்டுக்கு உட்பட்டுள்ள சில விடயங்களை ஆண்கள் பரிசோதனை ரீதியாச் செயற்படுத்திப் பார்க்க வேண்டும். உதாரணமாக, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளல், மனவெழுச்சி ரீதியான ஒத்தாசையை வழங்குதல், உரையாடற் கலையை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் இவற்றுள் அடங்கலாம். ஒரு சிறுவன் தன் தந்தையிடம் வந்து, இன்னொரு பிள்ளை தன்னை அடிப்பதாகக் கூறினால், அவ்வாறான நிலைமையில் ஒரு தாய்க்கும் மகளுக்கும் இடையில் உரையாடல் எவ்வாறு இடம்பெறும் என்பதைத் தந்தை கற்பனை செய்து பார்த்து அதன் சில அம்சங்களைத் தமது உரையாடலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உடல் ரீதியாகப் பாசம் காட்டுதல்: ஆண் குழந்தைகளுக்குப் பெண் குழந்தைகளைப் போன்றே அரவணைப்புத் தேவைப்படுகிறது. எனவே, தமது ஆண் குழந்தை அழும் போது பெற்றார் அதற்கு ஆறுதல் வழங்க வேண்டும். அத்தோடு, அதனுடன் விளையாடுவதற்கும் அவர்கள் காலத்தை ஒதுக்க வேண்டும். மேலும், அவன் வளரும் வரை பெற்றோரது அரவணைப்புத் தொடர வேண்டும்.

பேச்சுத் திறன்: பெற்றார் தம் மகனுடன் கைக்குழந்தைப் பருவத்திலிருந்தே பேச வேண்டும். அவர்களுடைய குரல்கள் குழந்தைக்கு ஆறுதலளிப்பதோடு அதன் மொழி விருத்தியையும் ஊக்குவிக்கும்.

அடுத்தவர்கள் பற்றிய கரிசனை: தம் பிள்ளையின் செயல்கள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றிப் பெற்றார் அவனுக்கு விளக்கிக் கூறுவது அவசியம். ஒரு சிறுமி தவறாக நடந்தால் அவள் இன்னொருவரைத் தொந்தரவு செய்கிறாள் என அவளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது. ஆனால், ஆண் பிள்ளைகள் தவறு செய்யும் போது எவ்வித விளக்கமும் வழங்காமல் அவர்கள் கண்டிக்கப்படுகின்றனர். தம்மைத் தண்டிக்கும் போது பெற்றார் எவ்வளவு கோபமடைந்துள்ளனர் என்பதையே அவர்கள் கவனிப்பர்; தமது தவறான நடத்தை மற்றவர்களில் ஏற்படுத்திய பாதிப்பைக் கவனிக்கத் தவறிவிடுவர்.

அமைதிதரும் தீர்வுகளைப் பெறுவதற்கான திறன்கள்: முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான வழிகள் ஆண் பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும். நடைபயிலும் வயதுப் பிள்ளைகளில் பலர் செய்வது போல் அவர்கள் மற்றவர்களை அடிக்கவும் கடிக்கவும் தொடங்கினால் அவ்வாறு மற்றவர்களை நோவிப்பது சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதைப் பெற்றார் அவர்களுக்கு விளக்கவேண்டும். அத்தோடு, அவர்களது கோபத்தை வெளிப்படுத்துவதற்கான மாற்று வழிகளை எடுத்துக் கூற வேண்டும்.

தனது செய்கைகளுக்குப் பொறுப்பேற்றல்: பெற்றார் இரட்டை நியமங்களைப் பிரயோகிப்பது தவிர்க்கப்படுதல் அவசியம். தமது பெண் பிள்ளைகளின் ஏதேனும் நடத்தை பொருத்தமற்றது போல் தோன்றினால் அதே நியமத்தை ஆண் பிள்ளைகள் விடயத்திலும் பிரயோகிக்க வேண்டும். ஆண் பிள்ளைகள் இரக்கமின்றி நடந்து கொள்ளும் போது 'ஆண் பிள்ளைகள் அப்படித்தான்' என்று சாக்குப் போக்குக் கூறி மழுப்பி விடக்கூடாது.

மனவெழுச்சிகளை வெளிப்படுத்தல்: தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு - அழுவது உட்பட - ஆண் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுவது அவசியம். கவலையுணர்வுகள் காட்டப்படக் கூடாது என ஆண் பிள்ளைகளை நம்பச் செய்தால் பிற்காலத்தில் பெரியவர்களான பின் அவர்கள் இவ்வுணர்வுகளை அடக்கி ஒடுக்கப் பழகிக்கொள்வர்.

பால் வித்தியாசம் தொடர்பாகப் பகுத்தறிவு ரீதியில் எதிர்வினை காட்டுதல்

ஆண் - பெண் பிள்ளைகளுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றிப் பிள்ளைகள் சாதகமான கருத்துக்களைப் பெறப் பெற்றார் உதவலாம்.

- பால் வேறுபாடுகள் பற்றித் தங்கள் பெண்மக்களின் அவதானங்கள், கண்டுபிடிப்புக்கள் தொடர்பாகப் பெற்றார் பொருத்தமான வழிகாட்டலை வழங்க வேண்டும்.
- தம் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்களில் பெற்றார் தாமே முன்மாதிரியாகச் செயற்படலாம். உதாரணமாக, தனது தாய் புற்தரையைக் கத்தரிப்பதையும் கார் ஓட்டுவதையும், தனது தந்தை சமைப்பதையும் உணவுத் தட்டுக்களைக் கழுவுவதையும் மகன் அவதானிப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.

- சில நாடுகளில் பெரும்பாலும் பெண்களே பாரமான வேலைகளைச் செய்கின்றனர். உதாரணமாக, வீட்டுக்கு நீர் கொண்டு வருதல்.
- பெற்றார் பிள்ளைகளுக்குப் பால் சார்பற்ற விளையாட்டுப் பொருட்களை வழங்கலாம். சிறு பிள்ளைகள் தம் பெற்றாரிடமிருந்து கற்பது போன்றே தம் சம வயதுப் பிள்ளைகளிடமிருந்தும் கற்கின்றனர். எனவே, பெற்றார் ஏனைய பெற்றார்களுடனும் இணைந்து செயற்படுவது அவசியமாகிறது.

பாலையும் இயல்பான மனப்போக்குகளையும் ஒன்றாகக் கருதுதல்

நாம் ஒவ்வொருவரும் ஒரு குறித்த உளப்போக்குடையவர்களாகப் பிறக்கின்றோம். எம்மைச் சூழ நடப்பவற்றுக்கு நாம் விளைவு காட்டும் ஒரு சிறப்பியல்பான முறையையே உளப்போக்கு என்கிறோம். நாம் எவற்றை விரும்புகிறோம், எவற்றை ஒதுக்கித் தள்ளுகிறோம் என்பதை எமது உளப்போக்கு ஓரளவு நிர்ணயிக்கிறது. சில குழந்தைகள் இயல்பாகவே மனிதர்கள் தொடர்பாக உணர்வும் ஆர்வமும் காட்டுகின்றனர். அவை எளிதில் விழித் தொடர்பினை ஏற்படுத்துவதோடு புன்னகைக்குப் பதில் புன்னகை காட்டுகின்றன. இன்னும் சில குழந்தைகள் பார்வையைக் கவரும் பொருட்கள் மீதும் ஓசைகள் மீதும் நாட்டம் கொள்கின்றனர். அவற்றின் விழிகள் ஓசை எழுப்பும் விளையாட்டுப் பொருட்களின் மீது குவிந்திருக்கும்.

சில உளப்போக்குகள் இயல்பாகவே ஆண் தன்மைக்குரியவை அல்லது பெண் தன்மைக்குரியவை எனப் பெற்றார் நம்பும் போதே பிரச்சினை ஏற்படுகின்றது. உதாரணமாக, தனது கை நகங்களுக்கு மருதாணிச் சாயத்தைப் பூசிக்கொள்ளும் ஓர் ஆண் பிள்ளையைப் பார்த்து அவனது பெற்றார் 'நீ என்ன, பெண் பிள்ளையா?' எனக் கேட்டால், தான் பெண் பிள்ளைக்குரிய விடயங்களை நாடுவதால், தான் ஒரு பெண் என அப்பிள்ளை நினைக்கக்கூடும். இதனைத் தொடர்ந்து, தான் ஒரு பெண் பிள்ளையாக இருந்தால் நல்லதே என அவன் யோசிக்கத் தொடங்குவான். இது பெற்றார் தம்மை அறியாமலேயே அவன் மீது திணிக்கின்ற ஓர் எண்ணமாகும். பெண் பிள்ளைகளில் பலர் கூச்சலும் குழப்பமும் மிக்க முரட்டுத்தனமான விளையாட்டுக்களை விரும்புகின்றனர். ஒரு பெண் பிள்ளை உடல் ரீதியாகத் துடிப்புடன் இருந்து இவ்வகையான விளையாட்டுக்களில் ஈடுபட்டு மகிழ்ந்தால் அவள் பெண் தன்மையற்றவள் எனப் பெற்றார் கருதக்கூடும். ஆனால், உண்மையில் சூழலின் உயர் மட்டத் தூண்டுதல்களுக்கு விளைவு காட்டும் உளப்போக்கு அவளிடம் இருப்பதே இந்நிலைக்குக் காரணமாகும்.

எதிர்பார்க்கப்படும் பால் தொடர்பான கடமைக் கூறுகளையும் உளப்போக்கையும் குழப்பிக் கொள்வதனால் ஆண் பிள்ளைகளுக்கே அதிக பிரச்சினை ஏற்படுகிறது. அவர்கள் பெண்களுக்குரிய விளையாட்டுக்களில் ஈடுபடும் போது அவர்களுக்குக் கிடைக்கும் எதிர்மறையான பின்னூட்டல் ஆண்களுக்குரிய விளையாட்டுக்களில் ஈடுபடும் பெண் பிள்ளைகளுக்குக் கிடைப்பதை விடக் கூடுதலாகும். ஒரு பெண் பிள்ளைக்கு ஆண் பட்டம் சூட்டுவதை விட, ஒரு ஆண் பிள்ளைக்கு பெண் பட்டம் சூட்டுவது மனப்பீதியை ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஏனெனில், பெண் தன்மையை விட ஆண் தன்மை சமூகத்தில் மதிப்புக் கூடியதாக இருக்கிறது. எனவே, ஒரு ஆண் பிள்ளை தன் ஆண் தன்மையை நிராகரித்து விட்டுப் பெண் தன்மையை ஏற்றுக்கொள்ள விரும்ப மாட்டான்.

பெற்றார் தம் ஆண், பெண் மக்கள் இரு சாரார் மீதும் அன்பு செலுத்த வேண்டும். பிள்ளைகள் தம் பெற்றாருடன் உறுதியான கரிசனையுடன் கூடிய உறவை வைத்திருக்கும் போது சிறப்பாக வளர்ச்சியடைகின்றன. தம் பிள்ளைகள் கரிசனை காட்டுபவர்களாகவும் உற்பத்தித் திறனுடையவர்களாகவும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமெனப் பெற்றார் விரும்புவதும் இதற்குத் துணையாக அமையும்.

பின்வரும் விடயங்கள் பற்றிப் பெற்றார் விழிப்பாக இருத்தல் வேண்டும்

- உங்கள் பிள்ளையின் விளையாட்டு நடத்தை விடாப்பிடியானதாகவும் நெகிழ்வுத் தன்மையற்றதாகவும் இருப்பின் அது பற்றிக் கவனம் செலுத்துங்கள். ஒரு பிள்ளை பெண் பொம்மைகளுடன் விளையாடவும் பெண்களின் ஆடைகளை அணியவும் விரும்புவது சாதாரணமானது. ஆனால், அதை மாத்திரம் செய்வதாக அடம்பிடிப்பதும் அதனைத் தொடர்ந்து திருப்பித் திருப்பிச் செய்வதும் அசாதாரணமானது.
- சில அரிதான சந்தர்ப்பங்களில், கவலையோடு காணப்படும் ஒரு பிள்ளை தமது உடல் அமைப்பு - குறிப்பாகப் பாலுறுப்பு - வித்தியாசமாக இருந்தால் நல்லதே என்ற வகையில் பேசலாம். இப்படியான ஒரு பிள்ளை தனது உடலை உருக்குலைக்க முயற்சி செய்தால் அல்லது அது பற்றிப் பேசினால் அது பற்றி நிபுணர்களின் உதவியை நாடுவதே நல்லது.
- தமது பிள்ளையின் உளப்போக்குப் பாணியை ஒரு நோயாகப் பெற்றார் மாற்றிவிடக் கூடாது. தமது பிள்ளை சந்தோசமின்றி மனத்தளர்வுற்று அல்லது பயம் கலந்த கவலையோடு காணப்பட்டால் அப்பிள்ளையை சிறு பிள்ளைகள் தொடர்பான உளவியல் நிபுணர் ஒருவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.
- இப்பிரச்சினைகளுக்கு மருந்தினால் சிகிச்சையளிப்பது ஆபத்தானது. எனவே, உரையாடற் சிகிச்சைகளின் மூலமே இப்பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும்.
- பெற்றார் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொள்ளக் கூடாது. பிள்ளைகள் காட்டும் வழக்கத்திற்கு மாறான நாட்டங்கள் பெற்றார் செய்த எதனுடனும் தொடர்புடையவை அல்ல.

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் கற்றுக்கொள்ளும் முறை வித்தியாசமானது

"முன் பள்ளிப் பருவம் முதலே ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் தகவல்களைக் கிரகிக்கும் வீதம் வித்தியாசப்படுகிறது. இது வித்தியாசமான காரணங்களுக்காக நிகழ்வதோடு வேறுபட்ட அளவில் பெறுபேற்றையும் தருகிறது" (Gurian, 2001) சிறிய ஆண் பிள்ளைகள், பொருட்களில் கூடுதலான ஆர்வம் காட்டலாம். அதேவேளை பெண் பிள்ளைகள் ஆட்களிலும் உறவுகளிலும் கூடுதலான ஆர்வம் காட்டுவார்கள். ஆரம்பப் பள்ளிப் பருவத்தில் ஆண் பிள்ளைகள் உலகப் படத்தில் பிரான்ஸ் நாட்டை எளிதில் சுட்டிக் காட்டக்கூடும். பெண் பிள்ளைகளோ பிரெஞ்சு மொழியைக் கற்றுக் கொள்வதில் திறமை காட்டுவார்கள். சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுவதில் ஆண் பிள்ளை திறமை காட்டும் அதேவேளையில் ஒரு கேள்விக்குச் செவிமடுத்து விடையெழுதுவதில் பெண் பிள்ளை திறமை காட்டுவாள். எனினும், துரதிர்ஷ்டவசமாக இருபாலாரும் ஒரே விதமாகக் கற்கின்றனர் எனக்கருதி, ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் ஒரே விதமாக நடத்தப்படுகின்றனர். இதன் விளைவாகவே நடத்தைக் கோளாறுகளும் கற்றலில் தோல்வியும் ஏற்படுகின்றன.

ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை நாம் உணர்ந்து கொண்டு, அவர்களை வளப்படுத்துவதற்குரிய வழிகள் பற்றி நாம் மீளக் கற்றுக் கொண்டால், மந்த கதியில் கற்போர் பலரின் போக்கில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்த முடியும். சித்தியெய்தத் தவறிய மாணவர்கள் பலர் Michael Gurian அறிமுகப் படுத்திய வெற்றிகரமான நுட்ப முறைகளைப் பயன்படுத்திச் சிறந்த மாணவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அவரது நுட்பமுறைகள் எல்லா வகுப்பறைகளிலும் பயனளிக்க முடியும். ஏனெனில், அவர் ஆண், பெண் பிள்ளைகளில் காணப்படும் சிறப்பான வலிமைகளைப் பயன்படுத்திக் கொள்வதோடு அவர்களது குறைபாடுகளை குறை நிரப்பச் செய்கிறார்.

பெண் பிள்ளைகளுக்காகச் செய்யப்பட வேண்டியவை: இவர்களது தலைமைத்துவப் பங்களிப்புக்களை வலுப்படுத்தல், அவர்களது எழுத்துத் திறமையைப் பயன்படுத்தல், சுற்றாடலோடு தொடர்புடைய விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல், கம்பியூட்டர்களைப் பயன்படுத்துவதில் தேர்ச்சி பெறச்செய்தல், கணித, விஞ்ஞான போட்டிகளில் கலந்து கொள்ள ஊக்குவித்தல் முதலியவற்றைப் பெற்றார் செய்தல் வேண்டும்.

ஆண் பிள்ளைகளுக்காகச் செய்யப்பட வேண்டியவை: சுத்தம் செய்தல், மற்றவர்களுக்கு உதவுதல், பொருட்களை அங்குமிங்கும் அசைத்தல் முதலியவற்றுக்காகத் தமது சக்தியை உபயோகிக்குமாறு இவர்களைத் தூண்டுவதோடு கோபம், கவலை, மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை அவர்கள் மதித்துப் போற்றவும் பெற்றார் உதவ வேண்டும். அத்தோடு, அவர்களது மூளையின் கற்பனையாற்றலையும் பேச்சாற்றலையும் விருத்தி செய்வதற்காகக் கதை சொல்லுதல், கட்டுக்கதைகளை உருவாக்குதல் போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்துவது அவசியம். அவர்களது உடல் சார்ந்த அசைவுகளை அனுமதிப்பதோடு தகவல் ஊடகங்கள் பற்றிய அறிவையும் வழங்க வேண்டும். மேலும், முரண்பாடுகளைத் தீர்த்தல், சமுதாயப் பயிற்சி முதலியவற்றிலும் அவர்களைப் பங்குபற்றச் செய்தல் அவசியம்.

பால் வாரியாகப் பிள்ளைகளைப் பிரித்துக் கல்வி வழங்குவது பற்றிக் கருத்து முரண்பாடு நிலவுகிறது. எனினும், ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் வித்தியாசமான முறையில் கற்றுக் கொள்வதனால் வகுப்பறையில் அவர்களுக்கு வித்தியாசமான கற்பித்தல் நுட்பங்கள் தேவைப்படுகின்றன. எனவே, கல்வியில் கூடிய வினைத்திறனையும் விளைவையும் பெறுவதற்காக அவர்களைப் பிரித்து வெவ்வேறு வகுப்பறைகளில் வைத்துக் கற்பித்தால் என்ன? வித்தியாசமான நுட்ப முறைகளை ஒரே வகுப்பறையில் ஏக காலத்தில் பயன்படுத்துவது எப்படி? அதனைச் செயற்படுத்த முடியுமா? முடியுமாயின் அதற்கான நேரச் செலவு, பணச்செலவு யாது? அது எந்தளவுக்கு விளைவு தரப்போகிறது?

Michael Gilbert (2007) தனிப்பாலாருக்குரிய பள்ளிக்கூடங்களை விதந்துரைக்கிறார். இது பற்றி அவர் எழுதிய கட்டுரையொன்று கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளது.

> இன்று பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகள் கல்வியில் பின்னடைந்து வருவதோடு அதிக அளவில் பள்ளிக்கூடத்தை விட்டு இடை விலகுகின்றனர். கல்லூரிகளில் நுழைய ஒருவாறு தகுதி பெறும் வாலிபர்கள் அங்கே சிறுபான்மையினராகி விடுகின்றனர். பெண்களின் தொகை அங்கு 2:3 என்ற விகிதத்தில் காணப்படுகின்றது. 1960களில், பிரித்துக் கற்பிப்பதை சமத்துவமின்மை எனக்கருதி இரு பாலாரையும் சிறு வயதிலிருந்தே கலந்திருக்கச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. 1965இல் அமெரிக்கப் பொதுப் பாடசாலை வகுப்பறைகளில் பெரும்பான்மையானவை தனிப்பாலுக்குரியனவாகவே இருந்தன. 2000ம் ஆண்டாகும் போது அப்படியானவை ஒரு சிலவே எஞ்சியிருந்தன.
>
> இன்று பள்ளிக்கூடங்களுக்கு வரும் ஆண் பிள்ளைகள், பெண் ஆசிரியர்களும் அதிபர்களும் ஆதிக்கம் செலுத்தும் ஓர் உலகுக்குள் நுழைகின்றனர். தேசத்தின் பொதுப் பள்ளிக் கூடங்களில் ஆண் ஆசிரியர்களின் சதவீதம் கடந்த 40 ஆண்டுகளில் காணப்படாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளை விட விரைவாக வாசிக்கின்றனர்; தம் மனவெழுச்சிகளைச் சிறப்பாகக் கட்டுப்படுத்துகின்றனர். அத்தோடு, கூட்டுறவு முறைக் கற்றலுக்கும் உணர்வுகளை வெளிப்படுத்தலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய கல்வி முறை அவர்களுக்குச் சௌகரியமானதாக அமைந்து விடுகின்றது. ஆண் பிள்ளைகள் பார்வை சார்ந்த செயன்முறைப்படுத்தலையே விரும்புகின்றனர். பெண் பிள்ளைகள் ஆரம்ப கட்டத்திலேயே தமது கைகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயின்றுவிடுகின்றனர். ஆனால் ஆண்பிள்ளைகள்

இக்கட்டுப்பாட்டைப் பெற்றிருப்பதில்லை. ஆண் பிள்ளைகள் எப்போதும் ஆர்வம் காட்டுகின்ற உடல் சார்ந்த செயற்பாடுகளோ போட்டிகளோ கட்டமைப்புக்களோ அங்கு காணப்படுவதில்லை. மேலும், தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் விடயத்தில் ஆண் பிள்ளைகள் ஒரு போதும் முன்செல்லப் போவதுமில்லை.

பாட விடயங்களில் கவனஞ்செலுத்துவது தொடர்பாக ஆண் பிள்ளைகள் பிரச்சினைப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் பிரச்சினைகளைப் புறக்கணிப் பதோடு, தாம் செய்யும் வேலைகளிலும் திருத்தமின்றி இருப்பர். பெண் பிள்ளைகளை விட மூன்று அல்லது நான்கு மடங்கு கூடுதலாக அவர்கள் விருத்தி சார்ந்த கோளாறுகளுக்கு உள்ளாகின்றனர். மேலும், பெண் பிள்ளைகளை விட இரு மடங்கு கூடுதலாகக் கற்றலில் ஊனமுற்றவர்களாக அவர்கள் அடையாளமிடப்படுகின்றனர். உடல் ரீதியாக அவர்கள் தம் ஆத்திரத்தைக் காட்டும் போது தண்டிக்கப்படுகின்றனர். ஆண் பிள்ளைகளைப் போன்று நடந்து கொண்டதற்காக அவர்கள் தண்டிக்கப்படுவதோடு, மருந்தும் கொடுக்கப்படுகின்றனர். (அமெரிக்க வெள்ளையின ஆண் பிள்ளைகளில் 20 சதவீதத்தினர் Ritalin என்ற சக்தி வாய்ந்த மருந்தின் ஆதிக்கத்தில் காலத்தைக் கழிக்கின்றனர்) இடைவேளை நேரத்தில் ஓடுவதற்குக் கூட அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக, ஆண் பிள்ளைகளுக்குப் பள்ளிப் படிப்பின் ஆரம்பமே மோசமானதாக அமைந்து விடுகிறது. அவர்களால் தம் நிலையைச் சரி செய்து கொள்ள முடியாமற் போவதோடு அவர்களது மனதில் பள்ளிக்கூடம் பற்றிய வெறுப்புணர்வும் வளர்கிறது.

ஆரம்பப் பள்ளி மாணவர்களில் பெண்களை விட ஆண் பிள்ளைகள் 50% கூடுதலாக வகுப்பொன்றை மீட்டுகின்றனர். அதே போன்று மூன்றிலொரு பங்கு கூடுதலாக உயர் பள்ளியை விட்டு இடை விலகுகின்றனர். சிறு பான்மையினரையும் வருமானம் குறைந்த குடும்பங்களையும் சேர்ந்த ஆண் பிள்ளைகளே கூடுதலாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர். இறுதியில் அமெரிக்கக் கல்வித் திட்டமானது, தமது கல்வியை மேம்படுத்துவதற்குத் தயார் நிலையில் இல்லாத அல்லது அதுபற்றி ஆர்வம் கொள்ளாத வாலிபர்களையே உருவாக்குகின்றது. இவர்களது எதிர்காலச் சம்பாதிப்பில் இதன் பாரதூரமான தாக்கம் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இது ஆண், பெண் இருபாலாருக்கும், நாட்டின் பொருளாதார எதிர்காலத்திற்கும் பாதிப்புடையதாக இருக்கின்றது.

செழித்தோங்கும் பண்பாடுகள் யாவும் தம் ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் பிரித்தே பயிற்றுவித்துத் தயார் செய்து வந்துள்ளன எனக் கூறிய மனிதவியலாளர்களுள் Margaret Mead ஒருவர்.

அமெரிக்காவிலுள்ள 90,000 கூட்டுக் கல்விப் பள்ளிக்கூடங்களில் 33 மாநிலங்களைச் சேர்ந்த 250கும் குறைந்த எண்ணிக்கையான பொதுப் பள்ளிக்கூடங்களே தனிப்பாலாருக் குரிய பள்ளிக்கூடங்களாக இருக்க முடிவு செய்தன. எனினும் சமயச் சார்புள்ள மற்றும் தனியார் பள்ளிக்கூடங்களில் நீண்ட காலமாகத் தனிப்பாலாருக்குரிய அமைப்பே விரும்பப்பட்டு வந்துள்ளது.

தனிப்பாலாருக்குரிய தனியார் பள்ளிக் கூடங்கள் நீண்ட காலமாகச் சிறப்புற்று விளங்கியுள்ளன. புளோரிடாவிலுள்ள ஆரம்பப் பள்ளியொன்றைச் சேர்ந்த 4ம் வகுப்பு மாணவர்கள் தனிப்பாலாருக்குரிய வகுப்பறைகளுக்கு மாற்றப்பட்ட போது ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் எழுத்துப் பரீட்சைகளில் வியக்கத்தக்க முன்னேற்றம் காட்டினர். இது போன்ற பரிசோதனைகள் ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் அயர்லாந்திலும் மேற்கொள்ளப்பட்டன. கூட்டுக்கல்வி வகுப்பறைகளில் காணப்படும் போட்டியும் சமூக அழுத்தங்களும் இல்லாத, ஒழுகலாற்றுப் பிரச்சினைகள் குறைந்த நிலையில் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

தனிப்பால் கல்வியின் காரணமாக ஆண், பெண் இரு பாலாருக்கும் சாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன. வாசிப்பு, பிறமொழி ஆகியவற்றில் உயர் சாதனை மட்டம்,

வீட்டுவேலைக்காகக் கூடுதலான நேரம் செலவழித்தல், உயர்கல்விக்குரிய அபிலாஷைகள் என்பன இதில் அடங்கும். தனிப்பால் பள்ளிக்கூடங்கள் பெண் பிள்ளைகளிலும், சிறு பான்மையினங்களைச் சேர்ந்த ஆண், பெண் இரு சாராரிலும் கூடியளவில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக மாநிலக் கல்விச் சபைகளின் தேசிய சங்கம் (NASBE) தனது 2002ம் ஆண்டு அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

பள்ளிக் கூடங்களிலும் வகுப்பறைகளிலும் ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் பிரித்து வைத்தல்

ஐக்கிய அமெரிக்காவில் ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள Green County என்ற பிரதேசமே ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் தனித்தனியான வகுப்பறைகளை வழங்கி முற்றுமுழுதாகத் தனிப்பால் கல்வியை வழங்க முன்வந்த முதலாவது அமெரிக்கப் பள்ளிக்கூட மாவட்டமாகும். பல வருடங்களாகக் காணப்பட்ட மோசமான பரீட்சைப் பெறுபேறுகள், அதிகரித்த இடைவிலகல் வீதங்கள், பெருந்தொகையான பதின்மவயதுக் கர்ப்பங்கள் என்பவற்றையடுத்தே இத் திட்டம் முன்வைக்கப்பட்டது. எனினும், தம்மோடு முன்கூட்டியே கலந்தாலோசிக்கவில்லை எனப் பெற்றார் பலரும் ஆசிரியர்களும் இதனை எதிர்த்ததனால் இறுதியில் இத்திட்டம் வாபஸ் பெறப்பட்டது.

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் வித்தியாசமான முறைகளில் கற்பதனால் அவர்களை வேறு பிரிப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் தம்மை இசைவாக்கிக்கொள்ள முடியும் எனப் பள்ளிக்கூட அத்தியட்சகர் McCollough கூறினார். அத்தோடு, ஆண் பிள்ளைகள் முந்திய அளவுக்குத் தவறான நடத்தைகளைக் காட்டமாட்டார்கள். ஏனெனில், பெண்களில் தம்மைப் பற்றிய மனப்பதிவை ஏற்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கிருக்காது. அதேபோல் ஆண்களின் முன்னால் தமது கெட்டித் தனத்தைக் காட்டுவதற்குத் தயங்க வேண்டிய நிலைமை இல்லாததனால் பெண் பிள்ளைகளும் வகுப்பில் வாய் திறந்து பேச முன்வருவார்கள். (India Times, 2008)

ஒவ்வொரு பாலாரினதும் வலிமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்பப் பாடங்களை அமைத்துக் கொள்வதற்குப் பால் அடிப்படையில் வகுப்புக்களைப் பிரிப்பதன் மூலம் வாய்ப்பு ஏற்படுகிறது. பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் வித்தியாசமான முறையில் கற்பதனால் அவரவரது குறித்த தேவைகளுக்கு ஏற்ப வகுப்புக்களை வடிவமைப்பது கூடிய வெற்றியைக் கொண்டு தரும். எமது நாட்டில் பால் வேறுபாடுகள் சரிவரப் புரிந்து கொள்ளப்படாததோடு, அது பற்றிக் கலந்துரையாடுவதும் அரசியல் ரீதியில் தவறானதாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாக மாணவர் தம் உச்ச ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு எமது பள்ளிக் கூடங்கள் உதவுவதில்லை. நாம் எம்மை அறியாமலேயே கம்பியூட்டர் விஞ்ஞானத் துறையிலிருந்து பெண் பிள்ளைகளையும், கலை மற்றும் மொழித் துறைகளிலிருந்து ஆண் பிள்ளைகளையும் ஒதுக்கி விடுகிறோம். (Sax, 2006)

பெண் பிள்ளைகள் செவிமடுக்குமளவுக்கு ஆண் பிள்ளைகள் செவிமடுப்பதில்லை எனவும் பெண் பிள்ளைகள் ஒளிக்குக் கூடுதலான உறுத்துணர்ச்சியைக் காட்டுவதாகவும் Gurian எடுத்துக் காட்டுகிறார். ஆண் பிள்ளைகளுக்குத் துடிதுடிப்புத் தன்மை தேவைப்

படுவதோடு, விழிப்பு நிலையைப் பேணுவதற்காக அவர்கள் அசைவுகளை மேற்கொள்ள வேண்டியும் இருக்கிறது. அதேவேளை, பெண்கள் ஒழுங்காக நடந்து கொண்டு பாடத்தில் கவனம் செலுத்துகிறார்கள். இவ்வேறுபாடுகளைச் சமாளிப்பதற்கு வித்தியாசமான கற்பித்தல் நுட்பங்கள் தேவைப்படுகின்றன. (Chandler & Gold, 2008)

மலேசியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தினால் (IIU) அதன் ஆரம்ப, மத்திய மற்றும் உயர் பள்ளிகளில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் முறையை நாம் சிபாரிசு செய்கிறோம்:

1. முன்பள்ளி முதல், மூன்றாம் தரம் வரை ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் வேறு பிரிக்கப்பட மாட்டார்கள்; பெண்களே ஆசிரியர்களாக இருப்பர்.
2. 4ம் தரம் முதல் 6ம் தரம் வரை ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் ஒரே பள்ளிக்கூடத்தில் வெவ்வேறு பிரிவுகளில் கற்பர். தொழிற்பாடுகளின் போதும் இடைவேளைகளிலும் கலப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் ஒரே வகுப்பறையில் இருப்பதாயின் வெவ்வேறு பக்கங்களில் பிரிந்து அமர வேண்டும்.
3. 7ம், 8ம் தரங்களில் ஆண்களும் பெண்களும் வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் கற்பர். ஆசிரியர் கள் மாணவர்களின் பாலைச் சார்ந்தவர்களாக இருப்பது நல்லது. 13- 14 வயதைக் கொண்ட இக்குழுவினர் பூப்புக்குரிய கட்டத்தில் இருப்பதனால் அவர்கள் படிப்படி யாக முதிர்ச்சியடையப் பயிலுகின்றனர். பாலியல் துஷ்பிரயோகத்தின் பாரதூரத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு முன்பு அவர்களை ஒன்றாகக் கலக்கச் செய்வது ஆபத்தானது.



4. 9ம் தரம் முதல் 12ம் தரம் வரை அதே பால் ஆசிரியர்களை மாத்திரம் கொண்ட வெவ்வேறான பள்ளிக்கூடங்களில் கல்வி வழங்கப்படும்.
5. பல்கலைக் கழகக் கல்வி: ஆண்களும் பெண்களும் ஒரே வகுப்பறையில் வெவ்வேறு நிரல்களில் அமர்ந்திருப்பர். இவ்வயதில் பதின்மவயதினர் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வார்கள். பல்கலைக் கழக ஆசிரியர்களதும் பெற்றார்களதும் ஆதரவோடும் வழிகாட்டலோடும் அவர்கள் தம் எதிர்காலத் துணைவர்களை வெற்றிகரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். IIU இல் இது திருப்திகரமாக நிறைவேறி வருகிறது. அங்கே எல்லா மாணவர்களுக்கும் பிள்ளை வளர்ப்பு பற்றிய பாடநெறியொன்றும் வழங்கப்படுகிறது.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பிள்ளை வளர்ப்பும் பால் வேறுபாடும்

கி. வ. 610 இல் இஸ்லாம் தோன்றிய போது அறாபிய சமூகத்தின் பண்பாடு ஆணாதிக் கம் கொண்டதாகவும் குறுகிய குழுப்பற்றுடையதாகவும் காணப்பட்டது. குடும்பத்தில் பெண் பிள்ளை பிறப்பது அவமானத்துக்குரியதாகவும் கண்ணியமற்றதாகவும் கருதப் பட்டது.

அவர்களில் ஒருவருக்குப் பெண் குழந்தை பிறந்ததாக நற்செய்தி கூறினால் அவனுடைய முகம் (துக்கத்தால்) கறுத்து கோபத்தை விழுங்குகிறான். (அல்குர்ஆன் 16: 58)

ஒருவருக்குக் குழந்தைப் பாக்கியத்தை - அது ஆணாயினும் பெண்ணாயினும் சரியே - வழங்குவது அல்லாஹ்வே என்பது குர்ஆனின் கருத்தாகும். தங்கள் பெண் பிள்ளைகளை ஒழுங்கான முறையில் வளர்த்த பெற்றோருக்கு நபி (ஸல்) அவர்கள் நன்மாராயம் கூறியுள்ளார்கள்.

எவருக்கு மூன்று பெண் மக்கள் அல்லது சகோதரிகள் இருந்து, அல்லது இரண்டு பெண் மக்கள் அல்லது சகோதரிகள் இருந்து அவர்களோடு நல்ல முறையில் வாழ்ந்து அவர்கள் விடயத்தில் அல்லாஹ்வைப் பயந்து கொள்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். (அல் புகாரி, முஸ்லிம்)

மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்து தான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால், உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 49: 13)

மனிதர்கள் அனைவரும் ஒரே ஆணினதும் (ஆதம்) ஒரே பெண்ணினதும் (ஹவ்வா) வழித்தோன்றல்களே.

அளவுக்கு மீறிய ஆணாதிக்கம் கொண்ட அறாபிய சமூகத்தில் வாழ்ந்த நபி (ஸல்) அவர்கள், ஒவ்வொரு பாலாருக்கும் உரிய தனித்துவமான கடமைக்கூறுகள் தொடர்பாக காலத்தால் அழிவுறாத பின்வரும் கருத்துப் படிவங்களையும் நடைமுறைகளையும் ஏற்படுத்தினார்கள்.

> உங்கள் குடும்பத்துக்குச் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். உங்கள் அனைவரிலும் நானே என் குடும்பத்துக்குச் சிறந்தவன். (அல் திர்மிதி, இப்ன் மாஜாஹ்)

> நபி (ஸல்) அவர்கள் வீட்டுப் பணிகளிலும் ஈடுபட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது பாதணிகளைத் திருத்திக் கொள்வதிலும் தமது கிழிந்த ஆடைகளைத் தைத்துக் கொள்வதிலும் பொதுவாக மனிதர்கள் வீட்டில் செய்யும் ஏனைய வேலைகளிலும் ஈடுபடுவது வழக்கம் என ஆயிஷாவும் உம்மு ஸலாமாவும் அறிவித்தார்கள். (அஹ்மத்)

பல்வேறு கடமைக்கூறுகளை 'பெண்களுக்குரிய பணிகள்' மற்றும் 'ஆண்களுக்குரிய பணிகள்' என நபி (ஸல்) அவர்கள் வேறுபிரித்துக் காட்டவில்லை. தாய்மை, கர்ப்பம், தாய்ப்பாலூட்டல் முதலிய உயிரியல் ரீதியான கடமைக்கூறுகள் தொடர்பாகத் தாய்க்கும் குழந்தைக்கும் பொருள் ரீதியாகவும் மனவெழுச்சி ரீதியாகவும் தந்தை வழங்க வேண்டிய முழுமையான ஒத்தாசை பற்றி அல்குர்ஆன் நிர்ணயம் செய்திருக்கின்றது. மேலும், நபி (ஸல்) அவர்கள் தந்தைக்கு அன்றித் தாய்க்கே மிக உயர்ந்த கண்ணியத்தை வழங்கினார்கள்.

> **தாயின் பாதத்தடியிலேயே சுவர்க்கம் இருக்கிறது**
> (அஹ்மத், அல் நஸாயி, இப்ன் மாஜாஹ்)

நபி (ஸல்) அவர்கள் பால்களுக்கிடையிலான சமத்துவத்தை ஊக்குவித்ததோடு தமது குடும்ப வாழ்க்கையில் ஒரு முன்மாதிரியாகவும் நடந்து காட்டினார்கள். வலிமையான ஆணாதிக்கம் மிக்க அறாபிய மற்றும் புறச்சமயப் பண்பாடுகளுக்கு மத்தியில் அன்னாரின் வாழ்க்கை புரட்சிகரமானதாக அமைந்திருந்தது.

பாலியல் உறவு முக்கியத்துவம் மிக்கது என்பதனால் திருமணத்துக்குப் புறம்பான முறையில் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பாலுறவைத் தடுப்பதில் இஸ்லாம் தெளிவாகவும் கண்டிப்பாகவும் இருக்கிறது. இவ்விதியின் நோக்கம் குடும்பத்தையும் சமூகத்தையும் நோயிலிருந்தும் சிதைவிலிருந்தும் பாதுகாப்பதே ஆகும். இஸ்லாம் இந்த விடயத்தில் சிறிதும் விட்டுக் கொடுப்பதில்லை. சட்டவிரோதமான பாலுறவுக்கு வழிவகுக்கும் சகல பாதைகளையும் (உதாரணமாக மதுபானம், போதைப் பொருட்கள், காதல் களியாட்டங்கள், மறுபாலாரைக் கவருதல் முதலியன) அது அடைத்துள்ளது. பாலியல் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, உடன் பிறந்தவர்கள் கூட பத்து வயதை அடைந்த பின் தனித்தனிப் படுக்கைகளில் நித்திரை கொள்ள வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

> உங்கள் பிள்ளைகள் ஏழு வயதை அடைந்து விட்டால் அவர்களுக்குத் தொழக் கற்பியுங்கள். அவர்களுக்குப் பத்து வயதாகி விட்டால் (அவர்கள் தொழுகையை ஒழுங்காக நிலை நாட்டச் செய்வதற்காக) அவர்களுக்குக் கடுமையாக எச்சரிக்கை செய்யுங்கள். அத்தோடு, அவர்களது படுக்கையை வேறாக்கி விடுங்கள். (அஹ்மத், அபூ தாவூத்)

இஸ்லாம் பெண் பிள்ளைகளைத் தாய்மை மற்றும் குழந்தைப் பராமரிப்புப் பணிகளிலும், வீட்டுக்கு வெளியே இராணுவத்தில் பங்கேற்பது உட்படப் பொதுக் கடமைக் கூறுகளிலும் ஈடுபடுவதற்குத் தயார் செய்கிறது. நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் பெண்கள் அன்னாரின் அருகில் இருந்து போர் புரிந்தார்கள். தம் பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த பின்னர் தாய்மார் சமூக விவகாரங்களில் சுறுசுறுப்புடன் பங்கேற்க வேண்டும். இப்பங்களிப்பு முறை சார்ந்ததாக அல்லது முறை சாராததாக, முழு நேர அல்லது பகுதி நேர வேலையாக, வேதனம் தரப்படுகின்ற அல்லது தொண்டர் வேலையாக, அரசியல் சார்ந்த அல்லது அரசியல் சாராத தொழிற்பாடாக இருக்கக்கூடும். தமது குடும்ப நிலைமை, தொழில்வாண்மை, பயிற்சி மற்றும் பொருளாதாரத் தேவைகள் என்பவற்றுக்குப் பொருத்தமான எதனையும் செய்யும் படி அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். எனினும், அவ்வாறு செய்வது பெண்கள் மீது கடமையல்ல; ஆனால், அவர்களுக்குரிய சிறப்புரிமையாகும். மறுதலையாக, சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பது ஆண்கள் மீது கடமையாக இருக்கிறது.

ஒவ்வொரு பாலுக்குமுரிய பங்களிப்புகள் தற்காலப் பண்பாட்டில் வேறுபட்டு வருகின்றன. முன்னைய காலத்தில் கடுமையான பணிகள், உடல் வலிமையும் உறுதியும் மிக்க ஆண்களுக்கே ஒப்படைக்கப்பட்டன. இன்றைய காலத்தில் தகவல் தொழிநுட்பம், இலக்ட்ரோனிக்ஸ், கம்பியூட்டர்கள் என்பவற்றின் காரணமாக இவ்வகையான பணிகளைச் செய்வதற்கு உடல் வலிமை தேவைப்படுவதில்லை. கட்டட நிர்மாணம், பொறியியல் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் இன்று பெண்களும் எளிதாக ஈடுபடக் கூடியதாக இருக்கின்றது. இதே அடிப்படையில் ஆண், பெண் இருபாலாரும் கற்பித்தல், உணவு தயாரித்து வழங்குதல், நோயாளர் பராமரிப்பு, காரியாலய வேலைகள், ஹோட்டல் முகாமை, தகவல் தொழிநுட்பம் ஆகிய துறைகளில் பணி புரிய முடிகிறது. ஆடைகளைப் பொறுத்தமட்டில் ஆண், பெண் இருபாலாரும் நீண்ட காற்சட்டைகளை அணியக்கூடியதாக இருக்கிறது. ஆனால், அவை நாணத்தையும் கண்ணியத்தையும் மரியாதையையும் பேணக்கூடியனவாக இருப்பது அவசியம். (அதிக இறுக்கமாகவோ, ஒளிபுக விடக்கூடியதாகவோ, ஆபாசமானதாகவோ இருக்கக் கூடாது) பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகள் சிலவற்றில் நீண்ட காற்சட்டைகள் பெண்களின் பாரம்பரிய ஆடைகளின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றன.

ஆண்களும் பெண்களும் ஒரு சாராரிடமிருந்து மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன. ஒவ்வொரு ஆணிலும் சிறிதளவு பெண் தன்மையும் ஒவ்வொரு பெண்ணிலும் சிறிதளவு ஆண் தன்மையும் காணப்படுகின்றன என்று கூடக் கூறலாம். இரு சாராரிலும் ஆண்களுக்குரிய ஹோர்மோன்களும் பெண்களுக்குரிய ஹோர்மோன்களும் வெவ்வேறு விகிதங்களில் காணப்படுகின்றன. பின்வரும் அல்குர்ஆன் வாக்கியங்களைப் பகுத்தாய்ந்து பார்த்தால் இது ஆச்சரியமான விடயமாகத் தோன்றாது.

...அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்.
(அல்குர்ஆன் 2:187)

ஆதலால் அவர்களுடைய இறைவன் அவர்களுடைய பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொண்டதுடன் உங்களில் ஆண், பெண் (இரு பாலாரிலும்) எவர்கள் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கி விடமாட்டேன். (ஏனென்றால்) உங்களில் (ஆணோ பெண்ணோ) ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தான்... (அல் குர்ஆன் 3: 195)

அவன் உங்கள் அனைவரையும் ஆரம்பத்தில் ஒரே மனிதரிலிருந்து படைத்தான்...
(அல்குர்ஆன் 39: 6)

இரு பாலாருக்குமிடையிலான இறுதி நிலை பின்வருமாறு:
உங்களில் சிலரை சிலர் மீது அல்லாஹ் மேன்மையாக்கி (அருள் புரிந்து) இருப்பதைப் பற்றிப் பேராசை கொள்ளாதீர்கள். ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்குரியனவே; (அவ்வாறே) பெண்கள் சம்பாதித்தவையும் பெண்களுக்குரியனவே. ஆகவே, (ஆண், பெண் ஒவ்வொருவரும் உழைப்பின் மூலம்) அல்லாஹ்வுடைய அருளைக் கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4: 32)

அல்குர்ஆன் முழு மனித சமுதாயத்தையும் விளித்தே பேசுகிறது. சில சந்தர்ப்பங்களில் குறித்த கடமைக் கூறொன்று நிறைவேற்றப்பட வேண்டி இருக்கும் போது அதன் சில வாக்கியங்கள் ஆண்களை அல்லது பெண்களைத் தனியாக விளிக்கின்றன. எப்படியிருப்பினும் எல்லா நிலைமைகளிலும் அல்குர்ஆன் ஆண்களையும் பெண்களையும் விளிக்கும் போது மரியாதையுடனும் கௌரவத்துடனுமேயே பேசுகிறது.

இறைவனின் வழியே சிறந்த வழி: சீனா, ஜேர்மனி, இந்தியா ஆகியவற்றின் எடுத்துக் காட்டுகள்

அண்ட சராசரங்களையும் படைத்த இறைவன் அனைத்தையும் அளவோடு அமைத்து சமநிலைப்படுத்தப்பட்ட சூழலொன்றை எமக்கு அருளியுள்ளான். தெய்வீகமான இயற்கை விதிகளில் நாம் தலையிட்டுக் குழப்பும் போது குழப்ப நிலை உருவாகிறது. இதற்கு எடுத்துக்காட்டாகச் சீனாவைக் குறிப்பிடலாம். தனது சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்காகச் சர்ச்சைக்குரிய 'ஒரு குழந்தை மாத்திரம்' என்ற கோட்பாட்டை அது அமுல்படுத்தியது. தம்பதியர் குடும்பத்துக்கு ஒரு குழந்தையை மாத்திரமே பெற அனுமதிக்கப்பட்டனர். இதனை மீறினால் பல அனுகூலங்களை அவர்கள் இழக்க நேரிட்டது. இதன் விளைவாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சமூகம் உருவாகியது. ஏனெனில், தங்கள் ஒரேயொரு குழந்தை குடும்பத்துக்குச் சிறப்பாகப் பயன் தரக்கூடிய ஆண் குழந்தையாகவே இருக்க வேண்டும் என மக்கள் விரும்பினர். பல தசாப்தங்களாகப் பெற்றார் பெண் குழந்தைகளை ஒழித்துக் கட்டிவிட்டு ஆண் பிள்ளைகளையே வளர்த்தனர். இதன் காரணமாகச் சனத்தொகையில் பெண்களுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. கருச்சிதைவு, ஆட்கடத்தல், விபசாரம் போன்ற குற்றச் செயல்களுக்கு இது வழியமைத்ததோடு, பெருந்தொகையான இரகசியக் கருச்சிதைவுகள் காரணமாகப் பாரிய உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தியது. இந்த அழிவு ரீதியான சமநிலையின்மை காரணமாக அரசாங்கம் தனது இயற்கைக்கு மாறான சமூகப் பரிசோதனையை நிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்தோடு, குடும்பங்கள் தமது இயற்கை நிலைக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டன. படைப்புத் தொடர்பான தெய்வீக விதியை அல்குர்ஆன் பின்வருமாறு விளக்குகிறது.

வானம், பூமி ஆகியவைகளின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே. இவற்றைத் தவிர, அவன் விரும்பியதையும் படைக்கிறான். ஆகவே, அவன் விரும்பியவர்களுக்குப் பெண் சந்ததியை மட்டும் கொடுக்கிறான். அவன் விரும்பியவர்களுக்கு ஆண் சந்ததியை மட்டும் கொடுக்கிறான். அல்லது ஆணையும் பெண்ணையும் கலந்தே கொடுக்கிறான். அன்றி அவன் விரும்பியவர்களை (சந்ததியற்ற) மலடாகவும் ஆக்கிவிடுகிறான். நிச்சயமாக அவன் (அவரவர்களின் தகுதியை) நன்கறிந்தவனாகவும் (தான் விரும்பியவாறு செய்ய) ஆற்றலுடையவனாகவும் இருக்கிறான்.
(அல்குர்ஆன் 42: 49- 50)

ஆதம், ஹவ்வா ஆகியோர் காலம் முதல் மகத்துவம் மிக்க படைப்பாளனின் திட்டத்திற்கு ஏற்ப பால் ரீதியான சமநிலை இயற்கையாகவே இருந்து வருகிறது.

ஜேர்மனியின் நாட்ஸி ஆட்சியாளர்கள் தனியாட்களின் பண்புகள் தொடர்பாகப் பரிசோதனைகள் செய்ய முற்பட்டனர். இனத்தை வளப்படுத்துவதற்கான அவர்களது நிகழ்ச்சித் திட்டம் இனங்காணுதல், தனிமைப்படுத்தல், பயிற்சி வழங்குதல் முதலிய செயன்முறைகளினூடாக மேம்பட்ட மனிதப் பிறவியொன்றை உருவாக்க முயற்சித்தது. இம்முயற்சி படுதோல்வியடைந்தது.

இந்தியாவில் கருவிலேயே பெண் குழந்தைகளை அழித்து விடும் போக்கின் காரணமாக அதிர்ச்சி தரும் வகையில் பால் ரீதியான இடைவெளி அதிகரித்திருக்கின்றது. அங்கு பெண்களை விட 50 மில்லியன் ஆண்கள் கூடுதலாக இருக்கிறார்கள். இதில் விந்தை என்னவெனில், தொழில் நுட்ப முன்னேற்றம் இந்நிலைமைக்கு ஏதுவாக அமைந்துள்ளது. கடந்த காலத்தில் பெருந்தொகையான பெண் குழந்தைகள் பிறந்த பின்னரே கொல்லப்பட்டனர். இப்போது நிலைமை பெற்றோருக்கு எளிதாகவும் வைத்தியர்களுக்கு இலாபம் தருவதாகவும் இருக்கிறது. மிகையொலி (ultra sound) ஸ்கானிங் முறையில் கண்டு பிடித்து கருவிலேயே பெண் குழந்தைகளை அழித்து விடக்கூடியதாக இருப்பதனால் சட்டரீதியான தண்டனைகளிலிருந்து தப்பிக் கொள்ளவும் அவர்களால் முடிகிறது. இந்நடைமுறையை ஒழிப்பதற்காக ultra sound scanning சோதனை மூலம் கருவிலுள்ள குழந்தையின் பாலைக் கண்டறிவதை அரசாங்கம் சட்டவிரோதமானதாக ஆக்கியிருக்கின்றது.

மேற்சொன்ன நடைமுறை வறிய, படிப்பறிவற்ற கூட்டத்தினரிடையே கூடுதலாகக் காணப்படுவதாகக் கருதப்பட்டது. மணமகனின் குடும்பத்தினர் மணமகளிடமிருந்து பெரிய சீதனத்தை எதிர்பார்ப்பதும், பெண்களுக்குப் பாதகமான ஏனைய பாரம்பரிய தப்பெண்ணங்களும் இதற்குக் காரணமாகக் கூறப்பட்டன. எனினும், இன்று பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிக்கும் நடைமுறை வசதி படைத்த, உயர் கல்வி பெற்ற கூட்டத்தினரிடையேயும் பரவலாகக் காணப்படுகிறது. இப்போக்கு கல்வி மட்டத்திற்கு ஏற்ப அதிகரிப்பது போல் தோன்றுகிறது. இது ஐந்தாம் வகுப்பு வரை படித்த பெண்களிடையே மிகக் குறைவாகவும் பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற பெண்களிடையே மிக உயர்வாகவும் காணப்படுகிறது.

பங்களாதேஷ், நேபாளம் போன்ற வறிய நாடுகளிலிருந்தும் இந்தியாவின் வசதி குறைந்த பகுதிகளிலிருந்தும் இளம் பெண்கள் கடத்திவரப்பட்டுத் திருமணத்திற்காக சுமார் 200 டொலர் விலைக்கு விற்கப்படுகிறார்கள். அதே வேளை ஒரு காளை மாடு 1,000 டொலர்களுக்கு விலை போகிறது. (Hughes மற்றும் ஏனையோர், 1999) துரதிர்ஷ்டவசமாக இந்தியாவின் பல்வேறு பண்பாடுகளில் ஓர் ஆண் குழந்தையின் பிறப்பு, கோலாகலமாகக் கொண்டாடப்படுவதோடு பெண் பிள்ளையின் பிறப்போ சஞ்சலத்துக்குரியதாகவே விளங்குகிறது.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 41: பெற்றோரின் உரையாடல்

சில தந்தையரையும் தாய்மாரையும் ஒன்று கூட்டி 'சிறந்த பிள்ளையொன்றை எப்படி வளர்த்தெடுக்கலாம்' என்பது பற்றிக் கலந்துரையாடச் செய்யுங்கள். இது தொடர்பான அவர்களது சாதகமான, பாதகமான சொந்த அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளச் செய்யுங்கள்.

எமது வீட்டில் இடம்பெற்ற இரவு விருந்தொன்றின் பின்னர் பெற்றோர்கள் பலர் ஒன்றாய் அமர்ந்து சிறந்த பிள்ளையொன்றை எவ்வாறு வளர்த்தெடுக்கலாம் என்பது பற்றிக் கலந்துரையாடத் தொடங்கினர். பெறுமதியான பல அனுபவங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. இறுதியில் ஒரு புத்திசாலியான பெற்றார் பின்வருமாறு கூறினார்: "இங்கு கூறப்பட்டவையெல்லாம் அவசியம்தான்; ஆனால், போதுமானவை அல்ல. ஏனெனில், நீங்கள் இந்த விதிகள் அனைத்தையும் கடைப்பிடித்தாலும் உங்கள் குடும்பத்தின் மீது அல்லாஹ்வின் அருள் பொழியாத வரையில் உங்கள் பிள்ளை ஏமாற்றம் தருவதாகவே அமையும்." அந்தப் பெற்றார்கள் இறுதியில் பின்வரும் கருத்திணக்கத்தை அடைந்தார்கள்:

நாம் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் பிள்ளை வளர்ப்பு எனும் உன்னதமான, சவால் மிக்க பணியை மேற்கொள்வதற்கு உங்கள் அறிவு, திறன்கள் என்பவற்றோடு அல்லாஹ்வின் அருளையும் நாட வேண்டும்.

ஒரு குழந்தையை வளர்த்தெடுப்பதற்கு அதன் குடும்பமும் ஊரும் சமுதாயமும் இறையருளும் தேவைப்படுகின்றன. இவை ஒன்றோடொன்று இணைந்து ஒத்துழைக்க வேண்டுமே தவிர தனித்துப் போகக்கூடாது.

தொழிற்பாடு 42: எனது நிலைமைக்காக இறைவனுக்கு நன்றி

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே; 'அல்ஹம்துலில்லாஹ்'. உங்கள் பிள்ளை பின்வருவனவற்றை மீண்டும் மீண்டும் கூறுவதற்குக் கற்பியுங்கள்:

எனக்கு அருளியுள்ள எல்லா நல்ல விடயங்களுக்காகவும் நான் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னை ஒரு மனிதப் பிறவியாகப் படைத்தமைக்காக நான் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னை ஒரு பெண் பிள்ளையாக/ ஆண் பிள்ளையாகப் படைத்ததையிட்டு நான் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னை இந்த நிறத்தில் படைத்தமைக்காக அல்லாஹ்வுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

என்னை இந்த நிலையில் படைத்தமைக்காக அல்லாஹ்வுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

தொழிற்பாடு 43: இறைவனின் ஞானத்தையும் இறை திட்டங்களையும் பற்றிய உள்ளுணர்வைப் பெறுதல்

பெற்றார் தம் பிள்ளைகளுடன் அமர்ந்து வாழ்க்கையின் ஆரம்பத்தில் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்து, படிப்படியாக உச்ச நிலையை அடைந்த மனிதர்கள் சிலரின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பங்கள் பற்றிக் கலந்துரையாட வேண்டும்.

இதே அடிப்படையில் பெற்றார் தம் சொந்த அனுபவங்களையும் வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் தாம் எடுத்த முக்கியமான தீர்மானங்கள், தம் வாழ்க்கையில் ஏற்பட்ட அதிசயமான திருப்பங்கள் முதலியவற்றை எடுத்துக்கூறி இறைவனின் மகத்தான அறிவையும் அவனது திட்டங்களையும் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

அனைத்தும் இறைவனின் நாட்டப்படியே நடக்கும். இறைவன் நாடாத வரை உங்கள் நாட்டம் நிறைவேறாது!

அத்தியாயம் 13

பாலியல் கல்வி: நாம் எமது பிள்ளைகளுக்குக் கூறப்போவது யாது?

- அறிமுகம் 314
- பாலியல் கல்வி என்றால் என்ன? 314
- அமெரிக்காவில் இன்றுள்ள நிலைமை 315
- அமெரிக்காவிலுள்ள தாய்மாரும் புதல்வியரும் கொண்டுள்ள கருத்துக்கள் 319
- பெறுமானங்களும் பாலியலும்: இன்றும் நேற்றும் 320
- பாலியல் கல்வி ஏன்? நாம் அதனைக் கற்பிக்க வேண்டுமா? 322
- பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியது என்ன? 325
- பாலியல் துஷ்பிரயோகம் - அதன் பாரதூரத் தன்மை 326
- இப்றாஹீமிய வழிமுறைகள் வரம்பற்ற ஆண், பெண் உறவையும் விபசாரத்தையும் தடை செய்கின்றன 329
- விபசாரத்துக்கும் தகாத பாலுறவுக்கும் எதிரான சட்டரீதியான தண்டனைகளுக்குரிய நியாயங்கள் 330
- பாலுறவு மூலம் பரவும் நோய்கள் (STDs) 331
- காதலன் காதலி உறவுகள் 332
- பிள்ளைப் பருவத்தில் குழந்தை பெறுதல்: இஸ்லாத்தில் கருக்கலைப்பும் தத்தெடுத்தலும் 336
  - கருக்கலைப்பு 337
  - இஸ்லாத்தில் தத்தெடுத்தல் 338
- ஓரினப் பாலுறவும் பெற்றாரும் 340
- இஸ்லாமிய பாலியல் கல்வி 344
- பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றோரின் கடமைகள் 346
- பாலியலும் சுகாதாரமும்: மாதவிடாய், அரைப்பகுதி மயிர், விருத்த சேதனம், ஆண்களில் விந்து சார்ந்த திரவமும் நித்திரையில் விந்து வெளியேறலும் 347
- பதின்மவயதினரும் பாலுறவைத் தவிர்த்தலும் 348
- பாலியல் தொடர்பான இரண்டக நிலைக்கு இஸ்லாமியத் தீர்ப்பு: தவிர்ப்பு அணுகுமுறைக்கான ஒரு திட்டம் 350
  - நாணம் (ஹயா) 353
  - ஆடை அணியும் ஒழுங்கு விதிகள் 358
  - கட்டுப்பாடற்ற கலப்புக்கும் 'கல்வாஹ்'கும் இடமில்லை 359
  - சமவயதினர் ஏற்படுத்தும் அழுத்தமும் ஏனைய காரணிகளும் 360
  - செய்ய வேண்டியவை 361
  - திருமணத்தை முற்படுத்தல் 362
- கல்வி முறையின் இரண்டக நிலையும் திருமணத்தை முற்படுத்தலும் 363
- வளர்ந்தவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல் 366
  - விபசாரம் பற்றிப் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும் 368
  - ஒருவரது பிள்ளை வல்லுறவுக்கு உள்ளானால் 368
- இஸ்லாமியப் பாலியல் கல்விக்கான ஒரு பாடவிதானம் 370
- தொழிற்பாடுகள் 44- 45 372

அறிமுகம்

பாலியலும் பாலியல் கல்வியும் மிக முக்கியமும் தனிச் சிறப்புக்களும் கொண்ட விடயத் தலைப்புக்களாகும். பெரும்பாலான பெற்றோர்கள் பாலியல் பற்றிப் பிள்ளைகளோடு பேசுவதற்குப் பெரிதும் கூச்சப்படுகிறார்கள். தம் பிள்ளைகளுக்குரிய பாலியல் கல்வியைப் பாடசாலைகளும் ஏனையோரும் வழங்கட்டும் என விட்டுவிடுகிறார்கள். ஒருவர் உடல் ரீதியான தகுதியோடும் உள்ளம், உடல், இதயம், ஆத்மா ஆகியவை தொடர்பாக ஆரோக்கியத்தோடும் இருக்க வேண்டுமாயின் அவர் பாலியல் தொடர்பாகச் சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும். வரம்புமீறிய பாலியல் நடத்தைகள் அவலத்திற்கும் நெடுங்கால சேதத்திற்கும் வழிகோலும். இவற்றின் விளைவாக ஏற்படும் சமூக நோய்களும் உடல் நோய்களும் யாவரும் அறிந்தவையே. இப்படியான நோய்களால் பாதிக்கப்படுபவர்கள் தகாத பாலியல் நடத்தையில் ஈடுபட்ட தனியாட்கள் மாத்திரமல்ல; அவர்களுடைய குற்றமற்ற வாழ்க்கைத் துணைவர்களும் குழந்தைகளும் கூட பாதிப்புக்குள்ளாவர். ஏற்படக்கூடிய சேதம் மிகக் கடுமையானதாக இருப்பதோடு சரிசெய்ய முடியாததாகவும் மாறலாம்.

எம்மைப் படைத்த இறைவன் தகாத பாலியல் உறவுகளையும் விபசாரத்தையும் தடை செய்துள்ளான். கட்டுப்பாடற்ற பாலியல் கலப்பு பெரும் அழிவைக் கொண்டு தரும். எனவேதான் பாலியல் உறவு திருமணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கிய விதியாக அமைந்திருக்கிறது. பாலுறவினூடாகக் கடத்தப்படும் நோய்கள் (STD) தகாத பாலுறவுகளில் ஈடுபடுவதனால் ஏற்படுகின்றன. மனித சமுதாயம் இயற்கைக்கு மாறான முறையில் நடந்து கொள்ளும் போது புதிய புதிய நோய்கள் தாக்கலாம். இதனால் பெற்றார் தமக்காகவும் தமது பிள்ளைகளுக்காகவும் பாலியல் கல்வி விடயத்தில் கூடிய ஈடுபாடு கொள்ள வேண்டும்.

பாலியல் கல்வி என்றால் என்ன?

பாலியல் கல்வி பற்றி ஒவ்வொருவரும் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அது மனித உடலின் உடற்கூறையும் தொழிற்பாட்டையும் பற்றியதா அல்லது பாலுறவு பற்றியதா அல்லது இனப்பெருக்கமும் குடும்ப வாழ்க்கையும் பற்றியதா அல்லது நோய்களையும் தேவையற்ற கர்ப்பங்களையும் தவிர்ப்பது பற்றியதா? பிள்ளைகளுக்குப் பாலியல் பற்றிக் கற்பிப்பது அவர்கள் பாலியல்ரீதியான உறவுகளில் ஈடுபடுவதற்கு ஒப்பாகுமா? ஆசிரியர் ஒருவர் ஒரு தடவை பின்வருமாறு கூறினார்: "எனது திட்டம் உங்கள் பிள்ளைகள் பாலுறவில் ஈடுபடலாமா கூடாதா என்று அவர்களுக்குக் கூறுவதோ அல்லது பாலுறவில் ஈடுபடுவது எப்படி என விளக்குவதோ அல்ல. மாறாக, அவர்கள் அதில் ஈடுபடத் தீர்மானித்தால் நோயையும் கர்ப்பத்தையும் தவிர்த்துக் கொள்ள அவர்கள் அறிந்திருக்க வேண்டும்." பெரும்பாலான பாலியல் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையானவை அல்ல. அவை ஒழுக்கம், பாலியல்சார்ந்த செயற்பாடின்மை, நெறி விலகல், திருமணம் முதலிய விடயங்கள் பற்றிப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்கின்றன.

அடிப்படைப் பிரச்சினைகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று, உயிரியல் ரீதியான உண்மைகள் பற்றியது. இவை, பெற்றார் தம் பிள்ளைகளை மாதவிடாய், நித்திரையில் ஸ்கலிதம் என்பன பற்றித் தயார் படுத்தத் தவறிவிடும் போது பதின்மவயதினர் மனதில் ஏற்படக்கூடிய அச்சங்கள் தொடர்பானவை. அடுத்த அடிப்படைப் பிரச்சினை, பாலியல் தொழிற்பாடு கூடிய இள வயதினர் தேவையற்ற கர்ப்பங்களையும் அதன் விளைவாக நிகழக்கூடிய கருக்கலைப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளத் தேவையான போதிய தகவல்களை அவர்களுக்கு வழங்குவது பற்றியதாகும்.

சில பள்ளிக் கூடங்கள் இனப்பெருக்கத்தின் எளிய உடல்ரீதியான பொறிமுறைகளையும் ஒழுக்காரீதியான கடமைப் பொறுப்புக்களையும் போதிக்கின்றன. ஏனைய பள்ளிக்கூடங்கள் அங்குமிங்குமாய் சில தகவல்களை வழங்குகின்றன. பல பள்ளிக்கூடங்களில் ஒழுக்கவியல் மற்றும் சமூகவியல் பாடவிதானத்தின் பிரதான பகுதியொன்றாக பாலியல் கல்வி விளங்குகின்றது. உங்கள் பிள்ளையை இவ்வகுப்புக்களிலிருந்து அப்புறப்படுத்துவதனால் எவ்வித நன்மையும் விளையாது.

ஏனெனில், அங்கு கலந்துரையாடப்படும் விடயங்கள் ஆங்கிலம் அல்லது வரலாறு அல்லது உடற்கல்வி போன்ற எந்தவொரு விடயத்தின் கீழும் தலை தூக்கக்கூடும். பாலியல் எமது வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக மாறியிருப்பதே இதற்குக் காரணம்.

பாலியல் கல்வியில் பெரும்பாலானவை மகிழ்ச்சியானதும் நிறைவானதுமான மண வாழ்க்கையொன்றை ஊக்குவிப்பதில்லை. எனவே, போதிய அறிவும் திறன்களும் இல்லாத காரணத்தினால் பல கணவன் மனைவியர் மண வாழ்க்கையில் விரக்தியுறுகின்றனர். தனது மனைவியின் உணர்வுகளைத் தூண்டிவிடுவதற்கு அல்லது அவளைத் திருப்திப் படுத்துவதற்குத் தேவையான ஆற்றல் ஆணுக்கு இயல்பாகவே வரும் எனப் பொதுவான தப்பெண்ணமொன்று நிலவுகிறது. மகிழ்ச்சிகரமான மண வாழ்க்கையொன்றை உருவாக்குவது எப்படி என்ற அறிவு கல்வியின் முக்கிய கூறொன்றாக இருக்கிறது. இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இவ்வாறான கல்வி வழங்கப்படாமல் போவது கவலைக்குரியதே.

உங்களது பதின்மவயதுப் பிள்ளை பாலியல்ரீதியில் செயற்படத் தொடங்கி விட்டது என்ற உண்மையை இறுதியாக அறிந்து கொள்பவர் நீங்களாக இருக்கலாம். அப்பிள்ளை பெரும்பாலும் அதனை இரகசியமாக வைக்கவே முயற்சிக்கும். அத்தோடு, பதின்ம வயதினர்கள் தம்மிடையே இரகசியமான வலையமைப்பொன்றை வைத்திருப்பர். அதனூடாக அவர்கள் தம் சம வயதினர் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருப்பர். ஆனால், இவையனைத்தும் பெற்றாரிடமிருந்து மறைக்கப்படும்.

இதற்குரிய திருப்திகரமான தீர்வு நபி (ஸல்) அவர்களது முன்மாதிரியில் காணப்படு கிறது. இன்று பள்ளிக்கூடங்களில் பாலியல் கல்வி வரையறுக்கப்பட்டுக் கற்பிக்கப்படும் விதத்தில் பல சாதக பாதகங்கள் இருக்கின்றன. எனவே, தம் பிள்ளைகளுக்கு வழி காட்டும் பொறுப்பைப் பெற்றோரே ஏற்றுக்கொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்கள், தொலைக்காட்சி, இண்டர்னெட், சம வயதுக் குழுக்கள் என்பவற்றால் எமக்கு வழங்கப்படும் பாலியல் பற்றிய தகவல்களில் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் கலந்து காணப்படுகின்றன.

அமெரிக்காவில் இன்றுள்ள நிலைமை

பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு எவ்வாறு பெறுமானங்களற்ற முறையில் பாலியல் கல்வி வழங்கப்படுகிறது என்பது பற்றியும் ஊடகங்களினால் வழங்கப்படும் தவறான அறிவுரைகள் பற்றியும் Dr. Shahid Athar என்பவர் தமது *Sex Education: An Islamic Perspective* என்ற நூலில் எடுத்துக் கூறுகின்றார். பல பள்ளிக்கூடங்களில் தரம் 2 முதல் 12 வரை பாலியல் கல்வி கற்பிக்கப்படுகிறது. இதற்காகப் பல பில்லியன் டொலர்கள் செலவழிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் பாலியல் பற்றிய நுட்பங்களை விளக்குகிறார்களே யன்றி பிள்ளைகளுக்கு ஒழுக்க விழுமியங்கள் பற்றியோ சரியான முடிவுகளை எடுப்பது எப்படி என்பது பற்றியோ சொல்லிக் கொடுப்பதில்லை. இனப்பெருக்கச் செயற்பாட்டின் உடற்கூறு பற்றிய விடயங்களையும் உடற்றொழிலியல் பற்றிய அம்சங்களையும் விவரித்த பின்னர் VD எனும் மேக நோய்களையும் பதின்ம வயதுக் கர்ப்பங்களையும் தவிர்த்துக் கொள்வது எப்படி என்பது பற்றியே கூடிய அழுத்தம் கொடுக்கப்படுகிறது. எயிட்ஸ் நோய் தலையெடுத்த பின்னர் 'பாதுகாப்பான பாலுறவு' என்பது பற்றியே கவனம் செலுத்தப் படுகிறது. இங்கு பொதுவாக ஆணுறைகளின் பயன்பாடே கருதப்படுகிறது. பள்ளிக்கூடச் சுகாதார நிலையங்களுக்குச் செல்வோருக்கு இலவச ஆணுறைகளையும் ஏனைய கருத்தடைச் சாதனங்களையும் விநியோகிப்பதற்காக நாட்டின் வரிப்பணம் வாரி இறைக்கப்படுகிறது. ஆணுறை விற்பனை செய்யும் பொறிகள் பள்ளிக்கூடப் பொது அறைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாகப் பெற்றாரின் கடமைக்கூறு அற்பமாக்கப்பட்டு சில வேளைகளில் ஏளனத்துக்கு உள்ளாக்கப்படுகிறது. இளம் ஆண் பிள்ளைகள் பாலியல் பற்றி ஏதும் கேள்விகள் கேட்க முனையும் போது அவர்களது தந்தையர்கள் அக்கேள்வி களைத் தவிர்க்க முயற்சித்துப் பேச்சு விடயத்தை மாற்றி விடுகின்றனர். இதன் காரணமாக அப்பிள்ளைகள் அந்நியரிடமிருந்தே பாலியல் பற்றி அறிந்துகொள்ள நேரிடுகிறது. போதனையாளர்களால் ஊக்குவிக்கப்படும் சில தவறான செயல்கள் சமயக் கோட்பாடு களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதனவாக இருக்கின்றன. வழி தவறிப்போன சில போதனையாளர்களின் தவறான நம்பிக்கைகளை Dr. Shahid Athar பின்வருமாறு பட்டியல் படுத்துகின்றார்:

(a.) வீடுகளில் நிர்வாணமாக இருத்தல் (குளியலறையில் அல்லது படுக்கையறையில்) ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு பாலியல் தன்மை பற்றி அறிமுகப்படுத்து வதற்கு உதவக்கூடிய சிறந்த ஆரோக்கியமான முறையொன்றாகும். கேள்விகள் கேட்பதற் குரிய வாய்ப்பை இது அவர்களுக்கு வழங்குகிறது என இவர்கள் கூறுகின்றனர். எனினும், 1997 இல் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின்படி எல்லா விதமான சிறுவர் பாலியல் துஷ்பிர யோகங்களிலும் 75 சதவீதமானவை நெருங்கிய உறவினர் ஒருவரால் (பெற்றார், மாற்றுப் பெற்றார் அல்லது இன்னொரு குடும்ப உறுப்பினரால்) பரிச்சயமான சூழலொன்றில் நிகழ்த்தப்படுகிறது. (Abel மற்றும் ஏனையோர், 2001)

(b.) ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையின் பாலுறுப்புடன் விளையாடுவது 'சூதறியாத ஆராய்ச்சி'யாகும். எனவே அதனை அனுமதிக்கலாம்; அதற்காக ஏசுவதோ தண்டிப்பதோ அவசியமில்லை என்கின்றனர் இந்த மேதாவிகள். அதேவேளை 12 வயது ஆண் பிள்ளை கள் 8 வயதும் ஆகாத பெண் பிள்ளைகளை கற்பழித்துள்ளதை இந்தப் போதனையாளர் கள் அறியாமல் இருந்திருக்க முடியாது. இந்தச் சூதறியாத ஆராய்ச்சி எப்போது ஒரு பாலியல் செயற்பாடாக மாறுகின்றது என்பது பற்றியும் இவர்கள் எமக்கு அறிவிப்ப தில்லை.

(c.) ஆபாசமான சஞ்சிகைகளை வாசித்து பெற்றாரிடம் மாட்டிக் கொள்ளும் பிள்ளைகளின் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தக் கூடாது. பதிலாக, பாலியல் தொடர்பான மனப்பாங்குகள், பெறுமானங்கள் என்பவை பற்றியும் பாலியல்ரீதியான சுரண்டல் பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகப் பெற்றார் இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்றனர். இது வியக்கத்தக்க அறியாமையாகும். 'பாலுறவு என்பது ஒரு பண்டமாகும்; பெண்கள் ஆண்களுக்குரிய விளையாட்டுப் பொருட்களாகும்' என்ற செய்தியையே இச்சஞ்சிகைகளுள் பெரும்பாலானவை வழங்குகின்றன. உண்மையில், குற்ற உணர்வானது, ஒருவர் தனது

செய்கைக்காக மனம் வருந்தித் தன்னைத் திருத்திக் கொள்ள உதவுமாயின் அதனைத் தீங்கான மனவெழுச்சியாகக் கருத முடியாது. ஒரு தவறான செய்கையை மீள்மதிப்பீடு செய்து அதனைத் திருத்திக்கொள்ளும் நோக்கோடு, குற்ற உணர்வினால் மனம் வருந்துவது ஒரு கற்றல் பொறிமுறையாகும். இதனூடாகப் பிள்ளைகள் தம் நடத்தையை மதிப்பீடு செய்து அதற்கான பொறுப்பை உணர்ந்து கொள்ள வழிசெய்ய முடியும்.

(d.) ஒருவருடைய பிள்ளை ஏற்கனவே பாலியல் ரீதியாகத் தொழிற்படும் நிலையில் இருந்தால் அதனை நிறுத்துமாறு கூறுவதற்குப் பதிலாக கருத்தரிக்காமல் தடுப்பதற்கும் VD நோய்களைத் தடுத்துக் கொள்வதற்கும் தேவையான தகவல்களையும் வழிவகை களையும் அவர்களுக்கு வழங்குவதே அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பேணுவதற் காகப் பெற்றோர் செய்ய வேண்டிய தார்மீகக் கடமையாகும் என்கின்றனர் இந்தப் போதனையாளர்கள். பாலியல் பற்றிய தகவல்களை வழங்குவதானது பாலுறவில் ஈடுபடுவதற்குச் சைகை வழங்குவதாக அமையும் என்பதை இப் போதனையாளர்கள் நம்புவதில்லை. ஏதேனுமொரு புதிய பழத்தின் வடிவம், நிறம், மணம், சுவை முதலிய வற்றையும் அதனை உண்பதால் கிடைக்கும் இன்பத்தையும் ஒருவருக்குக் கூறினால் அதனைச் சுவைத்துப் பார்க்க அவர் முயற்சிக்க மாட்டாரா? தகாத பாலியல் உறவு பற்றிய பொருத்தமான கலந்துரையாடலைப் பெற்றாரே தொடங்கி வைக்க வேண்டும். சமுதாயத்தில் ஒருவருக்கு நேர்ந்துள்ள தகாத கர்ப்பம் பற்றியதாகவோ அல்லது ஆபாசமான விளம்பரமொன்று பற்றியதாகவோ சிற்றின்பத்தைத் தூண்டும் இசை பற்றியதாகவோ அல்லது வரம்பு மீறிய ஆண் பெண் உறவைத் தூண்டும் TV நிகழ்ச்சியொன்று பற்றியதாகவோ அக்கலந்துரையாடல் அமையலாம்.

அமெரிக்கப் பொதுப் பள்ளிக்கூடங்களில் வழங்கப்பட்டு வரும் பாலியல் கல்வியின் காரணமாகப் பதின்மவயதினரிடையே மேக நோய்களின் பரம்பலோ பதின்மவயதுக் கர்ப்பங்களோ குறைவடைந்ததாக இல்லை. அத்தோடு பதின்மவயதினரின் பாலியல் பழக்கவழக்கங்கள் மாற்றமடைந்ததாகவும் தெரியவில்லை. துரதிர்ஷ்டவசமாக, கோயிலுக்குப் போவது கூட பெரிய அளவில் உதவியதாகவும் தெரியவில்லை. (Athar, 1990)

உயிரியல் அறிவைத் தவிர்க்க முயற்சிக்கும் ஒரு பள்ளிக்கூடத்துக்கு உங்கள் பிள்ளைகள் போனாலன்றி, அவர்கள் ஏதோ ஓரளவில் பாலியல் கல்வியைப் பெற்றுக் கொள்ளத்தான் போகிறார்கள். எனவே, இவ்விடயத்தில் பெற்றார் கூடுதலான ஈடுபாடுகொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்கள் வழக்கமாக எளிய உயிரியல்ரீதியான அறிவையும் கருத்தடை பற்றிய தகவல்களையுமே இளைஞர்களுக்கு வழங்குகின்றன. முஸ்லிம் பெற்றார்கள் பலரும் ஏனைய சமயப் பெற்றார்களைப் போன்றே அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப் படும் பாலியல் ஒழுக்கக் கோட்பாடுகள் தமது சமய நம்பிக்கையின் நியமங்களுக்கு ஏற்ற வகையில் அமையவில்லை எனக் கவலைப்படுகின்றனர். அத்தோடு, பிள்ளைகளுக்குக் கருத்தடை முறைகளைப் பற்றி அறிவுரை வழங்குவதானது, அவர்களைப் பாலுறவில் ஈடுபடுவதற்குத் தூண்டுவதாக அமையும் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

சரியா தவறா?

ஒன்றைப் பற்றி எவ்வளவு அதிகமாக அறிந்து கொள்கிறார்களோ அந்த அளவுக்கு அதனைச் செய்வார்கள்.

ஆண்களில் பலர் - முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதார் உட்பட - தங்கள் மனைவியரின் பாலியல் பசியைக் கண்டறிந்ததும் மிகுந்த ஆச்சரியமடைகிறார்கள். ஒரு பெண்ணினால் ஓர் ஆணின் பாலியல் தேவைகளை மிக எளிதாகத் திருப்தி செய்ய முடியும் என ஆண்கள் பலர் கருதுவதே இதற்குக் காரணம். அவள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு சில வினாடி களுக்குத் தன்னை அணுக இடங்கொடுப்பது மாத்திரமே என அவர்கள் நினைக்கின்றனர்.

எனினும், ஒரு பெண்ணுடைய பாலியல் தேவைகளைத் திருப்தி செய்யக் கற்றுக் கொள்வது திறன் சார்ந்தது என்பதையும் அது ஒருவருடைய சமயக் கடமை என்பதையும் பெரும்பாலான ஆண்கள் அறிந்திருப்பதில்லை. பெண்கள் தம் அந்தரங்க உடற்பகுதிகள் தொடர்பாக இயல்பாகவே கொண்டுள்ள வெட்க உணர்வை எவ்வாறு நீக்கலாம் என்பது பற்றியும் முன்விளையாட்டு நுட்பங்கள் பற்றியும் கணவன்மார் தெரிந்துகொள்ள வேண்டும். மேலும், தாம் திருப்தியடைந்து விட்டு தம் மனைவியரைப் 'பசி'யோடு விட்டுவிடுவதானது தங்களது மனைவியருக்குத் தாம் ஏற்படுத்தும் கடுமையான இழப்பு என்பதையும் அவர்களுக்கு இழைக்கும் கொடுமை என்பதையும் ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமது பிள்ளைகள் கண்ட கண்ட வீடுகளில் நித்திரை கொள்வதைப் பெரும்பாலான பெற்றோர் அனுமதிக்க விரும்புவதில்லை. எனினும், அவர்களுடைய பதின்மவயதுப் பிள்ளை அவர்களுடைய கண்காணிப்பிலிருந்து விடுபட்டுத் தமக்கெனத் தனிப்பட்டதோர் வாழ்க்கையை நடத்தத் தொடங்கி விட்டால் பெற்றாருடைய கட்டுப்பாடு இல்லாமற் போய்விடும். இளவயதினர் குற்றமேதும் அறியாதவர்களாக இருப்பதானது அவர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு வழியாக அமையலாம். எனினும், பெற்றோர் விரும்புகின்ற அந்தக் குற்றமறியாத் தன்மை பிள்ளை 10 வயதை அடையும் போதே விளையாட்டு மைதானத்தில் இழக்கப்பட்டு விடுகிறது. இன்றைய பிள்ளைகள் இண்டர்னெட், TV, திரைப்படங்கள் முதலியவற்றிலிருந்து தேவையான அறிவினையும் தகவல்களையும் பெற்றுக் கொள்கின்றனர். பிள்ளைகளுக்கு DVDகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு இருந்தால் (அல்லது DVDகளைப் பயன்படுத்தும் நண்பர்கள் இருந்தால்) அவர்கள் பார்ப்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் பாலியல் பற்றிய 'அறிவானது' உங்களிடமிருக்கும் அறிவை விட மிக முன்னேற்றமானதாக இருக்கும்.

இன்று தாய்லாந்தில் சாவுக்குரிய முதற்காரணியாக இருப்பது AIDS

எயிட்ஸ் நோய் தாய்லாந்தில் சாவுக்கான பிரதான காரணியாக அமைந்திருக்கின்றது. இந்த வகையில், விபத்துக்கள், இதயக் கோளாறுகள், புற்று நோய் என்பவற்றை விட அது மேலோங்கி இருக்கிறது என அந்நாட்டின் பிரதி சுகாதார அமைச்சர் கூறியிருக்கிறார். அவர் திருத்தமான புள்ளி விபரங்களைத் தராத போதிலும் HIV-AIDS மரணங்களின் எண்ணிக்கை சரியாகப் பதியப்படுவதில்லை என்றும் கிராமப் புறங்களில் இந்நோயாளிகளின் மரணத்திற்கான காரணத்தை அறிவிப்பதற்கு உறவினர்கள் தயங்குவதே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"விபத்து அல்லாத மரணங்களைப் பற்றி அறிவிக்கும் போது 'இதயத்துடிப்பு நின்றதால் மரணம் ஏற்பட்டது' என்றே கிராமத் தலைவர்கள் அறிக்கை சமர்ப்பித்தனர். இதன் விளைவாக, பெரும்பாலான தாய்லாந்து நாட்டினர் இதய நோய்களினால் இறக்கின்றனர் என்ற தவறான கருத்து உருவாக வழியேற்பட்டது" என்று பத்திரிகையாளர்களிடம் கூறிய அமைச்சர், "நாம் செய்துள்ள புதிய ஆய்வொன்றின்படி கிராமப் புறங்களில் மரணங்களுக்கான முதன்மைக் காரணியாக எயிட்ஸ் விளங்குகிறது என்பது தெரிய வந்துள்ளது" என்றும் கூறினார். 10 வருடங்களுக்கு முன்னர் எயிட்ஸ் பரவத் தொடங்கிய போது பாதிக்கப்பட்ட தாய்லாந்து நாட்டினர் நோய் வாய்ப்பட்டு பெருந்தொகையினராக இறக்கத் தொடங்கும் போது எயிட்ஸ் காரணமான மரணங்கள் தொடர்ந்தும் அதிகரிக்கப் போகின்றன என பாங்கொக்கில் உள்ள HIV-AIDS பற்றிய ஐ.நா. நிகழ்ச்சித்திட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. 60 மில்லியன் மக்களைக் கொண்ட தாய்லாந்தில் சுமார் 1 மில்லியன் பேர் HIV தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். இவர்களுள் மூன்றிலொரு பகுதியினர் ஏற்கனவே இறந்து விட்டனர்.

(Aids Education Global Information System- 2001)

திருப்தியோடு வாழ்ந்த பேராசிரியர் அமெரிக்காவை விட்டு வெளியேறியது ஏன்?

மலேசியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமை புரியும் ஒருவர் பின்வரும் கதையைக் கூறினார். அவர் அமெரிக்காவில் வாழ்ந்த போது அவரது மகன் மிச்சிகன் மாநிலத்திலுள்ள அரசாங்க ஆரம்பப் பள்ளிக் கூடமொன்றில் மூன்றாம் தரத்தில் கற்றுக் கொண்டிருந்தான். ஒருநாள் அவன் பள்ளிக் கூடம் விட்டு வீட்டுக்கு வந்ததும், தனது வகுப்பு மாணவனொருவன் தனது வகுப்பறையில் வைத்து மாணவியொருத்தியுடன் எவ்வாறு முழுமையாகப் பாலுறவில் ஈடுபட்டான் என்பதை விளக்கத் தொடங்கினான். இதன் விளைவாக ஐந்து பிள்ளைகள் கொண்ட தனது குடும்பத்துடன் அப்பேராசிரியர் அமெரிக்காவை விட்டே வெளியேறி விட்டார். பெறுமானங்களற்ற பாலியல் கல்வியின் விளைவாகப் பொறுப்பற்ற முறையில் நினைத்தவாறு பாலுறவில் ஈடுபடுகின்ற ஒரு சந்ததி உருவாகியிருக்கின்றது. நடைமுறையிலுள்ள கலாசாரமானது பாலுறவைக் கவர்ச்சியானதாகவும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் அனுபவித்து மகிழக்கூடியதாகவும் ஆக்கியுள்ளது. வரம்பற்ற பாலுறவைத் தவிர்ப்பது அசாதாரணமானதாக பலருக்குத் தோன்றுகிறது. இதற்குக் காரணம், பாலுறவு தொடர்பான உருவப்படங்களும் கட்டுப்பாடற்ற ஆண், பெண் உறவும் பொதுவானவையாக மாறியிருப்பதே.

அமெரிக்காவிலுள்ள தாய்மாரும் புதல்வியரும் கொண்டுள்ள கருத்துக்கள்

பாலியல் நடத்தை தொடர்பாகப் பதின்மவயதினரைப் பாதித்துள்ள மனக் குழப்பம் அதிகரித்து வருகின்றது. அவர்களுக்குப் பொருத்தமான வழிகாட்டல் பெற்றோரிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் கிடைப்பதில்லை. பின்வரும் சில எடுத்துக்காட்டுக்கள் பதின்ம வயதினரின் சில கூற்றுக்களைக் கொண்டுள்ளன:

- *16 வயதுடைய ஸெலினா கூறுகிறாள்: "பாலுறவு பற்றி என் தாயாரிடம் எதுவும் கேட்க முடியாது. அப்படி நான் கேட்டால் இவள் இந்தக் கேள்வியை ஏன் கேட்கிறாள் என அவர் யோசிக்கத் தொடங்குகிறார். 'இதை ஏன் நீ தெரிந்து கொள்ள வேண்டும்?' என்று பிடிவாதமாக நிற்கிறார்"*
- *14 வயதுடைய ஜூலியட் கூறுகிறாள்: "அறியாதிருப்பது அப்பாவித்தனத்தை உறுதிப்படுத்தும் என எனது தாயார் கூறுகிறார். பாலுறவு பற்றி நான் எதுவும் கேட்டால் அவருக்குக் கடும் கோபம் வந்து விடுகிறது. 'பாலுறவு பற்றி நீ அறிந்து கொள்ள வேண்டியவற்றை உனது கணவன் உனக்குக் கற்பிப்பான்' என்று கூறுவார்"*
- *18 வயதுடைய லூயீ கூறுகிறான்: "எனது பெற்றோரிடமிருந்து எனக்குக் கிடைக்கும் செய்திகள் கலப்புத் தன்மையானவை. 'அதனைச் செய்யாதே; நீ பிரச்சினையில் மாட்டிக் கொள்வாய்!' என்கிறார் ஒருவர். 'நீ இள வயதினனாக இருக்கும் போதே உன் காட்டுத் தானியங்களை விதைத்துக்கொள்' என்கிறார் மற்றவர். பெற்றார் தம் எண்ணங்களை ஒருநிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். பாலுறவு எமக்கு நல்லதாயின் அவர்கள் அவ்வாறு கூறட்டும்; அது எமக்குத் தீங்கானதாயின் எமக்கு ஆசையூட்டவோ எம்மைத் தூண்டிவிடவோ எம் மனதைக் குழப்பிவிடவோ வேண்டாம்"*
- *15 வயதுடைய ஜோஸப் கூறுகிறான்: "நாம் உண்மை பேசுபவர்களாக இருக்க வேண்டும் என எனது தந்தை எப்போதும் கூறுவார். ஆனால், அவருடைய நேர்மையோ பாலுறவு விடயத்தில் பறந்துவிடுகிறது. இந்த விடயத்தில் எனது கபடமின்மைக்கும் நேர்மைக்கும் வரவேற்புக் கிடைப்பதில்லை"*
- *22 வயதுடைய ஜொனாதன் கூறுகிறான்: "கல்லூரிப் பையன்களைப் பொறுத்த வரையில் பாலுறவானது முதிர்ச்சியினதும் ஆண்மையினதும் சின்னமாக விளங்குகிறது. பெண்களைப் பொறுத்தவரையில் ஒதுக்கப்படுவதிலிருந்தும் தனிமைப்படுவதிலிருந்தும் அது அவர்களைப் பாதுகாக்கிறது"*
- *பாலியல் பற்றிய திரிசங்கு நிலையைப் பதின்மவயதினர் ஒருவர் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்: "ஒரு ஹாஸ்ய நாடகத்தைப் பார்த்தால் நான் சிரிக்கலாம்; ஒரு சோக நாடகத்தைப் பார்த்தால் நான் அழலாம்; ஏதேனுமொன்று எனக்குக் கோபமூட்டினால் நான் கத்தலாம்; ஆனால், என்னைப் பாலியல் ரீதியாகக் கிளறிவிடும் ஒரு நாடகத்தைப் பார்த்தால் நான் என்ன செய்ய முடியும்?"*

அறியாமைக்கு மாற்று மருந்தாகப் பொருத்தமான பாலியல் கல்வி தேவைப்படுகிறது என்பதையே இக்கூற்றுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. தனது பாலியல் தொடர்பான நியமங்களையும் பெறுமானங்களையும் வீதிகளும் காட்சித் திரைகளும் வகுத்துத்தர அனுமதித்துக் கொண்டு சமூகமானது தொடர்ந்தும் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

பெறுமானங்களும் பாலியலும்: இன்றும் நேற்றும்

இன்று மக்களிடையே குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெறுமானங்கள் தொடர்பான முரண்பாடுகள் காணப்படுகின்றன. புதிய யதார்த்த நிலைமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது எனச் சில பெற்றோர்கள் கருதுகின்றனர். பாலுறவின் மூலம் பரவும் நோய்கள், தேவையற்ற கர்ப்பங்கள், நற்பெயருக்கு விளையும் தீங்குகள் என்பன பற்றியே அவர்கள் கவலைப்படுகின்றனர். ஒழிவு மறைவின்றிய முறையில் பாலியல் கல்வியை வழங்குவதன் மூலம் இவ்வாபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள அவர்கள் எதிர்பார்க்கின்றனர். சிலர் தம் பதின்மவயதுப் பிள்ளைகளுக்குத் தகவல்களோடு சேர்த்து கருத்தடைச் சாதனங்களையும் வழங்குகின்றனர்.

ஏனைய பெற்றோர்கள் இந்நடவடிக்கைகளைச் சீற்றத்தோடு நிராகரிக்கின்றனர். கருத்தடைச் சாதனங்கள் திருமணத்துக்கு முந்திய பாலுறவை ஊக்குவிக்கும் என்பதை அவர்கள் அறிவர். பதின்மவயதினரின் பாலுறவினை சமூகம் ஆதரிக்க முடியாது என்பதையும் அவர்கள் அறிவர். ஏனெனில், இள வயதிலேயே பாலுணர்வு தூண்டப்படுவ தானது பொறுப்பான மனித உறவுகளுக்கும் நாகரிகத்துக்கும் தீங்கு விளைவிக்கும். அறிவைப் பெற்று நேர்த்தியான குடும்ப வாழ்க்கைக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதே இளைஞர், யுவதிகளின் பிரதான பணியாக இருக்கிறது. இப்பணியை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயின் உணர்வுகளையும் உந்துதல்களையும் அடக்கி வைத்திருப்பதே சிறந்த வழியாகும். சிலரைப் பொறுத்தவரையில் பாலியல் பற்றிக் கலந்துரையாடுவதே அருவறுக்கத்தக்கதாகவும் தகாததாகவும் இருக்கிறது. பாலியல் பற்றி மனம் திறந்து பேசுவதன் நோக்கம் சுய கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதாக இருப்பினும் அது பாலியல் செயற்பாடுகளைத் தூண்டிவிடும் எனச் சில பெற்றார் கருதுகின்றனர். தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் தாம் இருப்பது பற்றி ஒரு பெற்றார் பின்வருமாறு கூறுகிறார்: "வளர்ந்தவர்கள் என்ற வகையில் நாம் சிறந்த முன்மாதிரிகளாக இருந்து கொண்டு நம் பிள்ளைகளிடம் அன்பான நடத்தையை வேண்டினால்தான் பிள்ளைகள் நாம் விரும்பும் வகையினராக அமைவார்கள்"

இன்று வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் பாலியல் சார்ந்த ஒழுக்கம் குறைவாகவே காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் இன்னும் பல நாடுகளிலும் பாலியல் தடை செய்யப்பட்ட ஒரு விடயமாக இல்லை; அது பள்ளிக் கூடத்தில் கற்பிக்கப்படுவதோடு வீடுகளில் கலந்துரையாடவும் படுகிறது.

ஆசை காட்டலுக்கு உட்படுத்தப்பட்டால் வாலிப வயதினர் கட்டுப்பாட்டை விட்டுக் கொடுக்கின்றனர் என்ற கருத்து இச்சமூகங்களில் பொதுவாக நிலவுகிறது. இதன் காரணமாக இளம் ஆண்கள் சந்தேகத்துக்குள்ளாவதோடு பெண்கள் துணைக் காவலுடன் மாத்திரம் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இன்றைய வாலிபப் பெண்களிடம் கார்கள் இருக்கின்றன. பல பெண்களுக்குப் போதியளவு சுதந்திரம் இருக்கிறது. ஆசையூட்டலும் தூண்டுதலும் உச்சமாக இருந்து மேற்பார்வை மிகக் குறைவாக இருக்கும்போது இளைஞர்கள் ஒழுக்க விதிகளைப் பின்பற்றி நடப்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

கடந்த காலத்தில் பண்பான அமெரிக்க யுவதிகள் கற்பு விடயத்தில் உறுதியாக இருந்தனர். பிடிவாதமுள்ள காதலன் ஒருவனை எதிர்கொள்ள நேரும்போது முத்தமிடுதல், வருடுதல் போன்றவற்றை மாத்திரமே அனுமதித்தனர். தம் மனச்சாட்சிக்கும் சமூகத்துக்குமிடையில் சமரசம் ஏற்படுத்தும் முயற்சியே இது. இன்று இந்தப் போக்கினைத் தீர்வாக ஏற்றுக்கொள்ளப் பதின்மவயதினர் மறுக்கின்றனர். TV, திரைப்படங்கள், சஞ்சிகைகள் முதலிய வற்றினால் இளைஞர்களின்

உணர்வுகள் அளவுக்கு மீறித் தூண்டப்படுவதால் அவர்கள் இப்போக்கை வெறுக்கின்றனர். இது தம்மைக் கேலிக்குரிய வர்களாக மாற்றி விடுவதாக நினைக்கும் இளம் பெண்களும் இதனை விரும்புவதில்லை.

இந்த நாடுகளில் கன்னியர்களாகவே இருக்க விரும்பும் கல்லூரி மாணவிகள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர். ஆண் மாணவர்கள் பலர், இவர்களுடன் உறவாடவும் வெளியே அழைத்துச் செல்லவும் மறுக்கின்றனர். அதேவேளையில் மாணவிகள் சிலரோ இவர்களைப் பத்தாம்பசலிகளாகக் கருதுகின்றனர். திருமணம் வரையில் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனத் தீவிர உறுதி கொண்டவர்கள் இறுதியில் சமூகத்தால் ஒதுக்கப்பட்டுத் தனிப்படுகின்றனர். இவ்வாறான நெருக்கல்கள் காரணமாக ஒரு கன்னிப் பெண் தனது சரியான நிலைப்பாடு பற்றிச் சந்தேகப்பட ஆரம்பிக்கலாம். ஆசையூட்டலுக்கும் ஏளனத்துக்கும் மத்தியில், ஒழுக்க விடயத்தில் உறுதி பூண்டவர்கள் மாத்திரமே தம் உயர் நியமங்களைப் பேணிக்கொள்ள முடியும். தேவையின் காரணமாகவன்றி வெளி அழுத்தத்தின் காரணமாகவே பெரும்பாலான இளம் பெண்கள் பாலுறவில் ஈடுபடுகின்றனர் என்பது கவலைக்குரியதே. கடந்த காலத்தில் கர்ப்பம் பற்றிய பயம்தான் ஓர் இளம் பெண் தன் கற்பைக் காத்துக் கொள்வதற்கு உதவும் காரணமாகப் பயன்பட்டது. இந்நிலைமை இப்போது மாறிவிட்டது. கருத்தடைச் சாதனங்கள் சுப்பர் மார்கட்களில் விற்பனைக்கு உள்ளன. மாத்திரைகளும் ஏனைய சாதனங்களும் எளிதில் பெறப்படக் கூடியனவாக இருக்கின்றன. சில பள்ளிக்கூடங்களும் கோயில்களும்கூட ஆணுறைகளை இலவசமாக வினியோகிக்கின்றன.

கல்லூரியிலிருந்து விடுமுறையில் வீட்டுக்கு வந்த 18 வயதுடைய ஜேஸன் வாழ்க்கை, காதல் என்பன பற்றித் தன் தந்தையிடம் பின்வருமாறு கூறினான்: "பையன்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உண்மையான வேறுபாட்டினை நான் கண்டுபிடித்து விட்டேன். பெண்கள் காதலைப் பெறுவதற்காகப் பாலியல் தொடர்புகளில் ஈடுபடுகிறார் கள்; ஆனால், பையன்களோ பாலியல் தொடர்பைப் பெறுவதற்காகக் காதலைப் பயன் படுத்துகிறார்கள். ஆனால், எனது தத்துவம் அவர்களைக் காதலித்துவிட்டுக் கைவிட்டு விடுவதே". "நீயும் உனது நண்பர்களும் காதலித்துவிட்டுக் கைவிட்ட பின் அந்தப் பெண்களின் கதி என்ன?" என அவனது தந்தை திருப்பிக் கேட்டார். "அது எனது பிரச்சினையல்ல; அது பற்றிச் சிந்திக்காமலிருக்கவே நான் முயற்சிப்பேன்" என்றான் ஜேஸன்.

'நீ சிந்தித்துப் பார். நீ சாவிலிருந்து ஒரு மனிதனைக் காப்பாற்றினால் அவனது உயிருக்கு நீயே பொறுப்பு' எனக் கீழைத்தேய நாடுகளில் கூறுவார்கள். "நீ ஒரு பெண்ணைக் காதல் வலையில் சிக்க வைக்க உபாயம் வகுத்தால், அவளுடைய உணர்வுகளுக்கு நீ பொறுப்பாகி விடுகிறாய்" என்றார் அவனது தந்தை.

இங்கு ஜேஸனின் தந்தை ஓர் அடிப்படைக் கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறார். எல்லா வகை மனித உறவுகளிலும் - அது எளிதானதாகவோ சிக்கலானதாகவோ இருப்பினும், சமூக ரீதியானதாகவோ பாலியல் ரீதியானதாகவோ இருந்தாலும் - தனியாள் மட்டத்தில் நாணயமும் பொறுப்புக்கூறும் இயல்பும் இருத்தல் வேண்டும்.

பாலியல் கல்வி ஏன்? நாம் அதனைக் கற்பிக்க வேண்டுமா?

பாலியல் பற்றித் தம்மால் முடிந்த அளவு தெரிந்து கொள்வதற்குப் பதின்மவயதினர் ஆர்வம் காட்டுகின்றனர். இது தொடர்பாக அவர்கள் பிரச்சினைக்குள்ளாகித் தெளிவு கிடைக்காத நிலையில் யதார்த்தமான, தனிப்பட்ட விடைகளை வேண்டி நிற்கின்றனர். பாலியல் பற்றி அர்த்தமுள்ள முறையில் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டால் பதின்மவயதினர் தங்கு தடையின்றி அறிவு பூர்வமாகப் பேசுகின்றனர். அவர்கள் தமது பாலியல் போக்கினை விளங்கி அதனை எதிர் கொள்வதற்காக, இவ்விடயம் தொடர்பான நியமங்களையும் தீர்க்கமான கருத்துக்களையும் தேடுகின்றனர்.

பதின்மவயதினருக்குப் பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டுமா என்பதே கேள்வியாக இருக்கிறது. எனினும், இக்கேள்வி காலங்கடந்த ஒன்றாகவே தெரிகிறது. இன்று இண்டர்னெட்டிலும் பள்ளிக்கூட வளவுகளிலும் வீதிகளிலும் பாலியல் பற்றித் தரம் குன்றிய முறையில் ஏற்கனவே கற்பிக்கப்பட்டு வருகிறது. வார்த்தைகளினூடாகவும் படங்களினூடாகவும் கீழ்த்தரமான, ஆபாசமான முறையில் பிள்ளைகளுக்குப் பாலியல் அறிமுகப்படுத்தப்படுகிறது. திரைகளும் வீதிகளும் தவறான தகவல்களை முடிவின்றி வழங்கிக் கொண்டிருக்கின்றன. ஆபாச விற்பனையாளர்கள் பாலுறவு தொடர்பான உண்மைகளையும் உணர்வுகளையும் தயங்காமல் பகிர்ந்து கொள்கின்றனர். பிஞ்சிலே முற்றிய சமவயதினர்கள் உண்மையானதும் கற்பனையானதுமான அனுபவங்களை ஆர்வத்தோடு கூறக் காத்திருக்கிறார்கள். பெற்றாரும் ஆசிரியர்களுமே பொருத்தமான காலத்தில் பொருத்தமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள அஞ்சுகின்றனர்.

பாலியல் கல்வியானது தகவல்கள், பெறுமானங்கள் என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. பெறுமானங்கள் வீட்டிலேயே கற்பிக்கப்பட வேண்டும். சிறப்பான முறையில் தகவல் தரக்கூடியவர்கள் அத்துறை சார்ந்த நிபுணர்களே. பாலியல் சார்ந்த எல்லாக் கேள்விகளும் அறிவு தேடலின் காரணமாகத் தோன்றுவதில்லை. சில பிள்ளைகள் தம் பெற்றோரைச் சங்கட நிலைக்கு உள்ளாக்குவதையே நோக்கமாகக் கொள்வர். இவ்வாறான சீண்டிவிடும் கேள்விகளுக்குப் பெற்றார் பதிலளிக்கத் தேவையில்லை. மனிதப் பாலியல் தொடர்பான சகல அம்சங்கள் பற்றியும் அறிவுடையவர்களாகவும் அவை பற்றி சங்கடமின்றி நேரடியாகப் பேசக்கூடியவர்களாகவும் பெற்றார்கள் இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. உண்மை நோக்கோடு கேட்கப்படும் தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை ஏனைய கேள்விகளை நிபுணர்களிடம் சமர்ப்பிப்பதே நல்லது. பாலியல் பற்றிப் பள்ளிக்கூடத்தினால் ஒழுங்கு செய்யப்படும் கலந்துரையாடல்களில் மட்டுமன்றி கோயில், பள்ளிவாயல், சமூக நிலையங்கள் என்பவற்றினால் ஒழுங்கு செய்யப்படுபவற்றிலும் முக்கியமாகக் கலந்து கொள்ளுமாறு பெற்றார் தம் பதின்மவயதுப் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும். நேர்மையான முறையிலும் புறவயமாகவும் தகவல் வழங்கப்படுவதன் மூலம் பரம்பரைகளுக்கிடையிலான பகைமையுணர்வைக் குறைத்து பரஸ்பர நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யலாம். இதன் மூலம் வளர்ந்தவர்கள் மனதில் வாலிபர்கள் பற்றிய நம்பிக்கை மீள உருப்பெறுவதோடு, வயது இடைவெளி இருந்த போதிலும் வளர்ந்தவர்கள் தமது நலன் பற்றி உண்மையாகவே கரிசனை கொண்டுள்ளார்கள் என்பதை வாலிபர்களும் கண்டு கொள்வார்கள். அத்தோடு தாம் இரு சாராரும் பொதுவான மானுடவியல்பைப் பகிர்ந்து கொண்டிருப்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

மறுபுறத்தில், பிள்ளைகளுக்குப் பாலியல் கல்வி தேவையா? என ஒருவர் வாதிடக்கூடும். நீந்துவது எப்படி என ஒரு வாத்துக் குஞ்சுக்கு நீங்கள் கற்பித்துக் கொடுப்பீர்களா அல்லது

அதனை நீரில் போட்டுத் தானாக நீந்த விடுவீர்களா? முறையான கல்வி எதுவுமின்றியே ஆயிரக்கணக்கான வருடங்களாக ஆண்களும் பெண்களும் பாலுறவில் ஈடுபடுகிறார்களே.. சம்பிரதாயபூர்வமான நாகரிகங்கள் பலவற்றில் திருமணத்தின் பின்னர்தான் முயன்று தவறிக் கற்கும் முறையில் பாலியல் கல்வியைப் பெறத் தொடங்குகின்றனர். எனினும், ஒரு டஜன் பிள்ளைகளைப் பெற்று விட்டதற்காக ஒரு தம்பதியினரிடையே காதல் இருந்ததாகக் கூற முடியாது. சந்தோசமான மண வாழ்க்கை நிறைவு பெறுவதற்கு பொருத்த மானதும் ஆரோக்கியமானதுமான பாலியல் கல்வி கட்டாயம் தேவைப்படுகிறது.

பாலியல் கல்வியைக் கற்பிக்க வேண்டியது யார்? இதில் ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டிய கடமைக் கூறுகள் இருக்கின்றன. உண்மைத் தகவல்களையும் அக்கறை காட்டப்பட வேண்டிய விடயங்களையும் பெற்றார் அறிந்திருப்பதோடு பொறுப்பு மிக்க பங்களிப்பொன்யும் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். தனது மகனின் கேள்விகளுக்கு விடையளிக்கக்கூடியவராக தந்தை இருப்பதும் மகளது கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடியவராகத் தாய் இருப்பதும் அவர்களது கடமையாகும். பள்ளிக்கூடத்திலும் ஊடகங்களிலும் வழங்கப்படும் பாலியல் கல்வியை நாம் முற்றாக நம்பியிருக்க முடியாது. ஒழுக்கவியல் மற்றும் அறிவியல் சார்ந்த பரிமாணமொன்றைச் சேர்த்து அதனைக் குறை நிரப்புவது எமது கடமையாகும். சமயப் பள்ளிக்கூட ஆசிரியரும் குடும்ப வைத்தியரும் சிறுவர் நோயியல் நிபுணரும் நன்கு தகவலறிந்த இமாம்களும் ஏனைய மதகுருமாரும் இவ்விடயத்தில் பங்களிப்புச் செய்யலாம். குடும்பத்திற்குள்ளே இளைய சகோதரி தொடர்பாக மூத்த சகோதரிக்கும் தம்பி தொடர்பாக அண்ணனுக்கும் ஒரு பொறுப்பு உண்டு.

பாலியல் கல்வி தொடர்பாக பெற்றார் மௌனமாய் இருக்கக் கூடாது. மௌனம் தவறான செய்தியையே பிள்ளைக்கு வழங்கும். அந்நியர்களிடமிருந்தும் சம வயதினரிட மிருந்தும் தாம் செவியுறும் முரண்பாடான விடயங்கள் பற்றிப் பிள்ளைகள் மனக்குழப்பம் அடைந்திருப்பர். இதனால் பாலியல் பற்றி அவர்கள் விரும்பத்தகாத மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்வர். இது முதிர் பருவத்தில் அவர்களது வாழ்க்கையை எதிர்மறை யாகப் பாதிக்கக்கூடும்.

இனிமேலும் பாலியல் கல்வியைத் தவிர்த்துக் கொள்ள முடியாது. நாம் யதார்த்தமான முறையில் சிந்திக்க வேண்டும். தமது பிள்ளைகள் பாலியல் கல்வி பெறுவதைத் தடுக்க முயற்சிக்கும் பெற்றோர்கள் உண்மையில் கற்பாறையில் தமது தலையை மோதிக் கொள்கிறார்கள். படித்த, ஒழுக்கமுடைய, பொறுப்புள்ள, வளர்ந்தவர் ஒருவரிடம் அவர்களது பிள்ளைகள் கற்றுக்கொள்வது உண்மையிலேயே நல்லது. இவ்வாறான ஒருவர் ஏற்படக்கூடிய மனக்குழப்பங்களை நிவர்த்தி செய்து சுற்றாடலின் விரும்பத்தகாத செல்வாக்குகளைத் தடுக்கவும் உதவுவார்.

பாலியல் பற்றிய விடயங்கள் அல்குர்ஆனினாலும் நபி (ஸல்) அவர்களாலும் தெளிவாகவும் அறிவுபூர்வமாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளன. பாலியல் என்பது ஓர் அசிங்கமான வார்த்தையல்ல. ஏனெனில், அது மனித வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. இனப்பெருக்கம், சிருஷ்டித்தல், மனித வாழ்க்கை, மாதவிடாய், விந்து வெளியேற்றம் என்பன பற்றி கண்ணியமான மொழியில் அல்குர்ஆன் கலந்துரை யாடுகிறது. தமது தோழர்களின் பாலியல் சார்ந்த வாழ்க்கை பற்றி அவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் மரியாதையான முறையில் கலந்துரையாடினார்கள். முஸ்லிம் பெற்றார்கள் பாலியல் பற்றிக் கலந்துரையாடாமல் இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம், அவர்கள் வளர்க்கப்பட்டுள்ள முறையாகும். அப்பெற்றோர்கள் பாலியல் பற்றி அறியாதவர்களாக இருக்கலாம்; அல்லது தமது பாலியல் நிலை அல்லது அதன் வெளிப்பாடு என்பன பற்றி சௌகரிய உணர்வு அற்றவர்களாக இருக்கலாம்.

பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியது என்ன?

பெற்றோர்கள் பலர் தங்கள் புதல்வியர்களை மாதவிடாயின் வருகைக்குத் தயாராக்கு கிறார்கள். அதே போன்று தமது புதல்வர்களை நித்திரையில் நிகழக்கூடிய விந்து வெளியேற்றத்துக்கும் தயார்படுத்துகின்றனர். எனினும், சில பெற்றோர்கள் இவ்வாறு தயார்படுத்துவதில்லை. இதன் காரணமாகப் பதின்மவயதினரின் மனதில் அச்சமும் அவல நிலையும் ஏற்படுகிறது. எதிர்பாராத வகையில் குருதியோ வேறு கசிவுகளோ வெளியேறி னால் அது நோயின் அல்லது உடல் சேதத்தின் அறிகுறியாக இருக்கும் என இள வயதினர் அச்சமுறுகின்றனர். இது சுய ஆராய்வின் போதோ சுயதிருப்தி காணும் போதோ நிகழ்ந்து விட்டால் அவர்கள் கவலைப்பட்டுக் குற்ற உணர்வினால் அவதிப்படுவார்கள். குருதியோ விந்தோ அதிகளவில் வெளியே வந்தால் உள்ளே ஏதோ புண்ணாகிவிட்டது அல்லது நோயுற்று விட்டது என அவர்கள் நம்புவார்கள். அதனைப்பற்றிப் பேசுவதற்கு முடியாத அளவுக்கு அவர்கள் வெட்கமும் அச்சமும் கொண்டிருப்பார்கள். ஓர் இளம் பெண் தனது கைக்குட்டையைப் பயன்படுத்திப் பல மாதங்களாக குருதிப்போக்கைச் சமாளிப்பதற்கு முயற்சித்திருக்கிறாள். தனக்கு ஏதோ கடுமையான நோய் ஏற்பட்டிருக்கிறது என நினைத்த அவள் அது பற்றி யாரிடமும் சொல்ல அஞ்சினாள். இறுதியில் அவளது இரத்தக்கறை படிந்த ஆடைகளைக் கவனித்த கருணை மிக்க ஓர் ஆசிரியைதான் அவளுக்கு உதவி செய்தார். அதுவரை, தனது தாய் அதனைக் கண்டு விடக் கூடாதே எனப் பயந்து அவள் இரத்தப் படிவுகளைக் கழுவிச் சுத்தமாக்கிக் கொண்டே இருந்திருக்கிறாள்.

சில தாய்மார்களைப் பொறுத்தவரையில் மாதவிடாய் தொடர்பாகத் தாம் கொண்டி ருக்கும் தவறான மனப்பாங்குகளைப் பற்றி சிந்தித்து உணர்ந்து கொண்ட பின்னரே அவர்கள் அது பற்றித் தம் புதல்வியருடன் பேச வேண்டும். இளம் ஆண்களும் இது பற்றிய சில விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பது பயனுள்ளதே. பிற்காலத்தில் மாதவிடாய் காரணமான வலிகள், மன அலைவுகள், எரிச்சல் தன்மை என்பவற்றால் பாதிக்கப்படுகின்ற தன் மனைவியைச் சமாளிப்பதற்குப் பிற்காலத்தில் இவ்வறிவு அவர்களுக்கு உதவக்கூடும். இவ்விவகாரத்தை அசுத்தம் நிறைந்த ஒன்றாகக் கருதுவதிலோ இந்நிலைமையிலுள்ள ஒரு பெண்ணை ஒதுக்கி வைப்பதிலோ எவ்வித அர்த்தமும் இல்லை.

மாதவிடாய் நிலையிலுள்ள பெண்களை ஒதுக்கி வைப்பதன் மூலம் அல்லது தாம் அசுத்தமானவர்கள் என்ற உணர்வை அவர்களில் ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை நோவினை செய்யக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். இக்காலத்தில் முழுமையான உடலுறவு மாத்திரமே தவிர்க்கப்பட வேண்டும். அதேவேளை பெண்ணின் அந்தரங்கப்பகுதிகள் மறைக்கப்பட்ட நிலையிலும் அவளது குருதியிலிருந்து ஆண் பாதுகாக்கப்பட்ட நிலையிலும் ஒரு தம்பதியினர் தாம் விரும்பிய விதத்தில் திருப்தியைத் தேடிக்கொள்ளலாம்.

அமெரிக்காவிலுள்ள துணைநிலைப் பொதுப் பள்ளிக்கூடங்களில் ஒரு சிலவற்றைத் தவிர்த்து ஏனையவற்றில் வழங்கப்படும் பாலியல் கல்வியானது பெரும்பாலும் ஆணுறைகளைப் பயன்படுத்துவது எப்படி, நோய்களைத் தவிர்ப்பது எப்படி, கருச்சிதைவுகளைச் செய்து கொள்வது எப்படி என்பவை பற்றிய பாடங்களைக் கொண்டதாகவே இருக்கின்றன. இளைஞர்களும் யுவதிகளும் எப்படியாவது உடலுறவில் ஈடுபடத்தான் போகிறார்கள்; எனவே அதனைப் பாதுகாப்பாகச் செய்வதற்கு நாம் உதவ வேண்டும் என்பதே இன்று ஐக்கிய அமெரிக்காவில் நிலவும் மனப்பாங்காகும். ஒழுக்கரீதியான அல்லது அறவியல் ரீதியான முறையில் இவ்விடயம் அரிதாகவே நோக்கப்படுகிறது. சமயம், ஆன்மீகம், இறைவனைத் திருப்திப்படுத்தல் என்பன பற்றிக் கருத்திலெடுக்கப் படுவதில்லை. ஆண், பெண் கலந்த வகுப்புக்கள் இள வயதினரின் இயல்பான வெட்க உணர்வை அகற்றி விடுகின்றன. தனிப்பால் வகுப்புக்களில்கூட பாலியல் செயற்பாடுகளைப் பரிசோதித்துப் பார்க்கப் பிள்ளைகள் தூண்டப்படுவதோடு, பாலியல் பற்றிய இயல்பான ஆராய்வின் ஒரு பகுதியாக முத்தமிடும் நுட்ப முறைகள், சுய திருப்தி காணல் என்பன பற்றிய உதவிக் குறிப்புகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான விடயங்களுக்கு எவ்விதத்திலும் ஏற்கனவே அறிமுகப் படுத்தப்படாத முஸ்லிம் பிள்ளைகள் இவற்றுக்கு எப்படி எதிர்வினை காட்டுவது என்று தெரியாமல் அதிக சங்கடத்துக்கு உள்ளாகின்றனர். தம் பெற்றோரிடமும் அது பற்றிக் கேட்க முடியாத நிலையில் அங்கலாய்க்கின்றனர்.

பாலியல் துஷ்பிரயோகம்- அதன் பாரதூரத் தன்மை

இஸ்லாத்தின் படி, திருமணத்துக்குப் புறம்பாக நிகழும் எந்தவொரு பாலுறவும் ஒழுக்க ரீதியிலும் சமய ரீதியிலும் பெரும் துஷ்பிரயோகமாக அமைகிறது. பாலியல் துஷ்பிரயோகம் காரணமாகச் சட்டபூர்வமற்ற குழந்தைகள் பிறந்தால் அது பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தும். சில வேளைகளில் ஒரு கொலையை விடக் கூடிய பாதிப்பை அது சமூகத்தில் உருவாக்கும். விபசாரம் காரணமாகக் குடும்பங்களிலும் சமூகத்திலும் நீண்டகால விளைவுடைய தீங்குகள் ஏற்படலாம். இவை பல பரம்பரைகளுக்கு நீடிக்கலாம். திருமணத்துக்குப் புறம்பான பாலுறவின் காரணமாக நோய்கள், கருச்சிதைவு, வலது குறைந்த அல்லது பின்னடைவான குழந்தைகள், சட்டத்துக்குப் புறம்பான குழந்தைகள், தனிப்பெற்றார் குடும்பங்கள், முறிந்த குடும்பங்கள், குழம்பிப்போன மரபுரீதியான உறவுமுறைகள், நம்பிக்கைத் துரோகம் மற்றும் விபசாரம் போன்ற இன்னோரன்ன விளைவுகள் ஏற்படலாம்.

திருமணத்துக்குப் புறம்பான உடலுறவானது மனித கண்ணியத்தையும் இடைத் தொடர்புகளையும் மலினப்படுத்துகின்றது. இது போன்று சமூகக் கட்டுப்பாடுகளை முறிக்க அனுமதிப்பதனால் மேலும் பாரதூரமான விபசாரம் போன்ற சமூகப் பிரச்சினைகள் உருவாகின்றன. சிறிய அளவில் சமூகக் கட்டுப்பாடுகளை முறிப்பதானது, பெரிய அளவில் அவற்றை முறிப்பதற்கு வழியேற்படுத்துகிறது. வரம்பற்ற ஆண், பெண் கலவியும் திருமணத்துக்குப் புறம்பான பாலுறவும் இறைவனால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் தண்டிக்கப்படக்கூடிய பெரும் பாவங்களாகும்.

வரம்பு மீறிய பாலுறவைத் தனியாளுக்குரிய பாவமாக மாத்திரம் இஸ்லாம் கருதவில்லை. மாறாக, சமூகத்துக்கெதிரான ஓர் ஆக்கிரமிப்பாகவே அது கருதப்படுகின்றது. சமூகத்தின் அத்திவாரமான குடும்பத்திலிருந்து ஆரம்பித்து முழுச் சமூகக் கட்டமைப்பையும் அது அழித்து விடுகிறது. வரம்பு மீறிய ஆண், பெண் கலவிக்கும் திருமணத்துக்குப் புறம்பான பாலுறவுக்கும் அல்குர்ஆன் விதிக்கும் சட்ட ரீதியான தண்டனை பகிரங்கமான 100 கசையடிகளாகும். வரம்பு மீறிய பாலுறவு சமூகத்துக்கு ஏற்படுத்தும் தீங்கு எந்த அளவுக்கெனில், ஆதிகாலத்தில் குற்றவாளிகள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது (The Bible, Deut. 22: 23-24). எனினும், அல்குர்ஆன் கல்லெறிந்து கொல்லும் தண்டனையை விதிக்கவில்லை. பல முஸ்லிம் அறிஞர்களும் கல்லெறிந்து கொல்வதை முற்றாக நிராகரித்திருக்கின்றனர்.

விபசாரக் குற்றத்தின் பாரதூரத் தன்மை, அதனோடு தொடர்புடைய மானபங்கம் என்பன காரணமாக, அக்குற்றத்தை நிரூபிப்பதற்கு நான்கு சாட்சிகள் நடந்தது பற்றி விளக்கமாக நீதிமன்றத்தில் சாட்சி கூற வேண்டும். இச்சாட்சிகள் நால்வரும் புத்தி சுவாதீனமுள்ள, நம்பத்தகுந்த, வயதுவந்த முஸ்லிம்களாக இருக்க வேண்டும். குற்றஞ்சாட்டப் பட்டவரின் கௌரவத்தையும் அந்தரங்கத்தையும் பாதுகாப்பதற்காகவே இவ்வாறு நான்கு சாட்சிகளின் தேவை விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, வரம்பு மீறிய பாலுறவும் விபசாரமும் சமூகத்தின் கரிசனைக்குரியவை என்பதை உணர்த்துவதும் இதன் ஒரு நோக்கமாகும். நம்பத்தகுந்த நான்கு சாட்சிகள் குற்றத்தை நிரூபிக்காதவரை அனைவரும் நிரபராதிகளாகவே கருதப்பட வேண்டும். நம்பத்தகுந்த சாட்சிகள் நான்கு பேருக்குக் குறைவாக இருப்பின் அவர்கள் கூறும் சாட்சி செல்லுபடியாகாது. இந்நிலையில் DNA சோதனைகளின் முடிவைச் சான்றாக ஏற்றுக் கொள்ளலாமா என்பது பற்றிச் சட்டவியல் அறிஞர்கள் தீர்மானிக்க வேண்டும். நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகளின் முன்னிலையில் நிகழ்த்தப்படும் திருமணத்துக்குப் புறம்பான பாலுறவு, சமூகத்தில் பகிரங்கமாகவே தீமையைப் பரப்பும் ஒரு செயலாக அமைகிறது. இரகசியமான முறையில் தமது தனிப்பட்ட சிற்றின்ப ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதாக அது அமையாது.

மேலும், திருமணத்துக்குப் புறம்பான பாலுறவானது திருமண உடன்படிக்கையை முறிக்கும் செயலாகவும் அமைகிறது. ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெறும் முதற்தடவைத் திருமணங்களுள் பாதியளவு இரண்டு வருடங்களுக்குள்ளேயே விவாகரத்தில் முடிவடைகின்றன. இதற்குப் பிரதான காரணம், தம்பதியரில் ஒருவரின் திருமணத்துக்குப் புறம்பான காதல் தொடர்புகளாகும். பலர் பைபிளுக்கோ அல்குர்ஆனுக்கோ செவி

சாய்ப்பதில்லை. 'விபசாரத்தில் ஈடுபடாதீர்' என பைபிள் கூறுகிறது. 'விபசாரத்தை நெருங்காதீர்' என அல்குர்ஆன் கூறுகிறது. அது சட்ட விரோதமானது மட்டுமன்றி அதற்கு வழிகோலும் அனைத்தையும் நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையே இது குறிக்கிறது. விபசாரத்திற்கான அணுகுமுறைகள் அனைத்தும் (நாள் குறித்து உறவாடுதல் (dating), மனதைக் கிளறிவிடும் ஆடைகள், நிர்வாணம், ஆபாசப் பேச்சு, ஆபாசப் படங்களும் திரைப்படங்களும் முதலியன) இங்கு கண்டிக்கப்படுகின்றன. பார்ப்பவர்களின் தூண்டுதல்களிலிருந்தும் சிற்றின்ப ஆசைகளிலிருந்தும் பாதுகாக்கும் வகையிலேயே ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆடை ஒழுங்கு முறைகள் விதியாக்கப் பட்டுள்ளன. சில ஆண்கள் சுய கட்டுப்பாட்டை இழந்து பெரும்பாவத்தில் வீழ்வதோடு சில வேளைகளில் வல்லுறவிலும் ஈடுபடுகின்றனர்.

நதாலி என்ற 19 வயதுடைய இரண்டாம் வருடக் கல்லூரி மாணவி தனது திரிசங்கு நிலையைப் பின்வருமாறு விளக்குகிறாள்.

> நானும் எனது பெற்றோரும் பேசி வரையறுக்காத ஒரு விதிமுறையின் கருணையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதாவது, எமக்கிடையே ஆழமான கேள்விகளு மில்லை; உண்மையான பதில்களுமில்லை. என் வாழ்க்கை எப்படிப் போகிறது என்பதை அறிந்துகொள்ள அவர்கள் உண்மையாக விரும்புவதில்லை. அதேவேளை, என்னால் அவர்களுக்குக் கூறவும் முடியாது. மரபு நெறி சார்ந்த ஒழுக்கங்களைக் கொண்ட ஒரு நல்ல பெண்ணாக நான் இருக்கிறேன். உண்மையில் என்னை நட்புறவு முறையில் காதலிக்கக்கூடிய ஒருவரைத் தேடிக்கொள்வதே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நாள் குறித்து ஓர் ஆணுடன் தனியே சந்தித்து உறவாடுவதை (dating) நான் விரும்புகிறேன். முதற்சில சந்திப்புக்கள் மகிழ்ச்சியூட்டுவனவாக இருக்கும். அதன் பின்னர்தான் நெருக்கடி ஏற்படுகிறது. மதுபானமும் கஞ்சாவும் பயன்படுத்தப் படுகின்ற ஒன்றுகூடல்களுக்கு நான் அழைக்கப்படுகிறேன். அவன் அழைக்கும் போதெல்லாம் நான் அவனோடு படுக்கைக்கு வருவேன் என ஆண் நினைக்கிறான். "நீ அவ்வாறு வந்தால் உலகமே உன்னோடு சேர்ந்து புன்னகைக்கும். நீ வர மறுத்தால் தனித்துப் போய் அழ நேரிடும்" என அவர்கள் கூறுகிறார்கள். எனவே, நான் நேர்மை நிறைந்தவளாயும் கண்ணீர் வடிப்பவளாயும் இருக்கிறேன்.
>
> (Faber and Mazlish, 1982)

இப்போக்கின் அழிவு ரீதியான விளைவு என்னவெனில், பிள்ளைகளால் நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிய முடியாமல் இருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவில் எயிட்ஸும் போதைப் பொருட்களும் வன்முறையும் பெரும் பிரச்சினைகளாக இருக்கின்றன. நல்ல பண்புகளைக் கற்றுக் கொடுக்கும் தமது பணியினை பள்ளிக் கூடங்கள் மீண்டும் தொடங்காத வரை இப்பிரச்சினைகளுள் எதனையும் ஒழிக்க முடியாது. பெற்றாரின் வழிகாட்டலோடு இசைந்து செல்கின்ற ஒழுக்கச் சூழலொன்றினைப் பள்ளிக்கூடப் பாடவிதானம் உருவாக்க வேண்டும். ஓர் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் வைத்தியர்கள், ஆலோசகர்கள், காவல் துறையினர், சமூக சேவகர் கள் ஆகியோரைக் கொண்ட ஒரு சேனையை விட நற்பண்புகளை மீளுறுதி செய்து நடைமுறைப்படுத்தும் துணிகரமான பள்ளிக்கூடங்கள் மேம்பட்டு நிற்கின்றன.

பாலியல் தொடர்பான விடயங்களில் போதனையை விட மனப்பாங்குகளே முக்கியமானவை. பாலியல் தொடர்பாகச் சமூகத்தின் உண்மையான மனப்பாங்கு யாது? ஒழுக்கம் பற்றிய எமது கருத்துப் படிவம் யாது? சமூகம் என்ற வகையில் எம்மிடையே ஒழுக்க ரீதியில் சிறந்த முன்மாதிரிகளும் இல்லை. இந்நிலையில்பொது மக்களிடையே காணப்படும் முரண்பட்ட தன்மைகளைக் கண்டு, சிந்திக்கும் திறனுள்ள இளைஞர்கள் மனக்குழப்பம் அடைந்துள்ளனர். ஒரு பக்கத்தில் சமூகமானது பாலியல் பற்றியே

சிந்திப்பதோடு பண மோகம் கொண்டதாக இருக்கிறது. பாலியல் உணர்வுகள் கேலிக்கைக்கும் உல்லாசத்துக்கும் உரியனவாகவே திரைப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றன; விளம்பரப் பலகைகளில் பெரிதாக்கிக் காட்டப்படுகின்றன. மேலும், வர்த்தக ரீதியில் கவர்ச்சியூட்டிச் சிக்க வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மறுபுறத்தில், திருமணத்துக்கு முந்திய பாலுறவு தவிர்க்கப்பட வேண்டும் எனத் தான் நம்புவதாக அதே சமூகம் பிரகடனம் செய்கிறது. இந்நிலைமை மோதலையும் உளத்தகைப்பையும் ஏற்படுத்துகிறது. பகிரங்கமாகப் பாலுணர்வைத் தூண்டும் விடயங்களைச் சமூகம் அனுமதிக்குமாயின், தனிப்பட்ட முறையில் நடக்கும் துஷ்பிரயோகங்களையும் அனுபவிப்புக்களையும் அதனால் தவிர்க்க முடியாது. இன்றைய வாலிபர்கள் பலர் விடுதலைக் கருத்துக்களைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவற்றின்படி காதலிப்பது என்பது பொறுப்புணர்வு பற்றிய எவ்வித சிந்தனையுமில் லாமல் எவருடனும் பாலுறவு கொள்வதையே குறிக்கிறது. இது பாலியல் தொடர்பான போராட்டங்களுக்கும் விவாகரத்துக்கும் வழி வகுக்கிறது.

இப்றாஹீமிய வழிமுறைகள் வரம்பற்ற ஆண், பெண் உறவையும் விபசாரத்தையும் தடை செய்கின்றன

இன்றைய இளம் சந்ததியினரில் பின்வரும் தொடர் வரிசை முற்றாகவோ பகுதியாகவோ காணப்படுகிறது.

காதலன்–காதலி ⟶ தூண்டுதலும் கவர்ந்திலுத்தலும் ⟶ திருமணத்துக்கு முந்திய பாலுறவு ⟶ கன்னித் தன்மையையும் கௌரவத்தையும் இழத்தல் ⟶ தேவையற்ற கர்ப்பங்கள் ⟶ (கருச்சிதைவு அல்லது உரிய காலத்துக்கு முந்திய கட்டாயப்படுத்தப்பட்ட திருமணம் அல்லது சட்டத்துக்குப் புறம்பான குழந்தைகளும் அதனைத் தொடர்ந்து தத்தெடுத்தலும்) ⟶ வறுமையும் இல்லாமையும் ⟶ குடும்பப் பிணைப்புக்கள் முறிதல் ⟶ நோய்கள் ⟶ மரணம் !

பலரோடும் பாலுறவு கொள்ளும் ஒருவருக்கு கொனோரியா, சிபிலிஸ், ஹேர்பிஸ் அல்லது எயிட்ஸ் நோய் தொற்றலாம். அவர் இந்நோயை அப்பாவியான தனது வாழ்க்கைத் துணைக்கு வழங்கலாம். மனைவி கர்ப்பிணியாக இருப்பின் அந்நோய் அவர்களுடைய பிள்ளைக்கு நிரந்தரமான தீங்கை விளைவிக்கும். அக்குழந்தை குருடாகவோ ஊனமுற்றதாகவோ பிறக்கலாம். எயிட்ஸ் தொற்றியிருந்தால் அம்மனிதன் தனது மனைவியினதும் பிள்ளையினதும் மெதுவான ஆனால் வேதனை மிக்க சாவுக்குப் பொறுப்பாளியாவான். அவனுக்கும் அதே கதி தான் ஏற்படும்.

திருமணத்துக்குப் புறம்பான பாலுறவு விவகாரத்தில் பிள்ளைகளும் சம்பந்தப்படுமாயின் பெரும் அனர்த்தம் ஏற்படும். ஒரு மனிதன் வேறு பெண்களினூடாகவும் பிள்ளைகளைப் பிறக்கச் செய்துவிட்டு அப்பெண்கள் தமது சட்டபூர்வமான மனைவியராக இல்லாத காரணத்தினால் அப்பிள்ளைகளைப் பொறுப்பேற்க மறுக்கலாம். அவனது இவ்வாறான ஏமாற்று நடவடிக்கையினால் பாதுகாப்பும் கண்ணியமும் உறுதிப்பாடும் மிக்க இல்லமொன்றில் வளரும் உரிமை அந்தப் பிள்ளைகளுக்கு மறுக்கப்படுகிறது. அதே போன்று தனது கணவனுக்குத் தெரியாமல் வேறு ஒருவருடன் பாலுறவு கொள்வதன் மூலம் ஒரு மனைவி இன்னொருவருடைய பிள்ளையைக் கர்ப்பத்தில் கொண்டிருக்கலாம். அவள் இவ்வுண்மையை அனைவரிடமிருந்தும் மறைத்தாலும் அதனைத் தன் மனச்சாட்சியிடமிருந்து மறைக்க முடியாது. அத்தோடு அந்தப் பிள்ளைக்கும் தனது உண்மையான தந்தையையோ தந்தை வழி உறவினர்களையோ தெரியாமல் போய்விடும். உண்மையான தந்தைக்கும் தன் பிள்ளைக்குரிய தந்தையின் பொறுப்பை நிறைவேற்ற முடியாமல் போய்விடும். அப்பெண்ணின் கணவன் ஏமாற்றப்படுவதோடு, அவன் உண்மையை அறியாமலேயே இன்னொருவரின் பிள்ளை

விடயத்தில் தந்தையின் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான். அவளுடைய ஏமாற்றுச் செயல்களால் தமது உண்மையான குடும்பத்தினரை அறிந்து கொள்ளும் அடிப்படை உரிமையை அனைவரிடமிருந்தும் பறித்து விடுகிறாள். ஏமாற்றப்பட்ட தந்தையோ குழந்தையோ குருதியை ஒப்பிட்டு அல்லது DNA சோதனையின் மூலம் உண்மையை அறிந்து கொள்ளக்கூடும். இவ்வாறான பெண் எயிட்ஸ் போன்ற நோய்களைப் பெற்று அவற்றைப் பரப்புவதோடு தனது கணவனதும் பிள்ளைகளதும் உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். திருமணமான நபரொருவரின் திருட்டுத்தனமான தொடர்புகள் எப்போதாவது ஒரு நாள் கண்டு பிடிக்கப்படும். இது அனர்த்தங்களுக்கும் விவாகரத்துக்கும் வழிகோலும். அத்தோடு, பிள்ளைகளின் மீதும் குடும்பம், சமூகம் என்பவற்றின் மீதும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

இஸ்லாத்தில் விபசாரத்திற்கான தண்டனைகள் உத்தியோகபூர்வமாக இஸ்லாமிய சட்டங்களைப் பிரயோகிக்கும் ஒரு நீதி மன்றத்தினால் மாத்திரமே விதிக்கப்பட முடியும். தனியாட்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொள்ள முடியாது; அவ்வாறு எடுத்துக்கொள்ளவும் கூடாது. அவர்கள் தேவைப்படும் சான்றுகளுடன் உரிய அதிகாரிகளையே நாட வேண்டும். துரதிர்ஷ்ட வசமாகத் தமது புதல்வியர் திருமணத்துக்கு முன்பே கர்ப்பமடைந்த காரணத்தால் அப்பெண்களையும் சில வேளைகளில் அவர்களது காதலர்களையும் சில தந்தையர் கொலை செய்து விடுகிறார்கள். தமது கௌரவத்தைக் காப்பதற்காகச் செய்யப்படும் இக்கௌரவக் கொலைகளுள் சில வெறும் சந்தேகத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கூடிய சுதந்திரம் இருப்பதனால் சம்பந்தப்பட்ட ஆண் தப்பிக் கொள்கிறான்.

தமது சமவயதினரும் ஊடகங்களும் கூறுவனவற்றுக்குச் செவிமடுத்து அவற்றுக்கு ஏற்ப இணங்கிப் போகுமாறு பதின்மவயதினரை வற்புறுத்துகின்ற சமூக ரீதியான அழுத்தங்கள் பல இருக்கின்றன. அவற்றுக்குப் பதிலாக அவர்கள் தம் சொந்த மனச்சாட்சிக்குச் செவிமடுத்தால் இப்பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். திருமணத்துக்கு முன்பே பாலுறவுச் செயற்பாடுகளைப் பரீட்சித்துப் பார்ப்பவர்கள், அது பெறுமதியற்றது என்பதைக் காலங்கடந்து உணர்ந்து கொள்வர். ஒரு சில வினாடிகளின் இன்பத்துக்கு மாற்றீடாக வாழ்நாள் முழுதுமான பிரச்சினைகளையும் சோகங்களையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர். அவர்கள் தம் வாழ்நாளில் மேற்கொண்ட மிக மோசமான தீர்மானம் அதுவாக இருக்கலாம். அத்தோடு, இறுதித் தீர்ப்பு நாளில் அவர்கள் தம் செயல்களுக்காக இறைவனுக்குப் பதில் கூறியே ஆக வேண்டும்.

விபசாரத்துக்கும் தகாத பாலியல் உறவுக்கும் எதிரான சட்டரீதியான தண்டனைகளுக்குரிய நியாயங்கள்

தகாத பாலுறவையும் விபசாரத்தையும் குற்றச்செயல்களெனக் கருதுவது நவீன செவிகளுக்கு வினோதமானதாகத் தோன்றினாலும் இஸ்லாம் அவ்வாறே கருதுகிறது. மனித வாழ்விலும் சமூகத்திலும் இச்செயல்கள் தீங்கை ஏற்படுத்துகின்றன என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இவ்விடயத்தைப் புரிந்து கொள்வதற்கு மானிட இயல்பு பற்றிய ஆழமான விளக்கமொன்று தேவைப்படுகிறது. இது தொடர்பாக இறைவெளிப்பாடு, பகுத்தறிவு, இயற்கை மற்றும் சம்பந்தப்பட்ட செயல் ஆகிய நான்கு அம்சங்களின் கீழ் நாம் நோக்குவோம்.

சமூகத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்டுவதே தண்டனைகள் தொடர்பான சட்டங்களின் பிரதான இலக்காகும். ஒரு குற்றச் செயலானது உலகப்பொருட்களுடன் அல்லது மனிதக் கொலையுடன் தொடர்புடையதாயின் உண்மையை நிரூபிப்பதற்கு இஸ்லாம் இரண்டு சாட்சிகளையே வேண்டி நிற்கிறது.

எனினும், ஒரு குற்றம் விபசாரத்தோடு (காமம், ஆசை என்பவற்றோடு) சம்பந்தப்பட்ட தாயின் நான்கு சாட்சிகள் தேவைப்படுகின்றன. இது ஏன்? இங்கு பிரச்சினை தனிப்பட்ட முறையில் பாவம் செய்யப்படுவதல்ல - சமூகத்தில் பகிரங்கமாக, ஆகக்குறைந்தது நான்கு பேர் முன்னிலையில்- செய்யப்படுவதே. இவ்வாறு பகிரங்கமாகப் பாவஞ்செய்வது தீமைகளும் குற்றங்களும் பரவுவதற்கு வழியமைக்கிறது.

தீமையை ஒடுக்குவதற்கும் ஒருவருடைய அந்தரங்கத்தையும் கௌரவத்தையும் பாதுகாப்பதற்குமிடையில் ஒரு சமநிலை பேணப்பட வேண்டும். மானிட ஆசையொன்றை நிறைவு செய்து கொள்வதற்காக இரகசியமாகப் பாவஞ்செய்வதற்கும் மக்கள் மத்தியில் தீமையைப் பரப்பி அவர்களுடைய கௌரவத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விடும் விதத்தில் பகிரங்கமாகப் பாவஞ்செய்வதற்கும் இடையில் கணிசமான வித்தியாசம் உண்டு. இரண்டாவது கலீபா உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) அவர்களது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது. கலீபா அவர்கள் ஒரு வீட்டைக் கடந்து செல்லும் போது அவ்வீட்டினுள் சிலர் மது அருந்திவிட்டுப் பாடிக்கொண்டிருப்பதைச் செவியுற்று அது பற்றிப் பரிசீலிப்பதற்காக அவ்வீட்டின் சுவரில் ஏறினார். அங்கிருந்தவர்களுக்கெதிராக அவர் வழக்குத் தொடர எத்தனித்த போது தமது வீட்டுச் சுவரில் ஏறித் தம்மை உளவு பார்ப்பதற்குக் கலீபாவுக்கு அதிகாரமில்லை என அவர்கள் வாதிட்டனர். தமது தவறை உணர்ந்த கலீபா, அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. விபசாரத்தைப் பொறுத்தமட்டில் சாட்சிகள் நான்கு பேருக்குக் குறைவாக இருப்பின் அவர்கள் தாம் கண்டது பற்றி எதுவும் பேசாமலிருப்பதே மேலானது. இல்லாவிடில், சமூகத்தில் அவதூறும் புரளியும் ஏற்படுத்தியதற்காக அவர்கள் தண்டிக்கப்படக் கூடும். பாவங்களையும் குற்றச்செயல்களையும் ஊக்குவிப்பதை இஸ்லாம் தடுக்கிறது. ஏனெனில், அவை பரிச்சயமானவையாக மாறிவிட்டால் சமூகம் படிப்படியாக அவற்றை ஏற்றுக்கொள்ளவும் சகித்துக் கொள்ளவும் பழகிவிடும்.

பாலுறவு மூலம் பரவும் நோய்கள் (STDs)

பதின்மவயதினர் ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக் கொள்வதன் மூலம் Mononucleosis என்ற நோய் தொற்றலாம். அது ஈரலைத் தாக்குவதனால் நிவாரணம் பெறுவதற்குப் பல வாரங்கள் ஓய்வெடுக்க நேரிடும். பாலுறவுத் தொடர்புகளினால் பரவும் ஏனைய நோய்கள் பின்வருமாறு:

- கொனோரியா (Gonorrhea) - இது ஆண்களிலும் பெண்களிலும் மலட்டுத் தன்மையை ஏற்படுத்தக் கூடியது.
- பாலுறுப்புக்குரிய ஹேர்பிஸ் (General Herpes) - இது ஒருவருடைய பாலுறுப்புப் பகுதியில் வேதனை தரும் கொப்புளங்களை ஏற்படுத்தும். இக்கொப்புளங்கள் ஆயுள் முழுவதும் மீண்டும் மீண்டும் உருவாகிக் கொண்டே இருக்கும்.
- சிபிலிஸ் (Syphilis) - இது மனித உடலின் எல்லாப் பகுதிகளையும் சேதப்படுத்தக் கூடும்.
- எயிட்ஸ் (AIDS) - இது வேதனை மிக்க, மந்த வேக மரணத்திற்கு வழி வகுக்கும். நவீன சிகிச்சைகள் எயிட்ஸின் பாதிப்பை பல வருடங்களுக்குத் தாமதமாக்கலாம்.

ஒருவருக்கொருவர் விசுவாசமாக நடந்து கொண்டு வெளி எவருடனும் பாலுறவு வைத்துக் கொள்ளாத தம்பதியினர் மேக நோய்களால் பாதிக்கப்படுவதில்லை. பலரோடும் உடலுறவு கொள்ளும் திருமணமாகாதவர்களும் திருட்டுத்தனமாகப் பிறரோடு பாலுறவு கொள்ளும் திருமணம் முடித்தவர்களுமே பாலுறவு மூலம் பரவும் நோய்களைப் (STDs) பரப்புகின்றனர். 1940 களில் கொனோரியாவும் சிபிலிஸும் மாத்திரமே பாலுறவினால் பரவும் நோய்களில் நன்கு அறியப்பட்டனவாக இருந்தன. இப்போதோ, சில வருடங்களுக்

கொரு முறை புதுப்புது நோய்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அவற்றுக்குச் சிகிச்சை செய்வதும் வரவரக் கஷ்டமாகிக் கொண்டே போகிறது. எயிட்ஸுக்கும் ஹேர்பிஸுக்கும் உகந்த சிகிச்சை எதுவுமே இல்லை.

பகிரங்கமாகப் பாவஞ்செய்யும் சமூகங்களில் இயற்கைக்கு மாறாக நடந்து கொள்வதைத் தடுக்கும் வழியாக இந்நோய்கள் விளங்குகின்றன என்றுகூடக் கருதலாம்..

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ஒரு சமூகத்தில் பாலியல் ரீதியான வழிகேடுகள் மலிந்து அவை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்படும் போது கொள்ளை நோயும் அவர்களது முன்னோர்கள் ஒருபோதும் அறிந்திராத வேறு நோய்களும் தோன்றி அவர்களிடையே பரவத் தொடங்கும். (இப்ன் மாஜாஹ்)

திருமணத்துக்கு முந்திய பாலுறவு காரணமாக ஏற்படக்கூடிய சுகாதார ஆபத்துக்களில் பாலியல் ரீதியான படுகாயங்கள், கருப்பைக் கழுத்துப் புற்று நோய், தேவையற்ற பதின்ம வயதுக் கர்ப்பங்கள் என்பன உள்ளடங்கும்.

பாலுறுப்புக்கள் போதியளவு முதிர்ச்சியடையாத நிலையில் பாலுறவு நிகழும் போது பலவிதமான காயங்கள் ஏற்படலாம். இவ்வாறான காயங்களுட் சில நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும். மிக இள வயதிலேயே பலருடன் பாலுறவு கொள்வது கருப்பைக் கழுத்துப் புற்று நோய்க்கு வழி வகுக்கலாம் என அறியப்பட்டுள்ளது.

1960 களில் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட பாலியல் ரீதியான புரட்சி சுகாதார செலவினத்தைப் பெருமளவு அதிகரிக்கச் செய்துள்ளது. 1985 இல் மாத்திரம் 10 மில்லியன் பேர் chlamydia என்ற தொற்றினாலும் 2 மில்லியன் பேர் கொனோரியாவினாலும் 1 மில்லியன் பேர் மேக நோய் சார்ந்த உன்னிகளாலும் 1/2 மில்லியன் பேர் பாலுறுப்பு தொடர்பான ஹேர்பிஸ் நோயினாலும் 90 ஆயிரம் பேர் சிபிலிஸ் நோயினாலும் பாதிக்கப் பட்டிருந்தனர். எயிட்ஸ் நோயின் பரவல் எமது அச்சங்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

கருப்பைக் கழுத்துப் புற்று நோய்க்கான ஆபத்துக் காரணிகளுள் பலரோடு பாலுறவு கொள்வதும் புகைத்தலும் அடங்கியுள்ளன. அதிகளவு ஆபத்தை எதிர் கொண்டுள்ள பெண்கள் ஒழுங்கு தவறாமல் அதற்குரிய சோதனையைச் (Pap smear test) செய்து கொள்ளல் வேண்டும். (Cancer Research, UK)

எந்தவொரு அபிவிருத்தியடைந்த நாட்டையும் விட ஐக்கிய அமெரிக்காவில் தான் குணப்படுத்தப்படக்கூடிய பாலுறவினால் பரவும் நோய்கள் மிகக் கூடிய வீதத்தில் காணப்படுகின்றன. மூன்று மில்லியன் பதின்மவயதினர் உட்பட சுமார் 12 மில்லியன் பேர் வருடந்தோறும் இந்நோய்களினால் பீடிக்கப்படுகின்றனர்.

(Institute of Medicine, 1997)

காதலன்- காதலி உறவுகள்

மிக இள வயதுடைய பிள்ளைகள் தாம் யாருடன் விளையாடுகிறோம் என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை. எனினும், ஏறக்குறைய 8 வயதைத் தாண்டிய பின்னர் ஆண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளுடனேயே விளையாட விரும்புவார்கள். அதே போன்று பெரும்பாலான பெண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளுடனேயே விளையாட விரும்புவர். 10 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் சிறந்த நண்பர்கள் என்ற உறவைப் பிள்ளைகள் ஏற்படுத்திக் கொள்வர். இந்த நட்புறவு பதின்ம வயதுகளினூடாகவும் நீடிக்கும். (D'Oyen, 1996) ஓர் ஆண் வளர்ந்து பெரியவனாகும் போது ஏனைய

ஆண்களுடனான அவனது நட்புறவுகள் தொடர்ந்தும் முக்கியத்துவம் பெறுகின்றன. குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படாவிட்டால் அவன் தனது தந்தை, சகோதரர்கள், பெற்றோரின் சகோதரர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் ஆகியவர்களோடும் பிற்காலத்தில் தனது வளர்ந்த புதல்வர்களோடும் நெருங்கிய உறவினைப் பேணிக்கொள்கின்றான். திருமணமான பெண்ணொருத்தி, தனது தாய், சகோதரிகள், நெருங்கிய பெண் உறவினர்கள், அயலவர்கள் அல்லது வேறு பெண்களுடன் தான் வைத்துள்ள நட்புறவின் மூலம் தொடர்ந்தும் ஆறுதல் பெறுகிறாள்.

குற்றமற்ற நட்புறவுகள் குறிப்பிட்ட வரையறைகளுக்குள் இருக்கும் வரை அனுமதிக்கப்படக் கூடியவையே. 'மஹ்ரம்' (ஒருவரை ஒருவர் திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாத) அல்லாத ஓர் ஆண் பிள்ளையும் பெண் பிள்ளையும் பிரத்தியேகமான இடமொன்றில் தனியாக நேரத்தைக் கழிக்கக் கூடாது. அத்தோடு அவர்கள் தமது உடையிலும் நடத்தையிலும் தன்னடக்கமும் நாணமும் உள்ளவர்களாக இருப்பதோடு, தமது உரையாடலைப் பண்பான விடயங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். 'மஹ்ரம்' அல்லாத ஓர் ஆணும் பெண்ணும், பல்வேறு சமூகங்களில் காணப்படுவது போன்று நாள் குறித்து தனியே உறவாடுவதையும் (dating) மிக நெருக்கமாகப் பழகுவதையும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை. குடும்ப ஒன்று கூடல்களும் மஸ்ஜிதில் இடம்பெறும் செயற்பாடுகளும் நட்புறவு ரீதியில் இடம்பெறும் வீட்டு விஜயங்களும் பண்பாட்டு வரம்புகளுக்குள் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் பழகிக் கருத்துப் பரிமாறிக் கொள்வதற்கு நல்ல வாய்ப்பினை வழங்குகின்றன.

இளைஞர்களும் யுவதிகளும் நாள் குறித்து சோடியாக வெளியே உலாச் செல்வதும் திருமணம் செய்ய முன்னர் ஒருவர் பல காதலர் அல்லது காதலிகளைக் கொண்டிருப்பதும் சில சமூகங்களில் பொதுவாகக் காணப்படுகின்றது. திருமணத்துக்கு முன்னரே பாலுறவுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பழகினால் நிறைவான திருமண வாழ்வொன்றை அமைத்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என அவர்கள் தவறாக நம்புகின்றனர். சரியான துணையைத் தேர்ந்தெடுக்க முன்னர் வித்தியாசமான பலருடன் உறவாடிப் பார்க்க வேண்டுமெனச் சிலர் நினைக்கின்றனர். சிலரது நோக்கம் வெறுமனே கேளிக்கையின்பத்தை அனுபவிப்பதாகும்.

சில வேளைகளில் திருமணம் செய்யாமலேயே அவர்கள் கணவன், மனைவியாய் இணைந்து வாழ்கின்றனர். இது 'கூடி வாழ்தல்' (living together) என அழைக்கப்படுகிறது. அவர்கள் மணமுடிக்கத் தீர்மானிக்க முன்னரே பிள்ளையொன்றைப் பெற்றுக் கொள்ளவும் கூடும். சில வேளைகளில் திருமணம் செய்யாமலேயே இருந்தும் விடுவதும் உண்டு.

இதனால் ஏற்படும் பாரதூரமான பிரச்சினைகள் காரணமாக, இவ்வாறான நடத்தை பெரும்பாலான சமயங்களினால் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறு நடந்து கொள்வதற்கு வாலிபர்களைத் தூண்டும் அழுத்தங்கள் வலுப்பெற்று வருகின்றன. இள வயதினர் தமக்கென ஒரு காதலனையோ காதலியையோ கொண்டிரா விட்டால் அவர்களிடம் ஏதோ குறை இருக்கிறது என்று மக்களைச் சிந்திக்க வைப்பதற்குத் தொலைக்காட்சியும் வர்த்தக விளம்பரங்களும் திரைப்படங்களும் இண்டர்னெட்டும் பள்ளிக்கூடப் பாடநூல்களும் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. 9 வயதேயான இளம் மாணவர்கள்கூட தாம் எதிர்ப்பாலாருடன் செய்த சல்லாபங்கள் பற்றிப் பெருமையடித்துக்கொண்டு தாம் வளர்ந்து விட்டவர்கள், கிளர்ச்சி தரும் வாழ்க்கை நடத்துபவர்கள் எனக்காட்ட முயல்கின்றனர். தம்மோடு சேராதவர்கள் முட்டாள்கள் என்றும் பத்தாம்பசலிகள் என்றும் உணர்த்த முயல்கின்றனர். ஆனால், இப்படியான பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னர் அவர்களுக்கு உண்மையில் என்ன நடக்கப் போகிறது?

மிக இள வயதிலேயே எதிர்ப்பாலாருடன் தீவிரமாக ஈடுபாடு கொண்ட இளைஞர்கள் பொதுவாகப் பிரச்சினைக்குரிய குடும்பங்களிலிருந்தே வருகின்றனர். ஒன்றோ அவர்களுடைய பெற்றோர் விவாக விலக்குப் பெற்றிருக்கலாம் அல்லது அவர்களுக்கு வீட்டில் அன்பும் கவனிப்பும் கிடைக்காதிருக்கலாம். எனவே, தம்மைத் தொட்டு முத்தமிட்டு, தம்மோடு சேர்ந்திருக்கக்கூடிய எதிர்ப்பாலாருடன் அவர்கள் நட்புறவை எதிர்பார்க்கலாம். இது ஆபத்தானது. ஏனெனில், அவர்களது உணர்வுகள் கட்டுக்கடங்காது போய், உரிய தயார் நிலையை அடைய முன்னரே பாலுறவுக்கு வழி வகுக்கும். இது அவர்களுடைய பிரச்சினைகளைப் பன்மடங்காக்கும்.

பதின்மவயதினர் திருமணத்துக்கு முன்பே காதலர்களையோ காதலிகளையோ வைத்திருந்தால், ஒரு முஸ்லிமின் பார்வையில் அவர்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பொருள் போன்று ஆகிவிடுகின்றனர். திருமணத்துக்கு முன்பே அவர்கள் பாலுறவில் ஈடுபடும் அளவுக்குச் சென்று விட்டால் தங்கள் கன்னித் தன்மையை இழந்து விடுகின்றனர். உலகம் முழுவதிலுமுள்ள சம்பிரதாயபூர்வமான பண்பாடுகள் பல திருமணத்தின் போது கன்னித் தன்மையை (குறிப்பாகப் பெண்கள் விடயத்தில்) வலியுறுத்துகின்றன. எனவே, கவனயீனமாக நடந்து கொள்ளும் பெண்கள் தம் கண்ணியத்தை இழப்பதோடு மரியாதைக்குரிய கணவன்மாரைப் பெற்றுக்கொள்வதும் அவர்களுக்குச் சிரமமாகி விடுகிறது. எனினும், இஸ்லாமானது ஆண், பெண் இருபாலாரினதும் சுய கட்டுப்பாடு, கற்பு ஆகிய இரண்டுக்கும் உயர்வானதும் சமமானதுமான பெறுமானத்தை வழங்குகிறது. இவ்வாறான பண்பாடுகளில் பெரும்பாலான பெற்றோர்கள் கட்டுப்பாடற்ற முறையில் பெண்களுடன் தொடர்பு கொண்டுள்ள, பல காதலிகளை வைத்திருந்த ஓர் இளைஞனுக்குத் தம் மகளைத் திருமணம் செய்து கொடுக்க மறுத்து விடுகின்றனர். அப்படியான ஒரு மனிதன் தன் மனைவியின் மீது விரைவிலேயே சலிப்படைந்து இன்னொரு பெண்ணை நாடக்கூடும். அல்லது தனது மனைவியை மதிக்காது மோசமாக நடத்தவும் கூடும்.

கருத்தடை முறைகள் தவறிப்போக வாய்ப்பிருப்பதனால் பாலுறவின் விளைவாக கர்ப்பம் ஏற்படலாம். ஒரு பெண் தகாத நடத்தை காரணமாகக் கர்ப்பமுற்றால் அது அவளுக்கும் அவளது குழந்தைக்கும் பெரிய அனர்த்தமாகி விடுவதோடு அவளது குடும்பத்துக்கும் அனர்த்தத்தை ஏற்படுத்திவிடும். தொழிற்படு குடும்பமொன்றினுள் வாழும் ஒரு முதிர்ந்த பெண்ணைப் பொறுத்தவரையில்கூட தாய்மை என்பது மலைப்பூட்டும் பொறுப்பொன்றாக இருக்கிறது. தந்தையின் பொறுப்புகளுக்குத் தயார்

நிலையை அடையாத 16 வயதுடைய பையனுடன் உறவு கொண்டு திருமணம் செய்யாமலேயே தாயான 14 வயதுச் சிறுமி தன் வாழ்க்கைக்கு முகங்கொடுக்க மிகவும் சிரமப்படுவாள். அவர்கள் இருவரும் தமது குடும்பத்தினரின் ஆதரவு இல்லாத நிலையில் இந்நிலைமைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர். அவர்களிருவரும் கல்வி ரீதியாகவோ மனவெழுச்சி ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ முதிர்ச்சியடைந் திருக்க மாட்டார்கள். எனவே, தமக்கும் தம் குழந்தைக்கும் நல்லதொரு வாழ்க்கையை வழங்க அவர்களால் முடியாது. அக்குழந்தையைப் பொறுத்தவரையில் இது ஓர் அநியாயமாகும். அதிகமான சந்தர்ப்பங்களில் அவ்விளைஞன் திகிலடைந்து குழந்தைக்குத் தந்தை தானென்பதை ஒப்புக்கொள்ள மறுக்கவும், அப்பெண்ணை விட்டு விலகிச் சென்றுவிட வும் கூடும். அதன் பிறகு அப்பெண் தன் குழந்தையோடு தனித்துப்போய் விடுவாள்; அக்குழந்தைக்கும் தந்தையின் அன்பும் ஆதரவும் கிடைக்காமல் போய்விடும். அப்படியான பிள்ளைகளது வாழ்க்கை அவலமானதாக இருக்கும். அவர்களுக்குத் தங்களது கல்வியைத் தொடர முடியாமல் போவதோடு தமது செலவுகளைச் சமாளிப்பதற்காக மகிழ்ச்சி தராத தொழில்களையும் செய்ய நேரிடும்.

முற்போக்குக் கொள்கையுடைய சமூகங்களில் வாழும் பெற்றோர்கள், தமது புதல்வியர் தொடர்பாகவும் பையன்களைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள விடாப்பிடியான ஆர்வம் தொடர்பாகவும் என்ன செய்ய முடியும்? தமது மகள் வளரும் போது அவள் பையன்கள் மீது கவனஞ் செலுத்துவதைப் பெற்றார் அவதானிக்கலாம். சிற்றின்ப ஆசை கொண்ட பையனொருவனைப் பற்றி அவள் பேசுவதையும் செவிமடுக்கலாம். திருட்டுத்தனமான உறவொன்று பற்றி அவள் பேசுவதை முதற்தடவையாகச் செவிமடுக்கும் போது பெற்றார் பதற்றமடையக்கூடும். தம் மகளின் மீது விருப்பங்கொண்டு அவளுடன் உடல் ரீதியான உறவொன்றை ஏற்படுத்திக் கொள்ள விளையும் அப்படியான ஒரு பையனைப்பற்றி நினைக்கும் போது பெற்றோருக்கு அருவருப்புத் தோன்றும்.

புதல்வியரின் உள்ளங்கள் தந்தையரின் பாசத்தால் நிரப்பப்பட வேண்டும். அத்தோடு, அவளுக்கு சுய மரியாதை, பொறுப்புணர்வு என்பன பற்றிக் கற்பிக்கப்படவும் வேண்டும். இவ்வாறு செய்தால், ஒழுக்கம் குறைந்த (ஹோர்மோன் தொழிற்பாடு கூடிய) ஆணொன்றை எதிர்கொள்ள நேரிடும் போது அவன் ஏற்படுத்தும் அழுத்தங்களுக்கு அவள் அடிபணியாமல் இருக்கலாம். மேலும் பெற்றாரோடு ஒளிவுமறைவின்றி உரையாட அவளைப் பழக்கியிருந்தால் தான் சந்திக்கும் பையன்களைப் பற்றி அவர்களிடம் மறைக்காது கூறுவாள். இரகசியத் தன்மை நீங்கும் போது பெற்றோரின் மனப்பயமும் தணியும். உரையாடற் கலையை அவளுக்குக் கற்பிப்பதன் மூலம் அவளை உடல் ரீதியாக ஆண்களிலிருந்து பாதுகாக்கலாம். ஏனெனில், மௌனமாக அவனுடைய கோரிக்கை களுக்கு இணங்கிப் போவதற்குப் பதிலாக "இதற்கு இணங்க முடியாது" எனக் கூறுவதற் குரிய தைரியமும் திறனும் அவளிடம் இருக்கும்.

பையன்களுடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது பற்றி நிலவும் தவறான கருத்துக்களைப் பெற்றார் தம் மகளுக்கு எடுத்துக் கூற வேண்டும். பெரும்பாலான சந்தர்ப் பங்களில் பையன்கள் பெண்களை ஏமாற்ற முயல்கின்றார்கள். அதே போன்று சில பெண் களும் பையன்களை ஏய்க்க முயற்சிக்கின்றனர். ஒரு பெண் பாலியல் தொடர்பான தன் ஆசைகளை நியாயப் படுத்துவதற்காகக் காதலிக்கத் தொடங்கலாம். பதின்மவயதுப் பெண்ணொருத்தி பையன்களின் இனிய காதல் வார்த்தைகளில் மயங்கிப் போவதற்கு இது ஒரு காரணமாக அமைகிறது. அவளைப் பொறுத்த மட்டில் காதல் வார்த்தைகள் மட்டுமே காதலுக்குப் போதுமானதாக இருக்கும். பையன்களைப் பொறுத்தவரையிலும் இதுவே உண்மையாக இருக்கும் என அவள் நினைப்பாள். ஆனால், ஓர் ஆண் பிள்ளை உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் வித்தியாசமானவன். அவன் வளர்க்கப்படும் முறையும் வித்தியாசமானது. ஒரு பையன் காதலுணர்வு இன்றியே பாலுறவு கொள்ள முடியும்.

பெண்கள் அருகில் இல்லாத வேளையிலும் அவன் பாலியல் ரீதியில் கிளர்ச்சியடைய முடியும். இந்நிலையில் அவன் தன் கிளர்ச்சியைத் தணித்துக்கொள்ள ஆள் தேடுவான். இச்சந்தர்ப்பத்தில் அவனைப் பொறுத்தமட்டில் 'அவள்' எவளாகவும் இருக்கலாம். இவ்வகையான இரட்டை நியமம் எவ்வித ஈடுபாடுமின்றி அவன் பாலுறவு கொள்ள அனுமதிக்கிறது. "இன்பம் பெறு; ஆனால், அவளை வீட்டுக்கு அழைத்து வராதே" என்பது தான் பையன்களுக்கு வழங்கப்படுகின்ற வழிகெடுத்தும் ஆலோசனையாக இருக்கிறது.

தான் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காமல் இருப்பதே ஒரு பெண்ணின் கடமையாகும். ஒரு பெண்ணைக் கருவியொன்றாகப் பயன்படுத்தாமலிருப்பது ஓர் இளைஞனின் கடமையாகும். காதலுக்கும் பாலுறவுக்கும் கண்டிப்பான விதிமுறைகள் இருக்கின்றன என்பதை இருபாலாரும் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு பெண் பையனொருவனைக் கேலி செய்து அவனது உணர்வுகளைக் கிளறி விடுவது கூடாது. அதே போல், ஒரு பையன் ஒரு பெண்ணுக்கு நெருக்கடி ஏற்படுத்தவும் கூடாது. ஒரு பையன் தனது தவறான சிற்றின்ப ஆசைகளைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவான். இதனால் அவளது தயார் நிலை பற்றியோ தனது பொறுப்புக்கள் பற்றியோ சிந்திக்காமல் அப்பெண் இடங்கொடுக்குமளவுக்கு அவன் அவளைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பான்.

பிள்ளைப் பருவத்தில் குழந்தை பெறுதல்: இஸ்லாத்தில் கருக்கலைப்பும் தத்தெடுத்தலும்

திருமணத்துக்கு முந்திய பாலுறவானது கர்ப்பத்தை விளைவிக்கக்கூடிய ஒரு வகையான பாலியல் துஷ்பிரயோகமாகும். பதின்மவயதினர் எத்தனை வகையான கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தினாலும் திருமணமாகாத பெண்களில் கணிசமான தொகையினர் கர்ப்பமுறத்தான் செய்கின்றனர். கர்ப்பமுற்ற பதின்மவயதினரைப் பொறுத்தமட்டில் இது வாழ்க்கையைப் பாழ்படுத்துவதாக அமைகிறது. உளவியல் ரீதியாக ஏற்படும் காயங்கள் ஒரு புறமிருக்க, அவள் இரு வகையான தீமைகளில் ஒன்றைத் தெரிவு செய்ய நேரிடும்: கருச்சிதைவு செய்வதா அல்லது சட்டத்துக்குப் புறம்பாகப் பிறந்த ஒரு குழந்தைக்குத் திருமணமாகாத தாயாகவே எப்போதும் இருப்பதா? இவை அரிதான நிகழ்ச்சிகளல்ல. ஐக்கிய அமெரிக்காவில் வருடந்தோறும் திருமணமாகாத பதின்ம வயதுடைய ஒரு மில்லியன் பெண்கள் கர்ப்பமடைகின்றனர்.

கர்ப்பமடையும் அமெரிக்கப் பதின்மவயதினரின் நிலைமை எப்படி இருக்கிறது? அவர்களுள் 50% மாத்திரமே உயர்பள்ளிப் படிப்பைப் பூர்த்தி செய்கின்றனர். அவர்களுள் 80%க்கு மேலானவர்கள் அரசாங்க உதவிப் பணத்தில் தங்கி வாழ்கின்றனர். இவர்கள் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதில் முன்னணியில் இருக்கின்றனர். இவர்களுடைய பிள்ளைகள் வளர்ந்த பின் பதின்மவயதிலேயே கர்ப்பமடைவதற்கான வாய்ப்பு 82% ஆக இருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவில் இந்தப் பதின்ம வயதுத் தாய்மாருக்கு நிதியுதவியும் சுகாதார வசதிகளும் வழங்குவதற்காக ஆண்டு தோறும் பில்லியன் கணக்கான டொலர்கள் செலவு செய்யப்படுகின்றன.

சட்ட விரோதமான குழந்தைகள் என யாருமில்லை. உண்மையில் இருப்பது சட்ட விரோதமான பெற்றோருக்குப் பிறந்த அப்பாவிக் குழந்தைகளே. (Weiss, 2007)

இறுதியில் அவன் ஒப்புக் கொண்டான்

நான் 1962இல் இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டிருந்த போது எனக்கு ஒரு முஸ்லிம் நண்பன் இருந்தான். அவன் அப்பகுதியிலுள்ள முஸ்லிம் அல்லாத யுவதிகளுடன் நாள் குறித்துத் தனியே உறவாடிக் கொண்டிருந்தான். அதன் தீங்குகள் பற்றி நான் எவ்வளவு வாதாடியும் பயனெதுவும் ஏற்படவில்லை. எனினும், தொடர்ந்து மூன்று வருடங்கள் அவ்வாறு பல்வேறு பெண்களுடன் உறவாடிய பின் அவன் என்னிடம் வந்து "உனக்குத் தெரியுமா? நீ திருமணமுடிக்கும் போது மிக மகிழ்ச்சியாக இருப்பாய். ஏனெனில், திருமணத்தன்று நீங்கள் இருவரும் கற்பிழக்காதவர்களாக இருப்பீர்கள். எனவே, அதுதான் நீங்கள் இருவரும் அனுபவிக்கப் போகின்ற மிக நெருக்கமான உறவாக இருக்கும். அது பெறுமதியானதும் மன நிறைவு தரக்கூடியதுமான ஒரு வெகுமதியாக அமையப்போகிறது. என்னைப் பொறுத்த வரையில் எனது மனைவியான வள் என்னோடு ஏற்கனவே படுத்துறங்கிய பெண்களைப் போன்ற இன்னொரு பெண்ணாகவே இருக்கப்போகிறாள். அவளோடு கிடைக்கப்போகும் நெருக்கம் சிறப்புக்குரியதாகவோ கண்ணியமான தாகவோ எனக்குத் தோன்றாது" எனக் கூறினான்.

கருக்கலைப்பு

தமது புதல்வி கர்ப்பமடைந்துள்ளாள் என்பதை அறிந்து கொண்ட பெற்றோர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண என்ன செய்யலாம்? குழந்தையின் தந்தையை இனங்காண்பதற்காக DNA சோதனை செய்யப்பட வேண்டுமென அவர்களது பகுத்தறிவு கூறும். பின்னர் அவனையே அப்பெண் மணமுடிக்கச் செய்து அவளை ஒரு கௌரவமான பெண்ணாக மாற்ற வேண்டும் என அவர்கள் நினைப்பர்.

திருமணமாகாமலே கர்ப்பமடைந்த பெண் தன்னால் தனியாகக் குழந்தையைப் பராமரிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டால் கருக்கலைப்பு செய்ய நாடுவாள். குழந்தை கருவில் பெரிதாக வளர முன்னரே முளையத்தைக் கொன்று அதனைக் கருப்பையிலிருந்து அப்புறப் படுத்தக்கூடிய வைத்தியர் ஒருவரை அவள் தேடுவாள்.

கருக்கலைப்பானது அங்கீகரிக்கப்படக் கூடிய ஒரு செயன்முறை எனச் சிலர் நம்புகின்றனர். கர்ப்பத்தின் முதற்சில மாதங்களில் கருவிலுள்ள குழந்தையை உண்மையான ஓர் ஆளாகக் கருத முடியாது என அவர்கள் நினைக்கின்றனர்.

எனினும், விந்து- முட்டையுடன் இணைந்த நேரம் முதல், உருவான கரு உயிருடனேயே இருக்கும். கருக்கட்டிய முட்டையை அமைதியாக இருக்க விட்டால் அது முழுமையான மனிதக் குழந்தையாக வளரும். அல்குர்ஆனில் உட்கிடையாகவும் ஹதீஸில் வெளிப்படையாகவும் கூறப்பட்டுள்ளபடி கருவிலுள்ள குழந்தைக்கு நான்காம் மாதம் வரை 'ரூஹ்' (ஆன்மா) வழங்கப்படுவதில்லை. 4 மாதங்கள் கடந்த பின் கருவிலுள்ள குழந்தை ஏதேனுமொரு காரணத்தால் இறந்தால் அல்லது அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டால், அக்குழந்தைக்குப் பெயரொன்று சூட்டப்படுவதோடு அதற்காகத் தொழுகை நடத்தப்பட்டு கண்ணியமான முறையில் அது நல்லடக்கம் செய்யப்பட வேண்டும்.

எல்லா மனித உயிர்களுக்கும் கருணையும் மரியாதையும் காட்டப்பட வேண்டுமென இஸ்லாம் போதிக்கிறது. (கொலை போன்ற பெருங்குற்றமொன்றை செய்திருக்கும் சந்தர்ப்பத்தில் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்படும் நிலைமையில் தவிர) ஒவ்வொரு மனிதனுக்கும் வாழும் உரிமை உண்டு. 'வாழ்வதற்கான உரிமை' என அழைக்கப்படுகின்ற இது இறைவன் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ள மிக அடிப்படையான உரிமையாகவும் இருக்கிறது. எனவே, சரியான காரணமின்றி கருவொன்றைக் கலைத்து விடுவது கொலைக்குச் சமமானது எனப் பெரும்பாலான முஸ்லிம் அறிஞர்கள் கருதுகின்றனர். ஏனெனில், இங்கு அநாதரவான மனித உயிரொன்று கொல்லப்படுகிறது.

ஒரு பெண்ணுடைய கர்ப்பம் தொடருமானால் அவளது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலையில் மாத்திரமே ஒரு பெண் கருக்கலைப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்பட முடியும். சில சட்டவியல் அறிஞர்களின் கருத்துப்படி கற்பழிப்பு நிகழ்ந்துள்ள நிலைமையிலும் இது அனுமதிக்கப்படலாம். ஏனைய சட்டவியல் அறிஞர்கள் இவ்வாறான கண்டிப்பான விதிமுறைகளை நான்காம் மாதத்திற்குப் பின்னரே பிரயோகிக்க வேண்டும் எனக் கருதுவதோடு முதல் 4 மாதங்களிலும் வேறு காரணங்களும் கவனிக்கப்படலாம் என்கின்றனர். எப்படியிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கருக்கலைப்புச் செய்வதை இஸ்லாம் ஊக்குவிப்பதில்லை. அத்தோடு, நான்காம் மாதத்தின் பின்னர் கருவைக் கலைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பின்வரும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் கருக்கலைப்பை அது அனுமதிக்கிறது: தாய்க்கு உயிராபத்து ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, குடும்ப கௌரவத்துக்கு ஏற்படும் பாரிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு, தாய்க்கும் குழந்தைக்கும் முழுக் குடும்பத்துக்கும் உளவியல் மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு. சில சிந்தனைப் போக்குகளின்படி குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் கருக் கலைப்பு அனுமதிக்கப்பட்டிருப்பினும் ஒரு குடும்பக் கட்டுப்பாட்டு முறையென்ற வகையிலும் எதிர்பாராத கர்ப்பமொன்றின் பொருளாதாரச் சுமையைத் தவிர்ப்பதற்காகவும் அதனைப் பயன்படுத்த முடியாது.

கர்ப்பமுற்ற பெண், குழந்தையைப் பெற்று வளர்க்கத் தீர்மானித்தால், அவள் சட்டத்துக்குப் புறம்பான குழந்தையின் தனிப் பெற்றாராக மாறுகிறார். இதன் விளைவாக திருமணமாகாத அந்தத் தாயும் தந்தையற்ற அவளது குழந்தையும் பாரிய கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

இஸ்லாத்தில் தத்தெடுத்தல்

திருமணத்திற்குப் புறம்பான பாலுறவைத் தடுப்பதற்குத் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்த பின்னரும் அப்படியான ஒரு பேரக் குழந்தை தம் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டால் அதன் தாயின் பெற்றார் என்ன செய்யலாம்? விவாகம் செய்யாமலே கர்ப்பமடைந்த யுவதிகளின் பெற்றோர்கள் தங்கள் மகளின் கண்ணியமற்ற நடத்தை காரணமாக

வெட்கத்தினால் கூனிக் குறுகிப் போகின்றனர். திருமணத்திற்கு வெளியே பிறந்த அக்குழந்தையின் பராமரிப்பில் உதவி செய்யவும் மறுக்கின்றனர். ஒரு தாய் தன் குழந்தையை வளர்ப்பதற்காக இன்னொருவருக்குத் தத்துக் கொடுப்பதை இஸ்லாம் அனுமதிக்கிறது. அநாதைகளைப் பராமரிக்கும் ஒரு முறையாக விளங்கும் தத்தெடுத்தலை இஸ்லாம் ஊக்குவிக்கிறது. எனினும், அநாதையின் சொத்துக்களும் அதன் குடும்ப வரலாறு பற்றிய அறிவும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். திருமணமாகாத தாய்மார் தம் குழந்தைகளைத் தத்துக் கொடுத்து விடுகின்றனர். சில வேளைகளில் அவர்களுக்கு தம் பிள்ளைகளை மீண்டும் பார்க்கவே கிடைக்காமற் போகலாம். அப்பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னர் தாம் தத்தெடுக்கப்பட்டுள்ளதைப் புரிந்து கொண்டு தமது உயிரியல் ரீதியான பெற்றோரையும் உறவினர்களையும் பற்றி ஆராயத் தொடங்கலாம்.

தத்துக் கொடுக்கப்படும் பிள்ளைகள் அனைவரும் நல்ல இல்லங்களில் போய்ச் சேர்வதில்லை. சில பிள்ளைகள் தத்தெடுக்கப்படுவதே இல்லை. அவர்கள் அநாதை இல்லங்களில் வளர்க்கப்படுவதோடு ஓர் அநாதை இல்லத்திலிருந்து இன்னொன்றுக்கு மாற்றவும் படுகின்றனர். அங்கு அவர்கள் மோசமான முறையில் நடத்தப்படலாம். சில சமூகங்களில் ஒரு குழந்தை சட்டபூர்வமானதல்ல என அறியப்பட்டால் அது கேலி செய்யப்படுவதோடு மற்றவர்களால் ஒதுக்கவும் படுகிறது. தம்மை மற்றவர்கள் நடத்தும் விதத்தினால் வெறுப்படையும் இவ்வாறான குழந்தைகள் பிரச்சினைக்குரிய பிள்ளைகளாக வளர்ச்சியடையக்கூடும்.

தத்தெடுக்கப்பட்ட பிள்ளையொன்று அதன் வளர்ப்புத் தந்தையின் பெயரால் அழைக்கப்படலாமா? வம்சாவளி பற்றிய விடயத்தை அல்குர்ஆன் மிகக் கண்டிப்பாக அணுகுகிறது. ஒருவருடைய உண்மையான அடையாளத்தை மறைத்துத் திரிபு படுத்துவதை அது தடை செய்கிறது.

> உங்களுடைய வளர்ப்புப் பிள்ளைகளை உங்கள் புதல்வர்களாகவும் அவன் ஆக்கவில்லை. இவை (யாவும்,) உங்கள் வாய்களால் கூறும் உங்கள் வார்த்தைகளே (தவிர உண்மையல்ல)
> (அல்குர்ஆன் 33: 4)

ஒவ்வொரு மனிதரும் அவருடைய உண்மையான உயிரியல் ரீதியான தந்தையின் பெயரால் அழைக்கப்பட வேண்டும்.

> நீங்கள் வளர்த்த அவர்களை, அவர்களுடைய தந்தைகளுக்கே (அவர்களின் பெயர்களைக் கூறியே) அழையுங்கள்; அது தான் அல்லாஹ்விடத்தில் மிக நீதமாகும். ஆனால், அவர்களின் தந்தைகளை நீங்கள் அறியவில்லையாயின் அப்பொழுது மார்க்கத்தில் உங்களுடைய சகோதரர்களாகவும் உங்கள் சிநேகிதர்களாகவும் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 33: 5)

உயிரியல் தந்தை யாரெனத் தெரியாதிருந்தால் அல்குர்ஆனின்படி அவர்களை இஸ்லாத்தில் உங்கள் சகோதர சகோதரிகளாகவும் நெருங்கிய நண்பர்களாகவும் கொள்ள வேண்டும். இந்நிலையில் அவர்கள் உங்கள் குடும்பப் பெயரைப் பெறலாம். இங்கு பிரதான விடயம் வெறுமனே பெயரை வழங்குவதல்ல; மாறாக, அப்பிள்ளைகளுக்கு கண்ணியத்தையும் அங்கீகாரத்தையும் வழங்குவதே. தனது வளர்ப்பு மகன் ஸைத் இப்ன் ஹாரிதாவினால் விவாக விலக்குச் செய்யப்பட்ட ஸைனப் அவர்களைத் திருமணம் செய்வதன் மூலம் நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவம் பற்றிய கோட்பாட்டுக்கு சிறந்த முன்னுதாரணமொன்றை எடுத்துக் காட்டினார்.

> 'ஸைத்' (என்பவர் மனம் மாறித் தன் மனைவியைத்) தலாக்குக் கூறிவிட்ட பின்னர் நாம் அப்பெண்ணை உங்களுக்குத் திருமணம் செய்து வைத்தோம். ஏனென்றால், நம்பிக்கையாளர்களால் (தத்தெடுத்து) வளர்க்கப்பட்டவர்கள் தங்கள் மனைவிகளைத் தலாக்குக் கூறிவிட்டால் அவர்களை வளர்த்தவர்கள் அப்பெண்களைத் திருமணம் செய்து கொள்வதில் யாதொரு தடையிருக்கக் கூடாது என்பதற்காக இது நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ்வுடைய கட்டளை ஆகும். (அல்குர்ஆன் 33: 37)

இஸ்லாத்துக்கு முந்திய அறியாமைக்காலத்தில் காணப்பட்ட, வம்சாவளியை மறைக்கும் துர்ப்பழக்கத்திற்கும் 21ம் நூற்றாண்டில் தத்தெடுக்கப்பட்ட பிள்ளையை வளர்ப்புத் தந்தையின் பெயரால் அழைக்கும் வழக்கத்திற்கும் இடையில் ஒற்றுமை இருப்பதை நாம் காணலாம். இந்நடைமுறை தடுத்து நிறுத்தப்படுவதோடு உண்மையான உயிரியல் ரீதியான தந்தையின் பெயர் தெரிந்திருந்தால் அது வெளிப்படுத்தப்படவும் வேண்டும். அநாதையான பிள்ளைக்கு எது நல்லதோ அதைச் செய்வதும் அதன் உரிமைகளைக் காப்பதுமே இங்கு முக்கியமானது. இவை எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது குறித்த காலத்தில் நடைமுறையிலுள்ள பண்பாட்டிலும் நடைமுறைகளிலும் தங்கியுள்ளது.

ஓரினப் பாலுறவும் பெற்றாரும்

ஓரினப் பாலியல்பு கொண்டவர் தம் சொந்தப் பாலுக்குரியவர்களினால் கவரப்படுவதோடு எதிர்ப்பாலாருடன் பாலுறவை நாடுவதற்குப் பதிலாகத் தம் சொந்தப் பாலாருடனேயே பாலுறவை விரும்புவர். எதிர்ப்பாலாருடன் மாத்திரம் பாலுறவினை மட்டுப்படுத்திக் கொள்பவர்கள் heterosexuals எனப்படுவர். பெண்களுடனேயே பால் ரீதியான உறவுகளை வைத்துக்கொள்ளும் பெண்கள் lesbians எனப்படுவர். ஓரினப் பாலியல்புடைய ஆணைக் குறிப்பதற்கு Gay என்ற கொச்சைச் சொல் பயன்படுத்தப்படுகிறது. மனித சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் இப்பிரச்சினை ஒழுக்க ரீதியாகப் பெரும் முக்கியத்துவம் பெற்றிருக் கிறது. ஓரினப் பாலுறவு நடவடிக்கைகளும் அவற்றின் ஊக்குவிப்பும் கண்டிக்கப்பட வேண்டியவை; வெறுத்தொதுக்கப்பட வேண்டியவை. இறை வேதங்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ள, ஆனால் இன்றைய சமயச் சார்பற்ற நீதி முறைகளினால் சட்டபூர்வ மாக்கப்பட்டுள்ள ஓரினப் பாலியல்பு, தம் பிள்ளைகளிடம் காணப்படும் நிலைமையில் பெற்றாருக்கு உதவி வழங்குவதே இங்கு எமது நோக்கமாகும்.

அல்குர்ஆனும் ஏனைய வேதங்களும் ஓரினப் பாலுக்குரிய செயற்பாடுகளைக் கண்டிக்கின்றன.

> (தீய காரியத்திற்காக) உலகத்தாரில் ஆண்களிடம் வருகின்றீர்களா? "உங்கள் இரட்சகள் உங்கள் மனைவியரிலிருந்து உங்களுக்கெனப் படைத்ததையும் நீங்கள் விட்டு விடுகிறீர்கள்; இல்லை! நீங்கள் (அல்லாஹ்வின்) வரம்பைக் கடந்த சமூகத்தவர்கள்" (அல்குர்ஆன் 26: 165-166)

பெற்றோர்களைப் பொறுத்தவரையில் முகங்கொடுப்பதற்கு மிகச் சங்கடமான ஒரு பிரச்சினையாக இது இருக்கிறது. பெற்றார் என்ற வகையில் தமது கடமைகளைச் சரியாகச் செய்த தாயும் தந்தையும், தம் மகன் ஓரினப் பாலியல்புடையவன் என்பதை அறிந்து கொள்ள நேரிட்டால் என்ன செய்யலாம்? தம் பதின்மவயது மகன் ஓரினப் பாலியல்புக் குரிய போக்குகளைக் காட்டினால், மிகக் கவனமாக நடந்து கொண்டு உரிய உதவிகளை அவனுக்குப் பெற்றுக் கொடுப்பது பெற்றாரின் கடமையாகும்.

ஓரினப்பாலியல்பு என்பது பெற்றார் எதிர்கொள்ள நேரிடும் மிகக் கஷ்டமான ஒரு விடயமாகும். சிலர் தாம் அதைப்பற்றி அறிந்துகொள்ளாமலிருப்பதே நல்லது என நினைக்கின்றனர். தங்கள் புதல்வர்கள் எல்லா வகையிலும் ஆண்மையோடு மிளிர்வதையும் அதே போன்று தம் பெண் மக்கள் நிறை பெண்மையுள்ளவர்களாக இருப்பதையும் காண்பதில் அவர்கள் பெருமைப்படுகிறார்கள். எவ்வாறாயினும் யதார்த்த நிலைமைக்கு அனைவரும் முகங்கொடுத்தே ஆக வேண்டும்.

ஓரினப் பாலியல்புடையவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதில் மிக மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அணிவகுப்புக்களையும் எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடத்தித் தமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை மாற்ற முயற்சிக்கின்றனர். ஆண்கள் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் உதடுகளில் முத்தமிடுவதையும் பெண்களைப் போன்று ஆடை அணிந்து திரிவதையும் காணலாம். அமெரிக்காவின் சில

மாநிலங்களிலும் வேறு சில நாடுகளிலும் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் திருமணம் செய்வது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஓரினப் பாலுக்குரிய சோடிகள், தாமும் சாதாரண திருமணம் செய்த தம்பதியராகவே நடத்தப்பட வேண்டுமெனக் கோருகின்றனர். இவர்களால் பிள்ளைகளைப் பெற முடியாமலிருப்பினும் அவர்களுட் சிலர் பிள்ளைகளைத் தத்தெடுக்கின்றனர். அவர்களது நடத்தையை கண்டிக்கத் துணியும் எவருக்கும் 'homophobic' (ஓரினப் பாலியல்புடையவர்களை வெறுப்பவர்) எனப் பட்டம் சூட்ட இவர்கள் தயங்க மாட்டார்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் 1960 களில் கருத்தடை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டமை, கருக்கலைப்பு சட்ட பூர்வமாக்கப்பட்டமை என்பவற்றோடு பொது மக்களுக்குரிய உளவியல் போதனைகளும் சேர்ந்து பாலியல் புரட்சி என்ற ஒன்றுக்கு வழி வகுத்தன. அதிக முற்போக்குடைய சமூகங்களில் வாழ்ந்தவர்கள் விவாகமானவரா இல்லையா என்ற பாகுபாடின்றித் தாம் விரும்பிய ஒருவருடன் - அவர் எதிர்ப் பாலாராக அல்லது சம பாலாராக இருப்பினும் சரியே - பாலுறவு கொள்வதற்குச் சுதந்திரம் தேவை என உரிமை கோரலாயினர். அத்தோடு பாலியல் சார்பாக தமது போக்கினை ஏனையோர் மதிக்க வேண்டுமென வேண்டினர். இக்கருத்துக்களைப் பலர் அங்கீகரித்தனர். இதன் விளைவாக இன்று பல நாடுகளில் ஓரினப் பாலியல்பு கொண்டவர்களுக்குப் பாகுபாடு காட்டுவது சட்டவிரோதமானதாக ஆக்கப்பட்டுள்ளது.

ஒருவர் எவ்வாறு ஓரினப் பாலியல்புள்ளவராக மாறுகின்றார் என்பதை விளக்கப் பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டன. இவ்வியல்பு ஒருவர் தேர்ந்தெடுக்கின்ற ஒன்றா அல்லது பிறப்பிலேயே உருவாகி, வளரும் போது கண்டறிந்து கொள்ளப்படும் ஒன்றா? 1970கள் வரை ஓரினப் பாலியல்பு என்பது ஓர் உள நோய் அல்லது உளக் கோளாறு என்றே பெரும்பாலான நிபுணர்கள் கருதினர். நலிவான, கொடூரத் தன்மையுடைய, உணர்வுகள் மரத்துப் போன தாய்மாருடைய ஆண் மக்களில் சிலர் பெண்களையே வெறுப்பவர்களாக வளருகின்றனர் என வைத்திய நிபுணர்கள் கருதினர். அதே போன்று தம் தந்தையரினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண் மக்கள் ஆண் வர்க்கத்தையே வெறுப்பவர்களாக வளரக்கூடும். இதன் காரணமாக அவ்வாறானவர்கள் தம் சம பாலுக்குரியவர்களின் மீது அன்பு கொள்வார்கள் என விளக்கமளிக்கப்பட்டது.

மருத்துவத்துறை மற்றும் நடத்தையியல் சார்ந்த நிபுணர்கள் 1990களில் புதிய கொள்கை யொன்றை விருத்தி செய்தனர். ஓரினப் பாலியல்பானது மனிதப் பாலியல்பின் ஒரு சாதாரண வேறுபாடு மாத்திரமே என இக்கொள்கை கூறுகிறது. ஒருவருடைய பரம்பரை அலகுகளிலேயே ஓரினப் பாலியல்பு ஆரம்பிக்கிறது எனவும் அது அடுத்த பரம்பரைக்குக் கடத்தப்படக்கூடியது எனவும் இக்கொள்கை கூறுகிறது. மேலும் சில விலங்கினங்கள் ஓரினப் பாலியல்பு நடத்தையில் ஈடுபடுகின்றன என்பதைக் கண்டு பிடித்து, அதனையே காரணமாகக் காட்டி, மனிதரிலும் இது சாதாரண நடத்தையே என்ற முடிவுக்கும் வந்தனர். இது விநோதமான, தலை கீழான தர்க்க முறையாகும். மனித நடத்தையின் நியமங்களை

வரையறுக்கும் ஓர் அளவுகோலாகச் சில காட்டு விலங்குகளின் நடத்தையைப் பயன்படுத்துவதா? இதனடிப்படையில் ஒரு குறித்த நடத்தைக்கு சமூக அங்கீகாரம் வழங்கப்பட முடியுமா? மனிதர்கள் தம் நடத்தைக்கு முன்மாதிரியாக விலங்குகளை எடுத்துக் கொள்வார்களா?

மனிதனுக்குரிய பெறுமானங்கள் விலங்குகளின் நடத்தையிலிருந்து பெறப்படக் கூடாது; மனிதர்கள் விலங்குகளிலிருந்தும் வேறுபட்டவர்கள். மற்றெல்லாப் படைப்புகளையும் விட மனிதர்கள் மேலானவர்கள் என இறைவன் மனிதனைக் கண்ணியப்படுத்தியுள்ளான்.

ஓரினப் பாலியல்புக்கு ஏதுவாக அமையக்கூடிய காரணிகள் கீழே கலந்துரையாடப் படுகின்றன. பரம்பரை அலகுகள் இதற்குரிய ஒரு காரணமாக முன்வைக்கப்படுகிறது. எனினும், அனுபவம், சூழல் காரணிகள், உறவுகளின் உருவாக்கம் தொடர்பான பிரச்சினைகள் முதலியன இவ்விடயத்தில் பிரதான செல்வாக்கும் முக்கியத்துவமும் உடையனவாக இருக்கின்றன.

- நட்பு பற்றிய மனக்குழப்பம்: தமது சமபால் நண்பர் ஒருவரோடு மிக வலிமையான உணர்வுகளுடன் உறவு கொண்டிருக்கும் இளைஞர்களும், யுவதிகளும் ஓரினப் பாலியல்பு பற்றிய பேச்சுக்களையெல்லாம் செவிமடுக்கும் போது மனக்குழப்பமடை கின்றனர். தாமும் ஓரினப் பாலியல்பு உடையவர்களோ எனச் சிந்திக்கத் தொடங்குகின்றனர். தன் நண்பி பற்றி மனதில் எழும் உவகை காரணமாக அவளைக் கட்டித்தழுவி முத்தமிட வேண்டும் என்ற தூண்டுதல் ஓர் இளம் பெண்ணின் மனதில் ஏற்படலாம். இவை பாலியல் ரீதியான உணர்வுகளோ என அவள் மனக்குழப்பமடை வதனால் தனது உளத்தூண்டுதல்கள் பற்றி அவளது மனதில் குற்ற உணர்வு ஏற்படலாம். தான் ஓரினப் பாலியல்பு உடையவள் என அவள் உறுதியாக நம்பத் தொடங்கினால், தன் நண்பியைத் தன்னோடு பால் ரீதியாக உறவு கொள்ள அவள் இணங்க வைக்கக் கூடும். போதியளவு பாலியல் கல்வியை வழங்குவதன் மூலமே இவ்வாறான நிலைமை ஏற்படாமல் பெற்றோர் தவிர்த்துக் கொள்ள முடியும்.
- பிள்ளைகள் மீது அன்பு காட்டாமை: தன் மீது அன்பும் பாசமும் காட்ட எவரும் இல்லாத நிலையில் ஒருவர் இருக்கலாம். தமது பெற்றோர்களுடனும் உறவினர்களுட னும் சரியான உறவு கிடைக்காத பதின்மவயதினர், தம்மை எவராவது தொட்டு அன்பு காட்ட வேண்டும் என விளைகின்றனர். இவ்வாறான ஒருவருக்கு இருக்கும் ஒரே உறவு சமபால் நண்பர் ஒருவராயின், அவரைத் தொட்டு அரவணைக்க வேண்டும் என்ற அளவுக்கு மீறிய ஆசை தோன்றலாம். இதன் காரணமாக அவர் தன்னடக்கத்தைக் கைவிட்டுத் தன் நண்பரோடு பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடும். தம் பிள்ளைகள் மீது அன்பையும் பாசத்தையும் பொழிந்து அவர்களை அன்பினால் திணறடிக்கச் செய்வதன் மூலமே மேற்சொன்ன நிலைமைகளைத் தவிர்க்க முடியும். குழந்தைப் பருவத்தில் தாய்ப்பாலூட்டுவதிலிருந்தே இது ஆரம்பிக்க வேண்டும். ஒரு குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களிடையேயும் அன்பு நிறைந்த உறவு இறுதி வரை தொடர வேண்டும். இதன் மூலம் ஒருவர் தமக்குத் தேவையான இயல்பான அன்பினைத் தன் வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம். அதனை வெளியில் தேட வேண்டிய அவசியம் ஏற்படாது.
- பிள்ளைப் பருவத்தில் தொல்லைப் படுத்தல்: சிறுவர்களுக்குத் தொல்லை கொடுப்போரால் பல சிறுவர் சிறுமியர் தம் விருப்பத்துக்கு மாறாக பாலியல் ரீதியான செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இறுதியில் அவர்கள் அச்செயல்களுக்குப் பழகி விடுகின்றனர். வேறு ஆண்களோடு பாலியல் தொடர்பு கொண்ட 2881 ஆண்கள் பற்றிச் செய்யப்பட்ட ஒழுங்கு முறையான ஆய்வொன்று, அவர்களுள் ஐந்திலொரு பகுதியினர் சிறு வயதிலேயே பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகியிருந் ததை எடுத்துக் காட்டியது. பெற்றார் தம் பிள்ளைகள் மீது தொடர்ந்தும்

கண்காணிப்புடன் இருப்பதன் மூலமே இதற்குத் தீர்வு காணலாம். தம் பிள்ளைகள் எப்போதும் நல்ல சகவாசத்தில் இருப்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்குப் பாலியல் தொல்லை கொடுப்பவர்களுள் பெரும்பாண்மையினர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. எனவே, இது பற்றி விழிப்போடு இருப்பது மிக முக்கியமானது.

- அசாதாரண உடல் நிலை: சிலரில் பிறப்பிலிருந்தே அல்லது இடையில் உருவாகும் அரிதான நோய்கள் காரணமாக இலிங்க ஹோர்மோன்கள் போதியளவில் சுரக்கப்படுவதில்லை. இதனால், சாதாரண ஆண்களை அல்லது பெண்களைப் போன்று தோற்றமளிக்கவோ நடந்து கொள்ளவோ அவர்களால் முடியாமற் போகிறது. ஒருவரில் அவரது பாலுக்குரிய இயல்புகள் உருவாவதற்குக் காரணமாக இருக்கும் இரசாயனப் பதார்த்தங்களே இந்த ஹோர்மோன்கள். ஆண்மைக்குரிய சிறப்பியல்புகளையும் பெண்மைக்குரிய சிறப்பியல்புகளையும் முறையே ஆண், பெண் ஹோர்மோன்களே நிர்ணயிக்கின்றன. போதியளவு ஆண் ஹோர்மோன் இல்லாத ஒரு வாலிபனில் மீசை வளராமலிருக்கலாம். அத்தோடு, அவனிடம் உள்ளார்ந்த ஆண்மைக்குரிய இயல்புகள் குறைவாக இருக்கலாம். மருத்துவச் சிகிச்சை மூலமே இதற்கான தீர்வைக் காண முடியும்.
- விவாகம் செய்வதில் நீண்ட காலத் தாமதம்: உரிய வயதில் திருமணம் செய்ய வாய்ப்புக் கிடைக்காத ஆண்களிலும் பெண்களிலும் தம் சிற்றின்ப ஆசைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும் என்ற உந்துதல் கூடுதலாக இருக்கலாம். பொருத்தமான முறையில் அவை நிறைவேறாமற் போகும் போது அவர்களது எண்ணங்களில் மாற்று வழிகள் தோன்றலாம். சட்டப்படி உரிய வயதை அடைந்ததும் நேர காலத்தோடு திருமணம் செய்வது ஊக்குவிக்கப்பட வேண்டும். அது பிள்ளைகளின் உரிமையாகும். திருமண வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

தமது புதல்வன் ஓரினப் பாலியல்புப் போக்குடையவன் என்ற உண்மையை அறிந்து கொள்ள நேரிடும் பெற்றார் பொறுமையுடனும் புரிந்துணர்வுடனும் இருந்து உடனடியாக துறைசார் நிபுணர்களின் உதவியை நாட வேண்டும். தம் பிள்ளை மீதுள்ள அன்பை அவர்கள் தடுத்துக் கொள்ளக்கூடாது. இதற்காக அவர்கள் ஓரினப் பாலுறவுச் செயற்பாடுகளை அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை.

ஓரினப் பாலியல்பு தொடர்பான சட்டப் பிரச்சினைகள் பற்றியும் பெற்றார் விளங்கியிருக்க வேண்டும். பால், பாலியல்புப் போக்கு, இனம், மொழி, தேசிய வம்சாவளி என்பவற்றினடிப்படையில் பாகுபாடு காட்டுவதை அமெரிக்கச் சட்டம் தடை செய்கிறது. ஓரினப் பாலியல்பு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது என்ற செய்தியைப் பல சமூகங்கள் இன்று பிள்ளைகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன. இவை இயல்பானவற்றுக்கும் இயல்புக்கு முரணானவற்றுக்கும் இடையிலான பிரிகோட்டை மங்கச் செய்து வருகின்றன. பிள்ளைகளும் தமது இயல்பான தடையுணர்வுகளைப் புறக்கணித்து விட்டு ஆசைகளையும் உணர்வுகளையும் பின்பற்ற வேண்டும் எனவும் போதிக்கப்படுகிறது.

ஓரினப் பாலியல்பு நடத்தை தவறானது என்பதைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்குத் தெளிவு படுத்த வேண்டும். ஆசிரியர் ஒருவர் அவ்வகையான நடத்தையைத் தூண்டுவாரேயானால் அவ்விடயத்தில் பெற்றார் கட்டாயமாகத் தலையிட வேண்டும்.

ஆண்கள் ஆண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்

(பெண்களை மரியாதையாக நடத்துதல், நலிவுற்றோருக்குப் பாதுகாப்பு வழங்குதல், தமது உடல் அமைப்புக்களை வெளிக்காட்டாதிருத்தல்)

பெண்கள் பெண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்

(பண்பான முறையில் உடையணிதல், தம் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளல், தகாத நடத்தையுள்ள ஆண்களிடமிருந்து தம் கண்ணியத்தைப் பாதுகாத்துக்கொள்ளல்)

இஸ்லாமியப் பாலியல் கல்வி

இறைவன் மனிதனில் பாலியல் ரீதியான தேவையை உருவாக்கினான் என்பதை இஸ்லாம் அங்கீகரிக்கிறது. திருமணம், குடும்ப வாழ்க்கை என்பவற்றின் அடிப்படையில் அல்குர்ஆனிலும் நபி (ஸல்) அவர்களாலும் பாலியல் பற்றிய விடயங்கள் கண்ணியமான முறையில் கலந்துரையாடப் பட்டுள்ளன. பெண்களை (அல்லது ஆண்களை) வெறுமனே சிற்றின்பத்துக்குரிய பொருட்களாக இஸ்லாம் கருதவில்லை. மாறாக, மனிதத் தேவைகளையும் இறைவனின் விருப்பத்தையும் நிறைவு செய்கின்ற, ஒருவருக்கொருவர் குறை நிரப்பி ஒத்தாசை வழங்கும் உறவொன்றின் அடிப்படையில் மரியாதையுடனேயே அவர்களை நோக்குகிறது. திருமணத்துக்குப் புறம்பான பாலுறவு தவறானதும் தண்டனைக்குரிய பெரும் பாவமும் ஆகும். அதேவேளை ஒருவர் தனது வாழ்க்கைத் துணையோடு பாலுறவு கொள்வதானது வணக்க வழிபாடு போன்ற வெகுமதி வழங்கப்படக்கூடிய நற்செயலொன்றாகும். பாலியல் தொடர்பான இஸ்லாமிய சட்டங்கள் தெளிவான வையாகவும் இயல்பானவையாகவும் இருக்கின்றன. அவை சம வயதுக் குழுவினரின் அழுத்தங்களுக்கோ அல்லது மாறிவரும் சமூகப் பெறுமானங்களுக்கோ ஏற்ப மாற்றமடைவதில்லை. திருமணக்காலம் வரை கற்பைக் காத்துக்கொள்வது ஓர் ஒழுக்கச் சிறப்பாகக் கருதப்படுகிறது. (இன்று சில சமூகங்களிலோ அது பிரதிகூலமொன்றாகக் கொள்ளப் படுகிறது)

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பாலியல் உறவுகள் பற்றி அல்குர்ஆனின் பின்வரும் வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது:

> இழிவான நீரிலிருந்து உங்களை நாம் படைக்கவில்லையா? பின்னர் அதனைப் பாதுகாப்பான இடத்தில் (கர்ப்பப் பையில்) ஆக்கினோம். குறிப்பிட்ட (கால) அளவு வரை; பின்னர் நாமே அதனை (சிசுவாக) ஏற்படுத்தினோம். ஏற்படுத்துவோரில் (நாம்) நல்லோராவோம்.
>
> (அல்குர்ஆன் 77: 20-23)

> (விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் விபசாரத்தையும் நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாக இருக்கிறது. இன்னும் அது (மனித குலத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும்) வழியால் மிகக் கெட்டது. (அல்குர்ஆன் 17: 32)

கணவன், மனைவி உறவுகள் தொடர்பாக நபியவர்களின் ஸுன்னாஹ்வில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

> திருமண ரீதியான நெருங்கிய உறவு வெகுமதி அளிக்கப்படக்கூடிய ஒரு நற்செயல் என நபி (ஸல்) அவர்கள் கருதினார்கள். "உங்களில் ஒருவர் தன் மனைவியோடு படுக்கை கொள்வது நன்மையளிக்கக்கூடிய ஒரு நற்செயலாகும்" என அன்னார் கூறினார்கள். அதைக்கேட்டு வியப்புற்ற தோழர்கள், "நாம் எமது ஆசைகளை நிறைவு செய்து கொள்வது நன்மையளிக்கக் கூடியதாக அமைவது எப்படி?" எனக் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள். "ஒருவர் அதனைத் தடுக்கப்பட்ட முறையில் செய்திருந்தால் அது பாவமாகக் கணிக்கப்பட்டிருக்கும். அதனை நீங்கள் சட்டபூர்வமாகச் செய்தால் அதற்கு நன்மை வழங்கப்படும்". (முஸ்லிம்)

தம்பதியரிடையே இடம்பெறும் அந்தரங்க உறவுகளின் இரகசியம் பேணப்பட வேண்டும்; அவை வேறு எவரிடமும் கூறப்படக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். "ஒரு மனிதன் தன் உடலைத் தன் மனைவிக்கு வெளிக்காட்டி அவளும் அவ்வாறே செய்த பின்னர் அவளது இரகசியங்களை எவனொருவன் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவானோ அவனே நியாயத் தீர்ப்பு நாளில் உங்களில் மிகக் கெட்டவனாக இருப்பான்" என அன்னார் கூறினர்.

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஆடை போன்றவர்கள் என அல் குர்ஆன் விவரிக்கின்றது. ஆடை என்பது ஒவ்வொருவருக்கும் உரிய விதத்தில் தனித்தன்மை யானவை. அத்தோடு, ஒருவரின் உடலுக்கு நெருக்கமானவை. அதே போன்று வாழ்க்கைத் துணைவர்களும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருத்தல் வேண்டும். ஓர் ஆடையானது எமது நாணத்தையும் மானத்தையும் காக்கக்கூடியது. எனவே, தம்பதியரும் ஒருவர் மற்றவரின் விடயத்தில் இவ்வாறே நடந்து கொள்ள வேண்டும். ஆடைகள் ஒருவர் விரும்பிய போது அணியப்படக் கூடியது. எனவே, தம்பதியரும் ஒருவர் மற்றவரின் மகிழ்ச்சிக்காக எந்நேரமும் கிடைக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். ஆடையொன்று ஒருவரின் அழகுக்கு அணி சேர்க்கிறது. எனவே, தம்பதியரும் ஒருவரை ஒருவர் அழகு படுத்திக்கொள்ள வேண்டும்.

பாலுறவு என்பது அன்பின் வெளிப்பாடாகும். ஒன்றில்லாமல் மற்றது நிறைவு பெறாது. பாலியல் தொடர்பான விடயங்களில் - குறிப்பாகத் தமது விருப்பு, வெறுப்புகள் பற்றி - தன் மனைவிக்குக் கற்றுக் கொடுப்பது கணவனின் பொறுப்பாகும். அவளை அவன் வேறு பெண்களோடு ஒப்பீடு செய்யக்கூடாது. உச்ச மகிழ்ச்சியைப் பெறுவதற்காக மனைவியரும் இவ்வாறே செய்தல் வேண்டும். ஆண்களின் பாலியல் தேவைகள் தம்முடையவற்றிலிருந்து வேறுபட்டவை என்பதை மனைவியர் உணர்ந்து கொள்ள வேண்டும். தான் இயங்காமல், வெறுமனே கிடைப்பதைப் பெற்றுக் கொள்பவராக மாத்திரம் இராது, சுறுசுறுப்பாகவும் விருப்போடும் பங்குபற்றுபவராகவும் இருத்தல் வேண்டும். வீட்டுக்கு வெளியே ஏற்படக்கூடிய உளத் தூண்டுதல்களுக்கு இருவருமே முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இதன் விளைவாக கணவனும் மனைவியும் வெளிச் செல்வாக்குகளுடன் தொடர்ந்து போட்டியிட வேண்டிய நிலைமைக்கு உள்ளாகின்றனர். எனவே, இருவரதும் நலன் கருதி மனைவியானவள் தன் கணவனை இன்புறச் செய்வதற்கு எப்போதும் தயாரானவளாக இருத்தல் வேண்டும். அவன் தன் மனைவிக்குப் பதிலாக இன்னொருத்தியை நாடுவதையும் அதனூடாக அவன் தன் குடும்பத்தை அழித்து இறைவனின் அதிருப்தியைப் பெற்றுக் கொள்வதையும் இதன் மூலம் தவிர்க்கலாம். அதே போன்று தன் மனைவியின் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றி அவளைக் களிப்பூட்டுவதற்கு கணவனும் எப்போதும் கிடைக்கக் கூடியவனாக இருத்தல் வேண்டும்.

உச்ச இன்பத்தை அடைவதற்காக தம்பதியரிடையே இடம்பெற வேண்டிய நெருக்கமான செயற்பாடுகள் பற்றி நபி (ஸல்) அவர்கள் மேலும் விபரமாக விளக்கியுள்ளார்கள். பின் துவாரத்தினூடாகப் பாலியல் இன்பம் காண்பதை இஸ்லாம் வன்மையாகத் தடுக்கிறது. அதே வேளை வாய் மூலம் இன்பம் காண்பதை தடுக்கும் எந்தக் கூற்றும் அல்குர்ஆனிலோ ஸுன்னாஹ்விலோ காணப்படவில்லை. பாலுறுப்புக்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதோடு ஏதேனும் திரவ வெளியேற்றம் நிகழ்ந்தால் அல்லது பாலுறவு கொண்டால் குளிக்கவும் வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "உங்களில் எவரும் தன் மனைவியின் மீது ஒரு மிருகத்தைப் போல் தாவ வேண்டாம். தம்பதியரிடையே ஒரு தூதுவர் இருக்க வேண்டும். 'தூதுவர் என்பதனால் நீங்கள் கருதுவது யாது?' என அன்னாரிடம் வினவப்பட்டது. அதற்கு அன்னார், 'அத்தூதுவர் முத்தமிடுதலும் உரையாடுதலுமே (முன்னின்பச் செயற்பாடுகளே)' எனக் கூறினார்கள்.
(அறிவிப்பவர்கள் அல் ஸுபைத் மற்றும் அல் இராகி)

நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள்: நீங்கள் உங்கள் மனைவியோடு படுக்கை கொள்ளும் போது அவள் மீது கருணையுள்ளவராக இருங்கள். அவள் திருப்தியுற முன்னர் நீங்கள் திருப்தியடைந்து விட்டால் அவள் முற்றாகத் திருப்தியடையும் வரை அவளை அவசரப்படுத்தாதீர்கள். (அபூ யா'லா)

தனது வாழ்க்கைத் துணையைச் சிறந்த முறையில் பேணிக் கவனித்துக் கொள்வது ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். அவள் தனக்கு விசுவாசமாக இருக்கவேண்டு மென அவன் எதிர்பார்த்தால் அவள் முழுமையான பாலின்பத்தை அடைவதற் குப் போதியளவு அவகாசத்தை அவன் வழங்கவேண்டும். பொதுவாக ஒரு பெண் ணைத் திருப்தியுறச் செய்வதற்கு 15- 20 நிமிடங்கள் தேவைப்படலாம். ஒரு மனிதன் ஒரு மிருகத்தைப் போல் தன் மனைவியின் மீது தாவக் கூடாது என்பதன் கருத்து முன்னின்பச் செயற்பாடுகளில் ஈடுபடாமல் பாலுறவு கொள்ள முயலக் கூடாது என்பதே. இவ்வாறு செய்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஆண்கள் எப்போதும் கரிசனை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் பெண்களின் பாலியல்பு பற்றிய உயிரியல் ரீதியான உண்மைகளைப் புரிந்து கொள்வதோடு தம் மனைவியரை இன்பமுறச் செய்யும் நுட்ப முறைகளை அறிந்து கொண்டு நிறைவும் மகிழ்ச்சியும் நிரம்பிய வாழ்க்கையொன்றை அனுபவிக்க முயல வேண்டும். இவ்வாறாகத் தன் மனைவிக்கென நேரத்தை ஒதுக்க முடியாத மனிதன் அவளுக்குப் பெரும் துன்பம் விளைவிக்கிறான். அத்தோடு அவளது உள்ளத்தில் தகாத ஆனால் வலிமையான தூண்டுதல்கள் ஏற்படவும் வழி செய்கிறான்.

பாலுறவு என்பது தீயதோ அசிங்கமானதோ அல்ல. அது தூய்மையானது; முழுமையானது. ஆனால், அது விசுவாசம், ஒழுக்கம் என்பவற்றின் வரம்புகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றோரின் கடமைகள்

பாலியல் தொடர்பாகப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு சாதகமான மனப்பாங்கு களைக் கற்பிப்பது முக்கியமானது. பாலியல் என்பது (நேரான வழியில் அணுகப்படின்) செய்த்தானின் உருவாக்கமோ, தீயதோ அல்லது அசிங்கமானதோ அல்ல. அது அருளாளனான இறைவன் தந்த வெகுமதியாகவும் அருளாகவும் விளங்குகிறது. அத்தோடு, மறுமையில் சுவர்க்கத்தின் இன்பங்களை உணர்த்துவதாகவும் இருக்கிறது.

பாலுறவு என்பது இன்பத்தையும் குதூகலத்தையும் தரக்கூடியதாக இருப்பினும் செய்த்தான் அதன் மூலம் மனிதர்களை வழி கெடுத்துத் திரிபடையச் செய்து சகலதையும் பறிகொடுத்த நிலைக்கு ஆளாக்கி அவர்களுக்குப் பெரும் வேதனையை ஏற்படுத்த முடியும். இதனால் ஏற்படக்கூடிய ஆபத்து பாரதூரமானது. தவறான பாலியல் நடத்தையொன்றில் ஈடுபடுவதன் விளைவாக ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் முடிவில்லாத் தொல்லை களுக்கு ஆட்பட நேரிடும். பாலின்பம் என்பது படைப்பாளனின் கட்டளைகளுக்கு ஏற்ப தூய்மையாகவும் முழுமையாகவும் திருப்தி செய்துகொள்ளப்பட வேண்டிய ஒரு தேவையாகும். அதில் மிகைப்படுத்தல், குறைவு படுத்தல், வேதனை அனுபவித்தல் என்பன இருக்க முடியாது.

ஆண், பெண் இரு பாலாரினதும் தேவைகளைப் புரிந்து கொள்வதில் நபி (ஸல்) அவர்கள் திறந்த மனமுடையவர்களாகவும் நேர்மையும் இரக்கமும் கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். அன்னார் தேவையற்ற நாணத்தையோ பிடிவாதமான மூடக்கருத்துக்களையோ கொண்டிருக்கவில்லை. அன்னார் தமது திருமணங்கள் தொடர்பாக வெளிப்படை யாகவே மகிழ்ச்சியைக் காட்டினார்கள். வேறு எவரையும் விட நபி (ஸல்) அவர்களுடன் மிக நெருக்கமான உறவு கொண்டிருந்த ஆயிஷா (றழி) அவர்களது கருத்தும் இதுவே.

பாலியல் இன்பங்கள் ஒழுக்க ரீதியான பெறுமானங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். பாலியல் விடயத்தில் கட்டுப்பாடற்ற தன்மையானது குடும்பமும் சமூகமும் வீழ்ச்சியடைய வழி வகுக்கின்றது. அத்தோடு, பொய் சொல்லுதல், ஏமாற்றுதல், பொறுப்புணர்வின்மை என்பவற்றோடு கற்பழிப்பு, போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், திருடுதல், கொலை செய்தல் போன்ற குற்றச் செயல்களுக்கும் அது வழி கோலலாம். ஒருவர் மெய்யாகவே இறைவன் மீது அன்பு வைத்திருந்தால் தனது உளத் தூண்டுதல்களைப் பொறுப்பான முறையில் தடுத்துக் கொள்வதோடு தவறானதிலிருந்து சரியானதைப் பிரித்தறிந்து கொள்வார். பலரிடம் மிதமிஞ்சிய நாணமும் அடக்கமும் காணப்படுவதனால் அதிகத் திருப்தி தரும் வகையில் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிப்பதில்லை.

பாலியலும் சுகாதாரமும்

மாதவிடாயின் போது பாலுறவு: மாதவிடாய் காலத்தின் போது பெண்களுடனான தொடர்பினை முற்றாகத் தவிர்த்துக் கொள்வதே மத்திய கால யூதர்களின் பழக்கமாக இருந்தது. எனினும், உடலுறவு கொள்ளுதல், அந்தரங்கப் பகுதிகளைத் தொடுதல் என்பவற்றை மாத்திரம் தவிர்த்துக் கொண்டு தம் மனைவியருடன் ஏனைய எல்லா வகைகளிலும் உறவாடுமாறு தம் தோழர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

பெண்களுக்குரிய சுகாதாரத் துவாய்களைப் (Sanitary towels) பயன்படுத்தும் முறை பற்றியும் அவற்றை பிரச்சினையின்றி அப்புறப்படுத்தும் முறை பற்றியும் பெண் பிள்ளைகளுக்கு செயன்முறை ரீதியான அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். கழுவி உலர்த்தி மீண்டும் பயன்படுத்தக்கூடிய பழந்துணிகளையும் இதற்காகப் பயன்படுத்தலாம். மாதப்போக்கு இயற்கையானது; அது பற்றி மறைக்கவோ, பேசச் சங்கடப்படவோ தேவையில்லை. தமது மகள் உடல் அசௌகரியத்தால் அல்லது வலியினால் பாதிக்கப்படுகின்ற நிலையில் அது பற்றி ஒளிவு மறைவின்றிப் பேசுவது அவசியம்.

அரைப்பகுதி மயிர்: ஆண்களினதும் பெண்களினதும் அரைப்பகுதியில் வளரும் மயிர்கள் காலத்துக்குக் காலம் - ஒரு மாதத்துக்கொரு முறையாவது - நீக்கப்பட வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்தார்கள். இவ்வாறு செய்வது உடலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் தமது வாழ்க்கைத் துணைவர் அனுபவித்து மகிழ்வதற்கு ஏற்றதாகவும் வைத்திருப்பதற்கு உதவும். அரை மயிர் இயற்கையானது; ஆரோக்கியமானது. அதனை நீக்கிவிடும் நடைமுறை உள்ளத்துக்கு அமைதியையும் உடலுக்குச் சுத்தத்தையும் வழங்குகிறது.

தனது மார்பிலும் கால்களிலும் மயிர்கள் வளர்வதையிட்டு அல்லது மீசை முளைப்பது பற்றி ஓர் இளைஞன் கவலைப்படுவதில்லை. ஆனால், இவ்வாறான ஒரு நிலையைப் பெண் பிள்ளைகள் விரும்புவதில்லை. தமது முளைக்காம்புகளைச் சுற்றி நீண்ட, கருத்த மயிர் வளர்வதைக் கண்டு அவர்கள் பீதியடையலாம். அதே போல் தமது கை, கால்களில் அடர்த்தியான ரோமம் மூடியிருப்பதை அவர்கள் வெறுக்கின்றனர். தேவையற்ற ரோமங்களைக் கலைந்து தம் உடலை மிருதுவாகவும் கவர்ச்சியாகவும் வைத்திருப்பதற்கு மயிர் நீக்கும் பூச்சுக்களை அல்லது வேறு வழிகளைப் பெண் பிள்ளைகளுக்குக் காட்டிக் கொடுப்பதில் தாய்மார் உதவலாம். தமது முகத்தில் சிறிதளவு மீசை மயிர்கள் முளைத்து விட்டதற்காக தாம் ஆண்களாக மாறப் போகிறோம் எனப் பெண் பிள்ளைகள் கவலைப்படத் தேவையில்லை. இவற்றை நீக்கி விடவோ அல்லது கவனமாக வெளிறச் செய்து விடவோ முடியும்.

விருத்தசேதனம்: இள வயதிலேயே ஆண் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் (கத்னா) செய்யப்பட வேண்டும் என நபி (ஸல்) வலிமையாக சிபாரிசு செய்தார்கள். இது சுத்தத்தை மேம்படுத்துவதோடு திருமண வாழ்க்கையில் பாலியல் இன்பத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. ஆண்களுக்கு விருத்த சேதனம் செய்வதன் மூலம் புற்று நோய்க்குரிய சாத்தியம் குறைகிறது. தொற்றுக்களும் சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் வேதனையும் குறைக்கப் படுகின்றன. பெண் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யப்படக் கூடாது. பெண்ணில் பாலுறுப்பின் எந்தப் பகுதியையும் வெட்டி நீக்குவதை இஸ்லாம் தடை செய்திருக்கிறது.

விந்துசார்ந்த திரவமும் நித்திரையில் விந்து வெளியேறலும்: தமது உள்ளாடையில் ஏதேனும் திரவக் கசிவுகள் படிந்திருப்பதைக் காணும் பதின்மவயதினர் பெரும் சங்கடத்துக்குள்ளாகின்றனர். தம் பெற்றோர் அதனைக் கண்டு விடுவார்களோ எனப் பீதியுறுகின்றனர். ஓரளவுக்குக் கசிவுகள் ஏற்படுவது இயல்பானதே என அவர்களுக்கு ஆறுதல் கூறப்பட வேண்டும். அக்கசிவு நிறமுள்ளதாகவோ குருதி தோய்ந்ததாகவோ துர்நாற்றம் வீசுவதாகவோ இருந்தால் அல்லது தினமும் ஒரு தடவைக்கு மேல் உள்ளாடை மாற்ற நேரிட்டால் மருத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும். விந்துக்கும் சிறுநீருக்கும் இடையில் வித்தியாசம் தெரிய வேண்டும். சிறுநீர் அசுத்தமானது (நஜீஸ்); அது உரிய முறையில் கழுவி சுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால், விந்து சுத்தமானது; சிறுநீரைப் போன்று கழுவி நீக்கப்பட வேண்டியதில்லை. அதனைச் சுரண்டி விட்டு சிறிதளவு நீரால் சுத்தம் செய்வது போதுமானது.

பதின்மவயதினரும் பாலுறவைத் தவிர்த்தலும்

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் முன்னெப்போதையும் விட இப்போது பருவமடைவதில் முந்திக் கொள்கின்றனர். பொதுவாகப் பெண் பிள்ளைகள் 8- 13 வயதிலும் ஆண் பிள்ளைகள் 9- 14 வயதிலும் பருவமடைகின்றனர்.

மறுபுறத்தில் திருமணம் முடிக்கும் சராசரி வயது அதிகரித்து வருகிறது. ஐக்கிய அமெரிக்காவில் அது ஆண்களில் 29 ஆகவும் பெண்களில் 26 ஆகவும் இருக்கிறது. வித்தியாசமான பொருளாதார நிலையைக் கொண்ட ஜோர்தானில் சராசரி விவாக வயது ஆண்களில் 35 ஆகவும் பெண்களில் 30 ஆகவும் விளங்குகிறது. திருமணத்துக்கு முன்னர் பாலுறவைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என நம்புபவர்கள் தம் பிள்ளைகள் பருவமடைந்தது முதல் விவாகமாகும் வரை பாலியல் ஆசைகளை அடக்கிக் கொள்ள வேண்டும் எனக் கோருகின்றனர். இவ்வாறு காத்திருக்க வேண்டிய காலம் சுமார் 16 வருடங் களாகும். இக்காலப்பிரிவில்தான் பாலியல் ஆசையும் உடல் சக்தியும் உச்ச நிலையில் இருக்கின்றன. எனவே, இளம் வயதினரைப் பொறுத்தவரையில் இது பாரிய சவாலொன் றாகவே இருக்கிறது.

கடந்த 150 ஆண்டுகளில் பிரித்தானியாவில் பருவமெய்தும் சராசரி வயது 16.5 இலிருந்து 12.8 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. அதிகளவில் விலங்குப்பத்திப் பொருட்களை நுகர்வது இதற்கொரு காரணமாக இருக்கலாம். நுண்ணுயிர்க் கொல்லிகளையும் வளர்ச்சியைத் தூண்டும் ஹோர்மோன்களையும் கொடுத்து வளர்க்கப்பட்ட விலங்குகளிலிருந்தே பெரும்பாலான இவ்வுணவுப் பொருட்கள் பெறப்படுகின்றன.

சுமார் நூறு வருடங்களுக்கு முந்திய காலத்தில் மக்கள் பருவமடைந்ததும் விவாகம் செய்தனர். அப்போது சமூகங்கள் பிழைத்து வாழக் கற்றுக்கொண்டன. உயர்வான சிசு மரண வீதம், அடிக்கடி மூளும் போர்கள் என்பன காரணமாக ஆண்களும் பெண்களும் தமது பாலியல் ரீதியான வலிமையும் உயிரோட்டமும் உச்ச நிலையில் இருக்கக் கூடிய இள வயதிலேயே விவாகஞ் செய்வது அவசியமானதாக இருந்தது.

சில சமூகங்கள் பாலியல் ரீதியான கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் பிந்திய வயது விவாகத்துக்குத் தம்மை இசைவாக்கிக் கொண்டன. இவ்வாறான கட்டுப்பாடுகள் பதின்மவயதினருக்கு மிகுந்த கஷ்டங்களை ஏற்படுத்தின. பருவமெய்தியது முதல் திருமணம் வரை (சுமார் 20 வருடங்கள் வரையில்) தம் பாலியல் உந்தல்களை அடக்கி வைத்திருப்பது மனிதர்களுக்குச் சாத்தியமான காரியமாகத் தோன்றவில்லை. தொடர்ச்சியான உளத் தூண்டுதல்கள் தன்னைச் சூழ்ந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் ஹோர்மோன்களின் செயற்பாடு மிகுந்த பதின்மவயதினரொருவர் நிச்சயமாக அவதிப்படவே போகிறார்.

இந்நிலைமையைச் சமாளிப்பதற்காக முஸ்லிம் சமூகங்கள் காலங்கடத்தாது நேரகாலத்தோடு விவாகஞ்செய்யும் முறையைக் கைக்கொள்ள வேண்டும். இம்மாற்று வழியின் காரணமாகவும் பிரச்சினைகள் ஏற்படலாம். எனினும், பதின்மவயதினருக்கு பாலியல் இன்பம் அவசரமாகத் தேவைப்படுகின்ற போதிலும் திருமணத்திற்குப் புறம்பான பாலியல் உறவுகள் அவர்களுக்கு ஏன் தடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பெற்றார் அப்பிள்ளைகளுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

சுய திருப்தி காணுதல் தவிர்க்கப்பட வேண்டும் எனச் சில முஸ்லிம் அறிஞர்கள் தீர்ப்பளித்துள்ளனர். விவாகமாகாதவர்களைப் பொறுத்தமட்டில் தீவிர பாலியல் ஆசையிலிருந்து நிவாரணம் பெற உதவும் பட்சத்தில் மாத்திரமே அது அனுமதிக்கப்படலாம். ஆனால், அது ஒரு பழக்கமாக மாறக்கூடாது. பாலின்ப உந்துதல் கட்டுக்கடங்காமல் செல்லும் போது சுய திருப்தி காணுதல் குறைந்த தீமையொன்றாகக் கருதப்படலாம். அடங்கிய நிலையிலுள்ள பாலின்ப ஆசையைத் தூண்டி விடுவதற்காகச் சுய திருப்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதைச் சட்ட அறிஞர்கள் தடை செய்திருப்பதாக காலஞ்சென்ற ஷெய்க் முஹம்மத் அல் ஹாமித் அவர்கள் தமது 'ருதூதுன் அலா அபாதில்' என்ற நூலில் விளக்கியுள்ளார். எனினும், அந்த ஆசை மிதமிஞ்சிப் போய் உள்ளத்தை ஆட்கொண்டு ஒருவரின் உறுதிப்பாட்டைக் குலைக்கும் நிலையில் (அவனை அல்லது அவளை விபசாரத்தை நோக்கித் தள்ளும் நிலையில்) சுய திருப்தி காண்பதன் மூலம் அவ்வுந்துதலைச் சமனப்படுத்த முடியுமாயின் அது அனுமதிக்கப்படும். இந்நிலையில் சுய திருப்தி காணலுக்கு வெகுமதியோ தண்டனையோ கிடையாது. குற்றம் கூறுதலோ பாராட்டோ கிடைக்காது. அது பாவமுமல்ல; அதே வேளை, நல்ல செயலுமல்ல.

சுய திருப்தி காணுதல் சுய மையம் கொண்ட செயலாகும். நெருக்கமான உறவொன்றுக்குப் பதிலாக தனிமையிலிருந்தவாறு பதின்ம வயதினர் ஒருவர் தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்வதே அது. மன அழுத்தத்திலிருந்து விடுபட உதவும் தற்காலிகத் தப்பும் வழியாக அது அமையக்கூடும். எனினும், பதின்மவயதினரில் திருமணத்திற்கு மாற்றீடாக அது அமைந்து விடும் ஆபத்து உண்டு.

தமது பதின்மவயதுப் பிள்ளைகள் பாலியல் ரீதியான அழுத்தத்தைத் தணிப்பதற்குச் சுய திருப்திச் செயற்பாட்டைப் பயன்படுத்துவார்களாயின் பெற்றார் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் முதிர்ச்சியடைந்து விவாகம் செய்த பின்னர் அது இல்லாமற் போய்விடும். அதனைத் தவிர்க்க வேண்டுமாயின் பெற்றார் தம் பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஈடுபடச் செய்வதோடு வாரத்துக்கு இரண்டு நாட்கள் நோன்பு பிடிக்கும் பழக்கத்தையும் அவர்களில் ஏற்படுத்த வேண்டும். அத்தோடு குழுச் செயற்பாடுகளிலும் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். சுய திருப்திச் செயற்பாடுகளைத் துஷ்பிரயோகம் செய்வது பாரதூரமான சுகாதாரப் பிரச்சினையாக மாறலாம் என்பதையும் பாலியல் உணர்வுகளைத் தூண்டிவிடும் நிலைமைகள் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் பெற்றார் தம் பிள்ளை களுக்குக் கூறி வைப்பது அவசியம். இது சுயதிருப்தி காணும் பழக்கத்துக்குப் பதின்மவயதினர் அடிமையாவதைத் தடுக்க உதவும்.

பிள்ளைகள் தமது உடலைக் கையாள வேண்டிய முறை பற்றிப் பெற்றார் அவர்களுடன் மனம் திறந்து உரையாட வேண்டும். இள வயதினரின் சிந்தனையில் பாலின்பம் பற்றிய விடயங்கள் கணிசமான அளவு இடம்பெறுகின்றன. எனினும், இவ்விடயம்தான் பெற்றாருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் மிகக்குறைந்த அளவில் கலந்துரையாடப்படுகிறது. இது பற்றிப் பெற்றார் பேசும் போது யதார்த்த நிலையை மறந்து விடுகின்றனர். சுய இன்பம் காண்பது தடுக்கப்பட்டுள்ளது என முஸ்லிம் சட்ட அறிஞர்கள் இளவயதினரிடம் கூறுகின்றனர். எனினும், சில அறிஞர்கள் கட்டுப்படுத்தும் சில நிபந்தனைகளோடு அதனை அனுமதித்தும் உள்ளனர். எப்படியிருந்த போதிலும் வாலிப வயதினர் அதில் ஈடுபடவே செய்கின்றனர். அதன் விளைவாக வெட்க உணர்வோடும் குற்ற உணர்வோடும் காலம் தள்ளுகின்றனர். இவ்விடயத்தில் ஒரு சமநிலை பேணப்பட வேண்டும். இந்நடைமுறை இறுதி வழியாகவே பயன்படுத்தப்பட வேண்டும். அதுவும் உடல் ரீதியிலோ மனவெழுச்சி ரீதியிலோ தீங்குகள் ஏற்படாத வண்ணம் மிகக் குறைந்த அளவிலேயே கையாளப்பட வேண்டும்.

பாலியல் தொடர்பான இரண்டக நிலைக்கு இஸ்லாமியத் தீர்ப்பு: தவிர்ப்பு அணுகுமுறைக்கான ஒரு திட்டம்

தவிர்த்துக் கொள்வதே அடிப்படை அணுகுமுறையாகும்: 'லா தக்ரபு அல் ஸினா'- விபசாரத்தை நெருங்காதீர்கள். அதிலிருந்து உங்களைத் தூரமாக்கிக் கொள்ளுங்கள்; அப்பாவத்திற்கு வழி கோலும் எந்தவொரு நிலைமையையும் அணுகாதீர்கள்.

நீங்கள் விபசாரத்துக்கு நெருங்கவும் வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக அது மானக்கேடானதாகவும் தீய வழியாகவும் இருக்கிறது. (அல் குர்ஆன் 17: 32)

இங்கு முக்கியமான கூற்று, அதனை அணுகாதீர்கள் (லா தக்ரபு) என்பதே. அதாவது, அதனை நெருங்க வேண்டாம்; அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; அதிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். அதற்கு வழிகோலும் அனைத்துப் பாதைகளையும் தடுத்து நடைமுறையில் அதனை அணுக முடியாதவாறு ஒருவர் செய்து கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இத்தவிர்ப்பு நுட்ப முறையையே சமூகம் கையாள வேண்டும். சட்டத்துக்குப் புறம்பான பாலின்பம் அறவே கிடைக்காத வகையிலும் அதனை அணுக முடியாத வகையிலும் நடவடிக்கைகளை எடுத்து அப்பாவத்தைப் புரிவது சிரமமானதாக ஆக்கப்பட வேண்டும். பாலியல் தொடர்பான எல்லா வர்த்தகங்களையும் ஒழித்து, வழங்கல்களைக் கட்டுப்படுத்தி, கேள்வியை முடிந்தளவு குறைத்தால் சமூகம் மனித நடத்தையைச் சரியான முறையில் வழி நடத்தி திருமண உறவுகளைப் பரிசுத்தமாக்கிப் பாதுகாக்க முடியும். இவ்வாறான ஒழுக்க முறை புதியதோ இஸ்லாத்துக்கு மட்டும் உரியதோ அல்ல. அது ஆரம்பத்தில் (கிறிஸ்தவம், யூதம், இந்து சமயம் உட்பட) ஏனைய சமயங்களாலும் போதிக்கப்பட்ட ஒன்றே. இள வயதினரோ முதியவரோ சிக்கலான பாலியல் வாழ்க்கையொன்றில் ஈடுபட்டுத் தனது உடல் ரீதியான ஆசைகளுக்கு அடிமைப்படுவது நல்ல விடயம் எனப் புத்தியுள்ள எவரும் கருதமாட்டார். இறை விசுவாசமுள்ள மக்கள் பாலின்பத்திற்குரிய சரியான இடம் திருமணத்திற்குள்ளேயே இருப்பதாகக் கருதுவர். பல சமூகங்களில் பாலியல் நடைமுறைகள் தொடர்பான இந்தப் பழைமை பேணும் மனப்பாங்கு இளம் சந்ததியினரால் நிராகரிக்கப்பட்டிருப்பதே இப்போதுள்ள பிரச்சினையாகும்.

தற்காலத்தில் பாலுறவு மூலம் பரவும் நோய்களுக்கு வழிகாட்டும் பாதைகள் அகலத் திறந்து, அழைப்பு விடுப்பனவாக இருக்கின்றன. அவற்றைத் தவிர்ப்பதற்கு அர்ப்பணிப்புத் தேவைப்படுகிறது. தவிர்ப்பு முறையின் நன்மைகளோ பல. அதேவேளை சட்ட விரோதமான பாலுறவை அனுபவிப்பதன் விளைவுகளோ பாரதூரமானவை. இஸ்லாமிய நடைமுறையை முழுமையாக ஆராயும் போது, அது குடும்பத்தின் பாதுகாப்பையும் புனிதத்துவத்தையுமே முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. நாணமும் தன்னடக்கமும் உள்ள விதத்தில் ஆடை அணிதல், திருமணத்துக்குப் புறம்பான பாலியல் தொடர்புகளைத் தவிர்த்தல், அந்நியமான ஆண், பெண்கள் நாள் குறித்து உறவாடுதலைத் தவிர்த்தல், இரு பாலாருக்குமிடையே உணர்ச்சிகளைத் தூண்டும் விதமான தொடர்பாடலைத் தவிர்த்தல், மேற்பார்வையின்றி ஆண், பெண் கலப்பதைத் தடுத்தல், ஆபாச இலக்கியங்கள், ஆபாசமான காட்சிகளைக் கொண்ட TV நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் மற்றும் பாலுணர்வைத் தூண்டுகின்ற விளம்பரங்கள், இசை முதலிய அனைத்தையும் தவிர்த்தல் போன்ற விடயங்களுக்கு அது பாரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. இவை யாவும் விபசாரத்துக்கும் தகாத நடத்தைக்கும் இட்டுச்செல்லும் பாதைகளை அடைப்பதற்கான முயற்சிகளாகும். மேலும், பொறுப்பற்ற பாலுறவின் ஆபத்துக்கள் பற்றித் தம் பதின்மவயதுப் பிள்ளைகளுக்கு விளக்குவது பெற்றாரின் பொறுப்பாகும்.

'ஸினா' என்னும் சட்ட விரோத பாலியல் தொடர்புகளைத் தவிர்ப்பதற்கான இத்தவிர்ப்பு அணுகுமுறை குழந்தைப் பருவத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இளைஞர், யுவதியரின் பாலியல் உந்துதல்களை சமனப்படுத்துவதற்குத் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

மனிதர்களில் காணப்படக்கூடிய மிதமிஞ்சிய பாலின்ப ஆசைகளை அல்குர்ஆன் இனங்கண்டுள்ளது. நபி யூஸுஃப் (அலை) அவர்கள் கூட, அல்லாஹ் தன் கருணையினால் அவர்களைப் பாதுகாத்திருக்கா விட்டால் ஒரு பெண்ணின் பாலியல் தூண்டல்களுக்கு ஆட்பட்டிருக்கக் கூடும்.

மேலும் அவர் எவளுடைய வீட்டில் இருந்தாரோ, அவள் அவர் மீது காதல் கொண்டு தன் விருப்பத்திற்கிணங்குமாறு எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு அவரை "வாரும்" என்றழைத்தாள்; அ(தற்க)வர், "அல்லாஹ் (இத்தீய செயலிலிருந்து) காத்தருள்வானாகவும்! நிச்சயமாக என் எஜமானனாகிய (உன் கண)வர் என் தங்குமிடத்தை அழகாக்கி வைத்திருக்கிறார்; நிச்சயமாக (இத்தகைய நன்மை செய்வோருக்குத் துரோகம் செய்யும்) அநியாயக்காரர்கள் வெற்றி பெற மாட்டார்கள்" என்று கூறினார்.

அவள் அவரை (அடைய) திடமாக ஆசை கொண்டு விட்டாள்; அவர் தன் இரட்சகனுடைய சான்றைக் கண்டிராவிடில், அவரும் அவள் மீது ஆசை கொண்டே இருப்பார். தீமையையும் மானக்கேடான செயல்களையும் அவரை விட்டும் நாம் திருப்பி விடுவதற்காக (அவருக்கு) இவ்வாறு (எச்சரிக்கை செய்தோம்). நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் அடியார்களில் உள்ளவராவார். (அல்குர்ஆன் 12: 23- 24)

ஆணுக்கும் பெண்ணுக்கும் இறைவன் வழங்கியுள்ள பாலியல் தேவை பொதுவாக அடங்கியே இருக்கிறது. அது வலிந்து தூண்டிக் கிளறிவிடப்படக் கூடாது. எமது பாலியல் தேவைகள் திருமணத்தின் மூலமே நிறைவு செய்யப்பட வேண்டும். தூண்டுதல்கள் மலிந்திருக்கும் போது பாலின்ப இச்சை தூண்டிவிடப்பட்டு அதனைக் கட்டுப்படுத்துவது சிரமமாகி விடுகிறது. பொதுவாக ஆண்களில் பாலின்பக் கிளர்ச்சியானது பெண்களை விட வெளிப்படையானதாகவும் கட்டுப்பாடு குறைந்ததாகவும் இருக்கும். ஆண் பிள்ளைகள் பருவமெய்தியதும் அவர்களின் பாலியல் உணர்வுகள் விழிப்படைகின்றன. ஆண்களை விடப் பெண்கள் தங்கள் பாலியல் ஆசைகளின் மீதும் நடத்தையின் மீதும் கூடுதலான கட்டுப்பாடுடையவர்களாக இருக்கின்றனர்.

இருபத்தோராம் நூற்றாண்டின் பல சமூகங்களில் பரவலாகக் காணப்படுகின்ற பாலியல் விடயத்தில் 'அனைத்தையும் அனுமதிக்கின்ற' சூழ்நிலை வியப்புக்குரியதல்ல. இது தொடர்பாக இளைஞர்களுக்கு உதவுவதற்கெனச் சமூகம் செய்துகொண்டிருப்பது மிகச் சொற்பமே. இது, வாலிபர்களின் கைகளைக் கட்டிப்போட்டு அவர்களை ஓர் ஏரியினுள் எறிந்த பின்னர் 'நனையாமல் காத்துக் கொள்ளுங்கள்!' எனக் கூறுவதற்கு ஒப்பானது. உளத் தூண்டுதல்கள் வாலிபர்களில் பாலின்ப ஆசையை கொளுந்து விட்டெரியச் செய்கின்றன. அதேவேளை அவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு தகாத உறவுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனச் சமூகம் எதிர்பார்க்கிறது. இது, சுவை மிக்க மீனொன்றை ஒரு பூனையின் முன்னிலையில் வைத்துவிட்டு 'இதைச் சாப்பிடாதே' எனக் கூறுவது போல் இருக்கிறது. தூண்டுதல்கள் இல்லாத நிலையில்தான் தவிர்த்துக் கொள்ளுதல் இலகுவானதாகவும் சாத்திய மானதாகவும் இருக்கும்.

தொடுதல், பார்வை, கேள்வி, மண நுகர்ச்சி அல்லது வெறும் கற்பனை முதலியவற்றினூடாக ஆண்களின் பாலுணர்வு எளிதில் கிளறி விடப்படலாம். எனவே, தூண்டுதலுக்கும் கவர்ச்சிக்கும் உணர்ச்சிக் கிளர்வுக்கும் காரணமாக அமையக் கூடிய காரணிகள் அனைத்தும் முடிந்தளவு நீக்கப்பட வேண்டும். பிரச்சினையில் வீழ்ந்த பின்

அதிலிருந்து தப்பிக்கொள்ளத் தடுமாறுவதை விட, அப்பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்வதற்கான பாதுகாப்பு அணுகுமுறையைக் கையாள்வதே விவேகமான செயலாகும். ஒருவரின் உணர்வுகள் கிளறிவிடப்பட்ட பின்னர் அவரது பாதுகாப்புப் பொறிமுறைகள் திடீரென நலிவடை கின்றன. இதனால் தூண்டுதலுக்கு இடங்கொடுக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

அல்குர்ஆனின் அணுகுமுறையானது தவிர்ப்பை ஊக்குவிப்பதும் முழுமையானது மாகும். பாலியல் ரீதியில் அனைத்தையும் அனுமதிக்கின்ற ஒரு சமூகத்தில், விரும்பத்தக்க ஒழுக்க விழுமியங்களை வாலிபர்கள் பேணிக்கொள்வது எப்படி என்பதே இங்கு கேள்வியாக இருக்கிறது. இது மனிதப் பிறவிகளுக்குச் சாத்தியமானதா? இஸ்லாமியச் சட்டத்தின்படி தவறு செய்வதற்கு வழிகோலும் எதுவும் தவறானதே. எனவே, பாலியல் ரீதியான நாணத்தையும் உடல் மீதான சுய கட்டுப்பாட்டையும் குலைத்து விடுகின்ற எதுவும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

சட்டத்துக்குப் புறம்பான பாலுறவுக்கு இட்டுச் செல்லும் பாதைகளை அடைப்பதற் கான பல நடவடிக்கைகள் கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. உணர்வுத் தூண்டுதல் களைக் குறைக்கும் செயன்முறை வாழ்க்கை முழுவதும் நீடிக்க வேண்டும். அதற்குப் பெற்றோரும் விரிந்த குடும்பம், பள்ளிக்கூடம், தொடர்பு சாதனங்கள், சமுதாயம் என்பன வும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாணம் (ஹயா)

ஒரு குழந்தையின் அந்தரங்க உறுப்புக்களை மதித்து நடப்பதன் மூலம் பிறப்பு முதலே நாணம் பற்றிய கருத்துப் படிவத்தை உருவாக்குவது அவசியம். குழந்தையைக் குளிப்பாட் டும் நேரம் தவிர்த்து வேறு சந்தர்ப்பங்களில் பெற்றார் அதன் அந்தரங்க உறுப்புக்களைத் தொடத் தேவையில்லை. அவ்வாறு குளிப்பாட்டும் நேரத்தில் தொடும் போது தமது கைகளைத் துணியினால் சுற்றிக்கொண்டு ஒரு குறுகிய நேரத்துக்கு மாத்திரமே அவ்வாறு செய்தல் வேண்டும். மேலும், மூன்று வயதை அடைந்துவிட்ட பின் குழந்தையைக் கழுவும் போது கூட அதன் அந்தரங்கப் பகுதிகள் துணியினால் மூடப்பட்டிருக்க வேண்டும். பாலுறுப்புக்கள் வெளியே தெரிவதைத் தவிர்ப்பது பிள்ளையின் தனிப்பட்ட அந்தரங்கத் தன்மையை மேம்படுத்த உதவும்.

நாணம் (ஹயா) என்றால் என்ன? ஒருவரை இழிவு படுத்தக்கூடிய செய்கையொன்றி னால் வெட்கமும் கூச்சமும் சங்கடமும் அடைவதையே நாணம் என்கிறோம். ஒரு தகாத செயல் காரணமாக ஒருவரில் சங்கடத்தையும் பயத்தையும் ஏற்படுத்தக்கூடிய மனப் பாங்கை அல்லது நடத்தைப் போக்கையே அறபு மொழியில் ஹயா என்கின்றனர்.

குற்றச் செயல்களையும் மானக்கேடான, அசிங்கமான காரியங்களையும் செய்வதை விட்டும் ஒருவரைத் தடுக்கின்ற ஒரு நடத்தைச் சிறப்பியல்பையே நாணம் எனச் சட்ட அறிஞர்கள் வரையறை செய்கின்றனர்.

நாணம் என்பது குடும்பத்திலும் சமூகத்திலும் ஒரு நியமமாகக் கருதப்படும் வகையில் பெற்றார் தொடர்ச்சியாக அப்பண்பினை ஊட்டிவர வேண்டும். இறந்த ஒருவரின் உடலை நீராட்டும் போதுகூட அதனைச் செய்பவர்கள் அவரது பாலுறுப்பினை உற்று நோக்கவோ நேரடியாகக் கையினால் தொடவோ கூடாது. இறந்தவரின் அந்தரங்க உறுப்புக்களைச் சுத்தம் செய்வதற்குத் துணியொன்றைப் பயன்படுத்த வேண்டும். நாணத்தின் பரப்பையும் பரிமாணங்களையும் உணர்த்துவதற்கு நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

> விசுவாசமானது எழுபதுக்கும் மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் மிகச் சிறந்தது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை எனக் கூறுவதாகும். அவற்றுள் மிகக் குறைந்த தரமுடையது நடை பாதையிலுள்ள தீங்கான பொருளொன்றை நீக்குவதாகும். நாணமும் விசுவாசத்தின் ஒரு பிரிவே. (முஸ்லிம்)



ஆரம்ப கால நபித்துவத்திலிருந்து மக்கள் வாரிசாகப் பெற்றுக்கொண்ட விடயம் என்ன வெனில், ஒருவருக்கு நாணம் இல்லையாயின் அவர்தான் விரும்பியதையெல்லாம் செய்யக் கூடும் என்பதே. (அபூதாவூத்)

நபி (ஸல்) கூறினார்கள்:

ஆபாசத் தன்மையானது அசிங்கத் தன்மையை மாத்திரமே உருவாக்க முடியும். நாணமோ நல்ல தன்மையையும் அழகையும் மாத்திரமே தோற்றுவிக்கும். (இப்ன் மாஜாஹ்)

அல் ஜுர்ஜானி என்பவர் நாணத்தைப் பின்வரும் இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றார்:

1. *உளவியல் ரீதியான அம்சம்: இது எல்லா மனிதப் பிறவிகளிலும் காணப்படுகிறது. தமது அந்தரங்க உறுப்புக்களை வெளிக்காட்டாமை, ஏனையோர் முன்னிலையில் பாலுறவு கொள்ளாமை முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மனிதரில் காணப்படும் இவ்வகையான நாணம் அவர்களது உள்ளார்ந்த இயல்பின் ஒரு பகுதியாக இருக்கலாம்.*

2. *விசுவாசத்தின் (ஈமானின்) காரணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நாணம்: இறைவன் மீதுள்ள அன்பு காரணமாகவும் அவனது தண்டனைகள் பற்றிய பயம் காரணமாகவும் ஒருவர் தீமைகள் புரிவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு இதுவே காரணம்.*

நாணத்துக்குரிய செயற்பாடுகளாகப் பிள்ளைகளுக்குப் பின்வருவன போதிக்கப்பட வேண்டும்:

1. எதிர்ப்பாலாரை நோக்கும் போது அல்லது ஆபாசமான காட்சியொன்றைக் காணும் போது பார்வையைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும்.

2. நடந்து செல்லும் போது பாலுணர்வுகளைத் தூண்டாத வகையிலும் எதிர்ப் பாலாரைப் பிரதிபண்ணாத விதத்திலும் நாணத்தைப் பேணுதல்.

3. உரையாடும் போது மரியாதையான முறையிலும் பாலுணர்வுக்குரிய சாயல்கள் இல்லாத வகையிலும் உரையாடுதல்.

4. அழகாகவும் கண்ணியமான முறையிலும் நாணத்தைப் பேணும் வகையில் உடை அணிதல்.

நாணம் அவசியப்படாத மூன்று நிலைமைகள்:

1. அறிவைத் தேடும் போது: அறிவைத் தேடுகையில் - குறிப்பாக திருமணம் சார்ந்த பாலுறவு, மாதவிடாய், கர்ப்பம், நித்திரையில் விந்து வெளியேறல் போன்ற விடயங்கள் தொடர்பாக சமய அறிவுறுத்தல்கள் நிகழும் போது- நாணப்பட வேண்டிய அவசிய மில்லை. கல்வியைப் பொறுத்தமட்டில் சட்ட அறிஞர்கள் பின்வருமாறு கூறுவார்கள். "சன்மார்க்கக் கற்றலில் சங்கடத்துக்கு (வெட்கத்துக்கு) இடமில்லை". இதனையே சற்று விரிவுபடுத்தி "அறிவைத் தேடுவதில் சங்கடத்துக்கு (வெட்கத்துக்கு) இடமில்லை" என நாம் கூறலாம்.

2. சீர்திருத்தம் செய்யும் போது: நன்மையை ஊக்குவித்து தீமையைத் தடுங்கள். ஏனெனில், அது உறுதியாகவும் விவேகத்துடனும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாகும்.

நாணம் இறை விசுவாசத்தின் ஒரு பகுதியாகும்

3. விவாக வாழ்க்கையில்: வீட்டிலிருக்கும் போது தம்பதியரிடையே நாணமோ வெட்கமோ இருக்க வேண்டியதில்லை. நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

> உங்கள் வாழ்க்கைத் துணைவருக்குத் தவிர உங்கள் அந்தரங்க உறுப்புக்களை வெளிக் காட்டாதீர்கள். (அபூ தாவூத், இப்ன் மாஜாஹ் மற்றும் அல் ஹாகிம்)

கணவன்- மனைவி அல்லாதவரிடையே பாலுறவு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ள அதே வேளையில், தமது படுக்கையறையின் அந்தரங்கத்தில் தம்பதியரிடையே எந்தவிதக் கட்டுப்பாடும் தேவைப்படுவதில்லை. தம் பிள்ளைகள் மத்தியில் நாணத்தைப் போஷித்து வளர்ப்பதற்குப் பெற்றோர் தவறினால் அதனால் சமூகம் பாதிக்கப்படும். உணர்வுத் தூண்டுதலுக்கும் பால் ரீதியான கவர்ச்சிக்கும் எதிரான தடுப்பு அரணின் வலிமையான அத்திவாரமாக நாணமே விளங்குகிறது. தேசங்களுக்கு மத்தியில் நாண இயல்புகள் இல்லாமற் போனதன் விளைவுகள் பற்றிய சில அவதானங்கள் பின்வருமாறு:

- பல நாடுகளில் மியூஸியம்களிலும் பொதுச்சதுக்கங்களிலும் கலை, கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையின் கீழ் தம் அந்தரங்க உறுப்புக்களைக் காட்டிக் கொண்டிருக்கும் நிர்வாணமான ஆண், பெண்களைச் சித்தரிக்கும் சிலைகளும் உருவப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள சில கோயில்களிலும் இவை காணப்படுகின்றன.

- பலரைப் பொறுத்தமட்டில் கலைக்கும் ஆபாசத்துக்கும் இடையிலான தெளிவான பிரிகோடொன்று இருக்கிறது. மேற்கத்திய கலை, பாரம்பரியங்களில் நிர்வாண வடிவ மானது சுவாரஷ்யமான விருத்திப் போக்கைக் காட்டுகிறது. ஏனெனில், மனிதனின் நல்லியல்பையும் கௌரவத்தையும் புகழையும் குறிக்கும் அடையாளமாகக் கருதியே அவர்கள் இதனைச் செய்கின்றனர். நல்ல தன்மை அனைத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஓர் இறைத் தூதராகிய தாவூத் (அலை) அவர்களைச் சித்தரிக்கும் வகையில் மைக்கல் ஏஞ்சலோ செய்த 'டேவிட்' என்ற முழு நிர்வாணச் சிலை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். உலகின் பல பிரதேசங்களிலுள்ள கோயில்களில் சமயப் பின்னணியைக் கொண்ட நிர்வாணச் சிலைகளும் உருவப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. உண்மையில் டேவிட் என்ற சிலை அந்த இறை தூதரையன்றி மறுமலர்ச்சிக் காலத்துக்குரிய மனிதனையே அடையாளப்படுத்துகிறது. நிர்வாண

வடிவங்கள் தொடர்பான சமூக அங்கீகாரம், வியாக்கியானம் என்பன பற்றிப் பெற்றார் மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

- சிலி நாட்டின் சந்தியாகோ நகரிலுள்ள மியூஸியமொன்றில் ஓர் ஆணும் பெண்ணும் பாலுறவு கொள்வதைக் காட்டும் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
- ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஓர் இளம் பெண் தனது படுக்கையறையிலும் கழிவறையிலும் வீடியோ கமராக்களைப் பொருத்திவைத்து அவற்றில் பதியப்படும் காட்சிகளை தினமும் 24 மணி நேரம் இண்டர்நெட்டில் காட்சிப்படுத்திக் கொண்டிருந்தாள்.
- ஒரு குழந்தை பிறக்கும் நிகழ்ச்சி முழு விபரத்துடன் நேரடியாக இண்டர்நெட்டில் காட்டப்பட்ட போது ஐக்கிய அமெரிக்காவில் 50,000 பேர் அதனைப் பார்ப்பதற்குத் திரண்டிருந்தனர். (Time சஞ்சிகை; June 29, 1998)

நாணம் பற்றிய அறாபியக் கவிதை

உங்கள் நடத்தையின் விளைவுகள் பற்றி
நீங்கள் அச்சம் கொள்ளவில்லையானால்,
நாணத்தோடு நடந்துகொள்ளத் தவறி விடுவீர்களானால்
உங்களுக்கு வேண்டியதையெல்லாம் நீங்கள் செய்யலாம்.
ஆனால், இறைவன் மீது ஆணையாக நாணமற்ற
வாழ்க்கையில் எவ்வித நன்மையுமில்லை.
ஒருவர் நாணத்தோடு நடந்துகொள்ளும் வரையில்
அவரது வாழ்க்கை சௌகரியமானதாகவே இருக்கும்-
பட்டையினால் போர்த்தப்பட்ட ஒரு மரம்
என்றும் பாதுகாப்பாய் இருப்பது போல!

நாணத்திற்குரிய சில ஒழுக்க ஆசாரங்கள் கீழே பட்டியல் படுத்தப்பட்டுள்ளன:

- பிள்ளைகள் வளர்ந்த பின், பெற்றாரின் அல்லது உறவினரின் படுக்கையறைகளுக்குள் நுழைய முன்னர் கதவில் தட்டி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். (அவர்கள் ஆடை கலைந்த நிலையில் இருப்பின் அதனைக் காண்பதைத் தவிர்ப்பதற்காக)
- பெற்றாரும் உடன் பிறந்தவர்களும் வீட்டினுள்ளும் வீட்டுக்கு வெளியேயும் மரியாதையான முறையில் ஆடை அணிந்து தம் உடலை மறைத்துக்கொள்ள வேண்டும். மேக்-அப் செய்வதும், பாலியல் ரீதியான கவர்ச்சியை ஏற்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள், நறுமணப் பொருட்கள் என்பவற்றின் பாவனையும் தவிர்க்கப்பட வேண்டும். பிள்ளைகளின் மத்தியிலிருக்கும் போது பாலியல் ரீதியான பேச்சுக்கள் எழாத வகையில் பெற்றோர் தம் உரையாடலில் கவனமாக இருத்தல் வேண்டும். பெற்றார் தம் பிள்ளைகளின் முன்னிலையில் ஆழமாக முத்தமிடுதல், அந்தரங்க உறுப்புக்களைத் தொடுதல் போன்ற பாலியல் ரீதியான செய்கைகளில் ஈடுபடக்கூடாது.
- பத்து வயதை அடைந்த பின்னர் பிள்ளைகளைத் தனித்தனிப் படுக்கைகளில் நித்திரை கொள்ளச் செய்தல் வேண்டும்.
- எதிர்ப்பாலாரைக் காணும் போது தம் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் அறிவுறுத்துவது அவசியம்.

(நபியே!) விசுவாசிகளுக்கு நீர் கூறுவீராக! "அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிக்காத்துக் கொள்ளவும். அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கு உணர்பவன். மேலும், (நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக! தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிக்காத்துக் கொள்ளவும்; அதினின்று வெளியில் தெரியக்கூடியவைகளைத் தவிர, தங்கள் (அலங்காரத்தை) அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம்; தங்கள் முந்தானைகளை தம் மேல் சட்டைகளின் மீது போட்டு (தலை, கழுத்து, நெஞ்சு ஆகியவற்றை மறைத்து)க் கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் தம் அலங்காரத்தை தம் கணவர்கள் அல்லது தம் தந்தையர் அல்லது தம் கணவரின் தந்தையர் அல்லது தம் குமாரர்கள் அல்லது தம் கணவர்களின் குமாரர்கள் அல்லது தங்கள் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் குமாரர்கள் அல்லது தம் சகோதரிகளின் குமாரர்கள் அல்லது தங்களுடைய பெண்கள் அல்லது தங்களுடைய வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் அல்லது (ஆண்களில் பெண்களின் மீது) விருப்பமற்ற பணியாளர்கள், அல்லது பெண்களின் மறைவான அவயவங்களை அறிந்து கொள்ளாத சிறு பிராயத்தையுடைய சிறார்கள் ஆகியவர்களைத் தவிர, (மற்றெவருக்கும்) வெளிப்படுத்த வேண்டாம்; விசுவாசிகளே! நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வின் பக்கம் (பாவ மன்னிப்பைக் கோரி) தவ்பாச் செய்யுங்கள். (அல் குர்ஆன் 24: 30- 31)

பார்வையைத் தாழ்த்திக் கொள்வது அவசியம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவரொருவர் தனக்கு விலக்கப்பட்டவையிலிருந்து தனது பார்வையைத் தாழ்த்திக் கொள்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் இதயத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவான்.

(இப்ன் மஸ்ஊத்)

- பாலியல் ரீதியான கவர்ச்சியைத் தவிர்த்துக் கொள்வதற்காக மரியாதையான முறையில் நடந்துசெல்ல வேண்டும் என பெண் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது அவசியம். அவர்கள் தமது கால்களை வெளிக்காட்டும் வண்ணம் தமது ஆடையை உயர்த்திப் பிடிக்கக்கூடாது. அத்தோடு, பாலியல் ரீதியில் அழைப்பு விடுக்கும் பாணியில் பேசுவதையும் அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

  (அந்நியருடன்) பேச்சில் நீங்கள் நளினம் காட்டாதீர்கள்; ஏனென்றால், எவனுடைய இதயத்தில் (பாவ) நோய் இருக்கின்றதோ அத்தகையவன் (தவறான விருப்பங்களில்) ஆசை கொள்வான்; மேலும், நீங்கள் (நேர்மையான) பேச்சையே பேசிவிடுங்கள்.

  (அல் குர்ஆன் 33:32)

- இரவில் நேரம் பிந்தும் வரை வீட்டுக்கு வெளியே பிற இடங்களில் இருப்பதற்கு ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் அனுமதிக்கக்கூடாது. பெற்றாரும் பிள்ளைகளும் தம் பரஸ்பர இணக்கத்தோடு நியாயமான வீடடங்கு ஒழுங்கு முறையொன்றை அமுல்படுத்தலாம்.

- சில வகையான இசை தீங்கு விளைவிக்கக்கூடியது. (உதாரணமாக, பாலியல் உணர்வுகளைக் கிளறிவிடும் இசையும் வெட்கக்கேடான வரிகளைக் கொண்ட பாடல்களும்). மூளையிலுள்ள பூம்புருவுடல் (pineal body) என்னும் சுரப்பியினால் சுரக்கப்படும் மெலடோனின் என்ற ஹோர்மோனைச் செயற்படுத்துவதன் மூலம் இசையானது ஒருவரது மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். பூப்படைதலைத் தூண்டுவதும் இனப்பெருக்க வட்டம், பாலின்பம் சார்ந்த மனநிலை ஆகியவற்றைப் பாதிப்பதும் இச்சுரப்பியே. வெளிப்படையாகப் பாலியல் பண்புகளைக் கொண்ட துள்ளல் இசையானது பாலின்ப ஆசையை அதிகரிக்கச் செய்கிறது. சில துள்ளல் இசை வகைகள் ஆபாச வார்த்தைகளைக் கொண்டுள்ளன. இவற்றைச் செவிமடுக்கப் பிள்ளை களை அனுமதிக்கக்கூடாது. இவ்வகையான இசையைச் செவிமடுக்கும் பிள்ளைகள் தீய செயல்கள் தொடர்பாக உணர்வு மரத்துப் போனவர்களாக மாறிவிடுவர்.

- ஆபாச வீடியோக்களும் படங்களும் புத்தகங்களும் பிள்ளைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. பாலியல் ஆசைகளைத் தாங்க முடியாத மட்டத்துக்கு அவை தூண்டி விடுகின்றன. பிள்ளைகளின் சிந்தனையின் மீது அவற்றின் தாக்கம் நீண்ட காலம் நீடிக்கும். அந்த ஆபாசக்காட்சிகளைக் கற்பனையில் சித்தரித்துக் காண்பதற்கும் பாலின்பச் செயற்பாடுகள் பற்றி பகற்கனவு காண்பதற்கும் அவை காரணமாக அமைகின்றன.

மேற்சொன்ன ஆபாச இலக்கியங்கள், ஆண்களின் காமவெறியைத் தணிப்பதற்காகவே இருக்கின்ற பாலின்பப் பண்டங்களாகப் பெண்களைச் சித்தரித்துச் சீரழிக்கின்றன. இவ்வகையான ஒன்றினால் ஒரு கணவன் தூண்டப்பட்டால், அவன் தனது கிளர்ச்சியைத் தன் சொந்த மனைவியைக் கொண்டே தணித்துக்கொள்ள வேண்டும். ஆனால், விவாகமாகாத ஒருவரினால் இவ்வாறு செய்யமுடியாது. நேரகாலத்தோடு விவாகஞ் செய்வதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாகும்.

ஓர் ஆண் உளக்கிளர்ச்சி அடைவது பற்றி அவனுக்குக் குறைகூற முடியாது. ஆனால், அவன் அவற்றுக்கு அடிமையாகி, அதன் விளைவாக ஏனையவர்களை நோவிக்கும் போது அவன் குற்றவாளியாகிறான். பல ஆண்கள் வேறு பெண்களை ரசனையோடு நோக்குவதன் மூலம் தம் மனைவியை நோவிக்கின்றனர். இதனை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. அறிவித்தல் பலகைகளிலும் சஞ்சிகை அட்டைகளிலும் சுவரொட்டிகளிலும் காணப்படும் சினிமா நட்சத்திரங்களினதும் நாகரிக நங்கையரதும் உருவப்படங்கள் பெரிய பிரச்சினைக்குரியவை. பார்ப்போர் உள்ளங்களில் அவை என்றும் இளமையாகவும் கவர்ச்சியாகவும் நிலைத்து நிற்கும் அதேவேளை, உண்மையான வாழ்க்கைத் துணைவியோ முதுமையடைந்து, கொழுத்து, களைத்துப்போய் விடுகிறாள். தம்பதியர் ஒருவர் மீது ஒருவர் கரிசனையும் கருணையும் காட்டுபவர்களாக இருப்பது அவசியம். நன்கு திட்டமிட்ட முறையில் ஆரோக்கியமான உணவு, பொருத்தமான உடற்பயிற்சி என்பவற்றைப் பயன்படுத்தி, வயது சென்ற பின்னரும் ஒருவர் கவர்ச்சியாக இருக்கமுடியும்.

இண்டர்நெட்டினூடாக நிகழும் ஆண்-பெண் சந்திப்புக்கள், இழிவும் ஆபாசமும் கொண்ட பாலின்ப உரையாடல்கள் மற்றும் ஆபாச வீடியோ காட்சிகள் என்பவை பற்றி இன்றைய பெற்றோர் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும். அவர்கள் தம் பிள்ளைகளை நன்கு கண்காணிப்பதோடு கம்பியூட்டர்களைப் பிள்ளைகளின் படுக்கையறையில் வைக்காது வீட்டில் பொதுவான பகுதியொன்றில் வைத்திருத்தல் வேண்டும்.

ஆடை அணியும் ஒழுங்கு விதிகள்

பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் அடக்கமான முறையில் நடந்து கொள்ளவும் உடையணியவும் வேண்டும். மற்றவர்களைத் தூண்டிக் கவர்ந்திழுக்கக் கூடிய ஆடைகளைத் தவிர்த்துக்கொள்வதோடு தமது உடல் அழகை நோக்கி ஏனையோரின் கவனம் திரும்புவதையும் தவிர்ப்பது அவசியம். தமது உடலின் அங்க அடையாளங்கள் தெரியும் வண்ணம் இறுக்கமான ஆடைகளை அணியவும் கூடாது. ஊடுறுவிப் பார்க்கக்கூடிய மெல்லிய ஆடைகளையும் இருபாலாரும் தவிர்த்தல் வேண்டும். ஆண் பிள்ளைகள் பெண்களைப் போன்று ஆடை அணிவதும் பெண் பிள்ளைகள் ஆண்களைப் போன்று ஆடை அணிவதும் தடுக்கப்பட்டுள்ளன. பின்வரும் ஹதீஸ் இதனைத் தெளிவுபடுத்துகிறது:

> அபூ ஹுரைரா (றழி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: பெண்களைப் போன்று தோற்றமளிக்கும் விதத்தில் உடை அணியும் ஆணையும், ஆண்களைப் போன்று தோற்றமளிக்கும் விதத்தில் உடை அணியும் பெண்ணையும் நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள். (அபூ தாவூத்)

பிள்ளைகள் அணியும் ஆடைகள் முக்கியமானவை. 'ஆள் பாதி; ஆடை பாதி' என்ற பழமொழியும் இதனையே குறிக்கிறது. வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு உடை அணிவதே பொது வழக்கமாக இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு குழுவினரால் அங்கீகரிக்கப்படக்கூடிய முறையில் ஆடைகள் அணியவும் முடியலங்காரம் செய்யவும் நகைகள் அணியவும் பதின்மவயதினர் முயற்சிக்கின்றனர். இவையனைத்தும் படாடோபமானவையாக இராமல் அடக்கமானவையாக இருத்தல் வேண்டும். பொதுவாக, சமூக நியமங்களுக்கு விரோதமான ஆடைகள் அணிவதைப் பெற்றோர் விரும்புவதில்லை. எல்லா வகையான நிலைமைகளிலும் அடக்கமான ஆடைகளை அணிந்து பழகினால் ஏனையவர்களின் மனதில் நல்ல பதிவை ஏற்படுத்தலாம். வரம்பு மீறாத ஆடைகளும் நடத்தையும் பாணிகளுமே அடக்கமானவையாகக் கருதப்படுகின்றன.

தாம் அங்கீகரித்த ஆடைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அணிவதற்குப் பெற்றார் தம் புதல்வியருக்கு முடிந்தளவு வாய்ப்புக்கொடுக்க வேண்டும். பெண் பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயதைக் கடந்த பின் தாம் அணிய விரும்பும் ஆடைகள் பற்றிப் பலமான அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பர். பெற்றார் தேர்ந்து கொடுக்கும் ஆடைகளை அணிய அவர்கள் மறுக்கக்கூடும். பொருத்தமான இரண்டு அல்லது மூன்று உடைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்வதன் மூலம் இப்பிரச்சினையை அமைதியாகத் தீர்க்கலாம். தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் தனக்கு வழங்கப்பட்டதை உணர்ந்து பிள்ளையும் திருப்திப்படும்.

பள்ளிக்கூடங்களில் ஒரே விதமான சீருடைகளை அணிவதால் ஒவ்வொரு நாள் காலையிலும் எதை அணிவது என்ற பிரச்சினை ஏற்படாது. எனினும், மாலை வகுப்புக்களுக்கும் பிரத்தியேக வகுப்புக்களுக்கும் செல்லும் போது அவர்கள் அணியும் ஆடைகள் பற்றிப் பெற்றார் விழிப்பாக இருக்க வேண்டும். மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்திழுக்கும் ஆடைகள் கவர்ச்சியானவையாகத் தோன்றினாலும் அவை ஆண் பிள்ளைகளின் உள்ளத்தில் தப்பான எண்ணங்களை ஏற்படுத்தித் தீய விளைவுகளுக்குக் காரணமாக அமையலாம்.

கட்டுப்பாடற்ற கலப்புக்கும் 'கல்வாஹ்'கும் இடமில்லை

ஏனையோர் கண்டுகொள்ள முடியாத விதத்தில் மஹ்ரம் அல்லாத ஓர் ஆணும் பெண்ணும் தனியாகச் சந்தித்துக்கொள்வதே 'கல்வாஹ்' எனப்படுகிறது. இது செய்த்தானின் ஒரு பொறியாகும். கல்வாஹ் எந்த வகையிலும் அனுமதிக்கப்படக் கூடாது. நபி (ஸல்) அவர்கள் இது பற்றிப் பின்வருமாறு எச்சரித்தார்கள்.

> தனிமையான இடத்தில் ஓர் அந்நியமான ஆணும் பெண்ணும் தனித்திருக்கும் போது அவர்களோடு மூன்றாவது நபராக செய்த்தான் இருப்பான். (அல் திர்மிதீ)

ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் சுதந்திரமாகக் கலப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஆனால், பெற்றோரின் மேற்பார்வையில், ஒழுக்க வரையறைகளுக்குள் கட்டுப்பாடான சூழலொன்றில் நெருங்கிய கண்காணிப்புடன் கலப்பது அனுமதிக்கப் படலாம். ஒரு பெண் பிள்ளையை மஸ்ஜிதிலோ பள்ளிக்கூடத்திலோ நூலகத்திலோ அல்லது சந்தையிலோ அடிக்கடி காணும் ஓர் இளைஞன் அவளால் கவரப்படலாம். அவள் தன் மீது ஆர்வம் கொண்டுள்ளாளா என்பதை அறிந்து கொள்வதற்காக அவன் அவளை அணுகிக் குற்றமற்ற உரையாடலொன்றை ஆரம்பிக்கலாம். அவ்வாறு உரையாடிப் பழகிய பின்னர் தனியே சந்திப்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்துகொள்வர். மற்றவர்களது பார்வையில் படாமல் தனியாக இருக்கும் வேளையில் அவன் அவளைத் தொடவோ முத்தமிடவோ முயற்சிக்கக்கூடும். அவள் அதனை அனுமதித்தால் வெகு விரைவில் மேலும் சுதந்திரமாக நடந்துகொள்ள அவன் துணிந்துவிடுவான். இறுதியில் அது பாலுறவில் முடிந்து வாழ்க்கையின் சீரழிவுக்கு வழி வகுக்கும்.

பொறி!

விழித் தொடர்பு ⇨ அங்கீகாரப் புன்னகை, வந்தனம் கூறல் ⇨ உரையாடல் ⇨ சந்திப்பு ⇨ தொடுதல் ⇨ உணர்ச்சிக் கிளறல் ⇨ மீள முடியாத படுகுழி ⇨ பாலின்பப் பாவச் செயல் ⇨ பிரச்சினைகள்!!

பாலுறவினால் பரவும் நோய்கள், கர்ப்பம், கருக்கலைப்பு அல்லது சட்டவிரோதமான குழந்தை என்பன இதன் விளைவுகளாக அமையலாம்.

மேற்சொல்லப்பட்ட விதி ஒருபோதும் தளர்த்தப்படக்கூடாது. அவ்வாறு தளர்த்தப் பட்டால் பெருநாசத்திற்கு வழிவகுத்துவிடும். அதிக மார்க்க பக்தியுள்ள மனிதர்கள் விடயத்தில் கூட அது தீமைக்கான பலமான அழைப்பாக இருக்கும். மனிதர்கள் அனைவரும் தசைகளாலும் உணர்ச்சிகளாலும் ஆக்கப்பட்டுள்ளனர். நபி யூஸுஃப் (அலை) அவர்கள் கூட இவ்வாறான சவாலுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

- நாள் குறித்து தனியே உறவாடுதல்: மேற்குலகில் காணப்படும் dating எனக்கூடிய ஆண், பெண் அறிமுக முறை பதின்ம வயதினரைப் பாலின்பத்தை நோக்கி இழுக்கும் வாயிலாக இருக்கிறது. இதில் ஈடுபடும் நபர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக் கும் அவர்கள் சந்திக்கும் சமூகங்களுக்கும் அது பல்வேறு அவலங்களை ஏற்படுத்து கிறது. இவ்விடயம் தொடர்பாக 1999ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் ஆய்வொன்று நடத்தப்பட்டது. அதன்படி முதல் வருடக் கல்லூரி மாணவர்களில் 25 சதவீதமானோர் தம்மோடு நாட்குறித்து உறவாட வந்த ஒரு பெண்ணுக்காக உணவுக் கட்டணத்தைத் தாம் செலுத்திய பின்னர், தாம் விரும்பியவாறு அவள் நடந்துகொள்ள மறுத்தால் அவளோடு வல்லுறவு கொள்ளும் உரிமை தமக்கிருப்ப தாகக் கருதி அவர்களோடு வல்லுறவில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான கற்பழிப்புக் களில் பெரும்பாலானவை யாருக்கும் தெரியவருவதில்லை. (Norris மற்றும் ஏனையோர், 1999; Bohmer, 1993).

- மதுபானம், போதைப் பொருட்கள், பாலுணர்வைத் தூண்டும் இசை, உடல் வருடுதல், எவரும் காணாத விதத்தில் தனித்திருத்தல் போன்ற, பாலியல் ரீதியான தன்னடக்கத்தைச் சிதைத்துச் சுய கட்டுப்பாட்டை இழக்கச் செய்யும் எந்த விடயமும் அனுமதிக்கப்படக் கூடாது. முத்தமிடுதலும் வருடுதலும் உடலைப் பாலுறவுக்குத் தயாராக்குகின்றன. இவற்றின் விளைவாக உடல் மீட்சியில்லாத ஒரு நிலைக்குத் தூண்டப்படலாம். Dating முறையும் பாலியல் சுதந்திரமும் திருமணத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றன. 'ஒருவரை ஒருவர் பரீட்சித்துப் பார்த்துக் கொண்ட' ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொள்வார்கள் எனக் கருதுவது ஆதாரமற்றது. இவ்வாறான சுதந்திரங்களை அனுமதிக்கின்ற எந்தவொரு சமூகமும் உறுதிப்பாடற்ற குடும்பங்கள், உயர்ந்த விவாகரத்து வீதம் என்பவற்றால் பாதிக்கப்படும்.

சம வயதினர் ஏற்படுத்தும் அழுத்தமும் ஏனைய காரணிகளும்

- பிள்ளைகள் பாலியல் ரீதியான தொடர்புகளில் ஈடுபடுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. சம வயதினர் ஏற்படுத்தும் அழுத்தமே இவற்றுள் மிகப் பொதுவானதாகும். 'எல்லோரும் அவ்வாறு செய்கிறார்களே' என்பதே இவர்களது தர்க்கமாக இருக்கும். தாம் தகுதி படைத்தவர்கள் என வளர்ந்தோர் கருத வேண்டும் என்ற ஆவலும், சமூக ரீதியான முன்னேற்றத்துக்கு இதுவொரு வழி என்ற எண்ணமும் திருமணத்துக்கு முந்திய பாலுறவுக் கான ஏனைய காரணங்களாக விளங்குகின்றன. சுய மதிப்புக் குறைவாக உள்ள சிலர், தாம் தந்தையாக அல்லது தாயாக மாறுவதன் மூலம் தம்

மதிப்பை மேம்படுத்திக் கொள்ளலாம் எனக் கருதுகின்றனர். வீட்டில் அன்பும் கணிப்பும் கிடைக்காமையும் ஒரு காரணியாக அமையலாம். இதனால் குடும்பத்தாரிடமிருந்து ஒதுங்கி வேறு ஆட்களைப் பற்றிக் கொள்ள முயற்சிப்பர். சில வேளைகளில் பாலியல் ரீதியான தமது சக்தியைத் திசை திருப்புவதற்கு மாற்று வழி இல்லாமை இவ்வாறான நடத்தைக்குக் காரணமாக அமையலாம்.

- பாலுணர்வைக் கிளறிவிடும் கவர்ச்சிகள் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்படு கின்றன. குறிப்பாகச் சஞ்சிகைகள், சம வயதுக் குழுக்கள், தொலைக்காட்சி என்பன இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் வருடந்தோறும் சுமார் 20,000 பாலுறவுக் காட்சிகள் விளம்பரங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் முதன்மைவேளைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இடம்பெறு கின்றன. எனவே, பெற்றார் தம் பிள்ளைகள் மீது அன்பை ஆழமாகப் பொழிவதோடு தம் பிள்ளைகளின் நேரத்தைப் பயனுள்ள தொழிற்பாடுகளினால் நிரப்ப வேண்டும். அத்தோடு தம் பிள்ளைகளுடன் திறந்த முறையான தொடர்பாடலையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- மதுபானமும் போதைப் பொருட்களும் தீமையானவை. ஏனெனில், அவை சுய கட்டுப்பாட்டைக் குறைப்பதோடு பாலுறவில் ஈடுபடுவது தொடர்பான தன்னடக்கத் தையும் நீக்கிவிடுகின்றன.

- ஆணும், பெண்ணும் உடல் உரசிக்கொள்ளும் நடனங்களும் முத்தமிடுதல், வருடுதல், மஸாஜ் செய்தல், அரவணைத்தல் போன்ற செயற்பாடுகளும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இச்செயற்பாடுகள் அனைத்தும் உடலில் பாலுணர்வைத் தூண்டிவிட்டு அதனைப் பாலுறவை நோக்கி இழுக்கின்றன.

செய்ய வேண்டியவை

பெற்றார் தம் பிள்ளைகளுக்கு நல்ல அறிவுரைகளை வழங்க வேண்டும். உணவு, உடை, உறைவிடம், ஏனைய பௌதிக தேவைகள் என்பவற்றை வழங்குவதற்கு மாத்திரம் தம் கடமையைப் பெற்றார் மட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. அவற்றோடு சேர்த்து ஆன்மீக மற்றும் ஒழுக்க வழிகாட்டலையும் வழங்க வேண்டும்.

- பெற்றார் தம் பிள்ளைகளின் மூளைகளை நல்ல சிந்தனைகளால் நிரப்பவேண்டும். அவர்களது சிந்தனைக்கு ஒழுக்க ரீதியான விவேகத்திற்குரிய தீனி வழங்கப்பட்டு உயர்ந்த நோக்கங்களும் பெறுமானங்களும் அவர்களுக்கு அதிகமாக ஊட்டப்பட வேண்டும். தனது பாலுணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் தகாத முறையில் உறவு கொள்ள அனுமதி கேட்ட இளைஞனோடு நபி (ஸல்) அவர்கள் உரையாடிய விதம் அறிவுரை வழங்குவதற்குரிய சிறந்த முன்மாதிரியாகக் கொள்ளப்படலாம். எவராவது அவனது தாயுடன் அல்லது சகோதரியுடன் அல்லது மகளுடன் அல்லது பெற்றாரின் சகோதரியுடன் அல்லது மனைவியுடன் பாலுறவு கொள்வதை அவன் அனுமதிப்பானா என அன்னார் கேட்டார்கள். ஒவ்வொரு தடவையும் 'இல்லை' என்றே அவன் பதிலளித்தான். அவன் உறவுகொள்ள விரும்பும் பெண்ணும் யாரோ ஒருவருக்குத் தாயாக, சகோதரியாக, மகளாக, பெற்றோரின் சகோதரியாக அல்லது மனைவியாக இருப்பாள் என நபி (ஸல்) அவர்கள் அவ்விளைஞனுக்கு எடுத்துரைத்தார்கள். அவனும் தன் தவறை உணர்ந்து பாவ மன்னிப்புத் தேடினான். அன்னாரும் அவனுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

- பிள்ளையின் சுய அடையாளம் பற்றிய உணர்வை வலுப்படுத்துவது முக்கியமாகும். இது கூட்டத்தோடு சேர்ந்து அள்ளிச் செல்லப்படுவதைத் தவிர்க்க முடியும். பிள்ளைகளுக்குத் தனித்துவமான பெறுமானத் தொகுதியொன்றையும் உலகக் கண்ணோட்டமொன்றை

யும் வாழ்க்கை முறையொன்றையும் போதிப்பதன் மூலம் பெற்றார் இதனைச் சாதித்துக் கொள்ளலாம். இந்தவகையில் மதுபானம் அருந்துதல், போதைப் பொருட் களை உட்கொள்ளல், திருமணத்துக்கு முந்திய பாலுறவில் ஈடுபடல் போன்றவற்றில் ஈடுபடுவது கூடாது எனப் பிள்ளைகள் தமக்கே நினைவூட்டிக்கொள்வர். இவ்விடயங் கள் தொடர்பாகத் தாம் தவறு செய்யாமல் பெற்றார் தம் பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரிகளாக இருத்தல் வேண்டும்.

திருமணத்தை முற்படுத்தல்

திருமணத்திற்கெனக் குறித்த வயதொன்றில்லை. பல்கலைக்கழகப் பட்டமொன்றைப் பெற்ற பின் அல்லது தொழிலொன்றைத் தேடிக்கொண்ட பின்னர் அல்லது 26 வயதைக் கடந்த பின்னர் திருமணம் செய்வது இன்றைய இளைஞரிடையே நிலவும் பாணியாக இருக்கிறது. இளம் பெண்களோ 24 வயது கடந்த பின்னர் திருமணம் செய்ய நாடுகின்றனர். 'நான் அதற்குத் தயாரில்லை' என்பதே இதற்கு அவர்கள் கூறும் காரணமாக இருக்கிறது. எல்லோரையும் போல் பாலுறுப்புக்களும் பாலியல் தேவைகளும் அவர்களுக்கிருந்த போதிலும் தம் முன்னிலையில் சட்டபூர்வமான தேர்வுகள் இரண்டு மாத்திரமே உள்ளன என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவையாவன: திருமணம் செய்வது அல்லது திருமணம் முடிக்கும் வரை பாலியல் தொடர்புகளைத் தவிர்த்துக்கொள்வது.

அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

> திருமணத்தை(ச் செய்ய வசதிகளை)ப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அல்லாஹ் தன் பேரருளால் அவர்களைச் சீமான்களாக்கி வைக்கும் வரை பத்தினித்தனமாக இருந்து கொள்ளவும்.
>
> (அல்குர்ஆன் 24: 33)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானே உங்களில் மிகப் பயபக்தி உடையவனாக இருக்கிறேன். ஆனால், நான் நோன்பு பிடிக்கிறேன்; அதைத் துறக்கிறேன். நான் இறைவனை வணங்குகிறேன்; இரவில் நித்திரையும் கொள்கிறேன். நான் பெண்களைத் திருமணம் செய்கி றேன். எனது நடைமுறையைப் புறந்தள்ளுபவர் என்னைச் சார்ந்தவர் அல்லர். (அல் புகாரி)



> திருமணம் சன்மார்க்கத்தின் ஒரு பாதியாகும்; அடுத்த பாதி இறைவனை அஞ்சுவதே.
>
> (அல் தபராணி மற்றும் அல் ஹாகிம்)

நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள்:

> இள வயதினருள் வசதியுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள். இல்லாவிடில் நீங்கள் நோன்பு நோற்று வாருங்கள். ஏனெனில், அது ஆசைகளை அடக்கி விடுகிறது. (அல் புகாரி)

திருமணம் செய்ய வேண்டும் என்ற வலிமையான உந்துதல் ஓர் ஆண் பிள்ளையிலோ, பெண் பிள்ளையிலோ ஏற்பட்டு அதற்கு மேல் காத்திருக்க முடியாது என்ற உணர்வு தோன்றுமானால் அவர்களுக்குத் திருமணம் செய்துவைக்கப் பெற்றார் தம்மால் ஆன முயற்சியைச் செய்ய வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாதுவிட்டால் தம் பிள்ளைகளை ஏதோ ஒரு விதத்தில் தீமையை நோக்கித்தள்ளி விடுபவர்களாக இருப்பர்.

பெற்றோரின் கடமைக் கூறுகளுள் ஒன்றினை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறித்துக் காட்டினார்கள்:

> அல்லாஹ்வினால் பிள்ளையொன்று வழங்கப்பட்ட ஒருவர் அப்பிள்ளைக்கு மூன்று வகையான உரிமைகளை வழங்குதல் வேண்டும். அவையாவன: ஓர் அழகான பெயர், நல்ல கல்வி, அப்பிள்ளை பருவ வயதை அடைந்ததும் அதற்குத் திருமணம் செய்து வைத்தல். (Tibrizi, 1985)

பிள்ளைகளின் வேண்டுகோளைப் பெற்றார் கவனிக்காமல் திருமண ஏற்பாடுகளைச் செய்யத் தவறினால் பிள்ளைகள் செய்யும் பாவத்திற்கான பொறுப்பு அவர்களையும் சாரும். அதேவேளை இள வயதினரை வற்புறுத்தித் திருமணம் செய்து வைக்கக் கூடாது. சில பெற்றார் தம் பிள்ளைகளின் மீது ஒரு வாழ்க்கைத் துணையை வற்புறுத்தித் திணிப்பதும் மிகத் தவறானது. தேர்வுக்கான சுதந்திரத்தைத் தம் பிளைகளுக்கு வழங்காமல் அவர்களே தம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை கட்டிவைக்கத் தீர்மானிக்கிறார்கள். தமது எதிர்கால வாழ்க்கைத் துணைவரைக் கண்டு அறிந்து கொள்வதற்கான பிள்ளைகளின் உரிமை இதன் மூலம் மறுக்கப்படுகிறது. மணமகன், மணமகள் இருவரதும் பூரண அங்கீகாரத்துடனும் பங்குபற்றலுடனும் விவேகமான முறையில் திருமணங்களை ஏற்பாடு செய்து கொடுப்பது பெற்றாரின் கடமையாகும். இவ்வாறான திருமணம் தம்பதியரிடையேயும் இரு குடும்பத்தவர்களுக்கிடையேயும் சந்தோசமான, நீடித்த உறவுகளுக்கு வழி வகுக்கிறது. இவ்வாறான ஏற்பாடுகள் புதுத்தம்பதியரின் நல்வாழ்வையும் சந்தோசத்தையுமே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். மாறாக, திருமணத்தை ஏற்பாடு செய்கின்ற குடும்பத் தரகர்களின் சுயநல உள்நோக்கங்களை நிறைவேற்றுவனவாக அமையக்கூடாது.

திருமணங்களை வசதிப்படுத்துவதற்காக சமூகம் ஆற்ற வேண்டிய கடமைக்கூறுகள் பல இருக்கின்றன.

- ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் சந்தித்து ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கான ஆரோக்கியமான சூழலொன்றை ஏற்படுத்திக் கொடுத்தல். அதேவேளை யில் கண்காணிப்பற்ற முறையில் இருபாலாரும் கலப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படக் கூடாது.
- இளம் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் திருமணத்துக்கு முந்திய கல்வி தொடர்பான பாடநெறிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி அவர்களைச் சிறந்த தந்தையர்களாகவும் கணவர்களாகவும், தாய்மார்களாகவும் மனைவியர்களாகவும் வாழத் தயார்படுத்த வேண்டும்.

கல்வி முறையின் இரண்டக நிலையும் திருமணத்தை முற்படுத்தலும்

இன்று நடைமுறையிலுள்ள பள்ளிக்கூட அமைப்பு முறை சிக்கலான பாலியல் சார்ந்த பிரச்சினையொன்றுக்கு வழி வகுத்துள்ளது. கல்லூரி அல்லது பல்கலைக்கழகப் பட்டமொன்றைப் பெற வேண்டுமாயின் திருமணத்தை நடு இருபதுகளுக்குத் தள்ளிப் போட வேண்டி ஏற்படுகிறது. எனினும், ஆண்களில் இறுதிப் பதின்மவயதுகளிலேயே பாலுணர்வுக்குரிய உந்துதல் உச்ச நிலையில் காணப்படும். அதேவேளை பிந்திய பதின்ம வயது இளம் பெண்களிடையே மனவெழுச்சி ரீதியாகப் பிறரில் தங்கியிருக்கும் உணர்வு காணப்படுகிறது. இதனால் அவர்கள் எளிதில் கவர்ந்திழுக்கப்பட்டு வழிகெடுத்தப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

இதற்கான தீர்வாகக் கல்லூரி வயதிலேயே திருமணம் செய்து கொள்ளலாம் அல்லது பட்டம் பெறும் வரை பாலின்பத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். திருமண வாழ்க்கையையும் பிள்ளைப் பராமரிப்பையும் ஒருங்கே செய்யக்கூடியவாறு பதின்மவயதினரைச்

சமூகம் தயார்படுத்த முடியுமானால் நேரகாலத்துடன் திருமணம் செய்வதே திருப்தி கரமான தீர்வாக அமையும்.

இக்காலத்தில் காணப்படும் உந்துதல்களுக்கும் தொடர்ச்சியான பாலின்பத் தூண்டுதல்களுக்கும் மத்தியில் நடு இருபதுகள் வரை பொறுமையுடனும் கற்பைப் பேணிக்கொண்டும் வாழுமாறு பதின்மவயதினரை வேண்டுவது நடைமுறையில் கஷ்டமான விடயமாகும். வரலாறு இது தொடர்பாகச் சிறந்த படிப்பினையொன்றைத் தருகிறது. முந்திய காலத்தில் இப்பிரச்சினை தலையெடுக்காமைக்குக் காரணம், அப்போது இள வயதுத் திருமணமே பொது நடைமுறையாக இருந்தது. சமூக அமைப்பும் அதற்கு அனுசரணையாகக் காணப்பட்டது. நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பின்வரும் ஒன்றிணைந்த அமைப்பு அமுல்படுத்தப்பட்டு வந்தது.

a. இள வயதுத் திருமணம் ஊக்குவிக்கப்பட்டது.

b. பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பராமரிப்பதில் விரிந்த குடும்பம் பெரும் உதவியாய் அமைந்தது. மூன்று பரம்பரைகள் நெருக்கமாக ஒன்றி வாழ்வது பொதுவான நடைமுறையாக இருந்தது. கருக்குடும்ப அமைப்பு விதிவிலக்காகவே காணப்பட்டது. இன்று போலன்றி குடும்பங்கள் இடம்பெயர்வது அரிதாகவே இடம்பெற்றது.

c. இள வயது மனைவியர் தாம் உரிய தயார் நிலையை அடையும் வரை கர்ப்பத்தைத் தள்ளிப்போடுவதற்கு உதவும் வகையில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை இஸ்லாம் அனுமதித்திருந்தது. அவை, கணவனின் ஒத்துழைப்பையும் கணவன், மனைவி இருவரதும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.



தற்காலத்தில் உயர் தொழிலொன்றோ பல்கலைக் கழகப் பட்டமொன்றோ பெற்றுக்கொண்டுள்ள தாய்மார் நடு முப்பதுகள் வரை பகுதி நேரத் தொழிலொன்றைச் செய்துகொண்டு பிள்ளை வளர்ப்பில் முழுநேரம் ஈடுபடலாம். தமது பிள்ளைகள் பருவ வயதை அடைந்த பின்னர் அவர்கள் முழுநேரத் தொழிலில் ஈடுபட முடியும். இம்முறையினால் பிள்ளைகளுக்குத் தீங்கு விளையாமல் தடுக்கப்படுவதோடு அவர்களது அறிவினாலும் திறமைகளினாலும் அனுபவங்களினாலும் சமூகமும் பயன்பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

பதிமூன்றுக்கும் பத்தொன்பதுக்கும் இடைப்பட்ட வயதினரை ஆற்றல் குறைந்தவர்களாகக் கருதி, அவர்களைப் பொறுப்புக்களோ உற்பத்தித் திறனோ அற்ற வெறும் நுகர்வோராக மாத்திரம் நடத்துவது சரியல்ல. இன்றைய போக்கின்படி பிள்ளைப்பருவமானது இருபதுகளின் முற்பகுதி வரை நீடிப்பதாகக் கருதப்படுகிறது. இதனால், பொறுப்புணர்வும் சுயாதீனமும் உற்பத்தித் திறனும் உள்ளவர்களாகத் திகழ்வதற்குப் பதிலாக முற்றாக ஏனையோரில் தங்கியிருக்கும் நிலைக்கு வாலிபர்கள் மாறியுள்ளனர்.

தமது பதின்மவயதுகளிலே பாரிய பணிகளைச் சாதித்து எமக்குச் சிறந்த முன்மாதிரிகளாக அமைந்த இப்றாஹீம் (அலை), யூஸுஃப் (அலை), மூஸா (அலை), ஈஸா

(அலை) ஆகியோரையும் ஏனையோரையும் பற்றி அல்குர்ஆன் எடுத்துக்கூறுகிறது. இளைஞர்களாகவும் நேர்வழியில் நடந்து பல சாதனைகள் புரிந்தவர்களாகவும் விவரிக்கப்படும் குகைவாசிகள் (அஸ்ஹாப் அல் கஹ்ஃப்) பற்றிய கதையும் அதில் காணப்படுகிறது.

நடு இருபதுகள் வரை திருமணத்தைத் தாமதிக்கச்செய்யும் இன்றைய நடைமுறை திருப்திகரமானதல்ல. கடந்த காலத்தில் உலகின் பல பகுதிகளிலும் இள வயதிலேயே திருமணம் செய்விக்கும் வெற்றிகரமான முறைகள் நடைமுறையில் இருந்துள்ளன. மருத்துவ ரீதியாக நோக்கும் போது கர்ப்பங்களும் பிரசவங்களும் இளவயதில் இலகுவாக இருக்கின்றன. இருபதுகளின் பிந்திய பகுதி, முப்பதுகளின் முந்திய பகுதி என்பன அவற்றுக்கு உகந்தவையாக இல்லை. வயது செல்லச்செல்ல முதற் பிரசவம் மேலும் கஷ்டமாகிவிடும்.

இப்பிரச்சினை பாரதூரமானது, காலத்துக்குரியது, அவசரமானது. பாலின்பத்தைத் தவிர்த்துக் கட்டுப்பாட்டுடன் இருப்பதன் சிரமம், இள வயதிலேயே திருமணத்தின் அவசியம், பதின்மவயதிலேயே குடும்பமொன்றை அமைத்துக் கொள்ளுதல் முதலிய சிக்கலான விடயங்கள் பற்றி நாம் சரியான முறையில் செயற்பட வேண்டும்.

நபி (ஸல்) அவர்களது தோழர்களுள் பதின்ம வயதினர் பலர் தலைவர்களாக இருந்தனர். உஸாமா இப்ன் ஸைத் (றழி) அவர்கள் தமது பதினைந்தாவது வயதில் அல் அஹ்ஸாப் எனும் யுத்தத்தில் பங்கு பற்றினார். அவர் தனது பதினெட்டாவது வயதில் மூத்த தோழர்கள் பலரைக் கொண்ட ஒரு இராணுவப் படைக்குத் தலைமை தாங்கினார். உஹத் யுத்தத்தில் ஸம்ரா இப்ன் ஜுன்துப், ராஃபி இப்ன் ஹுதைஜ் போன்ற 15 வயது இளைஞர்கள் பலர் பங்கேற்றனர். அல் அஹ்ஸாப் யுத்தத்தில் பங்கு பற்றிய அப்துல்லாஹ் இப்ன் உமர், ஸைத் இப்ன் தாபித், அல் பரா' இப்ன் ஆஸிப், அம்ர் இப்ன் ஹஸ்ம், அஸீத் இப்ன் தாஹிர் ஆகியோர் 15 வயதினராக இருந்தனர். ஹுதைபா இப்ன் முஸ்லிம் அல் பாஹிலி என்பவர் தனது 18ம் வயதில் சீனாவுக்கு அனுப்பப்பட்ட முஸ்லிம் இராணுவத்துக்குத் தலைமை தாங்கினார். இதே போன்ற உதாரணங்களை நபித்தோழர்களான இளம் பெண்களில் இருந்தும் எடுத்துக் காட்டலாம்.

தகாத வழி

விபசாரம் – இலகுவானது, கவர்ச்சியானது, கிடைக்கக்கூடியது.

பாலின்பம் – மலிவானது,
பொறுப்பற்ற பாலுறவே அதன் விளைவு

விளைவுகள்

பாலியல் சார்ந்த நோய்கள், பதின்மவயதுக் கர்ப்பம், கருக்கலைப்பு, திருமணத்துக்குப் புறம்பான குழந்தைகள், விவாகரத்து, முறிந்த இல்லங்கள், தனிப்பெற்றார் குடும்பங்கள், பாலியல் ரீதியான குளறுபடிகள், குற்றச்செயல் அதிகரிப்பு, வல்லுறவு அதிகரித்தல்

ஒழுக்கமான வழி

விபசாரத்தை அணுகாதீர் – விபசாரம் சிரமமானது, கவர்ச்சியற்றது, கிடைக்க முடியாது.
பரிசுத்த பாலின்பம் கண்ணியமானது.
திருமணத்தினூடாகவே பாலுறவு இடம்பெற வேண்டும்.
பொறுப்பு வாய்ந்த பாலுறவு ஊக்குவிக்கப்பட்டது.

விளைவுகள்

ஆரோக்கியமான பெற்றார், ஆரோக்கியமான குழந்தைகள், இரு பெற்றாரையும் கொண்ட வீடுகள், நேர்வழி சென்றவர்களின் தலைவர்கள், குற்றச்செயல்கள் குறைதல், மகிழ்ச்சியான குடும்பம், மகிழ்ச்சியான பிள்ளைகள், சமூகத்தில் வல்லுறவு குறைதல்.

வளர்ந்தவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல்

பிள்ளைகள் வளர்ந்தவர்கள் மீது நம்பிக்கை வைப்பது இயல்பானதே. குறிப்பாக முஸ்லிம் பிள்ளைகள் மூத்தோருக்கு கீழ்ப்படியுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். எனவே, வளர்ந்த ஒருவர் வேண்டுகின்ற ஒன்றைச் செய்யாமல் மறுப்பதற்கு அவர்கள் பயப்படுவார்கள். முரட்டுத்தனமான வளர்ந்தவர்கள் அச்சத்தை ஏற்படுத்துபவர்களாகவும் பயமுறுத்துபவர்களாகவும் இருக்கலாம். எனினும், என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்திருந்தால் பிள்ளைகள் துஷ்பிரயோகத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். கெட்டவர்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பிள்ளைகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டிய சில உதவிக்குறிப்புக்களை கீழே தருகிறோம்.

- இனம் தெரியாத ஒருவர் வித்தியாசமான முறையில் நடந்து கொள்வாராயின்- உங்களை நெருங்குதல், உற்றுப் பார்த்துக்கொண்டிருத்தல், உங்களை வழிமறித்தல், உங்களைப் பின்தொடர்தல் போன்றவை - உடனடியாக உதவிதேடி ஓடுங்கள் அல்லது உதவி கோரிக் கூச்சலிடுங்கள்.

- இனம் தெரியாத எவரினதும் வாகனத்தில் ஏறவோ, அவரோடு எங்கும் செல்லவோ வேண்டாம். அவர் நட்புறவோடு பேசினாலும், உங்களதும் உங்கள் பெற்றாரினதும் பெயர்கள், முகவரி, உங்கள் பள்ளிக்கூடம் என்பன பற்றி அறிந்து வைத்திருந்தாலும், முடியாது என்று பலமாகக்கூறி அவரது அழைப்பை நிராகரிக்கப் பயப்பட வேண்டாம்.

- ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களையும் பாதுகாப்பற்ற குடியிருப்புப் பிரதேசங் களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். தனியாக நடந்து செல்லாதீர்கள் (குறிப்பாக பிற நகரங்களில்). பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்லும்போது குழுக்களாகச் செல்ல வேண்டும் அல்லது வளர்ந்தவர் ஒருவருடன் செல்ல வேண்டும்.

- பொலிஸாருக்குரிய அவசர அழைப்பு எண்களை நினைவில் வைத்திருங்கள். இருட்டிலும் சரி, அதனை டயல் பண்ண அறிந்து கொள்ளுங்கள். உங்கள் பெற்றாரை அல்லது பொலிஸாரை அழைப்பதற்காக செல்போன் ஒன்றை அல்லது தொலைபேசி அட்டைகளை அல்லது சில்லறை நாணயங்களை வைத்திருங்கள்.

- ஒரு வாகனத்தில் அல்லது உங்கள் வீட்டினுள் தனியாக இருக்க நேரிடும் போது கதவுகளையும் யன்னல்களையும் தாழிட்டுக் கொள்ளுங்கள். இனம் தெரியாதவர்கள் கதவைத் தட்டினால் அல்லது தொலைபேசியில் அழைத்தால் நீங்கள் தனியே இருக்கும் விடயத்தை அவர்கள் அறிந்துகொள்ள இடமளியாதீர்கள். உங்கள் முகவரி அல்லது வேறு தகவல்களை ஓர் அந்நியருக்கு தொலைபேசி மூலம் வழங்காதீர்கள். அறையில் இன்னொருவருடன் உரையாடிக்கொண்டிருப்பது போல் பாசாங்கு செய்யுங்கள்.

- ஒருவர் உங்களை நோக்கும் விதமோ அல்லது உங்களோடு பேசும் விதமோ அசௌகரியத்தை ஏற்படுத்தினால் அது பற்றி உங்கள் நம்பிக்கைக்குரிய வளர்ந்த ஒருவரிடம் கூறுங்கள்.

- ஏதேனுமொரு வகைச் சண்டைக்கலையை அல்லது தற்காப்பு நுட்ப முறைகளைக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களைக் காத்துக்கொள்வதற்கு நீங்கள் வலிமையுள்ளவராக இருக்க வேண்டியதில்லை. விவேகத்துடன் சிந்தித்து உடனடியாகச் செயற்படுவதே முக்கியமானது. தற்காப்பு முறைகளைக் கற்பிக்கும் வகுப்புக்கள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இவை சண்டையிடுவதற்கு அழுத்தம் கொடுக்காமல் தற்காப்புக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

- சிறுவர் தொடர்பான ஆபாசப் படங்கள், திரைப்படங்கள் என்பன பற்றி விழிப்போடு இருங்கள். மற்றவர்களின் முன்னிலையில் நிர்வாணமாக இருப்பதற்கு சிறுவர்களை அனுமதிக்கக்கூடாது. பல நாடுகள் ஆபாசப் படங்களையும் வீடியோக்களையும் சட்டத்தால் தடை செய்துள்ளன. சிறுவர் ஆபாச இலக்கியங்களும் படங்களும் எல்லா நாடுகளிலும் தடை செய்யப்பட்டனவாக உள்ளன.

- நீங்கள் எவரையும் பற்றி அச்சம் கொண்டால் பாதுகாப்புத் தரும் அல்குர்ஆன் அத்தியாயங்களை ஓதுங்கள். (அல் பாத்திஹா, ஆயத்துல் குர்ஸீ, அல்- பலக், அந்நாஸ் முதலியன) தேவைப்படின் அவற்றை ஓதிக்கொண்டே இருங்கள். அத்துடன் இறைவனிடம் உதவிகோரி துஆ பிரார்த்தனை செய்யுங்கள். அல்லாஹ்வே உங்கள் சிறந்த நண்பனும் வழிகாட்டியும் பாதுகாவலனுமாக இருக்கிறான்.

விபசாரத் தொழில் பற்றிப் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறப்பட வேண்டும்

விலைமாதர்களின் வாழ்க்கை பற்றிப் பிள்ளைகள் முழுமையாக அறிந்திருக்க மாட்டார்கள். அது பற்றி அவர்கள் ரம்மியமான கற்பனைகளில் மூழ்கிவிடக்கூடும். ஒரு விலைமாதினது வாழ்க்கையின் அவலநிலை பற்றிய விபரங்களைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு விளக்கமளிப்பது முக்கியம். அவள் தினமும் 20க்கும் மேற்பட்ட ஆண்களோடு வேதனை தரும் முறையில் பாலுறவு கொள்ள வற்புறுத்தப்படக்கூடும். இதன் விளைவாக AIDS போன்ற பயங்கர நோய்களுக்கு ஆளாகி அவள் இள வயதிலேயே இறந்துவிடவும் கூடும். துரதிஷ்டசாலிகளான சில பெண்களே விலைமாதர்களாக மாற விரும்புவர். பொதுவாக கெட்ட ஆண்களாலும் நெருக்கடியான நிலைமைகளாலுமே அவர்கள் அத்தொழிலுக்கு வலிந்து தள்ளிவிடப் படுகின்றனர். வீட்டில் அடியும் உதையும் தாங்கமுடியாமல் அல்லது போதைப்பொருட்களுக்கு அடிமையாகி அப்பழக்கத்துக்குத் தேவையான பணத்தைத் தேடிக்கொள்வதற்காகச் சிலர் விலைமாதர்களாக மாறுகின்றனர். சிலர் தனியே பிரயாணம் செய்யும்போது கடத்திச் செல்லப்பட்டு மொழி புரியாத வெளிநாடுகளில் அறைகளிலே அடைத்து வைக்கப்பட்டு உதவி பெற்றுக்கொள்ள வழியின்றி இதில் வீழ்கின்றனர். அவர்கள் தங்கள் குடும்பங்களை மீண்டும் காண்பதற்கு வாய்ப்பே கிடைக்காமற்போகும். வீட்டு வேலையாள், பிள்ளைப் பராமரிப்பாளர் போன்ற மரியாதையான தொழில்களுக்கு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்குச் செல்லும் இன்னுஞ் சிலர் மயக்கமருந்து கொடுக்கப்பட்டு இன்னொரு நாட்டுக்குக் கடத்திச்செல்லப் பட்டு அறைகளில் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

"பிரிட்டனில் உள்ள சுமார் 4000 விலைமாதர்கள் இவ்வாறு கடத்தி வரப்பட்டவர்கள் ஆவர். இவ்வெண்ணிக்கை இதனை விடக்கூடுதலாக இருக்கவேண்டும் என ஆட்கடத்தலுக்கு எதிராகச் செயற்படுவோர் கூறுகின்றனர்" (Morris, 2008)

தாங்கமுடியாத இழி நிலைகள் காரணமாக வீடு நரகம் போல் தோன்றுவதனால் சில இளம் பெண்கள் வீட்டை விட்டு ஓடி விடுகின்றனர். எனவே, அவர்கள் வீட்டுக்கு வெளியே ஆறுதல் தேடுகின்றனர். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தும் விபசாரத் தரகர்கள் இப்பெண்களை விபசாரப் படுகுழியில் தள்ளிவிடுகின்றனர். வாடிக்கை யாளர்கள் கொடுக்கும் பணத்தில் சிறு பகுதியே இந்தப் பெண்களுக்குக் கிடைக்கும். பெரும் பகுதியை இத்தரகர்கள் எடுத்துக் கொள்வர். பெற்றார் தம் பிள்ளைகளின் வாழ்க்கையை அவல நிலைக்கு உள்ளாக்கும் போது அப்பிள்ளைகள் வீட்டின் வதைகளிலிருந்து தப்புவதற்காக வீதிக்கு இறங்குகின்றனர்.

வீட்டில் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் பிள்ளைகள் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும் வேளையில் நம்பிக்கைக்குரிய வளர்ந்தவர் ஒருவரின் உதவியை நாட வேண்டும். இவர் ஓர் உறவினராகவோ, இமாமாகவோ ஆசிரியராகவோ ஆலோசகராகவோ பொலிஸ் அதிகாரியாகவோ இருக்கலாம். தனது பிரச்சினை களிலிருந்து தப்புவதற்காக வீட்டை விட்டு ஓடிச்செல்வதும் போதைப்பொருட்களில் சரணடைவதும் நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும்.

ஒருவரது பிள்ளை வல்லுறவுக்கு உள்ளானால்

தம் குடும்ப அங்கத்தினர் ஒருவர் தமது பிள்ளையைத் தகாத முறையில் பயன்படுத்தி வல்லுறவு கொண்டுள்ளார் என்பதை நம்புவது ஒரு பெற்றாரைப் பொறுத்தமட்டில் மிகச் சிரமமான செயலாகும். சில வேளைகளில் அதனை நிரூபிப்பது கஷ்டமாகி விடுவதோடு அந்தத் தாய் அல்லது தந்தை அதை நம்பவும் மறுத்து விடுவார் அல்லது நம்பாமல் இருக்கவே முயற்சிப்பார். இவ்வாறான நிலையில் ஓர் இமாமிடம் அல்லது ஆசிரியரிடம் அல்லது ஆலோசகரிடம் செல்வதே நல்லது. குற்றச்செயலொன்று நிகழ்ந்திருந்தால் அது பொலிஸாருக்கு அறிவிக்கப்பட வேண்டும். பாதுகாப்புடன் வாழும் உரிமை அனைவருக்

கும் உண்டு. யாரும் எவரையும் பாவமான பாலியல் தொடர்புகளுக்கு வற்புறுத்தி உள்ளாக்க முடியாது. பாலியல் வல்லுறவு இன்று மிகப் பொதுவானதாக மாறியிருக்கிறது; அமெரிக்கப் பெண்களில் நால்வரில் ஒருவர் தன் வாழ்நாளில் குறைந்தது ஒரு தடவையேனும் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டிருப்பாள். வல்லுறவுக்கு ஆளானவர்களில் இருபாலாரையும் சேர்ந்த சிறுவர்கள் உள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. அவர்களுள் சிலர் வயதில் மிகக் குறைந்தவர்கள். வீடுகளை உடைத்து நுழையும் சில ஆண்களால் வயதில் முதிய பெண்கள் கூட வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பின்வரும் இரண்டு நிகழ்வுகளையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்: "ஐந்து சிறுவர்களை வல்லுறவுக்கு உட்படுத்திய ஒரு மனிதனின் தலை துண்டிக்கப்பட வேண்டுமென ஸவூதி அறாபிய நீதிமன்றமொன்று தீர்ப்பு வழங்கியது." பலியானவர்களில் மிக இளைய சிறுவனுக்கு வயது 3. சாகட்டும் என அவன் பாலைவனத்தில் கைவிடப்பட்டிருந்தான். (BBC செய்தி, 2009)

முதியவர்களின் (68 முதல் 93 வரையானவர்கள்) மீது 100க்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்திய ஒருவனை லண்டன் பொலிஸார் கைது செய்தனர். 'Night Stalker' என அழைக்கப்பட்ட இவனுக்குப் பலியானவர்களுள் பெரும்பான்மையினர் பெண்கள். இவற்றுள் பல தாக்குதல்களின் போது பாலியல் ரீதியான இம்சைகளும் வல்லுறவும் இடம்பெற்றுள்ளன. (BBC செய்தி, 2009)

ஓர் இளம் பெண் வல்லுறவுக்கு உள்ளானால் அவள் மன வேதனையாலும் வலுவின்மையாலும் பாதிக்கப்பட்டு கோபமும் மனக்குழப்பமும் அடைந்த நிலையில் இருப்பாள். தான் ஏதோ தவறு செய்ததனால்தான் அவன் வல்லுறவு கொள்ள நினைத்திருப்பான் என்ற குற்ற உணர்வும் அவளை வாட்டும். சில வேளைகளில் அவள் கடுமையான வெட்க உணர்வினால் அது பற்றி யாரிடமும் சொல்லாமலிருக்கவும் கூடும். வல்லுறவுக்கு உள்ளான எந்தப் பெண்ணும் பொலிஸாருடன் தொடர்பு கொள்வதோடு

மருத்துவ உதவியையும் உளவியல் ரீதியான ஆலோசனையையும் நாடுதல் வேண்டும். அவள் கர்ப்பமுற்றால் அல்லது அவளைத் தாக்கியவனிடமிருந்து அவளுக்கு ஏதேனும் நோய் தொற்றினால் மேற்சொன்ன நடவடிக்கைகள் உதவியாக அமையும். அவள் தன் காதலனுடன் பாலுறவு கொண்டவளல்ல; வல்லுறவுக்குப் பலியானவள் என்பதை நிரூபிப்பதற்கு வைத்தியரின் சான்றுரை துணை செய்யும். விபசாரக் குற்றச்சாட்டிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்ற நடைமுறை இதுவாகும்.

ஓர் இளம் பெண் தாக்குதலுக்கு ஆளானால் அவள் தப்பியோட முயற்சிக்க வேண்டும்; அல்லது தனது கை நகங்களை தாக்குபவனின் உடலில் ஆழமாகப் பதிக்க வேண்டும். நகங்களுக்கிடையே சிக்கும் அவனது தோல் இழையங்களை DNA சோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது பொலிஸாருக்கு எளிதாகிவிடும். வல்லுறவுக்கு ஆளாகும் போது கூச்சலிடுவது அறிவுடைமையாகாது. ஏனெனில், அவ்வாறு செய்தால் தாக்குபவன் திகிலடைந்து வாயை மூடச்செய்வதற்காக அவளது கழுத்தை நெரித்து அல்லது மூச்சுத் திணறச் செய்து கொலை செய்து விடக்கூடும். பெண்களிலும் பிள்ளைகளிலும் பலர் இவ்வாறே கொலை செய்யப்பட்டிருந்தனர். கூச்சலிடுவது பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கக் கூடுமாயினும் யாரும் உதவிக்கு வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது. இறுதியில் தப்பிச் செல்லும் போது தாக்கியவனின் ஏதேனுமொரு பொருளை - ஒரு பொத்தான் அல்லது சில தலை மயிர்களாக இருப்பினும் சரியே - கைப்பற்றிக் கொள்வது நல்லது. இது அவனைக் கண்டு பிடிப்பதற்கு பொலிஸாருக்கு உதவக்கூடும். தேவைப்படின் விரைவாக ஓடக்கூடிய வகையில் ஆடைகளை அணிந்திருப்பது நல்லது. போதைப் பொருட்களை ஊட்டி வல்லுறவு கொள்வது பற்றியும் இளம் பெண்கள் விழிப்பாக இருப்பது அவசியம்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குப் பலியானவர்களுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனை வழங்கப்பட வேண்டும். பலியானவர் உட்பட்டுள்ள அதிர்ச்சி, கோபம், விரக்தி, பயம் போன்ற பல்வேறு மனவெழுச்சிக் கோளாறுகளுக்கு முகங்கொடுக்கவும் அவற்றிலிருந்து விடுதலை பெறவும் ஆலோசகர் உதவ முடியும்.

இஸ்லாமியப் பாலியல் கல்விக்கான ஒரு பாடவிதானம்

இஸ்லாமியப் பாலியல் கல்வி மிக இள வயதிலிருந்தே வீட்டில் போதிக்கப்பட வேண்டும். உடலமைப்பு, உடற் தொழிற்பாடுகள் என்பன பற்றிக் கற்பிக்க முன்னர் எம்மைப் படைத்தவன் மீதான நம்பிக்கை நன்கு நிலைநிறுத்தப்படுவது அவசியம். பயத்துடன் கூடிய இறை விசுவாசம் இல்லாவிட்டால் தமது பாலின்ப ஆசைகளைத் திருப்தி செய்வதற்குரிய சில வகையான நடத்தைகளை அனுமதிக்கப் பட்டவையாக அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடும். தந்தை தனது மகனுக்கும் தாய் தன் மகளுக்கும் இக்கல்வியைப் போதிக்க வேண்டும். இதனைச் செய்யக்கூடியவர்களாகப் பெற்றார் இல்லாவிடில், ஆண் பிள்ளைகளுக்கு ஓர் ஆண் ஆசிரியரும், பெண் பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியையும் இப்பொறுப்பை நிறைவேற்றுவது நல்லது. ஞாயிறு தினங்களில் நடக்கும் சமய வகுப்புக்களில் இது இடம்பெறலாம். முடியுமாயின் வைத்தியர் ஒருவரையும் தாதி ஒருவரையும் இதற்காக அழைக்கலாம். பிள்ளைகளின் வயதுக்கு ஏற்ப பாடவிதானம் அமைக்கப்பட வேண்டும். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் வேறு வேறாகப் பிரித்துக் கற்பிக்கப்பட வேண்டும். பிள்ளைகள் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் பொருத்தமான விடை மாத்திரமே வழங்கப்படுதல்



அவசியம். உதாரணமாக, "நான் எனது தாயின் வயிற்றுக்குள் எப்படி உருவானேன்?" என ஓர் ஆறு வயதுப் பிள்ளை கேட்டால் முழுச் செயற்பாட்டையும் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. அதே போன்று ஆணுறையொன்றைப் பயன்படுத்தும் முறை பற்றி பிள்ளைகளுக்கு விளக்க வேண்டிய தில்லை. இது திருமணத்துக்கு முன்னர் நடத்தப்படும் வகுப்பொன்றில் கற்பிக்கப்படலாம்.

பாலியல் கல்விக்கான பாடவிதானம் (Athar, 1990) உள்ளடக்கியிருப்பவை:

அல்குர்ஆன் வாக்கியங்களும் நபிகளாரின் ஹதீஸ்களும்

பாலியல் ரீதியான வளர்ச்சியும் விருத்தியும்

- பருவமடைவதற்கான கால அட்டவணை
- பருவ வயதில் ஏற்படும் உடல் ரீதியான மாற்றங்கள்
- பருவமடைதல் தொடர்பான உள, மனவெழுச்சி, சமூக ரீதியான அம்சங்கள்

இனப்பெருக்கத் தொகுதியின் தொழிற்பாடு

- பெண் பிள்ளைகளுக்கு: உறுப்புக்கள், மாதவிடாய், மாதவிடாய்க்கு முந்திய கோளாறுகள்
- ஆண் பிள்ளைகளுக்கு: உறுப்புக்கள், பாலின்ப உந்துதல்

கருக்கொள்ளுதல், கருவின் விருத்தி, பிறப்பு

பாலுறவினால் பரவும் நோய்கள்

சமூக, நன்நெறி, சமய சார்பான ஒழுக்க முறைகள்

சம வயதினரின் அழுத்தத்தை எதிர்த்து நிற்பது எப்படி?

பிள்ளைகளுக்குப் பாலியல் கல்வி வழங்குவது மிக அவசியம். இல்லாவிடில், சம வயதினரிடமிருந்தும், ஊடகங்களிலிருந்தும் தவறான தகவல்களைக் கற்றுக்கொள் வார்கள். எனினும், இது மறைமுகமான முறையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். பாலியல் விடயங்களை வெளிப்படையாக விளக்குதலும் பெற்றாருக்கும் பிள்ளை களுக்கும் இடையிலுள்ள அனைத்துத் திரைகளையும் அகற்றிவிடுவதும் தீங்கான விளைவு களை ஏற்படுத்தலாம். பால்களுக்கு இடையிலான உடல் ரீதியான வித்தியாசங்களையும் நடத்தைக்குரிய சரியான ஒழுங்குகளையும் ஆரோக்கியமான இஸ்லாமிய வாழ் வொன்றுக்கு அவசியப்படும் பாலியல் ரீதியான நடைமுறைகளையும் பிள்ளைகளுக்குப் போதித்தல் வேண்டும்.

பிள்ளைகளின் விருத்திப் படிநிலைகளுக்கு ஏற்ப ஆண்களினதும் பெண்களினதும் கடமைக்கூறுகள், வாழ்க்கையின் நோக்கங்கள் என்பன பற்றித் தெளிவாக விளக்குதல் அவசியம். ஒழுக்க நியமங்களிலிருந்து விலகிச் செல்லும் சமவயதினரின் ஆபத்துக்கள் பற்றிப் பெற்றார் அழுத்தம் கொடுப்பது மிக முக்கியம். தகாத நடத்தை பற்றித் தம் உள வெறுப்பைத் தெரிவிப்பதோடு தம் பிள்ளைகளிலும் அவ்வாறான போக்கு காணப்படு கிறதா என்பது பற்றி கவனமாக அவதானிக்க வேண்டும். தவறான நடத்தையைக் கண்டுபிடித்து அதைத் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளைப் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். அத்தோடு பாலியல் ரீதியான ஆரோக்கியத்தை அடைவதற் குரிய வழிகாட்டலை நடைமுறைச் சாத்தியமான விதத்தில் தம் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். நல்ல நண்பர்களுடன் தொடர்பு கொண்டு பழகுவதை வசதிப்படுத்தி உறுதிப்படுத்துவது பெற்றாரின் கடமையாகும். தம் பதின்மவயதுப் பிள்ளைகள் பொருத்தமான பாலியல் நடத்தை பற்றி அறியாமையில் உழலப் பெற்றோர் இடமளிக்கக் கூடாது. இரவில் நேரம் பிந்தும் வரை வெளியே தங்கியிருப்பதற்கு அவர்களை அனுமதிக்கவும் கூடாது. அதேபோல் நம்பிக்கைக்குரிய வளர்ந்தவர்களின் நெருங்கிய கண்காணிப்பிலன்றி இள வயதினர் தம் எதிர்ப்பாலாருடன் வெளியிடங்களில் ஒன்றாகத் தங்குவதைத் தடை செய்தல் வேண்டும்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 44: உங்கள் பிள்ளைகளின் மூளைகளை வளப்படுத்துங்கள்

குடும்பத்தினருடன் சேர்ந்து உணவுண்ணும் வேளையில் ஒரு விருந்தினரை அழைத்து அவரோடு அறிவு ரீதியான உரையாடலில் ஈடுபடுவது நல்லது. தமக்காகத்தான் இது நடத்தப்படுகிறது என்ற உணர்வின்றியே பிள்ளைகள் அவ்வுரையாடலைக் கேட்டுப் பயன் பெறுவார்கள். அது போன்ற விருந்தினர்களை அதே பிரதேசத்திலிருந்தோ வெளியிலிருந்தோ வரவழைக்கலாம். உரையாடலின் போது அவர் எடுத்துக்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட சில விடயங்களை முன்கூட்டியே அவரிடம் கூறி வைக்கலாம். இத்தகைய உரையாடல் பிள்ளைகளுக்கு நன்மை தருவனவாக அமையும்.

தொழிற்பாடு 45: பிள்ளைகளுக்கான நற்செயல் அட்டவணை முறை

> மேலும், பகலின் இரு முனை(களாகிய காலை, மாலை)களிலும் இரவின் நேரங்களிலும் தொழுகையை நிறைவேற்றுவீராக! நிச்சயமாக நற்செயல்கள் தீய செயல்களைப் போக்கிவிடும்; (அல்லாஹ்வை) நினைவு கூர்வோருக்கு இது ஒரு நல்லுபதேசமாகும். (அல்குர்ஆன் 11:114)
>
> நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ்வைப் பற்றிய நினைவோடிருங்கள். ஒரு தீய செயலைப் புரிந்தால் அதனையடுத்து ஒரு நற்செயலைச் செய்து அதனை அழித்து விடுங்கள். அத்தோடு, அடுத்தவர்கள் விடயத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். (அல் திர்மிதீ)

பெற்றார் தம் பிள்ளைகள் ஒவ்வொருவர் பெயரிலும் ஓர் அட்டவணையைத் தயாரித்து குளிர்ப்பெட்டியின் கதவிலோ வேறு எங்காவதோ தொங்கவிடலாம். அதில் Extra Credit, Good, Bad என மூன்று நிரல்கள் இருக்க வேண்டும். பிள்ளைகள் தமக்குக் கூறப்பட்டபடி நடந்து கொள்ளும் போது Good நிரலில் 'சரி' ✓ அடையாளமொன்று இடப்படும். தவறொன்று செய்தால் Bad நிரலில் 'புள்ளடி' x அடையாளம் இடப்படும். பெற்றார் கூறாமல் அவர்கள் தாமாகவே நல்ல விடயமொன்றைச் செய்தால் Extra Credit என்ற நிரலின் கீழ் ✓ அடையாளங்கள் இரண்டு இடப்பட வேண்டும். பெற்றார் இல்லாத இடங்களில் (பாடசாலையில், உறவினர் அல்லது நண்பரின் வீட்டில்) நல்ல விடயங்களை அவர்கள் செய்தாலும் Extra Credit வழங்கப்படல் வேண்டும். தாம் செய்த நல்ல காரியங்களைப் பிள்ளைகள் அறிவித்தால் பெற்றார் அவர்களது பேச்சை நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வார இறுதியிலும் புள்ளிகள் கணிக்கப்பட்டு பிள்ளைகளுக்கு வெகுமதிகள் வழங்கப்பட வேண்டும். சரி அடையாளங்களின் எண்ணிக்கை புள்ளடிகளை விடக் கூடுதலாக இருப்பின் அப்பிள்ளைக்கு ஏதேனும் (விலை குறைந்த) பரிசொன்றை வழங்கலாம். புள்ளடிகளின் எண்ணிக்கை கூடுதலாக இருக்குமாயின் பரிசு கிடைக்காது. அந்நிலையில் பிள்ளைக்கு ஊக்கம் வழங்கப்பட வேண்டும். செய்யப்பட்ட நற்செயல் சிறியதாயினும் அதற்குரிய அடையாளத்தை இடத் தவறக்கூடாது. சிறிய நற்செயல்கள் கூட முக்கியமானவையே என்பதை உணர்த்தவும் அவர்களை ஊக்குவிக்கவும் இது உதவும். வெகுமதி பெறுவதற்காக நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பிள்ளைகளில் ஏற்படக்கூடாது. என்றாலும், இம்முறை அவர்களில் நல்ல மனப்பாங்குகளை வளர்க்க உதவும். நல்லது செய்தால் நன்மை

கிடைக்கும் என்று கூறிவிட்டு சும்மா இருப்பதை விடச் சிறிய பரிசுகளையும் பாராட்டு வார்த்தைகளையும் வழங்குவது அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். இங்கு பிள்ளைகளின் நடத்தையே நல்லது, கூடாதது என மதிப்பீடு செய்யப்படுகிறது என்பதைப் பெற்றார் அவர்களுக்கு விளக்கவேண்டும். ஒருபோதும் பிள்ளைகளை நல்லவர்கள், கெட்டவர்கள் என அடையாளப்படுத்தக் கூடாது.

நற்செயல்/ கெட்ட செயல் அட்டவணையொன்றுக்கான எடுத்துக்காட்டு

	அமானா			ஆயிஷா		
	Extra Credit	Good	Bad	Extra Credit	Good	Bad
திங்கள்	✓✓ பையைத் தூக்க சகோதரிக்கு உதவினார்	✓ குப்பையை அகற்றினார்			✓ படுக்கையை ஒழுங்கு படுத்தினார்	
செவ்வாய்		✓ தொழுகையை நிறைவேற்றினார்	X அளவு கடந்த சப்தம்			X சகோதரிக்கு அடித்தார்
புதன்			X நிலத்தில் அழுக்கை எறிந்தார்	✓✓ பாட்டிக்கு எழுந்து நடக்க உதவினார்		
வியாழன்		✓ பொருட்களைத் தூக்கிச் செல்ல ஆசிரியருக்கு உதவினார்			✓ தமது ஆடைகளை அடுக்கி வைத்தார்	
வெள்ளி	✓✓ சிறந்த பெறுபேற்று அறிக்கை					
சனி					✓ உணவைச் சாப்பிட்டு முடித்தார்	
ஞாயிறு		✓ குர்ஆன் ஆயத்தை மனனமிட்டார்				
மொத்தம்	8 ✓		2 X	5 ✓		1 X
மீதி	6 ✓ (பரிசு பெற்றார்)			4 ✓ (பரிசு பெற்றார்)		

மூன்றாம் பகுதி

நன்னடத்தையைக் கட்டியெழுப்புதலும் ஆளுமையும்

அத்தியாயம்- 14 :
நன்னடத்தையும் ஆளுமையும் **377**

அத்தியாயம்- 15 :
துணிச்சலை வளர்த்தல் **385**

அத்தியாயம்- 16 :
அன்பைப் போதித்தல் **402**

அத்தியாயம்- 17 :
நேர்மையும் நம்பகத் தன்மையும் **420**

அத்தியாயம்- 18 :
பொறுப்புணர்வைக் கற்றுக் கொடுத்தல் **433**

அத்தியாயம்- 19 :
சயாதீனத்தைக் கற்றுக் கொடுத்தல் **451**

அத்தியாயம்- 20 :
ஆக்கத்திறனை ஊட்டி வளர்த்தல் **479**

அத்தியாயம்- 21 :
சுயமதிப்பும் கெட்டுப்போன பிள்ளைகளும் **497**

அத்தியாயம்- 22 :
உங்கள் பிள்ளைகளுக்குப் பொருத்தமான நண்பர்களைத் தெரிவு செய்தல் **503**

அத்தியாயம்- 23 :
தொலைக்காட்சி, வீடியோ, கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள் என்பன ஏற்படுத்தும் அழிவு ரீதியான தாக்கம் **514**

அத்தியாயம்- 14

நன்னடத்தையும் ஆளுமையும்

- அறிமுகம் 378
- நடத்தைப்பண்பு (Character) என்றால் என்ன? 379
- நடத்தைப் பண்பின் உருவாக்கம் 381
- நடத்தைப்பண்பு ஆழமான வேர்களைக் கொண்டது 382
- ஆளுமை என்றால் என்ன? 383
- தொழிற்பாடு- 46 384

அறிமுகம்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
மனிதர்கள் உலோகங்களைப் போன்றவர்கள்; ஒவ்வொருவருக்கும் தனித்துவமான பண்புகள் உண்டு. அவர்களுள் எவர் இஸ்லாத்துக்கு முந்திய அறியாமை (ஜாஹிலியா) காலத்தில் சிறந்தவராக இருந்தாரோ அவரே இஸ்லாத்தைப் புரிந்து கிரகித்துக் கொண்ட நிலையில் இஸ்லாமியக் காலத்திலும் சிறந்தவராக இருக்கிறார். (அல் புகாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வே அபூ ஜஹ்ல், உமர் இப்ன் அல் கத்தாப் ஆகிய இருவரில் உனக்கு விருப்பமான ஒருவரைக் கொண்டு இஸ்லாத்தைப் பலப்படுத்துவாயாக! அவர்களுள் உமரே அதிக விருப்பத்துக்குரியவராக இருந்தார். (அல் திர்மிதீ)

இவ்விரு மனிதர்களும் தம் பிள்ளைப் பருவம் முதலே வலிமையான நடத்தைப் பண்புகளைக் கொண்டிருந்தனர். இதனால் அவர்கள் தமது கோத்திரங்களின் தலைவர்களாக மதிக்கப்பட்டனர். விசுவாசத்தையும் கல்வியையும் பெற்றுக்கொள்வதற்கு முன்பே அவர்களிடம் உன்னதமான சிறப்பியல்புகள் இருந்தன.

வலிமையான நடத்தைப் பண்புகளை விருத்திசெய்தல், சரியான கருத்துப் படிவங்களைப் போதித்தல், நேர்மையும் வாய்மையும் பழக்கத்தில் வரக்கூடிய விதத்தில் நல்ல விழுமியங்களை ஊட்டுதல் என்பனவே சிறந்த பிள்ளை வளர்ப்பின் சாராம்சங்களாக இருக்கின்றன. பிள்ளைகள் எப்போதும் பெற்றோரின் நடத்தையை அவதானித்துக் கொண்டே இருப்பார்கள்; பின்பற்றுவார்கள். எனவே, பெற்றார் தமது பிள்ளைகளின் உளவியல் விருத்தி, மனவெழுச்சி விருத்தி என்பன தொடர்பாகக் கூருணர்ச்சியுடையவர்களாய் இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, பெற்றார் தம் பிள்ளைகளோடு ஒன்றாக இருந்து உரையாடுவதற்கோ அல்லது வெளியில் செல்வதற்கோ நேரம் குறித்தால் அதனை அவ்வாறே நிறைவேற்ற வேண்டும். அதனைத் தவற விட்டால் அது பிள்ளைகளில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி விடும். தாம் முக்கியமற்றவர்கள், மதிப்பற்றவர்கள் என்ற எண்ணம் அவர்களுள் ஏற்படும். சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி அவர்களுக்கு மனவெழுச்சி ரீதியாகப் பாரிய முக்கியத்துவமுடையதாக இருக்கலாம். அது புறக்கணிக்கப்படும் போது தாம் கைவிடப்பட்டது போன்றும் ஏமாற்றப்பட்டு விட்டது போன்றும் அவர்கள் உணர்வர். எனவே, பெற்றாரின் நடத்தை அவர்களில் நம்பிக்கையின்மை, நேர்மையீனம் போன்ற பண்புகளை ஊக்குவிக்கலாம்.

இறைவனின் அடியார்களது முதல் ஆசை பயபக்தி நிறைந்தவர்களுக்கான முன்மாதிரிகளை உருவாக்குவதே என்பது பற்றி இந்நூலில் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம். இந்தத் தலைவர்கள் விவேகிகளாகவும் உடல் வலிமையுள்ளவர்களாகவும் இருப்பதோடு சிறந்த நற்பண்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இவைதான் தலைமைத்துவத்துக்குரிய சிறப்பியல்புகளாக இருக்கின்றன. ஆளுமையின் அடிப்படை ஆக்கக்கூறுகளாகவும் இச்சிறப்பியல்புகளே விளங்குகின்றன. இப்பண்புக் கூறுகள் தவறானவையாக அல்லது நலிவான வையாக இருப்பின் முழு மனித சமுதாய அமைப்பும் பிழையாகவே இயங்கும்.

விசுவாசம், கல்வி என்பவற்றுக்கு மேலதிகமாக இன்னும் பல அம்சங்களை நடத்தைப் பண்புகள் கொண்டிருக்கின்றன. அறிவு, விசுவாசம், ஞானம், நடத்தைப் பண்புகள் என்பவற்றின் மூலமே எமக்கு வழிகாட்டல் கிடைக்கிறது. உறுதியான நடத்தைப் பண்புகளைக் கொண்டவர்கள் வழி தவறியிருந்தாலும் அவர்களைப் பகுத்தறிவுரீதியாகப் பேசி



இணங்கச்செய்து சரியான வழியில் நடத்தி விடலாம். இதற்குக் காரணம் அவர்களுடைய உளக் கட்டமைப்பு உறுதியாக இருப்பதே யாகும். அதேவேளை, நடத்தைப் பண்புகளிலும் ஆளுமையிலும் பலவீனமானவர் கள் ஆத்மீக ரீதியில் உறுதியான பெறுமானங்களைக் கொண்டிருந்த போதிலும் சமூகத்தில் முன்னோடியான தலைவர்களாக வர முடியாது. எனவே, சிறந்த பிள்ளை வளர்ப்பின் போது, பிள்ளைகளில் இத்தகைய நடத்தைப் பண்புகளை இள வயதிலேயே கட்டியெழுப்புவது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். வயது பிந்தி விட்டால் இதனைச் சாதிப்பது சிரமமாகி விடும்.

நடத்தைப்பண்பு (character) என்றால் என்ன?

நடத்தைப்பண்பு (character) என்றால் என்ன? என்ற கேள்விக்குப் பின்வருமாறு விடைகள் தரப்படுகின்றன: அது

ஒரு தனித்துவமான பண்பு

ஒரு நபரை வேறுபடுத்திக் காட்டுகின்ற சிறப்பியல்புகளில் ஒன்று

ஒரு நபரை, குழுவை அல்லது சமுதாயத்தை உருவாக்குகின்ற சிக்கலான உள மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த இயல்புகளின் தொகுதி

ஒழுக்கரீதியாக மேன்மையும் உறுதிப்பாடும் கொண்ட தன்மை.

பிள்ளைப்பருவம் முதலே தலைமைத்துவப் பண்புக் கூறுகளைக் கட்டியெழுப்பு வதில்தான் பிள்ளை வளர்ப்பு கவனஞ்செலுத்துகின்றது. இது தொடர்பாக, துணிச்சல், சுதந்திரம், ஆக்கத்திறன், அன்பு, பொறுப்புணர்வு, தாராளத்தன்மை, நேர்மை, தன்னம்பிக்கை, சுயாதீனப்போக்கு, கடும் முயற்சி, கௌரவம், நியாயம், உண்மை, வாய்மை, அணியாகச்செயற்படும் தன்மை போன்ற பண்புக்கூறு களையே பல உளவியல் அறிஞர்களும் சிந்தனையாளர்களும் வலியுறுத்தி யுள்ளனர். சில பண்புக்கூறுகள் ஆரம்ப நிலையான பண்புக் கூறொன்றிலிருந்து உருவாகலாம். அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பண்புக்கூறுகளின் இணைப்பின் மூலம் தோன்றலாம். சில பண்புக்கூறுகள் வாழ்க்கையில் பிந்திக் கற்பிக்கப்படக் கூடியவை. வேறு சிலவோ குழந்தைப்பருவம் முதலே போஷித்து வளர்க்கப்பட வேண்டியவை.

சுயாதீனமான, நேர்மையான, பொறுப்புணர்வு மிக்க மனிதர்களை உருவாக்குவதே பிள்ளை வளர்ப்பின் இலக்காகும்.

இந்நூலில் நாம் பின்வரும் பண்புக்கூறுகள் பற்றிக் கவனம் செலுத்துவோம்.

துணிச்சல், ஆக்கத்திறன், நேர்மை, நம்பத்தகவு, அன்பு, பொறுப்புணர்வு, சுதந்திரம்

செல்வாக்கு மிக்க உலகத் தலைவர்கள் - அவர்கள் நல்லவர்களானாலும் கெட்டவர்களானாலும் சரியே - மேற்சொன்ன பண்புக்கூறுகளைத் தம் ஆளுமை யில் கொண்டிருக்கின்றனர். ஆதம், ஹவ்வா, நூஹ், இப்றாஹீம், ஸாறா, ஹாஜரா, மூஸா, மர்யம், ஈஸா (அலைஹிமுஸ்ஸலாம்) மற்றும் முஹம்மத் (ஸல்) போன்ற மகத்துவம் மிக்க முன்மாதிரிகளை நினைத்துப்பாருங்கள். அதே போன்று நபி (ஸல்) அவர்களின் தோழர்களான அபூபக்ர் (ரழி), உமர் இப்ன் அல் கத்தாப் (ரழி), அலீ இப்ன் அபீ தாலிப் (ரழி) முதலியோரையும் சுமையா (ரழி), கதீஜா (ரழி), ஆயிஷா (ரழி), பாத்திமா (ரழி) மற்றும் காலித் இப்ன் வலீத், உஸ்மானிய வீரரான முஹம்மத் அல் ஃபாதிஹ் போன்றோரையும் பற்றி நினைத்துப் பாருங்கள். மேலும், நெப்போலியன், ஜோர்ஜ் வொஷிங்டன், மா ஓ சேதுங் போன்ற ஏனைய தலைவர் கள் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். இவர்களனைவரும் துணிச்சலும் ஆக்கத் திறனும் பொறுப்புணர்வும் மிக்கவர்களாக விளங்கினர். இல்லையேல் தலைமைத் துவத்தைப் பெற்றுக்கொள்ளவோ அதனைப் பேணிக்கொள்ளவோ அவர்களால் முடியாது போயிருக்கும்.

நபி மூஸா (அலை) அவர்களதும் பனீ இஸ்ராயீல் கூட்டத்தினரதும் வரலாற் றிலிருந்து பெறக்கூடிய படிப்பினை பெறுமதி மிக்கது. மூஸா (அலை) அவர்கள் எகிப்தில் பிர்அவ்னின் அடிமைத் தளையிலிருந்து பனீ இஸ்ராயீல் கூட்டத்தினரை விடுவித்த பின்னர் பெரிதாக எதனையும் சாதித்துக் கொள்வதற்கு அந்த அடிமைச் சந்ததியினரை நம்பியிருக்கவில்லை. அதற்குத் தேவையான துணிச்சல், சுதந்திரப் போக்கு, ஆக்கத்திறன் போன்ற பண்புகள் எதுவும் அவர்களிடம் காணப்படாமையே இதற்குக் காரணம். அவர்கள் பல சந்ததிகளாக பயத்துக்கும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் அடிமைகளாகவே வாழ்ந்து பழகியிருந்தனர். அவர்களது அடிப்படைப் பண்புகளை விசுவாசம், கல்வி என்பவற்றின் மூலம் மாற்றியமைக்க அவரால் முடியவில்லை. ஏனெனில், அதற்குரிய பருவத்தை அவர்கள் கடந்திருந்தனர். எனவே, ஸினாய் பாலை நிலத்தில் புதிய சந்ததியொன்று பிறந்து வளரும் வரை மூஸா (அலை) காத்திருந்தார். துணிச்சலும் சுயாதீனப்போக்கும் பொறுப்புணர்வும் மிக்க பலவான்களாக அவர்களை உருவாக்க அவரால் முடிந்தது. இவ்வாறான பண்புகளைக் கட்டியெழுப்பும் செயன் முறைக்கு 40 வருடங்கள் தேவைப்பட்டன. மூஸா (அலை) அவர்களும் திறந்த, சுதந்திரமான ஸினாய் பாலைவனத்தைப் பயன்படுத்தி வலிமையும் விசுவாசமும் மிக்க புதிய யூத சமுதாயமொன்றை உருவாக்கினர்.

பெற்றார் நடத்தைப் பண்புகளை விருத்தி செய்யும் முயற்சியை குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பித்துவிட வேண்டும். ஏனெனில், பிள்ளைகள் பெரியவர்களான பின் அறிவுரை வழங்குவதும் போதனை செய்வதும் பெரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தி விடாது. ஏனெனில், ஆளுமையின் பெரும்பாலான பண்புக்கூறுகள் ஏற்கனவே உருவாகி நிலைபெற்றிருக்கும். இது தொடர்பாகப் பெற்றார் பின்பற்றுவதற்கு ஏற்ற வழிகாட்டல்கள் பல இருக்கின்றன. எனினும், வீட்டில் நேசமும் மகிழ்ச்சியும் மிக்க ஒரு சூழலில் அவை அமுல்படுத்தப்படுவது முக்கியம். நடத்தைப் பண்புகளைக் கட்டியெழுப்புவது தொடர்ச்சியான செயன்முறையொன்றாக இருந்த போதிலும் பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப கட்டத்திலேயே அது கூடிய பயனைத் தரும்.

ஒருவனை உருவாக்குவது அவனது நடத்தைப் பண்புகளேயன்றி தற்செயலான நிகழ்வுகளோ சூழ்நிலைகளோ அல்ல

நடத்தைப் பண்பின் உருவாக்கம்

நடத்தைப் பண்புகளின் விருத்தி குழந்தைப் பருவத்தில் ஆரம்பித்துத் தொடர்ச்சியாக நிகழ்கின்ற போதிலும் வாழ்க்கையின் முதற்சில வருடங்களே பயனுறுதி மிக்கனவாக இருக்கின்றன. நடத்தைப் பண்புகளின் உருவாக்கம் ஒவ்வொரு நாளும், சிந்தனை, செயல் என்பவற்றினூடாக நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

நடத்தைப் பண்புகளின் உருவாக்கம் எப்போது நிகழ்கிறது? அதன் பிறகு அவை தொடர்பாக ஏதும் செய்ய முடியுமா? இவ்வினாக்களுக்கான திருத்தமான விடை யாருக்கும் தெரியாது. வாழ்க்கை பற்றிய அடிப்படை மனப்பாங்குகள் ஐந்து மாதங்கள் முதல் ஒன்றரை வருடங்கள் வரையான வயதில் குறிப்பிடத்தக்க அளவு உறுதியடைவதாக Dr. Spock என்பவர் கூறுகிறார். பிள்ளைகள் தாம் தனித்துவமான தனியாட்கள் என்பதை உணர்ந்து கொள்ளவும் ஓரளவு சுயாதீனம் தேவை என அடம்பிடிக்கவும் ஆரம்பிக்கின்ற பருவம் இதுவாகும். (இப்பருவத்தில் தமது பால் புட்டியைத் தாமே பிடித்துக்கொள்ள நாடுவதோடு நீண்ட நேரம் தம்மோடு கொஞ்சுவதற்கும் அனுமதிக்க மாட்டார்கள்) அவர்கள் தமது முதலாவது உண்மையான பிணைப்பைத் தம் பெற்றோருடனேயே உருவாக்கிக்கொள்கின்றனர். பெற்றோர் அன்பார்வம் உடையவர்களாக இருப்பின் மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டுமெனப் பிள்ளைகள் எதிர்பார்ப்பர். பெற்றாரின் அன்பானது பிள்ளைகளின் மனதிலும் அன்புணர்வை வளர்க்கும். மாறாக, பெற்றோர் அன்பார்வம் இல்லாதவர்களாகவும் சந்தேகப்படுபவர்களாகவும் இருப்பின், பிள்ளைகளும் அதே திசையிலேயே விருத்தி அடைவர். அதேவேளை, உலகிலுள்ள ஏனையவர்களும் அன்பார்வம் இல்லாதவர்களாகவே அவர்களுக்குத் தோன்றுவர்.

இப்பருவத்துக் குழந்தைகள் தம்மைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துப்படிவத்தின்படி, தாம் அடிப்படையில் ஏனையோரைக் கவரக்கூடியவர்களா அல்லது கவர்ச்சியற்றவர்களா, நல்லவர்களா அல்லது பெறுமதியற்றவர்களா என்பன பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவர்களாக இருப்பர். இச்சந்தர்ப்பத் தில்தான், நன்மையே விளையும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாகவோ அல்லது தீமையே விளையும் என்ற மனப்பாங்குள்ளவர்களாகவோ பிள்ளைகள் மாறுவார்கள். குழந்தைகளுக்குத் தம் பெற்றோருடன் போதுமான தொடர்பு இல்லாமற் போனால் பொருட்கள், கருத்துக்கள் என்பவற்றோடு தொடர்பு கொள்வதும் அவர்களுக்குச் சிரமமாக இருக்கும்.

ஒன்றரை வயதுக்கும் மூன்று வயதுக்கும் இடைப்பட்ட பருவத்தில், தாம் தனித் துவமான ஆட்கள் என்ற திட்டவட்டமான உணர்வு பிள்ளைகளில் ஏற்படும். அத்தோடு, தாம் தம் பெற்றோரில் தங்கியிருக்கிறோம் என்ற உணர்வும் வலுப்பெறும். இந்நிலையில் குழந்தையின் உள்ளத்தில் பல்வேறு போராட்டங்கள் ஏற்படலாம். தங்கியிருப்பதா சுயாதீனமாக இருப்பதா?, சுத்தமாக இருப்பதா அசுத்தப்படுத்திக்கொள்வதா? ஒத்துழைப்பதா பிடிவாதமாக இருப்பதா?, அன்புக்கு இணங்குவதா எதிர்த்து நிற்பதா? போன்ற சிந்தனை மோதல்கள் இவற்றில் அடங்கும். மூன்றாம் வயது நிறைவு பெறும் போது, ஒரு பிள்ளை எப்படியான ஒருவராக உருவாப் போகிறது என்பது அதற்கும் அதன் பெற்றாருக்கும் இடையில் எந்தளவுக்கு அன்பார்வமுள்ள உறவொன்று விருத்தியாகி யிருக்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. இந்தச் சிக்கலான பருவத்தில், பிள்ளையும் அதன் பெற்றாரும் தமக்கிடையிலான மோதல்களை எவ்வாறு தீர்த்துக்கொள்கிறார்கள் என்பதற்கு அமையவே பிள்ளையின் நடத்தைப் பண்புகளின் உருவாக்கமும் நிகழும்.

பதினெட்டு வயதாகும் போது ஒருவரின் நடத்தைப் பண்புகளின் உருவாக்கம் பூர்த்தியடைந்து உறுதிப்பட்டு விடுகிறது. முன்பள்ளிப்பருவம், பாலர் வகுப்பு, ஆரம்ப வகுப்புக்கள், இடைநிலை வகுப்புக்கள் மற்றும் உயர் பள்ளிப் பருவங்களில் நடத்தைப் பண்புகளின் விருத்தி இடம்பெறுகின்றது. இருபது வயதுக்குப் பின்னர் பிள்ளை அறிவு

மற்றும் கல்வி விருத்திக்குரிய கட்டத்தை அடைகிறது. இக்காலத்திலேயே அது மேலதிகக் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் .

பிள்ளைகளைச் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க வேண்டுமாயின் அவற்றின் ஆளுமையோடு தொடர்புடைய ஆன்மீகமும், ஒழுக்கமும், உடல், உள்ளம், உளவியல், சமூகம் என்பன சார்ந்த அம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

பெற்றார் தம் பிள்ளைகளுடன் மேற்சொல்லப்பட்ட ஒவ்வொரு துறையிலும் வலிமை யான பிணைப்புக்களை உருவாக்கிக் கொள்வது அவசியம். உதாரணமாகப் பெற்றார் ஆதிக்கத்தன்மை மிக்கவர்களாகவும் பிள்ளைகள் அடங்கிப் போகின்றவர்களாகவும் மாறலாம். பெற்றார் எதிர்ப்புணர்வு கொண்டவர்களாகவும் சாமர்த்தியமற்றவர்களாகவும் இருந்து, திருப்பி எதிர்ப்புக் காட்டுவதற்குப் பிள்ளைகளுக்கு இடங்கொடுத்தால் அவர்கள் எதிர்ப்பு மிக்கவர்களாக வளரலாம். பெற்றார் கண்டிப்பும் கடுகடுப்பும் உள்ளவர்களாக இருந்து சுத்தம் பற்றிய விடயத்தில் மிகக் கண்டிப்பாக இருப்பின் அவர்களது பிள்ளைகள் அளவுக்கு மீறிச் சுத்தம் பேணுபவர்களாகவும் அழுக்குப்பட விரும்பாதவர்களாகவும் இருப்பர். பெற்றோர் மிதமிஞ்சிய அக்கறையுடன் எந்நேரமும் தம் பிள்ளைகளைக் கண் காணித்துக்கொடிருந்து, அப்பிள்ளைகளும் சாதுவாக அந்நிலைமையை ஏற்றுக் கொண்டால், அவர்கள் அளவுகடந்து தங்கியிருப்பவர்களாக மாறக்கூடும்.

பிள்ளைக்கு மூன்று வயதாகும் போது அதன் நடத்தைப் பண்புகள் உருவாகி விடுகின்றன எனப்பல உளவியலாளர்கள் வலியுறுத்துகின்ற போதிலும், பிற்காலத்தில் அதன் சூழலும் அதன் மீதான அழுத்தங்களும் மாற்றமடையும் போது, பிள்ளையின் சில ஆளுமைப் போக்குகள் மாற்றியமைக்கப்படலாம். சில சிறப்பியல்புகள் பிள்ளைப் பருவத்தின் இறுதிக்கட்டம் வரை உருவாக்கம் பெறுவதில்லை. (ஒத்த பாலார் பற்றியும் எதிர்ப்பாலார் பற்றியும் உருவாகும் மனப்பாங்குகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்)

நடத்தைப்பண்பு ஆழமான வேர்களைக் கொண்டது

நடத்தைப் பண்பானது கல்வியின் மூலமோ அனுபவத்தின் மூலமோ மற்றவர்களால் எளிதாகப் பிள்ளைகளுக்கு வழங்கப்படக்கூடிய ஒன்றல்ல. ஆளுமை உருவாக்கத்தின் ஆரம்ப கட்டத்திலேயே நடத்தைப்பண்புகளின் நிர்மாணம் இடம்பெற வேண்டும். நடத்தைப்பண்புகளை விருத்திசெய்யப் பெற்றாருக்குக் காலமெடுக்கும் (பெரிய விருட்சமொன்றின் வேர்கள் பூமிக்குள் ஆழமாய் வளர்வதற்குக் காலம் எடுப்பது போல). அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளால் பிள்ளையின் வாய்மையும் நாணயமும் குலைந்து போகாமல் நடத்தைப் பண்புகள் பாதுகாக்கின்றன. நன்கு உறுதியடைந்த நடத்தைப் பண்புகள் ஒரு மரத்தின் இலைகளைப் போல் சலசலப்படைவதுமில்லை; மந்தையொன்றைப் பின்தொடர்ந்து செல்வதுமில்லை. நடத்தைப்பண்பின் வலிமை ஆழமான வேர்களைப் போன்று பிள்ளையினுள் ஊடுருவி வளரும். நல்ல பண்புகளின் வித்துக் களைப் பிறப்பிலேயே பெற்றார் விதைத்து விட்டால், அவை நேரகாலத்துடனேயே முளைவிடத் தொடங்கி விடும்.

“பெற்றார் தம் பிள்ளைக்கு வழங்கக்கூடிய மிகச்சிறந்த வெகுமதி நற்பண்புகளே” (Tawfiq, 1967)

ஆளுமை என்றால் என்ன?

ஆளுமை பற்றிய பிரதான கோட்பாடுகள் மூன்று இருக்கின்றன:

1. பாரம்பரியமான கோட்பாட்டின் படி ஆளுமையானது உளம், உடல், ஆன்மா ஆகிய மூன்று கூறுகளால் ஆக்கப்பட்டுள்ளது.
2. ஆளுமையானது உள்ளத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டுள்ளது என நவீன கோட்பாடொன்று கூறுகிறது. பலஸ்தீனிய சட்ட அறிஞரான ஷெய்க் அல் நப்ஹானி இதனை விசுவாசிப்பதோடு உடலுக்கு ஆளுமையோடு எவ்விதத் தொடர்பும் கிடையாது எனவும் அவர் வாதிக்கின்றார்.
3. ஆளுமையானது பல கூறுகளால் ஆனது எனப் பின்- நவீனத்துவக்கோட்பாடு கூறுகிறது. உடல், உள, சமூக, மனவெழுச்சி, ஆன்மீகம் என்பன சார்ந்த பல்வேறு மாறிகள் ஆளுமையை உருவாக்குவதாக பெரும்பான்மையான கல்வியியல் அறிஞர்களும் உளவியலாளர்களும் நம்புகின்றனர்.

ஆளுமையின் அடிப்படை அம்சங்களான துணிவு, அன்பு, ஆக்கத்திறன், பொறுப்புணர்வு, நேர்மை, நம்பத்தகவு, சுயாதீனம், சுதந்திரம் என்பன பற்றியே இங்கு நாம் கவனம் செலுத்துகின்றோம்.

ஒழுக்கவியல் போதகரான Michael Josephson என்பவரின் கருத்துப்படி, நடத்தைப்பண்பின் ஆறு தூண்களும் பின்வருமாறு:

நம்பத்தகவு, மரியாதை, பொறுப்புணர்வு, நியாயம், கரிசனை காட்டல், பிரஜாவுரிமை

மெய்யறிவு, பொறுமை, தாழ்மை, தன்னடக்கம், நாணம், மிதமான போக்கு, எளிமை, தன்னம்பிக்கை, தியாகம், தாராளத்தன்மை என்பன பல்வேறு அறிஞர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ள ஏனைய பண்புகளாகும். நடத்தைப்பண்பு என்பது உள்வாரியானது; ஆளுமையின் அடிப்படைகளோடு தொடர்புடையது. அதேவேளை, அதன் புறம் சார்ந்த வெளிப்பாடே நடத்தை எனப்படுகிறது. விடாது மீட்டி மீட்டி இடம்பெறும் ஒரு நடத்தை சிறிது காலத்தின் பின் தன்னுணர்வின்றியே இடம்பெறலாம். இந்நிலையில் அது பழக்கம் எனப்படும்.

ரோஜாவும் குழந்தையும் பெற்றோர்களும்

நாம் ஒரு குழந்தையை ரோஜா மலரொன்றுக்கு ஒப்பிடலாம். அது மலர்ந்து இனிய நறுமணத்தைப்பரப்பி அழகுணர்வைத் தூண்டி விடுகிறது. இருப்பினும் அதன் காம்பிலே முட்கள் பல இருக்கின்றன. கருணையுள்ளம் மிக்க பெற்றார், அந்த ரோஜாவைக் காம்பினால் மென்மையாகப் பிடித்து அது முழுமையாய் மலர்வதற்கு இடமளிப்பர் – சில வேளைகளில் அவரது கையில் முள் குத்தினாலும் சரியே. பொறுமையில்லாப் பெற்றாரோ முட்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக ரோஜாவின் மென் இதழ்களைப் பற்றிப்பிடித்து அதனைச் சிதைத்துவிடுவர். அவர் முள்ளின் வேதனையிலிருந்து தன்னைக் காத்துக்கொண்டாலும் ரோஜாவை நாசமாக்கி விடுகிறார். ஒரு ரோஜாப்பூவைக் கையாள்வது போல் மிக்க கவனத்துடனும் பொறுமையுடனும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை நடாத்துவது அவசியம்.

தொழிற்பாடு

தொழிற்பாடு 46: பிரார்த்தனை (துஆ) ஒன்றினை மனனம் செய்தல்

பின்வரும் பிரார்த்தனையை குடும்பத்துடன் சேர்ந்து அறபியில் அல்லது தமிழில் மனனம் செய்யுங்கள்.

اللهم إني أعوذ بك من الهم والحزن وأعوذ بك من العجز والكسل وأعوذ بك من الجبن والبخل وأعوذ بك من غلبة الدين وقهر الرجال» أبو داؤود

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! நான் மனக்கவலையையும் துன்பத்தையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன். பலவீனத்தை விட்டும் சோம்பலை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன். கோழைத்தனம் மற்றும் உலோபித்தனம் என்பவற்றிலிருந்தும் உன்னிடம் காவல் தேடுகிறேன். பெருங்கடன் படுவதை விட்டும் ஏனைய மனிதர்களால் நசுக்கப்படுவதை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன். (அபூ தாவூத்)

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள பண்புக்கூறுகளை இனங்கண்டு அவை பற்றிக் கலந்துரையாடுங்கள். ஆளுமை உருவாக்கத்தின் போது இந்த எதிர்மறையான பண்புக்கூறுகள் நீக்கப்பட வேண்டியது ஏன்?இந்த எதிர்மறையான பண்புக்கூறுகளைச் சரி செய்வதற்குப் பொருத்தமான நல்ல பண்புக்கூறுகள் கற்பிக்கப்படுவதைப் பிள்ளைகள் பெரியவர்களாக வளரும் வரை பெற்றோர் தாமதப்படுத்த முடியுமா? இந்த விடயம் தொடர்பாக நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறக்கூடிய செயல்முறை ரீதியான சொந்த அனுபவங்கள் எவை? இந்த ஹதீஸில் சித்தரிக்கப்பட்டுள்ள விடயங்களை அவதானியுங்கள்:.

- *மன அழுத்தமும் மனத்தளர்வும்*
- *கையாலாகாத் தன்மையும் சோம்பலும்*
- *கோழைத்தனமும் உலோபித்தனமும்*
- *அளவு கடந்த கடனும் ஏனையவர்களால் நசுக்கப்படுதலும்*

அத்தியாயம் 15

துணிச்சலை வளர்த்தல்

- அறிமுகம் 386
- துணிச்சலும் பயமும் பற்றிய அடிப்படைத் தத்துவங்கள் 388
- பிள்ளைகளில் பய உணர்வின் விருத்தியைப் புரிந்து கொள்ளல் 390
- மனவெழுச்சி ரீதியான துணிச்சலும் உடல் ரீதியான துணிச்சலும் 392
- துணிச்சலுக்கும் இணங்கிப் போவதற்கும் இடையில்... 392
- ஒத்த வயதினர் ஏற்படுத்தும் அழுத்தம் 393
- பெற்றோரும் கலாசார நடைமுறைகளும் 395
- தொழிற்பாடுகள் 47- 53 398

அறிமுகம்

ஆபத்தான அல்லது கஷ்டமான அல்லது நோவினை தரக்கூடிய எதனையும் (அதை விட்டு விலகிச் செல்வதற்குப் பதிலாக) நேரடியாக எதிர்கொண்டு செயற்படுவதையே துணிச்சல் என்கிறோம். பயமின்றித் துணிச்சலோடு செயற்படும் இயல்பானது பல ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளது. வீரம், மனவலிமை, மனவுறுதி, அச்சமின்மை முதலியனவே அவை.

சிறு பிள்ளைகளில் துணிச்சல் ஊக்குவிக்கப்பட வேண்டும். நம்பிக்கையை வளர்ப்பதன் மூலமும், வெற்றியை எதிர்பார்க்கச் செய்வதன் மூலமும், தம்மைப்பற்றிய பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை ஊக்குவிப்பதன் மூலமும் துணிச்சல் போன்ற பண்புகளைப் போஷித்து வளர்க்கலாம். நாம் பதற்றமடையாமல் சாந்தமாக இருந்து ஆதரவளிப்பதன் மூலம், நிலைமைகளைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்குப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்க முடியும். அதேபோல் மற்றவர்களைப் பற்றிக் கரிசனை காட்டுதல், அவர்களை இடர்களிலிருந்து காப்பாற்றுதல், அவர்களை மதித்தல் என்பவற்றினூடாகப் பெற்றார் வீர உணர்வையும் போற்றி வளர்க்கலாம்.

துணிச்சல் பற்றிய நடத்தை சார் வரைவிலக்கணங்கள் சில பின்வருமாறு:

1. எது சரியானதோ அதற்காக எழுந்து நிற்றல் - நீங்கள் தனித்துப் போனாலும் சரியே.
2. ஒத்த வயதினர் ஏற்படுத்தும் எதிர்மறையான அழுத்தங்களை நிராகரித்தல்.
3. தோல்வியுறுவோம் அல்லது தவறு செய்வோம் என நீங்கள் பயந்தாலும்கூட ஏதேனுமொன்றை முயற்சித்துப் பார்க்கத் தயங்காதிருத்தல்.
4. சிலர் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள் என்ற நிலையிலும் உங்கள் கருத்தை வெளிப்படுத்துதல்.

பிள்ளைகளில் துணிச்சல் தேவைப்படுகின்ற மிகப் பொதுவான நிலைமைகள் பின்வருமாறு:

1. உண்மை பேசுவதால் பிரச்சினை ஏற்படும் என்ற நிலையிலும் உண்மையே பேசுதல்.

2. பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் தம் பலத்தைக் காட்டிப் பயமுறுத்த வருபவர்களைச் சமாளித்தல்.
3. ஒத்த வயதினரின் அழுத்தங்களைச் சமாளித்தல்.
4. பள்ளிக்கூட வாழ்க்கையை ஆரம்பித்தல்.
5. வெளித்தோற்றத்தில் வித்தியாசமாக இருத்தல். (முஸ்லிம் பெண் பிள்ளைகள் ஹிஜாப் அணிதல், ஆண் பிள்ளைகள் தொப்பி அணிதல் முதலியன)
6. உங்கள் முந்திய சாதனைகளைத் தாண்டி மேலே செல்ல முயற்சித்தல்.
7. மக்கள் விருப்பத்துக்கு ஒவ்வாததாக இருப்பினும் அபிப்பிராயங்களை வெளியிடுதல்.

எனினும், சில சந்தர்ப்பங்களில் துணிச்சல் துடுக்குத்தனமாக மாறிவிடும். உதாரணம்: பெற்றோர் மற்றும் ஆசிரியர்களால் விதிக்கப்படும் விதிகள், சட்டங்கள் முதலியவற்றுக்குக் கீழ்ப்படிய மறுத்தல். மன உந்துதல்களின் காரணமாக பகுத்தறிவுக்கு முரணான முறையில் பண்பாட்டுக்கும் சமயத்துக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்வதும் உகந்ததல்ல. சமயத்தைப் பல்வேறு நாடுகளின் பண்பாட்டு முறைகளோடு போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் இருப்பது முக்கியம். ஏனெனில், சில பண்பாட்டு ரீதியான நடைமுறைகள் இஸ்லாமிய சட்டத்துக்கு முற்றிலும் முரணானவையாக உள்ளன. உதாரணமாக, பலவந்தமாகத் திருமணம் செய்வித்தல், தந்தையின் நடத்தை பற்றிக் கவனிக்காமல் பிள்ளைகளின் பாதுகாப்புப் பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தல், பிள்ளைகளுக்கு (குறிப்பாகப் பெண் பிள்ளைகளுக்கு) கல்வி வழங்காது தடுத்தல், பெண்களுக்குரிய வாரிசுரிமையை மறுத்தல் முதலியன இஸ்லாமிய சட்டத்தை மீறும் வழக்கங்களாகும். ஆண்களும் ஆண் பிள்ளைகளும் தாம் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு எவருடனும் எவ்விதக் கண்காணிப்புமின்றிப் போய்வர அனுமதிக்கப்படும் அதே வேளையில் பெண்களையும் பெண் பிள்ளைகளையும் தனிப்படுத்தி ஒதுக்கி வைப்பதும் அற்ப சந்தேகங்களுக்காகப் பெண்களையும் பெண் பிள்ளைகளையும் தண்டிப்பதும் இஸ்லாமிய நடைமுறைகளல்ல. இவற்றுள் பெரும்பாலானவை சமயம் என்ற போர்வையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. பொய் சொல்வதற்கும் நேர்மையீனமாக நடப்பதற்கும் தம் பிள்ளைகளைப் பெற்றார் வற்புறுத்துவதும் தவறானதே.

துணிச்சல் பற்றிய சில கூற்றுக்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உயிர்த் தியாகிகளின் தலைவர்கள் (நபிகளாரின் சிறிய தந்தையான) ஹம்ஸா இப்ன் அப்த்-அல்-முத்தலிப்பும் இன்னொரு மனிதரும் ஆவார். அம்மனிதர் ஒரு கொடுங்கோலனுக்கு எதிராக எழுந்து நின்று உண்மையைப் பேசினார். அதனால் அவர் அந்த ஆட்சியாளனால் கொல்லப்பட்டார். (அல் நைஸாபூரி 1990)

ஹம்ஸா (ரழி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய வேளையில் 'துணிவிருந்தால் யாரும் இறைத்தூதரைத் துன்புறுத்திப் பார்க்கட்டும்' எனச் சவால் விடுத்தார். யுத்த களத்தில் ஒருவன் பின்புறமாக வந்து கோழைத்தனமாகத் தாக்கியதால் அவர் கொல்லப்பட்டதனால் 'உயிர்த்தியாகிகளின் தலைவர்' என்ற கௌரவப்பெயரைப் பெற்றுக்கொண்டார். அவர் பெரிய தைரியசாலியாக இருந்தார்.

- நற்குணங்கள் அனைத்திலும் முதலிடம் துணிச்சலுக்கே உரியது. ஏனெனில், துணிச்சல் இல்லாவிட்டால் மற்றெந்த நற்குணத்தையும் பயன்படுத்த உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமற் போகலாம் - Samuel Jackson.
- துணிச்சல் மிக்க ஒருவர் பெரும்பான்மையாகிவிடுகிறார் - Thomas Jefferson.
- நீங்கள் புறப்பட்ட கரை கண்ணுக்குத் தெரியாமற் போகாத வரையில் நீங்கள் புதிய கண்டங்களைக் கண்டுபிடிக்க முடியாது.
- நல்ல மனிதர்கள் துணிச்சலோடு செயற்படாத வரை தீமை தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டே இருக்கும்.

துணிச்சலும் பயமும் பற்றிய அடிப்படைத் தத்துவங்கள்

துணிச்சலுக்கு எதிரான பண்பு பயம் ஆகும். இது அடிப்படையான மனித உந்துதல்களுள் ஒன்று. பயம் என்பது கற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வினையாகவோ, பாதுகாப்புக்குரிய இயல்பான விளைவுகாட்டலாகவோ இருக்கலாம். பிள்ளைகளிடம் காணப்படும் நிலையான பயங்களையும் நெகிழ்வான பயங்களையும் பெற்றோர் நன்கு அவதானிக்க வேண்டும். நெகிழ்வான பயம் தோன்றி மறையக்கூடியது. (அது குறிப்பிட்ட அளவு காலத்திற்கு இருந்து விட்டு மெதுவாக மங்கிப் போய்விடும்) இது இயல்பானது. மறுதலையாக நிலையான பயமொன்று தொடர்ந்து நிலைத்து நிற்பதோடு மேலும் தீவிரமடையலாம். விமானத்தில் பறத்தல், உயரமான இடங்கள், நாய்கள், சிலந்திகள், சனநெரிசலான இடங்கள் போன்றன பற்றிப் பிள்ளைகளிடம் காணப்படக்கூடிய பயங்கள் அசாதாரணமானவை. இவ்வகையான நிலையான பயங்களை விட்டும் நிவர்த்தி பெறுவதற்கு எல்லையற்ற பொறுமை தேவைப்படும். சிலவேளைகளில் அதற்கு நிபுணர்களைக்கொண்டு சிகிச்சை செய்ய வேண்டியும் ஏற்படலாம். ஆரோக்கியமான பயங்கள் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கின்றன. ஏனெனில், வளர்ந்தவர்களும் பிள்ளைகளும் ஆபத்துக்களுக்கு அவசரமாக எதிர்வினை காட்ட அவை உதவுகின்றன. விஷப்பாம்புகள், தீச்சுவாலைகள், நச்சுத்தன்மையான இரசாயனப் பொருட்கள் என்பன தொடர்பான பயங்கள் ஆரோக்கியமானவையே. ஒரு பயமானது அன்றாடத் தொழிற்பாடுகளைச் செய்வதிலிருந்து மனிதர்களைத் தடுக்குமானால் அது ஆரோக்கிய மற்றதாகக் கருதப்படும்.

பிள்ளைகள் தம் பயங்களைச் சமாளிக்க உதவக்கூடிய ஆலோசனைகள் சில பின்வருமாறு:

- *தமது பிள்ளைகளின் முயற்சிகளைப் பெற்றார் பாராட்ட வேண்டும். பிள்ளைகள் எதையும் செய்ய எத்தனிக்கும் போது வெற்றி, தோல்விகளை நோக்காது அவர்களுடைய முயற்சிக்காகப் பாராட்ட வேண்டும். குறிப்பாக, நன்னெறி சார்ந்த அவர்களது துணிச்சல் பாராட்டப்படுவது அவசியம். உதாரணமாக, மற்றவர்கள் தவறு செய்யும் போது அவர்களோடு இணங்கிப்போகாதிருத்தல், பொய் சொல்வது எளிதாக இருக்கும் வேளையில் உண்மை பேசுதல்.*
- *துணிச்சலை ஊக்குவிக்கின்ற மிகச் சிறந்த காரணி பெற்றாரின் முன்மாதிரியாகும். பெற்றார் துணிச்சலைக் காட்டும் போது பிள்ளைகளும் அவ்வாறே செய்வர். பிள்ளைகள் பிரதி பண்ணுவதில் ஆர்வம் உடையவர்கள்; பெரியவர்கள் - குறிப்பாகத் தம் பெற்றோர்கள்- நடந்து கொள்வது போன்று நடக்க விருப்பம் கொண்டவர்கள். எனவே பிள்ளைகளின் பயங்கள் சில வேளைகளில் பெற்றாரின் பயங்களை ஒத்திருக்கும்.*
- *துணிச்சலுக்கும் வெளிப்பகட்டுக்காகக் காட்டப்படும் நடத்தைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் பெற்றார் தெளிவாக்க வேண்டும். தைரியமின்மை, வெட்கப்படுதல், பணிவு கருதி ஒதுங்கியிருத்தல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைப் பெற்றார் உணர்ந்திருப்பது அவசியம். தங்களது உரிமைகளுக்காகவும் மற்றவர்களது உரிமைகளுக்காகவும் எழுந்து குரல் கொடுப்பதற்குப் பிள்ளைகள் பயிற்றுவிக்கப்படுதல் அவசியம். தவறான விடயங்களுக்கு 'இல்லை' அல்லது 'முடியாது' என்று கூறக்கூடிய அமைதியான துணிச்சல் பற்றியும் பெற்றார் விளக்கமளிக்க வேண்டும்.*
- *அங்கீகாரமும் மரியாதையும் கொண்ட ஒரு சூழலைப் பெற்றார் வீட்டில் உருவாக்க வேண்டும். பிள்ளைகள் தம் அச்சங்களை மனந்திறந்து கூறக்கூடிய பாதுகாப்பான இடமொன்று அவர்களுக்குத் தேவை. பிள்ளைகளின் பயங்கள் அனைத்தும் உண்மையானவையே. அவை சில வேளைகளில் அர்த்தமற்றவை போல் வளர்ந்தவர்களுக்குத்*

தோன்றக்கூடும். தம் பிள்ளைகளின் பயங்களைப்பற்றிக் கேலி செய்வதையும் அவற்றைப் புறக்கணிப்பதையும் பெற்றார் தவிர்த்தல் அவசியம். அச்சமுற்றிருக்கும் ஒரு பிள்ளையைச் சிறுமைப்படுத்தவோ தண்டிக்கவோ அல்லது அதற்கு அளவு கடந்து பாதுகாப்பு வழங்கவோ கூடாது.

- அடிக்கடி மாறாத, எதிர்வு கூறக்கூடிய தினசரி நடைமுறை ஒழுங்கொன்று அமுல் படுத்தப்பட்டால் அது பிள்ளைகளுக்கு வலுவையும் கட்டுப்பாட்டையும் வழங்கும். தமது வாழ்க்கையில் நடப்பவை பற்றிச் சரியான தகவல் இல்லாத காரணத்தால் பிள்ளைகளில் பயங்கள் தோன்றலாம். அன்றாட நடைமுறையில் மாற்றங்கள் தேவைப்படின் முன்கூட்டியே அது பற்றிக் கலந்துரையாடுவதன் மூலம் பிள்ளை களை அவற்றுக்குத் தயார்படுத்தலாம். வெளிக்கள வேலைகள், விருந்தினர் வருகை, வைத்தியரிடம் செல்லுதல் முதலியவற்றின் போது என்ன நடக்குமோ எனப் பிள்ளைகள் அறிந்திராத காரணத்தால் அவர்களில் பயம் ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் என்ன நடக்கப்போகிறது என அவர்கள் நினைப்பதை விவரிக்கும்படி கூறி நிகழ்ச்சி முடிந்த பின்னர் அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்யலாம்.
- பிள்ளைகள் பயப்படுகின்ற ஒன்றினை, அதற்கு அவர்கள் தயாராக முன்பே எதிர்கொள்ள வற்புறுத்த வேண்டாம். அதனைச் சமாளிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கும் போது படிப்படியாக அதற்கு முகங்கொடுக்கச் செய்ய முடியும். உதாரணமாக, பிள்ளைகள் கடல் அலைகளைக் கண்டு பயப்படுமாக இருந்தால், முதலில் அலைகளுக்கு நெருக்கமாக அழைத்துச்சென்று அவற்றை அவதானிக்க விடலாம். பின்னர் வளர்ந்தவர் ஒருவர் அவர்களைத் தூக்கிச்சென்று கடல் நீரில் கால் வைக்கலாம். சிறிது நேரத்தின் பின்னர் பிள்ளையை கீழே இறக்கிப் பிடித்துக்கொண்டு கடல் அலைகள் அவர்களைத் தொட்டுச்செல்ல வைப்பதன் மூலம் அப்பயத்தைப் படிப்படியாக அகற்றலாம்.
- பயத்தினால் பிள்ளைகள் நிலை குலையும் போது அது பற்றி அளவுக்கு மீறிய கரிசனை காட்டக்கூடாது. பெற்றார் அவ்வாறு செய்தால் தாம் பயப்படுவதில் நியாயம் உண்டு எனப் பிள்ளைகள் எண்ணக்கூடும். இவ்வாறான நிலையில் அவர்களது வயதுக்கு ஏற்றவாறு அமைதியான, நம்பிக்கையளிக்கும் தொனியில் அவர்களுக்கு தகவல்களை வழங்க வேண்டும். உதாரணமாக, வான வெடி ஓசைக்கு ஒரு பிள்ளை பயந்தால் "அது பலத்த ஓசையல்லவா? யாரோ தமது வெற்றியைக் கொண்டாடுவதற்காக வெடி கொளுத்துகிறார்கள். சிறிது நேரத்தில் அது முடிந்துவிடும்" என்று கூறலாம்.
- பிள்ளைகள் முதலில் பயப்பட்டு இப்போது பயப்படாத விடயங்கள் பற்றி அவர்களுக்கு அன்பாக நினைவூட்ட வேண்டும். இவ்வாறு செய்வது அவர்களிடம் தற்போதுள்ள பயங்களை அவர்கள் வெற்றி கொள்வதற்கு ஊக்கமளிக்கும்.
- பிள்ளைகள் தம் பயங்களைப் புரிந்து கொள்வதற்கு உதவுங்கள். உதாரணமாக, 'நாய்கள் குரைப்பதானது அவை பேசிக் கொள்ளும் முறையாகும். யாரையும் கண்டு அவை சந்தோசப்பட்டால் அவை அதிக மாகக் குரைக்கும்' என விளக்கலாம். எனினும், பிள்ளைகளின் பயங்கள் ஓரிரவுக்குள் அகன்று விடும் என எதிர்பார்க்க வேண்டாம்.

- யாரும் சொல்பவற்றைப் பிள்ளைகள் அப்படி யே நம்பி விடுவார்கள். உதாரணமாக, 'நீங்கள் பாதணி இல்லாமல் பாதையில் இறங்கினால் பொலிஸ்காரர் பிடித்துக்

கொண்டு போய்விடுவார்' என்று யாரா வது சொன்னால் அல்லது 'நீங்கள் நல்ல அழகாக இருக்கிறீர்கள். நான் உங்களை எனது வீட்டுக்குத் தூக்கிப் போகப் போகிறேன்' என்று பழக்கமில்லாத ஒருவர் சொன்னால் பிள்ளைகள் அதனை அப்படியே நம்பி விடுவார்கள். மரணத்தை உறக்கம் எனப் பிள்ளைகளிடம் விபரிக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அவர்கள் நித்திரை கொள்ளப் பயப்படக் கூடும். பிள்ளைகள் தங்கள் பயங்களை வெற்றி கொண்டால்தான் 'அவர்கள் பெரிய பிள்ளைகளாக மாற முடியும்' என்றும் அவர்களிடம் கூறக்கூடாது. அப்படிக் கூறுவது அவர்கள் மனதில் அளவுக்கு மீறிய அழுத்தத்தை உண்டாக்கலாம்.

பிள்ளைகளில் பய உணர்வின் விருத்தியைப் புரிந்து கொள்ளல்

வயது	மிகப்பொதுவான பிள்ளைப்பருவப் பயங்கள்
6 மாதங்கள்	அறிமுகமில்லாதவர்கள்.
8 மாதங்கள்	பெற்றாரிலிருந்து பிரிதல், கீழே விழுதல்.
1 வருடம்	பெற்றாரின் பிரிவு, ஓசைகள், மிருகங்கள், வைத்தியர்கள், குளித்தல்.
2 வருடங்கள்	பெற்றாரின் பிரிவு, மலசலம் கழிக்கப் பயிலுதல், நித்திரை கொள்ளும் வேளை, வைத்தியர்கள், குளித்தல்.
3 வருடங்கள்	பெற்றாரின் இழப்பு, மலசலம் கழிக்கும் பயிற்சி, நித்திரை கொள்ளும் வேளை, பேய் பிசாசுகள், குடும்ப உறுப்பினர்களை விட வித்தியாசமாகத் தெரியும் எவரும் (உடல் ஊனமுற்றவர்கள், தாடி மீசை வளர்த்தவர்கள், வித்தியாசமான தோல் நிறம், ஆடைகள் உள்ளவர்கள்)
4 வருடங்கள்	ஓசைகள், மிருகங்கள், நித்திரைக்குச் செல்லும் வேளை, பேய் பிசாசுகள், குடும்ப உறுப்பினர்களை விட வித்தியாசமாகத் தெரிபவர்கள், பெற்றாரின் இழப்பு அல்லது மரணம், பெற்றாரின் விவாகரத்து.
5 வருடங்கள்	ஓசைகள், மிருகங்கள், பேய் பிசாசுகள், தான் வழி தவறிக் காணாமற்போதல், பகல் பராமரிப்பு நிலையத்திற்குச் செல்லுதல், காயப்படுத்திக் கொள்ளல், பெற்றாரின் இழப்பு, மரணம் அல்லது விவாகரத்து

சிறுவர்கள் தம் வாழ்க்கையின் ஏதோவொரு கட்டத்தில் ஏதேனுமொன்றைப்பற்றிப் பயம் கொள்வது இயல்பானதே. இவ்வாறான பயம் இடிமுழக்கம் பற்றியதாகவோ அல்லது நாய்கள், பாம்புகள், இருள் அல்லது பூதங்கள், பிசாசுகள் போன்ற கற்பனை சார்ந்த விடயங்கள் பற்றியதாகவோ இருக்கலாம். குறிப்பாக, மூன்று வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் பயம் பொதுவானது. இப்பருவத்தில் கிலியூட்டும் விடயங்கள் பற்றிச் சிந்திப்பதும் நினைவில் வைத்திருப்பதும் கூடுதலாகக் காணப்படும். சில பிள்ளைகள் தமது இயல்பான போக்குக் காரணமாக ஏனையவர்களை விடக் கூடுதலாக அச்சம் கொள்ளலாம். அச்சம் கொண்டுள்ள பிள்ளைக்கு பெற்றோர் ஆறுதலளிக்கும்போது அது பாதுகாப்புணர்வைப் பெறுகின்றது. இவ்வுணர்வு காலப்போக்கில் இப்பயங்களை வெற்றி கொள்வதற்கு அதற்கு உதவும்.

குழந்தைகள் பலத்த ஓசைகளுக்கும் அறிமுகமில்லாதவர்களுக்கும் பெற்றாரிலிருந்து பிரிவதற்கும் அஞ்சுவார்கள். நடைபயிலும் வயதினர் அறிமுகமற்றவர்களுக்கும் பெற்றாரின் பிரிவுக்கும் தாம் அறியாதவற்றுக்கும் பயப்படுவார்கள். கற்பனைத் திறனின் வளர்ச்சி காரணமாக, பாலர்களும் பள்ளி வயதுப் பிள்ளைகளும் இருள், விலங்குகள், காயப்படுதல், தனிமையில் விடுபடுதல், மரணம் முதலியவற்றுக்கு அஞ்சுவார்கள். இவற்றுக்கு மேலதிகமாக வயது முதிர்ந்த பிள்ளைகளிடம் தமது பெற்றாரினதும் ஆசிரியர்களினதும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது பற்றிய பயம் காணப்படும். வாலிபப் பருவத்தினரிடம் அணுவாயுத யுத்தம், இயற்கை அழிவுகள், பயங்கரவாதம் என்பன பற்றிய பயங்கள் காணப்படலாம்.

எம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாத விடயங்களுக்குக் கூடப் பிள்ளைகள் பயப்படலாம். உதாரணமாகப் பிள்ளைகள் நடக்க ஆரம்பித்து, தம்மால் தம் தாயை விட்டும் விலகித் தூரே செல்ல முடியும் என்பதை உணர்ந்து கொண்ட பின்னர், தமது தாயும் இவ்வாறே தம்மை விட்டுப் பிரிந்து சென்று விடலாமோ என்று பயப்படத் தொடங்கலாம். சாக்கடையில் நீர் ஓடி மறைவதைக் காணும் பிள்ளைகள் தானும் அவ்வாறு சாக்கடையில் அடித்துச் செல்லப்பட்டு மறைந்து விடலாம் என அச்சம் கொள்ளலாம். பழக்கமற்ற இடங்கள், சனநெரிசல், இரவில் விளக்கொளியில் தோன்றும் நிழல்கள் போன்ற சூழல் காரணிகள் பிள்ளைகளில் அச்சத்தை அதிகரிக்கச் செய்யக்கூடும்.

பிள்ளைகளின் பயங்கள் வரம்பு மீறிச்சென்று வாழ்க்கைக்கு இடையூறாக அமையுமாயின் நிபுணர்களின் உதவியைப் பெற்றார் நாடுவது அவசியம். இந்தத் தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னர் பெற்றார் பல கேள்விகளைத் தம்மிடம் கேட்டுக்கொள்ள வேண்டும். எவ்வளவு காலமாக இப்பயங்கள் தொடர்ந்து நிலைத்துள்ளன? இவை பிள்ளைக்குத் தீங்கானவையா? இயல்பான நடத்தைக்கு அல்லது உறவுகளுக்கு இப்பயங்கள் இடையூறு செய்கின்றனவா? பிள்ளைகளின் நித்திரை, விளையாட்டு போன்றவற்றுக்கு இவை குந்தகம் விளைவிக்கின்றனவா?

மனவெழுச்சி ரீதியான துணிச்சலும் உடல் ரீதியான துணிச்சலும்

மனவெழுச்சி சார்ந்த ஒன்றைக் கூறவோ, எழுதவோ அல்லது செய்யவோ அஞ்சாத தன்மையே மனவெழுச்சி ரீதியான துணிச்சல் எனப்படுகிறது . இவ்வகையான துணிச்சல் உண்மையானது; வாழ்க்கைக்கு வலிமையூட்டுவது. சிறுவர்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் திரைப்படங்களில் ஒரு வகையான துணிச்சல் மாத்திரமே முனைப்பாகக் காட்டப்படுகிறது; உடல் ரீதியாகத் தம்மை விடப்பெரிய ஒரு பகைவனுக்கு எதிராக எழுந்து நிற்பதே அது. ஓர் எதிரியுடன் போராடத் துணிவது, பெரிய மிருகமொன்றைத் தோற்கடிப்பது, புற உலகிலிருந்து வந்த கோர உருக்கொண்ட அரக்கன் ஒருவனைத் தோல்வியுறச் செய்வது, துப்பாக்கியுடன் வரும் வில்லனோடு வெறுங்கையுடன் மோதுவது போன்றவற்றையே ஆண்களுக்குரிய துணிச்சலாக ஊடகங்கள் காட்டுகின்றன.

ஆண் பிள்ளைகளுக்கு மனவெழுச்சி ரீதியான துணிச்சல் கொண்டவர்கள் முன்மாதிரி களாகத் தேவை. தமது குடும்பத்தினரிலும் தம்மைச் சூழ உள்ளோரிலும் இருக்கும் துணிச்சலை அவர்கள் கண்டுகொள்ள வேண்டும். தசைப்பலத்துக்கு அப்பாற்பட்ட வீரத்திற்குரிய முன்மாதிரிகளை சமூகம் வழங்குவது அவசியம். வளர்ந்தோர் பலர் தம் வேலைத்தளத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் மனவெழுச்சி ரீதியான துணிச்சலை வெளிக்காட்டுகின்ற போதிலும் அவற்றைத் தம் பிள்ளைகள் கண்டுகொள்ள அவர்கள் அனுமதிப்பதில்லை. இவை பற்றிப் பேசப்பட வேண்டும். துணிச்சலோடு எழுந்து உரையாற்றும் ஒருவரின், உடல் ஊனங்களுக்கு மத்தியிலும் சுறுசுறுப்பாகச் செயற்படும் ஒருவரின், புதிய மொழியொன்றைக் கற்றுக்கொண்டுள்ள ஒருவரின் அல்லது காணாதவர் போல் அப்புறமாய்ச் சென்றுவிடுவது எளிதாக இருக்கும் நிலையிலும் ஆபத்தில் இன்னொருவருக்கு உதவச் செல்லும் ஒருவரின் மனவெழுச்சி ரீதியான துணிச்சலைப் பிள்ளைகளின் முன்னிலையில் பெற்றார் பாராட்ட வேண்டும். இவ்வாறு இவ்வகையான துணிச்சலுக்கு அழுத்தமும் வடிவமும் கொடுக்கப்படும் போது அது பிள்ளைகளின் மனதில் சாதகமான பதிவை ஏற்படுத்தி விடும்.

கோபம் ஏற்படும் போது தமது மனவெழுச்சிகளையும் பேச்சையும் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய துணிச்சல் அறநெறி சார்ந்த துணிச்சலின் இன்னொரு பரிமாணமாக இருக்கிறது. இது உடல் வலிமையி லிருந்து மாறுபட்டது. நபி (ஸல்) அவர்கள் இதனைப் பின்வருமாறு விளக்கினார்கள்:

சிறந்த மல்யுத்த வீரன் வலிமையானவன் அல்லன். கோபத்தின் போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே உண்மையில் வலிமையானவன். (அல் புகாரி)

துணிச்சலுக்கும் இணங்கிப் போவதற்கும் இடையில் . . .

பெற்றாரதும் ஆசிரியர்களதும் அச்சுறுத்துகின்ற, அவமானப்படுத்துகின்ற தந்திரோ பாயங்கள் காரணமாகத் தமது பிள்ளைப் பருவத்தில் பய உணர்வு விருத்தியடைந்தது என வளர்ந்தோர் பலர் விவரித்துள்ளனர். பொது நடைமுறைகளுக் கிணங்க நடக்காவிடில் தண்டனை கிடைக்கும் எனப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மற்றவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கிணங்க இணங்கிப் போவதற்காக அவர்கள் பகிரங்கமாகவே சங்கடத்துக்கு ஆளாக்கப்படுறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள் அல்லது அவமானப் படுத்தப்படுகிறார்கள். வளர்ந்தோரின் விருப்பங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டிய நிலையில் பிள்ளைகள் இருக்கின்றனர். "பிள்ளைகள் கண்ணுக்குத் தெரிய நிற்க வேண்டும். ஆனால் ஓசையெதுவும் எழுப்பக்கூடாது!", "வாயை மூடு, அல்லது நீ அழ வேண்டி வரும்" என்றெல்லாம் அவர்களுக்குக் கூறப்படுகிறது. இவ்வாறான கூற்றுக்கள் பயத்தை உருவாக்கித் துணிச்சலை அழித்து விடுகின்றன.

பிரதி பண்ணல் ⇨ சமூகமயமாதல் ⇨ சுயாதீனம்

வளர்ச்சியில் மூன்று படிகளை இனங்காண முடியும்: தம் பெற்றோரைப் பிரதி பண்ணும் கட்டம்– பிறப்பு முதல் 7 வயது வரை; சமூகமயமாகும் கட்டம்– 7 முதல் 14 வயது வரை; சுயாதீனத்திற்குரிய கட்டம்– 14 முதல் 21 வயது வரை.

அச்சம் கொண்ட, பாதுகாப்புணர்வற்ற பிள்ளைகள் தமக்குப் பொருத்தமற்ற தொழில்களில் அல்லது உறவுகளில் பாதுகாப்பைத் தேடுகின்றனர். தம்மால் வெற்றிபெற முடியாது என்ற அச்சம் காரணமாக, மேலும் பொருத்தமான தொழிலொன்றை அவர்களால் தேடிக்கொள்ள முடிவதில்லை. நிராகரிக்கப்படுவோமோ என்ற பயமும் அவர்களிடம் இருக்கும். குற்ற உணர்வு, அவமான உணர்வு, தாழ்வு மனப்பான்மை என்பன அவர்களில் வெளிப்படும். அவர்களிடம் தன்னம்பிக்கை இருக்காது; சிறந்த நிலைமைகளுக்குத் தாம் பொருத்தமானவர்கள் அல்லர் என்ற உணர்வும் காணப்படும். விடுதலைக்காக அவர்கள் போராடவும் மாட்டார்கள். விடுதலை பெறவும் சுதந்திரமாக வாழவும் துணிச்சல் தேவை. இவர்களால் தனித்துப் பாதுகாப்பாக இருக்க முடியாது; ஏனையோரின் உதவி தேவை என்ற எண்ணம் சிறு பருவத்திலேயே இவர்களுக்கு ஊட்டப்படுகிறது. இவர்களில் ஆக்கத்திறன் ஊக்குவிக்கப்படவில்லை. மாறாக, அவர்களுடைய ஆக்கத்திறன்கள் தொடர்ந்து நசுக்கப்பட்டு, இணங்கிச் செல்வதற்கே பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒத்த வயதினர் ஏற்படுத்தும் அழுத்தம்

பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கும் போது அவர்களுக்குரிய முக்கியமான தீர்மானங்களை அவர்களுக்காகப் பெற்றார்களோ பாதுகாவலர்களோ தான் எடுப்பார்கள். எனினும், வயது செல்லச்செல்ல பிள்ளைகள் தமது தீர்மானங்களைத் தாமே எடுத்துக்கொள்ளப் பயில வேண்டும். தமக்குரிய தீர்மானங்களைத் தாமே எடுக்கவேண்டிய கஷ்டமான சமூக சூழ்நிலைகளுக்குப் பதின்மவயதினர் உட்படலாம். மதுபானம், போதைப்பொருட்கள், பாலின்பம் போன்றவற்றைப் பரிசோதித்துப் பார்க்குமாறு

நண்பர்களும் அறிமுகமானவர்களும் வற்புறுத்தக்கூடும். இந்நிலையில் முடியாது என்று கூறித் தம் குழுவினருக்கு எதிராகச் செயற்படுவது இவர்களுக்குச் சிரமமானதாக இருக்கும்.

ஒரு குழுவுடன் தம்மை இணைத்துக் கொண்டு அதன் ஒரு பகுதியாக இருக்கப் பிள்ளைகள் விரும்புவார்கள். அவர்கள் தமது உண்மை நிலையை விட, மேம்பட்டு முதிர்ச்சியடைந்தவர்கள்போல் தோற்றமளிக்க முனைவார்கள். தம்மை ஒரு குழந்தையாக யாரும் கருதிக்கொள்ளக்கூடாது என நினைப்பதே இதற்குக் காரணமாகும். எனினும், தமக்காகக் குரல் கொடுப்பதும், தாம் சரியென நினைப்பதைச் செய்வதும் அவர்களுக்கு எளிதான காரியங்களாக இருக்காது (குறிப்பாக, பியர் போன்ற மதுபானத்தை அல்லது ஒரு சிகரட்டை நுகர்ந்து பார்க்குமாறு நண்பர்கள் தூண்டும் சந்தர்ப்பங்களில்). ஒரு பிள்ளை தம்மோடு இணங்கிப்போக மறுக்கும் போது, குழுவினர் அப்பிள்ளையைச் சீண்டிப் பார்க்கலாம் அல்லது முற்றாகவே ஒதுக்கித் தள்ளலாம். நண்பர்களின் சிறிய வட்டமொன்றுக்குள்ளேயே பலவிதமான பலப்பரீட்சைகளில் ஈடுபடவேண்டிய நிலையும் பிள்ளைகளுக்கு ஏற்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் 'இதன் பிறகு நீ எனக்கு நண்பனல்ல' என்ற கூற்றை, ஒருவரை நெருக்குவதற்குரிய ஆயுதமாகப் பிள்ளைகள் பயன்படுத்துவர்.

சிறு வயதுப் பிள்ளைகள்கூட குழுவொன்றின் அங்கமாக இருக்கவே விரும்புவர். எனவே, ஒத்த வயதினர் ஏற்படுத்தும் அழுத்தங்கள் பற்றிய பிரச்சினையைப் பெற்றார் அவர்களுக்கு விளக்க வேண்டும். ஒரு குழுவில் என்ன நடக்கிறது என்பது பற்றி பெற்றார் தம் பிள்ளைகளுடன் உரையாட வேண்டும். ஒளித்துத் தேடுதல் போன்ற விளையாட்டொன்றில் பிள்ளைகள் குழுக்களாக ஈடுபடும் போது அதன் விதிகளை ஒவ்வொருவரும் சரியாகப் பின்பற்றுவது அவசியம். இல்லையேல் அனைவரது விளையாட்டும் ஒருவரால் கெட்டு விடக்கூடும். எனினும், தமது குழு ஆபத்தான அல்லது தீங்கான செயலொன்றில் ஈடுபட நாடும்போது, அதில் பங்குபற்ற மறுப்பதே சிறந்தது. ஒரு பிள்ளை அவ்வாறு மறுத்து விட்டால் குழுவிலுள்ள ஏனையோருக்கும் அதில் ஈடுபட மறுப்பதற்குத் துணிவு ஏற்படும்.

தனியாள் வேறுபாடுகள் பற்றிப் பெற்றார் தம் பிள்ளைகளோடு கலந்துரையாடுவது நல்லது. குழுவிலுள்ள எவரேனும் ஒருவரைப் போன்றே ஏனையவர்களும் இருக்க வேண்டுமா? பிள்ளைகள் தனியாள் வேறுபாடுகளை மதிக்கப் பழகினால் வாலிபப் பருவத்திலும் வளர்ந்த பின்னரும் அவர்களது வாழ்க்கை வளமானதாக அமையும். ஒரு தலைவராக அல்லது பின்பற்றுபவராக இருப்பது எப்படி என்பது பற்றியும் பெற்றார் உரையாடலாம். அவர்கள் தம் பிள்ளைகள் சொல்வதைக் கவனமாகச் செவிமடுப்பதோடு, ஒத்த வயதினரின் அழுத்தங்களைச் சமாளிப்பதில் உள்ள கஷ்டங்களைத் தாம் நன்கு புரிந்து கொண்டிருப்பது பற்றியும் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பிள்ளைகள் சொல்வதைச் செவிமடுத்துத் தீர்ப்புக்கள் வழங்க முயற்சிக்காது அவர்களது பிரச்சினைகள் பற்றிப் பெற்றார் கலந்துரையாட வேண்டும். இவ்வாறு செய்தால் பிள்ளைகள் வளர்ந்த பின்னரும் பெற்றாருடன் உரையாடுவதைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

ஒத்தவயதினர் நல்லவர்களாக இருந்தாலும் அவர்கள் ஏற்படுத்தும் அழுத்தம் கெடுதியானதாக இருக்கலாம். எனினும், சில பிள்ளைகள் ஏனையோர் மீது ஆரோக்கியமான முறையிலும், சாதகமான முறையிலும் செல்வாக்குச் செலுத்துவதும் உண்டு. பெற்றார் தம் பிள்ளைகளின் நண்பர்களை மரியாதையுடனும் அன்பார்வத்துடனும் நடத்தினால் பிள்ளைகளும் அதைப்பார்த்து மற்றவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

மற்றவர்களின் முரண்பாடான இயல்புகளைப் பெற்றார் சகித்துக்கொள்வதோடு விசித்திரமான அல்லது வழமைக்கு மாறான போக்குடையவர்களாகத் தோன்றுபவர்களையும் மதித்து நடந்தால் பிள்ளைகளும் மற்றவர்களோடு சகிப்புத் தன்மையோடு நடக்கக்

கற்றுக்கொள்வர். ஆட்களை அவர்களுடைய வருமானம், ஆடையணிகள், சமயம், இனம் முதலியவற்றின் அடிப்படையில் மதிக்கும் போக்கு பெற்றோரிடம் இல்லாதிருந்தால் வித்தியாசமான போக்குடைய ஆட்களைக் கண்டு சங்கடப்பட வேண்டிய காரணம் ஏதுமில்லை எனப் பிள்ளைகள் உணர்ந்து கொள்வார்கள். வளரும் பிள்ளை ஒன்றின் மீது ஒத்தவயதினர் வலிமையான செல்வாக்குச் செலுத்திய போதிலும் பெற்றார் அதை விடக் கூடிய செல்வாக்கை ஏற்படுத்த முடியும்.

ஒருவருடைய வாழ்க்கை முழுவதிலும் நண்பர்கள் இருப்பது அவசியம். மற்றவர்களோடு சமூகப் பொருத்தப்பாடு அடையப் பயில்வது பிள்ளைகளது இயல்பான விருத்தியின் ஓர் அம்சமாகும். எல்லாப் பிள்ளைகளும் தம் சொந்த விழுமியங்களையும் அடையாளத்தையும் பேணிக்கொள்ளும் அதேவேளையில், தமது குழுவினருடன் பொருந்திப் போவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் விருத்தி செய்து கொள்வதற்குப் பெற்றார் ஒத்துழைப்பு வழங்கினால், தம் குழுவினரின் அழுத்தங்களைச் சரியான முறையில் சமாளித்துக் கொள்வதற்குப் பிள்ளைகள் தயாராகி விடுவர். தமக்கு அசௌகரியமாகத் தோன்றுகின்ற அல்லது தவறானது எனத் தாம் நம்புகின்ற ஒன்றுக்கு 'இல்லை' அல்லது 'முடியாது' என்று கூறும் வலிமையை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

பெற்றோரும் கலாசார நடைமுறைகளும்

தலைவர் ஒருவரின் உருவாக்கத்தில் துணிச்சல் முக்கிய பங்கு வகிக்கிறது. பிள்ளைகளில் துணிச்சலை மேம்படுத்துவது மிக இள வயதிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். நாம், பொதுவாக நினைப்பதை விட அது எளிதானது. ஏனெனில், குழந்தைகள் தம் சுற்றாடல் பற்றிய எவ்விதப் பயமும் இல்லாமல் துணிச்சலுடனேயே பிறப்பதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. பெற்றோர்களே அவர்களது உள்ளங்களில் பயங்களைத் திணிக்கின்றனர். விலங்குகள், இருள், உயரமான இடங்கள், பேய் பிசாசுகள், பாம்புகள், நாய்கள், நீர் என்பவற்றுக்குப் பிள்ளைகள் பயப்படுவதற்கு அவர்களே காரணம். பிள்ளைகள் எந்தளவுக்கு துணிச்சலுடையவர்களாக மாறுவார்கள் என்பது அவர்கள் வளர்க்கப்படும் முறையிலேயே தங்கியுள்ளது. பிள்ளைகளைக் கீழ்ப்படியச் செய்வதற்காக அச்சுறுத்தி மிரட்டுவது சில கலாசாரங்களில் வழக்கமாக இருக்கிறது. பிள்ளைகளுக்கு விசுவாசம், சமயம் என்பவற்றைக் கற்பிப்பதிலும், அல்குர்ஆனையும் அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களையும் மனனஞ் செய்வதிலும் இவ்வாறான அணுகு முறை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அல்லாஹ்வின் அன்பையும் கருணையையும் விவரிக்கும் வாக்கியங்களிலிருந்து அல்குர் ஆனைக் கற்பிக்க ஆரம்பிப்பதே சிறந்ததாகும். ஆரம்பத்தில் அன்பையும் சுவனத் தையும் பற்றியே வலியுறுத்தப்பட வேண்டும் - தண்டனைகளையும் நரகையும் பற்றியல்ல.

நபிமார்களின் துணிச்சல் மிக்க செயல்கள் பற்றிய கதைகளைப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் சிலை வணங்குவோரின் கோயிலுக்குள் நுழைந்து தமது கோடாரியால் அங்கிருந்த சிலைகளை உடைத்து விட்டு அங்கிருந்த மிகப்பெரிய சிலையின் கழுத்தில் தமது கோடாரியைத் தொங்கவிட்டார். நபி மூஸா (அலை) அவர்கள் தமது சகோதரர் ஹாரூன் அவர்களுடன் இணைந்து வலிமை மிக்க சர்வாதிகாரியான பிர்அவ்னை எதிர்த்து நின்றார். முஹம்மத் (ஸல்) அவர்கள், அன்னார் மீது குறைஷிக் காபிர்கள் கற்களையும் குப்பை கூளங்களையும் வீசி அன்னாரை அச்சுறுத்திய நிலையிலும் மக்காவிலுள்ள கஃபாவினுள் தொழுதார்கள். உங்கள் ஆயுட்காலத்தில் வாழ்ந்த துணிகரமான ஆட்களின் உண்மைக் கதைகளையும் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். நாம் இறைவனின் முன்னிலையில் வாழ்கிறோம் என்ற உணர்வைப் பிள்ளைகளில் ஏற்படுத்துவது முக்கியம். துணிச்சலோடு தற்பாதுகாப்புத்

திறனையும் கொண்ட நன்னெறியாளர்களாகவும், தம் மீது ஆழமாக அன்பு செலுத்தும் உண்மையான இறைவனைத் தவிர வேறு எவருக்கும் பயப்படாதவர்களாகவும் வாழ்வதற்குப் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பது அவசியம்.

துரதிர்ஷ்டவசமாக, சில பெற்றோர் தம் பிள்ளைகளை ஏனையவர்களோடு கலக்கவோ சேர்ந்து விளையாடவோ அனுமதிக்காமல் அவர்களைத் தனிமைப்படுத்தி வைக்கின்றனர். நீச்சலடிக்கச் சென்றால் நீரில் மூழ்கிச் சாக நேரிடலாம், குதிரையில் சவாரி செய்தால் விழுந்து காயமேற்படலாம், விளையாட்டுக்களில் ஈடுபட்டால் கை, கால் முறியலாம் என்றெல்லாம் அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு எதனையும் தேர்வு செய்வதற்குப் பிள்ளைகளை அனுமதிக்காமல், அவர்களுக்குரிய தீர்மானமெடுக்கும் உரிமையை மறுப்பதன் மூலம் கோழைத்தனத்தையே பெற்றார் போதிக்கின்றனர். இதன் விளைவாக, பெற்றாருக்கு மாத்திரமே எல்லாம் தெரியும் என்றும் தமக்காகப் பெற்றோரே தீர்மானிக்க வேண்டும் என்றும் பிள்ளைகள் நினைக்கத் தொடங்குவர். தம் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்தையும் தாமே வழங்கி, அவர்களுக்கான அனைத்து முயற்சிகளையும் தாமே செய்வதன் மூலம் இவர்கள் தம் பிள்ளைகளைக் கெடுத்தி விடுகின்றனர். தம் பிள்ளைகளை வாழ்க்கையில் எவ்வித இடர்களுக்கும் முகங்கொடுக்க விடாமல் தடுப்பதோடு, தம் விடயத்தில் முயற்சி எதுவும் செய்ய வேண்டியதில்லை என அவர்களுக்குப் போதிக்கின்றனர்.

தமது பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய பாதுகாப்பை வழங்குவதன் மூலமும் சில பெற்றார் தவறிழைக்கின்றனர். நோய்கள் அல்லது வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு விடுமோ எனப்பயந்து, அவர்கள் தமது பிள்ளைகளை வீட்டுக்கு வெளியே அழைத்துச் செல்வது கூட இல்லை. பிள்ளைகளின் மீது நம்பிக்கை வைக்க முடியாது எனவும் அதனால் ஆபத்தான காரியங்களில் ஈடுபட அவர்களை அனுமதிக்கக்கூடாது எனவும் அவர்கள் போதிக்கின்றனர். எதிர்பாராதவிதத்தில் இடர்கள் ஏற்படக்கூடிய, துணிச்சல் தேவைப்படுகின்ற நிலைமைகளுக்குப் பிள்ளைகளை உட்படுத்துவதன் மூலம் அவர்களைத் துணிச்சலோடு செயலாற்றப் பழக்குவதே இதற்குரிய சிறந்த தீர்வாகும். பாதுகாப்பற்ற சூழலொன்றில் எப்படித் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பது பற்றிப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். ஒரு காட்டில் அல்லது ஒரு தொழிற்சாலையில் அல்லது ஒரு படகில் இருக்கும் போது பாதுகாப்பான நடைமுறைகள் எவை, பாதுகாப்பற்றவை எவை என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்கி அவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை இனங்காணப் பழக்க வேண்டும். துணிச்சல் எமது பண்பாட்டின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும். மனத்துணிவுள்ளவர்களுக்கு அல்லாஹ் உதவி செய்கிறான் என்பதை மறவாதீர்கள்.

- நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹம்ஸா 'அஸத்' என அழைக்கப்பட்டார். இதன் கருத்து சிங்கம் என்பதாகும். அவருடைய துணிச்சல், வலிமை என்பன காரணமாக அவருக்கு 'அஸதுல்லாஹி வ ரஸூலுஹு' என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. இதன் பொருள் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் சிங்கம் என்பதாகும்.

  விலங்குலகிலிருந்தும் துணிச்சலும் வீரமும் பற்றிய கதைகளை நாம் பிள்ளைகளுக்குக் கூறலாம்.

  சிங்கத்தின் குகையிலிருந்து ஒரு வகையான மணம் வீசுகிறது. இதனால் சிங்கம் உள்ளே இல்லாத சந்தர்ப்பங்களிலும் கூட அங்கே நுழைய நரிகள் அஞ்சுகின்றன. சில வகையான குருவிகள் மிக உயரத்தில் பறக்கின்ற வேளைகளிலும்கூடப் பயந்து மருளுபவையாக இருக்கின்றன. அதே வேளையில் இறக்கும் தறுவாயில் கூட ராஜாளிகள் துணிச்சலோடும் பெருமிதத்தோடும் காணப்படுகின்றன.

- பயம் எனும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக நாம் துணிச்சல் எனும் அணையை நிர்மாணிக்க வேண்டும்- Martin Luther King Jr.

கூச்சமா அடக்கமா?

நாம் விதந்துரைப்பது அடக்கத்தையே அன்றி கூச்சப்படுவதை அல்ல. எப்போதும் தன்னை நோக்கியே சிந்திக்கின்ற, மற்றவர்களுக்கு முகங்கொடுக்க அஞ்சுகின்ற இயல்பே கூச்சமாகும். மற்றவர்கள் பற்றிக் கரிசனை காட்டுதல், பணிவு, மற்றவர்களை மதிக்கும் தன்மை என்பனவே அடக்கத்தின் இயல்புகளாகும். அத்தோடு, தற்பெருமை காட்டாமல் இருப்பதையும் அது குறிக்கிறது.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு 47: பயம் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்த பயங்களைப் பற்றியும் அவ்வாறு நீங்கள் பயமுற்ற போது என்ன செய்தீர்கள் என்பது பற்றியும் உங்கள் பிள்ளைகளுடன் உரையாடுங்கள். பிள்ளைகளும் தங்கள் அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

தொழிற்பாடு 48: ஒரு கோழையை உருவாக்குவதற்கான ஒன்பது வழிமுறைகள்

பிள்ளை வளர்ப்புத் தொடர்பான பின்வரும் தவறான நடைமுறைகள் பற்றி உங்கள் முழுக் குடும்பத்தினருடனும் கலந்துரையாடுங்கள். இவை பற்றி உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து உதாரணங்களையும் கதைகளையும் எடுத்துக்கூறுங்கள். இவ்வாறான தவறுகள் நடந்து விட்டால் அவற்றின் விளைவாக ஏற்படும் சேதத்தைச் சரி செய்வது எப்படி? என்பது பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- உங்கள் பிள்ளையை - குறிப்பாக அதன் நண்பர்களின் முன்னிலையில் - அவமதித்து அவமானப்படுத்துங்கள்
- உங்கள் பிள்ளையை மோசமான பெயர்களால் அழையுங்கள். அவன் ஒன்றுக்கும் உதவாதவன் என எடுத்துக்கூறுங்கள்.
- உங்கள் பிள்ளையையோ அவன் கூறுபவற்றையோ நம்பாதீர்கள். அவன் கூறுவன சரியாக இருக்க முடியாது எனவும் மற்றவர்கள் அவனை விடக் கூடுதலாக அறிந்திருக்கிறார்கள் என்றும் கூறுங்கள்.
- அவனது நல்ல பண்புகள் அனைத்தையும் புறக்கணியுங்கள்; குற்றங்குறைகள் மீதே கவனஞ்செலுத்துங்கள்
- அவனது சகோதரர் சகோதரிகளை அவனை விடச்சிறப்பாக நடத்துங்கள். எப்போதும் அவனை அவர்களுடன் ஒப்பிட்டு நோக்குங்கள். மற்றவர்கள் அழகாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கின்ற அதேவேளையில் அவன் அசிங்கமாகவும் சோம்பேறியாகவும் இருப்பதாகச் சுட்டிக்காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளையை எப்போதும் உங்கள் அருகிலேயே வைத்திருந்து அவனுக்குப் பாதுகாப்புணர்வை ஏற்படுத்துங்கள்.
- அளவுக்கதிகமாக வெகுமதிகளை வழங்கி உங்கள் பிள்ளைக்குச் செல்லம் காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளையை வேறு எவர் முன்னிலையிலும் பேச அனுமதிக்காதீர்கள். அவன் மற்றவர்களின் எதிரில் மௌனமாகவே இருக்க வேண்டும்.
- உங்கள் பிள்ளைக்கு எவ்விதப் பொறுப்புக்களையும் - அவை எவ்வளவு சிறியனவாக இருந்தாலும் - வழங்காதீர்கள். ஏனையவர்களில் தங்கியிருக்கவும் எல்லா வகையான இடர்களையும் முன்கூட்டியே தவிர்த்துக் கொள்ளவும் அவர்களைப் பயிற்றுவியுங்கள்.

தொழிற்பாடு 49: துணிச்சலும் விசுவாசமும்

குறைஷியர்கள் எவ்வாறு நபி (ஸல்) அவர்களின் போதனைகளைத் தடுக்க முயற்சித்தார்கள் என்பதை உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள். அவ்வேளையில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

> என் சிறிய தந்தையே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக, அவர்கள் (குறைஷியர்கள்) எனது வலக் கையில் சூரியனையும் இடக்கையில் சந்திரனையும் கொண்டுவந்து வைத்து ஒளியும் வழிகாட்டலும் கொண்ட அல்லாஹ்வின் தூதைக் கைவிடுமாறு என்னை வேண்டிக் கொண்டாலும் நான் அதனைக் கைவிட மாட்டேன். அதனைக் காப்பதற்காக என் உயிரையும் துறப்பேன்.

1. நபி (ஸல்) அவர்கள் தாம் தமது தூதைக் கைவிடப் போவதில்லை எனக் கூறிய இக்கூற்றில் துணிச்சலுக்குரிய எந்த அம்சங்களை இனங்காண முடியும்?
2. நபிமார்களின் வாழ்க்கையிலிருந்து பெறக்கூடிய ஏனைய துணிச்சலான சம்பவங்களை எடுத்துக்கூறுங்கள்
3. நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் வாழ்வில் இடம்பெற்ற துணிச்சலான சம்பவங்களை எடுத்துக்கூறுங்கள்.
4. உலகலாவிய ரீதியில் பல்வேறு சமயங்களைச் சேர்ந்த தற்காலத்துக்குரிய வீரர்களின் துணிகரச் செயல்கள் பற்றி எடுத்துக்கூறுங்கள்.

நீங்கள் துணிச்சல் காட்டிய சந்தர்ப்பமொன்றை விவரியுங்கள். அதில் சிரமத்துக்குரியதாக இருந்தது யாது? அதனால் சாதிக்கப்பட்டது என்ன? உங்கள் செயலுக்கு மக்கள் எவ்வாறு எதிர்வினை காட்டினார்கள்?
பிள்ளைகளையும் அவர்களது சொந்த அனுபவங்களைக் கூறுமாறு கேளுங்கள்.

தொழிற்பாடு 50: துணிச்சல்: பதின்மவயதினருக்கான ஒரு சோதனை

நீங்கள் துணிச்சல் கொண்டவரா? சில உதாரணங்களைத் தாருங்கள்.	உண்மை	பொய்
நான் சரியெனக் கண்டதற்காகக் குரல் கொடுப்பேன்; நான் தனித்து விட்டாலும் சரியே	☐	☐
ஒத்த வயதினரின் அழுத்தங்களுக்கு நான் அடிபணிய மாட்டேன்.	☐	☐
தோல்வி பற்றிய பயம் என் முயற்சிகளைத் தடுக்காது.	☐	☐
மற்றவர்கள் அங்கீகரிக்காத வேளையிலும் எனது கருத்தைக் கூற அஞ்ச மாட்டேன்.	☐	☐
இடர்களை எதிர்கொள்ளவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன்.	☐	☐

நான் துணிச்சலுடையவன்/துணிச்சலற்றவன் என நினைக்கிறேன். ஏனெனில்,.....

தொழிற்பாடு 51: யுத்தங்கள், அழிவுகள் என்பவற்றின் போது பிள்ளைகளின் அச்சத்தைக் குறைத்தல்

பின்வரும் விடயங்களை உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடி அவற்றுள் சிலவற்றை ஒன்றாக நிறைவேற்றுங்கள்.
இன்றைய காலத்தில் அதிகமான பிள்ளைகள் யுத்தங்களுக்கும் அழிவுகளுக்கும் முகங்கொடுக்கின்றனர். இவ்வாறான அழிவுகள் பற்றிய அவர்களுடைய பயத்தைக் குறைப்பதற்காகப் பெற்றார் பின்வருவனவற்றைச் செய்யலாம்.

a. தொலைக்காட்சிச் செய்திகளை நிறுத்திவிடுங்கள். எனினும், நிகழ்வுகளின் சாராம்சமொன்றை அவர்களுக்கு வழங்குங்கள்.

b. அவர்களுடைய அன்றாட வாழ்க்கை நடைமுறை ஒழுங்குகளை (நித்திரை கொள்ளல், விளையாட்டுப் பயிற்சி, உணவு வேளைகள், தொழுகை நேரங்கள் முதலியவை) வழமை போல் பேணுங்கள்.

c. உங்கள் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள். அவர்களை வாரியணைத்து அவர்களோடு நேரத்தைக் கழியுங்கள். அவர்கள் மீது அதிக கவனத்தையும் அன்பையும் செலுத்துங்கள். அவர்களது உணர்வுகளுக்குச் செவிமடுத்து அவற்றை அங்கீகரிப்பதன் மூலம் தொடர்பாடலை ஊக்குவியுங்கள்.

d. பீதியுண்டாக்கும் நிகழ்வுகளுக்குச் சாதகமான முறையில் விளைவு காட்டுங்கள். பீதியடையவோ உற்சாகமிழக்கவோ வேண்டாம். செய்திகளுக்கு அளவு மீறிய முக்கியத்துவம் கொடுக்காதீர்கள்.

e. யுத்தம் பற்றிய சரியான விளக்கமொன்றை உங்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் வகையில் விளையாட்டுக்களை ஏற்பாடு செய்தல் (காயமடைந்த இராணுவ வீரர்களுக்கும் பொது மக்களுக்கும் என மருத்துவ மனையொன்றை ஒழுங்கு செய்தல்; யுத்தக் கைதிகளுக்காக இடமொன்றை ஏற்பாடு செய்தல்; அகதிகளைத் தங்கச் செய்து உணவளிப்பதற்குச் செய்ய வேண்டியன பற்றித் திட்டமிடுதல்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக முகவர் நிலையங்களை ஏற்பாடு செய்தல்; அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்காக விசேட பிரார்த்தனை நிகழ்ச்சியொன்றை நடத்துதல் போன்ற செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்)

f. அழிவுகளுக்கு முகங்கொடுத்த வேறு நாடுகளின் பிள்ளைகளோடு மின்னஞ்சல் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலும் அவர்களோடு செய்திகளையும் அன்பளிப்புக்களையும் பரிமாறிக்கொள்ளலும்.

g. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடொன்றின் ஜனாதிபதி/பிரதமர், எதிரித் தரப்பினர் அல்லது அழிவிலிருந்து தப்பிய ஒருவருக்கு பிரார்த்தனையொன்றை உள்ளடக்கிய ஒரு கடிதத்தை எழுதுதல். ஓர் இராணுவ வீரனுக்காக சமாதானத்தைச் சித்தரிக்கும் படமொன்றை வரைதல், காயப்பட்ட ஒருவருக்காக சில திண்பண்டங்களைச் செய்தல்,அங்கீகரிக்கப்பட்ட நிவாரண நிதியொன்றுக்கு அனுப்புவதற்காகப் பணம் சேகரித்தல் முதலிய நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம்.

தொழிற்பாடு 52: 'முடியாது' என்று சொல்வதும் தொடர்ந்து நண்பராக இருப்பதும் எப்படி?

நான்கு படிகளைக் கொண்ட பின்வரும் உத்தியை உங்கள் பிள்ளைகளுடன் பயிற்சி செய்து பாருங்கள். இதன் மூலம் சங்கட உணர்வின்றி 'முடியாது' என்று கூற அவர்கள் பழகுவார்கள். உங்கள் பிள்ளைகளின் வயதுகளுக்குப் பொருத்தமான வகையில் எந்த நிலைமையையும் நடித்துப் பார்க்கலாம்.

உதாரணமாக, ஒரு நண்பன் உங்கள் பிள்ளைக்கு புகைத்தலை அல்லது பியர் அருந்துவதை அல்லது போதைப் பொருள் பாவனையை எத்தனித்துப் பார்க்குமாறு கூறுகிறார்.

- 'இல்லை; எனக்குத் தேவையில்லை' எனக்கூறுதல்.
  நண்பர்களிடம் அல்லது அறிமுகமானவர்களிடமிருந்து வரும் அழுத்தங்களை எதிர்ப்பதற்கு உதவும் முதலாவது உத்தி வெறுமனே 'இல்லை; எனக்குத் தேவையில்லை' எனக்கூறுவதே. பெரும்பாலும் அவர்களது முயற்சி அத்தோடு முடிவுறலாம். நீங்கள் ஒரு தெரிவை மேற்கொண்டுள்ளீர்கள். அவர்கள் உங்கள் தெரிவை மதிக்க வேண்டும்.
- 'இல்லை; எனக்குத் தேவையில்லை' என்பதை மீட்டி மீட்டிக் கூறுதல்.
  சில வேளைகளில் ஒருவர் விட்ட பின் இன்னொருவர் தொடர்ந்து வற்புறுத்தலாம். இந்நிலையில் உங்கள் முதலாவது பதிலையே திருப்பித் திருப்பிக் கூறுங்கள்.

பொருத்தமான இடங்களில் 'அது என்னுடைய விசுவாசத்துக்கு முரணானது' என்பதையும் கூறுங்கள். ஒரே பதிலைத் திருப்பித் திருப்பிக் கூறுவது பற்றி மனக்குழப்பம் அடைய வேண்டாம். அத்தோடு உங்கள் முடிவை நியாயப்படுத்த முனையவும் வேண்டாம். இறுதியில் உங்களை வற்புறுத்தும் நபர் உங்கள் பதிலைக் கேட்டு களைப்படைந்து தன் முயற்சியைக் கைவிட்டு விடுவார். இந்த உத்தியும் பயனளிக்காவிடில் உங்கள் முடிவுக்கான காரணத்தைத் தெளிவான, உறுதியான குரலில் கூறுங்கள்.

- அழுத்தத்தை அவர்கள் பக்கம் திருப்புங்கள்: "நீங்கள் ஏன் என்னை வற்புறுத்துகிறீர்கள்!?"

  ஒருவர் தொடர்ந்தும் உங்களை நச்சரித்தால் அழுத்தத்தை அவர் பக்கம் திருப்பி விடுங்கள். "நீங்கள் ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்?" என அவரிடம் கேளுங்கள். இது அழுத்தத்தைத் திசை திருப்புவதால் அவர் தனது நடத்தைக்கான காரணத்தை விளக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார். பிரச்சினைக்குரியவர் அவரே; நீங்களல்ல என்பதை இது காட்டுகிறது. நல்ல நட்புறவைக் காட்டுவதற்கு மாற்று வழியொன்றை நீங்கள் சமர்ப்பிக்கலாம்.

- உங்களை விடுவித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்று விடுங்கள்:
  "என்னை மன்னியுங்கள்; நான் போக வேண்டும்" என்று சினேகபூர்வமான தொனியில் கூறிவிட்டு வாதிடாமல் அப்பால் சென்று விடுங்கள். உங்கள் செயல்களை யாருக்கும் நியாயப்படுத்திக் காட்டவேண்டிய அவசியம் உங்களுக்கில்லை. அதேபோல் உங்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் எந்த அழுத்தத்தையும் நீங்கள் சகித்துக்கொள்ள வேண்டியதில்லை.

- தங்கள் நண்பர்களோ சக மாணவர்களோ தகாத எதனையும் செய்ய முயலும் போது 'இல்லை' அல்லது 'முடியாது' எனக்கூறும் விதம் பற்றிச் சிந்திக்குமாறு உங்கள் பிள்ளைகளை ஊக்குவியுங்கள். 'இல்லை' அல்லது 'முடியாது' எனக்கூறிவிட்டு தொடர்ந்தும் நட்பைப் பேணிக்கொள்ள முடியும் என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொண்டால் அவர்களுக்குப் பெரிய மன நிம்மதி ஏற்படும்.

தொழிற்பாடு 53: துணிச்சல் என்பது . . .

பின்வரும் விடயங்கள் தொடர்பாக உங்கள் பிள்ளைகளுக்கு உதாரணங்களை எடுத்துக் காட்டி கதைகளையும் கூறுங்கள்.

துணிச்சல் என்பது:

கும்பலைப் பின்தொடர்வதற்குப் பதிலாக உங்கள் மனச்சாட்சியைப் பின்பற்றுதல்.

தீங்கான அல்லது மரியாதைக்குறைவான நடத்தையில் பங்குபற்ற மறுத்தல்.

மற்றவர்களின் நலனுக்காக சொந்த இலாபத்தை அர்ப்பணித்தல்.

மற்றவர்கள் இணங்காத போதிலும் உங்கள் மனதில் உள்ளதைக் கூறுதல்.

உங்கள் செயல்களுக்கும் தவறுகளுக்கும் முழுமையான பொறுப்பை ஏற்றல்.

விதிகளைப் பின்பற்றுதலும் அவ்வாறே மற்றவர்களும் செய்ய வேண்டுமென வலியுறுத்தலும்.

இடர்களையும் விளைவுகளையும் பொருட்படுத்தாமல் நீங்கள் சரியென அறிந்ததைச் செய்தல்.

தீமை செய்வோருடன் முரண்படுதலும் நன்மை செய்வோருக்கு ஒத்தாசை வழங்குதலும்.

அத்தியாயம் 16

அன்பைப் போதித்தல்

- அறிமுகம் 404
- மனவெழுச்சி ரீதியான வலுவூட்டலின் அடிப்படை 405
- அன்பு: ஆக்கபூர்வமான விவேகம் பற்றிய எண்ணக்கருவும் அல்குர்ஆனும் 406
- பெற்றோருக்கான சில உதவிக்குறிப்புகள் 408
- 'உங்களை வெறுக்கிறேன்' எனப் பிள்ளை கூறினால்... 410
- முதற்பிள்ளை 411
- பெற்றார் தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துவது ஏன்? 412
- அன்பும் பெற்றாரின் தன்னம்பிக்கையும் 414
- இரக்க உணர்வை விருத்தி செய்வதற்கான நடைமுறை வழிகள் 414
- ஒரு கணிப்பீடு: உங்கள் பிள்ளைகள் தம் மீது அன்பு செலுத்தப்படுவதை உணரச் செய்வதற்கான வழிகள் 417
- பெற்றார் வெறுப்பைக் கற்பிக்க வேண்டுமா? ஆம்; சில வேளைகளில்! 418
- தொழிற்பாடு- 54 419

அறிமுகம்

குழந்தைகள் அன்பு செலுத்தும் ஆற்றலுடனேயே பிறக்கின்றன. பெற்றார் இவ்வாற்றலை விருத்தி செய்தல் வேண்டும். ஆறு வாரங்களாக இருக்கும் போதே அவை பெற்றோரின் கூவுதலுக்கு எதிர்வினை காட்டுகின்றன. பிள்ளையுடைய அன்பு செலுத்துவதற்குரிய ஆற்றலின் விருத்தியில் பெற்றாரின் அன்பு செலுத்தும் ஆற்றல் அதிக செல்வாக்குச் செலுத்துகிறது. குழந்தையின் இவ்வாற்றல் ஆறு மாதங்களாகும் போது செயற்பட ஆரம்பிக்கின்றது.

பெற்றார் தம் பாசத்தை உள்ளூர வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. அதனை வெளிப்படையாகவும் உடல் ரீதியாகவும் காட்ட வேண்டும். எமது சமூகத்தின் ஒரு பிரிவினர் பாசத்தின் உடல் ரீதியான அம்சத்தை அடக்கி ஒடுக்கி விடுகின்றனர். இந்நிலை குறிப்பாகத் தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான உறவில் காணப்படுகிறது. இவ்வாறு பிள்ளைப்பருவத்தில் பெற்றாரின் உடல் ரீதியான பாசம் கிடைக்காமல் போவதால் தான் எமது பிள்ளைகள் மிக இள வயதிலேயே எதிர்ப்பாலாரின் கவர்ச்சிக்கு ஆட்படுகின்றனர். தந்தைக்கும் புதல்வர்களுக்கும் இடையில் காணப்படும் பாசக்குறைபாட்டைப் பிள்ளை வளர்ப்புத்துறை நிபுணரான Dr. Spock கண்டனம் செய்தார். தானும் அவ்வாறே வளர்க்கப்பட்டதாகவும் அதனால் தான் தனது பிள்ளைகளுடனும் அவ்வாறே பழகித் தவறு செய்து விட்டதாகவும் அவர் கூறினார். இஸ்லாமிய மரபிலும் ஏனைய சில மரபுகளிலும் ஒருவரோடொருவர் கை குலுக்குதல், முத்தமிடுதல், கட்டித்தழுவுதல் என்பன ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

தம் பெற்றாரை அடிப்படையாக வைத்தே மற்றவர்கள் எப்படி இருப்பார்கள் என்ற மனப்பதிவைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்கின்றனர். பெற்றார் பாசம் நிரம்பியவர்களாக இருப்பின் பிள்ளைகளில் அன்பு செலுத்தும் ஆற்றல் விருத்தியடைவதற்கு வாய்ப்பு ஏற்படும். இந்நிலையில் எல்லா மனிதர்களும் சிநேகமானவர்கள் எனப் பிள்ளைகள் கருதத் தொடங்குவதனால் அவர்கள் மற்றவர்களைப் பற்றி அச்சம் கொள்ள மாட்டார்கள். பிள்ளைகள் மிகச் சிறியவர்களாக இருக்கும் காலத்தில்கூட பெற்றார் அவர்களுடன் தேவையற்ற மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. ஆபத்தான அல்லது நொறுங்கக்கூடிய பொருட்களை (மருந்துகள், கத்திகள், கண்ணாடிப் பொருட்கள் முதலியவற்றை) பிள்ளைகள் கையில் எடுப்பதைத் தடுப்பதற்காகக் குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் அவற்றை வையுங்கள். இவ்வாறு செய்தால் 'வேண்டாம்!

வேண்டாம்' என்று திருப்பித் திருப்பிச் சொல்வதைக் குறைத்துக் கொள்ளலாம். வீடானது குழந்தைகளுக்கு உடல் ரீதியாகவும் மனவெழுச்சி ரீதியாகவும் பாதுகாப்பை வழங்குகின்ற இடமாகவும் நட்புறவை வழங்கும் இடமாகவும் இருத்தல் அவசியம்.

அன்பின் உருவாக்கம் தாய்ப்பாலூட்டலுடன் ஆரம்பிக்கிறது. அரவணைத்துக் கொஞ்சுதல், புன்னகைத்தல், தொடுதல், முத்தமிடுதல், வருடிவிடல் என்பன குழந்தைக்கு அவசியமாகின்றன. அத்தோடு அன்பும் அங்கீகாரமும் பிள்ளைகளுக்கு வார்த்தை வடிவில் வழங்கப்பட வேண்டும். பிள்ளைகள் வளரும்போது தம் பெற்றார் ஏனையவர்களோடு எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அவதானிப்பார்கள். அவர்கள் அன்பையும் பாசத்தையும் காட்டுகிறார்களா அல்லது கொடுமை புரிந்து வெறுப்புக் காட்டுகிறார்களா என்பதைப் பிள்ளை அவதானிக்கும். இது, உலகைப் பற்றிய பிள்ளையின் கருத்துப் படிவத்தையும் மற்றவர்கள் தொடர்பாக அவர்கள் காட்டப்போகும் நடத்தை, மனப்பாங்கு என்பவற்றையும் பாதிக்கிறது. அத்தோடு, தம் பெற்றார், செல்லப்பிராணிகள், விலங்குகள், தாவரங்கள், சுற்றாடல் என்பவை தொடர்பாக நடந்து கொள்ளும் விதத்தையும் பிள்ளைகள் அவதானிப்பார்கள். மழை, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவற்றைப் பெற்றோர் மதித்துப் பாராட்ட வேண்டும். (அவற்றால் தமக்கு இடைஞ்சல் ஏற்படும் போது அவற்றைத் திட்டக்கூடாது) நாம் எப்போதும் இயற்கை மீது அன்பும் பரிவும் கொண்டவர்களாக இருப்பது அவசியம்.

அன்பு என்பது, வாழ்க்கையின் அனைத்து ஏற்ற இறக்கங்களின் போதும் பெற்றார் தம் பிள்ளைக்கு வழங்கக்கூடிய மிக உன்னதமான வெகுமதிகளுள் ஒன்றாகும். அன்பு மிக்க பெற்றார் ஒருவரின் ஆற்றல் மிக வலிமையானது

பராமரிப்போரால் ஆர்வத்துடன் வழங்கப்படும் அன்பும் அங்கீகாரமும் ஆரோக்கியமான மனவெழுச்சி விருத்திக்கு மிக அவசியமானவை. முதல் 2-3 வருடங்களின் போது பிள்ளைகளின் ஆளுமையானது பெற்றோராலும் பராமரிப்போராலுமே வடிவமைக்கப் படுகிறது. போதிய ஆளணி இல்லாத அநாதை நிலையங்களில் வாழ்ந்த, அல்லது பராமரிப்பு நிலையங்களில் தம் தொட்டிலிலேயே புறக்கணித்துவிடப்பட்ட குழந்தைகள் ஆயுள் பூராகப் பாதிப்புக்கு உள்ளாகலாம். குழந்தையின் அறிவார்வமும் மனவெழுச்சிகளும் புறக்கணிக்கப்பட்டால், பின்னர் அவை முற்றாக இயல்பு நிலைக்குத் திரும்புவதில்லை. அதேவேளை அன்பு மிக்க பெற்றோரினால் பராமரிக்கப்படும் பிள்ளைகள் துரிதமான முன்னேற்றத்தைக் காட்டுகின்றனர்.

மனவெழுச்சி ரீதியான வலுவூட்டலின் அடிப்படை

பெற்றார் தம் பிள்ளைகளுக்கு வெளிப்படையாகப் புலப்படும் விதத்தில் அன்பை வழங்கும் போது பிள்ளைகளில் மனவெழுச்சி வலிமையும் விவேகமும் விருத்தியடையும். உங்கள் குழந்தையின் சின்னஞ்சிறு சாதனைகள், அவர்களே சிந்தித்துச் செய்த விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றை அங்கீகரித்துப் பாராட்டுவதன் மூலமும்,

அவர்களது கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலமும் அவர்களுக்குப் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் வழங்குங்கள். அவர்களைச் சுதந்திரமாக - ஆனால் பாதுகாப்பாக - விளையாட விடுங்கள். அவர்களுக்கு எழுத்தாக்கங்களை வாசித்துக் காட்டுங்கள். சித்திரங்களையும் படங்களையும் காண்பியுங்கள். தாம் வலிமையும் அனுபவமும் குறைந்தவர்கள், பிறரில் தங்கியிருக்க வேண்டியவர்கள் என்பதைப் பிள்ளைகள் அறிவர். எனவேதான், அவர்கள் தலைமைத்துவம், அன்பு, பாதுகாப்பு என்பவற்றைப் பெற்றோரிடம் எதிர்பார்க்கின்றனர்.

சிறுவர்கள் தொடர்ச்சியாகத் தம் பெற்றோரை அவதானித்து வருவதோடு, இயல்பாகவே தம்மைத் தம் பெற்றாரைப் போன்று அமைத்துக் கொள்கின்றனர். இவ்வாறுதான் அவர்கள் தம் ஆளுமை, நடத்தைப் பண்புகளின் உறுதிப்பாடு, நிலைமைகளைச் சமாளிக்கும் ஆற்றல் முதலியவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தம்மைத் தம் பெற்றோருடன் அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலம் வளர்ந்த பிரஜைகளாக, தொழிலாளர்களாக, குடும்பஸ்தர்களாக, பெற்றோர்களாக மாறுவது எப்படி என்பது பற்றிப் பிள்ளைப் பருவத்திலேயே கற்றுக் கொள்கின்றனர்.

பெற்றார் எண்ணற்ற வழிகளில் தம் அன்பை வெளிப்படுத்துகின்றனர். மகிழ்ச்சியான முகபாவனைகள், முன்திட்டமிடாது காட்டும் உடல் ரீதியான பாசம், பிள்ளைகளின் சாதனைகள் தொடர்பாகக் காட்டும் மகிழ்ச்சி, அவர்கள் நோவினையுற்று அல்லது பயந்து இருக்கும் போது வழங்கும் ஆறுதல், அச்சுறுத்தப்படும் போது வழங்கும் பாதுகாப்பு முதலியன இவற்றுள் அடங்கும். பிள்ளைகள் தம் பெற்றார் மீது காட்டும் அன்புதான், அவர்களுக்கும் அவர்களின் நண்பர்கள், ஆசிரியர்கள், வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகள், அயலவர்கள், சகாக்கள் ஆகியோருக்கும் இடையில் சாதகமான உறவுகள் உருவாக வழியமைக்கின்றது.

பெற்றோரினால் அன்பு செலுத்தி மதிக்கப்படும் போதுதான் பிள்ளைகளுக்குத் தம் மீது நம்பிக்கை உருவாகும். அவர்கள் தம் வாழ்க்கையில் தம்மோடும் எல்லா வகையான ஆட்களோடும் சௌகரியமாக இருப்பதற்கு இந்தச் சுய மனவுறுதியே அவர்களுக்குத் துணை புரிகிறது. பெற்றோரிடமிருந்து கிடைக்கும் அன்பும் மரியாதையும்தான் பிள்ளைகளைத் தம் பெற்றார் மீதும் ஏனையோர் மீதும் அன்பும் மரியாதையும் காட்டக் காரணமாக அமைகின்றன.

வன்முறைச் சமூகமொன்றில் வாழும் பிள்ளைகளுக்கு அன்பை மிக உறுதியான விதத்தில் போதிக்க வேண்டும். இதன் மூலமே பரவிவரும் வன்முறையை ஈடுசெய்ய முடியும். இப்பிள்ளைகளுக்குப் பெற்றார் அன்பைப் போதிக்காவிடில் அவர்கள் அதனை எங்கேதான் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> நிச்சயமாக உடலில் ஒரு சதைத்துண்டு இருக்கிறது. அது சீரானதாக இருப்பின் முழு உடலும் சீரானதாக இருக்கும். அது சேதமுற்றால் முழு உடலும் நோயுறும். நிச்சயமாக அதுவே இதயமாகும். (அல் புகாரி, முஸ்லிம்)

அன்பு: ஆக்கபூர்வமான விவேகம் பற்றிய எண்ணக்கருவும் அல்குர்ஆனும்

ஆத்மாவை (புஆத்) உள்ளுணர்வு, கிரகிப்பு, பாசம், பச்சாதாபம் (empathy) என்பவற்றின் இருப்பிடமாக அல்குர்ஆன் விவரிக்கிறது. புலக்காட்சிகளை மாற்றியமைத்தல், சவால்களுக்குத் தீர்வு காணல், விழுமியங்களை வெளிப்படுத்தல் முதலியன தொடர்பான ஆற்றல் மிக்க கட்டுப்பாட்டு மையமாக இதயம் இருக்கிறது என

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் அமைந்துள்ள The Institute of Heart Math என்ற நிறுவனம் எடுத்துக் காட்டுகிறது. இதயத்தையும் மூளையையும் அன்பினால் ஒன்றிசையச் செய்யும்போது முழுமையான விவேகமும் பரிபூரணமான சுயமும் உருவாகின்றன. ஆத்மாவும் இதயமும் மனிதனின் ஆன்மீகத்துக்கும் மனவெழுச்சிகளுக்கும் உரிய மையங்களாக விளங்குகின்றன.

இதயச் சார்புடையவர்களாக இருக்கும் போது மனிதர்கள் ஆராயவும் கற்கவும் புத்தாக்கம் செய்யவும் விரும்புபவர்களாக இருப்பர். அதேபோன்று அந்நிலையில் இருக்கும் பிள்ளைகளும் அதிக எதிர்வினை காட்டுபவர்களாகவும் நன்கு செவிமடுப்பவர் களாகவும் இருப்பர். இதயச் சார்பற்றவராக இருக்கும் ஒருவர் விரக்தி, கோபம், சலிப்பு, சுய அனுதாபம், கவலை என்பவற்றால் ஆட்கொள்ளப்படலாம். அத்தோடு பிரச்சினைகளும் தீர்வற்றன போன்று அவர்களுக்குத் தோற்றமளிக்கும். அன்பு செலுத்தக் கற்றுக்கொள்ளும் பிள்ளைகள் முழுமையும் சமநிலையும் உடையவர் களாக இருப்பதோடு வாழ்க்கை பற்றிய நிறைவான அகக்காட்சியொன்றையும் விருத்தி செய்து கொள்வர். மேலும், அறிவுபூர்வமான முடிவுகளை எடுக்கக்கூடியவர்களாகவும் தம்மையும் மற்றோ ரையும் நல்ல முறையில் பராமரித்துக் கொள்பவர்களாகவும் இருப்பதோடு அன்பு செலுத்துவது எப்படி என்று தாம் பெற்றுக்கொண்டுள்ள விளக்கத்தை இவர்கள் தம் சொந்தப் பிள்ளைகளுக்கும் வழங்குவர். (Bradley மற்றும் ஏனையோர்- 2009)

ஒரு பிள்ளை கற்றுக்கொள்ளும் மனவெழுச்சி ரீதியான படிப்பினைகள் அதன் மூளையின் நரம்புச் சுற்றுக்களை வடிவமைக்க உதவுவதாக Goleman என்பவர் தனது *Emotional Intelligence* என்ற நூலில் கூறுகிறார். வாழ்க்கையில் சிறப்புற்று நிற்பவர்கள் தர்க்க ரீதியான விவேகத்தை உயர்ந்த அளவில் கொண்டவர்கள் அல்லர்; மாறாக, மனவெழுச்சி ரீதியான விவேகத்தை அதிகளவில் கொண்டவர்களே!. மனவெழுச்சி ரீதியான விவேகம் என்பது உளத்தூண்டுதல்களின் கட்டுப்பாடு, நடத்தைப் பண்புகள், சுய கட்டுப்பாடு, பொதுநலப் பண்பு, கருணை என்பவற்றை உள்ளடக்கியிருக்கும். (Goleman, 2005)

பிள்ளைகளின் விவேகமானது, அன்பு செலுத்துவதிலும் அன்பைப் பெறுவதிலும் அவர்கள் காட்டும் ஆற்றலில் தங்கியிருக்கவில்லை என்ற கருத்துத் தவறானது. புலக்காட்சிகள், உள மற்றும் மனவெழுச்சி ரீதியான மனப்பாங்குகள், எதிர்வினை காட்ட எடுக்கும் நேரம், தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் முதலியன அனைத்தும் இதயத்தின் ஆரோக்கியத்துடன் நெருங்கிய தொடர்புடையன. இதயத்தினால் உருவாக்கப்படும் மின் தாள லயங்கள் சமநிலையாகவும் ஒத்திசைவாகவும் இருக்கும் போது மூளையின் உயர் புலக்காட்சிக்குரிய பகுதிகள் சிறப்பாகத் தொழிற்படுகின்றன. அன்பு, பரிவு, நல்லவற்றைக் கண்டு போற்றும் இயல்பு, கருணை என்பன நடுநிலையான, ஒத்திசைவுள்ள இதயத்துடிப்பு லயத்தை உருவாக்குகின்றன. சிரசையும் இதயத்தையும் சமநிலைப்படுத்துவதன் மூலம் தெரிவுகள் செய்தல், தொடர்பாடல் முதலியவற்றில் அறிவையும் வலிமையையும் ஒருங்கிசைவையும் மக்கள் விருத்தி செய்து கொள்கிறார்கள். அன்பின் காரணமாக உணர்திறன் அதிகரித்து, தொடர்பாடல் தெளிவு மிக்கதாக மாறுகிறது. அத்தோடு, புரிந்துணர்வும் விருத்தியடை கிறது. அன்பும் கருணையும் நல்லன போற்றும் தன்மையும் ஆக்கத்திறனை விரிவுபடுத்தி பிரச்சினை தீர்க்கும் ஆற்றலை மேம்படுத்துகின்றன. இதன் விளைவாக, திருத்தமான தெரிவுகளை மேற்கொள்ளும் ஆற்றல் வலுப்பெறுகிறது.

இதயம் பற்றி அல்குர்ஆன்

அல்குர்ஆன் மனித இதயம் பற்றிப் பல்வேறு வடிவங்களில் விவரிக்கின்றது. இதயமானது வெறுமனே ஒரு பொறியியல் பம்பியல்ல; அதைவிடப் பன்மடங்கு சிறப்புடையது என்பதையே இவ்வடிவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அல்குர்ஆனில் இதயம் பற்றிக் காணப்படும் மிக முக்கியமான விவரணங்களில் அது பின்வருவனவற்றின் இருப்பிடமாகக் கூறப்படுகிறது.

A.) நேரான அம்சங்கள்

ஈமான்: விசுவாசம்
தக்வா: இறையச்சம், அர்ப்பணிப்பு
யஹ்தி: வழிகாட்டல்
யஃகிலூன்: பகுத்தறிவு
லின்: மென்மை
தக்ஷஃ: இறை உணர்வு
ஹைர்: நல்ல தன்மை
யர்பித்: வலிமை
முத்மஇன்: மன நிறைவு
ரஃபஃ: கருணை
யதஹ்ஹிர்: தூய்மை
முனிப்: பாவமன்னிப்புத் தேடல்
யஃப்கஹூன்: புரிந்துணர்வு
ஸகினா: அமைதி
ரஹ்மா: கருணை

B.) எதிர்மறையான அம்சங்கள்

மரழ்: நோய்
அதிமூன்: பாவம் செய்யும் இயல்பு
நிபாக்: நயவஞ்சகம்
ருஃப்(b): பயங்கர இயல்பும் பயமும்
காஸியா: கடூரத் தன்மை
யஸிக்: நெறி விலகல்
முன்கிரா: மறுத்தல்
தஃமா: குருட்டுத் தன்மை
க்ஹில்: கடும் வெறுப்பு
தர்தாப்: சந்தேகம்
ஹம்ராஹ்: அறியாமை
கல் ஹிஜாரா: மரத்துப் போன தன்மை
லஹியா: பிரிதீடுபாடு

அல்குர்ஆனில் 145 இடங்களில் இதயம் பற்றிக் கூறப்படுகிறது. இதயம் பற்றிய எமது அறிவினை விரிவாக்கிக் கொள்வதற்காக மேலும் ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

பிள்ளைகளிடம் அன்புக்குறைபாடு, தொடர்ச்சியான பயம் அல்லது கவலை காணப்படும் போது அவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாவதனால் அவர்களுடைய இசைவாக்கமடையும் திறன் மங்கிப் போகின்றது. மன அழுத்த நிலைக்கு அவர்கள் பழகிப் போய்விட்டால் அவர்களது மூளையின் நரம்பு அமைப்புக்கள் மன அழுத்தத்திற்கு விளைவு காட்டும் விதத்திலேயே அமையப் பெறுகின்றன. எனவேதான், அன்பு கிடைக்கப்பெறாத பிள்ளைகள் கற்பதற்குச் சிரமப்படுகிறார்கள். அன்பும் பரிவும் காட்டப்படும் சூழலில்தான் பிள்ளைகள் விருப்பத்தோடு கற்பார்கள்.

இதயமானது உடல்ரீதியாக அன்புக்கு எதிர்வினை காட்டுகிறது. இதனை ECGஐக் கொண்டும் HRV தாள லயங்களைக் கொண்டும் அளவிட்டுக் கொள்ளலாம். கோபம், கவலை, விரக்தி அல்லது மன அழுத்தம் போன்ற உணர்வுகள் காரணமாக இதயத்துடிப்புத் தாளத்தின் சமநிலையும் ஒழுங்கும் குலைகின்றன. எதிர்காலம் பற்றிய சாதகமானதும் நம்பிக்கை நிறைந்ததுமான உணர்வுகளைப் பிள்ளைகள் பெறவேண்டுமாயின் அவர்களுக்கு அன்பு தேவைப்படுகிறது.

'என் முழு இதயத்தாலும் உன்னை நேசிக்கிறேன்' அல்லது 'என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து உன்னை நேசிக்கிறேன்' போன்ற கூற்றுக்கள் சரியானவையே என Dr. Ilham Altalib விளக்குகிறார். ஏனெனில், மனிதனில் அன்பு, மனவெழுச்சிகள், உணர்வுகள் ஆகியவற்றின் மையமாக இதயமும் செயற்படுகிறது.

பெற்றோருக்கான சில உதவிக் குறிப்புக்கள்

பிள்ளைகள் அன்பு செலுத்தக் கூடியவர்களாகவே பிறக்கின்றனர். இப்பண்பினைப் போஷித்து வளர்த்துப் பாதுகாப்பது பெற்றாரின் பொறுப்பாகும். பெற்றார் தம் பிள்ளைகள்

மீது அன்பை வெளிப்படையாகக் காட்டுவார்களாயின், திருப்பி அன்பு காட்டுவதற்குப் பிள்ளைகள் ஊக்கம் பெறுவார்கள். அன்பு நிறைந்த ஆளுமையொன்றைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்கு உதவக்கூடிய சில செயன்முறைகளைக் கீழே தருகிறோம்.

- **அவர்கள் மிகச்சிறு வயதினராக இருக்கும் போதே ஆரம்பித்து விடுங்கள்.**

  உங்கள் குழந்தைக்கு அன்பை ஊட்டுங்கள். பாலூட்டும் போது தூக்கி வைத்துக் கொள்வது பிள்ளைகளுக்கு அன்பைப் போதிக்கும். ஏந்திக்கொள்ளல், அரவணைத்தல், முத்தமிடுதல், உரையாடுதல் என்பன குழந்தைக்குப் பாதுகாப்புணர்வையும் அன்பையும் கற்பிக்கும்.

- **'மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்களோ, அதனையே மற்றவர்களுக்குச் செய்யுங்கள்' என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள்.**

  சுயநலமின்றி, தன்னை மையமாகக் கொள்ளாது மற்றவர்களுடன் நடந்து கொள்வது எப்படி என்பது பற்றி உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள். மற்றவர்கள் தம்மை எப்படி நடத்த வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்வது பிள்ளைகளைச் செயற்பட முன் சிந்திக்க வைக்கும். நாம் மற்றவர்களை எப்படி நடத்துகிறோமோ அவ்வாறே நாமும் நடத்தப்படுவோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள இது உதவும். ஒருவரின் நடத்தைக்கு விளைவு காட்டும் போது அவர்களை விடச் சிறந்த முறையில் நடந்து கொள்வதே சரியானது. இதன் மூலம் பகைமைக்குப் பதிலாக நட்பு உறுதிப்படுத்தப்படும்.

  (எவராலும்) உங்களுக்கு முகமன் ('ஸலாம்') கூறப்பட்டால் (அதற்குப் பிரதியாக) அதைவிட அழகான வாக்கியத்தைக் கொண்டு நீங்கள் முகமன் கூறுங்கள்; அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் கணக்குப் பார்க்கிறவனாக இருக்கிறான். (அல் குர்ஆன் 4: 86)

- **முன்னுதாரணத்தின் மூலமே அன்பு நிலைபெறுகிறது.**

  பெற்றார் பிள்ளைகள் மீதும் தமக்கிடையேயும் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் மீதும் எவ்வாறு அன்பைச் செலுத்துகிறார்கள் என்பதே பிள்ளைகளைப் பொறுத்தவரையில் முக்கியமானது. போதிய அளவுக்கு அன்பை வெளிக்காட்டுங்கள்; அதே விதத்தில் உங்கள் பிள்ளைகளும் அன்பைக் காட்டுவார்கள்.

- **ஒவ்வொருவரினதும் தனித்துவமான ஆளுமையை மதித்துப் போற்றுதல்.**

  ஒவ்வொரு பிள்ளையின் ஆளுமையும் தனித்துவமானது. பெற்றோரின் பணி தமது பிள்ளைகளின் ஆளுமையை மாற்றியமைப்பதல்ல; மாறாக, அன்பைச் சரியான வழியில் காட்டுவதற்கு பெற்றோர் அவர்களுக்கு உதவ வேண்டும். பொறுமையற்ற பிள்ளைகளுக்குப் பொறுமையான அன்பையும், வெட்கப்பட்டு ஒதுங்கும் பிள்ளைக்கு துணிகரமான அன்பையும், தன்னைப் பற்றியே சிந்திக்கிற பிள்ளைகளுக்கு தாராள அன்பையும் பெற்றார் கற்றுக்கொடுப்பது அவசியம்.

‘உங்களை வெறுக்கிறேன்’ எனப் பிள்ளை கூறினால் ...

உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் முழு அன்பையும் கொட்டிய பின்னரும், உங்களது அரவணைப்புக்கள், முத்தங்கள், அன்பளிப்புக்கள், பரிசுகள் முதலியவற்றை வழங்கிய பின்னரும், நோயுற்ற போது வைத்தியரிடம் அழைத்துச் சென்று தேவையான போதெல்லாம் எல்லையின்றி ஆறுதல் வழங்கிய பின்னரும், அந்த அன்புக் குழந்தைகள் உங்களைப் பார்த்து ‘உங்களை வெறுக்கிறேன்’ அல்லது ‘உங்களோடு இரக்கமில்லை’ என்று கூறக்கூடும். ஆனால், உண்மையில் அவர்கள் தம் பெற்றாரை வெறுக்கின்றார்களா? நிச்சயமாக இல்லை!

தங்கள் பெற்றார் காலையுணவாகச் சொகலேட் சாப்பிட அனுமதிப்பதில்லை அல்லது நண்பர்களோடு ஆற்றில் நீந்தச் செல்ல அனுமதிப்பதில்லை என்பதையே அவர்கள் வெறுக்கின்றனர். அவர்கள் கோபம், விரக்தி என்பவற்றின் காரணமாகவே அவ்வாறு பேசுகின்றனர்; வெறுப்பினால் அல்ல. இவ்வாறு ‘உங்களை வெறுக்கிறேன்’ என்று கூறுவதனால் பெற்றோரின் கவனம் தம் பக்கம் திரும்பும் என்பதைப் பிள்ளைகள் இள வயதிலேயே அறிந்து கொள்கின்றனர். ஏனெனில், பெற்றார் காட்டும் எதிர்வினையானது எதிர்மறையானதாக இருப்பினும் அதன் விளைவு உடனடியாகக் கவனம் கிடைப்பதே. இவ்வாறான நிலைமைகளில் பெற்றார் ஆத்திரமும் கோபமும் மனவேதனையும் அடைவார்கள். எனினும், பிள்ளைகள் உண்மையில் அவ்வாறு கருதவில்லை என்பது பெற்றாருக்குத் தெளிவாகினால் அவர்கள் இறுதியில் தம் பிள்ளைகளின் வேண்டு கோள்களுக்கு விட்டுக்கொடுக்கக்கூடும்.

பிள்ளைகள் வரம்புகளை மீறியேனும் அவதானத்தைப் பெற முயற்சிக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றார் கோபப்படாமல் இருப்பதே முக்கியம். அவர்கள் மீது ஒருசில கணங்களுக்கு வெறுப்புக்காட்டப்பட்டாலும் பிள்ளைகள் உண்மையில் அவர்களது எதிர்த்தாக்கத்தையே எதிர்பார்க்கின்றனர். பெற்றார் நிதானம் தவறாமல் இருந்தால், ‘நான் உங்களை வெறுக்கிறேன்’ என்று கூறுவதன் மூலம் தாம் எதிர்பார்க்கும் எதிர்வினையை ஏற்படுத்த முடியாது என்பதையும் தாம் நினைத்தவாறு பெற்றோரை ஆட்டி வைக்க முடியாது என்பதையும் பிள்ளைகள் விரைவில் அறிந்து கொள்வர். அதேவேளை அவர்களது கூற்றின் பின்னணியிலுள்ள உணர்வுகளைப் பெற்றார் அங்கீகரிப்பது அவசியம். பிள்ளைகளின் மனம் புண்படும் வகையில் பேசுவதைப் பெற்றார் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பெற்றார் அச்சூழலிலிருந்து அகன்று சென்று தம்மைச் சாந்தப்படுத்திக் கொண்டு, இரு சாராரினதும் கோபம் தணிந்த பின்னர் அவ்விடயம் பற்றிக் கலந்துரையாடத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளலாம்.

முதற்பிள்ளை

உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட பெற்றோர், தம் பிள்ளைகளும் உயர் இலட்சியங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென விரும்புவார்கள். பெற்றார் தாம் வாழ்க்கையில் சாதித்தவற்றையெல்லாம் தம் முதற்பிள்ளை யும் சாதிக்க வேண்டுமென விரும்புகின்றனர். தாம் முயற்சித்து அடைய முடியாமற் போனவற்றிலும் தம் முதற்பிள்ளை வெற்றி காணும் என அவர்கள் எதிர்பார்க் கின்றனர். தாம் ஏதேனும் தவறு செய்திருப்பின் அதைத் தம் முதற்பிள்ளையும் செய்யுமோ என அவர்கள் அஞ்சுவர். இவ்வாறு தம் மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு நிற்கும் பெற்றார், தமது இரண்டாவது பிள்ளையின் விடயத்தில் இலகுவாக நடந்து கொள்கின்றனர். எனவே, இரண்டாவது பிள்ளை தனது செயல்களிலும் உணர்வுகளிலும் முதலாவதை விட ஒப்பீட்டளவில் சுதந்திரம் மிக்கதாகக் காணப்படும்.

"உங்கள் முதற்பிள்ளை விடயத்தில் பதற்றமின்றி ஆறுதலாக இருங்கள். அதனை அதன் போக்கில் வளர விடுங்கள்" எனப் புதிய பெற்றார்களைப் பார்த்துக் கூறுவது எளிதானது. இது, முதல் முறையாக கார் ஓட்டப் பழகும் ஒருவரிடம் 'பதற்றமின்றி இருங்கள்' என்று கூறுவதற்கு ஒப்பானது. முதலாவது பிள்ளையை வேறு பிள்ளைகள் விளையாடும் இடங்களுக்கு அழைத்துச் செல்வது பயன் தரும். கொடுக்கவும், வாங்கவும் அடுத்தவர் களுடன் சேர்ந்து பழகவும் கற்றுக்கொள்வதற்கு விளையாட்டுக்கள் துணை புரிகின்றன. மற்றவர்களைப் போய்ச் சந்திப்பதும் மற்றப் பிள்ளைகளைத் தம் வீட்டுக்கு வருமாறு அழைப்பதும் உதவியாக அமையும். மற்றவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்திருப்பதே அன்பு செலுத்தும் ஆற்றலைப் பெறுவதற்கு அடிப்படையாக அமைகிறது.

பெற்றார் தம் எல்லாப் பிள்ளைகளையும் பெரிய இடைவெளியின்றி அடுத்தடுத்துப் பெற்றெடுப்பது நல்லது எனச் சில சமூகவியல் அறிஞர்கள் ஆலோசனை வழங்குகின்றனர். தனித்தனியாக வளர்க்கப்படுவதையும் தனித்துப்போய் வளர்வதையும் தவிர்த்துப் பிள்ளைகள் ஒருவரோடொருவர் சமூக வாழ்க்கையை அனுபவிப்பதற்கு இது வசதியளிக்கின்றது. பல பெற்றோர்களைப் பொறுத்தமட்டில் ஒரு முழுச் சந்ததியை ஒரே நேரத்தில் வளர்த்தெடுப்பது இலகுவானதாக இருக்கும். அதன் பின்னர் அவர்கள் வாழ்க்கையின் புதிய கட்டமொன்றுக்கு நகரலாம். பிள்ளைகளுக்கிடையே நீண்டகால இடைவெளி இருக்குமாயின் குழந்தை, பள்ளிப்பருவத்தினர், வாலிபர் என மூன்று சந்ததிகளை ஒரே நேரத்தில் கவனிக்க வேண்டிய பொறுப்பு பெற்றாருக்கு இருக்கும். இதனால் பிள்ளைகளை வளர்ப்பதிலேயே பெற்றாரின் ஆயுளில் பெரும் பகுதி கழிந்து போகும். அவர்களுக்குத் தமது விவகாரங்களைக் கவனிப்பதற்கு அவகாசமே கிடைக்காது.

பொறாமையுணர்வு அன்புக்கு முரணானது. மற்றவர்களிடமுள்ள நல்லவை அவர்களை விட்டு நீங்க வேண்டும் என்றும், அவை தம்மை வந்தடைய வேண்டும் என்றும் ஆவல் கொள்வதே பொறாமையின் அடிப்படை. இது பாரதூரமான கோளாறாகும். இதனை இள வயதிலேயே தம் பிள்ளைகளிடமிருந்து பெற்றார் நீக்கிவிட வேண்டும். இதனை ஒரு சமூகத் தீங்கு என நபி (ஸல்) அவர்கள் கருதினார்கள்.

> மக்கள் ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொள்ளாத வரையில் அவர்கள் நன்றாக இருப்பார்கள். (அல் தபரானி)

குடும்பத்தில் புதிதாகக் குழந்தையொன்று பிறந்து விட்டால் அது பெற்றாரின் முழுக் கவனத்தையும் ஈர்த்து விடுவது இயல்பே. ஆட்கள் அக்குழந்தையைப் பார்க்க வருவதோடு

அதற்கு அன்பளிப்புக்களும் கொண்டு வருவார்கள். அக்குழந்தை எப்படி அழகாக இருக்கிறது என்று ஒவ்வொருவரும் வர்ணிப்பர். அதேவேளை, தாய் அதிகம் களைத்துப் போயிருப்பாள். தந்தையோ, ஏனைய வேலைகளில் பிஸியாக இருப்பார். இதனால் தமது மற்றப் பிள்ளைகள் மீது அவர்களால் போதிய கவனம் செலுத்த முடியாமற் போய்விடலாம். தாம் ஒதுக்கப்பட்டு விட்டது போன்று மூத்த பிள்ளைகள் உணரக்கூடும். அதிலும் குறிப்பாக, மிக இளைய பிள்ளை கோபமும் மனக்குழப்பமும் அடையக்கூடும். மிக இளைய பிள்ளை என்ற அதன் அந்தஸ்து பறிபோய் விட்டமையே இதற்குக் காரணம். தன்னை விட இளைய பிள்ளையொன்றுக்கு மிகுந்த கவனம் கிடைக்கும் போது பொறாமை உணர்வு ஏற்படுவது இயல்பானதே.

இவ்வாறான பொறாமை உணர்வு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்குப் பெற்றார் பின்வருவனவற்றைச் செய்யலாம்:

- தாம் அன்புக்குரியவர்கள், வேண்டப்படுபவர்கள் என்ற உணர்வை எல்லாப் பிள்ளைகளிலும் ஏற்படுத்த வேண்டும்..
- இன்னொரு குழந்தை பிறக்கும் போது மற்றப் பிள்ளைகள் தமக்கு அன்பும் பராமரிப்பும் குறைவது போன்று உணர இடமளிக்க வேண்டாம். தொடர்ச்சியாக அவர்களுக்குப் போதிய கவனிப்பை வழங்குவதும் அவர்களது மனதில் தாமும் முக்கியமானவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவதும் அவசியம்.
- சகோதர சகோதரிகளுக்கு மத்தியில் ஒப்பு நோக்குதலையும் போட்டியையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்..
- சகித்துக் கொள்ளல், வெகுமதி வழங்கல், கட்டுப்பாடு பேணுதல் போன்ற விடயங்களில் சமானத்தன்மை தென்பட வேண்டும்.
- முடிந்த அளவுக்கு எல்லாப் பிள்ளைகளையும் அடிக்கடி முத்தமிடுவதும் அரவணைப்பதும் அவசியம்.
- புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பில், வளர்ந்த பிள்ளைகளைப் பங்கேற்கச் செய்யலாம். அத்தோடு, தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அவர்களையும் கலந்தாலோசிக்கலாம்.

பெற்றார் தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துவது ஏன்?

"மனிதர்கள் அனைவரும் தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துகின்றனர். இந்த விடயத்தில் செல்வந்தர், ஏழை என்ற பேதமின்றி எல்லா மனிதர்களும் சமமானவர்கள்" என யூரிப்பிடீஸ் என்ற கிரேக்க அறிஞர் கூறினார். "அவன் நல்லவன் என்பதற்காக நான் அவன் மீது அன்பு காட்டவில்லை. அவன் என்னுடைய பிள்ளை என்பதனாலேயே அவ்வாறு செய்கிறேன்" என்று ரவீந்தரநாத் தாகூர் சொன்னார்.

உங்கள் அன்பைப் பிள்ளையின் நடத்தையோடு இணைக்க வேண்டாம். அப்படிச் செய்வது பெற்றார் தம் அன்புக்கு நிபந்தனை விதிப்பது போல் தோன்றும். "நீங்கள் நல்ல பிள்ளையாக நடந்து கொண்டால் உங்கள் மீது நிறைய அன்பு காட்டுவேன்" என்பது போல் பெற்றார் ஒரு போதும் கூறக்கூடாது.

சில பிள்ளைகள் மீது பின்வரும் காரணங்களுக்காக அன்பு காட்டாமல் இருப்பது கவலைக்குரியதாகும்:

1. அவர்கள் தவறுதலாக அல்லது சமூக அழுத்தத்தின் காரணமாக அல்லது வல்லுறவின் விளைவாகப் பிறந்தவர்களாக இருத்தல்.

2. பிரசவத்தின் போது தாயின் மரணத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் எனக் கருதப்படுதல்.

3. குற்றவாளியான பெற்றாருக்குப் பிறந்தவர்களாக இருத்தல்.

4. ஆண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் ஒரு சமூகத்தில் பெண்ணாகப் பிறந்தமை. (சில நாடுகளில், குழந்தை ஆணாக இருந்தால் மாத்திரமே பெற்றாருக்கு பாராட்டும் வாழ்த்தும் கிடைக்கும்)

தாம் செய்யாத தவறுக்காக இந்தப்பிள்ளைகள் ஏன் மோசமாக நடத்தப்பட வேண்டும்?

அன்பு பெறத் தகுதியற்ற நிலையில் இருக்கும் போதுதான் பிள்ளைகளுக்கு அன்பு விசேடமாகத் தேவைப்படுகிறது. தாம் காட்டும் அன்பு சுயாதீனமானது; அது பிள்ளைகளின் செயல்களில் தங்கியிருக்கவில்லை என்பதைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். அவர்களை அவர்களாகவே கருதி அன்பு செலுத்தப்பட வேண்டும். பிள்ளைகள் எந்த அளவுக்குப் பாதுகாப்புணர்வையும், தாம் பெற்றாருக்கு அவசியமானவர்கள், அவர்களால் அன்பு செலுத்தப்படுபவர்கள் என்ற உணர்வையும் பெறுகின்றார்களோ அந்த அளவுக்கே பெற்றோரின் வெற்றி இருக்கும். புகழ்ச்சியும் பாராட்டும் பிள்ளைகளுக்குத் தேவைப்பட்டாலும் அவர்களுக்கு அன்பே மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது. "புகழ்ச்சி நல்லது; பாராட்டும் நல்லது. ஆனால், பாசமே இறுதியானதும் மனிதனால் சுவீகரித்துக் கொள்ளக்கூடிய பெறுமதி மிக்க வெகுமதியும் ஆகும்" எனப் புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வெய்ன் கூறினார்.

ஆட்கள் மீது அன்பு செலுத்துங்கள்; அதே வேளை அவர்களது தீய செயல்களை வெறுத்து ஒதுக்குங்கள்.

சிறு பிள்ளைகள் மீது மௌனமாக அன்பு செலுத்துவது போதாது. உங்கள் அன்பு, வார்த்தைகளாக வெளிப்பட வேண்டும்.

தமது அன்பை ஒருவருக்கொருவர் வார்த்தைகளால் வெளிப்படுத்திக்கொள்ள வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

> ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களோடு அமர்ந்திருந்த போது ஒரு மனிதர் அவர்களைக் கடந்து சென்றார். அங்கு அமர்ந்திருந்த ஒருவர் அவரைக் கண்டு 'நான் அந்த மனிதர் மீது அன்பு செலுத்துகிறேன்' எனக் கூறினார். 'அதை அவரிடம் கூறினீரா?' என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், 'இல்லை' என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'நீர் போய் அதனை அவரிடம் கூறும்' என்றார்கள். உடனே அத்தோழர் எழுந்து அந்த மனிதரைப் பின்தொடர்ந்து சென்று அவரிடம், 'அல்லாஹ்வுக்காக நான் உம்மீது அன்பு செலுத்துகிறேன்' எனக் கூறினார். அதற்கு அந்த மனிதர், 'அல்லாஹ் உம்மீது அன்பு செலுத்துவானாக. ஏனெனில், நீர் அவனுக்காக என் மீது அன்பு செலுத்தியுள்ளீர்' எனப் பதிலளித்தார்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான பாச உறவு நிபந்தனைகள் அற்றதாக இருக்க வேண்டும். அவர்கள் ஒருவரை மற்றவர் நிபந்தனைகளின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் உள்ளது உள்ளபடியே - அவர்களது பயங்கள், கவலைகள், தனிச்சிறப்புப் பண்புகள், பழக்க வழக்கங்கள் கருத்து வெளிப்படுத்தும் முறை என்பவற்றோடு - ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். முன்கூட்டிய தப்பெண்ணங்களையோ

தீர்ப்புக்களையோ மனதில் வைத்துக்கொள்ளாமல் நடந்து கொள்வதையே நிபந்தனை களின்றி ஏற்றுக்கொள்ளல் என்பது குறிக்கின்றது. உங்கள் பிள்ளைகள் கவர்ச்சி மிக்கவர் களாகவும் கல்வியில் சிறந்தவர்களாகவும் மற்றவர்களால் போற்றப்படு பவர்களாகவும் இருக்கலாம்; அல்லது அவ்வாறு இல்லாதிருக்கலாம். எப்படியிருப்பினும் இறைவனின் அருளால் அவர்கள் இவ்வுலகில் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் நிபந்தனைகள் எதுவுமின்றி ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் அன்பு செலுத்தப்படுவதற்கும் இதுவொன்றே போதுமானது.

அன்பும் பெற்றாரின் தன்னம்பிக்கையும்

அன்பு நிரம்பிய பெற்றார்-பிள்ளை உறவுக்குப் பெற்றாரின் தன்னம்பிக்கையே திறவுகோலாக இருக்கின்றது. தமது நிலை பற்றியும் தமது பிள்ளைகளின் நிலை எப்படியாக அமைய வேண்டும் என்பது பற்றியும் தமக்குத் தெளிவான விளக்கம் இருக்கிறது என்பதைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு உணர்த்தத் தவறினால், பிள்ளைகள் அவர்களைச் சோதிக்கத் தொடங்கி விடுவார்கள்; தொடர்ந்தும் சோதிப்பார்கள். பெற்றாரை மடக்குவதற்கான இந்த முடிவிலா முயற்சியின் விளைவாக அவர்களது உறவில் நெருக்கடி நிலை அதிகரிக்கும். இவ்வகையான நெருக்கடி பாசத்தைப் பாதிக்கும். நெருக்கடி நிலையைத் தளர்த்தும் போது உறவில் பாசம் ஊற்றெடுக்கும். அன்பில்லாத நிலையில் செலுத்தப்படும் அதிகாரம் கொடுங்கோன்மையானது. தன்னம்பிக்கை மிக்க பெற்றார் அதிகாரத்தையும் அன்பையும் ஒன்றாகச் செலுத்துவார்கள். அவர்கள் அன்போடு அதிகாரமும், அதிகாரத்தோடு அன்பும் செலுத்துபவர்களாக இருப்பதோடு அதில் சமநிலையைப் பேணியும் கொள்வர். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் தம் பிள்ளைகளுக்கு அதிக பாதுகாப்புணர்வை வழங்குகின்றனர். பாதுகாப்புணர்வுள்ள பிள்ளைகள் மன இறுக்கமின்றி மகிழ்ச்சியாக இருப்பார்கள். தமது பெற்றாரை மடக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லாததன் காரணமாக அவர்களால் ஏற்படும் ஒழுங்குப் பிரச்சினைகள் மிகக் குறைவாகவே இருக்கும். பிள்ளைகள் தவறாக நடக்க முற்படும் போது யாரிடம் அதிகாரம் இருக்கிறது என்பதை அவர்களுக்கு நினைவூட்டி விடுவது போதுமானதாக இருக்கும்.

இரக்க உணர்வை விருத்தி செய்வதற்கான நடைமுறை வழிகள்

பெற்றார் தம் பிள்ளைகள் மீது அன்பு காட்டும் போது பிள்ளைகளும் தமக்கு அன்பு காட்டப்படுவதை உணர்கின்றனர். எனினும், அன்பானது பல வழிகளில் வெளிக்காட்டப் பட வேண்டும். சில பெற்றார் தமது அன்பு பற்றி அடிக்கடி பேசுவதில்லை. தமது அன்பைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளவில்லை என அறிய வந்ததும் இவர்கள் அதிர்ச்சி அடைகின்றனர்.

பயிற்சியின் மூலம் இரக்க உணர்வை விருத்தி செய்ய முடியும். இதற்கு விருப்ப எண்ணமும் செயற்பாடும் அவசியம். இங்கு விருப்ப எண்ணம் என நாம் குறிப்பிடுவது மற்றவர்களுக்குத் தன் இதயத்தைத் திறந்து காட்டி அவர்கள் தமக்கு வேண்டியவர்கள் என்பதைஅவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்ற ஆவலாகும். செயற்பாடு என்பது தமது விருப்ப எண்ணத்தின்படி செயற்படுவதாகும். உதாரணமாகப் பெற்றார் தமக்கு விருப்பமான அமைப்பொன்றுக்கு சிறிது பணத்தை அல்லது உழைப்பை அல்லது

இரண்டையும் ஒழுங்கு முறையாக தானம் செய்து வரலாம் அல்லது பாதையில் தாம் சந்திக்கும் ஆட்களுக்கு உளப்பூர்வமாக ஸலாம் அல்லது வந்தனம் கூறலாம். பெற்றார் எவ்வளவு செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல; ஏதாவது செய்வதே முக்கியம். "நாம் இவ்வுலகில் பெரிய காரியங்களைச் செய்துவிட முடியாது. ஆனால், சிறிய காரியங்களைப் பெருமளவு அன்போடு செய்யலாம்" என அன்னை திரேஸா விளக்கினார்.

பிள்ளைகளில் அன்பை வளர்ப்பதற்குப் பெற்றார் கையாளக்கூடிய சில வழிமுறைகள் பின்வருமாறு:

- இரக்க உணர்வு நன்றியுணர்வை விருத்தி செய்யும். வாழ்க்கையில் கிடைத்துள்ள பெரிய அருட்கொடைகளைப் பற்றிச் சிந்திப்பதன் மூலம் அன்பை விருத்தி செய்யலாம்.
- பகிர்ந்து கொள்வதும் அக்கறை காட்டுவதுமே அன்பின் அடையாளங்களாகும். எனவே, உங்கள் உணவு, பொருட்கள், நூல்கள், பிரயாணங்கள், மகிழ்ச்சி, அறிவு, சிந்தனை முதலியவற்றை உங்கள் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
- உங்கள் குடும்பத்தவர் மீது நீங்கள் அன்பு கொண்டுள்ளதாக அவர்களிடம் கூறுங்கள். (குறிப்பாகச் சில நாட்களுக்குப் பிரிந்து போகப்போகும் வேளைகளில்)

அன்பு என்பது பகிர்ந்து கொள்வதாகும்

ஒரு பிள்ளை மற்றவர்கள் மீதான அன்பையும் அக்கறையையும் தன் உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டும். தான் தனக்கென விரும்புபவற்றையே மற்றவர்களுக்கும் விரும்ப வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"உங்களுக்கென நீங்கள் விரும்புவதை உங்கள் சகோதரனுக்கும் விரும்பாத வரை நீங்கள் உண்மை விசுவாசியாக மாட்டீர்கள்"** (அல் புகாரி)

அன்பு என்பது...

எமது ஒளிமயமான நம்பிக்கைகளையும் இருள் நிறைந்த பயங்களையும் பலத்த சிரிப்புக்களையும் மென்மையான கண்ணீரையும் இனிய கனவுகளையும் கசப்பான துன்பங்களையும் உயர்வுகளையும் தாழ்வுகளையும் பகிர்ந்து கொள்வதாகும்.

எவ்வளவுக்கு நாம் பகிர்ந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கு நாம் அக்கறையும் பரிவும் உள்ளவர்களாவோம்.

எமது பிரச்சினைகளை மறப்பதற்குச் சிறந்த வழி மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதே.

நீங்கள் யாருடன் சேர்ந்து சிரித்தீர்கள் என்பதை மறந்து விடக்கூடும். ஆனால், யாருடன் சேர்ந்து அழுதீர்கள் என்பதை மறக்கவே மாட்டீர்கள்.

பாசத்தை நடைமுறையில் காட்டுவது அவசியம். பொருட்களை வாங்கிக் கொடுப்பது நல்லது தான். எனினும், அது உண்மையான பாசத்துக்கு நிகராகாது.

எவ்வளவு அன்பு போதுமானது? தமது பிள்ளைகளின் மீது பாசத்தைப் பொழிவதன் மூலம் பெற்றார் அன்பு என்னும் வங்கியில் பெருமளவு வைப்புச் செய்யலாம். அளவுக்கதிகமாக வைப்புச் செய்வதைப் பற்றிப் பயன் பெறுவோர் கவலைப்படப் போவதில்லை.

John Gray *எழுதிய* Truly Mars and Venus *என்ற நூலில் வரும் ஒரு சம்பவம்:*

எனக்குத் தெரிந்த, உடலாரோக்கியம் மோசமாகிக் கொண்டிருந்த பெண்ணொருவர் தனது ஒரே மகனுடன் மூன்று வருடங்களாகப் பேச்சு வார்த்தை அற்றவராக இருந்தார். மகனின் மனைவி பற்றி அவனோடு ஏற்பட்ட ஒரு முரண்பாடே இதற்குக் காரணம். அவன் முதலில் பேசாதவரை தான் பேசுவதில்லை என அவர் பிடிவாதமாக நின்றார். அவர் முதலில் நேசக்கரம் நீட்டினால் நல்லதே என நான் ஆலோசனை கூறினேன். 'அவன் மன்னிப்புக் கேட்காதவரை நான் பேச மாட்டேன்' என்றார் அப்பெண். தனது ஒரே மகனுடன் பேசாமலேயே செத்துவிட அவர் தயாராக இருந்தார். எனினும், மென்மையாக ஊக்கப்படுத்திய பின்னர் தனது மகனுடன் முதலில் போனில் பேச அவர் முன்வந்தார். தாயார் பேசியதற்கு மகன் நன்றி கூறியதோடு தானாகவே தன் தவறுக்கு மன்னிப்பும் கேட்டான். அதைக் கேட்டு அப்பெண் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். யாராவது ஒருவர் முன்சென்று நேசக்கரம் நீட்டினால் அது அனைவருக்கும் வெற்றியாக அமைந்துவிடும்.

வெறுப்பு என்பது அமிலம் போன்றது. அது தான் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தைச் சேதப்படுத்துவது மட்டுமன்றி, எதன் மீது ஊற்றப்படுகிறதோ அதனையும் சிதைத்து அழித்து விடும்.

பெற்றார் எவ்வளவு அதிகமாக அன்பை வழங்குகிறார்களோ அந்தளவுக்கு அன்பு அவர்களுக்கும் கிடைக்கும். அன்பு செலுத்துபவராக இருப்பது எங்கள் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பண்பாகும். ஆனால், அன்பைப் பெறுவது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. பெற்றார் தம் பிள்ளைகளிடம் பிரதியுபகாரம் எதிர்பார்க்க முடியாது. அன்பே அன்புக்குரிய வெகுமதியாகும். தம் பெற்றார் தம் மீது எவ்வளவு அன்பு செலுத்துகிறார்கள் என்பதைப் பிள்ளைகளால் சரிவரப் புரிந்து கொள்ள முடியாது. அவர்களும் பெற்றார்களாக மாறிய பின்னரே அது முழுமையாகப் புரியும்.

தம் பிள்ளைகளுடன் முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பெற்றாரே முதலில் நேசக்கரம் நீட்ட வேண்டும். ஒரு வாக்குவாதம் அல்லது தப்பெண்ணம் காரணமாக ஏற்படும் மனக் கசப்பினை பற்றிப்பிடித்துக் கொள்ளும் பலர், அடுத்தவர் தனக்கு நேசக்கரம் நீட்டும் வரை பிடிவாதமாக இருந்து விடுகின்றனர். ஒரு தவறை மன்னிப்பதற்கு அல்லது ஒரு நட்பையோ குடும்ப உறவையோ மீள உயிர்ப்பிப்பதற்கு இதுதான் ஒரே வழி என்று அவர்கள் நினைக்கின்றனர்.

மனிதர்கள் தங்கள் கோப தாபங்களைப் பற்றிப் பிடித்துக் கொள்வதனால் அவர்களுடைய உள்ளங்களில் அற்ப விடயங்கள் கூடப் பெரிய விடயங்களாக உருவெடுத்து விடுகின்றன. தங்கள் சந்தோசத்தை விடத் தங்கள் அந்தஸ்தே முக்கியம் என அவர்கள் கருதுகின்றனர். தான் சரியென்று வாதிப்பதை விடத் தன் சந்தோசமே மேல் என்பதை அமைதியை விரும்பும் மக்கள் அறிவார்கள். ஒவ்வொருவரும் தம் கோபத்தைக் கைவிட்டு மற்றவர்களுக்கு நேசக்கரம் நீட்ட வேண்டும். மற்றவரைத் தானே சரியென நினைக்க அனுமதிப்பதனால் நம் நிலைப்பாடு தவறானது என்று ஆகிவிடாது. கோபத்தைக் கைவிட்டு மன அமைதியை அனுபவிக்கும் போது மனிதர்கள் மன ஆறுதல் பெறுகின்றனர். அதேவேளை முரண்பட்டவர்களும் தம் வாதாட்டங்களைக் குறைத்து இவர்களோடு சமரசம் காண விளைவார்கள்.

> *நன்மையும் தீமையும் சமமாகி விடாது. (ஆதலால்) எது மிக அழகானதோ அதைக்கொண்டு (தீமையைத்) தடுத்துக் கொள்வீராக! அப்போது எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர் உம்முடைய உற்ற சினேகிதரைப் போல் ஆகிவிடுவார். (அல்குர்ஆன் 41: 34)*

- பிள்ளைகளுக்காக நேரத்தையும் முயற்சியையும் பணத்தையும் அர்ப்பணிப்பது பயன் மிக்கது. பெற்றார் எந்தளவுக்குப் பிள்ளைகள் மீது அன்பு காட்டுகிறார்களோ அந்தளவுக்கு அவர்கள் அர்ப்பணம் செய்வார்கள். எந்தளவுக்கு அவர்கள் பிள்ளைகளுக்காக அர்ப்பணஞ் செய்கின்றார்களோ அந்தளவுக்கு அவர்கள் பிள்ளைகளின் மீது அன்பு செலுத்துவார்கள்.
- 'இன்று யாருக்கு நான் எனது விசேட அன்பைக் காட்டுவது?' என ஒவ்வொரு நாட் காலையிலும் பெற்றார் சிந்தித்துத் தீர்மானிக்கலாம். குடும்பத்துக்குப் புறம்பானவர்களையும் இதில் சேர்ந்துக்கொள்ள முடியும். தினமும் அன்பு காட்டுவது பகையுணர்வைத் தூரமாக்கிவிடும்.

ஒரு கணிப்பீடு: உங்கள் பிள்ளைகள் தம் மீது அன்பு செலுத்தப்படுவதை உணரச் செய்வதற்கான வழிகள்

Samon (1999) என்பவர் 1 முதல் 16 வயது வரையான பிள்ளைகளை உடைய தாய், தந்தையர் 55 பேரிடம் அவர்கள் தம் பிள்ளைகளுடன் எவ்வாறு இணைப்பைப் பேணிக் கொள்கின்றனர் என்பது பற்றி வினவினார். ஏதேனுமொன்றைச் செய்வதில் தம் பிள்ளைகளுடன் இணைந்து செயலாற்றுவதே அவர்கள் ஒவ்வொருவரினதும் விடையாக இருந்தது. ஏதேனுமொன்றைப் பார்த்து ரசித்தல், கூட்டாக வாசித்தல், கூட்டாகச் சமைத்தல், ஏதேனுமொன்றைப் பற்றி உரையாடுதல், ஏதேனுமொன்றைப் பகிர்ந்து கொள்ளல், ஒன்றாக இருத்தல் போன்றன இதில் அடங்கும்.

உங்கள் பிள்ளைகளுடன் கூட்டாகத் தொழிற்பாடுகளில் ஈடுபடுங்கள். அன்பை அதிகரிக்கச் செய்வதற்காகப் பெற்றார் தம் பிள்ளைகளுடன் இணைந்து ஈடுபடக்கூடிய செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- ஒன்றாக நடந்து செல்லல்.
- மேகங்களில் உருவங்களைக் கண்டு பிடித்தல்/ இரவு வானை ஆராய்தல்.
- வீட்டு வீடியோக்களைப் பார்த்து ரசித்தல்/ வானொலி நிகழ்ச்சியொன்றுக்குச் செவிமடுத்தல்/ கூட்டாகக் கவிதை அல்லது நாடகம் வாசித்தல்.
- உங்கள் முடியை வாரிவிடப் பிள்ளைகளுக்கு இடமளித்தல்.
- விளையாட்டுக்காக மல்யுத்தத்தில் ஈடுபடுதல்.
- ஒரு நோட் புத்தகத்தில் போட்டோக்களையும் ஸ்டிக்கர்களையும் ஒட்டுதல்.

- பலசரக்குக் கடைக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று வாங்க வேண்டிய பொருட்களைத் தீர்மானிப்பதில் அவர்களையும் பங்கு கொள்ளச்செய்தல்.
- Scrabble, checkers போன்ற விளையாட்டுக்களில் கூட்டாக ஈடுபடல். (இவை மலிவானவை, சுற்றாடலுக்குத் தீங்கற்றவை- அதாவது, மின்சாரத்தையோ பற்றரிகளையோ பயன்படுத்தாதவை, மனதுக்குப் புத்துணர்வு தருபவை, வீடியோத் திரையைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட கண்களுக்கு இதமானவை)
- பிள்ளைகளோடு சேர்ந்து வீட்டு வேலை செய்தல்.
- அல்குர்ஆன், கஸீதாக்கள், நல்ல பாடல்கள் போன்றவற்றைக் கூட்டாக ஓதுதல்/ பாடுதல்.
- ஆடைகளைக் கூட்டாகச் சலவை செய்தல்/ உலரப் போடுதல்/ மடித்து வைத்தல்.
- கூட்டாகப் படம் வரைதலும் நிறம் தீட்டுதலும்.
- அரவணைத்தல், கன்னங்களிலும் நெற்றியிலும் முத்தமிடுதல், கைகளைப் பிடித்துக்கொள்ளல்.
- ஒன்றாக மியூஸியம்களுக்குச் செல்லுதல்.
- கூட்டாகத் தொழுதல்/ பிரார்த்தனை செய்தல்.
- தாம் தொழில் புரியும் இடத்திற்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்.
- பிள்ளைகளோடு சேர்ந்து வினோத உடைகளை அணிந்து மகிழுதல்.
- கடற்கரை, பூங்கா, விளையாட்டுப் போட்டிகள், பந்தாட்டங்கள், கண்காட்சிகள், கூட்டங்கள் முதலியவற்றுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்.
- வீட்டில் தங்கியிருந்து பிள்ளைகள் கூறுவனவற்றுக்கு முழுமையாகச் செவிமடுத்தல். (அவ்வேளையில் தொலைபேசி அழைப்புக்களுக்குப் பதிலளிப்பதோ, வந்துள்ள கடிதங்களை வாசிப்பதோ கூடாது)
- மூத்த பெற்றார்கள், உறவினர்கள் போன்றோரைப் போய்ச் சந்தித்தல்.
- கூட்டாக வீட்டையும் தோட்டத்தையும் துப்பரவு செய்தல்.
- குடும்ப போட்டோ அல்பம்களைக் கூட்டாகப் பார்த்து ரசித்தல்.
- கூட்டாகத் தோட்டத்தில் காய்கறி பறித்தல்.
- ஒன்றாகத் தோட்ட வேலை செய்தல்.

பெற்றார் வெறுப்பைக் கற்பிக்க வேண்டுமா? ஆம்; சில வேளைகளில்!

எமது பிரதான கவனம் அன்பைப் பற்றியதாக இருந்தாலும் நாம் வெறுப்பைப் பற்றி மறந்து விடக் கூடாது. ஏனெனில், இரண்டும் அவசியமே. மனிதர்கள் இறைவன் மீதும், இறைத்தூதர்கள், பெற்றோர்கள், உறவினர்கள், சக மனிதர்கள் ஆகியோர் மீதும் விலங்குகள், தாவரங்கள், சுற்றாடல், அண்ட சராசரம் என்பவற்றின் மீதும் அன்பைச் செலுத்தும் அதேவேளையில் ஷைத்தானையும், தீமைகள், ஊழல், பொய் கூறல், ஏமாற்றுதல், திருடுதல், பாலியல் துஷ்பிரயோகம், போதைப் பொருட்கள், மது அருந்துதல், புகைத்தல், பொறாமை, இனத் துவேஷம், மதவெறி பாகுபாடு, கோபம் முதலியவற்றையும் வெறுத்தல் அவசியம். தீய செயல்கள் வெறுக்கப்பட வேண்டுமேயன்றி அதனைச் செய்பவர்கள் வெறுக்கப்படக் கூடாது. தீமையை வெறுங்கள்; தீமை செய்வோரை வெறுக்காதீர்கள்.

> நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதியாக இருக்கின்றான்; எனவே, அவனை நீங்களும் விரோதியாகவே எடுத்துக்கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 35: 6)

தொழிற்பாடு

தொழிற்பாடு 54: அன்றாட அன்பு செலுத்தும் சடங்குகள்

பதினேழு வயது இளைஞர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்:

“எனது தாயார் நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் தினமும் எனது அறையை வந்து சோதித்துப் பார்ப்பதை நான் இப்போதும் விரும்புகிறேன்.”

பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுடனான உங்களது அன்றாட அன்பு செலுத்தும் சடங்குகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். ஒவ்வொரு நாளும் துஆ (பிரார்த்தனை) செய்வதை மறந்து விடாதீர்கள்.

அத்தியாயம் 17

நேர்மையும் நம்பகத்தன்மையும்

- அறிமுகம் 421
- பெற்றார் தம் பிள்ளைகளை நம்ப வேண்டும். ஆனால், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் 422
- பொதுக் கோட்பாடுகள் 423
- நடத்தைப் பண்பினை மொத்த உலகக் கண்ணோட்டத்தோடு ஒன்றிணைத்தல் 426
- பிள்ளைகள் பொய் பேசக் காரணம்: பொய் கூறலுக்குப் பரிகாரம் என்ன? 428
- பொய் கூறலுக்குப் பரிகாரமாக நபிகளார் காட்டிய வழி 431
- தொழிற்பாடுகள் 55- 56 432

அறிமுகம்

தமது பிள்ளை முதன் முறையாகப் பொய் பேசுவதைக் காணும் பெற்றோர் கவலையுறுகின்றனர். எனினும், பெரும்பாலான பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் இது, கடந்து சென்றுவிடக்கூடிய, பிள்ளை விருத்தியுடன் தொடர்புடைய பொதுவான ஒரு கட்டமாகும். அதில் பாதி இயல்பான எதிர்வினையாகவும் (உதாரணமாக, தண்டனைக்குப் பயந்து பொய் பேசுதல்) மறுபாதி கற்றுக்கொள்ளப்பட்ட நடத்தையாகவும் இருக்கின்றது. பெரும்பாலான பிள்ளைகளின் விடயத்தில் பொய் கூறுவது பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. எனினும், நேர்மையைக் கற்பிப்பதற்குப் பெற்றார் முயற்சிப்பது அவசியம். தற்காப்பு உட்பட பல காரணிகளுக்குப் பிள்ளை காட்டும் விளைவு காட்டலாகவே பொய் கூறுதல் இடம்பெறுகிறது.

பிள்ளைகள் உண்மை நிலையைத் தமது கனவுகளோடும் கற்பனைகளோடும் கலந்து குழப்பிக் கொள்கின்றனர். எனினும், தமது பிள்ளைகளின் கற்பனைகளைப் பெற்றார் குறை மதிப்பீடு செய்யாமலிருப்பது முக்கியம். ஒருவர் எப்படியான நபராக வளரப் போகிறார் அல்லது இருக்கிறார் என்பதைத் தீர்மானிக்கும் காரணிகளில் பகற்கனவுகளும் கற்பனைகளும் முக்கியமானவை. ஒருவர் தன்னை இன்னொருவராகவோ இன்னோரிடத்தில் இருப்பவராகவோ கற்பனை செய்து கொள்வது மன இறுக்கத்தைக் குறைப்பதற்கும் மனதின் விடுதலைக்கும் உதவுகின்றது. எனவே, இதற்காகப் பிள்ளைகளை அளவு மீறிக் கண்டிக்காதீர்கள். தம் பெற்றாரின் முன்னிலையில் தம் நடத்தையை நியாயப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் பிள்ளைகளுக்கு ஏற்படுமாயின் கண்டனத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவர்கள் நேர்மையைக் கைவிடுவார்கள்.

குறைஷிக் காபிர்கள் நபி (ஸல்) அவர்களை அன்னாரது சிறு பராயம் முதலே 'உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர்' (அல் ஸாதிக், அல் அமீன்) என அழைத்தனர்.

நன்னெறியுடைய தலைவர் ஒருவரின் நடத்தைப் பண்புகளில் நேர்மையும் நம்பகத் தன்மையும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்விரு பண்புகளும் தம் பிள்ளைகளில் அமையும் வரை பெற்றார் அவற்றைப் போதித்து நடைமுறைப் படுத்தி வாழ்ந்து காட்ட வேண்டும். தம் பெற்றார் மீது மற்றவர்கள் நம்பிக்கை வைத்து, தம் பணமும் சொத்துக்களும் இரகசியங்களும் அவர்களிடம் பாதுகாப் பாக இருக்கும் என்று நினைக்கும் நிலை காணப்பட்டால் அதைக்காணும் பிள்ளை களும் நம்பிக்கைக்குரியவர்களாக மாறுவார்கள். நம்பகத் தன்மையுள்ள பெற்றோர்கள் தாம் சேர்ந்துள்ள சமூகத்தினரால் தலைவர்களாகத் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்பு அதிகம். ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்றாக நம்பகத்தன்மையை நபி (ஸல்) அவர்கள் போதித்தார்கள்.

> ***எவரொருவரின் நாவை (பேச்சை) இட்டும், கைகளை (செயல்களை) இட்டும் மக்கள் பாதுகாப்புணர்வுடன் இருக்கிறார்களோ அவரே சிறந்த முஸ்லிம். எவர் இறைவனால் தடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும் விலகி ஓடுகிறாரோ அவரே ஆசீர்வதிக்கப்பட்ட விசுவாசி ஆவார். (அல் புகாரி)***

பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் பரஸ்பரம் நம்பிக்கை இருப்பது அவசியம். அதனை நிலைநிறுத்திப் பேணி விருத்தி செய்யுங்கள். சில பிள்ளைகளை நம்புவது கஷ்டமானதாக இருப்பினும் அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பது போன்றே பெற்றார் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் உண்மை பேசாத நிலையிலும் அது பற்றிப் பெற்றார் அவர்கள் மீது குற்றம் சுமத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், ஏதும் கருத்து மோதல்கள் ஏற்படும் போது "உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லையா?" எனப் பிள்ளை கேட்கக்கூடும்.

பிள்ளையின் நேர்மையீனம் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு வசதியானதும் வினைத்திறன் உடையதுமான முறையொன்றைக் கண்டு பிடிக்கும் வரை அதன் மீது தாம் நம்பிக்கை வைத்திருப்பதாகப் பெற்றார் காட்டிக்கொள்ள வேண்டும். அதிகாரத்துடன் பொறுப்புக்கள் வருகின்றன என்பதையும் பொறுப்புக்களுடன் நம்பகத்தன்மை வருகின்றது என்பதையும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். ஏனையவர்கள் தம் பெற்றோரின் நம்பிக்கையை எவ்வாறு பெற்றிருக்கிறார்கள், எவ்வாறான நடத்தை நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது என்பவற்றை அறிந்து கொள்வதன் மூலமே பிள்ளைகள் பெற்றாருடன் நம்பகத்தன்மையை நிலைநிறுத்திக் கொள்ள முடிகிறது.

நம்பிக்கையைப் பெறுவதானது தொடர்ச்சியான செயன்முறையொன்றாகும். பிள்ளைகள் தம் பெற்றாருடன் வெற்றிகரமாக உறவுகளை அனுபவித்து வந்தாலும் சில வேளைகளில் அவ்வுறவு சிதறிப் போகலாம். இதன் விளைவாகத் தம் பிள்ளைகள் மீது மீண்டும் நம்பிக்கை வைப்பதற்குப் பெற்றார் தயங்கக் கூடும். எனினும், இந்நிலையில் அவர்கள் மன உறுதியோடும் பொறுமையோடும் இருப்பது அவசியம்.

பெற்றார் தம் பிள்ளைகளை நம்ப வேண்டும். ஆனால், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்

பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அவர்கள் மீது பெற்றார் நம்பிக்கை வைக்கலாம். எனினும், அவர்கள் உண்மையில் எங்கே இருக்கிறார்கள் என்பதைப் பெற்றார் கண்டறிந்து கொள்வது அவசியம். தம் பிள்ளைகள் எங்கே, யாருடன் இருக்கிறார்கள் என்பதைப் பெற்றார் அறிந்திருக்க வேண்டும். அவநம்பிக்கையோ தணிக்கை செய்யும் உணர்வோ இன்றி இதனைச் செயற்படுத்தலாம். காலையில் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விடப்படும் பிள்ளைகள் நாள் முழுவதும் அங்கே தான் இருப்பார்கள் எனப் பெற்றார் எடுத்துக் கொள்ளக் கூடாது. சில பிள்ளைகள் தமது

ஆசிரியரின் அல்லது பெற்றாரின் அனுமதியின்றிப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே ஓடி விடுகிறார்கள். காலத்துக்குக் காலம் பெற்றார் இது பற்றிக் கண்டறிந்து கொள்ள வேண்டும். (பள்ளிக்கூட அறிக்கைகள், நண்பர்கள், அயலவர்கள் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதனைச் செய்யலாம்) பகல் வேளையில் இவ்வாறு தப்பிச் சென்று குற்றச் செயல்களில் ஈடுபட்டுப் பிரச்சினைகளில் மாட்டிக் கொண்ட பிள்ளைகள் நிறையப்பேர் உள்ளனர். பிள்ளைகள் போதைப் பொருட்களைக் கையாளவில்லை அல்லது யாரிடமும் பணத்தையும் பெறுமதியான பொருட்களையும் திருடுவதில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர்களது அறைகளையும் ஆடைகளையும் காலத்துக்குக் காலம் சோதித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் என்ன செய்கிறீர்கள், அதை ஏன் செய்கிறீர்கள் என்பது பற்றிப் பிள்ளைகளுக்கு விளக்கமளியுங்கள்.

மனிதர்களைக் கையாளும் போது அவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படியே இருப்பது போன்றும் அவர்களிடம் எப்படியெல்லாம் ஆவதற்கு ஆற்றல் இருக்கின்றதோ அவ்வாறு ஆவதற்கு நீங்கள் உதவுவது போன்றும் நடத்துங்கள்.
(Johann Wolfgang von Goethe)

மனிதர்கள் மீது நம்பிக்கை வையுங்கள்; அவர்கள் உங்களிடம் உண்மையாக நடப்பார்கள். அவர்களை உன்னதமான முறையில் நடத்துங்கள்; அவர்கள் தாம் உன்னதமானவர்கள் என்பதைக் காட்டுவார்கள். (Ralph Waldo Emerson)

பொதுக் கோட்பாடுகள்

பிள்ளைகள் தொடர்பான விடயங்களைக் கையாளும் போது கவனிக்கப்பட வேண்டிய சில முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

குடும்ப விழுமியங்கள்

பொய் கூறுவது அறநெறிக்கு முரணானது, ஒழுக்கக் கேடானது. பொய் கூறுதல் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள். வார்த்தைகளாலும் செயலாலும் அவர்களுக்கு நேர்மையையும் நம்பகத் தன்மையையும் கற்றுக் கொடுங்கள். நேர்மையீனம் பற்றிய தமது எண்ணங்களைப் பெற்றார் பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும். அவர்களுடைய வயதுக்குப் பொருத்தமான முறையில் நேர்மையீனத்துக்கான உதாரணங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் குடும்ப விழுமியங்களின் பட்டியலில் உண்மை/ வாய்மை பற்றிய கொள்கையொன்றைச் சேர்த்துக்கொள்ளுங்கள். பிள்ளைகளால் கிரகித்துக்கொண்டு பின்பற்றக்கூடிய வகையில் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் வரைவிலக்கணம் வழங்குங்கள்.

முன்மாதிரியாக நடந்து கொள்ளல்

உங்கள் பிள்ளைகளுக்கு நேர்மை பற்றிப் போதனை செய்யுங்கள். நீங்கள் எங்கே போய் வருகிறீர்கள் என்பது பற்றிப் பொய் கூறாதீர்கள். விற்பனை நிலையங்களிலிருந்தோ உங்கள் வேலைத் தளத்திலிருந்தோ எதனையும் திருடாதீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணைவரையோ, வரிசெலுத்துவது தொடர்பாக அரசாங்கத்தையோ ஏமாற்றாதீர்கள்.

'எனது நடத்தை மூலம் நான் பிள்ளைக்கு வழங்கும் செய்தி யாது?' எனப் பெற்றோர் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண்டும். நேர்மையீனமாக நடந்து கொள்வதை- குறிப்பாக தம் பிள்ளைகளின் முன்னிலையில்- தவிர்த்துக் கொள்வது அவசியம். தம் பிள்ளைகளின் வயதுகள் பற்றிப் பொய் கூறக்கூடாது. உதாரணமாக, ரெயில்வே நிலையத்திலோ பஸ்ஸிலோ டிக்கட் வாங்கும் போது அரை டிக்கட் வாங்குவதற்காக பிள்ளையின் வயதைக் குறைத்துக் கூறக்கூடாது. அதேபோன்று தமக்காகப் பொய் கூறுமாறு பிள்ளைகளைப் பணிக்கவும் கூடாது. உதாரணமாக, "அடுத்த வீட்டு மாமி தேடினால் நான் நித்திரை என்று கூறிவிடு" எனப் பிள்ளையைப் பொய் சொல்ல வைக்கக் கூடாது. தாம் செய்வதாகக் கூறிய விடயங்களைக் குறித்த நேரத்தில் செய்து முடிப்பதற்குரிய எல்லா முயற்சிகளையும் பெற்றோர் மேற்கொள்ள வேண்டும். அத்தோடு, தாம் செய்வதாகக் கூறிய அனைத்தையும் நிறைவேற்றவும் வேண்டும். உங்களால் நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளை மாத்திரமே வழங்க வேண்டும். தமது கட்டுப்பாட்டை மீறி நிலைமைகள் மாற்றமடைந்து ஒரு காரியத்தைச் செய்ய முடியாது போனால் போலியான சாக்குப் போக்குகள் கூறாமல் அல்லது யார் மீதும் அதற்கான பலியைப் போடாமல் உண்மையான காரணத்தைப் பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். ஜாலங்கள் காட்டி "நான் வாக்குறுதியளித்தேன் தான். ஆனால், எனது வாக்குறுதிகளை முறிக்க மாட்டேன் என வாக்குறுதியளிக்கவில்லையே" என்று கூறிய அரசியல் வாதியைப் போல் பிள்ளைகளை ஏமாற்ற முயற்சிக்கக் கூடாது.

தீங்கற்ற பொய்களுக்கும் தீங்கான பொய்களுக்கும் கற்பனையான பொய்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கற்பித்தல்

தீங்கான, நோவினை செய்யக் கூடிய பொய்க்கும் பணிவு காரணமாகக் கூறப்படும் பொய்க்கும் இடையிலான வேறுபாட்டைப் பிள்ளைகளுக்கு விளக்குவது அவசியம். நாம் பொய் சொல்வதில்லை என மனிதர்கள் அடித்துக் கூறினாலும் பொய் சொல்லாதவர் எவருமில்லை. அயலவர்கள் பார்வைக்கு அசிங்கமாக தோன்றுகிறார்கள் என்று கூறுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அல்லது 'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?' என உங்களிடம் கேட்கும் தபால்காரனிடம் உங்கள் உண்மையான பிரச்சினைகளைக் கொட்டுவது பொருத்தமான செயலாகுமா? சில வேளைகளில் நாம் மரியாதைக்காகப் பொய் சொல்கிறோம். பொய் கூறல், மிகைப்படுத்திக் கூறல், கதை கூறல், உவமை கூறல், ஏமாற்றுதல் என்பவற்றை வேறுபடுத்திக் கண்டறியப் பிள்ளைகளைப் பயிற்றுவியுங்கள்.

கற்பனைக் கனவுகளுக்கும் உண்மை நிலைக்குமுள்ள வேறுபாட்டைப் பற்றிக் கற்றுக் கொடுங்கள்

உண்மையானவற்றுக்கும் உண்மை அல்லாதவற்றுக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காணுங்கள். நித்திரை கொண்டு எழுந்த பின்னர் பிள்ளைகள் கண்ட கனவுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். திரைப் படங்களில் உள்ளவை பற்றியும் உண்மை நிலை பற்றியும் அவர்களிடம் கலந்துரை யாடுங்கள். அதே போன்று புனை கதைகளில் உள்ளவை பற்றியும் உண்மையாக நடப்பவை பற்றியும் கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.

நேர்மைக்கு வெகுமதி கொடுங்கள்

பிள்ளைகள் உண்மை கூறுவதற்குச் சிரமப்படுவார்களாயின் அவர்கள் உண்மை கூறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களைப் போற்றுவது அவசியமாகிறது. தம்மீது கவனம் செலுத்தப் படுவதைப் பிள்ளைகள் விரும்புவார்கள். எனவே, நேர்மை காரணமாக அவர்கள் பிரச்சினைகளுக்கு உட்பட நேர்ந்தாலும் நேர்மை ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்கள் நேர்மையாக இருக்க எடுக்கும் முயற்சிகளைப் பெற்றார் பாராட்டுதல் வேண்டும். முடியுமான சந்தர்ப்பங்களில் நேர்மையான நடத்தைக்குரிய சிறந்த உதாரணங்களை எடுத்துக்காட்டுவதோடு நேர்மையீனம் பற்றிய தமது மனக் கசப்பையும் வெளிக்காட்டுதல் வேண்டும்.

நீங்கள் பிரச்சினைக்கு ஆளாக முன்னர் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள்

உடனடியாகக் கிடைக்கும் உளத்திருப்தியை நாடுவது பாரதூரமான பிரச்சினையாக மாறியிருக்கிறது. இதன் விளைவாக குறைந்தளவு சேமிப்பதும் தேவையற்ற பொருட் களைக் கொள்வனவு செய்வதும் உடல் நிறை மிகையாக அதிகரிப்பதும் தீராப் பிரச்சினைகளாக மாறியுள்ளன. குறிப்பாக, தங்கள் ஆவல்களைத் தள்ளிப் போடுவதும் தங்கள் தவறான செயல்களைத் தவறென ஒப்புக் கொள்வதும் பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் சிரமமானவையாக ஆகியுள்ளன. தங்கள் தவறுகளைப் பிள்ளைகள் ஒப்புக் கொள்வதற்கும் தங்கள் ஆவல்களைத் திருப்தி செய்துகொள்வதைத் தள்ளிப் போடுவதற்கும் அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். திருடுவதன் தீய விளைவுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்பாகவே திருடுவதற்கான வாய்ப்புக்களைப் பிள்ளைகள் எதிர்கொள்ளக் கூடாது. தகாத செயல்களைச் செய்வதற்கு முன்பே அவ்வாறான நடத்தை ஏன் தகாதது என்பதைப் பற்றிக் கலந்துரையாட வேண்டும்.

வயதில் மூத்த பிள்ளைகள்

தொடர்ந்து பொய் கூறுகின்ற அல்லது நேர்மையீனமாக நடந்து கொள்கின்ற, வயதில் மூத்த பிள்ளைகள் இருந்தால் அவர்கள் தொடர்பாகப் பெற்றார் தகுதி வாய்ந்த நிபுணர்களின் உதவியை நாட வேண்டும். வளர்ந்தோர் பலர் தாம் பதின்ம வயதினராய் இருந்த போதும் தம் அந்தரங்கத்தைப் பேணுவதற்காகப் பொய் பேசியிருப்பார்கள். இளைஞர்களும் யுவதிகளும் தமது இரகசியங்களைப் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளப் பெரும்பாலும் விரும்புவதில்லை.

இது புரிந்து கொள்ளப்படக் கூடியதே. அவர்கள் விரைவான மாற்றங்களுக் குள்ளாகி முதிர்பருவத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ளத் தடுமாறும் காலகட்டமே அது. இக்காலத்தில் இரகசியங்களைப் பேணிக்கொள்வது பொதுவானதாக இருக்கின்றது. பிள்ளைகளின் அந்தரங்கம் மதிக்கப்பட வேண்டும். அதேவேளை பதின்ம வயதினர் தம் பெற்றோரின் எதிர்பார்ப்புக்களையும் மதிக்க வேண்டும். பொய் கூறுவதன் விளைவுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். நேர்மையின்றி நடந்து கொள்வதன் விளைவுகளை பதின்ம வயதினர் புரிந்து கொள்வது அவசியம். உங்கள் பதின்ம வயதுப் பிள்ளைகள் அடிக்கடி பொய் பேசுகின்ற நண்பர்களுடன் பழகினால் அவர்களைப் பிரித்து விடுவதும் அத்தகைய நட்புக்கு ஊக்கம் வழங்காதிருப்பதும் நன்று.

உறவுகளில் நம்பகத்தன்மையைப் பேணுவதன் அவசியம் பற்றிப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துதல் வேண்டும். குறிப்பாகத் தம்மைப் பற்றி அவர்களுக்கு நம்பிக்கை இருத்தல் அவசியம். எனவே, ஏமாற்றுதலும் மிகைப்படுத்தலும் சம்பந்தப்படுகின்ற நிலைமைகளுக்கு அவர்கள் உள்ளாகக் கூடாது (உதாரணமாக, சூதாட்டம், ஏமாற்று விளையாட்டுக்கள், பல்மட்ட சந்தைப்படுத்தல், நிர்ப்பந்திக்கப்பட்ட விற்பனை முயற்சிகள்). குறித்த ஒரு நிலைமைக்கு அவர்கள் பொறுப்பாக இல்லாத நிலையில் பொய் சொல்ல நேர்வதையிட்டு அவர்களைக் குற்றஞ் சொல்லக் கூடாது. நேர்மையீனங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் அந்தரங்கமான முறையில் நடத்தப்பட வேண்டும். அப்போது தான் பிள்ளைகள் பயமின்றி உண்மை பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

நடத்தைப் பண்பினை மொத்த உலகக் கண்ணோட்டத்தோடு ஒன்றிணைத்தல்

விசுவாசங் கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள்? நீங்கள் செய்யாததை(ப் பிறருக்குச் செய்ய)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிகப் பெரிதாகிவிட்டது. (அல் குர்ஆன் 61: 2- 3)

நேர்மை, நம்பகத்தன்மை, வாக்குறுதி பேணல்
என்பவற்றின் வரைவிலக்கணங்களை
உங்கள் வீட்டில் காட்சிக்கு வையுங்கள்

அரசியல், சமயம், வரலாறு, விஞ்ஞானம், இலக்கியம், மொழி, கணிதம் போன்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடும் போது நேர்மை, நம்பகத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிக்கொள்ளுங்கள். உதாரணமாக, வங்கிக் காசாளர் ஒருவர் தான் செய்த திருட்டைத் தனது கணிதத் திறமையினால் மூடி மறைத்துக் கொள்வாராயின் அவரது ஒழுக்க நெறி பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? விஞ்ஞானிகள் தமது கண்டு பிடிப்புக்களை மனித குலத்தின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற அறநெறிக் கடமைப்பாடு அவர்களுக்கிருக்கிறதா? வரலாற்றில் பெயர் குறிக்கப்படும் மனிதர்கள் அனைவரும் ஒழுக்க நெறி பேணியவர்களா? நாடகங்களில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் நேர்மையான உளப்போக்கைக் கொண்டனவா?

பொய் கூறுவது புறக்கணிக்கப்பட முடியாத பாரதூரமான பிரச்சினையாகும். அதனை உடனடியாக ஆனால், புத்திசாலித்தனமாகக் கையாள வேண்டும். பொய் கூறுவது மிகத் தீங்கானது. நபி (ஸல்) அவர்கள் அதனைப் பின்வருமாறு கூறினார்கள்:

நபி (ஸல்) அவர்களிடம் "விசுவாசியொருவர் பொய் கூறக்கூடுமா?" என வினவப்பட்ட போது "விசுவாசி ஒருபோதும் பொய் கூற மாட்டார்" என அன்னார் பதிலளித்தார்கள். (கன்ஸ் அல் உம்மால்)

இன்றைய உலகில் நேர்மையான உண்மைகள் பெரும்பாலும் பிள்ளைகளாலேயே பேசப்படுகின்றன. (Oliver Wendell Holmes, 1994)

ஒன்பது வயதுப் பிள்ளையொன்று கூறியது:
அம்மாவின் கண்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது பொய் சொல்வது மிகக் கஷ்டமாக இருக்கும்.

குழந்தைகள் நேர்மையானவர்களாகவே பிறக்கின்ற போதிலும், தமது பெற்றாரினதும் உடன் பிறந்தவர்களினதும் நடத்தையிலிருந்து உணர்ந்தோ உணராமலோ பொய் சொல்லக் கற்றுக் கொள்கின்றனர். பொய் சொல்வது பெறப்பட்ட நடத்தையேயன்றி தலைமுறை உரிமையாக வந்ததொன்றல்ல. காலப்போக்கில் பிள்ளைகள் பொய் சொல்லக் கற்றுக் கொள்வதோடு அது அவர்களது நடத்தைப் பண்பின் ஒரு பகுதியாகவும் மாறி விடுகிறது. பதின்மவயதினர் தம் தவறுகளை நியாயப் படுத்துவதற்காகவும் தமது இரகசியங்களை மறைத்துக் கொள்வதற்காகவும் சங்கட நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் பொய் பேசுகின்றனர். பிள்ளைகள் எந்தளவுக்குக் கூடுதலாகப் பொய் பேசுகின்றார்களோ, அந்தளவுக்கு அது அவர்களது நடத்தைப் பண்புடன் ஒன்றித்துப் போய் விடுகின்றது. நேர்மையானது நேர்மையையே விளைவிப்பது போல் பொய் பொய்யையே விளைவிக்கும். இதனை நபி (ஸல்) அவர்களின் பின்வரும் கூற்று விளக்குகிறது:

உண்மை நல்ல தன்மையை விளைவிக்கும். நல்ல தன்மையின் விளைவு சொர்க்கமே. ஒரு மனிதன், தான் உண்மையாளன் எனப் பதியப்படும் வரை உண்மை பேசுகிறான்.

பொய்யானது ஒழுக்கக் கேட்டை உருவாக்கும். ஒழுக்கக் கேட்டின் விளைவு நரக நெருப்பே. ஒரு மனிதன் தான் பொய்யன் எனப் பதியப்படும் வரை பொய் பேசுகிறான்.

(அல் புகாரி, முஸ்லிம்)

பிள்ளைகள் பொய் பேசக் காரணம்: பொய் கூறலுக்குப் பரிகாரம் என்ன?

பிள்ளைகள் பொய் பேசுவதற்குச் சாத்தியமாக இருக்கக் கூடிய காரணங்கள் சில பின்வருமாறு:

- அவர்கள் தண்டனையைத் தவிர்த்துக்கொள்ள விரும்புதல்.
- அடுத்தவர்களுக்குச் சொந்தமான பொருட்கள் மீது அவர்கள் உரிமை கொண்டாடுதல்.
- தாம் புறக்கணிக்கப்பட்டு கைவிடப் பட்டுள்ளதை உணர்தல்.
- தம் ஒத்த வயதினர் மத்தியில் தம்மை உயர்த்திக் காட்டுவதற்காகப் பெருமையடித்தல்.
- தாம் சாதிக்காத விடயங்களுக்காக அங்கீகாரம் பெற விரும்புதல்.
- பெற்றார் பொய் பேசுவதன் காரணமாகத் தாமும் பொய் பேசலாம் என நினைத்தல்.

பிள்ளைகள் பொய் பேசுவதற்கான பிரதான காரணம் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்வதே. கிடைக்கப் போகும் மகிழ்ச்சியோ நோவினையோ தான் ஒரு செயலுக்குரிய முக்கிய ஊக்கியாகச் செயற்படுகிறது. பிள்ளைகள் தம் தவறுகளை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கோர வேண்டுமெனப் பெற்றார் அறிவுறுத்த வேண்டும். கடையொன்றிலிருந்து பொருளொன்றைப் பணம் செலுத்தாது தம் பிள்ளை எடுத்து வந்தால் அதனைத் திருப்பிக் கொண்டுபோய் ஒப்படைத்து நேரடியாக கடைக் காரரிடம் மன்னிப்புக் கோரச் செய்ய வேண்டும்.

பிள்ளைகள் பொய் சொல்லும் கோலமொன்றுக்குப் பழகிப் போனால் அதற்கான மூல காரணத்தைப் பெற்றார் ஆராய வேண்டும். சில வேளைகளில் பிள்ளைகளால் தொடர்ந்து ஈடு கொடுக்க முடியாத, அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்ற பணிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்த நெருக்கடியைத் தாங்க முடியாத நிலையில் அவர்கள் பொய் சொல்லக்கூடும். இன்னும் சில பிள்ளைகள் சலிப்புணர்வு காரணமாக அல்லது தம் மீது போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை என்ற உணர்வினால் பொய் சொல்லக்கூடும். பொய்களையும் கட்டுக்கதைகளையும் கூறுவதன் மூலம் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்ட பிள்ளைகள் அவ்வாறு கவனத்தைப் பெறுவதற்காகத் தொடர்ந்தும் பொய் கூறுவதில் ஈடுபடலாம்.

பிள்ளைகளின் நடத்தையை - அவர்கள் அதிகமாகப் பொய் சொல்லக்கூடிய நேரம், இடம் என்பவை உட்பட - உன்னிப்பாகக் கவனித்து வருவது அவசியமாகும். பாரதூரமான பிரச்சினை எதுவும் இருக்கிறதா என்பதைக் கண்டறிய இது உதவும். ஒருவேளை, அவர்கள் விளையாடும் நேரத்தில் மாத்திரம் பொய் சொல்வதாக இருக்கலாம்; அல்லது ஏதும் குறும்புகள் செய்யும் போது மாத்திரம் பொய் சொல்லலாம்; அல்லது நண்பர்கள் மத்தியில் இருந்து கொண்டு அனைவர் கவனத்தையும் ஈர்க்க முயற்சிக்கையில் பொய் கூறலாம். மேற்சொன்ன ஒவ்வொரு நிலைமையும் வித்தியாசமான முறையில் அணுகப்பட வேண்டும்.

பொய் கூறலானது முதலாவது பொய்யிலேயே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். பொய் கூறியவாறே வளரும் ஒருவரின் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகவே அமையும். நேர்மையீனம் முற்றாகவே நிராகரிக்கப்பட வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துவது அவசியம். ஒரு பிள்ளை தவறொன்றைச் செய்து விட்டு அது பற்றிய

உண்மையைக் கூறிவிட்டால் அதனைத் தண்டிப்பது கூடாது. எனினும், அவர்கள் செய்ததற்கான விளைவை அவர்கள் அனுபவித்தே ஆக வேண்டும். உதாரணமாக, ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையை அடித்து நோவித்து விட்டால் அடித்தவரை மற்றவரின் பெற்றாரிடம் அழைத்துச் சென்று மன்னிப்புக் கோரச் செய்ய வேண்டும். பள்ளிக்கூடப் பரீட்சையில் ஏமாற்று வேலை செய்து அகப்பட்டுக் கொண்டால் குறித்த பாடத்தில் அவர்கள் சித்தி பெறாமல் தடுக்க வேண்டும். எவ்வாறாயினும், அவர்கள் உண்மையைக் கூறிவிட்டால் நேரடியான தண்டனை எதுவும் வழங்கப்படக் கூடாது. பெற்றார் ஆத்திரப்பட்டு ஆவேசமாக நடந்து கொள்ளாமலிருப்பது, அவர்கள் உண்மை பேசியதற்கு வெகுமதியாக அமையலாம். பெற்றார் பகுத்தறிவு ரீதியாக எதிர்வினை காட்டுவதோடு அப்பிரச்சினையை விவேகமான முறையில் கையாளுதலும் வேண்டும்.

இது இரண்டு விதமான நோக்கங்களைச் சாதிக்கும். முதலாவது, பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்பாடலுக்குரிய வழியை இது அகலத் திறந்து விடுகிறது. தண்டனைக்குப் பயந்தே அவர்கள் பொதுவாகப் பொய் பேசுவதனால் உண்மை கூறுதல் அவர்களுக்கு வெகுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் சிறந்த உறவொன்று (உரையாடல், நம்பிக்கை, பாசம் என்பவற்றுடன்) உருவாவதனால், தம் பெற்றோரின் நம்பிக்கையை முறிப்பதற்குப் பிள்ளைகள் விரும்ப மாட்டார்கள். அவர்கள் இரு சாராருக்கும் இடையிலுள்ள பாச உணர்வும் இயல்பாகவே பிள்ளையின் நடத்தையைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்த வல்லது. உண்மை சொன்னால் தண்டனை இல்லை என்ற விதி பிள்ளைகளின் நடத்தையைச் சீர்குலைத்து விடும் எனப் பெற்றார் அஞ்ச வேண்டியதில்லை. இரு சாராருக்கும் இடையிலான பரஸ்பர அன்பு போதியளவு கட்டுப்பாட்டை வழங்கக்கூடியது.

- பொய் கூறலின் கயிறு குறுகியது.
- பொய் கூறுவதனால் உங்கள் மீதான மற்றவர்களின் நம்பிக்கை குறையும். தாம் வஞ்சனை செய்யப்பட்டு ஏமாற்றப் பட்டதாக அவர்கள் நினைப்பர்.
- நீங்கள் உண்மையைக் கூறினால், மனதில் குழப்ப நிலை தோன்றாது; நீங்கள் கூறியதை நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியமுமில்லை; அதனை நீங்கள் மறக்கப் போவதுமில்லை.
- நேர்மையானது உங்களை வெற்றியை நோக்கி உந்தித் தள்ளும் ஓர் ஆற்றலை உருவாக்குகிறது. நீங்கள் பொய் கூறினால் உங்களைத் தோல்வியை நோக்கித் தள்ளுவதற்கு வலிமையான சக்திகள் பல செயற்படும்.

பொய் கூறுவதற்குப் பரிகாரமாகப் பின்வரும் விடயங்களை முஹம்மத் ஜாத் அல்-மவ்ழா என்பவர் அறபியில் எழுதிய *'அல் குலுக் அல் காமில்'* என்ற நூல் தருகிறது.

- அதிகமாகப் பேசுவதன் காரணமாக ஒரு பிள்ளை பொய் கூறுமானால் மௌனமாக இருக்குமாறு அதனைப் பணியுங்கள்.
- கடூரமான தண்டனைக்குப் பயந்து ஒரு பிள்ளை பொய் கூறுமானால் அதன் மீது இரக்கமும் பரிவும் காட்டுங்கள்.
- பேராசை காரணமாக அல்லது ஒரு பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக அது பொய் கூறுமானால், அவன் விரும்புவதைப் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக இருக்காதீர்கள்.

- மற்றவர்களை ஏமாற்றுவதற்காகவோ அல்லது முட்டாள் ஆக்குவதற்காகவோ பொய் கூறுமானால் அதனைத் தண்டியுங்கள்.
- கெட்ட நண்பர்களின் செல்வாக்குக் காரணமாகப் பிள்ளை பொய் கூறுமானால் அதற்கு நல்ல நண்பர்களைத் தேடிக் கொடுங்கள்.
- பொய் கூறுவதன் மூலம் பிள்ளை அடைய எதிர்பார்க்கும் விடயத்திற்கு எதிர் மாறானதை அது எதிர் கொள்ளச் செய்யுங்கள்.

பொய் கூறுவது அவமானத்திற்குரியது என்பதையும் அது நல்ல தன்மை, நேர்மை, நியாயம், மரியாதை என்பவற்றுக்கு முரணானது என்பதையும் பதின்மவயதினருக்கு அறிவுறுத்துங்கள். இப்ன் கல்தூன் எமக்கு பின்வருமாறு அறிவுரை கூறுகின்றார்.

பொய் கூறலின் அறநெறிக்கு விரோதமான அம்சங்களைப் பற்றியும் அது எவ்வாறு சரியான மனித நடத்தையுடன் முரண்படுகிறது என்பதையும் பொய் கூறுபவனுக்குப் போதித்தல் வேண்டும். மனிதர்கள் இயல்பாகவே நன்னெறியையும் உண்மையையும் நியாயத்தையும் நேர்மையையும் விரும்புபவர்கள்.

> கல்வியில் வற்புறுத்தலைப் பயன்படுத்துவது கற்பவருக்கு, குறிப்பாக பிள்ளைகளுக்கு தீங்கை ஏற்படுத்தும். அடிமைத் தனமும் ஒடுக்குதலும் உள்ள கடுமையான சூழலொன்றில் வளர்க்கப்படும் பிள்ளை உள நெருக்கடிக்கும் மனத் தளர்ச்சிக்கும் ஆட்படும். இது சோம்பலுக்கும், பொய் கூறுதல், குழப்படி செய்தல் போன்றவற்றுக்கும் வழி வகுக்கும். (அல் முகத்திமா, பகுதி 32)

பிள்ளைகளின் வாழ்க்கையை இரக்கத்தினாலும் நல்ல பராமரிப்பினாலும் நிரப்புங்கள். ஒருவரின் நேர்மையின்மையை மற்றவர்கள் கண்டறிந்து கொண்டால் அவர் மீதுள்ள நம்பிக்கையை இழப்பதோடு அவர் மீதான விருப்பமும் அற்றுப் போகும். சந்தர்ப்பம் எதுவாக இருப்பினும் உண்மை பேச வேண்டும் எனப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தும் பெற்றார், தாமும் உண்மையே பேச வேண்டும். அப்போதுதான் அவர்கள் நேர்மையானவர்கள், முழுமையானவர்கள் என மதிக்கப்படுவார்கள். உண்மையும் நேர்மையும் கொண்ட பிரஜைகள் அடுத்த மனிதர்களின் மதிப்பையும் ஒத்துழைப்பையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வார்கள்.



நன்னோக்குடைய கதைகளைப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள்

பக்தாதைச் சேர்ந்த ஷெய்க் அப்த் அல் காதிர் அல்–ஜெய்லானி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: "எப்போதும் உண்மையே பேசுவேன் என நான் எனது தாய்க்கு வாக்குறுதியளித்தேன். நான் அறிவைத் தேடுவதற்காக மக்காவை விட்டு பக்தாத் நோக்கிப் புறப்பட்டேன். பிரயாணத்திற்காக எனது தாயார் எனக்கு 40 தீனார்களைத் தந்தார். ஹம்தான் என்ற இடத்தில் திருடர் கோஷ்டியொன்று எமது பிரயாணக் குழுவைத் தாக்கியது. 'உம்மிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?' எனத் திருடன் ஒருவன் என்னிடம் கேட்டான். '40 தீனார்கள்' என நான் கூறினேன். நான் பகிடி பண்ணுவதாக நினைத்து அவன் என்னை விட்டுச் சென்றுவிட்டான். பின்னர் இன்னொரு திருடன் வந்து கேட்ட போதும் என்னிடம் 40 தீனார்கள் இருப்பதாகக் கூறினேன். அவன் என்னைத் தம் தலைவனிடம் அழைத்துச் சென்றான். 'நீ ஏன் உண்மை பேசுகிறாய்?' என அத்திருடர் தலைவன் கேட்டான். 'எப்போதும் உண்மையே பேசுவதாக நான் என் தாயாருக்கு வாக்குறுதி கொடுத்தேன். என்னுடை வாக்குறுதியை முறிக்க நான் விரும்பவில்லை' என நான் பதிலளித்தேன். அத்தலைவன் அச்சமுற்றுப் பதைபதைத்து 'நீர் உம்முடைய தாயாருக்கு கொடுத்த வாக்குறுதியை மீறப் பயப்படுகிறீர். ஆனால், நான் என் இறைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறுவதற்கு அஞ்சவில்லையே!' என அலறினான். எமது உடைமைகளையெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுமாறு அவன் தனது கோஷ்டியினருக்குக் கட்டளையிட்டான். பின்னர், 'நான் உமது கைகளைப் பிடித்து அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரப் போகிறேன்' என அவன் சொன்னான். அவனைப் பின்பற்றியவர்களோ 'திருடுவதில் நீர் எமக்குத் தலைவராக இருந்தீர்; இன்று, பாவமன்னிப்புக் கோருவதில் எமக்குத் தலைவராகிவிட்டீர்' எனக் கூறினர். உண்மை கூறியதன் அருட்கொடை காரணமாக அனைவரும் பாவமன்னிப்புக் கோரினர்."

பெற்றோர்களே! இக்கதையின் ஆதாரபூர்வத் தன்மை எப்படியிருப்பினும், இது நன்னோக்குள்ள கதையொன்றாகும். நேர்மையானது உங்களைப் பாதுகாப்பதோடு மற்றவர்களையும் பாதுகாக்கும் என்பதே இது பிள்ளைகளுக்கு வழங்கும் படிப்பினையாகும்.

பொய் கூறலுக்குப் பரிகாரமாக நபிகளார் காட்டிய வழி

1. ஓர் இளைஞன் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நான் தொழுவதில்லை; தகாத பாலுறவில் ஈடுபடுகிறேன்; பொய் கூறுகிறேன். இவற்றில் எதனை விட்டு நான் பாவமன்னிப்புத் தேடிக்கொள்ள வேண்டும்?" எனக் கேட்டான். "பொய் கூறுவதையிட்டு" என்று நபியவர்கள் கூறினார்கள். அவன் அங்கிருந்து சென்ற பின்னர் தகாத பாலுறவில் ஈடுபட முயற்சித்தான். உடனே அவன், "நான் பாவம் செய்தேனா என நபியவர்கள் கேட்பார்கள். நான் 'இல்லை' என்று சொன்னால் பொய் சொன்னவன் ஆவேன். நான் 'ஆம்' என்று சொன்னால் என் பாவத்துக்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும்" எனத் தனக்குள்ளேயே கூறிக்கொண்டான். (திப்ரிஸி, 1991)

பெரும் பாவங்களுள் ஒன்றான பொய் சொல்வதை நீங்கள் தவிர்த்துக்கொண்டால் ஏனைய பாவங்களையும் தீமைகளையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

2. மிக அற்பமான விடயங்களில் கூட உண்மை பேசுவது மிக முக்கியமானதாக உள்ளது. நபி (ஸல்) அவர்கள் வழங்கிய அறிவுரையொன்று பின்வருமாறு:

யாரேனுமொருவர் தனது கையினுள் மூடிவைத்திருக்கும் இனிப்புப் பண்டத்தை வந்து எடுத்துக் கொள்ளுமாறு ஒரு பிள்ளையிடம் கூறி, அப்பிள்ளை அருகே வந்த பின் எதனையும் கொடுக்காமல் விட்டால் அதுவும் ஒரு பொய்யாகவே கருதப்படும். (அஹ்மத்)

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

இரட்டை முகங்களைக் கொண்டுள்ளவரே மனிதர்களில் மிகவும் மோசமானவர். அவர் சிலருக்கு ஒரு முகத்தையும் மற்றவர்களுக்கு இன்னொரு முகத்தையும் காட்டுவார். (அல் புகாரி)

அன்புக்கும் துணிச்சலுக்கும் மேலதிகமாக, நேர்மையும் நம்பகத்தன்மையும் தம் பெற்றாருக்கு மனத்திருப்தியைக் கொண்டுவரும் பிள்ளைகளுக்குரிய நடத்தைப் பண்புகளாக உள்ளன.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 55: அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்

பொய் சொல்லக்கூடிய சாத்தியம் இருந்தும் நீங்கள் உண்மையே பேசிய நிலைமைகள் பற்றி உங்கள் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பொய் கூறுவதன் விளைவுகள் யாவை? அதற்கான பரிகாரம் யாது? அதிலிருந்து பெறக்கூடிய படிப்பினைகள் எவை? இவ்விடயத்தில் பிள்ளைகளும் தமது உண்மையான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தொழிற்பாடு- 56: நீங்கள் உங்கள் பிள்ளைகளில் தவிர்த்துக் கொள்ள விரும்பும் ஒரு தீமை

உங்கள் பிள்ளைகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என நீங்கள் விரும்பும் மிகத் தீங்கான தனியொரு தீமை யாது?

பொய் சொல்வதன் காரணமாகத் தங்கள் வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்ட மனிதர்களின் உண்மைக் கதைகளைப் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். அவர்கள் நேர்மையாக மட்டும் இருந்திருந்தால் அவர்களது வாழ்க்கை வெற்றியானதாகவும் சந்தோஷமானதாகவும் இருந்திருக்கும்.

நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்துக்கு முன்பே குறைஷிக் காபிர்கள் அன்னாரை 'உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர்' என அழைத்ததைப் பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு நினைவூட்டி அது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

அத்தியாயம் 18

பொறுப்புணர்வைக் கற்றுக் கொடுத்தல்

- அறிமுகம் 434
- அத்திவாரமிடுதல்: மனப்பாங்குகளும் உலகக் கண்ணோட்டமும் 436
- விருத்திக்குரிய பல்வேறு கட்டங்களில் காணப்படும் வாய்ப்புக்கள் 438
- விருத்தி செய்ய வேண்டிய கோட்பாடுகள் 440
- நடைமுறை ரீதியான ஆலோசனைகள் 443
- சிறப்புச் சலுகைகளைப் பொறுப்புணர்வுடன் தொடர்பு படுத்தல்: சில உதாரணங்கள் 446
- தொழிற்பாடுகள் 57- 58 449

அறிமுகம்

செயற்படுமாறு எவரும் சொல்லாமல், நெருக்காமல் அல்லது அச்சுறுத்தாமல் தானாகவே விவேகமான முறையில் செயற்படுவதே பொறுப்புணர்வு எனப்படும். அது தீர்மானம் எடுப்பதற்கான ஆற்றலையும் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்குப் பொறுப்புக் கூறுவதையும் குறிக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> முஸ்லிம்களின் விவகாரங்களில் அக்கறை காட்டாத ஒருவர் அவர்களில் ஒருவராக மாட்டார். (அஹ்மத்)

> தன் அயலவர் பட்டினியாய் இருக்கும் போது அதை அறிந்த நிலையில் வயிறு நிறைய உண்டுவிட்டு நித்திரை கொள்பவர் ஒரு விசுவாசி அல்லர். (அல் தபராணி)

பிள்ளைகளுக்குப் பொறுப்புணர்வைக் கற்றுக் கொடுப்பது அத்தியாவசியம். யாரும் கூறாமலே அல்லது நினைவூட்டாமலே தமது பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றுவதற்குப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். பொறுப்புணர்வுள்ள பிள்ளைகள் ஒரு பணியைச் செய்யுமாறு வேண்டப்படாமலே அல்லது அப்பணி அவர்களுக்கு ஒப்படைக்கப்படாமலே அதனைச் செய்ய முன்வர வேண்டும். அதேவேளை பொறுப்புணர்வுள்ள பிள்ளைகளிடம் ஒரு வேலையைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற உந்துதலும் காணப்படும். சுய கண்காணிப்பைக் கற்பிப்பது பிள்ளைகளுக்குப் பொறுப்புணர்வை ஊட்டுவதற்குரிய ஒரு வழியாகும். பொறுப்புணர்வுள்ள பிள்ளைகள் தமது செயல்களின் முக்கியத்துவத்தையும் அவற்றின் விளைவுகளையும் புரிந்து கொள்வர். ஒவ்வொரு நாளும் நித்திரை கொள்வதற்கு முன்னர் அன்று தாம் செய்த செயல்களுக்குத் தம் பொறுப்பை ஏற்றுக்கொள்வது பிள்ளைகள் கைக்கொள்ள வேண்டிய நல்லதொரு வழக்கமாகும். கண்காணிப்புக்கும் கணிப்பீட்டுக்குமான உள்ளார்ந்த திட்டமொன்றை அமைத்துக் கொள்வது நல்லது. பிள்ளைகளை விழிப்புணர்வுடன் இருக்கச் செய்வதற்காகவும் எப்போதும் நேர்வழியில் இருக்கச் செய்வதற்காகவும் அவர்களது இதயங்களில் அல்லாஹ்வைப் பற்றிய அன்பையும் அச்சத்தையும் பெற்றார் ஊட்ட வேண்டும். ஒருவர் எங்கிருந்தாலும் அவரோடு அல்லாஹ் இருக்கிறான் எனப் பிள்ளைகளிடம் கூறுவதானது அவர்களது பொறுப்புணர்வுக்கு வலுவூட்டும்.

பொறுப்புணர்வு என்பது வெறுமனே அன்றாடக் கடமைகளை நினைவில் வைத்து நிறைவேற்றுவதும் கீழ்ப்படிவாக இருப்பதும் மாத்திரமல்ல; சரியானதையும்

தவறானதையும் பற்றிக் கரிசனை காட்டுதல், ஒருவருடைய செயல்கள் எவ்வாறு அடுத்த மனிதர்களைப் பாதிக்கிறது என்பது பற்றி அக்கறை காட்டுதல், சட்டங்களும் விதிகளும் ஏன் முக்கியமானவை என்பதைப் புரிந்து கொள்ளுதல் என்பனவும் அதில் அடங்கும். பொறுப்புணர்வைக் கற்பிக்க வேண்டுமாயின் முதலில் பெற்றார் தாம் பொறுப்புணர் வுள்ளவர்களாக இருப்பது அவசியம்.

ஒரு சிறந்த உதாரணம்: ஒரு தந்தையும் மகனும் விற்பனை நிலையமொன்றுக்கு அது மூடப்போகும் தறுவாயில் அவசரமாகச் செல்கிறார்கள். வழியில் தன் குழந்தையைத் தள்ளுவண்டியில் வைத்துப் படிக்கட்டில் ஏற்றச் சிரமப்படும் ஒரு பெண்ணுக்கு உதவி செய்வதற்காக நிற்கின்றனர். தமக்குக் கிடைக்கக்கூடிய பொருளாதார அனுகூலமொன்று தவறிப் போகின்ற நிலைமையிலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக முன் செல்வது ஒரு நல்ல காரியம் என்பதைப் பிள்ளை அறிந்து கொள்கிறது.

தமது பிள்ளை பொறுப்பொன்றை ஏற்று நிறைவேற்றும் போது பெற்றோர் அதைக் கவனித்துப் பாராட்ட வேண்டும். விரும்பத்தக்க நடத்தைகளுக்கு வெகுமதியளிப்பதன் விளைவாக மேலும் விரும்பத்தக்க நடத்தைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பிள்ளைகள் பொறுப்புணர்வுள்ள நடத்தையைக் காட்டும் போது பலர் அதைக் கவனிக்காமல் விட்டு விடுகின்றனர்; அல்லது பிள்ளையென்றால் அப்படித்தானே இருக்க வேண்டும் என நினைத்து அதனைப் பொருட்படுத்துவதில்லை. இதிலும் மோசமானது என்னவெனில், பெரும்பாலான பெற்றோர் தம் பிள்ளைகள் பொறுப்பின்றி நடந்து கொள்ளும் போது மாத்திரமே தம் கருத்தை வெளியிடுகின்றனர். இதன் விளைவாக, "நான் நல்லது செய்தால் அதனை யாரும் நினைவில் வைப்பதில்லை. நான் தவறு செய்தால் அதனை யாரும் மறப்பதுமில்லை" எனப் பிள்ளை நினைக்கும். "நன்றி! நீங்கள் செய்தது பெரிய உதவி" என்று பெற்றோர் கூற வேண்டும். தமக்கு முக்கியமான, ஆனால் தங்கள் பிள்ளைகளுக்கு முக்கியமில்லாத அவர்களது நடத்தைகளை அங்கீகரிப்பதில் விசேட கவனம் செலுத்துதல் அவசியம். உதாரணமாக, "நீங்கள் உங்கள் புத்தகங்களைச் சாப்பாட்டு மேசையின் மீது வைக்காமல் அறையில் கொண்டு போய் வைத்தது நல்ல விடயம். ஏனெனில், நான் அம்மேசையில் இரவுணவு பரிமாற வேண்டியுள்ளது" என்று கூறுதல். அல்லது "உங்கள் சேர்ட்டைக் கழற்றி ஒழுங்காகக் கொளுக்கியில் தூக்கி வைத்ததை நான் போற்றுகிறேன்" என்று கூறுதல்.

பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதற்கு நல்ல தீர்மானங்களை எடுக்கத் தெரிந்திருப்பது அவசியம். தாம் செய்ய வேண்டியவற்றை எப்போதும் பெற்றோர் கூறக் கேட்டுச் செய்யும் பிள்ளைகள் நல்ல தெரிவுகளை மேற்கொள்ளப் பழகுவதில்லை. இதனால் அவர்கள் பொறுப்புணர்வுடன் நடக்கப் பயிற்சி பெறுவதும் அரிது. தெரிவு களைச் செய்யும் வாய்ப்பு பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும். ஏனெனில், வளர்ந்த பின் வாழ்க்கையில் ஒன்றன் பின் ஒன்றாகத் தெரிவுகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டில் செய்யப்பட வேண்டிய பணிகளைச் சும்மா ஒதுக்கிக் கொடுக்காமல் அப்பணிகளையெல்லாம் பட்டியல்படுத்தி, குடும்ப உறுப் பினர்களின் கூட்டமொன்றில் யார் எதைச் செய்வது என்பது பற்றிக் கலந்துரையாட வாய்ப்பளிக்க வேண்டும். அவர்கள் கூட்டாகக் கடமைகளை வகுத்து ஒவ்வொருவரும் செய்ய விரும்பும் பணிகளை அவரவர்க்கு ஒப்படைக்க வேண்டும். பின் எவரும் ஒரே காரியத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டிய நிலை ஏற்படாத வண்ணம் வேலைச் சுழற்சி முறையொன்றை அமைத்துக் கொள்ளலாம். பிள்ளைகளை இதில் சேர்த்துக் கொள்வதன் மூலம் தம் பெற்றார் தம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையும் தம் அபிப்பிராயங்களை மதிக்கிறார்கள் என்பதையும் பிள்ளைகள் உணர்ந்து கொள்வார்கள். இது அவர்களைப் பொறுப்புணர்வுள்ள பங்காளிகளாக மாற்ற உதவும். மேலும், இது அவர்களை ஓர் அணியின் பங்காளர்களாகச் செயற்படச் செய்வதோடு வீட்டுப்

பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதில் ஒருவர் மற்றவரில் தங்கியிருக்க வேண்டிய நிலையையும் ஏற்படுத்தும். தீர்மானம் எடுத்தல், கலந்தாலோசனை செய்தல் (ஷூரா), பொறுப்புணர்வு என்பவற்றைக் கற்பிப்பதற்கு ஏற்ற நடைமுறை சார்ந்த வழியாகவும் இது விளங்குகிறது.

அத்திவாரமிடுதல்: மனப்பாங்குகளும் உலகக் கண்ணோட்டமும்

நாம் பொறுப்புணர்வுள்ள பெற்றார்களாக இருப்பின் எமது பணியில் பாதி நிறைவேறிவிடும். மறுபாதி பிள்ளைகள் எம்மைப் பின்பற்றி நடப்பதற்கு உதவுவதாகும்.

பிள்ளைகள் தம்மை முதிர் பருவ வாழ்க்கைக்குத் தயார்படுத்திக் கொள்வதற்குப் போதியளவு அறிவும் நல்ல நடத்தைப் பண்புகளும் தேவை. பொறுப்புணர்வானது நல்ல நடத்தைப் பண்புகளின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். பெற்றோரினால் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் ஒரு மனப்பாங்கிலிருந்து அல்லது முன்னெடுகோள் தொகுதியிலிருந்தே பொறுப்புணர்வு உருவாகிறது. பெற்றாரின் கண்ணோட்டத்தின்படி பிள்ளைகள் என்போர் விளையாடிக் களிப்புற வேண்டியவர்கள் மாத்திரமே என்றிருப்பின், பிள்ளைகளும் அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைப்பார்கள்; வேலைகள் சுமத்தப்பட்டால் முணுமுணுப்பார்கள். பிள்ளைகள் எப்போதும் சுயநலத்தோடுதான் செயற்படுவார்கள் எனப் பெற்றோர் நம்பினால் அவ்வெதிர்பார்ப்பு பிள்ளைகளுக்குத் தெளிவாகப் புரிந்துவிடும். பிள்ளைகள் தொடர்பாகக் குறைந்த எதிர்பார்ப்புக்களை வைத்திருப்பது அவர்களை சுயநலமுள்ள, சச்சரவு செய்கின்ற, உதவி ஒத்தாசை புரியாத பிள்ளைகளாக வளர்த்தெடுப்பதற்கு நிச்சயமான வழியாகும். பெற்றார் தமது கண்ணோட்டத்தின்படி ஒவ்வொருவரும் வயது, ஆற்றல் வேறுபாடின்றி மற்றவர்களின் நலனுக்காகப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என நம்பினால் அது அவர்களது செயற்பாடுகள் மனப்பாங்குகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றில் பிரதிபலிக்கும். இப்படியானவர்களது பிள்ளைகள் பொறுப்புணர்வின் மதிப்பினை அறிந்து கொள்வர்.

வாழ்க்கையில் வெற்றி பெறக்கூடிய பிள்ளைகளை வளர்த்தெடுக்கவே நாம் விரும்புகிறோம். பொறுப்புணர்வைக் கற்றுக்கொள்ளும் பிள்ளைகள் மற்றவர்களில் குறைந்தளவே தங்கியிருப்பர். அத்தோடு முதிர் பருவத்தில் தம் செயல்களுக்குத் தாமே பொறுப்பேற்பர். பொறுப்புணர்வு என்பது கற்றுக் கொள்ளப்படும் திறனொன்றாகும். இந்த முக்கிய திறனைக் கற்றுக்கொள்ளத் தேவையான கருவிகள் பிள்ளைகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

பிள்ளை இளம் வயதிலேயே பொறுப்புணர்வைக் கற்றுக்கொள்ளத் தொடங்க வேண்டும். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையற்ற சூழ்நிலையொன்றில் வளரும் பிள்ளைக்குப் பொறுப்புணர்வைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு தவறிப் போய் விடுகிறது. தமது பிள்ளைகளுக்காகப் பாதுகாப்பு மிக்க புகலிடமொன்றை அமைத்துக் கொடுப்பதில் சில பெற்றோர் அளவு கடந்து சென்று விடுகின்றனர். தமது எதிர்மறையான செயல்களுக்கான விளைவுகளைப் பிள்ளைகள் அனுபவிப்பதற்கு அவர்கள் இடமளிப்பதில்லை:

இவர்கள் தமது பிள்ளைகளை அளவு மீறித் தங்கியிருப்பவர்களாகவும் பொறுப்புணர்வற்றவர்களாகவும் மாற்றி விடுகின்றனர். அவர்களது பிள்ளைகள் தாம் உரிமை மிக்கவர்கள் என்ற உணர்வோடு வளர்கின்றனர். 'மற்றோர் விடயத்தில் நான் பொறுப்புணர்வுடன் நடந்தால் மற்றவர்கள் என்னைப் பொறுப்புணர்வு கொண்டவன் என மதிப்பார்கள்' என்ற ஆரோக்கியமான மனப்பாங்குக்குப் பதிலாக 'மற்றவர்கள் எனக்குக் கடமைப்பட்டுள்ளனர்' என்ற பிரச்சினைக்குரிய மனப்பாங்கு அவர்களிடம் வளர்ந்துவிடும்.

பொறுப்புணர்வுடன் இருப்பது எப்படி என்பதை அறிந்து கொள்ளாத வரை பிள்ளைகள் பொறுப்புணர்வுடையவர்களாக இருக்க முடியாது. அது அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டால் மாத்திரமே அவர்கள் கற்றுக்கொள்ள முடியும். கற்பித்தலும் பயிற்றுவித்தலும் பெற்றார்-பிள்ளை உறவின் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. பொறுப்புணர்வு என்பது ஒரு மனப்பாங்கு மாத்திரமல்ல; அது ஒரு திறனாகவும் உள்ளது. அது பற்றிக் கற்றுக் கொடுக்கப்படாவிடில் பிள்ளைகள் தம் விளையாட்டுப் பொருட்களை ஒழுங்காகப் பேணி வைக்க மாட்டார்கள். வளர்ந்த பின்னர்கூட இரவல் பெற்ற பொருளொன்றை எப்படித் திருப்பிக் கொடுப்பது, உரிய நேரத்தில் எப்படி வேலைக்கு வருவது போன்றவற்றை அறிந்து கொள்ள மாட்டார்கள். பெற்றார் தம் பிள்ளைகளுக்குப் பொறுப்புணர்வைக் கற்றுக் கொடுப்பதற்குச் சிறந்த முறை, சிறிது சிறிதாக ஒவ்வொரு நாளும் அதனைச் செய்வதே.

சோம்பல் தன்மையான போக்குகளை ஊக்குவிக்க வேண்டாம். பதின்மவயதினருக்குப் பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம். வெறுமனே வாரத்திற்கு ஓரிரு முறை உணவுப் பாத்திரங்களைக் கழுவுவது அல்லது குப்பை கூளங்களை அகற்றுவது போன்ற வேலைகளை ஒப்படைக்காமல், கூடுதலான பொறுப்புக்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். பொறுப்பற்ற முறையில் வளர்ந்த பிள்ளைகள் பிற்காலத்தில் வாரத்திற்கு 40 மணித்தியாலம் தொழில் செய்யவோ (அல்லது முழு நேரப் படிப்போடு பகுதி நேரத் தொழில் செய்யவோ) தயார் நிலையில் இருக்க மாட்டார்கள். கடின உழைப்பும் பொறுப்புணர்வும் வெற்றிகரமான ஆக்கவளமுடைய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை.

இளமையிலேயே ஆரம்பியுங்கள்
நீங்கள் நிமிர்த்த முயலும் போது
இளம் கிளைகள் நிமிர்ந்து நேராகிவிடும்.
அவை வளர்ந்து வன்மை பெற்றுவிட்டாலோ
ஒருபோதும் நேராக நிமிர மாட்டா.
(அறபுக் கவிதை)

முன்பள்ளிப் பருவத்திலேயே ஆரம்பித்து விடுங்கள். குடும்பத்தில் புதுக் குழந்தையொன்றின் வருகை எதிர்பார்க்கப்படும் வேளையில் ஏனைய பிள்ளைகளிடம் புதிய குழந்தையை நாம் கூட்டாகப் பராமரித்து மகிழப் போகிறோம் எனக் கூறுங்கள். இந்த விசேட செயல்திட்டத்தில் தாமும் பொறுப்புமிக்க பங்காளர்களாக இருக்கப்போவதை எண்ணி அவர்கள் குதூகலிப்பார்கள். மூத்தவர்கள் தம் புதிய சகோதரருக்குத் தேவையான சுத்தமான அணையாடைகளைக் கொண்டுவருதல், குழந்தையின் அழுக்கடைந்த ஆடைகளை அதற்குரிய கூடையில் போடுதல், குழந்தை கீழே போடும் அதன் விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கொடுத்தல் போன்ற பணிகளில் உதவி செய்யலாம். கூட்டாக வேலை செய்வதும் சேவை செய்வதும் ஒரு சிறப்புச் சலுகையே என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். பணியில் பிள்ளைகளையும்

சேர்த்துக் கொள்ளல், பங்காளியாக்குதல், அது பற்றித் தொடர்பாடுதல் என்பவற்றின் மூலம் இதனைச் சாதிக்கலாம். தொழிற்பாடுகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடச் செய்வதே இதற்குரிய உத்தியாகும். தம் பெற்றார் செய்வதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காமல் பிள்ளைகளும் ஒத்தாசை வழங்குபவர்களாக இருத்தல் வேண்டும்.

விருத்திக்குரிய பல்வேறு கட்டங்களில் காணப்படும் வாய்ப்புக்கள்

கைக்குழந்தைகளும் நடை பயில்வோரும்

இந்தக் கட்டத்தில் பிள்ளைகள் தம் பெற்றோரின் வரம்பெல்லைகளைச் சோதித்தறிய முற்படுவார்கள். உதாரணமாக இரண்டு வயதுப் பிள்ளையொன்று தனது விளையாட்டுப்பொருளைத் திரும்பத் திரும்ப வீசுவதன் மூலம் கவனத்தை ஈர்க்கக் கற்றுக்கொள்கிறது. அதன் பிறகு கோபம் வரும் போது அதனை வீசக் கற்றுக் கொள்கிறது. அடுத்து, வளர்ந்தவர்களில் ஓர் எதிர்வினையைத் தூண்டிவிடக் கற்றுக் கொள்கிறது. இந்நிலையில் தமது எல்லையை வகிப்பதற்குப் பிள்ளைக்கு இடங்கொடாமல் பெற்றார் தம் பிள்ளைக்குரிய எல்லையை வகுத்துக்கொடுக்க வேண்டும். பிள்ளை ஒரு தடவை தன் விளையாட்டுப் பொருளை எறிந்தால் பெற்றார் அதனை எடுத்துக் கொடுக்கலாம். ஆனால், பிள்ளை வேண்டுமென்றே திரும்பத் திரும்ப அதனைக் கீழே எறியுமாயின் பெற்றார் அதனை அப்பால் எடுத்து வைத்து விட வேண்டும். எதிர்மறையான நடத்தை வெகுமதியைப் பெற்றுத் தராது என்பதைப் பிள்ளை அதன் மூலம் அறிந்து கொள்ளும்.

குழந்தைகள் வளர வளர, எத்தகைய செயல்கள் தம் பெற்றாரின் பொறுமையைப் பெருமளவில் சோதிக்கும் என்பதை அறிந்து கொள்கின்றன. தவறான நடத்தைக்கு அதற்கேற்ற விளைவுகள் கிடைக்கும் என்பதை இந்த வயதில் பிள்ளைகள் அறிந்து கொள்வது அவசியம். வேறு இடமொன்றில் இருக்கும் வேளையில் பிள்ளை தவறு செய்யும் போது "நீங்கள் அதை நிறுத்தாவிட்டால் வீட்டுக்கு அழைத்துப் போய் விடுவேன்" என்று பெற்றார் கூறினால், கட்டாயம் அதனை நிறைவேற்ற வேண்டும். பெற்றாரின் எச்சரிக்கை நிஜமானது என்பதைப் பிள்ளை உணர்ந்து கொள்ளச் செய்தால் பெற்றோரின் வார்த்தைகளுக்கு அதிக மதிப்பு இருக்கும். இரு பெற்றாரும் இதனைச் செய்வது மிக முக்கியம்.

பிள்ளைப் பருவத்தின் ஆரம்பம்

பிள்ளைப் பருவத்தின் ஆரம்ப வருடங்களில் பிள்ளைகள் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்வதற்குப் பயிலுதல் வேண்டும். அவர்கள் தாமே தம் முடியைச் சீவிக் கொள்வதும் பற்களைத் துலக்கிக் கொள்வதும் தம்மை நேர்த்தியாக வைத்துக்கொள்வதும் அவசியம். இளம் பிள்ளைகளுக்குச் சிறிய வீட்டு வேலைகளைக் கொடுப்பது அவர்களது சுய மதிப்பைக் கூட்டவும் வீட்டுக்குத் தாமும் பங்களிப்புச் செய்கிறோம் என்ற உணர்வை வளர்க்கவும் உதவும். வீட்டு வேலைகளில் ஈடுபட மறுக்கும் பிள்ளைகள் அதற்கான பிரதிபலன்களை அனுபவிக்க நேரிடும் என்பதை அறிதல் அவசியம். கொடுக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றி முடிக்கத் தவறினால் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுதல், TV பார்த்தல் போன்ற அவர்களால் விரும்பப்படும் செயற்பாடுகளைத் தடை செய்யலாம். வேலையை நிறைவேற்றி முடித்து விட்டால் பிள்ளைகள் தாம் விரும்பியதைச் செய்ய அனுமதிக்கப்படலாம்.

பள்ளிப் பருவம் முதல் முன் பதின்ம வயது வரை

பிள்ளைகள் வளர்கையில் அவர்களுடைய பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன. அவர்களுடைய சிறு செலவுகளுக்காக ஒரு சிறு தொகைப் பணத்தை ஒழுங்காக அவர்களுக்குக் கொடுத்து வருவது அவர்களது சுய மதிப்பை அதிகரிக்கச் செய்ய உதவும். பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் அதற்கு வெகுமதியளியுங்கள்: செல்லப் பிராணியை நன்றாகப் பராமரித்துக் கொண்டதற்காக கூடுதலான பண ஒதுக்கீடு, முன்னேற்ற அறிக்கை நன்றாக அமைந்தால் அதற்காக ஒரு விசேட சிற்றுண்டி உபசாரம், தம் பிள்ளைகள் வியக்கத்தக்க முறையில் பொறுப்புணர்வு காட்டியதற்காகப் பெற்றாரின் பாராட்டுக் குறிப்பொன்று எனப் பல வகைகளில் இவ்வெகுமதிகள் அமையலாம். பிள்ளை பாடங்களில் நல்ல முன்னேற்றம் காட்டாவிட்டால் அல்லது வீட்டிலே உதவி ஒத்தாசை புரியாவிட்டால் அதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிவது அவசியம். நன்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளை எதிர்கொள்ளும் போது பிள்ளைகள் படிப்பில் சிறப்பு ஆற்றல் காட்டுவார்கள். வீட்டிலோ பாடசாலையிலோ செயல் நிறைவேற்றத்துக்கான நியமங்கள் வழங்கப்படாத நிலையில் பிள்ளைகள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறி விடுவார்கள். தம் செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்ற உணர்வைப் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டுமாயின் போஷித்து வளர்க்கும் சூழலொன்று தேவை. பிள்ளைகள் வெற்றி பெறுவதைப் போன்றே தோல்வியடைவதற்கும் இடமளிக்கப்பட வேண்டும்.

முன் பதின்ம வயதுப் பிள்ளைகள் ஒத்த வயதினரின் அழுத்தங்களுக்கு மிகத் தீவிரமாக முகங்கொடுக்க நேரிடும். பொறுப்புணர்வைப் போதிக்கும் வீட்டுச் சூழலில் வளர்ந்த பிள்ளைகள் பிரச்சினைக்குரிய நடத்தைகளையும் ஒத்த வயதினரின் எதிர்மறையான செல்வாக்குகளையும் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளும். தொடர்பாடலுக்குரிய வழிகளைத் திறந்து வைப்பது, பிள்ளைகள் தமது மனப் பயங்களைப் பெற்றோரிடம் வெளிப்படுத்திக் கலந்துரையாட உதவும்.

பதின்ம வயதினர்

தவறான தெரிவுகளைச் செய்வதற்குரிய எண்ணற்ற வாய்ப்புக்கள் பதின்ம வயதினருக்குக் கிடைக்கும். தவறானதையும் சரியானதையும் பிரித்தறியும் ஆற்றலுள்ள, கெட்ட செயல்கள் கெட்ட விளைவுகளைத் தரும் என்பதைப் புரிந்து கொண்டுள்ள பதின்ம வயதுப் பிள்ளை சரியான தெரிவுகளையே செய்யும்.

உங்கள் பதின்ம வயதுப் பிள்ளைகளுக்குப் பொறுப்புணர்வை ஊட்டுவதற்குத் தொடர்ந்து முயலுங்கள். இப்போது அவர்கள் தன்னிறைவு அடைந்தவர்களாகவும் குடும்பத்திலிருந்து பிரிந்து தனியாகத் தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடியவர் களாகவும் இருப்பர். தங்கி வாழ்வதைப் போதித்த பெற்றாரின் பிள்ளைகள் தனித்தியங்க முடியாதவர்களாக இருப்பர். (இப்படியானவர்கள் வளர்ந்த பின்னரும் தம் பிழைப்புக்குக் குடும்பத்தினர் மீதே தங்கியிருப்பர்.) தமது எதிர்மறையான செயல்களின் பிரதிபலன்கள் பற்றி அறிந்து கொள்ளாத வளர்ந்தவர்கள் சிரமம் மிகுந்த நிலைமைகளுக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்வர். எனினும், தமது அவல நிலைக்கான பழியை வேறு யார் மீதாவது சுமத்த வழி தேடுவர். பொறுப்பு மிக்க வளர்ந்தவர்களைப் பொறுத்த வரையில் உறவுகள் எப்போதும் சவால் மிக்கனவாகவே இருக்கும்.

விருத்தி செய்ய வேண்டிய கோட்பாடுகள்

உழைப்பைக் கவனிப்புக்குரியதாக்குங்கள்

நடைபயிலும் வயதினரும் முன்பள்ளிப் பருவத்தினரும் பெற்றார் எதைச் சொன்னாலும் நம்பிக்கை கொள்வர். எனவே, உழைப்பானது களிப்புத் தரக்கூடியது என அவர்களுக்குப் போதிக்க முடியும். விளையாட்டுப் பொருட்களையும் பலசரக்குப் பொருட்களையும் ஒழுங்காக அடுக்கி வைப்பதை ஒரு விளையாட்டுப் போல் செய்விக்கலாம். பதின்மவயதுப் பிள்ளைகள் கடுமையான உழைப்பாளிகள். எனவே, வீட்டில் இவர்கள் பேருதவியாக அமைவார்கள். பெற்றார் தம் பிள்ளைகளின் முன்னிலையில் கூறுவன பற்றிக் கவனமாக இருத்தல் நல்லது. 'நான் உங்களோடு சேர்ந்து களித்திருக்க விருப்பம் தான். ஆனால், எனக்கு வேலை இருக்கிறது' என ஒரு தாய் கூறுவதைப் பிள்ளைகள் செவிமடுத்தால் வேலை என்பது விரும்பத்தகாதது, களிப்புத்தராதது என்ற எதிர்மறையான செய்திதான் அவர்களுக்குக் கிடைக்கும். அதற்குப் பதிலாக, "நான் வீட்டைக் கூட்டும் போது நீங்களும் சேர்ந்து களிப்படையலாம். ஒருவர் குப்பை கூடையைப் பிடித்துக் கொள்ளுங்கள். மற்றவர், நான் கூட்டிக் குவிப்பதைக் கூடைக்குள் தள்ளுங்கள்!" என்று கூறி அவர்களையும் வேலையில் ஈடுபடச் செய்யலாம்.

வீட்டு வேலையோ தோட்ட வேலையோ பிள்ளைகளின் அந்தஸ்தைக் குறைக்காது என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். ஏனெனில், எல்லா வகையான வேலைகளும் மரியாதைக்குரியனவே. வேலையானது ஒரு சிறப்புச் சலுகையேயன்றி ஓர் உரிமையல்ல என்பதைச் சொல்லி வைப்பதும் முக்கியம். உடல் உழைப்பின் அருட்கொடையைப் பெற்றார் தம் பிள்ளைகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். உடல் ஊனமுற்று அல்லது முள்ளந்தண்டுக்குச் சேதம் ஏற்பட்டு அவர்களால் இனிமேலும் ஓடியாடி வேலை செய்ய முடியாமற் போனால் எப்படியிருக்கும்? ஒவ்வொருவரும் தனக்குத் தரப்பட்டுள்ள ஆரோக்கியமான உடல் என்னும் அருட்கொடை பற்றிய உள்ளுணர்வைக் கொண்டிருக்க வேண்டும். எனவே, உடல் உழைப்பு, பொறுப்புணர்வு என்பன பற்றிய ஆர்வத்தைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கு ஊட்டுதல் அவசியம்.

வீட்டுப் பணிகளை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை மகிழ்ச்சிகரமானதாக்கப் பெற்றோர் முனைதல் வேண்டும். உற்சாகமூட்டும் பாடல்கள், சுவையான ஹாஸ்யங்கள், சுவாரஷ்யமான உரையாடல்கள் முதலியன இதற்காகப் பயன்படுத்தப்படலாம்.

மகிழ்ச்சியும் உற்சாகமும் நிரம்பிய சூழலானது வேலை, பொறுப்புக்கள் என்பன தொடர்பான பிள்ளைகளின் மனப்பாங்குகளை மேம்படுத்த உதவும். குடும்பத்தினர் வேலை செய்யும் நேரம், விளையாட்டு அல்லது பொழுதுபோக்குகளில் ஈடுபடும் நேரம் என்பன ஒழுங்குமுறைப் படுத்தப்படுதல் நல்லது. ஒருவர் வேலை செய்யவும் மற்றவர்கள் பொழுது போக்கில் ஈடுபடவும் நேரும் போது ஏற்படக்கூடிய மனக் கசப்புக்களை இது தவிர்க்கும். தோட்டத்தில் செய்யப்பட வேண்டிய வேலைகள் இருப்பின் அவற்றை அனைவரும் கூட்டாக இணைந்து செய்வது அதிக களிப்பைத் தரும்.

கூட்டாக வேலை செய்யுங்கள்

பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் போது 'நாம்' என்ற வார்த்தையைப் பெற்றோர் உபயோகிப்பது பயனுடையது. உதாரணமாக, "நாம் எமது அழுக்கான ஆடைகளைத் தரையில் அங்குமிங்கும் போடாமல் இப்படி அதற்குரிய கூடைக்குள் தான் எப்போதும் போடுவோம்" எனப் பெற்றார் கூறலாம். இவ்வாறு தம்மையும் சேர்த்துக் கொள்வதைப் பிள்ளைகள் விரும்புவர். 'நாம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் போது சரியான நடத்தை ஊக்குவிக்கப்படுகிறது. போதனை உரைகள் நிகழ்த்தும் அவசியம் ஏற்படாது. ஒரு பிள்ளையை நோக்கி, "உனது அறையைச் சுத்தம் செய்!" என்று கூறுவதற்குப் பதிலாக, "நாம் கூட்டாக உமது அறையைச் சுத்தம் செய்வோம்" எனப் பெற்றார் கூறலாம்.

பிள்ளைகள் தம் பெற்றாருடன் இணைந்து வேலை செய்யும் போது சிறப்பாகக் கற்றுக் கொள்வதோடு பொறுப்புணர்வுக்குரிய பழக்கங்களை விருத்தி செய்து கொள்வர். அவர் கள் தம் மீது அன்பு செலுத்தப்படுவதை உணர்வதோடு, வேலையையும் பொறுப்புக்களை யும் பெற்றாரின் பாசத்தோடு தொடர்புபடுத்த ஆரம்பிப்பர். இது பிற்காலத்தில் வேலை பற்றிய சாதக மனப்பான்மையை அவர்களில் ஏற்படுத்தும்.

வீட்டு முற்றத்தில் பின்பற்றக்கூடிய 'பத்தின் விதி'

பிள்ளைகள் வீட்டின் முற்றத்துக்கு விளையாடச் செல்லும் வேளைகளில் விளையாடத் தொடங்கு முன் அவர்கள் பத்துச் சிறு பணிகளை நிறைவேற்றுமாறு வேண்டப்படுவர். பத்துக் கற்களைப் பொறுக்கி அப்புறப்படுத்துவது, பத்துக் களைகளைப் பிடுங்குவது, உலர்ந்து போன பூக்கள் பத்தினைப் பறிப்பது, பத்துச் சருகுகளைக் குப்பைத் தொட்டியினுள் இடுவது, நோயுற்ற இலைகள் பத்தினைப் பறிப்பது போன்ற பணிகள் இதிலடங்கலாம். அல்லது இவற்றுக்குப் பதிலாக குப்பை வாரியால் சருகுகளை வாரியெடுப்பது, தாவரங்களுக்கு நீரூற்றுவது போன்ற பெரிய பணியொன்றைப் பிள்ளை செய்ய முடியும். சொத்துக்களைப் பராமரிக்க உதவும் முறைகள் பற்றி இதனூடாக அவர்கள் கற்றுக் கொள்வர்.

முடியுமான சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தமக்குத் தேவையான உணவுகளைத் தாமே பயிர் செய்து கொள்வதற்குப் பெற்றார் அவர்களைத் தூண்டுதல் வேண்டும்.

தனது தோட்டத்தைத் தான் எவ்வாறு 6 பகுதிகளாகப் பிரித்துத் தனது 6 பிள்ளைகளுக்கும் வழங்கினார் என்பதை லிபியாவைச் சேர்ந்த ஒருவர் விவரித்தார். பிள்ளைகள் தமக்குரிய பகுதியில் தாம் விரும்பிய எதனையும் பயிர் செய்ய அனுமதிக்கப்பட்டனர். வீட்டுச் சமையலுக்குக் காய்கறிகள் தேவைப்படும் போது அவரது மனைவி முதலில் பிள்ளைகளிடம்தான் கேட்பார். தக்காளியோ பச்சை மிளகாயோ ஏதேனும் கிடைப்பதை அவர்களிடம் முதலில் பெற்றுக்கொள்வார். தோட்டம் நல்ல முறையில் பேணப்பட்ட தோடு இந்த முறையின் காரணமாக தோட்ட வேலையைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்டு வந்த வாக்குவாதங்கள் முற்றாக நீங்கிப் போயின. Sylvia Hunt

முன்பள்ளிப் பருவத்தினரும் சில தெரிவுகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். அதேவேளை, நீங்கள் இப்போது இதைத்தான் செய்யப் போகிறீர்கள் என்று பிள்ளைகளை நோக்கிக் கூற வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. விருப்பம் இல்லாத காரணத்தால் தாம் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாமல் விடப் பிள்ளை கள்முயல்வார்கள். அவ்வாறு சோம்பியிருக்க அவர்களைப் பழக்கக் கூடாது. தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செய்ய வேண்டியனவற்றைச் செய்யக் கற்றுக் கொள்வது பொறுப்புணர்வின் முக்கிய அம்சமொன்றாகும். பெற்றார் அன்பு காட்டும் அதேவேளையில் கண்டிப்புடன் இருப்பதும் அவசியம்.

பொறுப்புணர்வைப் படிப்படியாகக் கட்டியெழுப்புங்கள்

பொறுப்புக்குரிய வயது வரும் வரை பிள்ளைகளிடம் வேலை எதுவும் வாங்காது அவர்களை விளையாட விடுவது பெற்றோர் செய்யும் பெரிய தவறாகும். இந்நிலையில் பிள்ளைகள் மீது பெரிய வேலைப்பளுவும் பொறுப்புக்களும் திடீரென வந்து குவியும். வருடா வருடம் பிள்ளைகள் தமக்குரிய பணிகளையும் பொறுப்புக்களையும் படிப்படியாக அதிகரித்துக்கொள்ள உதவ வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பிள்ளைகள் (குறிப்பாக பெண் பிள்ளைகள்) இள வயதிலேயே குழந்தை பராமரித்தல், விறகு சேகரித்தல், நீர் கொண்டுவருதல் போன்ற இன்னோரன்ன வீட்டுப் பணிகளைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு கைக்குழந்தை எவ்வித வேலையையும் செய்யாத நிலையில் ஆரம்பித்து 19- 20 வயதாகும் போது வாரத்திற்கு 40 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகிறது. எனவே, பொறுப்புணர்வைப் படிப்படியாக வளர்ப்பது பெற்றாரின் கடமையாகும்.பொறுப்புக்களின் அளவில் படிப்படியான அதிகரிப்புக்குப் பழக்கப்பட்ட பிள்ளைகள் வளர்ந்த பின் முழுநேர வேலைக்குத் தம்மைச் சிறப்பாக இசைவாக்கிக் கொள்கின்றனர்.

இந்தச் செயல்முறை முன்பள்ளிப் பருவத்தில் ஆரம்பிக்கப்படலாம். அழுக்கான ஆடைகளைக் கூடைகளில் போடுதல், சிதறிக் கிடக்கும் விளையாட்டுப் பொருட்களை ஒழுங்காக எடுத்து வைத்தல் போன்ற பணிகள் இவ்வயதில் ஒப்படைக்கப்படலாம். பிள்ளைகளின் வயதுக்கும் ஆற்றல்களுக்கும் ஏற்ப வேறு பணிகள் மெதுவாகச் சேர்க்கப்படலாம். ஆறு வயதுப் பிள்ளைகளுக்கு சாப்பாட்டு மேசையை ஒழுங்கு செய்தல், கட்டில் விரிப்புக்களைச் சரி செய்தல், செல்லப் பிராணிகளுக்கு உணவளித்தல், உணவு வேளைகளின் பின்னர் மேசையைச் சுத்தம் செய்தல்போன்ற பணிகளைச் சிறிது உதவியுடனும் வழிகாட்டலுடனும் ஒப்படைக்க முடியும். ஒவ்வொரு வருடமும் புதிய புதிய பொறுப்புக்கள் அறிமுகப்படுத்தப்படலாம். பதின்மவயதினருக்கு ஆடைகளைச் சலவை செய்தல், உணவுப் பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்தல், முற்றவெளியில் புல் கத்தரித்தல், பற்றைகளைக் கத்தரித்தல், இளைய உடன்பிறப்புக்களைப் பராமரித்தல்

போன்ற பணிகள் ஒப்படைக்கப்படலாம். சில பணிகளைச் சகோதர சகோதரிகள் சுழற்சி முறையில் பகிர்ந்து கொள்ளலாம். பதின்மவயதினர் பகுதி நேரத் தொழில் ஒன்றிலோ சமூகத் தொண்டர் வேலையொன்றிலோ ஈடுபடவும் முடியும்.

'அது என்னுடைய வேலையல்ல' என்ற மனப்பாங்கை நீக்குதல்

ஒரு குடும்பத்தினர் கூட்டாகவே பொறுப்புக்களைச் சுமக்க வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் அவசியம். பொறுப்புப் பங்கீட்டில் நியாயம் பற்றித் தர்க்கம் செய்யும் பிள்ளைகள் மற்றவர்களுக்கு ஒத்தாசை புரிபவர்களாக இருக்கத் தவறி விடுகிறார்கள். பொறுப்புக்களை நிறைவேற்றும் விடயத்தில் பிள்ளைகளிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துவது குடும்ப ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கலாம். எப்போதும் அணியாக வேலை செய்யும் மனப்பாங்கையே வளர்க்க வேண்டும். "மேசை யைத் துப்பரவு செய்து துடைத்து முடித்தால் நாமனைவரும் ஒரு வீடியோ பார்க்கலாம் அல்லது பூங்காவுக்குப் போகலாம்" என்றோ "தோட்ட வேலையை இன்றே முடித்து விட்டால் மாலையில் நாமனைவரும் ஐஸ்கிறீம் சாப்பிடலாம்" என்றோ அல்லது "சுத்திகரிப்பு வேலையை முடித்து விட்டால் நாமனைவரும் வெளியே உல்லாசப் பயணமொன்று செல்லலாம்" என்றோ பெற்றோர் பிள்ளைகளிடம் கூறலாம். கூட்டாக வழங்கப்படும் வெகுமதிகள் ஒற்றுமையையும் அணியாக வேலை செய்வதையும் பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கின்றன. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதையும் ஒருவரின் சுமையை இன்னொருவர் பகிர்ந்து கொள்வதையும் ஊக்கு விப்பது அவசியம். மூத்த பிள்ளைகள் இளைய பிள்ளைகளின் படிப்பு விடயங்களில் உதவுவதோடு இளைய பிள்ளைகள் மூத்தவர்களின் வீட்டுப் பணிகளில் உதவி செய்தல் வேண்டும்.

நடைமுறைரீதியான ஆலோசனைகள்

- பிள்ளைகளுக்கு அளவுக்கதிகமான பணிகளைக் கொடுத்து அவர்களைத் திக்குமுக்காடச் செய்யக்கூடாது. பெற்றார் தம் பிள்ளைகளின் ஆற்றல்களையும் மனப்போக்குகளையும் கருத்திற்கொண்டு அவர்கள் வெற்றிகரமாக சாதிக்கக்கூடிய பணிகளையே அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.வெற்றியும் பாராட்டும் அவர்களை மேலும் சாதிப்பதற்குத் தூண்டும். அதேவேளை அளவுக்கு மீறிய சுமை தோல்வியை விளைவிப்பதோடு ஊக்கத்தையும் அழித்து விடும்.

- பிள்ளைகள் பொறுப்புணர்வுடன் இருப்பார்கள் என எதிர்பாருங்கள். பெற்றாரின் எதிர்பார்ப்புக்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கும். பிள்ளைகளுக்குப் பணியொன்றை ஒப்படைக்கும் போது எந்தளவு காலத்திற்குள் அது செய்யப்பட வேண்டும் என்பது பற்றிப் பெற்றார் அவர்களுடன் கலந்துரையாட வேண்டும். அதன்பிறகு பிள்ளைகள் அதனைச் செய்வதற்கு இடம் கொடுப்பதோடு அவர்கள் அதனைச் செய்து முடிப்பார்கள் எனக் கருதிக் கொள்ளுங்கள். அவர்களுக்கு அது பற்றி நினைவூட்டிக்கொண்டும் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டும் இருக்காமல் அவர்கள் தம் போக்கில் அதனைச் செய்து முடிப்பதற்கு இடமளியுங்கள்.

- அப்பணியை அவர்களால் முடிக்க முடியாது போனால் பெற்றார் அவர்களுக்கு உதவி செய்யலாம். பிள்ளையை ஒருபோதும் 'பொறுப்பற்றவன்' என அழைக்காதீர்கள். பிள்ளைகள் முற்றாகப் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட போதிலும் (உதாரணமாக, தன் இளைய சகோதரர்கள் பரீட்சைக்குத் தயாராகும் போது அவர்களுக்கு உதவி செய்யாது தன் நண்பர்களுடன் வீணாக அரட்டை யடித்தல்) அவர்களை அவ்வாறு அடையாளப்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு பிள்ளை அடிக்கடி மறதியால் பாதிக்கப்பட்டால் அதனைக் கேலி செய்யும் விதத்தில் 'போகிற போக்கில் உன்னுடைய தாய் தந்தையர் யார் என்பதையும் மறந்து விடுவாய்' என்ற வகையில் கூறக்கூடாது. அவ்வாறான கூற்றுக்கள் மனதை நோவிப்பதோடு உற்சாகமிழக்கவும் செய்யும். செயலை அடையாளப்படுத்த வேண்டுமே தவிர செய்தவரை அடையாளப்படுத்தக் கூடாது.

- பிள்ளைகள் தங்கள் பணிகளை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்குஅவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. தமது வீட்டு வேலையைச் செய்வதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதை மதிப்பீடு செய்வதற்கும் அதற்கேற்ப தம் வேலைகளை அட்டவணைப்படுத் துவதற்கும் காட்டிக் கொடுங்கள். பள்ளிக்கூடம் விட்ட பின்பு செய்வதற்கான வேலை அட்டவணையொன்றைத் தயாரிப்பதற்கு அவர்களுக்கு உதவுங்கள். அவர்களது எல்லா வேலைகளையும் செய்து முடிப்பதற்குப் போதியளவு நேரம் இருப்பதோடு வெளியே சென்று விளையாடுவதற்கும் ஓய்வெடுப்பதற்கும்கூடப் போதிய அவகாசம் உண்டு என்பதை எடுத்துக் காட்டுங்கள்.

- வேலைகளைச் சிறு சிறு பணிகளாகப் பிரித்துக் கொடுங்கள். பிள்ளைகளுக்கு வகுப்பில் ஒப்படைகள் வழங்கப்பட்டால் அதற்குத் தேவையான தகவல்களை நூலகத்தில் பெற்றுக் கொள்ள அல்லது இண்டர்னெட்டில் தேடிக்கொள்ள எவ்வளவு நேரம் தேவை, அறிக்கையின் பகுதிகளை எழுத எவ்வளவு நேரம் தேவை முதலிய விடயங்களைப் பெற்றார் முன்கூட்டியே கலந்துரையாடலாம். தமது செயல்திட்டங்களைப் பகுதிகளாகப் பிரித்துக் கொள்வதற்கும் ஒவ்வொரு பகுதியையும் பூர்த்தி செய்வதற்கும் பிள்ளைகளுக்கு உதவி தேவைப்படும்.

- பிள்ளைகளின் வீட்டுவேலைகளை (homework) அவர்களது பெற்றோர் செய்து கொடுக்கக் கூடாது. எத்தனை பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் சேர்ந்து அல்லது அவர்களுக்காக அவர்களுடைய வீட்டுவேலைகளைச் செய்து கொடுக்கிறார்கள் என்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது. தரப்படும் வீட்டுவேலைகளைச் செய்வது அவர்களுடைய பொறுப்பேயன்றிப் பெற்றோருடையதல்ல என்பது பிள்ளைகளுக்கு உணர்த்தப்பட வேண்டும். ஏனெனில், அது பிள்ளைகள் தாமே செய்து முடிக்கக்கூடிய பணியாகும். எனினும், அது தொடர்பாகப் பிள்ளைகளுக்கு இடையிடையே உதவி தேவைப்படும். அவர்களுடைய எழுத்துக் கூட்டலும் சொற்பிரயோகங்களும் சரிபார்க்கப் படுவது அவசியம்.

- தாம் செய்த தவறுகளுக்குத் தாமே பொறுப்பேற்பதற்குப் பிள்ளைகள் பயிற்று விக்கப்பட வேண்டும். அவர்களைக் காப்பாற்றி விடுவதற்குப் பெற்றார் அவசரப்பட்டு முன்செல்லக்கூடாது.

- பணத்தை முகாமை செய்வது பற்றிப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். பிள்ளைகள் தம் வசமுள்ள பணத்தைவிடக்

கூடுதலாகச் செலவு செய்யக்கூடாது. அந்தப் பணம் தமக்குத் தரப்படும் வாராந்தக் கொடுப்பனவாகவோ அன்பளிப்பாகக் கிடைத்ததாகவோ தொழில் செய்து சம்பாதித்ததாகவோ இருந்தாலும் சரியே. தமக்கு ஏதேனும் பொருளொன்று தேவைப்படும் வேளையில், கூடுதலாகப் பணம் கிடைக்கும் போது திருப்பிக் கொடுக்கலாம் என நினைத்துப் பணம் இரவலாகப் பெறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. தமக்குப் போதிய பணம் கிடைக்கும் வரை கடன் படாமல் அவர்கள் காத்திருக்க வேண்டும். தொழில் செய்யத் தொடங்கியுள்ள பிள்ளைகள் தமது பணத்தில் ஒரு பகுதியைத் தானம் செய்வதற்கும் சேமிப்புக்கும் ஒதுக்குதல் அவசியம். பிள்ளைகள் பெரியவர்களாக வளரும் போது பணத்தை முகாமை செய்யும் முறை, பயன்பாட்டிலுள்ள சேமிப்பு மற்றும் முதலீட்டு முறைகள் என்பன பற்றிப் பெற்றார் அவர்களுடன் கலந்துரையாடலாம். இறை வேதங்களில் வட்டி தடை செய்யப்பட்டுள்ளது என்பதைப் பிள்ளைகளுக்குப் போதிக்கவும் இஸ்லாமிய வங்கி முறை பற்றிக் கற்பிக்கவும் இது தகுந்த தருணமாகும்.

- தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். இது தொண்டர் வேலையாகவோ மாலை நேர அல்லது விடுமுறை காலத் தொழிலாகவோ இருக்கலாம். தம் பெற்றாருக்குச் சொந்தமாகத் தொழில் நிறுவனமொன்றிருந்தால் (உதாரணமாக, ஒரு கடை, உணவகம் அல்லது பண்ணை இருப்பின்) பிள்ளைகள் சிறுவயது முதலே அதில் உதவி ஒத்தாசை புரிவது நல்லது. இதன் மூலம் நேரத்திற்கு வேலை செய்யவும் தமது மனநிலை எப்படியிருப்பினும் இனிய சுபாவத்துடன் நடந்து கொள்ள வும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றவும் பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றனர்.

பொது ஆலோசனைகள்

- பிள்ளைகள் களைப்புற்று அல்லது பசியோடு இருக்கும் போது அவர்களுக்குக் கற்பிக்கக் கூடாது.
- கற்பித்தலோடு கலக்கப்படும் போது கண்டனமும் விமர்சனமும் நச்சுத் தன்மை பெறுகின்றன.
- பொறுப்புணர்வுக்குப் பொறுமை அவசியம்.

உண்மையான தொழிலாளி போன்றே...

எனினும் பெற்றார் பதவி நீக்கம் செய்ய முடியாது!!

தொழில் செய்யுமிடத்தில் பொறுப்பற்ற நடத்தை சிறிதேனும் அனுமதிக்கப்படு வதில்லை. எல்லாத் தொழிலாளிகளும் தமது கடமை பற்றி அறிந்திருப்பதோடு குறிப்பிட்ட நேரங்களில் தம் கடமையை நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படலாம். பெற்றார் தம் பிள்ளைகளைப் பதவி நீக்கம் செய்ய முடியாவிடினும் அவர்களுக்கு வழிகாட்டி அவர்களைப் பொறுப்புள்ளவர்களாகப் பயிற்றுவிக்கலாம்.

சில நாட்களில் பிள்ளைகள் தமது தொழிலைச் செய்ய முடியாமற் போகலாம். (ஏனெனில், அவர்கள் ஒரு பிரயாணம் செல்ல வேண்டியிருக்கலாம்) எப்படியிருப்பினும் உண்மையான தொழில் ஒன்றில் செய்வது போன்றே முன்கூட்டியே அதற்காக லீவு பெற்றுக்கொள்ள வேண்டும். வேலை தொடங்கும் போது வந்து நான் நேற்றிரவு நண்பர்களோடு விழித்திருந்தேன். அதனால் இன்று லீவு வேண்டும் என்று அவர்கள் கூற முடியாது.

சிறப்புச் சலுகைகளைப் பொறுப்புணர்வுடன் தொடர்பு படுத்தல்: சில உதாரணங்கள்

தமக்குக் கிடைத்துள்ள அனைத்துஅனுகூலங்களும் தமக்கு உரிமையானவை என்றும் தமது பெற்றார் தமக்குச் சேவை செய்யவே பிறந்துள்ளனர் என்றும் சில பிள்ளைகள் நினைக்கின்றனர். இப்பிள்ளைகள் முதிர்பருவத்தின் பொறுப்புக்களை ஏற்றுக்கொள் வதற்குச் சிரமப்படுவார்கள்.எமக்குத் தெரிந்த குடும்பமொன்றில் ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் புதிய சிறப்புச் சலுகையொன்றும் புதிய பொறுப்பொன்றும் வழங்கப்படும். அதில் ஒன்று மற்றையதுடன் நெருங்கிய தொடர் புடையதாக இருக்கும்.பிள்ளைகள் தம் தெரிவுகள் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாட வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் கவலைகளையும் அக்கறைகளையும் கவனத்திலெடுத்துக் கொள்வார்கள்.

உதாரணம்- 1: உங்கள் மகள் வளர்ப்பதற்குக் கோழிக்குஞ்சுகள் வாங்கித் தருமாறு சில வருடங்களாகக் கேட்டு வருகிறாள். குழந்தையான தன் தம்பியை வாரத்திற்கு ஒரு நாள் பராமரிக்க அவள் இணங்குகிறாள். இதற்காகக் கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளும் சிறப்புச்சலுகை அவளுக்கு வழங்கப்படுகிறது. அக்குஞ்சுகளை அவளே பராமரிக்கவும் வேண்டும். அவள் குஞ்சுகளைச் சரியாகப் பராமரிக்கத் தவறினால் அவற்றை யாருக்காவது கொடுத்து விடுவதாக அவளுக்குக் கூறப்பட வேண்டும்.

பிள்ளைகள் தாம் செய்யும் தவறுகளுக்குப் பொருத்தமான பிரதிபலன்களை அனுபவிக்கப் பெற்றார் இடமளிக்க வேண்டும். எனவே, அவர்கள் தவறு விடும் போது அவர்களை உடனடியாகக் காப்பாற்றிக் கரை சேர்க்கப் பெற்றார் முயலக்கூடாது. பெற்றார் முதலில் குறை கூறி நச்சரித்து விட்டு இறுதியில் தம் பிள்ளைகளை விடுவித்து விடுவார்கள். நியாயமான தண்டனைகளின் தாக்கத்தினூடாக பிள்ளைகள் பொறுப்புணர்வு பற்றி நன்றாகக் கற்றுக் கொள்கிறார்கள். பிரதிபலன்கள் பொருத்தமானவையாக இருப்பின் பிள்ளைகள் எளிதில் அதனை மறக்காததோடு மீண்டும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளவும் மாட்டார்கள். உதாரணமாக, பிள்ளை நூலகத்தில் பெற்றுக்கொண்ட புத்தகத்தை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்கத் தவறினால் அதற்குரிய தண்டப்பணத்தைப் பெற்றோர் செலுத்தக் கூடாது.

உதாரணம்- 2: பாடசாலை விட்டு வீடு வரும் வழியில் பால்மா பக்கட் ஒன்று வாங்கி வருமாறு உங்கள் பிள்ளைக்குக் கூறப்படுகிறது. எனினும், அவர் மறந்து விடுகிறார். இந்நிலையில் தாய் ஓடிச்சென்று பால்மாவை வாங்கி வராமல் அன்று மாலையும் மறுநாட் காலையும் பால் சேர்க்காத வெறுந்தேனீரே பிள்ளைகளுக்கு வழங்கப்படுகிறது.

உதாரணம்- 3: மகள் தினமும் காலையில் வீட்டை விட்டுத் தாமதமாகிப் புறப்படுவதால் உரிய பஸ் வண்டியைத் தவற விடுகிறார். நேரகாலத்தோடு எழும்புமாறு பல தடவை எடுத்துக்கூறியும் தொடர்ந்தும் இவ்வாறே நடக்கிறது. எனவே, தந்தை தனது மோட்டார் சைக்கிளில் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச்செல்ல நேரிடுகிறது.

இந்நிலையில் பெற்றார் எதுவும் செய்யாமல் மகளைப் பள்ளிக் கூடத்துக்கு நடந்து செல்ல விட்டால் அவளது நடத்தையில் மாற்றம் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு கூடுதலாக இருக்கிறது. எனினும், தனியே அனுப்புவது பாதுகாப்பானதாக இல்லையெனில், தனது வேலைகள் முடிந்த பின் அழைத்துச் செல்வதாகக் கூறலாம். வகுப்புக்கள் தொடங்கிய பின் பள்ளிக்கூடம் செல்வதனால் அவளுக்கு ஏற்படக்கூடிய சங்கட நிலைமை காரணமாக அவள் தனது தவறுகளைத் திருத்திக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. ஏனெனில், கற்பதற்குரிய சந்தர்ப்பங்களாகவே தவறுகள் அமைகின்றன. தமது பிள்ளைகளின்

தவறுகளைக் கண்டு பெற்றார் கோபப்பட்டுக் கூச்சலிடுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ஏனெனில், அதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது. அதன் காரணமாக அனைவருக்கும் மனக்கசப்புத்தான் ஏற்படும். அதற்குப் பதிலாக குறித்த நிலைமையை மேம்படுத்துவதற்குரிய வழிகளைப் பெற்றார் தேட வேண்டும். ஏச்சுப் பேச்சுக்களினூடாகக் கற்பதை விட இவ்வாறு செய்வதனூடாகப் பிள்ளைகள் கூடுதலாகக் கற்றுக் கொள்வர். அத்தோடு, பெற்றோரிடத்திலும் மனக்கசப்பு ஏற்படாது.

உதாரணம்- 4: இரவுணவுக்காக உணவுப் பார்சல்கள் வாங்கி வருமாறு தாய் மகனுக்குப் பணிக்கிறார். மகன் போன காரியத்தை மறந்து தன் நண்பர்களோடு விளையாடிவிட்டு இரவில் தாமதமாகி வெறுங்கையோடு வீடு வந்து சேர்கிறான். அவனைப் பார்த்துத் தாய் ஆத்திரத்தில் கூச்சலிடாமலும் அவசரப்பட்டு சமையல் செய்ய முயற்சிக்காமலும் 'இப்போது எமக்கு இரவுணவு பற்றிய பிரச்சினை இருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்யலாம்?' என்று மகனிடமே கேட்கலாம். இந்நிலையில் மகன் தானே ஏதேனும் உணவைத் தயாரித்துத் தர முன்வரக்கூடும். இங்கு உரிய நேரத்தில் உணவை வழங்குவதை விட மகன் தனது பொறுப்புக்களைப் பற்றிக் கவனமாக இருப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதே முக்கியம்.

சிறு பிள்ளைகள் தமது தவறுகளுக்குப் பிறர் மீது அல்லது சூழலின் மீது குற்றத்தைச் சுமத்தப் பழகிவிடுகின்றனர். இவ்வாறு செய்வதனால் அவர்களின் ஆற்றல்களுக்கேற்பச் சிறந்தவர்களாய் மாறுவதற்குரிய வாய்ப்பினை இழக்கின்றனர். தாம் பிள்ளைப் பருவத்தினராய் இருந்த போது முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதற்குத் தாம் மறுத்த நிலைமைகளைப் பெற்றோர் நினைவூட்டிப் பார்க்கலாம். பொதுவாக இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களது பெற்றோர் தமது பிள்ளைகளின் பொறுப்பின்மை பற்றி மனக்கவலை அடைந்திருப்பார்கள்.

தாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பெற்றோர் எப்போதும் கூறிக்கொண்டிருக்கிறார்கள் எனப் பிள்ளைகள் கருதக்கூடும். ஒருவேளை இதற்குக் காரணம், பிள்ளைகள் முழுப் பொறுப்பையும் ஏற்க முன்வராமையாக இருக்கலாம். பிள்ளைகளே முதல் நடவடிக்கையை எடுத்து பாதகமான நிலைமைகளைச் சாதகமானவையாக மாற்றினால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் எனக் கூறுவதைப் பெற்றோர் நிறுத்திக் கொள்ளலாம்.

பாலியல் ரீதியான பொறுப்புணர்வின்மையின் பிரதிபலன்கள்

ஐக்கிய இராச்சியத்தில் 2002க்கும் 2007க்கும் இடைப்பட்ட காலத்தில் கர்ப்பம் தரித்த பெண் பிள்ளைகளுள் 12 வயதுடையோர் 268 பேரும், 13 வயதுடையோர் 2,527 பேரும், 14 வயதுடையோர் 14,777 பேரும், 15 வயதுடையோர் 45,861 பேரும் இருந்தனர். எனினும், இப்புள்ளி விபரங்கள் இப்பிரச்சினையின் ஒரு சிறு பகுதியையே சுட்டிக்காட்டுவனவாக இருக்கலாம். ஏனெனில், இளம் பெண்கள் பலரில் கருச்சிதைவுகள் அல்லது சட்டத்துக்கு முரணான கருக்கலைப்புக்கள் இடம்பெற்றிருக்கலாம். உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களில் இவை உள்ளடக்கப்படுவதில்லை.

Family Education Trust என்ற அமைப்பைச் சேர்ந்த Norman Wells என்பவரின் கூற்றுப்படி, பாலுறவு முறையினால் கடத்தப்படும் தொற்றுக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வருகின்ற பாரிய அதிகரிப்பும் மனவெழுச்சி ரீதியாகப் பாதிக்கப்பட்ட இளவயதினரின் தொகையில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பும் பாலியல் ரீதியாக உந்தப்பட்டுள்ள இன்றைய சமுதாயத்தின் கசப்பான விளைவுகளே. இச்சமூகத்தில் பாலியல் ரீதியாகப் பிஞ்சில் முற்றிப்போன விதத்தில் உடையணியவும் நடந்து கொள்ளவும் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்நிலைமைக்கு, அறவே பொறுப்பற்ற முறையில் செயற்படும் பாலியற் கல்வி நிபுணர்களை இவர் குற்றஞ்சாட்டுகின்றார். இளவயதினர் பாலுறவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்காமல் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துமாறு அவர்களைத் தூண்டுவது நிலைமையை மிகவும் மோசமாக்கியிருக்கிறது. (Martin, 2010)

செயல்களையும் அவற்றின் விளைவுகளையும் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மையைச் செய்தாரோ அவர் (மறுமையில்) அது(ன் பய)னைக் கண்டு கொள்வார். இன்னும் எவர் ஓர் அணுவளவு தீமையைச் செய்தாரோ அவர் (மறுமையில்) அது(ன் பய)னைக் கண்டு கொள்வார். (அல் குர்ஆன் 99: 7-8)

பொறுப்புணர்வும் பொறுப்புக் கூறலும் நாம் எமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளாகும். அடுத்த அத்தியாயத்தில் நாம் சுயாதீனத்தன்மை பற்றிய கருத்துப் படிவத்தை ஆராயப் போகிறோம். பொறுப்புணர்வைக் கற்றுக் கொள்வதற்கு சுயாதீனத்தன்மை அத்தியாவசியமாகிறது.

வீட்டுப்பணிகளில் தமது பங்கை நிறைவேற்றுமாறும் அதற்குப் பொறுப்புக் கூறுமாறும் உங்கள் பிள்ளைகளை வேண்டிக் கொள்ளுங்கள். அவர்கள் வெற்றி பெறத் தவறினால் ஏமாற்றமடையக்கூடும். ஆனால், அவர்கள் முயற்சிக்கத் தவறினால் அழிவு தான் ஏற்படும்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 57: எல்லாக் குழுக்களையும் இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

பின்வரும் கதையை ஒரு பிள்ளையைக் கொண்டு வாசிக்கச் செய்து அதன் பின்னர் ஒவ்வொருவரும் தமது கருத்தைக் கூறச் செய்யுங்கள்.

a) *பிள்ளைகளுக்கான கோடை கால முகாமொன்றில் உணவுண்ணச் செல்லும் வழியில் வைக்கப்பட்டிருந்த ஓர் அறிவிப்புப் பலகை "ஆளுக்கொரு அப்பிள் மாத்திரம் எடுங்கள்; இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்ற வாக்கியத்தைக் காட்டியது. உணவு வரிசையின் கடைசியில் பிஸ்கட்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் அறிவிப்பு எதுவும் காணப்படவில்லை. ஒரு பிள்ளை பின்வரும் அறிவிப்பை எழுதி பிஸ்கட்களுக்கு அருகில் காட்சிக்கு வைத்தான்: "உங்களுக்கு விருப்பமான அளவு எடுத்துக்கொள்ளுங்கள்; ஏனெனில், இறைவன் அப்பிள்களைக் கவனிப்பதில் பிஸியாக இருக்கிறான்".*

(மதபோதகர் Pete Martin கூறியது, 2007)

b) *உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) அவர்கள் கலீபாவாக இருந்த போது வியாபாரியொருவர் ஏமாற்றுவதைக் கண்டார். உடனே கலீபா அவர்கள் தமது அறிவிப்பாளரை நோக்கி 'ஏமாற்றுகிற எவரும் எம்மைச் சார்ந்தவரல்லர். விற்பனை செய்ய முன் பாலுடன் நீரைக் கலப்பது சட்ட விரோதமானது' என உரத்த குரலில் பிரகடனப்படுத்துமாறு கூறினார். அதன் பின்னர் மதீனாவிலுள்ள ஒரு வீட்டில் பின்வரும் உரையாடல் இடம்பெற்றது.*

தாய்: மகளே! நாம் கூடுதலாகப் பணம் சம்பாதிப்பதற்காகப் பாலுடன் நீரைக் கலந்து விடு.

மகள்: (பணிவுடன்) பாலுடன் நீர் கலக்கக் கூடாது என இன்று உமரின் அறிவிப்பாளர் பிரகடனப்படுத்தியதை நீங்கள் அறியவில்லையா?

தாய்: நான் சொல்வதை நீ செய். உமரோ அவரது அறிவிப்பாளரோ எம்மைக் காணப்போவதில்லை.

மகள்: நான், எமது ஆட்சியாளருக்கு பகிரங்கமாகக் கீழ்ப்படியாமலிருப்பது எப்படி? உமர் பார்க்காவிட்டாலும் உமருடைய இறைவன் எப்போதும் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

தொழிற்பாடு- 58: எதிர்பாரா நிகழ்வுகளும் பொறுப்புணர்வும் பற்றிய பாடம்

பின்வரும் வினாக்களுக்கு விடையளித்து விட்டு கீழே தரப்பட்டுள்ள கருத்துக்கள் பற்றிச் சிந்தியுங்கள்.

உங்கள் 12 வயது மகன் முற்றத்தில் கிரிகெட் விளையாடிக்கொண்டிருந்த போது அடித்த பந்து அயல்வீட்டாரின் யன்னல் கண்ணாடியை உடைத்து விடுகிறது.

a) *நீங்கள் உங்கள் அயல் வீட்டாருக்கு போன் பண்ணி யன்னலைத் திருத்துவதற்கான செலவை நீங்கள் தருவதாகக் கூறிவிட்டுப் பின்னர் மகனைத் தண்டிப்பீர்கள்.*

b) அயலவரிடம் போய்த் தான் தவறுதலாகக் கண்ணாடியை உடைத்து விட்டதை விளக்கி அதற்குரிய செலவைத் தந்து விடுவதாகக் கூறுமாறு உங்கள் மகனை அனுப்புவீர்கள். பின்னர் அதற்குரிய செலவை நீங்களே செலுத்தி விட்டு அதனை உங்கள் மகனுக்குரிய கொடுப்பனவிலிருந்து கழித்துக் கொள்வீர்கள்.

c) அயலவரிடம் போய் தான் தவறுதலாகக் கண்ணாடியை உடைத்ததை ஒப்புக்கொண்டு தனது சேமிப்பிலிருந்தோ சம்பாதித்தோ யன்னலைத் திருத்துவதற்குரிய செலவைத் தருவதாகக் கூறச்செய்யுங்கள்.

கருத்துக்கள்: கோபப்படாமலும் மகனுக்குத் தண்டனை வழங்காமலும் அவன் தனது செயலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கற்பிப்பதற்கு மிக உகந்த தருணமொன்றாக இது விளங்குகிறது. உங்கள் விடைகளைப் பற்றிய குறிப்புக்கள்:

a.) நீங்கள் உங்கள் அயலவருக்கு போன் பண்ணினால் பிரச்சினை ஏற்படும் போது தன்னை யாராவது விடுவிப்பார்கள் என்பதைத் தவிர வேறெதனையும் உங்கள் மகன் கற்றுக்கொள்ள மாட்டான். அவனை ஏன் தண்டிக்க வேண்டும்? அது ஓர் எதிர்பாராத நிகழ்வு தானே!

b.) நல்ல முதற்படி (கண்ணாடி உடைந்தது பற்றி அயலவருக்குக் கூற மகனை அனுப்புவது)

c.) மிகச்சிறந்த விடை. இங்கே உங்கள் மகன் தனது செயலுக்கான **முழுப்** பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறான். இந்த அணுகுமுறை (b.) இல் கூறப்பட்டதை விடச் சிறந்தது.

அத்தியாயம் 19

சுயாதீனத்தைக் கற்றுக் கொடுத்தல்

- ‘தங்கியிருக்கும் நிலையில்’ வளர்தல் 452
- பாதுகாப்புணர்வும் சுயாதீனமும் 455
- வயது குறித்த சாதனைகள் 455
- நடைபயிலும் வயதினர் தமது வழியைத் தாமே கண்டுகொள்ள விடுங்கள் 457
- பிரிவுக் கவலை: ஒட்டித் திரியும் நடத்தையைக் கையாளுதல் 457
- பதின்ம வயதினர்- உண்மை நிலை 458
- பிள்ளை வளர்க்கும் முறையின் தாக்கம்: அதிகார அடிப்படையும் வலிமை அடிப்படையும் 461
- பிள்ளைகளில் சுயாதீனப் போக்கை வளர்ப்பதற்கான திறன்கள் 463
- பெற்றாருக்குச் சில உதவிக் குறிப்புக்கள் 469
- அறிவுரையும் சுயாதீனமும்: மகளும் அவளது தாயும் 471
- பெற்றார் தம் பிள்ளைகளின் நண்பர்களை விரும்பாவிட்டால்... 473
- பிள்ளைகள் தாமே தீர்மானங்களை எடுக்க உதவுதல் சுயாதீனத்தை மேம்படுத்தும் 475
- தீர்மானமெடுத்தலின் படிகள் 476
- தொழிற்பாடுகள் 59- 61 476

‘தங்கியிருக்கும் நிலையில்’ வளர்தல்

தொடர்ந்தும் பெருந்தொகையான பிள்ளைகள் தம் பெற்றாரிடம் கூடிய காலத்திற்கு மிதமிஞ்சி எதிர்பார்ப்பதாக அமெரிக்காவிலுள்ள பெற்றோர்கள் முறைப்பட்டுக் கொள்கின்றனர். ஒரு சமூகம் என்ற வகையில் வீட்டை விட்டு வெளியேறிச் சுயாதீனமாக வாழத் தன் பிள்ளைகளை தயாராக்குவதற்கு அமெரிக்கா தவறி வருகின்றது.

மிக மோசமான முரண்பாட்டு நிலையொன்று இங்கு நிலவி வருகின்றது. தமது பிள்ளைகள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமென இன்றைய பெற்றோர்கள் விரும்புகின்ற போதிலும் அவர்கள் பிள்ளைகளை வளர்க்கும் முறையோ மகிழ்ச்சியின்மைக்கே வழி வகுக்கின்றது. பிள்ளைகள் தாம் சுயாதீனமாக இருப்பதற்கக் கற்றுக் கொள்வதில்லை; காரணம், அவர்கள் அவ்வாறு இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை. தமது பிள்ளைகளின் நலனுக்காகப் பெற்றார் பண ரீதியிலும் மனவெழுச்சி ரீதியிலும் அதிகமதிகம் செலவு செய்து கொண்டே இருக்கின்றனர். தம் பிள்ளைகள் பற்றித் தமக்கு இருக்கும் ஆழமான இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்வதற் காக உண்மையான அர்ப்பணிப்புடன் சிறப்பாகச் செயற்பட அவர்கள் முனைகின்றனர்.

சில உயர்வகைப் பெற்றார்களை இரண்டு அடிப்படைகளை வைத்து இனங்காண முடியும்: அவர்கள் தம் பிள்ளைகளுக்காக என்ன செய்வார்கள், அவர்களுக்கு என்ன கொடுக்கிறார்கள் என்பவையே அவை. தம் பிள்ளைகள் எல்லா அனுகூலங்களையும் பெறச் செய்வதற்காகத் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள். தம் பிள்ளைகளின் அறைகளைப் புத்துணர்வூட்டும் நிறங்களால் அலங்கரிப்பார்கள்; பிள்ளைகளுக்குப் பல்வேறு வகையான கல்வி சார்ந்த விளையாட்டுப் பொருட்களை வழங்குவார்கள்; பிள்ளைகளுக்கு செலவு மிக்க மஸாஜ்களை செய்விப்பார்கள். பிள்ளை விருத்தி தொடர் பான நிபுணர்களின் ஆலோசனைப்படி இடைவெளி விட்டுப் பிள்ளை பெறுவார்கள். தம் பிள்ளைகளை உடற்பயிற்சி வகுப்புக்களில் சேர்ப்பதோடு மிக முற்போக்கான பாலர் பள்ளிகளுக்கு அனுப்புவார்கள். 4 வயதிலேயே உதைபந்தாட்டத்தை அறிமுகப்படுத்து வார்கள். பிள்ளைகளுக்காகத் தமது நேரத்தையும் நட்புக்களையும் சொந்த ஆர்வங் களையும்- சில வேளைகளில் தமது பாலியல் வாழ்க்கையையும் கூடத் தியாகம் செய்வார்கள். தமது செற்பாடுகளில் இடையூறு செய்யவும் பிள்ளைகளுக்கு இடங்கொடுப்பார்கள். அவர்களுக்குக் கற்பிக்க வாய்ப்புக் கிடைத்தால் தாம் ஈடுபட்டுள்ள எதனையும் கைவிட அவர்கள் தயாராயிருப்பார்கள். எல்லாவற்றையும் விட முக்கியமாகத் தமது பிள்ளைகளின் சுய மதிப்பைக் கட்டியெழுப்புவதற்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வார்கள். (தம் பிள்ளைகள் எவ்வளவு கம்பீரமாக, உடற்திறனும் கலைத்திறனும் உள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர்களாக, அழகிய தோற்றமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூறுவார்கள்) தமது பிள்ளைகளை அரச குமாரர்கள், குமாரிகளாக நினைத்து ஆடம்பரமான பிறந்தநாள் விழாக்களை ஒழுங்கு செய்வார்கள். பிள்ளைகள் கெட்டுப்போன பின்னரும் அவர்களுக்கு அன்பளிப்புக்களைக் கொடுப்பதோடு அவர்களின் வேண்டுகோள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பார்கள். தமது பிள்ளைகள் விடயத்தில் எவ்விதக் குறைபாட்டையும்

வைக்க இந்தப் பெற்றார் விரும்ப மாட்டார்கள். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக இது பெரும் துன்பத்திற்கே வழி வகுக்கின்றது. வீட்டை விட்டு வெளியே செல்ல வாய்ப்புக் கிடைக்காததும் சுயாதீனத்தை அனுபவிப்பதற்கு அனுமதிக்காததுமே இப்பிள்ளைகளுக்கு நேரும் பெரும் குறைபாடாகும்.

ஐக்கிய அமெரிக்காவின் இன்றைய வாலிப வயதினரின் பெற்றோர்கள் பலர் முற்றிலும் வித்தியாசமான முறையிலேயே வளர்க்கப்பட்டார்கள். அக்காலத்தில் பிள்ளைகள், பிள்ளைகளுடன் மாத்திரமே கலந்து பழகினார்கள்; அதே போல் பெற்றோர்கள் ஏனைய பெற்றோர்களுடனேயே பழகினார்கள். உனக்கு ஏதும் இரத்தக்காயம் ஏற்பட்டாலேயன்றி என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று பிள்ளைகளைப் பார்த்துக் கூறும் தாய்மாரும் இருந்தனர். விளையாட்டு நிகழ்ச்சிகள் பள்ளிக்கூடம் முடிந்த பின் நடந்தன வேயன்றி இப்போது போல் வார இறுதிகளில் இடம்பெறவில்லை; அவற்றைப் பார்ப்பதற்குப் பெற்றோர் சமுகமளிப்பதுமில்லை. பெற்றார் தம் பிள்ளைகளின் பள்ளிக்கூடக் கல்வியை ஆசிரியர்களின் பொறுப்பிலேயே விட்டு விடுவார்கள். தமது பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்பது பற்றிப் பெற்றார் கவலைப்படுவதில்லை. அவர்கள் தமது சந்தோசம் பற்றி மட்டுமே கவலைப் பட்டார்கள்.

தங்கியிருத்தலா? ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தலா?

பிள்ளைகளுக்கு சுயாதீனத்தைக் கற்றுக் கொடுப்பதன் நோக்கம் பெற்றோருடனான உறவுகளை முற்றாகத் துண்டித்துக்கொள்ளச் செய்வதல்ல. சுயாதீனத்தோடு குடும்ப அங்கத்தவரிடையே ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தலும் அவசியமாகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் இன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளாக இருந்த காலத்தில் குடும்பங்கள் பெரியனவாகவும் வீடுகள் சிறியனவாகவும் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டனவாகவும் இருந்தன. உயர்பள்ளியிலும் கல்லூரிகளிலும் கற்றுக்கொண்டிருந்த பலர் பகுதி நேரத் தொழில் பார்த்து தமது செலவுகளுக்காகச் சம்பாதித்துக் கொண்டனர். தம்மால் பணம் செலுத்த முடியுமான நிலையில் மட்டுமே அவர்கள் வாகனங்கள் வாங்கினர். ஒரு பிள்ளை பட்டம் பெற்று தொழில் தேடிக்கொண்ட பின்னர் நிதி விடயத்தில் தன்னிறைவு பெற்று விடுகிறார் எனப் பெற்றார், பிள்ளைகள் ஆகிய இரு சாராரும் கருதினர். இந்த எண்ணம் பிள்ளைகளின் சுயாதீனத்திற்கு வழி கோலியது.

இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நல்ல நிலையில் இருக்க வேண்டுமெனப் பெருமளவு அக்கறை காட்டுகின்றார்களேயன்றி அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டுமெனக் கற்றுக் கொடுக்க மறந்து விடுகிறார்கள். தம்மைப் பற்றி மாத்திரமன்றி மற்றையோரைப் பற்றியும் சிந்திக்கின்ற பண்புள்ள மனிதப் பிறவிகளாக மாறுவது பற்றி எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கப்படுவதில்லை. அனைத்தும் அளவுக்கு மீறி வழங்கப்பட்ட பிள்ளைகள் மற்றவர்களின் நிலை பற்றி உணர முடியாதவர்களாகவும் தம்மைப் பற்றியே அதிக கரிசனை காட்டுபவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறு செல்லம் கொடுத்துக் கெடுத்தப்பட்ட பிள்ளைகள் மோசமான அறைத் தோழர்களாகவும் அதிலும் மோசமான வாழ்க்கைத் துணைவர்களாகவும் இருப்பர். இவ்வாறான பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னரும் பெற்றோரின் பொறுப்புக் குறைந்து விடாது. வளர்ந்த பின் அவர்களுடைய வேண்டுகோள்களும் பலவந்தமான கோரிக்கை களும் அதிகரித்து விடும். இந்நிலையில் பெற்றார் 'இல்லை' என்று கூற மாட்டார். அப்படித்தான் கூறினாலும் அதன்படி நடக்க மாட்டார். எது எப்படிப்

போனாலும், தமது பிள்ளைகள் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதே அவர்களது விருப்பம். பிள்ளைகளுக்கு எவ்வளவு கூடுதலாக வழங்குகிறோமோ அந்தளவுக்கு அவர்கள் சந்தோசமாக இருப்பார்கள் என இப்பெற்றார் நம்புகின்றனர். எனினும், இதன் விளைவு பொறுப்புணர்வற்ற, தங்கி வாழுகின்ற வாலிபப் பிள்ளைகளின் கூட்டமொன்றும் அதிகரித்துவரும் மனக்கசப்பினால் அவதியுறும் பெற்றார் கூட்டமொன்றும் உருவாவதே. இப்பெற்றார், இனிமேல் என்ன செய்வதென்று தெரியாமல் களைத்து ஓடிந்து போய் விடுகின்றனர்.

இத்தகைய நிகழ்வுக் கோப்புக்கள் வசதி படைத்த குடும்பங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல. தமது பெற்றோரைப் பண ஊற்றாக மாத்திரம் கருதும் அமெரிக்கப் பிள்ளைகள் எல்லா வருமான மட்டங்களிலும் காணப்படுகின்றனர். எளிமையாக வாழ்ந்து பணத்தைச் சேமித்து வைக்கும் பெற்றோர்கள் பலர், தம்மிடம் எஞ்சியிருக்கும் பணத்தையெல்லாம் தமது பிள்ளைகளுக்கு வாரியிறைக்கின்றனர். இப்பிள்ளைகளோ வெறும் ஊதாரிகளாகவும் அளவுக்கு மீறித் தங்கியிருப்பவர்களாகவும் விளங்குவார்கள்.

தமது பிள்ளைகளின் அடைவுகள் பற்றி அதிக அக்கறை காட்டும் பெற்றோர்கள், பிள்ளைகளின் செயற்பாடுகளில் தொடர்ந்தும் தலையீடு செய்கின்றனர். இதனால், 'தான்' என்பதற்கும் 'மற்றவர்' என்பதற்கும் இடையிலிருக்க வேண்டிய முக்கியமான வேறுபாடு மங்கிப் போவதோடு பிள்ளைகளின் கற்றுக்கொள்வதற்குரிய ஆற்றல் ஸ்தம்பிதம் அடைகின்றது. பொருத்தமான இடத்தில் பெற்றாரின் உதவி அவசியமும் முக்கியமும் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், உடல் ரீதியான அல்லது உள ரீதியான நோய்களின் போது கூட அளவுக்கு மீறி உதவி செய்வதும் வளர்ந்த பிள்ளைகளைக் குழந்தைகள் போல் நடத்துவதும் தவறானதே. சில வேளைகளில் பிள்ளைகள் பெற்றோர்களால் மிதமிஞ்சி நெறிப்படுத்தப்படுவதன் காரணமாக, தீர்மானங்களை மேற்கொள்வது அவர்களுக்கு மிகச்சிரமமான காரியமாக மாறிவிடுகிறது. "நான் எதை அணிய வேண்டும்?" என்பது முதல் "நான் இந்தத் தொழிலை ஏற்றுக் கொள்ளலாமா?" அல்லது "நான் இந்த ஆளுடன் பழகலாமா?" என்பது வரை அனைத்தையும் பெற்றோரிடமே கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வாறு அனைத்தும் அளவுக்கு மீறி வழங்கப்பட்ட இளைஞர்கள் பிற்காலத்தில் பெற்றார் என்ற பொறுப்பை ஏற்றுக்கொள்வதைக் கசப்புணர்வுடனேயே நோக்குவர்.



உங்களுக்கு உணவூட்டுகின்ற கையை நீங்கள் எப்போது கடிக்க வேண்டும்??
அது நீங்களே உங்களுக்கு உணவூட்டிக் கொள்வதைத் தடுக்குமாயின் மாத்திரமே அவ்வாறு செய்ய வேண்டும்.

சில தாய்மார் செய்ய முடியாததை அல்லது சாதிக்க முடியாததைச் சாதிக்க முயற்சிக்கின்றனர்.
தங்கள் அன்பு மிக்க பிள்ளைகளை நோவிக்கக்கூடிய அல்லது ஏமாற்றி விடக்கூடிய அனைவரிலிருந்தும், அனைத்திலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளச் சில தாய்மார் முயற்சிக்கின்றனர்.
இது சாதிக்க முடியாத ஒன்றாகும்.

பாதுகாப்புணர்வும் சுயாதீனமும்

அழுகின்ற குழந்தைகள் பற்றி . . .

உளவியலாளர் Jeffry Simpson என்பவரின் கருத்துப்படி முதலாம் வயதிலேயே நீங்கள் பாதுகாப்புணர்வற்றவர்களாக இருப்பின் 21 வயதில் உங்கள் வாழ்க்கைத் துணைவரோடுள்ள உறவில் எதிர்மறையான மனவெழுச்சிகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

ஸிம்சனும் அவரது சகாக்களும் 78 பேரைக் குழந்தைப் பருவம் முதல் 25 வருட காலத்துக்கு மேல் நெருக்கமாக அவதானித்து வந்தனர். முதலில் தாய்மார் தம் குழந்தைகளை எடுத்து வந்து ஆய்வு கூடத்தில் விட்டுவிட்டுக் குறுகிய காலத்துக்கு அப்பால் சென்றனர். இதனால் குழந்தைகள் குழப்பமடைந்தன. தாய்மார் திரும்பி வந்த பின்னர் சில குழந்தைகள் தம் தாய்மாருடன் நெருக்கமாக ஒட்டிக்கொண்டு ஆறுதல் பெற்று சொற்ப நேரத்தில் அமைதியடைந்தன. இன்னும் சில குழந்தைகள் நீண்ட நேரம் தேற்றிய பின்னர் கூட அமைதியடைய மறுத்தன. இன்னொரு தொகுதிக் குழந்தைகளோ ஆறுதல் பெறுவதற்காகத் தம் தாய்மாரிடம் செல்ல மறுத்தன.

பாதுகாப்புணர்வுள்ள பிள்ளை தன்னைத் தேற்றுவதற்குத் தன் பெற்றோரில் தங்கியிருக்கலாம் என அறிந்து கொள்வதோடு ஏனையோரிடம் செல்லவும் பழகிக் கொள்கின்றது. பாதுகாப்புணர்வற்ற பிள்ளையோ தன் பெற்றார் தன்னை நிராகரிக்கின்றனர் அல்லது தன் பெற்றார் தன்னைப் புறக்கணிக்கின்றனர் அல்லது தான் எதிர்ப்புக் காட்டினால்தான் தன் மீது கவனம் திரும்பும் எனக் கற்றுக் கொள்கின்றது. முதலாவது வயதிலேயே பிள்ளைகள் பாதுகாப்புணர்வற்றவர்களாக இருந்தால் அவர்கள் நலிவுற்றவர்களாகவும் பிறரில் தங்கியிருப்பவர்களாகவும் வளர்வார்கள். நல்ல முறையில் பராமரிக்கப்படும் குழந்தைகள் பாதுகாப்புணர்வைப் பெறுவதோடு, பிற்காலத்தில் சுயாதீனமுள்ளவர்களாகவும் மாறுகின்றன. கைவிடப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் பாதுகாப்புணர்வை இழந்து விடுவதனால் சுயாதீனமாக இருக்க அவற்றால் முடியாமல் போகிறது.

அழுது கொண்டு தம் தாயின் ஆதரவைத் தேடும் குழந்தைகளுக்கு அவ்வாதரவு வழங்கப்பட வேண்டும். தேறுதல் பெற்ற பின்னர் அவை வழமை போல் தம் சூழலை ஆராய ஆரம்பித்து விடுகின்றன. காதலுறவொன்றில் பங்காளிகளாக இருப்பவர்களும் தமது மனவெழுச்சித் தேவைகள் நிறைவேறிய பின்னர் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பவர்களாக மாறுகின்றனர். தமக்குப் பிரச்சினை ஏற்படும் போது உதவவும் ஆறுதல் கூறவும் ஒருவர் இருக்கிறார் என அறிந்து கொண்ட பின்னர் ஒருவர் ஆபத்துக்களை எதிர் கொள்வதும் மிக எளிதாகி விடுகிறது. பாதுகாப்புணர்வு கூடியவர்களால் ஏனையவர்களின் ஆதரவை நாட முடிகிறது.

> உதவிக்காக மற்றவர்களை நாடும் அளவுக்குத் தன்னம்பிக்கையுள்ள, எதிர்பார்த்தவாறே உதவி வழங்கப்படுகின்ற மனிதர்கள் உண்மையிலேயே ஒருவர் மீது ஒருவர் தங்கியிருக்கக்கூடிய ஆற்றலுடையவர்களாக இருப்பர்.

வயது குறித்த சாதனைகள்

பெற்றார் தம் சிறு பிள்ளைகளுக்கு ஆற்றலுடையவர்களாகவும் சுயாதீனமானவர்களாகவும் இருக்கக் கற்றுக் கொடுத்தால் அப்பிள்ளைகள் தாம் ஆற்றலுள்ளவர்கள், சுயாதீனமானவர்கள் என நினைக்கத் தொடங்குவர். பெற்றார் தம் பிள்ளைகளுக்கு அன்பையும் ஆதரவையும் வழங்கி ஆராய்வையும் அறிய வேண்டுமென்ற ஆர்வத்தையும் ஊக்குவித்து, திறன்களைக் கற்பித்துப்

பொருத்தமான தெரிவு களைச் செய்வதற்கு அவர் களுக்கு இடமளித்தால் அப்பிள்ளைகள் சுயாதீன மாக இயங்கக் கற்றுக் கொள்வர். பிள்ளைகளின் ஆராயும் போக்கு தொடர் பாக பெற்றார் காட்டும் உற்சாகம் பிள்ளைகளின் அத்தொழிற்பாடுகளை அவர்கள் மதிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும்.

'அதனை நானே செய்து கொள்ள முடியும்'

தம்மைத் தாமே பராமரிக்கும் பணிகள் சுயாதீனத்திற்கு வழி வகுக்கின்றன. கைக்குழந்தைகள் தம் தலையைத் தூக்குவதும் பக்கவாட்டில் புரள்வதும் நிமிர்ந்து உட்கார்வதும் சுயாதீனத்தை நோக்கிச் செல்கின்ற முக்கிய படிகளே. அன்பு, பாசம், பேணி வளர்த்தல் என்பன இவ்விலக்கை அடைய உதவுகின்றன.

பிள்ளைகள் நடமாடத் தொடங்கிய பின்னர் பாதுகாப்பான சூழலொன்று மிக அவசியமாகிறது. ஆராயும் ஆர்வம் கொண்ட நடை பயிலும் பருவக் குழந்தைகளால் தம் பாதுகாப்புப் பற்றித் தீர்மானமெடுக்க முடியாது. சிறிய தெரிவுகளை வழங்குவதன் மூலம் அவர்களுடைய சுயாதீனத்தை ஊக்குவிக்க முடியும். எந்தக் கதையை வாசிப்பது, எந்தப் பாடலைப் பாடுவது, எந்த ஷேர்ட்டை அணிவது போன்ற தெரிவுகளை மேற்கொள்வதன் மூலம் தம் வாழ்க்கையின் மீது ஓரளவு கட்டுப்பாட்டைத் தம் வசம் வைத்திருப்பதற்கு நடை பயிலும் பருவப் பிள்ளைகளுக்கு இடமளியுங்கள்.

முன் பள்ளிப் பருவத்தினர் பலவிதமான எண்ணங்களையும் உணர்வுகளையும் தேவைகளையும் வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பர். எனவே, சுயாதீனத்தை நோக்கிப் பெரிய அடியொன்றை எடுத்து வைப்பதற்கு அவர்கள் தயார் நிலையில் உள்ளனர். சலவை செய்த ஆடைகளையும் விளையாட்டுப் பொருட்களையும் அடுக்கி வைத்தல், உணவு மேசையை ஒழுங்கு செய்தல், டவல்களை மடித்து வைத்தல், உணவுத் தயாரிப்பில் உதவி செய்தல் போன்றவற்றில் பங்கு பெற இப்பருவத்துப் பிள்ளைகளை ஊக்குவிப்பது நல்லது. இது தகைமை மற்றும் சுயாதீனம் பற்றிய உணர்வுகளை வளர்க்க உதவும்.

பிள்ளைகள் பள்ளிப் பருவத்தை அடைந்த பின்னர் சுயாதீனத்தன்மையை வசதிப்படுத்துவதற்கு ஏற்ற பல வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. நண்பர்கள், பள்ளிக்கூடச் செயற்திட்டங்கள், விளையாட்டு போன்றன தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வது அவர்களது அன்றாட வாழ்க்கைத் தெரிவுகளாக அமைந்து விடுகின்றன. பணம் தொடர்பான பொறுப்புக்களை வளர்ந்த பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலம் நிதி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்குரிய திறன்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாம். (உதாரணமாக, குடும்பத்தின் பொருளாளராக ஒருவரை நியமித்தல், வாராந்தம் சிறு கொடுப்பனவுகளை வழங்குதல் முதலியன) வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பிள்ளைகளின் தெரிவுகளை கௌரவிப்பது முக்கியம். தமது

உண்மையான ஆர்வத்தைக் காட்டுவதன் மூலமும் சிறு பிள்ளைகள் புரியும் சிறிய சிறிய சாதனைகளை அங்கீகரிப்பதன் மூலமும் அவர்கள் தம் உலகின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளப் பெற்றார் உதவ முடியும். மேலும், இவ்வாறு செய்வது அவர்களை ஆரோக்கியமான, சுயாதீனமான ஒரு வாழ்க்கைக்குத் தயார்படுத்தும்.

நடைபயிலும் வயதினர் தமது வழியைத் தாமே கண்டு கொள்ள விடுங்கள்

பிள்ளைகள் பொருட்களைத் தாமே பரீட்சித்துப் பார்க்க விரும்புவர். ஒரு கணத்தில் 'நானே செய்து கொள்ள விடுங்கள்' என்று அடம்பிடிக்கும் பிள்ளை மறுகணத்தில் உங்களோடு ஒட்டிக்கொண்டு நீங்கள் விலகிப் போவீர்களோ எனப் பயப்படும் போது என்ன செய்வது எனப் புரியாமல் நீங்கள் தவிக்கக் கூடும். நடை பயிலும் வயதினரைக் கையாள்வதற்குப் பின்வரும் குறிப்புக்கள் உங்களுக்கு உதவும்.

அன்புடன் கூடிய கவனிப்பைப் பெருமளவில் வழங்குவதன் மூலம் உங்கள் பிள்ளைகளில் பாதுகாப்புணர்வை வளர்ப்பதற்காக உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள்.

- எதிர்ப்புக் காட்டுவதும் கீழ்ப்படிய மறுப்பதும் நடை பயிலும் வயதினரின் சுயாதீனம் பெறுவதற்கான ஆசையின் பிரதான பகுதிகளாக இருக்கின்றன.
- நடை பயிலும் வயதினரைத் தொடர்ந்து அவர்களின் பின்னால் செல்வது எத்தனையோ மனக் கஷ்டங்களைத் தவிர்க்கும். அவர்கள் தம் பெற்றாரோடு ஒட்டிக்கொண்டிருக்க விரும்பினால் அதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அவர்கள் தமக்கு வேண்டிய முறையில் செயற்பட விரும்பினால் (அது நியாயமானதாக இருக்கும் வரையில்) பெற்றார் அவர்களுடன் ஒத்துப்போவது நல்லது.
- நடை பயிலும் வயதினர் கட்டளைகளைப் பின்பற்ற விரும்பாத வேளையில் அவர்களுடைய கவனத்தைக் கலைப்பது பயனுள்ளதோர் உத்தியாக இருக்கும். தெரிவுகளைச் செய்வதற்கு இடமளிப்பதன் மூலம் பிள்ளைகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது இன்னொரு மாற்று வழியாகும்,.
- கட்டளைகளும் இறுதிக்காலக் கெடுகளும் தவிர்க்கப்பட வேண்டும். இவை அதிகாரப்போராட்டங்களைத் தூண்டி விடுவதோடு பெரும்பாலான பிள்ளைகளுடன் முடிவிலாச் சண்டைகளை ஏற்படுத்தும். வழி காட்டுவதன் மூலம் கற்பிப்பது கூடிய விளைதிறனைத் தரும். நடை பயிலும் வயதினர் வளர்ந்தோரின் எல்லா விதமான கட்டுப்பாடுகளையும் வெறுக்கின்றனர். பெற்றாரின் உதவியின்றித் தாமாக ஆடை அணிந்து கொள்ளவும் உணவுண்ணவும் நாடுகின்றனர். இந்த முரண்பாடான நடத்தை பெற்றாருக்கு எரிச்சலூட்டினாலும் முற்றிலும் இயல்பானதே.

பிரிவுக் கவலை: ஒட்டித் திரியும் நடத்தையைக் கையாளுதல்

பிள்ளைகளைப் பொறுத்த வரையில் மிக முக்கியமானவர்கள் பெற்றார்களே. எனவே தான் பிள்ளை அந்நியர்களைக் கண்டு பயப்படுவதும் குடும்பத்திலிருந்து பிரிவதற்குப் பயப்படுவதும் இயல்பானவையாகக் கருதப்படுகின்றன. கடந்து விட்ட ஓரிரு வருடங்களைப் பெற்றோருடன் இணைந்தே கழித்து விட்ட பின்னர் பெற்றோரைத் தம் பார்வையை விட்டு நீங்க விடாமல் செய்வது நியாயமானதாகவே தோன்றுகிறது. பிரிவானது பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் சிரமமானதாகவே இருக்கும். பிரிவைக் கையாள்வது தொடர்பான சில வழிகாட்டல் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- முடிந்தளவு அதிகமாக அன்பையும் கவனிப்பையும் வழங்குவதன் மூலமும் அன்புடன் தழுவுதல், பிள்ளையுடன் சேர்ந்து விளையாடுதல் என்பவற்றின் மூலமும் பிள்ளையில் பாதுகாப்புணர்வைக் கட்டியெழுப்புவதற்குப் பெற்றார் அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்புணர்வைக் கட்டியெழுப்புவதற்கு அதிக பொறுமை தேவை. பிள்ளை சுயாதீன நிலைமைக்குத் தயாராகும் வரை அது தொடரப்பட வேண்டும். நடை பயிலும் வயதுப் பிள்ளையொன்றை விட்டுப் பிரிந்து செல்லும் தேவை ஏற்பட்டால் முதற்சில தடவைகளிலாவது அப்பிரிவு குறுகியதாக இருத்தல் அவசியம். பிரிந்து செல்ல முன்பதாக பிள்ளை தனது புதிய பராமரிப்பாளரை அறிந்து கொள்வதற்குப் போதிய அவகாசம் வழங்கப்படுதல் வேண்டும்.
- பிள்ளைக்கு மீள நம்பிக்கையூட்டுவது அவசியம். உணர்திறன் கூடிய பிள்ளையொன்றைப் பொறுத்தமட்டில் காலையில் பாலர் பள்ளிக்குச் செல்வது போன்ற குறுகிய பிரிவொன்றுகூடக் கஷ்டமானதாக இருக்கலாம். பிள்ளையின் பராமரிப்பில் ஏற்படப்போகும் மாற்றங்கள் பற்றி அதனுடன் முன்கூட்டியே உரையாடுவதற்குப் பெற்றார் அவகாசமெடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், தம்மிடமே அவர்கள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். இவ்வாறான பராமரிப்புக் கையளிப்புக்கள் அவசரமாக மேற்கொள்ளப்படக் கூடாது.
- பிள்ளையைக் கையளித்து விட்டுத் திரும்பி வரும் போது அதன் கண்களுக்குத் தெரியாத விதத்தில் பெற்றார் மறைந்து விடக்கூடாது. பிரியாவிடை கூறிச் செல்வது பிள்ளையில் மனக்குழப்பத்தை ஏற்படுத்தக்கூடுமாயினும் பெற்றார் திடீரென மறைந்து விடாமலிருப்பது பிள்ளைக்குக் குறைந்தளவு கவலையையே ஏற்படுத்தும். பிள்ளையை விட்டுச் செல்லும் போது பெற்றார் மகிழ்ச்சியாய்த் தோற்றமளிப்பதும் புறப்படுதலை நீட்டாமலிருப்பதும் நல்லது. பெற்றார் கவலையைக் காட்டுவது பிள்ளையில் ஏக்கத்தை ஏற்படுத்தும்.

- நடை பயிலும் வயதுப் பிள்ளை, பெற்றார் வீட்டில் வேலை செய்யும் போதும் வெளியில் செல்லும் போதும் அவரையே தொற்றிக்கொண்டிருந்தால், பெற்றார் அமைதி யிழக்காமல் தொடர்ந்தும் வழமை போல் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பிள்ளை ஒட்டிக்கொண்டிருக்கும் போது உணவு சமைப்பதும் விருந்தினர்களோடு உரையாடுவதும் சிரமமானதாக இருப்பினும் காலப்போக்கில் பிள்ளை அதிக பாதுகாப்புணர்வைப் பெற்றுப் பெற்றாரை விட்டு விலகி விடக்கூடும்.

தமது குழந்தை, விருத்தியின் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி நகரும் போது பெற்றாருக்கு கவலையுணர்வொன்று ஏற்படுவது இயற்கையானதே.

பதின்ம வயதினர்- உண்மை நிலை

சிறு பிள்ளைகளுக்கு அறிவும் அனுபவமும் குறைவாக இருப்பதனால் அவர்களைப் பராமரிக்கும் போது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதும் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதும் அவசியமாகிறது. அவர்களுடைய சிறிய பருமன் காரணமாகவும் இள வயதுப் பிள்ளைகளுக்குத் தொடர்ச்சியான பாதுகாப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றன. சில வேளைகளில் ஒரு குறிப்பிட்ட முறையில் நடந்து கொள்வது ஏன் அவசியம் என்பதைப் பெற்றாரினால் அவர்களுக்கு விளங்கப்படுத்த முடியாமற் போகும். எனவே, பெற்றார் சொல்கிறபடி நடந்து கொள்ள வேண்டும் என அவர்களுக்குக் கூற வேண்டி ஏற்படுகிறது.

பதின்ம வயதினரைப் பொறுத்தமட்டில் நிலைமை வித்தியாசமானது. பெற்றார் கட்டளையிடுபவராக இருப்பதற்குப் பதிலாகத் திறன் மிக்க சமரசப் பேச்சாளராகவும் விட்டுக்கொடுக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

தாமே சுயமாக எவ்வாறு பிழைத்து வாழலாம் என்பதைப் பதின்ம வயதினர் அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் விரைவில் வீட்டை விட்டு வெளியேறித் தாய், தந்தையரின் உதவியின்றி பிழைத்துக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். பெற்றார் தாம் அன்பு காட்டி- சில வேளைகளில் செல்லம் கொடுத்துக் கெடுத்திவிட்ட- தம் பிள்ளைகளோடு ஒட்டிக்கொண்டிராமல் வாழ்வது அவர்களது கடமையாகும். அதே வேளை தம் பிள்ளைகள் தம் சொந்தக்காலில் நிற்பதற்கு அவர்கள் உதவி புரிய வேண்டும். பெற்றார் ஆரம்பத்தில் கடிவாளக் கயிற்றை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு பின்னர் படிப்படியாக அதனைத் தளர்த்தி இறுதியில் பிள்ளைகளிடமே ஒப்படைத்து விட வேண்டும். பெற்றாரில் அதிகம் தங்கியிராமல் வாழ்வதற்குப் பதின்ம வயதினர் கற்றுக்கொள்வது அவசியம். பெற்றாருடன் மோதல்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இது சிரமமாக இருக்கும்.

தாய்மார் தமது குடும்பத்தினரின் வேலைக்காரியாக மாறிவிடுவதனால் பதின்ம வயதுப் பிள்ளைகள் சோம்பேறிகளாகி விடுகின்றனர். அவர்கள் ஒருபோதும் சொந்தக்காலில் நிற்கப் பழகுவதில்லை. தமக்கு யாராவது பணிவிடை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே அவர்கள் வளர்ந்து விடுகின்றனர்.

எப்போதும் வேலைக்காரி போல் சேவை புரியும் தாயின் நோக்கம் நல்லதாக இருப்பினும் தாம் எதிர்பார்த்தது போல் பதின்ம வயதுப் பிள்ளைகள் தம் மீது அன்பும் நன்றியுணர்வும் காட்டுவதற்குப் பதிலாக மனக்கசப்பையும் விரக்தியையுமே கொண்டிருப்பார்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. தாம் நாடியதைச் செய்துவிட்டு அதன் விளைவுகளிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்ற உணர்வுடன் பிள்ளைகள் வளர்வதனால் அவர்களுடைய கசப்புணர்ச்சி தொடர்ந்தும் அதிகரிக்கும். பதின்ம வயதினரைப் பொறுத்த மட்டில் அவர்களுக்குரிய எல்லைக்கோடுகள் தெளிவாகக் காட்டப்படாத பட்சத்தில் தாம் செய்ய அனுமதிக்கப்பட்டவை எவை, அனுமதிக்கப் படாதவை எவை என அவர்களால் நிச்சயித்துக்கொள்ள முடியாமலிருக்கும். மேலும், எல்லை வரை செல்ல முயற்சிப்பது மனித சுபாவமாக இருக்கிறது.

சில பெற்றார்கள் ஆக்கிரமிப்புத் தன்மை மிக்கவர்களாகவும் எல்லா நிலைமைகளும் தம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென நினைப்பவர்களாகவும் இருப்பர். இந்த மனப்பான்மையானது, சுயாதீனத்தைக் கற்றுக்கொள்ளத் துடிக்கும் வாலிப வயதினரோடு மோதல்களை ஏற்படுத்தும். பதின்மவயதினர் தமது வாழ்வைத் தாமே வழிநடத்திக் கொள்ள உதவுவது பெற்றாரின் கடமையாகும். இதனால் பெற்றோர் தம் கட்டுப்பாட்டின் ஒரு பகுதியை இழந்து விடுவர். பெற்றார் ஏதேனுமொரு விடயம் பற்றி வயது வந்த நண்பர் ஒருவருடன் கலந்துரையாடும் போது அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பல. ஏனெனில், அவர்களது உள்ளங்கள் வெறும் காபன் பிரதிகளல்ல. இவ்வாறே கருத்து வேறுபடுவதற்குரிய சுதந்திரத்தைப் பெற்றார் தம் பிள்ளைகளுக்கும் வழங்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தமது பதின்மவயதினரின் உள்ளங்களைக் கட்டுப்படுத்த அவர்களால் முடியாது. எனினும், வித்தியாசமான கண்ணோட்டமொன்றைக் கண்டு கொள்வதற்கு அவர்களை ஊக்குவிக்க முடியும். பெற்றார் அவர்களை வற்புறுத்தக்கூடாது. இதன் விளைவாகப் பெற்றாருக்கு அதிர்ச்சி ஏற்பட்டால் அவர்கள் அதனைச் சமாளிக்கப்பழக வேண்டும். அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டால் அதனோடு வாழத் தெரிய

வேண்டும். இவை யாவும் பெற்றோரின் பிரச்சினைகளேயன்றி பிள்ளைகளின் பிரச்சினைகளல்ல.

எனினும், தற்போது AIDS, போதைப் பொருட்கள், வன்முறைகள் போன்ற பிரச்சினைகள் வளர்ந்து வருகின்றன. முன்னெப்போதையும் விடப் பிள்ளைகளை எதிர்நோக்கும் ஆபத்துக்கள் மறைவானவையாக இருக்கின்றன. 'ஒருவர் தன் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வது' என்பது, மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. "எனது பிள்ளைக்கு என்ன நடந்தது?", "ஏன் அது எல்லோரையும் போல் வளரவில்லை?" முதலியன சில பெற்றோரின் பொதுவான அங்கலாய்ப்புக்களாக இருக்கின்றன. குமரப்பருவம் என்பது, பெற்றாரும் பிள்ளைகளும் தம் உறவுகளை பரஸ்பர நன்மை கருதி மீள் வரையறை செய்து கொள்ளும் ஒரு காலமாகும். இக்காலத்தில் பதின்மவயதினர் போற்றி நினைவிலிருத்திக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கு வழி காட்டலையும் ஆறுதலையும் வழங்குவது வளர்ந்தோரின் கடமை.

பிள்ளைகளது நடவடிக்கைகளின் பிரதிபலன்கள் பாரியனவாக மாறும் வேளையில் அவர்கள் மீதுள்ள தமது கட்டுப்பாடு குறைந்து செல்வதைப் பெற்றோர் உணர்ந்து கொள்வர். தம்மை 'முகாமையாளர்' என்ற நிலையிலிருந்து பதவிநீக்கம் செய்துவிட தம் பிள்ளைகள் விரும்புகிறார்கள் என்பதைப் பெற்றார் ஒப்புக்கொண்டு அதற்குப் பதிலாக 'ஆலோசகர்' என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ள முயல வேண்டும். இந்த ஆலோசகர் பதவியில் இருக்கும் போது வழிகாட்டலை வழங்கி பிள்ளைகள் மீது தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்தும் அதேவேளையில் தமது கட்டுப்பாட்டைக் கைவிடக் கற்றுக்கொள்வது அவசியம். பெற்றார் தொடர்ந்தும் கட்டுப்படுத்த நினைத்தால் முடிவில்லாச் சண்டைகள் தான் ஏற்படும்.

தமது பெண் மக்களின் மீதுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்துவது சில தந்தையருக்குக் கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் மிதமிஞ்சிய பாதுகாப்பை வழங்குவதனால் அவர்களுடைய புதல்விகள் தொடர்ந்தும் அவர்களிலேயே தங்கியிருக்கப் பழகி விடுகின்றனர். இதனால், அப்பெண் பிள்ளைகள் தமக்கெனத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவர்களாக மாறுகின்றனர். ஒரு டிரைவிங் லைசென்ஸை புதுப்பித்துக்கொள்ளவோ, வாகன இன்சூரன்ஸ் படிவத்தை நிரப்பிக் கொள்ளவோ வங்கிக் கணக்கொன்றைத் திறக்கவோ நீண்ட பிரயாணமொன்றில் தாமே காரைச் செலுத்திச் செல்லவோ முடியாதவர்களாக அவர்கள் இருப்பர். இவ்வாறு நிகழ்வதற்குப் பெற்றார் இடமளிக்கக் கூடாது. தம் பெண் பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே சுயாதீனமாகச் செயற்பட அவர்கள் இடமளிக்க வேண்டும்.

சுயாதீனம் பற்றிய ஒரு வரைவிளக்கனம்

பெற்றார் தம் பிள்ளைகளுக்கு வழங்கும் விருப்பத் தெரிவுகள் அல்லது மாற்றுத் தேர்வுகளின் எண்ணிக்கையே சுயாதீனமாகும்.

தமக்குத் தொல்லை தராமல் தம்மைத் தனியே விட்டுவிடுமாறு பதின்ம வயதினர் தம் பெற்றோரைப் பார்த்துக் கூறுவது எல்லோரும் அறிந்த விடயமே. எனினும், பெற்றோர் தம்மீது கரிசனை கொண்டிருக்கிறார்களா என அறிந்து கொள்வதற்குக் குமரப்பருத்தினர் இரகசியமாக ஆசைப்படுவதாக அப்பருவத்தைக் கடந்து வந்தவர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, காடையர் குழுக்கள் செயற்படும் ஒரு பிரதேசத்தில் ஓர் இளைஞன் வாழ்ந்தான். அக்குழுக்களில் சேர்ந்து கொள்வதன் தீங்கு பற்றி அவனது பெற்றோர் அவனுக்கு எச்சரிக்கை செய்திருந்தனர். "எனது பெற்றோர் என் மீது கரிசனை கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன். எனவே, அந்த காடையர் குழுக்கள்

வழங்கும் உறவுக்கட்டமைப்பு எனக்குத் தேவைப்படவில்லை. அத்தோடு, சுயாதீனமாகச் சிந்திப்பதற்கும் கண்டமாதிரி மற்றவர்களைப் பின்பற்றாதிருப்பதற்கும் எனது பெற்றோர் எனக்குக் கற்றுத் தந்திருந்தனர்"

பிள்ளைகளின் மீது நம்பிக்கை வைத்தல் + பெற்றாரின் வழிகாட்டல் = சுயாதீனமும் பொறுப்புணர்வும்

தமது வாழ்க்கையில் போதியளவு உண்மையான பொறுப்புக்களையும் சுயாதீனத்தையும் கொண்டுள்ள பதின்மவயதினர் அவற்றை ஆபத்தான முறைகளில் தேடிக்கொள்ள முயல்வது அரிது

பிள்ளை வளர்க்கும் முறையின் தாக்கம்: அதிகார அடிப்படையும் வலிமை அடிப்படையும்

அதிகார அடிப்படையிலான பிள்ளை வளர்ப்பு முறையானது, சொந்தக்காலில் நிற்பதைப் போஷித்து ஊக்குவிக்கிறது. அதேவேளை, வலு அடிப்படையிலான பிள்ளை வளர்ப்பு முறையோ தங்கியிருத்தலையே போஷித்து ஊக்குவிக்கிறது. தீர்மானங்களை மேற்கொள்வதானது வளர்ந்தோர் பலரைப் பொறுத்தமட்டில் சில வேளைகளில் சிரமமான காரியமாக இருக்கிறது. எனினும், இன்னும் சிலரைப் பொறுத்தவரையில் அது தீராத பிரச்சினையாக அமைந்து அவர்களது அன்றாட வாழ்க்கையை அல்லோல கல்லோலப் படுத்துகிறது. இரவுணவை எங்கே எடுப்பது, எதைக் கொள்வனவு செய்வது, எந்தப் பாடநெறியைப் பின்பற்றுவது முதலியவற்றைத் தீர்மானிப்பது வேதனை தரும் நிகழ்வாக மாறிவிடும். சிலரைப் பொறுத்தமட்டில் தாம் முடிவெடுக்காமல் இன்னொருவரின் முடிவை நாடுவது நல்லது போல் தோன்றும்.

வலு அடிப்படையிலான பெற்றோரால் வளர்க்கப்படும் பிள்ளைகளில் இருவகையான அச்சங்கள் பொதுவாக விருத்தியடையும். அவற்றுள் முதலாவது தோல்வியடைவோம் என்ற அச்சமாகும். வளர்ந்த பின்னரும் தீர்மானமெடுக்கப் பயப்படும் பிரச்சினையானது பிள்ளைப் பருவத்தில் அவர்களுக்காக வேறு யாரோ தீர்மானம் மேற்கொண்டதன் காரணமாகவே உருப்பெறுகிறது. தோல்வியின் சாத்தியத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க யாரும் இருந்திருப்பார்கள் அல்லது அவர்களுக்காகத் தீர்மானங்களை மேற்கொண்டிருப்பார்கள். "எனக்காக ஒரு காரியத்தைச் செய்வதற்கு இன்னொருவர் முன்வரும் போது நான் ஏன் முயற்சித்துத் தோல்வி காண வேண்டும்?" என வலுவடிப்படைப் பெற்றோரின் பிள்ளைகள் கூறுவர். இப்பிள்ளைகள் சிந்திக்கும் ஆற்றல் குறைந்தவர்களாகவும் தீர்மானம் மேற்கொள்வதைத் தவிர்ப்பவர்களாகவும் வளர்வார்கள். அதுமட்டுமன்றி அவர்கள் தோல்வியிலிருந்து காப்பாற்றப்படுவதன் காரணமாக வெற்றிகரமான தீர்மானமொன்றின் விளைவினால் கிடைக்கும் சந்தோஷ உணர்வையும் பெற மாட்டார்கள்.

இரண்டாவது அச்சம், தாம் புறக்கணிக்கப்படுவோம் என்ற பயமாகும். வலு அடிப்படையிலான பிள்ளை வளர்ப்புடன் எப்போதும் தொடர்புற்றுக் காணப்படுகின்ற பிறரில் தங்கியிருக்கும் தன்மை காரணமாக, அச்சூழலில் வளரும் பிள்ளைகள் வளர்ந்த பின்னரும் தம் தாய் தந்தையரின் அங்கீகாரத்தை வேண்டி நிற்பர். ஆரம்ப வருடங்களில் இப்போக்கு ஆரோக்கியமானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருப்பினும், இறுதியில் அவர்களது சுய மதிப்பீடும் சுய அங்கீகாரமும் வீழ்ச்சியடையும். சுய அங்கீகாரம்

நலிவுற்றதாக இருக்கும் போது அவர்கள் தாய் தந்தையரிடம் அங்கீகாரம் தேடும் தேவையை ஈடு செய்வதற்கு வேறு ஆட்களை நாடக்கூடும். 'தவறான தீர்மானங்களை மேற்கொள்வது அங்கீகாரம் கிடைக்காமற் போவதற்கும் புறக்கணிப்புக்கும் வழி கோலுவதனால் நான் சுயமாகச் செயற்படாது பிறரில் தங்கியிருப்பதே மேலானது' என்ற மனப்பாங்கே இவர்களில் காணப்படும்.

மறுபுறமாக, அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட பெற்றோர்கள் தோல்விக்கும் புறக்கணிப்புக்கும் தைரியமாக முகங்கொடுப்பதற்குத் தமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கின்றனர். அதேவேளை, அறிவுபூர்வமான முறையில் ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கவும் அவர்கள் தம் பிள்ளைகளுக்கு உதவுகின்றனர். சிறந்த முறையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இது உதவியாக அமைகிறது. சொந்தக் காலில் நிற்பதற்கு ஊக்குவிப்பதன் மூலம் தோல்வியுறுவதற்கான வாய்ப்புக்களைப் பிள்ளைகளுக்கு வழங்கி அவற்றினூடாகக் கற்றுக்கொள்ளவும் வெற்றி பெறவும் சந்தர்ப்பத்தை அளிக்கின்றனர். "எனக்கொரு வெற்றியைக் காட்டுங்கள். நான் ஒரு தோல்வியைக் காட்டுகிறேன்" என்ற கூற்று தோல்விகள் காரணமாகவே பல வெற்றிகள் உருவாகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. எங்கே தவறு நடந்தது, அடுத்த தடவை தவிர்க்கப்பட வேண்டியது என்ன என்பவற்றை மதிப்பீடு செய்வதன் மூலம் தோல்விகளிலிருந்து படிப்பினை பெறும் பிள்ளைகள் மீண்டும் முயற்சி செய்ய முடிகிறது.

வழிகாட்டலுக்குரிய விதிகளை ஏற்படுத்துங்கள். எனினும், நெகிழ்வுத்தன்மை என்பது நினைத்தபடி கொள்கை மாறுவதல்ல. கொள்கை மாறாதிருப்பதன் விளைவாக பாதுகாப்புணர்வும் எதிர்வு கூறக்கூடிய தன்மையும் காரண-காரியத் தொடர்பு பற்றிய விளக்கமும் வழங்கப்படுகிறது. அத்தோடு அது பிள்ளை வளர்ப்பின் முக்கிய பண்புக் கூறொன்றாகவும் இருக்கிறது. நெகிழ்வாக இருக்க விரும்புவதும் அவ்வாறு இருப்பதும் அதே வேளை கொள்கையில் மாறாமலிருப்பதுமே முக்கியம். நெகிழ்வுத் தன்மையானது அதிகார அடிப்படையிலான பிள்ளை வளர்ப்பின் அடையாளமாக இருக்கிறது. இங்கு நெகிழ்வுத் தன்மை என்பது கிடைக்கப்பெறும் புதிய தகவல்களுக்கேற்ப தீர்மானங்களை மீள்மதிப்பீடு செய்து நியாயமான முறையில் நடந்து கொள்வதையே குறிக்கிறது. அதிகார அடிப்படையிலான பெற்றோரினால் ஏற்படுத்தப்படும் வழிகாட்டல் விதிகள் நல்ல காரணங்கள் இருந்தால் மாத்திரமே மாற்றப்படும்.

மறுதலையாக, புதிய நிலைமைகள் காரணமாக மாற்றம் தேவை என உணரப்பட்ட நிலையிலும் மாற மறுப்பது விறைப்புத் தன்மை எனப்படும். அதிகார அடிப்படை கொண்ட பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்குக் கிடைக்கும் செய்திகள் "நான் சொல்கிறேன். அதனால் செய்", "நான் உன்னுடைய பெற்றாராக இருப்பதனால். . . " அல்லது "நான் சொல்கிறபடி செய்" போன்றனவாகும். இவற்றுக்குப் பின்னால், எவ்விதத் தர்க்க ரீதியான விளக்கமோ கருத்தோ இருக்காது. இதன் விளைவாக பிள்ளைகள் கடுமையாக விரக்தியுற்று இறுதியில் தம் பெற்றோரின் அறிவுறுத்தல்களை மீறுகின்றனர். அவர்கள் காரண-காரியத் தொடர்புகள் பற்றிச் சிந்திக்காமல், 'எனக்காக எனது வழியில் செய்கிறேன்' என்ற மனப்பாங்கோடு செயற்படத் தொடங்குவர். தோல்வியிலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் எவ்வாறு தப்பிப் பிழைப்பது என்பதை அவர்கள் அறியாத காரணத்தினால் தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தங்களால் கையாளப்பட முடியாத மேலும் பல தவறுகளை அவர்கள் செய்து விடுகின்றனர். மன விரக்தி, சுய தோல்வி, மோசமான சுய மதிப்பு என்பனவே இதன் தவிர்க்க முடியாத விளைவுகளாகும். இன்று சமூகத்தில் குற்றச்செயல்களையும் அழிவுகளையும் ஏற்படுத்துகின்ற பதின்மவயதினரின் வடிவில் இதன் அறிகுறிகளை நாம் காண்கின்றோம்.

மேலே சொன்னவற்றுக்கு முற்றிலும் மாற்றமான விதத்தில் நடந்து கொள்வது அதிகார அடிப்படையிலான பிள்ளை வளர்ப்பு முறையின் இன்னொரு துர்ப்பாக்கியமான விளைவாகும். ஏனையவர்களால் ஆட்டிப்படைக்கப்படக்கூடிய வகையில் முதுகெலும்பில்லாதவர்களாக அவர்கள் வளர்கின்றனர். இன்னொருவரைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்த விரும்புகின்ற ஒருவர், இன்னொருவரின் கட்டுப்பாடும் ஆதிக்கமும் தேவைப்படுகின்ற ஒருவரைத் தேடுகின்ற திருமணங்கள் இதன் விளைவாக உருவாகின்றன. இவ்வாறான சோடி சேர்தலானது வேதனையிலும் சோகத்திலும் முடிகின்ற துயர் நிறைந்த உறவொன்றையே ஏற்படுத்தும்.

> அதிகார அடிப்படையிலான பெற்றோரின் பிள்ளையானது திருமண வாழ்வில் தன் வாழ்க்கைத் துணையோடு பிரச்சினைப்படலாம்: அளவுக்கு மீறிய ஏக்கம் கொண்டவர்களாக அல்லது அளவுக்கு மீறிச் சர்ச்சை புரிபவர்களாக அவர்கள் இருப்பர்.

பிள்ளைகளில் சுயாதீனப் போக்கை வளர்ப்பதற்கான திறன்கள்

போக்கிரிக் குழுக்கள், போதைப் பொருட்கள் அல்லது தவறான பாலுறவுகள் முதலியன, தீராத விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உண்மையான ஆபத்துக்களைக் கொண்டுள்ளன. இவ்வாபத்துக்கள் காரணமாகப் பெற்றோர்கள் சில வேளைகளில் ஆலோசகர்களாக இருப்பதற்குப் பதிலாக சர்வாதிகாரிகளாக மாறிவிடுகின்றனர். இவ்வாறான சிக்கலான பிரச்சினைகளின் போதுதான், பெற்றார் தம் பிள்ளைகள் மீது நம்பிக்கை வைப்பது முக்கியமானதாக அமைகிறது என வாலிப வயதினர் கருதுகின்றனர். (Faber and Mazlish, 1982)

பாலின்பம் அல்லது போதைப்பொருட்கள் பற்றித் தன் மனதில் எழுந்த கேள்விகளுக்குத் தனது பெற்றார் ஒளிவு மறைவின்றி பதிலளித்ததைத் தான் போற்றி மதிப்பதாக கலிபோர்னியாவில் வளர்ந்த எலிஸபெத் என்ற 20 வயதுப் பெண் கூறுகிறாள். பிள்ளைகள் புதியனவற்றைப் பரீட்சித்துப் பார்க்கக்கூடியவர்கள் என்பதை அவளது பெற்றோர் அங்கீகரித்தனர். அதே வேளை, பாலின்பத்தையும் போதைப் பொருட்களையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி வலிமையான அறிவுறுத்தலொன்றை

அவளுக்கு வழங்கியிருந்தனர். அவளது வகுப்புத் தோழர்கள் சிலரின் பெற்றோர்கள் போதைப் பொருட்கள், மது அருந்துதல் என்பன பற்றிக் கலந்துரையாடுவதையே தடுத்திருந்தனர். அவ்வாறான பிள்ளைகள்தான், தம் பெற்றோருக்குத் தெரியாத வகையில் எப்போதும் அத்தீய பழக்கங்களில் ஈடுபட்டனர். தந்தையோ தாயோ எவ்வித சிறப்பான அறிவுடையவர்களாக இருப்பினும் பிள்ளைகளுக்காக அவர்கள் தீர்மானம் எடுக்காமல், பிள்ளைகளையே தீர்மானமெடுக்கும் செயன்முறையில் ஈடுபடச் செய்வது புத்திசாலித்தனமானது. உண்மையான பொறுப்புணர்வும் சுயாதீனமும் கொண்ட பதின்ம வயதினர் ஆபத்தான செயல்களில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்பு மிகக் குறைவாகும்.

இளைஞர்கள் பிறரில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்படும் போது இயலாமை, பெறுமதியின்மை, மனக்கசப்பு, கோபம் ஆகிய உணர்வுகளால் பீடிக்கப்படுகின்றனர். இதனால் பெற்றோருக்குத் தர்மசங்கடமான நிலையொன்று உருவாகிறது. ஒரு புறத்தில் அனுபவமின்மை காரணமாகப் பிள்ளைகள் தெளிவாக எம்மிலேயே தங்கியிருக்கின்றனர். அவர்களுக்காக நாம் செய்ய வேண்டியவையும் சொல்ல வேண்டியவையும் எடுத்துக்காட்ட வேண்டியவையும் நிறைய இருக்கின்றன. மறுபுறமாக அவர்களுடைய சார்ந்து வாழும் தன்மையானது பகைமைக்கு வழி வகுக்கலாம். அதிர்ஷ்டவசமாக, பிள்ளைகளில் சுயாதீனப்போக்கை ஊக்குவிப்பதற்கு ஏற்ற வாய்ப்புக்கள் அன்றாடம் நிறைய உருவாகின்றன. பிள்ளைகள் தம் சொந்தக்காலில் நிற்பதற்கு உதவக்கூடிய சில திறன்கள் இங்கே தரப்பட்டுள்ளன. (Faber and Mazlish, 1982)

- பெற்றார் தம் பிள்ளைகளின் உணர்வுகளுக்குச் செவிமடுக்கும் போது அல்லது தமது உணர்வுகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது அல்லது தம்மோடு சேர்ந்து பிரச்சினை தீர்க்க அவர்களை அழைக்கும் போதெல்லாம் அவர்களது சொந்தக்காலில் நிற்கும் ஆற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது. ஒரு பெண் தனது அயலவர் ஒருவரைப்பற்றிப் பாராட்டும் போது "அவர்தான் மிக உன்னதமான தாய். அவர் தனது பிள்ளைக்காக அனைத்தையும் செய்கிறார்" எனக் கூறினார். நல்ல தாய் என்பவர் பிள்ளைகளுக்காக அனைத்தையும் செய்து கொடுப்பவர் என்ற நம்பிக்கையுடனேயே பலர்



வளர்ந்துள்ளனர். இந்தத் தாய்மார் பிள்ளைகளுக்காகச் சிந்திப்பதையும் தாமே செய்கின்றனர். இத்தகைய அளவுக்கு மீறிய கட்டுப்பாட்டின் காரணமாக அற்ப விஷயங்கள் தொடர்பான வாக்குவாதங்கள், மனத்திடம் சம்பந்தமான போட்டிகள், பெருமளவு மனவிரக்தி என்பனவே விளைகின்றன.

• பிள்ளைகளுக்கே உரிய பொறுப்புக்களைப் படிப்படியாக அவர்களுக்குக் கையளிப்பது பெற்றோரின் கடமையாகும். ஏதேனுமொன்றில் தாம் தலையிடத் தொடங்குவது போல் பெற்றார் உணரும் போது "இதில் எனக்கு ஏதேனும் தெரிவுகள் உண்டா? நிலைமையை நான் பொறுப்பேற்க வேண்டுமா? பிள்ளைகளைப் பொறுப்பேற்கச் செய்யலாமா?" போன்ற வினாக்களைத் தம்மிடமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

• பெற்றார் தம்மைத் தாமே பின்வருமாறு அடிக்கடி கேட்டுக் கொள்வது சிறந்த பழக்கமாகும்: 'பிள்ளையை என்மீது தங்கியிருக்கச் செய்யும் வகையில் நான் செய்வது அல்லது கூறுவது யாது?' - அதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். 'எனது பிள்ளையின் சுயாதீனத் தன்மையை ஊக்குவிப்பதற்கு நான் செய்யக்கூடியது என்ன?' - அதனைச் செய்யுங்கள்.

நம்ப முடியாத உண்மைக் கதை

இந்தக் கதையை ஒரு தாய் கூறினார்: எனது மூன்று பிள்ளைகளுக்கும் நான் முற்றாகத் தேவைப்படுகிறேன் என்பதை எண்ணும் போது எனக்கு ஏற்பட்ட மனத்திருப்தி எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. எனவே, என்னைவிடத் திறமையான முறையில் ஒரு பொறிமுறைக் கடிகாரம் அவர்களை நித்திரையிலிருந்து எழுப்பிவிட முடியும் என்பதை துக்கமும் மகிழ்ச்சியும் கலந்த உணர்வுடனேயே கண்டு கொண்டேன். அதே போன்று பிள்ளைகள் தாமாகவே வாசித்துக்கொள்ளப் பழகிய பின் நித்திரைக்கு முன்னர் கதைகள் வாசிக்கும் எனது கடமையைக் கைவிட்ட போதும் அதே கலப்புணர்வுகள் தான் ஏற்பட்டன. அவர்கள் சுயாதீனமாக வளர்வது தொடர்பாக எனது உள்ளத்தில் ஏற்பட்ட முரண்பாடான மனவெழுச்சிகளே பாலர் பள்ளி ஆசிரியை ஒருவர் கூறிய ஒரு கதையை நான் புரிந்து கொள்ள உதவின. தமது மகனுடன் வகுப்பில் வந்து உட்கார்ந்து கொள்ளும் ஓர் இளம் தாய்க்கு, அவர் அப்படி உட்கார்வது அவசியமல்ல என்பதைச் சிரமப்பட்டு உணரச்செய்தார் அந்த ஆசிரியர். தாய் புறப்பட்டுச் சென்று ஐந்து நிமிடங்களின் பின்னர் அப்பிள்ளைக்குக் கழிவறைக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. கழிவறைக்குச் செல்லுமாறு ஆசிரியர் தூண்டிய போது, "அம்மா இங்கே இல்லாததால் என்னால் போக முடியாது. ஏனெனில், நான் சிறுநீர் கழித்து முடிந்ததும் அவர் கை தட்டுவார்" என அப்பிள்ளை மனவருத்தத்துடன் முணுமுணுத்தது. அதற்கு "கழிவறைக்குப்போய் சிறுநீர் கழித்து முடித்த பின்னர் உமக்காக நீரே கை தட்டிக்கொள்ளும்" என ஆசிரியர் கூறினார். இதைக்கேட்ட பிள்ளை மனக்குழப்பமடைந்தது. எனினும், ஆசிரியர் அதனைக் கழிவறைக்கு அழைத்துச் சென்று உள்ளே அனுப்பிவிட்டு வெளியே காத்திருந்தார். சில நிமிடங்களின் பின்னர் கை தட்டும் ஒலி அவருக்குக் கேட்டது.

அன்று பின்னேரம் ஆசிரியருக்கு போன் பண்ணிய அத்தாய், 'அம்மா, இப்போ எனக்கு நானே கை தட்டிக் கொள்ளலாம். இதற்குப் பின்னர் நீங்கள் கழிவறைக்கு வரத் தேவையில்லை' எனக் கூறிக்கொண்டே தனது பிள்ளை வீட்டுக்குள் வந்ததாகச் சொன்னார்.

அவ்வாசிரியர் என்னைப் பார்த்துச் சொன்னார்: "நீங்கள் நம்ப மாட்டீர்கள். தனது மகனின் செயலால் தான் மனமுடைந்து போயிருப்பதாக அத்தாய் சொன்னார்."

பிள்ளைகளை மன முறிவிலிருந்து பாதுகாப்பதற்கு நாம் முயற்சிக்கும் போது அவர்கள் எதிர்பார்ப்பதையும் முயற்சிப்பதையும் கனவு காண்பதையும் சாதிப்பதையும் தடுக்கிறோம்

தெரிவுகளைச் செய்யப் பிள்ளைகளை அனுமதியுங்கள்

அரை டம்ளர் பால் வேண்டுமா அல்லது முழு டம்ளர் பால் வேண்டுமா? முறுகிய அப்பம் வேண்டுமா அல்லது முறுகாத அப்பம் வேண்டுமா? எனப் பிள்ளையிடம் கேளுங்கள். ஒவ்வொரு சிறிய தெரிவும் தன் வாழ்க்கையின் மீது பிள்ளைக்கு கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்குரிய இன்னொரு சந்தர்ப்பமாக அமைந்து விடுகிறது. தெரிவுகள் ஏதும் வழங்கப்படாத போது பிள்ளையிடம் மனக்கசப்பும் பிடிவாதமும் உருவாகின்றன.

எப்போதும் கட்டளைகளையே பிள்ளை செவிமடுக்கிறது:

'இப்போது மருந்து குடிக்க வேண்டும்'

'மேசையின் மீது மேளம் கொட்டுவதை நிறுத்து'

'இப்போது போய் நித்திரை கொள்'

நாம் பிள்ளைக்குத் தெரிவொன்றை வழங்க முடியுமாயின் அதன் மனக்கசப்பைக் குறைப்பதற்கு அது போதுமானதாக இருக்கும்.

"உமக்கு மருந்து உட்கொள்ள விருப்பமில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதனை அப்பிள் சாற்றுடன் குடிப்பது எளிதாக இருக்குமா? ஆரஞ்சு சாற்றுடன் குடிப்பது எளிதாக இருக்குமா?"

"நீர் மேளம் கொட்டுவது எனக்குத் தொல்லையாக இருக்கிறது. ஒன்றோ கொட்டுவதை நிறுத்தி விட்டு இங்கே நிற்கலாம்; அல்லது உமது அறைக்குச் சென்று கொட்டலாம். நீரே தீர்மானித்துக்கொள்ளலாம்."

"இப்போது அம்மாவும் அப்பாவும் உரையாடும் நேரம்; நீர் நித்திரை கொள்ளும் நேரம். இப்போது நித்திரை கொள்ளப் போகிறீரா? அல்லது போய்க் கட்டிலில் அமர்ந்து கொண்டு சிறிது ளையாடி விட்டு நித்திரை வரும் போது எம்மை அழைக்கப் போகிறீரா?"

தாம் ஓய்வு பெறுவதற்குரிய கட்டத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதற்கு நாம் அதிக சிரமப்பட வேண்டிய கூட்டத்தினர் துயில் கொள்ள வேண்டிய பிள்ளைகளே. (Brown, 1994)

வற்புறுத்தி வழங்கப்படும் ஒரு தெரிவு தெரிவொன்றே அல்ல. பிள்ளையைக் கட்டுப்படுத்துவதற்குரிய இன்னொரு வழியாகவே அது அமைகிறது. இதற்கொரு மாற்றுவழி, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தெரிவுகளை முன்வைக்குமாறு பிள்ளையைக் கேட்டுக் கொள்வதாகும். ஒரு தந்தை பின்வருமாறு கூறினார்: "நானும் எனது மனைவியும் எமது மூன்று வயது மகன் ஹனீயுடனும் கைக்குழந்தையுடனும் வீதியைக் கடக்கத் தயாரானோம். தன் கையைப் பிடித்து அழைத்துச் செல்வதை ஹனீ விரும்புவதில்லை. எப்போதும் - சில வேளைகளில் நடுத்தெருவில் வைத்து - தன் கையை விடுவித்துக்கொள்ள அவன் போராடுவான். அன்று பாதையைக் கடக்க முன்னர் 'ஹனீ, நீர் அம்மாவின் கையை அல்லது எனது கையைப் பிடித்துக் கொள்ளலாம். அல்லது இது தொடர்பாக உமக்கு வேறு ஏதும் ஐடியா இருக்கிறதா?' எனக் கேட்டேன். சிறிது நேரம் சிந்தித்து விட்டு 'நான் குழந்தையின் தள்ளுவண்டியைப் பிடித்துக் கொள்கிறேன்' என்றான் ஹனீ. அவனுடைய தெரிவு எமக்கும் திருப்தி தருவதாக அமைந்திருந்தது."

பிள்ளையின் போராட்டத்திற்கு மதிப்பளியுங்கள்

ஏதேனுமொன்று 'இலகுவானது' எனப் பிள்ளைகளிடம் கூறுவது அவர்களுக்குப் பயனளிக்காது. இலகுவான ஒன்றைச் செய்து முடிப்பதில் அவர்கள் வெற்றி பெற்றாலும் ஒன்றைச் சாதித்தோம் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படாது. அதைச் செய்வதில் அவர்கள் தோல்வியுற்றால் எளிதான ஒன்றைச் செய்ய முடியாமல் போய்விட்டதே என நினைப்பார்கள். அதற்குப் பதிலாக "இது எளிதல்ல; ஆனால், உங்களால் செய்ய முடியும்" அல்லது "அது கஷ்டமானதாக இருக்கலாம்" எனக் கூறினால் அவர்களுக்கு வித்தியாசமான செய்தியொன்று வழங்கப்படும். அவர்கள் வெற்றி பெற்றால் "கஷ்டமான ஒன்றைச் செய்து முடித்தோமே" என்று திருப்தியடையலாம். தோல்வியுற்றால் "அது கஷ்டமானது தானே" என எண்ணி மன ஆறுதல் பெறலாம்.

"அது கஷ்டமானதாக இருக்கலாம்" எனக் கூறும் போது பெற்றார் பொய் கூறுவதாகச் சிலர் நினைக்கலாம். எனினும், அனுபவமற்ற பிள்ளை யொன்றின் கண்ணோட்டத்தில் முதற்தடவையாகச் செய்யப் போகும் ஒரு செயல் கஷ்டமானதாகவே தோன்றும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ("அது கஷ்ட மாக இருக்கும் என உறுதி யாகக் கூறுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிக் கூறினால் "இதை ஏன் என் மீது சுமத்த வேண்டும்? இன்னொருவருக்குக் கொடுக்கலாமே" எனப் பிள்ளை நினைக்கக்கூடும்.)

சில பெற்றாருக்குத் தமது பிள்ளைகள் ஒரு வேலையைச் செய்ய முயற்சித்துச் சிரமப்படுவதைப் பார்க்கச் சகிப்பதில்லை. எனினும், இந்நிலையில் பிள்ளைக்காக அந்த வேலையைச் செய்து கொடுப்பதற்குப் பதிலாக அதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கலாம். உதாரணமாக, பிள்ளை கதவைத் திறக்கச் சிரமப்படும் போது "கதவைத் தள்ளிப் பிடித்துக்கொண்டு சாவியைத் திருகினால் பயனளிக்கலாம்" எனக் கூற முடியும். இங்கு 'பயனளிக்கலாம்' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது உதவியாக இருக்கும். ஏனெனில், குறிப்பிட்ட முறை பயனளிக்காமல் போனாலும் பிள்ளை தன் மீது குறைபட்டுக்கொள்ள மாட்டாது.

அளவுக்கதிகமாகக் கேள்வி கேட்காதீர்கள்

"எங்கே போனீர்?.." "வெளியே." "என்ன செய்தீர்?.." "ஒன்றுமில்லை." இவ்வாறு தாம் விடையளிக்க விரும்பாத அல்லது தயாரில்லாத வினாக்களைப் புறக்கணிப்பதற்குப் பிள்ளைகள் உத்திகளைக் கையாள்வார்கள். சில வேளைகளில் "எனக்குத் தெரியாது", "எனக்குத் தொல்லை தராமல் என்னை விட்டு விடுங்கோ" எனவும் அவர்களது பதில்கள் அமையலாம். பெற்றார் கேள்விகளே கேட்கக் கூடாது என்பது இதன் கருத்தல்ல; தமது கேள்விகளின் விளைவுகள் பற்றி உணரக்கூடியவர்களாக இருப்பதே முக்கியம்.

வினாக்களுக்கு விடையளிக்க அவசரப்பட வேண்டாம்

வளர்ச்சியடையும் போது பிள்ளைகள் மூளையைக் குழப்புகின்ற பலவிதமான கேள்விகளைக் கேட்பார்கள்: "வானவில் என்றால் என்ன?" "மழை எங்கிருந்து

பெய்கிறது?" "பிள்ளைகள் கட்டாயம் பள்ளிக்கூடம் போக வேண்டுமா?". இவ்வாறான கேள்விகளுக்கு உடனடி யாகப் பொருத்தமான விடைகளைத் தேடுவதற்குப் பெற்றார் முயற்சிப் பார்கள். பொதுவாக இவற்றுக் கான விடைகள் பற்றிப் பிள்ளைகள் ஏற்கனவே சிந்தித்திருப்பர். தங்களது சிந்தனைகள் பற்றி மேலும் ஆராய்வதற்கே அவர்கள் முயற்சிக்கின் றனர். கேள்விகள் முக்கியமானவையாக இருப்பின் அவற்றுக்குரிய திருத்தமான விடைகளை வழங்குவதற்குரிய அவகாசம் பின்னர் கிடைக்கலாம். பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் உடனடியாக விடைகளை வழங்குவது பயனுடையதாக இருக்காது. அப்படி வழங்குவது பிள்ளைகள் சார்பில் பெற்றோரே மனப்பயிற்சிகள் செய்வது போன்றதாகும். பிள்ளைகளது வினாக்களை மேலதிகப் பரிசீலனைக்காக அவர்களுக்கே திருப்பிச் சமர்ப்பிப்பது பயனளிக்கும்:

"அதைப்பற்றி யோசிக்கிறீரா? நீர் என்ன நினைக்கிறீர்?"

பெற்றார் அதே கேள்வியை மீட்டவும் முடியும்.

"ஏன் ஒருவர் தாம் நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது?" போன்ற கேள்வியொன்றின் போது கேள்வி கேட்டவருக்குப் பின்வரும் விதத்தில் பாராட்டுத் தெரிவிக்கலாம்:

"நீர் கேட்கின்ற கேள்வி மிக முக்கியமானது. பல நூற்றாண்டுகளாக தத்துவஞானிகள் இதைக் கேட்டிருக்கிறார்கள்". பெற்றார் அவசரப்பட வேண்டியதில்லை. பதிலைத் தேடிக் கண்டுபிடிக்கும் செயல்முறையே பெறுமதி மிக்கது.

வீட்டுக்கு வெளியே உள்ள வளங்களைப் பயன்படுத்துமாறு பிள்ளைகள் தூண்டப்பட வேண்டும்

தாம் தம் குடும்பத்தார் மீது தங்கியிருக்கிறோம் என்ற பிள்ளைகளின் உணர்வைக் குறைக்க வேண்டும். வீட்டுக்கு வெளியே, பயன்படுத்தப்படுவதற்காகக் காத்திருக்கின்ற பெறுமதி மிக்க வளங்களைக் கொண்ட பரந்த சமுதாயமொன்று இருக்கிறது என்பதை அவர்களுக்குக் காட்டிக்கொடுப்பது இதற்குரிய வழியாகும். உலகம் என்பது ஓர் அந்நியமான இடமல்ல; தேவையான போது பெற்றுக்கொள்வதற்கு உதவிகள் அங்கே தாராளமாக இருக்கின்றன.

இதனால், பிள்ளைகளுக்குக் கிடைக்கும் வெளிப்படையான நன்மைகள் ஒருபுறமிருக்க எந்நேரமும் கட்டுப்பாட்டைத் தம் கையில் வைத்திருக்கும் நிலையிலிருந்த பெற்றோருக்கு ஓரளவு நிவாரணமும் கிடைக்கிறது. சிறந்த உணவுப் பழக்கங்கள் பற்றியும் தனியாள் சுத்தத்தைப் பேணுவது பற்றியும் பொதுச் சுகாதாரத் தாதியைக் கொண்டு பிள்ளைகளுக்கு விளக்கம் வழங்கலாம். அதிகமாக இனிப்புப் பண்டங்கள் தின்றால் பற்களுக்கு என்ன நடக்கும் என்பது பற்றிப் பல் வைத்தியரிடம் விளக்கம் பெறலாம். புத்தகங்களுக்குச் சேதம் ஏற்படாமல் அவற்றைப் பயன்படுத்துவது எப்படி என்பது பற்றி நூலக உதவியாளரிடம் அறிவுறுத்தல் பெறலாம். இவ்வாறான வெளி வளங்கள் அனைத்தும் பெற்றாரின் பல மணி நேரப் போதனைகளைப் பிரதியீடு செய்ய முடியும்.

நம்பிக்கையைக் கிள்ளி எறியாதீர்கள்

வாழ்க்கையில் சந்தோஷத்தின் பெரும் பகுதியானது கனவு காண்பதிலும் கற்பனைத் திட்டங்கள் போடுவதிலும் எதிர்பார்ப்பதிலும் திட்டமிடுவதிலுமே தங்கியிருக்கிறது. பிள்ளைகள் ஏமாற்றமடைந்து மனமுடைவதைத் தவிர்க்கும் நோக்குடன் மேற்சொன்னவற்றின் மூலம் கிடைக்கும் முக்கியமான மகிழ்ச்சி அனுபவங்களைப் பெற்றார் இல்லாமற் செய்துவிடக்கூடாது.

பெற்றாருக்குச் சில உதவிக் குறிப்புகள்

பிள்ளைகளில் சுயாதீனப் போக்கை வளர்ப்பதற்குரிய மேலதிக முறைகள் சில:

அவர்களது உடலை அவர்களிடமே விட்டு விடுங்கள்

பிள்ளைகளின் கண்களின் மீது விழும் தலை முடியை பின்னோக்கித் தள்ளி விடுதல், அவர்களது தோள்களை நிமிர்த்தி விடுதல், வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் சேர்ட்டின் அடிப்பகுதியை உள்ளே செருகி விடுதல், மேலங்கியின் கொலரை சரி செய்து விடல் போன்றவற்றை அடிக்கடி செய்வதை விட்டும் பெற்றார் தவிர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறான மிதமிஞ்சிய நடத்தை, தமது உடலின் அந்தரங்கத்தில் ஊடுறுவல் செய்வதாகப் பிள்ளைகள் உணர்வர்.

பிள்ளைகள் எவ்வளவு சிறியவர்களாக இருப்பினும் அவர்களது முன்னிலையில் அவர்களைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

"முதலாம் வகுப்பில் இவருக்கு வாசிக்கக் கஷ்டமாக இருந்ததால் இவர் சந்தோஷமாக இருக்கவில்லை; இப்போது ஓரளவு வாசிக்கிறார்" அல்லது "இவர் அப்படித்தான்; ஆட்களோடு பேச வெட்கப்படுவார்".

மேற்சொன்னவாறு பெற்றார் தம் பிள்ளையைப் பற்றித் தம் நண்பர் ஒருவரிடம் கூறும் போது, தனது பெற்றார் தன்னைப் பற்றி மேற்சொன்னவாறு கூறியிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதை ஒவ்வொருவரும் கற்பனை செய்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு தம்மைப்பற்றி உரையாடுவதைக் கேட்கும்போது பிள்ளைகள் மனச் சங்கடத்துக்கு உள்ளாவர். இவ்வாறு செய்யும் போது அவர்கள் வெறும் பண்டங்களாகவும் உடைமைகளாகவும் நடத்தப்படுகின்றனர்.

பிள்ளைகள் தாமே விடையளிக்க விடுங்கள்

இவர் புதிய தங்கையுடன் இரக்கமாக இருக்கின்றாரா? இவர் ஏன் வெளியே போய் விளையாடுவதில்லை? போன்ற கேள்விகள் குறித்த பிள்ளையின் முன்னிலையிலேயே பெற்றாரிடம் நிதமும் கேட்கப்படுகின்றன.

இந்நிலையில் பிள்ளையின் சுயாதீனத்தை மதிக்கும் வகையில் பெற்றார் கேள்வி கேட்டவரிடம் பின்வருமாறு கூற வேண்டும்: "இதற்கு அமீன் தான் விடை சொல்ல வேண்டும். அவருக்குத்தான் அது பற்றித் தெரியும்."

உங்கள் பிள்ளை அடையப்போகும் 'ஆயத்த நிலைக்கு' மதிப்புக் கொடுங்கள்

சில வேளைகளில் ஒரு பிள்ளை ஏதேனுமொரு செயலைச் செய்ய வேண்டுமென நினைக்கும். ஆனால், அதற்குரிய மனவெழுச்சி ரீதியான அல்லது உடல் ரீதியான தயார் நிலையை அடைந்திருக்காது. உதாரணமாக, ஒரு சிறுமி வளர்ந்தவர்களைப் போல் கழிவறையைப் பயன்படுத்த விரும்புகிறாள்; ஆனால், அவளால் முடியாமலிருக்கிறது. ஒரு சிறுவன் தனது அண்ணனைப் போல் தடாகத்தில் நீந்த விரும்புகிறான்; ஆனால், நீரைக் கண்டாலே அவனுக்குப் பயமாக இருக்கிறது. ஒரு சிறுமி தனது பெருவிரல் சூப்பும் பழக்கத்தைக் கைவிட விரும்புகிறாள்; எனினும், அவள் களைப்புற்றிருக்கும் வேளையில் அச்செயல் அவளுக்குப் புத்துணர்வு தருவதாக உணர்கிறாள்.

இவ்வாறான தருணங்களில் சிறுவர்களைப் பலவந்தப் படுத்தவோ அடிக்கடி வலியுறுத்தவோ சங்கடத்துக்குள்ளாக்கவோ கூடாது. பதிலாக, பெற்றார் பிள்ளை மீதுள்ள நம்பிக்கையைச் சாதகமான முறையில் வெளிப்படுத்த முடியும்:

"மிக விரைவில் நீங்கள் அம்மாவையும் அப்பாவையும் போல் கழிவறையைப் பயன்படுத்துவீர்கள்."

"அது பற்றிக் கவலையில்லை; நீங்கள் ஆயத்தமான பின் நிச்சயமாக நீரில் இறங்குவீர்கள்."

"விரல் சூப்புவதை நிறுத்த வேண்டுமென நீங்கள் தீர்மானித்த பின்னர் அதனைக் கைவிட்டு விடுவீர்கள்."

'இல்லை', 'முடியாது' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் கவனமாக இருங்கள். தமது பிள்ளைகளின் ஆசைகளையும் வேண்டுகோள்களையும் நிராகரிக்க வேண்டிய நிலை பெற்றாருக்கு அடிக்கடி ஏற்படுகிறது. எனினும், ஒரு பிள்ளையைப் பார்த்து 'இல்லை' அல்லது 'முடியாது' என மொட்டையாகக் கூறுவது அவர்களது சுயாதீனத்தின் மீது நடத்தப்படும் ஒரு தாக்குதலாக அமைகிறது. இதனால் அவர்கள் எரிச்சலடைந்து கூச்சலிடுவார்கள் அல்லது மனமுடைந்து வாடிப்போவார்கள். சில பிள்ளைகள் "ஏன் 'முடியாது' என்கிறீர்கள்? நீங்கள் என்னோடு இரக்கமில்லை" எனக்கூறி பெற்றோருடன் மோதுவார்கள். மிகப் பொறுமையான பெற்றாரையும் இது களைப்புக்குள்ளாக்கிவிடும். இதற்காகப் பெற்றார் எல்லாவற்றுக்கும் விட்டுக்கொடுத்து 'சரி' எனத் தலையாட்ட வேண்டியதில்லை. அதிர்ஷ்டவசமாக இவ்வாறான மோதல்களைத் தவிர்த்து, பெற்றார் கண்டிப்பாக இருப்பதற்கு உதவக்கூடிய நல்ல மாற்று வழிகள் இருக்கின்றன. உதாரணமாக, பிள்ளைகள் நடமாடித் திரிவதற்குப் பாதுகாப்பானதாக வீட்டை அமைத்து வைத்தல் அல்லது 'இல்லை', 'முடியாது' என்று கூறாமல் பிள்ளையின் கவனத்தை வேறு திசையில் திருப்பி விடுதல்.

பிள்ளையுடன் கலந்தாலோசியுங்கள்

பெற்றோர்களுள் பலர் தம் பிள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட பல விடயங்களை அவர்களுடன் கலந்தாலோசிப்பதில்லை. பிள்ளை பரீட்சையில் சித்தியடைந்ததற்குரிய வெகுமதியாகக் கதைப்புத்தகமொன்று வாங்கிக்கொடுக்க விரும்பினால் தனக்கு விருப்பமான கதைப்புத்தகத்தைத் தெரிவு செய்வதற்குப் பிள்ளைக்கு இடமளிப்பது நல்லது. அதே போன்று பிள்ளைக்கு விளையாட்டுப் பொருளொன்று வாங்கிக்கொடுக்க விரும்பினால் அதன் தெரிவு தொடர்பாகப் பிள்ளையுடன் கலந்தாலோசிப்பது நல்லது. இல்லாவிடில், பெற்றார் தமது விருப்புக்கு ஏற்பவே விளையாட்டுப் பொருளை வாங்குவர். இதன் விளைவாக, பிள்ளை சலிப்படையக்கூடும். பெற்றார் தம் விருப்பு வெறுப்புக்களைப் பிள்ளைகளின் மீது திணிக்காமல் தீர்மானம் மேற்கொள்வதில் பிள்ளைகளைக் கலந்து கொள்ளச் செய்வது முக்கியம். இவ்வாறு பிள்ளைகளைப் பங்காளிகள் போல் நடத்தும் போது இரு தரப்பினரதும் மனப்பாங்குகளில் முன்னேற்றம் ஏற்படும்.

உமர் இப்ன் அல் கத்தாப் (றழி) கூறினார்கள்:

உங்கள் பிள்ளையுடன் முதல் 7 வருடங்களும் விளையாடுங்கள். அடுத்த ஏழு வருடங்களிலும் அவர்களுக்குக் கற்பித்து அவர்களை நன்னெறிப்படுத்துங்கள். மூன்றாவது ஏழு வருடங்களிலும் பிள்ளையை உங்கள் தோழராக்கிக் கொள்ளுங்கள். அதன் பிறகு அவனைச் சுதந்திரமாக விட்டு விடுங்கள்.

சில நடத்தைப் பண்புகளை மாத்திரம் நற்பண்புகள் எனத் தனிப்படுத்திக் கூறுவது எலும்புக்கூட்டை உயிருள்ள உடல் எனக் கூறுவதற்கு ஒப்பானதாகும். ஒழுக்க சீலம் என்பது முழுமையான நடத்தைப் பண்பையே குறிக்கிறது. முழுமையான நடத்தைப் பண்பானது மனிதனை – அவனது உடல் கட்டமைப்பு, வெளியில் காட்டப்படும் பண்புகள் என்பவற்றுடன் – மொத்தமாகக் குறித்து நிற்கிறது. நற்பண்பைக் கொண்டிருத்தல் என்பது வெறுமனே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில பண்புக்கூறுகளைக் கொண்டிருப்பதைக் குறிக்கவில்லை. தனது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மற்றவர்களோடு சேர்ந்து பழகுவதன் மூலம் ஒருவர் அடையக்கூடிய முழுமையானதும் குறைபாடற்றதுமான ஒரு நிலையையே இது குறிக்கின்றது. (John Dewey)

உங்கள் பிள்ளைகளுக்குப் பொறுப்புணர்வு மிக்க சுயாதீனத்தைக் கற்றுக் கொடுங்கள்

இங்கு சிபாரிசு செய்யப்படுகின்ற சுயாதீனமானது பொறுப்புணர்வு மிக்கதாகவும் விழுமியங்களைக் கொண்டதாகவும் சரியான முறையில் நெறிப்படுத்தப்பட்டதாகவும்

இருக்கும். அது குழப்பம் நிறைந்ததாகவோ செல்லும் திசை தெரியாததாகவோ இருக்கக் கூடாது. இவ்வாறான ஒழுங்கற்ற சுயாதீனமானது, ஒருவர் தன்னை கோட்பாடுகள், விழுமியங்கள், அறநெறிகள் என்பவற்றிலிருந்து விடுவித்துக்கொள்ளும் போதுதான் உருவாகிறது. பெற்றார் தம் பிள்ளைகளில் அறநெறி சார்ந்த சுயாதீனத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் சுயமாகவே சரியான தீர்மானங்களை மேற்கொள்வர். பிள்ளைகளை சுயாதீனமும் அறநெறியும் பூண்டவர்களாக மாற்றினால் அவர்களால் எவ்வித சவாலையும் எதிர்கொள்ள முடியுமாக இருக்கும்.

அறிவுரையும் சுயாதீனமும்: மகளும் அவளது தாயும்

பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவது அவர்களது சுயாதீனத்தில் தலையிடுவதாக அமையும் எனப் பெற்றாருக்குக் கூறும் போது அவர்களுள் பலர் மனக்குழப்பம் அடைகின்றனர். இது ஓரளவு மிதமிஞ்சிய போக்கு என்று கூட அவர்கள் நினைக்கின்றனர். பெற்றார் என்ற வகையில் தாம் பெற்றுள்ள அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளும் தமது உரிமையை ஏன் பறிகொடுக்க வேண்டும் என அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

உதாரணம் # 1

விடாப்பிடியான ஒரு தாயினதும் அவரது மகளினதும் கதையைக் கவனியுங்கள். "எனது மகளுக்கு ஒரு பிரச்சினை ஏற்படும் போது அவள் ஏன் எனது ஆலோசனையினால் பயன் பெறக்கூடாது? தனது நண்பி பட்டம் பெற்றதைக் கொண்டாடும் வைபவத்துக்குப் போவதா இல்லையா என எனது மகளால் முடிவு செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம், அவ்வைபவத்தில் கலந்துகொள்ளவிருக்கும் சில யுவதிகளை அவளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் எப்போதும் குசுகுசுவென இரகசியம் பேசிக்கொண்டும் பட்டப்பெயர்கள் சொல்லிக்கொண்டும் இருப்பார்கள். அவள் அங்கு போகத்தான் வேண்டுமென அவளுக்கு நான் கூறுவதில் என்ன தவறு இருக்கிறது? அவ்வாறு போகாவிட்டால் அவள் தனது நண்பியைக் கைவிட்டது போல் ஆகிவிடுமே?"

பெற்றார் உடனடி ஆலோசனைகளை வழங்கும் போது பிள்ளைகள் தம்மை முட்டாள்கள் என நினைக்கக்கூடும் ("இந்த யோசனை எனக்கு ஏன் வரவில்லை?"); மனக்கசப்படையலாம் ("என்னுடைய வாழ்க்கையை எப்படி ஓட்ட வேண்டும் என எனக்குச் சொல்லித் தரத் தேவையில்லை"); அல்லது எரிச்சலடையலாம் ("அது பற்றி ஏற்கனவே நான் சிந்திக்கவில்லை என நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?"). தாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிப் பிள்ளைகள் சுயமாகவே முடிவெடுக்கும் போது அவர்களது தன்னம்பிக்கை வளர்ச்சியடைவதோடு தமது முடிவுகளுக்கான பொறுப்பை ஏற்கவும் அவர்கள் தயாராகின்றனர்.

"எனது பிள்ளைக்குப் பிரச்சினையொன்று ஏற்பட்டிருக்கும் போது அது பற்றி நான் ஏதாவது செய்ய வேண்டுமா? சில தடவைகளில் 'இது உங்களது பிரச்சினை; அதனை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள்' என நான் கூறிய போது எனது மகள் பெரிதும் மனக்குழப்பமடைவது தெரிந்தது." தமது பிரச்சினைகளைப் பெற்றார் புறக்கணிக்கும் போது துயரமும் கைவிடப்பட்ட உணர்வும் பிள்ளைகளுக்கு ஏற்படும். எனினும், புறக்கணித்தல், உடனடியாக அறிவுரை வழங்குதல், ஆகிய இரு அந்தங்களுக்குமிடையில் பெற்றார் செய்யக்கூடியவை நிறைய இருக்கின்றன. உதாரணமாக:

- பிள்ளைகளின் சிக்கலான எண்ணங்களையும் உணர்வுகளையும் தெளிவு படுத்திக்கொள்வதற்குப் பெற்றார் உதவ முடியும். "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உங்களுக்கு இரண்டு வகையான உணர்வுகள் இருப்பது தெரிகிறது. நீங்கள் வைபவத்தில் கலந்து கொள்ள விரும்புகிறீர்கள். ஆனால், நீங்கள் விரும்பாத அந்த யுவதிகளுக்கு முகங்கொடுக்கத் தயாரில்லை".
- பிரச்சினையை ஒரு தனி வினாவாக அவர்கள் எளிமைப்படுத்தலாம். "ஆகவே, இப்போதுள்ள பிரச்சினை, அந்தப் பட்டப்பெயர் கூறும் யுவதிகளைச் சமாளித்துக்கொண்டு வைபவத்தில் கலந்து கொள்ள வழி என்ன?" இவ்வாறு கேள்வியை முன்வைத்த பின்னர் பெற்றார் மௌனமாக இருந்து விட வேண்டும். அவர்களுடைய அமைதி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பிள்ளைகளுக்கு இடமளிக்கும்.
- வீட்டுக்கு வெளியே காணப்படும் வளங்கள் பற்றிப் பிள்ளைகளுக்குச் சுட்டிக்காட்டுங்கள். "பதின்ம வயதினர் பல்வேறு வகையான சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பது எப்படி என்ற விடயம் பற்றிய சில நூல்களைப் பொது நூலகத்தில் கண்டேன். அவற்றில் என்ன சொல்லப்படுகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பக்கூடும்."

"மேற்சொன்னபடி எல்லாவற்றையும் நான் செய்து விட்டேன் என எடுத்துக்கொள்வோம். அதன் பின்னர் ஒரு தீர்வு என் மனதில் உதிக்கிறது. எனது மகள் அதைப்பற்றி நிச்சயமாக நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள். நான் அதனை அவளிடம் கூறலாமா?" ஆம், நிச்சயமாக. ஆனால், அதற்கு முன்னர் அவள் சிந்திப்பதற்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும். அவள் தனது பெற்றாரின் யோசனைக்குச் செவிமடுக்கக் கூடும். ஆனால், அவளது சுயாதீனத்திற்கு மதிப்பளிக்கும் விதத்தில் அது முன்வைக்கப்பட வேண்டும். "நகைச்சுவை மிகுந்த அந்த உரையாடல் CDயை நீங்கள் வைபவத்திற்கு எடுத்துச் சென்றால் எப்படியிருக்கும்? அந்த யுவதிகள் அதனை ரசித்துச் சிரிப்பதில் தம்மை மறந்து விடுவார்கள். உங்களுக்குத் தொல்லை தர மாட்டார்கள்."

ஆலோசனைகளை முன்வைக்கும் போது "இப்படிச் செய்தால் எப்படியிருக்கும்?" என்பது போல் வற்புறுத்தலற்ற முறையில் கூற வேண்டும். 'அர்த்தமுள்ளது' போன்று எமக்குத் தோன்றும் ஓர் ஆலோசனை 'அர்த்தமற்றது' போல் பிள்ளைகளுக்குத் தோற்றமளிக்கக்கூடும்.

"எனது மகள் கட்டாயமாக அவ்வைபவத்திற்குப் போய்த்தான் ஆக வேண்டும்" என நான் நம்புவதாக வைத்துக்கொள்வோம். இந்நிலையிலும் நான் மௌனமாக இருக்க வேண்டுமா? பிள்ளை தனது பிரச்சினை பற்றித் தேடி ஆராய்ந்த பின்னர் தனது பெற்றோரின் யோசனைகளுக்குச் செவிமடுப்பது பயனளிக்கும்.

"சில பெண்களின் நடத்தைக்காக நான் அவ்வைபவத்திற்குப் போகாமல் இருப்பது எனக்குக் கவலையைத் தரும். சிறிது தியாகம் செய்ய நேர்ந்தாலும் தோழி பட்டம் பெற்றது தொடர்பான வைபவத்தில் கலந்து கொண்டு அவளை மகிழ்விப்பது முக்கியமானதே."

இள வயதினர் தம் பெற்றோரின் விழுமியங்கள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். தற்போதைய நிலையில் அவற்றுக்கு ஏற்ப நடக்க அவர்கள் விரும்பாவிட்டாலும் சரியே. இதன் மூலம் அவர்கள் தம் சிந்தனையில் எடுப்பதற்காக ஏதோவொன்றைப் பெற்றோர் அவர்களுக்கு வழங்குகின்றனர். அத்தோடு கற்றுக்கொள்வதற்காகப் படிப்பினை யொன்றும் வழங்கப்படுகிறது.

உதாரணம் # 2

தாயொருவர் இவ்வாறு கூறினார்: "எந்த உடையை அணிவது என்பது தொடர்பாகத் தினமும் காலையில் எனது மகளுடன் சண்டை ஏற்படுவது வழக்கமாக இருந்தது. இப்போது பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் அவள் விரும்பிய எதனையும் அணிந்து கொள்ள இடமளிக்கிறேன். பள்ளிக்கூட நாட்களில் நான் இரண்டு விதமான உடுப்புத் தொகுதிகளைக் கட்டிலின் மீது பார்வைக்கு வைப்பேன். அவள் தீர்மானிப்பாள்." பள்ளிக்கூடச் சீருடையின் அனுகூலம், இவ்வாறான தெரிவுக்கு இடமில்லாமையே-எனவே, வாக்குவாதங்களுக்கும் தேவை ஏற்படாது.

உதாரணம் # 3

ஸமீனின் தாய் கூறுகிறார்: "எனது மகன் 'ஸ்வெட்டர்' அணிவதா அல்லது தடித்த 'ஜக்கெட்' ஒன்றை அணிவதா என்பது தொடர்பாகத் தினமும் ஏற்பட்டு வந்த சச்சரவுக்கு இறுதியில் நான் முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன். 'ஸமீன்! நான் யோசித்துப் பார்த்தேன். ஒவ்வொரு நாளும் எதை அணிவது என்பது பற்றி உங்களுக்கு நான் கூறாமல் நீங்களே அதனைத் தீர்மானித்துக்கொள்ளலாம். வெளியில் இருக்கும் வெப்பநிலைக்கு ஏற்ப எதனை அணிவது என்பதை முடிவு செய்வோம். அதற்குரிய அட்டவணையொன்றை நாம் தயாரிப்போம்'.என்று அவனிடம் கூறினேன். பின்னர் நாம் கூட்டாக ஓர் அட்டவணை தயாரித்தோம்".

நாம் பெரிய வெப்பமானியொன்றை வாங்கி வெளியே ஒரு மரத்தில் கட்டித் தொங்கவிட்டோம். ஒவ்வொரு நாட் காலையிலும் ஸமீன் வெப்பமானியை அவதானிப்பான். இப்போது எவ்வித வாக்குவாதங்களும் இல்லை. நான் ஒரு மேதை என்ற நினைப்பு எனக்கு!"

வெளி வெப்பநிலை	பொருத்தமான உடை
20^0C அல்லது அதற்கு மேல்	ஸ்வெட்டர் தேவையில்லை
10^0 - 20^0C வரை	ஸ்வெட்டர்
9^0C அல்லது அதற்குக் கீழ்	தடித்த ஜக்கெட்

உதாரணம் # 4

முனா தன் தாயிடம் "நாம் ஏன் விடுமுறைக்கு பாங்கொக் அல்லது சிங்கப்பூர் போன்ற நல்லதோர் இடத்திற்குப் போவதில்லை?" எனக் கேட்டாள். நான் அவளுக்குப் பதில் சொல்லப் போனேன். அப்படிச் செய்வது கூடாது என்பது நினைவுக்கு வந்ததும் நிறுத்திக்கொண்டேன். "நாம் ஏன் போவதில்லை?" என நான் திருப்பிக் கேட்டேன். சமையலறை நெடுகே கால்களை உதைத்தவாறே முனா சொன்னாள்: "எனக்குத் தெரியும்... எனக்குத் தெரியும்... ஏனெனில், அது செலவு கூடியது. சரி, ஆகக்குறைந்தது நாம் Zooக்குச் சரி போவோமா?"

பெற்றார் தம் பிள்ளைகளின் நண்பர்களை விரும்பாவிட்டால் . . .

தமது பிள்ளைகளுக்கு பணிவும் நேர்மையும் கெட்டித்தனமும் மிக்க, மது அருந்துதல், புகைத்தல், போதைப்பொருட்பாவனை முதலிய தீய பழக்கங்கள் இல்லாத நல்ல நண்பர்கள் இருக்க வேண்டுமெனப் பெற்றார் விரும்புகின்றனர். பெற்றார் தம் பிள்ளைகளிடம் சுயாதீனத்தை ஊக்குவிக்கும் அதே வேளையில் அவர்களைப் பாதுகாக்கவும் நாடுகின்றனர். பெற்றாருக்குக் கவலை தருகின்ற நட்புக்களில் பெரும்பாலானவை நீடித்து நிற்பதில்லை. ஆரம்பத்தில் தாம் போற்றி ஆராதித்த நண்பர் உண்மையில் அப்படிச் சிறப்பானவராக இல்லை என்பதைப் பிள்ளைகள் கண்டு கொள்வர். ஆட்சேபனைக்குரிய நட்பொன்றைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பதை விட அதன் இயல்பான போக்கில் விட்டு விடுவது பயனளிக்கும். பிள்ளையின் எத்தகைய தேவையை அந்த நட்பு நிறைவு செய்தது என்பதை அறிந்து அதனை நிறைவு செய்ய முயற்சிப்பது இங்கு முக்கியமாகிறது. அந்த நண்பனிடத்தில் பிள்ளை விரும்பிய அம்சம் என்னவெனப் பிள்ளையிடம் கேட்பதன் மூலம் இதுபற்றி அறிந்து கொள்ள முடியும். அந்த நண்பனை நோக்கிப் பிள்ளைகள் கவரப்படுவதற்கான உண்மையான காரணம் பற்றிய துப்புக்களையும் பிள்ளை தரும் விடையினூடாக அறிந்து கொள்ளலாம்.

பல்வேறு வகையான ஆட்களைக் கையாள்வதற்குப் பிள்ளை கற்றுக்கொள்ள வேண்டும். சில வேளைகளில் நட்புக்கள் அச்சுறுத்துவனவாகவும் ஆபத்துக்கள் நிறைந்தனவாகவும் அமையலாம். சமூக விரோதச் செயல்களில் அல்லது குற்றச்

செயல்களில் ஈடுபடுகின்ற, சண்டையார்வம் மிக்க நண்பர்களுடன் பிள்ளைகள் அணிசேரும் போது இந்நிலை உருவாகலாம். ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையைக் கொண்டவர்களுடன் நட்புறவைத் தவிர்க்கச் செய்வது பெற்றாரின் பொறுப்பாகும்.

பெற்றாரின் ஆதரவும் நம்பிக்கையும் பொறுமையும் பிள்ளைகளின் சமூக உறவாடல்களை மேம்படுத்த உதவும். பிள்ளைகள் உரிய முறையில் மனிதர்களோடு உறவாடவும் தம்மைப் பற்றிய நல்லுணர்வைப் பெறுவதற்கும் தமது செயல்களுக்குப் பொறுப்பேற்கவும் அவர்களுக்கு வழிகாட்டல் தேவைப்படுகிறது.

நீங்கள் உங்கள் மகளின் மீது ஹிஜாபைப் பலவந்தமாகத் திணிக்கிறீர்களா? Noha Beshir எழுதியது

எனது பெற்றார் எதையேனும் செய்யுமாறு ஒருபோதும் வற்புறுத்தியதில்லை. நானே தெரிவுகளைச் செய்ய எனது பெற்றார் அனுமதிக்காத ஒரு சந்தர்ப்பம் கூட என் நினைவிலில்லை. நான் ஹிஜாப் அணிய வேண்டிய தருணம் வந்த போது ''நீ அதனைக் கட்டாயம் அணிய வேண்டும். ஏனெனில், அது உனது சமயத்தின் ஓர் அம்சம்'' என்று என் தாயார் கூறவில்லை. நாம் ஏன் ஹிஜாப் அணிகிறோம் என்பதை விளக்கியஅவர் சில வேலைகளில் அது அசௌகரியமாக இருக்கவும் கூடும் என்றார். ஹிஜாப் அணிகிறோம் என்பதற்காக கோடை காலத்தில் ஸ்வெட்டரும் ஜீன்ஸும் அணியலாகாது என்று கூறிய அவர் ''கனமற்ற துணியில் தைத்த இறுக்கமற்ற நீண்ட காற்சட்டையும் பொத்தான் பொருத்திய மேலங்கியும் அணியலாம். இவை காற்றோட்டத்திற்கு இடமளிக்கும். 'இதனை ஏன் அணிகின்றாய்?' என உன் நண்பர்கள் கேட்டால் 'இதுவே பொருத்தமானது என நான் நம்புவதால் அணிகின்றேன்' என நீ காரணம் கூற முடியும். 'இது எனது சமயத்தின் ஓர் அம்சம்' என்றோ 'எனது பெற்றார் என்னை அணியச் செய்தார்கள்' என்றோ கூறவேண்டியதில்லை'' என்றார்.

நான் அவற்றை ஏன் அணிகிறேன் எனக் கூறிய பின்னர் உண்மையில் சிலர் என்னிடம் வந்து 'நானும் இவற்றைப் போன்ற ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும்' என்றனர். எனது பெற்றார் எப்போதும் எனக்குச் சௌகரியமானவர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்களின்றி என்னால் வாழ முடியாது என்பது இதன் கருத்தல்ல. ஏதோவொரு காரணத்தால் ஒவ்வொரு தடவையும் எனக்கு அவர்கள் மீதுள்ள மதிப்பு அதிகரித்துத்தான் வருகிறது. நான் உண்மையிலேயே என் குடும்பத்தினரை நேசிக்கின்றேன். அவர்களிடம் அனைத்தையும் கூற முடியும் என்பதை நினைக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கும் என் சகோதரிக்கும் இடையில் பெரிய பிணைப்பு ஏற்பட்டுள்ளது. எமது குடும்பத்தைப் பொறுத்தமட்டில் மிகச்சிறந்த அம்சம் என்னவென்றால் அமீரா மூத்தவளாகவும் நான் இளையவளாகவும் இருந்தாலும் எமது குடும்பத்தில் நாமனைவரும் சமமானவர்களாக இருப்பதே! (Beshir and Rida, 1998)

பிள்ளைகள் தாமே தீர்மானங்களை எடுக்க உதவுதல் சுயாதீனத்தை மேம்படுத்தும்

பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் பெற்றார் சுயாதீனத்தைப் பயிற்றுவிக்கலாம்.

- தீர்மானங்களைச் செய்வதற்கான வாய்ப்புக்களைப் பிள்ளைகளுக்கு வழங்குங்கள். (குடும்ப உல்லாசப் பயணத்துக்கான இடத்தைத் தெரிவு செய்தல், குடும்ப வேலைகளை நியாயமான முறையில் பகிர்ந்தளித்தல் முதலியன)
- தமக்கு முன்னாலுள்ள தெரிவுகளை எடை போட்டுப் பார்த்தல், தேவையான தகவல்களைச் சேகரித்தல், தமது தீர்மானங்கள் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளை அனுமானித்தல் போன்றவற்றை எவ்வாறு செய்யலாம் என்பதைப் பிள்ளைகளுக்குக் காட்டிக் கொடுங்கள்.
- தீர்மானங்களின் விளைவுகள் தம்மோடும் மற்றவர்களோடும் தொடர்புற்றிருக்கும் என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். புகைத்தல் பற்றிய உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம்:
- புகைத்தலானது 'முதிர்ச்சி'க்கு ஓர் அடையாளம் என நினைக்கும் இளைஞனொருவன் பற்கள் மஞ்சளாதல், மூச்சில் துர்வாடை வீசுதல், புற்று நோயும் இதயக் கோளாறுகளும் ஏற்படுவதற்கான அதிக ஆபத்து போன்ற அதன் விளைவுகள் பற்றிச் சிந்திக்காமல் புகைக்க ஆரம்பிக்கலாம். புகையிலைப் பயிர்ச்செய்கையே அழிவு ரீதியானது. அது நிலத்தின் போசாக்குகளை முற்றாக உறிஞ்சி விடுகிறது. இது தவிர புகையிலை பயிரிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நிலமானது வறிய மக்களுக்குத் தேவைப்படும் உணவையும் உடையையும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட முடியும்.
- முடிவொன்று தேவைப்படும் போது அதற்குரிய தீர்மானமொன்றைச் செய்யாமலிருப்பது 'பிழையான' முடிவொன்றை எடுப்பதைப் போன்றே மோசமானது என்பது பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டும்.
- சாத்தியமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் தீர்மானங்களைப் பெற்றார் ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்தத் தீர்மானமும் பரிபூரணமானதாக இருக்காது. எனவே, பிள்ளைகளின் தீர்மானமெடுக்கும் ஆற்றலுக்குப் பெற்றார் ஆதரவு கொடுத்து அதனை மேம்படுத்த உதவ வேண்டும்.

  பிள்ளைகளின் முடிவுகள் அவர்களின் ரசனையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். அவை பெற்றோரின் முடிவுகளோடு பொருந்திப் போகாமல் இருக்கலாம்.
- தீர்மானம் எடுப்பது தொடர்பான விதிகளும் எல்லைகளும் வரையறுக்கப்பட வேண்டும். தீங்கானவை எனத் தெளிவாகத் தோன்றும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, அவற்றை ஏன் அனுமதிக்க முடியாது என்பதைப் பெற்றார் விளக்க வேண்டும்.



தீர்மானமெடுத்தலின் படிகள்

தீர்மானம் எடுக்கக்கூடிய ஆற்றலானது ஒருவரின் சுய மதிப்பை அதிகரிக்கச் செய்யும். தமது வாழ்வின் மீது ஓரளவு கட்டுப்பாட்டை அமுல்படுத்தக்கூடிய பிள்ளைகள், வளர்ந்தபின் சொந்தக்காலில் நிற்கக்கூடிய, பொறுப்புணர்வு கொண்ட, மகிழ்ச்சியான ஆட்களாக இருப்பதற்குத் தயார் செய்யப்படுகின்றனர். சுயாதீனமான பிள்ளைகள் பின்வரும் படிகளினூடாக முன்னேறுவர்:

தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டிய தேவையை இனங்கண்டு கொள்ளல்.

தீர்மானம் எடுப்பதற்கு உதவக்கூடிய தகவல்களைச் சேகரித்தல்.

மாற்று முடிவுகளை அடையாளங் காணுதல்.

தீர்மானம் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளைப் பரிசீலனை செய்தல்.

தமக்கு முன்னாலுள்ள விருப்பத் தேர்வுகள் எவ்வாறு தமது தனிப்பட்ட பெறுமானங்களுடனும் இலக்குகளுடனும் பொருந்திப் போகின்றன என்பதைக் கவனித்தல்.

சில தீர்மானங்களை எடுப்பதற்கு வழி செய்யும் அற்பத்தனமான காரணங்களை இனங்காணல்.(உதாரணமாக: ஒத்த வயதினரின் நிர்ப்பந்தம், தனது முதிர்ச்சி நிலையைக் காட்டும் ஆவல் அல்லது கிளர்ச்சி செய்ய வேண்டும் என்ற உணர்வு)

தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 59: பெற்றாருடைய ஆதிக்கக் குணத்தைச் சோதித்தல்

ஒரு பிள்ளையின் பெற்றார் ஒருவரின் முன்னிலையில் அப்பிள்ளையிடம் ஏதேனும் விடயங்கள் பற்றி எளிய வினாக்கள் பத்தினைக் கேளுங்கள். அவற்றுக்குப் பிள்ளை பதில் கூறுகிறதா அல்லது அதன் சார்பில் பெற்றார் முன் பாய்ந்து விடையளிக்கிறாரா என்பதைக் கவனியுங்கள். பெற்றாரினால் விடையளிக்கப்பட்ட கேள்விகளின் எண்ணிக்கை பெற்றாருடைய ஆதிக்கக்குணத்தைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும். அத்தோடு கஷ்டமான கேள்வியொன்றுக்கு விடையளிக்கப் பிள்ளை தடுமாறும் போது பெற்றார் அடையும் பதற்றத்தையும் மும்முரத்தையும் அவதானியுங்கள்.

ஆதிக்கம் செலுத்தும் முகாமையாளர் என்ற நிலையிலிருந்து வழிகாட்டும் ஆலோசகர் என்ற நிலைமைக்குப் பெற்றார் தம்மை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்.(இதன் மூலமே தமது பிள்ளைகளில் சரியான சுயாதீனத்தைக் கட்டியெழுப்பத் துணை செய்ய முடியும்)

தொழிற்பாடு- 60: உங்கள் குடும்பத்தின் விழுமியத் தொகுதி பற்றிப் பிள்ளைகளுக்கு விளக்கமளியுங்கள்

குறித்த தொழிலொன்றைத் தான் அவர்கள் செய்ய வேண்டுமென்றோ எமது நகல்களாக

அவர்கள் மாற வேண்டுமென்றோ எமது பிள்ளைகளை வற்புறுத்துவது தவறு. 'அகீதா' என்னும் தூய்மையான கோட்பாடும் எமது விழுமியத் தொகுதியும் அவர்களுக்குத் தேவையான உலகக் கண்ணோட்டமும் பிள்ளைகளுக்குப் புகட்டப்பட வேண்டும். அத்தோடு மனிதர்களையும் விலங்குகள், தாவரங்கள், சுற்றாடல் என்பவற்றையும் நேசிப்பது தொடர்பான உங்கள் விழுமியங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இன்றைய பிள்ளைகள் தமது இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதற்காகப் பயன்படுத்தும் ஆக்கபூர்வமான வழிமுறைகள் அவர்களது பெற்றோரை வியப்பில் ஆழ்த்த வல்லவை. உங்கள் குடும்பத்தினருடன் கலந்துரையாடி இந்த விழுமியங்களைப் பிள்ளைகள் எப்படித் தம்முள் ஒருங்கிணைத்துக்கொள்ளலாம் என்பது பற்றி அவர்களிடமே கேளுங்கள்.

தொழிற்பாடு- 61: நீங்கள் துணை புரியும் பெற்றாரா? அல்லது தலையீடு செய்யும் பெற்றாரா?

நாம் தனி நபர்களாகப் பிறந்து, திருமணம் செய்து, பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறோம். சுமார் 20 வருடங்களின் பின்னர் அப்பிள்ளைகள் தமது கூட்டை விட்டு வெளியேறிக் கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் செல்கின்றனர்.

தாம் தமது பிள்ளைகளின் எல்லைக் கோடுகளை மதிப்பதாகவும் அவர்களது வாழ்க்கையில் தாம் தலையிடுவதில்லை என்றும் பெரும்பாலான பெற்றோர்கள் கூறுகின்றனர். கீழே தரப்பட்டுள்ள சில கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம் தமது உண்மையான நடத்தை எப்படிப்பட்டது என்பதைப் பெற்றார் கண்டறிந்து கொள்ள முடியும்:

- கல்லூரிக் காலத்தில் எவ்வளவு காலத்துக்கு ஒரு தடவை நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு தொடர்பாடல் புரிகிறீர்கள்? தினமும்/ வாரத்துக்கு ஒரு தடவை/ மாதத்துக்கு ஒரு தடவை?
- நீங்கள் உங்கள் பிள்ளையின் விரிவுரையாளர்களோடு/ பேராசிரியர்களோடு தொடர்பு கொள்கிறீர்களா?
- உங்கள் பிள்ளைகள் தமது ஒப்படைகளை எழுதி முடிக்கத் தடுமாறும் போது நீங்கள் அதில் பங்கேற்பதுண்டா?
- உங்கள் பிள்ளையின் விடுதி அறைக்கு நீங்கள் சென்றால் அவனது அறையைச் சுத்தம் செய்தல், குப்பை கூளங்களை அகற்றுதல், உடுப்புக்களைச் சலவை செய்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுகிறீர்களா?
- தனது அறையில் வாழும் அடுத்த மாணவரோடு உங்கள் பிள்ளை பிரச்சினைப்பட்டால் அதில் நீங்கள் தலையிடுவீர்களா?

உங்கள் விடைகளை உங்களது குடும்பத்தினருடன் கலந்துரையாடுங்கள். வீட்டுக்கு வெளியே வாழும் மாணவர்களைக் கையாள்வது தொடர்பான சில ஆலோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன:

- தேவையான தொலைபேசி அழைப்புக்களை உங்கள் பிள்ளையே எடுக்கச் செய்ய வேண்டும். இது தன்னில் சார்ந்திருக்கும் இயல்பைப் போதிக்க உதவும்.
- ஒப்படைகளும் அறிக்கைகளும் பிள்ளையினாலேயே தயாரிக்கப்பட வேண்டும்.
- கல்லூரியில்/ பல்கலைக் கழகத்தில் படிக்கும் உங்கள் பிள்ளை சிறு பிள்ளையல்ல; தனது தேவைகளை அவர் தாமே கவனித்துக்கொள்ள வேண்டும். எனவே, அவர்களுடைய அன்றாட வேலைகளை அவர்களே செய்துகொள்ள வேண்டும்.

(Kantrowitz and Tyre, 2006)

அத்தியாயம் 20

ஆக்கத்திறனை வளர்த்தல்

- அறிமுகம் 480
- ஆக்கத்திறன் தொடர்பான பொதுக் கருத்துப் படிவங்கள் 481
- வரலாற்று ரீதியான எளிய கண்டுபிடிப்புக்கள் 484
- பிள்ளைகளின் ஆக்கத்திறனை நெரித்து விடுதல் 485
- ஆக்கத்திறனைத் தடுக்கும் எதிர்மறையான மனப்பாங்குகள் 485
- ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கான வழிகள் 487
    - ஆக்க ரீதியான முறையில் கேள்வி கேட்டல் 487
    - செயல்முறைத் தொழிற்பாடுகள் 488
    - பல்வகை அனுபவங்கள் 488
    - சிந்தனையைக் கிளறும் தொழிற்பாடுகள் 488
    - ஆக்கரீதியான விளையாட்டும் நடிப்பும் 488
    - சிறுவர் எழுத்தாக்கம் 490
    - சிறுவர் சித்திரம் 490
- சில தப்பெண்ணங்கள்: 'விநோதமான' அல்லது 'பயனற்ற' கருத்துக்கள் 491
- பெற்றார் செய்யக்கூடியவை 492
- விளையாட்டுப் பொருட்கள் பற்றிய குறிப்பு 492
- தொழிற்பாடுகள் 62- 65 493

அறிமுகம்

ஆக்கத்திறன் என்பது சுய வெளிப்பாட்டின் ஒரு வடிவமாகும். எவ்விதத் திறனாய்வுக்கும் உட்படாமல் பிள்ளைகள் திறந்த முறையில் சுய ஆற்றல்களை வெளிப்படுத்தும் போது உன்னதமான மன நிறைவொன்றை உணர்வார்கள். அசலாக ஒன்றை ஆக்கக்கூடிய ஆற்றலானது நல்ல நடத்தைப் பண்பின் முக்கிய அங்கமொன்றாக விளங்குகிறது. எல்லா வகைக் கலைகளிலும் அனுபவம் பெறுவது பிள்ளைகளின் ஆக்கத்திறன் விருத்தியைக் குறிப்பிடத்தக்க முறையில் தூண்டிவிடும். ஆக்கத்திறனுடைய பிள்ளைகள் தமது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளும் அதேவேளையில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும் அவற்றைச் சமாளிக்கவும் ஆற்றல் பெறுகின்றனர். புதிய முறைகளில் சிந்திக்க முயற்சிப்பதும் பிரச்சினை தீர்க்க முயல்வதும் ஆக்கத்திறனுடைய பிள்ளையின் பண்புகளாகும்.

ஆக்கத்திறனுடைய ஒருவர், அறிந்து கொள்ளும் ஆர்வமுடையவராகவும் சவால்களை மகிழ்வுடன் எதிர்கொள்பவராகவும் சாதக மனப்பான்மை உடையவராகவும் தீர்ப்பு வழங்குவதை இடைநிறுத்தக்கூடியவராகவும் கற்பனையாற்றல் கொண்டவராகவும் இருப்பார். ஆக்கத்திறனுடையவர்கள் பிரச்சினைகளை வாய்ப்புக்களாகக் காண்பார்கள்; ஊகங்களுக்குச் சவால் விடுப்பார்கள்; கடுமையாக உழைப்பார்கள்; முயற்சியை எளிதில் கைவிட மாட்டார்கள்; விடாமுயற்சியுடன் செயற்படுவார்கள். அதிகமானவர்கள் தோல்வியுறுவதற்குக் காரணம் தீர்ப்பதற்குப் பத்து நிமிடங்கள் தேவைப்படும் பிரச்சினைக்காக அவர்கள் ஒன்பது நிமிடங்களை மட்டுமே செலவிடுகின்றனர்.

ஆராய்வதற்கும் தமது சிறப்பான ஆக்கத்தைச் செய்வதற்கும் பிள்ளைகளுக்கு நீடித்த, அவசரமற்ற அவகாசம்தேவைப்படுகிறது. ஆக்கபூர்வமான வேலையொன்றில் அவர்கள் ஊக்கத்துடன் பயன்தரு முறையில் ஈடுபட்டிருக்கும்போது அவ்வேலையை நிறுத்திவிட்டு இன்னொரு தொழிற்பாட்டில் ஈடுபடுமாறு அவர்களைப் பணிக்கக் கூடாது. முடிக்கப்படாத ஆக்கங்களைப் பின்னர் தொடர்ந்து செய்வதற்கு வசதியான முறையில் பேணி வைப்பதற்கு ஏற்ற இடமொன்று அவர்களுக்குத் தேவை. அதே போன்று அவர்கள் தம்முடைய சிறந்த ஆக்கங்களைச் செய்வதற்கு, உற்சாகந்தரும் உகந்த இடமொன்றும் அவசியம். வளமற்ற வீட்டுச் சூழலொன்று அதற்கு ஏற்றதாக இராது. இயற்கையான ஒளியும் ஒத்திசைவான நிறங்களும் வசதியான இருக்கைகளும் கொண்ட இடமொன்று பிள்ளைகளுக்குத் தேவை. அந்த அறையில் அவர்களதும் ஏனையவர்களதும் மாதிரி ஆக்கங்கள் காட்சிக்கு வைத்திருக்கப்பட வேண்டும். பெற்றார் பிள்ளைகளின் தவறுகளை ஏற்றுக்கொள்வதோடு இடர்களுக்கு முகங்கொடுப்பதை ஊக்குவிக்கவும் சிறப்பான தனிப்பண்புகளை ஆதரித்து முன்னேற்றவும் வேண்டும். ஆக்கத்திறனுக்கு ஓரளவு ஒழுங்கின்மையும் கூச்சலும் சுதந்திரமும் தேவை. பெருங்குழப்ப நிலையோ இறுக்கமான கட்டுப்பாடோ அங்கு இருக்கக் கூடாது.

பெற்றோர் என்ற வகையில், உங்கள் பிள்ளைகளின் ஆக்கத்திறனின் மீது உங்களுக்கு வியக்கத்தக்க செல்வாக்கு இருக்கிறது. அகக்காட்சிகளும் பிரச்சினை தீர்க்கும் திறன்களும் அசல் தன்மையோடும் மகிழ்ச்சியோடும் விருத்தி செய்யப்படலாம். சிறு பிள்ளையொன்றைப் பொறுத்தமட்டில் ஒரு செயலைச் 'செய்வது'தான் முக்கியம்; இறுதி விளைபொருள் பற்றிய ஆர்வம் அவர்களிடம் குறைவாகவே இருக்கும். "இந்த வேலை

வேடிக்கையாக இருந்ததல்லவா" அல்லது "இதற்காக நீங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தீர்கள்" என்பன போன்ற கருத்துக்களைத் தெரிவிக்காமல் இருப்பதே நல்லது. பதிலாக அச்செய்கை பற்றிய புலக்காட்சி, விளைபொருளின் தனிச்சிறப்பு என்பன பற்றியே கருத்துத் தெரிவிக்க வேண்டும். ஏதேனும் 'குறித்த' ஒன்றை விளைபொருளாக உருவாக்குமாறு கேட்கப்படும் போது, உணர்திறன் மிக்க பிள்ளைகளில் பலர் ஆக்கத் தொழிற்பாடுகளிலிருந்து பயந்து ஒதுங்கிப் போகின்றனர். வளர்ந்த ஒருவரைத் திருப்திப் படுத்துவதற்காக ஏதேனுமொன்றை வரைய அல்லது உருவாக்க அல்லது இயற்ற முனையும் போதே ஆக்கத்திறனுக்குரிய தனது ஆர்வத்தின் ஒரு பகுதியைப் பிள்ளை இழந்து விடுகின்றது. வீட்டில் பொதுவாகக் காணப்படும் பானைகள், கிண்ணங்கள், கரண்டிகள், தலையணைகள், சோபா மெத்தைகள் போன்றவற்றை ஆக்கரீதியாகப் பயன்படுத்த இடம் கொடுத்து அவர்களது முயற்சியைப் பாராட்டுங்கள். பாலர் பள்ளிப் பருவத்தினருக்குச் சித்திரம் வரையத் தேவையான பொருட்களை நேர காலத்தோடு வழங்குங்கள். நிறப்பென்சில்களை அல்லது கிரேயன்களை இன்னொருவர் எடுத்துத் தரும் வரை காத்திருக்க வேண்டிய பிள்ளையை விட, அவற்றைத் தானே எடுத்துக்கொள்ளக் கூடிய வசதியுள்ள அதே வயதுப்பிள்ளை அதிக ஆக்கத்திறனைக் காட்டும். வரைதல் தொழிற்பாடுகள் பிரச்சினைக்குரியனவாக அமையும் வகையில் அவற்றுக்குரிய விதிகளைக் கஷ்டமானவையாக ஆக்காதீர்கள். பாலர் சித்திரங்களைப் பொருத்தமட்டில் எளிமையே வெற்றிக்கு வழி வகுக்கும். பிள்ளைகள் ஓரளவு வளர்ச்சியடைந்த பின் அவர்களது வேலைகளில் நேர்த்தியை எதிர்பார்க்கலாம்.

நேர்த்தி பற்றிய விதிகளுக்கு இணங்கிப் போவதற்காகப் பிள்ளை செலவு செய்யும் சக்தியானது ஆராய்வுக்கும் அசல் தன்மைக்கும் தேவைப்படும் அதன் சக்தியை உறிஞ்சிக் குடித்துவிடும். மற்றவர்களின் உரிமைகள் பற்றியும் பாதுகாப்பு விதிகள் பற்றியும் ஒவ்வொரு பிள்ளையும் தெரிந்திருக்க வேண்டும். மேலும், நியாயமான அளவு எதிர்பார்ப்புக்கள் இல்லாது போனால் அசல் தன்மையும் ஆராய்வும் ஒழுங்குச் சீர்குலைவுக்கு வழிகோலலாம்.

மிதமிஞ்சிய கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிள்ளை வளர்ந்தவர்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தனது ஆராய்தலையும் அசல் தன்மையையும் அர்ப்பணம் செய்ய நேரிடும். தனது சுய-பெறுமதி சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருப்பதில்தான் தங்கியிருக்கிறது என ஒரு பிள்ளை கருதுமாயின் சிறிதளவு சக்தியும் துணிவுமே அதனிடம் ஆக்கத்திறனுக்கென எஞ்சியிருக்கும். "கவனமாயிரு.. சுத்தமாக வைத்துக்கொள்" என்பது தான் வழக்கமான ஏவலாக இருப்பின் ஆக்கத்திறன் நசுக்கப்பட்டுவிடும்.

ஆக்கத்திறன் தொடர்பான பொதுக் கருத்துப் படிவங்கள்

ஆக்கத்திறனைப் போஷித்து வளர்ப்பதற்குரிய சில அறிவுறுத்தல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- பிள்ளைகளின் யோசனைகளை உங்களுக்கு ஏற்ற வகையில் இசைவாக்க முயலாமல் உங்களை அவர்களின் யோசனைக்கு ஏற்ப இசைவாக்கிக் கொள்ளுங்கள்.
- அன்றாட வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆக்கரீதியான பிரச்சினை தீர்க்கும் முறையைப் பயன்படுத்துங்கள். பிள்ளைகளுக்குத் தவறு விடச் சுதந்திரம் கொடுங்கள். தோல்வியைப் பற்றிப் பயப்படாமல் பரிசோதித்துப் பார்ப்பதற்கு அவர்களை அனுமதியுங்கள்.
- சாத்தியக்கூறுகள் அனைத்தையும் ஆராய்ந்து பார்க்க பிள்ளைகளுக்கு அவகாசம் கொடுங்கள்.
- வழமைக்கு மாறான பொருட்களுடன் பரிசோதனை செய்து பார்க்கப் பிள்ளைகளை ஊக்குவியுங்கள். அவர்களது கேள்விகளுக்கும் கருத்துரைகளுக்கும் செவிமடுங்கள். நீங்கள் செவிமடுத்தவற்றைத் திருப்பிக் கூறுவதன் மூலம் பிள்ளைகளின் அவதானங்களைத் தெளிவு படுத்துங்கள். அவர்களுடைய அனுபவங்கள் தொடர்பாக மேலும் கேள்விகளைக் கேளுங்கள்.
- பிள்ளைகள் விரும்பக்கூடியதும் ஊக்கந் தரக்கூடியதுமான ஒரு சூழலை ஏற்பாடு செய்து கொடுங்கள். பல்வேறு வகையான பதார்த்தங்கள், புத்தகங்கள், விளையாட்டுக்கள் முதலியவற்றையும் அவற்றோடு 'பரிசோதனை' செய்து பார்க்கப் போதியளவு கால அவகாசத்தையும் வழங்குங்கள்.
- பல்வேறு வகையான மனிதர்களையும் பண்பாடுகள், அனுபவங்கள், சமயங்கள், சிந்தனை முறைகள் முதலியவற்றையும் எதிர்கொள்ளும் வாய்ப்பை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். ஒரு பிரச்சினை பற்றிச் சிந்திப்பதற்கு வித்தியாசமான பல வழிகள் இருக்கின்றன என்பதை அவர்கள் கண்டு கொள்ளட்டும். தமது ஆற்றல்களுக்கு ஏற்ற வகையில் புதிய அனுபவங்களைப் பரீட்சித்துப் பார்க்குமாறு பிள்ளைகளுக்கு ஊக்கமளியுங்கள். சிறுவர்களுக்கான மியூஸியம்களுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- புதிய வகையான சிந்தனைகளைப் போற்றிப் பாராட்டுங்கள். கலை, விஞ்ஞானம் அல்லது ஆக்கத்திறன் சார்ந்த உங்களது சொந்தச் செயல்திட்டங்களைப் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பேரார்வத்திற்குரிய செயல்திட்டங்களில் பங்குபற்றுவது பிள்ளைகளிலும் ஆர்வத்தை ஊக்குவிக்கும்.
- விடாமுயற்சியை வளருங்கள். ஒரு செயற்திட்ட செயன்முறையினது ஒவ்வொரு படியிலும் பிள்ளைகளை ஊக்குவிப்பதன் மூலமும் அவர்கள் தமது சொந்த வலிமைகளையும் பலவீனங்களையும் புரிந்து கொள்ள உதவுவதன் மூலமும் அச்செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்ய ஊக்கமளியுங்கள்.
- வழக்கத்துக்கு மாறானவற்றைச் சகித்துக்கொள்ளுங்கள். பிரச்சினை தொடர்பான சரியான விடைகளையே எப்போதும் பெற வேண்டும் என்பது அவசியமல்ல என்பதைப் பிள்ளைகள் தெரிந்து கொள்ளச் செய்யுங்கள். புதுமையான, தனித்துவமான அணுகுமுறைகளும் பெறுமதி மிக்கவையே.
- உங்கள் பிள்ளையின் கற்பனைக்கு ஆதரவு கொடுங்கள். ஆக்கத்திறனுடையவர்கள் விசித்திரமான, கட்டுக்கடங்காத அல்லது விநோதமான சிந்தனைகளில் சுகம் காண்பார்கள். சிந்தனைக் கிளறலின் மூலம் பல்வேறுபட்ட தனித்துவமான, சுவாரஷ்யமான யோசனைகளை ஊக்குவிக்க முடியும்.
- தவறுகளும் வரவேற்கப்படும் என்ற நம்பிக்கையை வளருங்கள். தோல்வியென்பது அழிவல்ல. அது கற்றுக் கொள்ளலுக்குரிய ஒரு வாய்ப்பாக இருந்து வெற்றிக்கு வழி கோலலாம். ஒரு பிரதம அதிகாரி தமது புதிய முகாமையாளர்களை நோக்கி இவ்வாறு கூறினார்: "நீங்கள் நியாயமான தொகைத் தவறுகளைச் செய்யத்தான் வேண்டும்".
- கெட்டதில் உள்ள நல்ல பகுதியைப் பாருங்கள். மோசமான தீர்வுகளை எதிர்கொள்ளும் போது ஆக்கரீதியாகச் சிந்திப்பவர்கள் "இதில் இருக்கும் நல்ல விடயம் என்ன?" என்று தான் யோசிப்பார்கள். மிக மோசமான யோசனைகளில் கூட ஏதேனும் பயனுள்ளது இருக்கலாம்.

ஆக்கத்திறன் கொண்ட மாணவன்: சிக்கல் தன்மையும் எளிமையும்

புகழ் பெற்ற முகாமைத்துவ நிறுவனமொன்றில் அனுமதி பெறுவதற்காக மாணவனொருவன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டான்.

"நான் உம்மிடம் 10 எளிதான கேள்விகளைக் கேட்கலாம் அல்லது ஒரேயொரு மிகக் கஷ்டமான கேள்வியைக் கேட்கலாம். எது நல்லது என்பதை நன்கு சிந்தித்துப் பார்த்துக்கூறும்" என்றார் பரீட்சகர்.

"ஒரேயொரு கஷ்டமான கேள்வி" என்றான் மாணவன்.

"அப்படியானால், எது முதலில் வருகிறது இரவா, பகலா என்பதைக் கூறும்"

"பகல் தான் சார்!"

"அது எப்படி?"– பரீட்சகர் திருப்பிக் கேட்டார்.

"மன்னிக்கவும். ஒரேயொரு கஷ்டமான கேள்வி கேட்பதாகத் தானே கூறினீர்கள்... இப்போது இரண்டாவதாக ஒன்றைக் கேட்கலாமா?" என்றான் மாணவன்.

அவன் தெரிவு செய்யப்பட்டான்.

தொழில்நுட்பத் திறன் என்பது சிக்கலானவற்றில் வல்லமை காட்டுவது.

ஆக்கத்திறன் என்பது எளிமையில் வல்லமை காட்டுவது.

மோசமானதில் உள்ள நல்லதைக் காணுங்கள்.

பிள்ளைகளை நல்ல முறையில் கற்கச் செய்வதற்கு வழி என்ன? தீர்வு: அவர்களுடைய ஆசனப்பகுதிக்குப் பிரம்பால் அடியுங்கள். இது ஒரு தீர்வு அல்ல; ஏனெனில், அது சட்டவிரோதமானது. எப்படியிருப்பினும் நாம் அதனைச் சும்மா தூக்கி எறிய வேண்டுமா? 'அதிலுள்ள நல்ல அம்சம் என்ன?' என்றுஏன் கேட்கக்கூடாது. அதன் மூலம் நல்ல முறையில் கற்காதவர்களுக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகிறது; அது அடியைப் பெறும் பிள்ளையை மாத்திரமன்றி ஏனைய மாணவர்களையும் ஊக்குவிக்கின்றது. அது இலகுவானது; செலவற்றது. எனவே, அடுத்த கேள்வி: "இந்த நல்ல அம்சங்களுள் சிலவற்றை, அதைவிட ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்றுக்குள் உள்ளடக்கிக்கொள்ள அல்லது இசைவாக்கிக்கொள்ள முடியுமா?" இப்புதிய தீர்வு முன்னையதிலிருந்து பெறப்பட்டதாகவோ அப்படி இல்லாமலோ இருக்கலாம்.

நல்லது அல்லது மோசமானது என்று பிரித்தே நாம் பழகிவிட்டோம். எனவே, மோசமான தீர்வொன்று எல்லா வகையிலும் மோசமானது என்றே நினைக்கிறோம். ஆனால், உண்மையில் நாம் இரவல் பெறக்கூடிய சில நல்ல அம்சங்கள் அதில் இருக்கலாம்; அல்லது நல்ல முறையில் செய்தால் பயன் தரக்கூடிய ஒன்றைப் பிழையான முறையில் செய்வதாக அது இருக்கலாம். அதிகமான சந்தர்ப்பங்களில் அந்த மோசமான தீர்வில் வெளிப்படையாகவே மோசமான அம்சமொன்று இருக்கலாம். அதனை நிவர்த்தி செய்தால் அது நல்ல தீர்வொன்றாக உருமாறலாம்.

வரலாற்று ரீதியான எளிய கண்டுபிடிப்புக்கள்

1. ஆக்கத்திறன் கொண்டவர்கள் எதையும் மேம்படுத்தவே முனைவார்கள். உதாரணமாக, மாட்டுக்கொழுப்பு, பால், நீர், நறுக்கப்பட்ட பசுவின் பால்மடித் துண்டுகள் என்பவற்றிலிருந்தே முதலில் மாஜரீன் செய்யப்பட்டது. அது ஆரோக்கியமானதாகவோ சுவையானதாகவோ இருக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாட்டுக்கொழுப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது பிரச்சினை உருவாகியது. பதிலாக எதனைப் பயன்படுத்துவது? மாஜரீன் தயாரிப்பாளர்கள் தாவரக் கொழுப்புக்களை நாடினர். அவர்கள் தெரிவு செய்த சோயா, சோளம், சூரியகாந்தி எண்ணெய்கள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. மாஜரீன் ஆரோக்கியமானதாகவும் சுவையுள்ளதாகவும் மாறியது.

2. ஆக்கத்திறனுடையவராக இருப்பதற்கு நீங்கள் ஒரு மேதையாக இருக்க வேண்டியதில்லை. விண்வெளி ஆய்வுத்துறையில் பணி புரிந்த அதி திறமையும் பயிற்சியும் உடைய விஞ்ஞானிகளால்கூட ஆரம்பத்தில் விண்வெளியின் பூச்சிய ஈர்ப்பு நிலையில் வேலை செய்யக்கூடிய பேனா ஒன்றினை உருவாக்க முடியவில்லை. எனவே, பென்சில் தான் பயன்படுத்தப்பட்டது. இறுதியில் விண்வெளி ஆய்வுடன் சம்பந்தப்படாத கம்பனியொன்று அவ்வாறான பேனாவொன்றை உருவாக்கி அதைப் பரீட்சித்துப் பார்க்குமாறு NASA நிறுவனத்தை வேண்டிக்கொண்டது. அது ஒழுங்காக வேலை செய்ததால் அமெரிக்க, ரஷ்ய விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கின.

3. ஒரு பிரச்சினையானது தீர்வொன்றாகவும் அமையலாம். ஒருவரினால் 'ஒரு தடை' என விவரிக்கப்பட்ட ஒன்று இன்னொருவருக்கு 'ஒரு வாய்ப்பாக' அமையக்கூடும்.

உதாரணமாக, super glue என்னும் Cyanoacrylate பிசின் வகை சந்தைக்கு வந்தபோது ஒரு பிரச்சினை எழுந்தது. கவனமாகக் கையாளத் தவறினால் உங்கள் விரல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளலாம். நிரந்தரமாகத் தோல் பிணைக்கப்பட்டு விடும். இப்பிரச்சினை விரைவில் ஒரு தீர்வாகப் பயன்பட்டது. வியட்னாமிலுள்ள அறுவை சிகிச்சை நிபுணர்கள் புண்களை ஒட்டி மூடுவதற்கு super glue வைப் பயன்படுத்தத் தொடங்கினர்.



இன்னொரு பிசின் உதாரணம்: ஐக்கிய அமெரிக்காவிலுள்ள 3M கோர்ப்பரேஷனில் பணி புரிந்த இரசாயன நிபுணர் ஒருவர் பசைத் தன்மையான பதார்த்தங்கள் தொடர்பாகப் பரிசோதனைகள் செய்துகொண்டிருந்த போது ஒரு வகைப் பசையை உருவாக்கினார். அதன் ஒட்டுமியல்பு நலிவானதாக இருந்ததால் ஒட்டியதை இலகுவாக உரித்தெடுக்க முடியுமாக இருந்தது. நிரந்தரமாக ஒட்டிக்கொள்ளாத பசையா? பெரிய பிரச்சினை தான். எனினும், இப்பிரச்சினை ஒரு தீர்வாக மாற்றப்பட்டது. 1980 இல் இப்பசையை உபயோகித்து தற்காலிகமாக ஒட்டி வைக்கும் குறிப்புத் தாள்கள் செய்யப்பட்டன. இன்று அவை உலகெங்கும் பயன்படுத்தப்படுகின்றன.

பிள்ளைகளின் ஆக்கத்திறனை நெரித்து விடுதல்

நாம் ஆக்கத்திறனைப் பெறுமதி மிக்கதாகக் கருதுகின்றோம். அதேவேளை பிள்ளைகளில் ஆக்கத்திறனை நெரித்துக் கொன்று விடுகிறோம். ஆக்கத்திறனைக் கொல்லும் பின்வரும் பொதுவான காரணிகளை Amabile மற்றும் Hennessey ஆகியோர் (1992) இனங்கண்டுள்ளனர்.

- மிதமிஞ்சிய நுண் கண்காணிப்பு- பிள்ளைகளைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டு அவர்களைக் கண்காணிக்கும் போது, தாம் தொடர்ந்து அவதானிக்கப்படுவதாகப் பிள்ளைகள் உணர்கின்றனர். இதனால், இடர்களை எதிர்கொள்ளும் துணிச்சலும் ஆக்கத்திறனும் மறைந்து விடும்.
- கடுமையான மதிப்பீடு: பிள்ளைகளைத் தம் செயற்பாட்டின் தரம் பற்றித் தொடர்ந்து கவலைப்பட வைப்பதன் காரணமாக அவர்களது ஆக்கத்திறன் குறைந்து விடுகின்றது.
- மிதமிஞ்சிய வெகுமதிகள்: அளவுக்கு மீறிப் பரிசுகள் வழங்குவதன் காரணமாக ஆக்க வேலைகளினூடாகக் கிடைக்கும் உள்ளார்ந்த மகிழ்ச்சியைப் பிள்ளை இழந்து விடலாம். பரிசுகள் எதிர்பார்க்கப்படாத வேளையில் ஆட்களின் ஆக்கத்திறன் கூடுதலாக இருக்கும்; அந்தச் செயன்முறையினால் அவர்கள் அதிக மகிழ்ச்சியடைவார்கள். செயற்திட்டமொன்று முழுமையடைந்த பின்னர் கிடைக்கும் எதிர்பாராத பரிசு பெறுமதியானதுதான்; எனினும், ஆக்கத்திறனுக்கு அது அவசியமில்லை. அளவுக்கு மிஞ்சிய புற ஊக்குவிப்புக்கள் (பணம் அல்லது விசேட சலுகைகள் முதலியன) ஆக்கத்திறனுக்கு ஊறு விளைவிக்கும்.
- தீவிரமான போட்டிகள்: பிள்ளைகளை மற்றவர்களுடன் நியாயமற்ற போட்டிகளில் ஈடுபடச் செய்வது அவர்களுடைய ஊக்கத்தையும் ஆக்கத்திறனையும் அழித்துவிடும்.
- நெருக்குதல்: பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆரவாரமான அல்லது பகட்டான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்துவது ஆக்கத்திறனின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும்.

ஆக்கத்திறனைத் தடுக்கும் எதிர்மறையான மனப்பாங்குகள்

ஆக்கத்திறனைத் தடுக்கக்கூடிய வழிகள் வேறு பலவும் உண்டு. பிள்ளைகளுள் ஆக்கத்திறனைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான சொற்றொடர்கள் சில பின்வருமாறு:

- *'ஐயோ, ஒரு பிரச்சினை ஏற்பட்டு விட்டதே!'* - சில வேளைகளில் ஒரு பிரச்சினைக்குக் காட்டப்படும் எதிர்வினையானது அப்பிரச்சினையை விடவும் பெரிய பிரச்சினையாக அமைந்து விடலாம். ஒரு பிரச்சினையைப் பூதாகாரமாக்கிக் காட்டக்கூடாது. மகிழ்ச்சிகரமானவர்கள் பிரச்சினைகளை வரவேற்பார்கள். அவற்றை மேம்பாடடைவதற்கான வாய்ப்புக்களாக நோக்குவார்கள். ஒரு பிரச்சினை என்பது, உங்களிடம் இருப்பதற்கும் நீங்கள் வேண்டி எதிர்பார்ப்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசமே. தற்போதைய நிலையை விடச் சிறந்ததொன்று இருக்கத்தான் செய்யும். அதனை அடைய ஆக்கத்திறன் உங்களுக்கு உதவும்.
- *'அதனைச் செய்ய முடியாது'* - இது போருக்கு முன்னரே சரணடைவதற்கு ஒப்பானது. குறித்த விடயமொன்றைச் செய்ய முடியாதென எடுத்துக் கொள்வதன் மூலம் ஒருவர் ஒரு பிரச்சினைக்கு அதிக வலுவைக் கொடுக்கிறார். தொடங்க முன்னரே முயற்சியைக் கைவிடுவது மிக மோசமான நோயாகும். நாமனைவரும் முயற்சியைக் கைவிட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்: மனிதர்கள் விமானத்தில் பறந்திருக்க முடியாது, நோய்களுக்குச் சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்

பட்டிருக்கா, ரொக்கட்டுகள் வளிமண்டலத்துக்கு அப்பால் சென்றிருக்கா, கஷ்டமானதை உடனடியாகச் செய்வோம்; செய்ய முடியாததைச் செய்வதற்குச் சிறிது நேரம் பிடிக்கும் என்பதே இருக்க வேண்டிய சரியான மனப்பாங்காகும்.

- *'உங்களால் அதைச் செய்ய முடியாது'* அல்லது *'நீங்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை'* - "சில வேளை இப்பிரச்சினை நிபுணர்களால் தீர்க்கப்படலாம். அதற்குரிய கெட்டித்தனம் என்னிடம் இல்லை" என்றோ "என்னால் அதைத் தீர்க்க முடியாது; ஏனெனில், நான் ஒரு நிபுணன் அல்லன்" என்றோ சிலர் நினைக்கின்றனர். உண்மையில் கைத்தொழிற் துறையில் பெரும்பாலான புத்தாக்கங்கள் குறிப்பிட்ட துறை சாராத தனியாட்களாலேயே உருவாக்கப்பட்டுள்ளன; ஆய்வுக்குழுக்களால் அல்ல. சாதகமான மனப்பாங்கும் நல்ல திறன்களும் இருந்தால் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கலாம். பிரச்சினைக்குத் தன்னை அர்ப்பணிப்பதே முக்கியமானது. ஒரு குறித்த பிரச்சினையை உலகிலிருந்து முற்றாக ஒழிக்க உங்களால் முடியாமல் போனாலும் தற்போதைய நிலைமையை மேம்படுத்தவாவது முடியும்.
- *'அது சிறுபிள்ளைத்தனமானது'* - முதிர்ந்தவர்களாகவும் உலகம் தெரிந்தவர்களாகவும் தோற்றமளிக்க நாம் எடுக்கும் முயற்சிகள்காரணமாக ஆக்கத்திறனையும் விளையாட்டுப்போக்கையும் நாம் கேலி செய்வது வழக்கம். எனினும், ஒரு பிரச்சினையைத் தீர்த்து அதன் மூலம் உங்கள் திருமண உறவைக் காப்பாற்றிக்கொள்ள அல்லது பதவி உயர்வொன்றைப் பெற்றுக்கொள்ள அல்லது ஒரு நண்பனைத் தற்கொலையிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடிந்தது என எடுத்துக்கொள்வோம். இந்நிலையில் அப்பிரச்சினைக்குத் தீர்வு காண நீங்கள் கையாண்ட முறையை 'சிறுபிள்ளைத்தனமானது' என யாராவது வர்ணித்தால் அது பற்றிக் கவலைப்படுவீர்களா?
- *'மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?'* - சாதாரண, இயல்பான வழக்கப்படி நடந்து கொள்ளுமாறு எம்மை நெருக்கும் சமூக அழுத்தமொன்று காணப்படுகிறது. சில உதாரணங்களை இங்கே தருகிறோம்:

(1.) *ஆக்கத்திறனுடையவர்:* "ஆரஞ்சுச் சாற்றின் இனிப்புத் தன்மையைக் குறைப்பதற்காக நான் அதற்கு நீர் சேர்க்கிறேன்"

சாதாரணமானவர்: "நீ விசித்திரமான ஆளாக இருக்கிறாயே"

(2.) *ஆக்கத்திறனுடையவர்:* "நாங்கள் நடுராத்திரியில் சமையல் செய்கிறோம்"

சாதாரணமானவர்: "உங்களுக்குப் பைத்தியமா?"

(3.) *ஆக்கத்திறனுடையவர்:* "நாம் ஏன் இதற்குச் சிறிதளவு வெள்ளைப்பூடு அல்லது கடுகு சேர்க்கக் கூடாது?"

சாதாரணமானவர்: "இல்லை, அது பற்றி சமையல் குறிப்பில் எதுவும் சொல்லப்படவில்லை"

மின் குமிழில் பயன்படுத்துவதற்கு உகந்த இழையொன்றைத் தேடும் தனது முயற்சியின் போது தோமஸ் எடிசன் தனது நண்பன் ஒருவனின் மீசை மயிர் உட்பட 1800 வகையான பொருட்களைப் பரீட்சித்துப் பார்த்தார். சுமார் 1000 முயற்சிகளின் பின்னர் அவரைச் சந்தித்த ஒருவர், "நீங்கள் இதனால் விரக்தியடையவில்லையா?" எனக் கேட்டார். அதற்கவர், "நான் பெருமளவு அறிவை இதனால் பெற்றுக்கொண்டேன். மின்குமிழின் இழையாகப் பயன்படுத்தப்பட முடியாத 1000 பொருட்களைப் பற்றி நான் அறிந்து கொண்டுள்ளேன்" எனப் பதிலளித்தார்.



தாம் கேலி செய்யப்படுவதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு வலிமை உள்ளவர்களே முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

தவறுகள், மகிழ்ச்சி தருபவையல்ல; ஆனால், அவை நிச்சயமாகக் கல்விப் பெறுமானமுடையவை.

- *நீங்கள் தோல்வியடையலாம். உங்களுடைய இடர்களுக்கு முகங்கொடுக்கும் போக்கையும் முயற்சிகளையும் தோல்வியடைவது பற்றிய உங்களது மனப்பயம் வழிநடத்துவதாக எடுத்துக்கொள்வோம். ஒரு வருட காலத்திற்குள் வெற்றி பெறலாம் என உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்த மூன்று விடயங்களை மட்டும் நீங்கள் முயற்சிக்கிறீர்கள். எனவே, வருட முடிவில் நீங்கள் ஈட்டிக்கொள்ளும் புள்ளிகள்: வெற்றிகள்- 3, தோல்விகள்- 0. அடுத்த வருடத்தில் நீங்கள் தோல்வியடைவது பற்றிக் கவலைப்படவில்லை என எடுத்துக்கொள்வோம். எனவே, நீங்கள் பன்னிரண்டு விடயங்களை முயற்சிக்கிறீர்கள். அவற்றில் ஆறு விடயங்களில் தோல்வியடைகிறீர்கள். நீங்கள் பெறும் புள்ளிகள்: வெற்றிகள்- 6, தோல்விகள்- 6. நீங்கள் எதைத் தெரிவு செய்வீர்கள்? மூன்று வெற்றிகளையா, ஆறு வெற்றிகளையா? அது மட்டுமல்ல; 12 தோல்விகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளக்கூடியவற்றைப் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள்.*

விசேட நிபுணர் அல்லாதோரின் அறிவு நுட்பம்!

- ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்த ரைட் சகோதரர்கள் வான் பயணத்துறைப் பொறியியலாளர்கள் அல்லர். அவர்கள் வெறுமனே சைக்கிள் மெக்கானிக்குகளே.
- போல் பொயின்ற் பேனாவைக் கண்டு பிடித்தவர் Ladislao Biro என்னும் அச்சகப் பிரதி திருத்துபவரே.
- நீர்மூழ்கிக் கப்பல் வடிவமைப்பில் முக்கிய முன்னேற்றங்களை ஏற்படுத்தியவர்கள், G. W. Garrett என்ற ஆங்கிலேயப் பாதிரியாரும் John Holland என்ற அயர்லாந்து நாட்டுப் பள்ளி ஆசிரியருமாவர்.
- பருத்தியிலிருந்து விதைகளை அகற்றும் பொறியைக் கண்டு பிடித்தவர் வழக்கறிஞரும் ஆசிரியருமான Eli Whitney என்பவர்.
- George Manvy என்ற இராணுவ அதிகாரியே தீயணை கருவியைக் கண்டு பிடித்தார்.
- Kodachrome என்னும் நிறப்படச்சுருளை இரு இசைக் கலைஞர்களே கண்டுபிடித்தனர்.
- தொடரான உருக்கு வார்ப்பு முறை கைக்கடிகாரம் தயாரிக்கும் ஒருவரினால் கண்டுபிடிக்கப்பட்டது. (இவர் பித்தளை வார்ப்பில் ஈடுபட்டிருந்தார்)

- சவர்க்காரத் தயாரிப்புடன் தொடர்புடைய ரசாயனவியல் அறிஞர்கள் செயற்கையான அழுக்கு நீக்கிகளை நிராகரித்தனர். இவ்வழுக்கு நீக்கிகள் சாயத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த ரசாயனவியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கான வழிகள்

ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கான நுட்ப முறைகள் பல இருக்கின்றன. அவற்றுள் சில பின்வருமாறு:

ஆக்க ரீதியான முறையில் கேள்வி கேட்டல்

உங்கள் பிள்ளையிடம் உயர்மட்டக் கேள்விகளைக் கேளுங்கள். இவ்வாறான கேள்விகள் முழு மூளையையும் செயற்படச் செய்யும். ஏனெனில், அவை மனவெழுச்சி சார்ந்த நுண்ணறிவு, தர்க்க ரீதியான நுண்ணறிவு, இடவெளி சார்ந்த நுண்ணறிவு ஆகியவற்றை ஒன்றிணைக்கின்றன.

- பின்வருவனவற்றுள் எது கூடிய ஆக்கத்திறனைப் பிரதிபலிக்கும்? வியக்கத்தக்க அமைப்பும் வசதிகளும் செயற்திறனும் கொண்ட ஒரு மோட்டார் வாகனமா? அல்லது கலை, இறை விசுவாசம் என்பவற்றின் சாரத்தை தனித்துவமான முறையில் ஒன்றிணைத்து நிர்மாணிக்கப்பட்ட ஒரு குவிமாடமா/மினாராவா?
- யாராலும் புதிய யோசனைகளை உருவாக்க முடியுமா? அல்லது பழையனவற்றைத்தான் இவர்கள் மீளக் கண்டுபிடிக்கிறார்களா?
- எது சிரமங்கூடியது? ஆக்கரீதியான செயல்திட்டமொன்றை ஆரம்பிப்பதா அல்லது அதனை நிறைவு செய்வதா? ஏன்?
- பிரச்சினை தீர்ப்பதில் மனிதர் பயன்படுத்தும் ஆக்கத்திறன், கலை ஆக்கங்களோடு தொடர்புடைய ஆக்கத்திறனிலிருந்து அடிப்படையில் வித்தியாசமானதா?

செயல்முறைத் தொழிற்பாடுகள்

- பின்னோக்கிய தினமொன்றை ஏற்பாடு செய்து காலையுணவுக்குப் பதிலாக இராப்போசனத்துடன் நாளை ஆரம்பியுங்கள்.
- போட்டோ கொப்பியர் அல்லது கம்ப்யூட்டர் ஒன்றைப் பயன்படுத்தி சிறிய பொருட்களைப் பெரிதாக்கியும் பெரிய பொருட்களைச் சிறிதாக்கியும் பிரதி எடுத்து ஒட்டுச்சித்திரமொன்றைத் தயாரிக்கச் செய்தல்.
- புதுவகையான சீட்டாட்டமொன்றை உருவாக்கச் செய்தல். உங்களுக்குத் தெரிந்த Dominos, Backgammon போன்ற விளையாட்டொன்றை மாற்றியமைப்பதன் மூலம் இதனைத் தொடங்கலாம்.
- புதிய, வழக்கமாகப் பயன்படுத்தாத வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தி சமையல் செய்தல்.
- நீங்கள் வாழ விரும்புகின்ற சூழலொன்றின் மாதிரியுருவொன்றை அமைத்தல். வீட்டில் பொதுவாகக் காணப்படும் பொருட்களையும் இயற்கையான பொருட்களையும் மாத்திரமே பயன்படுத்தலாம்.
- எழுந்தவாறாகச் சொற்களைப் பயன்படுத்திச் சொந்தமாகக் கவிதை இயற்றல்.

பல்வகை அனுபவங்கள்

- பல்லின, பல் கலாசார, பல் சமய விடுமுறைகளை ஆக்கபூர்வமான முறையில் ஒன்றிணையுங்கள்.
- நீங்கள் இன்னொரு கோளிலிருந்து வந்திருப்பதாகக் கற்பனை பண்ணுங்கள். நீங்கள் வேறொரு கோளுக்குப் போவது போல் பாசாங்கு செய்யுங்கள். கற்பனையும் பாசாங்கு செய்தலும் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும்.

சிந்தனையைக் கிளறும் தொழிற்பாடுகள்

- மாதிரியுருக்கள் செய்யப் பயன்படும் களியில் சிறிதளவை ஒரு பிள்ளையிடம் கொடுத்து அக்களி தன்னையே குறிக்கிறது எனக் கற்பனை பண்ணச் செய்யுங்கள்.
- பிள்ளையை வித்தியாசமான காலத்திலும் இடத்திலும் இருக்கச் செய்யுங்கள். உதாரணமாக, மின்சாரமோ உலோகப் பாத்திரங்களோ பீங்கான் தட்டுக்களோ இல்லாத நிலையில் எப்படி ஓர் உணவைச் சமைக்கலாம் என்பதை விவரிக்கச் சொல்லுங்கள்.
- விடையளிக்கப்பட முடியாத வினாக்களின் பட்டியலொன்றைத் தயாரிக்கச் செய்யுங்கள்.

ஆக்கரீதியான விளையாட்டும் நடிப்பும்

பரிச்சயமான பொருட்களைப் புதிய அல்லது வழக்கத்துக்கு மாறான விதத்தில் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகளைத் தூண்டுங்கள். பாத்திரமேற்று நடித்தல்,

தன்னிச்சையாகத் தாமே நெறிப்படுத்தும் நாடகங்கள் போன்றவற்றிலும் ஈடுபடச் செய்யுங்கள்.

குழந்தைப் பருவம் முதலே புலன் சார்ந்த ஆராய்வையும் இயக்கத் திறன்களையும் விருத்தி செய்ய உதவுவதன் மூலம், உடல் சார்ந்த விருத்திக்கு விளையாட்டுக்கள் வழி கோலுகின்றன. விளையாடுவதன் மூலமும் அடிப்படையான உடல் சார் திறன்களை மீட்டி மீட்டிப் பயன்படுத்துவதன் மூலமும் பிள்ளைகள் சிரமம் மிகுந்த பணிகளைச் செய்வதற்குத் தகுதி பெறுகின்றனர். கட்டுமானத் துண்டுகளுடன் விளையாடும் பிள்ளைகள் அளவிடுதல், ஒப்புவமை காணுதல், சமநிலைப்படுத்தல், வடிவமைத்தல் மற்றும் இடவெளி தொடர்புகள் என்பன பற்றிய சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

நாடகங்களினூடாக சமூகத்திலுள்ள மனிதர்களைப் போல் நடித்துக்காட்டப் பழகுகின்றனர். இது வித்தியாசமான சமூகப் பாத்திரங்கள் பற்றிப் பரீட்சித்துப் பார்க்க அவர்களுக்கு உதவுகிறது. அத்தோடு, பிள்ளைகள் படிப்படியாக ஒருவர் மற்றவரின் தேவைகளைப் பற்றிக் கரிசனை காட்டவும் வித்தியாசமான விழுமியங்களை மெச்சுவதற்கும் கற்றுக்கொள்கின்றனர்.

விளையாட்டுக்களின் போது பிள்ளைகள் தம் கருத்துக்களை வெளிப்படுத்தவும் தமது உணர்வுகளைச் சமாளித்துக்கொள்ளவும் பழகுகின்றனர். அத்தோடு, மன அழுத்தம், மன இறுக்கம் முதலியவற்றை நிவர்த்தி செய்யவும் அது உதவும்.வளர்ந்தவர்களின் கட்டுப்பாடுகளின்றி சுதந்திரமாக இயங்கவும் அவர்களால் முடிகின்றது. விளையாடும் போது வளர்ந்தவர்களின் நியமங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டுமெனும் தேவை இருக்காது.

பராமரிப்போர் என்ற வகையில் பிள்ளைகளின் விளையாட்டில் ஆதிக்கம் செலுத்துவதை நாம் தவிர்த்துக் கொள்வது அவசியம். விளையாட்டுக்கள் பிள்ளைகளின் யோசனைப்படியே இடம்பெற வேண்டும்; வளர்ந்தவர்களின் நெறிப்படுத்தலுக்கு உட்படக் கூடாது. அவர்களின் உளத் தூண்டுதல்களே போஷித்து வளர்க்கப்பட வேண்டும்; எம்முடையவை அல்ல.

வாசித்தல், மற்றவர்களைப் புரிந்து கொள்ளுதல் உட்பட பல்வேறு திறன்களை வளர்க்கும் முகமாக எழுதப்பட்ட நாடகமொன்றை உங்கள் பிள்ளைகளுடன் மேடையேற்ற நீங்கள் விரும்பக்கூடும். ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் பாத்திரத்தைப் பற்றி அவர்கள் தேடிப் பார்க்க வேண்டும். அப்பாத்திரங்களுக்குரிய உணர்வுகளைப் புரிந்து கொண்டு தனக்குரிய உரையாடல் பகுதியை வாசித்து தாம் ஏற்கும் பாகத்தைப் பற்றி நன்கு அறிந்து கொள்வது அவசியம். எளிய உடைகளுடன் முழு நாடகத்தையும் தாமே ஒழுங்கு படுத்தி நடித்துக்காட்ட வேண்டுமென நீங்கள் பிள்ளைகளை வேண்டலாம்.

சிறுவர் எழுத்தாக்கம்

வாசிப்புக்கு முந்திய பருவத்துப் பிள்ளைகளைக் கதையொன்றைக் கூறச் செய்து அதனை நீங்கள் எழுதிக் கொடுக்கலாம். பின்னர் அதற்குரிய விளக்கப்படங்களை அவர்கள் வரையலாம். உங்கள் பிள்ளைகள் எழுத்துக் கூட்டி எழுதப் பழகிய பின் அவர்களே எழுதத் தொடங்கலாம். இக்கட்டத்தில் எழுத்துப் பிழைகள் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை; அது பற்றிப் பின்னர் கவனிக்கலாம். உங்கள் பிள்ளை எழுதுவதில் ஆர்வம் காட்டத் தொடங்கியவுடன் நூலாசிரியர்கள் ஆக்கங்களை எழுதுவதற்குப் பயன்படுத்தும் முறைகளை அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க முடியும். பொதுவாக எழுத்தாளர்கள் திருத்தமற்ற முன்வரைவுகளை எழுதத் தொடங்கி, பின்னர் அவற்றைப் படிப்படியாகத் திருத்தியமைத்து வெளியீட்டுக்குத் தயார் செய்வார்கள். தனக்கு விருப்பமான கதையொன்றை உங்கள் பிள்ளையைத் தெரிவு செய்யச் செய்து அக்கதையை மேலும் தெளிவாக எழுதுவதற்கு அதற்குத் துணை புரிவதன் மூலம் இது பற்றிக் கற்பிக்க முடியும். பின்னர் அக்கதையை கைகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு புத்தகமாக உருவாக்கலாம். வளர்ந்த பிள்ளைகள் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி வியக்கத்தக்க முறையில் புத்தகங்களை உருவாக்க முடியும். வாசிப்பின் பெறுமதியை மறந்து விட வேண்டாம். நல்ல எழுத்தாளர்கள் அனைவரும் நல்ல வாசகர்களாகவே இருப்பார்கள். வாசிப்பதன் மூலம் எழுதுவதற்குத் தேவையான கற்பனைகள் பலவற்றை உங்கள் பிள்ளை பெற்றுக் கொள்ளும்.

சிறுவர் சித்திரம்

- வரையறை செய்யப்படாத சித்திரத் தொழிற்பாடுகளை உங்கள் பிள்ளைகளுக்கு வழங்குங்கள். பிள்ளைகள் பார்த்துப் பிரதி பண்ணுவதற்கென மாதிரிச் சித்திரத் தொகுதியொன்றை அவர்களின் எதிரே காட்சிக்கு வைக்காமல் அவர்கள் தமது கற்பனா சக்தியைப் பயன்படுத்த இடமளியுங்கள். ஒரே வகையான கோட்டுப் படங்களைக் கொண்ட நிறந்தீட்டும் புத்தகத்தின் பக்கங்களை அவர்களுக்கு விநியோகிக்காமல் ஏதேனும் மென்னிசையொன்றை ஒலிக்கச் செய்து தாம் செவிமடுப்பதைப் படமாக வரையுமாறு பிள்ளைகளை வேண்டுங்கள்.

- ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி வழங்கக்கூடிய சூழலொன்றை உருவாக்குங்கள். சித்திரத் தாளின் சொர சொரப்புத் தன்மையை அவர்கள் தொட்டுணரட்டும், மெழுகு நிறங்களின் வாடையை மணந்து நுகரட்டும், நிறப் பென்சில்கள் சீவிக் கூராக்கப்படும் ஓசையைக் கேட்டுணரட்டும், சாயங்களைக் கலக்கும் போது ஏற்படும் நிற மாற்றங்களைப் பார்த்து ரசிக்கட்டும்!

- தன்னிச்சையான ஆராய்ச்சியை ஊக்குவியுங்கள். மெழுகு வர்ணங்கள் (crayons),குறியிடும் பேனாக்கள் (markers), பசை, வித்தியாசமான கடதாசி வகைகள், தூரிகைகள், சாயங்கள் போன்ற அடிப்படைப் பொருட்களைத் தங்குதடையின்றி இலகுவாகப் பெற்றுக்கொள்ள வழி செய்யுங்கள். பிள்ளைகள் இப்பொருட்களின் இயல்புகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் கண்டறிந்து கொள்ள இடமளியுங்கள். பிள்ளைகள் தமது விரல்களை நிறம் தீட்டும் தூரிகையாகப் பயன்படுத்த முடியுமா? தங்களது உடலை ஒரு மரத்தின் வடிவத்தைப் போன்று ஆக்கிக்கொள்ள முடியுமா? ஊதா நிறம் என்ன உணர்வுகளை ஏற்படுத்துகிறது என்பதை அவர்களால் விவரிக்க முடியுமா? சந்தோஷமான அல்லது துயரமான அல்லது விநோதமான முறையில் அவர்களால் அறையினுள் வலம் வர முடியுமா?

- மோசமான ஆக்கங்களை விமர்சிப்பதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். ஒத்த வயதினரதும் வளர்ந்தோரதும் விமர்சனங்கள், தீர்ப்புக்கள் முதலியவற்றிலிருந்து நாம் பிள்ளைகளைக் காத்துக்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் நல்லதோ மோசமானதோ இல்லை.

ஒவ்வொரு ஆக்கமும் ஏதோ ஒரு வகையில் சிறப்புடையதே. பாலர் பள்ளியைப் பொறுத்தமட்டிலும்கூட இது முக்கியமானது. சித்திரத்தில் ஒவ்வொருவரும் தத்தமது ஆக்கங்களுக்கு அதிபதியாக உள்ளனர். அவர்கள் தாம் விரும்பிய வண்ணம் அதனைச் செய்ய முடியும். பிள்ளைகளின் ஆக்கங்களை அசிங்கமானவை அல்லது முழுமையடையாதவை என அடிக்கடி விவரிப்பதனால் அவர்கள் மன இறுக்கமும் ஐயப்பாடும் அடைகின்றனர்.

சில தப்பெண்ணங்கள்: 'விநோதமான' அல்லது 'பயனற்ற' கருத்துக்கள்

ஆக்கத்திறனுடைய பிள்ளைகள் விருத்தி செய்து கொள்ளும் சில ஆளுமைப் பண்புகள் விநோதமானவையாக அல்லது பயனற்றவையாக மற்றவர்களுக்குத் தோன்றலாம். இவற்றுக்குரிய சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன:

- சுதந்திரமான சிந்தனை: ஆக்கத்திறனுடைய பிள்ளைகள் சில கருத்துக்களைப் பற்றிப் பேசும் போது அவர்கள் ஒழுக்கக் கட்டுப்பாடற்றவர்களாகவும் ஒழுங்குக் குறைபாடுள்ளவர்களாகவும் தோன்றலாம்.
- எளிதில் ஏமாறும் இயல்பு: ஆக்கத்திறனுடைய பிள்ளைகள் விநோதமான யோசனைகள் பற்றிப் பரபரப்பு அடைவதனால் வளர்ந்த ஒருவருக்கு எளிதாகத் தெரிகின்ற குறைபாடுகளையும் பிரதிகூலங்களையும் அவர்கள் கண்டு கொள்வதில்லை.
- நகைச்சுவை: வளர்ந்தவர்கள் சீரியஸாகக் கருதும் யோசனைகளில் ஆக்கத்திறனுடைய பிள்ளைகள் நகைச்சுவையைக் காண்பார்கள். கேள்வி தொடுக்கவும் வேறு கண்ணோட்டத்தில் பார்க்கவும் அவர்களுக்கிருக்கும் ஆற்றலை ஏளனமாகவும் கண்டனமாகவும் மற்றவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடும்.
- பகற்கனவு காணுதல்: ஆக்கத்திறனுடைய பிள்ளைகள் கற்பனையில் உருவகிப்பதன் மூலம் கற்றுக் கொள்வதோடு தமது பிரச்சினைகளுள் பலவற்றைப் பகற்கனவு காண்பதனூடாகத் தீர்த்துக் கொள்கின்றனர். தம் மனதைச் சுதந்திரமாக உலவ விடுவதன் மூலம் கற்பனை வலுப்பெற்று புதிய தொடர்புகள் உருவாகின்றன. எனினும், இவர்கள் கவனக் குறைவாகவும் ஈடுபாடின்றியும் இருப்பது போல் ஏனையோருக்குத் தோன்றலாம்.
- தனிமை: எளிய, உருப்பெறாத யோசனைகளிலிருந்தே ஆக்கத்திறன் விருத்தியடைகிறது. பிள்ளைகளின் யோசனைகள் தலையெடுக்கும் போது அவர்களுக்குத் தனிமை தேவைப்படலாம்.
- தொழிற்பாடு: ஒன்றுமே செய்யாதிருக்கும் போது யோசனைகள் தோன்றலாம். யோசனை உருவான பின் ஆக்கத்திறனுடைய பிள்ளை தொழிற்பாட்டில் மூழ்கிவிடும். பிள்ளைகள் தம் யோசனைகளைப் பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் வீட்டின் முக்கியமான இடங்களில் கடதாசித் தாள்களையும் பென்சில்களையும் வைத்திருப்பது நல்லதொரு பழக்கமாகும்.

சாதகமான அறிவை உள்வாங்கிக்கொள்ள எனக்கிருந்த ஆற்றலை விட கற்பனையில் உருவகிக்கும் எனது திறமை எனக்கு மிகப் பெறுமதி வாய்ந்ததாக இருந்தது.
Albert Einstein

பெற்றார் செய்யக்கூடியவை?

- முன்னுதாரணமாக இருங்கள்: உங்களுடைய சிறுபிள்ளைத்தனமான அறிந்து கொள்ளும் ஆர்வம், உற்சாகம், வெகுளித் தன்மையான யோசனைகள் என்பவற்றைக் கண்ணியப்படுத்துங்கள். புதிய அனுபவங்களுக்கு உங்கள் மனதைத் திறந்து விடுங்கள்; உங்களுடைய ஆக்கரீதியான ஆர்வங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையின் ஆர்வங்களில் மகிழ்ச்சி காணுங்கள்.
- உங்கள் பிள்ளையை நம்புங்கள்: நம்பிக்கைக்குப் பாத்திரமான, அன்பு செலுத்தப்படும் பிள்ளைகள் மற்றவர்களிலிருந்து வித்தியாசமாக இருப்பதற்குத் தேவையான தன்னம்பிக்கையையும் ஆக்கங்கள் செய்வதற்கான துணிவையும் பெற்றுக்கொள்வர். சமூக வழக்கங்கள் பற்றி அளவுக்கு மீறிக் கரிசனை கொள்வதும் இந்தப் பாலார் இப்படித்தான் இருப்பார்கள் என்ற எண்ணங்களும் ஆக்கத்திறனைக் குன்றச் செய்யும்.
- உங்கள் பிள்ளையை உற்சாகப் படுத்துங்கள்: பரிசோதித்துப் பார்க்கவும் தேடி ஆராயவும் தூண்டுங்கள். தீர்ப்புகள் வழங்காமல் உங்கள் பிள்ளைக்குச் செவிமடுக்கப் பழக்குங்கள். உங்கள் பிள்ளைகள் முயற்சியில் தோல்வியுறும் போது அவர்களுக்கு உறுதுணையாக இருங்கள். வெற்றுப் புகழ்ச்சியைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- சுற்றாடலை வளப்படுத்துங்கள்: கற்பனையைத் தூண்டவும் பிள்ளைகள் சொந்தமாக சித்திர ஆக்கங்களை உருவாக்கவும் உதவக்கூடிய பொருட்களை வழங்குங்கள். பழைய சஞ்சிகைகள், நூல்கள், செய்திப்பத்திரிகைகள், விளையாட்டுக்கள், துணிகள், ஆபரணங்கள் முதலியன பல்வேறு செயல்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.
- கூட்டாக TV பாருங்கள்: பிள்ளைகளின் மீது TV ஏற்படுத்துகின்ற எதிர்மறையான செல்வாக்கு காரணமாக இது சர்ச்சைக்குரிய கருத்தொன்றாக இருக்கிறது. எனவே, ஆவண ரீதியான (documentary) திரைப்படங்களிலேயே கவனம் செலுத்த வேண்டும்.
- உங்கள் பிள்ளைகளின் யோசனைகளைப் பதிவு செய்து வைக்க உதவுங்கள்: பிள்ளைகள் சிறுவயது முதலே வரையவும் நிறந்தீட்டவும் விரும்புகின்றனர். அவர்கள் எழுதப் பழக முன் தமது கருத்துக்களை வளர்ந்த ஒருவருக்குச் சொல்லி எழுத்தில் பதிக்க வைக்கலாம். பின்னர் ஒரு நாட்பதிவேட்டையோ குறிப்புப் புத்தகத்தையோ பேணி வருமாறு உங்கள் பிள்ளையை உற்சாகப்படுத்தலாம்.

விளையாட்டுப் பொருட்கள் பற்றிய குறிப்பு

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக வாங்கும் விளையாட்டுப் பொருட்கள் பற்றிச் சிந்தியுங்கள்.விளையாட்டுப் பொருட்கள் ஆக்கத்திறனை ஊக்குவிப்பதோடு கல்வி சார்ந்தனவாகவும் இருத்தல் வேண்டும். கட்டுமானத் துண்டுகளை (Building blocks) உபயோகித்து விளையாடுவது சிந்தனைக்குப் புத்துணர்வு வழங்கும். பொம்மைகளுடன் விளையாடுவது ஆரோக்கியமானது. அவை பிள்ளைகளுக்குத் தோழர்களாக அமைவதோடு அவற்றோடு அவர்கள் அம்மா, அப்பா, நண்பன் என்ற பாத்திரங்களையேற்று நடிக்கவும் முடிகிறது. தமது விரக்திகளையும் எரிச்சல்களையும் பொம்மைகளின் மீது வெளிப்படுத்தவும் வாய்ப்பு உண்டு. நெசவு, பின்னல், தையல், மரவேலை போன்றவற்றைக் கற்பிக்க உதவும் விளையாட்டுப் பொருட்களை வாங்குங்கள். சிறிய அளவு நாடாக்கள், சிறு சுத்தியல்கள் (மேற்பார்வையின் கீழ் பயன்படுத்தப்பட

வேண்டும்) என்பனவும் உகந்தவையே. அதிக விளம்பரம் செய்யப்படுகின்ற அல்லது மிக விலை கூடிய விளையாட்டுப் பொருட்களே சிறந்தவை எனக் கருதக் கூடாது. உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருந்தால் அவர்கள் கூட்டாக விளையாடக்கூடிய விளையாட்டுப்பொருட்களை வாங்க முயற்சியுங்கள்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக வாங்கும் விளையாட்டுப் பொருட்கள் பற்றிச் சிந்தியுங்கள். விளையாட்டுப் பொருட்கள் ஆக்கத்திறனை ஊக்குவிப்பதோடு கல்வி சார்ந்தனவாகவும் இருத்தல் வேண்டும். கட்டுமானத் துண்டுகளை உபயோகித்து விளையாடுவது சிந்தனைக்குப் புத்துணர்வு வழங்கும்.

வித்தியாசமான ஆற்றலுடைய பிள்ளைகளும் Autism எனும் கோளாறினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளும் முகங்கொடுக்கும் சவால்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட விளையாட்டுப் பொருட்களும் விற்பனைக்கு இருக்கின்றன.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 62: குடும்பத்தில் ஆக்கத்திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகள்

பிள்ளைகளுடன் பின்வரும் ஆக்கரீதியான முறைகளைப் பயன்படுத்த முயற்சியுங்கள்.

1. **ஆக்க ரீதியான விளையாட்டைப் பயன்படுத்துங்கள்:** "தலைவரைப் பின்பற்றுதல்" போன்ற தொழிற்பாடுகள் ஆக்கபூர்வமான அசைவுகளைப் பற்றிச் சிந்திக்கவும் தன்னை மற்றவர்கள் பின்பற்றுவதனால் கிடைக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் தூண்டுகின்றன. கட்டைகள், சேறு, மணல், களி, நீர் போன்ற எளிய பதார்த்தங்களை உபயோகித்துச் செய்யப்படும் நிர்மாணத் தொழிற்பாடுகள் மூலம் பல்வேறு வகையான கட்டமைப்புக்களை வடிவமைத்து நிர்மாணிக்கப் பழகிக்கொள்வர்.

2. **தொடர்ந்து செல்லும் கதை எண்ணக்கருவொன்றைப் பயன்படுத்துங்கள்:** ஒருவர் கதையொன்றை ஆரம்பிக்க ஏனைய ஒவ்வொருவரும் அதற்கு ஒரு பகுதியைச் சேர்த்தல். கதையொன்றை வாசித்து விட்டு அதை நடித்துக் காட்டச் செய்யுங்கள். கைப்பாவைகளைப் பயன்படுத்தி கதையொன்றை நடித்துக் காட்டுங்கள்.

3. **புதிய யோசனைகளை உருவாக்குவதற்குப் பொருட்களைப் பயன்படுத்துங்கள்:** வித்தியாசமான மிருகங்களின் வடிவத்தில் பிஸ்கட் போன்ற உணவுப் பண்டங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஏதேனுமொரு உருவத்தைத் தெரிவு செய்து அதனை உற்று நோக்கிய பின் சாப்பிட வேண்டும். அடுத்த 1-2 நிமிடங்களுக்கு அப்பிள்ளை குறிப்பிட்ட மிருகமாக மாறி அது போல் நடிக்க வேண்டும். அம்மிருகத்தின் நடத்தையையும் அசைவுகளையும் செய்து காட்டுவதற்கு ஆக்க ரீதியான முறையில் அசைவுகளைப் பயன்படுத்துங்கள்.

4. **பாத்திரமேற்று நடிப்பதைப் பயன்படுத்துங்கள்:** வெவ்வேறு தராதரங்களில் இருப்போரைப் போல் பாத்திரமேற்று நடிப்பதன் மூலம் மற்றவர்களின்

கண்ணோட்டங்களைப் பிள்ளைகள் புரிந்து கொள்ள முடிவதோடு அவர்களது உணர்வுகளையும் தேடி ஆராய வழி ஏற்படுகிறது.

5. திறந்த வகை வினாக்களைக் கேளுங்கள்: பிள்ளைக்குப் படமொன்றைக் காட்டி அதைப் பற்றிக் கேள்விகள் கேளுங்கள். உதாரணமாக,

"இந்தப் படத்திலுள்ள மனிதர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?"

"அந்த மனிதர்கள் என்ன கூறுகிறார்கள்?"

"இன்று உங்களுக்கு நிகழ்ந்த சுவாரஷ்யமான நிகழ்ச்சி எது?" (வித்தியாசமான விடைகள் தரப்படக்கூடிய கேள்விகளே இங்கு கேட்கப்பட வேண்டும்)

6. தனது புலன்களைப் பயன்படுத்துமாறு பிள்ளைகளுக்குக் கூறுங்கள்:

- பிள்ளைகளின் கண்களை மூடச் செய்து விட்டு அவர்களது கைகளில் ரிஜிபோம் துண்டு, றப்பர், பாறைத்துண்டு போன்ற வித்தியாசமான பொருட்களை வைத்து அவை எவை என ஊகித்துக் கூறச் செய்யுங்கள்.
- பிள்ளைகள் தம் கண்களை மூடிக்கொண்டு தாம் செவிமடுக்கும் பல்வேறு ஒலிகளை இனங்காணச் செய்யுங்கள். சீட்டுக்கட்டுகளைக் குலுக்குதல், நாணயங்களைக் குலுக்குதல், மணல் தாளினால் உராய்தல், கடதாசியைக் கிழித்தல் போன்ற ஒலிகளை இதற்காகப் பயன்படுத்தலாம்.

7. மாற்றங்கள் பற்றிப் பிள்ளைகளிடம் கேளுங்கள்: பொருட்களைத் தமக்கு வேண்டியவாறு மாற்றியமைத்துக்கொள்ளும்படி பிள்ளைகளிடம் கூறுங்கள். உதாரணமாக,

- இன்னும் சிறிது இனிப்புச் சுவையைக் கூட்டினால் நல்ல சுவையைத் தரக்கூடியது எது?
- இன்னும் சற்றுச் சிறிதாக இருந்தால் சிறப்பாக இருக்கக் கூடிய பொருள் எது?
- இன்னும் சற்று வேகமாக அமைந்தால் உல்லாசமாக அமையக்கூடியது எது?
- இன்னும் சற்று ஓசை குறைவாக இருந்தால் சிறப்பாக அமையக்கூடியது எது?
- இன்னும் சற்றுப் பெரிதாக இருந்தால் மகிழ்ச்சி தரக்கூடியது எது?
- பின்னோக்கிச் செல்லுமாயின் கூடுதலான உளக்கிளர்ச்சியைத் தரக்கூடியது எது?
- உச்சரிக்கப்படும் விதத்திலேயே ஆங்கிலச் சொற்களுக்கு எழுத்துக் கூட்டி எழுதினால் எப்படியிருக்கும்?

8. பெருந்தொகையான விடைகளைத் தரக்கூடிய வினாக்களைக் கேளுங்கள்: நீர் பற்றிய கருத்துப் படிவத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உதாரணங்கள் சில இங்கே தரப்பட்டுள்ளன. (தீ, காற்று, மணல், மோட்டார் வாகனங்கள், புகை, பனிக்கட்டி போன்ற ஏனைய கருத்துப்படிவங்களையும் இவ்வாறு பயன்படுத்தலாம்):

- நீரின் பயன்பாடுகள் சில கூறுக.
- நீரில் மிதப்பவை எவை?
- நீர் எவ்வாறு எமக்கு உதவுகிறது?
- தண்ணீர் ஏன் குளிராக இருக்கிறது?
- நீருக்குள் அமிழ்ந்திருக்கக்கூடியவை எவை?
- நீர் என்னென்ன நிறங்களில் தோற்றமளிக்கலாம்?

9. "இப்படியிருந்தால் எப்படியிருக்கும்?" என்ற வகையிலான வினாக்களைக் கேளுங்கள்:

- உலகிலுள்ள மரங்களெல்லாம் நீல நிறமாக இருந்தால் எப்படியிருக்கும்?
- உலகிலுள்ள மோட்டார் வாகனங்கள் யாவும் திடீரென இல்லாது போனால் எப்படியிருக்கும்?

- உலகில் அனைவரும் ஒரே விதமாதன ஆடை அணிந்தால் எப்படியிருக்கும்? ஒரே பெயரைக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும்?
- உங்களுக்குப் பறக்க முடியுமாக இருந்தால் எப்படியிருக்கும்?
- வீட்டை ஒருவருமே சுத்தம் செய்யாமலிருந்தால் எப்படியிருக்கும்?
- உலகில் எல்லோருமே நல்லவர்களாக (அல்லது கெட்டவர்களாக) இருந்தால் எப்படியிருக்கும்?
- உலகில் எல்லோருமே நோயாளிகளாக (அல்லது சுகதேகிகளாக) இருந்தால் எப்படியிருக்கும்?

10. "எத்தனை வித்தியாசமான முறைகளில்..." என்ற வகையிலான வினாக்களைக் கேளுங்கள்:

- எத்தனை வித்தியாசமான முறைகளில் ஒரு கரண்டி பயன்படுத்தப்படலாம்?
- எத்தனை வித்தியாசமான முறைகளில் ஒரு பொத்தான் பயன்படுத்தப்படலாம்?
- எத்தனை வித்தியாசமான முறைகளில் ஒரு நூல் துண்டு பயன்படுத்தப்படலாம்?
- எத்தனை வித்தியாசமான முறைகளில் ஒரு பேப்பர் கிளிப் பயன்படுத்தப்படலாம்?

தொழிற்பாடு- 63: பெறுமதி மிக்க நடத்தைப் பண்புகள்

நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முதற்தடவையாக வஹீ இறங்கிய போது அன்னார் அச்சமுற்று வீடு திரும்பித் தம் மனைவி கதீஜா (றழி) அவர்களிடம் நடந்ததைக் கூறினார்கள். கதீஜா (றழி) அவர்கள் நபிகளாரைத் தேற்றிய போது அன்னாரின் நல்ல பண்புகள் பலவற்றை எடுத்துக் கூறினார்கள். அவையாவன:

- நெருங்கிய உறவினர்களோடு தொடர்பாக இருத்தல்
- நலிவுற்றோருக்கு உதவி செய்தல்
- வறியவர்களுக்கு ஈதல்
- விருந்தினர்களை உபசரித்தல்
- நோயுற்றோருக்கு உறுதுணையாக இருத்தல்

மேற்சொல்லப்பட்ட ஒவ்வொரு நடத்தையினதும் முக்கியத்துவம் பற்றி உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள். இவ்வியல்புகளை உள்ளடக்கிக் கூட்டாக ஒரு கதை எழுதுங்கள்.

தொழிற்பாடு- 64: சிக்கலான கேள்விகளுக்கு விளக்கமளித்தல்

பிள்ளைகளினால் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது பற்றிப் பெற்றார் சிலரை ஒன்று கூட்டிக் கலந்துரையாடுங்கள். (உங்களுக்கு உதவி தேவைப்படின் மற்றவர்களிடம் கேளுங்கள்)

- "இறைவனைப் படைத்தது யார்?", "தன் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களை அல்லாஹ் ஏன் தண்டிக்க வேண்டும்?","இறைவனின் செய்தி கிடைக்கப்பெறாதவர்கள் பெருந்தொகையாக இருப்பதற்குக் காரணம் என்ன?", "சுவர்க்கத்தின் முடிவில்லா வாழ்க்கையை அனுபவிக்கும் ஒருவர் சலிப்படையாமல் இருக்க முடியுமா?"
- 'சுய விருப்பப்படி வாழ்தல்', 'முன்னேற்பாடுகள்' ஆகிய இரு கருத்துப் படிவங்களையும் ஒரு பக்கத்தில் முன்னெச்சரிக்கையோடு தொழிற்படுதல் மறுபுறத்தில் இறைவனின் நாட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் எவ்வாறு விளங்கப்படுத்தலாம்? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் எங்கே போய் முடியப் போகிறோம்? மறுமை எப்படிப்பட்டது? நாம் இறைவனைப் பார்க்க முடியுமா? ஏன் பார்க்க முடியாது? இறைவன் நாடினால் எல்லோரையும் அவன் தன் மீது விசுவாசம் கொள்ளச் செய்யலாமே! ஏன் அவன் அவ்வாறு செய்வதில்லை?

மேற்சொன்னவை பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் சிக்கலான வினாக்களாகும். அவர்களுடைய வயது, முதிர்ச்சி என்பவற்றுக்கேற்ப இவற்றை நாம் விளக்க வேண்டும்.

சுவர்க்கத்தைப் பற்றி வர்ணிக்கும் போது நபி (ஸல்) அவர்கள் "சுவர்க்கமானது எந்தளவுக்குச் சிறந்ததும் தனித்துவமானதும் என்றால், அது போன்ற ஒன்றை எந்தக் கண்ணும் கண்டிருக்காது; எந்தச் செவியும் கேட்டிருக்காது; எந்த இதயமோ உள்ளமோ கற்பனை பண்ணியுமிருக்காது" என விளக்கினார்கள். எங்கள் மனிதப் புலன்களால் புரிந்து கொள்ளவே முடியாத முற்றிலும் புதிய முடிவிலா வாழ்க்கைக்குரிய அமைப்பே அதுவாகும்.

தொழிற்பாடு- 65: திருடனைப் பற்றிய புலக் காட்சியே முக்கியமானது!

ஆக்கரீதியான ஒரு தீர்வு

பின்வரும் உண்மைக் கதையைப் பிள்ளைகள் வாசிக்கச் செய்யுங்கள். பின்னர், குடும்பத்தை எதிர்நோக்கியுள்ள சில பிரச்சினைகள் பற்றிக் கூட்டாகச் சிந்தித்து அவற்றுக்கு எப்படித் தீர்வு காணலாம் என்பது பற்றிச் சிந்தியுங்கள்.

அமெரிக்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஒரு விமான நிலையத்துக்குச் சென்ற போது அங்கு காவலாளி ஒருவர் நிற்பதைக் கண்டார். "நாம் செலவுகளைக் குறைத்துக்கொள்ள முடியாதா?" என அங்கிருந்த மனேஜரிடம் கேட்டார். "எப்படி?" எனக் கேட்டார் மனேஜர். "எழுந்தவாறாக வாரத்துக்கு மூன்று நாட்கள் மாத்திரம் காவலாளியைக் கடமையில் அமர்த்தினால் எந்த இரவுகளில் காவலாளி இருப்பான் என்பதைத் திருடர்கள் அறிந்து கொள்ள முடியாமல் போகும்" என்றார் அதிகாரி. அந்த யோசனை அமுல் படுத்தப்பட்ட பின்னர் மறு வருடமும் செலவுகளைக் குறைப்பது பற்றிய கேள்வி எழுப்பப்பட்டது. "எப்படி?" என்ற கேள்வி எழுந்த போது காவலாளிக்குப் பதிலாக கடூரமான நாயொன்றைக் காவலுக்கு வைக்குமாறு அதிகாரி ஆலோசனை வழங்கினார். மூன்றாம் வருடமும் அதே பிரச்சினை எழும்பிய போது நாயைப் பகுதி நேரம் காவலுக்கு அமர்த்துமாறு ஆலோசனை கூறப்பட்டது. நான்காம் வருடத்தில் அங்கு வந்த அதிகாரி, "திருடர்களின் புலக்காட்சியே இங்கு முக்கியமானது. எனவே, நாயை நன்கு பட்டிணி போட்டு அது பயங்கரமாகக் குரைக்கும் போது ஒலிப்பதிவு செய்து இரவில் இடையிடையே அதன் குரைப்பொலியை ஒலிக்கச் செய்தால் என்ன?" என்றார். அது பயனளித்தது. எனவே, காவலாளியை வேலைக்கமர்த்தும் செலவை அவர்கள் சேமித்துக் கொண்டனர். (MSNVC, November 3, 2007)

அத்தியாயம் 21

சுய மதிப்பும் கெட்டுப்போன பிள்ளைகளும்

- *சுய மதிப்பு* 498
- *பிள்ளை கெட்டுப்போகாமல் தவிர்ப்பது எப்படி?* 499
- *அழுது அடம்பிடித்தல்: அழுகையை ஆயுதமாகப் பயன்படுத்த இடமளிக்காதீர்கள்* 500
- *தொழிற்பாடுகள் 66- 68* 501

சுய மதிப்பு

பிள்ளைகள் தீர்வொன்றைத் தேடும் போது அவர்களுக்கு ஊக்குவிப்புத் தேவைப்படுகிறது. அது போன்றே அவர்கள் ஒரு முயற்சியில் தவறிவிடும் போதும் ஊக்குவிப்புத் தேவைப்படும். தவறுகள் வாழ்க்கையின் ஓர் அம்சமாக இருப்பதனால் அவற்றைத் தோல்விகளாகக் கருதாமல் கற்றல் அனுபவங்களாகக் கருதப் பிள்ளைகளைப் பழக்குவது இன்றியமையாதது. தோல்விகள் பிள்ளைகளை ஊக்கமிழக்கச் செய்ய அனுமதிக்க வேண்டாம். மாறாக, அவர்களை உற்சாகப்படுத்துவதற்குரிய ஒரு வாய்ப்பாக அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். "நீ ஏன் இவ்வளவு முட்டாளாக இருக்கிறாய்?" என்று கேட்பதற்கும் "நீ கெட்டிக்காரன்; உன்னால் சாதிக்க முடியும்!" என்று கூறுவதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஊக்கமளித்தலானது கற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் சிறப்பாகச் செயற்படுவதற்கும் பிள்ளைகளுக்கு உதவுகின்றன. பிள்ளைகளால் வியந்து போற்றப்படுபவர்களே அவர்களைத் தோல்விக்குரியவர்கள் என அழைத்தால் பிள்ளைகள் நிச்சயமாகத் தோல்வியடையவே செய்வர்.

"நான் தோல்வியடைந்து விட்டேன். எனவே, நான் ஒன்றுக்கும் பயனில்லாதவன்" என்பது போன்ற சிந்தனைகள் உற்சாகமிழக்கச் செய்யக்கூடியவை. அவை பிள்ளைகளின் வாழ்க்கையின்பத்தை குறையச்செய்து அவர்களது மனவெழுச்சிச் சக்தியை வீணாக்கி விடும்; நெருக்கடிக்கு உள்ளாகும் வேளையில் அவர்கள் குறுக்கு வழியை நாடும் தன்மையை அதிகரிக்கச் செய்யும். சுய மதிப்பற்ற பிள்ளைகள் அடைய முடியாதவையெனத் தமக்குப் புலப்படும் இலக்குகளுக்காக முயற்சிகளை மேற்கொள்ள மாட்டார்கள். படிப்பினூடாக வும் ஒத்த வயதினரின் நெருக்குதலைத் தவிர்த்துக்கொள்வதன் மூலமும் காலப்போக்கில் வெற்றி பெற வேண்டுமாயின் சுயமதிப்பு கட்டாயம் தேவை. சுய மதிப்புக் குறைந்த பிள்ளைகள் திடீர்த் தூண்டுதல்களுக்கு ஏற்பச் செயற்படுவதோடு அவற்றின் விளைவுகள் பற்றி அக்கறை கொள்ள மாட்டார்கள். தமது இலக்குகளை நோக்கிச் செல்வதில் அவர்களுக்கு நம்பிக்கை சொற்பமாகவே இருக்கும். குறைந்த சுய மதிப்புடைய பிள்ளைகள் மதுபானம், போதைப் பொருட்கள், பாலின்பம், வன்முறை முதலியவற்றால் உடனடித் திருப்தியைப் பெற்றுக்கொள்ள நாடுபவர்களாக இருப்பர்.

பிள்ளைகளிடம் குறைபாடுகள் எதுவுமில்லை என்றும் தவறுகள் என்பவை கற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்புக்களே என்றும் அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். எது சிறந்தது என்பதைத் தெரிவு செய்வதற்குத் தேவையான ஆற்றல் இப்பிள்ளைகளிடம் இருக்கும் (உதாரணமாக, நண்பர்களுடன் வெளியே செல்வதற்குப் பதிலாக பரீட்சைக்குப் படிப்பதைத் தெரிவு செய்தல்). கடுமையான உழைப்பு, முயற்சி என்பவற்றின் மூலம் தாம் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் காணப்படும். தமது முயற்சிகளின் பயன்களை அவர்கள் அவதானிப்பதோடு தம்மை வெற்றியாளர் களாக அவர்கள் வரையறுத்தும் கொள்கின்றனர். வெற்றியைத் தொடர்ந்து வரும் மகிழ்ச்சியானது எதிர்காலத்திலும் வெற்றியைப் பெறுவதற்குத் தேவையான வாய்ப்பினை ஏற்படுத்துகிறது.

அன்பு, துணிச்சல், ஆக்கத்திறன், நேர்மை, பொறுப்புணர்வு என்பன நேரடியாக அல்லது மறைமுகமான முறையில் உறுதியான தன்னம்பிக்கை யையும் சுய மதிப்பையும் கட்டியெழுப்புகின்றன. இப்பண்புகள் ஒவ்வொன்றும் தம்முள் இடைத்தாக்கம் புரிந்து ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன. அவையனைத்தும் பிள்ளையின் மனவெழுச்சிச் சக்தியையும் உளவியல் ரீதியான ஆற்றலையும் அதிகரிக்கச் செய்கின்றன.

கிண்ணம் பாதி நிரம்பியிருக்கிறதா அல்லது பாதி காலியாகவிருக்கிறதா என்பதை நாமே தீர்மானிக்கிறோம். வாய்க்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளின் துணிச்சலையும் தன்னம்பிக்கையையும் மேம்படுத்துங்கள். களைகளை நட்டால் அவைதான் வளரும். எனவே, மலர்ச் செடிகளையே நடுங்கள்.

பிள்ளை கெட்டுப்போகாமல் தவிர்ப்பது எப்படி?

போட்டிகளையும் நெருக்கடி நிலைமைகளையும் சமாளிப்பதற்குப் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் பெற்றார்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், அயலவர்கள், அறிமுகமற்றவர்கள் முதலியோரின் 'இல்லை' அல்லது 'முடியாது' என்ற பதில்களைக் கையாள்வதற்கும் அவர்கள் கற்றுக்கொள்வது அவசியம். மேலும், ஏமாற்றங்கள், மறுப்புக்கள், நிராகரிப்புக்கள் என்பவற்றைச் சமாளிக்கவும் அவர்களைப் பழக்குங்கள். ஒரு பிள்ளை கெட்டுப் போவதைத் தவிர்த்துக்கொள்ளக் கூடிய சில வழிகள் பின்வருமாறு:

ஒழுக்கக் கட்டுப்பாடு சீர்குலைய அனுமதிக்காதீர்கள்

சில பெற்றார் பிள்ளைகளுக்கு அதிக செல்லம் கொடுக்கின்றனர். விளையாட்டுப் பொருட்கள், பணம் அல்லது இனிப்புப் பண்டங்கள் போன்ற எதனையும் மிதமிஞ்சிக் கொடுக்கத் தொடங்கினால் பிள்ளைகள் சிறு வயதிலேயே கெட்டுப்போய் விடுவார்கள். வசதி படைத்த குடும்பங்களில் வளரும் பிள்ளைகளுக்கு அனைத்தும் அளவுக்கதிகமாகக் கிடைக்குமாயின் அவர்கள் கெட்டுப்போவார்கள். பெற்றார் தம் பிள்ளைகளுக்கு எதனையும் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கக் கூடாது. வாழ்க்கையில் கஷ்டமான காலங்களுக்கும் வசதி வாய்ப்புள்ள காலங்களுக்கும் முகங்கொடுக்கக்கூடிய வகையில் பிள்ளைகள் தயார்படுத்தப்பட வேண்டும்.

அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றாதீர்கள்

தங்கள் பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதன் மூலம் பெற்றார் மனத்திருப்தி பெறுகின்றனர். எனினும், சில கோரிக்கைகளைப் பெற்றார் வேண்டுமென்றே நிறைவேற்றாமல் விட்டுவிட வேண்டும். பிள்ளையின் ஒவ்வொரு விருப்பமும் நிறைவேற்றப்பட்டால் பிள்ளை தன்னலம் மிகுந்த பெருமைக்காரனாக மாறிவிடும். இவ்வாறான பிள்ளைகள் நியாயமற்றவர்களாகவும் வன்செயல் நாட்டமும் விரக்தியும் கொண்டவர்களாகவும் இருப்பர். பிற்காலத்தில் தொழிலுக்கான நேர்முகப் பரீட்சையில் தாம் நிராகரிக்கப்பட்டால் அதனை ஜீரணித்துக்கொள்ள முடியாதவர்களாக இருப்பர். அவர்கள் இலகுவில் மனத் தளர்ச்சிக்கு உள்ளாவதோடு ஏமாற்றங்களைச் சகிக்க முடியாமல் திண்டாடுவர்.

ஒப்பீடுகளை ஊக்குவிக்காதீர்கள்

தமது பிள்ளை தன்னிடம் உள்ளவற்றை மற்றப் பிள்ளைகளிடம் இருப்பவற்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பதைப் பெற்றார் தடுக்க வேண்டும். அயல் வீட்டுப் பிள்ளையிடம் ஒரு விளையாட்டுப் பொருள் இருப்பதற்காக, அது தனக்கும் வேண்டும் என உங்கள் பிள்ளை

கோரினால் அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கக் கூடாது. இறுதியில் இப்பிள்ளைகள் தொடர்ந்தும் தம்மைவிடக் கூடுதலாகப் பொருட்களையும் வசதிகளையும் கொண்டிருப்போருடன் தம்மை ஒப்பீடு செய்து கொண்டே இருப்பர்.

சமாதானப் படுத்துவதற்காக இணங்கிப் போகாதீர்கள்

மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகச் சில பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு விட்டுக்கொடுத்து அவர்களை மகிழ்விக்க முயல்கின்றனர். இவ்வாறு செய்வது குறுகிய கால நன்மைகளையும் நீண்ட கால இழப்புக்களையும் ஏற்படுத்தும். அப்படியான பெற்றோர் மீது பிள்ளைகளின் மரியாதை குறைந்து போய்விடும். பெற்றார் நேர்மையாக இருந்து தமது பிள்ளைகளின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு இணங்க மறுக்க வேண்டும். வாழ்க்கை முழுவதிலும் பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதே உங்களது அடிப்படைப் பணியாக அமைந்துவிடக் கூடாது.

குற்ற உணர்வின் காரணமாக விட்டுக்கொடுக்காதீர்கள்

சில பெற்றோர்கள் தம் குற்ற உணர்வின் காரணமாகப் பிள்ளைகளை மகிழ்விக்க முயல்கின்றனர். உதாரணமாக, தொழில் புரியும் தாய்மார் மாலையில் தாமதமாகியே வீடு திரும்புவதனால் பிள்ளையின் வீட்டு வேலை தொடர்பாக உதவி செய்ய அவர்களால் முடிவதில்லை. இந்நிலையில் இரவுணவுக்கு முன்பே பிள்ளை ஐஸ்கிறீம் கேட்டாலும் தாய் அதற்கு இணங்கி விடுகிறாள். தாய் இவ்வாறு லஞ்சம் தர முனைவதன் காரணத்தைப் பிள்ளை நன்றாகப் புரிந்துகொள்ளும். பிள்ளை எவ்வளவு தான் அழுது அடம்பிடித்தாலும் 'இல்லை' அல்லது 'முடியாது' என்று சொல்வதற்குரிய துணிவு பெற்றாருக்கு இருக்க வேண்டும்.

பெற்றார்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், அயலவர்கள், அறிமுகமற்றவர்கள் முதலியோரின் 'இல்லை' அல்லது 'முடியாது' என்ற பதில்களை எதிர்கொள்வதற்குப் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

அழுது அடம்பிடித்தல்: அழுகையை ஆயுதமாகப் பயன்படுத்த இடமளிக்காதீர்கள்

பசி, காய்ச்சல், வலி, பயம் போன்ற உண்மையான காரணங்களுக்காகப் பிள்ளைகள் அழுவது இயல்பானதே. இந்நிலையில் பெற்றாரின் கவனம் நிச்சயமாகத் தேவைப்படும். வீம்புடன் அடம்பிடித்துக் கூச்சலிட்டு அழுவது வித்தியாசமானது. பிள்ளை அநாவசியமான பொருளொன்றைக் கேட்டுப் பெருங்கூச்சலிட்டு அழலாம். இவ்வகையான அழுகை புறக்கணிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் இது ஒரு செயல்முறையாக மாறிவிடும். பெற்றார் மனவிரக்தியுற்றுப் பணிந்து போகும் வரை அதன் கூச்சல் ஒலி அதிகரித்துச் செல்லும். தேவையற்ற அழுகையின் மூலம் தான் பெற்றோரைக் கட்டுப்படுத்தலாம் என்பதைப் பிள்ளை அறிந்து கொள்ளும். இவ்வாறான அடம்பிடித்தலில் ஒரு பகுதியாக அழுகை அமையும் போது அதனைப் புறக்கணித்து விட வேண்டும். பிள்ளையை நோக்கி நீங்கள் பதில் கூச்சலிடக் கூடாது. அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருந்து பிள்ளையின் உணர்வுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால், விட்டுக் கொடுக்காதீர்கள். இந்த அடம்பிடித்தல் ஓய்ந்த பின்னர் தேவையின்றிய அழுகை ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய நடத்தையல்ல என்பதைப் பிள்ளை அறிந்து கொள்ளும்.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 66: நம்பகத் தன்மைக்கான சோதனை

சிறந்த ஆளுமையின் பண்புக் கூறுகள் ஒன்றன் மீது ஒன்று கவிந்திருக்கின்றன. குடும்ப ஒன்றுகூடலில் அனைத்து உறுப்பினர்களும் நம்பகத் தன்மையின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கலந்துரையாடிப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்:

- *நான் என்னுடைய வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறேனா?*
- *நான் மூத்தவர்களை கண்ணியப்படுத்துகிறேனா?*
- *நான் எனது பொறுப்புக்களை மதிக்கிறேனா?*
- *நான் எனது கடன்களை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துகிறேனா?*
- *நான் இரவல் வாங்கியவற்றை உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கிறேனா?*
- *நான் எனக்கு விதிக்கப்பட்ட காலக்கெடுகளை மதிக்கிறேனா?*
- *நான் உரிய நேரத்தில் தொழுகிறேனா?*
- *நான் நேரந்தவறாமல் செயல்படுகிறேனா?*

தொழிற்பாடு- 67: மன நிறைவு

பின்வரும் கதையை வாசித்து விட்டு உங்கள் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் செய்கைகள் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> *"இறைவன் உங்களுக்கு வழங்கியிருப்பவற்றைக் கொண்டு மன நிறைவு பெறுங்கள். மனிதர்களில் நீங்களே பெருஞ்செல்வந்தராக இருப்பீர்கள்"*

நபித்தோழர் ஒருவர் தமது ஒரே அங்கியுடன் தினமும் நபி (ஸல்) அவர்களின் பின்னால் நின்று தொழுவது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு நேரத் தொழுகையின் பின்னரும் அவர் உடனடியாக எழுந்து போய் விடுவதை நபியவர்கள் அவதானித்தார்கள். "அவர் எங்கே?" என அன்னார் அந்த மனிதரைப் பற்றி வினவினார்கள். "அவர் வீட்டுக்குப் போய்விட்டார்" என்றனர் தோழர்கள். நபியவர்கள் அந்த மனிதரை அழைத்து வரச் சொன்னார்கள். அவர் வந்ததும் "நீர் ஏன் தொழுது முடிந்ததும் ஓடி விடுகிறீர்?" என நபியவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்தத் தோழர் "எனது மனைவிக்கும் எனக்கும் இந்த ஒரே அங்கி தான் இருக்கிறது. எனவே, நான் மனைவிக்கு அங்கியைக் கொடுப்பதற்காகத்தான் அவசரமாக வீட்டுக்குப் போகிறேன். அப்போது தான் நேரங்கடக்க முன்னர் அவள் தொழுது கொள்ள முடியும்" என்று பதில் கொடுத்தார். எனவே, நபியவர்கள் தமது சொந்த மேலங்கியை அந்தத் தோழருக்குக் கொடுத்து விட்டார்கள். அந்த மனிதரும் மகிழ்ச்சியோடு தம் மனைவியிடம் எடுத்துச் சென்றார்கள். அதைக்கண்ட அவருடைய மனைவி "இது யாருடைய அங்கி?" எனக் கேட்டார். "இது நபியவர்களின் மேலங்கி. அன்னார் இதனை எமக்குத் தந்தார்கள்" என்றார் அந்த மனிதர். "நீர் அல்லாஹ்வைப் பற்றி அல்லாஹ்வின் தூதரிடமே முறைப்பாடு செய்தீரோ?" என்று மனைவி கேட்டாள். "அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் முறைப்பாடு செய்யவில்லை. என்னுடைய மண்ணறையில் இது என்னுடைய போர்வையாக இருக்குமே என்பதற்காக மாத்திரமே நான் இறைத்தூதரது மேலங்கியை ஏற்றுக்கொண்டேன்" எனப் பதிலளித்தார் அந்தத் தோழர். *(இமாம் அல் கஸ்ஸாலி- இஹ்யா உலூம் அல் தீன்)*

தொழிற்பாடு- 68: சுறுசுறுப்பான ஈடுபாடு

பின்வருவதை உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வாசியுங்கள். பின்னர் இதிலுள்ள விடயங்களை அவர்களது சொந்த அனுபவங்களுடன் தொடர்பு படுத்துங்கள்:

பிள்ளைகள் தம்மைச் சூழவுள்ள உலகத்தை ஆராய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபடும் போதுதான் அதிக பயன் தரத்தக்க கற்றல் இடம்பெறுகின்றது. இவ்வாறு ஆராயும் போது அவர்கள் ஒவ்வொரு பொருளும் எப்படிப்பட்டது என்பதை உருவகிக்க முயற்சிப்பார்கள். இதற்காகக் கீழே விழுவார்கள்; மீண்டும் எழுந்து நிற்க முயற்சிப்பார்கள்; தாம் காண்பவற்றுக்கு விளைவு காட்டும் வகையில் தம் சிந்தனைகள், கருத்துக்கள், மனவெழுச்சிகள் என்பவற்றை வெளிக்காட்டுவார்கள். பிள்ளைகளின் இப்படியான ஆராய்ச்சியின் போது பெற்றார் தமது யோசனைகளையும் தாம் பெற்ற படிப்பினை களையும் பரிமாறிக்கொள்ள வேண்டும். இவ்வாறு கற்பித்தல் நிகழும் தருணங்களில் தமது அறிவைச் சோதித்துப் பார்க்கவும் பிரயோகிக்கவும் பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கொடுங்கள்.

சிறிது நேரம் மௌனமாக இருப்பதற்கும் சூழ நோக்குவதற்கும் ஆழமாக மூச்செடுப்பதற்கும் தனது விரக்தியுணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் சிந்திப்பதற்கும் பிள்ளைக்கு வாய்ப்புக் கொடுங்கள். இது பலவீனத்தின் அறிகுறியல்ல. தம்மிடம் இருப்பவற்றைக் கொண்டு என்ன செய்யலாம் என்பது பற்றித் தீர்மானிப்பதற்கான முயற்சியிலும் சிந்தனையிலுமே அவர்கள் உண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். துரதிர்ஷ்டவசமாகச் சில பெற்றோர் தம் பிள்ளைகளிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குத் தாமே விடையளிக்க முனைகின்றனர்; சவால் மிக்க நிலைமைகளிலிருந்து அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றனர்; ஏதேனுமொன்று பற்றி அறிந்து கொள்வதற்குப் பிள்ளை போராடும் போது நிலைமையைத் தம் வசமாக்கி அதனைத் தாமே நிறைவேற்றுகின்றனர். இது பிள்ளையின் தன்னம்பிக்கை, பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், பொறுமை, சமரசம் காணும் திறன்கள் என்பவற்றில் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்தும். இதன் மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மற்றவர்களில் தங்கியிருப்பதற்கே அவர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

பெற்றார் எப்போதும் ஒரு நிபுணராக, பயிற்றுவிப்பவராக, அன்புடன் அறிவுரை பகர்பவராகவே இருத்தல் வேண்டும். பிள்ளைகள் தமது சொந்த அறிவு, திறன்கள் மற்றும் ஆற்றல்களைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவது அவசியம். சிக்கலான நிலைமைகளில் தமது சொந்த ஆற்றல்களைப் பயன்படுத்திச் செயற்படும் விதத்தில் பிள்ளைகளுக்கு வழிகாட்டித் துணை புரிய வேண்டும்.

தமது பிள்ளைகள் தவறுகளை விடுவதற்குப் பெற்றார் இடமளிக்க வேண்டும். எதனைச் சரியாகச் செய்தார்கள்?; எங்கு தவறு விட்டார்கள்?; ஏன் அந்தத் தவறைச் செய்தார்கள்?; அடுத்த தடவை அச்செயலை எப்படி மேலும் சிறப்பாகச் செய்யலாம்? இந்த அனுபவங்களிலிருந்து அவர்கள் கற்றுக்கொண்டவை என்ன? அடுத்த தடவை அவர்கள் எதனை வித்தியாசமான முறையில் செய்வார்கள்?- என்பன போன்ற விடயங்களை ஆராய்ந்து பார்த்துப் புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவி செய்யுங்கள். இங்கு முக்கியமானது செய்யப்படுகின்ற வேலை மாத்திரமல்ல; அவ்வேலையைச் செய்து முடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் மானசீகமான முயற்சி, ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்யாமல் தவிர்த்துக் கொள்வது என்பனவும் முக்கியமானவையே.

இவ்வாறான சுறுசுறுப்பு மிக்க ஈடுபாட்டின் விளைவாக பெற்றார்- பிள்ளை மற்றும் பிள்ளை-பெற்றார் பிணைப்பு வலிமை பெறுவதோடு ஆழமான உறவொன்றும் உருவாகின்றது. இந்தப்பிணைப்பு நிலைநிறுத்தப்பட்டு விட்டால், வாழ்க்கையின் பிந்திய காலங்களில் சவால்கள் தலை தூக்கும் போதும், சவால்கள் சிக்கல் மிக்கனவாக மாறும் போதும் தன் பெற்றாரிடம் ஆலோசனை பெறுவதற்குப் பிள்ளை உள விருப்பத்தோடு முன்வரும்.

அத்தியாயம் 22

உங்கள் பிள்ளைக்குப் பொருத்தமான நண்பர்களைத் தெரிவு செய்தல்

- உங்கள் பிள்ளையின் நண்பர்கள் 504
- கெட்ட நண்பர்கள் தொடர்பான சில பிரச்சினைகள் 506
- பள்ளிக்கூடத்தில் அன்றாடம் இடம்பெறும் ஒத்த வயதினரின் நெருக்குதல்கள் 506
- பொருத்தமான நண்பர்களைத் தெரிவு செய்தல் 507
- உங்கள் பிள்ளை விரும்பத்தகாத நண்பர்களைத் தெரிவு செய்தால் என்ன செய்வது? 508
- பதின்ம வயதினரிடையே வலிமையான கவர்ச்சி காணப்படுவது ஏன்? 509
- விரும்பத்தகாத இடங்களில் வாழும் குடும்பங்கள் 511
- தொழிற்பாடுகள் 69- 71 512

உங்கள் பிள்ளையின் நண்பர்கள்

ஒத்த ஏற்றங்கள் ஒன்றையொன்று தள்ளும் எனவும் ஒவ்வாத ஏற்றங்கள் ஒன்றையொன்று கவரும் எனவும் பௌதிகம் கூறுகிறது. ஆனால், விலங்குகளைப் பொறுத்தமட்டில் ஒத்த வகைகள் ஒன்றாகச் சேர்கின்றன என்பதே உண்மை. நாம் அடிக்கடி சந்திக்கும் அயலவர்கள், பள்ளிச் சிறுவர்கள், கடைக்காரர்கள் முதலியவர்களோடு நட்புறவு ஏற்படுத்திக்கொள்ள நாம் முனைகின்றோம். ஒவ்வொரு மனிதரையும் இரக்கத்தோடும் மரியாதையோடும் நடத்துவது இன்றியமையாததே. அதேவேளை, பெறுமானங்களற்ற விதத்தில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் ஆட்களோடு நெருங்கிய நட்புறவுகளை ஏற்படுத்திக்கொள்ளாமலிருப்பதே நல்லது. நடைமுறையில் விசுவாசிகளாக இருப்பவர்களையே நண்பர்களாகத் தெரிவு செய்யுங்கள். அப்படியான நண்பர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போதும் அதனை இடைநிறுத்தி விட்டு உங்களோடு தொழுகைக்காக வரக்கூடியவர்களாக இருப்பர். நீங்கள் மதுவையும் போதைப் பொருட்களையும் தவிர்த்துக் கொள்வது ஏன் என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

நீங்கள் வித்தியாசமான சூழலில் வாழ்ந்தால் ஒத்த பெறுமானங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளக் கூடியவர்களுடன் நட்புறவு கொள்வதற்குரிய வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். எனினும், வேறு சமயத்தைச் சேர்ந்த, ஆனால், உங்கள் பெறுமானங்களையும் பழக்க வழக்கங்களையும் மதிக்கின்ற, நல்ல குடும்பமொன்றிலிருந்து நண்பர்களைத் தேடிக்கொள்ள முடியும். விளையாட்டுக் கழகங்கள், இயற்கை ஆர்வக் குழுக்கள் போன்ற சமூக அமைப்புக்களினூடாக உங்களைப் போன்ற ஒத்த ஆர்வங்களைக் கொண்ட இளைஞர்களைச் சந்தித்து நட்புக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கலாம்.

பற்றுணர்வு, தாராளத் தன்மை, அனுதாபம், புரிந்துணர்வு என்பவற்றைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவரே சிறந்த நண்பராக இருக்க முடியும். வளர்ந்தவர்கள் என்ற வகையில் பெற்றாருக்குச் சில நியமங்கள் இருக்கக்கூடும். ஆனால், பதின்மவயதினர் அந்நியமங்களுக்கு இணக்கம் காட்டாமலிருக்கலாம். பதின்மவயதினர் மீது நண்பர்களே மிகுந்த செல்வாக்குச் செலுத்துவர். உடையணிதல், நடத்தை, மற்றவர்களோடு தொடர்பு கொள்ளுதல் முதலியன தொடர்பாக பல்வேறு நடைமுறைகளை அவர்கள் பரீட்சித்துப் பார்ப்பர்.

பெண் பிள்ளைகள் தனியொருவரோடு அல்லது பெண் பிள்ளைகளின் சிறிய குழுவொன்றோடு விசேட நட்புறவைக் கொண்டிருப்பர். ஆண் பிள்ளைகளோ பெரிய குழுக்களுடன் பழகுவர். சில வேளைகளில் ஒரு குறித்த விளையாட்டை அல்லது பொழுது போக்கை அடிப்படையாக வைத்து தம் நண்பர்களை இனங்காண்பர். இந்த நட்புக்கள் முக்கியமானவையாகவும் மிக ஆழமானவையாகவும் இருக்கக்கூடும். பற்றுணர்வு பற்றிய விதியொன்று மீறப்படும்போது இவ்வகை நட்பு, திடீரென முறிந்து போகலாம்.

உங்கள் பிள்ளைகள் தமது குடும்பத்தாரை விடத் தம் நண்பர்கள் மீது அதிக கரிசனை காட்டுவதைக் கண்டு நீங்கள் எரிச்சலடைய வேண்டாம். உங்கள் உறவினர்களோடுள்ள உறவினைப் பேணுவதற்கு நீங்கள் சிரமப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் பிறப்பால் உங்களோடு தொடர்புற்றிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே உங்கள் மீது அன்பு கொண்டிருப்பதாலும் உங்கள் மீது கரிசனை காட்டுவதாலும் அந்த உறவுகளை மகிழ்ச்சிகரமானவையாக வைத்திருப்பது மாத்திரமே உங்கள் பணியாக இருக்கும். ஆனால், நண்பர்களைப் பொறுத்தமட்டில் நீங்கள் அவர்களைத் தேடிக்கொள்ள வேண்டும்; அவர்கள் உங்களை விரும்பச் செய்ய வேண்டும்; அத்தோடு, அவர்களது நட்பைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்.

ஆயிரம் நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். பகைவன் ஒருவனையாவது உருவாக்காதீர்கள்.

உதைபந்தாட்டத்துக்கும் சிறந்த தலைமைத்துவத்துக்கும் இடையிலுள்ள பொது இயல்புகள் யாவை?

அவை இரண்டும் வலிமை, துணிச்சல், குழு உணர்வு, நம்பிக்கை என்பவற்றை மதிக்கின்றன.

ராணுவ வீரர்களுக்கும் பாதாளக் கோஷ்டி உறுப்பினர்களுக்கும் இடையிலுள்ள பொது இயல்பு யாது?

இரு சாராரும் தாம் சேர்ந்துள்ள அமைப்புகளுக்கு அதீத விசுவாசம் உடையவர்களாகவும் துணிச்சல் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். ராணுவ வீரர்கள் நல்ல நோக்கத் துக்காகச் செயற்படும் அதேவேளையில் பாதாளக் கோஷ்டியினர் தீய நோக்கங்களுக்காகச் செயற்படுகின்றனர்.

நல்ல நண்பர்கள் எதிர்காலத்தில் குடும்ப அங்கத்தினர்களாக வரவும் கூடும். திருமண உறவுகளை ஏற்படுத்தும் போது ஏற்கனவே பழகி அறிந்தவர்களுடன் உறவு கொள்வதில் பல அனுகூலங்கள் உண்டு.

நட்பு என்பது இரு அந்தங்களைக் கொண்ட கயிறு போன்றது. உங்களோடு தொடர்பு வைக்காத ஒருவரோடு நீங்கள் தொடர்பு வைப்பது கஷ்டம். ஒரு நட்புறவில் நீங்கள் பெற்றுக்கொள்கின்ற பாசம், சகிப்புத்தன்மை, நகைச்சுவை, கரிசனை, அர்ப்பணிப்பு முதலியவற்றை அதே அளவிலேனும் திருப்பிக் கொடுக்கவும் வேண்டும். அத்தோடு, தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணிக்கொள்வதும் அவசியம்.

பல வகையான நண்பர்கள் உள்ளனர்.

- சகாக்கள்- ஒன்றாக வேலை செய்ய வேண்டியவர்கள் அல்லது ஒரு தொழிற்பாட்டில் சேர்ந்து ஒத்தாசை வழங்க வேண்டியவர்கள். அவர்கள் மீது விருப்பமில்லாத நிலையிலும் குறித்த வேலையைச் செய்வதற்காக நட்புறவோடு நடந்து கொள்ள வேண்டியிருக்கும்.
- அறிமுகமானவர்கள்- இவர்களைப் பற்றி ஓரளவுக்குத் தெரியும். எனினும், அவர்கள் தொடர்பாக உள உணர்வுகள் இருக்கா.
- சாதாரண நண்பர்கள்- அறிந்தவர்கள், விரும்புபவர்கள். பள்ளிக்கூடத்திலும் அயலிலும் எம்மோடு உறவாடுபவர்கள்.
- நெருங்கிய நண்பர்கள்- நன்கு அறிந்து வைத்திருப்பவர்கள். நாம் கரிசனை காட்டுபவர்கள். எமது அந்தரங்க விடயங்களை அவர்களிடம் கூறலாம். அவர்களை நம்பலாம்.
- சிறந்த நண்பர்கள்- அவர்கள் மீதுள்ள உணர்வுகள், காதல் போன்று ஆழமானவை. அனைத்தையும் அவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். எவ்வளவு தான் வாதிட்டாலும் தொடர்ந்தும் சிறந்த நண்பர்களாக இருக்கக் கூடியவர்கள்.

பெரும்பாலானவர்கள் மாற்றமடைவார்கள். தங்கள் நண்பர்கள் ஏதேனுமொரு பிரச்சினை காரணமாக ஒதுங்கிப் போனால் அல்லது நட்பில் குறைந்த ஆர்வம் காட்டினால் பதின்மவயதினர் அதற்காகத் தம்மில் குறை காண முயற்சிக்கக் கூடாது. தமது பதின்மவயதுப் பிள்ளைகள் விரும்பத்தகாத நண்பர்களை வீட்டுக்கு அழைத்து வரும் போது பெற்றார் மனக்குழப்பமடைகின்றனர் (நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஊட்ட விரும்பும் விழுமியங்களோடு முரண்படுகின்ற விழுமியங்களைக் கொண்டவர்களையே விரும்பத்தகாத நண்பர்கள் என இங்கு குறிப்பிட்டுள்ளோம்). விரும்பத்தகாத நண்பர்கள் இறையச்சம் அற்றவர்களாகவும் புகைத்தலில் அல்லது போதைப் பொருட் பாவனையில் ஈடுபடுபவர்களாகவும் அருவருப்பான முறையில் பேசுபவர்களாகவும் ஆபத்தான நடத்தைகளை ஊக்குவிப்பவர்களாகவும் சில வேளைகளில் பொலிஸாரின் கவனத்துக்கு உட்பட்டவர்களாகவும் இருப்பார்கள். அதேவேளை, விரும்பத்தகாத நண்பர்களுள் சிலர் உங்கள் பிள்ளைகளினதும் குடும்பத்தினதும் நல்ல தன்மைகளால் கவரப்பட்டிருக்கக் கூடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கெட்ட நண்பர்கள் தொடர்பான சில பிரச்சினைகள்

- அவர்கள் உங்கள் உடைமைகளுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தலாம்.
- அவர்கள் முரட்டுத்தனமாகவும் இதமற்ற முறையிலும் நடந்து கொள்வார்கள்.
- அவர்கள் உங்கள் வீட்டை ஆக்கிரமிப்பார்கள்.
- அவர்கள் உங்களைப் பயமுறுத்துவதுடன் புறக்கணிக்கவும் செய்வார்கள்.
- அவர்கள் உங்கள் பிள்ளையை உங்களை விட்டும் தூரமாக்கி தீய வழியில் நடத்துவதையிட்டு நீங்கள் கவலைப்படுவீர்கள்.



பள்ளிக்கூடத்தில் அன்றாடம் இடம்பெறும் ஒத்த வயதினரின் நெருக்குதல்கள்

தான் தன் வகுப்பு மாணவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமே என்ற நெருக்குதலைப் பள்ளிக்கூடச் சூழல் பிள்ளையில் ஏற்படுத்துகிறது. முஸ்லிம் அல்லாத சூழலில் கற்கின்ற முஸ்லிம் பிள்ளை யொன்று பல பிரதிகூலங்களுக்கு உட்படலாம். இதற்கு அதன் தாய்மொழி, ஆடை அணியும் ஒழுங்கு (குறிப்பாக பெண் பிள்ளைகள்), உணவுப் பழக்கங் கள் என்பன காரணமாக இருக்கின்றன. வித்தியாசமான சமய நம்பிக்கைகள் வித்தியாசமான செயற்பாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன. இந்த வித்தியாசங்களை ஏனையோர் அச்சுறுத்த லொன்றாகக் கருதக்கூடும். இன வேறுபாடு காட்டும் சூழலொன்றில் தோலின் நிறம் காரணமாகவும் பிள்ளைகள் சிரமத்துக்கு உள்ளாகலாம்.



பொருத்தமான நண்பர்களைத் தெரிவு செய்தல்

உங்களது பிள்ளையின் நண்பர்கள் யாரென்பதை நீங்கள் அறிந்து வைத்திருப்பது அவசியம். அவர்கள் எப்படிப்பட்டவர்கள், உங்கள் பிள்ளையில் என்ன வகையான செல்வாக்கை ஏற்படுத்துவார்கள் என்பன பற்றி அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்கலாம். விசுவாசியொருவரின் வீடு எப்படியிருக்கும் என்பதை ஏனையோர் அறிந்து கொள்வதற்கும் இது ஒரு வாய்ப்பாக அமையலாம். ஓர் இளம் பிள்ளையின் மனதில் உங்கள் குடும்பமானது பாரிய தாக்கமொன்றை ஏற்படுத்தலாம் என்பதை மறந்து விட வேண்டாம்!

உங்கள் பிள்ளைகளின் நண்பர் தெரிவுகள் பற்றி அவர்களுடன் உரையாடுங்கள். குறிப்பாக, அத்தெரிவுகளில் சிலர் உங்கள் மனதில் கவலையை ஏற்படுத்துவார்களாயின் இவ்வாறான உரையாடல் தேவைப்படும். இவ்விடயத்தை நீங்கள் கவனமாகக் கையாள வேண்டும். தம் நண்பர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் பிள்ளைகளே தீர்மானமெடுக்க வேண்டும். அவர்களுக்காக நீங்களே தீர்மானங்களை எடுத்தால் பிள்ளைகளைத் தங்கியிருப்பவர்களாக மாற்றிவிடுவீர்கள். நீங்கள் அருகே இல்லாத வேளையில் அவர்களால் தாமாகத் தீர்மானங்கள் எடுக்க முடியாமற் போகும்.

உங்கள் பிள்ளைகளுடன் அவர்களது நண்பர்களைப் பற்றிக் கலந்துரையாடும் போது முக்கியமான இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்.

- *உங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுங்கள்.* உங்கள் பிள்ளையின் நண்பருக்கு அருகில் இருந்த போது உங்கள் மனதில் என்ன தோன்றியது என்பதைக் கூறுங்கள். உதாரணமாக, "நீங்கள் யஸ்மினுடன் விளையாடிக்கொண்டிருந்த போது அவள் மற்றவர்களிடமிருந்து பொருட்களைப் பறித்தெடுப்பதைக் கண்டேன். இவ்வாறு சுயநலமாக நடந்து கொள்ளும் ஒரு பிள்ளையைக் காணும் போது எனக்கு மனவருத்தம் ஏற்படுகிறது" அல்லது "நான் ஸாறாவுடன் பேசிக்கொண்டிருந்த போது அவள் தன் தாயைப் பற்றிக் கூடாத முறையில் பேசினாள். அது எனக்கு மனக் கஷ்டத்தைத் தந்தது".

  இங்கு, உங்கள் பிள்ளையும் அதே மாதிரியான அவதானிப்புக்களைச் செய்வதற்கு நீங்கள் வாய்ப்பளிக்கிறீர்கள். எனவே, தனது தெரிவு சரியானது என பிள்ளை வாதிட முயலாது. "நீ எப்போதும் சுயநலம் மிக்க, மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்காத நண்பர்களைத் தான் விளையாடத் தெரிவு செய்கிறாய்" என்ற வகையில் பிள்ளையைக் குறை கூறக் கூடாது.

- *கேள்விகள் கேளுங்கள்.* அதே பிரச்சினைகளை உங்கள் பிள்ளையும் அவதானித்ததுண்டா? என்றும் அப்படி அவதானித்திருந்தால் அவை பற்றி என்ன நினைத்தது என்றும் உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள். பிள்ளையின் பதில்களைக் கவனமாகச் செவிமடுங்கள். உங்கள் பிள்ளையின் நேர்மையான மதிப்பீட்டையே இங்கு நீங்கள் தேடுகிறீர்கள். உங்களது மனக்கவலைகள் நியாயமானவை என அவர்கள் கருதுவார்களாயின் "யஸ்மினுடன் அல்லது ஸாறாவுடன் குறைந்த நேரத்தைக் கழிப்பதும் ஏனைய நண்பர்களுடன் கூடுதலான நேரத்தைக் கழிப்பதும் ஒரு நல்ல யோசனையாக உமக்குப் படுகிறதா?" என நீங்கள் கேட்கலாம்.

இந்தச் செயன்முறையை முடிந்தளவு நேரகாலத்துடன் ஆரம்பியுங்கள். தங்கள் நண்பர்களைப் பற்றி ஒளிவு மறைவின்றி உங்களோடு கலந்துரையாடுவதற்கு உங்கள் பிள்ளைகளுக்கு அனுமதி கொடுங்கள். உங்கள் பிள்ளைகள் நன்கு வளர்ந்த பின் உபயோகப்படக்கூடிய சிறந்த இணைப்புப் பாலமாக இது அமைந்து விடும்.

உங்கள் பிள்ளை விரும்பத்தகாத நண்பர்களைத் தெரிவு செய்தால் என்ன செய்வது?

சமூகப் பணியாளரான இமாம் அல்-காதி (Iman El- Kadi) பின்வருமாறு கூறுகின்றார்:

> "ஒரு பிள்ளை பணிவற்ற, மரியாதை காட்டாத ஒருவரை தனது நண்பராகத் தெரிவு செய்யக்கூடும். இது பற்றிப் பீதியடைய வேண்டாம். ஏனெனில், அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக அறியப்படாதவற்றின்பால் பிள்ளைகள் இயல்பாகவே கவரப்படுகின்றனர். அந்த ஆர்வம் நிறைவேறிய பின்னர் அவர்கள் அவ்விடயம் பற்றிய கரிசனையை இழந்து விடுகின்றனர். இந்த நட்புறவை நாம் பெற்றோருக்குரிய ஆதிக்கத்தைப் பயன்படுத்தித் திடீரென முறித்து விடுவோமானால் பிடிவாதத் தன்மை காரணமாக பிள்ளை அந்த நண்பனோடு நெருக்கமாக இணைந்து கொள்ளக்கூடும். அப்படியான நண்பரொருவர் உங்கள் வீட்டுக்கு வருகை தந்தால் 'நீங்கள் வரலாம்; ஆனால், தயவு செய்து எங்கள் வீட்டு விதிகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளுங்கள்' என நீங்கள் கூறலாம்."

ஒரே சமயத்தைச் சேர்ந்த ஆனால், அச்சமயத்தைப் பின்பற்றி ஒழுகாமல் தீய செயல்களில் ஈடுபடுகின்ற ஒரு நண்பனே உங்கள் பிள்ளையின் மீது ஏற்படக்கூடிய மிக ஆபத்தான செல்வாக்காக இருப்பான். பெற்றோர்களின் கருத்துக்களும் கோட்பாடுகளும் பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. அக்கோட்பாடுகளைப் பிள்ளைகள் எவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்பற்றத் தவறுகிறார்கள் என்பதைப் பெற்றார் கண்டறிவது அவசியம். தீங்கான நண்பன் ஒருவனை நோக்கிப் பிள்ளையை இழுத்துச் சென்ற காரணிகள் எவை? ஒரு பிள்ளை புகைக்காமல் இருக்கும் போது இன்னொரு பிள்ளை புகைப்பது ஏன்? வீட்டில் கிடைக்கப்பெறாத எது பிள்ளைக்கு அந்த நண்பன் மூலம் கிடைக்கிறது?

பிள்ளைகளைப் பயனுள்ள தொழிற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிப்பதானது, அவர்கள் தம் சகாக்களைத் தெரிவு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கலாம். மேலும் சில உதவிக் குறிப்புகள் பின்வருமாறு:

- நீங்கள் விரும்பாத ஒரு பிள்ளை வீட்டுக்கு வரப்போவதை அறிந்தால் நீங்கள் விரும்பும் ஏனைய நண்பர்களையும் அழைக்குமாறு ஆலோசனை கூறுங்கள். இதன்மூலம் நல்லவிதமான செல்வாக்கொன்றை உருவாக்கலாம்.
- உங்கள் பிள்ளையை வேறு விடயங்களில் பிஸியாக இருக்கச் செய்யுங்கள் (உதாரணம், ஓர் உறவினரைக் காணச் செல்லுதல்)
- எல்லோர் மீதும் பிரயோகிக்கப்படக்கூடிய விதிகளின் தொகுதியொன்றை உருவாக்குங்கள் (கூச்சலிடக்கூடாது, சூளுரை விடுக்கக்கூடாது, அடிக்கக்கூடாது)

உங்கள் பிள்ளைகளின் நண்பர்கள்
யாரென்பதை நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.

பதின்ம வயதினரிடையே வலிமையான கவர்ச்சி காணப்படுவது ஏன்?

இரண்டு பிரதான காரணங்களுக்காகப் பதின்மவயதினர் தம் ஒத்த வயதினரின் செல்வாக்குக்கு உள்ளாகின்றனர்.

- அவர்கள் தம் நண்பர்களைத் தாமே தெரிவு செய்து கொள்கின்றனர். குடும்பமும் உறவினர்களும் அவர்களுக்காக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவையாக உள்ளன.
- வயது, அனுபவம், உணர்வுகள், பொழுது போக்குகள், எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகள், சூழ்நிலைகள், பள்ளிக்கூடச் சூழல் என்பன ஒரே தன்மையினவாக இருப்பதனால் சம வயதினரிடையே ஒருவர் மீது ஒருவருக்கு நாட்டம் கூடுதலாக இருக்கிறது.

பதின்மவயதினர் தமக்கேயுரிய விசேட பண்பாடு, குறியீடுகள், மொழி, பெறுமானங்கள், நியமங்கள் என்பவற்றைக் கொண்ட சமூகக் குழுக்களை உருவாக்கிக் கொள்கின்றனர்.

பதின்ம வயதினர் வளர்ந்து செல்லும் போது தம் பெற்றோரைக் கலந்தாலோசிப்பது குறைந்து நண்பர்களைக் கலந்தாலோசிப்பது அதிகரிக்கும். பெற்றோர், ஆசிரியர்கள், முதியவர்கள், முதலியோருடன் எந்தளவுக்குக் குறைவாக உரையாடுகிறார்களோ அந்தளவுக்குத் தம் சம வயதினருடனான உறவாடல் அதிகரிக்கும். நிதி விவகாரங்களில் பெற்றோரின் செல்வாக்கு தொடர்ந்து இருக்கின்ற போதிலும் பொழுது போக்குகள், உடைகள், அங்கம் வகிக்கும் கழகங்கள், சுற்றுப் பிரயாணங்கள், பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன தொடர்பாக அவர்கள் நண்பர்களையே பின்பற்றுவர்.

பல்வேறு வகையான சமூக உறவாடல்கள்

- இளம் பிள்ளைகள் தமது வயதினருடன்
- குற்றம் செய்பவர்கள் குற்றம் செய்பவர்களுடன்
- வாலிபர்கள் வாலிபர்களுடன்
- புகைப்பவர்கள் அதே பழக்கமுள்ளவர்களுடன்
- முதியவர்கள் முதியவர்களுடன்
- போதைப்பொருள் உபயோகிப்பவர்கள் அதே கூட்டத்துடன்
- நல்லவர்கள் நல்லவர்களுடன்
- நிபுணர்கள் அதே துறை சார்ந்த நிபுணர்களுடன்

நண்பர்கள் தம் நண்பர்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இதனைப் பின்வருமாறு விளக்கினார்கள்:

ஒருவர் அவரது நண்பரின் வழிமுறைகளினால் பாதிக்கப்படுகின்றார். எனவே, உங்களில் ஒவ்வொருவரும் யாரை நண்பராக வைத்திருக்கிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். (அல் திர்மிதீ, அபூ தாவூத்)

எந்தவொரு மனிதனும் அவர் அன்பு வைத்தவருடனேயே இருப்பார்.
(அல் புகாரி, அபூ தாவூத்)

நல்ல தோழர் ஒருவருக்கும் கெட்ட தோழர் ஒருவருக்கும் உரிய உதாரணம் நறுமணப்பொருள் வியாபாரியினதும் கொல்லனினதும் உதாரணம் போன்றதாகும். நறுமணப்பொருள் வியாபாரியைப் பொறுத்தமட்டில் அவர் உங்களுக்கு அதில் சிறிதளவு தரக்கூடும் அல்லது சிறிதளவை நீங்கள் விலை கொடுத்து வாங்கக் கூடும் அல்லது ஆகக் குறைந்தது அவரிடமுள்ள அந்த நறுமணத்தை நீங்கள் நுகர்ந்து மகிழவாவது முடியும். கொல்லனைப் பொறுத்த மட்டில் அவன் உங்கள் ஆடையைச் சுட்டு விடுவான் அல்லது அவனிடமிருந்து ஒரு துர்வாடையைப் பெற்றுக் கொள்வீர்கள். (அல் புகாரி, முஸ்லிம்)

மோசமான செல்வாக்கின் விளைவுகளைப் பின்வரும் அல்குர்ஆன் வாக்கியங்கள் விளக்குகின்றன:

அந்நாளில் அநியாயக்காரன் தன் இரு கைகளையும் கடித்துக்கொண்டு "நம் தூதருடன் நானும் நேரான வழியைப் பின்பற்றிச் சென்றிருக்க வேண்டாமா?" என்று கூறுவான்.
"எனக்கு வந்த கேடே! (பாவம் செய்யும் படி தூண்டிய) இன்னவனை நான் என்னுடைய நண்பனாக ஆக்கிக் கொள்ளாமல் இருந்திருக்க வேண்டாமா?"
"நல்லுபதேசம் என்னிடம் வந்ததன் பின்னரும் அதிலிருந்து அவன் என்னைத் திருப்பி விட்டானே! மேலும், ஷைத்தான் மனிதனுக்குப் பெரும் சதிகாரனாக இருக்கிறான்" (என்றும் புலம்புவான்). (அல் குர்ஆன் 25: 27- 29)

விரும்பத்தகாத இடங்களில் வாழும் குடும்பங்கள்

மிகவும் பாரதூரமானதும் எளிதில் ஒதுக்கித் தள்ள முடியாததுமான பிரச்சினைகளைக் கெட்ட நண்பர்கள் உருவாக்குவார்கள். பிழையான நடத்தையுடைய பள்ளி நண்பர்களும் அயல் பிள்ளைகளும் ஒரு குடும்பத்தையே சீர்குலைத்துவிட முடியும். தமது பிள்ளைக்குப் பொருத்தமான நண்பர்கள் கிடைக்காத ஓர் இடத்தில் ஒரு குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்குமாயின், நல்ல நண்பர்கள் கிடைக்கக்கூடிய ஓரிடத்திற்கு அவர்கள் இடம் பெயர்வது அவசியம். தங்கள் பிள்ளைகளுக்குப் பொருத்தமான நண்பர்கள் கிடைக்காத நிலையில் பல பெற்றோர்கள் தமது பிள்ளையின் பள்ளிக்கூடத்தையே மாற்றுகின்றனர்; சில வேளைகளில், வேறொரு நகருக்கே குடி பெயர்கின்றனர். இதன் விளைவாகப் பின்பு கிடைக்கப்போகின்ற நன்மைகளோடு ஒப்பிடும் போது இது ஒரு சிறு தியாகமே.

தீர்க்கதரிசிகள் ஒரு சமுதாயத்திலிருந்து
இன்னொரு சமுதாயத்துக்குக் குடி பெயர்ந்ததாக
வேத நூல்கள் கூறுகின்றன.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளையின் நண்பனை வீட்டுக்கு வரவழைக்கச் செய்து அவர்கள் இருவரையும் அவதானியுங்கள். அவர்களது நடத்தையை நியாயமான, நேர்மையான முறையில் ஆராயுங்கள். உங்கள் பிள்ளையின் நண்பனோடு சிநேகம் கொள்ள முயலுங்கள்.

அமெரிக்க சமூகவியல் சங்கத்தின் முன்னாள் தலைவரும் உலகப் புகழ் பெற்ற சமூகவியலாளர்களுள் ஒருவருமான Dr. James S. Coleman பரம்பரைகளுக் கிடையிலான நெருக்கம் என்ற கருத்துப் படிவத்தை ஊக்குவித்தார். இதன்படி பெற்றார் தம் பிள்ளைகளது நண்பர்களின் பெற்றார்களோடு அறிமுகமாகிக் கொள்வர். இது சமூகத்தில் நெருக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் நல்ல நடத்தையை ஊக்குவித்து தீய நடத்தையைத் தடுக்க முடிகின்றது.

தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 69: உங்கள் பிள்ளை தேர்ந்து கொண்டுள்ள முன்மாதிரிகள்

உங்கள் பிள்ளை சந்திக்க விரும்புகின்ற மூன்று நபர்களின் பெயர்களைக் கூறுமாறு கேளுங்கள். அதற்கான காரணங்களையும் வினவுங்கள். தாங்கள் தேர்ந்து கொள்ள விரும்புகின்ற முன்மாதிரிகள் பற்றிய அவர்களது புலக்காட்சியை இது வெளிப்படுத்தும்.

நல்ல முன்மாதிரிகளையும் கெட்ட முன்மாதிரிகளையும் பற்றி உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.

தொழிற்பாடு- 70: தீய செல்வாக்காக அமையும் பிள்ளை

பின்வரும் நிலைமையைப் பற்றிக் கலந்துரையாடிய பின்னர் அதன் கீழ் தரப்பட்டுள்ள விருப்பத் தெரிவுகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

உங்கள் அயலவரின் 9 வயதுடைய மகள் உங்களது 7 வயது மகளின் மீதான தீய செல்வாக்கொன்றாக இருக்கிறாள். அவர்களிருவரும் எல்லா நாட்களிலும் ஒன்றாகவே இருக்கின்றனர். இருவருக்கும் இடையிலான தொடர்பினை முடிந்தளவு குறைக்க வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள். இந்நிலையில்,

1. அந்தப் பிள்ளை இதன் பிறகு உங்கள் மகளுடன் விளையாட முடியாது என்றும் அவளைச் சந்திக்க வரக்கூடாது என்றும் உங்கள் மகளைக் கொண்டு அவளிடம் கூற வைப்பீர்களா?

2. அவள் .இதன் பிறகு உங்கள் மகளுடன் விளையாட முடியாதென்றும் அவள் உங்கள் வீட்டுக்கு வரக் கூடாது என்றும் உங்கள் மகள் இனிமேல் அவளது வீட்டுக்கு வரமாட்டாள் என்றும் நீங்களே அந்தப் பிள்ளையிடம் கூறுவீர்களா?

3. அவர்களுடைய நடத்தையை உங்களால் முற்றாகக் கண்காணிக்கக்கூடிய நேரங்களில் மாத்திரம் இருவரையும் ஒன்றாக இருக்க விடுவீர்களா?

4. உங்கள் அயலவருடன் நேரடியாக உரையாடி அவரது மகள் உங்கள் மகளுடன் சேர்ந்திருப்பது தொடர்பான உங்களது மனக்கவலையை விளக்குவீர்களா?

தீய செல்வாக்கை ஏற்படுத்தக் கூடிய பிள்ளையொன்று பெற்றார் பலருக்கு மனதில் கவலையை ஏற்படுத்தலாம். மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விடை தொடர்பாகவும் கூறப்படக்கூடிய கருத்துக்கள் பின்வருமாறு:

1. பிரச்சினை பற்றி உங்கள் பிள்ளை அடுத்த பிள்ளைக்கு விளக்கமளிக்க இடமளிக்காதீர்கள். உங்கள் மனக்கவலைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அவர்களிடம் முதிர்ச்சி இருக்காது. இதன் விளைவாக அனைவரும் உங்களை வில்லனாகக் கருதும் நிலைமை உருவாகும்.

2. உங்கள் பிள்ளையல்லாத இன்னொரு பிள்ளைக்கு உங்கள் மனக் கிலேசத்தை விளக்குவதோ சட்டங்கள் போடுவதோ நியாயமாகாது.

3. இதற்காக நிறையச் சிரமப்பட வேண்டும். நீங்கள் முழுநேர மேற்பார்வையாளராகி விடுவதோடு அவர்களிருவரும் ஒன்றாக இருக்கும் எல்லாத் தருணங்களிலும் உங்கள் பணி தேவைப்படும். காலப்போக்கில் இது தீவிர அலுப்பும் களைப்பும் தருவதாக மாறிவிடும்.

4. அயலவரிடம் போய் அவரது மகளது நடத்தையின் குறைபாடுகள் என நீங்கள் நினைப்பவற்றை எடுத்துக்கூறி உங்கள் மனக் கிலேசத்தை விளக்குவது எளிதான காரியமல்ல. ஆனால், பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய மிகச்சிறந்த வழி இதுவே.

தொழிற்பாடு- 71: நான் ஏற்கனவே அறிந்து கொண்டிருந்தால் வித்தியாசமாக நடந்து கொண்டிருப்பேன்!

குடும்ப அமர்வொன்றின் போது பெற்றார் 'எனது வாழ்க்கையை மீண்டும் முதலிலிருந்து தொடங்க முடியுமானால், நான் எதனை வித்தியாசமாகச் செய்வேன்?' என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டும். நீங்கள் விட்ட தவறுகளைப் பிள்ளைகளின் முன்னிலையில் ஒப்புக் கொள்ளுங்கள். அதேபோன்று பிள்ளைகளும் தாம் விட்ட தவறுகளைப் பற்றி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.

அத்தியாயம் 23

தொலைக்காட்சி, வீடியோ, கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள் என்பன ஏற்படுத்தும் அழிவுரீதியான தாக்கங்கள்

- அறிமுகம் 515
- பெற்றாருக்கு ஒரு வினாக்கொத்து 515
- TVயின் பாதகமான விளைவுகள் 517
- TV இல்லா வீடு! 522
- TVயிலிருந்து நீங்கள் விடுதலை பெற உதவும் சில ஆலோசனைகள் 524
- TV பற்றிய சில தரவுகள் 524
- எமது TV பண்பாடு 525
- ஓர் அந்நியர் 527
- TV பழக்கத்தை மாற்றுவது எப்படி?- சில குடும்பங்களின் அனுபவங்கள் 528
- TV பற்றிய ஓர் எச்சரிக்கை 529
- TV பார்ப்பதற்குப் பதிலாக குடும்பத்தினர் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் 530
- TV பார்ப்பதற்குப் பதிலான சில மாற்று வழிகள் 531
- மேலும் சில சீரியஸான தெரிவுகள் 533
- மிதமிஞ்சிய இண்டர்நெட் உபயோகத்தின் தீங்குகள் 536
- கம்பியூட்டர் விளையாட்டுக்கள் 537
- வீடியோ விளையாட்டுக்களும் சிறுவர்களும் 537
- சாராம்சம் 540
- தொழிற்பாடுகள் 72- 76 541

அறிமுகம்

எமது வீட்டின் ஒரு மூலையில் இருந்து கொண்டு எமது வாழ்க்கையில் பாரிய பங்கினை வகிக்கும் பொருளொன்று இருக்கிறது. அது நாங்கள் செலவு செய்வதை விடக் கூடுதலான நேரத்தை எமது பிள்ளைகளுடன் செலவு செய்கிறது. அது குடும்பங்களையே முற்றாக நாசமாக்கக் கூடியது. ஆனால், இதனை நாம் கண்டு கொள்வதுமில்லை; அது தான் காரணம் எனக் கருதுவதுமில்லை. அப்பொருள் தான் தொலைக்காட்சிப் பெட்டி. TV பற்றியோ எமது வாழ்க்கையில் அதன் தாக்கம் பற்றியோ யாரும் குறை மதிப்பீடு செய்யக் கூடாது.

பெற்றாருக்கு ஒரு வினாக்கொத்து

- காலை உணவின் போதும் பள்ளிக்கூடம் செல்ல முன்னரும் உங்கள் பிள்ளைகள் TV பார்க்கின்றனரா?
- பள்ளிக்கூடம் விட்டு வந்த உடனேயும் வீட்டு வேலை செய்யும் போதும் அவர்கள் TV பார்க்கிறார்களா?
- உணவு வேளைகளின் போது குடும்பத்தினர் TV பார்க்கின்றனரா?
- உங்கள் பிள்ளைகளின் உரையாடல்களும் விளையாட்டுக்களும் எந்த அளவுக்கு TVயை மையமாகக் கொண்டிருக்கின்றன?
- பிள்ளைகள் தமது நண்பர்களுடன் அல்லது விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போதும் TV வேலை செய்து கொண்டிருக்கின்றதா?
- TVயில் விளம்பரம் செய்யப்படுகின்ற வேண்டாத உணவுப் பொருட்களையும் பொம்மைகளையும் பிள்ளைகள் கேட்கின்றார்களா?
- உங்கள் குடும்ப வாழ்க்கை TV நிகழ்ச்சி நேரங்களுக்கு ஏற்ப ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதா?
- குறித்த நிகழ்ச்சியொன்றைப் பார்த்த பின் உங்கள் பிள்ளை TVயை off பண்ணி விடுமா அல்லது தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்குமா?
- இரவில் விழித்திருந்து TV பார்த்ததன் காரணமாக உங்கள் பிள்ளை அடிக்கடி களைத்துப் போகிறதா?
- TVயில் பார்த்தவை காரணமாக உங்கள் பிள்ளையின் மனதில் ஏதேனும் அச்சங்கள் காணப்படுகிறதா? அல்லது அது கோரமான கனவுகளால் திகிலடைகிறதா?
- உங்கள் பிள்ளை விளையாட்டை விட TVயை விரும்புகின்றதா?
- உங்கள் பிள்ளை தான் TV பார்த்துக் கொண்டிருக்கும் போது வீட்டுக்கு வரும் விருந்தினர்களை உதாசீனம் செய்கின்றதா?
- உங்கள் பிள்ளை TV காரணமாகத் தொழுகையைப் பிற்போடுகிறதா?

மிதமிஞ்சி TV பார்ப்பதன் காரணமாக நாம் அப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விடுகிறோம். அது போதைப் பொருள் பாவிப்பதைப் போன்றது. பெரும்பாலான பிள்ளைகள் TV பார்க்கும் போது தன்னிலை மறந்த ஒரு மயக்கத்திற்கு உள்ளாகின்றனர்; முற்றாக அதிலே வசியப்பட்டுச் சூழலையே மறந்து விடுகின்றனர். நீங்கள் அவர்களுடன் பேசினால் அவர்களுக்குக் கேட்காது; அவர்களுக்கு அருகில் தொலைபேசி அலறினாலும் அவர்களுக்கு அது பற்றிய உணர்வு வராது. TV பார்க்கும் போது அவர்களது முகபாவனைகளும் மாற்றத்துக்குள்ளாகின்றன. தாடைகள் தளர்ந்து கீழ்த்தாடை தொங்குவதனால் வாய் சிறிதளவு திறந்திருக்கும். நாக்கு முன் பற்களின் மீது பதிந்திருக்க, கண்கள் கிரங்கிப் போயிருக்கும். சுறுசுறுப்பாகவும் விழிப்புணர்வுடனும் இருப்பதற்குப் பதிலாகப் பிள்ளைகள் TV திரையின் முன்னால் மதிமயங்கிக் காணப்படுவர். தம் உணர்வுகள் விறைத்துப்போன நிலையில் அவர்கள் அறிவியல் ரீதியாக முடங்கிப் போய் இருப்பர்.

TV நிகழ்ச்சிகளின் உள்ளடக்கங்களில் சில பயனுள்ளவையாகவும் மேலும் சில தீங்கு பயப்பனவாகவும் உள்ளன. இது பற்றி முடிவின்றி விவாதிக்கலாம். எனினும், இங்கு உள்ளடக்கம் பற்றிய விடயம் முக்கியமல்ல; TV பார்க்கும் அந்த அனுபவமும் அதற்காகச் செலவிடப்படும் நேரமும் பயனுள்ளதா, தீங்கானதா என்பதே முக்கியமானதாக இருக்கின்றது.

சில பிள்ளைகள் முடிவேயில்லாமல் TV பார்க்கிறார்கள். TV அவர்களுக்கு ஒரு பிரதியீட்டு நண்பனாகவும் நேரங்கொல்லியாகவும் அமைந்து விடுகிறது. TVக்கு அடிமையான பிள்ளை ஏனைய பிள்ளைகளை விடக் கூடுதலான பிரச்சினைகளைக் கொண்டிருக்கும். அது அதிக வெட்க உணர்வு, ஆக்கிரமிப்புக் குணம் என்பவற்றைக் கொண்டிருப்பதோடு எளிதில் ஏமாறக்கூடியதாகவும் மற்றவர்களோடு ஒத்துப்போக முடியாததாகவும் இருக்கும்.

ஒரு குடும்பத்தில் TVக்கு அடிமையானவர் ஒருவர் இருந்தாலே போதும்; சிக்கலான பிரச்சினைகள் உருவாகிவிடும். ஒருவர் TV பார்ப்பதிலேயே ஈடுபட விரும்பும் போது குடும்பரீதியான தொழிற்பாடொன்றை ஏற்பாடு செய்வதும் அனுபவித்து மகிழ்வதும் சிரமமாகி விடும். TV சாராத, வாசித்தல், விளையாடுதல், வரைதல் போன்ற தொழிற்பாடுகளிலிருந்து TV பார்க்கச் செல்வது எளிதாக இருக்கும். ஆனால், TV பார்ப்பதிலிருந்து ஏனைய தொழிற்பாடொன்றுக்குச் செல்வது மிகச் சிரமமாக இருக்கும். ஏனெனில், TVக்கு அடிமையான பிள்ளையின் மீது TVயின் கவர்ச்சி மிக வலிமையானதாக இருக்கும்.

பார்ப்போரை மதிமயக்கி உணர்வு நிலை உறக்கத்தில் ஆழ்த்தும் ஆற்றல் TVக்கு இருக்கிறது என Marie Winn என்பவர் குறிப்பிடுகின்றார். அதனைப் பார்ப்பவர்களின் உணர்வுகளை அது மந்தமடையச் செய்து அவர்களை முட்டாள்களாகவும் எளிதில் கட்டுப்படுத்தப்படக் கூடியவர்களாகவும் ஆக்கிவிடுகின்றது. ஒருவர் TV பார்க்கும் போது என்ன நடக்கிறது என்பது சிறிய பிரச்சினையே; ஒருவர் TV பார்க்கும் போது என்னென்ன நடக்காமல் போகின்றன என்பதே பெரிய பிரச்சினை. TV பார்ப்பதில் நூற்றுக்கணக்கான மணித்தியாலங்களைக் கழிக்கும் பிள்ளைகளின் அறிவு மற்றும் சமூக ரீதியான விருத்தி பாதிக்கப்படுகிறது. இலட்சக்கணக்கான வார்த்தைகள் பேசப்படாமலும் இன்னொருவரினால் பதில் கூறப்படாமலும் போகின்றன. அதே போல் ஆயிரக் கணக்கான வினாக்கள் கேட்கப்படாமலும் இன்னொருவரினால் பதிலளிக்கப்படாமலும் போகின்றன.

TVயின் பாதகமான விளைவுகள்

பெற்றார் தொலைக்காட்சியைப்பற்றி மதிப்பீடு செய்யும் போது நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் பற்றிக் கவனம் செலுத்துகிறார்களேயன்றி TV பார்ப்பதில் செலவாகும் நேரத்தைப் பற்றிக் கவனிப்பதில்லை. அவர்கள் தமது பிள்ளைகளின் தேவைகள் பற்றிக் கவனிக்காது தமது தேவைகளைப் பற்றியே யோசிக்கின்றனர். தமது பிள்ளைகளைச் சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கச் செய்ய அவர்களுக்கு ஒரு வழி தேவை. அவர்களுக்கு வீட்டில் அமைதியும் நிம்மதியும் தேவை. அவர்களுக்குத் தம் பிள்ளைகளைப் பராமரிப் பதற்காக இலவசமான, முறைப்பாடுகள் செய்யாத, நம்பகமான, எப்போதும் வீட்டில் இருக்கின்ற இலக்ட்ரோனிக் பராமரிப்பாளர் தேவை. இவையனைத்தும் அவர்களது பிள்ளைகளின் தேவைகளுக்கு முரணானவை. சுயாதீனமாக இருக்க வேண்டும், தமது வலிமைகளையும் பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ள வேண்டும், சிறந்த முறையில் (பேச்சிலும் எழுத்திலும்) தொடர்பாடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பன போன்ற பிள்ளைகளின் தேவைகளை TV நிறைவேற்றுவதில்லை. தாமே உருவாக்கிக் கொள்ளும் கற்பனை உலகில் சஞ்சரிப்பதே பிள்ளைகளுக்குத் தேவை; வளர்ந்தவர்களால் அவர்களுக்கென உருவாக்கப்பட்ட கற்பனை உலகங்களில் அல்ல! பொருட்களைக் கையாள்வதனால், தொடுவதனால், செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் கிடைக்கும் அறிவு ரீதியான தூண்டுதலே பிள்ளைக்குத் தேவை; எவ்வித உயிர்ப்புமில்லாமல் TV திரையைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதல்ல!

மிகைத் தொழிற்பாடுள்ள பிள்ளையொன்றை அமைதிப்படுத்துவதற்குரிய சாதன மாகப் பெற்றார் TVயைப் பயன்படுத்துகின்றனர். ஏனெனில், அது மனதின் இறுக்கத் தையும் கவனக் குவிப்பையும் இல்லாமற் செய்யக்கூடியது. TV பார்க்கும் போது கண்களில் ஏற்படும் சொற்பமான குவியக் குறைபாடானது பகற்கனவு காணும் போது கண்களில் ஏற்படும் மாற்றங்களை ஒத்ததாக இருக்கின்றது. TVயில் வரும் விடயங்கள் கனவுலகில் வருவன போல் உண்மையல்லாதனவாகத் தோன்றும். போதைப்பொருட் பழக்கம் அல்லது மதுப்பழக்கம் உள்ளவர்களைப் போன்றே தொடர்ந்து TV பார்ப்பவர்களும் வாழ்க்கையில் சமநிலை இழந்தவர்களாகக் காணப்படுவர். வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வழி கோலுகின்ற, சாதனை புரிந்த உணர்வினை ஏற்படுத்தக்கூடிய எத்தனையோ தொழிற்பாடுகளை அவர்கள் தவறவிட்டு விடுவர். TV பார்ப்பது மற்றெல்லாத் தொழிற்பாடுகளையும் விட விளைபயன் குறைந்த ஒன்றாகும். TVயானது பிள்ளைகளுக்கு மனநிறைவை வழங்காவிடினும், வாசித்தல், தோட்ட வேலை செய்தல், தையல் பயிலுதல், விளையாடுதல், உரையாடுதல் போன்றவற்றுக்குப் பதிலாக அவர்கள் அதனையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மேற்சொன்ன அர்த்தமுள்ள தொழிற்பாடுகளின் மீதுள்ள விருப்பம் TV பார்ப்பதில் உள்ளதை விடக் குறைவாகவே இருக்கின்றது. TV அனுபவம் இன்பமளிக்கக்கூடியதாக இருப்பதனால் அது பிள்ளைகளைக் கவர்ந்து கொள்கிறது. உணவுட்கொள்ளல், அரவணைப்புக்குள்ளாதல் என்பன அதைவிட இன்பமளிப்பனவாக இருப்பினும் TVயின் கவர்ச்சி வலிமை கூடியது. ஆனால், அது போலியானது. ஏனெனில், உணவோ குடும்பத்தினரோ வழங்குவது போன்ற எதனையும் அது வழங்குவதில்லை. எனினும், பிரகாசமான படங்களையும், வித்தியாசமான ஓசைகளையும், இசைகளையும், கண்டு பழகிய காட்சிகளையும், கற்பனையுலகக் காட்சிகளையும் ஒரே சாதனத்தினூடாக வழங்கிப் பெருமளவு இன்பத்தை ஏற்படுத்துவதன் காரணமாக அது மனதை ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அமெரிக்கப் பெற்றோர்களுள் பாதிப் பேருக்கு மேல் TV பார்க்கும் வாய்ப்பினைத் தடுப்பதை ஒரு தண்டனையாகப் பயன்படுத்தப்படுகின்றனர். அமெரிக்காவில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் தண்டனை முறையாக இது மாறியுள்ளது.

தொலைக்காட்சி பிள்ளைகளின் உணர்வுகளை மிகைத்து விடுகின்றது. அதனை நிறுத்தி விட்டு, மந்த நிலையும் அமைதியும் அடைந்து செயலற்றுக் கிடப்பதே அதற்குப் பிள்ளைகள் காட்டக்கூடிய ஒரே விளைவு காட்டலாக இருக்கிறது. தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் உருவங்கள், கமராக் கோணத்திலும் குவியத்திலும் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றங்கள், ஒரு சில செக்கன்களில் பார்வையாளரின் நோக்கில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்பன பிள்ளையில் கவனக்குவிப்பின் கால எல்லையைக் குறுக்கிவிடுகின்றன. அதாவது பிள்ளையினால் தொடர்ந்து நீண்ட நேரத்திற்கு ஒரே விடயத்தை அவதானிக்க முடியாமற் போய்விடும். மிகைத் தொழிற்பாடுடைய பள்ளி மாணவர்கள் TV காட்சிகளின் தீவிர இயக்கத்தன்மையை மீட்டுப் பெறுவதற்காகத் தமது செயற்பாடுகளை அடிக்கடி மாற்றிக்கொள்கின்றனர். பிள்ளைகளுக்கெனக் காட்டப்படும் சிறுவர் நிகழ்ச்சிகள் கூட அவர்களது புலன்களை மிகையாகத் தூண்டுவனவாக உள்ளன. அதிவிரைவான இலக்ட்ரோனிக் தூண்டுதலைக் கையாளும் அளவுக்கு முதிர்ச்சி பெறாத முன்பள்ளிப் பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் இவை புலன்களைக் களைப்புறச் செய்வனவாக அமையலாம். இன்றைய பிள்ளைகளில் காணப்படுகின்ற மூர்க்கம் பிடித்த நடத்தைகளுக்கு இது ஒரு காரணமாக இருக்கலாம். இன்று பிள்ளைகள் மத்தியில் பரவி வருகின்ற ADHD என்னும் கவனக்குறைபாட்டு-மிகைத் தொழிற்பாட்டுக் கோளாறும் இதனுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடும். TVயில் சிறுவர் நிகழ்ச்சியொன்று ஒளிபரப்பாகும் போது எவ்வளவு விரைவாகக் காட்சிகளும் கமராக் கோணமும் மாறுகின்றன என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். நிகழ்ச்சியை முன்வைக்கும் அறிவிப்பாளர்களின் பேச்சின் ஓசையையும் வேகத்தையும் அவதானியுங்கள். அது உரப்பு மிக்கதாகவும் துரிதமானதாகவும் இருக்கும். இவ்வாறான நிகழ்ச்சிகள் பிள்ளைகளின் உள விருத்தியைப் பாதிக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒரு புத்தகம் அப்படிப்பட்டதல்ல; அது பிள்ளையின் உள்ளத்தை விருத்தி செய்யக்கூடியது.

பார்த்துக் கொண்டிருக்கும் TVயை நிறுத்தியவுடன் பிள்ளைகள் வெறி பிடித் தவர்கள் போல் தடுமாறுவதைப் பல பெற்றார்கள் அவதானிக்கின்றனர். இந்நிலையில் பிள்ளைகள் கிளர்ச்சியடைந்தவர்களாக, கவனம் கலைந்த நிலையில் கட்டுப்பாடின்றிக் குதித்து ஓடிக்கொண்டிருப்பார்கள். இது, முழு நித்திரையிலிருந்து முற்றான விழிப்பு நிலைக்கு ஒருவர் வரும் போது ஏற்படுகின்ற சிடுசிடுப்பு நிலையை ஒத்ததாக இருக்கின்றது. அவர்கள் எளிதில் எரிச்சலடையக்கூடியவர்களாகவும் தமது அவதானத்தைக் குவிக்கவோ புலன்களை ஒழுங்காகப் பயன்படுத்தவோ முடியாத நிலையிலும் இருப்பர். மது வெறியிலிருந்து அல்லது போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து சுமுக நிலைக்குத் திரும்பும் போதும் மனிதர்களில் இந்நிலை ஏற்படுகிறது. நீண்ட நேரமாக TV பார்க்கும் போது பிள்ளைகள் போதை போன்ற மயக்கமொன்றுக்கு உள்ளாகின்றனர். TV பழக்கத்திற்கு அடிமையான பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருக்கும் TVயை நிறுத்தியதும் முரட்டுத் தனமாக நடந்து கொள்வதோடு சூளுரைத்தல், கூச்சலிடுதல் முதலியவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

Sesame Street தரும் அனுபவம்

Sesame Street என்ற சர்வதேச சிறுவர் TV நிகழ்ச்சி சிறுவர்களுக்கு ஆங்கில அரிச்சுவடியையும் பல சொற்களையும் கற்றுக் கொடுக்கிறது. இந்நிகழ்ச்சி இளம் சிறுவர்களுக்கு முக்கியமான கல்வி அனுபவத்தை வழங்குகிறது என அதன் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர். எனினும், இந்நிகழ்ச்சி பற்றிய வேறு பல உண்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. பிள்ளைகளை TVக்கு அடிமையாக்குவதில் Sesame Street நிகழ்ச்சிக்கு முக்கிய பங்கு உண்டு. பாலர் பள்ளிகளுக்கும் அரிச்சுவடி வகுப்புக்களுக்கும் சேரும் பிள்ளைகள் Sesame Street நிகழ்ச்சியில் வரும் சில எழுத்துக்களை இனங்கண்டு கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என ஆசிரியர்கள் கூறுகின்றனர். எனினும், TV



பழக்கத்துக்கு அடிமையானவர்களில் கற்பனைத் திறனோடு விளையாடுதல் குறைவடைகிறது; நோக்கமின்றி ஓடித்திரிவது அதிகரிக்கிறது. இவர்கள் விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்த மாட்டார்கள். இவர்களிடம் விரக்தியைச் சகிக்கும் திறன், விடாமுயற்சி என்பன குறைவாக இருக்கும். அத்தோடு, இவர்கள் உண்மை நிலையை கற்பனைக் கனவுகளுடன் குழப்பிக் கொள்வர்.

வெற்றிகரமான கற்றலுக்கு சுறுசுறுப்பாக, நேரடியாக ஈடுபட்டுப் பெறும் அனுபவம் தேவை. Sesame Street போன்ற கல்வி சார்ந்த TV நிகழ்ச்சிகள் உண்மையான, நேருக்கு நேரான கற்பித்தல் அனுபவங்களுக்கு ஒருபோதும் ஈடாக மாட்டா. உண்மையில் எந்தவொரு நல்ல நூலும் இப்படியான நிகழ்ச்சிகளை விடச் சிறந்ததாகவே இருக்கும்.

வாசிப்பில் விருப்பம் காட்டாமை, படிப்பில் கவனம் செலுத்தாமை என்பன காரணமாக ஆரம்பப் பள்ளி மாணவர்கள் பலரைப் பற்றி ஆசிரியர்கள் விரக்தியடைந்துள்ளனர். வார்த்தை சாராத சிந்தனைத் திறன்களை மேம்படுத்துவதற்கு TV உதவக்கூடும். ஆனால், பள்ளிக்கூடத்தில் வெற்றி பெறுவதற்குக் கட்டாயம் தேவைப்படும் ஏனைய திறன்களைப் பொறுத்தமட்டில் அது எவ்விதத் துணையும் புரிவதில்லை. நூறு மணித்தியாலங்களுக்கு Sesame Street போன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்தாலும், ஒரு புத்தகத்துடன் பத்து மணித்தியாலங்களைக் கழிப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய கல்விப்பயன் கிடைக்கப் போவதில்லை. ஒரு பெற்றாரும் ஒரு நூலும் சேர்ந்தால் Sesame Street போன்ற நிகழ்ச்சிகள் ஆற்றும் பணியை விடச் சிறப்பான பணியொன்றைக் குறைந்த நேரத்தில் ஆற்ற முடியும். அத்தோடு, பிள்ளையின் அறிவு ரீதியான விருத்திக்குப் பல அனுகூலங்களை வழங்கு வதோடு TV காரணமாக ஏற்படக்கூடிய மந்தத் தன்மை, மதிமயக்கம், மிதமிஞ்சிய தூண்டுதல், சொற்களஞ்சிய விருத்தி தடைப்படுதல் போன்ற எவ்விதப் பிரதிகூலங் களையும் ஏற்படுத்தாது.

பிள்ளைகள் எவ்வளவு அதிகமாக TV பார்க்கிறார்களோ அந்த அளவுக்குப் பள்ளிக்கூடச் செயற்பாடுகளில் மோசமாக இருப்பார்கள். பள்ளிக்கூடத்தில் வெற்றி பெறுவதற்கு வாசிப்பில் விருப்பம், அடுத்தவர்களுடன் சுமுகமாகப் பழகும் ஆற்றல் என்பவற்றுடன் பெருக்கல் வாய்ப்பாட்டைக் கற்பது போன்ற அலுப்புத் தருகின்ற, மீட்டி மீட்டிச் செய்யும் பணிகளில் கவனத்தைக் குவிக்கும் ஆற்றல் முதலியன தேவைப்படுகின்றன. இத்திறன்கள் யாவும் மிதமிஞ்சி TV பார்ப்பதனால் நலிவடைகின்றன அல்லது நாசமடைகின்றன.

TVயின் வருகைக்கு முன்பு

தொலைக்காட்சியின் வருகைக்கு முன்னர் பெற்றார் தம் பிள்ளைகளுடன் கண்டிப்பாக இருந்தனர். இதற்குக் காரணம், நல்ல முறையில் பிள்ளை வளர்ப்பதற்கு அவ்வாறு இருப்பது அவசியம் என அவர்கள் நம்பியதல்ல; மாறாக, பெற்றார் தப்பி வாழ்வதற்கு அத்தகைய கண்டிப்பு தேவைப்பட்டது. TVக்கு முந்திய காலத்தில் பெற்றார் தம்



பிள்ளைகளைத் தனியே விளையாடுவதற்குப் பயிற்றுவித்ததோடு அவர்களது விருத்தியையும் தொடர்ந்து அவதானித்து வந்தனர். பிள்ளைகள் தாமே மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழிகளைக் கற்றுக் கொள்ளவும் அவர்கள் உதவினர். தம் பிள்ளைகள், இடையில் குறுகிய நேரம் நித்திரை கொள்வதற்கும் அவர்கள் பழக்கினர். ஏனெனில், அமைதியாக ஓய்வெடுப்பது பிள்ளைக்கு நன்மை பயக்கும்.

TVயின் வருகைக்குப் பிறகு இவ்வாறான பல நடைமுறைகள் மறைந்து போயின. இன்றோ, பிள்ளைகளுக்குச் சுயமாக மகிழ்ச்சியோடிருக்கத் தெரியாது. TVயை நிறுத்திய பின்னர் பொழுது போக்குகளிலோ துணிகரமான ஆய்வுகளிலோ ஈடுபடாமல் அவர்கள் சும்மா இருக்கின்றனர். விளையாட்டுக்கள், ஆக்கத் தொழிற்பாடுகள், வாசிப்பு போன்றவற்றைப் புறக்கணிப்பதன் விளைவாகச் சலிப்புக்கும் அலுப்புக்கும் ஆளாகின்றனர்.

தொலைக்காட்சியின் வருகைக்கு முன்னர் பிள்ளைகள் தமது சுயாதீனத்தை விருத்தி செய்து கொள்ளவும் பெற்றாரை மையமாகக் கொண்ட நிலையிலிருந்து சுற்றாடலை மையமாகக் கொண்ட நிலைக்கு மாற்றமடையவும் முடியுமாக இருந்தது. சமூகத்தில் பிழைத்து வாழ வேண்டுமாயின் ஒருவர் தன்னை இசைவாக்கிக் கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு மூன்று வயதாகும் போது அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கவும் தம்மைச் சூழவுள்ள உலகோடு இடைத்தாக்கம் புரியவும் ஆரம்பிக்கின்றனர்.

பிள்ளைகளின் இப்பருவத்தில் பிள்ளைப் பராமரிப்பாளராக TV பயன்படுத்தப் படுகின்றது. TV பார்த்துக்கொண்டிருக்கும் போது பிள்ளைகள் தம் தாயின் மடியில் இருப்பது போல் இடர்களின்றிப் பாதுகாப்பாக இருக்கின்றனர். வேறு பிள்ளைகளுடன் அவர்கள் விளையாடும் போது அவர்களுக்கு வழங்க வேண்டியது போல் எதனையும் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படாது. சாதாரண விளையாட்டுக்களில் இருப்பது போன்ற இடர்கள் ஏதும் TV பார்க்கும் போது ஏற்படாது. உதாரணமாக, பிள்ளைக்கு காயங்களோ, நோவுகளோ ஏற்படுவதில்லை; அவர்கள் எவ்விதப் பிரச்சினையிலும் மாட்டிக்கொள்ள மாட்டார்கள். பெற்றாருக்குக் கோபத்தை ஏற்படுத்தவும் மாட்டார்கள். குழந்தைப் பருவத்தின் இயலாமையிலிருந்து விடுதலையாகும் இந்தப் பருவத்தில் அவர்கள் இவ்வாறு மீண்டும் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தொலைக்காட்சி வர முன்னர் புதிய விடயங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதன் மூலம் பிள்ளைகள் தமது ஆர்வங்களை விரிவாக்கிக் கொண்டனர். அவர்கள் தமக்கு சலிப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகப் புதிய விளையாட்டுக்களை உருவாக்குதல்,

பாத்திரங்களை ஏற்று விளையாடுதல், வாசித்தல், கடிதங்கள் எழுதுதல், பொழுது போக்குகளில் ஈடுபடுதல் போன்றவற்றைச் செய்தனர். TV வந்த பிறகு ஏனைய எல்லா விடயங்களும் ஆர்வம் தராதவையாக மாறியுள்ளன. எனவே, பிள்ளைகள் 'செய்வதற்கு ஒன்றுமில்லையே' என முறைப்பாடு செய்கின்றனர். வாழ்க்கையையும் காலத்தையும் அனுபவிப்பதற்கான பாதுகாப்புடைய, முயற்சி தேவைப்படாத, களிப்பூட்டும் வழியாக TV பார்ப்பது மாறியிருக்கிறது. அதேவேளை, மகிழ்வூட்டக்கூடிய ஏதேனும் வேறு செயற்பாடொன்றில் ஈடுபடுவது சுமையான காரியமாகக் கருதப்படுகின்றது.

புத்தக வடிவில் வந்த கதைகளை TV நிகழ்ச்சிகளாக மாற்றிக் காட்டுவதன் மூலம் பிள்ளைகளின் கற்பனைத் திறன் பறிக்கப்படுகிறது. அறிவு ரீதியான அனுபவமொன்றுக்குப் பதிலாக சிந்திக்கத் தேவைப்படாத அனுபவமொன்று அவர்களுக்குத் தரப்படுகிறது. கதையிலுள்ள பாத்திரங்களுடன் சேர்ந்து அவர்கள் வளர்வதில்லை; அப்பாத்திரங்களின் உள்ளுணர்வுகள், மனப்போராட்டங்கள், விழுமியங்கள் முதலியவற்றைப் புரிந்து கொள்வதுமில்லை. நாட்கணக்கில் ஒரு கதையை வாசித்து அதன் முடிவை அடைவதற்குப் பதிலாக இங்கு முழுக் கதையும் 90 நிமிடங்களில் முடிந்து விடுகிறது. நிகழ்ச்சி முடிந்த பின்னர் பிள்ளைகள் மகிழ்வுற்ற நிலையில் இருந்தாலும் அவர்களுடைய உள்ளம் திருப்தியடைந்திருக்காது. ஒரு கதையை வாசிக்கும் போது அதில் இடம்பெறும் அனுபவங்களை அவர்கள் கற்பனையில் அனுபவிப்பார்கள்; அதிலுள்ள பாத்திரங்களுடன் நட்புறவு கொள்வார்கள்; தம் கற்பனைக்கும் வேலை கொடுப்பார்கள். புத்தகத்தின் மூலம் கிடைக்கும் தொடுகையுணர்வும் அதன் சுகந்தமும் பிள்ளையைக் கதையோடு பிணையச்செய்து புத்தகத்தின் பந்திகளைத் திருப்பித் திருப்பி வாசிக்க வைக்கிறது. நிகழ்ச்சியொன்று திடீரென முடிவடையும் போது மனதில் ஒருவகைச் சோர்வும் விலகிச் செல்லும் உணர்வும் ஏற்படுகிறது. எமக்கும் நாம் வாசிக்கும் புத்தகங்களுக்கும் இடையில் ஓர் ஆழமான பிணைப்பு ஏற்படுகிறது. அது ஆராயப்படவோ அளவிடப்படவோ விளக்கப்படவோ முடியாத ஒன்றாகும். இந்த இன்றியமையாத மனவெழுச்சி ரீதியான இணைப்பை TV இல்லாமற் செய்து விடுகிறது.

பிள்ளைகளின் இயலாத் தன்மையையும் வளர்ந்தோர் மீது தங்கியிருத்தலையும் TV மேலும் உறுதிப்படுத்துகிறது. கடந்த காலத்தில் தமது ஓய்வு நேரத்தின் போது வளர்ந்தோரில் தங்கியிருப்பதைக் குறைக்க உதவும் செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபட்டனர். இன்று பிள்ளைகள் பலரைப் பொறுத்தமட்டில் ஓய்வு நேரமானது ஒரு சாபக் கேடாக மாறியிருக்கிறது. தமது ஓய்வு நேரத்தில் அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒரே விடயமாக TV பார்த்தல் இருக்கிறது. சில பிள்ளைகள் உணவுண்பதையும் நண்பர்களுடன் உரையாடுவதையும் தம் வீட்டு வேலைகளைச் செய்வதையும் கூட TVக்கு முன்னால் இருந்து கொண்டே நிறைவேற்றுகின்றனர்.

தொலைக்காட்சி பார்ப்பதனால் குடும்ப வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அன்றாட நடவடிக்கைகள் கூட TVயை மையமாக வைத்துச் சுழல்கின்றன. அத்தோடு, குடும்பச் சடங்கு முறைகள் கூட இதனால் மறைந்து போயுள்ளன. சமய மற்றும் சமூகத் தொழிற்பாடுகளில் ஈடுபாடு குறைவதற்கும் இது பிரதான காரணமாக அமைந்துள்ளது. தமது வீடு, உணவுட்கொள்ளவும் நித்திரை கொள்ளவும் உரிய உணவகங்களாகவும் தங்கும் விடுதிகளாகவும் மாறியிருப்பதாகப் பெற்றோர் பலர் முறைப்பாடு செய்கின்றனர். குடும்ப வாழ்க்கையில் TVயின் ஆதிக்கம் அதிகரிக்கும் போது இவ்வாறான நிலை தவிர்க்க முடியாதது என்பதை அவர்கள் உணரத் தவறி விடுகின்றனர். ஏனெனில், குடும்ப வாழ்க்கை ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமாயின் பெருமளவு அனுபவம் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் இடம்பெறுகின்ற, மீட்டப்படுகின்ற காலப்போக்கில் மாற்றமடைந்து விருத்தியடைகின்ற பெருந்தொகையான தொழிற்பாடுகளே உறுதியான குடும்ப உறவுகள்

உருவாவதற்குக் காரணமாக இருக்கின்றன. இல்லாவிடில், பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு உணவும் உடையும் வாழிடமும் கொடுத்துப் பாதுகாக்கும் வெறும் பராமரிப்பாளராக மாறிவிடுகின்றனர். அத்தோடு பிள்ளைகளின் வாழ்க்கையில் வெறுமனே பின்னணியிலுள்ள நபர்களாகத் தரம் குறைக்கப்பட்டு விடுகின்றனர்.

உண்மையான உயிருள்ள மனிதர்களோடு பழகுவதற்கான வாய்ப்பை அபகரிப்பதன் மூலம் தொலைக்காட்சியானது குடும்ப வாழ்க்கையைச் சீர்குலைத்து விடுகின்றது. பெரும்பாலான குடும்பங்கள் உணவு வேளைகளின் போதும் TV பார்க்கின்றன (வசதி படைத்த குடும்பங்களில் பெற்றாரும் பிள்ளைகளும் தனித்தனி TV செட்களை உபயோகிக்கின்றனர்). அவர்களனைவரும் பார்ப்பவை இயற்கை பற்றிய அல்லது ஒழுக்கவியல் பற்றிய அல்லது நடைமுறை நிகழ்வுகள் பற்றிய மிகச்சிறந்த நிகழ்ச்சிகளாக இருப்பினும் அவற்றை விடவும் முக்கியமான சிலவற்றை அவர்கள் இழந்து விடுகின்றனர். அன்று அவர்கள் செய்தவை பற்றி ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டார்களா? அவர்கள் திட்டங்கள் போட்டார்களா? கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்களா? சிரிப்பூட்டும் துணுக்குகளைப் பகிர்ந்து கொண்டார்களா? அல்லது தமது வெற்றி தோல்விகள் பற்றி உரையாடினார்களா? என்ன வகையில் அவர்கள் உண்மையான குடும்பமொன்றாக இருக்கின்றனர்? தொலைக்காட்சி நேரடியாகக் குடும்ப வாழ்க்கையை நாசமாக்காத போதிலும் அது குடும்ப வாழ்க்கையை வலுப்படுத்துவதற்கு எவ்விதத்திலும் பங்களிப்பதில்லை. அதே வேளை, குடும்ப அங்கத்தவர்களிடையே பரஸ்பர நம்பிக்கையும் மனவெழுச்சிப் பாதுகாப்பும் கொண்ட உறவுகள் உருவாவதற்குப் பயன்பட வேண்டிய காலத்தை அது பறித்துக் கொள்கிறது. மேலும், பெற்றார் தம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுதல் மற்றும் அவர்களோடு மகிழ்ந்திருத்தல் முதலிய செயற்பாடுகளுக்கு ஒரு குறுக்கீடாகவும் அமைகிறது.



TV இல்லா வீடு!

தொலைக்காட்சியினால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பது ஒரு குடும்பம் எதிர்கொள்ளும் மிகச் சிரமமான பணிகளுள் ஒன்றாகும். புகைப்பவர்கள் மதுவுக்கும் போதைப் பொருட்களுக்கும் அடிமையானவர்கள் போன்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றே இதுவும் இருக்கிறது. தமது பழக்கத்தை நிறுத்த வேண்டும், அது தீமையானது என்பது அவர்களுக்குத் தெரியும். இருப்பினும், அப்பழக்கத்தை நிறுத்துவது சிரமமாக இருப்பதனால், அதைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

தொலைக்காட்சியினால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரே வழி, அதனை நிரந்தரமாக அகற்றி விடுவதே என்பதை அதிகமான பெற்றோர்கள் அறிவர். எனினும், அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான மனத் திடமோ துணிவோ பெரும்பாலானோரிடம் இல்லை. தொடர்ந்தும் TVயை வீட்டில் வைத்திருப்பதற்குப் பல சாக்குப் போக்குகளை அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் கூறும் காரணங்கள் சுயநலத்தை, சோம்பலை, அடிமைத் தனத்தை அல்லது ஒழுக்கக் கேட்டை பிரதிபலிப்பனவாக உள்ளன. சில பெற்றோர்கள் வர்த்தகக் காரணங்களுக்காக உலக நடப்புக்களை அறிந்துகொள்ள விரும்புகின்றனர். எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் TVயின் தீய விளைவுகளைக் குறை மதிப்பீடு செய்வதோடு அதன் கல்விப் பயன்களைப் பெரிது படுத்திக் காட்டுகின்றனர். இன்னுஞ் சிலரோ தமது பிள்ளைகள் என்ன பார்க்கிறார்கள் என்பதெல்லாம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக நினைத்துக்கொண்டு தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர்.

தொலைக்காட்சி உருவாக்கும் மாயத் தோற்றங்கள்

இரண்டு பிள்ளைகளுடன் வாழும் ஒரு தம்பதியர் தமது குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு என்னை வேண்டிக் கொண்டனர். பெற்றார் இருவருமே தொழில் புரியும் வைத்தியர்கள். "பொலிவூட் நடிகைகளால் TVயில் சித்தரிக்கப்படுவது போல் திருமணம் என்பது பொறுப்புக்கள் ஏதுமற்ற இன்பம் நிறைந்த வாழ்க்கை என விவாகம் செய்ய முன்னர் நான் நினைத்திருந்தேன்" என அந்தத் தாய் கூறிய போது எனக்கு வியப்புத்தான் ஏற்பட்டது. தொலைக்காட்சி யினால் வாழ்க்கை சித்தரிக்கப்படும் விதத்தைப் பார்த்து இத்தகைய உயர் தொழில் புரிபவர்களே ஏமாறுவார்களாயின் எமது பிள்ளைகளின் நிலை எப்படியிருக்கும்?

நான் இரண்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது, எமது ஆசிரியர், முதிய கணவன்– மனைவி சோடியொன்றைப் பற்றிய பழங்கதையொன்றை வாசித்துக் காட்டினார். அச்சோடியிடம் ஒரு பூனையும் ஒரு நாயும் இருந்தன. ஒரு நாள் பூனை அவர்களை ஏமாற்றிய போதிலும், நாய் அவர்களுக்கு விசுவாசமாக இருந்தது. இதனால் எரிச்சலுற்ற நாய் பூனையைத் துரத்திச் செல்லவே, அது தப்பிச் சென்று ஒரு மரத்தில் ஏறிக்கொண்டது. "அந்த நாள் முதல், பூனையைக் காணும் போதெல்லாம் அதனைக் கடிப்பதற்காக நாய் துரத்திச் செல்கிறது" என்ற வாக்கியத்துடன் அக்கதை முடிவுற்றது. அந்தப் பூனை முதிய தம்பதியருக்குச் செய்த ஆரம்பப் பாவத்தின் காரணமாகத்தான் இன்றும் நாய்கள் பூனைகளுடன் சண்டையிடுகின்றன என நான் நீண்ட காலமாக நம்பிக் கொண்டிருந்தேன். இவ்வாறான கதைகள் கற்பனையாகப் புனையப்பட்டவை என்பதை அந்த ஆசிரியர் விளக்கியிருக்க வேண்டும். ஏனெனில், தாம் காண்பவைகளையும் கேட்பவைகளையும் பிள்ளைகள் அப்படியே நம்பி விடுகின்றனர். எனவே, பிள்ளைகள் TV யில் காண்பவை யதார்த்தமானவையல்ல என்பதைப் பெற்றார் அவர்களுக்குக் கூறி வைக்க வேண்டும்.



TVயிலிருந்து நீங்கள் விடுதலை பெற உதவும் சில ஆலோசனைகள்

பிள்ளைகள் TV பார்ப்பதைக் குறைப்பதற்குப் பெற்றார் பின்வருவனவற்றைச் செய்யலாம்:

- தொலைக்காட்சிப் பெட்டியை வீட்டில் முக்கியமற்ற ஓர் இடத்திற்கு நகர்த்துங்கள். அணுக வசதியான இடத்தில் இல்லாத போது TV பார்க்க வேண்டுமென்ற விருப்பம் குறையும்.
- remote control கருவியை மறைத்து வையுங்கள்.
- உங்கள் பிள்ளையின் படுக்கையறையில் TV பெட்டியை வைக்காதீர்கள். படுக்கையறையில் தொலைக்காட்சி இருப்பின் குடும்பச் செயற்பாடுகளிலிருந்து பிள்ளைகள் தூரமாவதோடு, வீட்டு வேலை செய்தல், சிந்தித்தல், வாசித்தல், நித்திரை கொள்ளுதல் என்பவற்றிலிருந்தும் அவர்களது கவனம் நீக்கப்படும். தீங்கான நிகழ்ச்சிகளைப் பிள்ளைகள் பார்த்து விடாமல் கண்காணிப்பதும் பெற்றோருக்குக் கஷ்டமானதாக இருக்கும்.
- உணவு வேளைகளிலும் உரையாடல்களின் போதும் TV யை off பண்ணி வையுங்கள்.
- TV பார்ப்பது தொடர்பாக வரையறைகளை ஏற்படுத்துங்கள். TV பார்ப்பதை ஒரு நாளைக்கு அரை மணித்தியாலமாக அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு மணித்தியாலம் என்ற வகையில் கட்டுப்படுத்த முயற்சியுங்கள். உங்கள் விதிகளைப் பற்றி விளக்கமளியுங்கள். "நீங்கள் அரை மணித்தியாலம் தான் TV பார்க்கலாம்" என்று கூறுவதற்குப் பதிலாக, "அரை மணித்தியாலத்தில் நாம் TV யை off பண்ணி விட்டு இவ்வாறு செய்வோம்" எனக் கூறி வேறு செயற்பாடொன்றை முன் வைக்கலாம்.
- வாரத்தின் ஓரிரு நாட்களை TV பார்க்காத நாட்களாகப் பிரகடனம் செய்யுங்கள்.
- TVயை ஒரு வெகுமதியாகப் பயன்படுத்தாதீர்கள். இவ்வாறு செய்வதனால் அதன் வலு அதிகரிக்கின்றது.
- ஓதல்கள், பாடல்கள், உரைகள் முதலியவற்றை அல்லது வானொலி ஒலிபரப்புக்களை நீங்கள் கேட்கலாம். ஒரு பின்னணி ஓசையாக TVயைப் பயன்படுத்தாதீர்கள்.
- "எனக்குச் சலிப்பாக இருக்கிறது" எனப் பிள்ளைகள் முறைப்பாடு செய்தால் அது பற்றி அலட்டிக் கொள்ளாதீர்கள். ஓய்வு நேரமானது, விளையாடுவதற்கும் கூட்டாகச் செயற்திட்டங்களைச் செய்வதற்கும் பிள்ளைகளுக்கு வழிகோல வேண்டும்.
- குடும்ப உரையாடல்கள், உடற்பயிற்சி, விளையாட்டு போன்ற முக்கியமான விடயங்களை இடம்பெயர்ப்பதற்கு TVகு இடமளிக்காதீர்கள்.

TV பற்றிய சில தரவுகள்

- அமெரிக்கர்கள் சராசரியாக தினமும் 4 மணித்தியாலங்கள் TV பார்க்கின்றனர். இது ஒரு வருடத்தில் இரண்டு முழு மாதங்கள் பார்ப்பதற்குச் சமனாகும்.
- தினமும் 6 மணித்தியாலங்களுக்கு மேல் TV பார்க்கின்ற பன்னிரண்டாம் வகுப்பினரில் 86% இனர் வாசிப்புச் சோதனைகளில் பின்னடைவைக் காட்டுகின்றனர்.
- அமெரிக்கப் பிள்ளைகள் 18 வயதை அடையும் போது சராசரியாக 16,000 கொலைகள் உட்பட 200,000 கு மேற்பட்ட வன்செயல்களை TV திரையில் பார்த்திருப்பர்.
- அமெரிக்கப் பிள்ளைகளில் மிகை நிறை கொண்டோரின் விகிதம் 1980 இல் இருந்ததை விட இருமடங்காகியுள்ளது. இதற்குப் பிரதான காரணங்களாக TV பார்த்தலும், பிழையான ஊட்ட முறைகளும் அமைந்துள்ளன.

தொலைக்காட்சி பற்றிய கவனிக்கத்தக்க சில கூற்றுக்கள்

தொலைக்காட்சியானது தடுத்து நிறுத்த முடியாத விசையொன்றாக விளங்கிய பிள்ளையை நகர்த்தப்பட முடியாத பொருளொன்றாக மாற்றி விடுகிறது. –யாரோ கூறியது–

நீங்கள் வீட்டுக்கு வந்த போது, யாரோ அந்நிய மனிதன் ஒருவன் உங்கள் பிள்ளைகளுக்கு ஒருவருக்கொருவர் குத்து விடுவது எப்படி என்பதைக் கற்பித்துக் கொண்டிருந்தால் அல்லது எல்லா விதமான உற்பத்திப் பொருட்களையும் அவர்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்துக்கொண்டிருந்தால் நீங்கள் உடனடியாக அவனை வீட்டை விட்டே துரத்தி விடுவீர்கள். ஆனால், நீங்கள் வீட்டுக்கு வரும் போது பிள்ளைகள் TV பார்த்துக் கொண்டிருந்தால் நீங்கள் அது பற்றி எவ்விதத்திலும் சிந்தித்துப் பார்த்ததில்லை. -Jerome Singer-

உங்கள் TVயில் விவேகத்தைக் கூட்டி விடக்கூடிய திருகியொன்று இருந்தால் நல்லதென நீங்கள் யோசிக்கவில்லையா? 'brightness' (அறிவுக்கூர்மை அல்லது பிரகாசம்) எனக்குறிக்கப்பட்ட ஒன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அது வேலை செய்வதில்லையே. -Gallagher-

உள மருத்துவத்துறை பற்றிய தகவல்களைப் பரப்புவதன் மூலம் தொலைக்காட்சி அத்துறைக்குப் பெரும் பணியாற்றி இருக்கிறது. அத்தோடு உள மருத்துவத்தின் தேவையை உணர்த்துவதற்கும் அது பங்களிப்புச் செய்துள்ளது. -Alfred Hitchcock-

T V. இந்த இரண்டு எழுத்துக்களாலும் பிள்ளைகள் இவ்வளவு இன்பம் பெறுகிறார்களாயின் அரிச்சுவடியின் 26 எழுத்துக்களாலும் அவர்கள் பெறக்கூடிய இன்பத்தைக் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் பிள்ளையின் கற்பனையைத் திறந்து விடுங்கள். ஒரு புத்தகத்தைத் திறவுங்கள்.

–யாரோ கூறியது–

TVயை நிறுத்துங்கள்

வாழ்க்கையைத் தொடங்குங்கள்

தொலைக்காட்சியும் கம்ப்யூட்டரும் குடும்ப வாழ்க்கையும்

உங்கள் பிள்ளைகள் வாழ்வதற்குப் பதிலாக TVபார்க்கிறார்களா?

"TV பார்ப்பதைக் குறைப்பதற்குரிய விதிகளை அமுல் படுத்தும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அவ்வாறு விதிகள் இல்லாத குடும்பத்துப் பிள்ளைகளை விட மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் சிறப்பாக இசைவாக்கமடையக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர்." (Winn, 2002)

அமெரிக்க Surgeon-General இன் எச்சரிக்கை:
தொலைக்காட்சி எழுத்தறிவின்மையை ஊக்குவிக்கின்றது.

சிறந்த விதியொன்று! பள்ளிக்கூட நாள் இரவுகளில் TV கிடையாது.

இந்த விடயத்தில் உறுதியாக இருப்பது அவசியம். TVபார்ப்பதை மட்டுப்படுத்திக் கொள்ளும் குடும்பங்களில் பிள்ளைகள் TV இல்லாமலே இருப்பதற்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வார்கள்.

எமது TV பண்பாடு

பெரும்பாலான அமெரிக்க வீடுகளில் பண்பாட்டு ரீதியான வெற்றிடமொன்று காணப்படுவதற்குக் காரணம் குடும்ப வாழ்க்கையை ஒழுங்கு படுத்தும் அடிப்படை அம்சமாக தொலைக்காட்சி மாறியிருப்பதே என kilpatrick, 1993 *கூறுகின்றார். தொலைக்காட்சி பண்பாட்டின் ஓர் அம்சமாக இருந்த நிலை மாறி அதுவே பண்பாடு என்ற நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கர்களின் பொழுது போக்குக்குரிய ஆதிக்கம் மிக்க ஊடகமாக மாத்திரம் அது விளங்கவில்லை; மாறாக, எமது முழுச் சமூகமும்*

பகிர்ந்து கொள்கின்ற தனித்ததும் மிக முக்கியமானதுமான விடயமாக அது இருக்கிறது. எமது வாழ்க்கை முறையையும் நாம் எவ்வாறு இயங்குகிறோம், சாப்பிடுகிறோம், விளையாடுகிறோம் என்பதையும் இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளே தீர்மானிக்கின்றன.

எமது முன்னுரிமைகளை தொலைக்காட்சியே வரையறைசெய்கிறது. எது முக்கியம், எது முக்கியமல்ல என்பதையும் அதுவே எமக்குச் சொல்லித் தருகிறது. உண்மை நிலை பற்றிய எமது கண்ணோட்டத்தை வடிவமைப்பதும் அதுவே. சில நிகழ்வுகளின் மீது கவனத்தை அதிகமாகச் செலுத்தி அவை முக்கியமானவை என எடுத்துக் காட்டுவதும் இன்னும் சில நிகழ்வுகளைப் புறக்கணிப்பதன் மூலம் அவை முக்கியமற்றவை என நம்பச் செய்வதும் இந்தத் தொலைக்காட்சிதான். உதாரணமாக, அது சமயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பெரும்பாலான அமெரிக்கக் குடும்பங்களின் வாழ்க்கையில் சமய நம்பிக்கை குறிப்பிடத்தக்க பங்கு வகித்து வருகின்ற போதிலும் TVக்கு அடிமையான குடும்பங்களில் அது அறவே காணப்படுவதில்லை. TVஇல் வரும் கதாபாத்திரமொன்று மிக அரிதாகவே கோயிலுக்கோ பள்ளி வாயலுக்கோ செல்கின்றது அல்லது சமய ஆலோசனையைப் பெற்றுக் கொள்கின்றது அல்லது நன்னெறியில் தன்னை வழி நடத்துமாறு பிரார்த்திக்கின்றது. மேலும், எல்லா விடயங்களுக்கும் அடிப்படையாகப் பாலின்பம் இருக்கின்றது என்ற மனப்பதிவை TV ஏற்படுத்துகிறது. ஒவ்வொருவரது மனதிலும் பாலின்பம் பற்றிய சிந்தனையே இருக்கிறது அல்லது இருக்க வேண்டும் என்ற வகையில் அது சிந்திக்கச் செய்கிறது. அதேவேளை, தொலைக்காட்சியில் இடம்பெறும் பாலின்பம் மிக அரிதாகவே திருமணத்தை அடிப்படையாக வைத்து நிகழ்கிறது; அது பெரும்பாலும் திருமணத்துக்குப் புறம்பாகவே இடம்பெறுகிறது. அமெரிக்கப் பள்ளிக் கூடங்கள் சில வேளைகளில் பெற்றாரின் விழுமியங்களுக்கு எதிரானவையாக இருக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளோ பெரும்பாலும் பாரம்பரிய விழுமியங்களுக்கு மாறானவையாக இருக்கின்றன.

தொலைக்காட்சியானது, ஹொலிவுட்டில் உள்ள யாரோ ஒருவர் உங்கள் வீட்டின் வரவேற்பறையினுள்ளும் உங்கள் பிள்ளைகளின் உள்ளங்களிலும் கொட்டிக் குவிக்க விரும்பும் அனைத்தையும் ஏந்தும் கிண்ணமாக உங்கள் வீட்டைத் திறந்து விடுகிறது. தங்கள் பிள்ளைகள் TVயினால் கெட்டுப்போக மாட்டார்கள் என யாரும் நினைத்தால் அது தவறானதே. தம்மிடம் உள்ளவற்றை விட இல்லாதவற்றைப் பற்றிச் சிந்திக்கவே TV யானது பிள்ளைகளுக்குப் போதிக்கிறது. அழகானவர்கள் மீதே TV கவனம் செலுத்துவதனால் பிள்ளைகள் தம்மைப் பற்றி அதிருப்தியுற வழியேற்படுகிறது. ஒழுக்க நெறி பற்றிய ஒரு குழப்பமான உணர்வையே அது பிள்ளைகளில் ஏற்படுத்துகிறது. இதன் மூலம் இறை விசுவாசத்தினடிப்படையில் உருவான விழுமியங்களை அது சீர்குலைக்கின்றது. TV நிகழ்ச்சிகளில் 'நல்லவர்களாக' சித்தரிக்கப்படுபவர்கள் மது அருந்துவதையும் புகைப்பதையும் பெண்களுடன் கட்டுப்பாடு மீறிப் பழகுவதையும் துப்பாக்கியால் சுடுவதையும் ஆட்களைக் கொல்வதையும் பிள்ளைகள் காண்கின்றனர். TV நிகழ்ச்சிகள், அரை நிர்வாணமாய்த் தோற்றமளிக்கும் நடிகைகளையும் கார்ட்டூன் கதாபாத்திரங்களையும் காட்டுவதன் மூலம் இள வயதிலேயே பிள்ளைகளில் பாலியல் பற்றிய சிந்தனைகளைத் தூண்டி விடுகின்றன.

TVயில் வரும் வன்செயலையும் ஆபாசத்தையும் பாலியல் விடயங்களையும் தேவையற்ற உணவுகளுக்காகவும் பயனற்ற விளையாட்டுப் பொருட்களுக்

காகவும் காட்டப்படும் கவர்ச்சியான விளம்பரங்களையும் தமது பிள்ளைகள் பார்ப்பதைப் பெற்றோர் பலர் விரும்பாமல் இருக்கக்கூடும். எனினும், "கல்வி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது பெறுமதி மிக்கது அல்லவா?" எனப் பல பெற்றார் கேட்கின்றனர். பெருந்தொகையான பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளை விருத்தி தொடர்பான ஆய்வாளர்களும் இவ்வினாவுக்கு 'இல்லை' என்று பதில் கூறுவதைக் கண்டு பெற்றோர் வியப்படையலாம். ஏனெனில், TVபார்த்தலானது:

- வாசிப்பதை விடக் குறைந்த உள முயற்சி தேவைப்படும் செயலொன்றாகும்.
- வாசிப்புத் திறன்களைக் கற்றுக் கொள்வதைத் தடை செய்கிறது.
- பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் பிள்ளைகளின் விடாமுயற்சியைக் குறைத்து விடுகின்றது.

TV இன் எந்த அனுகூலங்களையும் மேற்சொன்ன பிரதிகூலங்கள் மிகைத்து விடுகின்றன.

ஓர் அந்நியர்

"நான் பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பு எமது சிறிய நகருக்குப் புதிதாக வந்திருந்த ஓர் அந்நியரை என் தந்தை சந்தித்தார். மனங்கவரும் இயல்புகள் கொண்ட அப்புதியவர் மீது ஆரம்பத்திலிருந்தே என் தந்தை பேரார்வம் கொண்டு விட்டார். இறுதியில் எமது குடும்பத்தினரோடு வந்து வாழுமாறு அவரை வீட்டுக்கே அழைத்து வந்து விட்டார். அந்த அந்நியர் விரைவிலேயே அங்கீகாரம் பெற்றுக் கொண்டதோடு சில மாதங்களின் பின்னர் என்னையும் இந்த உலகுக்கு வரவேற்றார். நான் வளர்ந்து வரும் போது எனது குடும்பத்தில் அவரது அந்தஸ்து பற்றி எவ்விதக் கேள்வியையும் கேட்கவில்லை. இறைவனின் வார்த்தைகளை நேசிக்குமாறு தாயாரும் இறைவனுக்குக் கீழ்ப்படியுமாறு தந்தையாரும் எனக்குப் போதித்தனர். அந்த அந்நியர் எமக்குக் கதை சொல்பவராக இருந்தார். மனதை ஈர்க்கும் கதைகளையெல்லாம் புனைந்து கூற அவரால் முடிந்தது. துணிகர நிகழ்வுகள், மர்மங்கள், நகைச்சுவைகள் எனப் பல வகைகளையும் அள்ளித் தந்தார். மாலை நேரங்களில் எங்கள் முழுக் குடும்பத்தினரையும் பல மணித்தியாலங்களுக்குத் தம் முன்னே உட்காரச் செய்ய அவரால் முடிந்தது.

அவர் முழுக் குடும்பத்திற்கும் ஒரு நண்பர் போல் இருந்தார். அவர் என்னையும் தந்தையையும் எமது முதலாவது உதைபந்தாட்டப் போட்டிக்கு அழைத்துச் சென்றார். திரைப்படங்களைப் பார்த்து ரசிக்குமாறு அவர் எம்மை அடிக்கடி தூண்டி வந்தார். மேலும் சில சினிமா நடிக நடிகையருக்கு எம்மை அறிமுகப்படுத்தி வைக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இந்த அந்நியர் முடிவில்லாமல் பேசுபவராகக் காணப்பட்டார். தந்தை அது பற்றிக் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. எனினும், தாயாரோ தூரப் பிரதேசங்கள் பற்றிய தனது கதைகளை அவர் கூறிக்கொண்டிருக்கும் போது மெதுவாக எழும்பிச் சென்று விடுவார். அவர் தனது அறைக்குச் சென்று வேதநூலை வாசித்து விட்டுப் பிரார்த்தனைகள் புரிவார். இந்த அந்நியர் இந்த வீட்டை விட்டுப் போய்விட மாட்டாரா என அவ்வேளையில் எனது தாயார் பிரார்த்தனை செய்திருப்பாரோ என இப்போது நான் யோசிக்கிறேன்.

எனது தந்தை எமது வீட்டை ஒழுக்க நெறிகளால் நிரப்பினார். எனினும், அந்நெறிகளை மதிக்க வேண்டுமே என்ற உணர்வு இந்த அந்நியருக்கு இருக்கவேயில்லை. உதாரணமாக, எமது வீட்டில் ஆபாசமான பேச்சுக்களுக்கு இடமே இருக்கவில்லை. நாமோ எமது நண்பர்களோ வளர்ந்தவர்களோ அவ்வாறு பேச அனுமதிக்கப்படவில்லை. எனினும், எமது நெடுநாள் விருந்தினரோ மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அவை எம் செவிகளில் எரிவை ஏற்படுத்தியது. எனது தந்தையை மலைப்புக் கொள்ளவும் செய்தன. எனினும், ஒரு போதும் அவரை யாரும் எதிர்த்துப் பேசவில்லை. எனது தந்தையார் வீட்டுக்குள் மதுபானத்தைச் சற்றும் அனுமதிக்கவில்லை. எனினும், இந்த

அந்நியரோ எமக்குப் பலவகையன மதுபானங்களை அறிமுகஞ்செய்து வழங்க முன்வந்தார். அவர் சிகரெட்டுக்களை சுவை மிக்கனவாகத் தோன்றச் செய்தார். சுருட்டுக்களைக் கவர்ச்சியானவையாகவும் புகைக்கும் குழாய்களை கண்ணியத்துக்குரியன வாகவும் எடுத்துக் காட்டினார். அவர் பாலின்பம் பற்றித் தடையின்றிப் பேசினார். அவர் தெரிவித்த கருத்துக்கள் சில வேளைகளில் முரட்டுத்தனமானவையாகவும் சில வேளைகளில் மனதைத் தூண்டுவனவாகவும் இன்னுஞ்சில வேளைகளில் சங்கடத்துக்கு உள்ளாக்குவனவாகவும் இருந்தன. ஆண்-பெண் உறவு பற்றிய எனது ஆரம்ப காலக் கருத்துப் படிவங்களில் அவரே செல்வாக்குச் செலுத்தினார் என்பதை இப்போது நான் அறிய வருகிறேன். அந்த அந்நியர் எம்மீது மேலும் செல்வாக்குச் செலுத்தாமல் தடுக்கப்பட்டது இறைவன் செய்த அருளே என நான் நம்புகிறேன். எனது பெற்றாரின் விழுமியங்களை அவர் தொடர்ந்தும் எதிர்த்துக்கொண்டே இருந்தார். எனினும், யாரும் அவருக்கு மறுப்புரை கூறவுமில்லை; வெளியேறுமாறு வேண்டவுமில்லை. இந்த அந்நியர் எமது வீட்டுக்குள் வந்து 30 வருடங்களுக்கு மேலாகி விட்டது. இன்று நான் எனது பெற்றாரின் வீட்டுக்குச் சென்றாலும் தனது பேச்சைக் கேட்கவும் தான் வரையும் படங்களைப் பார்க்கவும் யாராவது வரும் வரை காத்துக் கொண்டு அவர் ஒரு மூலையில் அமர்ந்திருப்பதைக் காணலாம். அவருடைய பெயர் என்னவென்று நான் சொல்லவில்லையே. அவரை நாம் TV என்று தான் அழைக்கிறோம்."

-யாரோ எழுதியது-

TV பழக்கத்தை மாற்றுவது எப்படி?- சில குடும்பங்களின் அனுபவங்கள்

ஐந்து வயதும் இரண்டு வயதும் உடைய இரு பிள்ளைகளின் தாயான Suzanne, TVக்கு அடிமையாகியிருந்த தனது போக்கை முதலில் மாற்ற வேண்டுமென முடிவு செய்தாள். அவளது பிள்ளைகள் அடிக்கடி TV பார்க்கவில்லை. வாரத்துக்கு 2 அல்லது 3 நிகழ்ச்சிகளையே அவர்கள் பார்த்தனர். அவர்களிடம் தினமும் TV பார்க்கும் பழக்கம் உருவாகவில்லை. Marie Winns என்பவரின் The Plug-in Drug என்ற நூலையும் Dr. Jane Healy என்பவரின் 'Endangered Mind' என்ற நூலையும் வாசித்த பின்னர் எப்படியாவது தானும் குடும்பத்தினரும் TVபார்க்கும் அளவைக் குறைக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தாள். "முதலில் நாம் Cable TV சேவையை நிறுத்தினோம். எங்களிடம் அன்றெனா இருக்கவுமில்லை. எனவே, எங்கள் TV திரையில் படங்கள் தெளிவாக விழவில்லை. அதன் காரணமாக உள்ளத்தில் ஆசையைத் தூண்டக்கூடிய ஆற்றலை TV இழந்து விட்டது" என்கிறார் Suzanne.

உங்கள் பிள்ளைகள் TV பார்க்கும் அளவு, நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் என்பன தொடர்பாக எல்லைகளை நிர்ணயம் செய்யுங்கள்

தேசிய ரீதியான 'TV அணைப்பு வாரத்தில்' பங்கு பற்ற Pamela முடிவு செய்தாள். அப்போது 13, 11 மற்றும் 4 வயதினராக இருந்த அவளது பிள்ளைகள் ஆரம்பத்தில் முணுமுணுக்கத் தொடங்கினர். அந்த வாரத்தில் செய்வதற்கரிய வேறு வேலைகள் கிடைத்த பின்னர் அவர்கள்

முறைப்பாடு செய்வதைக் கைவிட்டனர். மூத்த பையன்கள் இருவரும் அதிகளவில் வாசித்ததோடு ஒன்றாக விளையாட்டிலும் ஈடுபட்டனர். தம் தங்கைக்கு உதைபந்து விளையாட்டைப் பழக்குவதிலும் ஈடுபட்டனர். பிள்ளைகள் குடும்பத் தொழிற்பாடுகள் சிலவற்றை ஏற்பாடு செய்ததோடு ஒருவருக்கு ஒருவர் இரக்கமாகவும் இருந்தனர். TV இல்லாத நிலை பெரிய வித்தியாசமொன்றை ஏற்படுத்தியது. குடும்பத்தினர் ஒன்றாக உறவாடப் போதிய நேரம் கிடைத்தது.

உங்கள் பிள்ளைகள் செய்யக்கூடாது என நீங்கள் நினைக்கும் செயல்கள் இடம்பெற்றுள்ள திரைப்படங்களை ஒருபோதும் அவர்களது முன்னிலையில் பார்க்காதீர்கள்

பெற்றார் பலர் நிரந்தரமாகவே TVஐ அணைத்துவிட்டுள்ளனர். அந்த முயற்சி பயனுள்ளது என்பதில் அவர்கள் உடன்படுகின்றனர். ஜோனின் குடும்பம் விடுமுறைக் காலத்தில் இந்த முடிவை எடுத்தது: "நாம் விடுமுறைக்காக வெளியே சென்ற போது அங்கு TV வசதி இருக்கவில்லை. எனவே, அந்த மாற்றத்தை ஏற்படுத்த ஏற்ற இயல்பான வாய்ப்பாக அது அமைந்தது. ஆரம்பத்தில் எமது மகள் அது பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்படி அவள் கேட்ட போதெல்லாம் நாம் அவளது கவனத்தை வேறு விடயங்களில் திருப்பி விட்டோம்."

பிள்ளைகள் எப்போதும் உல்லாசமாய்க் காலம் கழிக்க வழி செய்து கொடுக்க வேண்டுமெனப் பெற்றார் நினைக்கின்றனர். தமது பிள்ளைகளுக்கு உதவ வேண்டுமே என்ற நிர்ப்பந்த நிலையில் அவர்கள் இருக்கின்றனர். சரி, நீங்கள் செய்வதற்கு ஏதாவதொன்றை நான் தருகிறேன் என்று அவர்கள் கூறுவர். எனினும், சிறிது காலத்தின் பின்னர் பிள்ளைகள் தமக்குத் தேவையான தொழிற்பாடுகளைத் தாமே தேடிக் கொள்வதைக் கண்டு அவர்கள் ஆறுதலடைகின்றனர்.

அன்றாட வேலைகளில் பெற்றோருக்கு உதவி செய்வதன் மூலம் சிறுவர்கள் நல்ல பயனடைகின்றனர். சமையல் வேலையில் ஒத்தாசை புரியுமாறு பிள்ளைகளை அழையுங்கள். பெற்றார் தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகளாக இருக்க வேண்டுமல்லவா? தொலைக்காட்சியின் துணையின்றியே தமது பெற்றார் ஓய்வாக இருப்பதையோ சுறுசுறுப்பாய் வேலை செய்வதையோ பிள்ளைகள் கண்டால், அவர்களும் அவ்வாறே செய்யக் கற்றுக் கொள்வர்.

TV பற்றிய ஓர் எச்சரிக்கை

எமது சமூகத்தில் மிகப் பொதுவான சாதனமொன்றாக TV மாறியுள்ளது. எனவே, TV பார்ப்பதற்கான வாய்ப்பு தமக்குப் பலவந்தமாக மறுக்கப்படுவதாகப் பிள்ளைகள் உணர்ந்தால் தமது உரிமை பறிக்கப்படுவதாக அவர்கள் கருதக்கூடும். இதனால் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று TV பார்க்க முனையக்கூடும். அவ்வாறு செல்லும் இடம் பாதுகாப்பற்றதாகவோ அவர்களை எளிதில் தவறுகளில் மாட்டிக் கொள்ளச் செய்வதாகவோ இருக்கலாம். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பின்வரும் அணுகுமுறைகள் உதவலாம்:

- பிள்ளைகளை அவர்கள் விரும்பும் வேறு தொழிற்பாடுகளில் (விஞ்ஞான, கலாசார, ஆத்மீக அல்லது உடல் சார்ந்த தொழிற்பாடுகளில்) ஈடுபடச் செய்யுங்கள்.
- முடிந்த போதெல்லாம் பிள்ளைகள் தாமாக TV பார்க்க இடமளிக்காதீர்கள். பெற்றோரும் அவர்களுடன் கூட இருந்து குறிப்பிட்ட சில காட்சிகள், நிகழ்ச்சிகள் முதலியன பற்றித் தம் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். இது சில நன்னெறிகளையும் கோட்பாடுகளையும் நோக்கிப் பிள்ளைகளை வழிநடத்தச் செய்யும். அத்தோடு, தீங்கான மற்றும் வன்செயல் சார்ந்த காட்சிகள் தொடர்பாக ஓர் எதிர்ப்புணர்வையும் பிள்ளைகளில் விருத்தி செய்யும். எதிர்காலத்தில் பாவச் செயல்களைத் தடுக்கக்கூடிய விதத்தில் இறை விசுவாசம் என்னும் கவசத்தையும் அவர்களில் விருத்தி செய்யுங்கள்.

பெற்றார் தம் பிள்ளைகளுடன் எப்போதும் ஒன்றாக இருக்கக் கிடைப்பதில்லை. எனவே, பிள்ளைகளின் மனதில் உறுதியான இறை விசுவாசம் தேவைப்படுகிறது.

- 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்ட V-Chip என்னும் சாதனத்தைப் பயன்படுத்தித் தீங்கான TV நிகழ்ச்சிகளைத் தடுத்துக் கொள்ள முடியுமாக இருக்கலாம்.

சிறுவருக்கான தொலைக்காட்சி பற்றி நிபுணர்களும் ஆய்வுகளும் கூறுவது யாது?

இளஞ்சிறார்கள் அறவே TV பார்க்கக் கூடாது என Spock என்பவரும் சிறுவர் நோயியல் பற்றிய அமெரிக்க அகடமியைச் சேர்ந்த நிபுணர்களும் கூறுகின்றனர். ஏனெனில், மொழி விருத்தி தாமதமடைதல், கவன எல்லை குறுகுதல், அறிவு சார் விருத்தி தாமதமடைதல் என்பன குழந்தைப் பருவத்தில் TV பார்ப்பதுடன் தொடர்புடையனவாக இருக்கின்றன. TVயின் பயன் தொடர்பாக விஞ்ஞான ரீதியான சான்றுகள் இல்லை. ஆனால், கிடைக்கக்கூடிய சான்றுகளுள் சிறந்தவை அனைத்தும் தீங்கையே எடுத்துக் காட்டுகின்றன.

இந்த நடைமுறை பெரும்பாலான பெற்றோரினால் அமுல்படுத்த முடியாத அளவுக்குத் தீவிரமானது என்பதை Spock ஏற்றுக் கொள்கிறார்.

ஒரு பிள்ளை வாசிக்கவும் புத்தகங்களை ரசிக்கவும் பழகும் வரை TV பார்த்தல் தடை செய்யப்பட வேண்டுமென Rosemone யோசனை கூறுகிறார். அதன் பின்னரும் TV பார்க்கும் நேரம் வாரத்துக்கு ஐந்து மணித்தியாலங்களாக வரையறுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார்.

தினமும் மூன்று மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேல் பார்ப்பது பிள்ளையின் பள்ளிக்கூடச் செயற்பாடுகளைப் பாதிக்கும் எனப் பிரதான ஆய்வுகள் பல எடுத்துக் காட்டியுள்ளன. எனினும், நன்கு தெரிவு செய்யப்பட்ட கல்விசார் நிகழ்ச்சிகள் துணையாக அமையக்கூடும். கல்வி சார் நிகழ்ச்சிகள் அதிகரித்த ஆக்கத்திறனுடன் தொடர்பு பட்டுள்ளன.

புத்துணர்வூட்டுகின்ற, அறிவூட்டுகின்ற கதைகளையும் செய்யுள்களையும் உங்கள் பிள்ளையுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

TV பார்ப்பதற்குப் பதிலாக குடும்பத்தினர் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள்

பிள்ளைகளின் நேரத்தை நிரப்புவதற்கு வேறு வழிகள் இல்லாததனாலேயே பெற்றார் பலர் தங்கள் பிள்ளைகளை TV பார்க்க அனுமதிக்கின்றனர். பெற்றார் அதிகம் களைப்படைந்து விடுவதனால் தம் பிள்ளைகளின் இடையூறின்றிச் சிறிது ஓய்வெடுப்பதற்கு TV அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. பயன் தரும் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதே TVயின் பிடியிலிருந்து தப்புவதற்கு உதவக்கூடிய தீர்வாகும். TVபார்ப்பதனால் பிள்ளைகளுக்கும் பெற்றாருக்கும் ஏற்படக்கூடிய பல்வேறு தீங்குகள் பற்றி நாம் குறிப்பிட்டிருக்கிறோம். குடும்ப வாழ்க்கைக்கு TV செய்யும் மிகப் பெரிய தீங்கு அவ்வாழ்க்கையை அற்பமாக்கி விடுவதாகும். இவ்வாபத்தைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. குடும்பத்தவர்களிடையே உறவாடல்கள் நிகழ்வதில்லை. அவர்கள் ஒன்றாக இணைந்திருப்பதை TV தடுக்கின்றது. TV பார்ப்பதற்குப் பதிலாகச் செய்யக்கூடிய கருமங்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

TV பார்ப்பதற்குப் பதிலான சில மாற்று வழிகள்

பிள்ளையின் வயதுக்கு ஏற்றவாறு பொருத்தமான தொழிற்பாடுகள் தெரிவு செய்யப்படலாம். குடும்பத்தினர் தெரிவு செய்து கொள்ளக்கூடிய ஆயிரக் கணக்கான தொழிற்பாடுகளைப் பட்டியல் படுத்தித் தருகின்ற நூல்கள் பல இருக்கின்றன.

1. சுற்றாடலைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்தல்.
2. நூலகத்துக்குச் செல்லுதல், புத்தகமொன்றை இரவல் வாங்குதல், நூலகச் செயற்பாடுகளில் ஈடுபடல்.
3. வானொலி கேட்டல்.
4. விலங்குக் காட்சிச் சாலைக்கு அல்லது மியூஸியத்திற்குச் செல்லுதல்.
5. ஓவியமொன்று வரைதல்.
6. சனசமூக நிலையத்திற்கு அல்லது பூங்காவிற்குச் செல்லுதல்.
7. நீந்தச் செல்லுதல்.
8. தம்பிக்கு / தங்கைக்கு புத்தகமொன்றை உரத்து வாசித்துக் காட்டுதல்.
9. உல்லாசப் பயணமொன்றைத் திட்டமிடுதல்.
10. சைக்கிளில் பிரயாணமொன்றை மேற்கொள்ளல்.
11. பாடலொன்றை அல்லது செய்யுளொன்றை மனனஞ் செய்தல்.
12. பறவைகளை அவதானிக்கச் செல்லுதல்.
13. கயிறு பாய்தல்.
14. சமூக அமைப்பொன்றில் தொண்டராக வேலை செய்தல்.
15. நண்பருக்கு/ உறவினருக்கு/ மூத்த பெற்றாருக்கு கடிதம் எழுதுதல்.
16. பூந்தோட்டம்/ மரக்கறித் தோட்டம்/ மூலிகைத் தோட்டம் அமைத்தல்.
17. சஞ்சிகைகளையும் செய்தித் தாள்களையும் வாசித்தல்.
18. சதுரங்கம் (chess) விளையாடுதல்.
19. வீட்டில் மேலதிகமாக உள்ள பொருட்களை அகதிகளுக்கு அல்லது தரும நிறுவனங்களுக்கு அன்பளிப்புச் செய்தல்.
20. தினக்குறிப்பு (diary) எழுதத் தொடங்குதல்.
21. அன்மையிலுள்ள புத்தகக் கடையொன்றுக்கு விஜயம் செய்தல்.
22. உங்கள் குடும்ப வரலாற்றை ஆராய்தல்.
23. மரவேலையைக் கற்றுக் கொண்டு புத்தகத் தட்டொன்றைத் தயாரித்தல்.
24. அன்பளிப்பாக வழங்கக்கூடிய கைப்பணிப் பொருட்களைச் செய்தல்.
25. கதையொன்றை உருவாக்கி எழுதுதல்.
26. இயற்கையை ஆராய்வதற்கான உலாவொன்றை மேற்கொள்ளல். பல்வேறு வித்துக்களையும் இலைகளையும் சேகரித்தல்.
27. இரவு வானை அவதானித்தல். பல்வேறு உடுக்கூட்டங்களை இனங்காணுதல். சந்திரனை அவதானித்தல். வானியல் பற்றிய நூலொன்றை வாசித்தல்.
28. ஏதேனும் உணவுப் பண்டங்கள் தயாரித்து அயலவர்களுக்குப் பகிர்ந்தளித்தல்.
29. முதியவர் ஒருவருக்குத் தனது இளமைப் பருவம் பற்றிக் கூறச் சொல்லுதல். அதனை எழுதிக் கொள்ளுதல்.
30. பழப்பாகு (jam) தயாரித்தல்.
31. யோகர்ட் தயாரித்தல்.
32. உடற்பயிற்சி செய்தல்.
33. உதைபந்து விளையாடுதல்.
34. கரப்பந்து (volleyball) விளையாடுதல்.
35. தட்டச்சு பழகுதல்.
36. கம்பியூட்டர் பயிற்சி பெறுதல்.

37. வாகனம் ஓட்டப் பழகுதல்
38. மேசைப்பந்து (Table tennis) விளையாடுதல்.
39. மறைத்து வைக்கப்பட்ட பொருளொன்றைத் தேடிக் கண்டு பிடிக்கும் நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்தல்.
40. வீட்டு யன்னல்களைச் சுத்தம் செய்தல்.
41. நண்பர்களோடு / குடும்பத்தினரோடு சேர்ந்து பகலுணவு சமைத்தல்.
42. வாசித்த நூலொன்று பற்றிய விமர்சனக் குறிப்பொன்றை எழுதுதல்.
43. குடும்ப வரவு– செலவுத் திட்டத்தைப் பற்றிக் கலந்துரையாடல்.
44. நண்பர்களின் ஒன்றுகூடலொன்றை ஏற்பாடு செய்தல்.
45. உங்கள் அறையை மீளொழுங்கு செய்தல்.
46. பெருநாள் வாழ்த்து அட்டைகள் தயாரித்தல்.
47. உங்களுக்கு மிக விருப்பமான ஒரு நூலாசிரியருக்கு கடிதம் எழுதுதல்.
48. பட்டங்கள் தயாரித்துப் பறக்க விடுதல்.
49. தோட்ட வேலை செய்தல்.
50. சிறு நாடகமொன்றைத் தயாரித்தல்.
51. பழைய சஞ்சிகைகளிலிருந்து பெறப்பட்ட படங்களால் ஒட்டுச் சித்திரமொன்று தயாரித்தல்.
52. நோயாளர் விடுதியொன்றிக்கு விஜயம் செய்து நோயாளிகளுடன் உரையாடுதல்.
53. தினமும் காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் வளிமண்டல வெப்பநிலையை அட்டவணைப்படுத்தல்.
54. அன்றாட வானிலை மாற்றங்களைக் குறியீடுகளால் குறித்து அட்டவணைப்படுத்தல்.
55. புதிர்களை விடுவித்தல் / தீர்த்தல்.
56. குடும்பத்தினருடன் கடற்கரைக்கு அல்லது ஆற்றங்கரைக்குச் செல்லுதல்.
57. சிறிய படகொன்றைச் செய்து நீரில் மிதக்கவிடல்.
58. அயல் நண்பர்களுடன் விளையாட்டுப் போட்டியொன்றை ஒழுங்கு செய்தல். பரிசாகக் கிண்ணங்களையும் கேடயங்களையும் வழங்குதல்.
59. முற்றத்தில் தேனீர் விருந்தொன்றை ஏற்பாடு செய்தல்.
60. தேசப்படத்தையும் திசையறி கருவியையும் பயன்படுத்தும் முறைகளை அறிந்து கொள்ளுதல்.
61. அடிப்படையான தையல் வகைகளைக் கற்றுக் கொள்ளல்.
62. பல்வேறு வகையான முடிச்சுக்களைப் போடவும் அவிழ்க்கவும் பயிற்சி பெறுதல்.
63. பசுவில் பால் கறக்கப் பழகுதல்.
64. நகைச்சுவைத் துணுக்குகளைச் சேகரித்தல். அவற்றை எழுதி வைத்தல். நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.
65. கிரிகெட் விளையாடுதல்.
66. மீன் தொட்டியொன்றைத் தயாரித்து அலங்கார மீன்களை வளர்த்தல்.
67. அரபு மொழியைக் கற்றுக் கொள்ளல்.
68. வேற்று மொழிகளில் எளிமையான சொற்றொடர்களைக் கூறப் பயிலுதல் (நன்றி, காலை வந்தனம், நாட்களின் பெயர்கள் முதலியன).
69. பிற மொழிகளில் 1 முதல் 10 வரை எண்ணப் பழகுதல்.
70. அருகிலுள்ள பள்ளிவாயல் / கோயில் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்தல்.
71. அயலில் வாழ்பவர்களின் பெயர்களைத் தெரிவித்துக் கொள்ளல்.
72. வீட்டுத் தோட்டத்துக்கு வரும் பறவைகளின் பெயர்களை அறிந்து கொள்ளுதல்.
73. குறிப்பிட்ட காலத்தில் சந்தைக்கு வரும் மீன் வகைகளின் பெயர்களை அறிந்து கொள்ளுதல்.
74. பல்வேறு பறவைகளின் ஒலிகளை ஒலித்துப் பழகுதல்.
75. உலக நாடுகளின் தபால் தலைகளைச் சேகரித்தல்.
76. அயலிலுள்ள சிறுபிள்ளையொன்றைப் பராமரிக்கும் பொறுப்பைச் சில மணித்தியாலங்களுக்கு ஏற்றுக் கொள்ளல்.



மேலும் சில சீரியஸான தெரிவுகள்

பிள்ளைகள் செய்யக்கூடிய மேலும் சீரியஸான சில தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

சனசமூகத் தொழிற்பாடுகள்

- இன்னொரு மொழியைக் கற்றுக் கொள்ளுதல் (முஸ்லிம்கள் தமது தாய் மொழியோடு அறபு மொழியை அறிந்திருப்பது அவசியம்)
- இளைஞர் முகாம்களில் கலந்து கொள்ளல். இவற்றில் பிள்ளைகளுக்குப் பயன் தரக்கூடிய தொழிற்பாடுகள் போதியளவில் இடம்பெற வேண்டும். நீண்ட விடுமுறைக் காலங்களில் நடத்தப்படக்கூடிய இவற்றில் அறிவு மற்றும் ஆத்மீக சார் அம்சங்களோடு நாடகங்கள், விளையாட்டுக்கள், போட்டிகள், இலக்கியச் செயற்பாடுகள் என்பனவும் இடம்பெற வேண்டும்.
- சிறுவர் சிறுமியர்க்கான கழகங்களில் சேர்ந்து செயற்படுதல்.
- பாடல் குழுக்களில் சேர்தல், வரம்பு மீறாத, சிறுவர்களுக்கு ஏற்புடைய பாடல்களைத் தெரிவு செய்து அவற்றைப் பாடப் பழக்குதல். சுற்றுச் சமூக நிகழ்ச்சிகளின் போது அவர்களைப் பாட அனுமதித்தல்.
- குடும்பத்துப் பிள்ளைகளோடு / நெருங்கிய நண்பர்களோடு பெற்றாரின் கண்காணிப்பின் கீழ் ஓரிடத்தில் தங்கி இரவைக் கழித்தல். இது பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை வழங்குவதோடு அவர்களிடையே வலிமையான பிணைப்புக்களையும் ஏற்படுத்தும்.
- மழையில் விளையாடுதல் (போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்)

உமர் இப்ன் அல்-கத்தாப் (ரழி) கூறினார்கள்:

உங்கள் பிள்ளைகளுக்கு நீச்சல், வில்வித்தை, குதிரையில் ஏறிச் சவாரி செய்தல் முதலியவற்றைக் கற்பியுங்கள்.

- தற்பாதுகாப்புக் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- தஜ்வீத் (அல்குர்ஆனை ஒழுங்கான ஒலித் தொனிகளோடு ஓதும் முறையைக்) கற்றுக் கொள்ளல். கவிதை வகுப்புக்களில் கலந்து கொள்ளுங்கள்.
- தீ விபத்தொன்றின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- மேடைப் பேச்சுக் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- விவாதம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ஆங்கில, அறபு எழுத்தணிக் கலையைப் பயிலுங்கள்.
- மீன் பிடிக்கச் செல்லுங்கள்.
- முதலுதவியின் அடிப்படைகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- CPR என்னும் இதய-சுவாச மீளுயிர்ப்புச் செயன்முறையைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- மூச்சுத் திணறலின் போது பயன்படுத்தக்கூடிய Heimlich maneuver என்னும் செயன்முறையை அறிந்து கொள்ளுங்கள்.

இயற்கைத் தொழிற்பாடுகள்

- **உங்கள் போக்கிலே இயற்கையை ஆராய்தல்:** இயற்கையின் அற்புதங்களான பறவைகள், பூச்சிகள், பாம்புகள், மலர்கள், தாவரங்கள் போன்றவற்றைக் கண்டு மகிழ்வதற்கு ஏற்ற இயற்கைத் தடமொன்றைக் கண்டறிந்து கொள்ளுங்கள். அதனூடாக முழுக் குடும்பத்தினரும் அமைதியாக உலவச் சென்று இயற்கையை ஆராய முடியும். ஆற்றங்கரைகளில் பாறை வகைகளைத் தேடுவதில் பிள்ளைகள் பல மணித்தியாலங் களைக் கழிக்க முடியும்.

- **வானிலுள்ள நட்சத்திரங்களை உற்று நோக்குங்கள்:** நட்சத்திரங்களை உற்று நோக்குவது அற்புதமான தொழிற்பாடொன்றாகும். உடுத் தொகுதிகளின் அமைப்பைக் காட்டும்வரைபடமொன்றை உபயோகியுங்கள். இரவில் தேவையாயின் போர்வையொன் றையும் எடுத்துக்கொண்டு செயற்கை ஒளிகளற்ற இருளான இடமொன்றுக்குச் செல்லுங்கள். அது உங்கள் வீட்டுக் கொள்ளைப் புறமாகவோ ஒரு குன்றாகவோ இருக்கலாம். நன்கு இருட்டிய பின் ஒவ்வொரு உடுத் தொகுதியையும் இனங்கண்டு ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டுங்கள். வேட்டைக்காரன் (Orion), சிங்கம் (Leo), பெருநாய் (Canis Major), சிறுகலப்பை (Little Dipper) முதலியவற்றைச் சுட்டிக் காட்டுங்கள். முகில்களில் உருவங்களை இனங்காண்பது போல் பிள்ளைகள் தாமாகவே நட்சத்திரங்களிலும் பல வடிவங்களைக் கண்டு பிடிக்க முடியும்.

விளையாட்டுக்கள்

- வாகனங்களில் ஒன்றாகப் பிரயாணம் செய்யும் போது வாகனத்தில் செல்லும் பிள்ளைகளை அவர்கள் அமர்ந்திருக்கும் பக்கத்திற்கு ஏற்ப இடது-வலது என இரு பிரிவுகளாகப் பிரியுங்கள். ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களும் தமது பக்கத்தில் கண்ணுக்குத் தெரியும் ஆடு, மாடு, நாய், பூனை ஆகிய மிருகங்களை எண்ணச் சொல்லுங்கள். எனினும், தமது பக்கத்தில் சுடுகாடு அல்லது இடுகாடு (மையவாடி) ஒன்றினைக் கண்டால் அவர்களால் எண்ணப்பட்ட மிருகங்கள் அனைத்தும் 'இறந்து' விடும் எனக் கருதி, அவர்கள் பூச்சியத்திலிருந்து திருப்பி எண்ண ஆரம்பிக்க வேண்டும்.
- பிரயாணங்கள் செல்லும் போது அல்லது பாதையோரத்தில் நிற்கும் போது கடந்து செல்லும் வாகனங்களை அவற்றின் நிறத்திற்கு ஏற்ப வகைப்படுத்தி ஒவ்வொரு பிள்ளையும் ஒரு குறித்த நிற வாகனங்களை எண்ணச் செய்யலாம். குறித்த நேரத்திற்குள் யார் கூடுதலான வாகனங்களை எண்ணியிருக்கிறார் எனப் பார்க்கலாம். இங்கு, ஒரு

நிறத்தின் சாயல்கள் அனைத்தையும் அந்த நிறமாகவே கொள்ள வேண்டும். பல நிறங்களைக் கொண்ட வாகனங்கள் கணிப்பு உட்படக்கூடாது.

- செஸ் (சதுரங்கம்) விளையாடுங்கள். உங்கள் பிள்ளைகளைச் சிந்திக்கவும் ஆக்கத்திறன் பெறவும் பயிற்றுவிப்பதற்கு செஸ் விளையாட்டு மிகவும் உகந்தது. அது பொறுமையைப் போதிப்பதோடு மனக் கட்டுப்பாட்டையும் பழக்குகிறது. அத்தோடு உங்களை எதிர்த்து விளையாடுபவரின் ஆட்ட நுட்பங்களைப் பகுத்தாராய்வதன் மூலம் அவரது ஆளுமை பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. அவர் ஆக்கிரமிப்புக் குணம் உள்ளவரா? அல்லது தற்காப்பை நாடுபவரா? அவர் இடர்களை எதிர்கொள்ளத் துணிகிறாரா? போன்ற விடயங்களை இவ்வாறு அறிந்து கொள்ள முடியும்.



இயற்கை ஒலிகள்

பிள்ளைகளைத் தமது கண்களை மூடிக்கொண்டு முடிந்தளவு அமைதியாக அமர்ந்திருக்கச் செய்து, அவர்களுக்குக் கேட்கும் வித்தியாசமான ஒலிகள் அனைத்தையும் அவதானித்துக் கணிப்பிடச் செய்யுங்கள். பறவைகள், பூச்சிகள், தவளை வகைகள் முதலியவற்றின் ஒலிகளைக் கேட்கச் செய்யுங்கள்.

பிள்ளைகளுக்கு இயற்கையைப் பரிச்சயமுள்ளதாக ஆக்குங்கள்

பிள்ளைகள் தற்காலத்தில் காடுகள், குளங்கள், ஆறுகள், மலைகள் முதலியவற்றின் இயற்கை உலகிலிருந்து விலகிச் சென்று TV, கம்ப்யூட்டர், வீடியோ விளையாட்டுக்கள் முதலியவற்றின் உலகுக்குள் நுழைந்து கொண்டிருக்கின்றனர். அவர்களை மீண்டும் இயற்கைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து உணவுட்கொள்ளுதல்

கொலம்பியா பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட 'போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் மற்றும் போதைப் பொருள் துஷ்பிரயோகம்' பற்றிய ஆய்வில் பின்வரும் உண்மைகள் கண்டறியப்பட்டன:

- தமது குடும்பத்தினரோடு ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் பிள்ளைகள் தமது குடும்பத்தினருடன் சிறந்த முறையில் தொடர்பாடல் செய்கின்றனர். இவ்வாறு ஒன்றாக உண்ணும் போது உணவைப் பகிர்ந்து கொள்வதோடு மேலும் பல விடயங்கள் இடம்பெறுகின்றன. அங்கு இடம்பெறும் உரையாடல்கள் மூலம் பிள்ளைகளின் வாழ்க்கை, அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள், அவர்கள் ஈடுபட விரும்பும் தொழிற்பாடுகள் முதலியவற்றைப் பற்றிப் பெற்றார் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

- ஐக்கிய அமெரிக்காவில் பெற்றாருடன் அமர்ந்து உணவுட்கொள்ளாத பதின்ம வயதினரில் 72% க்கு மேற்பட்டோர் போதைப் பொருட்களையும் மது வையும் சிகரெட்டையும் உபயோகிக்கக்கூடிய ஆபத்து காணப்படுகிறது.
- குடும்பத்தினரோடு சேர்ந்து உணவுட்கொள்ளும் வாய்ப்பினை அதிகமாகக் கொண்ட பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் நல்ல தரங்களைப் பெறுகின்றனர். வீட்டில் மன இறுக்கம் குறைந்தவர்களாகவும் தம் பெற்றோரை நம்புபவர்களாகவும் உள்ளனர்.

மிதமிஞ்சிய இண்டர்நெட் உபயோகத்தின் தீங்குகள்

TVயின் பாதகமான விளைவுகள் பற்றிய எமது கலந்துரையாடலின் பெரும்பகுதி இண்டர்நெட், Video games முதலியவற்றுக்கும் பொருந்தும். அதிகளவில் கம்பியூட்டர் பயன்படுத்துவதைப் பெற்றார் ஊக்குவிக்கின்றனர். கம்பியூட்டர் எமது வாழ்க்கைக்கு நன்மையை மாத்திரமே பயக்கும் எனச் சில பெற்றார்கள் கருதிக்கொள்கின்றனர். நிச்சயமாக அப்படியில்லை. தம் பிள்ளைகள் கம்பியூட்டரை நிதானத்தோடும் பொறுப்போடும் பயன்படுத்துவார்கள் எனப் பெற்றார் எதிர்பார்க்கின்றனர். எனினும் உண்மை நிலை எவ்வாறெனில், சில பிள்ளைகள் பல மணித்தியாலங்களை அரட்டை அறைகளிலும் (chat room) பயனற்ற வெப் தளங்களை அணுகுவதிலும் ஆபாச வீடியோக்களைப் பார்ப்பதிலும் செலவிடுகின்றனர்.

தொலைக்காட்சியைப் போன்றே மிதமிஞ்சிய இண்டர்நெட் பாவனையும் பிள்ளைகளிடத்தில் அக்கறையின்மையை வளர்ப்பதோடு அத்தியாவசிய வேலைகளுக்கு இடையூறாகவும் அமைகின்றது. அத்தோடு மிகைக் கொழுப்பு நிலையை அதிகரிக்கச் செய்வதோடு பிள்ளைகளுக்கிடையே இயல்பான சமூகமயமாக்கலுக்கும் இடையூறாக அமைகின்றது. இது தவிர மோசமான கருத்துக்களும் பெருந்தொகை விளம்பரங்களும் பிள்ளைகளைச் சென்றடைகின்றன.

கம்பியூட்டர்கள் சக்திமிக்க சாதனங்கள். அவை தேவைப்படும் பல தகவல்களையும் மேலும் பல பயன்களையும் பெற்றுத் தரக்கூடியவை. எனினும், அவற்றின் பாவனையைப் பெற்றார் கண்காணிக்க வேண்டும்; தேவையாயின் கடவுச் சொற்களை (passwords) உபயோகிப்பதோடு சில வெப் தளங்களைத் தடுக்கவும் வேண்டும். தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதும் பெற்றார் அவ்வூடகம் பற்றி நல்ல பரிச்சயத்தைப் பெற்றுக்

கொள்வதும் அவசியம். பிள்ளைகள் இண்டர்நெட்டில் அளவு கடந்து நேரத்தைக் கழிப்பதற்கு இடமளிக்க வேண்டாம். கம்பியூட்டரையும் வீட்டில் எல்லோருக்கும் புலப்படக்கூடிய, அடைக்கப்படாத இடமொன்றில் வையுங்கள்.

கம்பியூட்டர் விளையாட்டுக்கள்

கம்பியூட்டர் விளையாட்டுக்களிலும் பிள்ளைகள் - குறிப்பாக ஆண் பிள்ளைகள் - அதிக நேரத்தைக் கடத்துகின்றனர். தீங்கற்றது, மாசற்றது போல் தோன்றும் விளையாட்டொன்று கூட உண்மையில் பிள்ளைக்குத் தீங்கிழைக்கலாம்.

கம்பியூட்டர் விளையாட்டுக்கள் வன்முறைகளைக் கொண்டவை; பிள்ளைகளைப் பழக்க ரீதியில் அடிமையாக்கக் கூடியவை. இப்பழக்கம் தீவிரமடைந்த நிலைமைகளில் உயிரிழப்புக்கும் வழிகோலலாம். (கம்பியூட்டர் விளையாட்டுக்கு அடிமையான காரணத்தால் தென் கொரியாவில் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன என BBC அறிவித்திருந்தது. 2005)

இவ்விளையாட்டுக்கள் யதார்த்தம் பற்றிய உணர்வற்ற நிலையை உருவாக்குகின்றன. இதனால் உண்மையான உலகம் வெறுமனே கேளிக்கைக்குரிய அரங்காகச் சுருக்கிக் காட்டப்படுகிறது. எதிர்த்துச் சண்டையிடுவதையும் கமாண்டோ பாணியிலான கொலைகளையும் ஊக்குவிக்கும் விளையாட்டுக்கள் காரணமாக மனித உயிரின் பெறுமதி தாழ்ந்து விடுகிறது. பிள்ளைகள் விளையாடுவன போன்ற கம்பியூட்டர் விளையாட்டுக்களைப் பயன்படுத்தியே இராணுவங்கள் தமது சிப்பாய்களை ஆட்கொலைக்குப் பயிற்றுவிக்கின்றன. மந்திர வித்தைகள், பேய் பிசாசுகள், பில்லி சூனியம் முதலியனவும் இவ்விளையாட்டுக்களில் கையாளப்படும் வேறு சில தொனிப்பொருட்களாகும். இன்று கம்பியூட்டர் விளையாட்டுக்களில் மாயாஜாலங்களும் வசியப்படுத்தும் முறைகளும் மலிந்து விட்டன.

துரதிர்ஷ்டவசமாகத் தொழிநுட்பம் முன்னேறும் போது இவ்விளையாட்டுக்கள் நிஜமானவை போல் தோற்றமளிக்கத் தொடங்குகின்றன.இது மிக ஆபத்தானது. ஏனெனில், நிஜ உலகு கற்பனைகளோடு கலைக்கப்பட்டுக் காண்பிக்கப்படுகிறது.உண்மை நிலையிலிருந்து தப்பிச் செல்வதற்குப் பிள்ளைகளைத் தூண்டக் கூடாது. நிஜ வாழ்க்கைக்கும் அதன் அத்தனை சவால்களுக்கும் முகங்கொடுக்க அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

கம்பியூட்டர் விளையாட்டுக்களில் பிள்ளைகள் கழிக்கும் நேரத்தின் அளவைப் பெற்றோர் மட்டுப்படுத்துவதோடு விளையாடுவதற்காக அவர்கள் தேர்ந்தெடுக்கும் விளையாட்டுக்களையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

வீடியோ விளையாட்டுக்களும் சிறுவர்களும்

வீடியோ விளையாட்டுக்கள் 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்டன. அது முதல் அவை பிள்ளைகளின் விருப்பத்திற்குரியனவாக மாறியுள்ளன. வன்முறையும் போதைப்பொருள் பாவனையும் பாலின்பமும் இன்று வீடியோ விளையாட்டுக்களின் பொது அம்சங்களாகக் காணப்படுகின்றன.

அமெரிக்காவின் பல நகரங்களில் பள்ளிக்கூட மாணவர்களும் ஆசிரியர்களும் சுட்டுக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். இக்கொலைகளுள் பெரும்பாலானவை வன்முறை சார்ந்த வீடியோ விளையாட்டுக்களை நிதமும் விளையாடுகின்ற மாணவர்களாலேயே நடத்தப்படுகின்றன.1999இல் இடம்பெற்ற Columbine உயர் பள்ளிப் படுகொலையை Eric Harris, Dylan Klebold ஆகிய பதின்மவயதினர் இருவரே செய்தனர். இவர்கள் 13 பேரைக் கொன்றதோடு மேலும் 23 பேரைக் காயப்படுத்திவிட்டுத் தாமும் தற்கொலை செய்து

கொண்டனர். இவர்களிருவரும் Doom என்ற வீடியோ விளையாட்டில் மூழ்கியிருந்தவர்கள். இரத்தம் சிந்தும் துப்பாக்கிச்சூட்டு விளையாட்டான இது இராணுவச் சிப்பாய்களைப் பயிற்றுவிப்பதற்காக உருவாக்கப்பட்டது. தனக்கென இதன் விசேட வடிவமொன்றை Harris தயாரித்திருந்தான். அதில் சுடுபவர்களாக இருவரும் மட்டுப்படுத்தப்படாத அளவுக்கு துப்பாக்கி வெடிபொருட்களும் இருந்தன. அத்தோடு தாக்கப்படுபவர்கள் எதிர்த்துத் தாக்க முடியாத நிலை காணப்பட்டது. இவை யாவும் அவன் பின்னர் செய்த படுகொலையை அப்படியே ஒத்திருந்தன. பிள்ளைகள் எந்தளவுக்கு வன்செயல்களில் பயிற்சி பெறுகிறார்களோ அந்தளவுக்கு அவர்கள் அதனைச் செயல் முறையிலும் காட்டுவார்கள்.

பிள்ளைகளின் ஆக்கிரமிப்பு நடத்தைக்கும், வீடியோ விளையாட்டுக்களில் அவர்கள் கண்டு களிக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் இடையில் தொடர்பு காணப்படுகிறது. எந்த அளவுக்கு ஒரு பிள்ளை வீடியோ விளையாட்டுக்களில் வன்செயல்களைக் கண்டு களிக்கின்றதோ அந்தளவுக்கு அது மற்றவர்களுக்கு வன்முறை சார்ந்த நடத்தையைக் காட்டும்.

பெண் பிள்ளைகளை விட ஆண்களே கூடுதலாக வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர்.

வீடியோ விளையாட்டுக்கள் சமூக விரோத, சமய விரோத நடத்தைகளை (கொலை, தீய வார்த்தைப் பிரயோகம், திருட்டு முதலியவற்றை) ஊக்குவிக்கின்றன.

வீடியோ விளையாட்டுக்களின் சமூக உள்ளடக்கமானது பெண்களை எதிர்மறையாகச் சித்தரிக்கின்றது. பொதுவாக மற்றவர்களால் ஆட்டிவைக்கப்படுகின்றவர்களாகவே பெண்கள் காட்டப்படுகின்றனர். பல வீடியோ விளையாட்டுக்களில் பெண்கள் கடத்திச் செல்லப்படுவதும் அவர்களைக் காப்பாற்ற எடுக்கப்படும் முயற்சிகளுமே கருவாகக் கொள்ளப்படுகின்றன. (Fank, 1993)

மிகையாக TV பார்ப்பதானது ஆக்கிரமிப்பு நடத்தை, கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவு, வரம்பு மீறிய பாலுறவுகள், மிகைக் கொழுப்பு, போதைப் பொருள் அல்லது மதுபானப் பாவனை என்பவற்றுடன் தொடர்புற்றிருக்கிறது. வன்முறை சார்ந்த விளையாட்டுக்கள் பகையுணர்வு, உடல் ரீதியான சண்டைகள் என்பவற்றுடன் தொடர்பாய் உள்ளன.

வன்முறை சார்ந்த விளையாட்டுக்கள்,

1.) உடல் ரீதியான கிளர்ச்சி அதிகரிப்பு

2.) ஆக்கிரமிப்பு ரீதியான சிந்தனைகளின் அதிகரிப்பு

3.) ஆக்கிரமிப்பு ரீதியான உணர்வுகளின் அதிகரிப்பு

4.) ஆக்கிரமிப்பு ரீதியான நடத்தைகளின் அதிகரிப்பு

5.) சமூக சாதகமான உதவி செய்யும் நடத்தைகள் குறைதல்

என்பவற்றுக்கு வழி வகுக்கும்.

தொலைக்காட்சியில் பால் வேறுபாடுகள் சித்தரிக்கப்படும் முறை

1. TV இல் ஆண்-பெண் தொடர்புகளில் பெரும்பாலும் ஆணே ஆதிக்கமுடையவனாகச் சித்தரிக்கப்படுகிறான்.

2. TV இல் வரும் ஆண் பாத்திரங்கள் வழக்கமாக பகுத்தறிவு, இலட்சிய வேட்கை, கெட்டித்தனம், போட்டி போடும் இயல்பு, வலிமை, உறுதி, சகிப்புத்தன்மை முதலிய இயல்புகளைக் கொண்டனவாகக் காட்டப்படுகின்றன.அதே வேளை பெண்கள் காதல் நோக்கு, அடி பணிந்து போதல், சாதுத் தன்மை போன்ற இயல்புகளைக் கொண்டவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். (வில்லிகளாக வரும் கதாபாத்திரங்கள் தவிர)

3. ஆண்களைப் பொறுத்தமட்டில் வலிமை, செயலாற்றல், திறன்கள் என்பனவே அழுத்திக் காட்டப்படுகின்றன. அதே வேளை பெண்களின் கவர்ச்சியும் விரும்பத்தகு இயல்புமே முனைப்பாக்கிச் சித்தரிக்கப்படுகின்றன.

4. பெரும்பாலான TV நிகழ்ச்சிகளில், ஆண்கள் திருமணத்திற்கும் குடும்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பாதிக்கு மேற்பட்ட ஆண் பாத்திரங்கள் திருமணம் செய்தவர்களா இல்லையா என்பது புரிவதில்லை. பெண்களைப் பொறுத்த மட்டில் 11% மாத்திரமே அப்படியானவர்களாக உள்ளனர்.

இரவு நேர TV நிகழ்ச்சிகளில் வரும் பெரும்பாலான பெண்கள் ஒல்லியான யுவதிகளாகவும் கவர்ச்சியும் அலங்காரங்களும் மிக்கவர்களாகவும் உள்ளனர். புத்தியை விட அழகுக்கே முன்னுரிமை கொடுக்கும் விதத்திலேயே பெண்கள் காட்டப்படுகின்றனர். இயலாமையும் தகுதியற்ற நடத்தையுமே அவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. தகுதி மிக்கவர்களாகவும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவர்களாகவும் ஆண்கள் சித்தரிக்கப்படும் நிலையே பெரும்பாலும் காட்டப்படுகின்றது. பெண்கள் பாலின்பத்துக்குரிய பண்டங்களாகவே பெரிதும் சித்தரிக்கப்படுகின்றனர். அதே போல் பிள்ளைகளைக் கையாள்வதில் திறமையற்றவர்களாகவே ஆண்கள் காட்டப்படுகின்றனர்.
(Seidman, 1999; Davis, 1990; Beal, 1994)

அமெரிக்க இசைத் தொலைக்காட்சியில் பெண்கள் ஆண்களின் கவனத்தை ஈர்க்க முயலுகின்ற பாலின்பத்துக்குரிய பொருட்களாகவே காட்டப்படுகின்றனர். Rap இசை வீடியோக்களில் பெண்கள் காம இச்சைக்குரிய பண்டங்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். பெண்கள் பெரும்பாலும் அரைகுறை ஆடைகளுடனேயே தோற்றமளிக்கின்றனர். அதேவேளை ஆண்கள்பெரும்பாலும் முழுமையான ஆடைகளை அணிந்திருப்பர்.

குடும்பத்திலிருந்து கவனம் திசை திருப்பப்படுதல்

வீடியோ விளையாட்டுக்களில் பலர் ஒத்துழைப்பதற்குப் பதிலாக தனியொருவரின் செயலுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவ்விளையாட்டுக்களில் இனந்தெரியாத ஒருவர் அதே போன்ற இன்னொரு எதிரியின் மீது ஆக்கிரமிப்புத் தாக்குதல் நடத்துவதே பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது. வீடியோ விளையாட்டுலகில், சமூக உணர்வுக்கோ குழுச் செயற்பாட்டுக்கோ இடமில்லை. பெரும்பாலான வீடியோ விளையாட்டுக்களில் ஒரே நேரத்தில் ஒருவருக்கு மேல் பங்கு பற்ற முடியாது. வீடியோ விளையாட்டுக்களின் செல்வாக்குப் பற்றி National Institute on Media and Family என்ற அமெரிக்க நிறுவனம் பல வருடங்களாக ஆய்வு நடத்தி வருகிறது. பெருந்தொகையான வீடியோ விளையாட்டுக்கள் காடையர் கோஷ்டிப் பண்பாட்டை உயர்த்திப் போற்றுகின்றன, கொடுமையைக் கொண்டாடுகின்றன, வன்முறைக்குத் துணை புரிகின்றன; பெண்கள் மீது கொடுமை புரிவதை ஆதரிக்கின்றன!

சாராம்சம்

- வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபாடு குறைந்த பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் திறமையாகச் செயற்படுவதோடு அரிதாகவே சண்டை பிடித்துக் கொள்கின்றனர்.

  கல்வி சார்ந்த விளையாட்டுக்களை ஊக்குவியுங்கள்; வன்முறை சார்ந்தவற்றைத் தவிர்க்கச் செய்யுங்கள்.
- நல்ல நடத்தைப் பண்புகளைக் கொண்ட பிள்ளைகளின் மீது வீடியோ விளையாட்டுக்கள் குறைந்தளவு செல்வாக்கையே கொண்டிருக்கும்.
- பிள்ளைகள் வீடியோ விளையாட்டுக்களில் கழிக்கும் நேரத்தின் அளவைப் பெற்றார் மட்டுப்படுத்துதல் வேண்டும்.

TV ஐ நிறுத்தி விடுங்கள்; வாழ்க்கையை உயிர்ப்பியுங்கள்

பிள்ளைகளின் சகவாசத்தில் இன்புறுங்கள்; அவர்களோடு சேர்ந்திருங்கள். பிள்ளை வளர்ப்பு என்பது சவால்கள் மிக்க, ஆனால் அதிக வெகுமதி தரக்கூடிய பணியொன்றாகும். அதற்கு விஞ்ஞானமும் கலைகளும் இறை விசுவாசமும் தேவைப்படுகின்றன. தினமும் TVயுடன் நேரம் கழிப்பதைக் கைவிட்டு உங்கள் பிள்ளைகளுடன் பழகி இன்பம் காணுங்கள்.

தொழிற்பாடுகள்

தொலைக்காட்சிக்கும் வீடியோ விளையாட்டுக்களுக்கும் பதிலான மாற்றுத் தொழிற்பாடுகள்

தொழிற்பாடு- 72: கல்வி சார்ந்த விஜயங்கள்

பல்வேறு வகையான நிறுவனங்கள் பற்றிய பரிச்சயத்தைப் பிள்ளைகளில் ஏற்படுத்துங்கள். "என்னிடம் கூறுங்கள்; அதை நான் மறந்து விடுவேன். எனக்குக் காட்டுங்கள்; அதை நான் நினைவில் வைத்திருப்பேன். என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; அதை நான் புரிந்து கொள்வேன்."

- உங்கள் பிள்ளைகளை நீதிமன்றம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் நீதிபதிகளையும் வழக்கறிஞர்களையும் அவதானிக்கட்டும்.
- உங்கள் பிள்ளைகளை பொலிஸ் நிலையத்துக்கும் சிறைச் சாலைக்கும் அழைத்துச் செல்லுங்கள்.
- உங்கள் பிள்ளைகளுடன் பிற மதத்தவர்களின் வழிபாட்டுத் தளங்களைச் சென்று பாருங்கள்.
- மியூஸியம்கள், பூங்காக்கள், நூலகங்கள், பண்ணைகள் முதலியவற்றுக்கு விஜயம் செய்யுங்கள்

தொழிற்பாடு- 73: உணவுப் பொருட்கள் பற்றிய விளக்கத்தைப் பிள்ளைகளுக்கு வழங்குங்கள்.

உணவுப் பொருட்களின் உள்ளடக்கங்கள் பற்றியும் அவை தயாரிக்கப்படும் முறைகள் பற்றியும் பிள்ளைகளிடம் வினவுங்கள். சூப் வகைகள், பிட்ஸா (Pizza), ரொட்டி, யோகர்ட், சீஸ், சுருட்டப்பம், ஊத்தப்பம், இட்லி, கறி வகைகள், பிரியாணி, கேக் வகைகள், சோளப்பொறி, மயோனேஸ் போன்றவை தயார் செய்யப்படும் முறைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

இவற்றுள் ஏதேனும் ஒரு வகையை ஒவ்வொரு பிள்ளையும் தெரிவு செய்து அதன் தயாரிப்பு முறையை அறிந்து கொண்ட பின் உங்கள் உதவியுடன் அதனைத் தயாரிக்கச் செய்யுங்கள்.

இதே போல் சோப், சம்பூ, கடதாசி, பேனா மை, துணி வகைகள், பிளாஸ்டிக், தார், சப்பாத்துக்கள், தரை விரிப்புக்கள் போன்றவற்றின் தயாரிப்பு முறைகள் பற்றியும் அவற்றின் மூலப்பொருட்கள் பற்றியும் கலந்துரையாடலாம்.

தொழிற்பாடு- 74: நீங்கள் எதற்கு அதிகமான மதிப்புக் கொடுப்பீர்கள்?

குடும்பத்தினரின் ஓர் ஒன்றுகூடலின் போது "உங்களுக்கு உயிர் வாழ்வதற்கு ஒரேயொரு நாள் மட்டும் தரப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்ற கேள்வியை ஒவ்வொருவரிடமும் கேளுங்கள். பின்னர் அவர்களது பதில்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

தொழிற்பாடு- 75: பிள்ளைகளுக்கான பெறுமதி மிக்க அறிவுரைகள்.

குடும்பத்தினரை ஒன்று கூடச் செய்து ஒரு பிள்ளையைக் கொண்டு பின்வரும் பந்திகளை வாசிக்கச் செய்யுங்கள். அவற்றின் கருத்தை விளக்கி அவை தொடர்பான உங்கள்

அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள். தமது அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு பிள்ளைகளுக்கு ஊக்கம் கொடுங்கள்:

என் அருமைப் பிள்ளையே! பின்வருவோர் பற்றி எச்சரிக்கையாய் இரு!

மதிப்புக்குரிய மனிதன் - அவன் உன்னால் அவமதிக்கப்பட்டால்!
அறிஞன் - அவன் உன்னால் சங்கடத்துக்கு உள்ளாக்கப்பட்டால்!
இழிகுணத்தவன் - நீ அவனுக்குக் கருணை காட்டினால்!
முட்டாள் - நீ அவனோடு விகடமாய்ப் பேசினால்!
ஒழுக்கங் கெட்டவன் - நீ அவனோடு சகவாசம் செய்தால்!

என் அன்புக்குரிய பிள்ளையே

நான் எல்லா வகை இன்பங்களையும் சுவைத்திருக்கிறேன். ஆனால், ஆரோக்கியம் போன்று இனிமையானது எதுவுமில்லை.
நான் எல்லாக் கசப்புணர்வுகளையும் அனுபவித்திருக்கிறேன். ஆனால், மற்றவர்களை நாடி ஏங்குவது போல் கசப்பானது எதுவுமில்லை.
நான் இரும்பையும் கற்பாறைகளையும் சுமந்திருக்கிறேன். ஆனால், கடன் சுமை போல் பாரமானது எதுவுமில்லை.
உனது வாழ்வுக் காலம் இரண்டு விதமான நாட்களைக் கொண்டது என்பதை அறிந்து கொள். அதில் ஒரு நாள் உனக்குச் சார்பானது; மற்றது உனக்கு எதிரானது.
உனக்குச் சார்பான நாளில் அகங்காரம் கொண்டவனாகவும் நன்றி கெட்டவனாகவும் இருந்திடாதே!
உனக்கு எதிரான நாளில் பொறுமையை இழந்து விடாதே!

(அலீ இப்ன் அபீ தாலிப்)

தொழிற்பாடு- *76:* *நீங்கள் உங்கள் குடும்பத்தை விவேகத்துடன் முகாமை செய்கிறீர்களா?*

சரி பார்த்துக் கொள்வதற்கான ஒரு பட்டியல்: ஒரு பெற்றார் என்ற வகையில் நான் எப்படி நடந்து கொள்கிறேன்?

பிள்ளை வளர்ப்பானது சவால் நிறைந்தது; அதே வேளை வெகுமதி தரக்கூடியது. போஷித்து வளர்த்தல், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுதல், வழி நடத்துதல், ஆலோசனைவழங்குதல் முதலிய செயற்பாடுகளில் பெற்றார் ஈடுபட வேண்டியுள்ளது. அத்தோடு, கற்பித்தல், பயிற்றுவித்தல், அறிவுரை கூறி ஊக்குவித்தல் போன்ற பணிகளையும் அவர்கள் செய்கின்றனர். தீங்குகள் ஏதும் விளையாமல் நோயாளியின் நிலைமையை எப்போதும் மேம்படுத்தவே முனைகின்ற ஒரு வைத்தியரைப் போன்று அவர்கள் இருக்கின்றனர். பெற்றார் தம் பிள்ளைகளுக்கு வலுவூட்டி, அவர்களை மேம்படுத்தி, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவர்களாகவே விளங்குகின்றனர்.

உங்களது பிள்ளை வளர்க்கும் நடைமுறை பற்றி ஒவ்வொரு விடயமாக மீளாய்வுசெய்யுங்கள். (எல்லா விடயங்களையும் கவனத்திற் கொள்வதற்குப் பல அமர்வுகள் தேவைப்படக்கூடும்)

பெற்றார் என்ற வகையில்:

- *நான் எனது வாழ்க்கைத் துணைவரை விவேகமான முறையில் தெரிவு செய்தேனா?*
- *சரியான வாழ்க்கைத் துணையொன்றைத் தேடிக் கொள்வதற்குச் செலவு செய்யும் நேரமும் முயற்சியும் பொருத்தமற்ற வாழ்க்கைத் துணையொன்றைச் சமாளிப்பதற்குத் செலவு செய்ய வேண்டிய நேரம், முயற்சி என்பவற்றுடன் ஒப்பிடும் போது மிக அற்பமானதே. உங்களோடு ஒத்துப்போகக்கூடிய வகையில் தேடித் தெரிவு செய்ய வேண்டும்.*
- *குடும்பத்தின் பணி என்ன என்பதை நான் எனது பிளைகளுக்குத் தெளிவாக விளக்கினேனா?*

- நான் சரியான பெறுமானங்களை அவர்களுக்குக் கற்பித்தேனா?
- ஓர் இல்லத்தை அற்புதமானதாக மாற்றுவது அதன் சுவர்களும் கூரையுமல்ல; அதன் பெறுமானங்களும் நன்னெறிகளுமே.
- எனது ஒவ்வொரு பிள்ளையிடமும் உள்ள சிறந்த ஆற்றல்களை நான் ஊக்குவித்தேனா? ஒவ்வொரு பிள்ளையிடமும் தனித்துவமான ஆர்வங்களும் பொழுது போக்குகளும் இருக்கும். நாம் அவர்களது ஆற்றல்களை வலுப்படுத்துவது அவசியம்.
- எனது குடும்பத்தின் வளங்களை (நேரம், பணம், பொருட்கள் முதலியவற்றை) நான் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டேனா?
- நான் எனது பிள்ளைகளின் உணர்வுகள், புலக்காட்சிகள் என்பன பற்றிக் கவனம் செலுத்தினேனா? அவர்களுடைய புலக்காட்சிகள் முக்கியமானவை. அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்வதும் அவசியமாகும்.
- நான் என்னுடைய பிள்ளைகளுக்கு சரியான பயிற்சி வழங்கினேனா?
- பிள்ளைகள் தாம் தவறு செய்யும் போதிலும்கூட புறக்கணிக்கப்படுவதை விரும்புவதில்லை. அவர்களோடு சேர்ந்து வேலை செய்ய வேண்டும். அத்தோடு, செயற்பாடுகளில் உள்ளடக்கப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதும் உரிய வேளையில் வெகுமதியளிக்கப்படுவதும் அவசியம்.
- நான் எனது பிள்ளைகளுக்கு சரியான வழிகாட்டல்களை வழங்கினேனா? பெற்றார் தம் பிள்ளைகளுக்கு ஒழுங்கு முறைகளையும் விதிமுறைகளையும் பின்னூட்டலையும் வழங்குதல் வேண்டும்.
- நான் சிறந்த முன்மாதிரியாக அமைந்துள்ளேனா? நீங்கள் ஒருவரோடொருவர் உரையாடும் முறை, ஒருவரைப் பற்றி ஒருவர் பேசும் விதம், நீங்கள் பகிர்ந்து கொள்ளும் நகைச்சுவைத் துணுக்குகள், நிறைவேற்றும் வாக்குறுதிகள், நேசிக்கும் நண்பர்கள்,பாராட்டுக்களைப் பகிர்ந்து கொள்ளும் முறை ஆகிய அனைத்தும் முக்கியமானவை.
- எனக்கு இந்தக் குடும்பத்தைத் தந்து அதன் பொறுப்புக்களை என்னிடம் ஒப்படைத்த எமது சிருஷ்டிகர்த்தாவான இரட்சகனுக்காகவே நான் எனது பிள்ளை வளர்ப்புக் கடமைகளை நிறைவேற்றினேனா?
- எமது குடும்பத்தின் இலக்கினை அடைவதற்கு நான் திட்டங்கள் அமைத்தேனா? உங்களது குடும்பம் பற்றிய திட்டம் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

  - நிறைவேற்றப்பட வேண்டியவை யாவை?
  - அவை ஏன் அவசியம்? உங்களது முழுமையான பணிக்கு அவை எந்த வகையில் பங்களிப்புச் செய்கின்றன?
  - அவை எப்போது நிறைவேற்றப்பட வேண்டும்?
  - இவ்விலக்கைப் பொறுத்த வரையில் நாம் இப்போது எந்த நிலையில் இருக்கிறோம்?
  - இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுவோர் யார்?
  - அதனை எவ்வாறு நிறைவேற்றலாம்? என்னென்ன தொழிற்பாடுகள் இதில் அடங்கும்? என்ன வகையான வளங்கள் தேவைப்படும்?

நீங்கள் உங்களது வாழ்க்கைத் துணைவரிலும் பிள்ளைகளிலும் தங்கியிருப்பது போன்றே அவர்களும் உங்களில் தங்கியிருக்கின்றனர். அவர்களைக் கைவிட்டு விடாதீர்கள்.

முடிவுரை

முடிவுரை

நன்னெறியும் செயற்திறனும் கொண்ட பிரஜைகளை உருவாக்கும் ஆற்றல் குடும்பத்துக்கு உண்டு என நாம் நம்புகிறோம். குடும்பத்தின் நோக்கமும் அதுவே. மகிழ்ச்சிகரமானதும் உறுதுணை மிக்கதுமான ஓர் இல்லத்தில்தான் இப்பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். பிள்ளைக்கு முதலாவது ஆசிரியர்களும் சிறந்த ஆசிரியர்களும் பெற்றோர்களே. பெற்றோர்கள் சிறந்த முன்மாதிரிகளாக, மேய்ப்பாளர்களாக, மத போதகர்களாக, கல்வி போதிப்பவர்களாக, பயிற்றுவிப்பவர்களாக, ஒழுக்கக் கட்டுப்பாடு பேணுபவர்களாக, வழிகாட்டி ஊக்குவிப்பவர்களாகப் பணியாற்ற வேண்டியுள்ளது.

இன்று மேற்கத்திய உலகிலோ முஸ்லிம் உலகிலோ திருப்திகரமான பிள்ளை வளர்ப்பு முறையொன்றுக்குரிய முன்மாதிரி காணப்படவில்லை. நாம் ஒரு சாராரிடமிருந்து மறு சாரார் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. சுய திருப்தியை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைப் பாணியொன்றை மேற்குலகு கைக்கொண்டுள்ளது. அங்கு ஒழுக்க சீலமும் பெறுமானங்களும் நலிவடைந்துள்ளன. இவ்வாறான, பெறுமானங்களைக் கருத்திற் கொள்ளாத வாழ்க்கை முறையானது போதைப் பொருட் துஷ்பிரயோகம், மதுப் பழக்கம், வரம்பு கடந்த பாலுறவுகள், நலிவடைந்து வரும் குடும்ப அமைப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

மறுபக்கமாக, முஸ்லிம் உலகிலே அடக்கு முறையும் பயமுறுத்திப் பணிய வைப்பதும் பீதியும் ஊழல்களும் மிரட்டல்களும் மலிந்து காணப்படுகின்றன. முஸ்லிம்கள் பலரிடம் ஒருவகை அடிமை மனப்பாங்கு காணப்படுகிறது. இது துணிச்சலையும் ஆக்கத்திறனையும் சுதந்திரமான சிந்தனையையும் நசுக்கி விடுகிறது. பகுத்தறிவுக்கு முரணான, மூட நம்பிக்கைகள் கொண்ட, தங்கி வாழப் பழகிய சிறுவர் பரம்பரையொன்றை முஸ்லிம் உலகு உருவாக்கியுள்ளது. இச்சிறுவர்கள் பொது நலம் பற்றிய எவ்விதக் கரிசனையுமில்லாமல் வளர்கின்றனர்.

முஸ்லிம் அல்லாதவர்கள் தம் வாழ்க்கையில் இறைவனுக்குரிய இடத்தை மீண்டும் வழங்க வேண்டியுள்ளது. விஞ்ஞானத்திலும் தொழிநுட்பத்திலும் அவர்களது மகத்தான சாதனைகளை *அல்லாஹு அக்பர்* (இறைவன் மிகப் பெரியவன்), *அல்லாஹு அஃலம்* (இறைவனே நன்கறிந்தவன்) என்பவற்றை அங்கீகரிக்கும் சமயக் கோட்பாட்டினால் குறை நிரப்பிக்கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் இறைவனைச் சரியான முறையில் புரிந்து கொண்டு சகிப்புத் தன்மையையும் கலந்தாலோசனையையும் நடைமுறைப்படுத்துகின்ற அமைதியான சுயாதீன சமூகங்களை ஊக்குவித்து வளர்க்க வேண்டும்.

நுணுகி நோக்கும் போது இவை அனைத்தையும் தோற்றுவிக்கக்கூடிய வித்தாகப் பிள்ளை வளர்ப்பு விளங்குவதைக் காணலாம். பிள்ளை வளர்ப்பானது வருடத்தில் 365 நாட்களும் தினம் 24 மணித்தியாலமும் நிறைவேற்றப்பட வேண்டிய பணியொன்றாகும். எண்ணற்ற இடையூறுகளுக்கும் பலத்த மன இறுக்கத்திற்கும் மத்தியில் ஆற்றப்படும் இப்பணியில் விடுமுறை கிடையாது. அத்தோடு அதனை வேறு எவருக்கும் ஒப்படைக்கவும் முடியாது. இதனை நிறைவேற்றுவதற்கு அறிவும் பகுத்தறிவும் கொண்ட ஒரு தாயும் தந்தையும் அணிசேர வேண்டும். இப்பணியானது மனவெழுச்சிகளையும் உணர்வுகளையும் கொண்டு முழுமையாக்கப்பட வேண்டும். உளவியலும் சமூகவியலும் மருத்துவ விஞ்ஞானங்களும் தொடர்பாடலும் இறை விசுவாசமும் பிள்ளை வளர்ப்புக்கு அத்தியாவசியமான அம்சங்களாக விளங்குகின்றன. எமது பிள்ளைகளுடனான போராட்டத்தில் நாம் வெற்றி பெற முடியாது. எனினும், அன்பு, பொறுமை, இரு வழித் தொடர்பாடல் என்பவற்றினூடாக நாம் அவர்களது உள்ளங்களை வென்றெடுக்க வேண்டும். 'தயவு செய்து நான் முக்கியமானவன் என்ற உணர்வை என்னில் ஏற்படுத்துங்கள்' என ஒவ்வொரு பிள்ளையும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மறவாதீர்கள்.

தமது பிள்ளைகளைப் பற்றித் தமக்கு நன்கு தெரியும் என்றும் அதே போன்று தம்மைப் பற்றியும் பிள்ளைகளுக்கு நன்கு தெரியும் என்றும் பெற்றோர் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையில் இந்நிலை மிக அரிதாகவே காணப்படுகிறது. பெற்றார் செய்யும் உதவியை தலையீடாகவும், வழங்கும் அறிவுரையை ஆதிக்கம் செலுத்துவதாகவும், காட்டும் பாசத்தை தம்மைச் சிறு குழந்தைகளென நினைப்பதாகவுமே பிள்ளைகள் கருதிக் கொள்கின்றனர். தமது பெற்றாருக்குத் தம்மீது உண்மையான அன்பில்லை என்ற தவறான எண்ணமும் பிள்ளைகள் பலரிடம் காணப்படுகிறது.

உங்கள் பிள்ளையின் ஆளுமையில் காணப்படும் எதிர்மறையான அம்சங்களைக் குறையச் செய்து சாதகமான பண்புக்கூறுகளை மேம்படுத்த வேண்டும். தமது பிள்ளை வளர்ப்புப் பாணி எந்த வகையானது என்பதையும் பெற்றோர் இனங்கண்டு கொள்வது அவசியம். "நாம் சரியானதைச் செய்கிறோமா?" எனப் பெற்றோர் தம்மிடமே கேட்டுக்கொள்ள வேண்டும். இதற்கான விடையைப் பல்வேறு தரப்புகளிலிருந்தும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

பிள்ளையினது உடல் ரீதியான மற்றும் மனவெழுச்சி ரீதியான விருத்திக் கட்டங்கள் பற்றிப் பெற்றார் அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் சரியான காலத்தில் தன்னால் சாத்தியமான உச்ச ஆற்றல்களைப் பெற்றுக்கொள்ள வழி செய்வது அவசியம். உதாரணமாக, பிள்ளைகள் 10 வயதை அடைய முன்னர் அவர்களால் நன்கு மனனம் செய்ய முடியும். அத்தோடு, மிக இலகுவாக மொழிகளையும் இசையையும் கற்றுக் கொள்ளவும் முடியும்.

பிள்ளைகளின் மீது ஒத்த வயதினரின் செல்வாக்குப் பாரியதாக இருக்கும். பெற்றார் தமது பிள்ளைகளின் நண்பர்களுக்கு வரவேற்புக்குரிய சூழலொன்றைத் தமது வீடுகளில் வழங்குதல் அவசியம். நல்ல வகையான நண்பர்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் பெற்றார் தம் பிள்ளைகளின் நண்பர்களுடனும் அந்த நண்பர்களின் பெற்றோர்களுடனும் நட்புக் கொள்வது இன்றியமையாதது.

தமது பிளைகளை வளர்ப்பதற்குத் தேவையான கல்வியையும் திறன்களையும் கருவிகளையும் பெற்றார் பெற்றிருப்பது அவசியம்.

பிள்ளைகளின் நடத்தைப் பண்புகளைக் கட்டியெழுப்புவதற்குக் கால எல்லையொன்று உண்டு. தாய்ப்பாலூட்டல் பல நோய்களைத் தடுப்பதோடு குழந்தைக்கு உளவியல் ரீதியாகவும் மனவெழுச்சி ரீதியாகவும் 'மூலதனமொன்றை' வழங்குகிறது. அன்பு, துணிச்சல், ஆக்கத்திறன், நேர்மை, சுயாதீனம், தன்னம்பிக்கை, தாராளத்தன்மை, நம்பத்தகவு ஆகியவற்றைப் பிள்ளைகளுக்குப் போதியுங்கள்.

பெற்றார் தமது ஒவ்வொரு பிள்ளைக்கும் நேர முகாமை, நிதி முகாமை, கருத்து முரண்படுவதற்குரிய ஒழுங்கு முறைகள், தீர்மானமெடுத்தல், பிரார்த்தனை செய்யும் கலை,

பிரச்சினை தீர்த்தல், சிறந்த ஒழுக்க முறைகள் (பணிவு, மரியாதை, பொறுமை, தாழ்மை முதலியன), செவி மடுக்கும் கலை, தன்னடக்கம் முதலியவற்றையும் கற்றுக் கொடுப்பது அவசியம்.

தமது பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்க முடியாதுள்ள பெற்றோரின் பிள்ளைகள் அநாதைகளைப் போன்றவர்களே. பெற்றோர் பலர் தமது பிள்ளைகளுடன் போதியளவு நேரத்தைக் கழிப்பதில்லை. அதனை ஈடு செய்வதற்காக அவர்கள் வேறு வழிகளைக் கையாள்கின்றனர் (உதாரணம், தொலைக்காட்சி, பிறரைக் கொண்டு பிள்ளை பராமரித்தல், அன்பளிப்புக்கள் முதலியன). அதிகளவில் TV பார்ப்பது தீங்கானது. தமது குடும்பத்தாருடன் போதியளவில் தரமான நேரத்தைக் கழிப்பது இதற்கொரு தீர்வாக அமையலாம். பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் அவர்களுக்கு வழிகாட்டி ஊக்குவிப்பதற்கும் முன்மாதிரிகளாகத் திகழ்வதற்கும் மிக ஏற்றவர்கள் விரிந்த குடும்பத்தினரே (மூத்த பெற்றோர், பெற்றோரின் சகோதர சகோதரிகள், அவர்களது பிள்ளைகள் முதலியோர்)

அன்பு, துணிச்சல், நேர்மை, ஆக்கத்திறன், பொறுப்புணர்வு, சுயாதீனம் ஆகிய பண்புக் கூறுகளைக் கட்டியெழுப்புங்கள். இவை யாவும் மகிழ்ச்சிகரமான வீட்டுச் சூழலில் நிறைவேற்றப்பட வேண்டும். இச்சூழலே நன்னெறி கொண்ட மனிதர்களை உருவாக்குகின்ற அடைகாக்கும் கூடாகச் செயற்படுகிறது. மகிழ்ச்சிகரமான இல்லமொன்று பெற்றாருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இடம்பெறும் தொடர்ச்சியான இருவழித் தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டது. பிள்ளைகள் நல்லவற்றைச் செய்யும் போது அவர்களைப் பாராட்டுவதற்கு நேர்மையான புகழ்ச்சி உதவும். குடும்பத்தினரின் மாதாந்த ஒன்றுகூடல்களை ஏற்பாடு செய்வது குடும்ப ஒற்றுமையைப் பேணுவதற்கு வழி வகுக்கின்ற சிறந்த நடைமுறையாகும். தொடுதல், முத்தமிடுதல், அரவணைத்தல், புன்னகைத்தல் முதலியன பெற்றாருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் பாசப்பிணைப்பை உருவாக்குகின்றன. தமது பிள்ளைகளுக்குச் செவிமடுக்கும் கலையில் பெற்றார் தேர்ச்சி பெறுவதும் அவசியம்.

பிள்ளைகள் நன்றாக அவதானிக்கக்கூடியவர்கள். எனினும், அவர்கள் தாம் அவதானிப்பவற்றைத் தவறாக வியாக்கியானம் செய்யக்கூடும். தமது தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் எப்படி நடத்துகின்றனர் என்பதையும் அவர்கள் தமது பெற்றோர்கள், உறவினர்கள், உடன் பிறந்தவர்கள், விருந்தினர்கள், செல்வந்தர்கள், வறியவர்கள், வேலையாட்கள், அயலவர்கள் ஆகியோருடன் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் பிள்ளைகள் நன்கு அவதானிக்கின்றனர். தமது பெற்றோர் செல்லப் பிராணிகளோடும் ஏனைய விலங்குகள், தாவரங்கள், மலர்கள், சுற்றாடல் முதலியவை தொடர்பாகவும் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் பிள்ளைகள் அவதானிக்கின்றனர். அவர்கள் தம் பெற்றோரின் வார்த்தைகளை அவர்களது செயல்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதோடு உண்மையையும் கபடத் தன்மையையும் இனங்கண்டு கொள்வர். "நான் செய்வது போல் செய்ய வேண்டியதில்லை; நான் சொல்வது போல் செய்" எனக் கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. பெற்றார் தாம் போதிப்பதை செயல்முறையில் காட்ட வேண்டும். எனினும், பெற்றார் தவறு செய்ய நேரிடின் அவர்கள் தமது குறைபாட்டைத் தம் பிள்ளைகளிடம் ஒப்புக் கொள்வதே சிறந்தது.

பிள்ளைகள் பின்பற்றக்கூடிய முன்மாதிரிகள் அவர்களுக்குத் தேவை. பெற்றார் முன்மாதிரிகளாக அமையாவிடின், பிள்ளைகள் தாமே முன்மாதிரிகளைத் தேடிக் கொள்வர். முன்மாதிரிகளுள் மிகச் சிறந்தவர்கள் இறைவனின் தீர்க்கதரிசிகளே. அவர்களுக்கடுத்ததாக, உலகளாவிய ரீதியில் நல்லொழுக்கத்தையும் குடும்ப

விழுமியங்களையும் போற்றி ஊக்குவித்த தலைவர்கள் முன்மாதிரிகளாகக் கொள்ளப் படலாம்.

பிள்ளை வளர்ப்பில் தாய்மாரே மிக முக்கியமான பங்கை வகிக்கின்றனர். இறைத் தூதர்களான இஸ்மாயீல் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மத் (ஸல்) ஆகியோர் தம் தாய் மாரினாலேயே வளர்க்கப்பட்டது தற்செயலான நிகழ்வுகளல்ல. எமது வாழ்க்கையில் பெண்களைக் கண்ணியப்படுத்தும் முகமாக ஆண்கள் அவர்கள் மீதான தமது மரியாதையை வார்த்தைகளாலும் செயல்களாலும் எடுத்துக் காட்டுதல் வேண்டும்.

ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துமளவுக்கு 'நான் முக்கியத்துவமுடையவனல்ல' என ஒரு பெற்றார் குறிப்பிட்டால், இது உண்மையல்ல. பிள்ளை வளர்ப்பானது தனித்து நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு முக்கியமானது. இதற்காக ஆதரவுக் குழுக்களை உருவாக்கிக் கொள்வது பயன் மிக்கது. உங்கள் மூதாதையரை நீங்கள் மாற்றியமைக்க முடியாது. எனினும், உங்கள் வழித் தோன்றல்களை நிச்சயமாக மேம்படுத்தலாம். பெற்றார் என்ற வகையில் நீங்கள் இவ்வுலகில் பெரிய வித்தியாசமொன்றை ஏற்படுத்தலாம். எனவே, நம்பிக்கையிழக்காதீர்கள். இன்னும் காலம் கடந்து விடவில்லை.

பிள்ளைகளின் ஆளுமைகள் இயற்கையினாலும் வளர்ப்பினாலும், எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களைப் படைத்த இரட்சகனின் நாட்டத்திற்கு ஏற்பவும் நிர்ணயிக்கப் படுகின்றன. பிள்ளை வளர்ப்பு என்பது, ஒரு விஞ்ஞானம் மட்டுமல்ல; ஒரு கலையும் கூட!

இது, ஒரு தொடரில் முதலாவது நூலாகும். இறைவன் நாடினால் அடுத்த நூல்களும் தொடர்ந்து வெளிவரும். அறிஞர்களும் வல்லுனர்களும் தமது பெறுமதியான பங்களிப்பினைச் செய்வதன் மூலம் பிள்ளை வளர்ப்பு பற்றிய துறையை வளப்படுத்த வேண்டுமென நாம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

உங்கள் வாழ்க்கையின் இறுதியில் பின்வரும் வினாவை உங்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள். "இந்த உலகை மேம்படுத்த முயற்சிக்கும் நல்லதொரு பெற்றாராக நான் இருந்தேனா?"

உங்களால் முடிந்தளவு சிறப்பாகச் செய்யுங்கள். இறைவன் மீது விசுவாசம் வைத்து இளைப்பாறுங்கள்!

இறுதியில் முக்கியத்துவம் பெறப்போவது, நீங்கள் என்ன வகையான கார்களை, வீடுகளை அல்லது வங்கிக் கணக்குகளை வைத்திருந்தீர்கள் என்பதல்ல; மாறாக, நீங்கள் எந்தளவுக்குச் சிறந்த பெற்றாராக இருந்தீர்கள் என்பதே!

காலம் கடந்திடும் வரையில் காத்திருக்காதீர்கள்.

பின்னிணைப்பு

பிள்ளை வளர்ப்பு பற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட அல்குர்ஆன் வாக்கியங்களும் முஹம்மத் (ஸல்) அவர்களது ஹதீஸ்களும்

தேர்ந்தெடுக்கப்பட்ட அல்குர்ஆன் வாக்கியங்கள் சில

மேலும், அவர்கள் எத்தகையோரென்றால் "எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியர்களிடமிருந்தும், எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியைத் தந்தருள்வாயாக! அன்றியும், பயபக்தியுடையவர்களுக்கு எங்களை (நல்வழியில் நின்று அதன்பால் அழைக்கும்) வழிகாட்டியாகவும் நீ ஆக்குவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறுவார்கள். (அல் குர்ஆன் 25: 74)

இன்னும், விசுவாசங் கொண்டோர்களே அத்தகையோர், (அவர்களுடைய சந்ததிகளும் விசுவாசத்தின் மூலம் அவர்களைப் பின்பற்றினார்கள்; (அத்தகைய அந்தச் சந்ததியினரின் படித்தரங்கள் குறைவாக இருப்பினும் அவர்களின் பெற்றோர்கள் இருக்கும் உயர் பதவிக்கு) அவர்களுடன் (சுவனபதியில்) அவர்களின் சந்ததியினரைச் சேர்த்து விடுவோம்; (இதனால்) அவர்களுடைய (பெற்றோர்களின் நன்மையான) செயல்களில் எதனையும் அவர்களுக்கு நாம் குறைட்து விட மாட்டோம். ஒவ்வொரு மனிதனும் தான் சம்பாதித்ததைக் கொண்டு பிணையாக்கப்பட்டிருக்கின்றனர்.
(அல் குர்ஆன் 52: 21)

உங்களுடைய செல்வங்களோ உங்களுடைய மக்களோ உங்களை நம்மிடத்தில் சமீபமாக நெருக்கி வைப்பவர்கள் அல்லர்- விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்தவரைத்தவிர- அவர்களுக்கு அவர்கள் செய்த (நல்)வினையின் காரணமாக இரட்டிப்பான கூலியுண்டு; அவர்களோ (சுவனபதியிலுள்ள) உயர்ந்த மாளிகைகளில் நிம்மதியாக இருப்பவர்கள். (அல் குர்ஆன் 34: 37)

அல்லாஹ்- எத்தகையவனென்றால், உங்களை (ஆரம்பத்தில்) பலவீனத்திலிருந்து அவன் படைத்தான். பின்னர், பலவீனத்திற்குப் பிறகு (உங்களுக்கு) பலத்தையும் உண்டாக்கினான். அப்பால் (அப்)பலத்திற்குப் பின்னர் (முதுமையின்) பலவீனத்தையும் முதுமைப் பருவத்தையும் ஆக்கினான். தான் நாடியதைப் படைக்கிறான்; மேலும், அவனே (யாவையும்) நன்கறிந்தோன்; மிக்க ஆற்றலுடையோன். (அல் குர்ஆன் 30: 54)

அல்லாஹ் தான், ஒன்றையுமே நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலைமையில், உங்களுடைய தாய்மார்களின் வயிறுகளிலிருந்து உங்களை வெளிப்படுத்தினான்; அன்றியும் உங்களுக்கு செவிப்புலனையும், பார்வைகளையும் இதயங்களையும்- நீங்கள் (அவனுக்கு) நன்றி செய்வதற்காக ஆக்கியுள்ளான். (அல் குர்ஆன் 16: 78)

விசுவாசங் கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும் உங்கள் பிள்ளைகளிலிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர். ஆகவே, அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். மேலும், (அவர்களில் ஏற்பட்டவற்றை) நீங்கள் மன்னித்து, (அதைப்) பொருட்படுத்தாதும் விட்டு விட்டு, இன்னும், (அவர்களின் குற்றங்களை) பொறுத்தருள்வீர்களாயின், நிச்சயமாக அல்லாஹ்(வும்) உங்களுடைய பாவங்களை மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபையுடையவன். (அல் குர்ஆன் 64: 14)

விசுவாசங் கொண்டோரே! உங்களுடைய செல்வங்களும் உங்களுடைய மக்களும் அல்லாஹ்வுடைய நினைவிலிருந்து உங்களை(த் திருப்பி) வீணாக்கி விட வேண்டாம்; இன்னும், எவர் அதைச் செய்கிறாரோ அவர்கள் தாம் நஷ்டமடைந்தவர்களாவர். (அல் குர்ஆன் 63: 9)

எனவே, அவனையன்றி நீங்கள் நாடியவற்றை நீங்கள் வணங்கிக் கொள்ளுங்கள்; (அதற்குரிய வேதனையைப் பெறுவீர்கள்;) "நிச்சயமாக, நஷ்டவாளிகள் கியாமத்து நாளில் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்களே அத்தகையவர்கள் தாம்; அதுவே தெளிவான நஷ்டமாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக!" (அல் குர்ஆன் 39: 15)

மேலும், லுக்மான் தன் மைந்தனுக்கு- அவர் அவருக்கு உபதேசம் செய்தவராக- என் அருமை மைந்தனே! நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே! நிச்சயமாக, .ணைவைத்தல் மிகப்பெரிய அநியாயமாகும் என்று கூறியதை- (நபியே! நீர் நினைவு கூர்வீராக!)

நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது) பற்றி நல்லுபதேசம் செய்தோம்; அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தாள்; இன்னும், (அவனுக்குப் பால்குடி மறக்கடித்து) அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும். (ஆகவே, மனிதனே!) "நீ எனக்கும் உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக; (முடிவில்) என்னிடமே (உன்) மீளுதல் இருக்கிறது.

எது பற்றி உனக்கு அறிவு (ஆதாரம்) இல்லையோ, அதை எனக்கு நீ இணையாக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் (அவ்விஷயத்தில்) நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படிய வேண்டாம்; ஆயினும், இவ்வுலகத்தில் நன்மையான காரியத்தில் நீ அவ்விருவருடனும் (அன்புடன் ஒத்து) உடனிருப்பாயாக; இன்னும் (வழிபாட்டில்) என்பால் திரும்பியவரின் வழியை நீ பின்பற்றுவாயாக; பின்னர் நீங்கள் (யாவரும்) என்னிடமே திரும்பி வந்து சேரவேண்டியதிருக்கின்றது; அப்பொழுது நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பேன்.

என்னருமை மைந்தனே! நிச்சயமாக அது (நன்மையோ, தீமையோ) கடுதின் வித்தளவாக இருப்பினும் (சரி) அது ஒரு பாறைக்குள் அல்லது வானங்களில் அல்லது பூமியில் (மறைந்து) இருந்த போதிலும் (கேள்வி கணக்கின் போது) அல்லாஹ் அதனைக் கொண்டு வந்து விடுவான்; (ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் வெகு நுட்பமான (அறிவுடைய)வன்; நன்கு உணர்பவன்."

என்னருமை மைந்தனே! நீ தொழுகையை நிறைவேற்றுவாயாக! நன்மையைக் கொண்டும் (பிறரை) ஏவுவாயாக! பாவமான காரியங்களிலிருந்தும் (மனிதர்களை) விலக்குவாயாக! மேலும், உனக்கேற்படும் கஷ்டங்களை நீ பொறுமையுடன் சகிட்துக் கொள்வாயாக! நிச்சயமாக (அல்லாஹ் கட்டளையிட்ட) இது காரியங்களில் உறுதியானதில் உள்ளதாகும்.

அன்றியும், (பெருமை கொண்டு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! மேலும், பூமியில் கர்வமாக நடக்காதே! நிச்சயமாக

அல்லாஹ் தற்பெருமைக்காரர், கர்வங் கொண்டோர் ஒவ்வொருவரையும் நேசிக்க மாட்டான்."

மேலும், "உன் நடையில் மட்டிய தரத்தைக் கடைப்பிடிப்பாயாக! உன் சப்தத்தையும் தாழ்த்திக் கொள்வாயாக! (ஏனென்றால்,) நிச்சயமாக சப்தங்களிலெல்லாம் மிக வெறுக்கத்தக்கது கழுதையின் சப்தமே" (என்று கூறினார்). (அல் குர்ஆன் 31: 13- 19)

(ஆகவே,) செல்வமும் ஆண் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரமாகும்; மேலும், என்றுமே நிலையான நற்கருமங்கள் தாம், உம் இரட்சகனிடத்தில் நற்கூலியில் மிகச் சிறந்ததாகும்; (மறுமையை) ஆதரவு கொள்வதற்கும் மிகச் சிறந்ததாகும். (அல் குர்ஆன் 18: 46)

மேலும், "என்னுடைய இரட்சகனே! என்னையும் என் சந்ததியிலுள்ளோரையும் தொழுகையை நிறைவேற்றுபவர்களாக ஆக்கி வைப்பாயாக! எங்களுடைய இரட்சகனே! என்னுடைய பிரார்ட்தனையை அங்கீகரித்துக் கொள்வாயாக! (அல் குர்ஆன் 14: 40)

எங்கள் இரட்சகனே! எனக்கும் என் பெற்றோருக்கம் (மற்ற) விசுவாசிகளுக்கும் கேள்வி கணக்கு நிலை பெறும் (மறுமை) நாளில் மன்னித்தருள்வாயாக!" (என்றும் பிரார்த்தித்தார்). (அல் குர்ஆன் 14: 41)

"அந்தச் சுவர்: அப்பட்டணட்திலுள்ள அநாதைச் சிறுவர் இருவருக்கு உரியதாக இருந்தது; அதற்குப் பின் அவ்விருவருக்குச் சொந்தமான புதையல் ஒன்றும் இருந்தது; அவ்விருவரின் தந்தை மிக்க நல்லவராக இருந்தார்; ஆகவே, உமதிரட்சகனிடமிருந்துள்ள அருளாக, உமதிரட்சகன் அவ்விருவரும் அவ்விருவரின் வாலிபத்தையடைந்து, தங்களுடைய புதையலை வெளியில் எடுத்துக்கொள்ளுமாறு செய்ய நாடினான். இதனை நான் என் இஷ்டப்படி செய்துவிடவில்லை; இதுதான், எதன் மீது பொறுமையாக இருக்க நீர் சக்தி பெறவில்லையோ அதனுடைய விளக்கமாகும்" (என்று கூறினார்) (அல் குர்ஆன் 18: 82)

முஹம்மத் (ஸல்) அவர்களது ஹதீஸ்கள்

மனிதர்கள் (தமக்கேயுரிய பண்புகளைக் கொண்ட உலோகங்களைப் போன்றவர்கள். அவர்களில் இஸ்லாத்துக்கு முந்திய (ஜாஹிலியாக்) காலத்தில் மிகச் சிறந்தவர்களாக இருந்தவர்களே இஸ்லாத்தை விளங்கிக் கிரகித்துக் கொண்ட பின்னர் இஸ்லாமியக் காலத்திலும் சிறந்தவர்களாக இருக்கின்றனர். (அல் புகாரி, முஸ்லிம்)

இறை வழிபாடுகளுக்கடுத்ததாக மிக விரும்பத்தக்க செயல் ஒரு முஸ்லிமை மகிழ்விப்பதாகும். (அல் புகாரி)

ஒரு மனிதன் தினமும் தருமம் செய்வதை விட தனது மகனுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பதே மேலானது. (அல் திர்மிதீ)

ஒருவர் இறந்ததும் மூன்று விடயங்களைத் தவிர அவனது ஏனைய செயற்பாடுகள் முடிவுக்கு வந்து விடுகின்றன. அவ்விடயங்களாவன: நிலையான

தருமம்; (மக்களுக்கு) பயனளிக்கக்கூடிய கல்வி; இறந்தவர்களுக்காகப் பிரார்த்திக்கக்கூடிய இறையச்சமுள்ள பிள்ளை. (முஸ்லிம்)

உங்கள் இரட்சகனுக்கு உங்கள் மீது ஓர் உரிமை இருக்கிறது; உங்கள் உடலுக்கு உங்கள் மீது ஓர் உரிமை இருக்கிறது; அதேபோல் உங்கள் குடும்பத்தினருக்கும் உங்கள் மீது ஓர் உரிமை இருக்கிறது. எனவே, உங்கள் மீது உரிமை கொண்டுள்ள அனைவரதும் உரிமைகளை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும். (அல் புகாரி)

ஒரு மனிதன் தனது பொறுப்புக்களைப் புறக்கணிப்பதும் தன் மீத தங்கியிருப்பவர்களுக்குரிய வாழ்வுத் தேவைகளை வழங்காதிருப்பதும் பெரிய பாவமாகும். (அபூ தாவூத்)

நீங்கள் அனைவரும் உங்கள் பொறுப்பிலுள்ளவர்களுக்கும் உங்கள் பராமரிப்பில் உள்ளவற்றுக்கும் பாதுகாவலர்களாகவும் பொறுப்பானவர்களாகவும் உள்ளீர்கள். ஓர் இமாம் அவரைப் பின்பற்றுபவர்களுக்குப் பாதுகாவலராகவும் பொறுப்பாளியாகவும் இருக்கிறார். ஒரு மனிதர் தனது குடும்பத்தினருக்குப் பாதுகாவலராகவும் பொறுப்பாளியாகவும் இருக்கிறார். ஒரு மனைவி தனது கணவனின் வீட்டுக்குப் பாதுகாவலராகவும் பொறுப்பாளியாகவும் இருக்கிறாள். ஒரு பணியாளர் தனது எஜமானின் சொத்துக்களுக்கப் பாதுகாவலராகவும் பொறுப்பாளியாகவும் இருக்கிறார். நீங்கள் அனைவரும் உங்கள் பொறுப்பிலுள்ளவர்களுக்கும் உங்கள் பராமரிப்பில் உள்ளவற்றுக்கும் பாதுகாவலர்களாகவும் பொறுப்பானவர்களாகவும் உள்ளீர்கள். (அல் புகாரி)

ஒரு பிள்ளைக்கு நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வழங்கிய அறிவுரை

இப்ன் அப்பாஸ் (றழி) சிறு பிள்ளையாக இருந்த போது அவருக்கு நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பின்வருமாறு அறிவுரை வழங்கினார்கள்:

என் இளவலே! நான் உமக்குச் சில வார்த்தைகளைக் கற்பிக்கிறேன்: அல்லாஹ்வுக்கு நெருக்கமாக இருப்பீராக! அல்லாஹ்வை நினைவு கூர்வீராக! அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான்!

அல்லாஹ்வை நினைவு கூர்வீராக! அல்லாஹ் உம்மைப் பொறுப்பேற்றுக் கொள்வான்! உமக்கு ஏதும் தேவை ஏற்பட்டால் அதனைப் பெறுவதற்கு அல்லாஹ்வின் பக்கமே திரும்புவீராக! உமக்கு உதவி தேவைப்பட்டால் அல்லாஹ்விடமே உதவி கோருவீராக!

முழு உலகமும் எதிராக ஒன்று பட்டாலும் அல்லாஹ் நாடினாலேயன்றி உமக்குத் தீங்கிழைக்க முடியாது என்பதை அறிந்து கொள்வீராக! முழு உலகும் ஒன்றிணைந்து உமக்கு நன்மை பயக்க முயன்றாலும் அல்லாஹ் நாடினாலன்றி உமக்கு நன்மை செய்ய முடியாது.

(அல் திர்மிதீ, அஹ்மத் இப்ன் ஹன்பல்)

உசாத்துணைகள்

உசாத்துணைகள்

Abd al-Ati, Hammudah. *The Family Structure in Islam.* Indianapolis, IN: American Trust Publications, 1997.

..*Islam in Focus,* 3rd rev. edn. Beltsville, MD: Amana Publications, 1998.

Abdul Hye, Hamid. "Islam on the Rearing of Children." *The Muslim World Journal,* vol. 18 (issues 11 & 12) India, May/June 1991.

Abdullah, Nina. "Qur'an Memorization and Memory." Unpublished paper.Reston, Virginia, 1994.

Abel, Gene and Nora Harlow. *The Stop Child Molestation Book.* La Vergne, Tennessee: Ingram Content Group, 2001.

AbuSulayman, AbdulHamid. "Islam and the Family." Unpublished paper presented at the Conference on 'Youth'. Brunei, April 4, 1984.

.. "Islamic Educational Reform: Top Priority in Intellectual Islamic Work." Editorial. *The American Journal of Islamic Social Sciences (AJISS),* vol. 15, issue 1, USA, Spring 1998.

..*Islamization of Knowledge: General Principles and Work Plan.* Herndon, VA: IIIT, 1995.

Abu-Talib, Ali. *Nahjul Balagha* (Peak of Eloquence). Elmhurst, New York: Tahrike Tarsile Qur'an, 1996.

Adler, Jerry. "Building a Better Dad." *Newsweek,* June 17, 1996.

Agnivesh, Swami et al. "Missing: 50 Million Indian Girls." *International Herald Tribune,* November 25, 2005.

Ahmad, Imad-ad-Dean. *Islam and the Discovery of Freedom.* Beltsville, MD: Amana Publications; 1st edn., 1997.

Aids Education Global Information System (AEGIS), (website article dated August 31, 2001): http://www.aegis.com/news/afp/2001/af010886.html

Akhtar, et al. "Views on Breastfeeding in Medical Science and Islam." *Journal of Islamic Medical Association (JIMA),* vol. 30, 1998.

Alcohol Concern. Factsheet: Young people and alcohol. September 2009. http://www.alcoholconcern.org.uk/publications/factsheetsandbooklets/factsheet-young-people

'Ali, 'Abdullah Yusuf. *Translation of The Meaning of the Holy Qur'an.* Beltsville, MD: Amana Publications, 2004.

Allain, Annelies. *Protecting Infant Health.* Penang, Malaysia: International Baby Food Action Network, 1993.

Altalib, Ilham. The Muslim Family in North America. Ten Unpublished Articles.Reston, Virginia: 1984.

..The Human Heart in the Qur'an, Seminar at ADAMS Center, Herndon, Virginia, September 2008.

Amabile, T.M. & B.A. Hennessey. "The Motivation For Creativity in Children" in T. Pittman & A. Boggiano (Eds.) *Achievement And Motivation: A Social Developmental Perspective.* New York: Cambridge University Press, 1992.

Athar, Shahid. "Sex Education for Muslim Youth and Their Parents." *Journal of Islamic Medical Association (JIMA),* vol. 22, USA, 1990.

..*Reflections of an American Muslim.* Chicago, IL: Kazi Publications, 1994.

..(editor) *Sex Education: An Islamic* Perspective. http://www.teachislam.com/dmdocuments/33/BOOK/

Atkins, Andrea. "The Gender Divide." *Parenting Magazine,* August 1998.

Badaraco, Joseph. *Leading Quietly.* Harvard Business Review Press, 2002.

Badi, Jamal and Mustapha Tajudin. *Creative Thinking: An Islamic Perspective.* 2nd edn. International Islamic University Malaysia: Kuala Lumpur, Malaysia, 2005.

Bailey, Joseph. *The Serenity Principle.* San Francisco, CA: Harper & Row, 1990.

al-Bar, Mohammad Ali, and Osama Kandil. "Breastfeeding and Islamic Teaching." *Islamic World Medical Journal,* July/August 1986.

Barazangi, Nimat Hafez. "The Education of North American Muslim Parents and Children: Conceptual Change as a Contribution to the Islamization of Education." AJISS. 7(3), 1990.

Baron-Cohen, Simon. "The Extreme Male Brain Theory of Autism." *Trends in Cognitive Sciences,* vol. 6, issue 6, June 2002.

Barzinji, Jamal. "The Prophet as a Father." Lecture at ADAMS Center, Herndon, VA, April, 11, 1993.

Bashir, Askia H. *How to Manage Your Parents*

(without Manipulation). Atlanta, GA: KYD Publishers, 1995.
Baumrind, Diana et al. Parenting for Character: Five Experts, Five Cases. Portland, Oregon: Center for Spiritual and Ethical Education, 2008.
BBC News. "Breast Milk 'Boosts Babies' Brain power." 8 May 2002. http://news.bbc.co.uk /1/hi/health/1974976.stm
BBC News. "South Korean Dies after Games Session." 10 August 2005. http://news.bbc.co.uk/1/hi/technology/ 4137782.stm
Beal, C. *Boys And Girls: The Development of Gender Roles.* New York: McGraw-Hill, Inc., 1994.
Begley, Sharon. "Child's Brain: Use It or Lose It." *Newsweek,* June 17, 1996.
.. "The Parent Trap." *Newsweek,* September 7, 1997.
.. "A Mother's Cocaine Use: They Call Them Snowbabies." *Newsweek,* September 29, 1998.
.. "Tuning Up the Brain." *Newsweek,* Fall/Winter 2000.
.. and Pat Wingert. "Teach Your Parents Well." *Newsweek,* April 28, 1997.
.."Your Child's Brain", *Newsweek,* vol. 127, no. 8, p. 54, February 19, 1996.
Bennett, William. *The Book of Virtues.* New York: Simon & Schuster, 1996.
Beshir, Ekram and Mohamed Rida. *Meeting the Challenge of Parenting in the West: An Islamic Perspective.* Beltsville, MD: Amana Publications, 1998.
Biller, Henry. "The Father Factor in Building a Better Dad." *Newsweek,* June 17, 1996.
..*Fathers and Families: Parental Factors in Child Development.* Westport, Connecticut: Auburn House, 1993.
Blum, Deborah. *Sex on the Brain: The Biological Differences Between Men and Women.* New York: Penguin Books, 1998.
Bohmer, Carol and Andrea Parrot. *Sexual Assault on Campus: The Problem and the Solution.* New York: Lexington Books, 1993.
Boorstein, Sylvia. *It's Easier Than You Think.* San Francisco, CA: HarperCollins, 1996.
Booth, Caroline and Mindy Henderson. *I Love My Grandmother Because….* Nashville, TN: Rutledge Hill Press, 1998.
Boydston, Jo Ann (editor). *The Collected Works of John Dewey.* Carbondale and Edwardsville: Southern Illinois University Press, 1969-1991.
Bradley, Raymond et. al. *Facilitating Emotional Self-Regulation in Preschool Children.* Boulder Creek, California: Institute of HeartMath, 2009.
Branden, Nathaniel, *The Psychology of Self-Esteem: A Revolutionary Approach to Self-Understanding that Launched a New Era in Modern Psychology.* San Francisco, CA: Jossey-Bass, 2001
Brawer, Barney. "Raising Sons in a World of Changing Gender Roles." *Women in Higher Education,* November 1998.
Brazelton, Leach; Lemonick, Michael. "War of the Diapers." *Time,* January 25, 1999, vol. 153, no. 3.
Brizendine, Louann. *The Female Brain.* New York: Morgan Road Books, 2006.
Brooks, Arthur. *Gross National Happiness.* New York: Basic Books, 2008.
Brown, H. Jackson, Jr. *Life's Little Treasure Book On Success.* Nashville, TN: Rutledge Hill Press. 1994.
..*Life's Little Treasure Book On Marriage and the Family.* Nashville, TN: Rutledge Hill Press, 1995.
..*Life's Little Treasure Book On Friendship.* Nashville, TN: Rutledge Hill Press, 1996.
..*Life's Little Treasure Book On Parenting.* Nashville, TN: Rutledge Hill Press, 1995.
Burgess. *Fathers and Parenting Interventions.* London: Fatherhood Institute, 2009.
Burt, Sandra and Linda Perlis. *Parents as Mentors: A New Perspective on Parenting that Can Change Your Child's Life.* Rocklin, CA: Prima Publishing, 1999.
Campo, Juan. *Encyclopedia of Islam.* New York: Infobase Publishing, 2009.
Canadian Child Care Federation. 'Children and Creativity.' Resource Sheet no.15, http://www.ccffcsge.ca/docs/cccf/rs015_en. htm
Cancer Research UK. http://info.cancerresearch uk.org/cancerstats/types/cervix/riskfactors/
Canfield, Jack and Mark Victor Hansen. *Another Sip of Chicken Soup for the Soul.* Kansas City, MO: Andrews McMeel Publishing, 1997.
..*Chicken Soup for the Father's Soul.* Deerfield Beach, Florida: Health Communications, 2001
Carlson, Richard. *Don't Sweat the Small Stuff – and It's All Small Stuff: Simple Ways to Keep*

the Little Things from Taking over Your Life. New York: Hyperion, 1997.
Carmichael, Mary. 'A Shot of Hope.' *Newsweek.* October 1, 2007.
.. 'Stronger, Faster, Smarter.' *Newsweek,* March 26, 2007.
Cassidy, Anne. 'Take Charge of Your Time.' *Working Mother,* May 1998.
Cassidy, Jude and Phillip Shaver. *Handbook of Attachment: Theory, Research and Clinical Applications.* New York: Guilford Press, 1999.
Cesarone, Bernard. 'Video Games and Children.' Urbana, Illinoise: ERIC Clearinghouse on Elementary and
Early Childhood Education, University of Illinoise,
1994.
Chandler, Michael Alison and Maria Glod. 'More Schools Trying Separation of the Sexes.' *Washington Post,* June, 15, 2008.
Clark, C.S. 'TV Violence.' *CQ Researcher,* (3), March 26, 1993.
Clark, Reginald. *Family Life and School Achievement.*
Chicago, IL: University of Chicago Press. 1983.
Clinton, Hillary R. *It Takes a Village To Raise a Child.* New York: Simon & Schuster, 1996.
Coleman, James Samuel. *Adolescent Society: The*
Social Life of the Teenager and Its Impact on Education. New York: The Free Press, 1961; Macmillan, 1963.
Coloroso, Barbara. *Kids are Worth it! Giving Your*
Child the Gift of Inner Discipline. New York: Harper Collins, 2002.
Covey, Stephen R. *'Secrets of Much, Much Better*
Family Relationships.' Bottom Line, July 30, 1992.
Davidson, Maurice et al. *Working with Fathers: Methods and Perspectives.* Stillwater, Minnesota: Nu Ink, 1992.
Davis, D. 'Portrayals of Women in Prime Time Network Television: Some Demographic Characteristics." *Sex Roles,* vol. 23, pp.325-332, 1990.
Davis, William et al. *An Introduction to Music Therapy.* Silver Spring, Maryland: American Music Therapy Association, 2008.
Dawson, Geraldine. 'Imitation and Social Responsiveness in Autustic Children.' *Journal of Abnormal Child Psychology,* vol. 12, 1984, pp.209-225.
Dodd, Virginia. 'Implications of Kangaroo Care for Growth and Development in Preterm Infants.' *Journal of Obstetric, Gynecologic, and Neonatal Nursing,* vol. 34, no. 2, March 2005, pp. 218-232.
D'Oyen, Fatima M. *The Miracle of Life.* Leicester,
UK: Islamic Foundation, 1996.
The Economist. 'Arab Learning Know Thyself.' October 25, 2003.
eHow Website. How to Teach Kids to Say No to Peer Pressure. http://www.ehow.com/how_6108016_teachkids-say-peer-pressure.html
Elbert, Thomas et al. 'Increased Cortical Representation of the Fingers of the Left Hand in String
Players.' *Science Journal,* vol. 270, no. 5234, pp. 305.307, 13 October 1995
Elias, Maurice, Steven Tobias and Brian Friedlander. *Emotionally Intelligent Parenting, How to Raise A Self-Disciplined, Responsible, Socially Skilled Child.* London: Hodder and Stoughton, 2000.
Eliot, Lise. *Pink Brain, Blue Brain.* New York: Houghton Mifflin Harcourt, 2009.
Elkadi, Iman. 'Construction of Muslim Communities: Raising Children.' *Al-Ittihad* Gary, Indiana: The MSA of the US and Canada, Spring 1972.
Elkind, David. 'The Family in the Postmodern World.' *Phi Kappa Phi Journal.* 1995.
Elmore, Tim. *Nurturing the Leader within Your Child: What Every Parent Needs to Know.* Nashville, TN: Thomas Nelson Publishers, 2001.
Epinions. 'Teaching our Children to Love.' January
2001. http://www.epinions.com/kifm-review-3E0B-2F84CB47-3A52CFB3-prod2
Exley, Helen. *Words of Wisdom.* New York: Exley, 1997.
..*Words of Calm.* New York: Exley. 1998.
Eyre, Linda and Richard. *3 Steps to a Strong Family.* New York: Simon & Schuster. 1994.
..*Teaching Your Children Values.* Sound recording: 2 cassettes. New York: Simon & Schuster Audio, 1994.
Faber, Adele and Elaine Mazlish. *How to Talk so Kids Will Listen & Listen so Kids Will Talk.*

New York: Avon Books. 1982.
..*Siblings Without Rivalry*. New York: Avon Books. 1998.
Fannoun, Kathy. *Our Loving Grandparents*. Chicago, Illinois: Iqra, 1994.
Ferguson, Andrew et al. *Time,* May, 24, 1999, vol. 153, no. 20, p.68.
Field, et al. 'Infants of Depressed Mothers Show Depressed Behavior Even with Nondepressed Adults.' *Child Development journal,* vol. 59, issue 6, December 1988, pp.1569-1579.
Fisher, et al. 'Sex on the Brain.' *Journal of Sex Research,* vol. 49, issue 1, 2012, pp. 69-77.
Fowler, Lynda. 'Encouraging Creativity in Children.' Department of Family & Consumer Sciences, Ohio State University. http://www.ohioline.osu.edu/flm97/nr04.html
Franklin, Benjamin, *The Autobiography of Benjamin Franklin*. New York: P. F. Collier and Son, 1909.
Freedman, Joshua. Creativity for Emotional Intelligence: Ideas and Activities. http://www.kidsource.com/kidsource/content4/creativity.eq.html
Friedman, Jenny. 'Avoiding Gender Stereotypes: Learn How to Overcome the Typical Stereotypes in Raising Your Son or Daughter.' 1998. http://www.americanbaby.com/ab/story.jhtml?storyid=/templatedata/hk/story/data/1172.xml
Funk, J.B. 'Reevaluating the Impact of Video Games.' *Clinical Pediatrics,* vol. 32 (Feb. 2, 1993), pp. 86-90.
Geoparent, http://geoparent.com/family/growth/independence.htm
Gibbs, Nancy. 'In Sorrow and Disbelief - Special Report: The Littleton Massacre.' *Time,* May 3, 1999.
Gilbert, Michael. 'Single-sex schools help children
thrive: Bleaching out gender differences hampers the education of both girls and boys.' September20, 2007 http://www.csmonitor.com/2007/0920/p09s01-coop.html.
Gilmartin, Patricia and Jeffrey Patton. 'Comparing the Sexes on Spatial Abilities.' *Annals of the Association of American Geographers,* vol.74, issue 4, pp. 605-619, 1984.
Ginott, G. Haim. *Between Parent and Teenager*. New York: Avon Books, 1971.
Glod, Marie. 'Schools Try Elementary Approach to Teaching Foreign Languages.' *Washington Post,* August 8, 2006.
Godfrey, Neale and Carolina Edwards. *Money Doesn't Grow on Trees: A Parent's Guide to Raising Financially Responsible Children*. A Fireside Book. New York: Simon & Schuster, 1994.
Goldscheider, Frances K. and Linda J. Waite. *New
Families, No Families? The Transformation of the American Home.* Berkeley, CA: University of California Press, 1991.
Goleman, David. *Emotional Intelligence.* New York: Bantam Doubleday Dell Publishing Group, 1996.
Gookin, Dan and Sandy. *Parenting for Dummies,* 2nd edn. New York: HarperCollins, 2002.
Gordon, Thomas. *Parent Effectiveness Training: The No-Lose Program for Raising Responsible Children.* New York: Three Rivers Press, 2000.
Gray, John. *Truly Mars and Venus: Men are from Mars, Women are from Venus: A Practical Guide for Improving Communication and Getting What You Want in Your Relationships*. New York: HarperCollins, 2003.
Gur, Ruben and Raquel Gur et al. 'Sex Differences
in Brain Gray and White Matter in Healthy Young Adults.' *The Journal of Neuroscience,* vol. 19, no. 10, pp. 4065-4072, 15 May 1999.
Gurian, Anita and Alice Pope. 'Do Kids Need Friends?' March 21, 2001. http://www.aboutourkids.org/articles/do_kids_need_friends
Gurian, Michael. *Boys and Girls Learn Differently: A Guide for Teachers and Parents.* San Fransisco, CA: Jossey-Bass, 2001.
Haq, S. Moinul. Trans., Ibn Saad's *Kitab al-Tabaqat* [The Book of Classes]. India: Islamic Book Service, 1967.
Harper, Cynthia C. and Sara S. McLanahan. 'Father Absence and Youth Incarceration.' Journal of Research on Adolescence, vol. 14, no. 3, pp. 369.397, September 2004.
Harris, Judith. *The Nurture Assumption.* New York: Free Press, 1998.
Harris, Robert. 'Introduction to Creative Thinking.' *Virtual Salt,* July 1, 1998 http://www.virtualsalt.com/crebook1.htm
Harrison, Harry H., Jr. *Father to Son: Life*

Lessons
on Raising a Boy. New York: Workman Publishing, 2000.
Hart, Michael H. *The 100: A Ranking of the Most*
Influential Persons in History. New York: Hart Publishing, 1978.
Harvey, Eric et al. *The Leadership Secrets of Santa*
Claus. Dallas, Texas: The Walk the Talk Company, 2003.
Al-Hashmi, Muhammad. *The Ideal Muslim*. [Arabic] Riyadh, Saudi Arabia: International Islamic Publishing House, 1999.
Al-Hassani, Salim. *1001 Inventions: Muslim Heritage*
in Our World. Manchester, UK: Foundation for Science, Technology and Civilisation, 2011.
Head, Christina. *An Educated Decision: One Approach to the Vaccination Problem Using Homeopathy*. London: Lavender Hill Homeopathic Centre, 1999.
Al-Hewar, vol. 13, no. 4, Spring 2002.
Hicks, Felicity. 'The Role of Music Therapy in the Care of the Newborn,' *Nursing Times* journal, vol. 91, issue 38, pp. 31-33.
Holy Bible: New King James Version. Austin, TX:
National Publishing Company, 1982.
Hughes, et al. *The Factbook on Global Sexual Exploitation*. New York: Coalition Against Trafficking in Women, 1999.
Hwedy, Fahmy. 'Islam is Greater than Waging a Battle against an Instrument or Art.' (In Arabic) *Al-Mujtama,* vol. 933, January 1, 1998.
Hyde, Barbara and Sansoni, Brian. 'Women Better at Hand Habits, Hands Down.' *American Society for Microbiology,* Washington
DC. 2005. http://www.eurekalert.org/pub_releases/
2005-09/asfm-wba091905.php.
Ibn Khaldun, *al-Muqaddimah,* Beirut: Dar al-Qalam, 1992.
Institute of Medicine. *The Hidden Epidemic. Confronting Sexually Transmitted Diseases*. Washington, DC: National Academy Press, 1997.
Islamic Schools Department. 'Homework: Your Child and You.' (Pamphlet). Plainfield, IN: Islamic Society of North America, 1994.
Islamic Society of North America. 'Greatest Obstacles
Confronting Muslim Children Raised in America.' *Islamic Horizons,* vol. 11, no. 11, November 1986.
Ja'fari, Suzanne Fatimah. Muslim Names. Beltsville, MD: Amana Publications, 1998.
Jaffe, Charles A. 'Your Money.' *Chicago Tribune,*
April 2, 1998.
Jameelah, Maryam. *The Generation Gap: Its Causes and Consequences*. Lahore, Pakistan: Muhammed Yusuf Khan, 1981.
Johnson, Anne. 'Exploring Women's Creativity: The No-Push Method for Developing Creativity.' 1999: http://www.womenfolk.com/creativity/kids.htm.
Josephson, Michael S.; Val J. Peter and Tom Dowd. *Parenting to Build Character in Your Teen*. Boys Town, NB: Boys Town Press, 2001.
Kalb, Claudia. 'Farewell to Aunt Flo.' *Newsweek,* February 3, 2003.
Kane, Frank L. and Bathke, Leigh Anne Nicholson.
'Parenting and Child Care.' *Newsweek,* September
29, 1997.
Kantrowitz, Barbara and Wingert, Pat. 'How Well do You Know Your Kid?' *Newsweek,* May 10, 1999.
Kantrowitz, Barbara and Peg Tyre. 'The Fine Art of Letting Go.' *Newsweek,* May 22, 2006.
Karp, Miriam. 'Make Room for Your Child's Creativity.' *Natural Jewish Parenting,* Issue 3, http://www.jewishholiday.com/creativity.html.
Kasule, Omar. 'Character-Building.' Unpublished paper presented at the Third International Seminar on 'Medical Curriculum: The Holistic Approach,' Kuala Lumpur, Malaysia, February 1999.
Keller, Nuh. *Becoming Muslim*. Jordan: Wakeel Books. 2001.
Kendall, Francis. *Super Parents, Super Kids*. Johannesburg: Delta Books. 1983.
Kessler, Suzanne J. and Wendy McKenna. 'Some
Children are Gender Nonconformists.' http://www.webehave.com/hottopic.htm
Kilpatrick, William. *Why Johnny Can't Tell Right*

from Wrong and What We Can Do about It. New York: Simon & Schuster, 1993.
Kindlon, Daniel J. and Michael Thompson. *Raising Cain: Protecting the Emotional Life of Boys.* New York: Ballantine Books, 1999.
Knox, David and Caroline Schacht. *Parenting Choices in Relationships: An Introduction to Marriage and the Family,* 5th edn. Belmont, CA: Wadsworth Publishing, 1997.
Komurcu, Nuran. 'Effect of music therapy on anxiety in pregnant women during labor' (in Turkish). *Hemsirelik Forumu,* 1999, vol. 2, pp. 89-96.
Kotulak, Ron. cited in: 'Unlocking the Mind.' *Chicago Tribune,* 1993
Kuczmarski, Robert J.; Flegal, Katherine M.; Campbell, Stephen M.; and Johnson, Clifford L. 'Increasing Prevalence of Overweight Among US Adults.' American Medical Association, vol. 272, No. 3. 1994.
Kulkarni, Chaya and Lynn Oldershaw. *Helping Children Overcome Their Fears. Comfort, Play and Teach: A Positive Approach to Parenting* (Get Set for Life program). Toronto, Ontario, Canada: 2005.
Lazear, Jonathon and Wendy. *Meditations for Parents Who do too Much.* New York: Simon & Schuster, 1993.
Lebelle, Linda. Focus Adolescent Services. http://www.focusas.com
Leland, John. 'Tightening the Knot.' *Newsweek,* February 19, 1996.
Lemonick, Michael D. 'Eat Your Heart Out.' *Time,* July 19, 1999.
..'War of the Diapers.' *Time,* January 25, 1999, vol. 153, no. 3.
Leonhardt, Mary. 'It is Never Too Soon to Foster a Love of Reading in Young Children or Too Late to Help an Older Child Gain a Love of Books.' *Bottom Line* (May 5, 1991).
Longfield, Anne and Mike Fitzpatrick. 'Should Parenting be Taught?' *The Independent,* December 4, 1999.
Maier, Thomas. 'On the Life of Dr. Spock.' *Biography Magazine,* April 1998.
..'Raised by Dr. Spock.' *Newsweek* March 30, 1998.
Maqsood, Ruqaiyyah Waris. *Living with Teenagers: A Guide for Muslim Parents.* London: Ta-Ha Publishers, 1995.
Martin, Daniel. 'Schoolgirls Aged Just Ten Falling Pregnant As Underage Pregnancies Continue To Rise.' *Daily Mail,* 8th February 2010.
Maternal and Child Health (MCH) Early Childhood Development and Parent Education Program. http://www.ok.gov/health/Child_and_Family_Health/Maternal_and_Child_Health_Service/
Matthews, Andrew. *Making Friends.* Singapore: Media Masters, 1990; Princes Risborough, UK: J. Wilson Booksales, 1998.
Mayhew, Mary M. *Your Star Child: Attracting, Birthing and Parenting an Evolved Soul.* Fairfield, IA: Sunstar Publishing, 1995.
Mazrui, Ali. 'North American Muslims: Rising to the Challenge of Dual Identity.' *Islamic Horizons,* March-April 1996.
Meiji, Stewart. *Parenting: Part Joy, Part Guerrilla Warfare.* Novata, CA: Portal Publications, 1999.
Minawi, Kawther M. et al. *The Child's Rights in Islam.* Riyadh: Safir Press, 1992.
Mirza, Tanveer Ahmad. 'Parenting.' Weekly Parenting Workshops at ADAMS Center, Herndon, VA, 1994.1999.
Moir, Anne and David Jessel. *The Real Difference Between Men and Women.* New York: Delta Books, 1991.
Moran, James D. III. Creativity in Young Children, http://www.kidsource.com/kidsource/content2/Creativity_in_kids.html
Morgan, Michael Hamilton. *Lost History: The Enduring Legacy of Muslim Scientists, Thinkers and Artists.* Washington, DC: National Geographic, 2007.
Morris, Sophie. 'Sex for sale: The truth about prostitution in Britain.' *Independent.* 26 November 2008.
Murad, Abdul Hakim. 'Ramadan in Istanbul.' *Meeting Point,* August 2009.
Murphy, Sam. 'Why Barefoot Is Best For Children.' *The Guardian newspaper.* August 9, 2010. http://www.guardian.co.uk/lifeandstyle/2010/aug/09/barefoot-best-forchildren
Nash, J. Madeleine. 'How a Child's Brain

Develops.' *Time,* February 3, 1997.
..'Fertile Minds.' *Time,* February 3, 1997.
..'The Personality Genes.' *Time,* April 27, 1998.
National Association for the Education of Young Children. www.naeyc.org
The National Center on Addiction and Substance
Abuse, www.casacolumbia.org.
Family Day- A Day to Eat Dinner with your Children. casafamilyday.org
National PTA Parenting Guide, http://www.lausd.k12.ca.us/Haskell_EL/parent%20information/decision.htm, 1994.
Natural Resources Defense Council. 'Benefits of Breastfeeding.' 2010. http://www.nrdc.org/breastmilk/benefits.asp
Norris, Jeannette; Nurius, Paula; Graham, Thomas. 'When a Date Changes from Fun to Dangerous.' *Violence Against Women,* vol. 5, no. 3, pp. 230-250, March 1999.
Olasky, Marvin. *The Tragedy of American Compassion.* Regnery Publishing: 1994.
Osman, Fathi. *Concepts of the Qur'an*. Los Angeles, CA: Multimedia Vera International, 1997.
Parke, Ross (ed.). *Review of Child Development Research,* vol. 7. Chicago, Illinois: University of Chicago Press, 1984.
.. *Fatherhood.* Cambridge, Massachusetts: Harvard University Press, 1996.
Parkes, Peter. 'Milk Kinship in Islam.' *Social Anthropology,* vol. 13, issue 3, 2005.
Paul, J. P., et al. 'Understanding Childhood Sexual Abuse as a Predictor of Sexual Risk-taking Among
Men who have Sex with Men.' *Child Abuse & Neglect,* vol. 25, issue 4, April 2001, pp. 557-584.
Piotrowski, Caroline. 'Rules of Everyday Family Life.' *International Journal of Behavioral Development,* vol. 21, no. 3, pp. 571-598, October 1997.
Porter, Dalia and Gabriel Cervantes. *All About Dad: Insights, Thoughts, & Life Lessons on Fatherhood.* Cincinnati, Ohio: Adams Media Corporation, 2007
Positive Parenting. www.webehave.com
Preschool Education. *Encouraging Creativity in Children,* 1997.2006, http://www.preschooleducation.com/art60.shtml
Pryor, Fred. *How to Manage Conflict, Anger, and
Emotion.* Fred Pryor Seminars, 1994, 3-volume video set (6 audio cassettes).
al-Qaradawi, Yusuf. *The Lawful and the Prohibited in Islam.* Trans. Kamal el-Helbawy et al. New Revised Addition by Zaynab Alawiye. London: Al-Birr Foundation, 2003.
Qutb, Sayyid. *In the Shade of the Qur'an.* Trans. and ed. Adil Salahi and Ashur Shamis. Leicester, UK: The Islamic Foundation and Islamonline.net, 2011.
Ramey, C.T. The Abecedarian Project. *Encyclopedia
of Human Intelligence.* Ed. R.J. Sternberg. New York: Macmillan, 1994.
Rankin, Jane. *Parenting Experts: Their Advice, the
Research and Getting it Right.* Westport, CT: Praeger, 2006.
Ricks, Shirley. 'Father-Infant Interactions: A Review
of Empirical Research.' *Family Relations,* vol. 34, no. 4, October 1985, pp. 505-511.
Riera, Michael. 'Uncommon Sense with Parents of Teenagers.' *Target The Family,* August 1996.
Robins, Joyce. *Naming Your Baby.* London, UK: Chancellor Press, 1996.
Robinson, Holly. 'The Working Mother's Guide to Breastfeeding.' *Working Mother,* May 1998.
Rosemond, John. 'Tender Loving Discipline.' *Hemisphere* (United Air Lines), June 1993, p.67.
.. 'Is Your Family a Healthy One? Family Counselor.' *Hemisphere* (United Air Lines), December 1994.
Rycus, Judith; Hughes, Ronald. *Child Development
and Child Welfare.* Washington, DC: Child Welfare League of America, 1998.
Samalin, Nancy. 'Personal Responsibility: How to Teach Children Responsibility.' *Bottom Line,* February 15, 1994.
Samon, Katherine Ann. '55 Ways to Make Your Kid Feel Loved.' *Parents',* January 1999.
Sample, Steven. *The Contrarian's Guide to Leadership.* San Francisco, CA: Jossey-Bass, 2001.
Sax, Leonard. *Why Gender Matters: What Parents*

and Teachers Need to Know about the Emerging
Science of Sex Differences. New York: Broadway, 2006.
Schachter, Robert and Carole Spearin McCauley. *When Your Child Is Afraid*. New York: Simon & Schuster, 1988.
Schirra, Walter. C*hicken Soup For the Father's Soul*. Deerfield Beach, Florida: Health Communications, 2001.
Scott, Buddy. *Relief for Hurting Parents: What to*
Do and How to Think. Nashville, TN: Oliver Nelson Books, 1989.
Sears, William. *Keys to Calming the Fussy Baby*. New York: Barron's, 1991.
Seidman, S. A. 'Revisiting Sex Role Stereotyping in MTV videos.' *International Journal of Instructional Media,* vol. 26, pp. 11-22, 1999.
Shamma, Freda. Literature for Muslim American Students in K-12 Islamic Schools and Homeschoolers. Presented at the Islamic Education Conference, Georgetown University, Washington, DC, April 2006.
Shapiro, Laura. 'The Myth of Quality Time.' *Newsweek,* May 12, 1997.
Shaw, Eva, *For the Love of Children*. Deerfield Beach, Florida: Health Communications, 1998.
Sherman, Paul; Billing, Jennifer. 'Antimicrobial Functions of Spices,' *Quarterly Review of Biology,* vol. 73, issue 3, 1998.
Siddiqui, Dilnawaz. *The Muslim Observer*. April 30, 1999.
Silverstein, Shel. *The Giving Tree*. New York: HarperCollins Publishers, 1986.
Sinclair, Ian. *Health: The Only Immunity: The Alternative to Vaccination*. The Informed Parent Publications, 2009.
Smalley, Gary. 'Hidden Keys to Loving Relationships.' 16 video cassettes, 1995.
Smith, Charles. *Mighty Hearts: 8 Steps to Raising*
Kids with Courage. Paper presented at a Workshop held by the Parenting Education Institute, State College, Pennsylvania, June 2004
Smith, David; Gates, Gary. *Gay and Lesbian Families in the United States*. Washington, DC: Human Rights Campaign, 2001.
Spock, Benjamin. *Raising Children in a Difficult Time: A Philosophy of Parental Leadership and High Ideals*. New York: Norton, 1974.
Stanley, Gary, *What My Dog has Taught Me about Life: Meditations for Dog Lovers.* Tulsa, OK: Honor Books,1999.
Staso, William. 'Toddler Brain Development.' *Washington Families,* July 1998.
Stein, Rob. 'Scientists Finding Out What Losing Sleep Does to a Body.' *The Washington Post,* Oct. 9, 2005.
Sutherland, John and Jane Stoever. 'Important Facts about Children and Nutrition.' Special Advertising Section, *Newsweek,* September 29, 1997.
..'Parenting: Child Care.' Special Advertising Section, *Newsweek,* September 29, 1997.
Taffel, Ron. *Why Parents Disagree: How Women and Men Parent Differently and How We Can Work Together*. New York: William Morrow, 1994.
..Getting Through to Difficult Kids and Parents. New York: Guilford Press, 2001.
Takim, Liyakatali. Overcoming Dualities: Muslim Youth in North America. Unpublished paper presented at the ISNA Conference, Indianapolis, IN, July 5, 1997.
Time, June 29, 1998. 'Giving Birth Online.' http://www.time.com/time/community/transcripts/chattr061798.html
Tremblay, George, Allen Israel. 'Children's Adjustment to Parental Death.' *Clinical Psychology: Science and Practices,* vol. 5, issue 4, 1998.
Turecki, Stanley and Sarah Wernick. 'How to Put Your Foot Down without Squashing Your Child.' *Family Circle,* March 16, 1994.
Underwood, Anne and Kuchment, Anna. 'Fussy Kids, Flustered Mom.' *Newsweek,* August 18, 2008, vol. 152, no. 7, pp. 60-62.
UNICEF. *The State of the World's Children* 2007. New York: United Nations International Children's Emergency Fund, 2006.
United Nations. *Arab Human Development Report.* New York: United Nations Development Program, 2009.
United Nations. *World United Nations.* World Population Prospects.
New York: UN Department of Economic and Social Affairs, 2010.
Unus, Iqbal. 'A-Z Guide for Muslim Fathers,' pamphlet. Herndon, VA: IIIT, 1994.
U.S. Census Bureau, Current Population Survey, Washington DC: March 2002.

Versi, Ahmed. 'Wonder Boy in UK.' *The Muslim News,* February, 1998.
Villani, S. 'Violence in the Media.' *Journal of the American Academy of Child and Adolescent Psychiatry,* 38, 1208, 1999.
Weiss, Rick**.** 'Study Debunks Theory On Teen Sex, Delinquency.' *The Washington Post.* Nov 11, 2007. p. A.3
Willatts, P. et al. 'Effect of long-chain polyunsaturated fatty acids in infant formula on problem solving at 10 months of age.' *The Lancet,* vol. 352, no. 9129, pp. 688-691, August 29, 1998.
Williams, Rowan. 'Archbishop Damns Disney.' Daily Mail, July 23, 2002, http://www.dailymail.co.uk/news/article-129452/Archbishop-damns-Disney.html#ixzz0rfbjTvIV
Wimberly, Ed. *A Parent's Guide to Raising Great Kids.* http://www.raisinggreatkids.com/
Wingert, Pat et al. 'Building a Better Dad.' *Newsweek,* June 17, 1996
Winn, Marie. *The Plug-in Drug.* New York: Penguin, 2002.
Winnicott, D. W. *Babies and Their Mothers.* MA:
De Capo Press, 1992.
Wolgemuth, Robert D. *She Calls Me Daddy: Seven Things Every Man Needs to Know about Building a Complete Daughter.* Colorado Springs, CO: Focus on the Family Publishing, 1996.
The Women's Committee of the Muslim Students
Association of the United States and Canada, *Parents' Manual: A Guide for Muslim Parents.* Baltimore, MD: American Trust Publications, 1976.
Wood, Joyce. 'Quality Time.' *Family Circle,* March 16, 1994.
Woolf, Marie. 'Children to Learn Pitfalls of Being a Parent.' *Daily Telegraph,* December 30, 1999.
Wright, Robert. 'The Power of Their Peers.' *Time,* vol. 152, no. 8, August 24, 1998.
Wulf, Steve. 'What Makes a Good School.' *Time,* October 27, 1997.
Yogman, Michael. 'Games Fathers and Mothers Play with their Infants.' *Infant Mental Health Journal,* vol. 2, pp. 241-248, 1981.
Zogby International. December 15, 2006
Zorn, Eric. 'Only Way to Teach Values: Help Kids Discover Them.' *Chicago Tribune,* April 7, 1998.

المراجع العربية

محمد علي الصابوني. صفوة التفاسير ، بيروت: دار القرآن الكريم، 1981م.

محمد علي الصابوني. مختصر تفسير بن كثير ، بيروت: دار القرآن الكريم، 1981م.

محمد حسن الحمصي. تفسير وبيان مفردات القرآن مع أسباب النزول للسيوطي، دمشق: دار الرشيد ،1984م.

كتب وبحوث عربية

الجزيري، عبد الرحمن، الفقه على المذاهب الأربعة، دار الكتب العلمية، 2003 م.

سابق، السيد، فقه السنة، بيروت: دار الكتاب العربي، 1971م.

أبو الحب، ضياء، الطفل: هذا الكائن العجيب، بغداد: دار الحرية للطباعة، منشورات وزارة الثقافة والإعلام، 1979م.

أبو سلميان، عبد الحميد، "تأملات في ظاهرية ابن حزم وإعجاز الرسالة المحمدية"، مجلة التجديد (كوالالمبور) س2: ع3، 1998.

أبو سلميان، عبد الحميد، البعد النفسي في الخطاب الإسلامي المعاصر، بحث قدم في ندوة المعهد العالمي للفكر الإسلامي، الموسم الثقافي، القاهرة، 1999م.

أبو سلميان، عبد الحميد، أزمة الإرادة والوجدان المسلم: البعد الغائب في مشروع إصلاح الأمة، دمشق: دار الفكر، 2004م.

أبو سلميان، عبد الحميد، دليل مكتبة الأسرة المسلمة، فيرجينيا: المعهد العالمي للفكر الإسلامي، 1988م.

أحمد أحمد، حمد، نحو قانون موحد للأسرة في الأقطار الإسلامية، قطر: جامعة قطر، مكتبة الملك فيصل الإسلامية، 1990م.

البهي، محمد، الفكر الإسلامي والمجتمع المعاصر: مشكلات الأسرة والتكافل، القاهرة: مكتبة وهبة، 1982م.

أحمد التل، شادية، مراحل النمو الإنساني ومطالبها التربوية، إربد: جامعة اليرموك، قسم التربية، 1986م.

الجراجرة، عيسى حسن، ريادة الإسلام في تفهم خصوصية عالم الأطفال وفي تقرير وتطبيق حقوقهم الخاصة في الرعاية والتربية، عمان: دار ابن رشد، دار الكرمل، 1988م.

الجمالي، محمد فاضل، تربية الإنسان الجديد، دمشق: دار الحكمة، 1995م.

محمد، السيد محمد الزعبلاوي، تربية المراهق بين الإسلام وعلم النفس، الرياض: مكتبة التوبة؛ بيروت: مؤسسة الكتب الثقافية، 1996م.

السيد، فؤاد البهي، الأسس النفسية للنمو من المهد إلى الشيخوخة، القاهرة: دار

النهضة العربية، 1975م.
الضامن، ريما كمال، الأسرة ورعاية الذات الإنسانية للأطفال من 6 إلى 12 سنة، عمان: منشورات دار البشير، 1989م.
العبادي، نضال محمد أمين، الأحاديث النبوية الواردة في الأطفال، جمع وتصنيف وتحقيق، عمان: كلية أصول الدين، رسالة ماجستير، الجامعة الأردنية، 1990م.
العظم، يوسف، براعم الإسلام (في الحياة، وفي العقيدة) ج2، عمان: المكتب الإسلامي، 1985م.
العلواني، طه جابر، أدب الاختلاف، فيرجينيا: المعهد العالمي للفكر الإسلامي، 1997م.
العيسوي، عبد الرحمن، مقومات الشخصية الإسلامية والعربية وأساليب تنميتها، الإسكندرية: دار الفكر الجامعي، 1986م.
الغزالي، محمد أبو حامد، إحياء علوم الدين، القاهرة: عالم الكتب للطباعة والنشر والتوزيع، 2005م.
الغزالي، محمد، كيف نتعامل مع القرآن، فيرجينيا: المعهد العالمي للفكر الإسلامي، 1992م.
الندوي، أبو الحسن، نحو التربية الإسلامية الحرة في الحكومات والبلاد الإسلامية، بيروت: مؤسسة الرسالة، 1985م.
النغيمشي، عبد العزيز محمد، المراهقون، دراسة نفسية إسلامية للآباء والمعلمين والدعاة، الرياض: جامعة الإمام محمد بن سعود الإسلامية، دار المسلم للنشر والتوزيع، الطبعة الثانية، 1993م.
الهاشمي، محمد علي، شخصية المسلم كما يصوغها الإسلام في الكتاب والسنة، دار البشائر الإسلامية، بيروت، 1986م.
بدرانة، سعد الدين أحمد سعد الدين، الأساليب التربوية في غرس القيم العقدية لدى الطفل المسلم، رسالة ماجستير بإشراف د. شادية التل ومروان القيسى، إربد: جامعة اليرموك، 1994م.
جابر، جابر عبد الحميد، علم النفس التربوي، القاهرة: دار النهضة العربية، 1977م.
الحامد، محمد، ردود على أباطيل وتمحيصات لحقائق ديني، دمشق: دار الفكر للطباعة والنشر والتوزيع، 2003م.

الإسلامية، الكتاب الرابع، مكتبة الأنجلو المصرية، 1981م.
علوان، عبد الله ناصح، تربية الأولاد في الإسلام، دار السلام للطباعة والنشر والتوزيع، الطبعة الثالثة، جزءان، حلب: سوريا، 1981م.
فاضل، خليل، الصحة النفسية للأسرة، الدار السعودية للنشر والتوزيع، 1987م.
الرافع، رفاعة، المرشد الأمين للبنات والبنين، القاهرة: مطبعة المدارس الملكية، 1871م.
قطب، محمد، منهج التربية الإسلامية، الجزء الأول، القاهرة: دار الشروق، 1989م.
نافع، إبراهيم، في بيتنا مدمن: كيف نمنع الكارثة؟، القاهرة: مركز الأهرام للترجمة والنشر، 1991م.
النجار، عبد المجيد، عقيدة تكريم الإنسان وأثرها التربوي، القاهرة: المسلم المعاصر، س19، ع74-73، 1995م.
يالجن، مقداد والقاضي، يوسف، علم النفس التربوي في الإسلام، الرياض: دار المريخ، 1980م.

مجلات عربية

عبد الله، عبد الستار، في زواج الأقارب: متهم لم تثبت إدانته، مجلة الأسرة، 1996م.
فكار، رشدي، ندوة "الإسلام وتحديات القرن القادم"، القاهرة، 1996م.
الرشودي، فاطمة، مقتطفات، أمريكا: مجلة المرأة المسلمة.
"عشرة أخطاء يرتكبها الآباء مع المراهقين وكيفية تجنبها"، مجلة صحتك اليوم، أكتوبر/ديسمبر 1997م.
سافران، كلير، 6 أفكار تنجح ولدك في المدرسة، المختار، مارس 1987م.
ذكاء الطفل: فطري أم مكتسب؟، الكويت: مجلة المجتمع، 23/9/1999م.

கலைச் சொற்கள்

கலைச் சொற்கள்

அகிலம்	-	Universe
இரண்டக நிலை	-	Dilemma
உடன் பிறப்புக்கள்	-	Siblings
உயர் பள்ளி	-	High School
உருவாக்கலுக்குரிய காலம்	-	Formative Years
ஐக்கிய அமெரிக்கா	-	USA
கருக்குடும்பம்	-	Nuclear Family
கருத்துப்படிவம்/ எண்ணக்கரு	-	Concept
குமரப் பருவத்தினர்	-	Adolescents
கோபாவேசம்	-	Tantrum
சம/ ஒத்த வயதுக் குழுவினர்	-	Peer Groups
தனித்தந்தை	-	Single Father
தனித்தாய்	-	Single Mother
தோற்றப்பாடு	-	Phenomenon
நடிபங்கு	-	Role
நடை பயிலும் வயதினர்	-	Toddler
நிர்ப்பீடனத் தொகுதி	-	Immune System
பதின்ம வயதினர்	-	Teen-agers
பாடவிதானம்	-	Curriculum
பாலுறவு மூலம் பறவும் நோய்கள்	-	Sexually Transmitted Diseases
மனவெழுச்சி	-	Emotion
மரபணு / பரம்பரை அலகு	-	Gene
மாற்றுப் பெற்றார்	-	Step-parent
மீள வலியுறுத்தல்	-	Reinforcement
மூத்த பெற்றார்	-	Grand Parents
மூலக்கூறு	-	Molecule
விரிந்த குடும்பம்	-	Extended Family
விழுமியங்கள்	-	Values
விழுமியத் தொகுதி	-	Value System
வெள்ளுடுத் தொகுதி	-	Galaxy

பெற்றார்-பிள்ளை உறவுகள்

வாசிப்பதற்கு எளிதான முறையில் அமைந்துள்ள இவ் வழிகாட்டி நூல் தன்னம்பிக்கையோடு பிள்ளை வளர்ப்பதற்கு நீங்கள் தெரிந்திருக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அறிவுரைகளும் ஆலோசனைக் குறிப்புகளும் நிரம்பியுள்ள இந்நூல், பிள்ளை விருத்தி, பிள்ளை வளர்ப்பு நுட்பங்கள் என்பன தொடர்பான புதிய ஆய்வுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. பிள்ளைகள் செழித்தோங்கவும் பிள்ளை வளர்ப்பு தொடர்பான விரக்திகளை நீக்கவும் மகிழ்ச்சிகரமான குடும்ப உறவுகளை வளர்க்கவும் வழிகாட்டும் தகவல்களை இது தாங்கி நிற்கிறது. நடத்தைப் பண்புகள், அறிவு, விழுமியங்கள், திறன்கள் என்பவற்றோடு பிள்ளைகளில் விசுவாச அடிப்படையிலான உளப்போக்கையும் விருத்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் வழங்கி, பல்வேறு வயதுப் பிள்ளைகளைக் கொண்ட பெற்றார்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் நூலாசிரியர்கள் செயற்பட்டுள்ளனர். பிரச்சினை தீர்த்தல், தீர்மானம் மேற்கொள்ளல், சுய மதிப்பை விருத்தி செய்தல் மற்றும் வேறு பல விடயங்கள் தொடர்பான உத்திகளும் உபாயங்களும் இங்கு தரப்பட்டுள்ளன. இன்றைய உலகில் இறையுணர்வும் நல்லொழுக்கமும் கொண்ட குடியியல் பொறுப்புணர்வுமிக்க வெற்றிகரமான பிள்ளைகளை வளர்த்தெடுப்பது எளிதான காரியமல்ல. எனினும், அது சாதிக்க முடியாததுமல்ல. திறமையான பிள்ளை வளர்ப்பே அதற்குத் திறவுகோலாக இருக்கிறது.

ஆங்கில மூலநூல் பற்றி:

Most importantly the book proposes Islamic solutions to problematic issues in raising children. I was impressed with the comprehensive coverage of most available theories of child development. Authors have not missed talking about the common misconceptions of popular psychology

*- **DR. KUTAIBA CHALEBY**, Child Psychiatrist, certified by the American Board of Psychiatry and Neurology. He is also former Head, Section of Psychiatry, King Faisal Hospital and Research Center, Saudi Arabia.*

The book has many outstanding features and I say this as an author of many books on the subject of parenting and family matters, which have been translated into various languages. It presents many resources and valuable references to help parents, points out the proper sense of fulfilment for children and emphasizes that this should come from community attachment and involvement as well as a family bond, and offers a great list of activities at the end of each chapter, which, if applied by parents, will ensure a healthy and positive family atmosphere.

*- **DR. MOHAMED R. BESHIR**, member of the advisory board of SIFCA "Shura of Islamic Family Counselors of America." Also Advisor to the Muslim Association of Canada (MAC) and the Muslim American Society (MAS) departments on Tarbiyah matters.*

ISBN 978-955-8398-32-6

Published by ***Fuzin Texts***, Dharga Town, Sri Lanka